விசுவாசிகளின்

வேதாகம விளக்கவுரை

பழைய ஏற்பாடு

இரண்டாம் பகுதி

யோபு முதல் உன்னதப்பாட்டு வரை

விசுவாசிகளின்

வேதாகம விளக்கவுரை

பழைய ஏற்பாடு

இரண்டாம் பகுதி

யோபு முதல் உன்னதப்பாட்டு வரை

வில்லியம் மெக்டொனால்டு

பதிப்பாசிரியர் ஆர்தர் ஃபார்ஸ்டட்

தமிழாக்கம்

இரா. மாணிக்கவாசகம்

மோரியா
ஊழியங்கள்

நூல் விவரக் குறிப்பு

விசுவாசிகளின் வேதாகம விளக்கவுரை
பழைய ஏற்பாடு இரண்டாம் பகுதி
யோபு முதல் உன்னதப்பாட்டு வரை
ஆசிரியர் : வில்லியம் மெக்டொனால்டு
தமிழாக்கம் : இரா. மாணிக்கவாசகம்
பதிப்பு எண் 129
முதல் பதிப்பு 2019
ISBN 978-81-940400-1-9
விலை ரூபாய் 450

இந்திய வேதாகமச் சங்கம், பெங்களூரு வெளியிட்டுள்ள
தமிழ் பவர் மொழிபெயர்ப்பு (Tamil O.V)
இவ்விரிவுரையில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்நூல் காப்புரிமை பெற்றது. மதிப்புரைக்காகவும் ஆய்வுக்காகவும் மட்டுமே இந்நூலின் பகுதிகளைப் பயன்படுத்தலாம். இந்நூலினை நகல் எடுப்பதும், வேறு தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி இதன் உள்ளடக்கத்தைச் சேமித்து வைப்பதும், ஊடக மாற்றம் செய்வதும் தடைசெய்யப்படுகிறது.

Believer's Bible Commentary in Tamil O.T. Part 2
Job to Song of Solomon
© Christian Missions In Many Lands, USA.
Publication No. 129
ISBN 978-81-940400-1-9
Price Rs.450

All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any other means - electronic, mechanical, photocopy, recording or otherwise - without prior permission of the publisher except for brief quotations in critical reviews or articles.

Published by
Moriah Ministries
Post Box No. 7193,
31/33, Water Tank Road,MMDA Colony,
Arumbakkam, Chennai, India - 600 106
Email: moriahministries@gmail.com
Website: moriahministries.org
Phone: 91-044-2363 4010 / Mob.: 9444961106

Typeset & Cover Design: Moriah Ministries.

ஆசிரியர் அறிமுகம்



இந்நூலாசிரியர் திரு. வில்லியம் மெக்டொனால்டு (1917-2007) அவர்கள் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உள்ள புதிய இங்கிலாந்தில் பிறந்தவர். ஹார்வர்டு வணிகக் கல்லூரியில் (Harward Business School) வணிகவியல் துறையில் முதுகலைப்பட்டம் பெற்று, அமெரிக்கக் கடற்படையில் சேர்ந்து, இராண்டாம் உலகப்போர் முடியும்வரை பணியாற்றினார். பின்னர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பணிக்கான அழைப்பைப் பெற்ற இவர், வெற்றி வாய்ப்பு மிகுந்த தனது இவ்வுலக அலுவலைத் துறந்தார்.

கர்த்தருடைய ஊழியத்தில் தன்னை முற்றிலும் ஈடுபடுத்திக்கொண்ட மெக்டொனால்டு உலகெங்கும் பயணம் மேற்கொண்டு இறைபோதகராகவும், சுவிசேட பிரசங்கியாராகவும், ஆசிரியராகவும் பணியாற்றி கிறிஸ்துவின் மேன்மையைப் பறைசாற்றினார். இவர் எம்மாவு வேதாகமக் கல்லூரியின் தலைவராகச் சில ஆண்டு கள் பணியாற்றி, பல அஞ்சல்வழி வேதபாடப் புத்தகங்களையும் எழுதினார். திரு. ஜீன் கிப்ஸன் என்பாருடன் இணைந்து "சீடத்துவப் பயிற்சி" முறையைக் கலிபோர்னியாவில் உள்ள சான்லியானஹோவில் அறிமுகப்படுத்தினார். இதன் மூலம் எண்ணற்றோர் பயனடைந்து இறை ஊழியர்களாக பணியாற்றி வருகின்றனர்.

55 ஆண்டுகளுக்கு மேலாக இறைப்பணியாற்றிய இவர் தனது பெரும்பாலான நேரத்தை எழுத்துப் பணியில் செலவிட்டார். சிறந்த இறையியல் போதகராகிய திரு. மெக்டொனால்டு, 84 நூல்களை எழுதியுள்ளார். திருமறையை ஆழ்ந்து கற்று, அதனுடன் அதிக நேரத்தைச் செலவிட்டு எழுதப்பட்ட இவரது எழுத்துகள் சுருக்கமாகவும், தெளிவாகவும் அமைந்துள்ளன.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்து தூய திருமறையில் இவ்வாறு காண்கிறோம். "அவருக்குள் (கிறிஸ்துவுக்குள்) நிலைத்திருக்கிறேன் என்று சொல்லுகிறவன் அவர் நடந்தபடியே தானும் நடக்க வேண்டும்" (1 யோவான் 2:6). இவ்வசனத்திற்கு விளக்கம் கொடுக்கும் இந்நூலாசிரியர், "இயேசுவின் வாழ்க்கை, சுவிசேட நூல்களில் குறிப்பிடப்பட்டிருக்குமாப்போல், நம்மனைவருக்கும் எடுத்துக்காட் டாகவும் வழிகாட்டியாகவும் அமைந்துள்ளது. இத்தகைய வாழ்க்கையை நாம் நமது சொந்த சக்தியினாலோ முயற்சியினாலோ வாழ்ந்துகாட்ட முடியாது. தூய ஆவியான வரின் வல்லமையினால் மட்டுமே இது சாத்தியமாகும். எத்தகைய தடையுமின்றி நமது வாழ்க்கையைக் கர்த்தருக்கு முற்றுமுடிய ஒப்புவித்து நம்மிலும், நம்மூலமாகவும் அவர்

வாழ்வதற்கு இடங்கொடுக்க வேண்டும்.” இவ்வுண்மை திருவாளர் வில்லியம் மெக்டொனால்டு வாழ்க்கையில் உண்மையாக விளங்கிற்று.

கர்த்தர் இவரை 2007 -ஆம் ஆண்டு கிறிஸ்துமஸ் தினத்தன்று தம்மண்டை அழைத்துக் கொண்டார். வணிகத் துறையில் தன் வாழ்க்கையைத் தொடங்கின இவர், இவ்வுலகச் செல்வங்கள் ஒன்றையும் சேர்த்துவைக்கவில்லை. தனக்குரிய அனைத் தையும் தேவையுள்ளவர்களுக்கு அவர் தாராளமாகக் கொடுத்துவந்தார். அவர் விட்டுச் சென்ற உலகச் செல்வங்கள் ஒன்றுமில்லை. ஆனால் அவர் எழுதிய நூல்கள் இன்று நம்மிடையே இருக்கின்றன. அவை இன்று ஏறத்தாழ 100 மொழிகளில் மொழி பெயர்க் கப்பட்டு, பல்வேறு மக்களிடையே பேசி, உணர்த்தி வருகின்றன. அவருடைய முன் மாதிரியும் நமக்கு அறைகூவலாக உள்ளது.

குறிப்பு: வில்லியம் மெக்டொனால்டு அவர்களுடைய நூற்கள் தொடர்ந்து பல மொழிகளில் மொழிபெயர்க்கப் வருகின்றன. அவருடைய நூற்களைப் பற்றியும், மொழிபெயர்ப்பு விவரங்களைப் பற்றியும் அறிய www. william-macdonald.org என்ற இணையதளத்தைக் காணவும்.

பதிப்பாசிரியர் உரை

நூல் சிறப்பு

1950 - ஆம் ஆண்டிற்குச் சற்று பின்னர், எம்மாவு வேதாகமப் பள்ளியின் ஆசிரியர் ஒருவர், "வேத விளக்கவுரைகளைப் பயனற்றதெனக் கருத வேண்டாம்" என்னும் அறிவுரையைத் தமது மாணாக்கருக்கு வழங்கினார். அப்பள்ளி மாணவர் ஒருவர் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக அந்த அறிவுரையைத் தனது நினைவில் காத்துக் கொண்டிருந்தார். திருவாளர் **வில்லியம் மெக்டொனால்டு** அவர்களே அந்த ஆசிரியர். அவரே இந்த **விசுவாசிகளின் வேதாகம விளக்கவுரையை** இயற்றியவர். திரு. ஆர்தர் ஃபார்ஸ்டட் என்னும் அந்த மாணவரே இந்நூலின் பதிப்பாசிரியர். அம்மாணவர் அப்பொழுது அனுபவமற்ற இளைஞராக இருந்தார். அதுவரை தன் வாழ்நாட்களில், திருவாளர் H. A. அயர்ன்சைடு எழுதிய "உன்னதங்களில்" (எபேசியருக்கு எழுதிய நிருபம்) என்னும் ஒரே ஒரு விளக்கவுரையை மட்டுமே அவர் படித்திருந்தார். இருபது வயதுகூட நிரம்பாத ஆர்தர் ஒவ்வொருநாள் இரவிலும் அவ்விளக்கவுரையைப் படித்த போது, விளக்கவுரை என்றால் என்னவென்று கண்டறிந்தார்.

விளக்கவுரை என்பது யாது?

விளக்கவுரை என்பது யாது என்று துல்லியமாய்க் கூற இயலுமா? அதனைப் பயனற்றது என்று ஏன் கருதக்கூடாது? அண்மையில் புகழ்சிறந்த நூல் வெளியீட்டாளர் ஒருவர், வேதாகமத்துடன் தொடர்புடைய பதினைந்து வகையான நூற்களைப் பட்டியலிட்டுக் காட்டினார். ஆய்வு வேதாகமம், சொல் அட்டவணை, வேதாகம நாட்டின் நிலப்படங்கள் அடங்கிய நூல், திருவசன விரிவாக்க நூல், வேதாகம அகராதி போன்ற நூல்களுக்கும் விளக்கவுரைக்கும் இடையேயுள்ள வேறுபாட்டைச் சிலர் அறியாதிருப் பது விந்தையன்று.

பொதுவாக விளக்கவுரை ஒவ்வொரு வசனத்திற்கும் அல்லது ஒவ்வொரு பத்திக்குமாக விளக்கத்தையோ, பயனுள்ள கருத்தையோ வழங்குகிறது. "பேசப்படு கின்ற வார்த்தையை மட்டுமே நான் கேட்க விரும்புகிறேன்; திருமறையை மட்டுமே நான் படிக்க விரும்புகிறேன்!" என்று கூறி சில கிறிஸ்தவர்கள் விளக்கவுரைகளைப் பற்றி இழிவாய்ப் பேசுகின்றனர். இக்கூற்று இறைப்பற்றுமிக்க பண்பை வெளிப்படுத் துவது போன்று தோன்றினும், உண்மை அதுவன்று. மிகச்சிறந்ததும் மிக ஆழமானது மான வேதவிளக்கத்தைத் தருவதே விளக்கவுரையின் நோக்கமாகும். ஆங்கு திரு மறையின் ஒவ்வொரு வசனமும் தெளிவாகக் கற்பிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் பிரசங்கங்கள் ஆற்றப்படுகின்றன. சில வேத விளக்கவுரைகள், பிரசங்கங்கள் ஆற்றப்பட்ட வண்ணமே அச்சிடப்பட்டு வெளிவந்துள்ளன (திருவாளர் அயர்ன்சைடு விளக்கவுரை இவ்வகையைச் சார்ந்ததாகும்). மேலும் எல்லாக் காலங்களிலும் எல்லா மொழிகளிலும் பிரசங்கிக்கப்பட்ட மிகச்சிறந்த திருமறை ஆய்வுரைகளை நாம்

ஆங்கிலத்தில் பெற்றிருக்கிறோம். எனினும் அவற்றுள் பல மிகப்பெரியவையாகவும், பழங்காலத்தவையாகவும், கடினமானவையாகவும் விளங்குகின்றன. சராசரிக் கிறிஸ்தவன் அவற்றைப் படிக்கும்போது ஊக்கங்குன்றி குழப்பமடைந்துவிடுகிறான். இவ்வாறின்றி எளிய விசுவாசிகளும் பயனடைய வேண்டுமென எழுதப்பட்டதே "**விசுவாசிகளின் வேதாகம விளக்கவுரை**."

பல்வேறு வகையான விளக்கவுரைகள்

திருமறையின்மீது பற்றுடைய எவரும் விளக்கவுரை எழுதலாம். இது கருத்தள விலான கூற்றே ஆகும். இதன் விளைவாக விளக்கவுரைகளில் சில முற்றிலும் மரபு சார்ந்தவையாகவும், வேறு சில தாராளக் கொள்கையைக் கட்டவிழ்த்துவிட்ட வகையில் பின்பற்றுபவையாகவும் உள்ளன. இவ்விரண்டு எல்லைகளுக்கும் இடைப்பட்ட நிலை யில் பற்பல கருத்துக்களைக் கொண்ட பலவிதமான விளக்கவுரைகளை நாம் காண வியலும். **விசுவாசிகளின் வேதாகம விளக்கவுரையோ** முற்றிலும் மரபு சார்ந்ததாகும். வேதாகமம், தேவ ஆவியானவரின் உயிரூட்டத்தால் தவறற்றதாகத் தரப்பட்டுள்ளதே தேவனுடைய வார்த்தையென்றும், விசுவாசிப்பதற்கும் வாழ்க்கையில் நடைமுறைப் படுத்துவதற்கும் அது தகுதியான நூலென்றும் இவ்விளக்கவுரை வலியுறுத்திக் கூறு கிறது.

விளக்கவுரையானது மிகவும் நுட்பமானதாகவோ (எடுத்துக்காட்டாக, கிரேக்க மற்றும் எபிரெய வாக்கிய அமைப்புகளை மிகவும் நுணுக்கமாக ஆராய்ந்து எழுதப்பட் டவை.), நுணுக்கமான விவரங்கள் அற்றதும் பொருளை மட்டும் சொல்லிவிட்டுச் செல்லுகிற மேலோட்டமானதாகவோ இருக்கலாம். விசுவாசிகளின் வேதாகம விளக்கவுரை இவ்விரு வகைக்கும் இடைப்பட்டதாக விளங்குகிறது. எங்கெல்லாம் நுட்பமான விளக்கங்கள் தேவையோ, அவையாவும் தனியே அடிக்குறிப்புகளில் இடம் பெற்றுள்ளன. ஆயினும் இவ்விளக்கவுரை மிகவும் கடினமான வேத பகுதிகளுக்கு உரிய விளக்கம் அளிக்காமலோ, கண்டித்து உணர்த்த வேண்டிய சத்தியங்களை வலியுறுத்தாமலோ தட்டிக் கழிக்கவில்லை. திருவாளர் மெக்டொனால்டின் எழுத்து கள் விரிவான விளக்கங்களைக் கொண்டிருக்கின்றன. இவ்விளக்கவுரை வெறுமனே அழகிய பூங்காவாகக் காட்சியளிப்பதுமில்லை, மிகவும் எளிமையான சராசரிக் கிறிஸ்த வர்களை அப்படியே விட்டுவிடுவதுமில்லை. மாறாக, "சீடர்களை"உருவாக்குவதே இந்நூலின் சிறப்பாகும்.

மரபு சார்ந்தவை அல்லது தாராளக் கொள்கையைப் பின்பற்றுபவை, சீர்திருத்தக் கொள்கையைச் சார்ந்தவை அல்லது ரோமக் கத்தோலிக்க சமயச் சார்புடையவை, கர்த்தருடைய இரண்டாம் வருகை ஆயிரமாண்டு ஆட்சிக்கு முந்தி நிகழும் அல்லது ஆயிரமாண்டு ஆட்சி நிகழாது என்னும் கொள்கையுடையவை என்று விளக்கவுரை களை வகைப்படுத்திக் கூறலாம்.

"**விசுவாசிகளின் வேதாகம விளக்கவுரை**" மரபு சார்ந்தது, சீர்திருத்தக் கொள் கையைப் பின்பற்றியது. மற்றும் திருச்சபைக்கான கர்த்தருடைய வருகை கிறிஸ்துவின் ஆயிரமாண்டு ஆட்சிக்காலத்திற்கு முந்தி நிகழும் என்னும் கொள்கையைத் தழுவியது.

இந்நூலைப் பயன்படுத்துவது எங்ஙனம்?

உங்கள் கரங்களில் இருக்கும் **விசுவாசிகளின் வேதாகம விளக்கவுரையைப்** பல்வேறு கோணங்களில் அணுகலாம். கீழ்க்கண்ட அணுகுமுறை அதனுடைய நேர்த்தியான வரிசையில் ஆலோசனையாகத் தரப்பட்டுள்ளது.

மேலெழுந்தவாரியாகப் படித்தல்: நீங்கள் திருமறையின்பால் விருப்பங் கொண்டு அன்புகூருவீர்களெனில், இந்நூலில் இளந்தளிர்களை மேய்வதுபோல அங்கும் இங்குமாகச் சிறுபகுதிகளை மேலெழுந்தவாரியாகப் படித்து, இந்நூலின் மூலம் அடையும் முழுப்பயனின் நறுமணத்தைச் சுவைக்கலாம்.

குறிப்பிட்ட பகுதிகள்: குறிப்பிட்ட வேதவசனத்தைப் படிக்கும்போது உங்கள் உள்ளத்தில் ஒரு கேள்வி எழக்கூடும். அல்லது ஒரு வேத பகுதியைப் புரிந்துகொள்ள உதவி தேவைப்படும். அதற்குரிய விளக்கத்தை அதன் பின்னணியோடு இந்நூலில் படிக்கும்போது, நல்லதொரு கருத்தைப் பெற்று நீங்கள் பயனடைவது திண்ணம்.

உபதேசம்: படைப்பு, ஓய்வுநாள், உடன்படிக்கைகள், காலப்பாகுபாடுகள், இரட்சிப்பு போன்ற பொருள்களைக் கற்க வேண்டுமாயின் அதனுடன் தொடர்புடைய பகுதிகளைப் படியுங்கள். இதுபோன்ற பல பொருட்களைக் குறித்த கட்டுரைகளின் தலைப்புகள் பொருள் அட்டவணையில் பட்டியலிட்டுக் காட்டப்பட்டுள்ளன. அவ்வாறு பட்டியலிடாப் பொருட்களைக் கற்றறிய அவற்றுடன் தொடர்புடைய முக்கியமான சொற்களைத் தமிழ் வேதாகம ஒத்தவாக்கிய அகராதியில் கண்டு, அதன் வாயிலாகக் குறிப்பிட்ட வேதபகுதிகளைத் தேடி, அவற்றிற்குரிய விளக்கத்தை இந்நூலில் படியுங்கள்.

திருமறையில் ஒரு நூல்: ஞாயிறு பள்ளியிலோ, சபைக் கூட்டங்களிலோ திருமறையின் நூலொன்றை நீங்கள் கற்றுக் கொண்டிருப்பீர்களெனில், ஒவ்வொரு வாரமும் குறிப்பிட்ட வேத பகுதிக்குரிய விளக்கத்தை முன்னதாகவே இந்நூலில் நீங்கள் படித்து உங்களுடைய வேத அறிவை வளர்த்துக்கொள்ளலாம். (ஒருவேளை உங்களுடைய சபைக் கூட்டத்தில் கலந்துரையாடலின் மூலம் வேதத்தைக் கற்பீர்களெனில், நீங்களும் பயனுள்ள முறையில் அதில் கலந்துகொள்ள இயலும். வேத பாடத்தை நடத்துபவரும் இதே விளக்கவுரையை முதன்மையாகப் பயன்படுத்துவாரெனில், நீங்கள் இதனுடன் சேர்த்து மற்றொரு விளக்கவுரையையும் படியுங்கள்.)

முழு வேதாகமம்: இறுதியாக ஒவ்வொரு கிறிஸ்தவனும் வேதாகமம் முழுவதையும் படிக்க வேண்டும். அதில் கடினமான பகுதிகள் ஆங்காங்கே பரந்து கிடக்கின்றன. மரபு சார்ந்ததும் மிகவும் கவனத்துடன் எழுதப்பட்டதுமான **விசுவாசிகளின் வேதாகம விளக்கவுரை** உங்கள் வேத அறிவை வளர்ப்பது உறுதி.

வேதபாடம் "கோதுமை மணியின் உடைந்த துண்டைப்" போல தொடக்கம் பெறும். அது "சத்து நிறைந்தது, எனினும் உலர்ந்து" காணப்படும். ஆயின் நீங்கள் முன்னேறிச் செல்லச் செல்ல, அது "தேனினும் மதுரமெனத்" திகழும்!

முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் திருவாளர் வில்லியம் மெக்டொனால்டு "விளக்கவுரைகளைப் பயனற்றதாகக் கருத வேண்டாம்" என அறிவுரை வழங்கினார்.

பழைய ஏற்பாட்டிற்கும் புதிய ஏற்பாட்டிற்குமாக அவருடைய விளக்கவுரைகளைப் பதிப்பிக்கும் நோக்குடன் மிகவும் கவனத்துடன் படித்த நான், ஒருபடி மேலே சென்று "இதன் பயனை அனுபவித்து மகிழுங்கள்" என்று அறிவுரை வழங்குகிறேன்.

- ஆர்தர் ஃபார்ஸ்டட்

அடிக்குறிப்பு

1. வேத வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு பொருளை, பல பகுதிகளிலிருந்து திரட்டி, கூடுதலாக விளக்கித் தொகுத்து வழங்குவது "ஆய்வுரை" (excurses) எனப்படும். (இந்நூலில் அவ்வகை ஆய்வுக்கட்டுரைகள் பிற்சேர்க்கையாகத் தரப்படாமல், அப்பொருளோடு இணைந்த வேதபகுதிகளோடேயே தரப்பட்டுள்ளன. பொருளடக்கத்தில் அத்தகைய கட்டுரைகளின் பட்டியலைக் காணலாம்.)

பதிப்பகத்தார் உரை

ஆண்டவரும் ஈடேற்றாளருமாகிய இயேசு கிறிஸ்துவின் புகழ்ச்சியை முன்னிட்டு அரும் தொண்டாற்றிய திருவாளர் வில்லியம் மெக்டொனால்டு இயற்றிய "**விசுவாசிகளின் வேதாகம விளக்கவுரை**" இரண்டு உன்னத நோக்கங்களைக் கொண்டுள்ளது.

முதலாவது, பற்றுடைய கிறிஸ்தவப் பெருமக்கள், தங்களுடைய உள்ளங்களில் திருமறையின்மீது ஆழ்ந்த அன்பும் இடைவிடாத விருப்பமும் கொண்டவர்களாகவும், ஆங்கு புதைந்துள்ள அரிய முத்துக்களைத் தேடி எடுக்கக்கூடிய நாட்டத்தைப் பெற்றவர்களாகவும் விளங்க வேண்டும் என்பதாகும். இரண்டாவது, திருமறையின் நாயகராகிய கிறிஸ்துவின் தொண்டர்கள் முறையான சீடத்துவப் பயிற்சியைப் பெற்று, நிறைவான மனிதராக வாழ்வதற்குரிய ஆக்கக்கூறுகளை ஏற்று, தங்களுடைய வாழ்க்கையில் முழுமுதல்வராகிய கிறிஸ்துவை வாழ்ந்துகாட்ட வேண்டும் என்பதாகும். இவ்விரண்டு நோக்கங்களையும் சீர்பொருந்திய வகையில் இவ்விளக்கவுரை தன்னகத்தே கொண்டுள்ளது என்போமாகில், அது மிகையாகாது.

திருமறைக்கான விளக்கவுரையின் தேவையை நாம் மறுக்க முடியாது. பல்வேறு கருத்து வேறுபாடுகளும், கள்ளப்போதனைகளும் மிகுந்துள்ள இக்காலக்கட்டத்தில் திருமறைக் கோட்பாடுகளை நன்கு அறிவதற்கும், உள்ளங்களில் எழுகிற ஐயங்களை அகற்றுவதற்கும் தவறற்ற தெளிவான விளக்கவுரை இன்றியமையாததாகும். அவ்வகையில் இவ்விளக்கவுரை தமிழ்க் கிறிஸ்தவ மக்களுக்கு அரியதொரு செல்வமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

திருமறையின் முதன்மையைக் குறித்து இவ்விரிவுரை ஆசிரியர் கூறிய கருத்து:

> "திருமறைக்கு எழுதப்பட்டுள்ள அனைத்து விளக்கவுரைகளையும்விட திருவசனமே முதன்மையான இடத்தைப் பெறுகிறது. அது தூய ஆவியான வரால் நம் உள்ளத்தில் சுடர்விட வேண்டும். அதுவின்றி வாழ்வில்லை, தூய்மை இல்லை, ஆண்டவர் ஏற்கும் ஊழியமுமில்லை. அதனையே நாம் வாசிக்க வேண்டும், படிக்கவும் மனனம் செய்யவும் வேண்டும், ஆழ்ந்து தியானிக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக அதற்கு நாம் கீழ்ப்படிய வேண்டும். மெய்யான ஆன்மீக வாழ்க்கைக்கும் அறிவுக்கும் கீழ்ப்படிதலே தகும்."

இத்தகைய கருத்துடனேயே ஆசிரியர் திருமறை நூல்கள் அனைத்திற்கும் செறிவுமிக்க வகையில் விளக்க உரையை எழுதி வழங்கியுள்ளார். ஆயினும் இவ்விளக்கவுரை முழுவதையும் தமிழாக்கம் செய்து ஒருங்கே வழங்குவது எங்களுடைய ஆற்றலுக்கு மேற்பட்ட செயல் என்று நாங்கள் எண்ணியவர்களாக, புதிய ஏற்பாட்டு நூல்களுக்கான விளக்கவுரையை மூன்று பாகங்களாக வெளியிட்டோம். அதனைத் தொடர்ந்து பழைய ஏற்பாடு நூல்களுக்கு ஆதியாகமம் தொடங்கி எஸ்தர் வரையுள்ள நூல்களுக்கான விளக்கவுரையை முதல் பகுதியாக வெளியிட்டோம். இப்பொழுது கவிதை நூல்களுக்கான, அதாவது யோபு முதல் உன்னதப்பாட்டுகள் வரையுள்ள நூல்களுக்கான விளக்கவுரையை இரண்டாம் பகுதியாக வெளியிடுகிறோம். இம்முயற்சியை எழுத்தின் முதல்வராகிய இறைமைந்தன் ஆசிர்வதிக்க இறைஞ்சுகிறோம்.

குறிப்பு: இவ்விளக்கவுரையில் தடித்த எழுத்துகளில் காணப்படும் சொற்களும் சொற்றொடர்களும் அந்தந்த வேத வசனங்களின் பகுதிகளாகும்.

பொருளடக்கம்

ஆசிரியர் அறிமுகம்	v
பதிப்பாசிரியர் உரை	vii
பதிப்பகத்தார் உரை	xi
கவிதை நூல்களுக்கான முன்னுரை	1
யோபு	7
சங்கீதப் புத்தகம்	47
நீதிமொழிகள்	337
பிரசங்கி	443
சாலொமோனின் உன்னதப்பாட்டு	497

வரைபடங்கள்

கவிதை நூல்களுக்கான கால வரலாற்றுப் பின்னணி	2
உன்னதப்பாட்டு புத்தகத்தில் இடம்பெற்றுள்ள இடங்களின் பெயர்கள்	498

கவிதை நூல்களுக்கான முன்னுரை

"மொழிபெயர்க்கப்படும் போது கவிதை தன் மேன்மையை இழந்து போகிறது" என்று ஒருவர் கூறியிருக்கிறார். பழைய ஏற்பாட்டுக் கவிதை நூல்களைக் காணுமிடத்து, அக்கூற்று உண்மை யன்று என்றே சொல்ல வேண்டும், அல்லது அது மிகைப்படுத்திச் சொல்லப்பட்ட கூற்று எனலாம். இது நாம் பெற்ற நற்பேறு. மாறாக, ஈற்றசை ஒத்த ஒலியியைபு, வரிகளில் அசைகளின் எண்ணிக்கை, வரி அமைப்புகள் ஆகியவை குறித்த பாவிலக் கணக் கூறுகளை முறையாகப் பின்பற்றி இயற்றப் பட்ட, இலக்கிய நயம் மிகுந்த ஆங்கிலம் அல்லது பிரெஞ்சு மொழிக் கவிதைகளைப் பிறமொழி களில் வெற்றிகரமாக மொழிபெயர்ப்பது அரிதான செயலாகும்.

ஒவ்வொரு வரியிலும் அசைகளின் எண் ணிக்கை குறித்த பாவிலக்கணம் எபிரெயப் பாக் களில் ஓரளவுதான் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. எனினும் சொற்களின் முதல் எழுத்துகள் ஒரே ஓசை உடையவையாக விளங்கும்படியும், வேறு பல பொதுவான பாவிலக்கணக் கூறுகள் பின்பற் றப்பட்ட வகையிலும் அப்பாக்கள் அமைந்துள்ளன.

தீர்க்கதரிசன நூல்களில் பல செய்யுள் வடி வில் அமைந்துள்ள போதிலும் பழைய ஏற்பாட்டில் ஐந்து நூல்கள் மட்டுமே கவிதை நூல்களாகக் கருதப்படுகின்றன. அவையாவன: யோபு, சங் கீதம், நீதிமொழிகள், பிரசங்கி, உன்னதப்பாட்டு.[1]

1. கவிதை நூல்கள்

அ. யோபு

திருமறை நூல்களிலேயே இந்நூல் மிகப் பழைமையானது என்னும் கருத்து நிலவுகிறது. ஏனெனில் இந்நூலில் காணப்படும் சரி அல்லது தவறு என்பன குறித்த வாதங்களில் நியாயப்பிர மாணத்தைப் பற்றிய ஒரு குறிப்பும் இல்லை. பெரும் வேதனையடைந்த போதிலும் நீதிமானாக விளங்கிய யோபு, நாடகக் காட்சிகள் போன்ற உரையாடல்களில், தனது இன்னல்களுக்கான காரணம் என்ன என்பது பற்றி தனது "நண்பர் களுடன்" வாதாடுகிறான்; ஆயினும் இறுதியில் அவனைக் குறித்த இறைவனது சித்தம் என்ன வென்பதைக் கர்த்தரே கற்பிக்க வேண்டிய தாயிற்று. இந்நூல் ஞான இலக்கியமாக விளங்கு வது இதன் மிகப்பெருஞ் சிறப்பு; இந்நூல் மெய்யாகவே மாட்சிமை பொருந்திய செய்யுள் நூல் என்பதை இறைப்பற்று அற்றோரும் உணர்ந்து கொண்டுள்ளார்கள்.

ஆ. சங்கீதம்

பழைய ஏற்பாட்டு நூல்களில் கிறிஸ்தவர் களால் பெரிதும் பாராட்டைப் பெற்ற நூல் சங்கீதம் ஆகும். முழுத் திருமறையை எடுத்துச் செல்லு வது சிரமம் என்று கருதப்படுகின்ற நேரங்களில், சங்கீதம் இணைக்கப்பட்ட புதிய ஏற்பாடு பயன் படுத்தப்படுவதை அவ்வப்போது நாம் காண் கிறோம். சங்கீதங்களைப் பெரிதும் விரும்புகிற பலர் அவை முழுவதும் செய்யுள் நடையில் எழுதப்பட்டதை அறியாமல் இருக்கிறார்கள்.[2]

சங்கீதம் பண்டைய இஸ்ரவேலரின் துதிப் பாடல் நூலாகும். ஓராயிர ஆண்டு இடைவெளி யில் எழுதப்பட்ட ஐந்து நூல்களைக் கொண்டதே சங்கீதம். கி. மு. 1400 (மோசே) முதல் கி. மு. 400 (எஸ்றா) வரை இப்பாடல்கள் இயற்றப்பட்டன.

இ. நீதிமொழிகள்

பழைய ஏற்பாட்டு நூல்களில் விசுவாசிகளால் வழக்கமாகப் பெரிய அளவில் பயன்படுத்தப்படு கிற இரண்டாவது நூல் நீதிமொழிகள் ஆகும். தேவனுடைய கருத்தின்படி வெற்றிகரமான வாழ்க்கை வாழ்வது எவ்வாறு என்பதற்கான கலப்படமற்ற ஞானமுள்ள வாசகங்களால் இந்நூல் திணறவைக்கும் அளவிற்கு நிறைந் திருக்கிறது. (தேவனுடைய கருத்தே இறுதியான தும், மெய்யாகக் கணக்கிடப்படக்கூடியதும் ஆகும்.) ஞான இலக்கியத்திற்கு இந்நூல் வியத் தகு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

ஈ. பிரசங்கி

திருமறை கற்பிக்கும் பாடத்தின் கட்டமைப்புக் குள் பொருத்துவதற்கு இயலாதபடி இந்நூல் பலருக்கும் மிகவும் கடினமானதாக விளங்கு கிறது. பிரசங்கி நூலின் முக்கியமான சொற் றொடர் "சூரியனுக்குக் கீழே" என்பதாகும். தேவ வெளிப்பாடு இன்றி வாழும் ஒரு மனிதனின் கருத்திற்கேற்ப "பிரசங்கி" இங்கு காரணங்களை ஆராய்ந்து விவாதிக்கிறான். ஞான இலக்கியத் திற்கு மேலும் ஒரு நல்லதொரு எடுத்துக்காட்டு.



உ. உன்னதப்பாட்டு

இந்தக் கதையின் விளக்கங்கள் ஒன்றுக் கொன்று மாறுபட்டதாக இருந்தபோதிலும் இ.ஂது உண்மையும் தூய்மையும் நிறைந்த அழகிய காதற் செய்யுள் எனத் திருமறை விரும்பிகள் யாவரும் ஒப்புக்கொள்வார்கள். "உன்னதப் பாட்டு" என்னும் தலைப்பு எபிரெய மொழியில் "நனி சிறந்த பாடல்" என்று பொருள்படும் மரபுச் சொற்றொடராகும். சாலொமோன் 1005 பாடல் களை இயற்றினான் (1 இராஜா. 4:32); இதுவே மிகவும் நேர்த்தியானது.

2. பழைய ஏற்பாட்டுக் கவிதைகளை அனுபவித்து மகிழ்வுறுதல்

செய்யுளை மனப்பாடம் செய்யும்படியும், அதனுடைய அழகும் புத்துணர்வும் இல்லாமற் போகும் அளவிற்கு அதைக் கூறுகளாக்கும்படி யும் ஆசிரியர்கள் வற்புறுத்துகின்ற காரணத்தால் பலர் பள்ளிகளில் இதனை விரும்புவதில்லை அல்லது புரிந்துகொள்வதில்லை, மேலும் அவர் கள் அதிலிருந்து வேறுபக்கம் திரும்பிக்கொள் கிறார்கள், இது பெரும் அவப்பேறு ஆகும். இது ஒரு ரோசாச் செடியை வளர்ப்பதற்கு ஒப்பாகும், அதனை யார் வேண்டுமானாலும் வளர்க்கலாம், குறைந்த அறிவு இருந்தாலும் தடையில்லை, அழகை அனுபவிக்க விருப்பம் மட்டும் இருந்தால் போதும். தாவரவியல் வகுப்பில் அந்த மலர் ஒவ்வொரு பாகமாக வெட்டப்படும், அது கல்வி யறிவை வளர்ப்பதற்கு உதவும் என்பதில் ஐய மில்லை. ஆனால் கலையுணர்வு அல்லது அழகு ணர்ச்சி என்னும் பார்வையில் அச்செயல் பய னற்றது.

பழைய ஏற்பாட்டுக் கவிதைகளை அனுப வித்து மகிழ்வுறுதல், ரோசா மலர்களைக் குறித்த எந்த அறிவும் இல்லாமல் அவற்றை அனுபவித்து மகிழ்வதற்கும், அறிவியல் பூர்வமாக அதை ஆராய்ந்து அறிவதற்கும் இடைப்பட்ட நிலையைச் சேர்ந்தது எனலாம். ரோசா மலர்களைக் குறித்த அறிவு இருக்குமென்றால், வெவ்வேறு வகையான ரோசா மலர்களுக்கிடையில் உள்ள வேறுபாடு களை உங்களால் கூறமுடியும், நிறங்களை வகைப்படுத்திக் கூறுவீர்கள்.

அதுபோலவே செய்யுளுக்கு வண்ணம் கொடுக்கும் அமைப்புகளையும் நுணுக்கங்களை யும் கவனித்து, சங்கீதப் பாடலாசிரியன் அல்லது வேறு கவிதை ஆசிரியர்கள் பயன்படுத்தியுள்ள நுணுக்கங்களைக் காணும்போது திருமறைச் செய்யுள்களிலிருந்து பெருமளவு கற்றுக் கொள் வீர்கள். கவிதை நூல்கள் என்று கருதப்படுகின்ற ஐந்து நூல்களுக்கு மட்டுமின்றி, பிற பழைய ஏற்பாட்டு நூல்களுக்கும் இது உண்மையாயிருக் கிறது; புதிய ஏற்பாட்டிற்கும் இவ்வுண்மை பொருந் தும் என்பது சொல்லாமலேயே விளங்கும்.

3. ஒப்புமை

திருமறைப் பாடல்களில் கையாளப்பட்ட பெரி தான நுட்பம், ஆங்கிலப் பாடல்களில் இருப்பது போன்ற ஈற்றசை ஒலியியைபு அல்ல; மாறாக கருத்தியைபே ஆகும். அதாவது, இரண்டு மூன்று வரிகளை ஒன்றுகூட்டி ஏதோ ஒரு வகையில் ஒன்றுக்கொன்று இணையாக விளங்கும்படி எழுதப்பட்டிருப்பதே அந்தக் கருத்தியைபு. இதுவே திருமறைப் பாடல்களின் முக்கிய ஆதாரமாக விளங்குவதற்காக நாம் தேவனுக்கு நன்றி

செலுத்த வேண்டும், ஏனெனில் கிட்டத்தட்ட எல்லா மொழிகளிலும் இது நேர்த்தியாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளது, அவ்வாறு மொழிபெயர்க் கப்படுகையில் அதனுடைய அழகு குன்றியும் போகவில்லை. நம்முடைய கர்த்தரும் அவ்வப் போது ஒப்புமையோடு பேசியிருக்கிறார். (கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் படித்தபிறகு எடுத்துக்காட்டாக மத்தேயு 5-7 மற்றும் யோவான் 13-17 போன்ற பகுதிகளைக் கவனத்துடன் திரும் பத் திரும்பப் படிக்கவும்.)

எபிரெய மொழிப் பாக்களில் காணப்படும் முக் கியமான வகைகளில் சிலவற்றை நாம் இங்கு எடுத்துக்காட்டுகளாகத் தருகிறோம். இது போன்ற அமைப்புகளை விசுவாசிகளின் வேதாகம விளக்கவுரையின் உதவியோடு பழைய ஏற்பாட்டு நூல்களைப் படிக்கும்போது மட்டுமின்றி, அனு தின தியானம் செய்யும்போதும் பிரசங்கங்களைக் கேட்கும் போதும் வாசகர்கள் கவனிக்கலாம்.

1. ஒருபொருட் பன்மொழி ஒப்புமை

இந்தத் தலைப்பு குறிப்பாய்த் தெரிவிப்பது போல இவ்வகை ஒப்புமையில் இரண்டாவது அல் லது இணையான வரி முதல்வரி கூறுகிற அதே கருத்தை, வலியுறுத்திச் சொல்லும். நீதி மொழி கள் நூலில் இவ்வித ஒப்புமை நிறைந்திருக்கிறது:

> நீதியின் பாதையில் ஜீவன் உண்டு; அந்தப் பாதையில் மரணம் இல்லை (நீதி. 12:28)

> நான் சாரோனின் ரோஜாவும் பள்ளத் தாக்குகளின் லீலியுமாம் (உன். 2:1)

2. நேர் மாற்று ஒப்புமை

ஒன்றுக்கொன்று எதிர்மாறானதைக் கூறும் பொருட்டு இரண்டு வரிகளில் அதனை எடுத் துரைப்பது இவ்வகை ஒப்புமையாகும்.

> கர்த்தர் நீதிமான்களின் வழியை அறிந் திருக்கிறார்;
>
> துன்மார்க்கரின் வழியோ அழியும் (சங். 1:6)[3]

> பகை விரோதங்களை எழுப்பும்;
>
> அன்போ சகல பாவங்களையும் மூடும் (நீதி. 10:12)

3. பெயரளவிலான ஒப்புமை

இவ்வகை ஒப்புமை அமைப்பில் மட்டுமே காணப்படும்; இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வரிகள் எதிர்மாறான கருத்தையோ, ஒரு கருத்தை விரிவாக்கம் செய்யும் பொருட்டோ அல்லது வலி யுறுத்தும் பொருட்டோ சொல்லப்பட்டவையாக இரா. பாட்டின் இரண்டு வரிகள் ஒரு கருத்தை வெளிப்படுத்தும் பொருட்டு சேர்ந்து எழுதப்பட்டி ருப்பதை மட்டுமே இங்கு காணவியலும்:

> நான் என்னுடைய பரிசுத்த பர்வதமாகிய சீயோன்மீதில்
>
> என்னுடைய ராஜாவை அபிஷேகம் பண்ணி வைத்தேன் (சங். 2:6)

4. ஒன்றிணைக்கும் ஒப்புமை

பாடலின் இரண்டாவது வரி முதல் வரியில் சொல்லப்பட்ட சிந்தனையைக் கட்டி உருவாக்கும் வகையில் அமைந்திருக்கும் (Synthesis) என் பதற்கான கிரேக்கச் சொல் "ஒன்று சேர்த்து வைத்தல்" என்று பொருள்படும்:

> கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்;
>
> நான் தாழ்ச்சி அடையேன் (சங். 23:1)

> எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள்.
>
> அதனின்று ஜீவ ஊற்று புறப்படும் (நீதி. 4:23)

5. சின்னங்களாலான ஒப்புமை

> மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவது போல தேவனே,
>
> என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது (சங். 42:1)

> மதிகேடாய் நடக்கிற அழகுள்ள ஸ்திரீ, பன்றியின் மூக்கிலுள்ள பொன்மூக்குத்திக் குச் சமானம் (நீதி. 11:22)

4. இலக்கிய நயம் வாய்ந்த உருவகங்கள்

ஒவ்வொரு நாளும் அதைக் குறித்த உணர் வில்லாமலேயே நாம் அவ்வகை சொற்றொடர் களைப் பயன்படுத்துகிறோம். "உண்மையிலேயே அவள் ஒரு தேவதை" அல்லது "அவன் பன்றி யைப்போல தின்கிறான்" போன்ற சொற்றொடர் கள் உருவகங்களாக இருக்கின்றன.

1. உவமானங்கள்

திருமறையில் ஒரு பொருள் மற்றொன்டோடு மிகத் தெளிவான முறையில் ஒப்பிட்டுக் கூறப்பட் டுள்ளது. சிறப்பாக ஐந்து கவிதை நூல்களில் இது போன்ற பகுதிகள் காணப்படுகின்றன.

அ. உவமையணி

போன்ற அல்லது போல என்னும் சொற் களைக் கொண்டு இரண்டு பொருட்கள் ஒப்பிடப் பட்டிருந்தால் அது உவமையணி என்று அழைக் கப்படும்.

கர்த்தாவே, நீர் நீதிமானை ஆசீர்வதித்து,
காருணியம் என்னும் கேடகத்தினால்
அவனைச் சூழ்ந்துகொள்ளுவீர் (சங். 5:12)
காட்டு மரங்களுக்குள்ளே கிச்சிலி மரம்
எப்படி இருக்கிறதோ
அப்படியே குமாரருக்குள்ளே என் நேசர்
இருக்கிறார் (உன். 2:3)

(தமிழில் போன்ற அல்லது போல ஆகிய சொற்கள் இந்த இடங்களில் பயன்படுத்தப்படவில்லை. அதற்கு இணையான 'என்னும்', 'அப்படியே' என்ற சொற்கள் இடம்பெற்றுள்ளன.)

ஆ. உருவகம்

நேரடியாக ஒப்பிடுதல் அதாவது ஒரு பொருளை மற்றொரு பெயரால் அழைத்தல் உருவகம் ஆகும். இப்பகுதிகளில் போன்ற அல்லது போல ஆகிய சொற்கள் இடம் பெறா. இந்த வகைப் பயன்பாடு அதிகப் பிரபலமானவை.[4]

தேவனாகிய கர்த்தர் சூரியனும் கேடகமுமானவர்
கர்த்தர் கிருபையையும் மகிமையையும் அருளுவார்
உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு
நன்மையை வழங்காதிரார் (சங். 84:11)
என் சகோதரியே! என் மணவாளியே!
நீ அடைக்கப்பட்ட தோட்டமும், மறைவு
கட்டப்பட்ட நீரூற்றும்
முத்திரிக்கப்பட்ட கிணறுமாயிருக்கிறாய்
(உன். 4:12).

2. மோனை

அடுத்தடுத்து வரும் சொற்கள் ஒரே எழுத்தை முதலாவதாகக் கொண்டிருத்தல் - பெரும்பாலும் உயிர்மெய் எழுத்துகள் - இவை பொருத்தமான கலைத்திறம் வாய்ந்த மோனையாக விளங்குகின்றன.[5] எடுத்துக்காட்டாக உன்னதப்பாட்டின் முதல் வசனத்திலேயே "sh" ஒலியோடு (எபிரெய எழுத்து, Shin) இடம் பெற்றுள்ள பல சொற்களைக் காணமுடியும். அந்நூலின் தலைப்பிலும் ஆக்கியோனது பெயரிலும் "sh" என்ற ஒலியே முதல் எழுத்தாக அமைந்துள்ளது (எபிரெய மொழியில் சாலொமோன் என்ற பெயரை அந்த ஒலியைக் கொண்டே தொடங்க வேண்டும்).

மூலமொழியில் இவ்வித மோனை பயன்படுத்தப்பட்டிருக்கின்ற பகுதிகளை மொழிபெயர்க்கும் போது அதே விதமான மோனையோடு மொழி பெயர்ப்பென்பது இயலாத செயல்.[6] KJV, NKJV ஆகிய ஆங்கில மொழிபெயர்ப்புகளில் இவ்வித மோனைகளைப் பல இடங்களில் காணமுடியும். (எ. கா., யோபு 5:12,13; யோபு 14:1,2; சங். 111:9; நீதி. 17:8; நீதி. 18:8).

(இப்பகுதிகளின் தமிழ் மொழிபெயர்ப்புகளில் இதற்கு எடுத்துக்காட்டுகளைக் காண்பது அரிது.)

3. மனித வடிவமைப்பு உருவகம்

ஆவியாயிருக்கிற தேவன் மனித உடலுறுப்புகளைப் பெற்றிருப்பதுபோல உருவகப்படுத்தி எழுதுதல் இதன் பொருளாகும்:

கர்த்தர் தம்முடைய பரிசுத்த ஆலயத்தில்
இருக்கிறார்;
கர்த்தருடைய சிங்காசனம் பரலோகத்தில்
இருக்கிறது;
அவருடைய கண்கள் மனுபுத்திரரைப்
பார்க்கிறது;
அவருடைய இமைகள் அவர்களைச்
சோதித்தறிகிறது (சங். 11;4)

4. விலங்கு வடிவமைப்பு உருவகம்

அதுபோலவே தேவனுடைய பண்புகள் விலங்குகளின் உடலுறுப்புகளுக்கு ஒப்பிடப்படுதல்:

அவர் செட்டைகளின் கீழே அடைக்கலம்
புகுவாய்;
அவருடைய சத்தியம் உனக்கு பரிசையும்
கேடகமுமாகும் (சங். 91;4).

5. ஆளுருவாக்குதல்

ஒரு பொருளோ, கருத்தியலான பண்போ மனிதனாக உருவகப்படுத்தப்படுதல்:

வானங்கள் மகிழ்ந்து, பூமி பூரிப்பாகி,
சமுத்திரமும் அதன் நிறைவும் முழங்குவதாக
நாடும் அதிலுள்ள யாவும் களிகூருவதாக;
அப்பொழுது கர்த்தருக்கு முன்பாகக்
காட்டுவிருட்சங்களெல்லாம் கெம்பீரிக்கும் (சங். 96:11,12).
ஞானமாகிய நான் விவேகத்தோடே வாசம்
பண்ணி,
நல்யுக்தியான அறிவுகளைக் கண்டடைகிறேன் (நீதி. 8:12).

6. கரந்துறைப்பாட்டு

இந்த வகை அமைப்பை மொழிபெயர்ப்பது இயலாத செயல்,[7] ஏனெனில் எபிரெய மொழி எழுத்துகளைக் கொண்டு இவ்வகைச் செய்யுள்கள் இயற்றப்பட்டுள்ளன; அடுத்தடுத்த வரிகள்

அடுத்தடுத்த எழுத்துகளைத் தொடக்கமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளன. நன்கு அறியப்பட்ட எடுத்துக்காட்டுகள் சங்கீதம் 119 மற்றும் புலம்பல் நூலில் ஐந்து அதிகாரங்களில் நான்கு. நீதி மொழிகள் கடைசிப்பகுதி எபிரெய எழுத்துகளை வரிசையாக முதலெழுத்துகளாகக் கொண்டு, புத்திசாலியான பெண்ணைப் போற்றும் வகையில் எழுதப்பட்டுள்ளது (நீதி. 31:10-31) (தமிழ் மொழியில் இவ்வகைப் பாடல்கள் இருந்தபோதிலும் திருமறையில் இது போன்று காணப்படவில்லை.)

பல்வேறு வகையான உவம உருவக அணிகளும் திருமறையில் இடம் பெற்றுள்ளன, அவற்றில் சில ஏற்கனவே கூறப்பட்ட வகைகளோடு சிறிது ஒன்றிணைந்து காணப்படுகின்றன. மேலே கூறப்பட்டுள்ள வகைகள் பெரும்பாலான விசுவாசிகளுக்குப் போதுமானது.

இந்த ஐந்து நூல்களைப் படிக்கும்போது, இதன் செய்யுட்களில் கையாளப்பட்டுள்ள உருவகங்களை தேடிக் கண்டுபிடிக்கும் வாசகர்கள், புனித எழுத்துகளில் புதிய வகையான ஈடுபாட்டைப் பெறுவார்கள். (திருமறையில் மற்ற நூல்களிலும் அதே ஈடுபாட்டை அவர்கள் பெறுவார்கள்.) மேலும் இதனுடைய அழகை அவர்கள் ஆழ்ந்துணர்ந்து பாராட்டுவார்கள் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை (ஒப்பிடுக., பிர. 3:11).

அடிக்குறிப்புகள்

1 இவற்றில் மூன்று – யோபு, நீதிமொழிகள், பிரசங்கி – ஞான இலக்கியம் என்றும் அழைக்கப்படுகின்றன. செய்யுள் நடையில் அமைந்திருக்கும் இத்திருமறைப் பகுதிகள் ஞானத்தை வலியுறுத்துகின்றன அல்லது தேவனுக்குப் பயப்படுகிற பயத்தில் வாழ்கின்ற கலையையும் திறனையும் வலியுறுத்துகின்றன.

2 எல்லா வகையான திருமறை இலக்கியங்களையும் KJV பாரம்பரிய முறையில் அச்சிட்டுத் தந்திருப்பது இதற்கான காரணங்களில் ஒன்றாகும் – நியாயப்பிரமாண நூல்கள், வரலாற்று நூல்கள், கவிதை நூல்கள், நிருபங்கள் அதனதன் அமைப்பில் வெளியிடப்பட்டுள்ளன. தற்கால மொழிபெயர்ப்புகள் மூலமொழியில் எப்படிப்பட்ட இலக்கியப் படைப்புகள் என்பதைச் சுட்டிக்காட்டும் வகையில் வடிவமைப்பைக் கொண்டிருக்கின்றன.

3. முதல் சங்கீதம் முழுவதுமே, நீதிமானுக்கும் துன்மார்க்கனுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை விவரிக்கும் வகையில் நேர்மாற்று ஒப்புமையைக் கையாண்டு எழுதப்பட்டுள்ளது. ''இருளுக்கு எதிரான ஒளி; ஒளிக்கு எதிரான இருள்'' என்று அழைக்கப்படத்தக்க வகையில் இந்தச் சங்கீதம் தலைசிறந்த படைப்பாக விளங்குகிறது.

4. நம்முடைய கர்த்தர் தம்மை ''வாசல்'' என்றும், ''திராட்சைச் செடி'' என்றும், ''ஜீவ அப்பம்'' என்றும் ''நல்ல மேய்ப்பன்'' என்றும் அழைத்தபோது உருவகங்களைப் பயன்படுத்தினார்.

5 பிரசங்கங்களின் பொருட்சுருக்கத்தை வரைந்து தருவதில் சொற்பொழிவாளர்கள் இம்முறையைப் பயன்படுத்துகிறார்கள். இது கட்டாயப்படுத்தப்படாமல், கவர்ச்சியற்ற முறையில், தேவைக்கு அதிகமாக இல்லாத நிலையில் இவ்வகை மோனை நினைவுகூருவதற்கு உண்மையாகவே பயனளிக்கக் கூடியதாக விளங்குகிறது.

6 மூலமொழியில் புதிய ஏற்பாட்டில் எபிரெய மடலின் தொடக்கம் “P” ஒலியை (கிரேக்கம் pi– முதல் எழுத்தாகக் கொண்ட பல சொற்களைக் கொண்டிருக்கிறது.

7 ரோனால்டு நாக்ஸ் என்பவரின் மொழி பெயர்ப்பில் இம்முறை மனக்கிளர்ச்சியை உண்டு பண்ணத்தக்க வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆயினும் எபிரெய மொழியில் இருபத்திரண்டு எழுத்துகள் மட்டுமே இருப்பதால், ஆங்கில மொழியில் அதிகம் பயன்படுத்தப்படாத நான்கு எழுத்துகள் விடப்பட்டுள்ளன.

யோபு

முன்னுரை

''மனிதன் எங்கே செல்கிறான் என்பது பற்றிய வகுத்தமைக்கப் பெற்ற நிகழ்ச்சிக் கோவை, இவ்வுலகில் மனிதனோடு தேவன் கொண்டிருக்கும் ஈடுபாடு – என்றும் முடிவுறாத இந்தப் பிரச்சினை குறித்த நம்முடைய முதலாவதும் மிகப் பழமையானதுமான அறிக்கை இதுவே... பயபக்திக்குரிய துக்கம், பயபக்திக்குரிய ஒப்புரவு; மனித இருதயத்தில் தோன்றிய மிகப் பழமையான இன்னிசைக் குழுவின் வழிபாட்டுப்பாடல் – மென்மையானதும் உன்னதமானதுமாகும்; வசந்தகால நள்ளிரவு போன்றது, பெருங்கடல்களும் பளிச்சிடும் விண்மீன்களும் கொண்ட உலகிற்கு ஒப்பானது! இத்தகைய இலக்கிய மேன்மை பெற்ற வேறொரு நூலை திருமறையிலோ வேறு எங்குமோ காண்பது அரிது.''

– தாமஸ் கார்லைல்

1. வேதநூல் வரிசையில் தனிச்சிறப்பு மிக்க இடம்

இறைவனுடைய திருமறை முழுவதிலும் யோபுவைப் போன்ற வகையைச் சார்ந்த வேறு நூல் எதுவும் இல்லை: நீளமானது, நாடகக் காட்சியின் உரையாடல் செய்யுள் வடிவில் கொடுக்கப்பட்டுள்ளது, உரைநடையில் அமைந்த வரலாற்று விவரங்களுடன் கூடிய முகவுரைக்கும் முடிவுரைக்கும் இடையே வைக்கப்பட்ட பட்டை தீட்டப்பட்ட வைரம் போன்று இது காட்சி தருகிறது. இந்நூல் முழுவதும் 1,2 அதிகாரங்கள் 32:1-6 மற்றும் 42:7-17 ஆகிய பகுதிகள் நீங்கலாக செய்யுள் நடையில் மூல மொழியாகிய எபிரெயத்தில் எழுதப்பட்டது.

தூய திருமறையில் இது பெற்றுள்ள இடத்தைக் குறித்துத் திருவாளர் ரிடவுட் விவரிக்கிறார்:

> இதனுடைய அளவிலிருந்தும், இதனுடைய உள்ளடக்கத்தை வேகமாகப் புரட்டிப் பார்ப்பதன் மூலமாகவும் இறைவனுடைய திருமறையில் இந்நூல் முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை நம்மால் நிதானித்து அறிய முடியும். எனினும் இது பெரும்பாலோரால் எவ்வளவாகப் பொருட்படுத்தப்படாமல் இருக்கிறது; இதில் அடங்கியுள்ள பகுதிகளை நன்கு அறிந்திருக்க வேண்டும் என்பது பொதுக் கருத்தாக நிலவவில்லை, மாறாக ஒரு சிலர் பின்பற்றும் விதிவிலக்காகவே இருக்கிறது.[1]

இந்நூலில் பயன்படுத்தப்பட்டுள்ள மொழி நடையின் மாட்சிமை அவிசுவாசிகளாலும்கூட போற்றப்படுகிறது. இறை நம்பிக்கைக்கு எதிரான கொள்கையாளர்கள் தங்களுடைய கருத்துகளை எடுத்துரைக்க "ஆதாரங்கள்," "பதிப்புகள்", "இடைச்செருகல்கள்" ஆகியவற்றுடன் எப்பொழுதும் ஆயத்தமாக இருக்கிறார்கள் என்பதில் ஐயமில்லை. அழிவை உண்டாக்கக் கூடிய கருத்துகளைக் கூறும் அந்த மனிதர்கள் பெரும்பாலும் அதற்கு எவ்விதக் கையெழுத்துப் பிரதிகளையும் ஆதாரமாகக் கொண்டிருப்பதில்லை.

மிகப்பெரிய சீர்திருத்தவாதியாகிய திருவாளர் மார்டின் லுத்தர் வரம்பெற்ற எழுத்தாளராகத் திகழ்ந்தார். "மற்ற எல்லாத் திருமறைப் பகுதிகளைக் காட்டிலும் யோபு மாட்சிமை மிக்கதும் பயபக்தியூட்டக் கூடியதும் ஆகும்" என்று அவர் கூறினார். இங்கிலாந்து நாட்டின் அரசவைக் கவிஞராக விளங்கிய ஆல்.பிரட் லார்ட் டென்னிசன் "பண்டைய இலக்கியமோ தற்கால இலக்கியமோ எல்லாவற்றிலும் யோபு மிகச்சிறந்த கவிதை நூல்" என்று கூறி அதனை மிகச்சிறந்த கவிதை நூலாக அடையாளம் காண்பித்திருக்கிறார்.

யோபு நூலின் மிகச் சிறந்த தரத்தின் வெளிச்சத்தின் அடிப்படையிலும், மனித நிலை குறித்த இதனுடைய தெளிவான அறிவின் அடிப்படையிலும் இந்நூலின் மூலமாக நம்முடைய அன்றாடகப் பேச்சு பெரிதளவு வளம் பெற்றிருக்கிறது என்பது மெய்ப்பிக்கப்பட்ட உண்மையாக விளங்கு

கிறது. கீழ்க்காணும் சொற்றொடர்கள் இதனின்று கடன்பெறப்பட்டவை என்பது தெளிவு. இவற்றில் பெரும்பாலானவை யோபு நூலிலிருந்து நேரடி யாக எடுக்கப்பட்ட மேற்கோள்களாகும். இவை நம்முடைய வழக்கமான உரையாடல்களில் பயன்படுத்தப்படுபவை:

என் உடலின் முடி சிலிர்த்தது (4:15).

என் பிராணன் காற்றைப் போலிருக்கிறது (7:7).

என் பிராணனை என் கையிலே வைக்கிறேன் (13:14).

(என் பிராணனை என் கையில் எடுக்கிறேன்.)

"யோபுவின் தேற்றரவாளர்." (இதே சொற்கள் இடம்பெறவில்லை, ஆனால் 16:2 -இல் யோபு தன் நண்பர்களை "அலட்டுண்டாக்குகிற தேற்றரவாளர்" என்று அழைக்கிறான்.

நியாயம் எங்கும் இல்லை (19:7).

என் பற்களை மூடக் கொஞ்சம் தோல் மாத்தி ரம் தப்பினது (19:20).

(என் பற்களின் தோலினால் நான் தப்பினேன்.)

காரியத்தின் மூலம் (19:28). (காரியத்தின் கடைத்தொகை.)

உங்கள் வாயைக் கையால் பொத்திக்கொள் ளுங்கள் (21:5).

ஜீவனுள்ளோருடைய தேசம் (28:13).

குருடனுக்குக் கண்ணும்... சப்பாணிக்குக் காலும் (29:15).

என் முகத்துக்கு முன்பாகத் துப்பினார்கள் (30:10).

பெரியோரெல்லாம் ஞானிகளல்ல (32:9).

அறிவில்லாத வார்த்தைகள் (35:16)

இம்மட்டும் வா, மிஞ்சி வராதே; உன் அலை களின் பெருமை இங்கே அடங்கக்கடவது (38:11).

மரண வாசல்கள் (38:17).

சேனைகளின் ஆரவாரத்தையும் தூரத்திலி ருந்து மோப்பம் பிடிக்கும் (39:25). ("யுத்தத் தின் வாசனை" என்று நாம் கூறுகிறோம்.)

தூளிலும் சாம்பலிலும் இருந்து மனஸ்தாபப் படுகிறேன் (42:6).

"என் மீட்பர் உயிரோடிருக்கிறார்" என்னும் சொற்றொடர் மிகவும் பிரபலமானது (19:25). இந்தச் சொற்கள் இடம் பெற்றுள்ள ஹேண்டல் என்பாருடைய மேசியா என்னும் பாடலின் இசையமைப்பின் மூலமாக இது பலரால் அறியப்பட்டுள்ளது.

"யோபுவின் பொறுமை" (யாக். 5:11) என்னும் சொற்றொடர் இந்நூலில் இடம்பெறவில்லை யெனினும் அன்றாட உரையாடலில் ஒரு பாகமாக மாறிவிட்டது.

இந்நூலின் பொருளடக்கத்தைக் குறித்துக் காண்கையில், வாழ்வு, மரணம், பாடு, மரணத்திற் குப் பின்னான வாழ்வு ஆகியவை பற்றி யோபு எழுப்பிய கேள்விகள் அனைத்திற்கும் விடை, யோபு எனக்கு ஒரு மத்தியஸ்தர் தேவை என்று எதிர்நோக்கிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து விடத்தில் காணப்பட்டது.

2. நூலாசிரியர்

யோபு என்னும் நூலின் ஆசிரியர் மோசே என்று யூதப் பாரம்பரியம் கூறினாலும், ஆசிரியர் யார் என்பது தெரியவில்லை. எலிகூ, சாலொமோன், எசேக்கியா, எஸ்றா அல்லது கி.மு. 500 -க்கும் கி.மு. 200 -க்கும் இடையே வாழ்ந்த பெயர் அறி யப்படாத யூதர் அல்லது யோபுவே இதன் ஆசிரியராக இருக்கக்கூடும் என்று சொல்லப் படுகிறது. இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்ச்சிகள் நடந்தேறிய பிறகு யோபு 140 ஆண்டுகள் கூடுதலாக வாழ்ந்தான் என்பதாலும், இதன் நிகழ்ச்சிகளையும் உரையாடல்களையும் அவனே அனுபவபூர்வமாக அறிந்திருந்தான் என்பதாலும், அவனே ஆசிரியன் என்பதற்கான வாய்ப்பை அதிகம் பெற்றவனாகத் தோன்றுகிறது.

3. எழுதப்பட்ட காலம்

இந்நூலில் காணப்படும் நிகழ்ச்சிகள் யாவும் ஆபிரகாமின் பிறப்பிற்கு முந்தினவை என்று பரவலாக நம்பப்படுகிறது. ஆகவே யோபு நூலின் நிகழ்வுகள் யாவும் ஆதியாகமம் 11 -ஆவது அதிகாரத்தின் பிற்பகுதியைச் சார்ந்ததாக இருக்க வேண்டும். வரலாற்றின் அந்தத் தருணத்தைச் சேர்ந்தது என்று கருதப்படுவதற்குப் பல காரணங் கள் உள்ளன. முதலாவதாக, அவன் யூதன் என்பதற்கு எதிர்த்து வாதிடமுடியாத எந்தக் குறிப்பும் இந்நூலில் இடம்பெறவில்லை. இந் நூலில் யூதர்கள் எகிப்திலிருந்து மேற்கொண்ட பயணத்தைப் பற்றியோ மோசேயின் நியாயப் பிரமாணத்தைப் பற்றியோ ஒரு குறிப்பும் இல்லை. உண்மையில், யோபு தன்னுடைய சொந்தக் குடும்பத்தின் ஆசாரியனாக இருந்தான் என்பது தெளிவாகத் தெரிகிறது (1:5), குடும்ப ஆசாரிய

முறை முற்பிதாக்களின் காலத்தைச் சேர்ந்த தாகும். அந்த நாட்களில்தான் கால்நடைகள் மற்றும் பிற விலங்குகளின் எண்ணிக்கையைக் கொண்டு ஒருவருடைய செல்வம் அளவிடப்பட்டது. மேலும், யோபு இருநூறு ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்தான், இவ்வித வாழ்நாட் கால அளவு ஆபிரகாமுக்கு சற்று முந்தின காலத்தைக் குறிக்கிறது. இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள இசைக் கருவிகள் (21:12), நாணயத்தின் வடிவம் (42:11) ஆகியவை காலவரிசையின்படி காண்கையில் ஆதியாகமத்தின் தொடக்க காலத்தவை என்று வேத அறிஞர்களால் கணக்கிடப்படுகின்றன.[2]

இந்நூல் எழுதப்பட்ட காலத்தைக் குறித்துக் கணக்கிடும்போது வேத அறிஞர்கள் இது கி. மு. 2100 -க்கும் கி. மு. 1900 -க்கும் இடைப்பட்ட முற்பிதாக்களின் காலத்திலிருந்து கி. மு. இரண்டாம் நூற்றாண்டு வரையில் எப்பொழுது வேண்டுமானாலும் இருக்கலாம் என்று கருதுகிறார்கள்! (இந்தக் கடைசிக் கருத்து தாராளக்கொள்கையை மிக அதிகமாகப் பின்பற்றுவோர் கொண்டிருக்கிற கருத்தாகும். கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் கண்டெடுக்கப்பட்ட சாவுக் கடல் பிரதிகளில் யோபு வேத பகுதிகள் இடம்பெற்றிருக்கும் நிலையில் இக்கருத்து முற்றிலும் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதன்று.)

முற்பிதாக்களின் காலம் அல்லது சாலொமோன் காலம், இவையிரண்டும் மிகவும் பொருத்தமான காலங்களாகக் கருதப்படுகின்றன. இத்தகைய நீண்ட மற்றும் புரிந்துகொள்வதற்குச் சிக்கலான உரையாடல்கள், அவை சொல்லப்பட்டவுடனேயே எழுதப்பட்டிருந்தால்தான் நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டிருக்கும் என்னும் எண்ணம் தற்கால மேற்கத்தியருக்குத் தோன்றும். ஆயினும் கிழக்கத்திய மற்றும் யூத மரபுவழி வாய்மொழிப் பரிமாற்றம் குறிப்பிடத்தக்க வகையில் துல்லியமானது என்பது யாவரும் அறிந்ததே.

இந்நூல் சாலொமோன் காலத்தது என்பதற்கான வாதத்திற்கு இதனுடைய உள்ளடக்கமும் நடையும் சான்றுகளாகும்: இது ஒரு ஞான இலக்கியம், அரசனாகிய சாலொமோனின் படைப்புகளைப் போன்றதல்ல என்று கூற முடியாது. புராதனைக் கொள்கையில் அதிகப் பற்றுடையோராகிய பழைய ஏற்பாட்டு அறிஞர்களாகிய ∴பிரான்ஸ் டிலிட்ஜ் மற்றும் மெரில் F. அங்கர் என்பவர்கள் இந்நூல் சாலொமோன் காலத்தில் எழுதப்பட்டது என்று கருதுகிறார்கள்; ஆயினும் மிக நீண்டகால மரபுவழி வாய்மொழிப் பரிமாற்றத்தினால் செய்திகள் பாதுகாக்கப்பட்டன என்னும் கொள்கைக்கு அவர்கள் இடமளிக்கிறார்கள் என்பதில் ஐயமில்லை. இலக்கியத்தில் இத்தகைய வியத்தகு நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது என்னும் நிலை மேற்கத்திய மக்களால் புரிந்துகொள்வதற்குக் கடினமாயிருந்தாலும் கிழக்கத்திய மக்களால் பரவலாகப் புரிந்துகொள்ளப்படுகிறது.

4. நூலின் பின்னணியும் கருப்பொருளும்

இந்நூலின் ஆசிரியர் யார் என்பது தெரியவில்லையென்றாலும், அது ஆவியானவரின் உயிரூட்டம் பெற்றது என்பதிலும் அதனுடைய வரலாறுபூர்வமான உண்மைத் தன்மையிலும் எவ்விதக் கேள்வியுமில்லை. அப்போஸ்தலனாகிய பவுல் 1 கொரிந்தியர் 3:19 -இல் யோபு 5:13 -ஆம் வசனத்தை மேற்கோள் காட்டுகிறார்: "அவர் ஞானிகளை அவர்களுடைய தந்திரத்திலே பிடிக்கிறார்." யோபு வரலாற்று மனிதன், கற்பனை மனிதன் அல்லன் என்பதை எசேக்கியேல் 14:14 -ஆம் வசனத்திலிருந்து அறியலாம். அவனுடைய பெயர் யாக்கோபு 5:11 -இல் குறிப்பிடப்பட்டுள்ளது: "இதோ, பொறுமையாயிருக்கிறவர்களைப் பாக்கியவான்களென்கிறோமே! யோபுவின் பொறுமையைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்; கர்த்தருடைய செயலின் முடிவையும் கண்டிருக்கிறீர்கள்; கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமும் உள்ளவராயிருக்கிறாரே."

இந்நூலின் ஆய்வுப்பொருள் மனிதனுடைய பாடுகளின் இரகசியமும் வேதனை என்னும் பிரச்சினையும் ஆகும். மக்கள் ஏன் பாடு அனுபவிக்கிறார்கள், அதிலும் முக்கியமாக நேர்மையோடு வாழ்பவர்கள் பாடு அனுபவிப்பதன் காரணம் என்ன? கர்த்தராகிய இயேசுவைத் தவிர இவ்வுலகில் வாழ்ந்த எல்லா மனிதரும் அனுபவிக்காத அளவு பேரிடரை யோபு எதிர்கொள்ள வேண்டியதாயிற்று. தேவனுடன் யோபு கொண்டிருந்த தொடர்பின் அளவு பெருக வேண்டுமென்பதற்காக இந்தப் பாடுகளையெல்லாம் அவன் அனுபவிக்கும்படி கர்த்தர் அனுமதித்தார். ஒரு சிறப்பான முறையில், யூதமக்களின் பாடுகளுக்கு நிழலாக விளங்கும் நோக்கத்துடன் இந்நூல் இயற்றப்பட்டது எனவும் கூறலாம்.

யூதர்கள் பாடுகள் அனுபவிக்கும் மேசியாவை (வீறார்ந்த "மக்கபேயரின்" மாதிரிக்கு மாறாக) ஏற்றுக்கொள்ள வேண்டுமாயின், ஒரு தனிப்பட்டவர் அனுபவிக்கிற பாடுகளுக்கு அவருடைய பாவங்கள் காரணமாக இருக்க வேண்டிய அவசி

யம் இல்லை என்னும் உண்மை கற்பிக்கப்பட வேண்டியது அவசியம். நேர்மையற்ற நமக்காக நீதிபரராகிய கிறிஸ்து பாடுகள் அனுபவித்தார்.

இந்நூலில் பல பகுதிகள் கர்த்தராகிய இயேசு வுக்குப் பொருந்தக் கூடியவை:

1. 9:33 - "நான் அவருக்குப் பிரதியுத்தரம் சொல்லுகிறதற்கும், நாங்கள் கூடி நியாயத் திற்கு வருகிறதற்கும், அவர் என்னைப் போல மனிதன் அல்லவே." (தேவனுக்கும் மனிதனுக் கும் இடையேயுள்ள இடைவெளியை நீக்கும் மத்தியஸ்தராகக் கிறிஸ்து விளங்குகிறார்.)
2. 16:8-9 யோபுவின் பாடுகள். இந்தப் பகுதியில் காணப்படும் பல சொற்றொடர்கள் மேசியா வின் பாடுகளைக் குறிப்பதற்காகச் சங்கீதப் பாடல்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன.
3. 16-21 - "ஒரு மனுபுத்திரன் தன் சிநேகிதனுக் காக வழக்காடுகிறதுபோல, தேவனோடே மனிதனுக்காக வழக்காடுகிறவர் ஒருவர் உண்டானால் நலமாயிருக்கும்." (திருத் தந்தையின் முன்னிலையில் நமக்காகப் பரிந்து பேசுகிறவராகக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இருக்கிறார்.)
4. 19:25,26 - "என் மீட்பர் உயிரோடிருக்கிறார்." (மீட்பர், வரப்போகிற அரசர் ஆகிய கிறிஸ்து வின் பணிகள் இங்கு தெளிவாக விவரிக்கப் பட்டுள்ளன.)
5. 33:24 - "அவர் அவனுக்கு இரங்கி, அவன் படுகுழியில் இறங்காதபடிக்கு: 'நீர் அவனை இரட்சியும்; மீட்கும் பொருளை நான் கண்டு பிடித்தேன்' என்பார்." (இங்கு பயன்படுத்தப் பட்டுள்ள "மீட்கும் பொருள்" என்னும் சொல் "பாவநிவாரண பலி" என்னும் சொல்லைப் போன்றதேயாகும். கிறிஸ்து செய்த பாவ நிவாரணத்தின் மூலமாக விசுவாசிகள் நரகம் என்னும் படுகுழியிலிருந்து மீட்கப்பட்டிருக் கிறார்கள்.)

அறிவியல் பூர்வமான அறிவு முன்னமே இருந்தது என்பதை யோபு நூலில் இடம் பெற்றுள்ள பல வசனங்கள் வெளிப்படுத்து வதாக அவ்வப்போது சொல்லப்படுகின்றன:

1. நீர் ஆவியாய் மாறுதல், ஆவி நீராய் மாறுதல் - இத்தகைய சுழற்றி (36:27,28).
2. காற்று மற்றும் வானிலை ஆகியவற்றின் திசை இயக்கம் (37:9,17).
3. மனித உடல் கூறுகளின் இணக்கம் (33:6).
4. பூமி அந்தரத்தில் தொங்கும் நிலை (26:7).
5. பெருங்கடல் ஆழத்தின் இயல்நிலை (38:16).
6. மேகம் - மின்னல் தொடர்பு (37:11).
7. விண்ணகக் கோள்களின் பாதையும், பூமியின் மேல் அவற்றின் தாக்கமும் (38:32,33).

பொருட்சுருக்கம்

1. முகவுரை: யோபு சோதிக்கப்படுதல் (அதி. 1,2)

அ. காட்சி 1: ஊத்ஸ் நாடு (1:1-5)

ஆ. காட்சி 2: விண்ணகம் - கர்த்தருடைய முன்னிலை (1:6-12)

இ. காட்சி 3: ஊத்ஸ் நாடு - யோபுவின் உடைமைகளும் செல்வ வளமும் பேரிடரால் அழிவுறுதல் (1:13-22)

ஈ. காட்சி 4: விண்ணகம் - மீண்டும் கர்த்தருடைய முன்னிலை (2:1-6)

உ. காட்சி 5: ஊத்ஸ் - யோபுவின் உடலில் ஏற்பட்ட இடர் (2:7-13)

2. யோபுவுக்கும் அவனுடைய நண்பர்களுக்கும் இடையே நடந்த வாக்குவாதம் (அதி. 3-31)

அ. உரையாடல்களின் முதல் சுற்று (அதி. 3-14)

1. யோபுவின் ஆரம்பப் புலம்பல் (அதி. 3)
2. எலிப்பாசின் முதல் உரை (அதி. 4,5)
3. யோபுவின் பதில் (அதி. 6,7)
4. பில்தாத்தின் முதல் உரை (அதி. 8)
5. யோபுவின் பதில் (அதி. 9,10)

6. சோப்பாரின் முதல் உரை (அதி. 11)

7. யோபுவின் பதில் (அதி. 12-14)

ஆ. இரண்டாவது சுற்று உரையாடல் (அதி. 15-21)

1. எலிப்பாசின் இரண்டாவது உரை (அதி. 15)

2. யோபுவின் பதில் (அதி. 16,17)

3. பில்தாத்தின் இரண்டாவது உரை (அதி. 18)

4. யோபுவின் பதில் (அதி. 19)

5. சோப்பாரின் இரண்டாம் உரை (அதி. 20)

6. யோபுவின் பதில் (அதி. 21)

இ. மூன்றாவது சுற்று உரையாடல் (அதி. 22-31)

1. எலிப்பாசின் மூன்றாவது உரை (அதி. 22)

2. யோபுவின் பதில் (அதி. 23,24)

3. பில்தாத்தின் மூன்றாவது உரை (அதி. 25)

4. யோபுவின் பதில் (அதி. 26)

5. இறுதியாக யோபு தனக்குத் தானே பேசிக்கொள்ளுதல் (அதி. 27-31)

3. எலிகூவின் குறுக்கீடு (அதி. 32-37)

அ. யோபுவின் மூன்று நண்பர்களோடு எலிகூ ஆற்றிய உரை (அதி. 32)

ஆ. யோபுவிடம் எலிகூ உரையாடுதல் (அதி. 33)

இ. யோபுவின் மூன்று நண்பர்களிடம் எலிகூ ஆற்றிய இரண்டாவது உரை (அதி. 34)

ஈ. யோபுவிடம் எலிகூ ஆற்றிய இரண்டாம் உரை (அதி. 35-37)

4. கர்த்தருடைய வெளிப்பாடு (38:1-42:6)

அ. கர்த்தர் யோபுவுக்கு விடுத்த முதலாவது அறைகூவல் (38:1-40:2)

1. முன்னுரை (38:1-3)

2. வியத்தகு உயிரற்ற படைப்புகளின் அடிப்படையிலான அறைகூவல் (38:4-38)

3. வியத்தகு உயிருள்ள படைப்புகளின் அடிப்படையிலான அறைகூவல் (38:39-40:2)

ஆ. யோபு விடை கூறுதல் (40:3-5)

இ. கர்த்தர் யோபுவுக்கு விடுத்த இரண்டாவது அறைகூவல் (40:6-41:34)

1. ஓர் ஆண்மகனைப் போலப் பதில்கூறும்படி யோபுவுக்கு அறைகூவல் விடுக்கப்படுதல் (40:6-14)

2. பிகெமோத்தைக் கவனித்துப் பார்க்கும்படி யோபுவுக்கு அறைகூவல் விடுக்கப்படுதல் (40:15-24)

3. லிவியாதானைக் கவனிக்கும்படி யோபுவிடம் அறைகூவல் விடுக்கப்படுதல் (அதி. 41)

ஈ. யோபுவின் தாழ்மையான பதிலுரை (42:1-6).

முன்னுரை

5. இறுதி உரை: யோபுவின் வெற்றி (42:7-17)

அ. யோபுவின் நண்பர்கள் கடிந்துகொள்ளப்படுதலும், புதுப்பிக்கப்படுதலும் (42:7-9)

ஆ. யோபுவின் செல்வம் அவனுக்கு மீண்டும் அளிக்கப்படுதல் (42:10-17)

6. யோபு நூலிலிருந்து படிப்பினைகள்

பொருட்சுருக்க அட்டவணை

தலைப்பு	யோபு சோதிக்கப்படுதல்	யோபுவோடு விவாதம்						யோபுவின் விடுதலை
கருத்து	பேரிடர்	விவாதம்						தாழ்மை
	உரைநடை	கவிதை						உரைநடை
பகுப்பு	கர்த்தரும் சாத்தானும்	முதல் சுற்று விவாதம்	இரண்டாம் சுற்று விவாதம்	மூன்றாம் சுற்று விவாதம்	யோபுவின் இறுதி உரை	எலிகூ ஆற்றிய உரை	கர்த்தரின் அறைகூவல்	யோபுவின் தாழ்மையான பதில்
வசனம்	1:1-2:13	3:1-14:22	15:1-21:34	22:1-26:14	27:1-31:40	32:1-37:24	38:1-41:34	42:1-17
இடம்	ஊத்ஸ் நாடு (வட அரேபியா)							
காலம்	முற்பிதாக்களின் காலம் கி. மு. 2000							

விளக்கவுரை

1. முகவுரை: யோபு சோதிக்கப்படுதல் [அதி. 1,2]

அ. காட்சி 1: ஊத்ஸ் நாடு [1:1-5]

1:1-3 ஊத்ஸ் என்னும் நாட்டில் வாழ்ந்த **யோபு** மிகுந்த செல்வந்தனாயிருந்தான். ஊத்ஸ் பாலஸ்தீனத்தின் தென்கிழக்கே ஏதோமில் இருந்தது என்று புலம்பல் 4:21 -ஆம் வசனம் கூறுவதாகத் தோன்றுகிறது.[3] **உத்தமனும்** தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்த யோபுவுக்கு ஏழு ஆண் மக்களும் மூன்று பெண்மக்களும் இருந்தார்கள். அவனுடைய கால்நடைச் செல்வம் மிக அதிகமாக இருந்ததால் கிழக்கு நாட்டிலேயே மிகப் பெரியவனாகக் கருதப்பட்டான்.

1:4,5 யோபு நூலில் காணப்படும் விவரங்கள் யாவும் பழம் மூதாதையர் காலத்தில் நடந்தவை என்பதற்குக் கூறப்படும் வலிமை மிக்க சான்றுகளில் ஒன்று, அவன் அந்தக் குடும்பத்தின் தந்தை என்னும் நிலையில் அவனே ஆசாரியனாகப் பணிபுரிந்தான், அவனுடைய ஆண்மக்களுக்காக அவனே சர்வாங்க தகனபலிகளைச் செலுத்தினான் என்பதே ஆகும். பொதுவாக, பயபக்தியுள்ள மனிதர்களும்கூட விருந்துண்டு களிகூருகிற நாட்களில் பயனற்றதும் தேவனைப் பழித்துரைக்கிறதுமான பேச்சுகளைப் பேசக்கூடிய ஆபத்து எப்பொழுதும் இருந்து வந்திருக்கிறது. கிறிஸ்தவக் காலக்கட்டத்தில் நமக்குப் பொருத்தமான நல்ல கருத்தைக் கிறிஸ்துமஸ் நாளின் மாலை தியானத்தின் மூலம் C. H. ஸ்பர்ஜன் வழங்குகிறார்:

> குடும்பத்தின் விழாக்கொண்டாட்டங்களுக்குப் பிறகு அந்த மூதாதை அதிகாலையில் செய்த செயலைத் தனக்காக ஒவ்வொரு விசுவாசியும் இரவு உறங்கச் செல்லுவதற்கு முன் செய்வது நல்லது. வீட்டார் யாவரும் ஒன்றுகூடி மன மகிழ்ச்சியோடு நேரத்தைச் செலவிடுகின்ற போது கருத்தற்ற வகையில் பாவமான பேச்சுகளைப் பேசவும், கிறிஸ்தவர்கள் கொண்டிருக்க வேண்டிய நல்நடத்தையை மறந்துவிடவும் கூடும். அவ்வாறு இருக்கக் கூடாது. ஆனால் அது அவ்வாறுதான் காணப்படுகிறது. நமது விருந்து நாட்கள் பெரும்பாலும் பரிசுத்தமாக்கப்பட்டவையாக விளங்குவதில்லை. மாறாக அவ்வப்போது அவை பரிசுத்தமற்ற களியாட்டம் என்னும் கீழ்நிலைக்குச் சென்றுவிடுகின்றன... ஆழ்ந்த துன்பம் பரிசுத்தமாக்கும் அம்சத்தைக் கொண்டிருப்பதுபோல நன்றிபாராட்டும் நிகழ்ச்சிகளும் தூய்மையைத் தூண்டிவிடக் கூடியவையாக இருக்க வேண்டும். அந்தோ பரிதாபம்! துக்க வீடு விருந்து வீட்டைக் காட்டிலும் சிறந்ததாக விளங்குகிறது என்பதை நிகழ்ச்சிகள் மெய்ப்பிக்கின்றன. இதனை நம்முடைய இருதயங்கள் அறிந்திருக்கின்றன. விசுவாசியே வாரும், இன்றைக்கு என்ன பாவம் செய்தீர்? மற்றவர்களைப் போல வீணான சொற்களையும் நெறியற்ற பேச்சையும் பேசினீர்களா? அவ்வாறெனில் உங்களது பாவத்தை அறிக்கைசெய்யுங்கள், பலியானவரிடத்தில் பறந்து செல்லுங்கள். அவர் பரிசுத்தப்படுத்துவார். அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவருடைய விலையேறப்பெற்ற இரத்தம் நம்முடைய அறியாமை மற்றும் கவனமற்ற தன்மை ஆகிய வற்றால் உண்டான தீட்டை அகற்றி, குற்றத்தையும் நீக்க வல்லமையுடையதாக விளங்குகிறது.[4]

ஆ. காட்சி 2: விண்ணகம் – கர்த்தருடைய முன்னிலை [1:6-12]

கதை படிப்படியாக விரிவடைகிறது, **கர்த்தருடைய** முன்னிலையில் தேவபுத்திரர்[5] (தேவதூதர்கள்) வந்து நின்றார்கள். இந்தப் பரலோகக் காட்சி நம்மிடம் எடுத்துரைக்கப்படுகிறது. **சாத்தானும்** ("குற்றஞ்சாட்டுகிறவன்" என்பதற்கான எபிரெய மொழிச் சொல்) அங்கு வந்திருந்தான். தம்முடைய தாசனாகிய யோபுவின் உத்தமமான பண்பைப் பற்றி தேவன் சாத்தானிடம் பேசியபோது, அவர் அவனுக்கு அவ்வளவு நன்மை செய்கிறவராக இருந்த ஒரே காரணத்தால்தான் அவன் தேவனுக்குப் பயந்திருந்தான் என்னும் பொருள்பட சாத்தான் பதிலுரைத்தான். யோபுவைச் சுற்றிலும் கர்த்தர் பாதுகாப்பு வேலியை அமைத்திருக்கவில்லை என்றால், யோபு தமது படைப்பாளரை அவருடைய முகத்திற்கு நேராகச் சபித்திருப்பான் என்பதே சாத்தானின் விவாதம்.

இ. காட்சி 3: ஊத்ஸ் நாடு – யோபுவின் உடைமைகளும் செல்வ வளமும் பேரிடரால் அழிவுறுதல் [1:13-22]

1:13-19 அதனடிப்படையில் யோபுவின் உடைமைகளைக் கொள்ளையிட்டு, அவனைச் சோதிப்பதற்குக் **கர்த்தர் சாத்தானுக்கு** அனுமதியளித்தார். ஆயினும் யோபுவைத் தொடுவதற்குப் பிசாசுக்கு அனுமதி கொடுக்கப்படவில்லை. அதன் பிறகு ஒன்றன்பின் ஒன்றாக, பேரச்சம் விளைவிக்கக் கூடிய இடர்ப்பாடுகள் சடிதியில் உண்டாயின:

1. சபேயர் ஐந்நூறு ஏர்மாடுகளையும், ஐந்நூறு கழுதைகளையும் கொள்ளையடித்துச் சென்ற துமல்லாமல் அவற்றை மேய்த்துவந்த வேலைக்காரரையும் கொன்றுபோட்டார்கள்.
2. ஏழாயிரம் ஆடுகளையும் அவற்றை மேய்த்து வந்த ஆட்களையும் மின்னல் அழித்துவிட்டது.
3. கல்தேயர் மூவாயிரம் ஒட்டகங்களைக் கொள்ளையடித்துச் சென்றதுமல்லாமல் அவற்றைப் பராமரித்து வந்த வேலைக்காரரைக் கொன்றுபோட்டார்கள்.
4. யோபுவின் குமாரரும் குமாரத்திகளும் உண்டு திராட்சை ரசம் பருகி மகிழ்ந்திருந்த வேளையில் பெருங்காற்று அடித்து வீடு இடிந்துவிழுந்து அனைவரும் இறந்துபோனார்கள்.

1:20-22 இத்தகைய பயங்கர இழப்பு ஏற்பட்ட போதிலும் யோபு தேவனைத் தொழுதுகொண்டவனாக, "நிர்வாணியாய் என் தாயின் கர்ப்பத்திலிருந்து வந்தேன்; நிர்வாணியாய் அவ்விடத்துக்குத் திரும்புவேன்; கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்" என்றான்.

ஈ. காட்சி 4: விண்ணகம் – மீண்டும் கர்த்தருடைய முன்னிலை (2:1-6)

இரண்டாவது அதிகாரத்தில் கர்த்தருடைய முன்னிலையில் சாத்தான் மீண்டும் வருகிறதைக் காண்கிறோம். யோபுவின் உடலைத் தொடுவதற்குச் சாத்தான் அனுமதிக்கப்படுவானென்றால், அவன் தேவனிடத்தில் கொண்டிருந்த விசுவாசம் சடிதியில் மறைந்து போகும் என்னும் பொருள்பட அவன் பேசினான். அதற்கான அனுமதி வழங்கப்படுகிறது.

உ. காட்சி 5: ஊத்ஸ் – யோபுவின் உடலில் ஏற்பட்ட இடர் (2:7-13)

2:7-10 அதன் பிறகு, யோபுவின் உடலில் **உள்ளங்கால் தொடங்கி அவன் உச்சந்தலைமட்டும் கொடிய பருக்கள்** தோன்றி மிகுந்த வேதனையால் அவதியுற்றான். அவனுடைய மனைவியே, **"தேவனைத் தூஷித்து உயிரைவிடும்"** என்று சொல்லும் அளவிற்கு அவனுடைய வேதனை மிகுதியாயிருந்தது. ஆனால் யோபு, **"தேவன் கையிலே நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெறவேண்டாமோ?"** என்று பதிலுரைத்தான். யோபுவின் மனைவியைக் குறித்து ஹரோல்டு செயின்ட் ஜான் என்பார் கீழ்க்காணும் பகுதியை மேற்கோள் காட்டுகிறார்:

> யோபுவின் மனைவியைப் பற்றி ஆண் விரிவுரையாளர்கள் யாவரும் இரக்கமற்ற முறையிலும் ஒருதலைச் சார்போடும் எழுதியிருக்கிறார்கள் என்றே எண்ணுகிறேன், இதற்காக என்னுடைய ஆண்பாலைக் குறித்து மனக்கசப்பு அடைந்திருக்கிறேன். ஒரு பெண்ணைக் குறித்துப் புரிந்துகொள்ள ஒரு பெண்ணால் மட்டுமே முடியும்; யோபுவின் துக்கங்களில் அவனுடைய மனைவி பங்கு பெற்ற வரை அவற்றைத் துணிவோடு சகித்தாள், ஆனால் அவன் புதிய வகையான இடருக்குள்ளாகப் புகுந்தபோது, அவள் அந்தத் துன்பத்தில் பங்குபெற முடியாதபடி விடப்பட்டபோது மனமொடிந்து போனாள். இதனை உய்த்துணரும் ஆற்றல் ஒரு பெண் எழுத்தாளருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது (அவரது பெயர் லூயி ஹெளடன் என்று நினைக்கிறேன்). அவனுடைய துன்பத்தில் பங்குபெற முடியாதபடி உண்டான தடையை அவளால் தாங்க முடியவில்லை.[6]

2:11-13 அதன் பிறகு சிறிது நாட்களுக்குள்ளாக, **யோபுவுக்கு நேரிட்ட தீமைகளைக்** குறித்துக் கேள்விப்பட்டு அவனுடைய நண்பர்கள் மூவர் அவனைச் சந்தித்து ஆறுதல் கூற முடிவு செய்தார்கள். அந்த நண்பர்கள் **எலிப்பாஸ், பில்தாத், சோப்பார்** ஆகியோர் ஆவார்கள்.

ஆயினும், அவர்கள் யோபுவின் பரிதாபத்திற்குரிய வெறுக்கத்தக்க நிலையைக் கண்டு அதிர்ச்சியடைந்தவர்களாக, **ஏழுநாட்கள் இரவு பகல்** பேசமுடியாமல் இருந்தார்கள்.

2. யோபுவுக்கும் அவனுடைய நண்பர்களுக்கும் இடையே நடந்த வாக்குவாதம் (அதி. 3-31)

யோபுவும் அவனுடைய நண்பர்களும் செய்த உரையாடல்களின் தொகுப்பு 3 -ஆவது அதிகாரத்தில் தொடங்குகிறது. இந்நூலின் பெரும் பகுதியான இது மிகவும் சிக்கல் நிறைந்ததாகவும் இருக்கிறது. இதனைத் திருவாளர் ரிடவுட் திறம்பட விவரிக்கிறார்:

> சிக்கல் நிறைந்த பகுதி என்று இதற்கு நன்கு பெயர் சூட்டியிருக்கிறார்; ஏனெனில் வாக்கு

வாதங்கள், பழித்துரைகள், குற்றச்சாட்டுகள், ஐயங்கள், ஓரளவு சரியான கருத்துகள், இடையிடையே விசுவாசம் நம்பிக்கை ஆகியவற்றின் ஒளிக்கீற்றுகள் ஆகியவற்றின் திரளாக இப் பகுதி விளங்குகிறது – இவை யாவும் மிகவுயர்ந்த கவிதை நடையில், வீறார்ந்த கிழக்கத்திய உவமானங்களால் நிறையப்பெற்ற செழிப்போடு தரப்பட்டுள்ளன. மேலோட்டமாகப் படிப்பவருக்கு இப்பகுதியில் வளர்ச்சி இல்லாதது போலவும், தெளிவற்ற முரண்பாட்டைத் தவிர வேறொன்றும் இல்லாதது போலவும் தோன்றும். மிகவும் அறிமுகமான, அழகிய, அடிக்கடி மேற்கோள் காட்டப்படுகிற பகுதிகளைத் தவிர வேறு எதையும் பெரும்பாலான இறைமக்கள் இப்பகுதியிலிருந்து பெற்றதில்லை என்பதை நாம் ஒப்புக்கொண்டே ஆகவேண்டும்.[7]

இந்த உரையாடல்களை மூன்று தொகுப்புகளாகப் பிரிக்கலாம்: முதலாவதாக யோபு பேசுதல், அவனுடைய நண்பர்களில் ஒருவன் பதிலுரைத்தல்; அவனுக்கு யோபு விடைபகர்தல், வேறொரு நண்பன் அதற்குப் பதிலுரைத்தல்; மீண்டும் யோபு தன்னுடைய நேர்மையைப் பாதுகாக்கும்படி பேசுதல், மூன்றாவது நண்பனால் கடிந்து கொள்ளப்படுதல்!

உரையாடல்களின் மூன்று சுற்றுகளை இவ்வாறு வகைப்படுத்திக் காண்பிக்க இயலும்:

முதல் சுற்று	**இரண்டாவது சுற்று**
யோபு: அதி. 3	யோபு: அதி. 12-14
எலிப்பாஸ்: அதி. 4,5	எலிப்பாஸ்: அதி. 15
யோபு: அதி. 6,7	யோபு: அதி. 16,17
பில்தாத்: அதி. 8	பில்தாத்: அதி. 18
யோபு: அதி. 9,10	யோபு. அதி. 19
சோப்பார்: அதி. 11	சோப்பார்: அதி. 20

மூன்றாவது சுற்று

யோபு: அதி. 21
எலிப்பாஸ்: அதி. 22
யோபு: அதி. 23,24
பில்தாத்: அதி. 25
யோபு: 26-31

(சோப்பார் மீண்டும் பேசவில்லை.)

மூன்று நண்பர்களின் வாதங்களைக் கீழ்க்காணும் வண்ணம்தொகுத்து உரைக்கலாம்:

எலிப்பாஸ் அனுபவத்தைச் சார்ந்து அல்லது பொதுவான நிகழ்வுகளைச் சார்ந்து வலியுறுத்துகிறான்: "நான் கண்டிருக்கிறேன்..." (4:8,16; 5:3; 15:7; 22:19).

பில்தாத் பாரம்பரியத்தின் தொனியாகவும், பண்டைய வழக்கங்களின் அதிகாரியாகவும் விளங்குகிறான் (8:8). "அவனுடைய உரையாடல்கள் பழமொழிகளாலும், பக்தியை வெளிப்படுத்தும் வெற்றுரைகளாலும் நிறைந்து காணப்படுகின்றன. அவை உண்மையாக இருந்தபோதிலும், யாவரும் அறிந்தவையே அவை (9:1-3; 13:2)."[8]

பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிதல், சமய ஈடுபாடு ஆகியவற்றையே சோப்பார் ஆலோசனையாக வழங்குகிறான் (11:14,15). "எந்தவொரு நிகழ்விலும் தேவன் என்ன செய்வார் என்பதையும் மேலும் அவருடைய எண்ணங்கள் என்னவாயிருக்கும் என்பதையும் முன்னறிந்தவன் போல இவன் ஊகித்துப் பேசுகிறான்."[9] இவனுடைய கருத்துகள் யாவும் ஊகங்களாகவும், கொள்கைகளை ஒருதலையாக வற்புறுத்திக் கூறுபவையாகவும் இருக்கின்றன.

இந்நூலின் எஞ்சிய பகுதி ஓர் இளைஞனாகிய எலிகூ என்பவன் பேசிய நீண்ட பேச்சாக விளங்குகிறது (அதி. 32-37). பிறகு தேவனுக்கும் யோபுவுக்கும் இடையே நடந்த உரையாடல் இதில் இடம்பெற்றுள்ளது (அதி. 38-42). இறுதியில், முன்னுரைக்கு ஒப்பான உரைநடையில் அமைந்துள்ள முடிவுரையோடு இந்நூல் நிறைவு பெறுகிறது.

அ. உரையாடல்களின் முதல் சுற்று (அதி. 3-14)

1. யோபுவின் ஆரம்பப் புலம்பல் (அதி. 3)

3:1-9 இந்த அதிகாரத்திற்கு "மகிழ்ச்சியற்ற பிறந்தநாள்" என்று நல்ல முறையில் பெயர் சூட்டப்பட்டுள்ளது, ஏனெனில் யோபு தன்னுடைய **பிறந்தநாளை** இங்கு **சபிக்கிறான்**, மரணத்தின் நன்மைகளைப் போற்றுகிறான், ஆனாலும் தன்னால் மரணமடையமுடியாது என்று குறைகூறுகிறான்! அவன் ஓர் **ஆண் பிள்ளை உற்பத்தியான நாளை** (அந்த ஆண்பிள்ளை அவனே ஆவான்) இருளுக்கு ஒப்புவிக்கிறான்.

3:10-12 அவன் கருவில் உருவாகிப் பிறந்த போதிலும், அந்த நாளிலேயே **சாகாமற்போனதென்ன?** (அவன் அடைந்த பயங்கரமான கசப்பிலும், துன்பத்திலும் யோபு கருக்கலைத் தலை அல்லது சிறு குழந்தைக் கொலையை

ஆலோசனையாகக் குறிப்பிடவில்லை. பண்டைய காலத்தில் இத்தீமைகள் பொதுவான வழக்கமாக இருந்தன. இன்றைக்கும் மேற்கத்திய நாடுகளில் - நம் நாட்டிலும்கூட - இவ்வழக்கங்கள் சர்வ சாதாரணமாக மாறிவிட்டன.)

3:13-19 பெலனற்று விடாய்த்துப்போனவர்கள் அங்கே இளைப்பாறுகிறார்கள், சிறியவனும் பெரியவனும் அங்கே சரியாயிருக்கிறார்கள். அடிமை தன் எஜமானுக்கு நீங்கலாயிருக்கிறான் என்று கூறி யோபு மரணமடைந்த நிலையைப் போற்றுகிறான்.

3:20-26 அடுத்ததாக, அவன் இருந்தது போன்று **நிர்பாக்கியராக** இருந்தவர்களுக்கு வாழ்வின் **வெளிச்சமும் மரணத்துக்கு ஆசையாய் காத்திருந்தவர்களுக்குப் புதையலும்** ஏன் கொடுக்கப்பட்டன என்னும் கேள்வியை எழுப்பினான்.

25 -ஆவது வசனம் மிகவும் புகழ் வாய்ந்தது:

நான் பயந்த காரியம் எனக்கு நேரிட்டது;

நான் அஞ்சினது எனக்கு வந்தது.

மகிழ்ச்சியும் வளமும் நிறைந்திருந்த நாட்களிலும்கூட, தன்னுடைய உடைமைகள் யாவற்றையும் இழக்க நேரிடும் என்று யோபு அஞ்சினான் என்பதை இது சுட்டிக்காட்டுகிறது எனக் கூற முடியுமா? பெருஞ்செல்வந்தர்களுடைய பொதுவான குணமாக இது விளங்குகிறது: செல்வத்தை இழக்க நேரிடும், எளிய வாழ்க்கை வாழவேண்டிய நிலை உண்டாகும் என்னும் அச்சம். செல்வம் மெய்யான பாதுகாப்பைத் தருகிறதில்லை; தேவன் ஒருவரே அதைத் தருகிறவர்.

2. எலிப்பாசின் முதல் உரை (அதி. 4,5)

யோபுவின் நண்பர்களுடைய பேச்சுகளும் அவற்றிற்கு அவன் உரைத்த பதில்களும் நான்காவது அதிகாரத்தில் தொடங்குகின்றன. அவர்களுடைய செய்திகளின் சுருக்கத்தைத் திருவாளர் ரிடவுட் கீழ்க்கண்டவாறு தொகுத்துத் தருகிறார்:

> மூன்று நண்பர்களுடைய முரண்பாட்டில் நாம் ஓர் ஒற்றுமைக் கருத்தைக் காணவியலும், அது ஒரு பொதுவான கொள்கையின் அடிப்படையில் தோன்றியது. அறிவுரை வழங்கும்படி பாடுகள் அனுமதிக்கப்படுவதில்லை, மாறாக எல்லாப் பாடுகளும் தண்டனையாக வழங்கப்படுகின்றன என்பதே அந்தக் கொள்கை. இது தேவனுடைய அன்பையல்ல அவருடைய நீதியைச் சார்ந்ததாகவே இருக்கிறது – இவ் விரண்டு குணங்களும் அவருடைய செயல்களில் ஒன்றோடொன்று இணைந்திருந்த போதிலும் நீதியின் நிமித்தமே தண்டனை வழங்கப்படுகிறது. எனினும் அத்தகைய கொள்கை நீதிமான்கள் அனுபவிக்கிற பாடுகளையும் பொல்லாங்கானவர் அனுபவிக்கிற பாடுகளையும் வேறுபடுத்திக்காட்டுகிறதில்லை.[10]

4 மற்றும் 5 ஆகிய அதிகாரங்களில் எலிப்பாஸ் பேசுகிறான். (இவனுடைய பெயர் தேவன் பெலனாயிருக்கிறார் என்றோ தேவன் சுத்தப் பசும்பொன் என்றோ பொருள்படும்.) எலிப்பாஸ் கடவுட்பற்று மிக்கவனும், புகழ்பெற்றவனுமாயிருந்ததோடு தேவனின் மேன்மையைக் குறித்து மரபு சார்ந்த கொள்கையாளனாகவும் இருந்தான். ஆயினும் இரக்கமற்றவனாக இருந்தது வருத்தத்திற்குரியது. அவன் தொடர்ந்து பேசுகையில் அவன் மிகவும் கண்டிப்பானவனாக மாறுகிறான். யோபுவின் நண்பர்கள் மூவரும் தங்களுடைய உய்த்துணரும் நிலையில் (அச்சொல்லின் இரு பொருளிலும்) குறைவுபட்டுக் கொண்டே இருந்தார்கள், அதே நேரத்தில் இந்நூல் முழுவதிலும் யோபு தேவனுடைய வழிகளை உய்த்துணரும் நிலையில் வளர்ச்சியடைந்து கொண்டே இருந்தான். எலிகூவின் உரைக்குப் பின்னர், யெகோவாவுடன் மெய்யான சந்திப்பு நிகழ்ந்த பிறகு, தேவனுடைய சித்தத்தை மெய்யான தாழ்மையுடன் அவன் ஏற்றுக் கொண்டான்.

4:1-11 "நீர் மற்றவர்களுக்கு உதவி செய்தீர் ('உம்முடைய வார்த்தைகளால் மனிதர்கள் தங்களுடைய காலூன்றி நிற்கப் பண்ணினீர்' 4:4, ஜேம்ஸ் மொ.'.பட்), ஆனால் இப்பொழுது உமக்கு நீரே உதவி செய்ய முடியவில்லை" என்னும் பொருள்பட எலிப்பாஸ் பேசினான். (இந்தச் சொற்கள் கிறிஸ்து சிலுவையில் தொங்கிய போது அவரை ஏளனம் செய்தவர்களின் சொற்களை நம்முடைய நினைவுக்குக் கொண்டுவருகிறது, "மற்றவர்களை ரட்சித்தான்; தன்னைத்தான் ரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை.") யோபுவின் சுய நீதியே இதற்குக் காரணம் என்று அவன் கூறுகிறான். "உம்முடைய தேவபக்தி உம்முடைய உறுதியாயும், உம்முடைய வழிகளின் உத்தமம் உம்முடைய நம்பிக்கையாயும் இருக்கின்றன அல்லவா?" (4:6, JND). தங்களுடைய பொல்லாப்பின் நிமித்தம் மக்கள் பாடு அனுபவிக்கிறார்கள், ஆகவே யோபு பாவம் செய்திருக்க வேண்டும் (வச. 7-9).

4:12-21 அதன்பிறகு, ஓர் **இரவில்** அவன் பெற்ற **இரகசியமான** காட்சியைத் தெரிவிக் கிறான். அந்தக் காட்சியில், "மனிதன் தேவனைப் பார்க்கிலும் நீதிமானாயிருப்பானோ? மனுபுத் திரன் தன்னை உண்டாக்கினவரைப் பார்க்கிலும் சுத்தமாயிருப்பானோ?" என்னும் கேள்வியை ஓர் ஆவி எழுப்பியது (வச. 17). தேவனுக்கு எதிராகப் பதில் உரைக்க மனிதனுக்கு எந்த உரிமையும் இல்லை என்பதே இவ்வசனத்தின் பொருளாகத் தோன்றுகிறது. ஒரு மனிதன் துன்பம் அனுபவித் தால், அவனுடைய சொந்தத் தவறினால்தான் அது உண்டாகிறது, அது தேவனுடைய தவறன்று. தேவன் தம்முடைய சொந்தப் பணிவிடைக்கார ரிடத்தில் நம்பிக்கை வைக்க முடியாதபடி மிகப் பெரியவராக இருக்கிறார். அவரோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது அவருடைய தூதர்களும் தவறி ழைத்த குற்றவாளிகளே ஆவார்கள். இது இவ் வாறு இருக்க, பொட்டுப் பூச்சியைப் போன்ற சாவுக் கேதுவான மனிதர்கள் எவ்வளவு அதிகமாக நம்பிக்கைத் துரோகிகளாகவும் தவறும் இயல் புடையவர்களாகவும் இருப்பார்கள்!

5:1-7 பாவத்தைத் தண்டனை பின்தொடரும் என்னும் கூற்று தவறென்று யோபு மனிதர்களை அல்லது தேவதூதர்களை (பரிசுத்தவான்களை) அழைத்து மெய்ப்பிக்கும்படி எலிப்பாஸ் அவ னுக்கு அறைகூவல் விடுத்தான். பொல்லாப்புக் கும் தண்டனைக்கும் இடையே மாற்றவியலாத தொடர்பு உள்ளது என்பதை இங்கு பேசுகிற எலிப் பாசே கண்டிருக்கிறார். தொல்லைகள் காரண மற்றவை அல்ல. மனிதன் பாவம் செய்கிறவனாக இருப்பதால், **அக்கினிப் பொறிகள்** மேல்நோக் கிப் **பறப்பது** எவ்வளவு நிச்சயமோ அதுபோல வருத்தம் அனுபவிப்பதும் நிச்சயம்.

5:8-16 தேவனை நாடுவதும் ஒருவனுடைய **நியாயத்தை** அவரிடத்தில் ஒப்புவிப்பதுமே செய்ய வேண்டிய செயலாகும், ஏனெனில் அவரே சர்வ ஞானமும் சர்வ வல்லமையும் உடையவர். இ.·.து அவர் இயற்கையின் மேல் கொண்டிருக்கிற கட்டுப்பாட்டினாலும், மனுக்குலத்திற்கு அவர் தருகிற அருட்கொடையினாலும் விளங்கும். இவ்வுலகின் தவறான ஞானத்தின் முகத்திரை யைக் கிழிக்கும்படி இந்தப் பதின்மூன்றாவது வசனம் அப்போஸ்தலனாகிய பவுலால் 1 கொரிந் தியர் 3:19 -இல் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

5:17-27 சர்வ வல்லவருடைய சிட்சைக்குத் தங்களை ஒப்புவிக்கிற மனிதர்கள் **பஞ்சம், யுத்தம்**, அவதூறு, உள்நாட்டுச் சண்டை, ஆபத்து, வறட்சி, காட்டு விலங்குகள், விளைச்சல் பாதிப்பு ஆகிய அனைத்துக் கேடுகளிலிருந்தும் தெய்வீக விடுதலையைப் பெறுவார்கள் என்று எலிப்பாஸ் கூறுகிறான். அவர்கள் இல்லங்களில் **சமாதானத் தையும்**, பாதுகாப்பையும், வளத்தையும், நீண்ட ஆயுளையும் அனுபவிப்பார்கள்.

3. யோபுவின் பதில் (அதி. 6,7)

6:1-13 தன்னுடைய **வார்த்தைகள்** துடுக்காக இருந்தன என்பதை யோபு ஒப்புக்கொள்கிறான். ஆயினும் அவற்றில் நியாயம் இருக்கிறது! அவ னுடைய சஞ்சலமும் இடர்ப்பாடுகளும் கடற்கரை மணலைப் பார்க்கிலும் பாரமானவை, **சர்வ வல்லவருடைய அம்புகளின் விஷம் அவனு டைய உயிரைக்** குடித்துக் கொண்டிருக்கிறது. இந்நூலில், குறிப்பாக யோபு பேசிய சொற்களில் எதிர்மறையான மற்றும் பயங்கரமான செய்திகள் அடங்கியிருந்த போதிலும், அவை அழகிய சொற்களால் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அவற் றைப் படிக்கும் உணர்ச்சிமிக்க வாசகர்கள் அவற் றின் ஆற்றலால் ஈர்க்கப்படுகிறார்கள். எவ்விதக் காரணமுமில்லாமல் விலங்குகளும்கூட **கத்துவ தில்லையே**. பாடுகளும் அழுகையும் சுவையற்ற உணவும் உப்பும் போல ஒன்றோடொன்று தொடர்பு கொண்டுள்ளன. அவன் வேதனையைத் தாங்கு வதற்குப் பெலனற்றவனாகவும் எதிர்காலத்தைக் குறித்த நம்பிக்கை அற்றவனாகவும் இருப்பதால் சாவதற்கு மனதுடையவனாக இருக்கிறான். வாழ்நாள் நீடிப்பதில் பயன்ஏதும் இல்லை.

6:14-23 யோபுவின் நண்பர்களுடைய ஆதரவு அவனுக்குத் தேவைப்பட்ட தருணத்தில் அவர் கள் உதவிசெய்யவில்லை. மாறாக ஏமாற்றமே அளித்தார்கள். (அவன் அவர்களைச் **சகோதரர்** என்று அழைக்கிறான்.) தேவைப்பட்ட சமயத்தில் தண்ணீர் மறைந்து போகிற நீரூற்று அல்லது காட்டாறு போன்று இருப்பதாக அவன் அவர்களை ஒப்பிட்டான். அவர்களிடத்தில் அவன் ஒன்றும் கேட்கவில்லை, ஆனாலும் அவன் எவ்விதமாகப் பாவம் செய்தான் என்பதைத் தெளிவாகக் கூறா மல் பொதுப்படையாகவே குறைகூறினார்கள்.

6:24-30 யோபு இரகசியமாகப் பாவம் செய்த வன் என்று எலிப்பாசின் பேச்சு குறைகூறுவதாக இருந்தபோதிலும், அவனோ தான் நேர்மையான வன் என்று உறுதியாகச் சொல்லிக்கொண்டிருந் தான். அவன் எங்கே தவறினான் என்றும், அவ னுடைய நாவில் எப்பொழுது அக்கிரமம் இருந் தது என்றும் அறிய அவன் விரும்பினான், அதற் கான சான்றை அவர்கள் அளிக்க வேண்டும்.

தன்னுடைய நண்பர்களுக்கு எதிரான குற்றச் சாட்டை யோபு 27 -ஆவது வசனத்தில் குறிப் பிடுகிறான். அவர்கள் குறைத்து மதிப்பிடுகிற நண்பன் யோபு என்பதில் ஐயமில்லை!

7:1-10 இப்பொழுது யோபு கர்த்தரிடம் நேரடி யாகப் பேசுகிறான். ஒரு **வேலையாள்** கடினமாக நாள் முழுவதும் உழைத்து, பின்னர் ஓய்வை விரும்புகிறது போல யோபு சாவை விரும்புவது இயல்பே ஆகும். ஆயினும் யோபுவைப் பொறுத்த வரை அவனுடைய வேதனையுற்ற உடலுக்கு இரவு நேரங்கள் விடுதலையளிக்கவில்லை. மாறாக அவன் இரவு முழுவதும் அரண்டு புரண்டு கொண்டிருந்தான். **நெய்கிறவன் எறிகிற நாடாவைப் போல** அவனுடைய வாழ்க்கை எவ்வித **நம்பிக்கையுமின்றி தீவிரமாகக்** கடந்து செல்லுகிறது. **மேகம்** கண்களுக்கு மறைந்து போகிறது போல அது மறைகிறது.

7:11-21 அவன் ஓர் அற்ப மனிதன், அவனை இவ்வளவாகப் பொருட்படுத்த வேண்டியதில்லை, அவன் விசாரிக்கப்படத்தக்கவனும் இல்லை, அப்படியிருக்க அச்சமுறுத்தும் தீய எண்ணங் களால் அலைக்கழிக்கப்படுவது ஏன், அதற்குப் பதிலாக அவன் சாகும்வரை குரல்வளை நெரித் துக் கொல்லப்படலாமே என்று அவன் கர்த்தரிடம் வினவுகிறான். தேவனால் தொடர்ந்து பாடுகளுக் குட்படுத்தப்படுவதற்கு மனிதன் அவ்வளவு பெரிய வனா? யோபு பாவம் செய்திருந்தால் அவனுக்கு மன்னிப்பு இல்லையா, எப்படியிருந்தாலும் அவன் விரைவில் மரணமடையப் போகிறானே?

4. பில்தாத்தின் முதல் உரை (அதி. 8)

பில்தாத் என்னும் பெயரின் பொருள் *வாக்கு வாதத்தின் மகன்* என்பதாக இருக்கக்கூடும், அது மிகவும் பொருத்தமான பொருளாக விளங்கு கிறது, ஏனெனில் யோபுவின் இந்த நண்பன் எதிர்த்துப் பேசுவதில் மிகவும் விருப்பம் கொண் டவன். பில்தாத் மற்றும் எலிப்பாஸ் ஆகிய இரு வருடைய நடையையும் அறிவையும் கீழ்க் கண்டவாறு திருவாளர் ரிடவுட் ஒப்பிடுகிறார்:

> எலிப்பாசின் பேச்சில் அவ்வளவு மரியா தையோ அடக்கமோ இல்லை என்றே சொல்ல வேண்டும், மேலும் யோபு தேவனுக்கு எதிராக முறையீடு செய்தபோது எலிப்பாசின் பேச்சில் சற்று கடுமையும் சேர்ந்திருந்தது. தெய்வீகக் கோட்பாடுகள் பற்றிய அறிவற்றவனாக இருந்தபோதிலும் தேவனைக் கனப்படுத்து வதில் பில்தாத் ஆர்வமிக்கவனாக இருந்தான், அவருக்கு எதிராகக் குற்றம் சுமத்துவதை அவ னால் அனுமதிக்க இயலாது. இந்நிலையில் அவனுடைய நிலை சரியானதே ஆகும், ஆனால் அவனுடைய கருத்தை யோபு ஏற்கும்படி அவனால் நம்பச் செய்ய முடிய வில்லை. ஏனெனில் அவர்கள் எல்லோரு டைய கருத்துகளிலும் ஓர் அடிப்படைத் தவறு இருந்தது: பாவத்தை தேவன் தண்டிக்க வேண் டும், யோபு தண்டனை அடைந்ததால் அவன் பாவம் செய்திருக்க வேண்டும். இதுவே அவர் களுடைய எண்ணமாயிருந்தது.[11]

8:1-7 பொறுப்பற்றதும் வெற்றாரவாரமான பேச்சைப் பேசுவதாக யோபுவைக் குறைகூறிய **பில்தாத்**, பொல்லாதவர்களைத் தண்டிப்பதும் நீதிமான்களுக்கு நன்மை செய்வதும் தேவநீதி என்று வாதாடினான். யோபுவின் **பிள்ளைகள்** தங்களுடைய **பாவத்தின்** நிமித்தம் அழிக்கப்பட் டார்கள் என்று அவன் இரக்கமற்ற முறையில் பேசினான். அவ்வாறு நடந்ததற்கான எந்த அறி குறியும் இல்லை, அவ்வாறு இருந்தாலும் மிகுந்த துக்கத்திலும் வேதனையிலும் பாடு அனுபவித் துக் கொண்டிருந்த மனிதனிடம் இப்படிப் பேசுவது கொடுமையான செயலாகும். ஆனால் யோபு வாஞ்சையோடு தேவனை நோக்கித் திரும்பி னால் தேவ தயவைப் பெறுவதற்கு வாய்ப்பு இருக் கிறது என்று பில்தாத் கூறுகிறான்.

8:8-22 பொல்லாப்புக்கும் தண்டனைக்கும் தொடர்பு உண்டு என்பதை மெய்ப்பிக்கும் நோக் கத்துடன் அவன் அடுத்ததாக வரலாற்றை நோக்கித் திரும்புகிறான். நீரில்லாமல் நாணல் வாடிப்போகும். அதுபோல இறைப்பற்று அற்றவர் களும் மாயக்காரரும் அழிவை அடைவார்கள். (சூரிய ஒளி மறைமுகக் குறிப்பாக இருக்கிறது.) பொல்லாதவர்களுக்குப் பதிலாக உத்தமர்களை அமர்த்த தேவன் மகமகிழ்ச்சி கொள்கிறார், தொடர்ந்து அவர் அவர்களுக்கு நன்மை செய்கிறார்.

5. யோபுவின் பதில் (அதி. 9,10)

9:1-13 "தேவனுக்கு முன்பாக மனிதன் நீதி மானாயிருப்பது எப்படி?" என்று யோபு வினவிய போது, அவன் இரட்சிப்புக்கான வழியைக் குறித்து விசாரிக்கவில்லை. மாறாக, அவ்வளவு பெரிதான ஒருவருடைய முன்னிலையில் தனது குற்றமின் மையை மெய்ப்பிக்க இயலாத நம்பிக்கையற்ற மனிதனாகவே அவன் பேசினான். **ஆயிரத்தில் ஒன்றுக்காகிலும் அவருக்குப்** பதிலுரைக்க இய

லாத மனிதன் அவரோடு **வழக்காட** நினைப்பது மதியீனமாகும். அவர் இறையாண்மை படைத்தவர், எல்லா ஞானமும் எல்லா வல்லமையும் உடையவர். இவை யாவற்றையும் அவர் **மலைகளையும் பூமியையும், சூரியனையும், நட்சத்திரங்களையும்** தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதிலிருந்தும், அவர் செய்கிற **எண்ணிமுடியாத அதிசயங்களிலிருந்தும்** அறியலாம்.

9:14-31 தன்னுடைய நிலையே சரியானது என்று வாதாட யோபுவுக்கு என்ன வாய்ப்பு இருக்கிறது? தேவன் தனக்குச் செவிசாய்க்கிறார் என்பதைக் குறித்து அவன் உறுதியோடு இருக்க முடியுமா? கர்த்தர் இரக்கமற்றவர், விதிகட்கு உட்படாதவர், நேர்மையற்றவர். ஆகவே நீதியான விசாரணை நடக்காது என்று யோபு கூறுகிறான். யோபு தன்னுடைய நம்பிக்கையிழந்த நிலையில், **உத்தமனையும் துன்மார்க்கனையும்** தேவன் அழிக்கிறார் என்றும், **குற்றமில்லாதவர்கள்** எதிர்கொள்ளும் **சோதனையைக் கண்டு நகைக்கிறார்** என்றும், உலகத்தின் **நீதிபதிகளை** அநீதியான முறையில் செயல்படப் பண்ணுகிறார் என்றும் அவர்மேல் குற்றஞ் சுமத்துகிறான். "நான் உத்தமன், ஆனால் அதைக்குறித்து அக்கறை கொள்ளேன். நான் வாழ்வதில் மகிழ்ச்சி இல்லை. உத்தமனானாலும் குற்றவாளியானாலும் வேறுபாடு இல்லை, நம்மை தேவன் அழிப்பார்" (வச. 21,22 TEV). அவனுடைய வாழ்க்கை கடந்து செல்லுகிறது, தன்னையே மறந்த அக்கறையற்ற நிலை அல்லது சுயமாக முன்னேற்றமடைவதில் நாட்டம் இவற்றில் எந்த நம்பிக்கையையும் அவன் காணவில்லை.

9:32-35 தேவனுக்கும் தனக்கும் நடுவே ஒரு **மத்தியஸ்தன்** வேண்டுமென்று யோபு அங்கலாய்க்கிறான், ஆனால் ஒருவரையும் அவன் காணவில்லை. அவனுடைய ஆழ்ந்த தேவையை (நம்முடைய தேவைகளையும்) நிறைவேற்றக் கூடிய மத்தியஸ்தர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்பதை நாம் அறிவோம் (1 தீமோ. 2:5). திருவாளர் மேத்யூ ஹென்றி கருத்துரை வழங்குகிறார்:

> இந்தப் பொருள் குறித்து யோபு மகிழ்வுடன் குறிப்பிடுகிறான், ஆனால் எந்த ஒரு படைப்பும் நடுவராகச் செயல்படத் தகுதியற்றதாயிருக்கிறது. ஆகவே இதனை தேவனிடத்தில் கூறுவதே அவன் செய்யக் கூடிய செயல், தன்னுடைய வழக்கில் அவருடைய ஒப்புதலைப் பெற்று சிக்கலை நீக்க வேண்டும். நம் முடைய கர்த்தராகிய இயேசுவே நற்பேறு பெற்ற நடுவர். அவரே வானத்திற்கும் பூமிக்கும் நடுவர், இரண்டின் மேலும் தமது கையை வைத்தார்; அவரிடமே திருத்தந்தை எல்லா நியாயத்தீர்ப்பையும் ஒப்புவித்திருக்கிறார், நாமும் ஒப்புவிக்க வேண்டும். ஆனால் நற் செய்தியின் மூலமாகத் தற்காலத்தில் இது வெளிச்சத்திற்குக் கொண்டுவரப்பட்டிருப்பது போல அந்த நாட்களில் தெளிவுபடுத்தப்பட வில்லை. ஆகவே இப்பேற்பட்ட குறைகூறுதலுக்கு இப்போது எவ்வித வாய்ப்பும் அளிக்கப்படவில்லை.[12]

10:1-7 பொறுக்க இயலாதவனாக யோபு கசப்புடன், தாம் படைத்த ஒருவனிடம் காரணமற்ற முறையில் தேவன் நடந்தமைக்கு விளக்கமளிக்க வேண்டுமென்று முறையிடுகிறான். யோபு **துன்மார்க்கன் அல்லன்** என்று அறிந்திருந்தும், அவர் ஒரு மனிதனைப் போல இரக்கமற்ற முறையில் தண்டனை வழங்குகிறாரா?

10:8-12 இந்தப் பத்திக்கு ஹெரால்டு தூய ஜான் விரிவுரை வழங்குகிறார்:

> இந்த வியத்தகு பகுதியை நாம் புரிந்துகொள்ளாமல் விட்டுவிடக் கூடாது; குயவனைக் களிமண் இடித்துரைப்பதாகக் காணப்படும் இப் பகுதியில் தேவன் மனிதனைப் படைத்ததன் காரணமாக அவருக்குரிய பொறுப்பிலிருந்து நேர்மையான முறையில் தப்பித்துக்கொள்ள முடியாது என்னும் கருத்து வெளிப்படுத்தப்பட்டுள்ளது. 10:8 உம்முடைய கரங்கள் என்னை உருவாக்கிப் படைத்துள்ளன. 10:10 கரு உருவாகுதல். 10:11 தோலும் சதையும் வளர்ச்சியடைதலும், எலும்புகளும் நரம்புகளும் முதிர்ச்சியடைதலும். 10:12 (அ) பல பண்புகளை வெளிப்படுத்தும் "ஆத்துமா" அருட்கொடையாகத் தந்தருளப்படுதல் (ஆ) மனிதனுடைய மிகவுயர்ந்த பாகமாகிய "ஆவி" கொடுக்கப்பட்டு பராமரிக்கப்படுதல் தேவனுடைய தேர்வாக விளங்குகிறது.[13]

10:13-22 யோபுவின் மேல் இவ்வளவு கடுமையான இடர்களைக் கர்த்தர் ஏன் கொண்டுவருகிறார்? அவன் **நீதிமானாயிருந்தாலும் துன்மார்க்கனாயிருந்தாலும்** எவ்வித வேறுபாடும் இல்லை; அவனுடைய வாழ்வு தெய்வீகக்

கோபத்தால் நிறைந்திருக்கிறது. அவன் பிறப்ப தற்கு தேவன் ஏன் அனுமதித்தார்? **ஒளியும்கூட இருளாக** விளங்கும் புறக்கணிக்கப்பட்ட இடத் திற்கு அவன் கூடிய விரைவில் செல்லப் போகி றான், அதற்கு முன் அவன் சற்று **இளைப்பாற** ஏன் இடமளிக்கக் கூடாது?

6. சோப்பாரின் முதல் உரை (அதி. 11)

11:1-12 இத்தகைய வெற்றுரைகளும் இறுமாப் பான பேச்சும் பதில் உரைக்கப்படாமல் போகா என்று நாகமாத்தியனாகிய சோப்பார் வலியுறுத்தி னான். யோபுவின் மூன்றாவது நண்பனுடைய பெயரின் பொருளைக் குறித்துத் திருவாளர் ரிடவுட் எழுதுகிறார்:

> ''சிட்டுக்குருவி'' என்று பொருள்படும் சோப்பார் என்னும் பெயர் ''பறவையின் கலகலப்பொலி'' என்னும் வேர்ச்சொல்லிலிருந்து பிறந்தது. மோசேயின் மனைவியாகிய ''சிப்போராள்'' என்னும் பெயரின் ஆண்பால் சொல்லே இது. யோபுவினிடத்தில் காணப்பட்ட கவர்ச்சிகரமான மாம்சத்தின் கிரியைகளைக் குறைகூறுவதில் சோப்பார் மிகுந்த வைராக்கியம் உடையவ னாக இருந்த போதிலும் மோசேயின் மனைவி யைப் போலவே இவனும் மாம்சத்தில் தேவன் செலுத்துகிற தண்டனைக்கு அறியாத வகை யில் எதிர்ப்புத் தெரிவிக்கிறவனாக இருந்தான். பறவையின் கேடற்ற ''கலகலப் பொலி'' என்னும் பொருள் தரும் சொல்லை இவன் தனது பெயராகப் பெற்றிருந்தபோதிலும் இவ னுடைய பேச்சு ஆவேசமான பழித்துரையாக இருந்தது.[14]

தேவன் காண்கிறதுபோல யோபு காண்பான் என்றால், அவன் அடைய வேண்டிய தண்டனை யையே அடைந்திருக்கிறான் என்பதை உணரு வான் என்று சோப்பார் வலியுறுத்துகிறான்! தேவ னுடைய மகத்துவத்தை அறிந்திராதவன் அவரு டைய நீதியைக் குறித்துக் கேள்வி எழுப்புவதற் குத் தகுதியற்றவனாவான் என்று சோப்பார் கூறுகிறான். 12 -ஆவது வசனம் யோபுவை நோக் கிச் சொல்லப்பட்ட தயவற்ற பேச்சாக விளங்கு கிறது: **"புத்தியில்லாத மனிதன் காட்டுக்கழு தைக் குட்டிக்கு ஒப்பாகப் பிறந்திருந்தாலும், பெருநெஞ்சுள்ளவனாயிருக்கிறான்."**

11:13-20 யோபு தன்னுடைய பாவங்களை விட்டொழிப்பதே சிறந்தது; அப்பொழுது தேவன் அவனுக்குப் பாதுகாப்பையும், இளைப்பாறுதலை யும், ஆறுதலையும் தருவார். இல்லையெனில் அழிவிலிருந்து தப்புவதற்கு வழியேதுமில்லை.

7. யோபுவின் பதில் (அதி. 12-14)

12:1-6 கடிந்துரையோடு ஏளனப்படுத்தும் வகையில், யோபு தனது நண்பர்களுடைய அறி வாற்றல் சார்ந்த பழிசாற்றும் பேச்சைக் குறைகூறு கிறான்.

ஆம், நீங்களே ஞானமுள்ள ஜனங்கள்

உங்களுடனே ஞானம் சாகும்!

தேவன் ஞானமும் அதிகாரமும் உடையவர் என்பதை அறிந்த மக்கள், ஒரு காலத்தில் தனது மன்றாட்டுக்குப் பதில் பெற்ற மனிதன் கடும் வேதனை அனுபவிப்பதையும், அக்கிரமம் நிறைந்த மனிதன் செல்வ வளம் பெற்று வாழ் வதையும் எவ்வாறு விளக்கிக் கூறமுடியும்?

"உங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை, ஆனாலும் நீங்கள் என்னை ஏளனப்படுத்துகிறீர் கள், கீழே விழப்போகிற மனிதனை நீங்கள் தாக்குகிறீர்கள்" (வச. 5 TEV).

12:7-12 இயற்கை உலகமும் கூட - விலங்கு கள், பறவைகள், மீன் இனங்கள் சில அழிக்கப்படு கின்றன சில பாதுகாக்கப்படுகின்றன என்னும் காரணத்தை முன்னிட்டு - தேவன் விதிகளுக்கு உட்படாவகையில் செயல்படுகிறார் என்பதைத் தெரிவிக்கிறது. யோபுவைக் குறைகூறுகிறவர் கள் தங்களுடைய உணவை சுவைத்துப் பார்ப் பது போலக் கவனத்துடன் வார்த்தைகளைச் சோதித்துப் பார்ப்பார்கள் என்றால், யோபு சொன் னதைப் பண்டைய மக்கள் ஒருசேர ஒப்புக் கொண்டிருந்தது போல அவர்களும் ஒப்புக்கொள் வார்கள்.

12:13-25 தேவனுடைய இறையாண்மை, **ஞானம், வல்லமை** ஆகியவை பற்றி இப்பொழுது யோபு வீறார்ந்த கவிதை ஒன்றை ஒப்புவிக் கிறான். அவை அவ்வப்போது எவ்விதமான விளக்கமளிக்கமுடியாததும் நம்புதற்கரியதுமான விளைவுகளை உண்டுபண்ணுகின்றன என்றும் அவன் கூறுகிறான்.

13:1-19 யோபு தன்னைக் குறைகூறுபவர் களைக் கடிந்துகொள்கிறான். அவர்கள் புதிதாக ஒன்றும் சொல்லவில்லை. அவன் தன்னுடைய வழக்கைத் தனது நண்பர்களாகிய பொய்யைப் பிணைக்கிறவர்களிடமோ பயனற்ற மருத்துவர்

களிடமோ சொல்ல விரும்பாமல், தேவனிடத்தில் கூறி மன்றாடவே விரும்புகிறான். அவர்கள் பேசாமல் இருந்தால் போதும், அவர்கள் ஞானமுள்ளவர்கள் என்று மக்கள் கருத ஏதுவாகும். தேவனுடைய செயல்களுக்கு அவர்கள் கொடுத்த விளக்கங்கள் சரியல்ல. அதற்காக அவர்கள் தேவனுக்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டும். அவர்களுடைய வாதங்கள் பலவீனமாகவும் பயனற்றவையாகவும் இருந்தன. அவர்கள் சற்று அமைதியாயிருந்தால், அவன் தன்னுடைய வழக்கை தேவனுடைய முன்னிலையில் சமர்ப்பித்து, தன்னுடைய வாழ்க்கையை அவரிடத்தில் ஒப்புவிக்க இயலும். தன்னுடைய நிலை சரியானது என்பது மெய்ப்பிக்கப்படும் என்னும் நம்பிக்கையோடு அவன் இருக்கிறான். ஒருவேளை தேவன் அவனைக் **கொன்று போட்டாலும்** அவன் இன்னமும் **கர்த்தரிடத்தில் நம்பிக்கையாயிருப்பான்**.

13:20-28 13:20 -ஆம் வசனம் முதல் 14:22 -ஆம் வசனம் வரை யோபு தேவனை நோக்கி நேரடியாகப் பேசுகிறான். துயரத்திலிருந்து தனக்கு விடுதலை வேண்டும் என்று கெஞ்சுகிற யோபு இவ்வளவு கடுமையாக தேவன் தன்னிடத்தில் நடந்து கொண்டதற்கு விளக்கம் கேட்கிறான். அழுகிப் போன பொருளைப் போலவும் பொட்டரித்த ஆடையைப் போலவும் இருக்கக் கூடிய யோபுவை தேவன் இவ்வாறு கவனித்துப் பார்ப்பதற்கு அவனிடம் சிறிதேனும் தகுதியில்லையே.

திருவாளர் ∴பிரான்சிஸ் ஆண்டர்சன், யோபுவின் சொற்களைக் கீழ்க்கண்டவாறு மதிப்பிடுகிறார்:

> இப்பகுதியில் யோபு தன்னுடைய நண்பர்களைக் காட்டிலும் நுணுக்கிக் காண்பதில் கூடுதல் நேர்மையானவனாகவும் வளமிக்க சிந்தனையாளனாகவும் வெளிப்படுகிறான். தேவனைக் குறித்த அவனுடைய கருத்து பரந்து விரிந்ததாக இருக்கிறது என்பதை அவனுடைய உள்ளம் விரைந்து கூறுகிறது. எலிப்பாஸ் பில்தாத் மற்றும் சோப்பார் ஆகியோருடைய குறைவுபட்ட இறையியல் அறிவு எளிதில் சிந்திக்கக் கூடியதும் எளிதில் நம்பக் கூடியதுமாக இருக்கிறது. ஆனால் யோபுவின் விசுவாசம் மனித ஆவியை விறுவிறுப்புடன் வேலை செய்யத் தூண்டுகிறது.[15]

14:1-6 கண நேரம் மட்டுமே நீடித்திருக்கிறவனும், நலிவுற்றவனும், குறைபாடுள்ளவனுமான ஒருவனிடத்தில் தேவன் இவ்வாறு விடாப்பிடியாக செயல்படுவதன் காரணம் என்னவென்று யோபு தொடர்ந்து கேட்கிறான். முதல் வசனம் பெருமளவு மேற்கோள் காட்டப்படுகிறது, பல்வேறு சூழ்நிலைகளிலும் இது பொருத்தமானதாக இருப்பதால் இவ்வாறு பயன்படுத்தப்படுகிறது போலும்:

> **பெண்ணிடத்தில் பிறந்த மனிதன் வாழ்நாள் குறுகினவனும் சஞ்சலம் நிறைந்தவனுமாயிருக்கிறான்.**

அவன் ஏன் தனது சிறிது கால எஞ்சிய வாழ்க்கையைச் சற்று நிம்மதியாகக் கழிக்கக் கூடாது?

14:7-12 அவனைக் காட்டிலும் **வெட்டப்பட்ட மரத்தைக் குறித்து** அதிக **நம்பிக்கை** உள்ளது. மனிதனுடைய மரணத்தைக் காணுமிடத்து அதன் முடிவுற்ற முடிவு பயங்கரமாயிருக்கிறது; இறந்து போன மனிதன் வற்றிப்போன ஆறு போல இருக்கிறான்.

14:13-17 தேவனுடைய கோபம் தணியுமட்டும் அவர் அவனைக் கல்லறையில் மறைத்துவைக்க வேண்டும் என்று யோபு விரும்புகிறான். பிறகு சர்வ வல்லவர் அவனை அழைப்பார் எனில், அவன் தன்னுடைய நேர்மையை மெய்ப்பிப்பான். இதற்கிடையே தேவன் அவனுடைய ஒவ்வொரு பாவத்தையும் எண்ணிப் பார்ப்பார்.

இந்தப் பகுதியில் யோபு நான்கு செயல்களைச் செய்கிறான்: (1) தனது பாவங்கள் எவை என்பதை வெளிப்படுத்த வேண்டுமென்று அவன் வேண்டுகிறான்; (2) கணத்தில் மறைகிற மனித வாழ்வின் தன்மையைக் குறித்து விவரிக்கிறான்; (3) மரணம் முடிவான முடிவாக இருக்கிறது என்பதைக் குறித்து அவன் தளர்ச்சியடைகிறான் (ஒருமத்தியஸ்தர் வேண்டுமென்று வாஞ்சிக்கிறான், மேலும் மரணத்திற்குப் பிறகு ஒரு வாழ்க்கையுண்டு என்னும் உண்மையை இறுகப் பற்றிக் கொள்கிறான்); (4) தன்னுடைய தற்போதையை இடுக்கண் குறித்து முறையிடுகிறான்.

பதினான்காவது வசனத்தின் முந்தின பகுதி மிகவும் முக்கியமான கேள்வியைக் கேட்கிறது: **மனிதன் செத்தபின் பிழைப்பானா?** இக்கேள்விக்குக் கர்த்தர் யோவான் 11:25,26 -ஆகிய வசனங்களில் விடை தருகிறார்:

> நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரிக்காமலும் இருப்பான்.

14,15 -ஆகிய வசனங்களுக்குத் திருவாளர் ஹெரால்டு தூய ஜான் விரிவுரை தருகிறார்:

ஓர் அமைதியான பெருங்கடலில் ஒளி தோன்று கிறது, சுடரொளி சடுதியில் வீசுகிறது; ஒரு பொரு ளைவிட மனிதன் மேலானவன் என்று இந்தப் பகுதியில் யோபு நம்புதற்கரிய துணிவுடன் அறி விக்கிறான். வானங்கள் அழிந்து மக்கிப்போனா லும், என்றும் இருப்பதாகத் தோன்றும் மலைகள் நொறுங்கிப் போனாலும் அவன் ஆயிரமாயிர ஆண்டுகள் கல்லறைக்குள்ளாக அதன் பிடிக் குள் படுத்துக்கொண்டிருப்பான்; ஆனாலும் ஒரு நாள் உதிக்கும், அன்று தேவன் தமது நண்ப னுக்காக இருதயத்தில் வேட்கை மேலிட்டுக் காணப்படுவார், அவர் தமது கைகளின் கிரியைக் காக வாஞ்சையோடு விளங்குவார்.

அப்பொழுது உலகத்தின் கீழ்ப்பகுதியின் ஆழத்திலிருந்து, மலைகளைக் காட்டிலும் நிலை பெற்றவனும், வானங்களைக் காட்டிலும் நிரந்தர மானவனுமான யோபு அவருக்கு விடைபகரு வான். தம்முடைய ஊழியனைக் காண ஏக்கம் கொண்டவராக இருக்கும் தேவனோடு அவன் மீண்டும் இணைக்கப்படுவான்.[16]

14:18-22 இயற்கையில் படிப்படியாய் அழிவுறு தலை எவ்வாறு தவிர்க்க முடியாதோ, அது போலவே மனிதனும் சோதனைகளின் காரண மாக நலிவடைவான். அவனுடைய உடல் பூமிக் குச் சென்று விடும். அவனுடைய ஆத்துமாவோ வருத்தம் இருக்குமிடத்திற்குச் செல்லும்.

இதனுடன் உரையாடலில் முதற்சுற்று முடிவ டைகிறது. யோபுவின் நண்பர்களுடைய தருக்கம் யாதெனில்: தேவன் நீதிபரர்; அவர் பொல்லாங் கனைத் தண்டிக்கிறார்; யோபு தண்டிக்கப்படு கிறானெனில் அவன் பொல்லாதவன் என்பது மெய்ப்பிக்கப்படுகிறது. ஆனால் தான் பொல்லாத மனிதனே அல்லன் என்று யோபு தொடர்ந்து வலி யுறுத்தி வருகிறான்.

ஆ. இரண்டாவது சுற்று உரையாடல் [அதி. 15–21]

இரண்டாவது சுற்று உரையாடலில் யோபுவுக்கு "ஆறுதல் அளிப்பவர்கள்," அவன் மனந்திரும்ப வேண்டுமென்று கேட்கவில்லை, மாறாக அவர் கள் குற்றஞ்சாட்டுவதில் கட்டுமீறியபடி செயல் படத் தொடங்குகிறார்கள். அதேநேரத்தில் யோபு அதிகமாகப் பிடிவாதம் கொண்டவனாக மாறு கிறான்.

1. எலிப்பாசின் இரண்டாவது உரை (அதி. 15)

15:1-6 இப்பொழுது தேமானியனாகிய எலிப் பாஸ் மீண்டும் யோபுவின் மாயையையும் அவனு டைய பக்தியின்மையையும், பயனற்ற பேச்சை யும் குறித்துக் கடிந்துகொள்ளத் தொடங்கு கிறான். அடுத்தடுத்துக் கேள்விக் கணைகளைத் தொடுத்த தேமானியன், யோபு தான் பெற்றிருப்ப தாகக் கூறும் அறிவு வெறுமையானது என ஏள னம் செய்தான். யோபுவின் துணிவுமிக்க சொற் கள் தேவனையே எதிர்த்துரைப்பதாகக் காணப் பட்டு, "பயபக்தியை விட்டொழித்த" மனிதன் என் னும் குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கியது. அவன் **தந்திரமுள்ளவர்களின் நாவைத்** தெரிந்து கொண்டு அவரைக் குறைகூறுவது சரியல்ல. அவன் செய்ததெல்லாம் அவனைப்பற்றிய உண் மையை வெளிப்படுத்தியதேயாகும். அவன் ஒரு மாய்மாலக்காரன் அல்லன்! அவனோ வேறொரு வனோ தன்னை நீதிமான் என்று கூறுவது வீண் செயலாகவே அமையும்.

15:7-13 அடுத்ததாக, யோபு தனது எண்ணங் களைக் குறித்து மிக மேன்மையாகச் சிந்திப்பது அவனுடைய இறுமாப்பான செயல் என்று கருதுவ தாக எலிப்பாஸ் எதிர்த்துரைத்தான். "ஞானத்தை உம்மிடமாய்ச் சேர்த்துக்கொண்டீரோ?" என்று அவன் கேட்கிறான். அந்த ஆறுதல் அளிப் பவர்கள் மூவரின் சொற்களைக் குறித்து "தேவன் அருளிய ஆறுதல்கள்" என்றும் "மிருதுவான பேச்சு" என்றும் கூறிய எலிப்பாஸ் மெய்யான இரக்கத்துடன் ஆலோசனை சொல்லக்கூடிய இருதயம் சற்றும் அற்றவன் என்பதை வெளிப் படுத்தினான்.

15:14-16 தேவனுடைய பரிசுத்தம், மனிதனு டைய பாவநிலை ஆகியவை குறித்து எலிப்பாஸ் 4:17-19 ஆகிய வசனங்களில் கூறிய கருத்தை இங்கு மீண்டும் கூறுகிறான். ஆனால், யோபு எவ்வாறு எலிப்பாசைக் காட்டிலும் அதிக அளவுப் பாவியாக இருக்க முடியும்? திருவாளர் ரிடவுட் கேள்வி எழுப்புகிறார்:

> மற்ற எல்லோரையும்விட யோபு ஒரு பெரும் பாவியாக இருப்பதுபோல இதனை அவனுக்கு மட்டும் பொருத்திப் பார்ப்பது ஏன்? இது நிச்சய மாக, யோபு பேசிய அனைத்துக் கடினமான பேச்சுகளைக் காட்டிலும் தந்திரமான பேச்சாக விளங்குகிறது. எலிப்பாசும் யோபுவின் பக்க மாகச் சேர்ந்து, தானும் "அருவருக்கத்தக்க

கீழ்த்தரமான மனிதன்'' என்று அறிக்கை செய் வானாக. பாடுகள் அனுபவித்துக் கொண்டி ருந்த அந்த எளிய மனிதன் அவ்வாறு பதில் கூறியிருக்க வேண்டும்.[17]

15:17-26 துன்மார்க்கன் உயிரோடிருக்கிற நாளெல்லாம் அனுபவிக்கிற வேதனையைக் குறித்து விவரிக்கும் எலிப்பாஸ், அந்த விவரங் களை மூதாதையர் தங்களுடைய ஞானத்தின் மூலமாக விளக்கிக் கூறியிருப்பதாகக் கூறு கிறான்.

15:27-35 பொல்லாத மனிதர்கள் அனுபவிக் கக் கூடிய கொடிய துன்பங்களின் பட்டியல் இங்கு கொடுக்கப்பட்டுள்ளது, அவரவருடைய குற்றத் திற்குத் தகுந்த அளவு இந்தத் துன்பங்கள் ஏற் படும் என்று அவன் கூறுகிறான்.

2. யோபுவின் பதில் (அதி. 16,17)

16:1-5 சூழ்நிலையைப் பகுத்து ஆராய்ந்து எலிப்பாஸ் வழங்கிய கருத்தை ஏற்க மறுத்தவ னாக யோபு தன்னைக் குறை கூறியவர்களை, **"அலட்டுண்டாக்குகிற தேற்றரவாளர்"** என்று அழைக்கிறான். அவர்கள் அவனுடைய நிலையில் இருந்திருப்பார்கள் எனில், அவன் அவர்களுக் குக் குறைந்த பட்சம் **ஆறுதல்** அளித்திருப்பான்!

16:6-14 ஆனால் இப்பொழுதோ தேவன் அவனைத் **துன்மார்க்கர்** வசத்தில் ஒப்புவித்து, தாங்க முடியாத அளவிற்குப் பாடுகளுக்குட் படுத்தி, துன்புறுத்தி எதிர்த்து நிற்கிறார். **நொறுக்குதலின் மேல் நொறுக்குதலை** அவன் மேல் அவர் வரப்பண்ணினார். அவன் நேர்மை யற்ற முறையில் செயல்புரிந்தான் என்னும் குற் றம் ஒன்றும் இல்லாதிருந்த போதும் இவையாவும் நிகழ்ந்தன.

16:15-22 யோபு தன் தோளின்மேல் **இரட்டுச் சேலையைத் தைத்தான்** (வெறுமனே போர்த் துக்கொள்ளவில்லை) என்னும் செய்தி, அவன் அடைந்திருந்த துயரம் நிலையானது என்பதைத் தெரிவிக்கிறது. அவனுக்கு ஆறுதல் கூற நண்பர் களும், வழக்கை எடுத்துரைக்க எந்த மனிதனும் இல்லாத நிலையில் **திரும்பி வரவியலாத வழியே** அவன் **போகிறான்**.

ஒன்பது முதல் பத்தொன்பது வரையிலான வசனங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள சில வாச கங்கள் மேசியாவைக் குறிக்கும்படி சங்கீதங் களில் எடுத்தாளப்பட்டுள்ளன. ஆகவே இவற்றின் *முதன்மைப் பொருள்* வேறாக இருந்தபோதி லும், இவற்றைக் கிறிஸ்துவின் பாடுகளாகப் பேசு வோமெனில் அது சரியானதாகவே காணப்படு கிறது.

17:1-12 ஆவியில் நொறுங்குண்டவனாக, சவக் குழியின் ஓரத்தில் நின்றுகொண்டு, நண்பர்கள் எள்ளி நகையாட யோபு தள்ளாடிக் கொண்டிருந்தான். அவனைக் குறை கூறியவர் களால் எவ்விதப் பயனும் இல்லை என்று மெய்ப் பிக்கப்பட்ட நிலையில், தன்னுடைய வழக்கை தேவன் ஒருவரே விசாரிக்க வேண்டும் என்று யோபு முறையிடுகிறான். கர்த்தர்தாமே அவனை அவமதிப்பின் அடையாளமாக மாற்றிவிட்டார். அவனுடைய நிலையைக் காணும் **சன்மார்க்கர்** அவனைக் குறைகூறுகிறவர்களுக்கு எதிராக **எழுந்து** செயல்படுவார்கள். அவனும் தன்னு டைய நேர்மையை நிலைநிறுத்தத் தொடர்ந்து போராடுவான். அவனை எதிர்த்த மூன்று பகைஞரிடையே ஞானமுள்ள ஒருவனைக் கூட அவனால் காணமுடியவில்லை.

17:13-16 இருளும், அழிவும், புழுக்களும் நிறைந்த **சவக்குழியைத்** தவிர இப்போது யோபுவுக்கு வேறு எதுவும் இல்லை.

3. பில்தாத்தின் இரண்டாவது உரை (அதி. 18)

18:1-4 யோபுவின் மற்ற நண்பர்களும் சூகிய னான பில்தாத்தும் பேசிய ஞானமுள்ள பேச்சு களைப் புறக்கணிக்கும் வகையில் கடுமையாக விமர்சித்ததை அவன் பழித்துரைத்தான். பில் தாத்தைக் குறித்து நன்மையாகச் சொல்ல வேண்டிய ஒரு செய்தி: மற்ற இரண்டு உடன் தேற்றரவாளர்களைக் காட்டிலும் இவன் சற்று சுருக்கமாகவே வசைபாடுகிறான். இந்தப் பண் பைக் குறித்த நினைவுடையவனாகவே, யோபு தன்னுடைய **பேச்சுகளை முடிக்க** வேண்டும் என்று ஆலோசனை கூற அவன் துணிகிறான்.

18:5-21 தன்னுடைய சொந்தப் பாவங்களின் வலையிலேயே **துன்மார்க்கன்** சிக்கிக்கொள் கிறான் என்னும் நன்கு பழக்கப்பட்ட பல்லவியை அவன் மீண்டும் பாடத் தொடங்குகிறான். அதன் பிறகு ஒரு பாவியின் வீட்டின்மேல் வருகின்ற பேரி டர்களைக் குறித்த அச்சமூட்டும் அட்டவணையை அவன் பட்டியலிடுகிறான். தங்களுடைய பாவங் களின் நிமித்தம் மனிதர்கள் பாடு அனுபவிக் கிறார்கள் என்று பில்தாத் கூறியது சரியானதே ஆகும். ஆனால் யோபு துன்பம் அனுபவிப்பதற்கு இதனைக் காரணமாக விவரிப்பது சரியன்று. ஒருவர் வாழ்க்கையில் செய்கிற பாவத்தின் நேரடி

யான விளைவே அவரது எல்லாப் பாடுகளும் என் பது தவறு.

4. யோபுவின் பதில் (அதி. 19)

19:1-22 யோபுவின் நண்பர்கள் அவனுக்கு எதிராகப் பேசி அவனைக் குற்றப்படுத்தினதன் காரணமாக அவர்கள் வெட்கப்பட வேண்டும் என்று அவன் அவர்களிடம் கூறுகிறான். யோபு தேவனாலும் அவனுடைய உறவினர்களாலும் நண்பர்களாலும் வேலைக்காரர்களாலும் அவ மதிக்கப்பட்டான். அவனுடைய உடல் வலுக் குன்றி நலிந்துபோயிற்று, அவன் மரணத்தில் இருந்து தப்பியிருப்பது ஆச்சரியமேயாகும். ஆயி னும் அவனுடைய நண்பர்கள் எவ்வித இரக்கமும் அற்றவர்களாக அவனைத் தாக்குவதில் தேவ னோடு சேருகிறார்கள்.

19:23,24 அவனுடைய **வார்த்தைகள்** ஒரு நூலில் **எழுதப்பட** வேண்டும் என்றும், அவை **என்றைக்கும் நிலைக்கும்படி கருங்கல்லிலே உளி வெட்டாகவும் ஈய எழுத்தாகவும் பதிக் கப்பட** வேண்டும் என்றும் அவன் விரும்புகிறான். பின்னொரு காலத்தில் அவன் நீதியைப் பெறு வதற்கு அது உதவிபுரியும் என்று கருதுகிறான்.

19:25-27 அரிதான வகையில் ஒளி பெருக் கெடுத்து வீசியது. மீட்பர் ஒருவர் இருக்கிறார் என்று அவன் நம்புகிறான். மரணமும் அழிவும் அவனை வந்தடைந்தாலும் அவன் நேர்மையான வன் என்பதை அவர் மெய்ப்பிப்பார், முன்னிருந்த நிலைக்கு அவர் அவனைச் சீர்படுத்துவார் என்று அவன் நம்புகிறான்.

மேன்மை தாங்கிய ஆங்கிலப் பேச்சாளர் ஸ்பர்ஜன் அவர்கள், யோபு நூலின் மொழி நடைக்கு மாற்றமற்றபடி தன்னுடைய சொந்த நடையில் 25 -ஆவது வசனத்திற்குச் சிறந்ததொரு விளக்கம் அளித்துள்ளார்:

> யோபுவின் ஆறுதலின் சாரம் ''என்'' – ''என் மீட்பர்'' என்னும் அந்தச் சிறிய சொல்லில், அவர் உயிரோடிருக்கிறார் என்னும் உண்மை யில் அடங்கியிருக்கிறது. என்ன அருமை! உயிருள்ள கிறிஸ்துவைப் பற்றியிருத்தல். அவரை நாம் அடைந்து மகிழ்வதற்கு முன் அவரிடத்திலிருந்து ஓர் உரிமையைப் பெற வேண்டும். என்னை மீட்காத ஒரு மீட்பர், என்னு டைய இரத்தத்திற்காக ஒருபோதும் எழுந்து நிற்க முடியாதவர், பழிவாங்குபவர், இவர் களால் பயன் என்ன? ''ஆம், நான் என்னையே உயிருள்ள கர்த்தரிடத்தில் ஒப்புவிக்கிறேன்; அவர் என்னுடையவர்'' என்று நீங்கள் விசுவாசத்துடன் சொல்லும்வரை ஓய்ந்திருக்க வேண்டாம். ஒருவேளை நீங்கள் உங்களு டைய வலுவிழந்த கரத்தால் அவரைப் பிடித்துக் கொண்டிருப்பீர்கள்; ''அவர் என்னுடைய மீட்பராக வாழ்கிறார்'' என்று கூறுவது அகந் தையாகக் காணப்படும் என்று கருதி அரை மனதோடு சிந்தித்துக் கொண்டிருப்பீர்கள். ஆயினும் உங்களுக்குக் கடுகளவு விசுவாசம் இருந்தால் போதும், அந்தச் சிறிதளவு விசு வாசம் அதைக் கூறுவதற்குரிய உரிமையைத் தர வல்லது. ஆனால் இங்கு வேறு ஒரு சொல் லும் இருக்கிறது; யோபுவின் ஆற்றல் மிக்க நம்பிக்கையை அது வெளிப்படுத்துகிறது, ''நான் அறிந்திருக்கிறேன்.'' ''அவ்வாறு நடை பெறும் என்று நான் கருதுகிறேன், அவ்வாறு நான் நம்புகிறேன்'' என்று கூறுவது எளிது. அதைக் காட்டிலும் மேல்நிலைக்குச் செல்லத் தயங்குகிறவர்கள் இயேசுவின் மந்தையில் ஆயிரக் கணக்கில் இருக்கிறார்கள். ஆனால் ஆறுதலின் உண்மைப் பொருளை அடைய நீங்கள், ''நான் அறிந்திருக்கிறேன்'' என்றே சொல்ல வேண்டும்.[18]

யோபுவின் தோல் அழுகிப்போன பின்பு தன்னு டைய மாம்சத்தில் தேவனைக் காணப்போவதாக அவன் விசுவாசம் கொண்டிருந்தான் என்னும் உண்மை, பழைய ஏற்பாட்டில் பரவலாகக் கற்பிக் கப்படாத கோட்பாடாக இருந்தபோதிலும், சரீர உயிர்த்தெழுதலை உறுதியோடு தெரிவிக்கிறது. ஆயினும் இக்கோட்பாடு நம்முடைய கர்த்தர் உலகில் மனிதராக இருந்த நாட்களில் பழைய ஏற்பாட்டை விசுவாசித்து வந்த யூதர்களால் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாக விளங்கிற்று.

மீண்டுமாக, திருவாளர் ஸ்பர்ஜன் 26 -ஆவது வசனத்திற்கு அழகுற விளக்கம் அளிக்கிறார்:

> யோபுவின் பக்திமிக்க எதிர்பார்ப்பைக் குறித்த பொருளை இங்கு கவனித்துப் பாருங்கள் – ''தேவனைப் பார்ப்பேன்.'' ''நான் பரிசுத்த வான்களைக் காண்பேன்'' என்று அவன் கூற வில்லை – அது சொல்லிமுடியாத பேரின்பமாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை, ஆயினும் ''தேவனைப் பார்ப்பேன்.'' ''நான் முத்துகளாலான வாசலைக் காண்பேன், நான் இரத்தினக் கற்களாலான சுவர்களைக் காண்

பேன், பொன் கிரீடங்களைக் காண்பேன்,'' ஆனால் ''நான் தேவனைப் பார்ப்பேன்.'' இதுவே விண்ணகத்தின் ஒட்டு மொத்தப் பொருளாகும். இதுவே ஒவ்வொரு விசுவாசியின் மகிழ்ச்சி நிறைந்த நம்பிக்கையாகும்.[19]

19:28,29 எதிர்காலத்தில் யோபுவின் நியாயம் இவ்விதமாக நிலைநாட்டப்படும், அதன் காரணமாக அவனுடைய நண்பர்கள் அவனுக்குத் துன்பத்தை உண்டாக்கக் கூடாது, இல்லையேல் அவர்கள் தண்டனை பெறுவார்கள்.

5. சோப்பாரின் இரண்டாம் உரை (அதி. 20)

20:1-19 யோபு தனது விசுவாசத்தைக் குறித்துச் செய்த அறிக்கை செவிடன் காதில் ஊதப்பட்ட சங்கு போலாயிற்று என்பது தெளிவு. சோப்பார் அதைச் செவிமடுக்கவில்லை. இறுமாப்பு கொண்ட மனிதன் கண்களுக்குப் புலப்படாத படி **என்றைக்குமாக அழிந்துபோவான்** என்பதை வரலாறு வெளிப்படுத்தியிருக்கிறது என்று அவன் கூறுகிறான். அப்படிப்பட்டவனுடைய **பிள்ளைகள்** எளிமையானவரிடத்தில் இரந்து திரிவார்கள். மேலும் அவர்கள் அவன் அநியாயமாய் எடுத்துக் கொண்டதைத் திரும்பத் தருவார்கள். அவன் இளவயதின் வலிமையோடு இருக்கும் காலத்திலேயே மாண்டுபோவான். அவன் எத்தகையச் செல்வச் செழிப்போடு வாழ்பவனாக இருந்தாலும், எளியோரை ஒடுக்கி அவன் சம்பாதித்த அனைத்தையும் சடுதியில் இழந்து போவான்.

20:20-29 பசி, **வியாகுலம்**, ஏழ்மை, ஆயுதத்தால் தாக்கப்படுதல், **அக்கினி**, மனவமைதி அற்றநிலை உட்பட கற்பனை செய்துபார்க்கக் கூடிய எல்லாவித இடப்பாடுகளும் அவன்மேல் வரும். வானமும் **பூமியும்** அவனுக்கு எதிராகச் செயல்படுவதால் அவனுடைய உடைமை யாவும் ஒழியும். இதுவே **துன்மார்க்கனுக்கு தேவன் தரும் சுதந்தரமாகும்.**

இதனைக் குறித்துத் திருவாளர் G. கேம்ப்பெல் மோர்கன் கூறுவதாவது:

> பொல்லாத வழியில் பெற்ற ஆதாயம் நிலையற்றது என்பதைச் சீற்றம் நிறைந்த சொற்களால் சிலிர்க்கச் செய்யும் விவரங்கள் அடங்கிய இப்பகுதியில் சோப்பார் விவரிக்கிறான். அங்கே வெற்றி கிடைக்கும், ஆனால் அது சிறிது காலமே நிலைநிற்கும். உடைமைப் பெருக்கம் அங்கிருக்கும், அதைத் தொடர்ந்து அது சடுதியில் மறைந்து போகும். இளவயதில் உணர்வு காணப்படும், ஆனால் அது புழுதிக்குள் முடங்கி விடும். அங்கு இனிமையிருக்கும், ஆனாலும் உறுத்தல் நிறைந்ததாக மாறி விடும்; விழுங்கப்படுவது வாந்தியெடுக்கப்படும்; பெற்றுக்கொள்வதில் மகிழ்ச்சி இருக்காது. பொல்லாதவன் மேல் நிகழும் கடைசி வஞ்சத் தீர்வு, தேவன் அவன்மேல் திருப்புவதே ஆகும், தண்டனையின் செயல்பாடுகளுடன் அவர் அவனைத் தொடருவார். இருள் அவனைச் சுற்றிக்கொள்ளும். வானங்களின் ஒளியில் அவனுடைய பாவம் நிலைநிற்கும், பூமியோ அவனை எதிர்த்து நிற்கும். பொல்லாப்பின் வரலாறு ஆராய்ந்து பார்க்கப்படுகையில் இதன் உண்மை புலப்படும்.[20]

6. யோபுவின் பதில் (அதி. 21)

21:1-22 இப்பொழுது யோபு மிகுந்த கவனத்துடன் கேட்கும்படி கூறுகிறான். அவனுடைய பரிதபிக்கத்த நிலை மனிதனுடைய அனுதாபத்தை உண்டுபண்ண வேண்டியதாக இருந்தபோதிலும், அவ்வாறு ஏற்படாத நிலையில், அவன் முதன்மையாக மனிதனுக்கு எதிராகக் குற்றஞ்சாட்டவில்லை. தங்களுடைய வாழ்க்கையில் தேவனுக்கு இடம் கொடுக்காமல் வாழ்ந்தாலும் வாழ்க்கையில் எல்லாச் சூழ்நிலைகளிலும் பாடுபடாமல் எல்லாவிதமான செல்வச் செழிப்போடும் வாழ்வதைப் பல நேரங்களில் மெய்யாகக் காணவியலும். பொல்லாதவர்கள் தங்களுடைய வாழ்நாட் காலத்திலேயே தங்களுடைய பாவங்களுக்கான தண்டனையை எங்கே பெறுகிறார்கள் என்று அவன் கேள்வி எழுப்புகிறான். **காற்று பறக்கடிக்கிற** பதரைப் போல அவர்கள் எங்கே அடிக்கப்படுகிறார்கள்?

தகப்பன் செய்த பாவத்திற்காக தேவன் அவனுடைய மகனைத் தண்டிப்பதாக நீங்கள் கூறுகிறீர்கள். கூடாது! பாவிகளையே தேவன் தண்டிக்கட்டும்; அவர்களுடைய பாவத்திற்காக அவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள் என்பதை அவர் அவர்களுக்குத் தெரியப்படுத்தட்டும். பாவிகள் அவர்களுடைய சொந்தத் தண்டனையை அனுபவிக்கட்டும்; மகாவல்லமையுடைய தேவனுடைய கோபத்தை அவர்கள் உணரட்டும். ஒரு மனிதனுடைய வாழ்வு முடிவடைந்த பிறகு, அவனுடைய பிள்ளைகள் மகிழ்ச்சியாக வாழ்வதற்கு உண்மையாக அவனால் அக்கறை செலுத்த முடியுமா? உயர்ந்த நிலையில் வாழும் மனிதர்

களை எவ்வாறு நியாயந்தீர்க்க வேண்டும் என்று ஒருவன் தேவனுக்குச் சொல்லித் தர முடியுமா? (வச. 19-22 TEV).

21:23-34 ஒருவன் சமாதானத்தோடும், வலிமையோடும், செல்வச் செழிப்போடும் மரணம் அடைகிறான். வேறொருவன் மனக்கிலேசத்தோடு வறுமையில் சாகிறான். சாவில் எல்லோரும் சமமாய் இருக்கிறார்கள். பொல்லாதவர்கள் இவ்வுலகில் வாழும் நாட்களிலேயே தண்டனை பெறுவார்கள் என்று யோபுவின் நண்பர்கள் வலியுறுத்திச் சொல்லுகிறார்கள். ஆனால் பொல்லாதவன் தன்னுடைய வாழ்நாட்களுக்குப் பிறகு தண்டிக்கப்பட்டாலும் இவ்வுலக வாழ்வின் போது பெரும்பாலும் மகிழ்ச்சியுடன் வாழ்கிறான் என்பதை பல்வேறு இடங்களுக்கு **வழிநடந்து போகிறவர்கள்** சாட்சி கூற வேண்டும் என்று யோபு விண்ணப்பிக்கிறான். அவனுடைய செயலக்கு எதிராகக் குறை சொல்வார் இல்லை, அவனைத் தண்டிப்பவரும் இல்லை. எல்லோரையும் போலவே அவன் சாகிறான். "நீங்களோ அறிவற்ற பேச்சினால் எனக்கு ஆறுதல் அளிக்க முயற்சி செய்கிறீர்கள். நீங்கள் கூறுகிற ஒவ்வொரு பதிலும் பொய்!" என்று அவன் அவர்களை வழியனுப்பும் வகையில் பதில் உரைக்கிறான் (வச. 34 TEV).

இந்தச் சொற்களுடன் யோபு தன்னுடைய நண்பர்களோடு செய்த இரண்டாவது சுற்று உரையாடலை முடிவு செய்கிறான். இந்தத் "தேற்றரவாளர்கள்" யோபு பாவம் செய்தவன் என்று குற்றஞ்சாட்டி அதை நிலைநிறுத்தும் பொருட்டு இன்னொரு சுற்று வாக்குவாதத்தில் ஈடுபடுகிறார்கள். இந்த முயற்சியில் சோப்பார் பங்குபெறவில்லை.

யோபு நூலில் காணப்படும் பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை. நீதிமான் பாடு அனுபவிப்பதன் காரணம் என்ன? இருந்தபோதிலும், யோபு அனுபவித்த பொருள் விளங்கிக்கொள்ள முடியாத பாடுகளின் இருளின் ஊடாகப் பாய்ந்து வந்த மங்கலான ஒளிக்கதிரின் மூலமாகச் சிறிதளவு முன்னேற்றம் கண்டான்.

இ. மூன்றாவது சுற்று உரையாடல் [அதி. 22-31]

1. எலிப்பாசின் மூன்றாவது உரை (அதி. 22)

மூன்றாவது சுற்றில் எலிப்பாசும் பில்தாத்தும் தங்களுடைய வாதங்களில் முன்னர் சொன்னதையே பெருமளவில் திரும்பவும் கூறி தங்கள் பேச்சை முடித்துக்கொள்கிறார்கள். சோப்பாரோ அமைதியாக இருந்தான். யோபு தான் மறைமுகமாகப் பாவம் செய்யவில்லை என்றும், போலியாக நடித்து ஏமாற்றவில்லை என்றும் அறிந்திருந்த காரணத்தால், அவர்களுடைய வாதங்களைக் கேட்டு எவ்விதத்திலும் பாதிப்பு அடையாமல் அவர்களுக்குப் பதில் உரைக்கிறான். அவனோ முதல் அதிகாரம் வெளிப்படுத்துவது போல, குற்றமற்ற (ஆனால் பாவமற்றவன் அல்ல, தாழ்மையானவனும் அல்ல) மனிதன். எலிப்பாசின் கடைசி உரை மேன்மை உடையதாகவும் இலக்கிய அழகு பொருந்தியதாகவும் உள்ளது; அவன் துன்பம் அனுபவித்துக் கொண்டிருந்தவனிடன் சற்று கூடுதல் பணிவோடு பேசுகிறான், ஆனாலும் நேர்மையற்ற வகையிலேயே அவனுடைய வாதம் அமைந்திருக்கிறது.

22:1-11 யோபுவோ, அவனுடைய உடைமைப் பொருளோ, அவனுடைய செயலோ, அவனுடைய **உத்தமமான வழிகள்** உட்பட எதுவும் தேவனுக்குத் தேவையில்லை என்பதை வெளிப்படுத்திக் காட்டும் வகையிலேயே எலிப்பாசின் கேள்விகள் அமைந்திருக்கின்றன. யோபு தவறான வகையில் எளியவரிடம் **அடகு வாங்கினான், விடாய்த்தவனுடைய தாகத்துக்குத் தண்ணீர் தரவில்லை, பசித்தவனுக்கு** உணவு தரவில்லை, பிறருடைய நிலங்களை அபகரித்துக்கொண்டான், **விதவைகளையும் திக்கற்றவர்களையும்** கொடுமைப் படுத்தினான் என்று பெருங்குற்றச்சாட்டுகளை விடாமல் தொடுத்து அவன் மாபெரும் பாதகன் என்று எலிப்பாஸ் சாடினான். யோபுவின் தற்போதைய இக்கட்டான சூழ்நிலைக்கு இவையே காரணம் என்பதே எலிப்பாசின் வாதம், ஆனால் உண்மை இதற்கு முற்றிலும் மாறானது; யோபு பெருமளவில் சமுதாய அக்கறை கொண்டவனாக இருந்தான், ஈகை புரிவதில் தாராள மனப்பான்மையோடு இருந்தான்.

22:12-20 உன்னதங்களில் இருக்கிற தேவன் என்ன நடக்கிறது என்பதை அறியாதவராக இருக்கிறார் என்று யோபு நினைக்கக்கூடாது. அவன் தொடர்ந்து பாவம் செய்துகொண்டிருந்தால் நோவாவின் நாட்களில் வாழ்ந்த மனிதர்களுக்கு என்ன நடந்ததோ அதையே எதிர்கொள்ள நேரிடும், ஒரு காலத்தில் தேவனால் செல்வ வளத்தால் நன்மை பெற்றவர்கள் வாழ்ந்த பூமியின் **அஸ்திபாரத்தின்மேல் வெள்ளம் புரண்டது.** பொல்லாதவர்கள் தண்டிக்கப்படும் போது **நீதிமான்** மகிழ்கிறான்.

22:21-30 எலிப்பாஸ் தனது இறுதி வேண்டுகோளில் மெய்யாகவே சில திறமை வாய்ந்த நேர்த்தியான சொற்களை யோபுவிடம் கூறுகிறான்: **"நீர் அவரோடே பழகி சமாதானமா**

யிரும்” (வச,21); **“அப்பொழுது சர்வ வல்லவர் தாமே உமக்குப் பசும்பொன்னும், உமக்குச் சொக்க வெள்ளியுமாயிருப்பார்”** (வச.25) **“உம்முடைய பாதைகளில் வெளிச்சம் பிரகாசிக்கும்”** (வச,28). இச்சொற்கள் நேர்த்தியாக இருப்பது மட்டுமின்றி உண்மையாகவும் இருக்கின்றன. மனந்திரும்பிய பாவி “**சர்வ வல்லவரிடமாய்த்** திரும்புகிறான்” மேலும் அவன் தன் “**கூடாரத்தை** விட்டு **வெகுதூரத்திற்கு அக்கிரமத்தை** விலக்குகிறான்” (வச,23)! ஆனால் இதில் இருக்கக்கூடிய ஒரே பிரச்சினை, இது யோபுவுக்குப் பொருத்தமான ஆலோசனையா என்பதுதான். அவன் பாவத்தில் வாழவில்லை! யோபு வினிடத்தில் எலிப்பாஸ் உரைத்த இறுதி வேண்டுகோளைத் திருவாளர் பார்னஸ் சுருக்கமாகத் தருகிறார்:

> சர்வ வல்லவர் அவருடைய பாதுகாவலராக விளங்குவார், அவன் தேவனிடத்தில் மகிழ்ச்சியைக் கண்டடைவான்; அவனுடைய மன்றாட்டு கேட்கப்படும்; அவனுடைய வழிகளில் வெளிச்சம் பளிச்சிடும்; பிறர் தாழ்த்தப்படும்போது அவன் உயர்த்தப்படுவான்.[21]

2. யோபுவின் பதில் (அதி. 23,24)

23 மற்றும் 24- ஆகிய அதிகாரங்கள் இரண்டும் சேர்ந்து ஒரே உரைதான், பண்டைய தேவ அறிஞர்களால் வசதியின் பொருட்டு இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. 23-ஆவது அதிகாரத்தில் யோபு மூன்று முதன்மையான கருத்துகளை வெளிப்படுத்துகிறான்:

தேவனுடைய அரியணையின் முன்னிலையில் தன்னுடைய வழக்கைச் சமர்ப்பிக்க வாஞ்சையுடன் இருக்கும் நிலை (வச. 1-9); தன்னுடைய சொந்த நீதியான வாழ்க்கை முறை சரியானது என்று வழக்காடும் தன்மை (வச. 10-12); தேவன் அவனுடைய பகைவர் என்னும் எண்ணத்தில் அவனுக்கு ஏற்பட்ட அச்சம் (வச. 13-17).

23:1-9 யோபுவின் முறையீடு கசப்பு நிறைந்தது. அவன் தேவனுடைய முன்னிலையில் **வந்து** அவரைக் **கண்டால்** நலமாயிருக்கும்! திருவாளர் ஸ்பர்ஜன் விவரிக்கிறார்:

> ‘‘உடல் முழுவதும் சீழ்பிடித்து என்னைத் துன்புறுத்தும் நோய் நீங்க வேண்டும், நான் குணமாக வேண்டும்’’ என்பது அவனுடைய முதலாவது மன்றாட்டு அன்று. ‘‘என்னுடைய பிள்ளைகள் கல்லறையின் பிடியிலிருந்து வெளிவர வேண்டும், என்னுடைய சொத்துகள் யாவற்றையும் கொள்ளையர்களிடமிருந்து நான் திரும்பப் பெற வேண்டும்’’ என்பதும் அவனுடைய மன்றாட்டாக இல்லை. மாறாக அவன் ஏறெடுத்த முதன்மையானதும் முக்கியமானதுமான மன்றாட்டு ‘‘என்னுடைய தேவனாகிய அவர் எங்கே இருக்கிறார் என்பதை நான் கண்டுபிடிக்க வேண்டும், அவருடைய இருக்கையினிடமாய் நான் வர வேண்டும்’’ என்னும் கதறலே ஆகும். புயல் அடிக்கத் தொடங்கும் போது தேவனுடைய பிள்ளைகள் வீட்டை நோக்கி ஓடுகிறார்கள். யெகோவாவின் செட்டைகளின் கீழ் அடைக்கலம் புகுந்து எல்லாவித மான தீமைகளிலிருந்தும் காக்கப்பட வேண்டும் என்பதே கிருபை பெற்ற, விண்ணகப் பிறப்பு பெற்ற ஒவ்வொரு ஆத்துமாவின் இயல்பான எண்ணமாகும்.[22]

யோபு கர்த்தரை அணுகுகிற வேளையில், அவன் நீதிமானாக இருந்தான் என்றும், அதன் காரணமாக அவர் அவனை நியாயந்தீர்க்கிறவரின் கைக்கு நீங்கலாக்கித் தப்புவிப்பார் என்றும் மிகுந்த நம்பிக்கையோடு இருக்கிறான்.

23:10-12 சோதனைகள் பரிசுத்தப்படுத்தும் திறமை பெற்றவை என்பதை மெய்ப்பிக்கும்படி 10-ஆவது வசனம் அவ்வப்போது மேற்கோள் காட்டப்படுகிறது. ஆனால் இவ்வசனத்தின் பின்னணியைக் காணும்போது, குற்றமற்றவன் என்னும் தீர்ப்பு தனக்கு வழங்கப்படும் என்று யோபு கொண்டிருந்த நம்பிக்கையாக இது விளங்குகிறது என்பதே உண்மை. இதற்கிடையே தேவன் விதிகட்கு உட்படாத வகையில் செயல்படுகிறார், அவருடைய அச்சமூட்டும் நியாயத்தீர்ப்புகளால் யோபுவைக் கலங்கப் பண்ணுகிறார். அவ்வாறாயினும், யோபுவின் வழக்கு தேவனுடைய நியாயாசனத்திற்கு வருகிறபோது அவன் பொன்னைப் போலத் தூய்மையாகக் காணப்படுவான், அவன் எப்போதும் தேவனுடைய நெறிகளைப் பின்பற்றி வாழ்ந்தான் என்பது விளங்கும். அவருடைய வார்த்தைகளை அவன் எப்போதும் தனக்கு வேண்டிய ஆகாரத்தைப் பார்க்கிலும் மேலாகக் கருதி வந்திருக்கிறான். நம்முடைய சொந்த வாழ்க்கையின் நலன் கருதி இந்தப் பத்தாவது வசனத்தை நாம் மனப்பாடம் செய்வது நல்லது:

ஆனாலும் நான் போகும் வழியை
அவர் அறிவார்;

அவர் என்னைச் சோதித்தபின்
நான் பொன்னாக விளங்குவேன்.

23:13-17 இதற்கிடையே, தனித்தன்மையோடும் எவ்வித விதிகளுக்குட்படாத வகையிலும் செயல்படுகிற தேவன், அவர் மனம் விரும்புகிறபடி எல்லாம் செய்கிறார். அவருடைய செயல் அவனை அச்சத்திற்குட்படுத்துகிறது. அவன் கலங்குகிறான், ஏனெனில் தேவன் யோபுவின் இருதயத்தை இளைக்கச் செய்திருக்கிறார்.

24:1-12 சர்வவல்லவருக்கு எதுவும் மறைக்கப்படாதிருக்கையில், அவரை அறிந்தவர்களைக் காட்டிலும் பொல்லாதவர்கள் அதிகச் செல்வச் செழிப்போடு வாழ்கிறார்கள் என்னும் பிரச்சினைக்கான தீர்வை அவர் தராததன் காரணத்தை அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை. இவ்வுலகில் நடைமுறையில் உள்ள பயரங்கரமான அநீதி நிறைந்த செயல்களை அவன் பட்டியலிட்டுக் காட்டுகிறான். ஒடுக்குகிறவர்களின் குற்றங்கள் ஒடுக்கப்படுகிறவர்களின் பாடுகள்.

திருவாளர் ரிடவுட் விளக்குகிறார்:

> உண்மைகள் மிக அச்சமூட்டும் வகையில் படம் பிடித்துக் காட்டப்படுகின்றன. அவற்றை அவர்கள் நன்கு அறிவார்கள் – நமக்கும் தெரியும். பொல்லாங்கான செயல்களுக்கான தண்டனை இவ்வுலக வாழ்க்கையின் போதே செயல்படுத்தப்படும் என்னும் கருத்தை முன்மொழியும் எலிப்பாஸ் இத்தகைய உண்மைகளை அக்கருத்தோடு பொருத்திக் காண்பிப்பது எங்ஙனம்? இத்தகைய குற்றங்களைச் செய்தவர்களைத் தண்டிக்காமல், இச்செயல்களுக்கு தேவன் தமது கண்களை மறைத்துக்கொள்வது ஏன்? இதுவே யோபுவுக்கு மிகப் பெரிய பிரச்சினையாக விளங்குகிறது, இதற்கு அவனால் தீர்வு காண முடியவில்லை.[23]

உலகில் தேவனுடைய நிருவாகத்தில் தவறு நிகழ்கிறது என்பது வெளிப்படையாகத் தெரிகிறது என்பதே யோபுவின் குற்றச்சாட்டு (வச. 12):

ஊரில் மனிதர் தவிக்கிறார்கள்,
குற்றுயிராய்க் கிடக்கிறவர்களின் ஆத்துமா கூப்பிடுகிறது;
என்றாலும், தேவன் அதைக் குற்றமாக
அவர்கள்மேல் சுமத்துகிறதில்லை.

24:13-17 அடுத்ததாக, கலகம் செய்கிற கொலை பாதகன், விபசாரம் செய்கிறவன் மற்றும் கொள்ளையடிக்கிறவன் ஆகியோர் பற்றி யோபு விவரிக்கிறான். இம்மூவரும் தங்களுடைய செயல்களைச் செய்ய இரவையே தெரிந்தெடுக்கிறார்கள். விடியுங்காலம் அவர்களுக்கு மரண இருள் போல் இருக்கிறது.

24:18-25 பொல்லாத பாவிகள் இவ்வுலகில் சபிக்கப்பட வேண்டியவர்கள், அவர்கள் அப்புறம் நினைக்கப்படுவதில்லை என்பவை உண்மையாயிருந்தபோதிலும், தேவன் அவர்களுக்குப் பாதுகாப்பைக் கட்டளையிடுகிறார். மற்றவர்களைக் காட்டிலும் பொல்லாதவர்கள் கொடூரமான மரணத்தை அடைகிறதில்லை என்று தொடர்ந்து யோபு வலியுறுத்துகிறான். எவரேனும் இவ்வுண்மையை எதிர்க்க முடியுமா என்று அவன் அறைகூவல் விடுக்கிறான்.

பில்தாத்தின் உரை மிகச்சிறியதாக இருக்கிறது, சோப்பார் எதுவும் பேசவில்லை, யோபுவின் பதிலோ மிக நீண்டதாயிருக்கிறது, ஆகவே 18-25 வசனங்கள் யோபுவைச் சேர்ந்தது அல்ல என்று சில வேத அறிஞர்கள் கூறுகிறார்கள். தற்கால மொழிபெயர்ப்புகள் சில வசனங்களை இங்கும் வேறு சில இடங்களிலும் மாற்றி வரிசைப்படுத்தியிருக்கின்றன. இந்தச் சொற்களை யோபு பேசியிருக்க முடியாது என்பதை ஏற்றுக்கொள்ளாத ஆண்டர்சன் என்பார்,[24] அவ்வாறு சிலர் மாற்றி அமைத்திருப்பதைக் குறித்துக் கூறியிருப்பதாவது:

> யோபு என்ன பேச வேண்டும் என்று நாம் நினைக்கிற சொற்களாக இவை இல்லாத காரணத்தால், இவை அவனுடைய உதடுகளிலிருந்து பிறக்கவில்லை என்று நாம் முன்பின் ஆராயாமல் அகற்றுவது சரியன்று. இது மூன்று வகைகளில் செய்யப்பட்டுள்ளது: பக்தி உள்ளத்தோடு இப்பகுதியை முழுவதுமாக அகற்றுவது, யோபு எந்த அளவிற்குச் சமயப் பற்று உடையவனோ அதைக் காட்டிலும் அதிகப் பற்றுடையவனாக ஆக்குகிறது; அவனுடைய நண்பர்களில் ஒருவன் இந்த வசனங்களைக் கூறியதாக மாற்றியமைப்பது – பில்தாத் என்று NAB மொழிபெயர்ப்பும், சோப்பார் கூறியதாக Pope மொழிபெயர்ப்பும் கூறுகின்றன; தன்னுடைய நண்பர்கள் கூறியதை யோபு மேற்கோள் காட்டுவதாக இப்பகுதியை எடுத்துக் கொள்வது (நீங்கள் கூறுகிறீர்கள் என்னும் சொற்களை RSV மொழிபெயர்ப்பு இப்பகுதி

யோடு சேர்த்து, 21-24 வசனங்களை அதற்கான எதிர்ப்புரையாகக் குறித்துக்காட்டுகிறது. 18-24 ஆகிய வசனங்களையும் மேற்கோளாக கோர்டிஸ் என்பார் கருதுகிறார்.)[25]

3. பில்தாத்தின் மூன்றாவது உரை (அதி. 25)

யோபுவின் நண்பர்களில் கடைசியாகப் பேசிய வன் சோப்பார் அல்லன். சூகியனாகிய பில்தாத்தின் உரையே "தேற்றரவாளர்களின்" கடைசி உரையாகும். பில்தாத்தின் உரையில் சொல்லாட்சித் திறனும் குன்றி வெறுமையாகக் காணப்படுகிறது. அவனுடைய பேச்சின் அளவும் குறைந்து இந்நூலிலேயே மிகச் சிறிய பகுதியாக இருக்கிறது:

> பில்தாத்தின் உரையின் சுருக்கமான அளவைக் கொண்டும், இந்த உரையில் புதிதாக வேறொரு செய்தியும் இல்லை என்பதைக் கொண்டும் நாம் நிதானிப்போமானால், அந்த நண்பர்கள் தங்களுடைய கருத்தை முன்னிறுத்திப் பேசுவதற்கு வேறு வாதங்கள் இல்லாத நிலையை அடைந்துவிட்டார்கள் என்றே தோன்றுகிறது. அவர்கள் ஆழ்ந்து சிந்திக்க அறியாதவர்கள் என்பதையும், தங்களுடைய கருத்தை வெளிப்படுத்துவதில் திறமையற்றவர்கள் என்பதையும் இது பெருமளவில் சுட்டிக்காட்டுகிறது. அவர்களுடைய மொழிநடை மேன்மையும் உயர்வும் உடையதாயிருக்கிறது. அவர்களுடைய உவமைகள் அரிதான அழகும் ஆற்றலும் கொண்டவை. ஆனால் அவர்களுடைய கருத்து நிலையும், வாதப் பொருளும் தவறானவை, குறுகிய மனப்பான்மை கொண்டவை, உறுதிப்படுத்த வகையற்றவை.[26]

சொற்களின் பெருக்கம் எவ்விதப் பயனும் அளிக்காது என்பதை பில்தாத் இறுதியாகப் புரிந்துகொண்டான் என்பது தெளிவாகத் தெரிகிறது, இந்நிலையில் இரண்டு கருத்துகளை மட்டும் அவன் கூற விழைகிறான்: தேவன் மிகப் பெரியவர் என்னும் அவருடைய மேதகை (வச. 1-3), மனிதனின் ஒன்றுமற்ற நிலை (வச. 4-6).

25:1-3 அதிகாரமும் பயங்கரமும் தேவனுக்கு உரியவை, அவருடைய சேனைகள் தொகைப்படுத்திக்காண இயலாதவை.

25:4-6 தேவனுடைய பார்வையில் சந்திரனும் நட்சத்திரங்களும் தூய்மையற்றவை; அப்படியிருக்க புழுவுக்கும் பூச்சிக்கும் ஒப்பான மனிதனுக்கு என்ன நம்பிக்கை இருக்க முடியும்? பில்தாத்தின் சொற்கள் மெய்யானவை, நேர்த்தியாகச் சொல்லப்பட்டுள்ளன. ஆனால் அன்பும் ஆறுதலும் அற்ற வகையில் அவை சொல்லப்பட்டுள்ளன, ஆகவே அவை யோபுவின் தேவையை நிறைவு செய்யவில்லை.

4. யோபுவின் பதில் (அதி. 26)

26:1-4 முதலாவதாக, பில்தாத்தின் வாதத்தை யோபு மறுத்துரைக்கிறான். யோபு திடனற்றவனும், பெலனற்றவனும், ஞானமற்றவனுமாக இருக்கிறான் என்று கருதினாலும், பில்தாத் எவ்வாறு உதவி செய்ய முடியும்? அவனுடைய சொற்கள் பயனற்றவை, உணர்ச்சியற்றவை, யோபு வாதத்திற்குப் பதில் கூற இயலாத நிலையில் முற்றிலும் தோல்வியுற்றவை.

26:5-13 இந்த அதிகாரத்தின் எஞ்சிய பகுதியில் இப்பிரபஞ்சத்தில் தேவனுடைய வல்லமை எவ்வாறு விளங்குகிறது என்பது வியத்தகு வகையில் விவரிக்கப்பட்டுள்ளது: நீர் ஆவியாக மாற்றமடைதல், ஆவி நீராக மாற்றமடைதல் - இச்சுழற்சி; மேகங்களின் அடர்த்தி; ஒளி, இருள் ஆகியவற்றின் சுழற்சி; கடலில் ஏற்படும் அலை; விண்மீன்கள், வான்கோள்கள் ஆகியவற்றின் மூலம் அவருடைய ஆவி அலங்கரிக்கப்படுதல்.

வானங்களில் தேவனுடைய மகிமை விளங்குவதை பில்தாத் வலியுறுத்திக் கூறினான், யோபு இங்கே தேவனுடைய வல்லமை ஆழங்களில் செயல்படுவதை வலியுறுத்திக் கூறுகிறான்: தண்ணீரின் கீழ், பாதாளம், அழிவு.

அறிவியல் கற்பிப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தேவன் பூமியை அந்தரத்திலே தொங்க வைத்திருக்கிறார் என்று யோபு விவரிக்கிறான். (சூரிய மண்டலத்தில் பூமி எங்கிருக்கிறது என்பதைக் கவிதை நடையில் இவ்வசனம் விவரிக்கிறது).

> அண்டசராசரத்தைப் பற்றிய புறச்சமய தத்துவ ஞானிகளின் சொற்களுக்கு மேலாக அளவிட முடியா அளவு இந்தச் சுருக்கமான சொற்கள் மேன்மையாகத் திகழ்கின்றன! நியூட்டனும் கெப்லரும் கண்டுபிடித்த உண்மைகளின் கருவை இந்த வசனங்களில் நாம் பெற்றிருக்கிறோம். அறிவியல் உண்மைகளைத் திருமறை கற்பிப்பதில்லை என்று கூறுவது பெரும் தவறு. தேவையான உண்மைகள் அனைத்

தையும் அது கற்பிக்கிறது. அறிவியில் மொழியில் அது கற்பிக்காவிடினும், அறிவியல் நுட்பத்தோடு அது கற்பிக்கிறது.[27]

26:14 இந்த அற்புதங்கள் வெறுமனே அவருடைய கிரியையில் கடைக் கோடியானவை, அவரைக் குறித்து கேட்டவை கொஞ்சம் என்றால் அவருடைய வல்லமையின் இடிமுழக்கம் புரிந்து கொள்வதற்கு அப்பாற்பட்டது, அது எப்படியிருக்கும் என்று யோபு கேட்கிறான்.

5. இறுதியாக யோபு தனக்குத் தானே பேசிக் கொள்ளுதல் (அதி. 27-31)

யோபுவின் "தேற்றரவாளர்கள்" தங்களுடைய கருத்தை மெய்ப்பிக்க முடியவில்லை - யோபுவினாலும் தன்னுடைய பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியவில்லை! ஆயினும் அவன் சரியான பாதையில் போகிறான், அவனுடைய விசுவாசம் வளர்ச்சி அடைவதாகவே தோன்றுகிறது.

யோபு தனக்குத் தானே பேசிக்கொண்ட உரையில் மூன்று முக்கியமான கருத்துகள் இடம் பெற்றுள்ளன: யோபு தன்னுடைய நேர்மைக்கும் பொல்லாதவர்களின் அழிவுக் கேட்டுக்கும் இடையே உள்ள வேறுபாட்டைக் கூறுதல் (அதி. 27); ஞானத்தின் விலையேறப்பெற்ற பண்பைப் போற்றிப் பாராட்டுதல் (அதி. 28); இறுதியாக அவன் தன்னைப் பற்றிப் பேசுதல் (அதி. 29-31).

27:1-5 "யோபு பின்னும் தன் பிரசங்க வாக்கியத்தைத் தொடர்ந்து சொன்னது," என்னும் இவ்வதிகாரத்தின் தொடக்கச் சொற்கள், இங்கே பெரியதோர் இடைவெளி உள்ளது என்பதைக் காட்டுகின்றன. அவன் வெறுமனே பில்தாத்தின் கேள்விகளுக்குப் பதில் சொல்லுவதைத் தொடரவில்லை (26:1); அவன் தன் இருதயத்திலிருந்து பல விசயங்களை வெளிக்கொணருகிறான். யோபு தனது நேர்மையையும் **நியாயத்தையும் நீதியையும்** தொடர்ந்து வலியுறுத்துகிறான். அவனுடைய மறைவான பாவங்களின் விளைவாகவே அவன் துன்பங்கள் அனுபவிக்கிறான் என்று அவனுடைய நண்பர்கள் குற்றம் சுமத்துவதை நம்பத்தகுந்த வாதமாக அவனால் ஏற்க முடியவில்லை.

27:6-23 அக்கிரமக்காரரையும், மாயக்காரரையும், நீதியற்றவர்களையும் யோபு ஆதரித்துப் பேசவில்லை; அவர்கள் அழிவுக்குப் பாத்திரர். நீதியற்ற மனிதனிடம் தேவன் எவ்விதமாக நடந்துகொள்வார் என்பது பற்றி அவன் தன்னுடைய மூன்று நண்பர்களுக்குக் கற்பிப்பான் - அந்த உண்மைகளை அவர்களே கூறியிருக்கிறார்கள். அப்படிப்பட்டவனுடைய குடும்பத்திற்கும், உடைமைகளுக்கும், வீட்டிற்கும், அவனுக்கும் எதிராகப் பேரிடர் அவ்வப்போது உண்டாகும். நல்லவர்கள் மகிழ்ந்திருக்கும்போது அவன் அழிந்துபோவான்.

28:1-11 பன்னிரண்டு மற்றும் இருபது ஆகிய வசனங்களில் எழுப்பப்பட்டுள்ள கேள்வியைச் சுற்றியே இந்த அழகிய அதிகாரம் கட்டப்பட்டிருக்கிறது:

ஆனாலும் ஞானம் கண்டெடுக்கப்படுவது எங்கே?
புத்தி விளைகிற இடம் எது?

விலையுயர்ந்த உலோகங்களையும் அணிகலன்களில் பதிக்கப்படுகிற கற்களையும் தோண்டியெடுக்கும் பொருட்டு மனிதன் விடாமுயற்சியையும் பெரிதான திறனையும் காட்டுகிறான். இந்த அதிகாரத்தின் முதல் பகுதியில், கனிமங்களைத் தோண்டி எடுப்பதில் காணப்படுகிற மனிதனுடைய அறிவுக்கூர்மையில் ஞானத்தைக் கண்டுபிடிக்க இயலாது என்னும் செய்தி சொல்லப்படுகிறது. 13-19 வசனங்களில் மனிதனுடைய செல்வத்தால் ஞானத்தை வாங்க முடியாது என்பது கூறப்படுகிறது. 21 -28 வசனங்களில் தேவன் ஒருவரே ஞானத்தைத் தருகிற வராகக் கூறப்படுகிறார்.

பண்டைய காலத்தில் கனிமப்பொருட்களைத் தோண்டியெடுப்பதைக் குறித்துத் தெரிவிக்கப் பயன்பட்டுள்ள விவரம் மிகவும் கவர்ச்சியூட்டுவதாகக் காணப்படுகிறது. ஆனால் அதனை மொழிபெயர்ப்போருக்கு அது தொல்லையளிக்கும் வகையில் காணப்படுகிறது. 4 -ஆவது வசனம் மிகவும் கடினமானது. இந்த வசனத்தின் பொருள் வெவ்வேறு ஆங்கில மொழிபெயர்ப்புகளில் வெவ்வேறாக இருக்கிறது. திருவாளர் ஆண்டர்சன், "மொழிபெயர்த்தவர்கள்யாவரும் தங்களுடைய முன்னிலையில் ஒரே எபிரெய மொழிப்பிரதியை வைத்திருப்பார்கள் என்பது நம்புவதற்கு இயலாதது," என்கிறார்.[28]

பில்தாத் மனிதனைப் புழு என்று வருணிக்கிறான். யோபுவோ அவனைப் போலன்றி, கனிமப் பொருட்களைத் தோண்டியெடுக்கும் தொழிலில் மனிதனின் அறிவுக்கூர்மை வெளிப்பட்டுள்ளது என்று ஒப்புக்கொள்கிறான்:

> கனிமத்தைத் தோண்டி எடுப்பதில் மனிதன் அடைந்துள்ள குறிப்பிடத்தக்க வெற்றி, அவனுடைய அறிவுக்கூர்மையையும், புத்திசாலித்தனத்தையும் வெளிப்படுத்துகிறது. ஆனால், அதைத் தவிர ஞானத்தைத் தோண்டி எடுப்பதில் அவன் முழுவதும் தோற்றுப் போயிருக்கிறான்.[29]

28:12-19 ஞானத்தை அடைவதற்கான வழியைக் கண்டுபிடிப்பது அவ்வளவு எளிதன்று. அதை நிலப்பகுதியிலோ **கடலிலோ** கண்டுபிடிக்க முடியாது. அதை விலைக்கு வாங்கவும் முடியாது. அதற்குத் தகுதியான விலையை நிர்ணயிக்கவும் முடியாது. ஏனெனில் அதனுடைய **விலை முத்தையும் புஷ்பராகத்தையும்** விட உயர்ந்தது. **பசும் பொன்னினாலும்** அதனுடைய விலையை மதிப்பிட முடியாது.

28:20-28 உயிருள்ள எல்லாப் படைப்புகளின் **கண்களுக்கும் ஞானமும் புத்தியும்** மறைக்கப்பட்டுள்ளன. அவற்றைக் குறித்து **நாசமும் மரணமும்** மட்டுமே கேட்டிருக்கின்றன. இயற்கையின் அனைத்து அமைப்புகளையும் வடிவமைத்த அதே **தேவன்** ஞானத்தின் ஆதாரமாகவும் விளங்குகிறார். ஏனெனில் அதனைக் **கணக்கிட்டு ஆயத்தப்படுத்தினவர்** அவரே. அவருக்குப் **பயப்படுதல் ஞானம்; பொல்லாப்பை விட்டு விலகுவது புத்தி.**

தேவனுடைய நற்பேறுடைய நடவடிக்கைகளை எப்போதும் நம்மால் புரிந்துகொள்ள முடியாவிட்டாலும், நாம் அவரிடம் நம்மை ஒப்புவித்து வாழ வேண்டும் என்பதை இந்த அதிகாரம் குறிப்பாய்ச் சுட்டிக்காட்டுகிறது.

29:1-17 யோபு தான் செல்வ வளத்தோடும், மரியாதையோடும் வாழ்ந்த முந்தைய நாட்களைக் குறித்துப் பெருமிதத்தோடும் நாட்டத்தோடும் கூடிய விவரத்தை இப்பொழுது தருகிறான். மேலும் அவை திரும்பி வரவேண்டும் என்று ஏங்குகிறான். தேவனுடைய தயவையும் வழிநடத்துதலையும் அவன் அனுபவித்து வந்தான். அவன் பெரும் வசதியோடு வாழ்ந்து, நகரத்தில் இளைஞராலும், முதியோராலும், பிரபுக்களாலும், உயர்ந்தவர்களாலும், அவனுடைய ஈகை, நீதி, நியாயம் ஆகியவற்றின் காரணமாக மதிக்கப்பட்டு வந்தான்.

29:18-25 யோபு செல்வச் செழிப்பையும் உடலுறுதியையும் வலிமையையும் அனுபவித்து வந்தான், அவனுடைய வலிமை **கிளையின் மேல் இரவு முழுவதும் தங்கியிருந்த பனிக்கு** ஒப்பாயிருந்தது. அவனுடைய **மகிமை செழித்திருந்தது.** அவனுடைய **கையிலிருந்த வில் புதுபெலன்** பெற்றிருந்தது. ஆகவே அவன் நீண்ட ஆயுளையும் அமைதியான மரணத்தையும் **'தன் கூட்டில்'** அடைய முடியும் என்று எதிர்பார்த்தான். ஓர் உழவன் **மழைக் காலத்தை** எதிர்பார்ப்பது போல மனிதர்கள் அவனுடைய ஆலோசனைக் காகக் காத்திருந்தார்கள். அவனுடைய நகைப்புடன் கூடிய முகக்களை அவர்களுடைய நம்பிக்கையை உறுதிப்படுத்தியது. அவனுடைய தலைமைப் பண்பு அவனைத் **தலைவனாகவும்,** படைவீரர்களின் நடுவே **அரசனைப் போலவும், துக்கித்தவர்களைத் தேற்றரவு பண்ணுகிறவனைப் போலவும்** ஆக்கிற்று. இப்படிப்பட்ட மனிதனை தேவன் தண்டிப்பது ஏன் என்பதைப் புரிந்துகொள்வது கடினம்.

30:1-8 இப்பொழுது, யோபு **இளவயது மனிதர்களாலே** எள்ளி நகையாடப்படுகிறான். அவர்களுடைய தகப்பன்மார்கள் சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்டவர்கள், யோபுவின் மந்தையைக் காக்கும் **நாய்களுக்கு உதவியாக** வைப்பதற்கும் அவர்கள் தகுதியற்றவர்கள்; அவர்கள் வலுக்குன்றி, வறுமையால் தளர்ந்து போனவர்கள்; அவர்கள் பாலைவனத்தில் இருந்த புல் பூண்டுகளால் பசியாற்றிக் கொண்டவர்கள்; அவர்கள் **மனிதர்களின் நடுவிலிருந்து துரத்தப்பட்டவர்கள்;** வீடில்லாத நாடோடிகள், **தேசத்திலிருந்து துரத்தப்பட்டவர்கள்.**

30:9-15 இத்தகைய பயனற்ற மனிதர்களே இப்பொழுது யோபுவை மிகுந்த அவமரியாதைக் குட்படுத்துகிறார்கள். அவர்கள் எள்ளி நகையாடும்படி பயன்படுத்துகிற சொற்றொடர்களைக் கவனியுங்கள்: **"பாட்டும் பழமொழியும் ஆனேன்;** "அவர்கள் **என்னை அருவருக்கிறார்கள்,"** "அவர்கள் **என் முகத்துக்கு முன்பாகத் துப்புகிறார்கள்," "என் கால்களைத் தவறி விழப்பண்ணுகிறார்கள்,' "என் பாதையைக் கெடுத்து** (தடை பண்ணுகிறார்கள்)," இன்ன பிற. யோபுவின் மரியாதையும் செல்வமும் முற்றிலுமாக இல்லாமல் போயிற்று.

30:16-23 அவன் கடும் வேதனையில் அடித்துச் செல்லப்பட்டான், கடும் போராட்டத்தால் உருக்குலைந்து போனான், **தூளும் சாம்பலுமாகக்** குறைவுபட்டுப் போனான், சாவதற்கு ஆயத்தமாகிவிட்டான். அவனுடைய மன்றாட்டுகளுக்கு தேவன் பதில் தரமாட்டார், கொடூரமாக எதிர்க்

கிறார். அங்குமிங்கும் அலைக்கழிக்கிறார், அவர் அவனைக் கொல்லும் நேரம் வந்துவிட்டது.

30:24-31 அவரிடம் ஜெபம்பண்ணின மனிதன் இறந்தபிறகு, அவர் அவனைக் கல்லறையில் நிச்சயமாகக் கலங்கடிக்க மாட்டார். யோபுவோ மற்றவர்களுக்கு இரங்கினான், ஆனால் அவனிடம் இரக்கம் பாராட்டுபவர் ஒருவருமில்லை. தனிமையினாலும் புறக்கணிப்பினாலும் அவன் பாடுகளால் சூழப்பட்டவனாக அவனது நிலை கடுமையாயிற்று. அவனுடைய சரீரப் பிரகாரமான மற்றும் உணர்ச்சிபூர்வமான நிலைமை திகிலடையச் செய்தது. யோபு போன்ற நீதிமான் ஒருவன் ஏன் **மலைப்பாம்புகளுக்குச் சகோதரனும், கோட்டான்களுக்குத் தோழனும்** ஆக வேண்டும்?

31:1-12 இளம் பெண்ணை இச்சையோடு பார்க்கும் குற்றத்தைத் தான் செய்யவில்லை என்று யோபு வலியுறுத்திக் கூறுகிறான். அவ்விதப் பாவத்தை தேவன் கண்டு தண்டிக்கிறார் என்பதை அவன் அறிந்திருக்கிறான். அவன் வஞ்சகமாகச் செயல்படவில்லை; நேர்மையோடு சோதித்துப் பார்த்தால் தேவன் இது சரி என்று ஒப்புக்கொள்வார். அவன் நீதியின் வழியைவிட்டு விலகவில்லை; இல்லையெனில் அவன் தன்னுடைய அறுவடையை இழக்க நேரிடும். அவன் தன் அயலகத்தானின் மனைவியை இச்சிக்கவில்லை; அவ்வாறு அவன் செய்திருந்தால் அவனுடைய மனைவி அடுத்தவனுக்குச் சொந்தமாவாள், மேலும் அவனுடைய உடைமைகளும் வாழ்வும் அழிந்துபோகும்.

31:13-37 யோபு தன் வேலையாட்களுக்கு இரக்கம்பாராட்டி வந்தான், வறியோர்க்கும் **விதவைகளுக்கும் திக்கற்றோருக்கும்** ஈகைபுரிந்து வந்தான். அவன் பொன்னை இச்சிக்கவில்லை; **சூரியனையும் சந்திரனையும்** கண்டு **மயங்கி** மறைமுகமாகச் சிலைவணக்கத்தில் ஈடுபடவில்லை (**சூரியனையும் சந்திரனையும்** நோக்கி என் கையை முத்தம் செய்யவில்லை). அவனுடைய பகைவருக்கு எதிராகக் குரோதம் கொள்ளவில்லை, எல்லோருக்கும் விருந்தோம்பல் புரிந்து வந்தான். மறைமுகமான பாவத்திலிருந்து அவன் தன்னைக் காத்துக்கொண்டான்; மற்றும் நிலங்களை வாங்குகிறதிலும் விற்கிறதிலும் நேர்மையாக நடந்து கொண்டான். அவனுக்கு எதிரான குற்றங்களை ஒரு நூலில் எழுதினால், அதை அவன் தன் **தோளில்** சுமந்து **கிரீடமாக** அணிந்துகொள்வான்!

31:38-40 முப்பத்தோராவது அதிகாரத்தோடு யோபுவின் சொற்கள் முடிவடைகின்றன. திருவாளர் சாமுவேல் யோபுவின் முடிவுரையில் மனநிறைவு அடையவில்லை:

> எல்லாப் புகழ்ச்சிக்கும் தகுதிபடைத்தவருக்கு அதனைச் செலுத்த ஆயத்தமுடையவனாக யோபு தனது உரையை முடித்திருந்தானானால் அது மிகச்சரியாக முடிவடைந்திருக்கும். அப்போது யோபு பேசிய சொற்களின் முடிவுவரை தொடர்ந்து சென்று மகிழ்வுற்றிருப்போம்.[30]

3. எலிகூவின் குறுக்கீடு (அதி. 32-37)

அ. யோபுவின் மூன்று நண்பர்களோடு எலிகூ ஆற்றிய உரை (அதி. 32)

32:1-6 **யோபுவுக்கும்** அவனுடைய **மூன்று** நண்பர்களுக்கும் இடையே நடந்த உரையாடல் இத்துடன் முடிவடைந்தது. மேலே நாம் கண்ட முறையின்படி எண்ணுவோமானால் இப்போது சோப்பார் பேசவேண்டிய நேரமாகும். ஆனால் ஏதோவொரு காரணத்திற்காக அவன் பேசவில்லை.

யோபுவுக்கும் அவன் மீது குற்றம்சுமத்திய மூவருக்கும் இடையே நடந்த கடுமையான வாதத்தைப் பூசியனாகிய பரகெயேலின் மகன் எலிகூ என்னும் இளைஞன் கேட்டுக்கொண்டிருந்தான். பல வேத மாணாக்கர் அவனை ஓர் இடையாளாக, அதாவது கிறிஸ்துவாக உருவகப்படுத்திக் காண்கிறார்கள். யோபுவின் நண்பர்கள் அவனுடைய நிலையைக் குறித்து ஆராய்ந்து செய்த முடிவுக்கும் யெகோவாவின் தீர்வுக்கும் இடையே எலிகூ ஒரு நேர்த்தியான பாலமாக விளங்குகிறான். சுருங்கக் கூறின் அவன் மனிதருக்கும் தேவனுக்கும் இடையே ஒரு மத்தியஸ்தனாக, கர்த்தர் அந்தக் காட்சியில் வருவதற்கு ஆயத்தம் செய்யும் மாதிரியாக விளங்குகிறான்.

மற்ற விரிவுரையாளர்கள் அவன் சடிதியில் உயர்வுநிலைக்கு வந்த தற்செருக்கு நிறைந்த மனிதன் என்று கூறி, சற்று குறைவாகவே மதிப்பிடுகிறார்கள்.

அது எவ்வாறாயினும், **யோபு தேவனைப் பார்க்கிலும் தன்னைத்தான் நீதிமானாக்கின தன் நிமித்தம் எலிகூ** (*அவர் என் தேவன்* என்பது அந்தப் பெயரின் பொருள்) கடுங்சினம் அடைந்தான். யோபுவின் கேள்விகளுக்கு அவனுடைய நண்பர்கள் தகுதியான விடை கூறத் தவறியதால் அந்த மூவர் மீதும் அவன் கோபம்கொண்டான்.

தொடர்ந்து வருகின்ற வசனங்களில் முந்தின இருபத்தொன்பது அதிகாரங்களில் நடந்த வாதத்தின் சுருக்கத்தை அவன் எடுத்தியம்புகிறான்.

32:7-22 அவர்களுக்கிடையே இருந்த வயது வேறுபாட்டின் காரணமாக அவன் இதுகாறும் அமைதியாயிருந்து அவர்களுடைய சொற்களைக் கவனத்தோடு செவிகொடுத்துக் கேட்டுக்கொண்டிருந்தான். இப்பொழுதோ அவனால் தன்னை அடக்கிக்கொள்ள முடியவில்லை.

பெரியோரெல்லாம் (அதிக வயதுடையவர் - NKJV அடிக்குறிப்பு) எப்போதும் **ஞானிகளல்லர்,** அவனைப் போன்ற இளைஞனுக்கும் தேவனால் தெளிவான அறிவைத் தரமுடியும். மனநிறைவு அளிக்கத்தக்க விடையைக் கொடுக்க யோபுவின் நண்பர்களால் முடியவில்லை என்பதற்காக அவன் அவர்களைக் கடிந்துகொண்டான். அவர்கள் விடைகூறத் தவறியதன் காரணமாக, அவன் தன்னுடைய உள்ளத்திலிருந்து பேசும்படியான கட்டாயத்திற்குள்ளானான். அவன் பேசுகையில் பாரபட்சமின்றி அல்லது முகத்துதி இன்றி உள்ளதைச் சொல்லுவான்.

ஆ. யோபுவிடம் எலிகூ உரையாடுதல் [அதி. 33]

33:1-7 எலிகூ உத்தமும் உண்மையுள்ள சொற்களைப் பேசவிருந்ததால், அவற்றை மிகுந்த கவனத்துடன் யோபு கேட்கவேண்டும் என்பதற்காக, அவனை நோக்கி "தயவுசெய்து கேளும்" என்னும் தொனியில் பேசுகிறான். தனக்குக் கொடுக்கப்பட்ட வாய்ப்பைக் கொண்டு யோபு தேவனுடைய முன்னிலையில் தன்னுடைய நேர்மையை உறுதிசெய்ய முயன்றான். இப்பொழுது, யோபுவைப் போல சாவுக்கேதுவான மண்ணால் உருவாக்கப்பட்ட மனிதனாகிய எலிகூ அவனுடைய சார்பாக தேவனிடத்தில் பேசமுற்படுகிறான். யோபு விரும்பினால் தன்னுடைய வழக்கைக் கூறலாம், தெய்வீக கோபம் உண்டாகுமே என்று அவன் அஞ்சவேண்டியதில்லை.

33:8-18 யோபு தான் ஒரு குற்றமும் அறியாதவன் என்னும் பொருளில் பேசியதற்காகவும் அவனை முறையாக நடத்தவில்லை என்று குறைகூறியதற்காகவும் அவனை எலிகூ கடிந்துகொள்கிறான். மனிதனைப் பார்க்கிலும் தேவன் பெரியவராயிருக்கிறார், அவருடைய செயல்களுக்கான காரணத்தை அவர் கூறவேண்டியதில்லை. மேலும் அவர் மனிதர்களோடு இரவில் தோன்றும் கனவிலோ காட்சியிலோ தோன்றி, அவர்கள் செய்கிற தீய செயல்களைக் குறித்தும் அவர்களுடைய அகங்காரத்தைக் குறித்தும் பேசி அவர்கள் அடையவிருக்கிற கொடூரமான சாவிலிருந்து காப்பாற்றும்படி எச்சரிக்கிறதில்லை.

33:19-30 கர்த்தர் நோவு மற்றும் கொடிய நோயின் மூலமாகவும் மனிதர்களோடு பேசுகிறார்; சில நேரங்களில் சுவையான உணவும் கூட அருவருப்பாக இருக்கும், அப்பொழுதும் அவர் பேசுகிறார். ஒருவேளை ஒரு தூதன் அல்லது ஒரு இடைமனிதன் தேவனுடைய நேர்மையான வழியை விவரித்துக் கூறுவானாயின் (துன்பம் அனுபவிக்கிறவன் அதனைக் கேட்டு விசுவாசத்தோடு பதிற்செயல் செய்வானாயின்), அவன் **படுகுழியில் இறங்காதபடி ஏற்றுக் கொள்ளத்தக்க மீட்கும் பொருளின்** அடிப்படையில் தேவன் அவனை **இரட்சிப்பார்**. எலிகூ அப்பொழுது மீட்கும் பொருள் என்பதன் பொருள் என்னவென்று கூறவில்லை. ஆயினும் "எல்லோரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த" ஒருவரோடு நாம் இதனைத் தொடர்புபடுத்துவது நியாயமானதே (1 தீமோ. 2:6). ஒருவன் கர்த்தருடைய சத்தத்திற்குச் செவிகொடுப்பான் என்றால் அவன் உடல் நலத்தையும் ஆவிக்குரிய நற்பேற்றையும் பெறுவான் என்று எலிகூ கூறுகிறான். தன்னுடைய பாவத்தை எவனொருவன் அறிக்கை செய்கிறானோ அவன் ஆவிக்குரிய மற்றும் அல்லது சரீர மரணத்திலிருந்து மீட்கப்படுவான்.

33:31-33 யோபு பேசவேண்டுமானால் அவன் பேசலாம். இல்லையெனில் அவன் தொடர்ந்து அமைதியோடிருந்து, எலிகூ கற்பிக்கிற ஞானத்தைக் கவனத்துடன் கேட்டு அதனைக் கற்கலாம்.

இ. யோபுவின் மூன்று நண்பர்களிடம் எலிகூ ஆற்றிய இரண்டாவது உரை [அதி. 34]

34:1-15 அடுத்ததாக, உணவைச் சுவைத்துப் பார்ப்பது போல அந்த மூன்று நண்பர்களும் **எலிகூவின்** சொற்களைச் சோதித்துப் பார்க்கும்படி அவன் கேட்டுக்கொண்டான். யோபுவைப் போன்ற நீதிமான் ஒருவன் பாடு அனுபவிக்கும்படி தேவன் நடத்துவது நியாயமன்று என்றும், தேவனைப் பிரியப்படுத்தும்படி பயபக்தியோடு நடந்துகொள்வதில் எவ்விதப் பயனுமில்லை என்றும் யோபு கூறியதை எலிகூ எடுத்துரைத்தான். அதன்பிறகு, தேவன் நீதியற்ற முறையில் நடந்துகொள்ளக் கூடிய குற்றத்தை ஒருபோதும் செய்யமாட்டார் என்று அவன் வலியுறுத்திக் கூறுகிறான். அவர் தம்முடைய நிலையிலிருந்து மாறுவார் எனில்

அவருடைய படைப்புகள் யாவும் அழிந்து போகும்.

34:16-30 ஓர் அரசனை அல்லது பிரபுவைப் பொல்லாதவன் அல்லது அக்கிரமக்காரன் என்று சொல்லுவது சரியற்றதாக இருக்குமென்றால், எல்லோரையும் வேறுபாடின்றி நடத்துகிற இப் பிரபஞ்சத்தின் அரசராகிய தேவனைக் குற்றப் படுத்துவது நினைத்துப் பார்க்கவும் கூடாதது! தேவனிடத்தில் ஏதொரு பொல்லாப்பும் மறைந் திருக்கவில்லை. அவர் தீமையைத் தகர்த்து ஒடுக்கப்பட்டவர்களை விடுவிக்கிறார்.

34:31-37 அடுத்ததாக, யோபு தன் பாவத்தை அறிக்கைசெய்து அதை விட்டொழிக்க வேண்டு மென்றும், தான் விரும்புகிறதை தேவன் செய்ய வேண்டும் என்று வற்புறுத்திப் பேசுவதை நிறுத்த வேண்டும் என்றும் எலிகூ ஆலோசனை கூறுவது வெளிப்படையாகத் தெரிகிறது. யோபு **அறிவில் லாமல்** பேசினான், பொல்லாதவற்றைப் பேசி னான், **மீறுதலை** வெளிப்படுத்தினான், தேவனுக்கு எதிராக அளவிற்கடங்கா சொற்களைப் பேசிப் **பாவம்** செய்தான்.

ஈ. யோபுவிடம் எலிகூ ஆற்றிய இரண்டாம் உரை (அதி. 35–37)

35:1-8 யோபு தேவனைக் காட்டிலும் கூடுத லாக நீதிமானாகத் தான் விளங்குவதாகக் கூறிய தற்காகவும், அவ்வாறு நேர்மையோடு நடந்து கொண்டதால் ஏதொரு பயனுமில்லை என்று கூறியதற்காகவும் எலிகூ அவனைக் கடிந்து கொண்டான். மனிதனுடைய பாவம் எல்லாம் வல்ல தேவனுக்கு ஊறுவிளைவிப்பதில்லை, அவனுடைய நீதி அவருக்கு ஏதொரு பயனும் தருவதுமில்லை.

35:9-16 தற்செருக்குடன் ஒடுக்குகிறவர்கள் தொல்லை ஏற்படுங்கால் கதறி அழுகிறார்கள், ஆனால் விலங்குகளையும் பறவைகளையும் காட்டிலும் கூடுதலான ஞானத்தை தேவன் அவர் களுக்குத் தந்ததை ஒப்புக்கொள்கிறதில்லை; ஆகவே அவர்களுடைய மன்றாட்டுகள் கேட்கப் படுவதில்லை. நாம் தேவனைக் காணாவிட் டாலும் அவர் நம்மைக் காண்கிறார். அவரை நாம் நம்ப வேண்டும், அகந்தையுடன் நடந்துகொள் ளக் கூடாது.

36:1-12 எலிகூவின் நான்காவது உரையில், தேவனுடைய **நியாயத்தை** நிலைநிறுத்தவும், பாடுகளின் காரணத்தை விளக்கிக் கூறவும் ஆழமான உண்மைகளை எடுத்தியம்பப் போவ தாகவும் அறிவிக்கிறான். பொல்லாதவர்களோ டும், ஒடுக்கப்படுகிறவர்களோடும், **நீதிமான் களோடும்** கர்த்தர் ஈடுபடுகிறபோது கர்த்தர் முதன்மையான முறையில் தமது நேர்மையை வெளிப்படுத்துகிறார் (வச. 7-9). அவர்கள் **சிங்கா சனத்தில்** அமர்ந்திருக்கிற அரசர்களானாலும், **விலங்குகள் போடப்பட்ட** கைதிகளானாலும் அவர்களிடத்தில் அவர் நேர்மையாகவே செயல் புரிகிறார். **நீதிமான்கள் அக்கிரமங்கள்** செய்து விலகிப் போயிருந்தால் அவர்களுடைய **அக்கிர மங்களை** அவர்களுக்கு உணர்த்தி, அவற்றி லிருந்து அவர்களைத் திரும்பச் செய்ய முயலு கிறார். அவர்கள் **கீழ்ப்படிந்து** அவரைத் தொழுது கொள்வார்கள் எனில், அவர்களை அவர் வளம் பெறச் செய்வார். அவர்கள் கீழ்ப்படியாவிடில், அவர்கள் தேவனைப் பற்றிய **ஞானத்தை அடை யாமல் பட்டயத்திற்கு** இரையாகும்படி செய் கிறார்.

36:13-21 யோபு தன்னை ஒப்புவித்தவனாக, தவறுக்காக நைவுறுகிறவனாக இருந்திருப்பா னென்றால், கர்த்தர்தாமே அவனுடைய நெருக் கத்தினின்று அவனை விடுதலையாக்கியிருப்பார். ஆனால் அவன் தன்னுடைய சுயநீதியில் விடாப் பிடியாயிருந்த காரணத்தால், **மாயமுள்ள இரு தயத்தோர்** அடையும் தண்டனையை அனுப விக்க வேண்டியதாயிற்று. யோபு தன்னுடைய நிலையில் தொடர்ந்து இருப்பானென்றால் **மீட் கும்பொருளை மிகுதியாய்க் கொடுத்தாலும்** அவனுடைய அழிவிலிருந்து விடுதலை பெறமாட் டான் என்று எலிகூ எச்சரிக்கிறான். (எல்லாக் காலத்துப் பாவிகளுக்கும் 18 -ஆவது வசனம் தேவையான ஓர் எச்சரிப்பாக விளங்குகிறது.)

36:22-33 எல்லா ஞானமும் உடையவராக தேவன் விளங்குவதால், யோபு அவரை மகிமைப் படுத்த வேண்டும். மழை, மேகம், இடிமுழக்கம், மின்னல் ஆகியவற்றை அவர் தமது கட்டுப்பாட் டுக்குள் வைத்திருப்பதால் அவருடைய மேன்மை வெளிப்படுகிறது. அவருடைய அருள்பாலிப்பின் அளவை நம்மால் முழுவதுமாகப் புரிந்துகொள்ள முடியாது. அனால் அவை அவருடைய கிரு பையை முன்னறிவிக்கின்றன. வெகுகாலத்திற்கு முன் திருவாளர் ஆண்ட்ரியா இவ்வாறு எழுதி னார்:

> ஒருபுறம் சில நிலப்பகுதிகளில் தண்டனையை யும் அழிவையும் ஏற்படுத்தும்படி அனுப்பப்படு கிற புயல், அதே நேரத்தில் வேறொரு பகுதியில் மிகுதியான விளைச்சலைக் கொடுத்து நன் மையை அளவிற்கடங்காத அளவு உண்டு

பண்ணுகிறது. இவ்வாறாக எந்தக்காலத்திலும் இல்லாத அளவு தேவனுடைய கடுமையான நியாயத்தீர்ப்பு என்று கருதப்படுகிற நிகழ்வு களும்கூட அதே நேரங்களில் தெய்வீகக் கிருபை பொங்கி வழிவதற்கு ஆதாரங்களாக விளங்குகின்றன.[31]

37:1-13 தேவனுடைய ஞானம், வல்லமை, மாபெரும் கம்பீரம், பொன்னொளிப் பிரகாசம் ஆகிய வற்றை வெளிப்படுத்தும் பல்வேறு வகையான இயற்கைச் சூழ்நிலைகளைக் குறித்து எலிகூ தொடர்ந்து உரையாடுகிறான். இடிமுழக்கத் தோடு கூடிய **பெருமழையையும், பனியையும்**, மிதமான **மழையையும், குளிரையும், வடக்கிலி ருந்து** வீசக்கூடிய **சூறாவளியையும் நீர்த்துளி கள்** நிறைந்ததும் **மின்னல்களினால்** ஒளிதரக் கூடிய மேகங்களையும் குறித்து அவன் பேசுகிற உரை இலக்கியச் சிறப்பு வாய்ந்ததாகத் திகழ் கிறது.

37:14-23 "யோபுவே, இதற்குச் செவிகொடும்; தரித்து நின்று தேவனுடைய ஆச்சரியமான கிரியைகளைத் தியானித்துப் பாரும்" என்று எலிகூ நேரடியான வேண்டுகோளாடு முடிக் கிறான். தொடர்ந்து அவன் யோபுவின் இயற்கை யைக் குறித்த அறிவு எத்தகையது என்று அறை கூவல் விடுக்கிறான்: எவ்வாறு **மேகங்கள்** வானத் தில் **தொங்கும்படி** வைக்கப்படுகின்றன, **தென் றல் வீசும்போது** அவனுடைய உடல் எவ்வாறு சூடாகிறது? அடுத்து வருகிற முக்கியமான பகுதி யில் படைப்பாளரே நேரடியாக இதைக்காட்டிலும் கூடுதலாக இயற்கையைக் குறித்த கேள்விகளை எழுப்பிப் பதில் கூறும்படி யோபுவை அழைக் கிறார். நம்முடைய அற்பமான அறிவுக்கு அவரு டைய **பயங்கரமான மகத்துவம்** அப்பாற்பட்டது. கர்த்தருக்குப் பயந்து அவருடைய ஒழுங்குக்குக் கீழ்ப்படிவதே சாலச் சிறந்தது. அவர் நீதியாய் நடக்கவில்லை என்று யோபுவைப் போலக் குற்றம் சுமத்துவது சரியன்று.

37:24 எல்லாச் செய்திகளையும் உள்ளடக் கிய வண்ணம் யோபுவுக்குப் பொருத்தமாக எலிகூ கூறிய கருத்துச் சுருக்கமாக 24 -ஆவது வசனம் விளங்குகிறது. அதனுடைய முதல் வரி எளிதில் புரிந்துகொள்ளக்கூடியது, இரண்டாவது வரி பெரும்பாலான மொழிபெயர்ப்புகளில் புரிந்து கொள்வதற்குக் கடினமாக இருக்கிறது. திரு வாளர் ∴பிரான்சிஸ் ஆண்டர்சன் இரண்டாவது வரியில் உள்ள எதிர்மறைச் சொல்லை உறுதிப் படுத்தும் சொல்லாக மாற்றி மொழிபெயர்த்துத் தந்திருக்கிறார்:

ஆகையால் மனிதர் அவருக்குப் பயப்பட வேண்டும்;

ஞான இருதயமுள்ளவர்கள் நிச்சயமாக அவ ருக்குப் பயப்படுவார்கள்![32]

4. கர்த்தருடைய வெளிப்பாடு (38:1-42:6)

அ. கர்த்தர் யோபுவுக்கு விடுத்த முதலாவது அறைகூவல் (38:1-40:2)

1. முன்னுரை (38:1-3)

பெருங்காற்றிலிருந்து கர்த்தர்தாமே நேரடி யாக இப்பொழுது விடை கூறுகிறார். பழைய ஏற்பாட்டு நூல்களில் தாம் விடைகூறுவதற்குப் பெருங்காற்றை அவர் அவ்வப்போது பயன்படுத் தாமலில்லை. முந்தின அதிகாரங்களில் சச்சரவு நிறைந்த சொற்கள் காணப்படும் வேளையில், தேவனுடைய சொற்கள் வரவேற்கத்தக்க விதத் தில் அமைந்திருக்கின்றன. யோபு, **அறிவில்லாத வார்த்தைகளால் ஆலோசனையை இருள் மயமாக்கிக்கொண்டிருந்தான்.** அதாவது, தன்னோடு தேவன் நடந்துகொண்ட முறையில் நீதியில்லை என்று கூறி அறிவற்ற வகையில் யோபு கேள்விகளை எழுப்பினான். இப்பொழுது கர்த்தர்தாமே கேள்விகளைத் தொடுப்பார், யோபு விடை கூற ஆயத்தப்பட வேண்டும்!

தொடர்ந்து வருகிற கேள்வியில், துன்பங்கள் ஏற்படுவதன் இரகசியத்தைக் குறித்த விரிவான விளக்கத்தை தேவன் தரவில்லை. அதற்கு மாறாக, அவர் தமது மேதகைமை, புகழ்ச்சி, ஞானம், வல்லமை ஆகியவை அண்டசரா சரத்தில் எவ்விதமாகக் காணப்படுகின்றன என்று வரிசைப்படுத்திக் கூறுகிறார். "எனது வழிகளைக் குறித்து நீ குறைகூறும் முன், நான் இந்தப் படைப்பை நடத்துகிற வண்ணம் உன்னால் நடத்த முடியுமா என்று எண்ணிப்பார்" என்று அவர் கூறுவதாகக் காணப்படுகிறது. யோபு வலிமை யற்றவன், ஒன்றும் அறியாதவன், முக்கிய மற்ற வன், குறைவுடையவன், செயல்திறமையற்றவன், வரையறைக்குட்பட்டவன் என்னும் உண்மை களை அது யோபுவுக்கு வெளிப்படுத்திக் காட்டு வது உறுதி என்பதில் ஐயமில்லை.

இங்கே கர்த்தருடைய சத்தம் தொனிப்பதைத் திருவாளர் ரிடவுட் குறித்துக் காட்டுகிறார்:

அந்த நண்பர்களுடைய உரையாடல்களில் காணப்பட்ட வண்ணம், இயல்பான மனதில்

> கண் மூடியபடி துழாவித் தேடிக் கண்டுபிடித்த கருத்துகளை நாம் இனிமேல் கேட்க வேண்டிய தில்லை; அல்லது யோபுவின் அடிபட்ட விசுவாசத்தில் அழுகைக் குமுறலையும் நாம் கேட்க வேண்டியதில்லை; அல்லது எலிகூவின் ஆழ்ந்த தெளிவான சொற்களையும் நாம் கேட்க வேண்டியதில்லை. நாம் நம்மோடு பேசுகிற யெகோவாவின் முன்னிலையில் தான் இருக்கிறோம்.[33]

கர்த்தர் எழுப்புகிற கேள்விகளைக் கேட்கின்ற வேளையில், அவை உருவகப்படுத்திப் பேசப்பட்டவை என்றும், அவற்றிற்கு ஆழமான ஆவிக்குரிய பொருள் உள்ளது என்றும் நாம் மீண்டும் மீண்டும் ஐயத்துடன் எண்ணிப்பார்க்கக் கூடும். அந்தக் கேள்விகள் எழுப்பப்பட்டுள்ள வரிசை முறையிலும் கூட ஏதோ ஒரு பொருள் இருக்க வேண்டும் என்றும் நாம் கருதக்கூடும். அதே வேளையில் நாம் மங்கிய பார்வையோடு கண்ணாடியின் ஊடாகக் காண்கிறோம்.

தேவன் எழுப்புகிற பல கேள்விகளுக்கு, வளர்ச்சி அடைந்த அறிவியலின் மூலமாக எனக்குப் பதில் தெரியும், அதற்கு நன்றி என்று சிலர் பெருமையோடு கூறலாம். அதற்கு எதிராகத் திருவாளர் பாரன் அலெக்ஸாண்டர் ஹம்போல்ட் விடைதருகிறார்:

> யோபுவால் எதற்கு விடை கூற முடியவில்லையோ, அக்கேள்விகளுக்கு அறிவியல் மனிதர்களால் இன்னும் விடை கூற முடியவில்லை. இவை அவர்களை முற்றிலும் குழப்பமடையச் செய்து விடுகின்றன; ஏனெனில், அறிவியல் அறிஞர்கள் அறிவுக்கூர்மை படைத்தவர்களாக இருந்தபோதிலும் மூல ஆதார காரணங்களை அறியாமல் திகைத்து நிற்கிறார்கள், இரண்டாம் நிலையில் நடைபெறுகிற நிகழ்வுகளுக்கே அவர்கள் விளக்கம் அளிக்கிறார்கள். மிகப்பெரிய காரணத்தை அவர்களால் ஒருபோதும் கணக்கிட்டு முடிவு செய்ய முடியாது, அவர்கள் அந்தப் பெரிய காரணத்தை அறிய விரும்புகிறதில்லை.[34]

2. வியத்தகு உயிரற்ற படைப்புகளின் அடிப்படையிலான அறைகூவல் (38:4-38)

38:4-7 கர்த்தர் பூமியின் அஸ்திபாரத்தை இட்டபோது, அதனுடைய அளவுகள், எல்லைகள், ஆதாரங்கள் (அந்தரத்தில் அது தொங்கவிடப்பட்டிருப்பது உண்மை என்பதில் ஐயமில்லை) குறிக்கப்பட்ட விதம், அதனால் தேவபுத்திரரிடத்தில் காணப்பட்ட கொண்டாட்டம் ஆகியவற்றை மிகச்சிறந்த கவிதை நடையில் கர்த்தர் குறிப்பிடுகிறார். “இவையாவும் உண்டானபோது **நீ எங்கிருந்தாய்?**” என்று கர்த்தர் தொடர்ந்து கேட்கிறார்.

38:8-11 விண்மண்டலம் பற்றியும், நில இயல் பற்றியும் பின்னர் பெருங்கடல் பற்றியும் ஒவ்வொன்றாக எடுத்துரைக்கும் கர்த்தர் எவ்வாறு கடல்களின் கரைகளைத் தடையாக அமைத்து, நில அரிப்பு ஏற்படாத வண்ணம் நிறுத்துகிறார் என்பதையும், அந்த நீர் நிலைகளுக்கு எவ்வாறு குழந்தைக்கு உடுத்துவிப்பதுபோல **மேகங்களாலும் கனமான இருளினாலும்** உடுத்துவிக்கிறார் என்பதையும் விவரிக்கிறார்.

38:12-18 அடுத்ததாக, அவர் எவ்விதமாக **விடியற்காலையைத்** தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறார் என்பதைக் கூறுகிறார் - அருணோதயத்தின் ஒளிக்கதிர்கள் வானத்தையும், அவை செல்லுகிற இடங்கள் எல்லாவற்றையும் வெளிச்சமாக்கி, இருளில் தீய செயல்கள் புரிகிற பொல்லாதவர்களின் முகத்திரையைக் கிழித்தெறிகிறார், அது அவர் உதறித் தள்ளுவது போல இருக்கிறது. மேலும் அது பூமியின் மேற்பகுதியின் தோற்ற அமைப்பை வெளிப்படுத்துகிறது. அது முத்திரையிடப்பட்ட களிமண்போல காட்சியளித்து, அதனுடைய இயற்கைக் காட்சியின் வண்ணங்கள் அழகிய மேலாடை போல மிளிருகின்றன. **துன்மார்க்கரின் ‘ஒளியாகிய”** இருள் அவர்களால் விரும்பப்படுகிறது, அது அவர்களை **விட்டு எடுக்கப்பட்டு** அவர்களுடைய பொல்லாத திட்டங்கள் முறியடிக்கப்படும். பெருங்கடலின் ஆழம், **மரணத்தின்** ஆளுகை, **பூமியின் அகலம்** என்னவென்று கூறும்படி அவர் யோபுவுக்கு அறைகூவல் விடுக்கிறார்.

38:19-24 ஒளியின் தொடக்கத்தையும் இயல்பையும் குறித்து இப்பொழுது தேவன் யோபுவை நோக்கிக் கேள்வி எழுப்புகிறார். சூரியன் என்பது சரியான விடையன்று, ஏனெனில் சூரியன் அதனுடைய இடத்தில் வைக்கப்படும் முன்னே (ஆதி. 1:16) வெளிச்சம் உண்டாயிருந்தது (ஆதி. 1:3). இதற்குரிய பதிலை அறியும்படி யோபு வயது முதிர்ந்தவனா? **உறைந்த பனி** மற்றும் **கல்மழை** ஆகியவை பற்றி அவனுக்கு என்ன தெரியும்? ஆபத்துக் காலத்திலும் போர்க்காலத்திலும் பயன்படும்படி அவர் அவற்றை வைத்திருக்கிறார்.

ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து தோன்றுவதாகக் காணப்படும் **வெளிச்சமும், கீழ்க்காற்றும் பூமியின்** மேற்பரப்பு முழுவதும் பரவுவது எப்படி?

38:25-30 மழை சொரிவது, இடிமுழக்கம் ஆகியவை பற்றியும், பாலைவனத்தில் பெய்யும் மழை, அதன் காரணமாகச் செழிப்பான பயிர் வகைகள் வளருதல் ஆகியவை பற்றியும், மழை, பனித்துளிகள், உறைந்த பனிக்கட்டிகள் ஆகியவற்றின் ஆதாரம் என்னவென்பது பற்றியும் யோபு பதிலுரைக்க வேண்டும் என்று அடுத்ததாக வானிலை வகுப்பில் கேள்விகள் எழுப்பப்பட்டன. நீர் எவ்வித மாக உறைகிறது, கடலின் ஆழத்தில் அது எவ்வாறு கல்லுருவம் கொண்டதாகக் காணப்படுகிறது என்னும் கேள்விகளும் எழுப்பப்படுகின்றன.

38:31-33 மனிதனின் முக்கியமற்ற தன்மையை வெளிப்படுத்திக்காட்ட வானகோளங்களின் ஆய்வியல் போன்று எந்த அறிவியலும் திட்டமிட்டு செயல்படவில்லை. ஆகவே விண்மீன்களையும் விண்கோள்களையும் கட்டுப்படுத்த முடியுமா அல்லது அதனதன் பாதையிலே ஒழுங்காக நடத்தமுடியுமா அல்லது **பூமியின் மேல்** அவற்றின் தாக்கத்தைக் கணக்கிட முடியுமா என்று தேவன் யோபுவின் ஆற்றலைக் குறித்து கேள்வி எழுப்புகிறார்.

அறிவியல் மூலமாக இயற்கையின் மீது தனக்குப் பெருமளவு அதிகாரம் இருப்பதாகத் தற்கால மனிதன் கூறுவதைக் குறித்து 31 -ஆவது வசனத்தை (KJV மொழிபெயர்ப்பு) அடிப்படையாகக் கொண்டு திருவாளர் ஸ்பர்ஜன் சரியான விளக்கத்தைத் தருகிறார்.

> "அறுமீன் நட்சத்திரத்தின் சுகிர்த சம்பந்தத்தை நீ இணைக்கக் கூடுமோ?
>
> அல்லது மிருகசீரிஷத்தின் கட்டுகளை அவிழ்ப்பாயோ?" – யோபு 38:31
>
> நம்முடைய ஆற்றல்களை நாம் தற்செருக்குடன் கூறவிழைவோமானால், நாம் எவ்வளவு அற்பமானவர்கள் என்பதை இயற்கையின் பேராற்றல் உடனடியாக வெளிப்படுத்திக் காட்டும். பளிச்சிட்டு ஒளி வீசும் நட்சத்திரங்களிலேயே மிகச்சிறியதாக இருப்பதையும் கூட நம்மால் அசைக்க முடியாது. அல்லது காலையில் எழுகிற ஒளிக்கதிர்களில் ஒன்றைப் போல மன நிறைவு அளிக்கவும் முடியாது. நாம் நமது வலிமையைக் குறித்துப் பேசுகிறோம், ஆனால் வானங்கள் நம்மைப் பார்த்து நகைக்கின்றன. இளவேனிற் காலத்தில் அறுமீன் மகிழ்வுடன் ஒளிவீசும்போது, அதன் தாக்கத்தை நம்மால் தடைசெய்ய முடியாது. மேலும் மிருகசீரிஷம் உயர வானத்தில் ஆளுகை செய்கிறபோது, வருஷமானது குளிர்காலத்துச் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கும், நம்மால் பனிக்கட்டிகளால் ஆன கட்டை அவிழ்க்க முடியாது. தெய்வீக நியமனத்தின் அடிப்படையில் பருவகாலச் சுழற்சி நடைபெறுகிறது, மனிதர்களின் அனைத்துச் சந்ததியும் ஒன்றுகூடினாலும் ஏதொரு மாற்றத்தையும் உண்டுபண்ண முடியாது. கர்த்தாவே மனிதன் எம்மாத்திரம்?[35]

38:34-38 தேவனுடைய ஞானத்தையும் வல்லமையையும் எதிர்த்துக் கேள்வி கேட்கிற எவனும், மேகங்களை நோக்கிச் சத்தமிட்டு மழையை பெய்யச் செய்ய வேண்டும், மேலும் மின்னல் உண்டாகும்படி அது கீழ்ப்படியும்படி கட்டளையிட வேண்டும், இதுவே ஐயத்தை நீக்கக்கூடியது. உள்ளம் எவ்வாறு வேலை செய்கிறது என்பதை யோபு தேவனிடம் விளக்கிக் கூறமுடியுமா? இந்தச் செயல்களில் மனிதன் எவ்வாறு **ஞானத்தையும் புத்தியையும்** பெறுகிறான்?[36] மேகங்களை எண்ணிப் பார்க்கத்தக்க ஞானம் ஒருவனுக்கும் இல்லை, மேகங்கள் உருவாகக் காரணமாக இருக்கும் நீர்த்துளிகளைக் குறித்து ஏதேனும் சொல்ல முடியுமா? மண்ணானது பாளமாகவும் மண்கட்டிகளாகவும் ஒட்டிக்கொண்டிருக்கும் வறண்ட நிலத்தில் மழை எப்பொழுது பொழியும் என்று ஒருவராலும் சொல்ல முடியாது.

3. வியத்தகு உயிருள்ள படைப்புகளின் அடிப்படையிலான அறைகூவல் (38:39-40:2)

38:39-41 இப்பொழுது உயிரற்ற படைப்புகளிலிருந்து உயிருள்ள படைப்புகளை நோக்கி தேவன் செல்லுகிறார். தொடர்ந்து கேள்விகளை எழுப்பி, தாம் மக்களுக்கு நன்மையை வழங்குவதை யோபுவுக்கு அவர் நினைவுபடுத்துகிறார் - **கெபியில் பதிவிருக்கிற** விலங்குகளின் அரசனாகிய **சிங்கம்** முதல் கவர்ச்சியற்ற **காக்கை** மற்றும் அதனுடைய **குஞ்சுகள்** வரை எல்லாவற்றிற்கும் தம் கையைத் திறந்து அவற்றின் பசியை அவர் எவ்வாறு தீர்க்கிறார்.

39:1-8 வரையாடுகள் மற்றும் **மான்கள்** ஆகிய விலங்குகள் **கருவுற்றிருக்கும்** காலத்தையும், அவை குட்டிபோடும் தன்மையையும், அவற்றின் உள்ளுணர்வுகளையும் தேவனைத் தவிர வேறு ஒருவரும் அறிய மாட்டார்கள். **காட்**

டுக்கழுதை கட்டப்படுவதையும், நகர வாழ்க்கையையும், உழைப்பையும் அலட்சியம் பண்ணி, எல்லாவிதப் **பச்சைப் பூண்டுகளைத் தேடி**, தன் விருப்பம் போல பாலைவனத்தில் அலைந்து திரிகிறது.

39:9-18 அதுபோலவே **காண்டாமிருகம்** உழுவதையும், பொருட்களைச் சுமப்பதையும் விரும்புவதில்லை. **தீக்குருவிகளையும்** அவற்றின் விசித்திரமான **செட்டைகளையும்** பற்றி என்ன சொல்லுவது? அது சில நேரங்களில் முட்டாள்தனமாக நடந்துகொள்கிறது. அது ஆபத்து உண்டாகக் கூடிய இடங்களில் முட்டையிட்டு, **குஞ்சுகளிடம் கடினமாக** நடந்துகொள்கிறது. ஆனால் ஓட்டத்தில் அது **குதிரையையும்** அதை ஓட்டுபவனையும் தோற்கடித்துவிடும்!

39:19-25 அடுத்ததாக போர்க்**குதிரைக்கு** வீரியத்தையும் **அதன் தொண்டையில் குமுறலையும்** யோபுவா கொடுத்தான் என்று தேவன் கேட்கிறார். அது **எக்காள தொனியையும், மின்னுகிற ஈட்டியையும் கேடகத்தையும்** பொருட்படுத்தாமல் வெகுதொலைவானாலும் **கலங்காமல் கர்வமும் மூர்க்கமும் கொண்டு** போர்க்களத்தை நோக்கி கம்பீரமாகப் **பாய்ந்து** செல்லும்.

39:26-30 ராஜாளி தெற்கு நோக்கி இடம்பெயரும்படி யோபு அதற்கு ஞானத்தைக் கற்றுக் கொடுத்தானா? கழுகு உயரப் பறக்கிறதற்கும், கன்மலையின் சிகரத்தில் அது தன் கூட்டைக் கட்டுவதற்கும், அங்கிருந்து இரையைக் கண்டு பிடிக்கவும், அதன் குஞ்சுகள் இரையைக் கண்டு பிடிக்கவும் அவனா கற்றுக்கொடுத்தான்.

40:1,2 சர்வ வல்லவரிடம் குற்றங்காணும்படி யோபு பொருத்தமற்றவகையில் துடுக்கோடு அடுக்குமொழியில் பேசியதற்காகக் கர்த்தர் அவனைக் கடிந்துகொண்டார். அவன் அவ்வளவு ஞானத்தோடும் ஆற்றலோடும் இருந்திருப்பான் என்றால் இப்பொழுது தொடுக்கப்பட்ட கேள்விகள் அனைத்திற்கும் அவன் விடை கூற வேண்டும்!

ஆ. யோபு விடை கூறுதல் (40:3-5)

படைக்கப்பட்ட இயற்கையைப் பற்றிய ஒரு சிறிதும் அறிவற்றவனான **யோபு, கர்த்தர்** சரியாக நடத்தவில்லை என்பது போலக் குறை கூறவும் அவரைப் **படிப்பிக்கவும்** தகுதிபெற்றிருக்கிறானா என்று அவர் கடிந்துகொள்கிறார். இதனைக் கேட்ட யோபு தனக்குரிய சரியான இடத்தை எடுத்துக்கொண்டவனாக, "இதோ, நான் நீசன்; நான் உமக்கு என்ன மறு உத்தரவு சொல்லுவேன்; என் கையால் என் வாயைப் பொத்திக் கொள்ளுகிறேன்" என்கிறான். கர்த்தருடைய எல்லைக்குட்படா பரந்த அறிவினால் மூழ்கடிக்கப்பட்டவனாக யோபு மேலும் எதையும் பேசக்கூடாது என்று முடிவு செய்கிறான்.

இ. கர்த்தர் யோபுவுக்கு விடுத்த இரண்டாவது அறைகூவல் (40:6-41:34)

1. ஓர் ஆண்மகனைப் போலப் பதில்கூறும்படி யோபுவுக்கு விடுக்கப்பட்ட அறைகூவல் (40:6-14)

யோபுவின் பதிலில் மனந்திரும்புதல் இல்லாத காரணத்தால், **கர்த்தர் பெருங்காற்றிலிருந்து** இடித்துரைப்பதைத் தொடருகிறார். ஓர் ஆண் மகனைப் போலப் பேசும்படி அவர் அவனுக்கு அறைகூவல் விடுக்கிறார். தன்னை நீதிமான் என்று நியாயப்படுத்தும் பொருட்டு அவர் மீது குற்றஞ்சுமத்தி தேவன் நீதியற்றவர் என்று சொன்னவன் அவன் தானே. ஆகவே அவன் இப்பொழுது **இடிமுழக்கத்திலிருந்து** பேசி, தனது தெய்வீகத் தன்மையை வெளிப்படுத்தட்டும். அவன் அரியணையில் அமரட்டும், **மகத்துவத்தாலும் மகிமையினாலும், கனத்தினாலும்** தன்னை **அலங்கரித்துக்**கொள்ளட்டும். அவன் குற்றவாளிகள் மேல் தன் கோபத்தை ஊற்றி, **பெருமையுள்ளவர்களைத்** தாழ்த்தட்டும். இவை எல்லாவற்றையும் அவன் செய்வானென்றால், அவன் தன்னைத் தான் மீட்டுக்கொள்ள வலிமை படைத்தவன் என்று கர்த்தர் ஒப்புக்கொள்வார்.

2. பிகெமோத்தைக் கவனித்துப் பார்க்கும்படி யோபுவுக்கு அறைகூவல் விடுக்கப்படுதல் (40:15-24)

அடுத்ததாக, யோபுவிடம் தாம் உண்டாக்கின **பிகெமோத்தைக்** கவனித்துப் பார்க்கும்படி கர்த்தர் அறைகூவல் விடுக்கிறார். பிகெமோத்தும் லிவியதானும் கற்பனை உயிரினங்கள் என்பதைப் பண்டைய காலத்தவர் நன்கு அறிவார்கள் என்ற சில விரிவுரையாளர்களுடைய கருத்தை இந்த உண்மை மறுத்துரைக்கிறது. கற்பனை உயிரினங்கள் உண்மையில் இல்லாதவை, அவற்றைப் படைப்புகள்போல உண்மையானவை என்று கருத முடியுமா? ஆகவே இவை உண்மையான உயிரினங்களே ஆகும்.

கால்நடை என்னும் பொருள் கொண்ட பிகெமா (Behemah) என்னும் பொதுவான எபிரெயச் சொல்லின் பன்மைச் சொல்லே பிகெமோத் என்பதாகும். திருவாளர் மெரடித் க்ளின் விளக்கம் தருகிறார்.

பிகெமோத் என்னும் பெயர், பன்மையில் வலியுறுத்திச் சொல்லப்படும்போது "மிகச் சிறப்பு வாய்ந்த மிருகம்" என்னும் பொருளைத் தரு கிறது. தேவனுடைய கிரியைகளில் பிரதான மானது என்பது போன்ற ஒரு பட்டப்பெயராக இது விளங்குகிறது (வச. 19). இது போலவே லிவிய தானைக் குறித்தும் மிகவுயர்ந்த செய்திகள் கூறப்பட்டுள்ளன (41:33,34).[37]

தேவன் தம்முடைய வழிகளில் பிரதானமான தாகப் பிகெமோத்தை அறிமுகப்படுத்துகிறார். அதாவது, விலங்குகளின் அரசில் அதுவே முதல் தரமான காட்சிப் பொருள். நாம்அதனை மறுப்புக் கிடமற்றபடி அடையாளம் காட்டமுடியாவிட் டாலும் அது புல்பூண்டுகளை உண்டு வாழ்ந்த தும், நீரிலும் நிலத்திலும் வாழக்கூடிய உடல மைப்புக் கொண்டதும், மிக அதிகமான வலிமை படைத்ததுமான விலங்கு என்பது நிச்சயம். அது சதுப்பு நிலத்தில் நிழலுக்குக் கீழே ஓய்வு எடுக்கக் கூடியது, அதனை எளிதாக அடக்கமுடியாது. இந்த முரட்டு மிருகத்தை அடக்க முடியாத யோபு எவ்வாறு இவ்வுலகினைக் கட்டுப்படுத்துவான் என்பதே இங்கு கற்பிக்கப்படும் பாடம்.

சில நேரங்களில் பிகெமோத் நீர்யானையே[38] என்று சொல்லப்படுகிறது. லூயிஸ் செகாண்ட் என்னும் பிரெஞ்சு மொழித் திருமறை உட்பட சில மொழிபெயர்ப்புகளில் நீர்யானை என்னும் பெயரே இப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் நமது கற்பனையை எந்த அளவிற்கு விரித்துப் பார்த்தாலும், நீர் யானையை "தேவனு டைய கிரியைகளில் பிரதானமானது" என்று சொல்ல முடியாது. ஒருவேளை யானை அல்லது முன்னர் இருந்து இப்பொழுது இல்லாமற்போன மிகப்பெரிய ஒரு விலங்கு இந்தப் பட்டப்பெயருக் குப் பொருத்தமானதாக விளங்கும். ஆனால் நிச்சயமாக அந்த இடத்தை நீர் யானையால் நிறைவுசெய்ய முடியாது! சிறுபிள்ளைகள் மிரு கக் காட்சிச் சாலைக்குச் செல்லும் நேரங்களில் இந்தக் கவர்ச்சிமிக்க விலங்கை, அதனுடைய குட்டையான பருமனான வாலைக் கண்டு அச்ச மும் மகிழ்ச்சியும் ஒருசேரப் பெற்றவர்களாகக் காணப்படுகிறார்கள். நிச்சயமாக அதனுடைய வால் **கேதுரு மரத்தைப்போல** இல்லை!

கிறிஸ்தவ அறிவியல் அறிஞர் சிலர், ஆப் பிரிக்கக் காடுகளில் வாழ்ந்து இப்போது மறைந்து போன விலங்கு இது என்று ஒப்புக்கொள்கிறார் கள். உண்மையில், இங்கு கொடுக்கப்பட்ட விவ ரங்களைப் பார்க்கிறபோது, இந்த விலங்கு ஊரும் இனத்தைச் சார்ந்த மாபெரும் விலங்காக (dinosaur) இருக்கலாம் என்று தோன்றுகிறது.[39]

3. லிவியாதானைக் கவனிக்கும்படி யோபு விடம் அறைகூவல் விடுக்கப்படுதல் (அதி. 41)

யோபுவின் குற்றச்சாட்டுகளுக்கு தேவன் நேரடியாகப் பதில் தரவில்லை. "மிகப்பெரிய வரும், மகத்துவம் நிறைந்தவரும், மகிமை நிறைந்தவருமாகிய ஒருவர்; அவரே ஞானமும் அன்பும் ஆற்றலும் உடையவர், அவரை நீ நம்பக்கூடியவனாக விளங்க வேண்டும்" என்னும் பொருள்படவே அவர் பதிலுரைத்தார்.

41:1-9 தேவனுடைய படைப்பில் மற்றொரு மிகச்சிறப்பு வாய்ந்ததும் பயங்கரமானதும் நிலத்திலும் நீரிலும் வாழ்ந்ததுமான விலங்கு லிவியாதான் ஆகும். யோபுவால் அதனை அடக்க முடியுமா? "ஒரு தடவை அதைத் தொட்டுப்பார், மீண்டும் ஒருமுறை நீ அதைத் தொட முயற்சி செய்ய மாட்டாய், அந்தச் சண்டையை நீ ஒருபோதும் மறக்கமாட்டாய்" என்கிறார் (வச. 8 TEV). **லிவியாதான்** என்னும் சொல் "ஏழு தலைக் கடல் வாழ் வலுசர்ப்பத்தைக்" குறிக்கும்படி பண்டைய காலக் கானானிய இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனாலும், "லிவியா தான் கற்பனையில் உருவான கோர விலங்கு என்று அந்தப் பாடல் கூறுகிறதில்லை" என்று திருவாளர் ஆண்டர்சன் குறிப்பிடுகிறார்.[40]

வியாழன், ஜனவரி, நரகம் போன்ற சொற்கள் புறச்சமய இலக்கியங்களில் உருவானவை. அவை என்ன பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ள னவோ அந்த நம்பிக்கை நமக்கில்லை, ஆயினும் அச்சொற்களை நாம் பயன்படுத்துகிறோம். பயன் பாடு ஒரு சொல்லின் பொருளைத் தீர்மானிக்க வேண்டும், இது எந்த விலங்கைக் குறிக்கிறது என்பதை நாம் உறுதியாகச் சொல்ல முடிய வில்லை எனினும் தேவன் ஓர் உண்மையான உயிரினத்தைக் கவனித்துப்பார்க்கும்படி யோபு வுக்கு அறைகூவல் விடுக்கிறார் என்பதை நாம் அறிய வேண்டும். நைல் நதி முதலையே இது என்பது பிரபலமான கருத்தாகும், பல விவரங்கள் அந்தப் பிராணிக்கு பொருந்தமாயுள்ளன.

பிகெமோத் முதன்மையாக நிலத்தில் வாழ் வதாக இருக்க, லிவியாதான் நீரில் வாழும் விலங் காகும். அதைக் **கயிற்றினாலோ தூண்டிலி னாலோ** மனிதனால் பிடிக்க முடியாது. அதனை வீட்டு விலங்காகவோ, செல்லமாக வளர்க்கும் விலங்காகவோ மாற்ற முடியாது. அதைச் சுவை யான உணவாகச் சமைத்துக் கூட்டாளிகளுக்கு

விருந்து வைக்க முடியாது. அதனுடைய புறத் தோற்றம் **அம்புகள், எறிவல்லையங்கள்** போன்ற உறுப்புகளால் அமைந்திருக்கிறது. அதைப் **பார்க்கும்போதே** அதைத் தொடக் கூடாது என்னும் எண்ணம் நமக்கு உண்டாகிறது.

41:10,11 விவரங்களைக் கூறிவருவதை நிறுத்திய தேவன் ஒரு முக்கியமான கேள்வி யைக் கேட்கிறார்: படைக்கப்பட்ட ஓர் உயிரினத் தைக் கண்டு திகிலுற்றவனாக நிற்கும் மனிதன், அந்த விலங்குகளையெல்லாம் படைத்தவரு டைய முன்னிலையில் எவ்வளவாக அச்சத்துடன் நடந்துகொள்ள வேண்டும். நித்தியமானவராகிய அவரே எல்லாவற்றிற்கும் உரிமையாளர், எல்லா வற்றையும் படைத்தவர், அவர் ஒருவருக்கும் கட் டுப்படத் தேவையில்லை. திருவாளர் க்ளின் விவரிக்கிறார்:

> இப்பகுதியின் முக்கியமான குறிப்பை இங்கே காண்கிறோம்: தன்னுடன் படைக்கப்பட்ட படைப்புகளில் ஒன்றை தோற்கடிக்க முடியாத யோபு, படைப்பாளரின் அரியணையைப் பிடிக்க வேண்டும் என்று தவறாக எண்ணக் கூடாது என்பதைக் கற்க வேண்டும்.[41]

41:12-34 மீண்டும் விவரம் லிவியாதானை நோக்கிச் செல்லுகிறது. அதனுடைய உடற்கட்டு மிகப்பருமனானது, அதன் வீரியம் அளவுகடந் தது. அதனுடைய தோல் கடினமானது, அதைப் பாதுகாக்கும் போர்வையாக விளங்குகிறது. அதைக் கடிவாளம் போட்டு அடக்க முடியாது. அதனுடைய வாயும் பற்களும் குறடு போன்றவை. அதனுடைய தோலும், செதில்களும் ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்ட போர்க் கவ சம் போல் உள்ளன. அதனுடைய **தும்மல், கண் கள், வாய்**, நாசியிலிருந்து வரும் சுவாசம் யாவும் அது எழுகிறபோது பயமுறுத்தக்கூடியவை என்று கர்த்தர் **கவிதை** வடிவில் விவரிக்கிறார். லிவியா தானின் வலிமை பயங்கரமானது, அதனுடைய தசை இறுக்கமானது. அது அச்சமற்ற விலங்கு. ஆனால் அது தனது கால்களைச் செட்டைகள் போல அடித்துக்கொண்டுவருகிறபோது பலசாலி களின் இருதயமும் அஞ்சி நடுங்கும். சாதாரண ஆயுதங்கள் அதனுடைய தோலில் பட்டவுடன் தெறிக்கும். அது ஊர்ந்து சென்ற மண்பாதையில் குத்தப்பட்ட அடையாளங்கள் காணப்படும். அத னுடைய அடிப்பகுதி உடைந்த கண்ணாடிச் செதில்கள் போன்ற அமைப்புடையது என்பதை இது காட்டுகிறது. அது தண்ணீரை அடிக்கிற போது தண்ணீர் கொதி**கலன்**போல் மாறிவிடு கிறது, செல்லும் **தடத்தில்** பாஸ்பரஸ் போன்ற வெண்மையான பொருளை விட்டுச் செல்லும். கிழக்கத்திய இலக்கியங்களில் கவிதை புனையப் படுகிறபோது மிகைப்படுத்திக் கூறுதல் இயற்கையே, அதற்கு அதிகப்படியான இடங்கொடுத்துப் பார்த்தாலும், மிகப்பெரிய முதலையை **"அது அகங்காரமுள்ள ஜீவன்களுக்கெல்லாம் ராஜா வாயிருக்கிறது"** என்று அழைக்க முடியாது.[42]

இந்த அதிகாரங்களில் காணப்படும் காட்டு விலங்குகள் பெரும்பாலும் டைனோசர் போன்ற விலங்குகளைப் பற்றிய விவரங்கள் போலக் காணப்படுகின்றன. இவை தேவனுடைய மகிமை, ஆற்றல், கம்பீரம் ஆகியவற்றையே வெளிப் படுத்துகின்றன. அவை யாவும் அவருடைய படைப்புகள், அவருடைய பெருஞ்சிறப்பை வெளிப் படுத்தும் நோக்கத்துடனேயே அவற்றை எடுத்துக் காட்டுகளாகப் பயன்படுத்துகிறார். ஆகவே, அவர் எந்தத் தீங்கும் ஏற்படுத்தாத உயிரினங்களாகிய மான், காக்கை, போன்றவற்றை முதலில் கூறி, கொஞ்சம் கொஞ்சமாக பெரிய விலங்குகளைக் கூறிப் பின்னர் கடைசியில் நிலத்தில் வாழும் பிகெ மோத்தையும், மிருகங்களுக்கெல்லாம் அரசனா கிய கடல்வாழ் லிவியாதானையும் குறிப்பிடு கிறார் என்பதில் வியப்பில்லை. அந்த லிவியா தானின் சிறப்பு நம்புதற்கரிய வகையில் பயங்கர மானதாக இருக்கிறது.

ஈ. யோபுவின் தாழ்மையான பதிலுரை (42:1-6).

யோபு முழுவதும் அடக்கி ஆளப்பட்டுவிட் டான். அவனுக்குப் போதுமான அளவு கொடுக் கப்பட்டுவிட்டது! அவன் தேவனுடைய சர்வ அதிகாரத்தை ஒப்புக்கொள்கிறான். அவன் அறி வற்ற வகையில் தான் பேசியதைத் தவறென்று அறிக்கை செய்கிறான். இப்பொழுது அவன் கர்த்தர் பேசியதைக் கேட்டது மட்டுமின்றி அவ ரைக் கண்களால் கண்டும் விட்டான். தன்னை வெறுத்தவனாக யோபு **தூளிலும் சாம்பலிலும்** மனவருத்தம் அடைகிறான், அவன் உண்மை யாக தேவனைக் காணவில்லை,[43] மாறாக அந்த அளவிற்கு அவருடைய ஞானம், ஆற்றல், அருள்பாலிப்பு, சர்வ அதிகாரம் ஆகியவற்றைக் குறித்த வெளிப்பாட்டைப் பெற்றிருக்கிறான். மகாதேவனைக் காண்பதற்கு நிகரான விளைவே அந்த வெளிப்பாடு.

யோபு 1:1 -இல், அவன் "உத்தமன்" என்று அழைக்கப்படுகிறான். நூலின் இறுதிப்பகுதி

யாகிய இங்கு அவன் தன்னையே அருவருக் கிறான். தேவனுடைய தெரிந்தெடுக்கப்பட்ட பரி சுத்தவான்களின் அனுபவம் எல்லாக் காலங் களிலும் இதுவாகவே இருந்திருக்கிறது.[44] ஒருவன் கிருபையில் கூடுதலாக வளர்ச்சி அடைகிற போது, "தன்னுடைய சொந்தக் கண்களுக்கு முன் பாக அதிகமாகத் தாழ்ந்தவனாகக் காணப்படு கிறான்" என்று திருவாளர் D. L. மூடி எழுதுகிறார்.[45]

5. இறுதி உரை: யோபுவின் வெற்றி (42:7-17)

அ. யோபுவின் நண்பர்கள் கடிந்துகொள் ளப்படுதலும், புதுப்பிக்கப்படுதலும் (42:7-9)

அதன் பிறகு கர்த்தர், அவரைக் குறித்துத் திரித்துக் கூறியதன் காரணமாக எலிப்பாசையும் அவனுடைய இரண்டு நண்பர்களையும்[46] கடு மையாகக் கடிந்து கொண்டார். எல்லாப் பாடு களுமே பாவத்திற்கான தண்டனை என்று அவர் கள் வலியுறுத்திக் கூறினார்கள். யோபுவைப் பொறுத்தவரை அது உண்மையன்று. தெய்வீகக் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து அவர்கள் மிகப்பெரிய அளவில் **சர்வாங்க தகனபலிகளைச்** செலுத்தி னார்கள் **(ஏழுகாளைகளும் ஏழு ஆட்டுக்கடாக் களும்)**. யோபு தன் நண்பர்களுக்காக ஓர் இடைமனிதனாக நின்று தேவனிடத்தில் விண் ணப்பித்தான். யோபுவின் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டது, அதன் விளைவாக அவர்கள் மேல் வரவிருந்த தண்டனை தவிர்க்கப்பட்டது.

ஆ. யோபுவின் செல்வம் அவனுக்கு மீண்டும் அளிக்கப்படுதல் (42:10-17)

42:10-12 அவர்களுக்காக யோபு மன்றாடிய உடனே, அவனுக்கு முன் இருந்த எல்லாவற் றிலும் தேவன் **இரண்டு மடங்கு** செல்வத்தைத் தந்து உயர்த்தினார்: **ஆடுகள், ஒட்டகங்கள், ஏர் மாடுகள், கழுதைகள்** ஆகியவற்றின் எண் ணிக்கை இருமடங்கு பெருகிற்று.

42:13-17 அவன் ஏழு ஆண்மக்களையும் மூன்று பெண்மக்களையும் பெற்றான். அவனு டைய குடும்பத்தின் எண்ணிக்கை இரட்டிப்பானது, எவ்வாறெனில் முந்தின மக்கள் யாவரும் விண் ணகத்தில் இருந்தார்கள் என்று நாம் ஊகிக்க லாம். மேலும் **நூற்றி நாற்பது ஆண்டுகள் யோபு உயிரோடிருந்தான். யோபுவின் முன்னிலை மையைப் பார்க்கிலும் அவன் பின்னிலைமை யைக் கர்த்தர் ஆசிர்வதித்தார்.** இவ்வாறாக, **யோபு நெடுநாட்கள் இருந்து பூரணவயதுள்ள வனாக இறந்தான்.** இவையெல்லாவற்றிலும், யோபு தேவனைச் சபிப்பான் என்று சாத்தான் சொன்னதுபோல அவன் சபிக்கவில்லை.

யோபு நோயுற்றிருந்த காலத்தில் மிகவும் அருவருக்கத்தக்க அளவு உருமாறிப் போயிருந் தான், அவன் முன்னிருந்த நிலைக்குக் கொண்டு வரப்பட்ட பிறகு அவனுக்குப் பிறந்த பெண்மக்கள் மிகவும் அழகாயிருந்தார்கள். இது தேவனுடைய கிருபையின் இனிய செயல் என்றே சொல்ல வேண்டும் (அழகிய பெண் மக்கள் தந்தையின் போற்றுதலுக்கு ஆதாரம்!). அவர்களுடைய பெயர்கள் அறிவூட்டும் பொருளைக் கொண் டவை.[47] எமீமாள் (புறா); கெத்சீயாள் (இலவங்கப் பட்டையின் மணம்); கேரேனாப்புக் (கண்ணின் ஒப்பனை[48]). யோபு அவர்களுக்கும் அவர்களு டைய சகோதரர்களுக்குள்ளே சுதந்தரம் கொடுத் தான். மூதாதையர் வாழ்ந்த பண்டைய நாட்களில் இது பொதுவான நடைமுறையில் இல்லை.

6. யோபு நூலிலிருந்து படிப்பினைகள்

உண்மையில், மனிதர்கள் அடைகின்ற துன் பங்களுக்கான இரகசியம் இந்நூலில் முழுவதுமாக விளக்கிக் கூறப்படவில்லை. திருவாளர் வெஸ்லி பேக்கர் கூறுகிறார்:

> யோபு நூல் முடிவுக்கு வருகிறபோது, அங்கே எந்த விடையும் தரப்படவில்லை. தருக்க ரீதி யில் சிந்திக்கும் மனதிற்கு நிறைவு தரத்தக்க ஏதொரு செய்தியும் அங்கே இல்லை![49]

ஆனாலும், இவ்விரு உண்மைகளைக் குறித்த நிச்சயத்தை நாம் பெற முடியும்.

முதலாவதாக, யோபு அடைந்த துன்பங்கள், அவனுடைய தனிப்பட்ட பாவத்தின் நேரடியான விளைவு அல்ல. தேவன்தாமே, அவன் உத்த மனும் சன்மார்க்கனுமான மனிதன் என்று சான்று கூறினார் (1:8). மேலும், அவனுடைய பாவங் களின் காரணமாகவே தேவன் அவனைத் தண் டித்தார் என்று அவன் நண்பர்கள் வாதம் செய்ததை வாதத்தை தேவன் மறுத்துரைத்தார் (42:8).

இரண்டாவதாக, யோபு பாவம் செய்து அதன் காரணமாகப் பாடு அனுபவிக்கவில்லை என்ற போதிலும், அவனுக்கு ஏற்பட்ட சோதனை அவ னுடைய பெருமை, சுய நீதி, அவனுடைய உள் ளத்தில் உண்டான மனக்கசப்பு ஆகியவற்றை வெளிப்படுத்தியது. தன்னுடைய ஒன்று மில்லாத நிலையையும் தேவனுடைய மேதகைமையை யும் குறித்த அறிவு அவனுக்கு உண்டாவதற்கும்

(42:1-6), தன்னுடைய நண்பர்களுக்காக விண்ணப்பிக்கிறதற்கும் (42:10) முன் அவன் விடுவிக்கப்படவில்லை.

யோபுவின் நூலிலிருந்து பாடுகளைக் குறித்து நாம் கற்கும் சில பாடங்கள்:

1. நீதிமான் துன்பம் அனுபவிப்பதிலிருந்து விலக்குப் பெறவில்லை.
2. பாவத்தின் விளைவே துன்பம் என்பது கட்டாயமானது அல்ல.
3. நீதிமானைச் சுற்றிலும் தேவன் பாதுகாப்பு வேலியைப் போட்டிருக்கிறார்.
4. நோயையும் பாடுகளையும் தேவன் அனுப்புகிறதில்லை. அவை சாத்தானிடத்திலிருந்தே வருகின்றன (லூக்கா 13:16; 2 கொரி. 12:7)
5. பொல்லாத மனிதர்களின் செயல்கள் (சபேயர், கல்தேயர்) இயற்கைக்கு அப்பாற்பட்ட நிகழ்வுகள் (வானத்திலிருந்து அக்கினி), வானிலை (பெருங்காற்று), நோய் (யோபுவின் உடலில் கொடிய பருக்கள்), மரணம் ஆகிய எல்லாவற்றிலும் சாத்தானின் ஆதிக்கம் இருந்தது.
6. தேவனுடைய அனுமதி இருந்தால் மட்டுமே, சாத்தான் இவ்வகை நிலைகளை விசுவாசியின் வாழ்க்கையில் கொண்டுவர முடியும்.
7. தேவன் அனுமதிக்கிற செயல்கள், அவரே செய்ததாக அவ்வப்போது சொல்லப்படுகின்றன. "தேவன் கையிலே நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெற வேண்டாமோ?"
8. சாத்தானின் செயல்கள் என்று கருதாமல், கர்த்தரின் அனுமதியோடு அவரிடத்திலிருந்து வருகின்றன என்று நாம் கருதவேண்டும், "கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்."
9. நம்முடைய துன்பங்களுக்கான காரணத்தை தேவன் எப்பொழுதும் விளக்கிக் கூறுவதில்லை.
10. பாடுகள் பொறுமையை வளர்க்கிறது.
11. துன்பம் அனுபவிக்கிற பரிசுத்தவான்களைச் சந்திக்கிறபோது, நாம் தீர்ப்பு வழங்குகிற சிந்தையோடு செயல்படக்கூடாது.
12. நம்முடைய சந்திப்பு சுருக்கமானதாக இருக்க வேண்டும்.
13. மனிதனுடைய விவாதம் நன்மை உண்டாக்குவதில்லை. தேவன் ஒருவரே நிறைவான ஆறுதலைத் தரமுடியும்.
14. யோபு நூலின் முடிவில் "கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமும் உள்ளவர்" (யாக். 5:11) என்பதைக் காண்கிறோம். இந்த உலக வாழ்க்கையின் போதே, சில நேரங்களில், தவறுகள் திருத்தப்படுகின்றன என்பதை இந்நூலின் மூலம் கற்கிறோம்.
15. துன்பங்களில் யோபுவின் பொறுமை தேவனுடைய நியாயத்தை மெய்ப்பிக்கிறது.
16. யோபுவின் பொறுமை, சாத்தான் தவறாகக் குற்றஞ்சுமத்துகிறவன், பொய்யன் என்பதை மெய்ப்பிக்கிறது.
17. "ஒரு மனிதன் அவனைச் சூழ இருக்கின்ற பொருட்களைக் காட்டிலும் பெரியவன்; அவனுடைய உடைமைகள், அல்லது அவனுடைய குடும்பம் எப்படிப்பட்ட வீழ்ச்சி அடைந்தாலும் உண்மையாகவே தேவனைப் புகழ வேண்டும், முன்னிருந்தவாறே நம்ப வேண்டும்."
18. விதிவிலக்கற்றபடி திக்குமுக்காடச் செய்யும் அறிக்கைகளைக் கூறுவதற்கு முன் நாம் மிகுந்த கவனமுடையவராக இருக்க வேண்டும்.
19. சாத்தான் சர்வ வியாபியோ, சர்வ வல்லவனோ, சர்வ ஞானியோ அல்லன்.
20. நம்முடைய செயல்களுக்கு மாறாகத் துன்பங்களை அனுபவிக்கும்படி தேவன் அனுமதித்தாலும், அவர் நீதிபரராகவும் நல்லவராகவும் இருக்கிறார்.

தம்முடைய பரிசுத்தவான்கள் பாடுகள் அனுபவிப்பதற்கு தேவன் அனுமதிப்பதற்கான சில காரணங்களை, திருமறையின் வேறு பகுதிகளின் வெளிச்சத்தில் நாம் அறிகிறோம்:

1. வாழ்க்கையில் நியாயந்தீர்க்கப்படாத பாவத்தின் விளைவாகச் சில வேளைகளில் பாடுகள் உண்டாகின்றன (1 கொரி. 11:32).
2. பொறுமை, நீடிய சாந்தம், தாழ்மை போன்ற ஆவிக்குரிய பண்புகளை வளர்ப்பதற்கு பாடுகளை ஒரு கருவியாக தேவன் பயன்படுத்துகிறார் (ரோமர் 5:3,4; யோவான் 15:2).
3. களிம்பையும் அழுக்கையும் விசுவாசியின் வாழ்க்கையினின்று நீக்கி, கர்த்தருடைய சாயலை அவ்விசுவாசியின் வாழ்க்கையின் நிறைவாகப் பிரதிபலிக்கச் செய்யும்படி இது செயல்படுகிறது (ஏசா. 1:25).
4. தேவனுடைய பிள்ளையாக இருக்கக் கூடிய ஒருவனுக்கு அவர் எவ்விதமாக ஆறுதல்

அளிக்கிறாரோ, அதே விதமான ஆறுதலை அவன் மற்றவர்களுக்கு அளிக்கும்படி அவனை ஆற்றலுள்ளவன் ஆக்குகிறார் (2 கொரி. 1:4).

5. இரட்சகருடைய பாடுகளில் சில பாவ நிவர்த்திக்கானவை அல்ல, அவற்றில் பரிசுத்தவானும் பங்கு பெறும்படியான நற்பேற்றை அவர் அவனுக்கு நல்குவதால், அவன் அவருக்கு மேலும் கடப்பாடு உடையவனாக வாழவேண்டும் (பிலி. 3:10).

6. விண்ணகத்திலும் பூமியிலும் இருப்பவர்களுக்கு இது ஒரு காட்சிப்பாடமாக விளங்குகிறது (2 தெச. 1:4-6). தேவன் அவர் நிமித்தமே அன்புகூரப்பட வேண்டுமென்றும், அவர் அருளுகின்ற நன்மைகளுக்காக அல்லவென்றும் அது காட்டுகிறது.

7. தேவன் தாம் அன்புகூருகிறவர்களையே சிட்சிக்கிறார், ஆகவே இது தேவனுடைய பிள்ளை என்பதை உறுதிப்படுத்துகிறது (எபி. 12:7-11).

8. தங்களுடைய சொந்த ஆற்றலின் மேல் அல்ல, தேவனிடத்தில் மட்டுமே பரிசுத்தவான்கள் நம்பிக்கையாயிருப்பதற்கு இது ஏதுவாயிருக்கிறது (2 கொரி. 1:9).

9. தேவனுடைய பிள்ளைகள் அவரிடத்தில் நெருங்கியிருப்பதற்கு இது உதவிபுரிகிறது (சங். 119:67).

10. இது வரவிருக்கும் மகிமைக்கு அச்சாரமாயிருக்கிறது (ரோமர் 8:17,18)

11. நம்முடைய திராணிக்கு மேலாக நாம் சோதிக்கப்படுவதற்கு அவர் இடங்கொடுப்பதில்லை (1 கொரி. 10:13).

"யோபுவின் பொறுமையைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்; கர்த்தருடைய செயலின் முடிவையும் கண்டிருக்கிறீர்கள்; கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமும் உள்ளவராக இருக்கிறாரே." (யாக்கோபு 5:11).

அடிக்குறிப்புகள்

1 (Intro) Samuel Ridout, *Job: An Exposition,* p. 5.

2 (முன்னுரை) ஆதியாகமம் 1–11 பகுதி பொதுவாக கி. மு. 2000 –க்கும் அதற்கு வெகு காலத்திற்கு முந்தினதுமாகக் கருதப்படுகிறது. குடிவழிப்பட்டியல்களைக் காணும்போது இது அறியப்படும்.

3 (1:1-3) "இது வட அரேபியாவில் இருந்த ஏதோமின் ஒரு பகுதி என்று சிலர் கருதுகிறார்கள்" *(The Revel Bible Dictionary, ed, by* Lawrence O. Richards, p. 1138).

4 (1:4,5) Charles Haddon Spurgeon, *Morning and Evening,* p. 721.

5 (1:6-12) "தேவனுடைய புத்திரர்" என்னும் சொற்றொடர் எபிரெய அரேபிய மொழிகளில் தேவதூதர்களை குறிக்கும்படி பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டு வந்தது.

6 (2:1-10) Harold St. John, *Job, The Lights and Shadows of Eternity,* p. 9.

7 (Chaps. 3-31:Intro) Ridout, *Job,* p. 33.

8 (Chaps. 3-31: Intro) *The New Scofield Study Bible, New King James Version,* p. 595.

9 (Chaps. 3-31: Intro) Ibid., p. 598.

10 (Chaps. 4,5: Intro) Ridout, *Job,* pp. 43,44.

11 (Chap. 8:Intro) Ibid., p. 64.

12 (9:32-35) Matthew Henry, *"Job," in Matthew Henry's Commentary on the Whole Bible,* III:59.

13 (10:8-12) St. John, *Job,* p.17

14 (11:1-12) Ridout, *Job,* p. 31.

15 (13:20-28) Francis I. Anderson, *Job: An Introduction and Commentary,* p. 163.

16 (14:13-17) St. John, *Job, pp.* 17,18.

17 (15:14-16) Ridout, *Job, p.* 84.

18 (19:25-27) Spurgeon, *Morning and Evening, Devotion for April 21,* Morning.

19 (19:25-27) Ibid., p. 21.

20 (20:20-29) G. Campbell Morgan, *Searchlights from the Word,* p. 145.

21 (22:21-30) Albert Barnes, *"Job," in Notes on the Old Testament,* II:3.

22 (23:1-9) Spurgeon, *Morning and Evening, Devotion for November 19, Evening.*

23 (24:1-12) Ridout, *Job,* p. 124.

24 (24:18-25) Anderson, *Job,* p. 213.

25 (24:18-25) Ibid.

26 (Chap. 25:Intro) Ridout, *Job,* p. 127.

27 (26:5-13) Ibid., pp. 133, 134.

28 (28:1-11) Anderson, J*ob,* p. 225.

29 (28:1-11) Ibid.

30 (31:38-40) Ridout, *Job,* p. 169.

31 (36:22-33) Quoted by Otto Zockler, *"The Book of Job," in Lange's Commentary on the Holy Scriptures,* IV: 596.

32 (37:24) Anderson, *Job*, p. 268.

33 (38:1-3) Ridout, *Job,* pp. 210, 211.

34 (38:1-3) Cited by William Kelly in *Eleven Lectures on the Book of Job,* p. 278.

35 (38:31-33) Spurgeon, *Morning and Evening, Devotion for March, 21, Evening.*

36 (38:34-38) வானிலை பற்றிய வாதத்திற்கு இடையே வேறு பொருள் பற்றி **36** –ஆவது வசனம் கூறுவதால், அதற்கு வேறு பல மொழி பெயர்ப்புகளும் கொடுக்கப்பட்டுள்ளன. மூல மொழியில் இந்த வசனம் பொருள் கூறுவதற்குக் கடினமானது என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும்.

37 (40:15-24) Meredith G. Kline, *"Job," in Wycliffe Bible Commentary,* p. 488.

38 (40:15-24) எடுத்துக்காட்டாக, கீழ்க் கண்ட விவரங்களைக் கூறி இந்தப் பகுதியில் சொல்லப்பட்டுள்ள விலங்கு நீர்யானை என்று திருவாளர் பார்னஸ் பொருத்திக் காட்டுகிறார்:

> "இவ்விலங்கின் மிகப்பெரிய தலை, அதனுடைய கண்களின் கவனத்தை ஈர்க்கக் கூடிய தன்மை, அகலமான வாய்ப்பகுதி, அதனுடைய தலையின்மேல் விசித்திரமான முறையில் வைக்கப்பட்டிருக்கும் மேல்தாடையெலும்பு, இவையாவும் வேடிக்கையான அழகற்ற உருவத்தின் பிரதிபலிப்புகளாக உள்ளன. இது தன் தாடைகளைத் திறக்கும்போது இதனுடைய மிகப்பெரிய வாயும் நாக்கும், தசை நிறைந்து சற்றே இளஞ்சிவப்பான நிறத்தில் காட்சி தருகின்றன; கோரைப் பற்களோ அச்சமூட்டும் வகையில் தோன்றி திகிலடையச் செய்கின்றன" (யோபு **11:247, 248**). திருவாளர் பார்னஸ் இவ்விலங்கு நீர்யானை என்று உறுதிப்படுத்தும் வகையில் வரைந்துகாட்டியுள்ள விளக்கம் நன்றாக இருந்தாலும், கோரைப் பற்கள், இளஞ்சிவப்பு நிற வாய் போன்ற குறிப்புகள் யோபு நூலில் இடம்பெறவில்லை! மேலும் பிகெமோத்தின் தாடை எலும்பு, தலை, வாய்ப்பகுதி ஆகியவை பற்றி எந்த விவரமும் இந்நூலில் இடம் பெறவில்லை (அதி. **40**).

39 (40:15-24) See Ken Ham, *"What Happened to the Dinosaurs?"*

40 (41:1-9) Andersen, J*ob,* p. 289

41 (41:10, 11) Kline, *"Job",* p. 488

42 (41:12-34) யோபு **41** –ஆவது அதிகாரத்தில் லிவியாதானைக் குறித்த விவரங்கள் நமக்கு டைனோசர் காலத்தில் வாழ்ந்து மறைந்து போன ப்ளசியோசர் என்னும் மிகப்பெரிய ஊர்ந்து செல்லக்கூடிய மிருகத்தை நினைவுக்குக் கொண்டுவருகின்றன. ஸ்காட்லாந்திலுள்ள லாக் நெஸ் என்னும் பகுதியில் காட்சியளித்ததாகச் சொல்லப்படும் புதிரான விலங்குகளும் இங்கு சொல்லப்பட்டுள்ள விவரங்களுக்கு ஒத்திருக்கின்றன.

43 (42:1-6) தேவன் தமது மகிமையின் வெளிப்பாட்டை யோபுவுக்கு ஒரு தெய்வீகக் காட்சியாக வெளிப்படுத்தியிருக்கக் கூடும்.

44 (42:1-6) தேவனுடைய முன்னிலையில் தங்களுடைய அவப்பேறான பாவநிலையை

உணர்ந்து செயல்பட்ட பிற நபர்களில் மோசே (யாத். 3:6); ஏசாயா (ஏசா. 6:15); பேதுரு (லூக்கா 5:8); பவுல் (அப். 9:4); யோவான் (வெளி. 1;17) ஆகியோரும் அடங்குவார்கள்

45 (42:1-6) Moody, *Notes from my Bible,* p. 62.

46 (42:7-9) யோபுவுடன் உரையாடிய நான் காவது மனிதன் எலிகூ கடிந்துகொள்ளப்பட வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதற்குப் பிறகு அவனுடைய பெயர் குறிப்பிடப்படவில்லை. அவனுடைய அறிவுரை சரியானது என்றே தோன்றுகிறது. யோபுவின் நண்பர்கள் கூறிய தவறான அறிவுரைக்கும் தேவனுடைய கம்பீர மான பதிலுரைக்கும் இடையேயுள்ள மாற்றத் திற்கு அது வழிவகுக்கிறது. மேலும் இது கிறிஸ்து முன்னடையாளமானவனாக எலிகூ விளங்கினான் என்னும் கருத்தை உறுதி செய்கிறது.

47 (42:13-17) திருவாளர் ரிடவுட் இந்தப் பெயர்கள் ''ஆவிக்குரிய முக்கியத்துவம் வாய்ந் தவை'' என்று நம்புகிறார். ''இவை யோபு அனுப விக்க சோதனைகளின் கனியாகும். புறா வருத்தமுற்ற பறவையின் மென்மையையும் இனிமையையும் வெளிப்படுத்துகிறது. அவரு டைய காயத்திலிருந்து வெளிப்படுகிற நறு மணத்தை கேசியா எடுத்துரைக்கிறது. சாம்ப லுக்குப் பதிலாக சௌந்தர்யம்'' என்பது யோபு வுக்கு இப்பொழுது உரிமைப்பொருளாகிவிட்டது, அது கண்களின் ஒப்பனைப் பொருள். இனிமை, நறுமணம், அழகு இவையாவும் நம்முடைய வருத் தத்திலிருந்து உண்டாகின்றன. உண்மையா கவே இவர்களைப் போன்ற அழகுள்ள பெண் மக்கள் ஒருவருமில்லை (யோபு, பக்கம் 263,264).

48 (42:13-17) பண்டைய காலத்தில் பெண் கள் தங்களுடைய உதடுகளைக் காட்டிலும் கண் களுக்கே அதிக அளவில் ஒப்பனை செய்து கொண்டார்கள். ''சூரியனுக்குக் கீழே நூதன மானது ஒன்றுமில்லை'' என்னும் சாலொ மோனின் சொற்களை இவை யாவும் எடுத்துக் காட்டுகின்றன!

49 (Conclu) Wesley C. Baker, *More Than a Man Can Take: A Study of Job,* p. 128.

நூல் விவரப்பட்டியல்

Andersen, Francis I. *Job: An Introduction and Commentary.* London: Inter Varsity Press, 1976

Baker, Wesley C. *More Than a Man Can Take: A Study of Job.* Philadelphia: The Westminster Press, 1966.

Delitzsch, F. *"The Book of Job." In Biblical Commentary on the Old Testament.* Vol. 9, 10. Reprint. Grand Rapids: Eerdmans Publishing Co., 1971.

Green, William Henry. *The Argument of the Book of Job.* Reprint. Minneapolis, MN: James & Klock Christian Publishers, 1977.

Ham, Ken. *"What Happened to the Dinosaurs?" Answers to Some of the Most Asked Questions on Creation/ Evolution.* Sunnybank, Australia: Creation Science Foundation Ltd., 1986.

Kelly, William. *Eleven Lectures on the Book of Job.* Reprint. Denver: Wilson Foundation, n.d.

Kline, Meredith G. "Job." In *Wycliffe Bible Commentary.* Chicago: Moody Press, 1962.

Minn, H. R. *The Burden of this Unintelligible World or The Mystery of Suffering*. Auckland, New Zealand: Whitcombe & Tombs Limited, 1942.

Morris, Henry. *The Remarkable Record of Job.* Grand Rapids: Baker Book House, 1990.

Ridout, Samuel. *The Book of Job: An Exposition*. Seventh Printing. Neptune, NJ: Loizeaux Brothers, 1976.

St. John, Harold. *Job, The Lights and Shadows of Eternity* (pamphlet). New York: Bible Scholar, n.d.

Zockler, Otto. *"The Book of Job." In Lange's Commentary on the Holy Scriptures*. Vol. 4. Grand Rapids: Zondervan Publishing House, Reprint, 1960.

சங்கீதப் புத்தகம்

முன்னுரை

சங்கீதப் புத்தகமாகிய கண்ணாடியில் பிரதிபலிக்காத ஆவியின் அசைவு எதையும் ஒருவராலும் உணரமுடியாது. இதன் காரணமாக நான் இதனை ஆத்துமாவின் அனைத்துக் கூறுகளையும் ஆராய்ந்து அறியும் நூல் என்று உண்மையாக அழைப்பேன். துயரங்கள், தொல்லைகள், அச்சங்கள், ஐயங்கள், எதிர்பார்ப்புகள், வேதனைகள், குழப்பங்கள், கூறாவளி போன்ற கிளர்ச்சிகள் மூலம் அலைக் கழிப்புக்குள்ளாகிற மனித இருதயங்களின் உயிரோட்டமுள்ள அனுபவங்கள் இந்நூலில் படவுருவில் வரைந்து தரப்பட்டுள்ளன.

– ஜான் கால்வின்

1. வேத நூல் வரிசையில் தனிச்சிறப்பு மிக்க இடம்

பாலைவனத் தீவு ஒன்றில் நீங்கள் தனித்து விடப்படுகிறீர்கள். அப்பொழுது நீங்கள் திருமறை நூல்களில் ஒன்றைத் தெரிந்தெடுக்கலாம், எதைத் தெரிந்தெடுப்பீர்கள்?

ஒளிவு மறைவின்றிக் கூறுகிறேன், அப்படிப் பட்ட நிலை எனக்கு வராது என்று நான் நம்பு கிறேன்; எனினும் அவ்வாறு நான் தெரிந்தெடுக்க வேண்டுமென்றால் சங்கீத நூலையே தெரிந்தெடுப் பேன்! வெகு காலத்திற்கு நான் தொடர்ந்து கர்த்த ரைத் தொழவும், அவரிடம் என் மன்றாட்டை ஏறெடுக் கவும் தக்கவனாக என்னை உற்சாகப்படுத்தும் ஆவிக்குரிய உணவைத் தருகிற பல்வேறு வகை யான ஆய்வுப்பொருட்களும், நிறைவான வாழ்க்கை அனுபவங்களும், உன்னதமான ஆராதனை களும் அந்தப் பாடல்களில் பெருமளவில் பொதிந்து கிடக்கின்றன.

முதலாவது நாம் எடுத்தாண்டுள்ள மேற் கோள், பெரும்பாலும் கால்வின் அவர்களும் சங் கீத நூலையே தெரிந்தெடுத்திருப்பார் என்று காட்டு கிறது.

திருவாளர் கிரகாம் ஸ்க்ரோஜி பெரும்பாலும் தனது வாக்குச் சீட்டை இதே நூலுக்கு அளித் திருப்பார் என்று தோன்றுகிறது. அவர் கூறியிருப்ப தாவது:

> இந்தச் சங்கீதங்கள் எவ்வளவு நிறைவாகப் புகழ்ச்சியைச் செலுத்துகின்றன. படைப்பு, இறை பராமரிப்பு, மீட்பு ஆகியவற்றின் இசை நாளங்கள் மட்டற்ற மகிழ்ச்சி நிறைந்த ஆத்து மாவால் விரைந்து மீட்டப்படுகின்றன. விண்ண கம், பூமி, பெருங்கடல், வானம், உயிருள்ளவை, உயிரற்றவை யாவும் கர்த்தரைப் புகழ்ந்து போற் றிட அதன் மூலம் அழைப்பு விடுக்கப்படுகிறது.[1]

சங்கீத நூலை நாம் முதன் முறையாகப் படிக் கின்றபோது, சில சங்கீதங்களில் சீரான சிந்தனை ஓட்டத்தை நம்மால் கண்டறிய முடிவதில்லை, ஆகவே நம்முடைய ஆர்வம் குன்றிவிடுகிறது. சிலவேளைகளில் சிந்தனை ஓட்டம் ஏறுமாறாக வும், சிலவேளைகளில் மறைவாயும், சில வேளை களில் முழுவதும் காணப்படாமலும் இருப்பதாகத் தோன்றுகிறது. இது குறித்துத் திருவாளர் ஆல்பர்ட் பார்னஸ் மற்றும் திருவாளர் C. S. லூயிஸ் கூறி யிருக்கும் கருத்துரைகள் நமக்கு உதவிபுரியும். பார்னஸ் கூறியிருப்பதாவது:

> சங்கீதங்களில் பெரும்பாலானவை, இசைக் கருவி களோடு சேர்ந்து பாடக்கூடியவை, அதாவது, யாழ், நரம்பிசைக் கருவிகளைக் கொண்டு இசை எழுப்பிப் பாடக்கூடியவையேயொழிய வெறுமனே வாசிக்கக் கூடியவை அல்ல.[2]

இதற்கு ஒத்த கருத்தைக் கூறி விளக்குகிறார் லூயிஸ்:

> சங்கீதங்களைச் செய்யுள்களாக, நாம் படிக்க வேண்டும் என்பதை வலியுறுத்திச் சொல்ல வேண் டும்; இசைப்பாடல்கள் என்னும் அடிப்படையில் இவை எல்லை கடந்த சுதந்தரத்தோடு பாடப் படுபவை. மேலும் இசைப்பாடல்களுக்குரிய எல்லாவித மரபு ஒழுங்குகளோடும், உயர்வு நவிற்சி அணிகளால் நிறையப்பெற்றும்,

> தருக்க முறையோடின்றி உணர்ச்சிபூர்வமான தொடர்புகளோடும் இப்பாடல்கள் விளங்குகின்றன.[3]

இந்தத் தெளிவான அறிவுத்திறம், புரிந்து கொள்ளுதலின் புதியதொரு பலகணியை நமக்கு முழுவதுமாகத் திறந்துவிடுகிறது:

2. நூலாசிரியர்கள்

சங்கீதங்கள் அவ்வப்போது "தாவீதின் சங்கீதங்கள்" என்று அழைக்கப்படுகின்றன. ஆனால் அவற்றில் பாதி மட்டுமே (எழுபத்து மூன்று) "இஸ்ரவேலின் இனிய பாடகன்" இயற்றியவை என்று அவனோடு நேரடியாகத் தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. ஆசாப் எழுதியவை பன்னிரண்டு; கோராகின் மக்கள் எழுதியவை பத்து; சாலொமோன் எழுதியவை இரண்டு; மோசே, ஈத்தான், ஏமான், எஸ்றா ஆகியோர் தலைக்கு ஒன்று வீதம் எழுதியிருக்கிறார்கள். நாற்பத்து ஒன்பது அதாவது, மூன்றில் ஒரு பங்குப் பாடல்கள் யார் எழுதியவை என்று தெரியவில்லை.

நாம் சங்கீதங்களைக் குறித்து எண்ணிப்பார்க்கையில், பொதுவாக தாவீதின் வாழ்க்கையோடு தொடர்புபடுத்தியே சிந்திக்கிறோம். பெயர் தெரியாத ஓர் எழுத்தாளர் இதனை அழகுற விவரிக்கிறார்:

> தாவீதின் யாழ் இன்னும் நம்முடைய செவிகளில் ஒலித்துக்கொண்டிருக்கிறது. ஈசாயின் மகனுடைய மன்றாட்டுகளும் போற்றுதல்

மேசியாவின் சங்கீதங்கள்

சங்கீதம்	வருணனை	நிறைவேறுதல்
2:7	தேவ குமாரன்	மத்தேயு 3:17
8:2	பாலகர்களால் புகழப்படுதல்	மத்தேயு 21:15,16
8:6	எல்லோருக்கும் அரசர்	எபிரெயர் 2:8
16:10	சாவினின்று உயிரோடு எழுதல்	மத்தேயு 28:7
22:1	தேவனால் கைவிடப்படுதல்	மத்தேயு 27:46
22:7,8	பகைவரால் ஏளனம் செய்யப்படுதல்	லூக்கா 23:35
22:16	கைகளிலும், கால்களிலும் கடாவப்படுதல்	யோவான் 20:27
22:18	ஆடைகளுக்காகச் சீட்டுப் போடுதல்	மத்தேயு 27:35,36
34:20	எலும்புகள் முறிக்கப்படுவதில்லை	யோவான் 19:32,33,36
35:11	பொய்ச்சாட்சிகளால் குற்றம் சுமத்தப்படுதல்	மாற்கு 14:57
35:19	காரணமின்றி வெறுக்கப்படுதல்	யோவான் 15:25
40:7,8	தேவனுடைய சித்தத்தில் களிகூருதல்	எபிரெயர் 10:7
41:9	நண்பன் ஒருவனால் காட்டிக்கொடுக்கப்படுதல்	லூக்கா 22:47
45:6	நித்திய அரசர்	எபிரெயர் 1:8
68:18	விண்ணகம் ஏகுதல்	அப். 1:9-11
69:9	தேவனுடைய வீட்டிற்காகப் பேரார்வம் கொள்ளுதல்	யோவான் 2:17
69:21	காடியையும் கசப்புநீரையும் கொடுத்தல்	மத்தேயு 27:34
109:4	எதிரிகளுக்காக மன்றாடுதல்	லூக்கா 23:34
109:8	காட்டிக்கொடுத்தவனுக்குப் பதிலாக வேறொருவர் நியமிக்கப்படுதல்	அப். 1:20
110:1	பகைவர்மேல் ஆட்சிசெலுத்துதல்	மத்தேயு 22:44
110:4	என்றென்றைக்கும் ஆசாரியர்	எபிரெயர் 5:6
118:22	தேவனுடைய வீட்டின் தலைக்கல்	மத்தேயு 21:42
118:26	கர்த்தருடைய நாமத்தில் வருகிறவர்	மத்தேயு 21:9

களும் நமக்காகத் தூய ஆவியானவரால் பளிங்குபோல உறுதியாக்கப்பட்டுள்ளன. இறையியல் இசையால் உறைநிலைப்படுத்தப்பட்டுள்ளது என்று ஒருவர் கூறினார். இருதயத்தின் இசையே சங்கீதங்கள். அவை சில வேளைகளில் வருத்தமும் புலம்பலுமாய் உள்ளன, சில வேளைகளில் இருளும் மனவேதனையுமாய் இருக்கின்றன, சில வேளைகளில் மன அமைதியும் பூரிப்புமாய் விளங்குகின்றன. தாவீதின் ஆத்துமாவின் இசை, தூய ஆவியானவரால் பாதுகாக்கப்பட்ட நிலையில் அதைக் கேட்கும் நாம் உற்சாகம் பெற்றவர்களாக இறைவனை நெருங்கிச் சேருகிறோம்.

3. எழுதப்பட்ட காலம்

மோசே முதல் எஸ்றா வரை ஏறத்தாழ ஓராயிரம் ஆண்டுக் காலத்தில் இந்தப் பாடல்கள் இயற்றப்பட்டன (கி. மு. 1400 - கி. மு. 400). எனினும் இவற்றில் பெரும்பாலானவை தாவீது முதல் எசேக்கியா வரை முந்நூறு ஆண்டுகள் இடைவெளியில் எழுதப்பட்டவை (கி. மு. 1000 - கி. மு. 700). ஆகவே பழைய ஏற்பாடு எழுதப்பட்ட அதே காலத்தில் சங்கீதங்களும் எழுதப்பட்டன எனலாம் (யோபு இந்தக் காலத்திற்கு முந்தி எழுதப்பட்டிருக்கும்).

4. நூலின் பின்னணியும் கருப்பொருளும்

சங்கீதங்கள் ஐந்து நூல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன, ஒவ்வொரு நூலும் துதிப்பாடலுடன் முடிவடைகிறது. 5 -ஆவது நூலின் துதிப்பாடல் 150 - ஆவது சங்கீதம் முழுமையும் ஆகும்.

சங்கீதங்கள் அவற்றின் ஆய்வுப் பொருளுக்கு ஏற்ப பிரிக்கப்பட்டுள்ளன என்று திருவாளர் F. W. க்ராண்ட் கருதுகிறார்.[4] ஐந்து நூல்களையும் அவர் கீழ்க்கண்டவாறு தொகுத்துத் தருகிறார், எபிரெய மொழித் திருமறையில் அதனைக் காணவியலும்:

1. தேவனுடைய அறிவுரையில் கிறிஸ்து தம்முடைய மக்களாகிய இஸ்ரவேலருக்கு எல்லா நன்மைகளுக்கும் ஆதாரமாக விளங்குகிறார் (சங். 1-41).
2. அவர்களுடைய வீழ்ச்சி, கடைசிக்காலத்தில் அவர்கள் மீட்கப்படுதல் (சங். 42-72).
3. தேவனுடைய பரிசுத்தமும், அவர் அவர்களோடு ஈடுபடுதலும் (சங். 73-89).
4. தோற்றுப்போன முதலாவது மனிதனுக்குப் பதிலாக இரண்டாவது மனிதர் நிறுவப்படுதல், உலகம் அவருடைய கரங்களுக்குக் கீழ்நிலை நாட்டப்படுதல் (சங். 90-106).
5. இறுதியாக தேவனும் மனிதனும் ஒன்றிணைந்து காணப்படுகின்ற தெய்வீக வழிகள் பற்றிய நன்னெறித் தீர்மானம் (சங். 107-150).

இந்த ஐந்து பிரிவுகளுக்கும் ஐந்து ஆகமங்களுக்கும் இடையே ஓர் ஒப்புமை விளங்குகிறது. எடுத்துக்காட்டாக, இரண்டாவது பிரிவு, எகிப்திலிருந்து மீட்கப்பட்ட நிகழ்வுக்குப் பொருத்தமானதாகக் காணப்படுகிறது. மூன்றாவது பகுதி பரிசுத்தத்தைக் குறித்து வலியுறுத்திக் கூறுவதில் லேவியராகமத்திற்கு இணையாக விளங்குகிறது.

சங்கீதங்கள் வெவ்வேறு வகைகளாகவும் பிரிக்கப்படுகின்றன, எனினும் சில சங்கீதங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட வகைகளில் பொருத்தமானவையாக இருக்கின்றன:

1. வரலாற்றுச் சார்புடையவை - இஸ்ரவேலின் வரலாற்றில் அல்லது பாடலாசிரியனின் வாழ்க்கை வரலாற்றில் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியோடு அல்லது சில நிகழ்ச்சிகளோடு தொடர்புடையவை.
2. மேசியா சார்புடையவை - கிறிஸ்துவின் பாடுகள், அதைத் தொடர்ந்து வரும் மகிமைகள் ஆகியவற்றை விவரிப்பவை.
3. தீர்க்கதரிசனம் அல்லது ஆயிரமாண்டு ஆட்சிக் காலம் சார்ந்தவை - இஸ்ரவேலின் எதிர்காலத்தில் சந்திக்கவிருக்கிற உபத்திரவ காலத்தையும், அதற்குப் பிறகு வரக்கூடிய அமைதியும் வளமும் நிறைந்த காலத்தையும் பற்றியவை.
4. செய்த தவறுக்காக உளம் நைவுறுதல் சார்ந்தவை - பாடலாசிரியன் தனது பாவங்களை ஆழ்ந்த மனதோடு அறிக்கை செய்தல் மற்றும் பாவ மன்னிப்பை நாடி நொருங்குண்ட இருதயத்தோடு கதறுதல்.
5. சாபமிடுதல் சார்ந்தவை - தேவனுடைய மக்களின் பகைவர்கள் பழிவாங்கப்பட வேண்டுமென்று அவரிடம் மன்றாடுதல்.

பல சங்கீதங்கள் தனிப்பட்ட மனிதர்களுடைய அல்லது சமுதாயத்தினுடைய தொழுகைகளும் புகழ்ச்சிகளுமாக அவர்களுடைய உள்ளத்தின் வெளிப்பாடுகளாக விளங்குகின்றன. வேறு பல சங்கீதங்கள் கர்த்தர் தம்முடைய மக்களோடு ஈடுபட்ட செயல்களின் விவரங்களாக இருக்கின்றன.

சங்கீதங்களின் பொருள் விளக்கம்

இஸ்ரவேலுக்கும் திருச்சபைக்கும் இடையேயுள்ள வேறுபாடு விசுவாசிகளின் வேதாகம விளக்கவுரையில் தொடக்கத்திலிருந்து முடிவு வரை நிலைநிறுத்தப்பட்டுள்ளது. பல சங்கீதங்கள், குறிப்பாக பொல்லாதவர்களைச் சபிக்கும் படி வேண்டுதல் ஏறெடுக்கப்பட்டுள்ள சங்கீதங்கள் நியாயப்பிரமாணத்திற்குக்கீழ் வாழ்ந்த யூதர்களுக்கு முழுவதும் ஏற்றவையாக இருந்தன. அவை திருச்சபையின் காலத்தில் இருக்கின்ற விசுவாசிகளின் பேச்சுக்கு ஏற்றவை அல்ல. இக் காலத்தில், நம்முடைய பகைவரிடத்தில் அன்பு பாராட்டும்படியும், நம்மை ஏளனமாக நடத்துபவர்களுக்கு நன்மை செய்யும்படியும் நாம் வற்புறுத்தப்படுகிறோம். காலப்பாகுபாடுகளுக்கு இடையேயுள்ள முக்கியமான வேறுபாட்டை நாம் உணராவிடில், சங்கீதங்களுக்கு விளக்கமளிக்கும்போது நாம் கடும் பிரச்சினைகளை எதிர்கொள்ளநேரிடும்.

சங்கீதங்களைக் கவனத்துடன் படிக்கிற ஒவ்வொரு வாசகரும், பாடலாசிரியனின் அனுபவங்களுக்கும் இஸ்ரவேல் இனத்தின் அனுபவங்களுக்கும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அனுபவங்களுக்கும் இடையே நெருக்கமான ஒப்புமை விளங்குவதை விரைவாகக் கவனிக்க முடியும். அவர்கள் யாவரும் உபத்திரவம், பாடுகள், வருத்தம், பகைமை, கைவிடப்படுதல், இவை மட்டுமின்றி உயர்வு, மகிமை, மகிழ்ச்சிக் கொண்டாட்டம் ஆகிய அனுபவங்களைப் பெற்றார்கள். விசுவாசிகளின் வேதாகம விளக்கவுரையில் இடையிடையே இந்த ஒப்புமைகளை நாம் குறிப்பிட்டுள்ளோம்.

சங்கீதங்களை வாழ்க்கை நடைமுறைக்குப் பொருத்திக் காட்டுதல்

திருமறை முழுவதும் நேரடியாகத் திருச்சபைக்கு எழுதப்படவில்லையெனினும், எல்லாத் திருமறைப் பகுதிகளும் திருச்சபைக்குப் பயனுள்ளவை. பாடலாசிரியனின் அனுபவங்களில் நம்முடைய சொந்த அனுபவங்கள் பிரதிபலிப்பதைக் காணும்போது, நம்மால் ஆறுதல், படிப்பினை, கடிந்துரை, புத்திமதி ஆகியவற்றைக் கண்டடைய முடியும்.

திருச்சபையில் அங்கங்களாக விளங்கும் நாம், முதன்மையாக யூதர்களுக்கென்று கொடுக்கப்பட்ட படிப்பினைகளிலிருந்து முக்கியமான பாடங்களைக் கற்கலாம். யூதர்களுடைய தேவாலயம், எல்லா விசுவாசிகளும் ஒன்றாகக் கட்டப்பட்டு, பரிசுத்த ஆவியானவர் குடியிருக்கும் கிறிஸ்துவின் சரீரத்திற்கு முன் உருவகமாக எண்ணப்படக் கூடும். சங்கீதங்களில் இடம்பெற்றுள்ள போர்கள், துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், வானத்தில் உள்ள அந்தகார லோகாதிபதிகளோடும் நமக்குள்ள ஆவிக்குரிய போராட்டங்களைக் குறித்து நம்மோடு பேசுகின்றன. இவ்வுலகில் இஸ்ரவேல் பெற்ற உலகிற்குரிய நன்மைகள், கிறிஸ்துவுக்குள்ளாக விண்ணகத்தில் நமக்குள்ள ஆவிக்குரிய நன்மைகளைச் சுட்டிக் காட்டுகின்றன.

இந்த விளக்கக் குறிப்புகளை நாம் பயன்படுத்துவோமானால், சங்கீதங்கள் நமக்குப் பெருமளவில் அர்த்தமுள்ளவையாகக் காணப்படும். அவற்றிற்குப் பொருள் விளக்கம் கூறுவதில் உள்ள சிக்கல்கள் நீங்கிப் போகும்.

சங்கீதங்களின் தலைப்புகள்

சங்கீதங்களின் தலைப்புகள் மிகவும் பழங்காலத்தவை. அவை புனிதத் திருமறையின் ஒரு பகுதியாக இருக்கும் என்றே தோன்றுகிறது. ஆனாலும், பெரும்பாலான தலைப்புகளின் பொருள் மற்றும் நோக்கம் தெளிவற்று இருக்கின்றன. அதன் காரணமாக அவற்றில் பெரும்பாலானவற்றிற்கு நாம் விளக்கம் தரவில்லை. “இதன் பொருள் என்னவென்று எங்களுக்குத் தெரியவில்லை” என்று மீண்டும் மீண்டும் சொல்வதில் எவ்விதப் பயனுமில்லை.

பொருட்சுருக்கம்

1. நூல் 1 (சங்கீதங்கள் 1 - 41)
2. நூல் 2 (சங்கீதங்கள் 42 - 72)
3. நூல் 3 (சங்கீதங்கள் 73 - 89)
4. நூல் 4 (சங்கீதங்கள் 90 - 106)
5. நூல் 5 (சங்கீதங்கள் 107 - 105)

பொருட்சுருக்க அட்டவணை

சங்கீத நூல்	முதல் நூல் 1-41	இரண்டாம் நூல் 42-72	மூன்றாம் நூல் 73-89	நான்காம் நூல் 90-106	ஐந்தாம் நூல் 107-150
முக்கிய கவிஞர்	தாவீது	தாவீதும் கோராகும்	ஆசாப்	பெயர் அறியப்படாதோர்	தாவீதும், பிற பெயர் அறியப்படாதோரும்
எண்ணிக்கை	41	31	17	17	44
பொருள்	தொழுகையின் பாடல்கள்	இசுரவேல் நாட்டுப் பாடல்கள்		துதிப்பாடல்கள்	
ஐந்தாகம ஒப்புமை	ஆதியாகமம் மனிதனும் படைப்பும்	யாத்திராகமம் மீட்பும் விடுதலையும்	லேவியராகமம் ஆராதனையும் அதி தூய்மையும்	எண்ணாகமம் பாலைவனமும் அலைந்து திரிதலும்	உபாகமம் துதியும் இறைவசனமும்
இறுதி புகழுரை	41:13	72:18,19	89:52	106:48	150:1-6
தொகுப்பாசியர்	தாவீது	எசேக்கியேல் (அ) யோசுவா		எஸ்றா (அ) நெகேமியா	
காலம்	கி.மு 1400 - 970	கி.மு.970-610		கி.மு. 700 வரை	
கவிஞர்களின் காலம்	கி.மு. 1000 - 700				

விளக்கவுரை

1. நூல் 1 [சங்கீதங்கள் 1-41]

சங்கீதம் 1 : நல்வாழ்வு

தீயொழுக்கம் நிறைந்த வாழ்வே இனிய நல் வாழ்வு என்னும் பொதுவான மாயத்தோற்றத்தை அறவே அகற்றும் வகையில் சங்கீத நூல் தொடங்குகிறது. புலன் நுகர் இன்பங்களில் அடங்கா அவா கொண்டு அவற்றை அனுபவிப் பதே மெய்யானதும் நிலையானதுமான மன நிறைவளிக்கும் வாழ்வு என்னும் எண்ணத்தை உருவாக்கும்படி இவ்வுலகம் ஒவ்வொரு நாளும் கருத்துத் திணிப்பைச் செய்து வருகிறது. தொலைக் காட்சி, வானொலி, திரைப்படங்கள், சஞ்சிகை கள் யாவும் இவ்வாறான தீயொழுக்கங்களுக்கு இடமளிப்பதே முழு நிறைவளிக்கும் இன்பமான வாழ்விற்கு வழிவகுக்கும் என்னும் எண்ணத் தைத் தோற்றுவிக்கின்றன. தூய்மை 'கட்டுப்பாட் டிற்கே' வழி வகுக்கும் என்பது நிராகரிக்கப்படு கிறது. ஆனால் சங்கீத ஆசிரியன் நன்னெறியே நலமானது என்று நிலைநிறுத்துகிறான்.

1:1 துன்மார்க்கருடைய வாழ்க்கை முறை யிலிருந்து தன்னை விலக்கி, கறையற்று வாழ் பவனே மெய்யான **பாக்கியவான்** (மகிழ்ச்சி நிறைந்த மனிதன்) ஆவான். அவர்களோடு அவன் தொடர்பு கொண்டிருந்தாலும், அவர்களு டைய குற்றச் செயல்களுக்கு அவன் உடந்தை யாயிருப்பதில்லை. மேலும் அவர்களுடைய பாவத்தையும் ஏளனச் செயலையும் கண்டும் காணாதது போலிருந்து அனுமதிப்பதும் இல்லை. எனினும், மகிழ்ச்சி நிறைந்தவன் பொல்லாத மனித னோடு எவ்விதத் தொடர்பும் இல்லாமல் வாழ் கிறான் என்பது இதன் பொருளன்று.

1:2 இறை நூலோடு இசைந்து வாழாத பாக் கியவானை நம்மால் கற்பனையும் செய்து பார்க்க முடியாது. அவன் **கர்த்தருடைய** திருமறையின் மேல் அடங்காப் பசியுற்றிருக்கிறான். **இரவும் பகலும்** அதைத் **தியானிப்பதில்** இன்பம் பெறு கிறான். இதன் வாயிலாக அவன் தனது தனிப்பட்ட வாழ்வில் வளம் பெற்றிருப்பதோடு பிறர் நலம்பெற வாய்க்கால் போலச் செயல்படுகிறான்.

1:3 தீயொழுக்கத்தினின்று விலகி, திருமறை யோடு தன்னை இணைத்து வாழ்பவன் வலிமை மிக்க, உரம்படைத்த, கனிதரும் **மரத்தின்** குண நலன்கள் அனைத்தையும் பெற்றிருக்கிறான்:

நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு[5] - ஊட்ட மும் புத்துயிரும் அளிக்கக் கூடிய ஒருபோதும் வற்றாத நீரை அவன் பெறுகிறான்.

தன் காலத்தில் தன் கனியைத் தந்து - ஆவி யின் இனிய பண்புகள் யாவற்றையும் அவன் வெளிப்படுத்துகிறான். அவனுடைய பேச்சும் நடத்தையும் எப்போதும் உரிய காலத்தில் செய்யப்பட்டதாகவும் பொருத்தமானதாகவும் இருக்கும்.

அதனுடைய **இலை உதிராதிருக்கும்** - அவ னுடைய ஆவிக்குரிய வாழ்வு சுழற்சி மாற்றங் களால் பாதிப்படைவதில்லை. மாறாக, இடை விடாமல் உள்ளத்தில் புத்துயிர் பெற்ற நற் குணத்தை வெளிப்படுத்துவதாக அது இருக் கும். "கர்த்தருடைய மரங்கள் எல்லாம் எப் போதும் பசுமையாயிருக்கும்" என்று திரு வாளர் D. L. மூடி கூறினார்.[6]

இவ்வகை மனிதன் தான் மேற்கொள்கிற எல்லாவற்றிலும் சிறந்து விளங்குகிறான். அவன் கர்த்தரோடு இசைந்து வாழ்வதன் மூலமாகவே இவ்வாறு வளம் பெறுகிறான் என்பதில் ஏதொரு ஐயமுமில்லை. ஆகவே அவன் ஈடுபடும் எல்லாச் செயல்களிலும் தூய ஆவியானவரால் வழி நடத் தப்படுகிறான். அவ்வாறு தேவ ஆவியானவரால் வழிநடத்தப்படுவதால் மட்டுமே ஒருவன் தனது கிறிஸ்தவ வாழ்வில் திறம்பட வெற்றிபெற முடியும். தன்னிச்சையாகச் செயல்படுகிற எவனும் தனது நேரத்தையும் பணத்தையும் திறமையை யும் பெருமளவில் வீணாக்குகிறான்.

1:4 துன்மார்க்கர் அப்படியிருப்பதில்லை; அதாவது அவர்கள் நன்கு நடப்படவுமில்லை, கனிகொடுப்பதுமில்லை, நிலைத்திருப்பது மில்லை, வளம்பெறுவதுமில்லை. அவர்கள் பத ரைப் போலவே சத்துவமின்றி, கருப்பொருள் அற்றவராக இருக்கிறார்கள். வாழ்க்கையில் ஏற் படும் புயல்கள் தாக்கும்போது அவர்களது தடு மாற்றம் வெளிப்படும். பலத்த காற்று அவர்களைப் **பறக்கடித்துவிடும்**.

1:5 துன்மார்க்கர் நியாயத்தீர்ப்பில் நிலை நிற்பதில்லை; பெரிய வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பின்போது, அவர்கள் இறைவனது முன்னிலையில் நிற்பார்கள் என்பதில் ஐயமில்லை. ஆங்கு அவர்களுக்கு எதிராகக் கூறப்படும் குற்றச் சாட்டுகளுக்குப் பதில் கூற வகையற்றவர்களா ககக் காணப்படுவார்கள் என்பதே இதன் பொருள். பழமொழியாகக் கூறப்படின், அங்கே நிற்பதற்கு அவர்களுக்குக் கால் இருக்காது! மேலும் அவர் கள் **நீதிமான்களின் சபையிலும் நிலைநிற்ப தில்லை.** கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையாலும், அவர் மேலுள்ள விசுவாசத்தா

லும் இரட்சிப்பைப் பெற்றோரின் கூட்டமைப்பில் இடம் பெறாதபடி அவர்கள் என்றென்றைக்கு மாகப் புறந்தள்ளப்படுவார்கள்.

1:6 இவை யாவற்றிற்கும் என்ன காரணம்? **கர்த்தர் நீதிமானின் வழியை அறிந்திருக் கிறார்**. அவர் அவனுடைய வாழ்க்கையை அறிந் திருப்பது மட்டுமின்றி, அதனை ஏற்றுக்கொண் டும் இருக்கிறார். இங்கே கூறப்பட்டுள்ள முரண் பாட்டின் அழுத்தத்தைக் காண்க; தீயொழுக்க வாழ்க்கையின் முடிவு நித்திய மரணம்.

ஒரு மனிதனுடைய வாழ்க்கை முறையை அடிப்படையாகக் கொண்டே அவனுடைய நித்தி யம் முடிவு செய்யப்படுகிறது என்று நாம் எப் போதும் வலியுறுத்திச் சொல்ல முடியாது. ஒருவன் இயேசு கிறிஸ்துவினிடத்தில் விசுவாசம் கொண்ட வனாக மறுபிறப்பைப் பெற்றிருக்கிறான் என்பதே அதனை முடிவு செய்யும் காரணக்கூறு. தன்னு டைய பாவத்தை அறிக்கை செய்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைத் தன்னுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவனே நீதிமான் ஆவான். அவன் கிறிஸ்துவுக்குள்ளாகப் பெற்ற புது வாழ்வின் விளைவே அவனுடைய நீதியுள்ள வாழ்க்கை. தன்னுடைய தேவை என்ன என்பதை ஏற்க மறுத்து, கர்த்தராகிய இயேசுவின் முன்னி லையில் தனது முழங்கால்களை முடக்க மறுப்ப வனே துன்மார்க்கன். அவன் இரட்சகரைத் தன்ன கத்தே ஏற்காமல், தனது தீயொழுக்கத்தையே தன்வசமாக நிலையாக வைத்துக் கொள்கிறான். இவ்விதமாக அவன் தன் அழிவை உறுதிசெய் கிறான்.

சங்கீதம் 2: மாற்றமில்லா ஆணை

இந்தப் பாடலை எந்தச் சூழ்நிலையோடு பொருத்திப் பார்ப்பது சரியாக இருக்கும் என்று எண்ணுங்கால், நாம் மகா உபத்திரவ காலத்தின் முடிவையொட்டி, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய அரசை இவ்வுலகில் நிறுவும் படி மகிமையுள்ளவராகத் திரும்பி வரும் நிகழ்ச் சிக்குச் சற்று முந்தின காலத்தை நோக்கிப் பார்க்க வேண்டும். அத்தருணத்தில் பன்னாட்டு ஆளுநர்கள் கடும் சீற்றத்துடன் ஒன்றிணைந்து, உலக ஆளுகையைக் கிறிஸ்து தாம் ஏற்று நடத்த ஏற்பாடு செய்கிறபோது அதைத் தடைசெய்ய உறுதியுடன் செயல்படுவார்கள்.

2:1-3 ஆனால் அந்த அரசுகளின் கூட்டியக்கம் வீண் முயற்சியாகவே முடிவுறும். "புறவின நாடு களும் யூதமக்களும் ஒன்றுசேர்ந்து வெற்றி வாய்ப்பே இல்லாத சதித்திட்டத்தைத் தீட்டுவது ஏன்?" என்று பாடலாசிரியன் கேட்கிறான். கர்த்த ருடைய அதிகாரத்திற்கு எதிராகவும், அவரால் அபி ஷேகம் பெற்றவருக்கு எதிராகவும் புறவின அர சர்களும் யூத ஆளுநர்களும் தீட்டிய திட்டத்தில் வெற்றிபெற முடியும் என்று எண்ணுவது எங்ஙனம்?

2:4-6 விண்ணகத்தில் வீற்றிருக்கும் இறை வன் அவர்களுடைய மதியற்ற இறுமாப்பைக் கண்டு நகைப்பார். அவர்கள் தங்கள் கைகளில் முறுக்கேற்றி, தீப்பிழம்பு போன்று குரல் எழுப்பு வதைக் குறித்து அவர் ஏளனம் செய்வார். அவர் களுடைய பெருமை பாராட்டுதலும், அச்சுறுத்த லும் ஒரு சிங்கத்திற்கு எதிராகச் சுண்டெலி கீச் சிடுவது போலக் காணப்படும்.

இறுதியில் தேவன் தமது மௌனத்தைக் கலைப்பார். அவர் பேசுகையில் அது கடுஞ்சீற்ற மும் மூர்க்கமும் நிறைந்ததாக இருக்கும், அவ ருடைய எதிரிகள் அஞ்சி நடுங்குவார்கள். **"நான் என்னுடைய பரிசுத்த பர்வதமாகிய சீயோன் மீதில் என்னுடைய ராஜாவை நிறுவினேன்"** என்னும் அவருடைய மாற்றமில்லா தீர்மானத்தை அவர்கள் கேட்பார்கள். இந்தத் தீர்மானத்தை தேவன் அறிவித்தவுடன் அதனுடைய நிறைவேறு தல், அது ஏற்கனவே நடந்து முடிந்தாற்போல நிச்சயமானதாகத் தோன்றும்.

2:7 அப்பொழுது கிறிஸ்து தமது சான்றைக் கூறுவார். அவர் தமது திருத்தந்தையோடு செய்த தனிப்பட்ட உரையாடலில் முதலாவதாக, **"நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜநிப்பித்தேன்"** என்று கூறிய செய்தியை வெளிப் படுத்துவார். இந்த ஆணை குறைந்தது நான்கு பொருளில் அறியப்படுகிறது. முதலாவது, ஒரு பொருளில் கிறிஸ்து தேவனுடைய குமாரனாக நித்திய காலமெல்லாம் இருந்து வந்திருக்கிறார். இருந்தபோதிலும் இந்த வசனம் கிறிஸ்து மனுவுரு எடுத்த நிகழ்ச்சியோடு தொடர்புபடுத்தி அப்போஸ் தலர் 13:33 இல் எடுத்தாளப்பட்டுள்ளது. மூன்றா வது பொருளில் கிறிஸ்து உயிர்த்தெழுதலில் பெறப்பட்டார் - "மரித்தோரிலிருந்து எழுந்த முதற் பேறுமானவர்" (கொலோ. 1:18). இறுதியாக, "இன்று" என்று சொல்லப்பட்டிருப்பது எதிர்காலத் தில் ஒரு நாளைக் குறிக்கும் என்று சிலர் கருது கிறார்கள். கிறிஸ்து அரசராக முடிசூட்டப்படும் நாளே அந்த நாள்.

2:8 ஆனால் திருத்தந்தை, "என்னைக் கேளும், அப்பொழுது ஜாதிகளை உமக்குச் சுதந் தரமாகவும், பூமியின் எல்லைகளை உமக்குச்

சொந்தமாகவும் கொடுப்பேன்" என்று தொடர்ந்து கூறினார். அண்டசராசரத்தின் ஆளுகையைத் தம்முடைய குமாரனுக்குத் தருவதாகத் திருத்தந்தை வாக்களித்திருக்கிறார் என்று இதனைக் கூறலாம். உலகம் யாவும் அவருடைய அதிகாரத்திற்கு ஒப்புவிக்கும். அவருடைய ஆளுகை ஒரு கரை முதல் மறுகரை வரை பரவியிருக்கும்.

2:9 இறுதியாக, எல்லாவிதக் கீழ்ப்படியாமையையும் கிளர்ச்சிகளையும் ஒடுக்குவதற்கான அதிகாரத்தைக் கிறிஸ்துவுக்குத் திருத்தந்தை தந்திருக்கிறார். அவருக்கு எதிராக எழுகிறவர்களை அவர் இருப்புக்கோலால் நொறுக்கி, குயக்கலத்தைப் போலச் சிதறடிப்பார். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போதும், அவருடைய ஆயிரமாண்டு ஆட்சிக்காலம் முழுவதிலும் இந்த அதிகாரத்தைப் பயன்படுத்துவார் என்று திருமறையிலிருந்து நாம் கற்கிறோம். அவர் அரசராக ஆளுகை செய்யத் தொடங்கும்முன் தேவனை அறியாதவர்களையும், நற்செய்திக்குக் கீழ்ப்படியாதவர்களையும் அழித்துவிடுவார். அதன் பிறகு, ஆயிரமாண்டு ஆட்சிக் காலத்தில் கிறிஸ்து இருப்புக் கோலைக்கொண்டு அரசாளுவார், கலகம் தன்னுடைய அருவருப்பான தலையைத் தூக்கும் போது அதைத் தண்டிப்பார்.

2:10,11 அடுத்தபடியாக, பரிசுத்த ஆவியான வருடைய குரல் ஒலிக்கிறது. உள்ளத்தைக் கிளர்ச்சியடையச் செய்கிற நற்செய்தி அறிவிப்பாளரைப் போல அவர் தமது வேண்டுகோளைச் சமர்ப்பித்து, இவ்வுலகத்தின் அரசர்களையும் ஆளுநர்களையும் கர்த்தரிடத்தில் அன்புகூரும்படியும் அவரைச் **சேவிக்கும்படியும்** பணிக்கிறார். அவரை வேண்டாமென்று மறுத்துரைப்பது அழிவை உண்டாக்கும், மாறாக, அவரிடத்தில் நம்பிக்கை வைப்பது பாதுகாப்பையும் மெய்யான மகிழ்ச்சியையும் உண்டுபண்ணும்.

2:12 மனிதன் தன்னுடைய படைப்பாளரை நம்புவது தெளிந்த அறிவுள்ளதும் பகுத்தறிவுக்கு ஏற்றதும், விவேகமான செயலுமாகும். இதற்கு மாறாக, சர்வ வல்லவரை நம்ப மறுப்பதும் எதிர்ப்பதும் ஒரு நபர் செய்யக்கூடிய பகுத்தறிவற்ற செயல்களாகும்.

சங்கீதம் 3: அடிக்கடி மனம் மாறுகிற இயல்பைக் குறித்துக் கற்றல்

அடிக்கடி மனம் மாறுகிற இயல்புடையவராக நாம் இருப்போமென்றால், தாவீதும் அத்தகைய இயல்புடையவனாக இருந்தான் என்னும் உண்மையை அறிந்தவர்களாக உற்சாகம் பெறுவோமாக. இந்தச் சங்கீதத்தில் அவன் துலாக்கோலில் தளர்ச்சியுற்ற இருண்ட நிலைக்கும் அமைதியான நம்பிக்கைக்கும் இடையில் ஊசலாடுகிறான் .

3:1,2 இந்தப் பாடலின் தொடக்கத்திலேயே தாவீது எதிரிகளால் அச்சுறுத்தப்பட்ட நிலையில் இருப்பதை நாம் காண்கிறோம். அவர்களுடைய எண்ணிக்கையின் மிகுதி அவனுடைய இருதயத்தில் பேரச்சத்தை ஏற்படுத்துகிறது. அத்தனைபேர் நடுவில் ஒரு மனிதனால் என்ன செய்ய முடியும்? மேலும் அவன் அவர்களுடைய வசவுச் சொற்களால் உள்ளத்தில் குத்தப்பட்டவனாயிருக்கிறான். தெய்வீக உதவி கிடைக்கும் என்னும் நம்பிக்கை இல்லாமற் போகும்படி அவனுடைய பாவம் அவனைத் துண்டித்து விட்டது என்று அவர்கள் மறைமுகமாகச் சாடுகிறார்கள்.

2 -ஆம் வசனம் புரிந்துகொள்வதற்குக் கடினமான **சேலா** என்ற சொல்லுடன் முடிவடைகிறது. சங்கீதங்களில் எழுபத்தோரு தடவை பயன்படுத்துப்பட்டுள்ள இச்சொல் இங்குதான் முதலாவது இடம்பெற்றுள்ளது, ஆகவே இதற்குப் பொருள் கூற சற்று நிதானிப்போம். நம்முடைய குறிப்புகள் விளக்கம் என்று சொல்ல முடியாதபடி நமது அறியாமையின் அறிக்கையாகவே விளங்குகிறது! இச்சொல்லின் பொருள் என்ன வென்று நமக்குத் தெரியாது என்பது ஓர் எளிய உண்மை. இதன் பொருள் என்னவாக இருக்கும் என்னும் சில கருத்துக்களை இங்கு தருவதோடு, அவற்றில் எது சிறப்பானது என்பதை வாசகர்கள் தீர்மானிக்கட்டும் என்று விட்டுவிடுகிறோம். இதுவே எங்களால் இயன்ற செயல்.

> பாடலின் ஒலியை உயர்த்த வேண்டும் அல்லது உடனிருக்கும் இசைக்கருவிகளின் ஒலியைக் கூட்ட வேண்டும் என்பது இதன் பொருளாயிருக்கும். அதாவது, உரக்கப் பாடு அல்லது உரக்க இசையெழுப்பு என்பது சேலா என்னும் சொல்லின் பொருள்!
>
> இது ஓர் இடைநிறுத்தம் அல்லது அமைதி என்பது இதன் பொருளாகும். "நிறுத்துங்கள், இதைக் குறித்துச் சிந்தியுங்கள்" என்பது போல இது இருக்கிறது.
>
> எழுபதின்மர் கிரேக்க மொழிபெயர்ப்பில் diapsalmos என்று இச்சொல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, உரக்க இசையெழுப்புதல் என்பது அந்தக் கிரேக்கச் சொல்லின் பொருளாகும். அல்லது பெரும்பாலும் இசைக்கருவிகளை மட்டும் பயன்படுத்திய இடைவேளை

நிகழ்ச்சி என்பது இதன் பொருளாக இருக்கலாம்.[8]

அதே வரிகளைத் திரும்பவும் பாடுதல் என்பது இதன் பொருள் என்று சிலர் கருதுகிறார்கள்.

செய்யுளின் ஒரு பிரிவு முடிவடைவதைக் குறிக்கும் சொல்லாக இது இருக்கக் கூடும்.

உடலை வளைத்துத் தொழுகைபுரிதல் அல்லது மரியாதை செலுத்துதல் என்னும் செயலைக் குறிக்கும் சொல் என்று சிலர் கருதுகிறார்கள்.

3:3 பாடலின் மனநிலை 3 -ஆவது வசனத்தில் மாற்றமடைகிறது. தாவீது தன் கண்களை பகைவரிடத்திலிருந்து எடுத்து, கர்த்தர் மேல் பதிக்கிறான். அவனுடைய உளப்பாங்கு முற்றிலும் மாறுபடுகிறது. யெகோவாவிடத்தில் தனக்கொரு **கேடகம்** இருப்பதை அவன் உணருகிறான். அவரே **மகிமையின்** ஆதாரமாகவும் அவனுடைய **தலையை உயர்த்துபவராகவும்** இருக்கிறார். கர்த்தர் அவனுடைய **கேடகமாக** இருந்து, அவனுடைய பகைவரிடமிருந்து முழுப் பாதுகாப்பைத் தருகிறார். அவனுடைய மகிமையாக இருந்து, அவன்மேல் சுமத்தப்பட்ட அவமானம், நிந்தை, வசைச்சொற்கள் ஆகியவற்றிற்குப் பதிலாக அவனுக்குக் கனத்தையும், புகழ்ச்சியையும் வெற்றியையும் கொடுத்தார். அவனுடைய தலையை உயர்த்துபவராகக் கர்த்தர் அவனை உற்சாகப்படுத்தி உயர்த்துகிறார்.

3:4 தேவனைக் குறித்த இத்தகைய பெரிதும் உண்மையுமான சிந்தனைகளால் உயிரூட்டம் பெற்ற தாவீது மன்றாடுதலோடு கர்த்தரிடம் சென்று, தன்னுடைய விண்ணப்பம் கேட்கப்பட்டு விடையளிக்கப்பட்டுள்ளது என்னும் உறுதியைப் பெறுகிறான். தேவன் **தமது பரிசுத்த பர்வதத்திலிருந்து** பதில் உரைக்கிறார், அதாவது, அவர் தம்முடைய மக்களோடு குடியிருக்கும் இடமாகிய எருசலேம் ஆலயத்திலிருந்து பேசுகிறார்.

3:5,6 யெகோவாவின் பாதுகாப்பைக் குறித்த உறுதியைப் பெற்ற பாடலாசிரியன் படுத்து உறங்கச் செல்லுகிறான். வாழ்க்கையின் கடுந்துன்பங்களை உண்டாக்குகிற சூழ்நிலைகளின் நடுவே தேவனிடத்தில் நம்பிக்கை கொண்டிருக்கும் மக்களுக்கு அவருடைய ஈவாக இனிமையான உறக்கம் அருளப்படுகிறது.

இரவு நேர இனிமையான ஓய்வுக்குப் பிறகு, தீங்கு வரப்போகிறது என்னும் அச்சத்தால் நரம்புகளின் இறுக்கத்தைத் தளர்த்தி அமைதியை உண்டாக்கியவர் கர்த்தர் என்னும் உணர்வோடு தாவீது துயில் எழுகிறான். இப்பொழுதோ அவனுடைய பகைவர் **பத்தாயிரம் பேர்** அவனைச் சூழ்ந்து கொண்டாலும் அவர்களை அச்சமின்றி எதிர்த்து நிற்க ஊக்கம் பெற்றவனாக இருக்கிறான்.

3:7 ஆனால் இனிமேல் ஜெபம் தேவையில்லை என்பது இதன் பொருளன்று. நேற்று இரவு தாங்கிய கிருபை இன்றைக்குப் பயனற்றது. ஒவ்வொரு நாளும் தேவன் அருளுகிற புதிய கிருபை நமக்குத் தேவை. ஆகவே தாவீது இடைவிடாத விடுதலையைப் பெறும்படி, தேவன் அவனுடைய எதிரிகளின் **தாடையிலே அடித்து,** அவர்களுடைய **பற்களைத் தகர்த்துப் போடுவார்** என்னும் நம்பிக்கையுடன் கர்த்தரிடமாய் வருகிறான்.

3:8 தாவீதைப் பொறுத்தவரை, யெகோவா ஒருவரால் மட்டுமே எவன் ஒருவனுக்கும் மீட்பைத் தரமுடியும்; **இரட்சிப்பு கர்த்தர்** ஒருவருக்கு மட்டுமே உரியது. ஆகவே தேவனுடைய வியத்தகு மீட்பை அவர் தம்முடைய மக்களுக்குத் தொடர்ந்து வெளிப்படுத்த வேண்டும் என்று அவன் விண்ணப்பிக்கிறான்.

இந்தப் பாடலின் தலைப்பை மீண்டும் ஒரு முறை நாம் காண்போமானால் தேவனுடைய மனிதன் தாவீதின் அலைக்கழிக்கப்பட்ட உணர்ச்சிகளை நம்மால் இன்னும் சிறப்பாக அறிந்து கொள்ள முடியும்:

"தாவீது தன் குமாரன் அப்சலோமுக்குத் தப்பி ஓடியபோது பாடின சங்கீதம்."

தாவீதின் பகைவருடைய தலைவன் அவனுடைய சொந்த மகனே ஆவான்! அவனுடைய பகைவர்கள் அவன் மீது போர்தொடுத்த அயல் நாட்டவர்களானால் அது மோசமானதாகத்தான் இருந்திருக்கும். ஆனால் அவ்வாறு போர் தொடுத்தவர்களைத் தலைமை தாங்கி நடத்தியவன் கலகக்காரனாகிய அவனுடைய சொந்த மகனே ஆவான். அதன் காரணமாக அடைந்த துயரமும் மனக்கசப்பும் பன்மடங்கு பெருகியிருந்தது.

சங்கீதம் 4: நோவகற்றும் இறைவனின் இரகசிய மருந்து

4:1 கர்த்தர் முன்னிலையில் வந்த தாவீது, "என் நீதியின் தேவனே" என்று அவரை அழைக்கிறான். அவனை முறையாக விசாரிப்பதற்கு நீதியின் தேவன் ஒருவரே நம்பகமானவர் என்னும் எண்ணத்தை இது அறிவிக்கிறது. மனிதர்கள் நற்

பெயருக்குக் களங்கம் விளைவிக்கலாம், வேண்டாமென்று புறக்கணிக்கலாம்; ஆனால் உண்மைகளை தேவன் அறிந்திருக்கிறார், நீதியை வெற்றியடையச் செய்பவரும் அவரே!

"**நெருக்கத்தில் இருந்த எனக்கு** விடுதலையைக் கொடுத்தீர்" என்று தாவீது தொடர்ந்து சொல்லுகிறான். திருவாளர் டார்பி தனது புது மொழிபெயர்ப்பில் இதனை **"நெருக்கத்தில் இருந்த எனக்கு விசாலமுண்டாக்கினீர்"** என்கிறார் (தமிழிலும் இவ்வாறே இருக்கிறது). பொதுவாக நெருக்கப்படும் வேளையில் ஒரு பொருளின் சுற்றளவு அல்லது கொள்ளளவு குறையலாம். ஆனால் இறைவனோ நெருக்கத்தைப் பயன்படுத்தி ஆவிக்குரிய பெருக்கத்தை உண்டு பண்ணுகிறார்! செல்வம் ஏதொரு நன்மையையும் ஏற்படுத்துகிறதில்லை, மாறாக இன்னல், வளர்ச்சியையும் நிறைவையும் உண்டாக்குகிறது. திருவாளர் ஸ்பர்ஜன் ஒருமுறை இவ்வாறு கூறினார்:

> என்னுடைய வசதிகள், இனிய தருணங்கள், மகிழ்ச்சியான நேரங்கள் ஆகியவற்றின் வாயிலாக நான் பெற்ற சலுகைகள் ஒரு சல்லிக்காசு கூடப் பெறா என்று எண்ணுகிறேன். ஆனால் என்னுடைய வருத்தங்கள், வேதனைகள், துயரங்கள் ஆகியவற்றின் வாயிலாக நான் பெற்ற நன்மைகள் கணக்கில் அடங்கா. சுத்தியலுக்கும் பட்டறைக் கல்லுக்கும், அக்கினிக்கும் அரத்துக்கும் நான் என்ன கைம்மாறு செய்வேன்! என் வீட்டில் உள்ள பொருட்களிலேயே மிகவும் சிறந்தது துயர் மிகுந்த நோவுதான்.[9]

கடந்த காலத்தில் தாவீது நெருக்கப்பட்டபோது, அவனுடைய மன்றாட்டுக்கு தேவன் எவ்வாறு விடைபகர்ந்தார் என்பதை நினைவுகூர்ந்தவனாக, தன்னுடைய மன்றாட்டை அவர் மீண்டும் கேட்டருளுவார் என்று தடையின்றி விண்ணப்பிக்கிறான்.

4:2,3 தாவீதின் விண்ணப்பம் ஏறெடுக்கப்படுவதற்கான உடனடியான தருணத்தை 2-5 வசனங்களின் வாயிலாக ஊகிக்க முடிகிறது. நேர்மை தவறிய மனிதர்களால் அவன் இழிவுபடுத்தப்பட்டு, பழிதூற்றப்பட்டான். அவனுக்கு எதிராக அவர்கள் குறைகூறி அவனுடைய பெயரைச் சேற்றிலே தோய்த்து, அவனுடைய நடத்தைக்கு அவப்பெயர் உண்டாக்கினார்கள். மேலும் அவன் மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைக் கூறி அவனுடைய புகழுக்குக் குந்தகம் விளைவித்தார்கள். இவ்வாறு அவர்கள் ஒளிவு மறைவு அற்ற வகையில் **பொய்யையே** பின்பற்றினார்கள்.

அவர்கள் **எதுவரைக்கும்** அறிவற்ற வகையில் தனக்கு எதிராகக் கடுஞ்சீற்றத்துடன் செயல்படுவார்கள் என்று தாவீது வினவுகிறான். மேலும் அவனை அழிப்பதற்காக அவர்கள் செய்யும் முயற்சிகள் யாவும் பயனற்றுப் போய்விடும், ஏனெனில் தேவன்தாமே அவன் பக்கம் இருக்கிறார் என்று நினைவுபடுத்துகிறான், **"பக்தியுள்ளவனைக் கர்த்தர் தமக்காகத் தெரிந்து கொண்டாரென்று அறியுங்கள்."** கர்த்தரிடத்தில் நம்பிக்கை கொண்டவன் "அவருடைய கண்மணிக்கு" ஒப்பாக இருக்கிறான் (சக. 2:8). அவர்களுடைய பெயர்களை அவர் தமது உள்ளங்கைகளில் வரைந்து வைத்திருக்கிறார் (ஏசா. 49:16). அவர்கள் கூப்பிடும்போது அவர் செவிசாய்க்கிறார், அவர்களுக்கு உதவி செய்ய விரைந்து செல்லுகிறார். தேவன் நம் பக்கத்தில் இருந்தால் நமக்கு எதிராக எவன் வெற்றி பெற முடியும் (ரோமர் 8:31) என்னும் பவுலின் வாதத்தைத் தாவீது இவ்வாறாக எதிர்நோக்கியவனாக இருந்தான்.

4:4 தாவீதின் பகைஞர் தங்களுடைய சீற்றத்தை அடக்கிக்கொள்ள வேண்டும். அவர்கள் **கோபப்பட** வேண்டுமானால், அது நீதியின் பொருட்டே இருக்க வேண்டும். **"நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள்"** என்னும் சொற்றொடர் எபேசியர் 4:26 -இல் எடுத்தாளப்பட்டுள்ளது. அங்கு அது விசுவாசிகளுக்குச் சொல்லப்பட்டுள்ளது. தேவனுடைய நோக்கத்திற்காகக் கோபப்படுவது நியாயமே, ஆனால் ஒருவன் தனக்காகக் கோபப்படுவது ஒருக்காலும் சரியன்று என்று அங்கு அது நினைவுபடுத்தப்பட்டுள்ளது. இங்கு 4 -ஆவது சங்கீதத்தில் அது பொல்லாத மனிதர்களிடம் சொல்லப்பட்டதாகும். கோபம் பொங்கியெழுகிறபோது அது வன்முறையாக மாறிவிடும் என்று அவர்கள் எச்சரிக்கப்படுகிறார்கள். அவர்கள் நள்ளிரவில் விழித்திருக்கும் அமைதியான நேரத்தில், தங்களுடைய இருதயங்களைச் சோதித்துப் பார்த்து, தேவனுக்கு எதிராகப் போரிடுவது எவ்வளவு மதியீனமான செயல் என்று சிந்தித்துப்பார்க்க வேண்டும். அவ்வாறு அவர்கள் தெளிந்த புத்தியோடு செயல்படுவார்கள் எனில், அவர்களது பழிதூற்றுதல் நின்று போகும், பொல்லாத திட்டங்கள் முடிவுக்கு வரும்.

4:5 ஒரு துணிவுமிக்க நற்செய்திப் பணியாளனின் வற்புறுத்தும் சொற்களாலே, பொல்லாத மனிதர்களுக்குத் தாவீது அறிவுரை வழங்குகிறான். அச்சொற்களில் நடைமுறை **நீதியும்**

கர்த்தரிடத்தில் விசுவாசமும் வலியுறுத்தப்பட்டுள்ளன: "உங்கள் **பலிகளினாலே நீதியைச்** செலுத்துங்கள்" (கெலிநேயு). ஆனால் **கர்த்தரிடத்தில் நம்பிக்கையாயிருப்பவர்கள்** மட்டுமே இதனைச் செய்ய முடியும்.

4:6 பலர் செல்வத்தையும் மகிழ்ச்சியையும் நாடுகிறார்கள். இடைவிடாமல் ஏதாவது **நன்மை** கிடைக்க வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் ஆசிர்வதிப்பவர் இல்லாமல் ஆசிர்வாதத்தையும், தேவன் இல்லாமல் நன்மையையும் அவர்கள் விரும்புவதே பிரச்சினை. கிறிஸ்துவினால் நிறையப்பெற்ற வாழ்க்கையில் உண்டாகிற எல்லாப் பயன்களையும் அவர்கள் விரும்புகிறார்கள், ஆனால் அவர்கள் நன்கொடை வழங்குபவர் தேவையில்லை என்று கூறுகிறார்கள்.

அவர்களுக்கு முற்றிலும் மாறான நிலையில், தாவீது நன்மை தரும் நீரூற்றின் ஆதாரத்தின் அருகே நேரடியாகச் சென்று, **"கர்த்தாவே, உம்முடைய முகத்தின் ஒளியை எங்கள்மேல் பிரகாசிக்கப்பண்ணும்"** என்கிறான்.

4:7 தீயொழுக்கம் நிறைந்தவர்களின் தானியக் களஞ்சியம் நிறைந்து, பீப்பாய்கள் திராட்சை ரசத்தால் நிரம்பி வழியும்போது, அவர்கள் பெறுகிற மகிழ்ச்சியைக் காட்டிலும், தாவீது கர்த்தரிடத்தில் கூடுதலான மகிழ்ச்சியைப் பெற்றிருக்கிறான். "நீர் எனது இருதயத்திற்குத் தருகிற மகிழ்ச்சிக்கு ஒப்பான மகிழ்ச்சி, தானியம் மற்றும் திராட்சை ரசம் ஆகியவற்றின் நிறைவான அறுவடையினால் ஒருபோதும் உண்டாவதில்லை" (நாக்ஸ்).

4:8 எல்லாத் தேவைகளுக்கும் கர்த்தர் போதுமானவராக இருக்கிறார் என்னும் உண்மையால் உறுதிபெற்ற பாடலாசிரியனின் உள்ளத்தில் எழுந்த கவலை தணிகிறது. இப்பொழுது கர்த்தரே அவனைச் சுகமாய்த் தங்கப் பண்ணுகிறார் என்பதை அறிந்தவனாக, அவன் சமாதானத்தோடு படுத்து உறங்கலாம். சின்னஞ் சிறிய எட்டு வசனங்கள் அடங்கிய மன்றாட்டு எத்தகைய மாற்றத்தை உண்டு பண்ணியிருக்கிறது!

சங்கீதம் 5: காலை மன்றாட்டு

5 -ஆவது சங்கீதத்தின் தலைப்பில் **"நெகிலோத்தென்னும் வாத்தியத்தில் வாசிக்க இராகத் தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்"** என்னும் குறிப்பு காணப்படுகிறது.

பல சங்கீதங்களின் தலைப்புகள் இதற்கு இணையாக இருப்பதால் இந்தத் தலைப்புகள் உயிரூட்டம் பெற்ற திருமறை வசனங்களின் ஒரு பகுதியே என்று வேத அறிஞர் பலர் கருதுகிறார்கள் என்பதை நாம் குறிப்பிட்டே ஆக வேண்டும். எபிரெய மூலப் பிரதியைப் பின்பற்றி, திருமறையின் பல பிரதிகளில் இந்தத் தலைப்புகள் முதல் வசனமாகச் சேர்க்கப்பட்டுள்ளன. உண்மையில் முந்தைய சங்கீதத்தின் இறுதிப் பகுதியே அடுத்த சங்கீதத்தின் தலைப்பாக இடம் பெற்றுள்ளது என்று சில அறிஞர்கள் கருதுகிறார்கள். ஆனால் இதற்கான சான்று மனநிறைவு அளிக்கத்தக்க வகையில் இல்லை. இந்தத் தலைப்புகளில் காணப்படும் பெரிய சிக்கல் என்னவெனில், பெரும்பாலான தலைப்புகளின் பொருள் தெளிவாக இல்லை என்பதே ஆகும். 5 -ஆவது சங்கீதத்தில் காணப்படும் தலைப்பு, பாடலுடன் பயன்படுத்தப்பட்டுள்ள இசைக் கருவிகளோடு தொடர்புடையது ஆகும். வேறு எந்தப் பாடலின் மெட்டில் ஒரு சங்கீதத்தைப் பாடலாம் என்னும் குறிப்பை அந்தப் பாடலின் தலைப்பு கொண்டிருப்பதாக, நாம் பல சங்கீதங்களின் தலைப்புகளில் காண முடியும். எடுத்துக்காட்டாக 57 -ஆவது சங்கீதத்தின் தலைப்பு "தனக்கு நஷ்டம் நேரிடாதபடி என்பதற்கு ஏற்ப அமைக்கப்பட்டுள்ளது" என்று உள்ளது. அன்றைய நாட்களில் இது நன்கு அறியப்பட்ட வேறொரு பாடலாக இருந்திருக்க வேண்டும். ஐயத்திற்கு இடமளிக்கக் கூடிய பொருளைத் தரும் தலைப்புகள் அதிக அளவில் இருப்பதால் NKJV மொழிபெயர்ப்பாளர்கள் எபிரெயச் சொற்களை அதன் படியே ஆங்கில எழுத்துகளில் எழுதியிருப்பதைக் காணலாம் (தமிழிலும் அவ்வாறே உள்ளது). எடுத்துக்காட்டாக 16 -ஆவது சங்கீதம் "தாவீது எழுதின மிக்தாம்[10] என்னும் பொற்பணதிக்கீதம்" என்ற தலைப்பைப் பெற்றிருக்கிறது. எனினும் இந்தப் பாடல்களைப் படித்து மகிழ்ந்து பாராட்டும் திறன், தலைப்பின் பொருளை முழுவதுமாகப் புரிந்துகொள்வதைச் சார்ந்தது அல்லவென்பது நம்முடைய நற்பேறே ஆகும்.

5 -ஆவது சங்கீதம் காலை மன்றாட்டு ஆகும். நீதிமான்களிடத்திலும் பொல்லாதவர்களிடத்திலும் இறைவன் எதிர்மாறான மனப்பான்மையுடன் ஈடுபடுகிறார் என்பதைத் தாவீது தனது மன்றாட்டில் பிரதிபலிக்கிறான்.

5:1,2 தொடக்கத்திலேயே, தாவீது தன்னுடைய சொற்களை மட்டுமின்றி தன்னுடைய **தியானத்தையும் கவனிக்கும்படி** இறைவனிடத்தில் வேண்டுகிறான். இது சரியான வேண்டுகோள் ஆகும். நாம் பேசுகிற சொற்களைப் போலவே

நம்முடைய மனதின் தியானத்திற்கும் பரிசுத்த ஆவியானவரால் எளிதாகப் பொருள் விளக்கம் அளிக்க முடியும்.

சங்கீத ஆசிரியன் தொடர்ந்து, தன்னுடைய தியானத்தை மட்டுமின்றி, தன்னுடைய **வேண்டுதலின் சத்தத்தையும்** கேட்கும்படி தேவனிடத்தில் விண்ணப்பிக்கிறான். வெறுமனே சொற்களைக் காட்டிலும், குரலின் ஏற்றத்தாழ்வு மற்றும் ஆழ்ந்த உள்ளார்வமிக்க தொனியின் அளவு ஆகியவற்றை இது குறிப்பிடுகிறது எனலாம்.

"என் ராஜாவே என் தேவனே" என்று தாவீது கர்த்தரை நோக்கி அழைக்கையில், அவன் கர்த்தரோடு கொண்டிருந்த இனிமையான, தனிப்பட்ட, நெருக்கமான உறவை வெளிப்படுத்துகிறான். **"நான் உம்மிடத்தில் விண்ணப்பம் பண்ணுவேன்"** என்னும் சொற்களின் மூலமாக, மெய்யான இறைவனாகிய அவர் ஒருவரிடம் மட்டுமே அவன் தனது மன்றாட்டை ஏறெடுப்பதை அறிவிக்கிறான். "உம்மிடத்தில், உம்மிடத்தில் மட்டுமே" என்பதே அதன் பொருள். அந்த உறவு சொந்தம் என்று உரிமை பாராட்டுவதை மட்டுமல்ல, முழு உரிமையையும் குறிக்கிறது.

5:3 தாவீது எப்போதாவது தனது மன்றாட்டை ஏறெடுக்கிறவனாக இல்லாமல், குறித்த காலத்தில் திரும்பத் திரும்ப விண்ணப்பிக்கிறவனாக இருந்தான். ஒவ்வொரு நாள் **காலையிலும்** கர்த்தர் அவனுடைய சத்தத்தைக் கேட்டார். அந்த தேவ மனிதன் ஒவ்வொரு நாள் **காலையிலும்** தொழுகையும் விண்ணப்பமும் அடங்கிய பலியை ஆயத்தம் செய்து, அந்த நாள் முழுவதும் கர்த்தர் தம்மை அவனுக்கு வெளிப்படுத்தும்படி காத்திருந்தான். நாம் பெரும்பாலும் இறைவன் என்ன பதிற்செயல் செய்கிறார் என்பதை விழிப்போடு கவனிக்கிறதில்லை. "நாம் பல பதில்களைத் தவறவிட்டிருக்கிறோம். ஏனென்றால் திரும்பி வருகிற கப்பல்களுக்காக நாம் துறைமுகத்தில் காத்திருப்பதில் களைத்துப் போகிறோம்" என்று திருவாளர் F. B. மேயர் கூறினார்.

5:4-6 எப்பொழுதும் பகைவர்களைக் குறித்த எச்சரிக்கையோடு இருந்த தாவீது, இறைவனின் அதிதூய்மையையும், நீதியையும் நினைவு கூர்ந்தவனாகத் தன்னுடைய விண்ணப்பத்தில் கொண்டிருந்த நம்பிக்கையில் உறுதி பெறுகிறான். கிருபாசனத்தைச் சென்றடைய விசுவாசிகளுக்கு இரகசியமான பாதை இருக்கிறது. துன்மார்க்கரோ அப்படியில்லை. எவ்விதத் **துன்மார்க்கத்தையும் தேவன்** பொறுத்துக் கொள்வதில்லை, அதில் பிரியப்படுவதுமில்லை. **தீமை** ஓர் இரவு விருந்தாளியாக அவரிடத்தில் வந்து தங்க முடியாது. பெருமை பாராட்டுகிறவர்கள் அரசனுடைய முன்னிலையில் வந்து அவரைச் சந்திப்பதற்கு அனுமதி தரப்படுவதில்லை. தீமை செய்கிற அனைவரையும் அவர் வெறுக்கிறார். தேவன் அன்பாயிருக்கிறார், ஆகவே அவரால் ஒருவரையும் வெறுக்க முடியாது என்னும் கற்பனையாகப் புனையப்பெற்ற நடைமுறை வழக்கில் இருந்து வரும் கூற்று இங்கு உடைத்தெறியப்படுகிறது! எல்லாப் பொய்யையும் தேவன் தண்டிக்க வேண்டும், கொலைகாரர், ஏமாற்றுபவர் யாவரையும் அவர் அருவருக்க வேண்டும் என்று அவருடைய பரிசுத்தம் கோருகிறது.

5:7 தாவீதின் பகைவர்களாகிய பொல்லாத மனிதர்களுக்கு முற்றிலும் மாறுபட்ட நிலையில், இறைவனின் ஒருபோதும் தவறாத **பெரிதான இரக்கத்தினால்** அல்லது கிருபையினால் அவன் கர்த்தருடைய முன்னிலைக்கு உடனடியாகச் செல்வதற்கான அனுமதியைப் பெற்றிருந்தான். பயபக்தியுள்ள அனைத்து யூதர்களையும் போலவே, தாவீதும் ஆழ்ந்த மரியாதையுடன் கூடிய உள்ளத்தோடு **பரிசுத்த ஆலயத்தை** நோக்கித் தொழுதுகொண்டான். உண்மையான ஆலயம் தாவீது மரணமடையும்வரை கட்டப்படவில்லை என்பதால், அந்தச் சொல் 1 சாமுவேல் 1:9; 3:3; 2 சாமுவேல் 22:7 -ஆகிய இடங்களில் பயன்படுத்தப்பட்டிருப்பது போலவே இங்கும் ஆசரிப்புக் கூடாரத்தையே குறிப்பிடும்.

5:8 தன்னுடைய பகைவர்களால் அலைக்கழிக்கப்பட்டுத் துன்புற்றிருந்த தாவீது, ஆபத்துகள் சூழ்ந்திருந்த நிலையிருந்து பளிங்குபோன்ற தெளிவான பாதையில் பாதுகாப்பான இடத்திற்கு வழிநடத்துவதன் மூலம் கர்த்தர் தம்முடைய நீதியை வெளிப்படுத்தும்படி வேண்டுகிறான்.

5:9 அடுத்ததாக, இறைவன் தம்முடைய நேர்மையான ஊழியனின் நிலைப்பாடே சரியானது என்பதை மெய்ப்பித்து, துன்மார்க்கரான பகைவரைத் தண்டிக்க வேண்டும் என்று தாவீது வேண்டுகிறான். அவர்கள் கூறுகிற எதையும் நம்ப முடியாது. அவர்களுடைய உள்ளான வாழ்வு, அவர்களுடைய எண்ணங்கள் மற்றும் நோக்கங்கள் முழுவதும் கேடுற்றிருக்கின்றன; அவை தொடர்ந்து **அழிவை** நோக்கியே சென்று கொண்டிருக்கின்றன. அவர்களது **தொண்டையோ திறந்திருக்கும் சவக்குழியைப்** போலிருக்கிறது, அதன் தூய்மை கெட்ட நிலையால் அது அழுகி

நாற்றமெடுக்கிறது, பாதிக்கப்பட்டவர்களை அழித்துப் போட ஆயத்தமாயிருக்கிறது. அவர்கள் வஞ்சகம் பேசுவதில் நீண்ட நாட்கள் பழக்கப்பட்டவர்களும் கபட நாடகம் ஆடுகிறவர்களுமாக இருக்கிறார்கள்.

5:10 அவர்கள் அழிய வேண்டியதே நேர்மையானது. அவர்கள் தங்களுடைய குற்றங்களைச் சுமக்க வேண்டும். அவர்களுடைய பொல்லாத சதிச்செயல்கள் அவர்களுக்கே தீங்கு விளைவிக்கட்டும். அவர்களுடைய எண்ணிக்கையிலடங்கா **பாவங்களின் நிமித்தம்** அவர்கள் துரத்திவிடப்படவேண்டும். அவர்கள் கர்த்தராகிய தேவனுக்கு எதிராகக் **கலகம் பண்ணியதே** அவர்களது தலையாய **பாவமாகும்.**

5:11,12 தேவன் நியாயத்தீர்ப்பின்போது தம்முடைய எதிரிகளைத் தண்டிக்கிறபோது, அவருடைய நண்பர்கள் அவரை வல்லமையும் நிச்சயமும் உடைய அடைக்கலமாகப் பெற்றிருப்பதால் மகிழ்ந்து கெம்பீரிக்கப் பாத்திரராக விளங்குகிறார்கள். யெகோவா என்றென்றும் வழுவாத பாதுகாவலராக இருப்பதால், அவரிடத்தில் அன்புகூருகிறவர்கள் அவரை உயர்த்துவார்களாக! தேவன் நீதிமான்களுக்குத் தயவு பாராட்டுகிறார் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. அவர் **நீதிமானைப்** பாதுகாக்கும் **கேடகம்** போன்று கிருபையினால் **சூழ்ந்து கொள்கிறார்.**

சங்கீதம் 6: இரட்டிப்பான துன்பம்

கொடிய நோயினால் துன்பம் அனுபவிப்பது கேடுற்ற நிலையாகும்; ஆனால் தாவீது அது மட்டுமின்றி பகைஞருடைய வேதனை உண்டாக்குகிற நெருக்குதலும் சேர்ந்ததால் அதிக வருத்தத்திற்கு உள்ளானான். பெரும்பாலும், அவனுடைய நிலை நம்பிக்கை இழந்த வகையில் இருந்ததாக எண்ணி அவர்கள் காழ்ப்புணர்ச்சியோடு மகிழ்ந்திருந்தார்கள் என்று தோன்றுகிறது.

6:1 தன்னுடைய ஏதோவொரு தீயொழுக்கச் செயலால் தேவனால் அடிபட்டுத் தனக்கு நோய் ஏற்பட்டுள்ளது என்று தாவீது கருதுகிறான். நம்மைக் குறித்தும் பொதுவாக இப்படித்தான் நினைக்கிறோம்; பெரும்பாலான நேரங்களில் இதுவே நம்முடைய மனதில் தோன்றுகிற முதலாவது எண்ணமாகும். இவ்வாறு நோயின் காரணத்தைக் கண்டறிவது சில வேளைகளில் சரியாக இருக்கிறது: ஒரு விசுவாசியின் வாழ்க்கையில் அறிக்கை செய்யப்படாத பாவத்தால் சில நோய்கள் உண்மையாகவே உண்டாகின்றன (1 கொரி. 11:30). ஆனால் எப்போதும் இது சரியாக இருப்பதில்லை. தேவன் தம்முடைய வல்லமையையும் மகிமையையும் வெளிப்படுத்தும்படி ஓர் ஒழுங்குபடுத்தும் கருவியாக நோயை அவ்வப்போது அனுமதிக்கிறார் (யோவான் 9:3; 11:4), அல்லது ஆவிக்குரிய கனியை உற்பத்தி செய்வதற்காக ஒரு வடிகாலாக நோயை அனுமதிக்கிறார் (ரோமர் 5:3), அல்லது பாவத்தைத் தவிர்ப்பதற்காக அதைப் பயன்படுத்துகிறார் (2 கொரி. 12:7) அல்லது கூடுதலான வேலையின் நிமித்தம் (பிலி. 2:30), வயதின் முதிர்ச்சியினால் (பிர. 12:3-6) நோய் உண்டாகிறது.

நோய் தாக்குகிறபோது, அறிக்கை செய்யாத பாவம் நம்முடைய வாழ்க்கையில் இல்லை என்று முதலாவதாக உறுதிசெய்ய வேண்டும். அதன் பிறகு, அந்த நோயின் மூலமாகக் கர்த்தர் தமது நோக்கத்தை நம்முடைய வாழ்க்கையில் நிறைவேற்ற வேண்டும் என்றும், நாம் குணப்பட வேண்டும் என்றும் அவரிடத்தில் விண்ணப்பிக்க வேண்டும். அதன் பிறகு மருத்துவரை நாடுவதும் மருந்துகளைப் பயன்படுத்துவதும் முறையானதே, ஆயினும் நம்முடைய நம்பிக்கை கர்த்தரிடத்தில் இருக்க வேண்டுமேயொழிய, அவர் பயன்படுத்துகிற வழிமுறையைச் சார்ந்ததாக இருக்கக் கூடாது (2 நாளா. 16:12). உடல் நலமாகுதல், அற்புதமான முறையிலோ சாதாரணமாகவோ எப்படியிருந்தாலும் அனைத்தும் கர்த்தருடையதே. ஒரு குறிப்பிட்ட நோயின் தாக்குதலில் குணமாக்குவதை அவர் தெரிந்தெடுக்கவில்லையென்றால், பாடு அனுபவிப்பதற்கோ மரணம் அடைவதற்கோ அவர் கிருபையை நல்குவார். சாவுக்கான கிருபை, நமக்குத் தேவை ஏற்பட்டாலொழிய சாதாரணமாகக் கிடைக்காது.

6:2,3 சங்கீத ஆசிரியன் தான் உடல்நலம் பெறவேண்டும் என்னும் விண்ணப்பத்தைத் தெளிவான சொற்களால் வெளிப்படுத்தினான். அவன் உடல் வலிமை இழந்து கொண்டிருந்தான். அவனுடைய எலும்புகள் தொடர்ந்து வேதனையைக் கொடுத்துக் கொண்டிருந்தன. அவனுடைய உணர்ச்சிகள், அறிவுத்திறம், சித்தம் ஆகிய அனைத்தும் அடங்கிய உள்ளான வாழ்க்கை பாதிக்கப்பட்டிருந்தது. ஆனால் கர்த்தரோ மிகவும் தாமதமாகச் செயல்படுவது போலத் தோன்றியது. துன்பம் அனுபவிக்கிறவனை அவர் கிருபையாகக் குணப்படுத்துவதற்கு இன்னும் **எவ்வளவு காலம்** செல்லும்?

6:4 கர்த்தர் கவலையற்ற மனப்பான்மையோடு செயல்படுவதாகத் தோன்றும் நிலையிலிருந்து திரும்ப வேண்டுமென்றும், தன்னுடைய வாழ்வை நோயினின்றும் சாவினின்றும் **காப்பாற்ற** வேண்டும் என்றும் தாவீது விண்ணப்பிக்கிறான். கடுந் துயரத்திலிருந்து தான் விடுவிக்கப்படுவது யெகோவாவின் மாறாத இரக்கம் என்பதே தாவீதின் ஒரே வேண்டுகோளாக இருக்கிறது.

6:5 உடல் நலம் பெறுவது பற்றிய வழக்கத்திற்கு மாறான வாதம் அடுத்து இடம் பெற்றுள்ளது, அது யாதெனில், தாவீது மரணம் அடைவான் எனில் அதில் தேவனுக்கு எந்த ஆதாயமும் இல்லை. தாவீது உயிரோடிருக்கும்வரை, அவன் அவரை நினைவுகூர்ந்து தொழுவது உறுதி. மாறாக, அவன் இறந்து போனாலோ, தேவன் மறக்கப்படுவார். ஆவியற்ற சரீரம் அவரைத் துதிக்காது.

சரீரத்தைப் பொறுத்தவரை இந்த வாதத்தில் ஓரளவு உண்மை இருக்கிறது. செத்த பிணத்திற்கு நினைவும் இருக்காது, தொழுவதற்கான ஆற்றலும் இருக்காது. ஆனால் ஆவியையும் ஆத்துமாவையும் பொறுத்தவரை, மரணத்திற்குப் பிறகு என்ன நடக்கும் என்பதைப் பற்றிய அறிவு பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களுக்கு ஓரளவே இருந்தது என்பதை இந்த வாதம் எடுத்துரைக்கிறது. முழு வெளிப்பாட்டைக் கிறிஸ்து நமக்குத் தந்திருப்பதற்காக நாம் அவருக்கு நன்றி செலுத்துவோம். இப்பொழுது ஒரு விசுவாசி மரண மடைவானென்றால் அவனுடைய பூமிக்குரிய சரீரத்தை விடுத்து, கிறிஸ்துவோடு இருக்கும்படி செல்கிறான். அது அதிக நன்மையானது (பிலி. 1:23). அவன் இந்த உடலைவிட்டுப் பிரிந்து கர்த்தரோடு குடியிருப்பான் (2 கொரி. 5:8). ஆகவே விசுவாசியானவன் ஆத்தும உறக்கம் என்னும் இடைப்பட்ட நிலைக்குச் செல்லுவதில்லை. மாறாக, கிறிஸ்துவின் முன்னிலையில், தன்னுணர்வுடன் அவரைப் புகழ்ந்து தொழுபவனாக இருப்பான்.

தாவீது தான் பெற்றிருந்த வெளிச்சத்தின் அடிப்படையில், தனது விண்ணப்பத்தை மிக அற்புதமான வகையில், நெய்திருக்கிறான் என்றே நாம் சொல்லவேண்டும். கூடுதல் வெளிச்சத்தைப் பெற்றிருக்கிற நாம் அதனை நல்ல முறையில் பயன்படுத்தித் தக்க மன்றாட்டை ஏறெடுக்க வேண்டும். அவ்வாறு செய்வோமெனில் புகழ்ச்சிக்கும் வேண்டுதலுக்கும் அது மிகச் சிறந்த மாதிரியாக விளங்கும்!

6:6,7 பாடலாசிரியன் தனது நிலையை விவரிப் பதிலிருந்து அவனுடைய துயரத்தின் கடுமையை ஓரளவு நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. அவன் புலம்பலோடும் தவிப்போடும் முழுவது மாக இளைத்துப் போய்விட்டான். இரவு முழுவதும் அவன் தன் அழுகையால் தலையணையை ஈரமாக்கி, தன் கண்ணீரினால் படுக்கையை நனைக்கிறான். அவனுடைய ஆழ்ந்த துக்கத்தின் காரணமாக அவனுடைய கண்கள் பூத்துப் போயின, அவனுடைய எதிரிகள் யாவரும் சேர்ந்து ஒடுக்கியதன் காரணமாகப் பார்வையும் மங்கிப் போயிற்று. அவன் தொடர்ந்து நிற்கக் கூடாதபடி அவனுடைய வாழ்க்கையில் தொல்லைகள் நிறைந்து வழிந்தன என்று தோன்றியது.

6:8-10 ஆனால் மன்றாட்டு நிலைமைகளை மாற்றுகிறது. ஆவியானவரது இரகசியமான, புதிரான தொடர்பினாலே **கர்த்தர்** அவனுடைய **அழுகையின் சத்தத்தைக் கேட்டார்**, அவனுடைய மன்றாட்டு கேட்கப்படுகிறது என்னும் உறுதி அவனை வந்தடைந்தது. இந்த உறுதியின் காரணமாகப் பலப்படுத்தப்பட்ட தாவீது, தன்னுடைய எதிரிகளைத் திரும்பிச் செல்லும்படி கட்டளையிடுகிறான். இனிமேல் அவன் அவர்களுடைய அச்சுறுத்தலைக் கண்டு அஞ்சமாட்டான். கர்த்தர் அவர்களைத் தண்டிக்க எழுந்து வரும் போது அவர்கள் சடுதியில் வெட்கமடையத்தக்க தோல்வியைச் சந்திப்பார்கள் என்பதை அறிகிறான்.

கர்த்தரே உம்சமுகம் செலவிட்ட
சிறுபொழுது நேரமதில்
என்னுள்ளில் ஏற்பட்ட மாற்றங்கள்
எத்தனை பெரியவை.
உலர்ந்த நிலத்தினில் பெய்தமழை
தந்திட்ட புத்துயிர்போல்
தளர்த்தும் பாரங்கள் அகத்தினின்று
சடுதியில் அகன்றனவே!
தலைகுனிந்து பார்த்தவேளை சுற்றிலும்
சிறியதாய்த் தோன்றியவை
தலையுயர்த்த தொலைதூரம் இருந்தவை,
அருகினில் வந்தன
பகலவனின் ஒளிதன்னில் பளிச்சிட்டுத்
தெளிவாகத் தெரிந்தன
தலைகுனிந்தால் வலுவில்லை தலைநிமிர்ந்தால்
பெருகிடுதே என்வலிமை.
இதுபோன்று தவறுகளைச் செய்யாமல்
உம்சமுகம் வந்திடுவேன்

எப்பொழுதும் தலைநிமிர்ந்து வலிமையுடன்
இருப்பதே என்விருப்பம்!
இன்னபல நேரங்களில் கவலைகள்
என்மனதைத் தளர்த்திட
என்னிதயம் சோர்ந்தவனாய் வலுவின்றி
அலையும் என்னில்
கவலைகள் தொல்லைகள் களைந்திட
வந்திடுவேன் உம்சமுகம்
துணிவோடு மகிழ்ச்சியும் பெற்றிடுவேன்
உம்கிருபை பெரிதல்லோ!

- ரிச்சார்ட் செனவிக்ஸ் ட்ரென்ச்

சங்கீதம் 7: ஒடுக்கப்பட்டவர்களின் நகரம்

இப்பாடலின் எபிரெய மொழித் தலைப்பு, **பென்ய மீனியனாகிய கூஷ் என்பவனுடைய வார்த்தை களினிமித்தம் தாவீது கர்த்தரை நோக்கிப் பாடின சிகாயோன்** (shiggaion) **என்னும் சங் கீதம் என்பதாகும்.** சிகாயோன் என்னும் சொல் நீடுயர் எழுச்சிப் பாடல் அல்லது உரத்த தொனி யோடு உற்சாகத்துடன் பாடுகிற பாடல் என்று பொருள்படும் என்று திருவாளர் F. W. க்ராண்ட் எழுதுகிறார். அவ்வாறு பாடுகிறபோது அந்தப் பாடலோடு எழுத்தாளன் உற்சாகத்தில் ஒன்றி ணைந்து விடுகிறான். இந்த எழுச்சிப் பாடலின் கருப்பொருள் கூஷ் என்பவனைப் பற்றியதாகும். அவன் சவுலின் கோத்திரத்தைச் சேர்ந்தவன். பெரும்பாலும் அவன் சவுலின் இராணுவத் துணை அதிகாரியாக இருந்திருப்பான் என்று தோன்று கிறது. அது எதுவாயிருந்தாலும், இவன் தாவீ தின்மேல் பகைமை எண்ணம் கொண்டிருந்த எதிரி. NKJV மொழி பெயர்ப்பு சிகாயோன் என்னும் சொல்லுக்கு தியானம் என்று பொருள்கூறுகிறது.

7:1,2 மனதை உருக்கும் வகையில் மிகுந்த உணர்ச்சிவயப்பட்ட நிலையில் விண்ணப்பம் செய்த தாவீது, தன்னைத் தொடர்ந்து வந்த மனிதர்களிடமிருந்து விடுதலை வேண்டும் என்று மன்றாடினான். இல்லையெனில் அவன் சிங் கத்தால் தாக்கப்பட்டு துவண்டு உயிரற்றுப் போய் இழுத்துச் செல்லப்படுகிற உதவியற்ற ஆட் டுக்குட்டியைப் போலக் காணப்படுவான்.

7:3-5 தாவீது பல குற்றங்களைச் செய்ததாக நீண்டதொரு பட்டியலைக் கூறி, கூஷ் குற்றஞ் சாட்டினான் என்பது திண்ணம். சவுலைக் கொலை செய்ய முயற்சி செய்தான், அவனுடைய பண்டக சாலையைக் கொள்ளையடித்தான் என்பன அந்தக் குற்றச்சாட்டுகளில் இடம் பெற்றிருந்தன. ஆனால் தாவீது தான் குற்றமற்றவன் என்று மறுத் துரைக்கிறான். அவன் அந்தக் குற்றங்களைச் செய்யவில்லை. அவனுடைய **கைகள் கொள்ளை யடிக்கவில்லை.** அவனுக்குச் சந்தர்ப்பம் கிடைத் தும்கூட, அவன் அரசனைப் பழிவாங்கவில்லை. அவ்வாறு அவன் உண்மையில் செய்திருந்தால், அவனைத் தொடர்ந்து பிடித்து, கீழே தள்ளி, கொலை செய்தாலும் சரி என்று தண்டனையை ஏற்க ஆயத்தமாயிருப்பதாகக் கூறுகிறான்.

7:6-8 ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை, ஆகவே கர்த்தர் தமது **கோபத்திலே எழுந்து,** எதிரிகளைத் **தண்டித்து,** குற்றமில்லாதவர்களின் நேர்மையை நிலைநிறுத்த வேண்டும் என்று தாவீது துணிவோடு வேண்டுகிறான். ஒரு பெரிய வழக்கு விசாரணைக்கு தேவன் அழைப்பு விடுப்ப தாக அவன் உருவகிக்கிறான். நீதிமன்றத்திலே திரளான மக்கள் கூட்டம் கூடியுள்ளது. நியாயா சனத்திலே யெகோவா அமர்ந்து, மக்களை நியா யந்தீர்க்கிறார். தாவீது தன்னுடைய நீதியின் படியும் உண்மையின்படியும் நியாயந்தீர்க்கப்பட வேண்டுமென்று கேட்கிறான். இங்கே இறுமாப்பு தனது உச்சநிலையில் இருப்பதாகத் தோன்று கிறது. ஆனால் தாவீது தன்னுடைய வாழ்க்கை யின் எல்லா அம்சங்களிலும் முழு நிறைவான நீதியோடு இருந்ததாகச் சொல்லவில்லை - அவனுக்கு எதிராகச் சொல்லப்பட்ட குற்றச்சாட்டு கள் ஒன்றையும் செய்யவில்லை என்று மட்டுமே இங்கு கூறுகிறான்.

7:9-11 ஒடுக்கப்பட்ட இறைமக்களுடைய நீண்ட காலக் கதறுதலை 9 -ஆவது வசனம் தெரி விக்கிறது. கேடுநிறைந்த ஆட்சி எப்பொழுது முடி வுக்கு வரும். நீதியான ஆட்சி எப்பொழுது இவ் வுலகை உரிமையாகப் பெறும் என்று பயபக்தி யுள்ள ஒவ்வொரு இருதயமும் வாஞ்சிக்கிறது. கிறிஸ்து தமது ஆட்சியை நிறுவும்படி வருகிற போதுதான் அது நிறைவேறும். அதுவரை, மனிதனுடைய எண்ணங்களையும் நோக்கங் களையும் அறிந்த **நீதியுள்ள தேவன் செம்மை யானவர்களின் கேடகமாக** அதாவது பாதுகாவ லாக விளங்குவார். மேலும் அவர் **நாள்தோறும் பாவியின்மேல் சினங்கொள்வார்.**

7:12,13 போர்க்கருவிகள் நிறைந்த படைக் கலச் சாலை தேவனிடத்தில் இருக்கிறது. தீயவர் மனந்திரும்பாவிடில், அவர் தம்முடைய **பட்டயத் தைத் தீட்டி, வில்லை** இறுக்கி தீவட்டி பொருத் திய **அம்புகளை** எய்வார். தேவனுடைய அனைத் துப் போர்க்கருவிகளும் உயிருக்கு ஆபத்து விளைவிப்பவை.

7:14-16 இறுதியில், தன்னுடைய எதிரி தான் விதைத்ததை அறுப்பான் என்ற நம்பிக்கையோடு தாவீது காணப்படுகிறான். கருவுறுதல், கருவுற்றிருக்கும் காலம், பிறப்பு, மரணம் என்னும் மிகவும் தெரிந்த சுழற்சியை அவனுடைய பாவம் தொடர்ந்து செல்லும். அந்த எதிரி முதலாவது தீவினையின் மூலமாகப் பாடலாசிரியனை அழிக்கத் திட்டமிடுகிறான் **(கர்ப்பந்தரிக்கிறான்)**. விரைவில் அவன் பொல்லாத சிந்தனைகளாலே பெருகுகிறான். அதன்பிறகு அந்த நயவஞ்சகமான திட்டத்தைப் பிறப்பிக்கிறான். ஆனால் அது அவனையே திரும்பித் தாக்குகிறது. அவன் தன்னுடைய வலையிலேயே சிக்கிக்கொள்கிறான். அவன் பாடலாசிரியனுக்கென்று விரிவாய்த் திட்டமிட்டு ஏற்பாடு செய்திருந்த தீவினையும் வன்முறையும் **அவன் சிரசின்மேல் திரும்பும்**. அது விவரித்துக் கூறவியலாத சூழ்நிலைகளைக் கொண்ட வினைப்பயனாக விளங்கும்.

7:17 இந்த நேரிய நீதி, கர்த்தருக்கு நன்றி செலுத்தவும், உன்னதமான **கர்த்தருடைய நாமத்தைக் கீர்த்தனம் பண்ணவும்** தக்கபடி தாவீது தன் இருதயத்தை உயர்த்த ஏவிவிட்டது.

சங்கீதம் 8: மனிதன் எம்மாத்திரம்?

விவரித்துக் கூறவியலாதபடி இறைவன் பெரிய வராயிருக்கிறார். மனிதனோ, அதற்கு முற்றிலும் முரண்பட்ட நிலையில், பரிதபிக்கத்தக்க வகையில் சிறியவனாக இருக்கிறான். எனினும் மனிதனுக்கு மிக அதிகமான அளவு புகழ்ச்சியையும் பெருமதிப்பையும் இறைவன் வழங்கியிருக்கிறார். இவ்வுண்மையின் அதிசயம் நாவன்மை மிக்க பாடலைத் தாவீது உருவாக்கும்படி செய்தது.

8:1 எல்லாப் படைப்பிலும் கர்த்தருடைய மேன்மை தெளிவாகத் தெரிகிறது; ஒரு மனிதனுக்குக் கண்பார்வை இருந்தால் போதும், அவன் அதைக் காணலாம். படைப்பாளரின் ஞானத்தையும் வல்லமையையும் குறித்த சான்றுகளால் இயற்பியலின் ஒவ்வொரு கூறும் நிறைந்திருக்கிறது. இறைவனுடைய **மகத்துவம் வானங்களுக்கும்** மேலாக இருக்கிறது. உண்மையாகவே இறைவன் மிகப் பெரியவர் என்பதன் ஒரு பகுதி விளக்கத்தையே வான்கோள்களும் விண்மீன்களும், எல்லைக்குட்படா பிரபஞ்சமும் வெளிப்படுத்துகின்றன. ஆயினும், இயல்பற்ற பண்பாட்டைப் பின்பற்றும் மனிதன் இந்தச் சான்றுகள் யாவும் இல்லாதது போலத் தோளைக் குலுக்கி அவற்றைப் புறக்கணிக்கிறான்.

8:2 ஆனால், பாலகரோ கபடற்ற விசுவாசத்துடன் தங்களுடைய எளிய பாடல்களின் மூலமாக தேவனுடைய மேன்மையைப் பண்ணிசைத்துப் போற்றுகிறார்கள். கிறிஸ்து தாமே அறிக்கை செய்தமைக்கு இது ஒப்பாக விளங்குகிறது: இவற்றை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன் (மத். 11:25).

இங்கு **பாலகர்** என்று குறிப்பிடப்பட்டிருப்பவர், உண்மையாகவே சிறு குழந்தைகளா அல்லது சிறு குழந்தைகளுக்கு ஒப்பான விசுவாசத்தை அவரிடம் வைத்திருந்த சீடர்களா என்பது தெரியவில்லை. அவர்கள் யாராயிருந்தாலும், கர்த்தரின் பகைவரிடத்திலிருந்து அவரைப் பாதுகாக்கும் அரணாக விளங்குவதற்குரிய பொறுப்பைப் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் அவ்வப்போது தங்களுடைய சூதுவாதற்ற கேள்விகளாலே அல்லது கபடற்ற முறையில் கருத்துகளைத் தெரிவிப்பதாலே பகைவரின் வாயை மூடுகிறார்கள். ஒரு பெரிய பலூனைக் குத்தி உடைக்க சிறிய ஊசி ஒன்றுபோதும். அது போல, ஆட்டுக்குட்டியானவரைப் பின்பற்றுவோரின் எளிய விசுவாசம், படைப்பிலும் கொடையிலும் தேவனுடைய கரம் செயல்பட்டுள்ளது என்பதை மறுத்துரைத்துத் தங்களையே உயர்த்தி, பகட்டு நாடகமாடும் மனிதர்களைத் தாழ்த்தித் தலைகுனியச் செய்வதற்குப் போதுமானதாக விளங்குகிறது.

8:3 இறைவனுடைய மேதகைமையையும் மனிதனுடைய அற்பமான நிலையையும், வான கோளங்களின் ஆய்வியல் கூறுவதைப் போல மிகவும் நாவன்மையோடு வேறு எதுவும் பேசுவதில்லை. அதற்கு ஒரு சிறிய செய்தியைக் கூறுவோமாக: வான கோளங்களின் ஆய்வியலின்படி இரண்டு விண்மீன்களுக்கு இடையேயுள்ள தொலைவை ஒளி ஆண்டுகளில் கணக்கிட வேண்டும். (ஓராண்டில் ஒளி பயணம் செய்யும் தொலைவே ஒளி ஆண்டு ஆகும்.) ஒரு வினாடிக்கு அது 186000 மைல் தொலைவு பயணம் செய்கிறது. ஓராண்டில் 315 லட்சம் வினாடிகள் உள்ளன. அவ்வாறெனில், ஓராண்டில் ஒளியானது கோடானு கோடி மைல்கள் பயணம் செய்கிறது. சில விண்மீன்கள் பூமியிலிருந்து பற்பல கோடி ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ளன. இவ்வகைக் கணக்கு வான கோளங்களின் ஆய்வியல் கணக்கு முறையாகும்.

இரவுப் பொழுதில் வானத்தை நோக்கிப் பார்ப்பது தேவனைக் குறித்த மேன்மையான எண்

ணங்களை நமதுள்ளத்தில் உருவாக்க வேண்டும். நிலவும் விண்மீன்களும் அவருடைய விரல்களின் செயல்களாக இருக்கின்றன! எண்ணிலடங்கா வான கோளங்களின் கூட்டங்கள், இப் பிரபஞ்சத்தின் மிகப் பரந்த காட்சி, கோளங்கள் அதனதன் செல்தடத்தின் வழியில் செல்லும்படி அவற்றை அடக்கியாளும் ஆற்றல், இவையாவற்றையும் எண்ணிப்பார்க்கையில் நமது மனது வியப்பால் திகைத்து நிற்கிறது!

8:4 ஒப்பிட்டுப் பேசுவோமானால், பூமி என்னும் கோள் இப்பிரபஞ்சத்தின் ஒரு தூசுக்குச் சமம். அவ்வாறு இருக்கையில், பூமியில் வாழும் ஒரு தனி மனிதனுடைய நிலையை என்னவென்று கூறுவது? ஆயினும் ஒவ்வொரு மனிதனிடத்திலும் இறைவன் அக்கறை கொண்டிருக்கிறார்! ஒவ்வொரு மனிதன் மேலும் அவர் தனிப்பட்ட, நெருங்கிய ஆர்வம் கொண்டிருக்கிறார்.

8:5 தேவன் தமது சாயலிலும் தமது ரூபத்தின் படியும் மனிதனைப் படைத்தார். தேவனைக் காட்டிலும் அவன் சிறியவனாக இருந்தபோதிலும்,[12] இந்த பூமியிலே படைக்கப்பட்ட எதுவும் பெற்றிராத அவருடைய இயல்புகள் சிலவற்றை அவர் அவனுக்குப் பகிர்ந்து தந்துள்ளார். தேவனால் படைக்கப்பட்ட அனைத்தும் நல்லது என்று சொல்லப்பட்டது. ஆனால் மனிதன் படைக்கப்பட்டபோது "மிகவும் நன்றாயிருந்தது" என்று கருத்து தெரிவிக்கப்பட்டது.

8:6-8 பூமியில் இறைவனுடைய பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட மனிதனுக்கு எல்லாவிதமான விலங்குகள் மேலும், பறவைகள், மீன் இனங்கள், ஊர்வன ஆகியவற்றின் மேலும் **ஆளுகை** கொடுக்கப்பட்டது. அவனுக்குக் கீழ்ப்படாதது ஒன்றுமில்லை.

ஆனால், தற்காலத்தில் மனிதன் அத்தகைய முழுமையான ஆட்சி அதிகாரத்தைப் பெற்றதாக நாம் காண்கிறதில்லை என்று எபிரெய நூலாசிரியர் கூறுகிறார் (எபி. 2:5-9). நாய்கள் மனிதனைப் பார்த்துக் குரைக்கின்றன, பாம்பு அவனைக் கடிக்கிறது, பறவைகளும் மீன்களும் அவனிடத்திலிருந்து தப்பி விடுகின்றன. ஆதாமின் மூலமாக உலகத்தில் பாவம் புகுந்தபோது, மனிதனைக் காட்டிலும் தாழ்ந்த படைப்புகளின் மேல் அவனுக்கு அளிக்கப்பட்ட ஆளுகை அதிகாரத்தை இழந்துபோனான்.

எனினும் இறைவனுடைய நோக்கம் நிலைநிற்கிறது. மனிதன் அதிகாரத்தை உண்மையாகவே பெறுவான் என்று அவர் ஆணையிட்டிருக்கிறார். தேவனுடைய நோக்கங்களை எதுவும் தடைசெய்வதில்லை. தற்போது எல்லாம் மனிதனுக்குக் கீழ்ப்படிந்ததாகக் காணப்படுவதில்லை, ஆனாலும் நாம் இயேசுவைக் காண்கிறோம் - அந்த ஒரே நபராலே இறுதியில் மனிதனுடைய ஆளுகை உரிமை முன்னிருந்த நிலைக்குக் கொண்டுவரப்படும். கிறிஸ்து இப்புவிக்கு வந்த போது, அவர் சிறிது காலத்திற்கு தேவதூதர்களைக் காட்டிலும் சிறியவராக ஆக்கப்பட்டார். மனிதர் என்னும் நிலையில் மனுக்குலத்திற்காக அவர் மரணமடையும்படி அவ்வாறு ஆனார். இப் பொழுதோ அவர் கனத்தினாலும் மகிமையினாலும் முடிசூட்டப்பட்டவராக தேவனுடைய வலப் பக்கம் வீற்றிருக்கிறார். ஒருநாளில் மனித குமாரனாகிய கிறிஸ்து அரசருக்கெல்லாம் அரசராக, கர்த்தருக்கெல்லாம் கர்த்தராக அரசாட்சி புரியும் படி இவ்வுலகிற்கு மீண்டும் வருவார். ஆயிர மாண்டு ஆட்சியின்போது, முதல் ஆதாமின் மூல மாக இழந்து போன ஆளுகை, கடைசி ஆதாமின் மூலம் திரும்பப் பெறப்படும்.

8:9 அதன் பிறகு தேவனாலே மீட்கப்பட்ட மக்கள் புதிய பாராட்டுதலுடன் கூடிய பாடலைப் பாடும்படி ஒன்றுகூடுவார்கள்: **"எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது."**

சங்கீதம் 9: பழிவாங்கும் நாள்

கல்தேயப் பிரதியில் பொறிக்கப்பட்டுள்ள குறிப்பு சரியாக இருக்குமென்றால், தாவீது இங்கு கோலியாத் மேல் தான் பெற்ற வெற்றியைக் கொண்டாடுகிறான். ஆனால் அவன் அந்த வெற்றிக்கும் அப்பால், இறைவன் தமது பகைவரை இறுதியில் தோற்கடித்து வெற்றிபெறப் போகும் நிகழ்வை நோக்கிப் பார்க்கிறான் என்பது ஐயமறத் தெளிவாகக் காட்சியளிக்கிறது. இந்தச் சங்கீதம் எபிரெய மொழியின் முதல் பாதி எழுத்துகளின் வரிசை முறையை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது.[12]

9:1,2 இறைவனுடைய வியத்தகு செயல்களைக் குறித்து மிகுந்த மகிழ்ச்சி கொண்டவனாக இஸ்ரவேலின் இனிய பாடகன் விளங்குகிறான். இங்கே அவன் அவருடைய படைப்பின் செயலைக் குறித்தோ மீட்பைக் குறித்தோ அதிகமாகச் சிந்திக்கவில்லை. மாறாக இஸ்ரவேலின் பகைவர் எவ்வாறு கவர்ச்சிமிக்கத் துணிகரச் செயல்களாலே நொறுக்கப்பட்டார்கள் என்பது இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. தாவீது எல்லா

மகிமையையும் இறைவனுக்கே செலுத்துகிறான் - தன்னைக் குறித்தோ, மனிதர்களுடைய போர்க் கருவிகளைக் குறித்தோ, அவர்களுடைய திற மையைக் குறித்தோ அவன் மேன்மை பாராட்ட வில்லை. அவன் தன்னுடைய ஒவ்வொரு பண் பிலும் **உன்னதமானவருடைய** திருப்பெயரைக் கனப்படுத்தி உயர்த்துகிறான். எடுத்துக்காட் டாக, அவன் கர்த்தர்மேல் கொண்டிருந்த அன்பும் பக்தியும், நாம் எந்த அளவிற்கு அவ்வப்போது ஆர்வமற்றவர்களாக, சரிவரப் பதிற்செயல் செய் யாதவர்களாக இருக்கிறோம் என்பதை உண ரும்படி செய்கின்றன.

9:3,4 அடுத்ததாக, அவன் இறைவனுடைய வீரம் செறிந்த போரைக் குறித்து நினைத்துப் பார்க்கிறான். அவனுடைய கூற்று நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை மட்டும் முழுமையாக நிறைவேறாது. அவருடைய ஒரே பார்வையில் எதிரிகள் யாவரும் திரும்பி அங்கிருந்து ஓடிப்போவார்கள். அவர்கள் திகிலடைந்து குழம்பிப் போவார்கள், தப்பித்துச் செல்ல முயன்றும் அழிவையே எதிர்கொள்ள நேரிடும். இவ்விதமாக அவர்கள் வீழ்ச்சியடை வார்கள். மகிமை நிறைந்த **சிங்காசனத்தில்** வீற்றிருக்கும் மாவரசரால் அந்த நாளிலே நீதி மான்களின் நியாயம் நிலைநாட்டப்படும். நீதி யுள்ள நீதிபதி உண்மையாகவே எப்படிப்பட்ட வராக இருப்பார் என்பதை இந்தப் புவி இறுதியில் ருசிபார்க்கும்.

9:5,6 கொடுமைப்படுத்தி வாழும் புறவின மக்கள் **கடிந்துகொள்ளப்படுவார்கள்**. இஸ்ர வேலின் பகைவர் யாவரும் என்றென்றும் புறக் கணிக்கப்பட்ட நிலைக்குள் மூழ்கிப்போவார்கள். அவர்களுடைய பகட்டான நாகரிகத்தின் இடி பாடுகளில் அவர்கள் புதையுண்டு போவார்கள். முடிவுறாது என்று தோன்றும் நகரங்கள் முற்றிலு மாக அழிக்கப்படும். வாஷிங்டன், மாஸ்கோ அல் லது ஒட்டாவா போன்ற பெயர்கள் என்றென் றைக்குமாக மறக்கப்படும்.

9:7,8 பகைவர் யாவரும் ஒழிந்து போவார்கள், **கர்த்தரோ என்றென்றைக்கும் இருப்பார்.** அவர் என்றும் இருப்பதுபோலவே நீதிபரராகவும் நம்பத்தகுந்தவராகவும் தொடர்ந்து இருப்பார். அவர் தமது **சிங்காசனத்தில்** மகிமையின் பிர காசமாக வீற்றிருந்து, இப்புவியை **நீதியாய்** அரசாளுவார். அவரிடத்திலிருந்து ஒவ்வொரு வரும் நெறிதவறாத தீர்ப்பைப் பெறுவார்கள். ஏதென்ஸ் மக்களுக்கு உரை நிகழ்த்திக் கொண் டிருந்தபோது பவுல் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எதிர்கால நியாயத்தீர்ப்பைச் செலுத்துபவர் உயிர்த்தெழுந்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தான் என்பதை விளக்கிக் கூறும்படி 8 -ஆவது வசனத்தின் முற்பகுதியை பயன்படுத்தினார்:

> "அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனிதர் எல்லோருக்கும் கட்டளையிடுகிறார். மேலும் ஒருநாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனிதரைக் கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந் தீர்ப்பார்; அந்த மனிதரை மரித்தோரிலிருந்து எழுப்பினதாலே அதன் நிச்சயத்தை எல்லோ ருக்கும் விளங்கப்பண்ணினார்" (அப். 17:30,31).

9:9,10 இப்பூமியில் ஒடுக்கப்பட்டிருக்கும் மக்கள் கூட்டம் அவரைத் தங்களுடைய உயர்ந்த துருகமாகவும், என்றும் நம்பத்தகுந்த **அடைக் கலமாகவும்** கண்டடைவார்கள். அவரை **அறிந்த வர்கள்** யாவரும், அவர் தம் மக்களுடைய நம்பிக்கையை ஒருபோதும் நம்பிக்கையிழக்கச் செய்யவில்லை என்பதை அறிந்தவர்களாக அவரிடத்தில் **நம்பிக்கை வைப்பார்கள்**.

9:11,12 இஸ்ரவேல் மக்கள் **கர்த்தரைக் கீர்த் தனம் பண்ணுவது** மட்டுமின்றி, புறவின மக்கள் மத்தியிலே நற்செய்திப் பணியை நிறைவேற்றும் பொறுப்பையும் எடுத்துக் கொள்வார்கள். அப் பொழுது அவர்கள் கர்த்தர் தந்த வியத்தகு விடு தலைகளைத் திரும்பவும் எடுத்துரைப்பார்கள். மேலும் அவருடைய மக்கள் சிந்திய **இரத்தத் திற்காகப் பழிவாங்குபவர்**, அவர்கள் அடைந்த பாடுகளைக் குறித்து அக்கறையற்றவராக இருக்கவில்லையே; அவர்கள் ஏறெடுத்த மன் றாட்டுகள் விடை கூறப்படாமல் போகவில்லை.

9:13,14 ஆனால் ஆயிரமாண்டு ஆட்சிக்காலச் சூழ்நிலை இன்னும் வரவில்லை. இவ்விரு வச னங்களும் தற்போதைய கடுமையான நிலையை நாம் உணரத்தக்கதாக நம் உள்ளத்தைக் குலுங் கச் செய்கின்றன! தாவீதின் இனிய புகழ்ச்சிப் பாடல்கள் சீயோனின் வாசல்களில் மீண்டும் எதி ரொலிப்பதற்கு ஏதுவாக, அவன் பாதுகாக்கப்படு வதற்கு தேவனுடைய **இரக்கம்** இன்னும் தேவை யாக இருக்கிறது.

9:15 இறைவனுடைய பண்டைய மக்களுக் காக யூதருடைய எதிரிகள் வெட்டின குழியில் தாங்களே விழுவார்கள்; மேலும் யூதர்களைச் சிக்கவைக்க எதிரிகள் மறைவாக விரித்த

வலையில் அவர்களே அகப்பட்டுக்கொள்வார் கள்; இந்நிகழ்வுகள் நடக்கும் காலத்தை நோக் கிப் பாடலாசிரியன் மீண்டும் தாவிச் செல்கிறான். வரலாறு திரும்புகிறது - மொர்தெகாய்க்காக நடப்பட்ட தூக்குமரத்தில் ஆமான் தூக்கிலிடப் பட்ட நிகழ்ச்சி மீண்டும் நிறைவேறுகிறது!

9:16 கெட்ட வழியில் நடக்கிறவர்கள் தாங்கள் விதைத்ததையே அறுக்கும்படி கணக்கைச் சரிசெய்கிறவராகக் கர்த்தர் தம்மை மீண்டும் ஒரு தடவை வெளிப்படுத்துவார். இறைவனை ஏளனம் செய்யவிடமாட்டார். "சேலா" என்னும் சொல்லின் பொருள் என்னவென்று தெரியவில்லை. தீவிர மாக்குதல் என்பது அதன் பொருளாக இருக்க லாம் (3 -ஆவது சங்கீதத்தில் இதற்கான விளக் கத்தைக் காண்க).

9:17 துன்மார்க்கர் நரகத்தில் தள்ளப்படு வார்கள் (எபிரெயம் - sheol) என்று தாவீது கூறு கிற போது, அவன் அந்தச் சொல் சரீரமற்ற நிலை அல்லது கல்லறை என்று பொருள்படும்படி எல் லைக்குட்படுத்துகிறான். இவ்வசனத்தின் பின் ணணி அச்சொல் நரகத்தையே குறிக்கும்படி செய் கிறது. **தேவனை மறக்கிற எல்லா இனத்தாருக் கும்** இதுவே நடக்கும்.

9:18 எளியவன் என்றைக்கும் மறக்கப்படுவ தில்லை என்பது மேலே கூறப்பட்டுள்ள செய்தி யைப் போலவே நிச்சயமானது. திருவாளர் நாக்ஸ் இதனை மொழிபெயர்த்திருக்கிறார்: "துன் பப்படுத்தப்பட்டவர்களின் பொறுமை பயனற்றுப் போவதில்லை." அவர்கள் எதிர்பார்த்தவை யாவும் ஆயிரமாண்டு ஆட்சிக் காலத்தின்போது நிறைவேறும்.

9:19,20 நீதியுள்ள ஆட்சியைக் குறித்த எண் ணங்களால், அது எப்பொழுது வரும் என்னும் எழுச்சிமிக்க வாஞ்சை தாவீதுக்கு ஏற்பட்டது. மனிதனுடைய திட்டங்களைத் தகர்த்து எறியவும், எல்லா இனத்தாரையும் **நியாயந்தீர்க்கவும் கர்த்தர் எழுந்தருள** வேண்டும் என்னும் மன் றாட்டு அங்கே பிறக்கிறது. அவர்கள் யாவரும் சர்வ வல்லமையுள்ள நீதி அரசர் முன்னிலையில் நிற்கும்போது, அவர்கள் எவ்வளவு சிறியவர்கள் என்றும், உண்மையாகவே அவர்கள் சாவுக் கேதுவான மனிதர்கள் என்றும் அறிவார்கள்.

சங்கீதம் 10: பொதுமக்களின் முதல் எதிரி

எபிரெய மொழியின் இரண்டாவது பாதி எழுத்துகளின் வரிசை முறையை அடிப்படை யாகக் கொண்டு இந்தச் சங்கீதம் எழுதப்பட்டுள் ளது.[13] பிரதானமான கயவனை விவரித்துக் கூறு வதே இப்பாடலின் நோக்கமாகும். இந்தப் "பொது மக்களின் முதல் எதிரி" பாவத்தின் உருவாக விளங்குகிறான் என்றே தோன்றுகிறது. ஆகவே நாம் இந்தக் கயவனைப் "பாவமனிதனோடு" தொடர்புபடுத்திக்காண்பது இயல்பான செய லாகும். ஏழு ஆண்டு உபத்திரவ காலத்தின் தொடக்கத்தில் பாவமனிதன் வெளிப்படுவான். "கேட்டின் மகனாகிய" இந்தக் கயவன் தேவன் என்று அழைக்கப்படுகிற எல்லாவற்றையும் அல் லது ஆராதனை செய்யப்படுகின்ற யாவற்றையும் எதிர்த்துத் தன்னையே உயர்த்துவான். எருசலே மில் அமைந்திருக்கும் தேவாலயத்தில் தனது இருக்கையை நிறுவி, இவன் தன்னையே இறை வன் என்று பிரகடனம் செய்வான் (2 தெச. 2:3,4). அவனைத் தொழுதுகொள்ள மறுக்கிறவர்கள் யாவரும் பொருளாதாரத் தடைகள் உபத்திரவங் கள் ஆகியவற்றை எதிர்கொள்ள நேரிடும், ஏன் மரணத்தையும் சந்திக்க நேரிடும்.

இறைவனுடைய மௌனம் (10:1)

இந்தப் பாடலின் தொடக்கத்திலேயே, உடனடி யாகவோ பின்னரோ நம் எல்லோருக்குள்ளும் எழுகிற ஒரு கேள்வியைக் காண்கிறோம்: குற்ற மற்றவன் பாடுபடுகிறான், அதே நேரத்தில் பொல் லாதவனுடைய ஆட்சி எவ்வித எதிர்ப்புமின்றி தொடர்கிறது, எனினும் கர்த்தர் அமைதியாயிருப் பது ஏன்? இவ்வித மர்மங்கள் நம்முடைய விசு வாசம் செயலில் ஈடுபடவேண்டும் என்று தூண்டி விடுகின்றன, நமக்குப் புரியாதிருக்கும்போது நம்பும்படி உற்சாகப்படுத்துகின்றன, மேலும் இறுதிவரை நாம் பொறுமையைக் காக்க வேண்டு மென்று அறைகூவல் விடுக்கின்றன.

ஒடுக்கப்பட்டவரின் மன்றாட்டு (10:2)

தங்களுடைய பொறுக்கவியலாத திமிரான நடக்கையினாலே, பொல்லாத மனிதர்கள் உதவி யற்ற பரிசுத்தவான்களை இரக்கமற்ற முறையில் வேட்டையாடுகிறார்கள். நீதிமான்களுக்காக அவர்கள் தீட்டிய **சதிமோசங்களில்** அவர்களே அகப்படுவதைக் காட்டிலும், தகுதியானது வேறு என்ன இருக்கமுடியும்?

பகைவனைப் பற்றிய சுருக்கமான வருணனை (10:3-11)

10:3,4 தான் செய்யவேண்டும் என்று திட்டமிடு கிற அனைத்தையும் குறித்துப் பெருமைபாராட்டு வதே துன்மார்க்கனின் இயல்பு. அவன் செல் வந்தன் ஆகவேண்டும் என்னும் வெறி ஆர்வத்தி

னாலே கர்த்தரை நிந்தித்து **அசட்டைபண்ணுகிறான்**, ஏனெனில் பொன்னைத் தொழுது கொள்ளுதல் இறைவனை வேண்டாமென்று மறுத்துரைப்பதற்குச் சமமாகும். தனக்குத் தானே போதும் என்பது அவனுடைய வாழ்க்கைப் பாணியாக இருக்கிறது. இறைவன் தனக்குத் தேவை என்று அவன் நினைப்பதே இல்லை, அவர் இல்லாதது போலவே அவன் வாழ்ந்துகொண்டி ருக்கிறான்.

10:5,6 எல்லாம் அவனுக்குச் சாதமாக நடப்பது போலத் தோன்றுகிறது; மற்றவர்களை விடாமல் பின்தொடர்ந்து வருகிற தொல்லைகளிலிருந்து அவன் ஏதோ ஒரு வகையில் தப்பித்துக்கொள்கிறான். தேவன் தம்முடைய மக்களுக்கு ஏற்படுத்திய வழிகாட்டும் நெறிமுறைகள் பொல்லாத மனிதனை விட்டு வெகு தொலைவில் இருக்கின்றன; அவனால் ஆவிக்குரிய உண்மைகளை அறிந்துகொள்ள முடியவில்லை, தெய்வீகக் கோட்பாடுகளைப் புரிந்துகொள்ளவும் முடியவில்லை. அவன் மரியாதையற்ற வகையில் தன்னுடைய எதிரிகள் யாவர் மேலும் ஏளனமாய்ச் சீறுகிறான். அவனுடைய பாதுகாப்பை எதுவும் அசைக்கப் போவதில்லை என்பதே அவனுடைய எண்ணம். தன்னுடைய வாழ்நாள் முழுவதும் தனக்கு எவ்விதத் தொல்லையும் ஏற்படாது என்பதும் அவனுடைய எண்ணம்.

10:7,8 அவன் உங்கள் அருகே இருக்கும் போதெல்லாம், சுற்றுப்புறம் தெய்வ நிந்தனையால் மாசுபடும் என்று நீங்கள் எதிர்பார்க்கலாம். அவன் எவரையேனும் ஏமாற்றவில்லையெனில், அவன் யாரையோ கொடுமைக்குள்ளாக்கி அடக்கி ஆளுகிறான் என்பது பொருள்! அவன் ஆக்கப்பூர்வமான பேச்சை ஒருபோதும் பேசுவதில்லை; மாறாக அவனுடைய பேச்சு எப்பொழுதும் குற்றம்புரிவதையும் அழிவையும் பற்றியதாகவே இருக்கும். கொள்ளைக் கூட்டத்தாரைப் போலவே அவனும் ஊர்க்காவலர் சுற்றிவராத இடங்களில் பதுங்கியிருக்கிறான்; **குற்றமற்றவர்களைக்** கொலை செய்யும்படி அவன் **மறைவிடங்களில்** ஒளிந்துகொள்கிறான்; அவர்கள் அந்த வழியாகச் செல்லும்போது அவர்களை அவன் சுட்டு வீழ்த்துகிறான். வரும் ஆபத்தை முன்னறிந்திராத **உதவியற்ற** மக்கள் எப்பொழுது வருவார்கள் என்று அவன் காத்திருக்கிறான்.

10:9-11 தன் குகையில் இருக்கும் சிங்கத்தைப் போல, தன்னுடைய இரையைத் தாவிப்பிடிக்க அவன் ஆயத்தமாயிருக்கிறான். வேட்டைக்காரன் தன் வலையில் விலங்குகளைச் சிக்க வைக்க முயற்சி செய்வதுபோல அச்சுறுத்திப் பணம் பறிக்கவோ, பலவந்தமாய்ப் பணம் பறிக்கவோ, கைக்கூலி வாங்கவோ, அடிமைப்படுத்தி வேலைவாங்கவோ அவன் எதை வேண்டுமானாலும் செய்ய ஆயத்தமாயிருக்கிறான், ஏன் கொலை செய்யவும் அவன் தயங்குவதில்லை. அவல நிலைக்கு உள்ளான மனிதன் குற்றவாளியின் அளவுகடந்த சக்திக்குக் கட்டுப்பட்டு வீழ்ச்சி அடைகிறான். அவனுடைய மனத் தளர்ச்சியின் காரணமாக தேவன் தன்னை மறந்துவிட்டதாகவும், அவர் வேறு பக்கமாகத் திரும்பியிருக்கிற காரணத்தால் தம்முடைய பிள்ளையின் இக்கட்டு நிலையை ஒருபோதும் காண்கிறதில்லை என்றும் அவன் தன் உள்ளத்தில் நினைக்கிறான்.

உண்மையுள்ளவர்களின் கதறுதல் (10:12-18)

10:12,13 ஒடுக்கிறவர்களுக்கு எதிராக நியாயத்தீர்ப்பு வழங்கவும் ஒடுக்கப்பட்டவர்களுக்குத் தமது கிருபையைக் காட்டவும் தமது கையை உயர்த்தி, கர்த்தர் செயல்புரிய வேண்டிய தருணம் இதுதான். கடவுள் பற்றும் சமயப்பற்றும் இல்லாத தீய சக்திகள் தொடர்ந்து செயல் படுவதற்கு ஏன் அனுமதி வழங்கப்பட வேண்டும்? அவர்களுடைய குற்றங்களுக்கான கணக்கை தேவன் கேட்கமாட்டார் என்னும் எண்ணத்தில் அவர்கள் ஏன் உற்சாகமடைய வேண்டும்?

10:14,15 தேவன் காண்கிறார். ஒவ்வொரு நேர்மையற்ற செயலையும் தவறையும் தேவன் கவனித்து, கணக்கிட்டு வைத்திருக்கிறார். வரப்போகிற நாளில் அவர் அதற்குரிய **பதிலளிப்பார்**. ஆகவே உதவியற்ற மனிதன் தன்னை தேவனிடம் ஒப்புவிப்பது வீணாகப் போவதில்லை. திக்கற்றவனின் நண்பன் என்று தேவன் தம்மை மெய்ப்பிக்கவிலையா? துன்மார்க்கனுடைய புயத்தை முறித்து, பொல்லாப்பின் கடைசி அடிச்சுவடு வரைக்கும் தண்டனை வழங்கி அதை வெளிப்படுத்துவதன் மூலமாகக் கர்த்தர் உண்மையுள்ளவர்களின் கதறுதலைக் கேட்பார்.

10:16 இந்த உலகத்தின் அரசுகள், நம்முடைய கர்த்தரும் அவருடைய கிறிஸ்துவுமான வருடைய அரசாக மாறும்போது பழிவாங்கும் நாள் வரும். அப்பொழுது ஏசாயாவால் முன்னுரைக்கப்பட்ட வண்ணம் தீயவர் அழிந்து, துன்புறுத்தும் நாடுகளும் அழிந்து போயிருக்கும்:

"இதோ, உன்மேல் எரிச்சலாயிருக்கிற யாவரும் வெட்கி இலச்சையடைவார்கள்; உன்னோடே

வழக்காடுகிறவர்கள் நாசமாகி ஒன்றுமில்லாமற் போவார்கள். உன்னோடே போராடினவர்களைத் தேடியும் காணாதிருப்பாய்; உன்னோடே யுத்தம் பண்ணின மனிதர் ஒன்றுமில்லாமல் இல்பொருளாவார்கள். தேவனாயிருக்கிற கர்த்தராகிய நான் உன் வலது கையைப் பிடித்து: பயப்படாதே, நான் உனக்குத் துணை நிற்கிறேன் என்று சொல்லுகிறேன்" (ஏசாயா 41:11-13).

10:17,18 சிறுமைப்பட்டவர்களின் வேண்டுதலைக் கேட்டு, கர்த்தர் பதிலளிப்பார் என்று நாம் முழு நம்பிக்கையோடு இருக்கலாம். ஒவ்வொரு சோதனையின்போதும் அவர் அவர்களுக்குத் தேவையான கிருபையை வழங்குவார். மேலும் **திக்கற்ற பிள்ளைகளுக்கும் ஒடுக்கப்பட்டவர்களுக்கும்** நீதி வழங்கப்பட்டு, அது அவர்களுடைய பங்காக விளங்கச்செய்ய அவர் குனிந்து செவிசாய்க்கிறார். அந்த நாள் வரப்போகிறது, இறைவனுக்குப் புகழ்ச்சி உண்டாவதாக. அதன் பிறகு இவ்வுலக மனிதன் ஏழைகளையும் பாதுகாப்பு அற்றவர்களையும் ஒடுக்கமாட்டான்!

சங்கீதம் 11: நீங்கள் நம்பிக்கை கொண்டிருக்கலாமே, ஏன் ஓடுகிறீர்கள்?

இருண்ட தலைப்புச் செய்திகளுக்கு இந்தப் பதினோராவது சங்கீதம் மாற்று மருந்தாக விளங்குகிறது. போர், வன்முறை, குற்றம், ஒழுங்கீனம், அரசியல் நிலையற்ற தன்மை - இத்தகைய கெட்ட செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன; நாம் கர்த்தர் மேல் கண் பதித்தவர்களாக இருப்போமென்றால், வாழ்க்கையில் ஏற்படக்கூடிய சூழ்நிலைகளுக்கு மேலாக நம்மால் உயர எழ முடியும் என்று தாவீது நினைவுபடுத்துகிறான்.

தாவீது தன்னுடைய முன் வாசலைத் திறந்த போது கிலி பிடித்தவன் போன்ற ஒருவன் தீவிரமாக உள்ளே நுழைந்தான். அவனுடைய முகம் வெளுத்துப் போயிருந்தது, அவனுடைய கண்களில் திகில் வெளிப்பட்டது, அவனுடைய உதடுகள் நடுங்கிக்கொண்டிருந்தன, மூச்சு வாங்கிக் கொண்டிருந்தான். மூச்சு விடக் கூடாமல் உடல் நடுங்கிய வண்ணம், அழிவு உடனடியாக வரப் போகிறது, தாவீது மலைகளுக்குள் ஓடி ஒளிந்து கொள்ள வேண்டும் என்று அவன் கூறினான். கெடுதல் நடக்கும் என்னும் மனப்பான்மை கொண்ட அந்த மனிதனின் மனத்தளர்ச்சி அடையவும் நம்பிக்கை குன்றவும் செய்கிற ஆலோசனைக்கு இந்தச் சங்கீதம் விடையாக அமைந்திருக்கிறது.

11:1-3 கர்த்தரிடத்தில் தான் கொண்டிருக்கும் **நம்பிக்கையே** தனது புகலிடம் என்று தாவீது முதலாவது கூறுகிறான்: "நீங்கள் நம்பிக்கை கொண்டிருக்கலாமே, ஏன் ஓடுகிறீர்கள்?" அதன் பிறகு தனது மனவமைதியைக் கெடுக்கவந்த இன்னல் மன்னனைக் கடிந்துகொண்டான். முதல் வசனத்தின் பிற்பகுதியிலிருந்து மூன்றாவது வசனம் வரைக்கும் இருண்ட செய்திகளை வீதி வீதியாகச் சென்று பரப்பும் மனிதனின் சொற்கள் என்பதைக் கவனியுங்கள். **"பட்சியைப் போல உன் மலைக்குப் பறந்து போ"** என்று அவன் தொடங்குகிறான். "ஒரு சிறு அற்பமான பாதுகாப்பற்ற பறவையைப் போல நீர் இருக்கிறீர். நீர் தப்பி ஓடுவதுதான் சிறந்த வழி. பழிவாங்குபவர்களின் கை இப்போது மேலோங்கியிருக்கிறது. அவர்கள் அச்சுறுத்தும் வகையில் ஆயுதமேந்தியிருக்கிறார்கள், மரியாதைக்குரிய மனிதர்களையும், சட்டம் ஒழுங்கைக் கடைப்பிடிக்கிறவர்களையும் சுட்டு வீழ்த்துகிறார்கள். சட்டம், ஒழுங்கு அறவே இல்லாமல் போய்விட்டது. சமுதாயத்தின் அடித்தளமே ஆடிப் போயிருக்கிறது. சூழ்நிலை இவ்வாறு இருக்க, நீதிமான் போன்ற உமக்கு என்ன நம்பிக்கை இருக்கும் என்று நினைக்கிறீர்?" என்பதே அவனுடைய பேச்சின் பொருள்.

11:4-6 என்ன நம்பிக்கை? கர்த்தர் தேவையா? **கர்த்தர் தம்முடைய பரிசுத்த ஆலயத்தில் இருக்கிறார்**; அவருடைய திட்டங்கள் நிறைவேறுவதை எதுவும் தடைசெய்யாது! அவருடைய **சிங்காசனம் பரலோகத்தில் இருக்கிறது**; பூமியில் அரசாங்கங்கள் எழலாம், வீழ்ச்சியடையலாம், ஆனாலும் அவருடைய சிங்காசனம் அசைவதில்லை, அசைக்கப்படுவதுமில்லை. தேவனுடைய சாந்தமும் அமைதியும் ஒருவராலும் கலைக்கப்படுவதில்லையெனினும், மனிதர்கள் என்ன செய்கிறார்கள் என்பது குறித்து அவர் கருத்துள்ளவராக இருக்கிறார். அவ்வாறு அவர் காண்கிறது மட்டுமின்றி, நீதிமானைக் குறித்தும் துன்மார்க்கனைக் குறித்தும் சோதித்து அவர்களை மதிப்பிடுகிறார். தேவன் அளவிற் கடங்கா அன்புபாராட்டுகிறவராக இருந்தபோதிலும், **கொடுமையில்** ஈடுபடுகிற மனிதனை **அவருடைய உள்ளம் வெறுக்கிறது**. அவர்கள் மீது நியாயத்தீர்ப்பைப் பொழிவார். அவ்வாறு பொழியப்படுகிற மழை **அக்கினியும் கந்தகமும்** கடும்சூட்டை உண்டாக்கும் கொந்தளிப்பும் ஆகும்.

11:7 கொடுமை செய்கிற மனிதனை இறைவன் வெறுக்கிறபடியே, நீதிமானிடத்தில் அவர் அன்பு பாராட்டுகிறார். இறைவன் **நீதியுள்ளவர்**. அவர் **நீதியின்மேல் பிரியப்படுகிறார்**. அவருடைய முன்னிலையில் நிற்பதே செம்மையானவர் பெறும் நிறைவான பரிசுப்பொருள் ஆகும்.

ஆகவே தலைப்புச் செய்திகளைக் குறித்து நாம் கவலைப்பட வேண்டிய தேவையில்லை. எந்தவொரு குறிப்பிட்ட நேரத்திலும் பாதகமான சூழ்நிலை நம்மை அலைபோலத் தாக்கலாம். ஆனால் தடுக்கவியலாத இறை நோக்கம் இறுதியில் வெற்றிபெறும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

அவர்தம் ஆட்சி எங்கும் சிறக்க
அவரது வீரம் எதிலும் முழங்க,
அவர்தம் செயலில் நன்மைகள் பெருக
அவரது பாதையில் சுடரொளி வீச,
இறைவனை முழுவதும் அறிந்தே னில்லை
வானம் பூமி அதனைக் கூறும்,
மறைபொருள் நாயகர் ஞானமாய்ப் புரியும்
ஒப்பிலா ஆட்சி உயர்ந்து விளங்கிடவே!

சங்கீதம் 12: மனிதனுடைய பேச்சும் இறைவனுடைய பேச்சும்

12:1 மனிதர்களுக்கிடையே உண்மையற்ற தன்மை பொதுவாகக் குறைவுபட்டு வருகிற நிலை, அதுவும் அவர்களுடைய பேச்சில் உண்டாயிருக்கிற தாழ்நிலை முதல் வசனத்தில் காணப்படும் மன்றாட்டுக்குத் தூண்டுகோலாக விளங்குகிறது.

> கர்த்தாவே, என்னை விடுவிக்க வாரும்; பக்தி செத்துப் போயிற்று; இந்த இழிந்த உலகில் உண்மையுள்ள இதயங்கள் அரிதாக இருக்கின்றன (நாக்ஸ்).

12:2 உண்மையில்லாத மக்களுக்கு எதிராக மூன்று குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் பின்னர் தொடுக்கப்பட்டுள்ளன:

பொய்கள் - அப்பட்டமான பொய் பேசுகிறார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டது மட்டுமின்றி, அவர்கள்மேல் புரைதீர்ந்த பொய், அரை உண்மை, மிகைப்படுத்திப் பேசுதல், வாக்குத் தத்தம் நிறைவேற்றப்படாமல் விட்டுவிடுதல் ஆகிய குற்றங்களும் சுமத்தப்பட்டுள்ளன.

இச்சகம் - உண்மையற்ற முறையில் மற்றவர்களைப் புகழ்ந்து பேசுதல். புகழ்ச்சியும் இச்சகமும் ஒன்றல்ல. ஒருவனிடத்தில் இல்லாத நற்குணங்களை அவன் கொண்டிருப்பதாகப் பாராட்டிப் பேசுவதே இச்சகம் ஆகும். பெரும்பாலும் இச்சகம் கெடுநோக்குடன் அல்லது தன்னல நோக்குடன் பேசப்படும்.

இருமனதுடன் பேசுதல் - அவர்கள் ஒருவிதமாய் நினைக்கிறார்கள், முற்றிலும் வேறுவிதமாய்ப் பேசுகிறார்கள். பழிபாவத்திற்கு அஞ்சாமல் சூழ்ச்சி செய்கிற அத்தகைய மனிதர்கள் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவது மட்டுமின்றி சதியாலோசனையும் செய்கிறார்கள்.

12:3,4 தீயொழுக்கம் நிறைந்த மனிதர்களின் **இச்சக உதடுகளைக் கர்த்தர் தாமே** மூட வேண்டும் என்பது தேவனுடைய மெய்யான பரிசுத்தவான்களின் பெருவிருப்பமாக காலங்காலமாக இருந்துவந்திருக்கிறது. அதாவது, தங்களுடைய கொள்கைகளே நிலைநின்று வெற்றிபெறும் என்றும், மற்றவர்கள் என்ன நினைத்தாலும் பொருட்படுத்த வேண்டியதில்லை, தாங்கள் விரும்புகிற எதையும் சொல்லத் தங்களுக்கு உரிமை இருக்கிறது என்றும் பெருமை பாராட்டுகிற அவர்களுடைய நாவுகள் அசைவற்றுப் போகும்படி கர்த்தர் செய்வார்.

12:5,6 ஏழைகள் எளியவர்கள் துன்புற்றுப் புலம்பும் வேளையில் அதற்குப் பதிற்செயலாக "அவர்கள் தாகத்தோடு எதிர்நோக்குகிற இரட்சிப்பைத் தருவேன்" என்று கர்த்தர் வாக்குறுதி தருகிறார் (கெலினியு). அவர் உரைத்த வாக்குகளை நிச்சயமாக நிறைவேற்றுவார். அவருடைய வாக்குறுதிகள் **மண்குகையில் ஏழுதரம் உருக்கி, புடமிடப்பட்ட வெள்ளிக்கொப்பான சுத்த சொற்களாக** இருக்கின்றன. அவை மிகவும் தூய்மையானவை. இவற்றிலும் தூய்மையானது இல்லை என்று சொல்லத்தக்க அளவு அவருடைய வாக்குறுதிகள் தூய்மையானவை. இறைவனின் சொற்களில் வஞ்சகம் இல்லை, முகத்துதி இல்லை, இருபொருள் இல்லை, தவறில்லை. அவற்றில் முழுநம்பிக்கை வைக்கலாம்.

12:7 ஆகவே இறைநம்பிக்கையாளன் இந்தத் தலைமுறையினரிடத்திலிருந்து தன்னைப் பாதுகாப்பதற்காக இயல்பாகவே கர்த்தரிடமாகத் திரும்புகிறான். தாக்குவதிலிருந்து கிடைக்கப் பெறுகிற பாதுகாப்பு மட்டுமல்ல, மதியீனத்தால் தவறு இழைக்கக் கூடிய நிலையிலிருந்தும், குற்றத்திற்குத் துணைபோகக் கூடிய நிலையிலிருந்தும் அவரே பாதுகாப்பு நல்குகிறார்.

12:8 இந்தத் 'தலைமுறையினரைக்' குறித்த விவரமாகக் கடைசி வசனம் விளங்குகிறது - **துன்மார்க்க** மனிதர்கள் இடைவிடாமல் திருட்டு நோக்கத்துடன் சுற்றித்திரிகிறார்கள். அவர்கள் இழிநிலையை உயர்த்திப் பேசி நற்பண்புகளை ஏளனம் செய்கிறார்கள். இதுபோன்ற மக்களைக் குறித்தே நீதிமொழிகள் 30:11-14 வசனங்கள் விவரிக்கின்றன:

> "தங்கள் தகப்பனைச் சபித்தும், தங்கள் தாயை ஆசிர்வதியாமலும் இருக்கிற சந்ததி யாருமுண்டு. தாங்கள் அழுக்கறக் கழுவப் படாமலிருந்தும், தங்கள் பார்வைக்குச் சுத்த மாகத் தோன்றுகிற சந்ததியாருமுண்டு. வேறொரு சந்ததியாருமுண்டு; அவர்கள் தங்கள் கண்கள் எத்தனை மேட்டிமையும் அவர்கள் இமைகள் எத்தனை நெறிப்பு மானவை. தேசத்தில் சிறுமையானவர்களை யும் மனிதரில் எளிமையானவர்களையும் பட்சிப்பதற்குக் கட்கங்களையொத்த பற் களையும் கத்திகளையொத்த கடைவாய்ப் பற் களையுமுடைய சந்ததியாருமுண்டு."

சங்கீதம் 13: எதுவரைக்கும்?

"எதுவரைக்கும்?" என்னும் சொல் நான்கு முறை தாவீதின் உதடுகளிலிருந்து பிறந்திருக் கிறது. பகைவர் (பெரும்பாலும் சவுல் என்றே தோன்றுகிறது) தீவிரமாகத் தொடர்ந்து வருகிற நிலையில், இறைவனுடைய ரதம் வராமல் தாம திப்பது ஏன் என்று தாவீது திகிலடைகிறான். நான்கு பெருஞ்சுமைகள் அவனை அழுத்தி நசுக் கிக் கொண்டிருக்கின்றன, அவற்றிலிருந்து விடு விப்பைத் தரும்படி உதவி வராமலேயே போய் விடுமோ?

> இறைவன் அவனை மறந்து போனது போன்ற உணர்வு அவனை ஆட்கொண் டிருக்கிறது.
>
> கர்த்தருடைய தயவிலிருந்து தான் வெட்டி விடப்பட்டதாக அவன் கருதுகிறான்.
>
> ஒவ்வொரு நாளும் அவனுடைய ஆத்துமா ஆழ்ந்த அழுத்தத்திற்குள் இருப்பதை உணர்கிறான்.
>
> தோல்வியையே தொடர்ந்து சந்திக்கக் கூடிய தாழ்நிலையின் காரணமாக அவன் துன்பப்படுகிறான்.

13:1-4 தாவீதின் அவல நிலையைக் கவ னித்து அவன் அடையவிருக்கும் பேரிடரிலிருந்து காக்கும்படி இறைவன் உடனடியாக உதவியை அனுப்ப வேண்டும். முதலாவது பேரிடர் அவனு டைய மரணம், இரண்டாவது அவனுடைய பகை வனின் தற்பெருமையோடு கூடிய பேருவகை. தாவீதின் கண்களில் விழுந்த தீப்பொறியை அகற்றக் கர்த்தர் உடனடியாகச் செயல்படா விடில், அவை என்றென்றைக்குமாகத் திறக்கக் கூடாதபடி மரணத்தில் மூடிப்போகும். அவனுக்கு எதிராக எழுந்து வரும் அலையை யெகோவா திசைதிருப்பாவிடில், அவனுடைய எதிரிகள் வெற்றிபெற்று விட்டதாகப் பெருமை பாராட்டுவார் கள், தாவீது முற்றிலுமாகத் தோற்கடிக்கப்பட்டு விட்டதாகவும் கூறுவார்கள்.

13:5,6 இப்பொழுது என்ன நிகழப் போகிறது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. விடை வந்து கொண்டிருக்கிறது என்று பாடலாசிரியன் உறுதி யோடு நம்புகிறான். கர்த்தருடைய இரக்கத்தின் மேல் நம்பிக்கை கொண்டவனாக, எதிரிகளிட மிருந்து விடுதலை பெற்று அதைக் கொண்டாட விருப்பதை எண்ணி அவன் களிகூருகிறான். இவ்வித **இரட்சிப்பை** எதிர்நோக்கியவனாக, கர்த்தருடைய எல்லைக்குட்படா பரிவிரக்கத்தை எண்ணி அவனால் அவரைப் புகழ்ந்து பாட முடி கிறது.

இறைவனால் அனுப்பப்பட்ட நம்முடைய பல சோதனைகளுக்கு ஒப்பாகவே இந்தச் சங்கீதம் அமைந்திருக்கிறது: அவை வேதனையோடு தொடங்குகின்றன, ஆனால் பாடலோடு முடி வடைகின்றன!

சங்கீதம் 14: மதியீனனின் சமயக் கோட்பாடு

14:1 "தேவன் இல்லை" என்பது மதியீனனின் சமயக் கோட்பாடு. தேவன் என்று ஒருவர் இருக்க வேண்டும் என்று அவன் விரும்புகிறதில்லை. ஆகவே அவன் அவருடைய உளவாந்தன் மையை மறுத்துரைக்கிறான். அவனுடைய நிலை பகுத்தறிவுக்கு அப்பாற்பட்டது. முதலாவதாக, தான் ஒரு சர்வஞானி என்று அவன் சொல்வதாக அது காணப்படுகிறது. "எனக்கு எல்லாம் தெரி யும், எனது அறிவுக்கு அப்பாற்பட்டு தேவனால் இருக்க முடியாது" என்று அவன் கூறுவதற்கு அது ஒப்பாயிருக்கிறது. இரண்டாவதாக, தான் ஒரு சர்வ வியாபி என்று அவன் சொல்வதாக அது காணப்படுகிறது. "ஒரே நேரத்தில் நான் எங்கும் இருக்கிறேன், ஆகவே எனக்குத் தெரியாமல் தேவனால் இப்பிரபஞ்சத்தில் எங்கும் இருக்க முடியாது" என்று அவன் கூறுவதாக அது அமைந் திருக்கிறது. மேலும் தேவனுடைய படைப்பில் உள்ள வியத்தகு தன்மையை இந்நிலை புறக்

கணிப்பதாகக் காணப்படுகிறது - இப்பிரபஞ்சத் தின் அளவிற்குட்படா விரிந்து பரந்த தன்மையை யும், விண்கோள்கள் அதனதன் பாதையிலே துல்லியமாகப் பயணம் செய்கிற அதிசயத்தை யும், உயிர் வாழ்வுக்குத் தகுந்தபடி ஆச்சரிய மான வகையில் பூமி இருப்பதையும், விளங்காப் புதிரென மனித உடல் அமைக்கப்பட்டிருப்பதை யும், மண் நீர் ஆகியவற்றின் வியத்தகு பண்பு களையும் இது புறக்கணிக்கிறது.

எடுத்துக்காட்டாக உயிர்வாழ்வுக்குத் தகுந்த படி பூமி இருப்பதை ஆராய்ந்து பார்ப்போம். மிகுந்த கவனத்தோடு வியத்தகு வகையிலும் பூமி வடிவமைக்கப்பட்டிருப்பதைத் திருவாளர் ஹென்றி போஸ்ச் சுட்டிக்காட்டுகிறார்:

> பூமி தன்னுடைய அச்சில் ஒருமணி நேரத் திற்கு ஏறத்தாழ 1000 மைல் தொலைவு சுழல் கிறது. அதனுடைய சுழற்சியின் வேகம் 100 மைல் தொலைவாக இருக்குமென்றால் நம்முடைய இரவு பகல் நேரம் பத்து மடங்கு அதிகரிக்கும். நம்முடைய கோள் எரிகிற பந்தமாகவும் பனிக்கட்டியாகவும் மாறிக் கொண்டேபோம். அப்படிப்பட்ட நிலையில் தாவரங்கள் உயிர்வாழ முடியாது!
>
> பூமி சந்திரனைப் போலச் சிறியதாக இருக்கு மென்றால், அதனுடைய புவி ஈர்ப்பு ஆற்றல் மிகக் குறைவாக இருக்கும், அதன் காரணமாக மனிதனுக்குத் தேவையான வளிமண்டலம் அதைச் சுற்றிலும் இருக்காது. மாறாக, அது ஜூபிடர், சனி, வீனஸ் போன்று பெரிதாக இருக்குமென்றால் புவி ஈர்ப்பு ஆற்றல் மிகக் கூடுதலாக இருக்கும், மனிதன் இடம்விட்டு இடம் செல்ல முடியாதவனாக இருப்பான். நாம் வீனஸ் போன்று சூரியனுக்கு மிக அருகில் இருந்தால் தாங்க முடியாத வெப்பம் இருக்கும், மார்ஸ் போன்று தொலைவில் இருந்தால் வெப்ப மண்டலங்களிலும்கூட ஒவ்வொரு இரவிலும் பனி பெய்யும். கடல்கள் இப்போ திருப்பதில் பாதி மட்டுமே இருந்தால், நாம் இப் போது பெறுகிற மழையில் நான்கில் ஒரு பங் கையே பெறுவோம். எட்டில் ஒரு பங்கு கடல் அதிகமாக இருக்குமென்றால், நான்கு மடங்கு மழை அதிகரித்து, பூமி மனிதன் வாழ்வதற்கு அருகதையற்ற சதுப்பு நிலமாக இருக்கும்.
>
> 32•F வெப்பத்தில் நீர் பனிக்கட்டியாக மாறு கிறது. ஆனால் பெருங்கடல்கள் அந்த வெப்ப நிலையில் பனியாக மாறுமென்றால் அது பேரழி வுக்குக் காரணமாகி விடும், அதாவது துருவங் களில் பனி உருகுவது சரிக்கட்டும் செயலாக இருக்காது, அதன் காரணமாகப் பனி சேர்ந்து கொண்டே போகும்! அப்படிப்பட்ட பேரழிவைத் தடுக்கக் கர்த்தர்தாமே கடல்நீர் கட்டியாவதற் கான வெப்பநிலையை மாற்றும் பொருட்டு அதனுடன் உப்பைச் சேர்த்திருக்கிறார்.[14]

இவையாவும் தாமாகவே நடந்துவிட்டன என்று சிந்திப்பதற்கு எவ்விதக் காரணமுமில்லை. எனவேதான் இறைமறுப்புக் கொள்கையைப் பின் பற்றுபவன் மதியீனன் என்று திருமறை கூறுகிறது. அவர்கள் ஒழுக்கநெறிக் கொள்கையளவில் மதி யீனர்கள். அவர்களுக்கு நுண்ணறிவு ஈவு இல்லையென்பது இதனுடைய பொருளன்று, அவர்களுடைய ஒழுக்கநெறி ஈவின் அடிப்படை யில் அவர்கள் மதியீனர்களே.

அவர்கள் தங்களைக் கெடுத்து அருவருப் பான செயல்களைச் செய்கிறார்கள் என்று இறை வன் இத்தகைய மதிகெட்டவர்களைக் குறித்துத் தீர்ப்பு வழங்குகிறார். ஒரு மனிதனுடைய சமயக் கோட்பாட்டுக்கும் அவனுடைய நடத்தைக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. இறைவனைக் குறித்த அவனுடைய கருத்து குறைவுபட்டதாக இருக்குமென்றால், அவனுடைய ஒழுக்கநிலை யும் குறைவுபட்டதாகவே இருக்கும். இறைமறுப் புக் கோட்பாடு அல்லது கடவுளைப் பற்றிய கருத்தேதும் சொல்லமுடியாது என்னும் கோட் பாடு சீர்கெட்ட வாழ்வினால் உண்டானதாகவோ அல்லது சீர்கெட்ட வாழ்விற்குக் காரணமாகவோ இருக்கிறது. திருவாளர் பார்னஸ் எழுதுகிறார்:

> சீர்கெட்ட வாழ்க்கை வாழவேண்டும் என்னும் விருப்பத்தின் அடிப்படையிலேயே பொதுவாக தேவன் இல்லை என்ற நம்பிக்கை எழுகிறது. அல்லது அப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்கிறவர் கள் தங்களுடைய இழிவான நிலையில் தொடர்ந்து இருக்கவேண்டும், மேலும் எதிர் காலத்தில் அதற்கான தண்டனை தரப்படுமோ என்னும் அச்சம் ஆகிய எண்ணங்களால் அக் கொள்கையைப் பின்பற்றுகிறார்கள்.[15]

14:2,3 ஆதாமின் வழிவந்தவர்களில் யாரே னும் தேவனைத் தேடுகிறாரா என்று அறிய, **கர்த் தர் பரலோகத்திலிருந்து** கீழ்நோக்கிப் பார்க்கும்

போது வருந்தத்தக்க நிலையையே காண்கிறார். மனிதன் இயல்பிலும் நடைமுறையிலும் பாவியாக இருக்கிறான். அவனுடைய போக்கிலே அவனை விட்டுவிட்டால், அவன் இறைவனை நாடவே மாட்டான். தூய ஆவியானவரின் திருப்பணியின் மூலமாகவே மனிதர்கள் தங்களுக்கு இறைவனும் அவருடைய இரட்சிப்பும் தேவை என்பதை உணருகிறார்கள்.

பாவம் மனுக்குலம் முழுவதையும், ஒவ்வொரு மனிதனுடைய ஒவ்வொரு பாகத்தையும் பாதித்திருக்கிறது என்பதை விளக்கும் பொருட்டு பவுல் இந்தச் சங்கீதத்தின் முதல் மூன்று வசனங்களை ரோமர் 3:10-12 இல் எடுத்தாண்டுள்ளார். இந்தச் சங்கீதத்தில் மனுக்குலம் முழுவதையும் குறித்துத் தாவீது சிந்திக்கவில்லை. எனினும் இந்த விவரங்கள் எல்லா மனிதருக்கும் பொருந்தும். மாறாக, தாவீது நீதிமான்களையும் அவர்களுக்கு மாறுபட்ட நிலையில் உள்ள இறை மறுப்புக் கொள்கையாளர்களையும் குறித்துச் சிந்திக்கிறான். ஜீவனுள்ள மெய்யான தேவனை மறுத்து வாழும் மக்களே இறைமறுப்புக் கொள்கையாளர்கள். அவர்கள் ஒழுக்கத்தின் அடிப்படையில் கெட்டுப்போனவர்கள். அவர்களில் **நன்மை செய்கிறவன்** ஒருவனையும் தேவனால் கண்டுபிடிக்க முடியவில்லை, **ஒருவனாகிலும் இல்லை.**

14:4 அவர்கள் இறை மக்களை நடத்துகின்ற விதத்திலிருந்து அவர்களுடைய மதியீனம் வெளிப்படுகிறது. இறைவன் எளியவரைப் பாதுகாத்து, பாவத்தைத் தண்டிக்கிறார் என்பதை அவர்கள் அறிவார்களானால், விசுவாசிகளை அழிக்கமாட்டார்கள். ஆனால் ஒவ்வொரு நாளும் உணவு உண்பது எவ்வளவு இன்றியமையாததோ அதுபோல அவர்கள் விசுவாசிகளைத் தாக்குவது சட்டப்படி நேர்மையானது என்று செயல்படுகிறார்கள்! இறைவனுடைய நற்குணத்தையும் கண்டிப்பையும் அவர்கள் அறிந்திருந்தால், அவரிடத்திற்குத் தங்களுடைய மன்றாட்டை ஏறெடுக்காமல் இருக்க முடியாது.

14:5,6 குற்றமிழைக்காதவர்கள் பக்கமாக இறைவன் சேருகிறபோது, நேர்மையற்றவர்கள் அஞ்சி நடுங்குவார்கள். எளிமையான விசுவாசத்தைக் காணும் நேர்மையற்றவர்கள் எப்பொழுதும் அத்தகைய விசுவாசிகளை ஏளனம் செய்கிறார்கள். ஆனால் இப்பொழுது அவர்கள் மறுதலித்த இறைவன் தமது மக்களுக்கு **அடைக்கலமாக** இருக்கிறார் என்பதைக் காண்பார்கள்.

14:7 தம்முடைய மக்களை விடுவிக்கும் பொருட்டு மேசியா சீயோனிலிருந்து வரும் நாள் மிகப்பெரிய நாளாக இருக்கும். மெய்யான ஒரே தேவனை மறுத்துரைக்கும் நாடுகளில் அடிமைப்பட்டு வாழும் கிறிஸ்துவின் யூதப் பரிசுத்தவான்கள் முழுமையாக இறுதியில் விடுவிக்கப்படும்போது இஸ்ரவேல் எல்லையற்ற மகிழ்ச்சியில் திளைக்கும்.

சங்கீதம் 15:
இறைவன் தெரிந்தெடுக்கிற மனிதன்

15:1 தம்முடைய தோழனாக இறைவன் தெரிந்தெடுக்கிற ஒரு தனி மனிதனைப் பற்றியதே இந்தச் சங்கீதம். இறையரசுக்குள்ளாக நுழைவதற்கான அடிப்படைத் தகுதி மறுபடியும் பிறத்தலே ஆகும். அது இந்தச் சங்கீதத்தில் சொல்லப்படவில்லையெனினும் அதுவே உண்மை. புதிய பிறப்படையாமல் ஒருவரும் அவ்வரசைக் காணவோ அதற்குள் நுழையவோ முடியாது. விண்ணிலிருந்து வருகிற அப்பிறப்பு விசுவாசத்தைக் கொண்டு கிருபையால் உண்டாகிறது. மேலும் மனிதனுடைய எந்தவித புதிரான செயலினாலும் அது உண்டாவதில்லை.

இந்தச் சங்கீதத்தை மட்டும் தனியாகக் காண்போமானால் இரட்சிப்பு ஏதோ மனிதனுடைய நேர்மையான குணநலனோடோ மேலான செயலோடோ தொடர்புடையது என்பது போலத் தோன்றுகிறது. ஆனால் திருமறையின் மற்ற பகுதிகளோடு சேர்த்துப் பார்க்கும்போது, எவ்வித விசுவாசம் ஒருவரை இரட்சிக்கிறதோ அதே விசுவாசம் அவர் தூயவாழ்க்கை வாழும்படி செய்கிறது என்பது புலன்படும். யாக்கோபு தன்னுடைய மடலில் கூறியிருப்பது போலவே, கர்த்தரிடத்தில் வைக்கும் மெய்யான விசுவாசம் இந்தச் சங்கீதத்தில் சொல்லப்பட்டுள்ள நற்செயல்களை விளைவிக்கும் என்று தாவீது இங்கு கூறுகிறான்.

சீயோன் குடிமகனின் முழுப் பண்பு நலன்களின் அட்டவணையும் இங்கு கொடுக்கப்பட்டிருப்பதாக இந்தச் சங்கீதம் உரிமை கோரவில்லை. இங்கு கொடுக்கப்பட்டிருக்கும் வருணனை சிந்தனையைக் கிளறிவிடக் கூடியது, முழுமையானது அல்ல.

15:2 முதலாவதாக, சீயோன் குடிமகன் நேர்மையாக **நடக்கிறான்**. அவன் முழுமையானவனாகவும், நிறைவானவனாகவும், சரிசம நிலைப் பண்புகளோடும் விளங்குகிறான். நேர்மையான இந்த மனிதன் ஒழுக்கத்தில் சிறந்தவனாகவும் இருக்கிறான்.

இரண்டாவதாக, சீயோன் குடிமகன் எது சரியோ அதையே செய்கிறான். பிறரைக் குற்றப் படுத்தாத மனச்சாட்சியோடு இருக்க வேண்டும் என்னும் எண்ணத்தில் கவனமாயிருக்கிறான். அவன் கேடுற்ற மனச்சாட்சியோடு இவ்வுலகத் தில் தொடர்வதைக் காட்டிலும் நல்மனச் சாட்சி யோடு விண்ணகம் செல்வதையே தெரிந் தெடுக் கிறான்.

இவன் தன்னுடைய மனதிலிருந்து உண்மை யையே பேசுகிறான் என்று நீங்கள் இவனை நம்ப லாம். இவன் பொய் கூறுவதைக் காட்டிலும் சாவ தையே மேல் என்று கருதுகிறான். அவனுடைய சொல்லே பத்திரத்துக்கு இணையாக இருக்கிறது. இவனுடைய ஆம் என்பது ஆம் என்றும் இல்லை என்பது இல்லையென்றுமே பொருள்படும்.

15:3 அவன் தன் நாவினால் புறங்கூறுவ தில்லை. அவன் மற்றவர்களைப் பற்றிப் புறங் கூறுவதை உங்களால் காணமுடியாது. அவனு டைய உதடுகளிலிருந்து அவதூறான பேச்சும் பழிசுமத்தும் சொற்களும் பிறப்பதில்லை. அவன் கொலைசெய்வதற்கல்ல, புத்தி புகட்டுவதற்கே தனது நாவைப் பயன்படுத்துகிறான்!

அவன் தன்னுடைய அயலகத்தானுக்குத் தீங்கு விளைவிப்பதில்லை. உதவி செய்வதை யும், உற்சாகப்படுத்துவதையும், அறிவுரை கூறு வதையும் தன் முழு விருப்பமாகக் கொண்டிருக் கிறான். அவன் தன்னுடைய அயலானைப் பற்றிய கவர்ச்சியான வதந்திகளைக் கேட்கும் போது, அச்செய்தி அப்பொழுதே மடிந்து போகும்படி விட்டு விடுகிறான். அவன் அச்செய்தியை யாரிடத்திலும் சொல்லமாட்டான் என்று உறுதியாக நம்பலாம்.

15:4 நெறிமுறை வேறுபாடுகள் அவனுடைய பார்வையில் மங்கிப்போவதில்லை. பாவத்திற் கும் நீதிக்கும், இருளுக்கும் ஒளிக்கும், தீமைக் கும் நன்மைக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை அவன் தெளிவாய் உய்த்துணர்கிறான். அவன் கீழ்த்தரமான மனிதனை வெறுக்கிறான், அதா வது அவன் அவனுடைய துன்மார்க்கமான நிலை யைக் குறித்து நேருக்கு நேர் வெளிப்படையாகப் பேசுகிறான். இதற்கு மாறாக, விசுவாசக் குடும்பத் திலுள்ள ஒவ்வொருவரோடும் தன்னை இணைத் துக்கொண்டு தன்னுடைய அங்கிகாரத்தை வெளிப்படுத்துகிறான்.

அவன் ஒருமுறை வாக்குறுதி கொடுப்பா னென்றால், அவன் அதில் உறுதியோடு இருக்கி றான். அதன் காரணமாக அவனுக்கு இழப்பு ஏற்பட்டாலும் அவன் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாமல் இருப்பதில்லை. எடுத்துக்காட் டாக ஒரு விசுவாசி ஒரு வீட்டை 40 லட்சத்திற்கு விற்க ஒப்புக்கொள்கிறான். அவன் இன்னமும் ஆவணங்கள் எதிலும் கையெழுத்துப் போட வில்லை, அந்நிலையில் வேறொருவர் அந்த வீட்டை 45 லட்சத்திற்கு வாங்க முன் வருகிறார். ஆனால் அவன் முதலில் வந்தவரிடம் வாக்குக் கொடுத்துவிட்டான், ஆகவே அவருக்கே அந்த வீட்டை விற்கிறான்.

15:5 தேவனுடைய நண்பன் **தன் பணத்தை வட்டிக்குக் கொடுப்பதில்லை**, அதாவது, தேவ குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரிடம் அவன் வட்டி வாங்குவதில்லை. மோசேயின் நியாயப்பிர மாணத்தின்படி, இஸ்ரவேலன் புறவினத்தானுக்கு வட்டிக்குக் கடன்கொடுக்கலாம் (உபா. 23:19,20). ஆனால் தன் இனத்தானாகிய வேறொரு யூத னிடம் வட்டி வாங்குவது தடை செய்யப்பட்டுள் ளது (யாத். 22:25; லேவி. 25:35-37).

நியாயப்பிரமாணத்திற்குக் கீழ் வாழும் யூதர் கள் இந்தக் கொள்கையின்படி வழி நடத்தப்படு கையில், கிருபைக்குக்கீழ் வாழும் கிறிஸ்தவர் கள் எவ்வளவு மேலாக அவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்!

இறுதியாக, நீதிமான் **குற்றமில்லாதவனுக்கு விரோதமாகப் பரிதானம் வாங்குவதில்லை.** அவன் நீதி பிறழ்வதை வெறுக்கிறான். "ஒவ் வொருவனுக்கும் ஒரு விலையுண்டு" என்னும் பழ மொழியை அவன் பொய்யென்று மெய்ப்பிக் கிறான்.

இத்தகைய மனிதர்கள் இவ்வுலகிலும் நித்தி யத்திலும் தேவனுக்கென்று வாழ்கிறார்கள். இதைக் குறித்துச் சிந்தியுங்கள், வேறு எவரும் இறை வனின் முன்னிலையில் மனநிறைவுடன் வாழமுடி யாது!

சங்கீதம் 16: கிறிஸ்து உயிர்த்தெழுந்தார்!

16 -ஆவது சங்கீதத்தைப் புரிந்து கொள்வதற் கான திறவுகோல் அப்போஸ்தலர் 2:25-28 -ஆகிய வசனங்களில் உள்ளது; அங்கு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறித்துப் பிரசங்கித்த பேதுரு இந்தச் சங்கீதத்திலிருந்து 8 முதல் 11 வரை யிலான வசனங்களை எடுத்தாளுகிறான். அந்தத் திறவுகோலைக் கதவின் துவாரத்திலே போட்டு, அதன் பிறகு, நம்முடைய அற்புத இரட்சகர் தமது மரணத்திற்குச் சற்றுமுன் தமது திருத்தந்தை யிடம் மன்றாடுவதைக் கேட்போம்.

16:1-2 தேவனை முற்றிலும் சார்ந்து வாழ்ந்த நிறைவான மனிதராகிய கிறிஸ்து, தம்முடைய ஒரே அடைக்கலமானவரிடம் தம்மை அழிவி னின்று காக்கும்படி கதறுதலோடு விண்ணப் பிக்கிறார். இரட்சகர் தம்முடைய முப்பது ஆண் டுக்கால வாழ்க்கை முழுவதும் தேவனைத் தமது கர்த்தராக ஏற்றுக்கொண்டது மட்டுமின்றி அவ ரைத் தம்முடைய வாழ்வின் கவனத்தைக் கொள் ளைகொள்ளும் பெரு விருப்பமாகவும் அறிக்கை செய்துவந்தார். "நீரே என் கர்த்தர்; உம்மைத் தவிர என்னிடம் ஒரு நன்மையும் இல்லை" (இலகு தமிழ்) என்னும் சொற்றொடர் நமது இரட்சகர் பாவமற்றவர் என்பதை மறுத்துரைப்பதில்லை; மாறாக, தமது தேவை அனைத்திற்கும் தேவன் போதும் என்று கிறிஸ்து கூறிய அறிக்கைக்கு உணர்வு ததும்பிய சான்றாக விளங்குகிறது. இந்தச் சான்றை சங்கீதம் 73:25 -ஆம் வசனத்தில் காணப்படும் புகழ்ச்சியோடு ஒப்பிடலாம்: "பரலோ கத்தில் உம்மையல்லாமல் எனக்கு யார் உண்டு? பூலோகத்தில் உம்மைத் தவிர எனக்கு வேறே விருப்பமில்லை."

16:3 இருந்தபோதிலும் மேசியாவின் வாழ்க்கை யின் முக்கிய கூறாக, இவ்வுலகிலுள்ள பரிசுத்த வான்களைக் குறித்த ஆழ்ந்த அக்கறை விளங்கு கிறது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. உண்மை யில் இவ்விரண்டும் இன்றியமையாத வகையில் இணைந்துள்ளன: இறைவனிடத்தில் அன்புகூரு தல் அவருடைய மக்களிடத்தில் அன்புகூருவ தாகும் (1 யோவான் 5:1,2). தம்முடைய பரிசுத்த வான்களைக் கர்த்தராகிய இயேசு இவ்வுலகின் மேன்மக்கள் என்று கருதினார். அவர்களிடத்தில் தான் அவர் **முழுப் பிரியத்தையும்** கண்டடைந் தார். இதுபோன்ற சாட்சியை இறைவனின் பண் டைய பரிசுத்தவான் ஒருவர் கூறுவதைக் குறித்துச் சிந்தியுங்கள்:

> நான் என்னுடைய விசுவாச வாழ்க்கையைத் தொடங்கின நாள் முதற்கொண்டு இந்நேரம் வரைக்கும் சாவுக்குட்பட்டவனும் பாவியுமான மனிதன் என்னும் நிலையில் கிடைக்கக்கூடாத மிகப் பெரிய அளவில் தயவைப் பெற்றிருக் கிறேன். இவ்வுலகில் உள்ளவர்களில் மிகச் சிறந்தவர்களுடன்தான் என்னுடைய ஐக்கியம் இருந்திருக்கிறது. அவர்கள் யாவரும் தங்க ளுடைய ஆற்றலின் எல்லைவரை அரும்பாடு பட்டு கர்த்தர் நிமித்தம் என்னிடத்தில் தயவு பாராட்டியிருக்கிறார்கள்.[16]

16:4 இறைவனை மெய்யாகத் தொழுது வணங்குகிறவர்களுக்கு முற்றிலும் மாறுபட்ட நிலையில்தான் வேறு கடவுளைத் தொழுகிற வர்கள் இருக்கிறார்கள். உருவ வழிபாடு செய் கிறவர்களுடைய வாழ்க்கையில் அடுக்கடுக்காக வேதனைகள் தொடர்ந்து வருகின்றன. உருவ வழிபாடு செய்கிற மனிதர்களுக்கு நிகழக்கூடிய மிகப்பெரிய நியாயத்தீர்ப்பு என்னவெனில், அவர் கள் வழிபடுகிற பொருட்களைப் போலவே அவர் களும் மாறிவிடுகிறார்கள். **அவர்கள் செலுத்து கிற இரத்த பானபலிகளில்** நான் ஐக்கியப்படு வதை தூய இறைமகன் ஏற்க மறுக்கிறார். உண்மையில் எந்த ஒரு வகையிலும் புறச்சமயக் கடவுளரின் பெயர்களையும் அவர் உச்சரிக்கமாட் டார், ஏனெனில் அவ்வாறு கூறுவது ஏதோ அந்தக் கடவுள்களையும் அவற்றிற்குச் செய்யப்படுகின்ற சடங்குகளையும் பொறுத்துக்கொள்வதாக அமைந்துவிடும்.

16:5,6 கிறிஸ்துவின் தனிப்பட்ட வாழ்க்கை யில், அவர் கர்த்தரையே தமது **சுதந்தரமாகவும் பாத்திரத்தின் பங்காகவும்** தெரிந்துகொண்டார். அவருடைய அனைத்துச் செல்வமும் இன்பமும் தேவனையே சார்ந்திருந்தது. அவருடைய சுதந் தரத்தின் எல்லைகளைக் காப்பவர் கர்த்தரே ஆவார். அவருடைய வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் திருத்தந்தை எவ்வளவு ஞானத் தோடும், வியத்தகு வகையிலும் திட்டமிட்டார் என்பதை அவர் எண்ணிப்பார்க்கையில், அதனை அவர் மிக **நேர்த்தியாக** வடிவமைக்கப்பட்ட மாபெரும் பண்ணைக்கும், அனைத்தும் சிறப் பானவை என்று சொல்லப்படத்தக்க சுதந்தரத் திற்கும் ஒப்பிடுகிறார். நாம் இறைவனோடு ஐக்கி யம் கொண்டவர்களாக வாழ்கிறோமெனில், இவ்வாறு நம்முடைய வாழ்க்கையை ஒழுங்கு படுத்தியிருப்பதற்காக நாம் அவருக்கு நமது புகழ்ச்சியைச் செலுத்தவேண்டும். நாம் குறை கூறுகிற நேரங்களில் தேவனுடைய ஞானம், அன்பு, வல்லமை ஆகியவற்றில் நமக்கு நம் பிக்கை இல்லை என்று கூறுகிறவர்களாகக் காணப்படுவோம்.

16:7 தமது வாழ்க்கையின் எல்லா நேரங் களிலும் தேவையான வழிநடத்துதலையும் **ஆலோசனையையும்** உண்மையான வகையில் தந்ததற்காகக் கிறிஸ்து **கர்த்தரைப்** புகழ்கிறார். தூக்கமில்லாத வேளைகளிலும் அவர் மன்றாடி இறைவனுடைய வார்த்தையை தியானித்த போது, கர்த்தருடைய **இருதயம்** அவருக்கு அறி

வுரை நல்கியது. காலம் ஒரு சிறிதும் வீணாக வில்லை, மாறாக அவருடைய ஆறுதலுக்காக வும் நன்மைகளுக்காகவும் அது புனிதப்படுத்தப் பட்டது. கிறிஸ்துவின் இந்த அனுபவம் இறைமக்க ளின் வாழ்க்கைகளில் எத்தனை முறை மறு அனுபவமாக விளங்கியிருக்கிறது!

> "விண்ணகம் ஏகிடும் வெளிச்சத்தின் பிள்ளைகள்
> பன்னரும் இசையினைப் பாங்காய் எழுப்புவர்
> மண்ணகம் வாழ்ந்த வேளையில் தோன்றிய
> காரிருள் சூழலில் கற்றதாய்ச் சொல்லுவர்,
> சோகத்தின் ஆழத்தில் எழுந்தநற் பாடல்கள்
> சோதனைக் கூடத்தில் ஒத்திகை கண்டபின்,
> நேசத்தின் கீதமாய் இனிதுடன் ஒலித்திடும்
> தந்தையின் வீட்டினைத் தகைவாய் நிரப்பிடும்."

இந்தச் சங்கீதத்தில் எஞ்சியுள்ள வசனங்கள், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறிக்கும் வகையில் பெந்தெகொஸ்தே நாளில் பேதுரு வால் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன:

> "அவரைக்குறித்துத் தாவீது: கர்த்தரை எப் பொழுதும் எனக்கு முன்பாக நிறுத்தி நோக் கிக்கொண்டிருக்கிறேன்; நான் அசைக்கப்படா தபடி அவர் என் வலதுபாரிசத்திலே இருக்கி றார்; அதனாலே என் இருதயம் மகிழ்ந்தது, என் நாவு களிகூர்ந்தது, என் மாம்சமும் நம் பிக்கையோடே தங்கியிருக்கும்; என் ஆத்து மாவைப் பாதாளத்தில் விடீர், உம்முடைய பரிசுத்தர் அழிவைக் காணவொட்டீர்; ஜீவ மார்க்கங்களை எனக்குத் தெரியப்படுத்தினீர்; உம்முடைய சந்நிதானத்திலே என்னைச் சந்தோஷத்தினால் நிரப்புவீர் என்று சொல்லு கிறான். சகோதரரே, கோத்திரத்தலைவனா கிய தாவீதைக் குறித்து நான் உங்களுடனே தைரியமாய்ப் பேசுகிறதற்கு இடங்கொடுங்கள்; அவன் மரணமடைந்து அடக்கம் பண்ணப்பட் டான்; அவனுடைய கல்லறை இந்நாள்வரைக் கும் நம்மிடத்திலிருக்கிறது. அவன் தீர்க்க தரிசியாயிருந்து: உன் சிங்காசனத்தில் வீற்றி ருக்க மாம்சத்தின்படி உன் சந்ததியிலே கிறிஸ்துவை எழப்பண்ணுவேன் என்று தேவன் தனக்குச் சத்தியம்பண்ணினதை அறிந்தபடி யால், அவன் கிறிஸ்துவினுடைய ஆத்துமா பாதாளத்திலே விடப்படுவதில்லையென்றும், அவருடைய மாம்சம் அழிவைக்காண்பதில்லை யென்றும் முன்னறிந்து அவர் உயிர்த்தெழு தலைக் குறித்து இப்படிச் சொன்னான். இந்த இயேசுவைத் தேவன் எழுப்பினார்; இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம். அவர் தேவனுடைய வலது கரத்தினாலே உயர்த்தப்பட்டு, பிதா அருளிய வாக்குத்தத் தத்தின்படி பரிசுத்த ஆவியைப் பெற்று, இப் பொழுது காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார்" (அப். 2:25-33).

பேதுரு இந்தப் பகுதியில் சுட்டிக்காட்டியுள்ள குறிப்புகளைக் கவனியுங்கள் (இந்தக் குறிப்பு களில் பெரும்பாலானவற்றை நாமாகவே கண்டு பிடித்திருக்க முடியாது):

1. தாவீது கிறிஸ்துவைக் குறித்துப் பேசினான் (வச. 25). தாவீதின் உடல் இன்னமும் எரு சலேமில் உள்ள கல்லறையில் இருப்பதால், அவன் தன்னைக் குறித்துப் பேசியிருக்க முடி யாது.
2. தீர்க்கதரிசி என்னும் நிலையில், கிறிஸ்து தம்முடைய அரியணையில் அமர்ந்து ஆட்சி புரிவதற்கு முன்னமே தேவன் அவரை உயி ரோடு எழுப்புவார் என்பதை அந்தப் பாட லாசிரியன் அறிந்திருந்தான்.
3. ஆகவே, கிறிஸ்துவின் ஆத்துமா பாதாளத் தில் தொடர்ந்து இருக்கும்படியோ அவரு டைய உடல் அழுகும்படியோ தேவன் அனு மதிக்க மாட்டார் என்று தாவீது முன்னுரைத் தான்.
4. உண்மையாகவே தேவன் கிறிஸ்துவை உயிரோடு எழுப்பினார். பெந்தெகொஸ்தே நாளில் நடந்த நிகழ்வுகள் யாவும் தேவ னுடைய வலப்புறத்தில் கிறிஸ்து பெற்ற மகிமையின் விளைவுகளே ஆகும்.

இந்த முன்னுரையை நம்முடைய மனதில் கொண்டவர்களாக, இந்தச் சங்கீதத்தின் கடைசி வசனங்களைக் காண்போம்.

16:8 முதலாவதாக, **கர்த்தரை எப்பொழுதும் தமக்கு முன்பாக வைத்திருந்ததாக** மேசியா எவ்வித ஐயத்திற்கும் இடமற்றபடி உறு திப்படுத்து கிறார். யெகோவா என்பவருக்காகவே அவர் வாழ்ந்தார். தம்முடைய சொந்த சித்தத்தின்படி அவர் எதையும் செய்யவில்லை; திருத்தந்தை யின் மனவிருப்பத்தின்படியே அவர் எல்லாவற் றையும் செய்தார்.

அவர் **என் வலதுபாரிசத்தில் இருக்கிறபடி யால் நான் அசைக்கப்படுவதில்லை**. திருமறை யில் வலதுகரம் குறிப்பிடுவதாவது:

வல்லமை (சங். 89:13)
பாதுகாப்பு (சங். 20:6)

மதிப்பு (சங். 45:9; 110:1)
இன்பம் (சங். 16:11)
தயவு (சங். 80:17)
ஆதரவு (சங். 18:35)

இங்கு அச்சொல் பாதுகாப்பையும் உறுதியையும் குறித்துப் பேசுகிறது.

16:9,10 தேவனுடைய இடைவிடாத அக்கறையையும் பாதுகாப்பையும் குறித்து உறுதி பெற்ற இரட்சகர் எதிர்காலத்தை நம்பிக்கையோடு எதிர்கொள்கிறார். **அவருடைய இருதயம் பூரித்திருக்கிறது**. அவருடைய ஆத்துமா களிகூருகிறது, அவருடைய உடல் பாதுகாப்புடன் இருக்கிறது. அவருடைய **ஆத்துமாவை** தேவன் **பாதாளத்தில் விட மாட்டார்** என்பதை அல்லது அவருடைய **உடல் அழிவை** தேவன் **காணவிட மாட்டார்** என்பதை அவர் அறிந்திருக்கிறார். கிறிஸ்து இறந்தோரிடத்திலிருந்து உயிரோடு எழுப்பப்படுவார் என்றும் இதனைக் கூறலாம்.

பாதாளம் (Sheol) என்னவென்பதைக் குறித்துச் சற்று விளக்கமளிக்க வேண்டும். கல்லறை, நரகம் ஆகியவற்றைக் குறிக்கும்படி இச்சொல் பழைய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் உடலற்ற நிலையைக் குறிக்கும்படியும் இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டிலும் பாதாளம் (Hades) என்னும் சொல் இடம்பெற்றுள்ளது. (தமிழில் ஒரே சொல்லாயிருப்பினும் ஆங்கிலத்தில் இணையான வெவ்வேறு சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.) பழைய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ள பாதாளம் என்னும் சொல் இறந்து போன மனிதர்களுடைய நிலையைக் குறிக்கும்படி பயன்படுத்தப்பட்டுள்ளது, அது ஓரிடத்தைக் குறிக்கும்படி அவ்வளவாகப் பயன்படுத்தப்படவில்லை - ஒரு நபர் அவருடைய உடலிலிருந்து பிரிந்த நிலையை அது சுட்டிக்காட்டுகிறது. விசுவாசியோ அவிசுவாசியோ எவராக இருந்தாலும் இறந்துபோன ஒரு மனிதருடைய நிலையைக் குறிக்கும்படியே அச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு மாறாக, புதிய ஏற்பாட்டில் பாதாளம் (Hades) என்னும் சொல் அவிசுவாசிகளின் தொடர்பிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டில் பாதாளம் (Sheol) என்னும் சொல் வரையறையற்ற வாழ்க்கையைப் பற்றிய திட்டவட்டமான படவுருவைத் தருகிறதில்லை. உண்மையில் அதனால் வெளிப்படும் அறிவைக் காட்டிலும் நிச்சயமற்ற நிலையையே அது அதிகமாக வெளிப்படுத்துகிறது.

புதிய ஏற்பாட்டில், எல்லாம் மாறிவிட்டது. கிறிஸ்து வாழ்வையும், அழியாமையையும் சுவிசேஷத்தால் வெளியரங்கமாக்கினார் (2 தீமோ. 1:10). இன்றைக்கு ஓர் அவிசுவாசி இறந்துபோவானென்றால், அவனுடைய ஆவியும் ஆத்துமாவும் பாதாளம் என்று அழைக்கப்படும் துன்பத்துக்குள்ளான ஒரு நிலைக்குச் சென்றுவிடும் என்பதை நாம் அறிவோம் (லூக்கா 16:23), அவனுடைய உடலோ கல்லறைக்குச் செல்லும். அதே நேரத்தில் ஒரு விசுவாசியின் ஆவியும் ஆத்துமாவும் விண்ணகத்தில் கிறிஸ்துவோடு இருக்கும்படி செல்லும் (2 கொரி. 5:8; பிலி. 1:23), அவனுடைய மண்ணுக்குரிய உடல் கல்லறைக்குச் செல்லும்.

"என்னுடைய ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர்..." என்று இரட்சகர் கூறியபோது, அவரை உடலற்ற நிலையில் இருக்கும்படி தேவன் விட்டுவிட மாட்டார் என்னும் உண்மையை அவர் முன்னறிந்திருந்தார் என்பதை வெளிப்படுத்தினார். அவர் பாதாளத்திற்குள் (Sheol) சென்ற போதிலும் அங்கே நிரந்தரமாக இருக்கவில்லை.

உடலானது வழக்கமாக அழிவுக்குட்படும், அவ்வாறு நிகழுவதற்கு தேவன் அனுமதிக்கவில்லை. இவ்விதமாகக் கிறிஸ்துவின் உயிரற்ற உடல் மூன்று பகலும் மூன்று இரவும் அழிவடையாமல் பாதுகாக்கப்படும்படி தேவன் அற்புதச் செயலைச் செய்தார்.

16:11 இந்தக் கடைசி வசனத்தில், நம்முடைய நற்பேறுமிக்க கர்த்தர், தேவன் தமக்கு **ஜீவமார்க்கத்தைக் காண்பிப்பார்** என்னும் முழு நம்பிக்கை கொண்டிருந்தார். அந்த **மார்க்கமானது** மரணத்திலிருந்து மீண்டும் வாழ்வதற்கான பாதையேயாகும். அந்தப் பாதை இறுதியில் அவரை விண்ணகத்திற்கு வழிநடத்தும், அதாவது தேவனுடைய முன்னிலைக்குச் கொண்டு செல்லும். அங்கே அவர் **பரிபூரண ஆனந்தத்தையும் நித்திய பேரின்பத்தையும்** அனுபவிப்பார்.

சங்கீதம் 17: தீராத புதிர்

நாம் தவறிழைத்து அதனிமித்தம் பாடுபடுகிற போது, நம்முடைய சொந்த மனச்சாட்சியே அது சரியானது என்று தீர்ப்பளிக்கிறது. ஆனால் நாம் அனுபவிக்கிற துன்பம் எவ்விதத் தவறான செயலோடும் தொடர்பற்றதாயிருக்கும்போது அது வேறு கதையாகத் தோன்றுகிறது! இத்தகைய துன்பம், "நீதியினிமித்தம் பாடுபடுதல்" என்று பேதுருவால் அழைக்கப்படுகிறது. இறை மக்களுக்கு இது தீராத புதிராக விளங்குகிறது.

இதில் தான் அடைந்த பங்கைப்பற்றி **தாவீது** அறிந்திருந்தான். ஆனாலும் அதைக் குறித்து என்ன செய்ய வேண்டும் என்பதையும் அவன் அறிந் திருந்தான். அவன் தன்னுடைய வழக்கை நீதியுள்ள நியாயாதிபதியினிடத்தில் கொண்டு போனான். அங்கு அந்த வழக்கு நேர்மையாக விசாரிக்கப் படும் என்பதை அவன் அறிந்திருந்தான்.

சிலவேளைகளில் தாவீது மிகப்பெரிய அள வில் தற்பெருமையோடு தனக்காக வழக்காடுகிற வன் போலத் தோன்றுகிறான். அவன் தன்னுடைய நீதி, நேர்மை, கீழ்ப்படிதல் ஆகியவற்றை உயர்த் திப் பேசி எதிர்த்து நிற்கிறான். ஏதோ பாவமற்ற நிலையை அடைந்துவிட்டது போன்று அவனு டைய பேச்சு அமைந்திருக்கிறது. ஆனால் உண்மை அதுவன்று. தாவீது தன்னுடைய வாழ்க்கையின் அனைத்துக் கூறுகளிலும் குற்றமற்றவன் என்று சொல்லுவதில்லை, மாறாக **தற்போதைய சூழ் நிலைகளை** மட்டுமே அவன் எடுத்துரைக் கிறான். அவனுடைய பகைவரோடு தற்போது ஏற்பட்டிருக்கிற போர் நடவடிக்கைகளுக்கு தான் காரணமற்றவன், சினமடையும்படி எதையும் செய்யவில்லை என்றே அவன் கூறுகிறான்.

தாவீது கூறுகிறவற்றைக் கீழ்க்காணும் வண் ணம் நாம் பொழிப்புரையாக வழங்கலாம்:

17:1,2 "**கர்த்தாவே**, என்னுடைய வழக்கைக் கேட்டருள்வீராக, ஏனெனில் அது **நியாயமானது**. நான் என்ன சொல்கிறேன் என்பதைக் கவ னத்துடன் கேட்பீராக, ஏனெனில் நேர்மையற்ற முறையில் நான் துன்பப்படுத்தப்படுகிறேன். நீதியை நாடி நான் வேண்டுதலை ஏறெடுக்கிற போது 'உள்ளதை உள்ளவாறே சொல்லுகிறேன்' - அதில் ஏமாற்று வேலை இல்லை, உண்மை மறைக்கப்படவும் இல்லை. உம்முடைய நீதிமன் றத்தில் குற்றமற்றவன் என்று விடுவிக்க வேண்டு கிறேன். அந்த வழக்கின் ஒவ்வொரு அம்சத்தை யும் **உம்முடைய கண்கள்** கண்டு, எது நியாய மானதோ அதன் பக்கமாகத் தீர்ப்பு வழங்கப்பட வேண்டும் என்று மன்றாடுகிறேன்.

17:3-5 "என்னுடைய **இருதயத்தை நீர்** சோதித் துப் பார்த்தால், இருளிலே என்னைச் சோதித்தா லும் வெளிச்சத்திலே என்னைச் சோதித்தாலும் - எவ்வளவுதான் முழுமையாக நீர் ஆராய்ந்து பார்த்தாலும் - என்னுடைய எதிரிகள் இவ்விதமாக என்னைக் கொடுமைப்படுத்துவதற்கு நேர்மை யான காரணம் எதுவுமில்லை. ஒளிவு மறைவின்றி நான் உண்மையையே பேசுகிறேன். மனிதன் வழக்கமாகச் செய்கிற பொல்லாப்புகளைப் பொறுத்தவரை, திருமறையாகிய உம்முடைய **வார்த்தையோடு** நான் நெருங்கி வாழ்ந்து எந்த வன்முறையிலும் ஈடுபடுவதில்லை என்று உறுதி யோடு என்னால் கூறவியலும். என்னுடைய சொந்த வல்லமையால் அல்ல, மாறாக உமது கட்டளை களாலும், வாக்குறுதிகளாலும் உமக்குக் கீழ்ப் படிதலுள்ள வாழ்க்கையை வாழ்ந்து வந்திருக் கிறேன். என்னுடைய **காலடிகள்** வழுவவில்லை. என்னுடைய பகைவருக்கு எதிராக வன்முறை யில் ஈடுபட வாய்ப்புகள் பல உண்டானபோதிலும் அவ்வாறு செய்ய முயற்சியும் மேற்கொண்ட தில்லை.

17:6,7 "இப்பொழுது, நான் எனது வழக்கை உம்மிடத்தில் ஒப்புவிக்கிறேன். நீதியை நாடி உம்மிடத்தில் மன்றாடுகிறேன். நீர் **எனக்குச் செவிகொடுத்து** விடைபகருவீர் என்னும் நம் பிக்கையோடிருக்கிறேன். தமது பகைவரிட மிருந்து தப்பும்படி **உமது வலதுகரத்திடம்** அடைக்கலம் கேட்டு வருகிற யாவருக்கும் நீர் பாதுகாவலராக இருக்கிறீர். நான் உம்மண்டை ஓடிவருகிறபோது, வியக்கத்தக்க வகையில் **உம் முடைய அதிசயமான கிருபையை விளங்கப் பண்ணுவீராக**.

17:8-12 கண்மணியைப் போல என்னைக் காத் தருளுவீராக. நான் கண்ணின்மணியை எண்ணிப் பார்க்கிறேன், 'அது எவ்விதமாகக் கண் இமை யினாலும், அதில் வரிசையாக அமைந்துள்ள முடி களாலும், நெற்றியாலும், எலும்புகள் சூழ்ந்த கண் கின்னத்தாலும், சடுதியில் எழுகிற கையாலும் பாதுகாக்கப்படுகிறது' (F. B. மேயர்). பாதுகாக்கும் திறனும் பாசமும் மிகுந்த **உம்முடைய செட்டை களின் நிழலிலே என்னை மறைத்துக்** கொள் வீராக! அப்பொழுது என்னிடத்தில் இருப்பதைக் கொள்ளையிடுகிறவனும், என்னுடைய உயிரையே எடுக்க வகை தேடுகிறவனுமாகிய **துன்மார்க் கனிடத்திலிருந்து** நான் பாதுகாக்கப்படுவேன். நீர் நன்கு அறிந்திருக்கிறபடி, அவர்களுடைய கொழுத்த இருதயம் பரிவுகாட்டுவதில்லை, அவர் கள் எனக்கு என்ன செய்யப்போகிறார்கள் என் பதை அகம் பாவத்தோடு அச்சுறுத்தும் சொற் களைக்கொண்டு தங்களுடைய வாயினின்று கக்குகிறார்கள். அவர்கள் கள்ளத்தனமாக என் னைப் பின் தொடர்கிறார்கள். அவர்கள் என்னைச் **சுற்றி வளைத்து** நெருங்குகிறார்கள். என்னை இறுதி அடி அடித்துத் தள்ளிக் கொல்ல **அவர்களு டைய கண்கள்** நோக்கிக் கொண்டிருக்கின்றன. கடுமையான பசியோடு புதருக்குள் இருக்கிற கொடூரமான **இளம் சிங்கத்தைப்** போல என்

னைப் **பீறுவதற்கு** அவர்கள் ஆவலோடு இருக் கிறார்கள்.

17:13,14 "கர்த்தாவே, நீர் என்னுடைய பாது காப்பைக் கருதி என்னிடம் வரவேண்டும். அவர் களை நேருக்கு நேர் எதிர்கொண்டு கவிழ்த்துப் போடும். இந்த வாழ்க்கையிலே என்ன கிடைக்கும் என்று அதைக் குறித்தே சிந்தித்துக் கொண்டிருக் கிற அந்தத் துன்மார்க்கருடைய பிடியிலிருந்து **உம் முடைய பட்டயத்தினால்** என்னை விடுவியும். அவர்களுடைய தேவைக்கு அதிகமாகவே நீர் உல கீய பொருட்செல்வத்தை வழங்கியிருக்கிறீர். அவர்களுடைய பிள்ளைகளுக்கும் நீர் தேவைக்கு அதிகமாகக் கொடுத்திருக்கிறீர் - தங்களுடைய **குழந்தைகளுக்கு மீதியானதை வைத்திருக்கும்** அளவு அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

17:15 "என்னைப் பொறுத்த வரை, அவர்கள் எதை வேண்டுமானாலும் பெறலாம். செல்வ வளத்தையல்ல, என்னுடைய விருப்பம் யாவும் ஆவிக்குரியவையே. என்னைக் குறித்து குற்ற வாளியான பாவி என்ற நிலையில் அல்ல, நீதி மான் என்று அறிக்கை செய்யப்பட்டவனாகவே உம்முடைய முகத்தை நோக்கிப் பார்த்தால் அதுவே எனக்குப் போதும். **நான் விழித்திருக் கும் போது உமது சாயலால் திருப்தியாவேன்."**

1 யோவான் 3:2 - இல் உள்ள அனைத்துக் கூறுகளும் 15 -ஆவது வசனத்தில் இருப்பதாகத் திருவாளர் E. பெண்டார் சாமுவேல் சுட்டிக்காட்டி யிருக்கிறார்:

சங். 18: இறந்தோரிலிருந்து கிறிஸ்துவை உயிரோடு எழுப்பிய வல்லமை

இந்தச் சங்கீதம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வைப் பற்றியதாக இருக்கக்கூடும் என்பதை, இதன் 49 -ஆவது வசனம் ரோமர் 15:9 -இல் அவ ரைக் குறிக்கும்படி பயன்படுத்தப்பட்டிருப்பதிலி ருந்து குறிப்பாய் உணர்கிறோம்.

"இதனிமித்தம் நான் புறவினத்தாருக்குள்ளே அறிக்கைபண்ணி உம்முடைய நாமத்தைச் சொல்லி, சங்கீதம் பாடுவேன்."

நாம் மிக நெருக்கமாகச் சென்று ஆராய்ந்து பார்த்தால், நாம் சரியாகவே கணித்திருந்தோம் என்பதை அறிவோம். இந்தச் சங்கீதத்தில் கூறப் பட்டவை அனைத்தும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்த செய்திகளே ஆகும். அவ ருடைய மரணம், உயிர்த்தெழுதல், மகிமைப்படுத் தப்படுதல், அவருடைய இரண்டாம் வருகை மற்றும் மகிமை நிறைந்த அரசு ஆகியவை பற்றிய மிகத் தெளிவான வருணனை கொடுக்கப்பட்டுள்ளது.

நம்முடைய இரட்சகருடைய உயிர்த்தெழு தலின்போது கண்ணுக்குப் புலப்படாத உலகில் நடைபெற்ற பயங்கரமான போரைக் குறித்த தெளிவான விவரங்கள் திருமறையில் வேறு எந்தப் பகுதியிலும் நமக்கு அளிக்கப்படவில்லை.

18:1-3 தம்முடைய அன்பான குமாரனுடைய விண்ணப்பத்தைக் கேட்டு அதற்குப் பதிலுரைத்த காரணத்தால் கர்த்தருக்குப் புகழ்ச்சியைச் செலுத்தியபடி இந்தச் சங்கீதம் தொடங்குகிறது. **பெலன்**, பாதுகாப்பு, உறுதி, **இரட்சிப்பு** ஆகிய வற்றை விவரிக்கும்படி பயன்படுத்தப்பட்டுள்ள உருவகங்களைக் கவனியுங்கள். அவை **தேவனி டத்தில்** காணப்படுகின்றன: **என் பெலன், என் கன்மலை, என் கோட்டை, என் இரட்சகர்... என் கேடகமும் என் இரட்சணியக் கொம்பும் என் உயர்ந்த அடைக்கலமும்** ஆனவர்.

18:4-6 துன்பம் அனுபவிக்கிற இரட்சகரிட மாகச் சாவு மிக விரைவாக நெருங்கிக் கொண்டி ருக்கிறது. விரைவாக மாறுகிற படங்களின் மூல மாக அவர் தம்மையே கயிறுகளால் கட்டப்பட்ட வராகவும், கொஞ்சம் கொஞ்சமாக அலைகளால் மூழ்கடிக்கப்பட்டவராகவும், கட்டுகளில் சிக்கிக் கொண்டவராகவும், தப்பமுடியாத **கண்ணிகளை** எதிர்கொண்டவராகவும் விவரிக்கிறார். அத்த

மிகச் சிறந்த மன நிறைவு:

1 யோவான் - இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை, ஆகிலும்...

சங் - நானோ திருப்தியாவேன்.

மிகப்பெரிய மாற்றம்:

1 யோவான் - அவருக்கு ஒப்பாயிருப்போம்.

சங். - நான் விழிக்கும்போது உமது சாயலில் இருப்பேன்.

மிகப்பரந்த பார்வை:

1 யோவான் - அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்போம்.

சங். - நான் உம்முடைய முகத்தைத் தரிசிப்பேன்.[17]

1 கொரிந்தியர் 15:51-55 மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் 22:4 -ஆகிய வசனங்களையும் காண்க

கைய இக்கட்டான சூழலில் ஒரே ஒரு வழிதான் இருக்கிறது: **தேவனிடத்தில்** ஏறெடுக்கிற மன் றாட்டு. சாகாமல் தான் விடுவிக்கப்பட வேண்டும் என்று கிறிஸ்து விண்ணப்பிக்கவில்லை. அவர் இவ்வுலகிற்கு வந்ததன் காரணமே அதுதான் (யோவான் 12:27). அவர் மரணத்தினின்று தாம் இரட்சிக்கப்பட வேண்டும் என்றே விண்ணப்பித் தார். "அவர் மாம்சத்தில் இருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமை யுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டு தல் செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித் தம் கேட்கப்பட்டார்" (எபி. 5:7).

கிறிஸ்து தமது ஆழ்ந்த துன்பத்தில், தமது ஜெபம் கேட்கப்பட்டு விடை கூறப்பட்டது என்னும் உறுதியைப் பெற்றிருந்தார். இந்தச் சங்கீதத்தின் எஞ்சிய வசனங்கள் யாவும் கெத்செமனேயிலும் கொல்கொதாவிலும் இம்மானுவேலரின் துய ரார்ந்த கதறுதலால் அவர் நிமித்தம் சர்வ வல்ல வருடைய ஆற்றல்கள் யாவும் எவ்வாறு ஒன்று கூட்டப்பட்டன என்னும் விவரங்களை வெளிப் படுத்துகின்றன. "அவருடைய சத்தம் மென்மையாக வும் தனித்தும் ஒலித்தது, ஆனால் அதனுடைய விடை படைப்பையே உலுக்கியது" என்று F. B. மேயர் கூறினார்.

18:7-15 நாம் 7-19 வசனங்களினிடமாய் வரு கிறபோது, போர் வெடித்தது போன்ற சத்தம் அங்கு தொனிக்கிறதைக் கேட்கிறோம். உண்மை யாகவே கிறிஸ்து உயிர்த்தெழுந்தபோது அது தான் நிகழ்ந்தது. அந்தப் போரானது தேவனுக் கும் நரகத்தின் அதிகாரங்களுக்கும் இடையில் தான் நடந்தது. எருசேலம் கல்லறைக்கு வெளியே பிசாசும் அதன் பேய்களும் முகாமிட்டிருந்தன. கர்த்தராகிய கிறிஸ்து ஒருபோதும் உயிர்த்தெழக் கூடாது என்று அவை திட்டமிட்டிருந்தன. அவர் மரித்தோரிடத்திலிருந்து உயிரோடு எழுவா ரெனில் இறைமகன் சிலுவையில் அறையப்பட்ட தால் அவை பெற்ற வெற்றி பயனற்றுப் போய் விடும். ஆகவே அவையாவும் இரட்சகரின் முத் திரையிடப்பட்ட கல்லறையண்டை ஒன்று கூடின.

பின்னர் தேவன் வானங்களைச் சற்று இறக்கி, இவ்வுலகம் இதுவரை அறிந்திராத மிகப்பெரிய வல்லமையை வெளிப்படுத்தும்படி இறங்கிவந் தார். இதனை, "தாம் கிறிஸ்துவை மரித்தோரிலி ருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமையின்படியே" என்று அப்போஸ்தலனாகிய பவுல் பின்னர் கூறினார் (எபே. 1:20). இப்பிரபஞ்சத்தைப் படைத்த மகா வல்லமையைக் காட்டிலும், எகிப்திலிருந்து இஸ்ர வேலரை விடுவித்த வல்லமையைக் காட்டிலும் பெரிய அளவிலான தேவனுடைய உயிர்த்தெழச் செய்யும் வல்லமை துரைத்தனங்களையும் அதி காரங்களையும், அந்தகார லோகாதிபதிகளை யும், தீய ஆவிகளையும் முதலாவது உயிர்த் தெழுந்த நாள் பண்டிகையிலே விரட்டியடித்தது.

தேவன் நெருங்கிவருகிறபோது **பூமி** அதிர் கிறது. அவருடைய சீற்றம் கடுமையானது, அவரு டைய நாசியிலிருந்து **புகை** அலையலையாய்ப் புறப்பட்டு வந்தது, அவருடைய **வாயிலிருந்து** தீ தீவிரமாய் வெள்ளம்போல பெருக்கெடுத்து வந்து அவருடைய பகைவர்மேல் சுழன்று வீசியது. கேரு பீன் போலத் தோற்றமளிக்கும் மேகத்தின்மேல் ஏறி அவர் கீழே இறங்கி வருகிறபோது, கடும்புய லென இருளும், இடிமுழக்கமும், **மின்னலும், கல் மழையும்** கடுமையான அணுகுண்டுத் தாக்குத லைப் போல பகைவர்மேல் விழுகின்றன. இவ்வித மாக இறைவனின் சீற்றம் வருணிக்கப்பட்டிருக் கிறது. செங்கடலைக் கடந்து வந்தபோது நிகழ்ந் ததுபோலவே கடல் மற்றும் ஆறுகளில் உள்ள நீர் அச்சத்தால் பின்வாங்கியது, சர்வ வல்லவரின் கோபத்தின் பிரமாண்டமான காட்சியாக அது வெளிப்பட்டது.

18:16-19 எதிரி முற்றிலும் தோற்றுப்போன வனாகப் பின்வாங்கும்வரை தேவன் அவனுடைய கவனத்தை ஈர்க்கும் வகையில் அவன்மேல் மோதி, காயமேற்படுத்தி, நொறுக்கி, புண்படுத்தி, முடமாக்குகிறார். அதன் பிறகு அவர் கீழே இறங்கி இன்னமும் முத்திரையிடப்பட்டிருந்த கல்லறையிலிருந்து கிறிஸ்துவை வெளியே கொண்டுவருகிறார். அல்லேலூயா! கிறிஸ்து உயிர்த்தெழுந்திருக்கிறார்! மரித்தோரிலிருந்து அவரை தேவன் உயிரோடு எழுப்புகிறது மட்டு மின்றி, எதிரியின் மண்டலத்தின் வழியாக வெற்றி யோடு அவரை உயரே வரச்செய்கிறார், மேலும் தம்முடைய வலப்புறத்தில் அமரச் செய்து மகி மைப்படுத்துகிறார். இதைக் குறித்து பவுல், "துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோல மாக்கி, அவற்றின்மேல் சிலுவையிலே வெற்றி சிறந்தார்" என்று கூறுகிறார் (கொலோ. 2:15).

18:20-30 இப்பகுதியில் உயிர்த்தெழுதல் பற்றிய பகுத்தறிவு விளக்கம் அல்லது இரகசியம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. கர்த்தராகிய இயேசுவை உயிரோடு எழுப்ப தேவனுக்கு ஒரு

குறிப்பிட்ட நன்னெறி சார்ந்த அவசியம் உள்ளது. கிறிஸ்துவின் பாவமற்ற, மாசற்ற வாழ்க்கை, அவருடைய திருத்தந்தையின் சித்தத்தை நிறைவேற்றுவதில் வழுவாத நிலை, கல்வாரி சிலுவையில் அவர் செய்து முடித்த நிறைவான செயல் ஆகியவை அந்த அவசியத்திற்கான காரணங்களாகும். தேவனுடைய நீதியான இயல்புகள் யாவும், முடிவில்லாத வாழ்வின் வல்லமையால் அவர் கிறிஸ்துவைக் கல்லறையிலிருந்து வெளிக் கொணரக் கட்டாயப்படுத்தின. இதுவே இந்த வீறார்ந்த சொற்களின் பொருளாகும், "பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டார்" (ரோமர் 6:4). தேவனுடைய மகிமையுள்ள குணநலன்கள், கிறிஸ்துவின் நிறைவான தனிப்பட்ட நீதிக்குப் பரிசாக, அவரை உயிரோடு எழுப்புவதை நன்னெறியெனக் கட்டாயத்திற்குட்படுத்தின.

20 முதல் 30 வரையிலான வசனங்களைத் தாவீது எழுதியபோது, அவனைப் பொறுத்தவரை அவையாவும் முழுவதும் உண்மையல்ல. மாறாக, அவன் பரிசுத்த ஆவியின் உயிரூட்டத்தால், அவனுடைய குமாரனும் கர்த்தருமாகிய ஒருவரைப் பற்றி தீர்க்கதரிசனமாக உரைத்தவையேயாகும் (மத். 22:41-46).

18:31-42 இந்த வசனங்கள் கிறிஸ்துவின் இரண்டாம் வெளிப்பாட்டை விவரிக்கின்றன. "தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜ்வாலித்து எரிகிற அக்கினியோடும்" அவர் வானத்திலிருந்து வெளிப்படுவார் (2 தெச. 1:7,8). மேலும் அவர் "இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தைத் தரித்திருப்பார்... புறவினத்தாரை வெட்டும்படிக்கு அவருடைய வாயிலிருந்து கூர்மையான பட்டயம் புறப்படுகிறது; இரும்புக் கோலால் அவர்களை அரசாளுவார்; அவர் சர்வ வல்லமையுள்ள தேவனுடைய உக்கிர கோபமாகிய மதுவுள்ள ஆலையை மிதிக்கிறார்" (வெளி. 19:13,15).

இங்கு முதன்மையாக, கிறிஸ்து போர்வீரராக வருணிக்கப்பட்டிருக்கிறார். மற்ற திருமறைப் பகுதிகளில், அவர் மீண்டும் வெளிப்படும்போது என்ன நடைபெறும் என்று சொல்லப்பட்டுள்ளனவோ, அவற்றோடு இது ஒத்திருக்கிறது. "இதோ, எல்லோருக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுக்கிறதற்கும், அவர்களில் அவபக்தி உள்ளவர்கள் யாவரும் அவபக்தியாய்ச் செய்துவந்த சகல அவபக்தியான கிரியைகளினிமித்தமும், தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடினவார்த்தைகளெல்லாவற்றினிமித்தமும், அவர்களைக் கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூட கர்த்தர் வருகிறார்" (யூதா 14,15).

திருத்தந்தையாகிய தேவனாலே போருக்குத் தேவையான எல்லாம் கிடைக்கப் பெற்றவராக (வச. 31-37), கிறிஸ்து போரைத் தொடங்கி, தமது பகைவர் யாவரையும் முற்றிலுமாக அழிக்கிறார் (வச. 37-42).

18:43-45 தமது பகைவர் யாவரையும் அடியோடு மடங்கடித்ததைத் தொடர்ந்து, கிறிஸ்து இப்புவியில் தமது அரசை நிறுவி அரசருக்கெல்லாம் அரசராகவும், கர்த்தருக்கெல்லாம் கர்த்தராகவும் அரசாளுகிறார். அவர் இப்பொழுது எல்லா இனங்களுக்கும் தலைவராக இருக்கிறார். மீட்கப்பட்ட இஸ்ரவேலும், மீட்கப்பட்ட புறவினத்தாரும் மகிமையுள்ள கிறிஸ்துவின் நீதியுள்ள அரசாட்சிக்கு மனமுவந்து கீழ்ப்படிந்து பணிவிடை செய்கிறார்கள். மற்றவர்கள் கீழ்ப்படிபவர் போலப் பாசாங்கு செய்கிறார்கள்.

18:46-50 இந்தச் சங்கீதம் எவ்வாறு தொடங்கப்பட்டதோ அதுபோலவே முடிவடைகிறது. கர்த்தராகிய இயேசு நீதிபரர் என்று தேவன் வியத்தகு வகையில் மெய்ப்பித்திருக்கிறதால் அவருக்குப் புகழ்ச்சியைச் செலுத்தும் பாடலுடன் இது முடிவடைகிறது. அவர் தம்முடைய அரசருக்கு மிகப்பெரிய வெற்றியைத் தந்திருக்கிறார், தாம் அபிஷேகம் பண்ணினவருக்கு, அதாவது, தம்முடைய குமாரருக்கு கிருபையை அளிக்கிறார்.

அவர் இவ்வாறு செய்ததன் காரணமாக நாமும் அவரைப் புறவினத்தாருக்குள்ளே துதித்து, அவருடைய திருப்பெயருக்குச் சங்கீதம் பாடுவோம்.

சங்கீதம் 19: இறைவனின் இருநூல்கள்

19:1,2 "வானங்கள் இறைவனுடைய மகிமையை அறிவிக்கின்றன; ஆகாயங்கள் அவருடைய கரங்களின் செயலைப் பிரசித்தப்படுத்துகின்றன" (இலகு தமிழ்). அவை கூறும் செய்தி எத்தனை மகிமை நிறைந்தது! சிந்தித்துப் பாருங்கள், முதலாவதாக, இப்பிரபஞ்சத்தின் மாபெரும் அளவைக் குறித்து அவை என்ன சொல்லுகின்றன. நாம் ஒளியின் வேகத்தில் பயணம் மேற்கொண்டால், அதாவது, ஒரு வினாடியில்

186000 மைல்கள் சென்றால் அல்லது கிட்டத்தட்ட ஓராண்டில் ஆறு ட்ரில்லியன் மைல்கள் பயணம் செய்தால், நாம் தொலைநோக்கியில் காணக் கூடிய மிகத் தொலைவான இடத்திற்குச் செல்ல 10 பில்லியன் ஆண்டுகள் செல்லும். ஆனாலும் வானங்களின் எல்லை இன்னும் தொலைவில் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இப்பொழுது விண் ஆராய்ச்சியாளர்கள் ஆகாய விரிவுக்கு முடிவே இல்லை என்று கருதுகிறார்கள்! இவ்வாறு எல்லைக்குட்படா ஆகாய விரிவில் நம்முடைய பூமி ஒரு சிறு துரும்புக்கு ஒப்பாயிருக்கிறது!

விண்மீன்களின் எண்ணிக்கையையும் வான கோளங்களின் எண்ணிக்கையையும் கணக்கிட்டுப் பாருங்கள். நமது இயல்பான கண்களால் ஐயாயிரம் விண்மீன்களைக் காணமுடியும். சிறிய தொரு தொலை நோக்கியின் மூலம் இருபது லட்சம் விண்மீன்களைக் காணலாம். ஆனால் மிக நுட்பமான தொலைநோக்கியின் மூலமாக நம் மால் பலகோடி பால் மண்டலங்களைக் காணமுடியும், தனித்தனி விண்மீன்களைக் கணக்கிடவே முடியாது.

மேலும் பூமிக்கும் வான்கோள்களுக்கும் இடையில் உள்ள தொலைவையும், ஒரு விண்மீனிலிருந்து மற்றொன்று எவ்வளவு தொலைவு என்பதையும் எண்ணிப்பாருங்கள். ஒருவர் அந்த இடைவெளித் தொலைவை இவ்வாறு வருணித்திருக்கிறார்: 1000 மைல் தொலைவு செல்ல ஒரு பென்னி (60 பைசா) செலவாகும் என்றால், நிலவுக்குச் செல்ல 2.38 டாலர் (கிட்டத்தட்ட 150 ரூபாய்), சூரியனுக்குச் செல்ல 930 டாலர் (கிட்டத்தட்ட 60000 ரூபாய்), மிக அருகில் உள்ள விண்மீனுக்குச் செல்ல 260 மில்லியன் டாலர் (1600 கோடி ரூபாய்) செலவாகும்.

தொலைநோக்கியின் மூலமாக நாம் பார்க்கக் கூடிய வெகு தொலைவில் இருக்கும் நட்சத்திரத்தின் ஒளி இங்கு பூமிக்கு வந்துசேர பத்து பில்லியன் ஆண்டுகள் ஆகும். ஆகவே நாம் வான மண்டலத்தைப் பார்க்கிறபோது, உண்மையில் கால அளவின்படி முந்தைய காலத்தையே காண்கிறோம். எடுத்துக்காட்டாக, இப்பொழுது நாம் காண்கிற ஆண்ட்ரோமேடா பால் மண்டலம் இப்பொழுது இருக்கும் இடத்தில் அல்ல, இரண்டு மில்லியன் ஆண்டுகளுக்கு முன் இருந்த இடத்தில்தான் அது இருப்பதாகப் பார்க்கிறோம்!

விண்மீன்கள் கூட்டங்கூட்டமாக வானத்தில் இருப்பது போல நமக்குத் தோன்றுகின்றன. ஆனால் அவற்றிற்கு இடையே உள்ள தொலைவு மிக அதிகம். ஏதோ ஒளிக்கப்பல்கள் தன்னந் தனியே பல கோடி மைல்கள் இடைவெளிவிட்டு வெறும் கடலில் மிதப்பது போலவே இருக்கின்றன.

படைப்பு இவ்வளவு பெரியதாக இருக்குமென்றால், படைப்பாளர் எவ்வளவு பெரியவராக இருப்பார்! அவருடைய வல்லமை ஞானம் ஆகியவற்றின் மேன்மையை வானங்கள் இரவும் பகலும் பறைசாற்றுகின்றன. **ஆகாயங்கள்** இடைவிடாமல் அவருடைய கரங்களின் செயல்களின் வியத்தகு தன்மையை அறிவிக்கின்றன. (**"ஆகாய விரிவு"** என்று திருமறையில் கூறப்பட்டுள்ள சொல், வானங்களின் பரந்த தன்மையைக் குறிக்கும்படி பயன்படுத்தப்பட்டுள்ளது.) "இயற்கை திறந்த நூலாகத் தனது படைப்பாளரின் புகழை எங்கும் பரப்புகிறது" என்று திருவாளர் ஐசக் வாட்ஸ் கூறினாற்போல இது விளங்குகிறது.

19:3,4 அங்கே பேச்சில்லை, சொற்கள் இல்லை, காதால் கேட்கத்தக்க ஓசையுமில்லை, ஆனாலும் விண்மீன்களின் சொற்பொழிவு **பூமியெங்கும் செல்கிறது**, அதன் செய்தி **உலகின் கடைசிவரை செல்கிறது**. வானத்தை நோக்கிப் பார்த்தாலே போதும் இறைவன் இருக்கிறார் என்பதை மனிதனால் அறிய முடியும். மேலும் அவருடைய நிலைபேறான வல்லமையையும் அவனால் அறிய முடியும் (ரோமர் 1:20). இப் பிரபஞ்சத்தின் திகிலூட்டும் பிரமாண்டமான அளவுகளும், அதனுடைய சிக்கலான அமைப்பும் லார்ட் கெல்வின் என்பாரின் கருத்தை உறுதி செய்கின்றன, "நீங்கள் போதுமான அளவு தீவிரமாகச் சிந்திப்பீர்கள் எனில், இறைவன் இருக்கிறார் என்பதை நம்புவதற்கு நீங்கள் கட்டாயப் படுத்தப்படுவீர்கள்." திருவாளர் கேண்ட் எழுதியிருப்பதாவது:

> இறைவன் இப்பிரபஞ்சத்தை வியத்தகு வகையில் ஒழுங்கும் கிரமமுமாக ஏற்படுத்தியிருக்கிறார் என்பதையும், அவர் தமது கைகளின் கிரியைகளை ஒன்றோடொன்று முழு நிறைவான வகையில் இணக்கமுள்ளவையாக உருவாக்கி, அப்படையில் சிலவற்றை நமக்குப் புலப்படும்படி வெளிப்படுத்தியிருக்கிறார் என்பதையும் அறிந்து ஒப்புக்கொள்ளாமல், இதன் கட்டமைப்பின் மேல் ஆர்வம் கொள்வதென்பது இயலாத செயலாகும். அந்தச் சிந்தனையானது முன்னர் இதனை மிகுந்த அழகானது என்றும் நிறைவானது என்றும் வியந்து

> போற்றியது. ஆனால் அதே சிந்தனை இப் பிரபஞ்சத்தைத் தற்செயலாக எதிர்பாராத மகிழ்ச்சிக்குரிய செயல் விளைவு என்று கருது மானால் அது சீற்றத்திற்குரியதும், துணிவு மிக்க தவறாகவும் விளங்கும். உன்னதமான ஞானமே இத்திட்டத்தை உருவாக்கியிருக்க வேண்டும், எல்லைகுட்படா வல்லமையே இதனைச் செயல்படுத்தியிருக்க வேண்டும்.[18]

19:4-6 கவிகை மாடம் போன்று வளைவான வானத்தை தேவன் **சூரியனுக்கு** ஒரு மிகப்பெரிய கூடாரமாக ஆயத்தம் செய்திருக்கிறார் என்று சங்கீத ஆசிரியன் காண்கிறான். காலையில் கதிர வன் எழும் காட்சி, **அது தன் மணவறையிலிருந்து புறப்படுகிற மணவாளனைப் போல** இருப்பதாக இங்கு சித்திரிக்கப்பட்டுள்ளது. அது வானங்களில் வில்போன்ற பாதையில் **பராக்கிரமசாலியைப்** போல மகிழ்ச்சியோடு ஓடுகிறது. அது கிழக்கு திசையின் தொடுவானத்தில் தனது பயணத்தைத் தொடங்கி மேற்குதிசையின் தொடுவானத்திற்குப் பயணத்தைத் தொடர்கிறது. உண்மையில் சூரியன் உதிப்பதுமில்லை அஸ்தமனமாவது மில்லை என்பதை நாம் அறிவோம், மாறாக சூரியனைச் சுற்றி வரும் பூமி தானே சுற்றி இப்படி ஒரு தோற்றத்தை உருவாக்குகிறது. ஆனால் திருமறையில் இடம்பெற்றுள்ள கவிதைகளில் மனிதனுடைய அன்றாடகப் பேச்சின் சாயல் காணப்படுகிறது.

அதன் **காந்திக்கு மறைவானது ஒன்று மில்லை.** அது தனது ஒளி பிரபஞ்சம் முழுவதும் வெளிப்படுவதிலும், இவ்வுலகின் மூலை முடுக் குகள் அனைத்துப் பகுதிகளுக்கும் ஊடுருவிச் செல்வதிலும் இன்புறுகிறது.

19:7-9 தேவன் தம்மை வெளிப்படுத்துகிற நூல்களில் முதலாவது படைப்பு என்னும் நூல் தான். தேவ வெளிப்பாட்டின் இரண்டாவது நூல் **"கர்த்தருடைய வேதம்"** என்று 7 -ஆவது வசனம் அறிமுகப்படுத்துகிறது. இவ்விரண்டு நூல்களும் இறைவனை மகிமைப்படுத்துவதோடு, சிந்தனை மிக்க மனிதர்களைத் தொழுதுகொள்ளும்படி ஏவுகின்றன. சங்கீதங்களின் விரிவுரையாளர்கள் கேண்ட் என்பார் கூறிய புகழ்மிக்க மூதுரையை மேற்கோள் காட்டாமல் இருக்கமாட்டார்கள்.

> என் தலைக்கு மேலுள்ள பளிச்சிடும் விண்மீன் கள் நிறைந்த வானமும், என் உள்ளத்திலுள்ள நன்னெறி வேதமும், என்னுடைய ஆத்துமா எப் போதும் அதிகமதிகமாக வியந்து போற்றவும் உயர்வாய் மதிக்கவும்கூடிய எண்ணத்தால் அதனை நிரப்புகின்ற இரண்டு விசயங்களாகும்.[19]

ஆனால் இந்த இரண்டு இறை நூல்களுக்கும் இடையே ஒரு வேறுபாடு இருக்கிறது. படைப் பானது இறைவனை வல்லமையுள்ளவர் என்று வெளிப்படுத்துகிறது, அதாவது வல்லமையின் தேவன். ஆனால் திருமறையோ அவரைத் தமது மக்களோடு உடன்படிக்கையின் அடிப்படையில் உறவுகொள்கிறவர் என்று காட்டுகிறது. தேவ னுடைய கிரியைகள் அவருடைய ஞானத்தையும் வல்லமையையும் வெளிப்படுத்துகின்றன, மாறாக அவருடைய வார்த்தையோ அவருடைய அன்பை யும் கிருபையையும் வெளிப்படுத்துகின்றன. அறிவியல் உண்மை நம்முடைய புத்தியைத் தூண்டிவிடுகிறது, ஆவிக்குரிய உண்மையோ நம்முடைய இருதயத்தையும் மனச்சாட்சியையும் உறுதியான நம்பிக்கை அடையச் செய்கிறது.

தேவனுடைய திருமறையைக் குறித்துத் தாவீது தன்னுடைய புகழுரையில், அதனைக் **கர்த்தருடைய வேதம்** என்று குறிப்பிட்டிருப்ப தோடு **கர்த்தருடைய சாட்சி** என்றும், **கர்த்தரு டைய நியாயங்கள்** என்றும், **கர்த்தருடைய கற் பனை** என்றும், **கர்த்தருடைய பயம்** என்றும், **கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு** என்றும் விவரிக் கின்றான். தேவனுடைய திருமறையைக் குறித்து மிகச்சிறந்த எட்டுப் பண்புகளைச் சங்கீத ஆசிரி யன் எடுத்துரைக்கிறான். அவையாவன: **குறை வற்றது, சத்தியம், செம்மை, தூய்மை, சுத்தம், நிலையானது, உண்மை, நீதி** என்பவையே. மேலும் அதனுடைய வியத்தகு ஊழியங்கள் சொல்லப்பட்டுள்ளன. **ஆத்துமாவை** மனந்திரும் பச் செய்கிறது, பேதையை ஞானியாக்குகிறது, இருதயத்தைச் சந்தோஷிப்பிக்கிறது. கண்களைத் தெளிவாக்குகிறது, இறையூழியனை எச்சரிக் கிறது.

19:10 திருமறையின் மதிப்பைப் பொன்னைக் கொண்டு கணக்கிட முடியாது. ஆனாலும் பொன்னோடு இது ஒரு பொதுவான குணத்தைப் பெற்றிருக்கிறது: இந்தப் புதையலைப் பெறு வதற்கு மனிதர்கள் தோண்டியெடுக்க வேண்டி யது அவசியம். இறைவன் தந்திருக்கும் திருமறை யின் பக்கங்களில் பெரிய அளவில் செல்வம் மறைந்திருக்கிறது. அவற்றை நாம் தேடி ஆராய் வோமெனில் நம்முடைய நல்வாழ்வுக்கு மிகுந்த பயன் கிடைக்கும்.

இறைவன் மறைத்து வைத்திருக்கும் காரியங் களில் அவரது மகிமை இருக்கிறது. ஒரு

செயலை ஆராய்ந்து வெளிப்படுத்துவதோ அரசனுக்கு மேன்மை (நீதிமொழிகள் 25:2 இலகு தமிழ்).

கனிமங்களை நாடியறியும் மனிதன் பொன்னைக் கண்டுபிடிக்கும்போது அடைகிற மகிழ்ச்சியை, திருமறையில் மறைந்திருக்கும் ஆவிக்குரிய தங்கக் கட்டிகளை நான் கண்டெடுக்கும் போது அடைகிற மகிழ்ச்சியோடு சிறிதளவும் ஒப்பிடமுடியாது என்று என்னால் உறுதியோடு கூற முடியும்! நான் தேனை மிகவும் விரும்பிச் சுவைப்பேன், ஆனாலும் அதனுடைய சுவை இறைவனின் நல்ல சொற்களைப் போன்று இனிதாக இருப்பதில்லை! என்னுடைய திருமறையில் நான் கண்டடைந்த செறிவையும் மனநிறைவையும் வருணிக்க சொற்கள் இல்லை.

இறைவனின் அருளுரை நல்லதொரு வழிகாட்டி
மறைநூலும் எனதருகில் நின்றிடும் நண்பனாம்,
சுமைகளை நீக்கிடும் பாதைக்கு ஒளிதரும்
இமைகளைத் திறந்திட உதவிடும் வாக்குகள்,
கனிவான சொற்களால் உள்ளத்தைத் தேற்றிடும்
பணிவோடு கீழ்ப்படிவேன்
நாள்தோறும் படித்திடுவேன்!

– எட்மண்ட் பிலிஃபண்ட்

கவனத்தைக் கவரும் வகையில் ஓர் அழகிய கருத்தை, **"தேனிலும் தேன் கூட்டிலிருந்து** துளித் துளியாக **ஒழுகும் தெளிதேனிலும் மதுரமுள்ளது"** என்னும் சொற்றொடரில் காணவியலும். துளித்துளியாக வடிகிற தேனே பிழிந்து எடுக்கப்படுகிற தேனைக் காட்டிலும் தூய்மையானது.

19:11 அன்றியும், அவற்றால் உமது அடியேன் எச்சரிக்கப்படுகிறேன். திருமறை வசனங்களின் மூலமாக, விசுவாசியானவன் பிசாசை எதிர்த்து நிற்கவும் சோதனையிலிருந்து தப்பியோடவும், பாவத்தை வெறுக்கவும், பொல்லாப்பின் தோற்றத்தையே தவிர்க்கவும் கற்பிக்கப்படுகிறான். திருமறையின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து வாழ்கிறபோது, கிறிஸ்தவன் தன் வாழ்க்கையில் மெய்யான நிறைவைக் கண்டடைகிறான். ஆவிக்குரிய வகையிலும், உடலாலும், மனத்தாலும் அவன் நல்வாழ்வை அனுபவித்து மகிழ்கிறான்! இவை எல்லாவற்றிற்கும் மேலாக, கிறிஸ்துவின் நியாயாசனத்தில் தனக்கென வெகுமதியைச் சேர்த்து வைக்கிறான். "தேவபக்தியானது தற்போதையே வாழ்வுக்கும் வருங்கால வாழ்வுக்கும் உதவும் வாக்குறுதியைக் கொண்டிருக்கிறது" (1 தீமோ. 4:8).

19:12 கர்த்தருடைய வேதம் எவ்வளவாகப் பரிசுத்தமும், நீதியும், நிறைவானதுமாக இருக்கிறது என்று நாம் எண்ணிப்பார்க்கிறபோது, எந்த அளவிற்குத் தோல்வியடைந்திருக்கிறோம் என்பதை நாம் உணர்வோம். மேலும், "தன் பிழைகளை உணருகிறவன் யார்?" என்று தாவீதுடன் சேர்ந்து கேள்வி எழுப்புவோம். திருவாளர் பார்னஸ் எழுதுகிறார்:

> வேதமானது இவ்வளவு தூய்மையும், பரிசுத்தமும் நிறைந்ததாக இருப்பதோடு, இது எதிர்பார்க்கிறவை கண்டிப்பானவையாகவும், இதனுடைய ஆட்சியெல்லை சிந்தனை, பேச்சு மற்றும் வாழ்வு அனைத்திலும் பரந்தும் இருப்பதால், எத்தனை தடவை அதனை மீறி ஒருவன் நடந்திருக்கிறான் என்பதை ஒருவனாலும் கணக்கிடமுடியாது. இதற்கு ஓரளவு ஒப்பான கருத்தைச் சங்கீதம் 119:96 -இல் காண்கிறோம்: "எல்லாப் பரிபூரணத்திற்கும் ஓர் எல்லையை நான் காண்கிறேன், ஆனால் உமது கட்டளைகளோ எல்லையற்றவை."[20]

நாம் எப்படிப்பட்டவர்கள் என்பதை நம்மிடமே திருமறை வெளிப்படுத்திக் காட்டுகிறது. மேலும் நாம் முன்னர் பாவம் என்று அறியாதிருந்த செயல்களைக் குறித்து நாம் குற்றவாளிகள் என்று அது தீர்ப்பு அளிக்கிறது. **மறைவான குற்றங்களுக்கான** பாவமன்னிப்பை நாடி நாம் மன்றாடுவதற்கு அது தூண்டிவிடுகிறது. மறைவான குற்றங்கள் நமக்கோ பிறருக்கோ தெரியாமல் இருக்கலாம், ஆனால் அவற்றை இறைவன் அறிந்திருக்கிறார். நமக்குத் தெரியாமல் இருந்தாலும் பாவம் பாவமே. ஆகவே நம்முடைய பாவஅறிக்கை மறைவான குற்றங்களையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

19:13 அறிந்திராத பாவங்களை அகற்றுவதற்கான மன்றாட்டை ஏறெடுக்க இந்தச் சங்கீதம் நமக்குக் கற்பிப்பதோடு, நாம் **துணிகரமான பாவங்களிலிருந்து** காக்கப்படுவதற்காக மன்றாடுவதற்கும் கற்பிக்கிறது. அதாவது, பெருமையாலும் தன்னம்பிக்கையாலும் பிறக்கிற பாவங்களே துணிகரமான பாவங்கள் ஆகும். இப்பிரபஞ்சத்தின் பாவங்களின் தகப்பனாக பெருமை இருக்கிறது. இதுவே தேவனுக்கு எதிராக முதல் கலகத்தைச் செய்யும்படி லூசிபரைத் தூண்டிவிட்ட பாவம். மற்ற எல்லாவற்றையும் விட, அத்தகைய **துணிகரமான பாவத்தின்** ஆளுகையைக் குறித்தே பாடலாசிரியன் பயந்திருந்தான். அவற்றின் ஆளு

கைக்கு அவன் தப்புவானால், **"பெரும் பாதகத்துக்கு நீங்கலாயிருப்பேன்"** என்று கூறுகிறவனாயிருப்பான். குறிப்பாக, இறைவனை விட்டு விலகி அவருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்வதே **பெரும் பாதகம்**.

19:14 புகழுரை முடிவு பெற்றது. படைப்பின் நூலையும் வெளிப்பாட்டின் நூலையும் குறித்துத் தாவீது உயர்த்திப் பேசிய பிறகு, இப்பொழுது அவனுடைய **வார்த்தைகளும் இருதயத்தின் தியானமும்** கர்த்தருடைய சமுகத்தில் இன்பமாயிருக்க வேண்டுமென்று மன்றாடுகிறான். கர்த்தரே அவனுடைய கன்மலையாகவும் அவனுடைய மீட்பராகவும் இருக்கிறார். இறைவன் **கன்மலை** என்னும் குறிப்பு, அவருடைய வலிமையையும், பாதுகாப்பையும், இரட்சிப்பையும் கூறும்படி வடிவமைக்கப்பட்டுள்ளது. அவர் நம்முடைய **மீட்பராகக்** குறிப்பிடப்பட்டிருக்கையில், கிறிஸ்துவில் அவர் நம்மைப் பாவத்திலிருந்தும், அடிமைத்தளையிலிருந்தும், அவமானத்திலிருந்தும் விலைகொடுத்து மீட்டார் என்பன வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

சங்கீதம் 20:

யாக்கோபின் இறைவனின் திருப்பெயர்

நாட்டில் எப்போது போர் மூளும் என்னும் சூழ்நிலை இருந்தது. தாவீது அரசன் தனது படைகளைப் போர்முகத்திற்கு நடத்திச்செல்வதற்கு முன் பலிகளைச் செலுத்தும்படி வந்தான். விசுவாசமுள்ள பெருந்திரளான குடிமக்கள் அவன் வெற்றியடைய வேண்டும் என்று வாழ்த்தும் பொருட்டு அங்கு குழுமியிருந்தார்கள். முதல் ஐந்து வசனங்களில், கர்த்தர்தாமே தாவீதைக் காத்து, அவனுக்கு வெற்றியைக் கொடுக்க வேண்டும் என்று அவர்கள் மன்றாடினார்கள். மக்களுடைய மன்றாட்டினால் உற்சாகமடைந்த அரசன், தனக்காக யெகோவா செயல்புரிவார் என்று நம்பி அதனை வெளிப்படுத்தினான் (வச. 6). அவனுடைய நம்பிக்கை மக்களிடமும் பரவி, அவர்கள் தங்களுடைய மன்றாட்டுடன், விடுவிக்கப்படுவோம் என்னும் உறுதியையும் வெளிப்படுத்தினார்கள் (வச. 7-9).

குடிமக்களின் மன்றாட்டு (20:1-5)

20:1 போர் நெருங்கிவருகிறது; அதில் பகைவர் படுதோல்வி அடைந்து திரும்பிச் செல்ல வேண்டும் என்னும் விண்ணப்பத்திற்குக் கர்த்தர் பதில்தர வேண்டும் என்று குடிமக்கள் போர் தொடங்குவதற்கு முந்தின நாள் தங்களுடைய மன்றாட்டை ஏறெடுக்கிறார்கள். **"யாக்கோபின் இறைவனுடைய பெயர் உன்னைப் பாதுகாப்பதாக"** என்று அவர்கள் முழங்கிய போது இறைவனுடைய பெயர் அவரையே குறிக்கிறது என்று மக்கள் நினைவுபடுத்துகிறார்கள். அவ்வியத்தகு பெயரை இந்தப் பாடலில் மும்முறை நாம் காண்கிறோம்:

> "யாக்கோபின் இறைவனுடைய பெயர் உன்னைப் பாதுகாப்பதாக" (வச. 1).
>
> "எங்கள் இறைவனுடைய பெயரில் நாங்கள் கொடிகளை உயர்த்துவோம்" (வச. 5).
>
> "எங்கள் இறைவனாகிய கர்த்தருடைய பெயரிலேயே நம்பிக்கை வைக்கிறோம்" (வச. 7).

(மேலே குறிப்பிடப்பட்டுள்ள வசனங்கள் இலகு தமிழ் மொழிபெயர்ப்பிலிருந்து எடுக்கப்பட்டவை).

இவை பாதுகாக்கும் பெயர், காட்சிப்பொருளாக உயர்த்தப்பட்ட பெயர், இடுக்கண் அகற்றும் பெயர் என்னும் அழகிய தலைப்புகளில் செயல் விளக்கங்களாகத் திருவாளர் வில்லியம்ஸ் என்பவரால் அழைக்கப்பட்டுள்ளன.

20:2 எதிர்நோக்கப்பட்ட உதவியின் ஆதாரம் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. உலகில் இறைவனின் உறைவிடம் சீயோன் பரிசுத்த இடமாகும். ஆகவே அந்தப் **பரிசுத்த இடத்திலிருந்து உதவியும் சீயோனிலிருந்து ஆதரவும்** கிடைக்கும் என்று எதிர்பார்ப்பது இயல்பானதே.

20:3 கர்த்தர் தயவுடன் அரசனை நினைவு கூருவார் என்பதற்கான சிறப்பான காரணங்கள் எவையெனில், அரசனின் உண்மையோடுகூடிய கீழ்ப்படிதலினால் கொண்டுவரப்பட்ட **காணிக்கைகளும் தகனபலிகளுமேயாகும்**.

20:4,5 அரசனுடைய திட்டங்களையும் நோக்கங்களையும் கர்த்தர் நிறைவாக வெற்றிபெறச் செய்யவேண்டும் என்பதே அவனுடைய **வாஞ்சையாக** இருந்தது. இங்கு அவனுடைய மனதிற்கினிய குடிமக்கள், போரின் முடிவில் அது நிறைவேற வேண்டும் என்று மன்றாடுகிறார்கள். ஏற்கனவே மாபெரும் வெற்றி கிடைத்ததுபோல அவர்கள் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இறைவனின் பெயரைப் போற்றும் வகையில் உயர்த்திப் பிடித்திருக்கிற கொடிகள் காற்றில் படபட என்று அடித்துக் கீச்சென ஒலி எழுப்பிக் கொண்டிருக்கின்றன. இவ்வாறாக போர்ச்செய்தி அறிவிக்கப்பட்டவுடனேயே மக்களுடைய மனதில் பேருவகையும் பரபரப்பும் எழத்தொடங்கின.

"உமது வேண்டுதல்களையெல்லாம் கர்த்தர் நிறைவேற்றுவாராக" என்னும் சொற்களைக்

கூறியது குடிமக்களா, ஆசாரியனா, அரசனா என்னும் கேள்வி எழுகிறது. அது எதுவாயினும் இச் றொற்றொடர் தகுதியான விண்ணப்பமாக விளங்குகிறது.

அரசனின் பதிற்செயல் (20:6)

தன்னுடைய குடிமக்கள் கர்த்தரிடம் தங்களுடைய விண்ணப்பத்தை ஏறெடுப்பதில் மிகுந்த உற்சாகத்தோடு இருப்பதைக் கண்டு உற்சாகம் கொண்ட அரசன், கர்த்தர் தம்முடைய பரிசுத்த வானத்திலிருந்து தேவையான உதவியை அனுப்புவார் மற்றும் எல்லைக்குட்படா அவருடைய வல்லமையாலே வியத்தகு முறையில் செயல்புரிவார் என்னும் அறிவுடையவனாக அகமகிழ்கிறான்.

குடிமக்களின் உறுதியான நம்பிக்கையில் எழுந்த மன்றாட்டு (20:7-9)

20:7,8 அத்தகைய நம்பிக்கை ஒருவரிடத்திலிருந்து மற்றொருவரைத் தொற்றிக்கொள்கிறது. பற்றுறுதிகொண்ட குடிமக்கள் தலைவனின் உறுதியால் ஊக்கம் பெறுகிறார்கள். பகைவன் படைவலிமையால் தற்செருக்குடன் பேசிய பேச்சு இனிமேல் அவர்களைப் பயப்படச் செய்யாது. பகைவன் தன்னுடைய பாதிப்படைய இயலாத **இரதங்களைக்** குறித்தும், போரில் சோதிக்கப்பட்டு வலிமை பெற்றவை என்று கண்டறியப்பட்ட **குதிரைகளைக்** குறித்தும் பெருமைப்படட்டும்; இஸ்ரவேலோ **கர்த்தருடைய பெயரில்** பெருமை பாராட்டும்! போர்க்கருவிகள் குவித்து வைக்கப்பட்டிருக்கும் கிடங்குகளை நம்புவதைப் பார்க்கிலும் கர்த்தரை நம்புவதே சிறந்தது. கர்த்தருடைய பார்வையில், மாவலிமை பெற்ற படைகளும் தாறுமாறாய்ச் சிதறடிக்கப்படும்! ஆனால் கர்த்தரின் பக்கம் இருப்பவர்கள், யுத்தத்தின் புகை மறைந்து தெளிவான பிறகும் **நிமிர்ந்து நிற்பார்கள்.**

20:9 இத்தகைய மன அமைதியோடு, அரசனுக்கு வெற்றியைத் தரும்படி மக்கள் மீண்டும் கர்த்தரிடத்தில் விண்ணப்பிக்கிறார்கள். இவ்வாறாக அவர்கள் மன்றாட்டு கேட்கப்பட வேண்டும் என்பதே அவர்கள் விண்ணப்பம்.

வரலாற்றுப் பொருத்தம்

அம்மோனியரையும் சீரியரையும் தாவீது தோற்கடித்த நிகழ்வில் இந்தச் சங்கீதத்தின் செய்திகள் வரலாற்றுப் பொருத்தமுடையவையாக விளங்குகின்றன (2 சாமு. 10:14-19).

ஆனால், இந்தச் சங்கீதத்தைக் கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கான மன்றாட்டோடும் பொருத்திக் காணவியலும். கல்வாரியில் கிறிஸ்து செலுத்திய பலியில் தேவன் முழு மன நிறைவு பெற்றார் என்பதை மெய்ப்பிக்கும் வகையில் அவரை மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்பினார் என்பதைச் சுட்டிக் காட்டவேண்டும் என்று அவரை விசுவாசிக்கிற மக்கள் ஏறெடுக்கிற மன்றாட்டாக இது விளங்குகிறது. மேசியா சாத்தானோடும் அவனுடைய படைகளோடும் போர் பொருதிய நிலையில், அதனுடைய இறுதி முடிவு என்னவாயிருக்கும் என்பதில் நம்பிக்கை கொண்டிருக்கிறார். 20 -ஆவது சங்கீதம் உயிர்த்தெழுந்த நாளின் முதலாவது கொண்டாட்டத்தின் சிறப்பை எதிர்நோக்கியதாக விளங்குகிறது.

சாத்தானின் எல்லைக்குள் நுழைகிற நற்செய்திப் பணியாளர்களோடும், கர்த்தருக்காகப் புதிய அடித்தளத்தை அடைவதற்குக் கிறிஸ்தவன் செய்கிற முயற்சியோடும் இதனைப் பொருத்திக் காணலாம்.

சங்கீதம் 21: வெற்றிக்காக நன்றி செலுத்துதல்

இந்தச் சங்கீதத்திற்கும் இதற்கு முந்தின சங்கீதத்திற்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருக்கிறது. போருக்குச் சென்ற தங்களுடைய அரசன் வெற்றி பெறவேண்டும் என்று மக்கள் ஏறெடுத்த மன்றாட்டை நாம் கேட்டோம். இங்கே அந்த மன்றாட்டு கேட்கப்பட்ட நிலையில், அதே மக்கள் கர்த்தரிடத்தில் அந்த வெற்றியைத் திரும்பவும் எடுத்துரைக்கிறார்கள். முதலாவதாக, உடல் சிலிர்க்கச் செய்யும் வகையில் தேவன் கொடுத்த வெற்றியைப் புனராய்வு செய்கிறார்கள் (வச. 1-7). அதற்கு பிறகு, அரசனின் எதிரிகள் யாவரும் முடிவாக அவனுடைய அதிகாரத்திற்குக் கீழ்ப்படுத்தப்படுவார்கள் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள் (வச. 8-12). இறுதியாக, யெகோவாவின் வலிமையையும் ஆற்றலையும் குறித்து அவர்கள் உயர்த்திப் பேசுகிறார்கள் (வச. 13).

வெற்றியின் இனிய சுவை (21:1-7)

21:1-4 கர்த்தர் தமது வலிமையைப் போரின் தேவன் என்று அப்பொழுது வெளிப்படுத்திய விதத்திற்காக அரசன் களிகூருகிறான். குறித்த நேரத்தில் யெகோவா தலையிட்டு வெற்றிபெறச் செய்ததை அவன் எண்ணுகிறபோது அவனுடைய மகிழ்ச்சி பெருவெள்ளமெனப் பொங்குகிறது. அவன் வாஞ்சித்த வெற்றியை இறைவன் கொடுத்தார்; அதற்காகவே அவன் மன்றாடினான். வெற்றியாலும் செல்வத்தாலும் அவனை ஆசிர்வதிக்

கும்படி யெகோவா **எதிர்கொண்டு வருகிறார்**. மகா உன்னதமானவர் அவனுடைய தலையில் **பொற்கிரீடத்தைச்** சூட்டுகிறார். தன்னைப் பாதுகாக்க வேண்டும் என்று அரசன் ஏறெடுத்த விண்ணப்பத்திற்குப் பதிற்செய்யும் வகையில் இறைவன் அவனுக்கு வாழ்வைக் கொடுத்தார் - ஆம், **என்றென்றைக்குமுள்ள நீண்ட ஆயுளைக்** கொடுத்தார். இச்சொற்றொடர் தாவீது நீண்ட ஆயுளைப் பெற்றிருந்ததைக் குறிக்கக்கூடும், ஆனால் உண்மையாகவே இது மேசியாவின் மெய்யான, முடிவில்லாத உயிர்த்தெழுந்த நீடு வாழ்வைக் குறிக்கிறது.

21:5-7 இந்தப் பகுதியானது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் குறிக்கிறது என்னும் உண்மையை நாம் காண்கையில், இதன் அழகு கூடுவதை உணர முடியும். இறைவனின் காக்கும் துணை அவருக்குப் பெரிதான மகிமையைக் கொடுத்திருக்கிறது. இறைவன் தாமே மரித்தோரிலிருந்து அவரை உயிரோடு எழுப்பி, தம்முடைய வலப்புறத்தில் அமரச்செய்து, மகிமையினாலும் மகத்துவத்தினாலும் முடிசூட்டினார் (எபி. 2:9). ஆம், கர்த்தர் அவரை மிகவும் ஆசிர்வதித்திருக்கிறார். மிகவும் மேன்மையான இடத்தில் அமர்த்தப்பட்டுள்ள கிறிஸ்து தமது திருத்தந்தையின் முன்னிலையில் மகிழ்ச்சியால் நிறைந்திருக்கிறார். கர்த்தரிடத்தில் அவர் வைத்திருந்த மாற்றமில்லா பற்றுறுதியே அவரை இந்த மகத்துவமான இடத்திற்குக் கொண்டு வந்திருக்கிறது. உன்னதமான வரின் குன்றாத அன்பினிமித்தம் அவருடைய நிலை பேறான மகத்துவம் நிலைநிறுத்தப்படுகிறது.

அரசனுடைய பகைவரின் அழிவு (21:8-12)

21: 8-10 இத்தருணத்தில் மக்கள் அரசனோடு நேரடியாகப் பேசுகிறார்கள். (இதற்கு முந்தைய பகுதியில் அவர்கள் கர்த்தரோடு உரையாடினார்கள்.) இங்கு அரசன் என்று குறிப்பிடப்பட்டுள்ளவர் மேசியா என்று நாம் இணைத்துக் காண்போமானால், கிறிஸ்துவின் இரண்டாம் வெளிப்பாட்டின் போது அவருடைய பகைவர் யாவரும் அழிந்து போவார்கள் என்பதை இப்பகுதி கூறுவதை உணருவோம்.

அவருடைய வலதுகை உம்முடைய பகைவர் யாவரையும் வேட்டையாடும். அவரை வெறுக்கிறவர் எவரும் தப்பமுடியாது. அவர்களை அழிக்கும் கருவி தீ. "தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு", அவர் பற்றி எரிகிற அக்கினியோடு வானத்திலிருந்து வெளிப்படுவார் (2 தெச. 1:7,8). மேலும் அவர் அவர்களுடைய வழித்தோன்றல்களை பூமியில் காணமுடியாதபடியும் அவர்களுடைய சந்ததியை மனிதர்கள் நடுவிலிருந்தும் ஒழியப் பண்ணுவார்.

21:11,12 உலகளாவிய அரசைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான கிறிஸ்துவின் முயற்சியைக் குலைப்பதற்கான திட்டத்தை அவர் முறியடிப்பார் (சங்கீதம் 2:2,3 - ஆகிய வசனங்களிலும் இது விவரிக்கப்பட்டுள்ளது). தேவன் தாமே எதிரிகள்மேல் தமது தாக்குதலைத் தொடங்கும்போது, அவர்கள் பயத்தினாலே பின் வாங்குவார்கள்.

கர்த்தருக்குப் புகழ்ச்சி (21:13)

பாடலின் முடிவுப் பகுதியில், கர்த்தர் தமது **வல்லமையை** அவரே வெளிப்படுத்தியதன் காரணமாக அவர் புகழப்பட்டிருக்கிறார். தேவனுக்குச் சொந்தமானவர்கள் யாவரும் மீட்கப்படும்படி அவருடைய வல்லமை கட்டவிழ்த்து விடப்பட்டதாலும், அவருடைய எல்லா எதிரிகளும் கீழ்ப்படுத்தப்பட்டதாலும் புகழ்ச்சிப் பாடல் பொங்கி எழுகிறது. இஸ்ரவேலின் மீதியானவர்கள் எழுப்பும் கீதமே இது. அவர்கள் இப்பாடலில் மேசியா உயர்த்தப்படவேண்டும் என்று மன்றாடுகிறார்கள், இறுதியில் அவரே எல்லோருக்கும் கர்த்தர் என்று ஏற்றுக்கொண்டவர்களாக அறிக்கை செய்கிறார்கள்.

சங்கீதம் 22:
இன்னலிலும் மகிமையிலும் கிறிஸ்து

திருத்தந்தை மகற்கிடையில்
ஆதாமின் பாவங்கள்
பெருந்தீதை விளைவிக்கத்
தீவிரமாய் நுழைந்தனவே!
சொந்தமான உள்பொருளைத்
திருத்தந்தை பிரித்துவிட
பந்தமதை இழந்தமகன்
குறுக்கையினில் தொங்கினாரே!
தூய்மையான உதட்டினின்று
பெருங்கதறல் பொங்கியெழ
வாய்மையற்ற உலகினரும்
வாயடைத்து நின்றனரே!
"என்இறைவா என்இறைவா
ஏன் என்னைக் கைவிட்டீர்
என்றுரைத்தார் மனுவேலர்
பூவுலகும் குலுங்கியதே!

தம்மக்கள் வாயின்று
அத்தகைய மன்றாட்டு
எந்நாளும் பிறந்திடாமல்
இருக்கும்படி வழிவகுத்தார்!
– எலிசபெத் பாரட் பிரௌனிங்

22:1,2 இந்தச் சங்கீதத்தை மிகுந்த பயபக்தியோடும் பெருமதிப்போடும் அணுகுங்கள், ஏனெனில் இதை காட்டிலும் அதிக பரிசுத்தமான இடத்தில் இதற்கு முன் நீங்கள் ஒருபோதும் நின்றதில்லை. நல்ல மேய்ப்பன் தம்முடைய ஆடுகளுக்காகத் தமது ஜீவனைக் கொடுத்த கொல்கொதா என்னுமிடத்திற்கு வந்திருக்கிறீர்கள். மூன்று மணி நேரம் பூமியானது அடர்த்தியான இருளால் மூடப்பட்டிருந்தது. இப்பொழுது "கைவிடப்பட்ட இம்மானுவேலரின் கதறுதல்" பிரபஞ்சம் முழுவதும் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது: **"என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?"**

மனவேதனை அளிக்கக்கூடிய கேள்வியின் பின்னணியில் திகிலூட்டும் உண்மை அடங்கியிருக்கிறது - பாடுகள் அனுபவித்துக் கொண்டிருந்த இரட்சகர் மெய்யாகவே, எழுத்தின்படி, முழுவதுமாக தேவனால் கைவிடப்பட்டவராக இருந்தார். நித்திய குமாரன் எப்பொழுதும் அவருடைய திருத்தந்தையின் மனமகிழ்ச்சிக்குரிய இலக்காக இருந்து வந்தார், ஆனால் இப்பொழுதோ அவர் கைவிடப்பட்டவராக இருக்கிறார். தேவனுடைய சித்தத்தை எவ்விதத் தவறுமின்றி நிறைவேற்றிய பரிபூரண மனிதர், இப்போது தேவனை விட்டு அகற்றப்பட்டவராக, தனித்து விடப்பட்ட பயங்கரமான நிலையை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்.

"ஏன்?" என்னும் கேள்வி எழுகிறது. பரிசுத்தரும் பாவமற்றவருமாகிய இறைமைந்தன், மிக நீண்ட மூன்று மணி நேரத்தில் நித்திய நரகமாகிய இருளின் சித்ரவதைக் கொடுமைகளை ஏன் அனுபவிக்க வேண்டும்? திருமறை அதற்குரிய பதிலை நமக்குத் தருகிறது. முதலாவதாக தேவன் பரிசுத்தரும், நீதிபரரும், நேர்மையான வருமாக இருக்கிறார். இதன் பொருள் என்ன வெனில் எங்கே பாவம் இருக்கிறது என்று காண்கிறாரோ, அதை அவர் தண்டிக்க வேண்டும். அதைக் கண்டும் காணாதது போலக் கண்ணை மூடிக்கொள்ளவோ, புறக்கணிக்கவோ தேவனால் முடியாது. இவ்வுண்மை நம்மை இரண்டாவது உண்மையிடமாய் வழிநடத்துகிறது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் சொந்தமாக எந்தப் பாவமும் இல்லை, ஆனாலும் நம்முடைய பாவங்களைத் தம்மேல் ஏற்றுக்கொண்டார். நம்முடைய அக்கிரமங்களுக்கான தண்டனையைச் செலுத்துவதற்கான பொறுப்பை அவர் மனமுவந்து தாமாகவே ஏற்றுக்கொண்டார். நம்முடைய கடன் முழுவதும் அவர் கணக்கில் சுமத்தப்பட்டது, அவர் மனமுவந்து நமக்குப் பிணையாளியானார். அப்படியானால் தேவன் இப்பொழுது என்ன செய்வார்? அவருடைய நீதியுள்ள இயல்புகள் யாவும் பாவம் தண்டிக்கப்படவேண்டும் என்று வற்புறுத்துகின்றன. ஆனாலும் அவர் கீழ்நோக்கிப் பார்க்கிறபோது, அங்கே அவருடைய ஒரே பேறான குமாரன் மற்றவர்களுக்காகப் போக்காடாக மாறியிருப்பதைக் காண்கிறார். அவருடைய அன்பின் குமாரன் நம்முடைய பாவத்தைச் சுமந்து தீர்க்கிறவராகக் காணப்படுகிறார். நம்முடைய பாவங்கள் அன்பான தமது சொந்தக் குமாரன்மேல் சுமத்தப்பட்டிருக்கிறதைக் காணும் தேவன் என்ன செய்வார்?

தேவன் என்ன செய்திருப்பார் என்பதைக் குறித்த எந்த ஐயமும் இல்லை! அவர் தம்முடைய நீதியுள்ள கோபாக்கினையின் உக்கிரத்தை ஒரு முடிவோடு அவர்மீது அவிழ்த்துவிட்டார். தெய்வீக நியாயத்தீர்ப்பின் கடுமையான பெருவெள்ளம் போன்ற ஆக்கினை ஒன்றுமறியாத துன்புற்ற வர்மேல் ஊற்றப்பட்டது. நாம் ஒருபோதும் கைவிடப்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காகக் கிறிஸ்து தேவனாலே கைவிடப்பட்டார்.

ஆகவே, தடங்காணா ஆழமிக்க துன்பத்தைக் கிறிஸ்து அனுபவித்ததைக் குறித்துப் படிக்கும் நாம், நம் எல்லோருக்காகவுமே அவர் அத்துன்பத்தை தெளிவான அறிவுடனேயே ஏற்றுக் கொண்டார் என்பதை நினைவுகொண்டவர்களாக இருக்கவேண்டும். இங்கு கூறப்பட்டிருப்பதைப் படிக்கும்போது ஒவ்வொரு சொல்லுக்கும் முன் "எனக்காக" என்னும் சொல்லைச் சேர்த்துப் படிக்க வேண்டும். **அவர் கைவிடப்பட்டார்** - எனக்காக; அவர் **"எனக்கு உதவி செய்யாமலும், நான் கதறிச் சொல்லும் வார்த்தைகளைக் கேளாமலும் ஏன் தூரமாயிருக்கிறீர்?"** என்று கதறுவதைக் கேட்கும்போது, அது எனக்காக என்று நான் அறிகிறேன். **பகலிலும் இரவிலும்** விண்ணகம் அவருக்குச் செவிகொடாமல் அமைதியாக இருந்ததும் எனக்காகவே ஆகும்.

22:3 "இஸ்ரவேலின் துதிகளுக்குள் வாசமாயிருக்கிற தேவரீரே பரிசுத்தர்" என்னும் சொற்

களில் இரட்சகர் கைவிடப்பட்ட நிலையில் இருப்ப தற்கான ஒரு காரணத்தை விவரிக்கிறார். பாவத் தின் சம்பளம் செலுத்தித் தீர்க்கப்படவேண்டும் என்று தேவனுடைய பரிசுத்தம் கோருகிறது. அவருடைய பரிசுத்தம் கோரியதை அவருடைய அன்பு செலுத்தியது. அவர் தமது குமாரனை பதிற் பலியாகச் சாகும்படி அனுப்பினார். இப்பொழுது "தேவனுடைய கண்டிப்பான நீதி வேறு எதையும் கோரமுடியாது. இரக்கமானது தன்னுடைய பண்டக சாலையைத் திறந்து தாராளமாக விநியோகிக்க முடியும்."

22:4,5 ஆனால் மீண்டும் கவனித்துக் கேளுங் கள்! இரட்சகர் இன்னும் தமது திருத்தந்தையுடன் உரையாற்றிக்கொண்டிருக்கிறார். முற்பிதாக் கள் ஒருக்காலும் கைவிடப்படவில்லை. உத வியை நாடி அவர்கள் ஏறெடுத்த நம்பிக்கை மிக்க கதறுதல்கள் பதிற்கூறப்படாமல் போகவில்லை. அவர்கள் விடுதலை பெறவேண்டும் என்று கதறி யபோது ஒருமுறை கூட ஏமாந்துபோகவில்லை. அவர்கள் பாவ வழியிலும், தங்களுடைய மனம் போன போக்கிலும் சென்றபோது அவர்களை தேவன் கைவிடவில்லை. அவர்களுக்கான தண் டனை குற்றமற்ற தேவ ஆட்டுக்குட்டியின்மீது செலுத்தப்பட வேண்டுமென்று நிறுத்திவைக் கப்பட்டிருந்தது!

22:6,7 அவர் தேவனாலே கைவிடப்பட்டது மட்டுமின்றி, **மனிதர்களாலே நிந்திக்கப் பட்டவராகவும் நிராகரிக்கப்பட்டவராகவும்** இருந் தார். கிறிஸ்துவின் கைகளால் உருவாக்கப்பட்ட படைப்புகளுக்கு அவர் மனிதராகக் கூடதெரிய வில்லை, ஒரு **புழுவாகவே** காட்சியளித்தார். அவர் எவர்களை இரட்சிக்கும்படி வந்தாரோ, அந்த மக்களாலேயே எள்ளி நகையாடப்பட்ட வராகவும் நிராகரிக்கப்பட்டவராகவும் இருப்ப தென்னும் கசப்புமிகுந்த அனுபவத்தை அறிந் திருந்தார். கிறிஸ்து சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த வேளையில் அவரைக் கண்டு கொண்டிருந்த திரளான கூட்டத்தார் அவர் களுடைய ஆத்துமாக்களின் நித்திய நேசரை ஏளனம் செய்து எள்ளி நகையாடினார்கள்! இது நம்ப முடியாததாகத் தோன்றுகிறது. அவர் உதவி யற்றவராகத் தோற்றமளித்தார், தேவன்மேல் அவர் கொண்டிருந்த நம்பிக்கை பயனற்றது போலக் காணப்பட்டது, இச்சொற்களால் அவர் கள் அவரைப் பழித்துரைத்தார்கள்.

22:8 "கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருந் தானே, அவர் இவனை விடுவிக்கட்டும்; இவன் மேல் பிரியமாயிருக்கிறாரே, இப்பொழுது இவனை மீட்டுவிடட்டும்". சிலுவையைச் சுற்றியி ருந்த கூட்டம் இவ்வாறுதான் பழிசாற்றியது (மத். 27:39,43).

22:9-11 ஆனால், இப்பொழுது இறைமகன், மனிதனை விடுத்து இறைவனிடமாய் திரும்பி, பெத்லகேமை நினைவுகூருகிறார். தேவனே அவ ரைக் கன்னியின் **கர்ப்பத்திலிருந்து** கொண்டு வந்தவர். அவருடைய வலுவற்ற குழந்தைப் பரு வத்தில் பாதுகாத்தவரும் அவரே. அவர் சிறு வனாக இருந்தபோதும், இளைஞராக இருந்த போதும் அவரைப் பராமரித்தவர் தேவன்தாமே. இவ்வாறான முந்தின உறவின் அடிப்படையில், கிறிஸ்துவின் அன்பு இப்பொழுது, தனித்துவிடப் பட்ட சோதனையை அனுபவித்து, நொறுக்கப் பட்டிருந்த வேளையில் தேவனை அருகில் வரும் படி அழைக்கிறது.

22:12,13 கல்வாரியில் சூழ இருந்த பகைமை நிறைந்த மக்களில் பெரும்பாலோர் இஸ்ர வேலரே ஆவார்கள். கிறிஸ்து அவர்களைப் **பாசான் தேசத்துப் பலத்த எருதுகளுக்கும், பீறி கெர்ச் சிக்கிற சிங்கத்திற்கும்** ஒப்பிடுகிறார். யோர்தான் ஆற்றுக்குக் கிழக்கில் இருந்த பாசான் நிலப் பகுதி, புல்வெளி நிறைந்த மேய்ச்சல் நிலத்திற் கும், பலத்துக் கொழுத்த கால்நடைகளுக்கும் பெயர் பெற்றவை. இன்ப வாழ்க்கையில் மோகம் கொண்டிருந்த இஸ்ரவேலரை ஆமோஸ் பிற் காலத்தில் பாசானின் மாடுகள் என்று குறிப்பிட் டான் (ஆமோஸ் 4:1). தம்முடைய சொந்த உடன் மனிதர்களையே கிறிஸ்து இங்கே பாசான் தேசத்து எருதுகள் என்று குறிப்பிடுகிறார். சொந்த நாட்டின் மைந்தர்களாக அவர்கள் இருந்தபோதி லும் அவரை நெருங்கி, கொல்ல வகை தேடிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் கொம்புகளால் குத்தி ஊடுருவுகிற மாடுகளைப் போல் இருந்தது மட்டுமின்றி, பீறிக் கெர்ச்சிக்கிற கொடிய சிங்கங் களைப் போலவும் இருந்தார்கள். ஓர் ஆட்டுக் குட்டியின்மேல் பாய்ந்து பிடிக்கிற சிங்கங்களைப் போலவும் இருந்தார்கள்.

22:14,15 கிறிஸ்து தமது சரீரத்தில் அடைந்த பாடுகள், விளக்கிக் கூறுவதற்கு இயலாத அள விற்கு மிகுந்த வேதனை அளித்தன. அவர் அங்கே முற்றிலும் சோர்வுற்றிருந்தார்; அவர் **தண்ணீரைப் போல ஊற்றுண்டார்.** சிலுவையில் தொங்கவிடப்பட்டிருந்த நிலையில் அவருடைய எலும்புகள் இடம் விலகி வேதனை பெருகிற்று. அவருடைய **எலும்புகளெல்லாம் கட்டுவிட்டன.**

அவருடைய உள்உறுப்புகள் யாவும் வன்முறைத் தாக்குதலால் சீர்கெட்டிருந்தன, எடுத்துக்காட்டாக அவருடைய **இருதயம் மெழுகுபோலாகி** நெஞ் சிலே உருகிப்போயிற்று. அவருடைய நிலை சகிக்க முடியாத அளவிற்கு வலுக்குன்றிப் போயிருந்தது; அவருடைய பெலன் உடைந்த மண்பானையின் சிறு **ஓட்டைப்போல் காய்ந்திருந்தது**. அங்கே அவர் தணியாத தாகம் கொண்டிருந்தார்; அவ ருடைய **நாவு மேல் வாயோடு ஒட்டிக்கொண் டது**. இறைவன் அவரை **மரணத்தூளில் போட் டார்** என்பதே அதன் பொருளாயிருக்க வேண்டும்.

22:16,17 இதுகாறும், அவரைத் துன்புறுத்திய யூதர்களை **எருதுகளுக்கும் சிங்கங்களுக்கும்** உருவகப்படுத்தி அவர் பேசியதைக் கேட்டோம்; இப்பொழுதோ அவர் தம்மைத் தண்டித்த புற வினத்தாரை **நாய்களுக்கு** ஒப்பிடுகிறார். புற வினத்தாரைப் பொதுவாக யூதர்கள் இவ்வாறு பெயரிட்டு அழைத்தார்கள் (மத். 15:21-28). இங்கே அவரைச் **சூழ்ந்திருந்த** கெடுநோக்குடைய சூழ்ச்சிசெய்யும் இழிந்த நாய்களைப் போன்ற ரோமப் போர்ச் சேவகர்களாகிய கூட்டத்தாரை இச்சொல் குறிக்கும்படி பயன்படுத்தப்பட்டுள்ளது. பொல்லாப்பு செய்யும் இந்தக் கூட்டத்தாரே அவரு டைய **கைகளையும் கால்களையும் உருவக் குத் தினார்கள்**. அரை நிர்வாண நிலையில் அவரை அவர்கள் கண்டபோது, சுருங்கிப்போன அவருடைய தோலின் வழியாக எலும்புகள் குத்தி வெளிவந்த தைக் காணமுடிந்தது. அவர்களுக்கு இது மிகுந்த மகிழ்ச்சியையும் மனநிறைவையும் அளித்தது.

22:18 அதன்பிறகு, இந்தச் சங்கீதத்தில் சொல்லப்பட்டுள்ள பல தீர்க்கதரிசனங்களில் ஒன்றில், அந்தப் போர்வீரர்கள் அவருடைய **வஸ் திரங்களுக்காகவும், உடைக்காகவும் தங்க ளுக்குள் சீட்டுப் போடுகிறதைக்** கர்த்தராகிய இயேசு கண்டார். அந்நிகழ்வு பல நூற்றாண்டுகள் கழித்து கீழ்க்காணும் வண்ணம் நிறைவேறியது:

> "போர்ச்சேவகர் இயேசுவைச் சிலுவையில் அறைந்தபின்பு, அவருடைய வஸ்திரங்களை எடுத்து, ஒவ்வொரு சேவகனுக்கு ஒவ்வொரு பங்காக நாலு பங்காக்கினார்கள்; அங்கியை யும் எடுத்தார்கள், அந்த அங்கி, தையலில்லா மல் மேலே தொடங்கி முழுவதும் நெய் யப்பட்டதாயிருந்தது. அவர்கள்: இதை நாம் கிழியாமல், யாருக்கு வருமோ என்று இதைக் குறித்துச் சீட்டுப்போடுவோம் என்று ஒருவரோ டொருவர் பேசிக்கொண்டார்கள். என் வஸ் திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு, என் உடையின்மேல் சீட்டுப்போட்டார்கள் என்கிற வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாகப் போர்ச் சேவகர் இப்படிச் செய்தார்கள்" (யோவான் 19:23,24).

22:19-21 இறைவனுடைய பிரசன்னத்திற் காகவும், உதவிக்காகவும் இரட்சகர், இந்தச் சங் கீதத்தில் கடைசி முறையாக மன்றாடி விண்ணப் பிக்கிறார். அவர் தம்மைப் **பட்டயத்திற்கும் நாய் களின் துஷ்டத்தனத்திற்கும்** விடுவிக்க வேண்டு மென்று விண்ணப்பிக்கிறார். இரண்டு சொற் களுமே புறவினத்தாரைக் குறிக்கின்றன. **பட்ட யம்** ரோம அரசாங்கத்தின் அதிகாரத்தைக் குறிக் கிறது, மேலும் அது தரக்கூடிய மரண தண்ட னையைச் சுட்டிக்காட்டுகிறது. மேலே விளக்கிக் கூறப்பட்டுள்ளது போல, நாய் என்னும் சொல் புறவினப் போர் வீரர்களைக் குறிக்கிறது. அதன் பிறகு 21 -ஆவது வசனத்தில், கிறிஸ்து தம்மைச் **சிங்கத்தின் வாயிலிருந்தும், காண்டா மிருகத் தின் கொம்புகளுக்கும் இரட்சிக்கும்படி** விண் ணப்பிக்கிறார். 12,13 -ஆகிய வசனங்களில் நாம் கண்டதுபோல, இது "எங்களுக்கு ஒரு நியாயப்பிர மாணமுண்டு,... அதன்படி இவன் சாகவேண்டும்" (யோவான் 19:7) என்று சொன்ன யூதர்களைக் குறிக்கிறது.

"எனக்குச் செவிகொடுத்தருளினீர்" என்னும் சொற்றொடர் 21 மற்றும் 22 - ஆகிய வசனங் களுக்கு இடையே வெளிப்படையான இடை வெளியை உண்டாக்குகிறது. இந்தச் சங்கீதத் தின் இரு பகுதிகளை இணைக்கும் கீல் போன்று இது விளங்குகிறது. இப்போது இந்தப் பாடல் முறையீட்டிலிருந்து வெற்றிமிக்க கவிதையாக மாறுகிறது. கர்த்தராகிய இயேசுவின் பாடுகள் இப்போது என்றென்றைக்குமாக முடிந்துபோன தாக இருக்கிறது. அவருடைய மீட்பின் செயல் முடிக்கப்பட்டுவிட்டது. சிலுவையும் கிரீடமும் பரி வர்த்தனை செய்யப்பட்டுவிட்டன!

இந்த இரண்டு வசனங்களுக்கிடையே சங் கீதப் பாடலாசிரியன் ஒரு நொடிப்பொழுதில் நம் மைக் கிறிஸ்துவின் முதலாம் வெளிப்பாட்டிலி ருந்து இரண்டாவது வெளிப்பாட்டுக்கு, அதாவது, கல்வாரியிலிருந்து ஒலிவ மலைக்கு அழைத்துச் செல்கிறான்! இந்தச் சங்கீதம் இவ்வுண்மையைக் கூறவில்லையெனினும், இடைப்பட்ட காலம் இரட்சகரின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுந்த சம்பவம், வானத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிகழ்வு, மேலும் நாம் வாழ்கிற திருச்சபையின் காலம் யாவும் அடங்கும்.

22:22 இப்பாடலில் இத்தருணத்தில் கிறிஸ்து அரசராக ஆட்சிபுரிய பூமிக்குத் திரும்பிவிட்டார். இஸ்ரவேல் நாட்டில் உள்ள விசுவாசிகளான மீதியானவர்கள் அவ்வரசுக்குள் அதன் ஆயிர மாண்டு மகிமைகளின் நிறைவில் உட்புகுவார்கள். சங்கீதத்தின் முதல் பாதியில் இஸ்ரவேலின் மேசியா ஏறெடுத்த மன்றாட்டுகள் கேட்கப்பட்டன என்னும் இறைவனின் உண்மைத் தன்மையைக் குறித்துத் தமது யூத சகோதரரிடம் சான்று பகர, அவர் ஆயத்தமாகி விட்டார். இப்பொழுது கிறிஸ்து சபை நடுவே இறைவனைப் புகழ்கிறார்.

22:23,24 எதிர்கால ஆயிரமாண்டு ஆட்சிக் காலத்தில் மீட்கப்பட்ட இஸ்ரவேல் மக்களிடம் கிறிஸ்து என்ன கூறுவார் என்று இவ்விரண்டு வசனங்களும் குறிப்பிடுகின்றன. கம்பீரமான இணையொத்த மூன்று வாசகங்களைக் கொண்டு கிறிஸ்து அவர்களை அழைக்கிறார்: **"கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களே," "யாக்கோபின் சந்ததியாரே," "இஸ்ரவேலின் வம்சத்தாரே."** அதன் பிறகு, அவர்கள் கர்த்தரைத் **துதிக்கும்படியும், கனம்பண்ணும்படியும், பயபக்தியாயிருக்கும் படியும்** உற்சாகப்படுத்துகிறார். உளவருத்தம் கொண்டவராக அவர் இருண்ட கல்வாரியில் ஏறெடுத்த கதறல்களைக் கேட்டு இறைவன் விடை பகர்ந்ததே இந்தப் பயபக்தி நிறைந்த பாராட்டுக்குக் காரணமாகும். தம்முடைய அன்பின் குமாரன் அடைந்த பாடுகளைக் குறித்துத் திருத்தந்தை ஏளனமாகக் கருதவில்லை, மேலும் அவர் தமது முகத்தை அவருக்கு நிரந்தரமாக மறைத்துக்கொள்ளவுமில்லை. மாறாக, "தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி... இயேசுவின் நாமத்தில் ... முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தர் என்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தைத் தந்தருளினார்" (பிலி. 2:9-11).

22:25 மேசியாவின் **துதிகளின்** இலக்காக இறைவன் திகழ்கிறார்: **"மகா சபையிலே நான் உம்மைத் துதிப்பேன்."** கிறிஸ்து இடுக்கண் உற்ற தருணத்தில் வெளியரங்கமாகக் கர்த்தரைத் துதிப்பதாக ஆணயிட்டார், இப்பொழுதோ அவர் கர்த்தருக்குப் **பயப்படுகிறவர்களுக்கு முன்பாகத் தமது பொருத்தனைகளைச் செலுத்துவார்.**

22:26 சங்கீதத்தின் கடைசி ஆறு வசனங்கள் வேறொருவரால் பேசப்படுகின்றன. இப்பொழுது பரிசுத்த ஆவியானவர் பேசுகிறார். ஆயிரமாண்டு ஆட்சிக் காலத்தின்போது சமாதானமும் வளமும் மிகுந்து மிகச்சிறந்த நிலை காணப்படும் என்பதை அவர் விவரிக்கிறார்.

வறுமை முற்றிலுமாகக் களையப்படும்; வறியவர் உண்டு மனமகிழ்ச்சி அடைவார்கள்.

பூமி இறைவனின் துதியால் நிறைந்திருக்கும்; **கர்த்தரைத் தேடுகிறவர்கள்** யாவரும் **அவரைத் துதிப்பார்கள்**. இவ்வாறு தொழுதுகொள்ளுகிற அனைவர் மேலும் பரிசுத்த ஆவியானவர் தமது ஆசிர்வாதத்தைக் கூறுகிறார்: **"உங்கள் இருதயம் என்றென்றும் வாழும்!"**

22:27 உலகளாவிய எழுச்சி காணப்படும். கிறிஸ்து கல்வாரியில் என்ன செய்தார் என்பதைப் **பூமியின் எல்லைகளெல்லாம் நினைவுகூர்ந்து கர்த்தரிடத்தில் திரும்பும்.** புறவின நாட்டு மக்களெல்லாம் அவருடைய முன்னிலையில் நினைவு கூரவும் **தொழுதுகொள்ளவும்** ஒன்று கூடுவார்கள்.

22:28,29 கர்த்தர்தாமே உலகளாவிய ஆட்சி புரிவார். அரியணையின் உரிமை அவருக்கே சொந்தம், அவர் அனைத்து நாடுகளையும் இனங்களையும் ஆளுவார். உலகின் உயர்ந்த மனிதர்கள் யாவரும் அவருடைய ஆளுகைக்கு அடிபணிவார்கள். அழிந்து போகிற எல்லா மனிதர்களும் அதாவது **புழுதியில் இறங்குகிறவர்களும்,** தங்களுடைய **ஆத்துமாக்களைக் காக்கக் கூடாதவர்களுமாகிய** எல்லா மனிதர்களும் அவரைப் பணிந்து கொள்வார்கள்.

22:30,31 கிறிஸ்துவின் புகழ்ச்சி நிலைத்திருக்கும். **தலைமுறை தலைமுறையாக** மனிதர்கள் பணிவிடை செய்வார்கள், அவருடைய மேன்மைகளைப் பறைசாற்றுவார்கள். ஒரு சிறப்பான செய்தி ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு தலைமுறைக்குச் சொல்லப்படும்: "கிறிஸ்து நீதியாக மிகப்பெரிய மீட்பின் செயலைச் செய்து முடித்தார்." 22 -ஆவது சங்கீதம் கிறிஸ்து கூறிய நான்காவது சொற்றொடரைக் கொண்டு தொடங்குகிறது; இது பரிகாரக் கதறல். இச்சங்கீதம் **"அவரே இவைகளைச் செய்தார்"** என்று முடிவடைகிறது. கிறிஸ்து சிலுவையில் கூறிய ஏழாம் வார்த்தையாகிய **"முடிந்தது!"** (யோவான் 19:30) என்பதற்கு இது இணையான பொருளைத் தருகிறது. கிறிஸ்து எல்லாவற்றையும் செய்து முடித்தார் என்னும் நற்செய்தியை வியத்தகு நன்றி மனதோடு தலைமுறை தலைமுறையாகப் பல

நூற்றாண்டுக் காலமாக மனிதர்கள் சொல்லி வருகிறார்கள்.

சங்கீதம் 23: பெரிய மேய்ப்பர்

பெரும்பாலும் எல்லா இலக்கியங்களிலும் மிகவும் விரும்பப்படுகிற பாடல் இருபத்திமூன்றாவது சங்கீதமாகவே இருக்கும் என்று தோன்றுகிறது. ஆரவாரமிக்க இசைவிழாவில் ஒழுங்கான தாளத்தோடு பாடப்பட்டாலும், ஞாயிறு வேத பள்ளியில் ஒப்பிக்கப்பட்டாலும் எப்போதும் ஒரேவிதமான கவர்ச்சியோடும், மரணமடையாத செய்தியோடும் இது விளங்குகிறது. "23 -ஆவது சங்கீதம் பிறந்த நாள் நற்பேறுமிக்க நாள்" என்று பண்டைய இறையியல் அறிஞர் ஒருவர் எழுதினார்.

இச்சங்கீதத்திற்குத் திருவாளர் J. R. லிட்டில் ப்ரௌட் வரைந்து தந்துள்ள பொருட்சுருக்கத்தை மேம்பாடு அடையச் செய்ய முடியாது:

> இன்ப வாழ்வின் மர்மம் - எல்லாத் தேவைகளும் சந்திக்கப்பட்டுள்ளன.
>
> **கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன்.**
>
> இன்ப மரணத்தின் மர்மம் - ஒவ்வொரு பயமும் நீக்கப்பட்டுவிட்டது.
>
> **நான் மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர்; உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்.**
>
> இன்ப நித்தியத்தின் மர்மம் - ஒவ்வொரு விருப்பமும் நிறைவேற்றப்பட்டுள்ளது
>
> **என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்; நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்.**[21]

23:1 உலகளாவிய புகழ்பெற்றதாயிருந்தாலும் இச்சங்கீதம் எல்லோருக்கும் உரியதன்று. **"கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்"** என்று சொல்லத் தகுதி பெற்றவர்களுக்கு மட்டுமே இது உரித்தது. எல்லோருக்காகவும் நல்ல மேய்ப்பர் மரண மடைந்தார் என்பது உண்மையாயிருந்தபோதிலும், திட்டவட்டமான விசுவாசச் செயலின் மூலமாக அவரை ஏற்றுக்கொண்டவர்கள் மட்டுமே அவருடைய ஆடுகள் ஆவார்கள். அவருடைய இரட்சிப்பின் செயல் எல்லோருக்கும் **போதுமானது,** ஆனால் அவரை விசுவாசிப்பவர்களுக்கு மட்டுமே அது உண்மையாகப் **பயன்தரக் கூடியது.** ஆகவே எல்லாம் என் என்னும் பிரதிப் பெயர்ச் சொல்லையே சார்ந்திருக்கிறது. அவர் என் மேய்ப்பராவில்லாவிடில், பாடலின் எஞ்சிய பகுதி எனக்குரியதன்று. மாறாக, அவர் உண்மையாகவே என்னுடையவராகவும், நான் அவருடையவராகவும் இருந்தால், அவரிடத்தில் நான் எல்லாவற்றையும் பெற்றிருப்பேன்!

23:2 என்னுடைய ஆத்துமாவுக்கு அல்லது என்னுடைய உடலுக்கு உணவு குறைவு உண்டாகாது. ஏனெனில், **அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்க்கிறார்.**

நான் புதிய வலிமையையும் குறைவுபடாமல் பெற்றிருப்பேன்; ஏனெனில் அவர் என்னை **அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் கொண்டு போய் விடுகிறார்.**

23:3 நான் உள்ளூரம் பெற்று வாழுந்திறம் குறைவுபடாமல் இருப்பேன்; ஏனெனில் **அவர் என் ஆத்துமாவைத் தேற்றுகிறார்.**

நன்னெறி வழிநடத்துதலைப் பெறுவதில் நான் குறைவுபடமாட்டேன்; ஏனெனில் அவர் தம்முடைய **நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்.**

இச்சங்கீதத்தை மனப்பாடம் செய்து ஒப்பிக்க வந்த சிறுவன் அச்சத்தால் தடுமாறி ஒரு புதிய வசனத்தைக் கூறியபோது நமக்கு நகைப்பு ஏற்பட்டது: "கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் ஒன்றுக்கும் கவலைப்படேன்." ஆனால் அவன் உண்மையில் தவறாகச் சொல்லவில்லை, சரியாகவே சொன்னான். சங்கீதத்தில் உள்ள சொற்களை அவன் மறந்துவிட்டான், அவன் சரியான கருத்தைப் பிடித்துக்கொண்டான். கர்த்தர் நம் மேய்ப்பரானால், நாம் கவலைப்பட வேண்டியதில்லை!

23:4 நாம் சாவைக் குறித்தும் அச்சமடையத் தேவையில்லை. **மரண இருளின் பள்ளத்தாக்கிலும்கூட பயப்பட** வேண்டிய தேவையில்லை. ஏனெனில் அங்கேயே மேய்ப்பர் நம்மோடு இருக்கிறார். மரணத்தின் கூர் பாவம் - அறிக்கை செய்யப்படாத, பாவமன்னிப்பைப் பெறாத பாவம். ஆனால் கிறிஸ்துவோ விசுவாசியின் மரணத்தின் கூரைக் கொள்ளையடித்துவிட்டார். நம்முடைய பாவங்களை அவர் என்றென்றைக்குமாகத் தூர எறிந்துவிட்டார். இப்பொழுதோ மரணம் செய்யக் கூடிய மிகப்பெரிய கேடு உண்மையில் நமக்கு மிகப்பெரிய நன்மையாக முடிவுறும்! ஆகவே நாம் இவ்வாறு பாடலாம்:

சாவைக் கண்டுநான் பயமடையேன்
சவக்குழி கண்டும் பயமடையேன்,
தேவை யாவையும் செய்திட்டார்
சாவின் கூரை ஒடித்திட்டார்.
பாவம் அனைத்தும் சுமந்தவராய்
பாழும் இருளாம் குறுக்கையினில்
கோபம் ஆக்கினை அனைத்தையும்
தாங்கியே நம்மை மீட்டனரே

– மார்கரெட் ட. கார்சன்

இன்னலையும் அதனோடு சேர்ந்து வரக்கூடிய மரணத்தைப் பற்றிய தீங்கையும் முன்னறியக் கூடிய நிலையைக் கிறிஸ்தவர்கள் பெற்றிருப்பது உண்மைதான். "என்னுடைய கூடாரத்தைக் கர்த்தர் எடுத்துக்கொள்வது பற்றி நான் எதுவும் சொல்ல மாட்டேன். ஆனால் அவர் என்னைக் கனிவோடு எடுத்துக்கொள்வார் என்று நம்புகிறேன்" என்று வயதுமுதிர்ந்த பரிசுத்தவான் சொன்னதைக் கேட்க முடிந்தது.

மரணம் நமக்குத் தேவை என்னும் நிலை உண்டாவது வரை சாவதற்கான கிருபையைப் பொதுவாக நாம் பெற்றிருப்பதில்லை என்பதும் உண்மைதான். ஆனாலும் மரணத்தைக் குறித்த பேரச்சம் நம்மைவிட்டு நீங்கி விட்டது என்பது இன்னும் உண்மையாகவே இருக்கிறது. ஏனெனில் மரணம் என்பதன் பொருள் நாம் கிறிஸ்துவோடு இருக்கப் போகிற நிலை என்பதே ஆகும் - "சாவு எனக்கு ஆதாயம்," அது அதிக நன்மையாயிருக்கும்.

மேய்ப்பரின் கோலும் தடியும் ஆறுதல், பாதுகாப்பு, வழிநடத்துதல் ஆகியவற்றிற்கு ஆதாரமாகத் திகழ்கின்றன. தேவைப்பட்ட நேரங்களில் நம்மை அவர் சீர்திருத்தம் பண்ணும்படி தமது கோலைச் சில வேளைகளில் பயன்படுத்தவும் செய்வார். அவ்வப்போது பல ஆடுகளுக்கு இந்த ஊழியம் தேவைப்படுகிறது.

23:5 இதற்கிடையே, நம்முடைய பகைவருடைய முன்னிலையில் நமக்காக **ஒரு பந்தியை** மேய்ப்பர் தாமே **ஆயத்தப்படுத்துகிறார்**. அவர் தமது விலையேறப் பெற்ற இரத்தத்தால் விலைக்கு வாங்கிய ஆவிக்குரிய அனைத்து ஆசிர்வாதங்களும் அந்த மேசையின்மேல் பரப்பிவைக்கப்பட்டுள்ளன. அந்த மேசையானது கிறிஸ்துவுக்குள்ளாக எல்லாம் நம்முடையவை என்பதைப் படவுருவில் காட்டுகிறது. பகைவர் நம்மைச் சூழ்ந்திருந்தாலும் மனவமைதியோடும் பாதுகாப்போடும் நாம் இந்த ஆசிர்வாதங்களை அனுபவிக்கிறோம்.

திருவாளர் J. H. ஜோவெட் விளக்கித் தெளிவுபடுத்துகிறார்:

> கிழக்கத்திய விருந்தோம்பல் விருந்தினருடைய பாதுகாப்பை உறுதி செய்கிறது. "விருந்தோம்பலின் புனிதமான அனைத்துப் பராமரிப்புகளும் விருந்தினனின் பாதுகாப்புக்கென அவனைச் சூழ்ந்துகொண்டிருக்கின்றன. துரத்திக் கொண்டுவந்த பகைவர் வெறுப்புடன் பார்த்துக்கொண்டிருக்க, தப்பி வந்த மனிதன் கூடாரத்துக்குள் அழைத்துச் செல்லப்படுகிறான், உணவு அவனுக்கு முன்பாகப் பரிமாறப்படுகிறது."

அவர் நம் தலைகளை **எண்ணெயால் அபிஷேகம்** பண்ணுகிறார். ஆடுகளின் தலைகளில் உண்டாயிருக்கிற கீறல்களையும், புண்களையும் ஆற்றுவதற்கு மேய்ப்பர்கள் அவற்றின் தலைகளில் எண்ணெய் தடவுவார்கள். ஆசாரியரைப் பொறுத்தவரை அபிஷேகம் அவர்களுடைய திருப்பணிக்கான சுத்திகரிப்பைக் குறிப்பிடுகிறது. அரசர்களுக்கு அது முடிசூட்டுதலாகும். ஒவ்வொரு விசுவாசியும் இரட்சகரைப் பெற்றுக் கொள்ளும் தருணத்திலேயே பரிசுத்த ஆவியானவரால் அபிஷேகம் பண்ணப்படுகிறான். இந்த அபிஷேகம் பரிசுத்த ஆவியாகிய தேவனுடைய போதக ஊழியத்தை அவனுக்கு உறுதிசெய்கிறது.

கிறிஸ்துவுக்குள் நாம் பெற்றிருக்கிற கிருபையின் செல்வ வளங்கள் யாவற்றையும் எண்ணிப் பார்க்கையில், நன்றியுள்ள இருதயத்தோடு பொங்கியெழும் நாம், "என் பாத்திரம் நிரம்பி வழிகிறது" என்று அறிக்கை செய்கிறோம்.

இயேசுவின் அன்பு அளவற்ற அன்பு
அவரது கருணைக்கு எல்லையும் இல்லை!
மனிதனின் அறிவுக்கு எட்டாத அளவு
அவரது செயல்களின் ஆற்றல் மிகுதி!
ஏனென்று கேட்டால் சொல்லுவேன் விடையை
அளவிட இயலா தவரது செல்வம்
அதனின்று எடுத்துத் தருவார் அண்ணல்
தவறாது தருவார் என்றென்றும் தருவார்!

– ஆனி ஜான்சன் ஃபிலிண்ட்

23:6 இறுதியாக, இன்பமான நித்தியத்தின் மர்மம். வாழ்நாட்காலமெல்லாம் இறைவனுடைய நன்மையும் கிருபையும் நம்மைத் தொடர, இறுதியில் திருத்தந்தையின் வீட்டை நாம் சென்றடைகிறோம். அதுவே நமது நித்திய குடியிருப்பு.

அதைக் குறித்து நாம் சிந்திக்கும் போதெல்லாம், "என்னே, நற்பேறு பெற்ற பிச்சைக்காரர்கள் நாம்" என்னும் கை கிங் அவர்களது கூற்றை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்!

சங்கீதம் 24: மகிமையின் அரசர் யார்?

மகா உபத்திரவ காலத்தின் முடிவில் நடக்க விருக்கிற மகிமை நிறைந்த நிகழ்வை 24 -ஆவது சங்கீதம் முன்னோக்கிப் பார்க்கிறது. தேவனு டைய நியாயத்தீர்ப்புகளின் இடிமுழக்கங்கள் நின்று போய்விட்டன. கர்த்தராகிய இயேசு இவ் வுலகிற்கு வந்து, தமது பகைவர் யாவரையும் அழித்துவிட்டார். இப்பொழுது கிறிஸ்து அரசருக் கெல்லாம் அரசராக, கர்த்தருக்கெல்லாம் கர்த்த ராக உலகை ஆளும்படி எருசலேமை நோக்கிப் பவனி வருகிறார். உலகம் இதுவரை காணாத வெற்றியின் அணிவகுப்பாக இது விளங்குகிறது. இரட்சகரின் பாடுகளின் ஆழத்தைக் கண்ணுற்று அதிர்ச்சியடைந்த பார்வையாளர்களும்கூட, இப் பொழுது அவரது மகிமையின் மேன்மையைக் கண்டு வாயடைத்து நிற்கிறார்கள்.

24:1,2 அந்தத் திரளான மக்கள் கூட்டம் நகரத்தை நெருங்குகையில், **பூமியும்** அதில் உள்ள அனைத்தும் இறைவனுக்கே உரியவை என்னும் அறிவிப்பு முழங்குகிறது. தெய்வீக உரிமை பாராட்டுதலையும், கிறிஸ்து உலகை ஆளுவதற்கு உரிமை பெற்றவர் என்பதையும் எடுத்துரைக்கும் அறிக்கையாக இது விளங்கு கிறது. பின்னர் அதற்கான காரணம் கூறப்படு கிறது. கிறிஸ்துவே உலகை உண்டாக்கியவர். அவரே நீர்களை ஓரிடத்தில் சேர்த்து வெட்டாந் தரை காணும்படி செய்தவர். அவரே ஆறுகளை உண்டாக்கினவர், அவற்றில் சில நிலத்தின் மேற்பரப்பில் உள்ளன, சில பூமிக்கு அடியில் உள் ளன. ஆகவே அவர் இப்பொழுது உண்மை யாகவே தமக்குச் சொந்தமானதை உரிமைகோர வருகிறார், ஆனால் பல நூற்றாண்டுகளாக அது அவருக்கு மறுத்துரைக்கப்பட்டது.

24:3-6 ஆயிரமாண்டு இறையரசுக்குள் நுழைந்து, அமைதியும் வளமும் நிறைந்த அவ் வாட்சியின் நன்மைகளை அனுபவிக்கும் மக்க ளின் பண்புகளை அடுத்து வருகிற நான்கு வச னங்களும் விவரிக்கின்றன. இவர்களில் ஒரு சாரார் இஸ்ரவேலின் விசுவாசிகளான மீதி யானவர்கள்; மற்றும் மீட்கப்பட்ட புறவின மக்கள், இவர்கள் தொழுதுகொள்ளும்படி எருசலேமுக் குச் செல்பவர்கள். ஏதோ அவர்களுடைய நன் னடத்தையின் காரணமாக இறையரசுக்குள் செல்வதற்குத் தகுதிபெற்றார்கள் என்று சொல் லப்பட்டிருப்பது போலத் தோன்றுகிறது. ஆனால் அதுவன்று உண்மை. உன்னதத்திலிருந்து அவர்கள் மறுபடியும் பிறந்ததன் காரணமாகவே அவர்கள் இப்பண்பைப் பெற்றிருக்கிறார்கள். ஏனெனில் ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணவுமாட்டான், அதற்குள் பிரவேசிக்கவும் மாட்டான் (யோவான் 3:3,5). மேலும், இம்மனிதர்கள் மகா உபத்திரவ காலத்தில் துன்பம் அனுபவித்து, ஆட்டுக்குட்டி யானவருடைய செங்குருதியில் தங்களுடைய ஆடைகளை வெண்மையாக்கினவர்கள்.

அவர்களுடைய நடத்தையின் நான்கு பண்புக் கூறுகள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன. அவர்கள் **கைகளில் சுத்தமுள்ளவர்கள்**; அதாவது, அவர் களுடைய செயல்கள் நீதியும் குற்றமற்றவை யுமாயிருக்கின்றன. அவர்கள் **இருதயத்தில் மாசில்லாதவர்கள்;** அதாவது, அவர்களுடைய நோக்கங்கள் நேர்மையும் களங்கமற்றவை யுமாயிருக்கின்றன. எந்த விதத்திலும் அவர்கள் வஞ்சக எண்ணங்கொள்ள மாட்டார்கள். இறுதி யாக அவர்கள் உண்மையை மாற்றிப் பேசி நீதிக்கு எதிராகத் தவறிழைக்க மாட்டார்கள். அவர்களு டைய கைகள், இருதயம், ஆத்துமா, உதடுகள் யாவும் நீதியாய்ச் செயல்படும்.

இப்படிப்பட்ட பண்புடைய மக்களே கிறிஸ்து வின் ஆயிரமாண்டு ஆட்சியின் குடிமக்கள் ஆவார்கள். முன்னர் துன்மார்க்கரால் ஏளனம் செய்யப்பட்டு, இழிவுபடுத்தப்பட்ட மக்களே இப் பொழுது தங்களுடைய இரட்சிப்பின் தேவனால் நேர்மையானவர்கள் என்று மெய்ப்பிக்கப்பட்டவர் கள். ஆம், இவர்களே ஆயிரமாண்டு ஆட்சிக் காலக் குடிமக்கள், தேவனுடைய முகத்தைக் காண வாஞ்சிப்பவர்கள், தகுதியற்றவர்களிடம் அன்புகூரும் இறைவனுடைய கிருபையைப் பெற்றவர்கள்.

24:7,8 அணிவகுப்பாகச் சென்றவர்கள் முதல் ஆறு வசனங்களிலுள்ள சொற்களைக் கெதரோன் பள்ளத்தாக்கைக் கடந்து செல்லும்போது பாடலா கப் பாடிக்கொண்டு சென்றது என்று நான் கருது கிறேன். ஆனால் அந்த அணி வகுப்பைத் தலைமை யேற்று நடத்தும் அறிவிப்பாளன் எழுச்சிமிக்க உரத்த குரலில் விடுத்த அழைப்பு அவர்களுடைய இசையைத் தடை செய்தது. அவன் எருசலேம் நக ரின் வாசல் காப்போனை நோக்கிக் கூறுகிறான்: **"வாசல்களே, உங்கள் தலைகளை உயர்த்துங் கள்; அநாதி கதவுகளே, உயருங்கள், மகிமையின் ராஜா உட்பிரவேசிப்பார்."** நகரத்தின் மதிற்சுவ

ரில் நின்று கொண்டிருந்த காவலாள் மனக் கிளர்ச்சி உண்டு பண்ணும் வகையில் உரத்த சத்தமாக, **"யார் இந்த மகிமையின் ராஜா?"** என்று வினவுகிறான். அதற்கான விடை மிகத் தெளிவான சிம்மக்குரலில் ஒலிக்கிறது. **"அவர் வல்லமையும் பராக்கிரமமுள்ள கர்த்தர்; அவர் யுத்தத்தில் பராக்கிரமமுள்ள கர்த்தராமே."**

24:9,10 அவர்கள் இப்பொழுது நகரத்திற்கு மிக அருகில் வந்து விட்டார்கள். ஆனாலும் கதவுகள் திறக்க தயங்கிக்கொண்டிருக்கின்றன. ஆகவே மகிமையின் அரசருக்குக் கதவுகளைத் திறக்கும்படி அறிவிப்பாளன் மீண்டும் கட்டளை யிடுகிறான். மறுபடியும் அரசர் யார் என்று கூறும் படி கேட்கப்படுகிறது. அவன் பதிலுரைக்கிறான், **"அவர் சேனைகளின் கர்த்தரானவர், அவரே மகிமையின் ராஜா"**

அதன் பிறகு அரசர் தம்முடைய ஆணி துளைத்த கையால் இவ்வுலகின் ஆளுகையை உறுதிப்படுத்தும் செங்கோலை ஏற்க, உண்மை யுள்ள தமது குடிமக்களோடு நகரத்துக்குள் நுழைகிறார்.

திருவாளர் F. B. மேயர் கூறுகிறார்:

> இயேசு நம்மை ஆளுகின்ற அரசராக நம்மு டைய இருதயங்களுக்குள் நுழைந்த போது இச்சங்கீதம் நமக்குள்ளாக அவருடன் சேர்ந்து வந்தது. பூமியில் அதனுடைய முழு நிறைவேற் றம், அதன் குடிமக்கள் அவரைத் தனது கர்த்த ரென்று அறிக்கை செய்து வரவேற்கும்போது நடைபெறும்.[22]

சங்கீதம் 25: கர்த்தருடைய இரகசியம்

இப்பாடல் எபிரெய உயிரெழுத்துகளை வரிசை யாக முதல் எழுத்துகளாகக் கொண்ட வசனங் களாலான பாடல்; எனினும் ஓர் எழுத்து விடப்பட் டுள்ளது, மற்றோர் எழுத்து இருமுறை இடம் பெற் றுள்ளது.[23] இப்பாடலில் ஒருமுகப்படுத்தப்பட்ட கருத் தைக் காண்பது கடினம்; மாறாக இது மன்றாட்டு களும் தியானங்களும் நிறைந்த கலவையாக இருக்கிறது. இவ்வசனங்களின் ஒரே இணைப்பு உயிர் எழுத்துகளே ஆகும்.

25:1-3 பாதுகாப்பை நாடிய ஒரு மன்றாட்டு முதலாவது இடம் பெற்றுள்ளது. தாவீதின் பகை வர் மிக அருகில் இருப்பதாகவே தோன்றுகிறது. ஆகவே அவன் உதவிக்காகக் கர்த்தரை நோக்கி முறையிடுகிறான். அவனுடைய முறையீட்டில் நம் பிக்கைக்கு ஒரே இலக்காக தேவன் இருக்கிறார் என்று அறிக்கை செய்கிறான். யெகோவாவினிடத் தில் நம்பிக்கை கொண்டிருப்பதற்காக அவன் ஒருபோதும் ஏமாந்து போகக் கூடாது, தேவன் தம்முடைய பிள்ளையைக் கைவிட்டதால் அவனு டைய பகைவர் அவனைத் தோற்கடித்து வெற்றிப் பெருமிதம் கொண்டார்கள் என்று சொல்லத்தக்க சந்தர்ப்பம் ஏற்படக்கூடாது. இவை இரண்டும் அவனுடைய விண்ணப்பங்களாக இருந்தன. கர்த்தரைச் சார்ந்திருக்கும் அனைவருக்காகவும் அவன் இந்த விண்ணப்பத்தை ஏறெடுக்கிறான். வேண்டுமென்றே தவறான முறையில் நடந்து கொள்கிறவர்கள் முழுவதும் வெட்கமடைய வேண்டும் என்றும் அவன் விண்ணப்பிக்கிறான்.

25:4,5 அடுத்த பகுதியில், அறிவுரை நாடும் ஒரு சீடனைப் பாடலாசிரியன் படவுருவில் வரைந்து காட்டுகிறான். அவன் கர்த்தருடைய **வழிகளை** அறியவும், அவருடைய **பாதைகளில்** நடக்கவும், அவருடைய **சத்தியத்தில்** வளரவும் விரும்பு கிறான். தனது இரட்சிப்பின் தேவனிடத்தில் அவன் கொண்டிருந்த அன்பினாலேயே இந்த நோக்கம் எழுகிறது. அவனுடைய எதிர்பார்ப்புகள் யாவும் அந்த இறைவனையே சார்ந்து, அந்த எல்லைக் குள்ளேயே இருக்கின்றன.

25:6,7 பின்னர், தாவீது பாவமன்னிப்பை நாடும் ஒரு பாவியாகக் காட்சியளிக்கிறான். கர்த்தருடைய நீடித்து நிலவுகிற **இரக்கங்களை யும் காருணியங்களையும்** வேண்டி நாடுகிற பாடலாசிரியன், இறைவன் ஏதோ மறந்துவிடு கிறவர் போல எண்ணி, முந்தின காலத்தில் அத்த கைய கிருபையை அவன்மேல் அவர் பொழிந் திருக்கிறதை நினைவுபடுத்துகிறான்! இறைவனு டைய கிருபையைக் குறித்த புரிதலில் தாவீதி னிடத்தில் நிறைவான அறிவு இல்லை என்பதை அவனுடைய விண்ணப்பம் வெளிப்படுத்துகிறது என்போமாயின், அவன் நிழல்களாக இருந்த காலத்தில் வாழ்ந்தவன் என்பதையும், நம்மைப் போல முழு வெளிச்சமும் தெளிவுபடுத்தப்பட்ட நற்செய்தியின் காலத்தவன் அல்லன் என்பதை யும் நாம் நினைவுகூர வேண்டும். தாவீதின் **இள வயதின் பாவங்கள்** அவனைக் கொடுமைப்படுத் திக் கொண்டிருந்தன; அவை அவ்வாறு செய்யக் கூடியவையே. பாடலாசிரியன் அப்பாவங்களைக் கர்த்தர் மறக்க வேண்டுமென்று பொருட்செறிவு மிக்க வகையில் விண்ணப்பிக்கிறான். மாறாக அவருடைய **தயவினிமித்தமும் கிருபையின்படி யும்** அவனை அவர் நினைவுகூர வேண்டுமென்று விண்ணப்பிக்கிறான்.

இத்தகைய விண்ணப்பம் தடைசெய்ய இயலாத வலிமை பெற்றது. நம்முடைய பாவங்கள் இரத்தத்திற்குக் கீழாக மூடப்பட்டுவிட்டன, மேற்கிலிருந்து கிழக்கு எவ்வளவு தூரமோ அவ்வளவு தூரமாக அகற்றப்பட்டுவிட்டன, இறைவனுடைய மறதி என்னும் கடலில் புதைக்கப்பட்டுவிட்டன, என்றென்றைக்குமாக மறக்கப்பட்டுவிட்டன என்பதையெல்லாம் அறிகிறபோது ஏற்படுகிற இடர் நீக்கம் எத்தனை பெரியது!

25:8-10 இப்போது தாவீது மன்றாட்டிலிருந்து ஆழ்ந்த சிந்தனையை நோக்கிச் செல்கிறான். யெகோவாவின் கற்பிக்கும் ஊழியத்தைக் குறித்து அவன் சிந்திக்கையில், வியந்து போற்றியவனாகத் தன்னையே மறந்து போனான். **கர்த்தர் சிறப்பான வகையில் நல்லவரும் உத்தமருமாயிருக்கின்ற** காரணத்தால், அவர் சத்தியம், நீதி, இரட்சிப்பு ஆகிய வழிகளில் பாவிகளுக்குப் போதிக்கிறார். அவரிடத்தில் நாம் கற்க வேண்டிய மிக முக்கியமான தனியொரு பண்பு தாழ்மை ஆகும். நம்முடைய அறியாமையை ஒப்புக்கொள்வதிலும், அவரிடத்திலிருந்து மேலும் அறிவுரை பெற வேண்டியவர்கள் என்பதை அங்கிகரிப்பதிலும் நாம் தாழ்மையை வெளிப்படுத்த வேண்டும். நாம் கற்பதற்கு ஏற்புடையவர்களாக இருப்பின், எது சரி என்பதை நாம் விரைவாகக் கற்போம், அதாவது, தேவனுடைய சித்தம் என்னவென்பதை அறிவோம். கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிபவர்கள், மனமகிழ்ச்சியற்ற வாழ்க்கையைச் சகிக்க வேண்டிய அவசியம் ஏற்படாது; மாறாக அவர்கள் இறைவனுடைய நிலைபேறான அன்பு, உண்மையுள்ள தன்மை ஆகியவற்றின் சான்றுகளால் நிறைந்த வாழ்க்கையைக் கண்டடைவார்கள்.

25:11 மன்னிப்பு வேண்டி ஏறெடுக்கப்பட்ட ஜெபத்தை நோக்கி தாவீது சிறிதுநேரம் திரும்புகிறான். தன்னுடைய பாவங்கள் மிகப்பெரியதாக இருந்ததால் முழுவதுமாகக் குற்றவுணர்வு அடைந்தவனாக, அவன் **"உமது நாமத்தினிமித்தம், கர்த்தாவே"** என்று தனது விண்ணப்பத்தை ஏறெடுக்கிறான். ஒருவருடைய பெயர் அவருடைய ஆளுமையையே குறிக்கிறது. எனவே தாவீது தேவனுடைய பண்புகளை நோக்கியே விண்ணப்பிக்கிறான்; சிறப்பாக அவருடைய இரக்கம் கிருபை ஆகியவற்றை நாடும் தாவீது வேண்டுவதெல்லாம் **மன்னிப்பு** மட்டுமே ஆகும். இங்கு தாவீதின் சொந்தத் தகுதி குறித்து ஒரு சொல்லும் இல்லை.

25:12,13 மீண்டும் அவன் தனது விண்ணப்பத்தை நிறுத்திவிட்டு, தனக்குத்தானே ஆவிக்குரிய வகையில் பேசத் தொடங்குகிறான். தேவனுடைய மிகச் சிறந்த நன்மைகளை அனுபவிக்கிறவன் **கர்த்தருக்குப் பயந்தவனே** ஆவான் என்று கூறி அவனைக் கற்பனையில் காண்கிறான். இத்தகைய மனிதன் அனுபவிப்பவை:

தவறுவதற்கியலாத வழிநடத்துதல் - எவ்வழியில் செல்லவேண்டுமென்று தேவன் வழி நடத்துவார்.

தனிப்பட்ட வளமை - அளவற்ற வகையில் எல்லாத் தேவைகளும் அருளப்படும்.

குடும்பப் பாதுகாப்பு - அவனுடைய பிள்ளைகள் நிலவுடைமையைப் பெறுவார்கள்.

தெய்வீக ஐக்கியம் - மிக நெருக்கமான முறையில் கர்த்தர் தமது உள்ளத்தையும் வழிகளையும் யாருக்கு வெளிப்படுத்துகிறாரோ அவர்களை நண்பர்களாகப் பெற்ற குழுவில் இடம்பெறுவான்.

25:14 இந்தச் சங்கீதத்தின் தங்க வாக்கியமாக இது திகழ்கிறது:

கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது;

அவர்களுக்குத் தம்முடைய உடன்படிக்கையைத் தெரியப்படுத்துவார்.

"மிகவும் அன்புகூரப்பட்ட மனிதனாகிய" தானியேலுக்கு தேவன், புறவின அரசுகளைக் குறித்தும், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கடைசி அரசு எவ்வாறு வெற்றி கொள்ளும் என்பதைக் குறித்தும் வெளிப்படுத்தினார். இயேசுவின் மார்பில் சாய்ந்து கொண்ட சீடனாகிய யோவானுக்கே, பத்மு தீவில் மகிமையுள்ள வெளிப்பாடு கொடுக்கப்பட்டது.

25:15 இத்தகைய தேவனுக்குப் பயந்த கூட்டத்துக்குள் தாவீது தன்னை உட்படுத்திக் கொள்கிறான். நம்பிக்கையோடும் எதிர்பார்ப்போடும் அவனுடைய **கண்கள்** விண்ணை நோக்கி தொடர்ந்து நோக்கிக் கொண்டிருக்கின்றன. தொல்லைகளும் துன்பங்களும் நிறைந்த வலையில் சிக்கிக் கொண்டிருந்த நிலையில் **கர்த்தர்** விடுவிப்பார் என்னும் நம்பிக்கை அவனுக்கிருக்கிறது.

25:16-21 வலையைக் குறித்துச் சொல்லப்பட்டவுடன் தாவீது தன்னுடைய ஆவிக்குரிய பகற்கனவுகளை நிறுத்திவிட்டு, தன்னுடைய தற்போதைய அவலநிலையைப் பற்றி மன்றாடத்

தொடங்கினான். அவன் தனித்துவிடப்பட்டவனாகவும் சிறுமைப்படுத்தப்பட்டவனாகவும் இருக்கிறான். அவனுடைய **இருதயத்தின் வியாகுலங்கள் பெருகியிருக்கின்றன.** ஆகவே தேவன் தமது **இரக்கத்தில்** அவனை நோக்கிப் பார்க்கவும், அவனுடைய **இடுக்கண்களிலிருந்து** விடுவிக்கவும், அவனுடைய **துன்பத்தையும் வருத்தத்தையும்** எண்ணிப்பார்த்து அவனுடைய **பாவங்களையெல்லாம் மன்னிக்கவும்** வேண்டுதல் செய்கிறான். மேலும் தன்னுடைய எதிரிகளிலிருந்து பாதுகாக்கப்படவும், அவர்களுடைய கடுஞ்சொல் நிறைந்த பகைமையிலிருந்து விடுபடவும் அவன் மன்றாடுகிறான். அதன் மூலமாக அவன் யெகோவாவிடத்தில் கொண்டிருந்த நம்பிக்கையே சரியான செயல் என்று வெளிப்பட வேண்டுமென்பதும் அவனுடைய விண்ணப்பமாயிருக்கிறது. **"உத்தமமும் நேர்மையும் என்னைக் காக்கக்கடவது"** என்று அவன் மன்றாடிய போது, அவன் தன்னுடைய நேரிய நடத்தையைக் குறிப்பிடவில்லை. மாறாக, அவன் தேவன்மேல் வைத்திருந்த நம்பிக்கையின் காரணமாக, அவர் அவனை விடுவிப்பதால் அவருடைய நீதி வெளிப்பட வேண்டும் என்பதே அதன் பொருளாகும்.

25:22 இந்தக் கடைசி வசனத்தில், தாவீது தன்னை **இஸ்ரவேலுடன்** ஒன்றுபடுத்திக் கொண்டவனாக, தேசத்தின் விடுதலைக்காக மன்றாடுகிறான். வரப்போகிற உபத்திரவ காலத்தில் பயபக்தியுள்ள யூத இனத்தவரில் மீதியானவர்கள் ஏறெடுக்கும் மன்றாட்டாகவே இந்தச் சங்கீதம் விளங்கும் என்பது இதிலிருந்து புலப்படுகிறது.

சங்கீதம் 26:

உலகினின்று பிரிந்து வாழ்தல் பற்றிய சங்கீதம்

26 -ஆவது சங்கீதத்தை நாம் முதன் முறையாகப் படிக்கும்போது எல்லை கடந்த அளவு தற் புகழ்ச்சியின் விளைவாக இது பிறந்திருக்கிறது என்னும் முடிவுக்கு வந்துவிடுகிறோம். ஆயினும் நிதானமான முறையில் இதை நாம் ஆராய்ந்து பார்ப்போமெனில், உலகத்தினின்று பிரிந்து தேவனோடு இணைந்து வாழ்கின்ற ஒரு மனிதனுடைய வாழ்வின் மெய்யான விவரமாக இருக்கிறது என்பது நமக்குப் புலப்படும். இப்பாடலின் வரிகளில் புதைந்துகிடக்கும் பொருளை அறியும்படி நாம் படிப்போமானால், பொல்லாத மனிதர்களோடு தாவீது தோழமை கொண்டிருந்தான் என்றும், அதன் காரணமாக யெகோவாவுக்கு உண்மையற்றவனாகச் செயல்பட்டான் என்றும் குற்றஞ் சாட்டப்பட்டான் என்பது புலனாகிறது. இங்கே அவன் தற்காப்பு வாதத்தை முன்வைக்கிறான். தான் பாவமற்றவன் என்று எங்கும் அவன் கூறவில்லை, மாறாக இங்கு அவனுக்கு எதிராகச் சொல்லப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் உண்மையற்றவை என்றே குறிப்பிடுகிறான்.

26:1-3 தன்னுடைய வழக்கைத் தாவீது கர்த்தருடைய முன்னிலையில் சமர்ப்பித்து, தான் குற்றமற்றவன் என்பது தெய்வீக வெளிப்பாட்டால் தெளிவுபடுத்தப்பட வேண்டுமென்று விண்ணப்பிக்கிறான். குற்றஞ்சாட்டுகிறவர்கள் கூறியதற்கு மாறாக, அவன் உண்மையாகவே நன்னெறி ஒழுங்கில் **உத்தமத்தோடு** நடந்துவந்தான். தொடர்ந்து அவன் கர்த்தரையே சார்ந்து வாழ்ந்தான். அவன் தன்னுடைய நிலையை விவரிக்க உலோகத் தொழிலில் பயன்படுத்தப்படும் சொல்லைக் கடன்பெறுகிறான். அவன் தனது நம்பத் தகுந்த தன்மையையும் நேர்மையையும், ஏதாவது கசடு இருக்கிறதா என்று அக்கினிச் சூளையினால் இட்டுப் பரிசோதிக்கும்படி இறைவனிடத்தில் ஒப்புவிக்கிறான். அவன் எப்பொழுதும் கர்த்தருடைய கிருபையைத் தனக்கு முன்பாக வைத்து, தேவனுடைய வார்த்தைக்கு உகந்தபடி நேர்மையாக நடந்துவந்த காரணத்தால் அவனுடைய இருதயமும் (உணர்வுகள்) உள்ளமும் (நோக்கங்கள்) தவறற்றவையாக விளங்குகின்றன என்னும் உறுதியோடு இருக்கிறான்.

26:4,5 வீணரோடு அமர்ந்திருத்தல் என்பது அவர்களோடு ஐக்கியம் கொண்டிருப்பதை அங்கிகரிப்பது என்று பொருள்படும்; இவ்வாறு தாவீது செய்யவில்லை. **வஞ்சகரோடு** தோழமைகொள்ளுதல் என்பது ஏமாற்றுபவர்கள், போலியாக நடப்பவர்கள் ஆகியோரோடு கூட்டுவைத்துக் கொள்வதாகும்; இதையும் தாவீது செய்யவில்லை. இதற்கு முற்றிலும் மாறாக அவன் குற்றவாளிகளோடு தோழமை கொண்டிருப்பதை அறவே வெறுத்தான். **பொல்லாதவர்களுக்கு** அவன் எவ்வளவேனும் ஆதரவு தரக்கூடாதென்று தூய்மையான தீர்மானம் செய்திருந்தான்.

26:6-8 பொல்லாத மனிதர்களிடத்திலிருந்து பிரிந்து வாழ்ந்தது மட்டுமல்ல; கர்த்தருக்காகவும் அவன் அவ்வாறு பிரிந்து வாழ்ந்தான். கர்த்தருடைய **பீடத்தை** நெருங்குவதற்கு முன், பாவத்திலிருந்தும் தீட்டிலிருந்தும் தனது **கைகள்** கழுவப்பட்டிருக்க வேண்டும் என்னும் உறுதியோடு அவன் இருந்தான். அவ்வாறு தூய்மை பெற்ற

நிலையில் **துதியின் சத்தத்தோடு** இருதயம் நிறைந்தவனாகப் பாடி, யெகோவாவின் அதிசயங்களை எடுத்துரைத்துத் தாவீது தொழுதுகொண்டான். அவனைப் பொறுத்தவரை ஆராதனை என்பது துயரார்ந்த, தன்னடக்கத்துடன் சகிக்க வேண்டிய சடங்கு அல்ல. மகிமையுள்ள தேவனுடைய சமுகத்தை வெளிப்படுத்தும் மேகஸ்தம்பம் நிலைநிற்கிற கர்த்தருடைய ஆலயத்தை அவன் **வாஞ்சித்து** வந்தான் என்பதே உண்மை.

26:9-11 இவ்வுலகின் குற்றவாளிக் கூட்டங்களுடன் கூட்டுசேர தாவீது மறுத்துவிட்ட காரணத்தால், அவர்களுக்கு ஏற்படக்கூடிய அழிவு தன்னைத் தாக்கக் கூடாது என்பதே அவனுடைய அடுத்த மன்றாட்டு. பாவிகள், கொலைகாரர்கள், கூலிக்காக தவறிழைப்பவர் ஆகியோரது செயல்களைச் செய்யாமல் அவன் தன்னைக் காத்துக் கொண்டதால் அவர்களோடு தான் மரணமடையக் கூடாது என்று விண்ணப்பிக்கிறான். அவன் நீதியுள்ள வாழ்க்கை வாழ்ந்த காரணத்தால், பொல்லாதவர்களின் அழிவிலிருந்து அவன் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும், தேவனுடைய எல்லாக் கிருபைகளோடும் அவன் நடத்தப்பட வேண்டும் என்றும் விண்ணப்பிக்கிறான்.

26:12 தாவீது குற்றமற்ற வரலாற்று மனிதன் என்னும் அடித்தளத்தில் நிற்பவனாக இருப்பதால், **சபைகளில்** அவன் **கர்த்தரைத் துதிக்கச்** சூளுரைக்கிறான்.

பிரிந்து வாழ்தலில் உள்ள ஒரு குறிப்பிட்ட அம்சத்தை இச்சங்கீதம் வெளிப்படுத்தவில்லை. பாவிகளுடைய பொல்லாத செயல்களுக்கு நாம் அமைதியாயிருந்து ஒப்புதல் அளிப்பதோ, வெளிப்படையாகப் பங்கு வகிப்பதோ தவறென்பதும், அவற்றை விட்டு விலகியிருக்க வேண்டும் என்பது உண்மையாயிருப்பினும், கிறிஸ்து அவர்களுக்குத் தேவை என்பதை அவர்களுக்குச் சொல்லாத படி அவர்களை விட்டுத் தனித்திருப்பது சரியல்ல. கர்த்தராகிய இயேசு தாமே பாவிகளின் நண்பராயிருந்தார்; அவர் அவர்களை ஏற்றுக்கொண்டது மட்டுமன்றி, அவர்களோடு உண்ணவும் பருகவும் செய்தார். ஆனால் அவர் ஒருக்காலும் தேவனுக்கு உண்மையாயிருக்கும் நிலையிலிருந்து விலகவில்லை மாறாக அவர்களுடைய பாவத்தைக் குறித்துச் சொல்ல அவர் தயங்கவில்லை; அவர்கள் பாவமன்னிப்பைப் பெறவேண்டுமென்று வலியுறுத்தினார். அவர் சீமோனின் வீட்டுக்குச் சென்றபோது என்ன நிகழ்ந்தது என்பதை பிஷப் ரைல் விவரிக்கிறார்:

> அவர் பரிசேயனின் வீட்டுக்கு விருந்துண்ணச் சென்றபோது, "பிதாவின் சித்தத்தை நிறைவேற்றும் ஊழியத்தைத்" தம்மோடு கொண்டு சென்றார். பரிசேயனைச் சூழ்ந்து கொண்டிருந்த பாவத்திற்கு எதிராகச் சான்று கூறினார். பாவங்களுக்கான மன்னிப்பு இலவசமானது என்னும் அதன் இயல்பை அவர் பரிசேயனிடம் விவரித்துக் கூறியதோடு, அவரிடத்தில் கொண்டிருக்க வேண்டிய மெய்யான அன்பின் இரகசியத்தையும் விவரித்தார். இரட்சிப்பை அருளும் விசுவாசத்தின் இயல்பைப் பற்றியும் அவர் அறிவித்தார். இரட்சிக்கப்படாத மக்களுடைய வீடுகளுக்குச் சென்று அவர்களோடு நெருங்கிப் பழக வேண்டும் என்று வாதாடுகிற கிறிஸ்தவர்கள், கர்த்தருடைய ஆவியில் அங்கு சென்று அவர் செய்தது போலச் செய்யவும் அவர் பேசியது போலப் பேசவும் வேண்டும். அவ்வித மாகவே அவர்கள் தொடர்ந்து செய்ய வேண்டும். ஆனால், கர்த்தர் சீமோனின் வீட்டில் பேசியது போல அவர்கள் இரட்சிக்கப்படாத நண்பர்களிடம் பேசுகிறார்களா? அவர் நடந்து கொண்டது போல நடக்கிறார்களா? இந்தக் கேள்விக்கு அவர்கள் பதில் சொல்லியே ஆக வேண்டும்.[24]

நாம் ஒவ்வொருவரும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய கேள்வியாக இது இருக்கிறது.

சங்கீதம் 27: இயேசு கைதுசெய்யப்படுதலும் விசாரிக்கப்படுதலும்

எந்தப் பின்னணி அமைப்பிலும் 27 -ஆவது சங்கீதம் மிக அழகாகப் பொருந்துகிறது. ஆனால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கல்வாரியைச் சந்திப்பதற்கு முன் மிகவும் இக்கட்டான நிலையில் இருந்த சிலமணிப் பொழுது, அவர் எத்தகைய உணர்ச்சிமிக்க உள்ளார்ந்த நினைவுகளோடு இருந்தார் என்பதை எண்ணிப் பார்க்கிறபோதே இச்சங்கீதம் அதனைச் சிறப்பான முறையில் நம்முடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறது.

27:1 எடுத்துக்காட்டாக, பிரதான ஆசாரியர்களும், ஆலயத்தின் காவல் தலைவர்களும், மூப்பர்களும் கிறிஸ்துவைப் பிடிக்கும்படி கெத்செமனே தோட்டத்திற்குச் சென்றபோது, அவர் அவர்களிடத்தில், "இதுவோ உங்களுடைய வேளையும் அந்தகாரத்தின் அதிகாரமுமாயிருக்கிறது" என்றார் (லூக்கா 22:53). ஆனால் அதே

நேரத்தில் அவர் தம்மையே இவ்விதச் சிந்தனை யோடு தேற்றிக் கொண்டிருந்தார் என்றே தோன்று கிறது:

கர்த்தர் என் வெளிச்சமும் என்
இரட்சிப்புமானவர்;
யாருக்குப் பயப்படுவேன்?
கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர்;
யாருக்கு அஞ்சுவேன்?

இருள் சூழத் தொடங்கிய நிலையில் தேவன் அவருடைய **வெளிச்சமாக** இருந்தார். தேவனே அவருடைய **இரட்சிப்பு**, அதாவது, உலகுவாழ் பகைவரிடத்திலிருந்து அவரை விடுவிப்பவர் அவரே ஆவார். தேவன் அவருடைய **ஜீவனின்** அரணாக இருந்தார், புயல் வீசும் காலத்தில் அவரே அடைக்கலமாகவும் திகழ்ந்தார். அத்த கைய பாதுகாப்போடு இருக்கையில், அவர் ஒரு வருக்கும் பயப்பட வேண்டியதில்லை.

27:2 கர்த்தராகிய இயேசுவை மனிதர்கள் கைது செய்யும்பொருட்டு வந்தபோது, "நீங்கள் யாரைத் தேடுகிறீர்கள்?" என்று வினவினார். "நாசரேத்தூர் இயேசுவை" என்று அவர்கள் கூறி னார்கள். "நான்தான்" என்று அவர் சொன்ன வுடனே அவர்கள் அதிர்ச்சியால் பின்னுக்குச் சென்று தரையிலே விழுந்தார்கள் (யோவான் 18:6). அத்தருணத்தில் கிறிஸ்து இவ்வண்ண மாகவே தியானம் செய்திருப்பார் என்று தோன்று கிறது:

என் சத்துருக்களும் என் பகைவருமாகிய
பொல்லாதவர்கள்
என் மாம்சத்தைப் பட்சிக்க,
என்னை நெருக்குகையில்
அவர்களே இடறிவிழுந்தார்கள்.

அவர்கள் இரைமீது பாய்ந்து வருகிற பறவை களைப் போலச் செயல்பட்டார்கள்; ஆனால் அவ ருடைய தெய்வீகத்தின் மகிமையை நான்தான் (இருக்கிறவராய் இருக்கிறேன்) என்னும் மேதகு சொற்களால் மனித போர்வையிலிருந்து வெளிப் படுத்தியபோது, அவரைப் பிடிக்க வந்தவர்கள் கீழே விழத் தள்ளப்பட்டார்கள்.

27:3 தோட்டத்தில் இயேசுவைக் கைது செய்ய வந்தவர்களில் போர்ச்சேவகர்களும், பிரதான ஆசாரியனின் அலுவலர்கள் பலரும், திரளான பரி சேயரும் அடங்குவார்கள் என்று யோவான் கூறு கிறார் (யோவான் 18:3). அவர்கள் அவ்வாறு நெருங்கி வந்தபோது நிறைவான மனவமைதி யோடு இச்சொற்களை அவர் கூறியிருப்பார்:

எனக்கு விரோதமாக ஒரு
பாளயமிறங்கினாலும்,
என் இருதயம் பயப்படாது;
என்மேல் யுத்தம் எழுந்தாலும்,
இதிலே நான் நம்பிக்கையாயிருப்பேன்.

27:4 பிரதான ஆசாரியனின் காதை வெட்டி தன்னுடைய எஜமானைப் பாதுகாக்க முயன்றார் வஞ்சகமறியா பேதுரு. ஆனால் இயேசு அவரிடம், "பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ?" என்று கூறினார். அவருடைய ஒரே வாஞ்சை தேவனோடு குடியிருப் பது ஆகும். மகிமையை அடைவதற்கான வழி முதலாவது சிலுவை என்பதால், அவர் பாடு அனுப விப்பதையும் அவமானத்தையும் சகிக்க ஆயத் தத்தோடிருந்தார். அவருடைய சொற்கள்:

கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன்,
அதையே நாடுவேன்:
நான் கர்த்தருடைய மகிமையைப்
பார்க்கும்படியாகவும்,
அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சி
செய்யும்படியாகவும்,
நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம்
கர்த்தருடைய ஆலயத்தில்
தங்கியிருப்பதையே நாடுவேன்.

"ஒன்றைக் குறித்து" மனிதர்களிடத்தில் ஏதோ ஒரு வகையான பிடிவாதம் இருக்கும். அவர்கள் தங்களுடைய விருப்பம் என்னவென்பதை அறி வார்கள், அதை அடைவதற்குத் தீர்மானமாயிருப் பார்கள். அவர்களை எதனாலும் தடை செய்ய முடியாது.

27:5 முடிவில் போர்வீரர்களின் கூட்டமும், அதனுடைய தலைவனும், யூதர்களாகிய அதி காரிகளும் இயேசுவைப் பிடித்துக் கட்டினார்கள் (யோவான் 18:12). கர்த்தராகிய இயேசு தமது முயற்சியில் தோற்றுவிட்டது போன்றுதான் அக் காட்சி தோன்றியிருக்கும். ஆனால் அத்தருணத் தில் அவர் இவ்வாறு சொல்லியிருப்பார் என்பது உறுதி:

தீங்குநாளில் அவர் என்னைக்
கூடாரத்தில் மறைத்து,
என்னைத் தமது கூடார மறைவிலே
ஒளித்துவைத்து,
என்னைக் கன்மலையின்மேல்
உயர்த்துவார்.

தேவனிடத்தில் அன்புகூருகிற
யாவருக்கும் அவர் பாதுகாப்புத் தருவார்

என்னும் வாக்குறுதியில் அவருடைய இருதயம் இளைப்பாறியது.

27:6 போர்வீரர்கள் பிரதான ஆசாரியனாகிய காய்பாவிடம் கிறிஸ்துவைக் கொண்டுபோனார்கள் (மத். 26:57). மக்களுக்காக ஒரே மனிதன் மரணமடைவது நலமாயிருக்கும் என்று யூதர்களுக்கு முன்னர் ஆலோசனை கூறியவன் இவனே (யோவான் 18:14). கிறிஸ்துவின் பகைவர் அவரை வானத்துக்கும் பூமிக்கும் இடையே உயர்த்தி சிலுவையில் தொங்கவிட திட்டமிட்ட போது, கர்த்தர் தாமே வேறொரு வகையான உயர்த்துதலை எதிர்பார்த்திருந்தார்:

இப்பொழுது என் தலை என்னைச்
சுற்றிலும் இருக்கிற என் சத்துருக்களுக்கு
மேலாக உயர்த்தப்படும்;
அதனிமித்தம் அவருடைய கூடாரத்திலே
நான் ஆனந்த பலிகளையிட்டு,
கர்த்தரைப்பாடி, அவரைக் கீர்த்தனம்
பண்ணுவேன்.

ஒரு மனிதர் விசாரிக்கப்படுகிறார், மரண தண்டனை கொடுக்கப்படும் என்பது நிச்சயம், அத்தகைய சூழ்நிலையில் இது விநோதமான நல் நம்பிக்கை! மகிமை அடைவோம் என்னும் எதிர்பார்ப்புடன் அவர் தம்மில் மனமகிழ்ச்சியோடு இருக்கிறார். "மனித குமாரன் சர்வ வல்லவருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள் மேல் வருவதையும் இது முதல் காண்பீர்கள்" என்று அவர் காய்பாவிடம் சொல்லவில்லையா? (மத். 26:64).

27:7,8 அதனைக் கேட்டபோது, அவர் தேவநிந்தனை செய்தார் என்னும் குற்றச்சாட்டுடன் பிரதான ஆசாரியன் பொங்கி எழுந்தான். அங்கு இருந்தவர்களிடம் "உங்களுக்கு என்னமாய்த் தோன்றுகிறது?" என்று கேட்டான். "மரணத்துக்குப் பாத்திரனாயிருக்கிறான்" என்று அவர்கள் பதிலுரைத்தார்கள். இங்கே இரட்சகர் அமைதியாக மன்றாடுவதை நான் படவுருவில் காண்கிறேன்:

கர்த்தாவே, நான் கூப்பிடுகிற சத்தத்தை
நீர் கேட்டு,
எனக்கு இரங்கி, எனக்கு உத்தரவு
அருளிச் செய்யும்.
"என் முகத்தைத் தேடுங்கள்" என்று
சொன்னீரே,
"உம்முடைய முகத்தைத் தேடுவேன்
கர்த்தாவே" என்று
என் இருதயம் உம்மிடத்தில் சொல்லிற்று.

27:9 இந்த நேரத்திற்குள்ளாக சீடர்கள் யாவரும் அவரைக் கைவிட்டவர்களாக ஓடிப்போனார்கள் (மத். 26:56). ஆனால் தேவன் முன்னர் அவருக்கு உதவி செய்திருந்தார்; இந்த இக்கட்டான சூழ்நிலையில் தேவன் அவரைக் கைவிடக் கூடாது என்று அவர் வேண்டுதல் செய்கிறார்:

உமது முகத்தை எனக்கு மறையாதேயும்;
நீர் கோபத்துடன் உமது அடியேனை
விலக்கிப் போடாதேயும்;
நீரே எனக்குச் சகாயர்;
என் இரட்சிப்பின் தேவனே,
என்னை நெகிழவிடாமலும் என்னைக்
கைவிடாமலும் இரும்.

27:10 நாம் அறிந்தவரை, தாவீதின் பெற்றோர் ஒருபோதும் அவனைக் கைவிடவில்லை, கர்த்தருடைய (உலக) பெற்றோரும் அவரைக் கைவிடவில்லை. இந்த வசனத்தை J. N. டார்பி அவர்கள் மிகச்சரியாக மொழிபெயர்த்திருக்கிறார்: (தமிழில் சரியாக மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது).

என் தகப்பனும் என் தாயும் என்னைக்
கைவிட்டாலும்,
கர்த்தர் என்னைச் சேர்த்துக்
கொள்ளுவார்.

27:11,12 இயேசுவைக் கொலை செய்ய வேண்டும் என்னும் தீர்மானத்துடன் அவருக்கு எதிரான சமய விசாரணையைப் பிரதான ஆசாரியரும் மற்றவர்களும் நடத்தினார்கள். அப்பொழுது அவர்களும் தேசம் முழுவதும் கிறிஸ்துவுக்கு எதிராகப் பொய்ச் சாட்சிகளை நாடினார்கள். ஆனாலும் அவர்களால் எந்தக் கதையையும் புனைந்து கூறமுடியவில்லை, கடைசியில் இரண்டு சாட்சிகள், "தேவனுடைய ஆலயத்தை இடித்துப் போடவும், மூன்று நாளைக்குள்ளே அதைக் கட்டவும் என்னாலே ஆகும் என்று இவன் சொன்னான்" என்று பொய்ச்சாட்சி கூறினார்கள் (மத். 26:59-61). ஆனால் உண்மையில் இயேசு, "இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன்" என்றே கூறினார் (அவரோ தம்முடைய சரீரமாகிய ஆலயத்தைக் குறித்துப் பேசினார்) (யோவான் 2:19,21). ஆனால் அந்த விசாரணை முழுவதும் வஞ்சகத்தோடு நடத்தப்பட்டதால், அந்தப் பொய்ச் சாட்சிகள் ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள். இப்பொழுது, இரட்சகர் மன்றாடுவதைக் கேட்க முடிகிறது:

கர்த்தாவே, உமது வழியை எனக்குப்
போதித்து,

என் எதிராளிகளினிமித்தம் செவ்வையான
பாதையில் என்னை நடத்தும்.
என் சத்துருக்களின் இஷ்டத்துக்கு
என்னை ஒப்புக்கொடாதேயும்;
பொய்ச்சாட்சிகளும் ஆக்கிரமித்துச்
சீறுகிறவர்களும்
எனக்கு விரோதமாய்
எழுந்திருக்கிறார்கள்.

27:13 அடுத்ததாக, பிலாத்துவின் நியாய விசாரணை மண்டபத்துக்கு வெளியே கடுஞ்சீற் றத்துடன் கூடியிருந்த மக்கள் கூட்டம், "அவனைச் சிலுவையில் அறைய வேண்டும்" என்று கத்திக் கொண்டிருந்தது (மத். 27:22,23). நற்பேறுடைய கர்த்தராகிய இயேசுவும் அந்தச் சத்தத்தத்தைக் கேட்டுக்கொண்டிருந்தார், அதன் பொருள் என்ன வென்பதையும் அவர் அறிந்திருந்தார். ஆனாலும் அவர் உண்மையாகவே அச்சமயம் இவ்வண் ணம் கூறியிருப்பார்:

நானோ, ஜீவனுள்ளோர் தேசத்திலே
கர்த்தருடைய நன்மையைக் காண்பேன்
என்று விசுவாசியாதிருந்தால் கெட்டுப்
போயிருப்பேன்.

27:14 ஆனால், சங்கீதத்தின் கடைசி வசனம் என்ன கூறுகிறது? நாம் கூறும் விளக்கத்திற்கு இது பொருந்துகிறதா? இந்த வசனம் நம் ஒவ் வொருவருக்கும் விடைகொடுத்து சொல்லிய னுப்புகிற சொற்களாக இருக்கின்றன. தம்முடைய திருத்தந்தையிடம் நம்பிக்கை வைத்திருந்த கர்த்தரின் சொந்த அனுபவத்தின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட விண்ணக ஆலோசனையாக இது விளங்குகிறது:

கர்த்தருக்குக் காத்திரு;
அவர் உன் இருதயத்தை
ஸ்திரப்படுத்துவார்;
திடமனதாயிருந்து, கர்த்தருக்கே
காத்திரு.

சங்கீதம் 28: தேவனுடைய மவுனம்

28:1,2 உம்மையே, உம் ஒருவரையே, **கர்த் தாவே** நான் கூப்பிடுகிறேன் நீர் **என் கன்மலை**, இந்தப் பெயர் பாதுகாப்பு, வலிமை, உறுதியான தன்மை ஆகியவற்றையே சுட்டிக்காட்டுகிறது. என்னைக் கேளாதபடி உமது செவியை **எனக்கு** மறைத்துக்கொள்ளாதீர் - அவ்வாறு நீர் செய் வீரானால் பொல்லாதவர்களோடு நான் மரணத் தில் இணைவதற்குச் சமமாகும். அது உம்மை விட்டு முழுவதும் பிரிந்திருப்பதாகவும் காணப் படும். என்னுடைய வேண்டுதலின் சத்தத்தை உம்முடைய சிங்காசனத்தை நோக்கித் தீவிர மாக ஏறெடுக்கிறேன் - **உம்முடைய பரிசுத்த சந் நிதிக்கு நேராக** அதாவது மகாபரிசுத்த ஸ்தலத் திற்கு நேராகக் **கையெடுக்கிறேன்.**

28:3 பிறருக்கு எதிராக எவ்வித இரக்கமு மின்றி பொல்லாத சதி செய்து, அயலகத்தாரோடு இனிமையாகவும் சமாதானமாகவும் பேசியபோதி லும் அவர்களுக்கு எதிராகத் திட்டமிடுகிறவர் களாக இருக்கக்கூடிய **துன்மார்க்கர்** பெறவிருக் கிற அழிவை அடையும்படி என்னை ஒருபோதும் கைவிட வேண்டாம்.

28:4 அவர்களுடைய செயல்களையும், அவர் களுடைய நடத்தைகளின் பொல்லாங்குகளை யும் கணக்கில்கொண்டு அவற்றிற்குத் தகுந்தாற் போல, கர்த்தாவே அவர்களுக்குச் செய்யும். அவர் களுடைய கைகளின் செய்கைக்குத்தக்கதாக, அவர்கள் நிச்சயமாக அடைய வேண்டிய தண்ட னையை அளியும்.

28:5 அவர்களுடைய செயல்களுக்காக மட்டு மின்றி, அவர்களுடைய கைகளின் செய்கைக் குத் தக்கதாக மட்டுமின்றி, உம்முடைய செய்கை களையும் உம்முடைய **கரத்தின் கிரியைகளை** அவர்கள் பாராட்டாமல் இருப்பதற்காகவும் நீர் அவ்வாறு செய்ய வேண்டும். அதற்காகவே, ஒரு கட்டடம் திரும்பக்கட்டப்படாதபடிக்கு இடிக்கப்படு வதுபோல அவர்களை நீர் அழிக்க வேண்டும்.

28:6 கர்த்தாவே, நான் ஜெபம் பண்ணுகை யில், என்னுடைய விண்ணப்பங்கள் கேட்கப்பட் டன என்னும் வியத்தகு வகையில் உள்ளார்ந்த உறுதி தரப்பட்டுள்ளது, அதற்காக உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன். இப்போது உம்மைப் புகழ்ந்து நான் பாடுவேன்.

28:7,8 இவ்விரண்டு வசனங்களையும் இசை யமைப்போடு ஒருவர் பொழிப்புரையாகத் தந் திருக்கிறார்:

என் பெலனானவர் என் அரணானவர்
இதயத்தின் நம்பிக்கை என்கர்த்தரே
நான் பெற்ற உதவி என்னை உயர்த்த
என்றென்றும் மறவாமல் நன்றி சொல்லுவேன்!
தெரிந்தெடுத்த உம் மக்கள் அனைவருக்கும்
ஆற்றலின் ஊற்றாகத் திகழ்கிறீரே
திருமுழுக்குப் பெற்ற அருமைமகனும்
உம்மாலே பாதுகாக்கப் பட்டாரே!

28:9 கர்த்தாவே, இப்பொழுது என்னை விடு விப்பதாக வாக்களித்திருக்கிறீர். மேலும் ஒன்றை

நான் கேட்கிறேன். உமது மக்களை இரட்சியும். உம்முடைய சுதந்தரமாகிய **இஸ்ரவேலை ஆசீர்வதியும்**. தயவும் மென்மையும் உடையவராகிய மேய்ப்பர் நீரே, அவர்களுக்கு உணவளித்து, என்றென்றும் அவர்களை உமது கரத்திலே தாங்கும்.

நன்றி கர்த்தரே!

சங்கீதம் 29: கர்த்தருடைய தொனி

29:1,2 நாம் எப்போதாவது வானிலையைக் குறித்துக் குறை சொல்லியிருக்கிறோமா? இடி முழக்கமும் புயலும் இஸ்ரவேலைத் தாக்கியபோது, அதைக் கவனித்துக் கொண்டிருந்த தாவீது அதைக் குறித்துக் குறைகூறாமல் புகழ்ந்து பேசுவதற்கு ஏவுதல் பெற்றான். உண்மையில் அந்தப் புயலில் **கர்த்தருடைய மகிமையும் வல்லமையும்** வெளிப்பட்டதை நன்கு உணர்ந்த நிலையில் அவரைத் தொழுதேத்தும்படி வானசேனைகள் யாவற்றையும் தாவீது அழைக்கிறான்.

தூய்மைநிறை அழகுடனே
ஆண்டவரைத் தொழுதேத்த,
வாய்மைநிறைப் புகழ்ச்சியுடன்
முழங்காலை முடக்கிடுவீர்!
பணிவென்னும் பொன்நகையும்
தாழ்மையெனும் நறும்புகையும்,
நனிசிறக்கப் பணிந்திடுவீர்
கர்த்தரையே புகழ்ந்திடுவீர்!

29:3,4 **"கர்த்தருடைய சத்தம்"** என்னும் சொற்றொடர் இந்தச் சங்கீதத்தில் ஏழுமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது. இது பொதுவாகப் புயலையும் குறிப்பாக இடிமுழக்கத்தையும் குறிப்பதாகத் தோன்றுகிறது.

முதலாவது அந்தப் புயல் மத்தியதரைக் கடலின் மேற்புறமாக வீசி, பின்னர் லீபனோன் என்னும் நிலப்பகுதிக்குள் நுழைகிறது. இடி முழக்கம் திரளான தண்ணீர்கள் மேல் மோதி எதிரொலிக்கிறது, அது மேடைப் பந்தாட்டத்தில் பந்து துள்ளிக் குதிப்பதைப் போல இருக்கிறது. அதனால் எழுகிற சத்தம் பயங்கர ஆற்றலும் **மகத்துவமும்** நிறைந்தது.

29:5,6 இப்பொழுது லீபனோன் மலைகள் தீவிரமாகத் தாக்கப்படுகின்றன. உயரமான கேதுரு மரங்கள் மின்னல் தாக்குதலால் முறிந்து விழுகின்றன. காட்டுப் பகுதிக்குள் காற்று சடிதியில் பலமாக வீசுகின்ற காரணத்தால், மரங்கள் ஏதோ தாளத்திற்கு ஏற்றாற்போல வளைந்து, லீபனோன் காடுகள் **கன்றுக்குட்டி** குதிக்கிறது போலக் காணப்படுகின்றன. சீரியோன் (எர்மோன்) காடுகள் **காண்டாமிருகக் குட்டி** குதிக்கிறது போலக் காணப்படுகின்றன.

29:7,8 மின்னல் தெற்குப் புறமாக நெளிந்து வளைந்து விரைகிறது. இயற்கையின் கடுஞ் சீற்றத்தால் **காதேஸ் வனாந்தரம்** அதிருகிறது.

29:9 புயலின் கடுமை குறைந்து வலுவிழந்த காற்றாக மாறி அது தென்திசை நோக்கிச் சென்றது; அப்பொழுது தாவீது தான் கண்ட மூன்று காட்சிகளை வியப்புடன் தொகுத்து வழங்குகிறான். முதலாவதாக கர்த்தருடைய சத்தம் **பெண் மான்களை ஈனும்படி செய்தது** என்று அவன் கூறுகிறான். அறிவியில்பூர்வமாக இது மெய்ப்பிக்கப்பட்ட செய்தியாக விளங்குகிறது. வானிலை சீற்றங்கள், ஈனும் காலத்தில் இருக்கும் விலங்குகளில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

காடுகளின் இலைகள் யாவும் உதிர்ந்து நிர்வாணக் காட்சிபோல விளங்குகின்றன என்பதைப் பாடலாசிரியன் காண்கிறான். மரங்கள் தரிசு போன்று வெறுமையாகவும், பசுமையிழந்தும் நிற்கின்றன.

மூன்றாவதாக, இஸ்ரவேலின் இனிய பாடகன் **ஆலயத்திலுள்ள** ஒவ்வொருவரும் "மகிமை!" என்று சத்தமிட்டு முழங்குகிறதைக் கண்டு நினைவுபடுத்துகிறான். **அவருடைய ஆலயம்** என்று இங்கு சொல்லப்பட்டிருப்பது இயற்கை உலகம் என்பது தெளிவு; குறிப்பாக, புயலால் தாக்குண்ட பகுதியை அது குறிக்கிறது. அம்பு போன்ற மின்னல்கள், பேரொலி முழக்கமிடும் இடிகள், கடும் பலத்துடன் வீசும் புயல், காடுகள், பாலைவனம் யாவும் ஒன்றிணைந்து இறைவனுடைய ஆற்றல், மகத்துவம், கம்பீரம் ஆகிய வற்றைப் பறைசாற்றுகின்றன.

29:10,11 புயல் கடந்துவிட்டது; **கர்த்தரோ** நிலைத்திருக்கிறார். பூமியில் உண்டான தீவிரமான கொந்தளிப்பு, மிகப் பெரிய வெள்ளம் உட்பட, அவருடைய அரியணையை அசைக்க முடியவில்லை. இயற்கைச் சீற்றத்தின் காரணமாக அவருடைய இறையாண்மைக்கு ஏதொரு பாதிப்பும் ஏற்படவில்லை. வாழ்க்கையில் ஏற்படுகிற மனக்கிளர்ச்சிகளிலும் கொந்தளிப்புகளிலும் அவர் தம் மக்களுக்கு வலிமையையும் சமாதானத்தையும் கொடுக்கக் கூடியவர். அவர் அவ்வாறு செய்வதற்கு மனமகிழ்ச்சி அடைவாராக!

உபத்திரவ காலத்தில் இஸ்ரவேல் நாட்டின் மீது வடதிசையிலிருந்து வரக்கூடிய போர்ப் புய

லையே இச்சங்கீதம் முன்னுரைத்துப் படவுருவில் வரைந்து காட்டுகிறது என்று சில வேத மாணாக்கர் கருதுகிறார்கள் (வச. 3-9). அந்தத் தொல்லை மிகுந்த காலத்திற்குப் பிறகு, கர்த்தராகிய இயேசு பூமி முழுவதையும் தமது அதிகாரத்திற்குள் கொண்டுவந்து அரசராக ஆளுகை செய்து அதனை வல்லமையாலும் சமாதானத்தாலும் ஆசிர்வதிப்பார் (வச. 10,11). இந்தக் கருத்து ஆழ்ந்து சிந்திப்பதற்குத் தகுதியாக விளங்குகிறது.

கிறிஸ்துவின் இரண்டாம் வெளிப்பாட்டை, முதலாவதாக அர்மகெதோனில் தோன்றுவதையும் (வெளி. 16:16), அடுத்ததாக காதேஸ் பாலைவனத்தில் அதாவது போஸ்றா பட்டணத்திற்குத் தீவிரமாக இறங்கி வருவதையும் (ஏசாயா 63:1) இந்தச் சங்கீதம் படவுருவில் வரைந்து தருவதாகத் திருவாளர் W.E. வைன் காண்கிறார்.[25] அந்தக் காலத்தில் இஸ்ரவேல் நாட்டின் மேல் போர் தொடுக்கும் அனைத்து நாடுகளையும் முழுவதுமாகத் தோற்கடிக்கும் நிகழ்வை இச்சங்கீதம் இவ்வாறு விவரித்துக் கூறுகிறது.

ஆயினும் அனுதின வாழ்க்கைக்கு ஏற்ற அறிவுரைகள் இதில் உள்ளன, அவை எல்லா நாட்களுக்கும் பொருந்துபவை. வாழ்க்கையில் இடர்ப்பாடுகள் உண்டாகிற நேரங்களிலும், மகிழ்ச்சியான நேரங்களிலும் தேவனுடைய தொனி ஒலிக்கிறது. அவர் தம்முடைய நோக்கங்களைத் திறம்பட நிறைவேற்றுகிறார். அவருடைய கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டது ஒன்றுமில்லை. அவரை அறிந்தவர்களுக்கும் அவரிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கும் எல்லாம் நன்மைக்கேதுவாகவே நடைபெறுகின்றன. திருவாளர் அயர்ன்சைடு கூறுகிறார்:

> மனப்பயிற்சிகள், மன அழுத்தங்கள், பிரச்சினைகள் ஆகியவற்றின் ஊடாகக் கடந்து சென்ற ஆத்துமாவின் வியத்தகு படவுருவாக இது விளங்குகிறது; ஆனாலும் அந்த ஆத்துமா தேவனே எல்லாவற்றிற்கும் மேலாக இருக்கிறார் என்று கற்றுக்கொண்டிருக்கிறது, அவரே பாதுகாப்பளிப்பவர் என்பதை அறிந்திருக்கிறது. ஆகவே அந்த இருதயம் அவரிடத்தில் இளைப்பாறி சமாதானத்தைப் பெற்றிருக்கிறது.[26]

சங்கீதம் 30: குணமாகுதல் பற்றிய சங்கீதம்

நம்மில் பெரும்பாலோர் வாழ்க்கையில் ஏதோ ஒரு சமயத்தில் கடுமையான நோயினின்று மனமகிழ்வு உண்டாகக்கூடியபடி நலம்பெற்ற அனுபவத்தைப் பெற்றிருப்போம். அறுவைச் சிகிச்சை, மயக்க மருந்து, தீவிர சிகிச்சைப் பிரிவு, இரத்த நாளங்களின் வழியாக உணவு செலுத்துதல், தோலுக்கடியில் மருந்து செலுத்தும் ஊசிகள், முடிவுறாத மாத்திரைகள் ஆகிய கிருமி நீக்கும் உலகிற்கு விடைகொடுத்து அனுப்பியிருப்போம்! நவீன கால மருத்துவத்தின் பயனாக நாம் நலம் பெற்றுவிட்டோம் என்று சிந்திப்பது எளிது! நாம் பெறுகிற நலத்திற்கான அடிப்படைக் காரணமாக விளங்குபவருக்கு ஒரு புகழ்ச்சிப் பாடலைப் பாட நாம் மறந்து போகிறோம்.

ஆனால் தாவீது மறக்கவில்லை. அவன் தனது இல்லத்தைக் கர்த்தருக்கு ஒப்புவிக்க வேண்டிய நேரம் வந்த போதுதான், ஒரு கடுமையான நோயினின்று குணமடைந்திருந்தான் என்று தோன்றுகிறது. அது எதுவாயினும், அவ்வாறு வீட்டை ஒப்புவிக்கும் தருணத்தில் யெகோவாவாகிய குணப்படுத்துபவரின் புகழ்ச்சியை ஏறெடுக்கும் பாடலாக இது அமைந்துள்ளது.

30:1-4 நன்னலம் திரும்பப் பெறுகையில் கர்த்தருக்குப் போற்றுதலைக் கலப்படமற்றவகையில் செலுத்த வேண்டும் என்று இப்பாடல் முதலாவதாகக் கற்பிக்கிறது. தாவீது மிகவும் தாழ்வான நிலைக்குள் அமிழ்ந்து போனான். அவனுடைய உடல்நலம் குன்றியிருந்ததற்கான அடையாளங்கள் வெளிப்படையாகக் காட்சியளித்தன. அவன் கூடிய விரைவில் இறந்து போவான் என்று அவனுடைய பகைவர் யாவரும் எண்ணி மகிழ்ந்தார்கள். அப்பொழுது அவன் **கர்த்தரை நோக்கிக்** கூப்பிட்டான். அவனுடைய கடுந்துயரின் கதறல் கேட்கப்பட்டு, சாவின் எல்லையிலிருந்து திரும்பக் கொண்டு வரப்பட்டான். பாதாளத்தில் அவன் அழிவைச் சந்திப்பதற்குச் சற்று முன், கல்லறையில் புதைக்கப்படுவதற்கு சற்றுமுன்பு அவன் மீட்கப்பட்டான்.

நாம் மட்டும் இறைவனுக்கு நன்றி செலுத்தினால் போதாது, மாறாக நாம் மகிழ்ச்சிப் பேருவகை பெற்ற நிலையில் பரிசுத்தவான்கள் யாவரையும் அழைத்து நம்மோடு சேர்ந்து அவரைப் புகழ்ந்து போற்ற வேண்டுமென்று இந்தச் சங்கீதம் கற்பிக்கிறது. தனிமையில் புகழ்ந்து போற்றுதல் குழுப் பாடலாக மாறட்டும்! இஸ்ரவேலின் இனிய பாடகன், தேவனுடைய மக்கள் அவரைக் **கீர்த்தனம் பண்ண வேண்டும்** என்றும், அவருடைய **பரிசுத்த நாமத்திற்கு** நன்றி செலுத்த வேண்டும் என்றும் அழைப்பு விடுக்கிறான்.

30:5 இவ்வாறு போற்றுவதற்கான மிக அரிய ஒன்றுக்கொன்று முரணான அழகிய இரண்டு காரணங்களைக் கூறுகிறான். திருவாளர் நாக்ஸ் அவர்களின் இவ்வசனத்திற்கான மொழிபெயர்ப்பு விலையேறப் பெற்றதாக விளங்குகிறது:

கர்த்தரின் சீற்றம் மணித்துளி அளவு,
கர்த்தரின் அன்போ நீடிய வாழ்வு;
ஓரிரவு விருந்தினன் போன்றது வருத்தம்
காரிருள் நீங்கிட காலையில் மகிழ்ச்சி!

இங்கு என்னுடைய சொந்த வாழ்க்கையில் நடந்த ஒரு நிகழ்வைக் குறித்துச் சொல்ல சிறிது நேரம் எடுத்துக்கொள்கிறேன். மெக்டொனால்டு குடும்பம் ஆழ்ந்த துக்கத்தில் இருந்த காலம் அது. நண்பர்கள் அவர்களுடைய துக்கத்தில் பங்கு பெற்று வருத்தத்தை தெரிவிக்கப் பெருமளவில் வந்திருந்தார்கள். ஆனாலும் அவர்களுடைய துக்கம் தணியவில்லை. அவர்களுடைய சொற்கள் நல்நோக்கத்துடன் சொல்லப்பட்டவை, ஆயினும் போதுமானவை அல்ல. திருவாளர் H. A. அயர்ன்சைடு ஒரு சிறிய குறிப்பை அனுப்பியிருந்தார், அதில் அவர் சங்கீதம் 30:5 -ஆவது வசனத்தை மேற்கோள் காட்டியிருந்தார்:

சாயங்காலத்தில் அழுகை தங்கும்
விடியற்காலத்திலே களிப்புண்டாகும்.

அச்சொற்கள் நற்பயனை உண்டாக்கின. துக்கத்தின் கட்டுகள் தெறித்தன!

அதுமுதல், துக்கம் என்னும் இருண்ட சுரங்கப் பாதையின் வழியாகக் கடந்து செல்லும் விசுவாச மக்களுக்கு ஆறுதல் கூற இந்த வசனத்தை நான் பயன்படுத்தக்கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. அப்பொழுதெல்லாம் நன்றியறிதலோடு கூடிய ஒப்புதல் அவர்களுடைய உள்ளங்களில் உண்டாயிற்று.

30:6,7 அடுத்ததாக, நாம் இவ்வுலகப் பொருளுடைமைச் செல்வத்தைச் சார்ந்திடாமல் தேவனையே சார்ந்திருக்க வேண்டும் என்னும் பாடத்தை இந்தச் சங்கீதத்தில் கற்கிறோம். நோய்வாய்ப்படுவதற்கு முன் செல்வம் மிக்கவனாக, தன்னையே சார்ந்தவனாக இருந்தான். தனக்கு சோதனையோ பிரச்சினையோ உண்டாகாது என்று அவன் எண்ணியிருந்தான். அவன் ஒரு பெரிய மலையைப் போன்று, அசைக்கப்பட முடியாத நிலையில் இருந்ததாகத் தோன்றியது. தனது உள்ளத்தின் நினைவுகளுக்கு ஏற்றபடி எல்லாவிதமான பாதுகாப்பையும் தனக்கென்று ஏற்படுத்திக்கொண்டு அதில் பத்திரமாக இருப்பதாக அவன் நினைத்தான். மேலும் எதைக் குறித்தும் பயப்பட வேண்டியதில்லை என்றும் அவன் எண்ணியிருந்தான்.

ஆனால் அப்பொழுது ஒரு நிகழ்வு நடந்தது. ஆனால் மிக விரைவாகக் கர்த்தர் தமது முகத்தை மறைத்துக்கொண்டதாகத் தோன்றியது. அவர் ஏதோ சினம் கொண்டது போலவும், அவர் தமது தயவை விலக்கிக் கொண்டது போலவும் ஆயிற்று. வாழ்க்கை மனக்கிலி பிடித்தது போல மாறிவிட்டது.

30:8-10 ஆனால் அவ்வாறு ஏற்பட்ட மனக்கிலி தாவீதின் ஜெப வாழ்க்கையில் சடிதியில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது. அவன் செல்வ வளம் பெற்றிருந்த போது அவனுடைய ஜெபங்கள் மந்த நிலையிலும் உற்சாகமற்றதாகவும் இருந்தன. ஆனால் இப்பொழுதோ அவன் நோயுற்றிருந்த நிலையில் கருத்தோடும் உண்மையோடும் ஜெபித்தான். அப்பொழுது அவன் மரணமடைந்தால் சர்வ வல்லவருக்கு அதனால் பயன் ஏற்படாது என்று தேவனிடத்தில் விளக்கிக் கூறினான். பாடலாசிரியனின் உயிரற்ற சடலம் அவரைப் புகழாது, மேலும் அவனுடைய **புழுதி** தேவன் உண்மையுள்ளவர் என்பதை அறிவிக்கவும் செய்யாது.

நான் குழியில் இறங்குகையில்
என் இரத்தத்தால் என்ன லாபம்?
புழுதி உம்மைத் துதிக்குமோ?
உமது சத்தியத்தை அறிவிக்குமோ?

நம்மைப் பொறுத்தவரை இத்தகைய வாதம் அதிக ஏற்புடையதாக இல்லை. உண்மையில், கோட்பாட்டின் அடிப்படையில் காண்கிறபோது, இது பெருமளவு குறைவுடையதாக விளங்குகிறது. ஆனால் நாம் பழைய ஏற்பாட்டுப் பரிசுத்த வான்கள்மேல் குறைகூறாதபடி நம் நாவைக் காப்பதற்குக் கவனமாயிருக்க வேண்டும். பல வழிகளில் அவர்கள் மங்கலான கண்ணாடியின் ஊடாகவே கண்டார்கள். நம்முடைய முன்னிலையில் இருக்கின்ற இப்பாடலில் அதற்கு இரண்டு எடுத்துக்காட்டுகளைக் கூறலாம்.

ஐந்தாவது வசனத்தில், தாவீதின் நோய் தேவ கோபத்தின் அடையாளம் என்று அவன் விவரித்ததைக் கண்டோம். தேவனுடைய சிட்சை அவருடைய அன்பின் அடையாளமேயொழிய கோபத்தின் அடையாளமன்று என்பதை நாம் அறிவோம் (எபி. 12:6). இருந்தபோதிலும் நாமும்கூட பல நேரங்களில், நோயுற்ற நிலையும் பாடுகளும் அவருடைய அதிருப்தியின் அடையாளங்கள்

என்னும் தவறான எண்ணத்தில் விழுந்துவிடு கிறோம்.

அடுத்ததாக 9 -ஆவது வசனத்தில், விசுவாசி யின் வாழ்வில் மரணத்தோடு தேவனுக்குச் செலுத்துகிற எல்லாப்புகழ்ச்சிக்கும் முடிவு ஏற் படும் என்று தாவீது பேசுகிறான். இப்பூமியில் ஏறெடுக்கிற புகழ்ச்சியும், பகர்கிற சாட்சியும் மரணத்தில் முடிவுறும் என்பது உண்மைதான். ஆனால் விசுவாசியின் மரணத்தின்போது அவ னுடைய ஆவி கிறிஸ்துவினிடத்திற்கும், அவனு டைய உடல் கல்லறைக்கும் செல்லுகின்றன என் னும் புதிய ஏற்பாட்டுப் பாடத்தை நாம் கற்றிருக் கிறோம் (2 கொரி. 5:8; பிலி. 1:23). விசுவாசியும் தன் உணர்வு கொண்டவனாகக் கர்த்தருடைய முன்னிலையில், இதுவரை பூமியில் செய்திராத வகையில் அவரைத் தொழுதுகொள்ளுவான். பழைய ஏற்பாட்டு விசுவாசிகள் இதை அறிந் திருக்க மாட்டார்கள். கிறிஸ்துவே ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தின் மூலமாகக் கொண்டுவந்தவர் (2 தீமோ. 1:10).

ஆனால் குறிப்பிடத்தக்க முக்கியமான செய்தி என்னவெனில், பல விசயங்களில் நம்மைக்காட்டி லும் குறைவுடைய அறிவோடு இருந்த பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் விசுவாசத்திலும், ஜெபத்திலும், ஆர்வத்திலும், பக்தியிலும் நம்மை மிஞ்சியவர்களாகக் காணப்பட்டார்கள்.

30:11 மீண்டும் நாம் தாவீதை நோக்கித் திரும்புவோம். அவன் நோயின் கடுமையான வேதனையை அனுபவித்துக்கொண்டிருந்த போது தேவனிடத்தில் ஏறெடுத்த மன்றாட்டை 9,10 ஆகிய வசனங்கள் தந்துள்ளன. பின்னர், 10 மற்றும் 11 -ஆகிய வசனங்களுக்கிடையே அதற் கான விடை கிடைத்திருக்கிறது. அவன் கர்த்த ரால் நலம் பெற்றுவிட்டான். கடைசி இரண்டு வச னங்களும் அவன் பெற்ற நலத்திற்கான கொண் டாட்டத்தின் விவரங்களாகும். தாவீதுக்கோ அது மரண நிகழ்ச்சியில் அடைகிற துக்கத்திற்கும், திருமண நிகழ்ச்சியின் போது உண்டாயிருக்கும் **ஆனந்தக் களிப்புக்கும்** இடையேயுள்ள வேறு பாடு போன்ற அனுபவமாயிருந்தது. அல்லது உரு வகத்தை மாற்றிக் கூறுவோமென்றால், அது புத் தாடை அணிந்த நிலைக்கு ஒப்பாகும். தேவன் அவனுடைய **இரட்டைக்** களைந்து **மகிழ்ச்சி** யென்னும் ஆடையை அணிவித்திருக்கிறார்.

30:12 தாவீது நலம் பெற்றதால் ஏற்பட்ட ஒரு பயன், அவனால் இப்பொழுது கல்லறையில் அமைதியாகப் படுத்திருக்க முடியாது, ஜீவனோடு கர்த்தரைத் துதிக்கக்கூடியவனாக விளங்கு கிறான். அதையே அவன் செய்யவேண்டுமென்று விரும்பினான் - **கர்த்தரே உம்மை என்றென்றும் துதிப்பேன்.** "கர்த்தர் என் வாழ்வில் செய்ததை ஒருபோதும் என்னால் மறக்க முடியாது. அதற்காக நான் அவரை எப்பொழுதும் துதிப்பேன், அதை நிறுத்தவே மாட்டேன்" என்பதே அவன் கூறியதன் பொருள்.

உங்களிடத்தில் இந்தப் பாடல் என்ன விளைவை ஏற்படுத்தியிருக்கிறதென்பதை நான் அறியேன், ஆனால் என்னை இது வெட்கமடையச் செய்திருக் கிறது. நான் நோயுற்ற காலத்திலெல்லாம், தீவிர மாக வானத்தின் கதவுகளிடமாய்ச் சென்று நம்புவ தற்கு வேறு எதுவும் இல்லையென்று என்னுடைய மன்றாட்டுகளை ஏறெடுத்திருக்கிறேன், கர்த்தர் தாமே கருணையுள்ளத்தோடு ஏற்ற விடையைத் தந்திருக்கிறார்; இதையெல்லாம் நான் எண்ணிப் பார்க்கிறேன். ஆனாலும் அவருடைய முன்னி லைக்கு வந்து நன்றியுள்ளத்தோடு எனது புகழ்ச் சியை ஏறெடுக்க மறந்துபோனேன். நான் குண மடைவதைத் தவிர வேறு எதுவும் நடக்காது என்பதுபோல நடந்துகொண்டேன். என்னுடைய நன்றியைக் கூறத் தவறிவிட்டேன்.

நாம் வியந்து போற்றுவதற்காக மட்டுமின்றி, முன்மாதிரியைப் பின்பற்றுவதற்காகவுமே தாவீதின் எடுத்துக்காட்டை தேவன் நமக்குத் தந்திருக்கிறார்.

சங்கீதம் 31: உம்முடைய கரத்தில்

31 -ஆவது சங்கீதத்தின் ஐந்தாவது வசனம், இடுக்கண் அடைந்து மரணம் அடைந்து கொண்டி ருந்த தேவ ஆட்டுக்குட்டியானவருடன் குறிப்பிட் டுச் சொல்லக்கூடியபடி தொடர்பு கொண்டிருக் கிறது என்று வெளிப்படுத்தி நம்மை விழிப்படை யச் செய்கிறது. அவர் சிலுவையில் கூறிய இறுதிக் கதறலாக அது உருவெடுத்தது:

"பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" (லூக்கா 23:46).

ஒரு சங்கீதத்தின் ஒரு வசனம் மேசியாவுடன் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியபடி தொடர்பு கொண்டிருந்தாலும், மற்ற வசனங்கள் யாவும் அவரைப் பற்றியதாகவே இருக்கவேண்டிய கட்டாயமில்லை என்பது உண்மை. ஆனால், இந்தக்குறிப்பிட்ட சங்கீதத்தில் ஒவ்வொரு வசன மும் அவருடன் ஏதோவொரு வகையில் தொடர் புடையதாக இருக்கிறது.

இருந்தபோதிலும் இந்தச் சங்கீதத்தைப் பகுத்தாராய்வது சற்று சிரமமே. கர்த்தராகிய இயேசுவின் பாடுகள், மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகிய நிகழ்வுகள் கால வரிசையின்படி இப் பாடலில் சொல்லப்படாமல், பாடுகளும் உயிர்த்தெழுதலும் மாறிமாறி எடுத்துரைக்கப்பட்டுள்ளன. ஆனால் திருவாளர் C. S. லூயிஸ் குறிப்பிட்டதுபோல "சங்கீதங்கள் பாடல்களாக எழுதப்பட்டவை, பாடுவதற்காக இயற்றப்பட்டவை, அவை கோட்பாட்டு ஆய்வுக் கட்டுரைகளோ பிரசங்கங்களோ அல்ல." [27]

விடுதலையை நாடி ஏறெடுக்கப்பட்ட மன்றாட்டு (31:1-5)

31:1 முதல் சில வசனங்களில் கர்த்தராகிய இயேசு சிலுவையிலிருந்து தமது திருத்தந்தையிடம் மன்றாடுகிறார். நிறைவான மனிதர் என்னும் நிலையில் அவர் எப்போதும் தேவனைச் சார்ந்தே வாழ்ந்தார். இப்பொழுது அவர் தமது மிக ஆழமான துக்கத்தில், **கர்த்தரே** அவருடைய ஒரே சரணாலயமாக இருப்பதாக மீண்டும் உறுதி செய்கிறார். இறைவனாகிய திருத்தந்தையின் மேல் நம்பிக்கை வைத்திருப்பதற்காக அவர் ஒருக்காலும் வெட்கமடையக் கூடாது என்று வேண்டுகிறார். தேவனுடைய திருப்பெயரின் நன்மதிப்பு பிரிக்கப்படக் கூடாதபடிக்கு அவருடைய குமாரனுடைய உயிர்த்தெழுதலோடு தொடர்பு கொண்டிருக்கிறது என்பதை நினைவுபடுத்தும் ஆற்றல் மிகுந்த மன்றாட்டாக இது இருக்கிறது. இறந்தோரிலிருந்து கர்த்தராகிய இயேசுவை உயிரோடு எழுப்பும் செயல் திருத்தந்தையின் **நீதியின்** செயலாக விளங்கும். அவ்வாறு அவர் செய்யவில்லையெனில், இரட்சகர் தவறான நம்பிக்கை கொண்டிருந்தார் என்னும் அவப்பெயருக்கு உள்ளாகித் தாழ்த்தப்பட்டிருப்பார்.

31:2,3 மனிதனுடைய அல்லது உயிரற்ற பொருட்களின் பண்புகளை தேவன் கொண்டிருப்பவர் போல உருவகப்படுத்தி மிக அழகிய மொழியில், பாடுகள் அனுபவித்துக் கொண்டிருந்த ஒப்பற்ற மனிதர் தேவனை தாமே கல்வாரியின் பக்கமாகச் சாய்ந்து தம்முடைய செவியைத் திருப்ப வேண்டுமென்று கேட்கிறார். பின்னர் அவர் தமது அவசர வேண்டுதலைக் கேட்கவும், அவரைத் தப்புவிக்கவும் விரைந்து ஓடிவரும்படி வேண்டுகிறார். மேலும் கர்த்தர்தாமே அவருடைய உறுதியானதும் அசையாததுமான **அடைக்கலமான** கன்மலையாக இருக்கும்படியும், எல்லாவிதமான தீமையிலிருந்தும் அவர் தப்புவதற்கு ஏதுவான வலிமையான கோட்டையாக விளங்கும்படியும் வேண்டிக்கொள்கிறார்.

உண்மையில், தேவன் அவருடைய **கன்மலையும் கோட்டையுமாக** இருக்கிறார். அவருடைய வழக்கறிஞரும் பாதுகாப்புமாக இருக்கிறார்.

> அடைக்கலம் ஆனவர் அரணாகத் திகழ்பவர்
> படைக்கலன் இல்லை புடைசூழ்வார் இல்லை
> தனிமையில் தவித்திட கைவிடா திருப்பவர்
> இனிமையாய் நடத்தியே ஆறுதல் தருபவர்!
> – சார்லஸ் வெஸ்லி

மீண்டும் ஒருமுறை கிறிஸ்து தேவனுடைய நன்மதிப்பை அடிப்படையாகக் கொண்டு தமது வேண்டுதலை ஏறெடுக்கிறார். **"உமது நாமத்தினிமித்தம் எனக்கு வழிகாட்டி என்னை நடத்தியருளும்."** அப்பெயருக்குக் களங்கம் ஏற்படக் கூடாது. நீதிமான்களை விடுவிப்பதாக தேவன் வாக்குறுதி தரவில்லையா? உண்மையாக அவர் அவ்வாறு வாக்குறுதி தந்திருந்திருக்கிறார்! இப்பொழுது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தம்மை மரணத்தினின்று உயிர்த்தெழுதலில் விடுவித்து மகிமைப்படுத்துவதன் மூலமாக அவருடைய திருப்பெயரின் நன்மதிப்பு நிலைநிறுத்தப்பட வேண்டுமென்று விண்ணப்பிக்கிறார்.

31:4 இரட்சகரைச் சிறைப்பிடித்துக் கட்டி வைக்க மிகக் கவனத்தோடு மரண **வலை** விரிக்கப்பட்டது. அந்த வலையிலிருந்து நீங்கலாக்கித் தம்மை விடுவிக்க வேண்டுமென்று இங்கு கிறிஸ்து கதறுகிறார். அதாவது புதை குழியிலிருந்து அவரை யெகோவா விடுவிக்க வேண்டும், ஏனெனில் அவரே இரட்சகருடைய அடைக்கலமும், அரணும் , கோட்டையும் ஆவார்.

31:5 ஐந்தாம் வசனத்தின் முந்தின பகுதியை இயேசு உரத்த சத்தத்தோடு கூறினார் என்று லூக்கா எழுதியிருக்கிறார். எந்த மனிதனும் கிறிஸ்துவின் உயிரை அவரிடத்திலிருந்து எடுக்கவில்லை. அவரே அதனைத் தாமாக மனமுவந்து கொடுத்தார், அவர் தம்முடைய உணர்வுகள் அனைத்தும் தெளிவான நிலையில் இருந்த சமயத்திலேயே, தம்முயிரைக் கொடுத்தார். அந்த நேரத்திலிருந்து பல நூற்றாண்டுகளாக மரணத்தறுவாயில் இருந்தபோது பல பரிசுத்தவான்கள் இதே சொற்களை மீண்டும் கூறியிருக்கிறார்கள். லூத்தர், நாக்ஸ், ஹஸ் இன்னும் பலரை இதற்கு எடுத்துக் காட்டுகளாகக் கூறலாம்.

உயிர்த்தெழுந்தமைக்கான புகழ்ச்சி (31:5-8)

31:5,6 ஐந்தாவது வசனத்தின் நடுவில் குறிப்பிடத்தக்க இடைநிறுத்தம் காணப்படுகிறது. இங்கு ஆய்வுப்பொருள் மரணத்திலிருந்து உயிர்த்தெழுதலை நோக்கி, மன்றாட்டிலிருந்து புகழ்ச்சியை நோக்கிச் செல்லுகிறது. அவருடைய வார்த்தைக்கு உண்மையானபடி தேவன் தமது பரிசுத்த குமாரனை மரணத்தினின்றும் புதைகுழியிலிருந்தும் மீட்டுக்கொண்டார். உயிருள்ள இறைவனிடம் அவரது குமாரன் கொண்டிருந்த நம்பிக்கை மிகச் சரியானது என்பதை அவர் மகிமையாக உயிர்த்தெழச் செய்ததன் மூலமாக மெய்ப்பித்தார். வீண் **மாயையான** சிலைகளை நம்புகிறவர்கள் யெகோவாவின் அவமதிப்பையே பெறுவார்கள்!

31:7,8 இப்பொழுது தேவன் தமது அன்பின் குமாரன் அடைந்த பாடுகளின்போது அவருடைய மாறாத அன்பு அவர்மேல் அசைவாடிக் கொண்டிருந்ததன் காரணமாக எழுந்த புகழ்ச்சிப் பாடல் இறக்கை கட்டி விண்ணகம் நோக்கிப் பறந்து செல்லுகிறது. இந்த அன்பே இரட்சகர் அடைந்த எல்லா **உபத்திரவங்களையும்** கணக்கில் எடுத்துக்கொண்டு, இறுதியில் அவரை எதிரியின் ஆற்றலில் கைவிடாமல் குழியிலிருந்து தூக்கியெடுத்து அவருடைய **கால்களை விசாலமான இடத்திலே,** அதாவது "உயிர்த்தெழுதலின் தளத்தில்" நிறுத்தியது.

ஆழ்ந்த துயரம் (31:9-13)

31:9,10 இப்பொழுது நாம் மீண்டும் கர்த்தராகிய இயேசுவின் விசாரணை, சிலுவையில் அறையப்பட்ட நிகழ்வு ஆகியவற்றிற்கு முந்தைய வாழ்க்கைக் குறிப்பினிடமாய்க் கொண்டுவரப்பட்டிருக்கிறோம். பாவிகளின் கசப்பான வெறுப்பைச் சகித்த துக்க மனிதரின் மன்றாட்டைக் கேட்பதற்கு நாம் அனுமதிக்கப்பட்டிருக்கிறோம். மனிதர்களால் இழிவுபடுத்தப்பட்டு, நிராகரிக்கப்பட்டவர் தமது துக்கத்தில் யெகோவாவை நோக்கித் திரும்பி, கிருபையோடு தாங்கும்படி வேண்டுதல் செய்கிறார். அவருடைய கண்கள் மிகுதியான துக்கத்தால் மூழ்கடிக்கப்பட்டுவிட்டன, அவருடைய ஆத்துமாவும் சரீரமும் அழுகையால் வீணாகிப் போயின. அவர் **சஞ்சலத்தால்** பெலனற்று, **தவிப்பால்** முழுவதும் கழிந்துபோன நிலைக்கு ஆளானார். துயரத்தால் அவருடைய சத்துவம் யாவும் உறிஞ்சப்பட்டுப் போயிற்று, அவருடைய எலும்புகள் யாவும் பெலனற்றுப் போயின.

"என் அக்கிரமத்தால் என் பெலன் குறைந்து போயிற்று" என்னும் சொற்றொடரை பாவமற்ற இரட்சகருக்குப் பொருத்திக் காண்பதற்கான வழி, அது நம்முடைய **அக்கிரமத்தைக்** குறிக்கிறது என்று புரிந்துகொள்வதால் மட்டுமே முடியும்; நம்முடைய பாவத்தைச் சுமந்தவர் என்னும் நிலையில் கிறிஸ்து தாமே அதைத் தம்மேல் ஏற்றுக்கொண்டார். இல்லையெனில் இந்தச் சங்கீதத்தை மேசியாவுக்குப் பொருத்திக் காண்பது இயலாமல் போய்விடும்.

31:11-13 பகைவர் யாவராலும் ஏளனம் செய்யப்பட்டு இழிபுவடுத்தப்பட்டவராகவும், **அயலகத்தார்** யாவருடைய முன்னிலையிலும் அருவருப்பான தோற்றமுடையவராகவும் இருந்து பொறுமையோடு பாடுகளைச் சகித்த தம்மைக் குறித்தே இரட்சகர் அடுத்ததாகப் பேசுகிறார். அவர்கள் அவரைக் காணாமல் தவிர்க்கும்படி சாலையின் மறுபுறம் செல்கிறார்கள் அல்லது அவர் எதிரே வரும்போது காணாதவர் போலத் தலைகுனிந்து செல்கிறார்கள். அவர்களுடைய நினைவிலிருந்து விரைவாக மறக்கப்பட்டு, உடைந்து போன பாத்திரத்தைத் தூக்கி எறிவதுபோல எறிந்து விடுகிறார்கள். அவருக்கு எதிராகப் பரப்பப்பட்ட அவதூறான செய்தியை அவர் கேட்க நேரிட்டது. அவரைக் கொலை செய்யும்படி மனிதர்கள் சதி செய்த நிலையில் பயங்கரவாதம் அவரைத் துரத்திக் கொண்டிருந்தது.

சோகமும் துயரமும் வருத்தக்கூடிய இந்நிலை எந்த மனிதனும் இடர் அடைவதற்குப் போதுமானது. இப்பிரபஞ்சத்தின் படைப்பாளரும் வாழ்வுக்கும் மகிமைக்கும் கர்த்தருமானவரை விவரித்துக் கூறும் பொருட்டு இச்சித்திரம் வரைந்து தரப்பட்டிருக்கிறது என்பதை அறியும்போது நம்மால் என்ன சொல்லமுடியும்!

மீட்பிற்கான விண்ணப்பம் (31:14-18)

31:14-17 வருத்தமும் தவிப்பும் நம்பிக்கை மிகுந்த மன்றாட்டுக்கு வழிவகுக்கின்றன. மனிதர்களால் நிராகரிக்கப்பட்டவர் யெகோவாவே தமது நம்பிக்கை என்றும், தம் வாழ்வின் தேவன் என்றும் அறிக்கை செய்கிறார். அவருடைய காலங்கள் திருத்தந்தையின் கரத்தில் இருக்கின்றன என்னும் உண்மையை அறியும்போது அவர் சொல்லி முடியாத ஆறுதலைப் பெறுகிறார். இறைவனை நம்பும் மக்கள் நல்வாழ்விலும் துயரத்திலும் இத்தகைய ஆறுதலைப் பெற்றிருப்பதாகச் சான்று கூறுகிறார்கள்:

நான்வாழும் நாட்களெல்லாம்
உம்கரத்தில் இருக்கையிலே
ஒருகுறைவும் இல்லையெனப்
பகர்ந்திடுவேன் துணிவுடனே!
நான்தருவேன் என்வாழ்வு
எனதனைத்தும் உம்சமுகம்
ஆண்டிடுவீர் எந்நாளும்
நிறைவான தயவுடனே!

– வில்லியம் F. லாய்டு

இவ்வகையான நம்பிக்கை மற்றும் ஒப்புவித்தல் ஆகிய உறுதிமொழியோடு, கர்த்தராகிய இயேசு தம்முடைய பகைவரின் பிடியிலிருந்து தம்மை விடுவித்து இடர்ப்பாடுகளைக் களைய வேண்டுமென்று தேவனிடம் குறிப்பிட்டு விண்ணப்பிக்கிறார். திருத்தந்தை தம்மை நோக்கிப் பார்க்க வேண்டுமென்று அவர் மன்றாடுகிறார். கர்த்தருடைய நிலைபேறான அன்பின் அடிப்படையில், அவர் தம்மை மரணத்தினின்று விடுவிக்க வேண்டுமென்று விண்ணப்பிக்கிறார். யெகோவா ஒருவரையே மீட்பர் என்று நோக்கிப் பார்ப்பதாலே தாம் ஒருக்காலும் ஏமாந்து போகக்கூடாதென்று வேண்டுதல் செய்கிறார். இங்கு பயன்படுத்தப்பட்ட மொழி சொல்லாட்சித் திறமைமிக்கதாக விளங்கி, கூறவந்த கருத்தை வலியுறுத்துகிற நடையோடு மிளிர்கிறது; அதன் காரணமாகச் சொல்லுக்குச் சொல் துல்லியமாகப் பொருள் கூறமுடியாதபடி அமைந்திருக்கிறது. யெகோவாவை நம்பிய காரணத்தால் கிறிஸ்து வெட்கப்படக் கூடிய நிலை ஏற்படுவதற்கு வாய்ப்பே இல்லை. அவர் அதை அறிந்திருந்தார், நாமும் அதை அறிவோம். மனக்கிளர்ச்சி ஏற்படக்கூடிய ஜெபத்தை அல்லது பாடுவதற்குகந்த கவிதையை நாம் படிக்கும்போது, சொல்லுக்குச் சொல் துல்லியமாகப் பொருள் கூறுவோமானால், சில செய்திகளை இழந்து போவோம்.

31:17,18 துன்மார்க்கரிடமாகத் திரும்பி அவர்கள் வெட்கமடையும்படி செய்ய வேண்டும் என்றும், அவர்கள் பேச்சற்றபடி பாதாளத்திற்குச் செல்ல வேண்டும் என்றும் கிறிஸ்து வேண்டுதல் செய்கிறார். அவர்கள் தேவனுடைய பரிசுத்த குமாரன்மேல் பழிசாற்றியதன் காரணமாக, அவர்களுடைய **பொய் உதடுகள்** பேசாதபடி அடைக்கப்படவேண்டும் என்றும் அவர் வேண்டுகிறார். கிறிஸ்தவர்கள் பேசுவதற்கு இயலாத தரங்குறைந்த சொற்களாக இவை இருக்கின்றன என்று சில நேர்மையான கிறிஸ்தவர்கள் கருதுகிறார்கள். ஆனால் குற்றம்புரிவோரின் கொடிய தன்மையையும், அவர்கள் புரியும் குற்றங்களின் கீழ்த்தரமான தன்மையையும் நாம் அதிகமாகச் சிந்தித்துப் பார்ப்போமானால், இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள மொழி அவ்வளவு கடுமையானது அன்று என்னும் முடிவுக்கு வந்துவிடுவோம்!

பெரிதான அடைக்கலம் தேவன் (31:19,20)

மீண்டும் இச்சங்கீதம் துன்பத்திலிருந்து இன்பத்தை நோக்கி, வேண்டுதலிலிருந்து புகழ்ச்சியை நோக்கிச் செல்கிறது. மாட்சிமை மிகுந்த தொனியில் கர்த்தர் தமது திருத்தந்தையை ஒப்பில்லா மறைவிடம் என்று போற்றுகிறார். தேவன் தம்முடைய விசுவாச மக்களுக்காக ஏற்படுத்தியிருக்கும் முடிவில்லாத பண்டகசாலையின் நிருவாகியாக இருக்கிறார் என்றும், அங்கு அவர் அளவில்லா நன்மைகளைச் சேர்த்து வைத்திருக்கிறார் என்றும் அவர் தேவனைச் சித்திரிக்கிறார். அவரிடத்தில் தஞ்சம் புக நாடுகிறவர்கள்மேல் இந்தச் செல்வங்களை மனுபுத்திரருடைய முன்னிலையில் அளவில்லாமல் வாரி வழங்க அவர் காத்துக்கொண்டிருக்கிறார். மனிதர்களுடைய தீய சூழ்ச்சிகளிலிருந்து தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட பரிசுத்தவான்கள் ஒளிந்துகொள்வதற்குரிய இடம் தேவனுடைய சமுகமே ஆகும். "இவ்வுலகத்தின் சத்தம் மிகுந்த வாக்குவாதத்திலிருந்து" விலகித் தங்குவதற்குத் தகுதியான இடம் அதுவே என்று திருவாளர் நாக்ஸ் கூறினார்.

தனிப்பட்ட நன்றியுணர்வு (31:21,22)

பகைவர்களால் சூழ்ந்துகொள்ளப்பட்ட பட்டணம்போல, எதிரிகளால் முற்றிலுமாகச் சூழப்பட்ட கர்த்தராகிய இயேசு தேவனுடைய தயவு அற்புதமான முறையில் வெளிப்படுத்தப்பட்டதை அனுபவித்தார். அவர் திகிலுற்ற நேரத்தில், யெகோவாவால் முழுவதும் கைவிடப்பட்டது போன்ற உணர்வை அடைந்ததுபோல் அவருக்குத் தோன்றியது. அவர் சிலுவையில் தொங்கிய பயங்கரமான மூன்று மணி நேரத்தில் அவர் பிதாவால் கைவிடப்பட்டார், ஆனாலும் அவருடைய கதறலை தேவன் கேட்டு மரித்தோரிலிருந்து உயிருடன் எழுப்பினார்.

கர்த்தரிடத்தில் அன்புகூருதல் (31:23,24)

தேவனுடைய அன்பை ருசித்தவராக, கிறிஸ்து தமது திருத்தந்தையிடத்தில் அன்பு செலுத்தினார்; மற்றவர்களும் அதே போன்று அன்புகூர வேண்டுமென்று மிகச் சரியாக அவர் எதிர்பார்த்தார். யெகோவா தம்மை விசுவாசிக்கும் மக்க

ளைப் பாதுகாப்பார் என்று நம்பத்தகுந்தவராக விளங்குகிறார். மேலும் அவர் இறுமாப்பு மிக்க கலகக்காரருக்கு உரிய தண்டனை வழங்குவார் என்பதும் நிச்சயம்.

கர்த்தரிடத்தில் கொண்டிருக்கிற நம்பிக்கை ஒருக்காலும் வீண்போகாது என்னும் உறுதியில், எந்தவொரு விசுவாசியும் தனக்கு எதிராக எழக் கூடிய எந்தக் கொடிய சந்தர்ப்பத்திலும் திடமன தோடும் உற்சாகத்தோடும் இருக்கமுடியும் - இது எக்காலத்திலும் உண்மையாயிருக்கிறது!

சங்கீதம் 32: மன்னிக்கப்பட்ட நிலை!

மன்னிக்கப்பட்ட நிலை மகிழ்ச்சி தரும் நிலை யாகும்! அது விவரிக்க இயலாத அளவு உணர்வு பூர்வமானது. மிகப்பெரிய அளவிலான பாரம் அகற்றப்பட்டு இலகுவான உள்ளம், கடன் தீர்க் கப்பட்டு அல்லது மனஉலைவு நீங்கி இளைப் பாறுதல் அடைந்த மனது, இதுவே அந்த உணர்வு. குற்றவுணர்வு நீங்கிவிட்டது, போராட் டம் முடிந்துவிட்டது, சமாதானம் மகிழ்வுதரும் அனுபவமாக விளங்குகிறது. தாவீதுக்கோ, அவனுடைய மிகப்பெரிதான மீறுதல் மன்னிக்கப் பட்டதும், அவனுடைய பாவம் மூடப்பட்டதும், அவனுடைய அக்கிரமம் அவனுடைய கணக்கில் எழுதப்படாததும், அவனுடைய ஆவியில் எழுந்த வஞ்சகம் நீங்கி தூய்மைப்படுத்தப்பட்டதுமான அனுபவமாகும். இன்றைய நாட்களில் ஒரு விசுவாசிக்கு அது வெறுமனே பாவங்கள் மூடப் பட்டநிலை மட்டுமின்றி, அதைவிடக் கூடுதலா னது. பாவம் மூடப்பட்ட நிலை பழைய ஏற்பாட்டுக் காலத்தின் கருத்தாகும். ஆனால் இந்தக் காலக் கட்டத்தில் விசுவாசி, தன்னுடைய பாவங்கள் அனைத்தும் நீக்கப்பட்டு, தேவனுடைய மறதி என்னும் கடலின் ஆழத்தில் என்றென்றைக் குமாகப் புதைக்கப்பட்டுவிட்டன என்பதே அதன் பொருளாகும் என்பதை அறிந்திருக்கிறான்.

32:1,2 பழைய ஏற்பாட்டுக் காலத்திலும்கூட எவரும் கிரியையால் நீதிமானாக்கப்படவில்லை. மாறாக அது விசுவாசத்தால் பெறக்கூடியது என்பதைத் தெரிவிக்கும் பொருட்டு பவுல் இவ் விரண்டு வசனங்களையும் ரோமர் 4:7,8 பகுதியில் மேற்கோள் காட்டுகிறார். ஆனால் அதன் நிரூ பணம் பெருமளவு தாவீது என்ன கூறினானோ அதிலல்ல, அவன் என்ன கூறவில்லையோ அதில் அடங்கியிருக்கிறது. நீதியுள்ள மனிதன் இரட் சிப்பைச் சம்பாதிக்கவோ தனது தகுதியால் பெறவோ முடியும் என்று அவன் சொல்லவில்லை. பாவம் மன்னிக்கப்பட்ட பாவியான மனிதனைக் குறித்தே அவன் பேசுகிறான். அவ்வாறு பாவம் மன்னிக்கப்பட்ட மனிதனின் ஆசிர்வதிக்கப்பட்ட நிலையை விவரிக்கையில் அவனுடைய எந்தக் கிரியையைப் பற்றியும் தாவீது குறிப்பிடவில்லை. ஒரு மனிதனுடைய கிரியையினாலான்றி, தேவன் அவனுடைய கணக்கில் வரவு வைக்கிற நீதியின் காரணமாகவே அவன் மகிழ்ச்சி பெற்றிருக்கிறான் என்று தாவீது விவரிப்பதைப் பரிசுத்த ஆவியின் மூலமாகப் பவுல் கண்டறிகிறான் (ரோமர் 4:6).

32:3,4 அடுத்ததாக, தாவீது தன்னுடைய தாழ்நிலையைக் குறித்துப் பேசத் திரும்புகிறான். அவன் பத்சேபாளுடன் விபசாரத்தில் ஈடுபட்டு உரியாவின் மரணத்திற்கான திட்டத்தைத் தீட்டி னான். அதன்பிறகு தன்னுடைய பாவத்தை அறிக்கை செய்ய மறுத்துப் பிடிவாதமாக இருந் தான். அவன் எல்லாவற்றையும் மூடி மறைக்க முயற்சி செய்தான். "காலம் எல்லாவற்றையும் சரி செய்துவிடும்" என்று அவன் தன்னையே சமா தானப்படுத்திக்கொண்டான் போலும். ஆனால் அவன் தன்னுடைய நிலையை மாற்ற மறுத்துப் பிடிவாதமாக இருந்தபோது, அவன் தேவனுக்கும் அவனுடைய நன்னலனுக்கும் எதிராகப் போராடி னவனாகக் காணப்பட்டான். அவன் தனது ஆவி யில் ஏற்பட்ட ஆழ்ந்த துக்கம் நீங்காமல் இருந்த தாலேயே அவனுடைய சரீரம் மிகவும் பாதிக்கப் பட்டிருந்தது. **தேவனுடைய கரம் அவன்மேல் பாரமாயிருந்ததை** அவன் உணர்ந்தான்; அவர் ஒவ்வொரு தருணத்திலும் அவனைத் தடுத்து நிறுத்தினார், அவன் செய்ய நினைத்ததைத் தடைசெய்தார், விரக்தியடையச் செய்தார். அது முதல் அவனுடைய வாழ்க்கையில் எதுவும் சரியாக நடக்கவில்லை. வாழ்க்கையின் சக்கரம் இணைந்து ஓடவில்லை. கவலையில்லாத நாட்கள் மறைந்துபோயின. வாழ்நாட்கள் மழை யில்லாத பாலைவனம்போல எவ்வித முக்கியத் துவமும் இல்லாமல் கவர்ச்சியற்றதாயிருந்தது.

32:5 பாவத்திற்கான மனவருத்தம் இல்லாமல் ஓராண்டுக் காலம் கடந்துவிட்டது. தேவன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த தருணம் தாவீதின் வாழ்க்கையில் ஏற்பட்டது, "நான் பாவம் செய் தேன்" என்னும் மூன்று சொற்களை அவன் சொல் வதற்கு ஆயத்தமாகிவிட்டான். அப்பொழுது புரையேறிய புண்ணிலிருந்து சீழ் வெளிப்படுவது போல அவமானம் நிறைந்த முழுக்கதையும் தெரியவந்தது. இப்பொழுது அதன்மேல் சாயம் பூசி மறைக்கவோ, கடுமையைத் தணிக்கவோ,

கண்டும் காணாததுபோல விட்டுவிடவோ எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை. இறுதியில் தாவீது பாவத்தை அதனுடைய பெயர்சொல்லி அழைக்கிறான் - **"என் பாவம்.. என் அக்கிரமம்.. என் மீறுதல்."** அவன் தன்னுடைய பாவத்தை அறிக்கை செய்தவுடனேயே, கர்த்தர் அவனுடைய **பாவத்தின் தோஷத்தை** மன்னித்ததற்கான உறுதியைப் பெற்றான்.

32:6 அவனுடைய மன்றாட்டுக்கு விடைபெற்ற அனுபவம், இறைமக்கள் யாவரும் கர்த்தரை அவ்விதமாகவே மெய்ப்பித்துக் காட்ட வேண்டுமென்று ஜெபிக்கத் தூண்டுகிறது. கர்த்தரோடு ஐக்கியம் கொண்டவர்களாக வாழ்கிற யாவரும் துக்கமடைந்திருக்கிற நேரத்தில் அதனின்று விடுவிக்கப்படுவார்கள். மிகுந்த **ஜலப்பிரவாகம்** அவர்களை நோக்கி விரைந்து வராது.

32:7 ஒரு சமயத்தில் மனக் கடினத்தோடு, பாவத்துக்காக மனம் வருந்தாமல் இருந்த மனிதன் இப்பொழுது நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான ஆவியைப் பெற்றிருக்கிறான். அவன் வாஞ்சையோடுகூடிய நன்றியுள்ள இருதயத்தோடு தேவனே தனது மறைவிடம் என்றும், உபத்திரவத்திலிருந்து பாதுகாப்பு என்றும், இரட்சணியப் பாடல்களுடன் அவனைச் சூழ்ந்து கொள்கிறவர் என்றும் அறிக்கை செய்கிறான்.

32:8,9 இவ்விரண்டு வசனங்களும் தாவீதின் சொற்களா அல்லது கர்த்தருடைய சொற்களா என்னும் கேள்வி எழுகிறது. இவை தாவீதின் கூற்று என்று கருதி விளக்க முற்படுவோமெனில், அதனைத் திருவாளர் ஜே ஆடம் என்பவரின் சொற்களில் கூறுவோம்: "பாவமன்னிப்பைப் பெற்ற ஒருவர் இயல்பாகவே பிறரிடம் தங்களுடைய அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டு, குறிப்பாக உபத்திரவப்படுகிற மக்களுக்கு ஆலோசனை கூறி உதவி செய்வது அவர் செய்கிற பதிற்செயலாகும்."[28] இரண்டாவது கருத்தை ஏற்று விளக்க முற்படுவோமானால், தாவீதின் மன்றாட்டுக்குக் கர்த்தர் கூறும் விடையாக இவ்வசனங்கள் விளங்குகின்றன எனலாம். வழிநடத்துதலுக்கான உறுதிமொழி மற்றும் இடைவிடாத ஒப்புவித்தலின் தேவை இதில் அடங்கியுள்ளன. பின்மாற்றம் அடைந்த மனிதன் திரும்பி வருகிறபோது, திருத்தந்தை ஏற்பாடு செய்யும் விருந்தாக இது இருக்கிறது. நாம் செல்லுகின்ற பாதையைக் குறித்த அறிவுரை அவருடைய மேற்பார்வையுடன் அருளப்படுகிறது, மேலும் வாழ்க்கையின் ஒவ்வொரு தீர்மானத்திலும் அவருடைய ஆலோசனை வழங்கப்படுகிறது. ஆனாலும் அங்கு ஓர் எச்சரிப்பும் அடங்கியிருக்கிறது. கட்டளை பிறப்பிக்கப்படாத நிலையிலும் முன்னேறிச்செல்ல வேண்டும் என்னும் எண்ணத்தோடு துருதுரு என்றிருக்கும் **குதிரையைப்** போலவும், கட்டளை பிறப்பிக்கப்பட்ட பிறகும் செல்வதற்குப் பிடிவாதமாக மறுத்து நிற்கும் **கோவேறு கழுதையைப் போலவும் இருக்க வேண்டாம்**. இவ்விரண்டு மிருகங்களுக்கும் பணிந்து கீழ்ப்படிவதற்கு வாரும் கடிவாளமும் தேவை. கர்த்தருடைய வழிநடத்துதலை அறிந்து செயல்பட விசுவாசியானவன் மிகுந்த கவனமுள்ளவனாக இருக்க வேண்டும். அதுவே அதனினும் கடினமான ஒழுங்கு நடவடிக்கையைத் தவிர்த்து அவனைச் சீரான பாதையில் வழிநடத்தும்.

32:10,11 தாவீதைப் பொறுத்தவரை, பொல்லாங்கனைக் காட்டிலும் நீதிமான் எல்லாவற்றையும் சிறப்பாகப் பெற்றிருக்கிறான். அவர்களை ஒப்பிடமுடியாது. **துன்மார்க்கரின்** பரம்பரைச் சொத்து **வேதனைகளே**, ஆனால், தாழ்மையுள்ள விசுவாசியோ கர்த்தருடைய கிருபையால் சூழப்பட்டிருக்கிறான். ஆகவே நீதிமான் கர்த்தருக்குள் **மகிழ்ந்து களிகூர** வேண்டும், **ஆனந்த முழக்கமிட** வேண்டும், அதுவே அவனுக்குத் தகுதியானது.

சங்கீதம் 33: புதிய பாடல்

முந்தின சங்கீதத்தின் கடைசி வசனத்தோடு இந்தச் சங்கீதத்தின் முதல் வசனம் சிறப்பான வகையில் இணைப்பைப் பெற்றிருப்பதாகவே தோன்றுகிறது. இவ்விரண்டு வசனங்களிலும் நீதிமான்கள் கர்த்தருக்குள் களிகூர வேண்டுமென்று பாடலாசிரியன் வலியுறுத்துகிறான். நீதிமான் கர்த்தரைப் புகழுவது, அவன் செய்யும் தகுதியான செயல் என்னும் கருத்தைப் பாடலாசிரியன் விரித்துக் கூறுகிறான்.

தீவிரமாகச் செயல்படும் பகைவர்கள், உபத்திரவங்கள், துன்புறுத்தல்கள் ஆகியவை பற்றிய எந்தக் குறிப்பும் இங்கு இடம்பெறவில்லை என்பதை நாம் கவனிக்க வேண்டும். இஸ்ரவேல் அமைதியான சூழலில் பாதுகாப்போடு இருக்கிறது, கர்த்தரே உலகம் முழுவதற்கும் நிறைவான அதிகாரம் படைத்தவராக விளங்குகிறார் என்று அங்கிகரிக்கப்பட்ட நிலை காணப்படுகிறது. இவ்வாறாக இது கிறிஸ்துவின் அரசின் தொடக்கமாகும். அச்சமயத்தில் புறவின எதிர்ப்பு முறியடிக்கப்பட்டு, யாக்கோபின் இக்கட்டுக்காலம் முடிவுக்கு வந்துவிட்டது.

33:1,2 இறைவனைத் தொழுதுகொள்வதற்கான அழைப்பு முதல் ஏழு வசனங்களில் இஸ்ரவேலினிடத்திற்கும் எட்டாவது வசனத்தில் புறவினத்தாரிடத்திற்கும் செல்லுகிறது. மிகவும் இனிமையான மற்றும் நுணுக்கமான இசைக் கருவிகளுடன் இணைந்து துதி செலுத்துதல் மிகவும் செம்மையும் கருத்தைக் கவருகிறதாகவும் இருக்கிறது, பயன்படுத்தப்பட வேண்டிய இசைக் கருவி முக்கியமாக **பத்து நரம்புகளுடைய வீணை** என்பது குறிப்பிடத்தக்கது.

33:3 புதுப்பாட்டு மீட்பின் பாடலாகும். பாவம் மன்னிக்கப்படுதலை (சங். 32) அது தொடர்ந்து வருகிறது. மேலும் அந்த மீட்பானது, கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தால் கழுவப்பட்டவர்கள் அனைவருக்கும் உரித்தானது. ஆனால் இந்தச் சங்கீதமானது மீட்கப்பட்ட இஸ்ரவேலரால் ஆயிரமாண்டு ஆட்சியின் தொடக்கத்தில் மிகவும் சிறப்பான முறையில் பாடப்படும் (வெளி. 14:3).

33:4 கர்த்தருடைய வார்த்தையையும் அவருடைய எல்லாச் செய்கைகளையும் இந்தப் புதுப்பாட்டு கொண்டாடுகிறது. அவருடைய **வார்த்தை** முழுமையான உண்மையும், நீதியும், மாறாததும், நம்பத்தகுந்ததுமாயும் இருக்கிறது. அவருடைய செய்கைகள் எல்லாம் உண்மையோடு செய்யப்பட்டவை. இதனைப் படைப்பில் காணமுடியும் - "விதைப்பும், அறுப்பும், குளிரும் வெப்பமும், மழைக்காலமும் கோடை காலமும், பகலும் இரவும்" இதனைத் தெரிவிக்கின்றன (ஆதி. 8:22). இறைவன் அருளுகிற எல்லாவற்றிலும் கூட இது வெளிப்படுகிறது. - "அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடைபெறும்" (ரோமர் 8:28). அது மீட்பிலும் காணப்படுகிறது - "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்" (1 யோவான் 1:9).

33:5 நேர்மையும் உண்மையும் உள்ளவராக இருப்பது மட்டுமின்றி, இறைவன் நீதியையும் நியாயத்தையும் நிலைநிறுத்துகிறார். ஆனால் கர்த்தருடைய காருணியத்தின் சான்றுகள் எங்கும் இருக்கின்றன.

33:6,7 வானங்களையும் அவற்றின் மின்மினுக்கும் சர்வ சேனையையும், பெரிதான சக்தியைச் செலவழித்தல்ல மாறாக சக்தியை உண்டாக்கும் வார்த்தையாலே இறைவன் உருவாக்கியதிலிருந்து அவருடைய மேன்மை வெளிப்படுகிறது. இவ்வளவு எளிதாகச் செய்து முடித்தவர் பெருங் கடல்களை குறிப்பிட்ட எல்லைகளுக்குள் கட்டுப்படுத்தினார். இவ்விரண்டு வசனங்களும் இஸ்ரவேலை வானங்களின் நட்சத்திரங்கள் என்றும் (ஆதி. 15:5), புறவின நாடுகளைச் சீறிப்பாய்கிற கடல்கள் என்றும் மறைமுகமாகக் குறிப்பிடுகின்றன என்று சிலர் கருதுகிறார்கள். கர்த்தராகிய இயேசுவின் இரண்டாம் வெளிப்பாட்டின் போது அந்த நாடுகள் இறுதியில் குப்பிகளில் அடைத்துவைக்கப்பட்ட கடல்களுக்கு ஒப்பாக விளங்கும்.

33:8,9 அது எதுவாயிருந்தாலும், மனிதர் யாவரும் அவருக்குக் கனத்தைச் செலுத்தும்படிக்கும் ஆழ்ந்த மரியாதை செலுத்தும்படிக்கும் தேவன் மிகப் பெரியவராயிருக்கிறார். அவருடைய வார்த்தை ஒலி ஆற்றலாக இருந்தது, அதுவே பொருளாக மாறிற்று. அவருடைய கட்டளையின் படியே எல்லாப் படைப்புகளும் உருவாயின.

33:10,11 மனித வரலாற்றின் நெடுகிலும், தேவனற்ற இனத்தார்கள் தேவனைத் தடுத்து நிறுத்தவும், அவருடைய மக்களைப் பாழ்படுத்தவும் ஒன்றிணைந்து செயல்பட்டு வருகிறார்கள். மனிதர்களுடைய சிறந்த திட்டங்கள் யாவும் வீணாய்ப் போயின! தேவனுடைய எதிரிகள் போட்ட மிக ஞானமுள்ள திட்டங்கள் யாவும் இறைவனால் இறுதியில் தடைசெய்யப்படுகின்றன. அவர்கள் விரக்தியடைகிறார்கள். அவருடைய நோக்கங்கள் எதுவும் நிறைவேறாமல் தடைபடுவதில்லை. அவருடைய சொல்லே இறுதியானது, அவருடைய திட்டங்கள் நிறைவேறும்.

33:12 ஆகவே, நன்மைகளைப் பெறுவதற்கான வழி தேவனோடு ஒத்துழைப்பதே ஆகும். யெகோவாவைத் தங்களுடைய **தேவனாகக்** கொண்ட இனம் **பாக்கியமுள்ளது.** அதுவே **அவர் தமக்குச் சுதந்தரமாகத் தெரிந்துகொண்ட** மக்கள் கூட்டமாகும்.

33:13-17 விண்ணகத்திலிருந்து கீழ் நோக்கிப் பார்க்கும் கர்த்தர் மனுக்குலத்தைக் குறித்த தெளிவான பார்வையைக் கொண்டிருக்கிறார். அவருடைய பார்வைக்கு மறைவானது ஒன்று மில்லை. செய்யப்படுகிற எல்லாச் செய்கைகளையும் அவர் காண்கிறார், அதனினும் கூடுதலாக, ஒவ்வொரு இருதயத்தின் சிந்தனைகளையும் விருப்பங்களையும் அவர் அறிந்திருக்கிறார். சிலர்

உலகீய ஆயுதங்களைக்கொண்டு போரிடு வதைப் பார்த்து அவர்களுடைய மதியீனத்தைக் கண்டு நகைக்கிறார். அவர்கள் காலாட்படை, கடற்படை, விமானப்படை ஆகியவற்றைச் சார்ந் திருக்கிறார்களேயொழிய உயிருள்ள இறை வனைச் சார்ந்திருப்பதில்லை. மிக நுணுக்கமான திறமை பெற்ற குதிரைப்படையும்கூட அவர் களுக்கு வெற்றியைக் கொண்டுவராது என்பதை அவர்கள் எப்பொழுது கற்கப் போகிறார்கள்?

33:18,19 இரட்சிப்புக்காக தேவனையும், தேவைகளுக்காக அவருடைய கிருபையையும் நம்பியிருக்கிறவர்களை அவர் நோக்கிப்பார்க் கிறார். இவர்களே அவருக்கு மகிழ்வுண்டாக்கு கிறவர்கள். அவர்களை அவர் மிகுந்த கவனத் தோடு நோக்கிப் பார்க்கிறார்.

33:20-22 பாடலாசிரியனும் அவனுடைய குடி மக்களும் எந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் என் பதில் கேள்வி எதுவுமில்லை. அவர்கள் யெகோ வாவைத் தங்களுடைய துணைவராகவும் பாது காப்பாளராகவும் நம்பியிருக்கிறார்கள். அவரு டைய நாமத்தின்மேல் அவர்கள் தங்கள் எல்லா நம்பிக்கையையும் வைத்திருப்பதால் மெய்யான மகிழ்ச்சியை கண்டடைந்திருக்கிறார்கள். அவ ரையே தொடர்ந்து எல்லாவற்றிற்கும் சார்ந்திருக் கிற நிலையில் அவர்கள் அவருடைய நிலையான அன்பென்னும் சூரிய ஒளியில் இடைவிடாமல் குளிர்காய்வதே அவர்கள் செய்யத்தகுந்த செயல்.

சங்கீதம் 34: புதிய பிறப்பின் சங்கீதம்

இச்சங்கீதத்தின் வரலாற்றுப் பின்னணி 1 சாமுவேல் 21 -ஆவது அதிகாரத்தில் இடம்பெற் றுள்ளது. சவுலோடு போர்புரிவதிலிருந்து விடு படும் பொருட்டு **தாவீது** ஆகீஸ் என்னும் பெயர் பெற்ற பெலிஸ்திய அரசனிடம் அடைக்கலம் நாடினான். இப்பாடலின் தலைப்பின்படி அவ்வர சனின் பெயர் **அபிமெலேக்கு** என்பதாகும் (அபிமெலேக்கு என்பது அவனுடைய தனிப்பட்ட பெயர் அல்ல, அது அவன் வகித்த பதவியின் பெயர் என்றே தோன்றுகிறது.) அந்தப் பகைமை கொண்ட அரசன் தன்னைக் கொலை செய்யக் கூடும் என்று அஞ்சிய தாவீது தான் மனநோய் கொண்டவன் போல நடித்தான்; அவன் வாசற் கதவில் கிறுக்கியது மட்டுமின்றி தன்னுடைய தாடியில் எச்சிலை வடியவிடவும் செய்தான். அவ னுடைய தந்திரம் நல்ல பலனைத் தந்தது. அந்தப் பயித்தியக்காரன் அரசனுக்குத் தேவையில்லை, ஆகவே அரசன் தாவீதைத் தன் அரசவையி லிருந்து வெளியேற்றினான், அதன் பிறகு அவன் அதுல்லாம் குகைக்குத் தப்பிச் சென்றான். சோதனை மிகுந்த பாடலாசிரியனின் வாழ்க்கை யில் நடந்த நிகழ்வுகளில் இது வீரச் செயலோ கவர்ச்சிகரமான அதிகாரமோ அல்லவென்பது நிச்சயம். ஆயினும் அவன் இதனைக் கர்த்தர் செய்த வியத்தகு மீட்பின் செயல் என்று சிந்தித்த வனாகப் பின்னோக்கிப் பார்க்கிறான். ஆகவே அவன் அந்நிகழ்வைக் குறித்துக் கொண்டாடும் படி இப்பாடலைப் பாடுகிறான்.

பல நூற்றாண்டுக் காலமாக விசுவாசிகள் 34 -ஆவது சங்கீதத்தை மிகவும் விரும்பிப் படிக்கிறார் கள். ஏனெனில் அவர்கள் கர்த்தரிடம் வைத்த விசு வாசத்தைக் கொண்டு கிருபையால் இரட்சிக்கப் பட்ட தங்களுடைய சொந்த சாட்சியை இப்பாடல் அவ்வளவு அழகாகச் சொல்வளம் மிக்க வகை யில் எடுத்து இயம்புகிறது. நாமும் இப்பாடலை அத்தகைய வெளிச்சத்தில் காண முற்படுவோம்.

34:1 நமக்குப் பாவத்தினின்று இரட்சிப்பை அருளியவருக்கு முடிவற்றபடி நன்றியை நம்மு டைய இருதயத்திலிருந்து ஏறெடுக்கத்தக்க அள விற்கு, அந்த இரட்சிப்பு மிகப்பெரிய மதிப்புடைய ஈவாக விளங்குகிறது. நாம் **எக்காலத்திலும் கர்த்தருக்கு ஸ்தோத்திரம்** செலுத்தினாலும் அதனை அதிகமானது என்று சொல்ல முடியாது. அவருடைய **துதி எப்பொழுதும் நம்முடைய** உதடுகளிலிருந்து பிறந்தாலும் அந்தப் பொருள் பற்றிய பேச்சை நம்மால் சொல்லி முடிக்க முடி யாது. நித்தியம் முழுவதும் தேவனுக்கு மனிதனு டைய நாவு நன்றி செலுத்தினாலும் அது போது மானதாக இருக்காது.

34:2 மனமாற்றம் பெற்ற மனிதன் கர்த்தருக் குள் பெருமைகொள்கிறான். அவன் தன்னுடைய சொந்த நடத்தையிலோ சாதனையிலோ பெருமை கொள்வதில்லை. கிருபையின் நற்செய்தியைப் புரிந்துகொள்கிறபோது, நாம் எல்லாப் பாவங் களையும் செய்திருக்கிறோம் என்றும் கிறிஸ்து இரட்சிப்புக்காக எல்லாவற்றையும் செய்திருக் கிறார் என்றும் அறிவோம். ஆகவே நாம் அவரைக் குறித்தே **மேன்மை பாராட்டுகிறோம்**. இன்னும் பாவப்பிடியில் இருப்பவர்கள், முற்றிலும் இலவச மாக இரட்சிப்பை அருளும் எங்களுடைய சாட்சி யைக் கேட்டு நற்செய்திக்கு இணங்குவார்களா னால், அவர்களுக்கும் எதிர்காலத்தைக் குறித்த நம்பிக்கை உண்டு என்பதை உணர்ந்து மகிழ்ச்சி யோடு விழித்தெழுவார்கள்.

34:3 நல் இரட்சிப்பைப் பெற்ற ஆத்துமா தன்னுடைய மீட்பைத் தனிமையில் கொண்டாடு

வதில் மனநிறைவு அடைவதில்லை. அந்தப் பொருள் மிகவும் சிறப்பு வாய்ந்தது, ஆகவே அவன் தன்னுடைய உடன்பிறப்புகள் அனைவரையும் அழைத்துத் தன்னோடு சேர்ந்து **கர்த்தரை மகிமைப்படுத்தும்படியும்** அவருடைய **நாமத்தை உயர்த்தும்படியும்** வேண்டுகிறான். சில தம்பதிகள் இந்த வசனக் குறிப்பைத் தங்களுடைய திருமண மோதிரங்களில் பதித்து வைத்திக்கிறார்கள்.

34:4 ஒரு பாவியின் ஆத்துமாவின் மேல் தேவனுடைய ஆவியானவர் அசைவாடத் தொடங்குகையில், அவர்தாமே கர்த்தரைத் தேடும்படி தெய்வீக உள்ளுணர்வை அவனுடைய மனதில் பதியச் செய்கிறார். கர்த்தர்தாமே முதலாவது தேடினவர் என்பதை இரட்சிக்கப்பட்ட பாவி பின்னர்தான் உணர்கிறான்! இந்தப் பாடலில் அது கூறப்பட்டிருக்கிறது:

தேடினேன் கர்த்தரை, பின்னரே அறிந்தேன்
நாடியென் அருகினில் வந்தவர் அவரென்று,
பாவிநான் தேடவென் ஆன்மாவை அசைத்தவர்
கூவியே அழைத்தார் பாடியே துதிப்பேன்!
கர்த்தரைக் கண்டவன் நானல்ல, உண்மையது
கர்த்தரே என்னைக் கண்டவர் போற்றுவேன்!

இந்த நாட்களிலும், நாம் அவரைத் தேடுகிறபோது, அவர் பதிலுரைக்கிறார், நம்முடைய எல்லா பயத்திலிருந்தும் விடுவிக்கிறார் - என்னவென்று சொல்ல முடியாத எதிர்காலத்தைக் குறித்த பயம், அறிக்கை செய்யப்படாததால் மன்னிப்பைப் பெறாத பாவத்தோடு இறந்து போனால் என்னவாகும் என்னும் பயம், பெரிய வெள்ளைச் சிங்காசனத்திற்கு முன் நியாயத்தீர்ப்பைப் பெற நிற்பதைக் குறித்த பயம். நாம் கிறிஸ்துவைக் கர்த்தரும் இரட்சகருமாக ஏற்கையில், எல்லாக் குற்றங்களிலிருந்தும் நம்மை விடுதலையாக்கும் சொற்களை அவர் கூறுவதைக் கேட்கிறோம்: "உன்னுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டன, சமாதானத்தோடு போ!"

34:5 ஆனால் இந்த இரட்சிப்பு ஏதோ தனிநபர் உரிமையல்ல - இது எல்லோருக்கும் கிடைக்கக் கூடியது. கிறிஸ்துவை விசுவாசத்தோடு நோக்கிப் பார்க்கிறவர்கள் யாவரும் பிரகாசமடைவார்கள். சினமுற்றோர் மகிழ்ச்சியின் புன்னகையாக மாறுகிறார்கள், மனவழுத்தமும் நம்பிக்கையின்மையும் அடைந்தவர்கள் களிகூருவதற்கான சூழ்நிலை உண்டாயிற்று. கர்த்தரிடம் தம்முடைய வாழ்வை ஒப்படைத்தவர்களில் ஒருவரும் ஒருக்காலும் நம்பிக்கை இழக்கமாட்டார்கள். நம்பும் இருதயத்தை அவர் ஒருபோதும் கைவிடமாட்டார்.

34:6 நம்முடைய ஏழ்மையில் கந்தல் துணி அணிந்தவராக, நம்முடைய தாழ்மையில் உதவியற்றவர்களாக, நம்முடைய இரடசிப்பை நம்மால் சம்பாதிக்க முடியாது என்பதை மகிழ்வுடன் அறிவித்தவர்களாக அவரிடத்தில் வருகிறோம். நம்முடைய முழுநம்பிக்கையை நாம் அவரிடத்தில் வைக்கிறோம். நமது மொழி கீழ்வருமாறு அமைந்துள்ளது:

விலைசெலுத்த வகையற்ற
ஈனனாக அலைந்திட்டேன்,
கொலையுண்டு உயிர்த்தவரைப்
பற்றியான் மீட்படைந்தேன்!

நம்முடைய கதறுதலைக் கர்த்தர் கேட்கிறார். நமது வறுமை அவருடைய அளவற்ற ஆதாரங்களை நோக்கி முறையிடுகிறது. நம்முடைய இடுக்கண்களுக்கெல்லாம் நம்மை நீங்கலாக்கி இரட்சிக்கும்படி அவர் இறங்கி வருகிறார் - நம்முடைய சொந்தக் கைகளினாலே பாவவலையைப் பின்னி அதிலே சிக்கிக்கொண்டிருந்த நம்மை விடுவிக்கிறார்.

34:7 விசுவாசியானவன் இரட்சிக்கப்பட்டது மட்டுமல்லாமல், தொடர்ந்து பாதுகாக்கப்பட்டும் வருகிறான். **கர்த்தருடைய தூதனானவர்,** அதாவது கர்த்தராகிய இயேசு தாமே, **அவருக்குப் பயந்தவர்களைக்** சூழ்ந்திருக்கும் அரண் போல செயல்பட்டு, காணக்கூடிய மற்றும் காண முடியாத எல்லா ஆபத்துகளிலிருந்தும் விடுவிக்கிறார். அவருடைய ஆடுகளில் ஒன்றும் கெட்டுப் போவதில்லை (யோவான் 10:28).

34:8,9 இரட்சகரை அறிந்தவர்கள் அவரைக் குறித்துப் பிறரிடம் பகிர்ந்துகொள்ள வாஞ்சிக்கிறார்கள். சமாரியாவில் இருந்த நான்கு தொழுநோயாளிகளைப் போன்று அவர்கள், "நாம் செய்கிறது நியாயமல்ல, இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள், நாம் மவுனமாயிருந்து பேசாமல் இருக்கிறோம்" (2 இராஜா. 7:9 - விரிவாக்கம் செய்யப்பட்ட வேதம்) என்கிறார்கள். ஆகவே நற்செய்தி மணியோசை ஒலிக்கிறது: **"கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பாருங்கள்; அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனிதன் பாக்கியவான்!"**

மனமாற்றம் பெறாத மனிதனிடம் விடுக்கப்படுகிற உண்மையான அவசர அழைப்பு இது. நாம் காரணங்களை விவரித்துக் கூறலாம், வாதாடலாம், தருக்கம் செய்யலாம், கிறிஸ்தவச் சாட்சி

களை வரிசையில் நிற்கச் செய்யலாம். ஆனாலும் எல்லாவற்றையும் சொன்னாலும் செய்தாலும், ஒருவன் தானே ருசித்துப் பார்க்க வேண்டும். திருவாளர் முர்டோக் கேம்ப்பெல் எழுதுகிறார்:

> நாம் தேவனுடைய உளவாம் தன்மையைக் குறித்து வாதாடலாம். இப்பிரபஞ்சம் இறையருள் தரக்கூடிய புறச்சான்றுகளை எடுத்துரைக்கலாம். ஆனால் அவருடைய அன்பும் சமுகமும் ஒருவருடைய இருதயத்தைத் தொடுகிறபோதே, சொல்லி முடியாத அவருடைய தயவில் அவர் உண்மையாக அதனை அறிவார்.[29]

அதனைத் தொடர்ந்து மனமாற்றம் பெற்றவர்களுக்கான அழைப்பு விடுக்கப்படுகிறது. அது விசுவாச வாழ்க்கைக்கென்று விடுக்கப்பட்ட அழைப்பு. பரிசுத்தவான்கள் தரிசித்து நடக்காமல் விசுவாசித்து நடக்கும்படி அழைக்கப்படுகிறார்கள். மேலும் இறைவனுடைய வியத்தகு, அற்புதமான, அளவில்லாதபடி தேவைகள் யாவும் நிவர்த்தி செய்யப்படும் செயலிடமாய் அழைக்கப்படுகிறார்கள். இதுவே மத்தேயு 6:33 தரும் செய்தியாகும்:

> "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்."

34:10 சில வேளைகளில் **சிங்கக்குட்டிகள்**[30] உணவு இன்றி **பட்டினியாயிருக்கையில், கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது.** ஏனெனில் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நம்முடைய எல்லாத் தேவைகளையும் நிறைவு செய்யும் மிகப் பெரிய வராயிருக்கிறார்.

34:11 தேவ கிருபை நம்மை இரட்சித்து, பாதுகாத்து, பராமரிப்பது மட்டுமின்றி போதிக்கவும் செய்கிறது.

> "ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி, நாம் அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்தபுத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம்பண்ணி, நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது. அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்யப் பக்திவைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார்" (தீத்து 2:11-14).

இவ்வாறாக, **கர்த்தருக்குப் பயப்படுதல்** என்ன கூறுகளைக் கொண்டிருக்கிறது என்பதைப் பற்றிய நடைமுறைப் பயிற்சியைப் பாடலாசிரியன் தன் மக்களுக்குக் கற்பிக்க முன்வருகிறான்.

34:12-15

1. **நாவடக்கம் - பொல்லாப்புக்கும் கபட்டுப்** பேச்சுக்கும் விலக்கிக் காத்துக்கொள்ளுதல்.
2. பிரிந்து வாழுதல் - **பொல்லாத** செயல்களுக்கு விலகி, நற்செயல்களைச் செய்யும்படி தனித்து வாழுதல்.
3. சமாதானமுள்ள மனநிலை - பவுல் கூறினாற்போல, "கூடுமானால் உங்களால் ஆனமட்டும் எல்லா மனிதரோடும் சமாதானமாயிருங்கள்" (ரோமர் 12:18).

பேதுரு தனது மடலில் கூறுகிறார்: "நீங்கள் ஆசிர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி அழைக்கப்பட்டவர்களென்று அறிந்து (பிறரை) ஆசிர்வதியுங்கள்" (1 பேதுரு 3:9). அதன் பிறகு அவர் இச்சங்கீதத்தின் 12 -16 ஆகிய வசனங்களை மேற்கோள்காட்டி, நாம் தீமைக்குத் தீமையையும், உதாசீனத்துக்கு உதாசீனத்தையும் செய்யாமல் பிறரை வாழ்த்த வேண்டும் என்று வலியுறுத்துகிறார். நன்மை வழங்குதல் கர்த்தருடைய தயவுள்ள செய்கையாகும்; **கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கின்றன. அவருடைய செவிகள் அவர்கள் கூப்பிடு தலுக்குத் திறந்திருக்கின்றன** (சங். 34:15).

34:16 இந்த வசனத்தைப் பேதுரு எடுத்தாண்டதன் நிமித்தம், வசனத்தின் ஒரு பகுதியை உறுதி செய்கிறார்:

> **கர்த்தருடைய முகம் தீமைசெய்கிறவர்களுக்கு விரோதமாயிருக்கிறது.**

பேதுரு இவ்வசனத்தின் எஞ்சிய பகுதியை எடுத்தாளவில்லை. அது கூறுவதாவது: **தீமை செய்கிறவர்களுடைய பேரைப் பூமியில் இராமல் அற்றுப்போகப் பண்ண...**

பேதுரு மேற்கோள் காட்டிய பகுதி எல்லாக் காலத்துக்கும் உண்மையாயிருக்கிறது. எஞ்சிய

பகுதி கிறிஸ்து அரசருக்கெல்லாம் அரசராகப் பூமிக்குத் திரும்பும்போது நிறைவேறும்.

34:17 நீதிமான்கள் உடனடியாகக் கர்த்தரிடத்திற்குச் சென்று அவரோடு பேசும்படியான சொல்லிமுடியாத பெருஞ்சிறப்பைப் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் கூப்பிடும் ஒவ்வொரு வேளையிலும் அவர் **கேட்டு, அவர்களுடைய எல்லா உபத்திரவங்களிலிருந்தும்** விடுவிக்கிறார். திருவாளர் பார்னஸ் இங்கு விவரிக்கிறார்: "தேவனை அழைப்பதற்கான, அதாவது ஜெபிப்பதற்கான சிலாக்கியத்திற்கு அனுமதிக்கப்பட்டிருப்பதைக் குறித்து இதுவரை எவரொருவரும் முழுவதுமாக அறிந்து போற்றியதில்லை."

பதினேழாவது வசனத்தை விடுத்து, அடுத்த வசனத்திற்குச் செல்லும் முன், கர்த்தர் நமக்கு எவ்வித உபத்திரவமும் வராதபடி தடுத்து விடுவிப்பதில்லை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அவர் உபத்திரவங்களிலிருந்தும் விடுவிக்கவே செய்கிறார். விசுவாசிகள் உபத்திரவம் வராதபடி காக்கப்படுவதில்லை. மாறாக அவர்களுக்கு மகாவல்லமையுள்ள மீட்பர் இருக்கிறார்! அதுவே மிக முக்கியமான வேறுபாடு.

34:18 தற்பெருமைப்படுபவர்களை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பதைக் கர்த்தர் அறிந்திருக்கிறார். ஆனால் **நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை** அவரால் தடுத்து நிறுத்த முடியாது. நொறுங்குண்ட இருதயத்தைப் பெற்றவர்கள் தம்மிடம் வருகிறதற்கு அவர் எப்பொழுதும் இடம் தருகிறார். மேலும் ஆவியில் நருங்குண்டவர்களை விடுவிக்க எப்பொழுதும் அருகில் இருக்கிறார்.

34:19 ஏற்கனவே குறிப்பிட்டதுபோல, நீதிமான்களுக்குப் பற்பல துன்பங்கள் ஏற்படுகின்றன. சில நாட்கள் துன்மார்க்கர் அடைகிற துன்பங்களைக் காட்டிலும் அதிக துன்பங்களைப் பெறக்கூடிய சந்தர்ப்பங்கள் உண்டாகலாம். ஆனால் உண்மையில் நாம் அடைகிற துன்பங்கள் யாவும் இவ்வுலகத்திற்கு உரியவை. அதிலும் மேலான உண்மை என்னவெனில், நாம் அவற்றைத் தனிமையில் அனுபவிக்க வேண்டியதில்லை, ஏனெனில் நித்திய நண்பர் நம்மோடிருக்கிறார். கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலின் மூலமாக எல்லா இடுக்கண்களிலிருந்தும் முழுவதுமாக இறுதியாக விடுதலை பெறுவோம் என்னும் உறுதியை நாம் பெற்றிருக்கிறோம். அவர் மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்த காரணத்தால், நாமும் ஒருநாள் எழுந்திருப்போம், எக்காலத்திலும் பாவத்திலிருந்தும் நோயினின்றும், வருத்தத்தினின்றும், பாடுகளிலிருந்தும், மரணத்திலிருந்தும் நீங்கலாயிருப்போம்.

34:20 ஆனால் மரணத்திலும்கூட, கர்த்தர் தமது பரிசுத்தவான்களின் சரீரங்களைப் பாதுகாக்கிறார்:

> **அவனுடைய எலும்புகளையெல்லாம் காப்பாற்றுகிறார்;**
>
> **அவைகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை.**

இந்த வசனம் சொல்லுக்குச் சொல் சரியாகக் கர்த்தருடைய மரணத்தில் நிறைவேறியது.

> அவர்கள் இயேசுவினிடத்தில் வந்து, அவர் மரித்திருக்கிறதைக் கண்டு, அவருடைய காலெலும்புகளை முறிக்கவில்லை. அவருடைய எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை என்கிற வேதவாக்கியம் நிறைவேறும்படி இவை நடந்தன. (யோவான் 19:33,36).

இந்நிகழ்வில் நம்முடைய கர்த்தர் பஸ்கா ஆட்டுக்குட்டியின் நிறைவான மெய்ப்பொருளாக விளங்கினார். அந்த ஆட்டுக்குட்டியை பற்றி எழுதியிருப்பதாவது:

> அதில் ஒரு எலும்பையும் முறிக்கக்கூடாது (யாத். 12:46).

34:21,22 கடைசி இரண்டு வசனங்களும் **"குற்றவாளிகளாவார்கள்"** அல்லது **"குற்றஞ்சுமராது"** என்னும் சொற்களைச் சார்ந்திருக்கின்றன. **துன்மார்க்கரைப்** பொறுத்தவரை, தீமை அவர்களை மரணத்திற்குள் தள்ளும், அவர்கள் **குற்றவாளிகளாவார்கள்**. ஆனால் யெகோவாவின் ஊழியக்காரர்கள், தங்களுடைய ஆத்துமாவை மீட்ட ஒருவரைப் பெற்றிருக்கிறார்கள். **அவரை நம்புகிற ஒருவன் மேலும் குற்றஞ்சுமராது.** கிறிஸ்து இயேசுவுக்கு உட்பட்டவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை. கர்த்தருக்கே புகழ்ச்சி உண்டாவதாக! (ரோமர் 8:1).

> மரித்தவர் உயிருடன் எழுந்தார்
> உயிர்த்தவர் விண்ணகம் சென்றார்
> நமக்கென வேண்டுதல் செய்திட
> தந்தையின் வலப்புறம் அமர்ந்தார்!
> அண்ணலின் அன்பின் நிழலில்
> அரியநற் பேற்றினைப் பெற்றேன்
> விண்ணவர் அருகினில் இருக்கையில்
> குற்றஞ் சுமத்துவார் இல்லையே!
>
> – ஹெரோசியஸ் போனார்.

ஆகவே, விசுவாசி இரட்சிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு, இவ்வுலகில் அனைத்துத் தேவைகளும் சந்திக்கப்பட்டு மனநிறைவு பெறுவதுடன், நித்தியத்திலும் அனைத்து நன்மைகளையும் பெறுவான். மறுபடியும் பிறப்பது என்னும் அனுபவம் வியத்தகு நிகழ்வாகும். இதுவே இச்சங்கீதத்தின் கருப்பொருள்.

சங்கீதம் 35: நண்பர்கள் துரோகிகளாக மாறினார்கள்

35:1-3 இப்பகுதி பாடலாசிரியனின் கபடற்ற கற்பனையின் பயனால் எழுந்த மன்றாட்டாகும். அதன்படி தன்னுடைய நண்பர்களாக நடித்து, இப்பொழுது தனக்கு எதிராகக் கொடுஞ்செயல் புரியும் துரோகிகளாக மாறிப் போனவர்களை தேவன்தாமே படைக்கலன்களை முழுவதும் அணிந்து, விரைந்து வந்து பழிவாங்க வேண்டும் என்று தாவீது விண்ணப்பிக்கிறான். கர்த்தர் தமது **கேடகத்தையும் பரிசையையும்** எடுத்துக் கொண்டவராக விரைந்து செயல்படவேண்டும், அவர் தமது **ஈட்டியை** நன்கு குறிபார்த்து வீசி எறிய வேண்டும், பின்னர் தாவீதைப் பார்த்து, 'நான் அவர்களைக் கவனித்துக் கொள்கிறேன், நானே உன்னுடைய இரட்சிப்பாக விளங்குவேன்" என்று சொல்ல வேண்டும்.

35:4-6 கொலை செய்ய வேண்டும் என்று துடித்துக்கொண்டிருந்த மனிதர்கள் வெட்கப்பட்டு இழிநிலையை அடையும்படி பாரபட்சமற்ற நீதி அவர்கள்மேல் செலுத்தப்பட வேண்டும். அவர்களுடைய பேய்த்தனமான சதிச்செயல்கள் தகர்க்கப்பட்டு, தோற்கடிக்கப்பட வேண்டும். அவர்கள் உதவியற்று, **காற்று முகத்தில் பறக்கும் பதரைப்போல** எடையற்றுப் போகவேண்டும்; அவ்வாறு அவர்கள் **கர்த்தருடைய தூதனால்** (கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மனுவுரு எடுப்பதற்கு முந்தைய தரிசனங்களில் ஒன்றில்) இரக்கமின்றி துரத்தப்படவேண்டும். கர்த்தருடைய தூதன் அவர்களைப் பின்தொடர்கிற நிலையில், அவர்களுடைய வழி இருளும் சறுக்கலுமாகப் பனிக்கட்டியைப் போல மாறிப் போக வேண்டும். அது அவர்களுக்கு எதிராகச் செயல்படும் சரிக்குச்சரி பழிவாங்குதல் ஆகும்.

35:7,8 பாடலாசிரியனுக்கு எதிராக அவர்கள் செய்த சதிச்செயல்களுக்கான பொருத்தமான காரணம் எதுவும் இல்லை. ஒரு காட்டுமிருகத்தைப் பிடிக்க முயற்சி செய்வதற்கு ஒப்பாக அவர்கள் செயல்பட்டார்கள். ஆகவே, கர்த்தர் அவர்கள் எதிர்பார்த்திராத நேரத்தில் அவர்கள்மேல் பீரங்கி போன்ற சத்தத்தை இறக்கி, அவர்கள் விரித்த **வலையில்** சிக்கிக்கொள்ளச் செய் வாராக!

35:9,10 அப்பொழுது தாவீது **கர்த்தரில் களிகூர்ந்து, அவருடைய இரட்சிப்பைக்** கொண்டாடுவான். பாதுகாப்பற்றவரை அவர்களுடைய வலிமை மிக்க எதிரிகளிடத்திலிருந்தும், உதவியற்றவரை அவர்களை அழிக்க முற்படுபவர்களிடமிருந்தும் பாதுகாக்கும் ஒப்பற்றவராகக் கர்த்தர் விளங்குகிறார் என்று தாவீதின் அனைத்து உணர்வுகளும் அவனோடு சேர்ந்து அறிக்கை செய்யும்.

35:11-14 பாடலாசிரியனின் ஆழ்ந்த உணர்ச்சி பூர்வமான ஈடுபாட்டை நாம் புரிந்துகொள்ள வேண்டுமானால், இப்பொழுது அவனுக்கு எதிராக சாட்சிகூறும் மனிதர்கள் ஒருகாலத்தில் அவனுடைய நண்பர்களாக இருந்தவர்கள் என்பதை அறிய வேண்டும். இப்பொழுதோ அவர்கள் அவனைக் குறித்து அவதூறாகவும் குற்றமாகவும் பேசுகிறார்கள், ஆனால் அவன் அவர்கள் கூறிய ஏதொன்றையும் அறியான். அவர்களிடத்தில் அவன் காட்டிய எல்லாத் தயவுக்கும், அவர்களுடைய வெறுப்பையே திரும்பப் பெறுகிறான். அவன் தேற்ற இயலாத நிலையில் இருப்பது வியப்பன்று! இதே மனிதர்கள் நோயுற்றிருந்த போது, கதை வேறுவிதமாயிருந்தது. அவர்களுக்காக தாவீது பரிதவித்துக் கலங்கினான். அவனால் உணவும் உண்ண முடியவில்லை. துக்கத்தால் தலைகுனிந்தவனாக, அவன் அவர்களுக்காக மன்றாடி வந்தான் - ஏதோ நெருங்கிய **நண்பனுக்காக** அல்லது **சகோதரனுக்காக** ஜெபிப்பது போல ஜெபித்தான். ஒருவன் தன் **தாய்க்காகத் துக்கிப்பது**போல தாவீது அவர்களுக்காகத் துக்கம் அடைந்திருந்தான்.

35:15,16 ஆனால் பேரிடரும் ஆபத்தும் தாவீதைத் தாக்கியபோது, அவர்கள் பெருமகிழ்வு அடைந்தார்கள். அவர்கள் ஒரு கூட்டமாகக் கூடி அவன் மேல் குற்றஞ்சாட்டினார்கள். அவனுடைய புகழுக்குக் களங்கம் ஏற்படுத்தும்படி அவர்கள் குற்றஞ் சுமத்தியதுமல்லாமல் இடைவிடாமல் வசைமாரிப் பொழிந்தார்கள். மேலும் அவர்கள் தங்களுடைய தவறுகளுக்காக வருந்தாமல் ஓலமிடும் சத்தத்தோடு அவனை ஏளனம் செய்தார்கள், அதே நேரத்தில் தங்களுடைய வெறுப்பை வெளிப்படுத்தும்படி **பற்கடித்தார்கள்.** பொந்தியு பிலாத்து அல்லது ஏரோது மன்னனுக்கு முன்பாகக் கர்த்தராகிய இயேசு நின்றபோது நடந்த நிகழ்ச்சிகளைப் பாடலாசிரியனின் அனுபவங்கள் நம்முடைய நினைவுக்குக் கொண்டுவருகின்றன.

இங்கு காணப்படும் சொற்கள் பல கிறிஸ்து சகித்தவற்றிற்கு மிகவும் பொருத்தமாக விளங்குகின்றன.

35:17,18 அநீதியை நோக்கிப் பார்க்கிற **கர்த்தர் எதுவரைக்கும்** அதற்கு எதிரான செயல்களைச் செய்யாமல் தாமதிப்பார்? கபடற்ற மனிதனை அவனுடைய பகைவர் கொண்டுவருகிற பேரழிவிலிருந்து தப்புவிப்பதற்கும், அவனுடைய **அருமையான** வாழ்வை மனிதச் **சிங்கங்களிலிருந்து** விடுவிப்பதற்குமான நேரம் வந்துவிட்டது.

35:19-21 தாவீதின் எதிரிகள் எவ்விதத் தகுந்த காரணமுமின்றி, அவனுடைய வீழ்ச்சியைக் கண்டு அகமகிழ்வு அடையவும், வெற்றிபெற்ற பெருமிதத்தை வெளிப்படுத்தக் கண் அசைக்கவும் செய்வது ஏளனத்திற்குரிய செயல்களாகும். அவர்கள் சமாதானத்தை விரும்புகிறதில்லை - அவர்கள் செய்ய விரும்புவதெல்லாம், நாகரிகமான சட்டத்திற்குக் கீழ்ப்படிகிற மனிதனுக்கு எதிராகக் குற்றங்களைப் புனைந்து கூறுவதேயாகும். ஏதோ ஒரு சிறிய சறுக்கல் ஏற்படுகையில், **"ஆ, ஆ, ஆ, ஆ!** நாங்கள் முன்னரைத்தது நடந்து விட்டது, நீ அதைச் செய்ததைக் கண்டோம்!" என்கிறார்கள்.

35:22-25 ஆனால், **கர்த்தாவே நீரும் அதைக் கண்டீர்**. மனவேதனை அளிக்கக்கூடிய சீர்குலைவு அனைத்தையும் நீர் கண்டீர். அமைதியான தனியிடத்தில் நீர் உம்மை மறைத்துக் கொள்ளாதீர். **என்னைவிட்டு நீர் தூரமாகப்** போய்விட வேண்டாம். என்னுடைய நேரிய நோக்கத்தை ஆதரிக்கும் **நீர் விழித்திருந்து** தயக்கமின்றி செயல்புரிவதற்குமான நேரம் வந்துவிட்டது. நான் நியாயமானதைச் செய்கிறேன் என்பதை நீர் தெரியப்படுத்த வேண்டுமென்று வாஞ்சிக்கிறேன் - என்னுடைய வீழ்ச்சியை அவர்கள் கொண்டாட விரும்புகிறார்கள், அதை நீர் தடுத்து நிறுத்த வேண்டுகிறேன். அவர்களுடைய விருப்பம் நிறைவேறிவிட்டது, என்னை அழிப்பதில் வெற்றியடைந்துவிட்டார்கள் என்று அவர்கள் நினைத்து மகிழாதபடி தடைசெய்வீராக.

35:26 கர்த்தாவே, நீர் வீழ்கிறதைக் கண்டு மகிழ்கிறவர்கள் முற்றிலுமாக அவமானப்படும்படி நீர் பார்த்துக்கொள்வீராக. என்னை நிந்தித்த மனிதர்கள் அவமதிப்பாலும் **வெட்கத்தாலும்** அணிவிக்கப்படும்படி செய்வீராக.

35:27,28 ஆனால் இறுதியில் நான் குற்ற மற்றவன் என்று வெளிப்படுவதை எதிர்பார்ப்பவர்கள் யாவரும் கெம்பீரித்து மகிழ்வதற்குத் தகுந்த காரணம் இருக்கிறது. உமக்கு ஊழியம் செய்கிறவர்களுடைய நலன் குறித்து நீர் மிகுந்த கவனத்தோடு செயல்படுகிறவராக இருப்பதால், மெய்யாகவே நீர் மகாபெரிய கர்த்தர் என்று அவர்கள் சான்றுபகர்வார்களாக. என்னுடைய நாவும் அமைதியாக இருக்காது; உம்முடைய நீதியையும் நீர் புகழப்படுவதற்குத் தகுதியானவர் என்பதையும் பிறரிடம் எப்போதும் நான் சொல்லிக் கொண்டிருப்பேன்!

சங்கீதம் 36: பெரும் பாவம், மகாபெரிய தேவன்

36:1-4 தாவீதின் உள்ளத்தில் இருந்த தேவ வாக்கு **துன்மார்க்கருடைய** மீறுதல்களை மிகத் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகிறது. பாவி தான் கொண்டிருக்க வேண்டிய எல்லாவித **தெய்வ பயத்தையும்** விட்டுவிடுகிறான். தான் செய்த குற்றங்களை மெய்ப்பிக்க முடியாது என்றும், அதன் காரணமாகத் தன்னை ஒருவராலும் தண்டிக்க முடியாது என்றும் அவன் பெருமை பாராட்டுகிறான். அவனுடைய பேச்சு **அக்கிரமத்தாலும்** வஞ்சகத்தாலும் நிறைந்திருக்கிறது. மரியாதைக்குரிய மற்றும் சட்டத்திற்குக் கீழ்ப்படிந்த வாழ்க்கையை அவன் ஏளனம் செய்கிறான். அவன் உறங்க வேண்டிய நேரத்தில், புதிய சதித்திட்டங்களைத் தீட்டுகிறான்; அதன் பிறகு பொல்லாத வழிமுறைகளைக் கையாளத் தொடங்குகிறான்; பாவ அழைப்புகளுக்கு "சரி" என்று மகிழ்ச்சியோடு ஒப்புதல் தெரிவிக்கிறான்.

36:5 இத்தகைய சீர்கெட்ட நிலையில் பாவி இருக்கிறான், இதற்கு நேர் எதிராகக் **கர்த்தருடைய** முழுநிறைவு விளங்குகிறது. எடுத்துக்காட்டாக, அவருடைய **கிருபை வானங்கள்** வரையிலும் விரிவடைந்திருக்கிறது. திருவாளர் பார்னஸ் எழுதுகிறார்:

> அது மிகவும் உயர்ந்ததாயிருக்கிறது: வானளாவியதாக அது இருக்கிறது, அதாவது மனிதனுடைய மனது புரிந்துகொள்ளக்கூடிய உயர்ந்த இடத்தின் அளவிற்கு உயர்ந்திருக்கிறது. இங்கு சொல்லப்பட்டிருக்கிற கருத்து, அவருடைய கிருபை வானத்தில் வெளிப்பட்டிருக்கிறது என்பதல்ல.. அல்லது அது வானத்தில்தான் தொடங்கியது என்பதும் அதன் பொருளல்ல (அது உண்மையாயிருப்பினும் இங்கு அக்கருத்து சொல்லப்படவில்லை). மாறாக

அது மிகவும் புகழப்படத்தக்க பண்பு பெற்றது. மனிதனுடைய உள்ளம் புரிந்துகொள்ளத்தக்க அளவிற்கு அது உயரமானது.[31]

தேவனுடைய **சத்தியம் மேகமண்டலங்கள் பரியந்தம் எட்டுகிறது,** அதாவது, அதனது நீள அகல உயர அளவுகள் எல்லைக்குட்படாதவை. திருவாளர் A. W. பிங் கூறுகிறார்:

இது எப்படிப்பட்ட சொற்றொடராக இருக்கிறது! "உம்முடைய உண்மை மேகமண்டலங்கள் வரை விரிவடைந்திருக்கிறது." தேவனுடைய மாறாத சத்தியம் வரையறைக்குட்பட்ட புரிந்து கொள்ளும் திறனுக்கு அப்பாற்பட்டதாயிருக் கிறது. தேவனைப் பற்றிய யாவும் மேன்மை யானவை, மிகப் பரந்தவை, ஒப்பிடக் கூடா தவை. அவர் ஒருபோதும் மறப்பது இல்லை, தவறுவதில்லை, இடறலடைவதில்லை, தாம் கூறியவற்றை நிறைவேற்றாமல் இருப்ப தில்லை. கர்த்தருடைய ஒவ்வொரு தீர்க்க தரிசனமும் வாக்குறுதியும் உரைக்கப்பட்ட வண் ணம் மிகத் துல்லியமாக நடைபெறுகிறது. ஒவ்வொரு உடன்படிக்கையின் கடமையையும் நிறைவேற்றுகிறார். மேலும் அச்சுறுத்தலையும் சரிசெய்கிறார். ஏனெனில், "பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல; மனம் மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல; அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரோ? அவர் வசனித்தும் நிறை வேற்றாதிருப்பாரோ?" (எண். 23:19). ஆகவே விசுவாசி வியந்து போற்றுகிறான், "அவரு டைய இரக்கங்களுக்கு முடிவில்லை. அவை காலைதோறும் புதியவை; உமது உண்மை பெரிதாயிருக்கிறது" (புல. 3:22,23).[32]

36:6 தேவனுடைய **நீதி,** அவர் உண்டாக்கின **மகத்தான பர்வதங்கள்போல** நிலையானதும், அசைக்கக் கூடாததும் முழுவதும் சார்ந்திருக்கத் தக்கதுமாக விளங்குகிறது. சரியானதைச் செய் வதற்கு அவரை எப்போதும் நாம் சார்ந்திருக்க முடியும். இது முழுமையாகச் சிலுவையில் வெளிப்படுத்தப்பட்டது. பாவம் தண்டிக்கப்பட வேண்டுமென்று தேவனுடைய நீதி கோருகிறது. நாம் நம்முடைய பாவங்களுக்காகத் தண்டிக்கப் பட வேண்டுமென்றால், நாம் நித்தியமாக அழிந்து போவோம். இதன் காரணமாகவே தேவனுடைய நற்பேறுமிக்க குமாரன் நம்முடைய பாவங் களைத் தம்மேல் ஏற்றுக்கொண்டார். ஆகவே, தேவன் தம்முடைய குமாரன் மீது நம்முடைய பாவங்கள் சுமத்தப்பட்டிருந்ததைக் கண்டபோது அவருடைய நியாயத்தீர்ப்பின் பெருவெள்ளத்தை அவர்மீது பொழியச் செய்தாரேயொழிய, தமது நீதியை வளைந்து கொடுக்கவில்லை. இப் பொழுது, அதன் விளைவாகத் துன்மார்க்கரான பாவிகளை இரட்சிக்க தேவனுக்கு அடிப்படை உரிமை இருக்கிறது - தகுதியான பதிலாள் மூல மாகத் தண்டனை செலுத்தித் தீர்க்கப்பட்டு விட்டது.

இறையரசின் நிறைவான நீதியினை
மறையவரின் செங்குருதி நிறைவேற்ற,
கண்டறிந்தோம் உயர்நீதி நெடுமரத்தில்
அகமகிழ்ந்தோம் மகிமைநிறை கிருபையிலே!

தேவனுடைய **நியாயங்கள் மகா ஆழங் களைப்** போல இருக்கிறது. அவருடைய கட்டளை கள், தீர்மானங்கள், எண்ணங்கள், திட்டங்கள் யாவும் வியத்தகு வகையில் ஆழமானவையாக வும், புரிந்துகொள்வதற்குக் கடினமானவையாக வும், ஞானமுடையவையாகவும் உள்ளன. தேவ னுடைய இவ்வியல்புகளைக் குறித்து ஆழ்ந்து சிந்தித்த பவுல் வியந்து போற்றுகிறார்: "ஆ, தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாத வைகள், அவருடைய வழிகள் ஆராயப்படாத வைகள்!" (ரோமர் 11:33).

"கர்த்தாவே, மனிதரையும் மிருகங்களை யும் காப்பாற்றுகிறீர்." இது தற்காலிகக் காப் பாற்றுதல் ஆகும் - இது தேவன் தமது படைப்பு களைப் பாதுகாக்கும்படி செய்திருக்கும் ஏற்பாடு ஆகும். இது எவ்வளவு பெரிய கருணைச் செயல்! இத்தனை மனிதர்களையும், மிருகங்களையும் பறவைகளையும், மீன்களையும் பாதுகாக்கும்படி அவர் அக்கறை கொண்டிருப்பது எவ்வளவு பெரிய செயல் என்பதை எண்ணிப்பாருங்கள். மனிதனைப் பொறுத்தவரை, அவனுடைய தலை முடியை எண்ணிக் கணக்கிட்டிருக்கிறார். மதிப் பற்ற குருவியைப் பொறுத்தவரை, விண்ணகத் தந்தையின்றி அவற்றில் ஒன்றுகூடத் தரையில் விழுவதில்லை!

36:7 மனிதன் தன்னுடைய வாழ்வில் தேவனு டைய **கிருபையைக்** காட்டிலும் மேலானது எதை யும் பெறுவதில்லை. அது நித்தியமானது, ஒப்பற் றது, அளவிட முடியாதது, காரணமின்றி கிடைக் கப்பெற்றது, மாற்றமடையாதது. அதிலிருந்து இறைமக்களை எதுவும் ஒருக்காலும் பிரிக்க

முடியாது. கி.பி. 1743 -இல் திருவாளர் ஜான் பிரைன் கீழ்வருமாறு எழுதினார்:

> இறைவனுடைய முடிவில்லாத அன்பை எந்த வொரு அன்பினாலும் முழுவதுமாக விவரித் துக் கூறவியலாது. எந்தவொரு மனிதனாலும் அதை முழுவதுமாகப் புரிந்துகொள்ளவும் முடியாது. ''அந்த அன்பு அறிவுக்கெட்டாதது'' (எபே. 3:19). தெய்வீக அன்பைக் குறித்து வரை யறைக்குட்பட்டே சிந்திக்கிற மனது மிகவும் விரிவாகக் கருத்துக்களை வழங்கினாலும், அதனுடைய உண்மையான இயல்புக்கு எல்லை யற்ற அளவு தாழ்வானதாகவே காணப்படும். இறைவனுடைய தயவைக்குறித்து நாம் எந்த அளவிற்கு மிக மேன்மையான கருத்துக் கொண்டிருந்தாலும் அது அதனைக் காட்டிலும் மேலானது; பூமியிலிருந்து வானமும் கூட அந்த அளவிற்கு உயரமானது அல்ல. எதிர்த்து வரும் மலைகள் போன்ற தடைகளைக் காட்டி லும் அதிகமாக உயர எழுந்து வரும் கடலைப் போன்றதாக அது விளங்குகிறது. அதில் விருப்ப முடையவர்கள் அனைவரையும் நோக்கி, தேவையான எல்லா நன்மைகளும் பாய்ந்து வருகிற நீரூற்று போல அது விளங்குகிறது.[33]

இதன் காரணமாகவே **மனுபுத்திரர்** அடைக் கலமாக அவருடைய **செட்டைகளின் கீழ் வந்த டைகிறார்கள்**. எல்லா மனிதர்களும் தேவனு டைய அன்பின் பாதுகாப்பை அனுபவிப்பதைத் தெரிந்துகொள்ளவில்லை என்பது வருத்தத்திற் குரிய நிலை. ஆனால் அது எல்லோருக்கும் உரிய சலுகை என்பதில் ஐயமில்லை. மேலும் எல்லா இனத்தையும், வகுப்பையும், பண்பாட்டை யும் சேர்ந்த மக்கள் இளைப்பாறுதலையும், ஊட் டத்தையும், பாதுகாப்பையும் ஒப்பற்ற செட்டை களின் கீழ் கண்டடைந்திருக்கிறார்கள்.

36:8 அங்கே பாதுகாப்பு மட்டுமின்றி மிகுதி யான அருட்கொடையும் உள்ளது. **"உமது ஆல யத்திலுள்ள சம்பூரணத்தால் திருப்தியடை வார்கள்; உமது பேரின்ப நதியால் அவர்கள் தாகத்தைத் தீர்க்கிறீர்."** அளவிலும் தரத்திலும் கர்த்தருடைய வீட்டில் கொடுக்கப்படும் உண விற்கு வேறு எந்த உணவு ஈடாகும்? மேலும், அது தரும் இன்பம் வேறு எந்த உணவில் கிடைக்கும்? கிண்ணம் நிறைய வருத்தத்தையும், ஆறு நிறைய இன்பத்தையும் இறைவன் தருவதாகத் திருவாளர் F. B. மேயர் குறிப்பிட்டார்!

36:9 கிறிஸ்துவே வாழ்வின் **ஊற்றாக** அல்லது ஆதாரமாக விளங்குகிறார். "அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனிதருக்கு ஒளியாயிருந் தது" (யோவான் 1:4). அந்த **வெளிச்சத்திலே வெளிச்சம் காண்கிறோம்**. இயற்கையான வெளிச் சம் பொருட்களின் உண்மையான நிலையை வெளிப்படுத்துவதுபோல, தேவனுடைய வெளிச் சம் அவர் காண்கிற விதமாக நம்மையும் காணச் செய்கிறது. ஆவிக்குரிய உண்மைகளையும், உல கத்தையும், பிறரையும், நம்மையும் குறித்துச் சரி யான மதிப்பீடு செய்யும்படி அது உதவி செய்கிறது.

> இயற்கைக் காட்சிகளை ஓவியங்களாகத் தீட் டும் புகழ்பெற்ற கலைஞர் கோரோட் என்பவர் ஒருமுறை, ''அழகான இயற்கைச் சூழலில் நான் இருக்கும்போது, என்னுடைய ஓவியங் களை எண்ணிச் சினமடைகிறேன்'' என்று கூறினார். தன்னுடைய பணியரங்கில் மன நிறைவு பெற்ற அந்தக் கலைஞர் இயற்கையின் மகிமைக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்த வேண்டியதாயிற்று. இவ்வுலகத்தின் வெளிச்சத் தில் நாம் நம்மை மதிப்பீடு செய்கிறபோது, நாம் மனநிறைவு அடைவதற்கான காரணங்களை எளிதாகக் கண்டடைகிறோம். ஆனால் கர்த்தரு டைய வெளிச்சத்தில் நம்மை மதிப்பீடு செய்தல், அதாவது, தெய்வீக அளவுகோலில் நம்மை அளப்பது, நம்முடைய பெருமையை அவ மானப்படுத்துவதாகக் காணப்படும் (தெரிந் தெடுத்த சேகரிப்புகள்)

36:10,11 இறைவனுடைய நிறைவுகளின் இமாலய உச்சியைச் சென்றடைந்த ஈசாயின் மகன் மனிதனுடைய தேவை என்னும் பள்ளத்தாக்குக் குத் திரும்பிவந்து, **துன்மார்க்கரிடத்திலிருந்து** தொடர்ச்சியான பாதுகாப்புக்காக மன்றாடினான். பதினோராவது வசனம் 10 -ஆவது வசனத்தை விளக்கிக் கூறுகிறது. இறுமாப்புடைய மனிதரின் கால்களை வீழ்த்தி, துன்மார்க்கரின் கைகளி னின்று தொலைதூரத்திற்கு விலக்கி, தேவன் தமது கிருபையை வெளிப்படுத்தி தன்னை விடு விக்கவேண்டும் என்று தாவீது தேவனிடத்தில் ஏறெடுக்கிற மன்றாட்டின் வகை இங்கு சொல்லப் பட்டுள்ளது.

36:12 அவனுடைய மன்றாட்டு கேட்கப்பட்டது. அக்கிரமக்காரன் வீழ்ச்சியடைவதையும், அவன் மீண்டும் எழுவதற்கு ஆற்றல் இல்லாதவனாகக் கிடப்பதையும் பாடலாசிரியன் காணும்படி அவனு டைய விசுவாசமே அவனைத் திடப்படுத்தியது.

சங்கீதம் 37: மெய்யான சமாதானம்

கடவுள் பற்று அற்றவர்களும், பழி பாவத்திற்கு அஞ்சாதவர்களுமாகிய மனிதர்களாலே தாவீது தனது வாழ்நாட்காலத்தில் மிக அதிகமாகத் துன் புறுத்தப்பட்டான். பொல்லாத சதித்திட்டங்களா லும், நஞ்சு நிறைந்த நாவுகளாலும் நாம் தாக் கப்படுகையில் எவ்வாறு பதிற்செயல் புரிய வேண் டும் என்று அவன் இப்பொழுது வயது முதிர்ந்த வனாகச் சில ஆலோசனைகளைக் கூறுகிறான்.

37:1,2 முதலாவது **பொல்லாதவர்களைக் குறித்து** நாம் **எரிச்சலடைவதற்கு** இடங்கொடுக் கக் கூடாது. இரவில் படுத்திருக்கும் வேளையில் நாம் நமக்கு நேரிட்ட கொடுஞ்செயல் நிகழ்வை முழுவதுமாக மீண்டும் நினைத்துக் கொண்டிருக் கும் ஆபத்து இருக்கிறது. முதலாவது அவர்கள் என்ன சொன்னார்கள் என்றும் என்ன செய்தார் கள் என்றும் எண்ணிப்பார்ப்போம், தொடர்ந்து நாம் என்ன பதில் கூறினோம் என்பதை நினைப் போம், பிறகு அவர்கள் மீது என்ன கொடிய சொற் களைச் சாடியிருக்க வேண்டும் என்று நினைத்துப் பார்ப்போம்! அப்பொழுது நாம் உண்ட உணவைச் செரிப்பதற்காகச் சுரந்த நீர்கள் அமிலமாக மாறி, நம்மைப் புரட்டியெடுக்கும்! எப்பொழுது தூக்கம் வருமோ என்று நாம் தவிப்போம்! நம்முடைய எரிச்சல் மற்றவர்களையல்ல, நம்மையே பாதிக் கிறது. வேறு எந்த பயனையும் அது விளைவிக்கிற தில்லை. அதை நாம் செய்யக் கூடாது!

நாம் வேறு எதைச் செய்தாலும், அநீதி இழைப்பவர்கள் மேல் **பொறாமைகொள்ளக்** கூடாது! இந்தப் பூமிதான் அவர்கள் பெற்றிருக்கிற ஒரே பரலோகம். அவர்களுடைய செயலுக்குத் தக்கதாக அவர்கள் பெறுகிற அறுவடை விரை வாகக் கீழே விழத்தள்ளி செதுக்கிவிடும், அவர் களுடைய கவர்ச்சிமிக்க வளர்ச்சி மறைந்து **வாடிப் போவார்கள்**.

37:3 அச்சித்திரத்தின் எதிர்மறையான அறி வுரைகள் - அவர்கள்மீது எரிச்சல் அடையக்கூடாது, அவர்களைப் போல ஆகவேண்டும் என்று நினைக் கக்கூடாது. அதன் ஆக்கபூர்வமான அறிவுரை: முதலாவது, **கர்த்தரை நம்பி நாம் நன்மைசெய்ய** வேண்டும் என்பதேயாகும். எல்லாம் சரியாகவே நடக்கும் என்னும் மகிழ்ச்சி தரும் அல்லது உண் மைக்குப் புறம்பான நம்பிக்கை அல்ல இது. மாறாக, தீயவர்களைத் தண்டித்து நீதிமான்களுக்குப் பரிசுகளைத் தருவதாக வாக்குரைத்த தேவனிடத் தில் கொண்டிருக்கும் ஆழமான நிலைத்த நம்பிக் கையையே இது குறிக்கிறது. அவருடைய சொற் கள் ஒருக்காலும் தவறுவதில்லை. நேர்மையான வர்கள் உண்மையாகவே **தேசத்தில் குடியிருந்து** பாதுகாப்பை அனுபவிப்பார்கள். பேய்களாலோ மனிதர்களாலோ கடுமையாகத் தாக்கப்பட்டா லும், கிறிஸ்துவின் ஆடுகளில் ஒன்றும் கெட்டுப் போவதில்லை (யோவான் 10:27-29). கிறிஸ்துவி னிடத்தில் நம்பிக்கை வைத்திருப்பவர்களுக்குப் பிதாவின் வீட்டில் குடியிருப்பு வாக்குரைக்கப்பட் டுள்ளது (யோவான் 14:1-6).

ஜான் வெஸ்லி ஒருமுறை தன் நண்பரும் பிர சங்கியாருமான சாமுவேல் பிராட்பர்ன் என்பாருக் குப் பண உதவி அனுப்பினார். ஐந்து பவுண்ட் பணத் தாளை உடன் வைத்து, அவர் இவ்வாறு எழுதினார்: "அன்பான சாமுவேல்: கர்த்தரை நம்பி நன்மை செய்யுங்கள்; அவ்விதமாகவே உங்கள் தேசத் தில் குடியிருங்கள், உண்மையாகவே உங்களுக் குத் தேவையான உணவால் நிறைவடைவீர் கள்." தன்னுடைய நன்றியைத் தெரிவித்து நண் பர் பிராட்பர்ன் பதில் எழுதினார், "நீங்கள் மேற் கோளாக எழுதிய திருமறைப் பகுதியின் அழகால் நான் அவ்வப்போது கவரப்பட்டிருக்கிறேன். ஆனால் இதுகாறும் இவ்வளவு பயனுள்ள விளக்கத்தை அப்பகுதியில் நான் கண்டதில்லை என்று நான் சொல்லியே ஆக வேண்டும்."

37:4 கர்த்தருக்கென்று ஒரு குறிப்பிட்ட ஊழி யத்தைச் செய்ய நீங்கள் மிகுந்த ஆவலுடன் இருப்பதாக வைத்துக்கொள்வோம். அவரே உங் களை நடத்துகிறார் என்று நம்பிக்கையோடு இருக்கிறீர்கள், உங்களுடைய ஒரே விருப்பம் அவரை மகிமைப்படுத்த வேண்டும் என்பதே யாகும். எனினும் வலிமையுள்ள பகைவன் உங்க ளுடைய பாதையின் ஒவ்வொரு திருப்பத்திலும் தடைக்கற்களைப் போட்டு எதிர்த்து நிற்கிறான். இப்படிப்பட்ட சூழ்நிலையில் நீங்கள் என்ன செய் வீர்கள்? இதற்கான விடை, அவர் ஏற்றகாலத்தில் **உங்கள் இருதயத்தின் வேண்டுதல்களை உங்களுக்கு அருள்செய்வார்** என்று அறிந்து, **கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாக இருப்பதே** ஆகும். நீங்கள் எதிர்த்துப் போரிட வேண்டிய அவ சியம் இல்லை. "யுத்தம் உங்களுடையதல்ல, தேவ னுடையது" (2 நாளா. 20:15). "கர்த்தர் உங்களுக் காக யுத்தம் பண்ணுவார்; நீங்கள் சும்மாயிருப்பீர் கள்" (யாத். 14:14).

37:5,6 ஒருவேளை நீங்கள் சொல்லாததைச் சொன்னதாகக் கூறுவார்கள், தவறாகக் குற்றம் சுமத்துவார்கள் அல்லது அவதூறாகப் பேசுவார்

கள். அந்தக் குற்றச்சாட்டுகளில் ஏதோ சிறிதளவு உண்மை இருக்குமென்றாலும், அவற்றை ஒப்புக் கொள்வது கடினமல்ல. ஆனால் அவை முழு வதும் பொய், பகைமை எண்ணத்தால் உண்டா னவை. நீங்கள் என்ன செய்ய வேண்டும்? எல்லா வற்றையும் **கர்த்தரிடத்தில் ஒப்புவிக்க** வேண்டும். அவற்றின் பாரம் முழுவதையும் அவர்மேல் வைத்து விடவேண்டும். உங்களுக்காக அவர் செயல்புரி வாராக; அப்பொழுது நீங்கள் நேர்மையானவர் என்பது வெளிப்படுத்தப்படும். நீங்கள் குற்றவாளி இல்லை என்பதை எல்லோரும் அறிவார்கள். திரு வாளர் பார்னஸ் கூறுகிறார்:

> உங்கள் மீது பழிசாற்றப்பட்டு, சிறிது காலம் உங்கள் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படும் வகையில் தாக்கப்படுவீர்கள் எனில், உங்களால் எதிர்கொள்ள இயலாதபடி பொல்லாத மனிதர் களின் தந்திரச் செயல்களால் நிந்திக்கப்படுவீர் கள் எனில் – அச்சூழ்நிலையில் நீங்கள் உங் கள் வழக்கைக் கர்த்தரிடத்தில் முறையிடுவீர் களானால், அவரே உங்களுடைய நற்பெயரைக் காப்பாற்றுவார். அந்தக் களங்கம் நீங்கும்படி செய்வார். உங்களுடைய நற்பெயரும், நடத்தை யின் நோக்கங்களும் மேகம் மறைக்காத சூரிய னைப் போலத் தெளிவாகக் காணப்படும்.[34]

37:7,8 உங்களுடைய வழியைக் கர்த்தரு டைய முன்னிலையில் வைத்த பிறகு, அவரிடத் தில் நம்பிக்கையாயிருப்பதே நீங்கள் செய்ய வேண்டிய அடுத்த செயல் ஆகும். அவர் உங்க ளுடைய பாரங்களைச் சுமப்பதால், நீங்களும் அவற்றைச் சுமக்க வேண்டியதில்லை. பெரும் பாலான நேரங்களில் நாம் அவ்வாறுதான் செய்கி றோம். நம்முடைய கவலைகளை நாம் தயக் கத்தோடேயே அவர்மேல் வைக்கிறோம், பின்னர் உடனடியாகத் திரும்பவும் நம்மேல் ஏற்றுக் கொள்கிறோம்.

வெள்ளமெனக் கவலைகள் சூழுகின்ற வேளையில்
'என்மேல் வைத்திடு' என்கிறார் இயேசு,
உள்ளத்தில் நம்பிக்கை குறைந்திடும்போது
'துணிவுடன் இருந்திடு' என்கிறார் கனிவுடன்!
ஆயினும்,
எதிர்பாரா திருப்பங்கள் எழுகின்ற வேளையில்
மதியீனன் போலச் செயல்படுகின்றேன்
புதிர்போலத் துன்பங்கள் வருகின்றபோது
சுமைகளைச் சுமந்து அலைகின்றேனே!

– T. பெய்ர்ட்

"அவருக்குக் காத்திரு." விசுவாசியின் வள மைக்கான ஆதாரங்கள் கர்த்தரிடத்தில் இருப்ப தாக மீண்டும் மீண்டும் சொல்லப்பட்டிருப்பதைக் கவனியுங்கள்:

கர்த்தரிடத்தில் நம்பிக்கையாயிரு (வச. 3)

கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு (வச. 4)

உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவி (வச. 5)

கர்த்தரை நோக்கி அமர்ந்திரு (கர்த்தரிடத் தில் இளைப்பாறு) (வச. 7)

கர்த்தருக்குக் காத்திரு (வச. 7)

சிலவேளைகளில் நாம் செய்வதற்கு மிகவும் கடினமான செயல் கர்த்தருக்குப் பொறுமையோடு காத்திருப்பதேயாகும். காத்திருக்கும் செயலை நாம் சரியாகச் செய்வதில்லை. ஆனால் தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று மெய்யான விசுவா சம் முழு நிச்சயமாய் நம்பி காத்திருக்கிறது (ரோமர் 4:21).

இரண்டாவது முறையாக "எரிச்சலடையாதே" என்று தாவீது கூறுகிறான். வலியுறுத்திக் கூற வேண்டிய தேவையறிந்து திரும்பவும் சொல்லப் பட்டதென்பதே உண்மை. நாம் நடத்தப்படும் விதத்தைக் குறித்து எரிச்சலடையக் கூடாது என்று தீர்மானம் செய்த பிறகும், நாம் மறுபடியும் அங்கு சென்று நம்முடைய மனதில் மண்ணை வாரி எங்கும் சிதறடிக்கிறவர்களாக இருக்கி றோம். இது நம்மை நாமே தோற்கடிக்கிற, இடர் விளைவிக்கிற செயல். பொல்லாத மனிதன் தன் வழிகளில் வெற்றியைப் பெற்றாலும், அவன் தன் னுடைய தீவினைகளைச் செயல்படுத்துவதில் வெற்றிபெற்றாலும், கிறிஸ்தவன் மனக்கலக்கம் அடையவோ, கடுஞ்சினமடையவோ, மனக்கசப் படையவோ, பகைமை கொள்ளவோ, வெறுக் கவோ கூடாது. இவ்வித மனப்பான்மையை நம்முடைய உள்ளங்களில் நாம் வளர்ப்போ மென்றால், இறுதியில் அவை வன்முறையான சொற்களை வெளிப்படுத்தவும் செய்கைகளைச் செயல்படுத்தவும் நம்மை ஏவிவிடும். பின்னர் நாமே குற்றவாளிகளாகக் காணப்படுவோம்.

37:9-11 பூமியில் நடக்கும் எல்லாத் தவறு களும் சரிசெய்யப்படும் நாள் வரப்போகிறது. அந் தச் சமயத்தில் **பொல்லாதவர்கள் அறுப்புண்டு போவார்கள்**, நம்பிக்கையுள்ள பரிசுத்தவான் கள் வாக்குரைக்கப்பட்ட எல்லா ஆசிர்வாதங் களையும் பெற்றிருப்பார்கள். பொல்லாதவர்கள் கண்களுக்குப் புலப்படாமல் மறைந்து போகிற

காலம் வெகு தொலைவில் இல்லை. அவர்கள் வழக்கமாக இருக்கும் இடங்களுக்கு நீங்கள் சென்று உற்று விசாரித்துப் பார்த்தாலும் அவர்களைக் காண முடியாது, உங்களுடைய தேடுதல் வீணாகவே போய்விடும்! அந்நாளில் **சாந்த குணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரித்து,** முன்னிராத அளவு வளம் தருகின்ற உலகின் நன்மைகளை அனுபவிப்பார்கள். அந்நாள் என்று வரும்? இரட்சகர் மேகங்களுக்கு ஊடாக இறங்கிவந்து, தமக்காகக் காத்திருப்பவர்களை அவர்களுடைய விண்ணக வீட்டுக்கு அழைத்துச் செல்லும்போது அதாவது, திருச்சபை வரலாற்றின் ஒரு பங்காக அது நிறைவேறும். விசுவாசிகளான இஸ்ரவேலின் மீதியானவர்களையும் புறவின தேசங்களையும் பொறுத்தவரையில், கர்த்தராகிய இயேசு தம்முடைய எதிரிகளை அழித்து, சமாதானம் நிறைந்த ஆயிரமாண்டு ஆட்சியை நிறுவுவதற்காகத் திரும்பி வருகின்ற தருணத்தில் அது நிறைவேறும். இந்த மகிமை நிறைந்த நாளை எதிர்நோக்கியவராக இயேசு தமது மலைப்பிரசங்கத்தில் கூறுகிறார்:

“சாந்தகுணமுள்ளவர்கள்
பாக்கியவான்கள்;
அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்
கொள்வார்கள்” (மத். 5:5)

37:12,13 இதற்கிடையே ஏமாற்றுபவர்கள், பணம் பறிப்பவர்கள், ஒடுக்குகிறவர்கள் தேவனுடைய பிள்ளைகளுக்கு எதிராகச் சதித்திட்டம் தீட்டுகிறார்கள். கர்த்தரிடத்தில் அன்புகூருகிற மக்களுக்கு எதிராக அவர்கள் கசப்பு நிறைந்த பகைமையை வெளிப்படுத்துகிறார்கள். அவர்கள் தங்களுடைய பற்களைக் கடிப்பதால் எழுகின்ற ஓசையைக் கேட்டு யெகோவா எரிச்சலடைவதில்லை. நம்முடைய பகைவரை நாம் காண்கையில் நாமும்கூட அதே விதமான ஆர்வமற்று விலகிச் செல்லும் மனப்பான்மையோடு செயல்பட வேண்டும். சின்னத்தனமான மனிதர்கள் உள்ள உலகை விடுத்து நாம் விலகிச் செல்ல முடியும் என்று ஒருவர் கூறினாற்போல இதுவுமுள்ளது.

37:14,15 “எப்போதும் உண்மை தூக்குமேடையிலும், தவறு அரியணையிலும் இருப்பது” போன்று அவ்வப்போது தோன்றுகிறது. துன்மார்க்கர் படைக்கருவிகளை நல்லமுறையில் அணிந்தவர்கள் போலவும், நன்கு பயிற்சி பெற்றவர்கள் போலவும் காணப்படுகிறார்கள். அவர்களோடு ஒப்பிட்டுக் காணும்போது, நீதிமான்கள் ஆயத்தமற்றவர்களாகவும், தந்திரத்தால் தோற்கடிக்கப்பட்டவர்களாகவும் இருக்கிறார்கள். ஆனால் நன்னெறி சார்ந்தவற்றில் சில மாற்றத்திற்கு இடமளிக்காத சட்டங்கள் உள்ளன. அவற்றை மீறுபவர்கள் முடிவில் அதிக இடர்ப்பாட்டுக்குள்ளாவார்கள். ஒருநாளில் பாவங்கள் கேடான நிலைக்குக் கொண்டுசெல்லுவது நிச்சயம். மனிதர்கள் தங்களுடைய பாவங்களுக்கு விடையளிக்காமல் தப்பிக்க முடியாது. தன்வினை தன்னைச் சுடும் என்னும் பழமொழி எப்பொழுதும் செயல்பட்டுக் கொண்டிருக்கும்: **“அவர்கள் பட்டயம் அவர்களுடைய இருதயத்திற்குள் உருவிப்போம்.”** போர்க்கருவிகள் அவர்களுக்குத் தேவையான நேரத்தில் பயனளிப்பதில்லை: **“அவர்கள் வில்லுகள் முறியும்.”**

37:16 பரிசுத்தவான் கர்த்தரைப் பெற்றிருக்கிறான், பாவியினிடத்தில் அவர் இல்லை, ஆகவே **நீதிமானின்** சிறிதளவு உடைமைகள் **அநேக துன்மார்க்கருக்குள்ள திரட்சியான செல்வத்தைப் பார்க்கிலும்** நல்லது. எபிரெயர் மடலின் ஆசிரியர், கிறிஸ்துவுக்குள் விசுவாசி பெற்றிருக்கிற ஒப்பிடவியலாத செல்வத்தைப் பற்றிய ஆவணத்தை எழுதிய பிறகு, வஞ்சப் புகழ்ச்சியாக எழுதுகிறார்: “நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவை போதுமென்று எண்ணுங்கள்; ‘நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே’” (எபி. 13:5).

37:17,18 துன்மார்க்கருடைய புயங்கள் (அதாவது, அவர்களுடைய வலிமை) **முறிக்கப்படும்.** ஆனால் **நீதிமான்கள்** அவ்வாறு செய்யப்படுவது இல்லை. அவர்கள் கர்த்தருடைய அளவற்ற வலிமையால் தாங்கப்படுவார்கள். **உத்தமர்களுடைய நாட்கள்** எத்தனை என்பதை எண்ணி அவர் **அறிந்து** வைத்திருக்கிறார். அந்த நாட்களில் உள்ள அனைத்து நிகழ்வுகளையும், கடைசியில் அவர்கள் எங்கு நடத்தப்படுவார்கள் என்பதையும் அவர் அறிந்திருக்கிறார். நேர்மையானவர்களுடைய சுதந்தரம் என்றென்றும் பாதுகாக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அவர் அறிவார், அழியாதும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரம் கடைசிக் காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்க இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற யாவருக்கும் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது (1 பேதுரு 1:4,5).

37:19 கடினமான நேரங்கள் வருகின்றபோது, பரிசுத்தவான்கள் தங்களுடைய விசுவாசத்தைக்

குறித்து **வெட்கப்பட்டுப் போகிறதில்லை**. அவற்றின் ஊடாகச் செல்லுவதற்கான மறைந்திருக்கும் ஆவிக்குரிய ஆதாரங்களை அவர்கள் பெற்றிருக்கிறார்கள். பற்றாக்குறை உள்ள நாட்களில் அவர்கள் சிறப்பான வகையில் மிகுதியாகப் பெறுகிறார்கள். முதலாவதாக, அவர்கள் தியாக மனப்பான்மையோடு வாழக் கற்றுக்கொள்கிறார்கள், ஆகவே உணவுப் பாத்திரத்தில் குறைவு ஏற்படுகிறபோது அவர்கள் அதைப் பொருட்படுத்துகிறதில்லை. ஆனால் கர்த்தரை அவர்கள் பெற்றிருக்கிறார்கள், அவர் பாலைவனத்திலும்கூட அவர்களுக்குப் பந்தியை ஆயத்தப்படுத்தக்கூடியவர். அற்புதமான வகையில் அவர் அவர்களுடைய தேவையை நிவர்த்திசெய்யும் சிலாக்கியத்தை அவர்கள் பெற்றிருக்கிறார்கள். மேலும் அவர்களுக்கு அருளப்படுகிற வானத்து மன்னா விசேஷித்த, இரகசிய இன்சுவையைப் பெற்றுள்ளது.

37:20 துன்மார்க்கரோ அழிந்துபோவார்கள். இந்தச் சங்கீதம் நெடுகிலும் **கர்த்தருடைய** பகைவர்களுக்கு இந்தச் சாவுமணி ஒலித்துக் கொண்டே இருக்கிறது. அவர்கள் துன்மார்க்கர், தவறு இழைப்பவர்கள், தங்களுடைய செய்கைகளில் செழித்தோங்குபவர்கள், தீவினையைச் செய்கிறவர்கள், கர்த்தருடைய பகைவர்கள், கர்த்தராலே சபிக்கப்பட்டவர்கள், துன்மார்க்கரின் பிள்ளைகள், பிரமாணத்தை மீறுபவர்கள் என்னும் பெயர்களால் அழைக்கப்படுகிறார்கள். "துன்மார்க்கர்" என்னும் சொல் இந்தச் சங்கீதத்தில் பதினாலு முறை குறிப்பிடப்பட்டுள்ளது. இச்சங்கீதத்தில் அது முக்கிய கருத்துக்களில் ஒன்றாக இடம்பெற்றுள்ளது.

கர்த்தருடைய எதிரிகள் மேய்ச்சல் நிலம் அல்லது பசும்புல் வெளியின் பகட்டு போல இருக்கிறார்கள். ஒருநாள் அவர்கள் தங்களுடைய காட்டுப் பூக்களிலும் பசுமையிலும் பெருமிதம் அடைகிறார்கள்; அடுத்தநாள் அறுவடை செய்பவரால் அவை வெட்டித் தள்ளப்படுகின்றன அல்லது வானிலை மாற்றத்தால் வாடிவிடுகின்றன. அவர்கள் **புகையைப்** போல நிலையற்றவர்களாகவும் இருக்கிறார்கள், அவர்கள் மறைந்து போகிறார்கள்.

37:21 துன்மார்க்கன் கடன்வாங்கிச் செலுத்தா மற்போகிறான். அவன் திரும்பச் செலுத்த வேண்டும் என்னும் அக்கறையற்றவனாக இருக்கிறான் அல்லது இயலாதவனாக இருக்கிறான் என்பதே இதன் பொருள் என்று தோன்றுகிறது. அவன் நிறையப் பணம் வைத்திருந்தும் ஏன் திரும்பச் செலுத்துகிறதில்லை? அவன் எப்பொழுதும் விரிவாக்கம் செய்ய வேண்டும் என்று நினைக்கிறான். பண ஆசையின் காரணமாக, நிச்சயமில்லாத போதிலும் அதிக முதலீடு செய்கிறான். அவனுக்கு இழப்பு ஏற்படுகிறபோது, அதைச் சரிக்கட்ட கடன் வாங்குகிறான். பவுலுக்குத் திரும்பச் செலுத்தவேண்டும் என்பதற்காக பேதுருவிடம் கடன் பெற்ற பழைய கதையாக இது இருக்கிறது. கடன் வாங்கி அவன் தனது அரசைக் கட்டுகிறான், இழப்பு ஏற்படும்போது, தனது வருங்காலம் நன்றாயிருக்க வேண்டும் என்னும் எண்ணத்தில் முரட்டுத் துணிச்சலுடன் தாங்கி நிறுத்த முயற்சி செய்கிறான். வெளிப்பார்வையில் செல்வ வளம் மிக்கவனாகத் தோன்றினாலும், உண்மையில் நிதி நிலை அதிக இக்கட்டான நிலையில் உள்ளது.

நீதிமான் அதிக செல்வம் அற்றவனாக இருந்தபோதிலும், வியத்தகு வகையில் தாராள மனப்பான்மையுடன் கொடுக்கிறான்; வாங்குவதிலும் கொடுப்பதே அதிக பாக்கியமுள்ளது என்பதை அவன் அறிந்திருக்கிறான். உண்மையாகவே ஒரு விசுவாசி கொடுக்க விருப்பம் கொண்டிருந்தால், அதைச் செய்வதற்குத் தேவையான வற்றில் பற்றாக்குறை ஏற்படாது. பவுல் இது குறித்துக் கற்பிக்கிறார்:

> மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும் சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார் (2 கொரி. 9:8).

37:22 நீதிமான்கள் மற்றும் துன்மார்க்கர் எந்த நிலையை இறுதியில் அடைவார்கள் என்பது அவரவர் கர்த்தரோடு கொண்டிருக்கிற உறவைப் பொருத்தது. விசுவாசத்தால் நீதிமானாக்கப்பட்டவர்கள் கர்த்தரால் ஆசிர்வதிக்கப்படுவார்கள்; அவர்கள் தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்வார்கள். தேவன் தருகிற இரட்சிப்பை வேண்டாமென்று மறுப்பவர்கள் அவருடைய சாபத்திற்குக் கீழ் நிற்கும் அவல நிலையை அடைவார்கள்; அவர்கள் அழிக்கப்படுவார்கள்.

37:23,24 நல்ல மனிதருடைய நடைகள் உறுதிப்படும். மூலமொழியில் நல்ல என்ற சொல் இடம்பெறவில்லையெனினும், 23,24 -ஆகிய வசனங்களில் அக்கருத்து இடம்பெற்றிருக்கிறது. தேவன் தம்மோடு தொடர்புகொண்டு வாழ்கிற மனிதனுடைய பாதைகளைத் திட்டமிட்டு, ஒழுங்குபடுத்துகிறார். எவருடைய வழிகள் அவருக்கு

மனமகிழ்ச்சி தருகின்றனவோ, அந்த மனிதனை அவர் **தாங்குகிறார்.** அத்தகைய மனிதன் சோதனையிலும் உபத்திரவங்களிலும் வீழ்ந்துபோனாலும், அவற்றில் அவன் மூழ்கிப் போவதில்லை. ஏனெனில் கர்த்தர்தாமே அவனைத் **தமது கையில்** பிடித்துப் பாதுகாப்பாக நடத்துகிறார். நீதிமான் பாவத்தில் வீழ்ந்தாலும், கர்த்தர் அவனைக் கைவிடமாட்டார் என்பது உண்மையே, ஆனாலும் அவ்வகை வீழ்ச்சி இவ்வசனத்தில் குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லை.

37:25 இப்பாடலைத் தாவீது எழுதியபோது முதிர் வயதினனாக இருந்தான். அவனுடைய வாழ்நாட்காலமெல்லாம், **நீதிமான் கைவிடப்பட்டதை** அல்லது **அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்து திரிகிறதைக்** கண்டதில்லை. இத்தகைய நிகழ்வுகள் உண்மையாக நடந்தன என்பதை அவன் அறிவான் என்று எவரேனும் எதிர்த்துரைக்க முற்படுவார்களானால், நாம் இரண்டு விளக்கங்களைக் கூறுவோம். முதலாவது, நீதிமான் இறுதியில் கைவிடப்பட்டதைத் தாவீது ஒருக்காலும் அறிந்திருக்கவில்லை என்பதே அவன் கூறும் கருத்து எனலாம். அல்லது இரண்டாவதாக, அவன் பொதுவான கோட் பாட்டையே இங்கு எடுத்துரைக்கிறான்; அங்குமிங்குமாக சில விதிவிலக்குகள் நிகழ வாய்ப்புகள் உள்ளன என்பதே பொருளாகும். திருமறை இவ்வாறு அவ்வப்போது கூறுவதைக் காணமுடியும். ஆவிக்குரிய பிரமாணங்கள் வெளிப்படையாகச் செயல்புரிகிற விதத்தை பொதுவான கருத்தாக இது வழங்குகிறது. விதிவிலக்குகள் பொதுவான கொள்கைகளைத் தவறென்று மெய்ப்பிப்பது இல்லை.

37:26 நீதிமான் தன்னுடைய பிள்ளைகளை இரந்து திரியும்படி அனுப்புவது இல்லை என்பதற்கும் மேலாக, அவன் தாராளமாகக் கொடுப்பவனாகவும் அவ்வப்போது **கடன் கொடுக்கிறவனாகவும்** இருக்கிறான். தேவனுடைய சொற்களுக்குக் கீழ்ப்படிகிறதால், அவன் இடையறாது உழைப்பவனாகவும், சிக்கனமானவனாகவும், எச்சரிக்கையோடு செயல்புரிகிறவனாகவும் இருக்கிறான். கடின உழைப்பாலும், எச்சரிப்போடு பொருட்களை வாங்குவதாலும், வீணாவதைத் தடுத்து நிறுத்துவதாலும் அவன் தனது செல்வத்தை விரிவாக்குகிறான்; மேலும் தேவைப்படுவோருக்குத் தாராளமாக உதவி செய்கிறான். **அவனுடைய சந்ததியும்** இந்தப் பாடங்களை வீட்டிலே கற்று, தங்கள் வாழ்நாட்காலம் முழுவதும் அவற்றைக் கடைபிடிக்கிறார்கள்; இவ்வாறாக அவர்கள் பிறருக்கு நன்மை செய்கிறவர்களாகத் திகழ்கிறார்கள்.

37:27 நற்செயல் புரிவதாலே இரட்சிப்பு உண்டாகும் என்று கற்பிப்பது போன்ற தோற்றத்துடன் உள்ள பல வசனங்களில் இதுவும் ஒன்று. எபேசியர் 2:8-10 மற்றும் தீத்து 3:5 ஆகிய வேதபகுதிகளிலிருந்து அவ்வாதம் உண்மையன்று என்பது தெளிவாகத் தெரிகிறது. ஒரு மனிதன் இரட்சிக்கப்பட்டிருந்தால் அவன் நற்செயல்களைச் செய்வான், அத்தகைய மெய்யான பரிசுத்தவான்கள் மட்டுமே என்றென்றும் நிலைத்திருப்பார்கள்.

37:28 கர்த்தர் நியாயத்தை விரும்புகிறார். அது தம்முடைய பரிசுத்தவான்களை நித்திய பாதுகாப்பு பெற்றவர்களாக ஆக்குவதற்கான அவருடைய நியாயத்திற்கு ஏற்புடையது. பரிசுத்தவான்கள் நித்திய வாழ்வுக்குத் தாமே தகுதியுடையவர்கள் அல்லர், மாறாக கிறிஸ்து அதனை அவர்களுக்காக விலை கொடுத்து வாங்கும்படி மரணமடைந்தார், தேவன் அவ்வாறு விலைக்கு வாங்கிய செயலின் நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும்.

விசுவாசிகளின் நித்திய பாதுகாப்பைக் குறித்துப் பாடலாசிரியன் தியானிப்பதில் மனமகிழ்வு அடைகிறான் (24,28,33 -ஆகிய வசனங்களைக் காண்க). கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் விசுவாசம் வைத்து மறுபடியும் பிறந்தவர்கள் யாவரும் என்றென்றைக்குமாக இரட்சிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று கூறும் இறைவனின் திருமறை வசனங்களின் அதிகாரத்தை அறிந்திருக்க வேண்டும். திருவாளர் F. W. டிக்சன் எழுதியதாவது:

> நித்திய இரட்சிப்பைக் குறித்த உறுதி உங்களுக்கு இல்லையெனில், அதை அடைவதற்கான அல்லது மீண்டும் அடைவதற்கான ஒரே வழி – தேவனுடைய வார்த்தையை ஏற்றுக் கொள்ளுங்கள். அதை ஏற்றுக்கொண்டு விசுவாசியுங்கள். தேவன் உங்களைத் தமக்குச் சொந்தமானவர் என்று கூறுகிறார்; நீங்கள் பாதுகாப்பாக இருக்கிறீர்கள் என்றும், முழுவதும் காக்கப்பட்டவர் என்றும், உங்களை ஒருக்காலும் கைவிடமாட்டார் என்றும் அவர் கூறுகிறார்; அதை அதிகமாக உட்கொள்ளுங்கள்.[35]

நீதிமான்கள் **என்றென்றைக்கும் காக்கப்படுகின்ற** அதே நேரத்தில் **துன்மார்க்கருடைய** மக்கள் அறுப்புண்டு போவார்கள். இரட்சிக்கப்படாதவர்களின் அழிவைக் குறித்துச் சிந்திப்பது துக்

கத்தை ஏற்படுத்துகிற வேலை. தேவனை விட்டுப் பிரிந்திருத்தல், கிறிஸ்துவை விட்டுப் பிரிந்திருத்தல் நித்திய வாழ்வைக் குறித்த நம்பிக்கையில் லாதிருத்தல் என்பதன் பொருள் என்ன?

37:29 மேசியாவின் ஆட்சியின் கீழ் தேசத்தில் குடியிருப்பதுதான் இஸ்ரவேலின் முதன்மையான எதிர்பார்ப்பு. பயபக்தி நிறைந்த யூதர்கள் விண்ணக நம்பிக்கை கொண்டிருந்தார்கள் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும் (எபி. 11:10), ஆனால் இஸ்ரவேல் நாட்டில் சமாதானமும் வளமும் நிறைந்த பொற்காலத்தில் அனுபவித்து மகிழ்கிற பொருளாதார மேன்மையே பழைய ஏற்பாட்டுக் காலத்தில் வலியுறுத்திக் கூறப்பட்ட நம்பிக்கையாக இருந்தது. நீதிமான் என்றென்றும் தேசத்தில் குடியிருப்பான் என்று நாம் படிக்கிறபோது, கிறிஸ்துவின் புவியாட்சி ஓராயிரமாண்டு நீடிக்கும் என்றும் அதன்பிறகு அது அவருடைய நித்திய அரசோடு இணையும் என்றும் புரிந்து கொள்ள வேண்டும். நித்திய நிலையில் மீட்கப்பட்ட இஸ்ரவேலர் வெளிப்படுத்தின விசேஷம் 21:1 -இல் சொல்லப்பட்டுள்ள புதிய பூமியில் குடியிருப்பார்கள் என்று எடுத்துக்கொள்வோமானால், தேசத்தை என்றென்றும் சுதந்தரிப்பார்கள் என்பது எழுத்தின்படியான உண்மையாக விளங்கும்.

நீதிமான்களுக்கும் துன்மார்க்கருக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் தொடருகின்றன.

37:30,31 நேர்மையான மனிதனின் பேச்சு **ஞானத்தால்** விளிம்புவரை நிறைந்திருக்கிறது. அவனுடைய பேச்சு ஆற்றல் படைத்ததாகவும், திருமறை ஆதாரமுடையதாகவும், உறுதியானதாகவும் இருக்கிறது. அவன் **நியாயத்தைப்** பேசுகிறான் - ஏமாற்று வேலையும் வஞ்சகமும் அதில் இல்லை. இறைவனுடைய திருமறையை அவன் இடைவிடாமல் தியானிக்கிறான்; பாவத்திலும் அவமானத்திலும் வீழ்வதிலிருந்து அவன் தனது நடையைக் காத்துக்கொள்கிறான். திருவாளர் ஸ்பர்ஜன் இதனைக் குறித்து எழுதியிருப்பதாவது:

மிகச் சிறந்த செய்தி
– நீதிமானுடைய தேவ பிரமாணம்,

மிகச் சிறந்த இடம்
– நீதிமானுடைய இதயம்,

மிகச் சிறந்த விளைவு
– அவனுடைய நடை வழுவுவதில்லை.

37:32,33 குற்றமில்லாதவர்கள் மேல் பாய்ந்து, அவர்களை அழிக்க ஒரு வாய்ப்பு கிடைக்கும் என்று **துன்மார்க்கன்** எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான். ஆனால் குற்றமில்லாதவன் தன்னுடைய எதிரியின் அதிகாரத்துக்குள் அகப்பட்டுக்கொள்ளும்படியும், அவனுக்கு எதிராக விசாரணை நடத்தப்படும்போது அவன் குற்றவாளி என்று தீர்க்கப்படும்படியும் கர்த்தர் கைவிடுவதில்லை. இறைவனே தமது அனைத்து மக்களுக்கும் பாதுகாவலரும் பரிந்து பேசுபவருமாகவும் இருக்கிறார்.

37:34 ஆகவே நம்முடைய மிகச் சிறந்த வழிமுறை விசுவாசித்து **(கர்த்தருக்குக் காத்திருந்து),** கீழ்ப்படிவதே **(அவருடைய வழியைக் கைக்கொள்வது)** ஆகும். கர்த்தருக்குள் களிகூர வேறு வழியில்லை!

ஆனால் இதனுடன் கதை முடிவடையவில்லை. ஆறாவது முறையாக, அப்படிப்பட்டவர்கள் **பூமியைச் சுதந்தரித்துக்கொள்வார்கள்** என்று பாடலாசிரியன் வாக்குத்தத்தம் செய்கிறான். பிறகு மேலும் ஒரு உறுதியை அவன் சேர்த்துக் கூறுகிறான். **துன்மார்க்கர்** அழிக்கப்படும்போது, விசுவாசிகள் வெறும் பார்வையாளர்களாக மட்டுமே செயல்படுவார்கள். அந்தப் பயங்கரமான நிகழ்வில் அவர்கள் மகிழ்ச்சியடைய மாட்டார்கள், ஆனால் அவர்கள் எல்லாவிதமான நியாயத்தீர்ப்பிலிருந்தும் விடுவிக்கப்பட்டவர்களாக விளங்குவார்கள்.

37:35 மனித வாழ்வை ஆராய்ச்சி செய்வதில் தாவீது அக்கறைகொண்டவனாகவும், புலனுணர்வு கொண்டவனாகவும் இருந்தான். ஒருமுறை அவன் துன்மார்க்கன் ஒருவனைக் கவனித்துப் பார்த்தான், அடக்கி ஆர்ப்பரிக்கிற அந்த மனிதன் தன்னுடைய நிலத்தில் முளைத்த செழித்துப் பரந்தகன்ற மரத்திற்கு ஒப்பாக இருந்தான். பிடுங்கி நடப்பட்டு அதன் காரணமாக வளர்ச்சிக் குறைவு இம்மரத்திற்கு ஏற்படவில்லை என்னும் கருத்து இதில் தெளிவாகத் தெரிகிறது. அது இன்னமும் தன்னுடைய சொந்த நிலத்தில் இருக்கிறது, ஆகவே அது ஓங்கிவளர்ந்து பெரிதாக இருக்கிறது. அந்தப் பொல்லாத மனிதனும் அதற்கொப்பாக வளத்தோடும் அதிகாரத்தோடும் இருந்தான்.

37:36 ஆனால் அடுத்த தடவை தாவீது அந்த வழியாகச் சென்றபோது, அந்த மனிதனைக் காணவில்லை. தாவீது **அவனைத் தேடியும்** அவன் அருகில் இல்லை. அவன் கொஞ்சக் காலம் மட்டுமே செழித்திருந்தான். சிறிது காலம் மட்டுமே அவன் அதிகாரத்துடன் இருந்தான், ஆனால் அதற்குப் பிறகு அவனைக் காண

வில்லை. அவன் காணாமற்போனது போலவே அவனுடைய செல்வமும் அதிகாரமும் மறைந்துபோயின.

37:37,38 அக்கிரமக்காரருக்கும் உத்தமமான நீதிமானுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகளை நாம் கவனிக்க வேண்டுமென்று பாடலாசிரியன் ஆலோசனை கூறுகிறான். சமாதானமுள்ள மனிதனுக்கு ஒரு சந்ததி இருக்கிறது. ஆனால் **அறுப்புண்டு போவதே துன்மார்க்கரின்** எதிர்காலம் ஆகும். நீதிமான்களாயினும் துன்மார்க்கராயினும் சரீரப்பிரகாரமான நீண்ட சந்ததியைப் பெறுகிறார்கள். சமாதானமுள்ள மனிதனைப் பற்றி தோலுக் என்பார் கூறுகிறார், "அப்படிப்பட்ட மனிதன் நல்ல முடிவைப் பெறுகிறான்." ஆனால் துன்மார்க்கனுக்கு அத்தகைய வளமான எதிர்காலம் வாக்குரைக்கப்படவில்லை.

37:39,40 நீதிமான்களைக் குறித்த மிகப் பெரிய விசயம் அவர்கள் தேவனோடு கொண்டிருக்கும் தொடர்புதான். அவரே அவர்களுடைய இக்கட்டுக் காலத்தில் இரட்சகரும் பெலனுமாக இருக்கிறார். தேவை ஏற்படும் நேரங்களில் கிறிஸ்தவர்கள் இயல்பாகவே அவரை நோக்கித் திரும்புகிறார்கள்! அவர்கள் அவரை முழுவதும் சார்ந்திருக்கின்ற காரணத்தால், அவர் அவர்களுக்கு உதவுகிறார், விடுவிக்கிறார், பாதுகாக்கிறார். இப்பொழுது உங்களுக்கு ஏதாவது பிரச்சினை இருக்கிறதா? அவரை நம்புங்கள். அதிலிருந்து அவர் உங்களை விடுவிப்பது நிச்சயம்!

சங்கீதம் 38: பாவத்தினால் உண்டாகும் துக்கம்

"என் பாவம்" (வச. 3), "என் அக்கிரமங்கள்" (வச. 4), "என் மதிகேடு" (வச. 5) "என் பாதை" (வச. 11) ஆகிய குறிப்புகள் இந்தச் சங்கீதத்தில் இடம்பெறவில்லையெனில், இது இரட்சகரின் பாடுகளையே விவரிக்கிறது என்று நாம் எண்ணக் கூடும். கர்த்தராகிய இயேசு தேவனுடைய கரத்திலும் மனிதருடைய கரத்திலும் பாடுகளை அனுபவித்ததை எண்ணிப்பார்க்கிறபோது, இப்பாடலின் மற்ற பகுதிகள் அவருக்குப் பொருத்தமாக இருப்பதாகச் சொல்லமுடியும், ஆயினும் தாவீது ஏதோவொரு பாவத்தைச் செய்தபோது அவன் அடைந்த கடுமையான சரீர மற்றும் மனவேதனைகளையே இவை குறிக்கின்றன என்பதே அடிப்படையில் சரியான பொருள் விளக்கமாகும்.

38:1-4 முதலாவது, தாவீது அனுபவித்த பாடுகள் தேவன் கோபத்தால் **கடிந்துகொண்ட** செயலால் ஏற்பட்டவை என்றும், அவருடைய **உக்கிரத்தால்** எழுந்த சிட்சை என்றும் எண்ணினான். ஆகவே கர்த்தர் அவனை அதனின்று விடுவிக்க வேண்டுமென்று விண்ணப்பிக்கிறான். சர்வ வல்லவருடைய அம்புகள் உண்டாக்கின தழும்புகள் பாடலாசிரியனின் உடலிலும் மனதிலும் காணப்படுகின்றன. மேலும் தேவனுடைய கரம் அவனை நசுக்கும்படி மிகுந்த பலத்துடன் அவன் மேல் இறங்குகிறது. தெய்வீகக் கோபத்தின் காரணமாக அவனுடைய உடல்முழுவதும் நோயுற்றிருக்கிறது. நோய் அவனுடைய **எலும்புகளுக்குள்ளும்** சென்றுவிட்டது - எல்லாம் அவனுடைய பாவத்தின் காரணமாக ஏற்பட்டவையே. அவனுடைய **அக்கிரமங்கள்** பொறுத்தருளப் படவில்லை - அவன் முழுவதுமாகத் தண்டிக்கப் பட்டுவிட்டான். மிகப்பெரிய கடலலைகள் போல அவை அவன்மேல் வந்தன, பெருஞ்சுமையாக அவனுடைய பெலத்தை நொறுக்கின.

38:5-8 அழுகி நாற்றமெடுக்கும் புண்கள் அவனுடைய உடல் முழுவதும் வெளிப்பட்டன. இவை எதனால் உண்டாயின என்பதில் அவனுக்கு ஐயமில்லை. அவனுடைய வேதனை அவனை ஒடுக்கிற்று, பலவீனத்தால் வீழ்ந்து கிடக்கிறான் - ஆழ்ந்த துன்பம் என்னும் பயங்கரப் பேய்க்கு அவன் உயிருள்ள மாதிரியாயிருக்கிறான். அவனுடைய உடல் கடுமையான காய்ச்சலால் பெரும் வேதனைக்குள்ளாயிற்று, அவனுடைய உள்ளுறுப்பு எதுவும் பாதிக்கப்படாமல் இல்லை. அவனுக்கு எதிர்த்துப் போரிட சிறிதளவும் வலிமையில்லை. சரீரம் முழுவதும் சாட்டையடி பெற்றவன்போல் துவண்டுகிடக்கும் அவன் **கதறுதலால்** தன்னுடைய நிலையை வெளிப் படுத்துவதைத் தவிர வேறு எதையும் செய்ய முடியவில்லை.

38:9-11 தாவீது தனது இருதயத்தில் கொண்டிருக்கிற வேதனையையும் அவன் அனுபவித்தும் வெளிப்படுத்தக்கூடாத உணர்வுகளையும் கர்த்தர் அறிந்திருக்கிறார் என்னும் செய்தியை அவன் தெரிந்துகொண்டபோது அது அவனுக்குச் சற்று ஆறுதல் அளித்தது. இருந்தபோதிலும் அவனுடைய இருதயம் வேகமாக அடிக்கிறது, அவனுடைய வலிமையோ குறைந்து கொண்டே போகிறது, அவனுடைய கண்கள் ஒளிமங்கிப் போய்விட்டன. அவனுடைய நண்பர்களும் அன்புக் குரியவர்களும், தொழுநோயாளியை நடத்துவது போல அவனை விட்டு விலகிச் செல்கிறார்கள். அவனுடைய உறவினர்களும்கூட அவனைச் சந்திக்கத் தயங்குகிறார்கள்.

38:12-14 அவனைக் கொலை செய்ய வேண்டு மென்று இருக்கிறவர்கள் தங்களுடைய திட்டங் களை, அச்சுறுத்தல்களை, பாதகச் செயல்களைக் கைவிடவில்லை. ஆனால் தாவீது அவர்களுடைய எல்லா அச்சுறுத்தல்களுக்கும் காது**கேளாதவன்** போல இருக்கிறான். மேலும் அவன் தனக்கு எதிரான வழக்குகளில் வாதாடவில்லை, தனது நேர்மையை மெய்ப்பிக்க முயலவில்லை, பழிதூற்றலையும் அமைதியோடிருந்து பொறுத்துக்கொள்கிறான்.

38:15-17 தற்போதைய சூழ்நிலை இருள டைந்ததாக இருந்தபோதிலும் அவன் **நம்பிக்கை** இழந்து போகவில்லை. தேவன் பதில் தருவார் என்று இன்னும் அவன் நம்பிக்கையோடு இருக் கிறான். அவன் முற்றிலுமாகப் பாதிப்பு அடை வதைக் கண்டு அவனுடைய பகைவர் கொண்டா டும் நிலை ஏற்படக்கூடாது என்று தேவனிடம் வேண்டுகிறான். ஆனால் தற்போது அவன் தொடர்ந்து கடுமையான வேதனையால் துன் புறுத்தப்பட்டு, மனிதனின் சகிப்புத் தன்மையின் எல்லைக்கே சென்றுவிட்டான்.

38:18 புதுப்பிக்கும் நேர்மையோடும் நொறுங் கிய உள்ளத்தோடும் தாவீது தன்னுடைய பாவத்தை மூடி மறைக்க முயற்சி செய்யாமல், தனது **அக்கிரமத்தை** அறிக்கையிட்டு "நான் மனவருத்தம் அடைகிறேன்" என்கிறான். எவ னொருவன் தேவனுடைய முன்னிலையில் இவ் வித நிலையை மனமார எடுக்கிறானோ அவ னுக்கு மன்னிப்பு மறுக்கப்படுவதில்லை. தன் பாவத்தை அறிக்கைசெய்து விட்டுவிடுகிறவ னுக்கு இரக்கம் செய்வேன் என்று கர்த்தர் தமது கூற்றைப் பதிவு செய்து வைத்திருக்கிறார் (நீதி. 28:13). அவ்வாறு இல்லையெனில் எல்லா மனி தரும் நம்பிக்கையின்றி அழிந்து போவார்கள்.

38:19,20 மீண்டும் தாவீது தனது பகைவரைக் குறித்துச் சிந்திக்கத் தொடங்குகிறான். அவன் வலிமையிழந்து நோயுற்றிருக்கிறான். அவர் களோ வலிமையோடும் ஆற்றலோடும் இருக் கிறார்கள். அதன்பிறகு, தேவனுடைய சிட்சை நியாயமானது என்று ஒப்புக்கொள்ளும் தாவீது, தன்னைப் **பகைக்கிறவர்கள்** பகைமை எண்ணம் கொள்வதற்கு ஒரு காரணம் இல்லை என்கிறான். அவன் அவர்களிடத்தில் தயை பாராட்டினான். ஆனால் அவர்களோ அதற்குப் பதிலாக வெறுப் பைக் காட்டுகிறார்கள். அவர்களுடைய பகைமை யின் அடித்தளத்தில் உள்ள உண்மை யாதெ னில் தாவீது இறைவனையும் **நன்மையையும்** பின்பற்றுகிறவன் என்பதே ஆகும்.

38:21,22 ஆகவே தேவன் தன்னைக் கை விடக்கூடாது என்று வேண்டுகிறான். மாறாக, அவர் அவனுடைய அருகில் இருக்க வேண்டும், அவனை விடுவிக்க விரைந்து வரவேண்டும் - உண்மையாகவே பாடலாசிரியனின் இரட்சக ராகிய தேவனாக அவர் செயல்பட வேண்டும்!

39 -ஆவது சங்கீதத்தின் பொழிப்புரை: உள்ளான நெருப்பு

39:1-3 நான் கடுந்துயர் அடைந்து அவல நிலைக்குள்ளாயிருந்த போதிலும், கர்த்தருக்கு எதிராகக் கலகம் செய்யவோ குறைசொல்லவோ மாட்டேன் என்று உறுதியோடு தீர்மானித்திருந் தேன். அவிசுவாசிகள் கேட்கும் தூரத்தில் இருக் கும்போது என் வாயை மூடிபோட்டு அடைத்து அமைதியாயிருக்க உறுதிபூண்டிருந்தேன். தேவ னுடைய பராமரிப்பைக் குறித்து அவர்கள் கேள்வி எழுப்புவதற்குக் காரணம் உண்டாவதற்கு நான் இடங்கொடுக்க மாட்டேன், ஆகவே நான் அங்கு ஊமையைப் போல அமைதியாக இருந்து, நான் மறைத்துவைத்த உணர்வுகள் வெளிப்படுவதற்கு ஏதொரு வழியையும் பயன்படுத்தமாட்டேன் என்றி ருந்தேன். ஆனால் அதில் எவ்விதப் பயனும் ஏற்படவில்லை. **என் இருதயம்** சீற்றத்தாலும் தடு மாற்றத்தாலும் சிவந்து **அனல் கொண்டது.** என்னை மூழ்கடிக்கத்தக்க துக்கத்தைச் சகிக் கும்படி கர்த்தர் ஏன் அனுமதித்தார் என்பதை என் னால் புரிந்துகொள்ள முடியவில்லை. என்னுடைய ஆத்துமாவின் கசப்பை நான் அதிகமாகப் பேணி வளர்க்க, உள்ளத்தில் அழுத்தம் கூடிக் கொண்டே போயிற்று. இறுதியாக நான் அடக்கி வைத்த உணர்வுகள் யாவும் கேள்விகளோடே மன்றாட் டாகப் பொங்கியெழுந்தது.

39:4-6 "இந்த மனக்கிலி எவ்வளவு காலம் தொடரும்? இன்னும் எவ்வளவு காலம் என்னு டைய வாழ்க்கை எஞ்சியிருக்கிறது என்று தெரி விப்பீராக, அது எப்பொழுது முடிவுக்கு வரும்? மிஞ்சிப்போனால் என்னுடைய வாழ்நாட்காலம் உமது நித்தியத்தோடு ஒப்பிடுகையில் உள் ளங்கை அளவு அகலம்தான், அதைக் குறிப்பிடும் அளவுக்கு அதில் சிறப்பு எதுவும் இல்லை. மனி தர்களாகிய நாங்கள் யாவரும் நிலையற்ற புகை யைப் போல இருக்கிறோம், புகையைப் போல அலைகிறோம். நாங்கள் வெறிகொண்டு திரி கிறோம் - ஆனால் இவை எல்லாவற்றிலும் என்ன பயன் இருக்கிறது? எங்களுடைய வாழ்நாட் காலம் முழுவதும் கருமித்தனமாயிருந்து சேமித்து

வைத்து, பின்னால் நன்றிகெட்டவர்களும், மதி கெட்டவர்களும் அல்லது அந்நியர்களும் அனுப விக்கும்படி விட்டுச் செல்லுகிறோம்!

39:7,8 அப்படியானால், **கர்த்தாவே** எனக்கு என்ன நம்பிக்கை இருக்கிறது? என்னுடைய ஒரே நம்பிக்கை நீரே. உம்மையல்லால் எனக்கு வேறு எவரும் இல்லை. **என் மீறுதல்கள் எல்லாவற்றி லுமிருந்து என்னை விடுதலையாக்கும்** - குறிப் பாக, என்னுடைய வாழ்க்கையில் இத்தகைய அவல நிலையை உண்டாக்கின பாவங்களிலி ருந்து என்னை விடுதலையாக்கும். எனக்கு ஏற் பட்ட பாதகமான சூழ்நிலையைக் குறித்து மூடர் கள் காழ்ப்புணர்ச்சி கொண்டு மகிழ்ச்சியடை வதை என்னால் எண்ணிப்பார்க்க முடியவில்லை.

39:9,10 "என்னை உபத்திரவம் தாக்கிய தரு ணத்திலிருந்து, நான் எவ்வாறு மவுனமாயிருக் கிறேன் என்பதை நீர் அறிந்திருக்கிறீர் -அது உம் முடைய அனுமதிக்கும் சித்தத்தினாலே வந்தது என்பதை அறிந்திருப்பதாலே நான் அவ்வாறு சொல்லுகிறேன். ஆனால் இப்பொழுது உம்மு டைய சிட்சிக்கும் கையை என்னைவிட்டு நீக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்; நீர் திரும்பத் திரும்பக் கொடுக்கும் அடிகளால் நான் வலிமையற்று சோர்ந்துபோயிருக்கிறேன்.

39:11 "கர்த்தாவே நீர் **ஒரு மனிதனை**, அவனு டைய பாவங்களினிமித்தம் பலவகையான ஒழுங்கு நடவடிக்கைகளைக் கைக்கொண்டு திருத்தும் போது, அவன் ஒரு விலையுயர்ந்த ஆடையைப் பூச்சி அரித்தது போலப் பயனற்றுப் போகிறான். நாம் எல்லோரும் நிலையற்ற நீராவியைப் போல இருக்கிறோம்.

39:12,13 "ஆகவே, **கர்த்தாவே** நான் உம்மிடத் திற்கு வந்து, என்னுடைய **ஜெபத்தைக் கேட்கும் படி** வேண்டுகிறேன். எனது அவசர வேண்டுதலைக் கேட்டுப் பதில் தாரும். என்னுடைய கண்ணீருக்கு இரங்காமல், கர்த்தாவே இருக்க வேண்டாம். உமக் குச் சொந்தமான இந்த உலகில் நான் ஓர் இரவு விருந்தினனுக்கு ஒப்பாகவே இருக்கிறேன், என்னு டைய மூதாதையர் போலவே நானும் ஒரு நாடோடி தான். இவ்வுலகை விட்டு நீங்கி இனிக் காணப் படாமல் போகவிருக்கும் நான் அதற்கு முந்தைய குறுகிய காலத்தில் உடல் நலத்தோடும் மகிழ்ச்சி யோடும் வாழும்படி, என்மேல் இருக்கும் கடு கடுப்பை நீர் நிறுத்தும்படி வேண்டிக்கொள்கிறேன்"

சங்கீதம் 40: ஆபத்திலிருந்து காப்பாற்றப்பட்டேன்!

"பலியையும் காணிக்கையையும் நீர் விரும்ப வில்லை" (வச. 6-8) என்னும் நன்கு அறியப்பட்ட சொற்கள், இந்தச் சங்கீதம் மேசியாவின் சங் கீதம் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன. இந்தச் சொற்கள் கர்த்தராகிய இயேசுவுக்குப் பொருத் திக் காட்டப்பட்டிருப்பதை எபிரெயர் 10:5 -இல் காணவியலும். எனினும் இப்பாடலில் ஒரு சிக்கல் இருக்கிறது, இதன் முதல் பகுதி அவருடைய உயிர்த்தெழுதலைக் குறிப்பிட்ட போதிலும், பிந்தைய பகுதி அவர் சிலுவையில் பட்ட வேத னையிடமாய்த் திரும்புகிறது என்றே தோன்று கிறது. இவ்வாறு முந்தைய நிகழ்வைக் குறித்துச் சிந்தனை திரும்பிச் செல்லுவதை விளக்கிக் கூறுவது அவ்வளவு எளிதன்று. இப்பாடலின் முதல் வரிகள், இரட்சகர் தமது உயிர்த்தெழு தலை முன்னோக்கிப் பார்த்து, அது ஏற்கனவே நடந்துவிட்டது போலப் பேசுகிறார் என்று சிலர் இதற்கு விளக்கமளிக்கிறார்கள்.

பாடலின் இறுதியில் இடம்பெற்றுள்ள வருத் தம் மேலிட்ட மன்றாட்டு மகா உபத்திரவ காலத் தில் மீதியான யூதர்களுக்கென ஏறெடுக்கப்பட் டது என்று மற்றவர்கள் கருதுகிறார்கள். நாம் இப்பாடல் முழுவதும் கர்த்தராகிய இயேசுவைக் குறித்தது என்னும் அடிப்படையில் காணுவோம். முதலாவது அவருடைய உயிர்த்தெழுதலைக் குறித்தும், அதன் பிற்பகுதி அவர் சிலுவையில் அடைந்த பாடுகளைக் குறித்தது என்றும் விளக்க முற்படுவோம். காலவரிசையில் இது விளக்கப்பட வில்லை என்று நம்முடைய மேற்கத்திய மனது அதிருப்தி அடைந்தாலும், கிழக்கத்திய மக்கள் எப்பொழுதும் காலவரிசைக்கு எல்லாவற்றுக்கும் மேலான முக்கியத்துவம் கொடுக்கிறதில்லை என்னும் உண்மை நமக்கு ஆறுதல் அளிக்கக் கூடும்.

40:1 இங்கு பேச்சாளர் மேசியாவாகிய இயேசு. கர்த்தர் தமது ஜெபத்தைக் கேட்கவேண்டுமென் றும், அவர் தம்மை மரணத்தினின்று விடுவிக்க வேண்டுமென்றும் அவருக்காகப் பொறுமை யோடு காத்திருந்தார். நமது நற்பேறு பெற்ற கர்த்தரும்கூட எல்லாத் தருணங்களிலும் தமது ஜெபத்திற்கு உடனடி விடையைப் பெறவில்லை. **காலதாமதம்** எப்பொழுதும் **மறுப்பு** என்று பொருள்படாது என்பதை அவர் உணர்ந்தார். நம் முடைய வாழ்க்கையில் தேவனுடைய நோக்கங் கள் மிகவும் பொருத்தமான நேரங்களில் நிகழ் வதற்கேற்ப நம்முடைய ஜெபத்திற்கான விடை அவரிடத்திலிருந்து வருகின்றன.

குறைவுகள் நம்மைச் சூழ்ந்திடும் வேளையில்
இறைவனின் உதவி சடிதியில் வருமெனில்
இருளினில் அவரைச் சார்ந்திட்ட நேரத்தில்
பெருகிய பேற்றினை அறியாமற் போவோம்.

வெறுமையாய் நம்பி ஏமாந்தோம் என்னும்
வெறுப்பினை உள்ளம் அடையாமல் மகிழ்ந்திட
அருமை அண்ணலின் அரியநல் உதவி
கருணையாய் வந்திடும் உரியநல் பொழுதினில்!

40:2 தாம் மரணத்தினின்று மீட்கப்பட்ட மகிமை நிறைந்த நிகழ்வை நமது இரட்சகர் **பயங்கரமான குழியிலும் உளையான சேற்றிலுமிருந்து** காப்பாற்றப்பட்டதற்கு ஒப்பிடுகிறார். பாவத்தையும் சாத்தானையும் மரணத்தையும் கல்லறையையும் வென்றவராகச் சவக்குழியிலிருந்து அடியெடுத்து வைத்து, என்றென்றும் உயிரோடிருப்பவராக வெளிவருகிற நிலை வாழ்வின் நாயகருக்கு எத்தகைய உணர்வைக் கொடுத்திருக்கும்!

கிறிஸ்து விடுவிக்கப்பட்ட நிகழ்வு தனித்தன்மை வாய்ந்தாக இருந்தபோதிலும், நாமும் கூட நம்முடைய வாழ்வின் பயங்கரமான குழியிலிருந்தும் உளையான சேற்றிலிருந்தும் பாதுகாப்பைப் பெறுகிறபோது தேவனுடைய வல்லமையை அனுபவிக்க முடியும். இப்படிப்பட்ட ஆழமான பள்ளங்கள் நிறைந்ததாகவே நம்முடைய வாழ்க்கை அமைந்திருக்கிறது என்பதை நாம் அறிவோம். மனந்திரும்பாத மனிதன் அவனது பாவங்களுக்காகத் தூய ஆவியானவரால் குற்றவாளியெனத் தீர்க்கப்பட்டிருக்கிற நிலையில், **பயங்கரமான குழியில்** கிடப்பது தெளிவு. பின் மாற்றம் பெற்ற விசுவாசியும் தான் சதுப்பு நிலத்தில் ஆபத்தான நிலையில் இருப்பதை அறிந்திருக்கிறான். நோய், துன்பங்கள், துயரங்கள் போன்ற சேற்றுக்குழிகள் உள்ளன. நாம் வழி நடத்துதலை நாடுகின்ற பல நேரங்களில் இருண்ட அறைகளில் அடைப்பட்டுக் கிடப்பதாகவே தோன்றுகிறது. இழப்பு, தனிமை அல்லது நம்பிக்கையற்ற நிலை போன்ற சதுப்பு நிலத்திற்குள் இடிந்து விழுந்த கட்டடம் போன்று நாம் அவ்வப்போது இருக்கிறோம் என்பது உண்மையே. இவை யாவும் மறக்கமுடியாத அனுபவங்களாக இருக்கின்றன. அத்தருணங்களில் நாம் ஜெபிக்கிறோம், அழுகிறோம், துக்கத்தால் வேதனைப்படுகிறோம், ஆனாலும் எதுவும் நடப்பதாகத் தோன்றுவதில்லை. நம்முடைய இரட்சகரைப் போன்று பொறுமையோடு கர்த்தருக்காகக் காத்திருக்க நாம் கற்பது அவசியம். தேவன் தமக்கு ஏற்ற நேரத்தில் நமதருகே வந்து, குழியிலிருந்து வெளியே நம்மைத் **தூக்கியெடுத்து** நம்முடைய **கால்களைக் கன்மலையின்மேல் நிறுத்தி** நமது **அடிகளை** உறுதிப்படுத்துவார்.

40:3 நம்முடைய **துதிக்கு** தேவனே *ஆதாரமாகவும்* இலக்காகவும் இருக்கிறார். அவர் நம்முடைய **வாயிலே புதுப்பாட்டைக்** கொடுக்கிறார். அந்தப் பாடல் நம்முடைய *தேவனுக்குச் செலுத்தப்படும் புகழ்ச்சிப் பாடலே* ஆகும்.

நம்முடைய மீட்பு தேவனுக்குப் புகழ்ச்சியை உண்டாக்குவது மட்டுமின்றி, மற்றவர்களுடைய முன்னிலையில் சாட்சியாகவும் விளங்குகிறது: "**அநேகர் அதைக் கண்டு பயந்து கர்த்தரை நம்புவார்கள்.**" கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதல் என்னும் நிகழ்வைக் காட்டிலும் ஒருக்காலும் வேறு எதற்கும் மேலான பொருத்தமாக இது இருந்ததில்லை. காலியான கல்லறை என்னும் அற்புதத்தின் மூலமாக முடிவில்லாத வரிசையில் விசுவாசப் பயணிகள் ஜீவனுள்ள தேவனுக்காக வெற்றிபெற்றிருப்பதைக் குறித்துச் சிந்தித்துப் பாருங்கள்.

40:4 கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்து, கண்ணுற்ற மக்களைக் குறித்துச் சிந்தித்த உயிர்த்தெழுந்த மீட்பர், ஆவிக்குரிய வாழ்க்கையின் மிகப்பெரியதும் அடிப்படை உண்மையைக் கொண்டதுமான ஒரு கூற்றைக் கூறுகிறார்: **"கர்த்தரையே தன் நம்பிக்கையாக வைக்கிற மனிதன் பாக்கியவான்."** தேவனிடத்தில் வைக்கும் விசுவாசத்தின் மூலமாகவே வாழ்க்கையின் மெய்யான மகிழ்ச்சியும் நிறைவும் உண்டாகும். அதற்கு வேறு வழியில்லை. தேவனை நம்முடைய கர்த்தரும் எஜமானுமாக ஒப்புக்கொள்கிறபோதுதான் நமக்கென்று நியமிக்கப்பட்ட இடத்தை அறியும் படியான நிலையில் நாம் படைக்கப்பட்டிருக்கிறோம். திருவாளர் பாஸ்கல் இதைக் குறித்துச் சிறப்பாகக் கூறியிருக்கிறார்: "மனித இருதயத்தில் தேவனைப் போன்ற அமைப்பைக் கொண்ட வெற்றிடம் இருக்கிறது." இதனைத் திருவாளர் அகஸ்டின் இவ்வாறு கூறினார்: "நீர் எங்களை உருவாக்கினீர், கர்த்தாவே, நீரே உருவாக்கினீர். உம்மையல்லால் எங்கள் இருதயம் வேறு எங்கும் இளைப்பாறாது!"

நற்பேறு பெற்ற மனிதன் கர்த்தரை நோக்கித் திரும்புவது மட்டுமின்றி **அகங்காரம்** கொண்ட மனிதர்களையும், பொய்யான கடவுள்களைப் பின்பற்றுகிறவர்களையும் *விட்டுவிலகுகிறான்*. வாழ்வின் மிகப்பெரிய இரண்டு தவறான நம்பிக்

கைகளின் மூலமாக அவன் ஏமாற்றப்படுவ தில்லை - பெருமையுள்ள மனிதர்களின் மரி யாதை முக்கியமானது என்னும் எண்ணம் பொரு ளுடைமை, சுகபோகவாழ்வு, சிற்றின்பத்தை அனுபவித்தல் ஆகியவற்றைக் கடவுள்களென சிந்தித்துச் செயல்படுவதால் மனிதனுடைய இரு தய விருப்பம் நிறைவுபெறும் என்னும் கருத்து ஆகியவையே அவை. மனிதனால் ஏற்றுக்கொள் ளப்படுவதிலும் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படு வதையே நற்பேறு பெற்ற மனிதன் சிறப்பாகக் கருதுகிறான். தேவனுடைய முன்னிலையில் மட்டுமே நிறைவான மகிழ்ச்சி காணப்படும் என்று அவன் அறிந்திருக்கிறான். உருவ வழிபாடு செய்பவர்களிடம் கொண்டிருக்கும் தோழமை அதைத் தருவதில்லை என்பதையும் அவன் அறிந்திருக்கிறான்.

40:5 தேவனுடைய இரக்கங்கள் எண்ணிக் கையில் அடங்காதவை என்று மேசியா சிந்திக் கும்படி இது வகை செய்தது. அவருடைய அதி சயச் செயல்களும் மக்கள்மேல் கொண்டிருக்கும் கிருபை நிறைந்த யோசனைகளும் எண்ணிக் கையில் அடங்காதவை. அவருடைய இயற்கைப் படைப்பின் எல்லைக்குட்படா விவரங்களை யாரால் விளக்கிக் கூற முடியும்? தேவைகளை நிறைவு செய்யும் அவருடைய குறிப்பிடத்தக்க மாற்றுச் செயல்களை யாரால் சொல்லிமுடியும்? அவருடைய ஆவிக்குரிய ஆசிர்வாதங்களின் பேரளவை யாரால் புரிந்துகொள்ள முடியும் - தெரிந்தெடுப்பு, முன்குறித்தல், நீதிமானாக் குதல், மீட்பு, கிருபாதார பலி, மன்னிப்பு, பொறுத் தருள்தல், இரட்சிப்பு, புதிய பிறப்பு, உள்ளு றையும் ஆவியானவர், ஆவியானவரின் முத் திரை, அவருடைய அச்சாரம், அபிஷேகம், பரி சுத்தமாக்கப்படுதல், புத்திரசுவிகாரம், சுதந்தரம், மகிமையடைதல் - **"நான் அவற்றைச் சொல்லி விவரிக்க வேண்டுமானால் அவை எண்ணிக் கைக்கு மேலானவை."**

> அருளிய இரக்கங்கள் அனைத்தையும் அளவிட
> அடிமையின் ஆன்மா எழுந்தது இறைவா!
> புகழ்ச்சியும் அன்பும் நிறைந்தநல் லுணர்வில்
> மகிழ்ச்சியின் நிறைவுடன் பணிந்துநான்
> வாழ்த்துவேன்!
>
> – ஜோசப் அடிசன்

40:6 ஏற்கனவே நாம் குறிப்பிட்டதுபோல, 6 முதல் 8 -வரையிலான வசனங்கள் இந்தச் சங் கீதம் மேசியாவின் சங்கீதம் என்பதைத் தெளி வாகச் சுட்டிக்காட்டுகின்றன. தேவனுடைய குமாரன் இவ்வுலகிற்கு வருகைபுரிந்தபோது பேசிய பேச்சாகவே இந்த வசனங்களை எபிரெயர் 10:5-9 ஆகிய வசனங்கள் குறிப்பிடுகின்றன. தேவன் தம்முடைய மக்களாகிய இஸ்ரவேலருக் கென்று பலியையும் காணிக்கையையும் ஏற் படுத்தியிருந்தாலும், அவை அவருடைய இறுதி யான நோக்கத்தைப் பிரதிபலிக்கவில்லை என் னும் பொருளிலேயே அவர் பேசினார். வரப்போகிற சிறப்பான ஒன்றுக்கு அவை மாதிரிகளாகவும் நிழல்களாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தன. இடைக்கால இட நிரப்புதல்களாகவே அவற்றிற்கு அந்த இடம் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் தேவனோ அவற்றில் ஒருக்காலும் உண்மையாக மனநிறைவு அடையவில்லை. அவை பாவப் பிரச் சினைக்கு இறுதியான தீர்வை வழங்கவில்லை யாதலால், கருத்தளவில் குறைவுடையவை என் பதே அவருடைய எண்ணமாயிருந்தது. சர்வாங்க தகனபலி, பாவ நிவாரண பலி ஆகியவற்றில் இருந்த இயல்பான குறைவுகளை உணர்ந்த நிலையில், அவற்றிற்குப் பதிலாக தேவன் தம்மு டைய அன்பின் குமாரனுடைய **செவிகளைத் திறந்தார்**. இரட்சகருடைய செவிகள் அவருடைய பிதாவின் சித்தத்தைக் கேட்கவும், அதற்குக் கீழ்ப்படியவும் திறந்திருந்தன என்பதே இவ் வசனத்தின் பொருள். இத்தகைய விருப்பத்தோடு கீழ்ப்படிகிற மனப்பான்மையோடுதான் கிறிஸ்து இவ்வுலகிற்கு வந்தார்.

ERV மொழிபெயர்ப்பின் அடிக்குறிப்பில் **"என் செவிகளைத் திறந்தீர்"** என்னும் சொற்றொடர் "எனக்காகச் செவிகளைக் குத்தினீர்" என்று கொடுக்கப்பட்டுள்ளது. யாத்திராகமம் 21:5,6 - ஆகிய பகுதியை இது குறிப்பதாகச் சிலர் கருது கிறார்கள். ஏழாம் ஆண்டில் ஓர் அடிமை சுதந்தரம் பெற்றுச் செல்ல விரும்பாவிடில், அவனுடைய காது மடலை ஒரு கதவு நிலைக்கு அருகில் வைத்து ஒரு கம்பியால் எஜமானன் குத்துவான். அது முதல் அவன் அந்த எஜமானனுடைய நிரந்தர அடிமை என்று ஒப்பந்தம் செய்து கொள்கிறான். அவ்வடிமைக்கு மெய்ப்பொருளாக விளங்கும் கிறிஸ்து, மனுவுரு எடுத்தபோது மனவிருப்பத் துடன் அடிமையானவராகக் காணப்பட்டார் (பிலி. 2:7) மேலும், அவர் மீண்டும் வரும்போது தமது மக்களுக்குத் தொடர்ந்து ஊழியம் செய்வார் (லூக்கா 12:37).

"என் செவிகளைத் திறந்தீர்" என்னும் சொற் றொடர் எபிரெயர் 10:5 -இல் "ஒரு சரீரத்தை

எனக்கு ஆயத்தம் பண்ணினீர்" என்று மாற்றிக் கூறப்பட்டுள்ளது. தூய ஆவியானவர் இவ்வாறு மாற்றுவதற்குரிய அதிகாரம் படைத்தவர். அவரே முதலில் 40 -ஆவது சங்கீதத்தில் என் செவி களைத் திறந்தீர் என்று எழுதும்படி உயிரூட்டம் கொடுத்தவர், அவரே அதைப் புதிய ஏற்பாட்டில் "ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம் பண்ணினீர்" என்று மாற்றியவராதலால் அதற்குரிய விளக்கம் தரும்படி உரிமைபடைத்தவரும் அவரே ஆவார். செவி என்னும் ஓர் உறுப்பு முழு சரீரத்தையும் குறிக்கும்படி சங்கீதத்தில் உருவகமாகக் கூறப் பட்டுள்ளது. (இதுவே சினையாகு பெயர் என்று அழைக்கப்படுகிறது.) புதிய ஏற்பாடு அந்தச் சொற் களை விரிவாக்கம் செய்து இயேசு மனுவுரு வெடுத்த நிகழ்ச்சியைக் குறிப்பிடும்படி விளக்கிக் கூறுகிறது.

40:7,8 கிறிஸ்து மனிதராக மாறியபோது, அவர் வெறுமனே ஒப்புக்கொண்டவராக தம் நிலையை விட்டுவிட்டு வரவில்லை, மாறாக முழு மனதோடு மகிழ்ச்சியாக வந்தார். அச்சமயத்தில், "இதோ வருகிறேன், புத்தகச் சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது; என் தேவனே, உமக் குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன். உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது" என்று அவர் கூறினார். கிறிஸ்து இவ்வுலகிற்கு வருவார் என்று மட்டுமின்றி, அவர் வாஞ்சையோடு ஆயத்தமுள்ள இருதயத்தோடு தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றும்படி வருவார் என்று பழைய ஏற்பாடு தொடக்கத்திலி ருந்து முடிவுவரை தொடர்ந்து சொல்லுகிறது. தேவனுடைய சித்தம் அவருடைய தலையில் மட்டுமல்ல, அவருடைய இருதயத்திலேயே கடா வப்பட்டிருக்கிறது.

40:9,10 இந்த வசனங்கள் அவருடைய பூமிக் குரிய ஊழியத்தைக் குறிப்பிடுகின்றன. அவர் **மகா சபையிலே** மீட்பின் நற்செய்தியை அறிவித் தார், அதாவது இஸ்ரவேல் வீட்டாருக்கு அறிவித் தார். தேவன் அவரிடத்தில் அறிவுக்கும் படி கொடுத்த ஏதொன்றையும் அவர் மறைத்து வைக்கவில்லை. தேவன் இரட்சிக்கும்படி செய்கிற உதவி, அவரு டைய நிலையான சத்தியம், உறுதியான அன்பு ஆகியவை பற்றிய மாபெரும் உண்மைகளை அவர் இரகசியமாக ஒளித்து வைக்கவில்லை.

40:11 இப்பாடலின் எஞ்சிய வசனங்கள் (11-17) நம்மை மீண்டும் சிலுவையினிடமாக அழைத்துச் செல்கின்றன என்றே தோன்றுகிறது. நமது இரட் சகர் விடுக்கிற நிர்ப்பந்திக்கிற, மனவேதனை அளிக்கக்கூடிய துயர் மிகுந்த அழைப்பை நாம் கேட்கிறோம். 10 -ஆவது வசனத்தில் அவர் சற்று முன் கூறிய செய்தியோடு இது மிகவும் நெருக்க மான தொடர்புடையதாக இருக்கிறது. தொடர்பு இதுதான்: உம்முடைய இரட்சிப்பை பற்றி, உம்மு டைய சத்தியத்தைப் பற்றி, உம்முடைய நிலை யான அன்பைப் பற்றி மக்களுக்கு நான் சொல்லி விட்டேன். இப்பொழுது நீர் **உம்முடைய இரக்கங் களை** எனக்குக் கொடுக்காமல் மறைத்து வைத்து என்னுடைய சாட்சியைப் பயனற்றதாக மாற்றிவிடவேண்டாம். அவை தொடர்ந்து என் னைப் **பாதுகாக்கக்கடவது.**

40:12 கல்வாரியின் சித்ரவதைக் கொடுமை கள் அவர்மேல் ஓங்கி விழுந்த இடர்ப்பாடு நிறைந்த நேரத்தில்தான் இந்தக் கதறுதல் எழுந்தது. இங்கு சொல்லப்பட்டுள்ள **எண்ணிக்கைக்கு அடங் காத தீமைகள்** எண்ணிக்கைக்கு அடங்காத பாவங்களோடு தொடர்பு கொண்டவை, விளைவு காரணத்தோடு தொடர்புடையவை என்பதுபோல இதுவுமாயிற்று. ஆனால் அவர் "**என் அக்கிரமங் கள்...**" என்று குறிப்பிடுகையில், உண்மையில் அவை நம்முடைய அக்கிரமங்கள் என்பதை நினைவுகூரவேண்டும் - அந்தப் பாவங்களுக் காகவே அவர் அத்தகைய இழிந்த நிலையை ஏற்று தண்டனையைச் செலுத்தித் தீர்த்தார். அவருடைய **இருதயம் சோர்ந்துபோயிற்று.** நாம் பொறுத்தருளப்பட்டு, மன்னிப்பைப் பெறவேண் டும் என்பதற்காக அவர் அடைந்த கடும் வேத னையை நம்மில் யாரால் கற்பனை செய்து பார்க்க முடியும்!

40:13 கிறிஸ்து கடுந்துயரின் எல்லைக்குச் சென்றபோது உதவிநாடி - உடனடி உதவி நாடி பரலோகக் கதவுகளைத் திறந்து வேண்டுகிறார். "*தயவுசெய்து என்னை விடுவியும், தயவு செய்து உடனடியாக அதைச் செய்யும்*" என்பது போல அவருடைய விண்ணப்பம் அமைந்திருந் தது! அத்தகைய மன்றாட்டே வெற்றிபெறும். எல் லாம் வல்ல தெய்வீக ஆற்றல் அதன் மூலமாக செயல்புரியத் தொடங்குகிறது.

40:14,15 அவருடைய எதிரிகளுக்குக் கொடுக் கப்பட வேண்டிய தண்டனை அவர்களுடைய குற்றங்களுக்கு ஏற்றவண்ணம் அமைந்திருக்க வேண்டும் என்று விண்ணப்பிக்கிறார். அவரு டைய **பிராணனை அழிக்க** அவர்கள் முயன்ற காரணத்தால் அவர்கள் **வெட்கப்பட்டு**, தாறு மாறான நிலையை அடைய வேண்டும் என்பதே அவருடைய விருப்பமாக இருந்தது. அவருக்குத்

தீமை விளைவிக்க முயன்றவர்கள் வெறுக்கப் பட்டு அவமானமடைய வேண்டும். அவருடைய தாழ்ச்சியைக் குறித்து மனமகிழ்வு அடைந்தவர் கள் தங்களுடைய சொந்த இழிநிலையைக் கண்டு அதிர்ச்சியடைய வேண்டும். அன்பின் தேவனுக்கு இந்த வாசகங்கள் ஒன்றும் பொருந் தாது என்று சிலர் எதிர்த்துப் பேசலாம். அவர் களுக்கு நான் ஒரு செய்தியை நினைவுபடுத்து கிறேன், அன்பை மறுக்கும் மனிதன் தனது சொந் தத் தண்டனையைத் தானே தெரிந்தெடுக்கிறான்.

40:16 தேவனுடைய நண்பர்களோ, எப்பொழு தும் கர்த்தருக்குள் தங்களுடைய அகமகிழ்வைப் பெற்று அனுபவிக்க வேண்டும் என்பதே கிறிஸ்து வின் விண்ணப்பம். தேவனைத் **தேடுகிற அனை வரும்** அவருக்குள் **மகிழ்ந்து சந்தோஷப்பட** வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார். மேலும் அவருடைய **இரட்சிப்பை விரும்புகிறவர்கள்** யாவரும் **எப்பொழுதும் "கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக"** என்று சொல்ல வேண்டும் என் றும் எதிர்பார்க்கிறார்.

40:17 இயேசு கிறிஸ்துவைப் பொறுத்தவரை யில், அப்பொழுது வலுக்குன்றி தமக்கு உடன டித்தேவை ஏற்பட்டவராகக் காணப்படுகிறார். ஆனால் தேவனோ அவரைக் குறித்து மிகுந்த அக்கறை கொண்டவராக இருப்பதால் அது அவ ருக்கு ஆறுதல் தருகிறது. "தேவனுடைய சிந்தை களுக்கு வறுமையும் தேவையும் தடையாக இருப்பதில்லை" என்று ஒருவர் சொன்னாற்போல இது இருக்கிறது.

தேவனோ தம்முடைய அன்பின் குமார னுக்குத் **துணையும் விடுவிக்கிறவருமாயிருக் கிறார்**. ஆகவே கர்த்தராகிய இயேசு தம்முடைய இறுதிக் காப்பு வாசகமாக வேண்டுதலை ஏறெடுக் கிறார், "என் தேவனே, தாமதியாதேயும்." அதற் கான பதில் வருவதற்கு வெகு காலதாமதம் ஏற் படவில்லை. மூன்றாவது நாளில் திருத்தந்தை இறங்கிவந்து அவரை உளையான சேற்றுக் குழி யிலிருந்து மீட்டெடுத்தார், இதை நாம் சங்கீதத் தின் முற்பகுதியில் காண்கிறோம்.

இந்தச் சங்கீதத்தில் முதலாவதாக நாம் மன் றாட்டுக்கான பதிலையும் அதன்பிறகு அந்த மன் றாட்டையும் காண்கிறோம். "அவர்கள் கூப்பிடு கிறதற்கு முன்னே நான் மறுஉத்தரவு கொடுப் பேன்; அவர்கள் பேசும்போதே நான் கேட்பேன்" என்னும் வாக்குறுதியை இது தெளிவாக விவரிக் கிறது (ஏசாயா65:24).

சங்கீதம் 41: நோயாளியின் அறையிலிருந்து எழுந்த மன்றாட்டு

தாவீது நோயுற்றிருந்தான், அது சாதாரண நோயாக இருக்காது என்னும் நம்பிக்கையோடு அவனுடைய பகைவர் செயல்பட்டார்கள். அவனு டைய நோயின் காரணமாக அவன் நிச்சயமாக மரணமடைவான் என்னும் எண்ணத்தில் அவர் கள் ஏற்கனவே தங்களுக்குள்ளாக மகிழ்ச்சிய டையத் தொடங்கிவிட்டார்கள். தாவீதின் துக் கத்தை அதிகரிக்கச் செய்த செய்தி என்ன வெனில், ஒரு காலத்தில் அவனுடைய நெருங்கிய நண்பனாக இருந்தவனே இப்பொழுது அவனு டைய துரோகிகளில் ஒருவன் என்பதே.

41:1-3 ஆனாலும் அந்த நோயாளிக்கு ஆறு தல் இல்லாமல் இல்லை. முதலாவது, **சிறுமைப் பட்டவன்மேல் சிந்தையுள்ளவன்** கர்த்தருடைய ஆசிர்வாதத்தைப் பெறுகிறான் என்று அவன் நினைவுகூருகிறான். இங்கு சிறுமைப்பட்டவன் என்று குறிப்பிடப்பட்டிருப்பவன் பொருளாதார அடிப்படையில் அவ்வளவு ஏழ்மையானவன் என்பது பொருளன்று, மாறாக அவன் உடல்நலக் குறைவடைந்து நோயினால் வலிமை இழந்தவன் ஆவான். ஆழ்ந்த வேதனையில் இருக்கக் கூடியவர்களுக்குக் கர்த்தர் என்ன செய்தாரோ, அதையே தானும் செய்ததாகத் தாவீது தன்னைத் தேற்றிக்கொண்டான் - அவன் அவர்களுக்குத் துணையாயிருந்தான், ஆறுதல் அளித்தான், நோயுற்றோருக்கு ஆறுதல் கூறி மகிழ்வித்தான். இப்பொழுது கர்த்தர் தீங்கு நாளில் அவனையும் விடுவிப்பார் என்னும் வாக்குறுதியை அவன் தன துரிமையாகக் கோருகிறான். ஆம், எப்போதும் அவன் பாதுகாப்பாக இருக்கிறானா என்பது பற்றி கர்த்தர் விழிப்போடு இருக்கிறார், அவ்வாறு அவர் அவனுடைய உயிரைக்காத்து வருகிறார். நோயுற்றவர்களிடமும், பாடு அனுபவித்தவர் களிடமும் தாவீது அக்கறை செலுத்தினவன் என் னும் நற்பேறுபெற்றவனாயிருந்த காரணத்தால், தேவன் அவனைக் கெடுநோக்கம் கொண்ட அவ னுடைய பகைவரின் சித்தத்திற்கு ஒப்புவிக்க மாட்டார். அதற்கு மாறாக, நோயுற்றுப் படுக்கை யில் கிடக்கும் தாவீதின் தேவைகள் அனைத்தை யும் அவர் சந்தித்து, மீண்டும் அவனை நலத் தோடும் பெலத்தோடும் எழுப்புவார். இங்கு கர்த்தர் நோயுற்ற மனிதனுடைய படுக்கையை அவனுடைய வசதிக்கேற்ப சரிசெய்யும் தாதிக்கு ஒப்பிடப்படுகிறார்.

41:4 நோயுற்றவர்களுக்கும் இயலாதவர் களுக்கும் தான் முந்தைய நாட்களில் செய்த உதவியை மட்டுமே தாவீது முற்றிலுமாகச் சார்ந் திருக்கவில்லை. அவன் ஞானத்தோடு தனது நோயைப்பற்றி கர்த்தரிடத்தில் மன்றாடுகிறான், தன்னுடைய பாவத்தை அறிக்கை செய்கிறான், மேலும் உடல் நலம் பெறுவதற்குத் தான் தகுதி யற்றவன் என்று கூறி அதைத் தரும்படி வேண்டு கிறான். ஒரு விசுவாசியின் வாழ்க்கையில் உண் டாகிற நோய்கள் அனைத்துமே பாவத்தால் உண்டானவை என்று சொல்ல முடியாது. எடுத் துக்காட்டாக, வயது முதிர்ந்தவர்களுக்கு வருகிற நோய்கள், இயல்பாக வருகின்றவையே; வயது முதிர்ச்சியின் காரணமாக உடல்நிலை சீர்கெடக் கூடிய வாய்ப்பு உள்ளது. சில வேளைகளில் பாவத் திற்கும் நோய்க்கும் நேரடியான தொடர்பு இருக் கிறது. அதற்கான வாய்ப்பு மிகச்சிறிய அளவில் இருப்பதாக ஒருவன் உணருவானானால், அவன் மனவருத்தத்தோடு அறிக்கை செய்தவனாகக் கர்த்தரிடத்தில் ஓடிச் செல்ல வேண்டும். அப்படிப் பட்ட எல்லாத் தருணங்களிலும், உள்ளூர் மருத் துவர் தரும் சிகிச்சைகளுக்கு முன்பாகவே மா பெரும் மருத்துவரின் மன்னிப்பைப் பெறவேண்டும்.

41:5 இதற்கிடையே தாவீது இறந்து போனான் என்னும் செய்தி மருத்துமனையிலிருந்து எப் பொழுது வரும் என்று அவனுடைய எதிரிகள் நம்பிக்கையோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தார் கள். **"அவன் எப்பொழுது சாவான்?"** ஒருவரோடு ஒருவர் அவ்வாறு பேசிக்கொண்டார்கள். "இந்த மனிதனின் முடிவைப் பற்றி எப்பொழுது கேள்விப் படுவோம்?"

41:6 எப்போதாவது ஒருமுறை, இந்தக் கெடு நோக்கமுடைய மனிதர்களில் ஒருவன் பார்வை நேரத்தில் வருகிறான், ஆறுதல் தருவதற்கு அவ னிடத்தில் வார்த்தையில்லை, நம்பிக்கை தரவோ உற்சாகப்படுத்தவோ அவனால் முடியவில்லை. ஒன்றும் சொல்லாமல் பேசிக்கொண்டே இருக் கிறான். தாவீதுக்கு எதிராகப் பேசுவதற்கு ஏதே னும் செய்தி கிடைக்குமா என்பதை அறிவதற்காக வந்தவன் போலத் தோன்றுகிறது. அங்கிருந்து அவன் சென்றபிறகு அவன் என்ன கற்பனைகளை யெல்லாம் செய்ய முடியுமோ அவற்றைச் செய்து தவறான செய்திகளைப் பரப்புகிறான்.

41:7,8 நோயுற்ற மனிதனைப் பற்றிய வதந்தி பரவிக்கொண்டிருந்தது. அழிவின் தீர்க்கதரிசி கள் தாவீதுக்குப் பேரிடர் வந்துவிட்டதாகத் தங்க ளுக்குள்ளே கற்பனை செய்துகொண்டிருந்தார் கள். மரணத்துக்கேதுவான நோய் அவனைத் தாக்கிவிட்டதாக அவர்கள் செய்தியைப் பரப்பி னார்கள். அவனுடைய அடுத்த கட்டம் பிணவறை தான் என்பதே அவர்கள் பேச்சு.

41:9 இவையெல்லாவற்றிலும் மிகவும் கொடூர மான செயல், அவனோடு ஒரு காலத்தில் நெருக்க மான நண்பனாயிருந்தவன் செய்த துரோகமே யாகும். வாழ்க்கையில் ஏற்படக்கூடிய எல்லாச் சோக நிகழ்ச்சிகளிலும், உங்களோடு மிகவும் நெருக்கமாயிருந்த தோழன் உங்களுக்கு எதி ரான சதிச்செயலில் பங்கு பெறுவதே மிகவும் கசப் பான நிகழ்ச்சியாகும். யூதாஸ் காட்டிக்கொடுத்த போது நமது இரட்சகர் இத்தகைய வருத்தத்தை அனுபவித்தார். இதுபோன்ற அனுபவம் அந்தத் தளபதியைப் பின்பற்றுவோருக்கு வழக்கத்துக்கு மாறானது அன்று.

கர்த்தராகிய இயேசு யூதாசைக் குறிப்பிட 9 - ஆவது வசனத்தை மேற்கோள் காட்டினார். ஆனால் அவர், **"என் பிராணசிநேகிதனும், நான் நம்பினவனும்"** என்னும் பகுதியை விட்டுவிட்டது குறிப்பிடத்தக்கது. யூதாஸ் தம்மைக் காட்டிக் கொடுப்பான் என்று முன்னறிந்த கர்த்தர் அவனை ஒருபோதும் நம்பவில்லை. ஆகவே அவர், "என் னுடன் அப்பம் புசிக்கிறவன் என்னுடனே தன் குதி காலைத் தூக்கினான்" என்று மட்டுமே கூறி னார்(யோவான் 13:18).

41:10 தாவீது தன்னைப் புறமுதுகில் குத்தின வனை அப்படியே விட்டுவிட்டு, கர்த்தரிடம் இரக் கத்தை நாடினவனாகத் திரும்பினான். மற்றவர் கள் அவனை விட்டு விலகிச் சென்ற தருணங் களில் அவன் உண்மையோடு கர்த்தரைப் பற்றிக் கொண்டான், தான் நிற்பதற்கான ஆதாரமாக அவரையே சார்ந்துகொண்டான். பின்னர் விநோத மாகத் தோன்றுகிற ஒரு மன்றாட்டை அவன் ஏறெடுக்கிறான்: **"நான் அவர்களுக்குச் சரிக் கட்ட என்னை எழுந்திருக்கப்பண்ணும்."** தாவீ தின் சிறப்பை எண்ணிப்பார்க்கையில், இது முதலில் தகுதியற்றதாகத் தோன்றுகிறது, அவன் கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்ட இஸ்ர வேலின் அரசன் என்பதை நாம் நினைவுகூர வேண்டும், மேலும் ஆட்சிக்கு எதிரான சூழ்ச்சி, காட்டிக்கொடுத்துத் துரோகம் செய்தல் ஆகிய வற்றை அடக்கவேண்டிய கடமை அரசனுக்கு உண்டு என்பதையும் நாம் அறிய வேண்டும். ஒரு தனி மனிதன் என்னும் நிலையில் அவன் தனக்கு

எதிரான பாதகச் செயலையும் துரோகத்தையும் பொறுத்துக் கொள்ளலாம், ஆனால் அரசன் என்னும் நிலையில் அரசைக் கவிழ்க்க முயலும் எந்தச் செயலையும் அவன் ஒடுக்கியாள கடமையுடையவன்.

41:11,12 தனது எதிரிகளின் திட்டம் தோற்றுப் போனதை, கர்த்தர் தனக்குச் சாதகமாகச் செயல்படுவதன் அடையாளம் என்று தாவீது காண்கிறான். அப்பொழுது அவன், **"நீர் என் உத்தமத்திலே என்னைத் தாங்கி, என்றென்றைக்கும் உம்முடைய சமுகத்தில் என்னை நிலை நிறுத்துவீர்"** என்று கூறுகிறான்.

இந்த மொழிபெயர்ப்பு சரியானது என்று நாம் கருதுவோமானால், தாவீது தன்னை அளவுக்கதிகமாய் மேன்மைபாராட்டிப் பேசுகிறான் என்று தோன்றும். அவன் பாவங்கள் செய்து வீழ்ந்து போனவனாக இருந்தபோதிலும், உண்மையாகவே அவன் உத்தமமான மனிதனே ஆவான். அவனுடைய பகைவரோடு ஒப்பிடுகையில் அவன் குணநலம் மிகுந்த மாதிரியாகத் திகழ்ந்தான். அவனுடைய வாழ்வில் அவன் நேர்மையோடும் நீதியோடும் இருந்ததைக் கர்த்தர் கண்டதாலே அவர் அவனைத் தாங்குவதற்கான வாய்ப்பு நிறைவாய் இருந்தது.

கெலிநேயு என்பாரின் மொழிபெயர்ப்பு நம்முடைய சிரமத்தைத் குறைக்கிறது:

> நீர் என்னைத் தாங்குவீரானால், நான் தீங்கு ஏற்படாமல் உமது சமுகத்தில் என்றென்றும் நிலைநிற்பேன்.

இந்த வசனத்தில் எல்லாம் கர்த்தரைச் சார்ந்திருக்கிறதேயொழிய, தாவீதின் உத்தமத்தையல்ல. கர்த்தருடைய பராமரிக்கும் கிருபை இவ்வுலக வாழ்வில் பாதுகாப்பையும், விண்ணக அரசருடைய முன்னிலையில் என்றென்றும் நிலைத்திருக்கக்கூடிய உறுதியையும் தருகிறது.

41:13 நம்பிக்கையும் மனவமைதியும் கொண்டவனாகப் பாடலாசிரியன் தனது தொனியை உயர்த்திப் புகழ்ச்சியால் பொங்கியெழுகிறான். உடன்படிக்கையை நிலைநிறுத்துகிற **இஸ்ரவேலின் தேவனாகிய** யெகோவா **என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும்** துதிக்கப்பட பாத்திரராயிருக்கிறார். இப்புகழ்மாலைக்கு இரண்டு முறை ஆமென் என்று கூறுகிறான், நாமும் அவ்வாறே செய்வோமாக!

2. நூல் இரண்டு [சங்கீதங்கள் 42-72]

சங்கீதம் 42: இறைவனுக்காகத் தாகமாயிருத்தல்

தாவீதின் சொந்த மகன் அப்சலோம் அவனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தபோது, தாவீது நாடு துரத்தப்பட்டவனாக அலைந்து திரிந்தான். அத்தருணத்தில் அவன் எழுப்பிய குரலே இச்சங்கீதம் என்று சிலர் கருதுகிறார்கள்.

மேசியா நிராகரிக்கப்பட்டுப் பாடுகள் அனுபவித்தபோது, அவர் எழுப்பிய தொனியே இப்பாடல் என்று வேறு சிலர் புரிந்துகொண்டிருக்கிறார்கள்.

எதிர்காலத்தில் வரவிருக்கிற உபத்திரவ காலத்தின்போது யூத விசுவாசிகளான மீதியானவர்கள் ஏறெடுக்கும் வருத்தம் தோய்ந்த அழுகைக்குரல் என்று இன்னும் சிலர் இதனைக் காண்கிறார்கள்.

விசுவாசி ஒருவன் தான் தொடக்கத்தில் கொண்டிருந்த ஆதி அன்பைப் பின்னோக்கிப் பார்த்து, கர்த்தருடன் அதே விதமான ஐக்கியத்தைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டும் என்று எழுப்புகிற குரல் என்று குறிப்பிட விரும்புகிறவர்களும் இருக்கிறார்கள்.

இதில் ஏதொன்றையும் தனிமைப்படுத்திப் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை, ஏனெனில் மேலே சொல்லப்பட்டுள்ள அனைத்துக் கருத்துகளும் தகுதியானவையாகவே உள்ளன. இந்தப் பாடல் பல்திறப் புலமைக்கு ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

42:1 தேவனோடு நாம் ஐக்கியம் கொள்ள வேண்டும் என்கிற நம்முடைய உள்ளார்ந்த வாஞ்சை, வறண்டநிலத்தில் அலைந்து திரிகிற வேட்கை மிகுந்த **மானின்** நிலைக்கு ஒப்பாயிருக்கிறது. அதனுடைய விலாப் பக்கங்கள் துடிக்கின்றன, சுவாசம் தீவிரமாகிப் பெருமூச்சாக வெளிப்படுகிறது, இவ்விதமாக அது **நீரோடையைக்** காண வாஞ்சிக்கிறது. கமாலியேல் பிரா.˙.போர்டு என்பார் இதனைத் தனது அனுபவமாகக் கூறுகிறார்:

> என்வாழ்வில் கால்கொண்டு
> மிதித்திட்ட இடமெங்கும்
> என்இறைவா மாற்றமில்லா
> பேராவல் ஒன்றுதானே,
> ஆர்வமிக்க மகத்தான
> பெருவிருப்பம் எனைவருத்த
> தீர்ந்திடாத பெருந்தாகம்
> என்னுள்ளில் உமைக்காண!

42:2 நம்முடைய **தாகம்** தேவன் ஒருவர் மேலேயே இருக்கிறது; வேறு ஒருவராலும் அதைத் தீர்க்க முடியாது. மேலும் அது **ஜீவனுள்ள தேவன்** மேலேயே இருக்கிறது - உயிரற்ற சிலையின் மேல் இல்லை. கர்த்தருடைய முன்னிலைக்கு நேரடியாகச் சென்று அவருடைய முகத்தைக் காண்பதால் மட்டுமே இந்த விருப்பம் முற்றிலும் நிறைவேறும்.

> திருமுகம் காண்பியும், ஒருமுறை வானவர்
> இன்முகம் காண்பதென் வாஞ்சை
> அருளிய அன்பினைத் தவிர்த்து வேறன்பைக்
> கனவிலும் நினைத்திடேன் உறுதி.
> மண்ணின் ஒளிகள் மறைந்திடும் விரைவில்
> மகிமையும் ஒழிந்திடும் சடுதியில்
> விண்ணின் அழகு தோன்றிடும் வேளையில்
> புவியழகு காண்கிலேன் திண்ணம்.

42:3 கர்த்தரிடத்திலிருந்து பிரிந்திருக்கக் கூடிய கசப்பான அனுபவத்தை யாரால் விவரித்துக் கூறமுடியும்? அ.˙.து இடைவிடாத கண்ணீர் எனக்கு உணவாயிற்று என்று சொல்லக்கூடிய நிலைக்கு ஒப்பாகும், மேலும் துயர்தணிக்க வியலாத கடும் வேதனையுடைய வாழ்க்கையாகக் காணப்படும். அவை போதா என்று சொல்லும்படி, பகைவரின் பழிச்சொற்களால் வேதனை கூடுகிறது, **"உன் தேவன் எங்கே?"** தாவீதிடம், "இப்போதும் இதோ, உன் அக்கிரமத்தில் அகப்பட்டாய்; நீ இரத்தப்பிரியனான மனிதன்" என்று சீமேயி கூறியபோது இந்தப் பொருளில்தான் கூறினான் (2 சாமு. 16:8). இதே பொருளில்தான் பிரதான ஆசாரியரும் சிலுவையில் அறையப்பட்ட மேசியாவிடம், "இவன் தேவன்மேல் நம்பிக்கையாயிருந்தானே; அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும்" என்று கூறினார்கள் (மத். 27:43).

42:4 அதன்பிறகு, சிறந்த நாட்களைக் குறித்த நினைவும் இருக்கத்தான் செய்கிறது. தேவனோடு இடைவிடாத ஐக்கியம் கொண்டவனாக நடப்பது என்னும் நினைவு எத்தனை அற்புதமானது. அதுவே இத்தகைய ஐக்கியமற்ற நிலையைப் பொறுத்துக்கொள்ள இயலாததாக்குகிறது. நான் காவது வசனத்தைத் திருவாளர் மொழிபெயர்த்த போது இந்த மனநிலையை அற்புதமாக வெளிப் படுத்துகிறார்:

> முந்தின நினைவுகள் எனக்குள்ளே மீண்டும் வருகின்றன, அவை என் இருதயத்தை உருக்குகின்றன; களிப்பும் துதியும் கலந்த தொனி

யோடும், மகிழ்ச்சியின் ஆரவாரத்தோடும் திரளான மக்கள் கூட்டம் தேவனுடைய ஆலயத்துக்குச் செல்லுகின்ற வேளையில், அவர்களோடு நானும் எவ்வாறு சேர்ந்து கொண்டேன் என்பதை நினைவுகூருகிறேன்.

42:5 முந்தின நாட்களின் மகிழ்ச்சியைக் குறித்த சிந்தனை ஆவிக்குரிய மனவழுத்தத்தை ஏற்படுத்துவதோடு, அவநம்பிக்கைக்கும் நம்பிக்கைக்கும் இடையே மனதை ஊசலாடச் செய்கிறது. ஆத்துமா தொய்ந்து போகிறது, தியங்குகிறது. ஆனால் விசுவாசமோ இந்த மனநிலையின் பாரத்தை நோக்கி அறைகூவல் விடுக்கிறது.

தேவனை நோக்கிக் காத்திரு; அவர் சமுகத்து இரட்சிப்பினிமித்தம் நான் இன்னும் அவரைத் துதிப்பேன்.

இப்பகுதியில் "எல்லாம் நன்றாய் நடக்கும்" என்னும் பயபக்திக்குரிய சித்தாந்தம் மட்டுமே அடித்தளமாக இருக்குமென்றால், இது தகுதியற்ற எண்ணமாகிவிடும். தேவனுடைய மக்கள் அவருடைய முகத்தைக் காண்பார்கள் என்னும் தேவ வசனங்களே இதற்கான முழு நிச்சயத்தைத் தருகின்றன. இந்த நம்பிக்கைக்கு அவையே அடித்தளமாகும் (சங். 17:15; வெளி. 22:4).

42:6 தோல்வி மனப்பான்மை ஒரு சுழற்சி போல வருகிறது. ஆனால் விசுவாசமோ எதிர்த்தாக்குதலை நடத்துகிறது. **யோர்தான் தேசத்திலிருந்தும் எர்மோன்** மற்றும் **சிறு மலைகளிலிருந்தும்** தேவனை நினைவுகூரும்படியான நம்பிக்கையின் உறுதி வருகிறது. பெரும்பாலும் இந்த மூன்று இடங்களும் ஆவிக்குரிய மூன்று அனுபவங்களைக் குறிக்கக்கூடும்; அவை என்னவென்று நாம் அறியோம். தெளிவாகத் தெரிவது என்னவென்றால், அவை நாடுகடத்தப்பட்டிருந்த போது தாவீது தங்கியிருந்த இடங்கள், அவை எருசலேமைவிட்டு வெகுதொலைவில் இருந்தவை. நாம் தேவனுடைய வீட்டிற்குச் செல்ல முடியாவிட்டாலும் கூட, நாம் தேவனுடைய வீட்டை நினைவுகூர முடியும் என்பதே இங்கு சொல்லப்பட்டுள்ள கருத்து.

42:7 நாம் ஏழாவது வசனத்திற்கு வந்திருக்கும்போது, நம்முடைய உள்ளுணர்வுகள் நாம் கல்வாரியினிடமாய் வந்திருக்கிறோம் என்று குறிப்பிடத்தக்க வகையில் எடுத்துரைக்கின்றன. தேவனுடைய நியாயத்தீர்ப்பு என்னும் அலைகளும் திரைகளும் அவர்மேல் புரண்டு சென்ற போது கர்த்தர் எழுப்பிய கதறுதலின் சத்தம் கேட்கிறது. தெய்வீகக் கடுஞ்சினம் கொட்டும் மழையெனவும் இடிமுழக்கம் போன்ற பெருந்தொனியோடும் கர்த்தர்மேல் அருவிபோல் பொழிந்த போது, அவர் நம்முடைய பாவங்கள் எல்லாவற்றையும் சிலுவையில் தொங்கிய வண்ணம் தம் சரீரத்தில் ஏற்றுக்கொண்டார்.

துயரத்தின் இறுதிக்காட்சி காண்பீர்

இறைவனது கடுஞ்சீற்றம்
அலைபோலப் புரண்டுவர
குறைவுறாத மன்னவரும்
குறுக்கையினில் நலிவுற்றார்.
தப்பிழைத்தோன் வாழ்வுபெற
அடைந்திட்டார் இன்னல்கள்
ஒப்பிலாத அன்புதனை
மாசற்றோர் செலுத்திட்டார்.
கருணையாகத் தந்திட்டார்
தம்முயிரை எனக்காக
பெருமையோடு பாடிடுவேன்
எந்நாளும் அவர்புகழை!
– J. J. ஹாப்கின்ஸ்

42:8 ஆயினும் திருவாளர் ஜார்ஜ்முல்லர், "விசுவாசத்தின் வளர்ச்சிக்கான உணவு சோதனைகளே" என்றுரைத்தார். ஆகவே நம்பிக்கையுள்ள விசுவாசி உறுதியோடு கூறுகிறான்:

கர்த்தர் பகற்காலத்திலே தமது கிருபையைக் கட்டளையிடுகிறார்; இராக்காலத்திலே அவரைப் பாடும் பாட்டு என் வாயிலிருக்கிறது; என் ஜீவனுடைய தேவனை நோக்கி விண்ணப்பஞ் செய்கிறேன்.

மூன்றாவது வசனத்தில் காணப்படும் இரவு பகல் வரிசை நிகழ்வுக்கான விடையே இது. "இரவும் பகலும் என் கண்ணீரே எனக்கு உணவாயிற்று" என்ற அங்கு பாடலாசிரியன் கூறினான். ஆனால் இப்பொழுதோ பகல் மாறாத அன்பினாலும், இரவு பாடலோடும் விண்ணப்பத்தோடும் நிறைந்திருக்கின்றன. இவ்வாறாக பகலிலும் இரவிலும் இறைவனின் நன்மை மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

42:9,10 மீண்டும் ஒருமுறை நம்பிக்கையின்மை திரும்புகிறது, இம்முறை இதற்கான காரணம் எதிரிகளின் இரக்கமற்ற ஒடுக்குதலே யாகும். தேவன் தமது பிள்ளையை மறந்து விட்டது போலத் தோன்றுகிறது. துக்கம் நிறைந்து கைவிடப்பட்ட மனிதன் போல விசுவாசி அலைந்து திரிகிறான். "என்னுடைய நெஞ்சை உருவக்குத்தும்படி என் எதிரிகள் சத்தமிட்டுத் திட்டுகிறார்

கள்" என்று அவன் கூறுகிறான் (கெலிநேயு மொழி பெயர்ப்பு). வெளியரங்கமான தோற்றங்களின்படி தேவன் தமது பிள்ளையைக் கைவிட்டது போலத் தோன்றுகிறது. ஆகவே அவனுடைய பகைவர், "உன் தேவன் எங்கே" என்று நச்சரிக்கிறார்கள்.

42:11 ஆனால், கடைசி வார்த்தை எப்போதும் விசுவாசத்திடமே இருக்கிறது. ஒருக்காலும் நம் பிக்கையிழக்க வேண்டாம். நிலையற்றுத் திரிய வேண்டாம். **தேவனை நோக்கிக் காத்திரு**; உன்னுடைய மனவழுத்தத்திலிருந்தும், பகை வரிடத்திலிருந்தும் விடுவிக்கப்படுவாய். உனது இரட்சகர் என்றும் உனது தேவன் என்றும் நீ மீண்டும் உன்னுடைய **துதியை** ஏறெடுப்பாய். இது ஒருவர் கூறினாற்போல இருக்கிறது:

> இன்னல் நீக்கும் வழி – சோர்வடையும்போது அதை எதிர்த்து அறைகூவல் விடுங்கள், மேல் நோக்கிப் பாருங்கள், நம்பிக்கை பெறுங்கள். கிறிஸ்தவ வாழ்க்கை விழிப்போடிருத்தல், மேல் நோக்கிக் கடுமுயற்சி செய்தல், செயல் நட வடிக்கையில் ஈடுபடுதல், ஓட்டப்பந்தயத்தில் ஓடு தல் ஆகியவையே. கீழ்நோக்கிய பார்வை, கூப்பிய கரங்கள், தோல்வியை ஒப்புக்கொண்ட பேச்சு ஆகியவை அறவே அகற்றப்படுதலும் வேண்டும்.

சங்கீதம் 43: உமது வெளிச்சத்தையும் சத்தியத்தையும் அனுப்பியருளும்

முந்தின சங்கீதத்தின் இணைச் சங்கீதமாக இது விளங்குகிறது. இவற்றிற்கிடையே உள்ள தொடர்பு மிகப் பெரிதாக இருக்கின்ற காரணத் தால் NEB மொழிபெயர்ப்பு இரண்டையும் சேர்த்து ஒரே பாடலாகத் தந்துள்ளது.

43:1,2 விசுவாசத்தை மறுதலித்த தேசமும் நீதியற்ற மனிதர்களும் தேவனை எதிர்த்து நின்றதால் இஸ்ரவேலர் நாடுகடத்தப்பட்டார்கள்; அவர்களில் சீயோனுக்குச் சென்று தேவனைத் தொழுதுகொள்ள வேண்டும் என்று விருப்பங் கொண்டு அதற்காக ஏங்கிய மனிதனின் தொடர்ச் சியான மன்றாட்டை இங்கு காண்கிறோம். விசுவாச மற்ற இஸ்ரவேல் தேசத்தாலும் அந்திக் கிறிஸ்து வாலும் உபத்திரவகாலத்தில் ஒடுக்கப்பட்ட பய பக்தி நிறைந்த மீதியான யூதர்களை இப்பாடல் வரைந்து தந்திருக்கிறது எனவும் கூறலாம்.

தனது நிலை நியாயமானது என்று நிலை நிறுத்துவதற்காகவும் உதவிக்காகவும் ஏறெடுக் கப்பட்ட மன்றாட்டு முதலில் வருகிறது. விசுவாச மற்ற சகோதரருக்கும் பாவ மனிதனுக்கும் எதி ரான தம்முடைய மக்களின் வழக்கு நேர்மை யானது என்று மெய்ப்பிக்கும்படி பாடலாசிரியன் தேவனிடத்தில் வேண்டுகிறான். இது விசுவாசத் தின் கடும் போராட்டங்களில் ஒன்றாகும், தேவ னிடத்தில் அடைக்கலம் பெற்ற போதிலும் அவ ராலே தள்ளப்பட்டது போன்ற உணர்வு. இது விசு வாசத்தின் புதிர்களில் ஒன்றாகும், வெற்றி பெறு கிறவரின் பக்கம் இருந்தபோதிலும் அவன் எதிரி யின் குதிகால்களுக்குக் கீழே பாடுபடுகிறான்.

43:3 அதன் பிறகு சீயோனுக்குத் திரும்ப வேண்டுமென்னும் உறுதியான குறிப்பிட்ட மன் றாட்டு ஏறெடுக்கப்படுகிறது. இதன் மொழிநடை ஒப்பற்ற அழகு படைத்ததாகத் திகழ்கிறது:

> **உமது வெளிச்சத்தையும் உமது சத்தியத்தையும் அனுப்பியருளும் அவை என்னை நடத்தி, உமது பரிசுத்த பர்வதத்திற்கும் உமது வாசஸ்தலங்களுக்கும் என்னைக் கொண்டுபோவதாக.**

தேவனுடைய முன்னிலையாகிய வெளிச் சத்தையும் தேவனுடைய வாக்குறுதியாகிய சத்தி யத்தையும் கொண்ட மெய்க்காவலர் தனக்கு வேண்டும் என்று பாடலாசிரியன் விரும்புகிறான். இவை அவனுக்கு முன்சென்று வழிநடத்த வேண் டும், நன்மையும் கிருபையும் அவனைப் பின் தொடர வேண்டும் (சங். 23:6). அவன் தேவனு டைய **பரிசுத்த பர்வதத்திற்கு** மகிழ்ச்சியோடு திரும்பி வருவான் என்னும் உறுதி அவனுக்குத் தரப்படுகிறது.

43:4 மூன்று மற்றும் நான்கு ஆகிய வசனங் களில் காணப்படும் வளர்ச்சியைக் கவனியுங்கள்:

> **உமது பரிசுத்த பர்வதத்திற்கும்;**
> **உமது வாசஸ்தலத்திற்கும்;**
> **உமது பீடத்தண்டைக்கும்;**
> **எனக்கு ஆனந்த மகிழ்ச்சியாயிருக்கிற தேவனிடத்திற்கும்.**

மெய்யாகத் தொழுதுகொள்பவர் பூமியில் ஒரு குறிப்பிட்ட இடத்திலோ, கட்டடத்திலோ, பலி பீடத் திலோ மனநிறைவு அடையமாட்டார். அவர் **தேவ னிடத்திற்கே** சென்று சேரவேண்டும்!

43:5 தேவனுடைய முன்னிலைக்குச் செல்ல வாய்ப்பு பிரகாசமாயிருப்பதை உணர்ந்த ஆசிரி யன் மீண்டும் சோர்வும் தொல்லையும் அடைந் தவனாகத் தனக்குள்ளே மறுத்துரைக்கிறான். தேவனிடத்தில் நம்பிக்கையாயிரு என்று அவன்

தனக்குள்ளே வலியுறுத்துகிறான். அவர் விரும் பிய முடிவை உனக்குத் தருவார் என்பது நிச்சயம்.

உள்ளமே பொறுத்திரு, மாசிறந்த
விண்ணக நண்பர் நடத்திடுவார்,
முள்ளுள்ள வழியினில் சென்றாலும்
உன்னத முடிவினைப் பெற்றிடுவாய்!

– காதரினா வோன் சிலேகல்

சங்கீதம் 44: அடிக்கப்படும் ஆடுகள்

முந்தைய வெற்றியின் நினைவு நம்முடைய மனதில் இருக்கும்போது தற்போதைய தோல்வி கூடுதலான கசப்பை உண்டுபண்ணுகிறது. தேவன் தமது முகத்தை நமக்கு மறைத்துக் கொண்டது போலத் தோன்றுகிற நேரங்களைக் காட்டிலும் தேவனோடு நாம் கொண்டிருக்கிற ஐக்கியத்தின் மேன்மையை வேறு எப்பொழுதும் அதிகமாக உணருவதில்லை.

44:1-3 தேவன் இஸ்ரவேலருக்காக உள்ளக் கிளர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் குறுக்கிட்டுச் செயல்புரிந்த அனுபவங்களால் அவர்களுடைய வரலாறு நிறைந்திருந்தது. கானான் நாட்டிலி ருந்து அவர் புறவின மக்களைத் துரத்தி விட்டு, அந்த நாட்டைத் தம் சொந்த மக்களுக்குக் கொடுத்தார். கானானியரைக் கீழ்ப்படுத்தியதன் மூலமாக, இஸ்ரவேலர் தங்களுக்குச் சொந்த மான நாட்டில் சுதந்தரமாக வாழும்படி குடியமர்த் தப்பட்டார்கள். நிச்சயமாக யூதர்களுடைய போர்த் திறமையினால், அவர்கள் மனதிற்கினிய நாட்டை வெற்றி கொள்ளவில்லை. அல்லது அவர்களுடைய சொந்த வல்லமையால் அந்த வெற்றியை அடையவுமில்லை. அந்த வெற்றி தேவனுடைய வலிமை மிக்க வலதுகரத்தினால் உண்டானது. அவருடைய எல்லாம் வல்ல புயத் தால் உண்டானது, அவருடைய அன்பு நிறைந்த பாசம் அவர்கள் மேல் பொழியப்பட்டதால் ஏற் பட்டது.

44:4-8 கர்த்தர் நமக்காகச் செய்தவற்றின் நினைவு, அவரைப் புகழ்ந்து போற்றும்படி நம்மு டைய இருதயங்களுக்கு உயிரூட்டத்தைத் தரு கிறது. தகுதியற்ற யாக்கோபின் தகுதியற்ற மக்க ளுக்கு வெற்றிகளை வழங்கியவர் மகா பெரிய அரசரும் வல்லமையுள்ள தேவனும் ஆவார். அவர் மூலமாகவே இஸ்ரவேல் தனது எதிரிகளைக் கீழ்ப்படியச்செய்தது, மேலும் தன்னைத் தாக்க வந்த பகைவர்மேல் வெற்றிநடை போட்டது. வெற்றிபெறுவதற்கு வில்லையும் அம்பையும் நம்புவதில் பயனில்லை, பட்டயமானது பாதுகாக் கக்கூடிய இரட்சகர் அல்ல என்னும் பாடத்தை இஸ்ரவேல் கற்றுக்கொண்டது. தேவன் ஒருவரே தம் மக்களை விடுவித்தவர், அவர்களுடைய எதிரிகளை முற்றிலும் குழப்பமடையச் செய்த வரும் அவரே! மக்கள் அவரோடு தாங்கள் கொண்டுள்ள தொடர்பைக் குறித்து மேன்மை பாராட்டுவதில் வியப்பு ஏதும் இல்லை. அவர்கள் அவருக்கு நன்றி செலுத்துவதை ஒருபோதும் நிறுத்தமாட்டார்கள்!

44:9-12 அவர்களுடைய பாடல் புலம்பலாக மாறும்படி ஏதோ ஒரு நிகழ்வு நடந்துவிட்டது. கர்த் தர் தமது மக்களைக் கைவிட்டது போலவும், அவர்கள் இகழ்ச்சியடையும்படி அவர் செய்தது போலவும் தோன்றுகிறது. தேவனுடைய சமுக மும், அவருடைய துணையும் இன்றி படைகள் அணிவகுத்துச் செல்லுகின்றன. வெகுவிரைவில் அவர்கள் திகிலடைந்து பின்வாங்குகிறார்கள், இஸ்ரவேலின் செல்வத்தைப் பகைவர் கொள்ளை யிடுகிறார்கள். கர்த்தர் தமது **ஆடுகளை** வெட்டு கிறவனுடைய கரங்களில் ஒப்புக்கொடுத்தார், உயிரோடிருப்பவர்களைப் புறவின நாடுகளில் சிதறடித்தார். இது ஏதோ வணிக ஒப்பந்தம் போலத் தோன்றுகிறது. தேவன் தமது மக்களை எந்த ஆதாயமுமின்றி விற்றுப்போட்டார். பகைவரும் அதற்கு ஈடாக ஒன்றும் செலுத்தாமல் எல்லாவற் றையும் எடுத்துச் சென்றுவிட்டார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது.

44:13-16 சிறுமையடைந்த இஸ்ரவேல், மற்ற நாடுகளுக்கு முன்பாக நகைப்புக்கிடமாயிற்று. நிந்தைக்கும் ஏளனத்துக்கும் இலக்காயிற்று. யூதர்கள் இழிவுபடுத்தப்படுவதற்கு அவர்களைக் குறித்து, பாரம்பரியமான பழமொழிகளும், ஏள னத்திற்குரிய அடைமொழிகளும் பயன்படுத்தப் பட்டன. தேவனுடைய பண்டைய மக்கள் எல்லா நாட்டாருக்கும் நடுவே பண்பற்ற கேலிச் சித் திரங்களாகக் காட்சியளித்தார்கள். தப்பமுடியாத அவமானத்திற்கு ஆளாயினர். அவர்களுடைய பகைவரின் நிந்தை மொழிகளாலும் இழி சொற்க ளாலும் அவர்களுடைய முகங்கள் சிவந்து போயின. பழிவாங்கும் நோக்கத்துடன் எதிர்ப் படுகிற மனிதர்கள் முன்னிலையில் இஸ்ரவேலர் நாணி வெட்கமடைந்தார்கள்.

44:17 இதில் என்ன குழப்பமென்றால், இந்தத் தோல்வியும் அவமானமும் நெஞ்சறிந்து இஸ்ர வேல் பின்வாங்கிப் போனதால் ஏற்பட்டவை யல்ல. வரலாற்றின் ஏனைய காலங்களில் பாடு களுக்கும் பாவத்திற்கும் நேரடியான தொடர்பு

இருந்தது. ஆனால் இந்தக் குறிப்பிட்ட நிகழ்வில் அப்படி எதுவும் நடக்கவில்லை. அவர்கள் தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட மக்களாக இருந்த காரணத்தாலேயே இது நடந்தாற் போலத் தோன்றுகிறது. இது தேவனுக்காகவும் அவருடைய உடன்படிக்கைக்காகவும் அடைந்த பாடுகள் போல இருக்கிறது.

44:18,19 அவர்கள் தேவனுக்குத் தங்கள் முதுகைக் காட்டவும் இல்லை, அவருடைய உடன்படிக்கையை மீறவும் இல்லை. அப்படியிருந்தும் இந்தப் பேரிடர்கள் அவர்களுக்கு நேரிட்டன. அவரிடத்தில் அவர்கள் கொண்டிருந்த அன்பைக் கைவிடவும் இல்லை, அவர்களுக்காக அவர் நியமித்திருந்த பாதையை விட்டு விலகவும் இல்லை. ஆனாலும் கர்த்தரோ அவர்களை நரிகள் குடியிருக்கும் நாட்டில் சிதறடித்தார், **மரண இருளில் அவர்களை மூடி வைத்தார்**.

44:20-22 அவர்கள் தங்களுடைய **தேவனுடைய நாமத்தை மறந்து** போயிருந்தாலோ, சிலைகளை ஆராதித்திருந்தாலோ தேவன் அதை அறியாமல் இருந்திருப்பாரா? அவர் மனிதர்களின் உள்ளத்தின் ஆழத்தில் தோன்றுகிற சிந்தனைகளையும் நோக்கங்களையும் அறிவார். இல்லை, அதுவல்ல காரணம். யெகோவாவோடு அவர்கள் கொண்டிருந்த தொடர்பின் காரணமாகவே அவர்கள் பாடு அனுபவித்தார்கள். அவர் நிமித்தமே அவர்கள் மரண வேதனையை அனுபவித்தார்கள். மிருகங்களைப் போல நடத்தப்பட்டார்கள், அடிக்கப்படுவதற்கென்று நியமிக்கப்பட்டார்கள். எல்லாக் காலத்திலும் கிறிஸ்தவர்கள் இப்படிப்பட்ட பாடுகளை அனுபவிக்க நேரிடும் என்பதை விவரிக்கும்பொருட்டு பல நூற்றாண்டுகள் கழித்து அப்போஸ்தலனாகிய பவுல் தானும் இத்தகைய சூழ்நிலையில் இருந்ததாகக் கூறி சங்கீதம் 44:22 -ஆம் வசனத்தை மேற்கோள் காட்டினான் (ரோமர் 8:36).

44:23-26 இருபத்து மூன்றாவது வசனத்தில் சங்கீதம் துணிவு மிகுந்த அவசரத்தை நோக்கி நகர்ந்து உச்சநிலையை அடைகிறது. கர்த்தர் ஏதோ உறக்கத்திலிருந்து விழிப்பவர் போலவும், தம் மக்களுக்காகச் செயல்படுவதற்கென்று அழைக்கப்படுவது போலவும் காணப்படுகிறார். இது பாடலாசிரியனின் அறிவுக்கு அப்பாற்பட்ட தாயிருக்கிறது - தேவனுடைய மக்கள் புழுதியில் முகங்குப்புற விழுந்து கிடக்கும்போது, அவர் எவ்வாறு தம் முகத்தை அவர்களைப் புறக்கணித்து அலட்சியப்படுத்தும்படி மறைத்துக் கொள்வார். ஆகவே அவன் மீண்டும் எக்காளத்தைத் தொனிக்கிறான்:

எங்களுக்கு ஒத்தாசையாக எழுந்தருளும்;
உம்முடைய கிருபையினிமித்தம் எங்களை மீட்டுவிடும்.

சங்கீதம் 45: அரசருக்கெல்லாம் அரசர்

45:1 பாடலாசிரியனுக்கு இச்சங்கீதத்தை எழுதுவது எளிதாயிருந்தது. **இராஜாவைக் குறித்து** அவன் இயற்றியிருந்த பாடலை எழுத்து வடிவமாக்கும்படி அவனுடைய இருதயம் பொங்கியெழுந்தது. சொற்கள் அவனுடைய எழுத்தாணியிலிருந்து பாய்ந்து வந்தன; அவன் மொழிவளத்தால் நிறைந்திருந்ததுபோல உணர்ந்தான். அவனுடைய **நாவு விரைவாய் எழுதுகிற** எழுத்தாளரின் எழுதுகோல் போல் இருந்தது. ஆயத்தமாயிருந்த எழுத்தாளர் பரிசுத்த ஆவியானவர்தாமே என்று நாம் அறிந்துகொள்கிறபோது இந்த விசயத்தை நாம் நீட்டிக்கொண்டு போக வேண்டிய அவசியமில்லை.

45:2 முதலாவது, நாம் அரசரிடம் அறிமுகப்படுத்தப்படுகிறோம். அவருடைய அழகு எல்லாவற்றையும்விட மேம்பட்டதாயிருக்கிறது. அவர் பதினாயிரம் பேரில் சிறந்தவர், முற்றிலும் அழகானவர். அவருடைய **உதடுகளிலிருந்து அருள் பொழிகிறது**. அவருடைய பேச்சு மிகவும் இனிமையானது. அவர்தம் ஆளுமையில் மேன்மை தங்கியவராதலால், **தேவன்** அவரை **என்றென்றைக்கும் ஆசிர்வதிக்கிறார்**.

> புவியிற் பிறந்த மானிடர் யாரிலும் சிறந்தோர்
> அழகில் பூரணர் அருமை அண்ணல் இயேசுவே
> செந்நிற உதட்டில் பொழிவது உம்மருள் நாதா
> அளவிலா அன்பால் நிறைந்த இனியநல் இதயம்
> தந்தையின் இயல்பை நிறைவாய்ப் பெற்றீர் வாழிய
> முழங்கால் முடக்கி வீழ்ந்து வணங்குவோம் வாழிய!
> –ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

45:3-5 உடனடியாக நாம் கிறிஸ்துவின் இரண்டாம் வெளிப்பாட்டை நோக்கிக் கொண்டு போகப்படுகிறோம். அச்சமயத்தில் அவர் அதிகாரத்தோடும் மகா பெரிய மகிமையோடும் பூமிக்குத் திரும்ப வந்திருக்கிறார். இப்பொழுது அவர் தாழ்மையுள்ள நாசரேத்தூர் தச்சராக வரவில்லை, மாறாக வெற்றி பெறும் மாவீராக வருகிறார். எல்லாம் வல்லவர் தமது அரையிலே பட்டயத்தைக் கட்டிக்கொண்டவராகத் தமது **மகிமையோடும் மகத்துவத்தோடும்** வருகிறார். **சத்தியம், சாந்தம், நீதி** ஆகியவற்றின் நிமித்தம் அவர் கண்களைக் கூசச்செய்யும் ஒளிப் பிரகாசத்தோடு வெற்றி வீரராக ஏறிவருகிறார். ஆணி

களால் அறையப்பட்ட தழும்புகளோடு கூடிய அவருடைய **வலதுகரம்** பகைவரை அச்சுறுத்தும் வகையில் பட்டயத்தைச் சுழற்றும் ஆற்றல் பெற்றதாயிருக்கிறது. அவருடைய அம்புகள் அரசனின் பகைவருடைய எதிரிகளின் இருதயங்களுக்குள்ளாகப் பாய்ந்து அடையாளத்தை ஏற்படுத்தக்கூடியவை. மக்கள் கூட்டம் அலை போல அவருக்கு முன்பாக விழுகிறது.

45:6,7 போரின் புகை இப்பொழுது இல்லை. அரசர் எருசலேமிலுள்ள தமது மகிமையின் சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார். வானத்திலிருந்து தேவனுடைய சத்தம் அவரை நோக்கி அவரே தேவன் என்றும் அவருடைய அரசு நித்திய அரசு என்றும் உறுதிகூறி தொனிக்கிறது. அது தேவனுடைய சத்தம் என்று நாம் அறிவோம். ஏனெனில் எபிரெயர் 1:8,9 அவ்வாறு கூறுகிறது:

> குமாரனை நோக்கி,"தேவனே, உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்கும் உள்ளது, உம்முடைய ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது. நீர் நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுத்திருக்கிறீர்; ஆதலால், தேவனே, உம்முடைய தேவன் உமது தோழரைப் பார்க்கிலும் உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணினார்" என்றும் அவர் கூறினார்.

தேவன் தமது குமாரனை **தேவன்** என்று அழைப்பதைக் கவனியுங்கள். திருமறை முழுவதிலும் கிறிஸ்துவின் தெய்வீகத்தைக் குறித்த முடிவான நிரூபணங்களில் இதுவும் ஒன்று. சில மொழிபெயர்ப்பாளர்கள் "தேவனே, உமது சிங்காசனம் என்றென்றைக்கும் உள்ளது" என்னும் சொற்றொடரை "உமது தெய்வீக சிங்காசனம் என்றென்றைக்கும் உள்ளது" என்று சங்கீதம் 45:6-இல் மாற்றியமைத்திருக்கிறார்கள். எனினும் எபிரெயர் மடலில் "தேவனே, உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்கும் உள்ளது" என்றே அவர்கள் மேற்கோள் காட்டியிருக்கிறார்கள். ஆகவே கிறிஸ்துவின் சிங்காசனம் தெய்வீகமானது என்பது உண்மையெனினும், அவரே தேவன் என்பதும் உண்மையாயிருக்கிறது.

கிறிஸ்துவின் அரசு முடிவில்லாதது. அவர் பூமியில் ஆயிரமாண்டுகள் ஆட்சி செலுத்திய பிறகு, அவருடைய புவியரசு "நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்தோடு" இணையும் (2 பேதுரு 1:1).

கிறிஸ்துவின் வீறார்ந்த **செங்கோல்** நேர்மையின் செங்கோல் ஆகும். செங்கோல் என்னும் கோல் அரச அதிகாரத்தின் அடையாளமாகும். இங்கு மேசியா முற்றிலும் நேர்மையான முறையில் அரசாளுவார் என்பதே அதன் பொருளாகும். மேலும் அந்த ஆட்சி முற்றிலும் பரிசுத்தமாகவும் இருக்கும்; ஏனெனில் அரசர் **நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுக்கிறார்**.

45:7,8 கர்த்தராகிய இயேசு நீதியும் நேர்மையும் உள்ளவராக இருந்த காரணத்தால், தேவன் மற்ற எல்லா அரசர்களுக்கும் மேலாக அவரை **ஆனந்த தைலத்தால் அபிஷேகம் பண்ணினார்**. ஆனந்த அபிஷேகம் அல்லது மகிழ்ச்சியின் அபிஷேகம் என்பது, ஆசாரியர் திருப்பணியில் சேர்க்கப்பட்டபோது அபிஷேகம் பண்ணப்படும்படி பயன்படுத்தப்பட்ட தைலமாகும் (யாத் 30:22-25). நம்முடைய கர்த்தர் ஆசாரியரும் அரசருமாதலால் இந்தத் தைலமே பயன்படுத்தப்பட வேண்டும். **வெள்ளைப் போளமும் சந்தனமும்** இந்தத் தைலம் செய்யப்படுவதற்கான முக்கிய பொருட்களாகும்; **இலவங்கம்** உன்னதப்பாடல் 4:14-இல் சொல்லப்பட்டிருக்கிற பிரதான வாசனைப் பொருட்களில் ஒன்று. நம்முடைய கர்த்தருடைய ஆளுமை மற்றும் செயல் ஆகியவற்றின் மேலான வாசனையைக் குறித்து இவையாவும் பேசுகின்றன. வெள்ளைப் போளமும் லவங்கமும் அவருடைய பாடுகளையும் மரணத்தையும் குறித்துச் சிறப்பான முறையில் சுட்டிக்காட்டுகின்றன எனலாம், ஏனெனில் இவையே அவருடைய சரீரத்தை அடக்கம் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட பொருட்கள்.

தந்தத்தால் செய்யப்பட்ட அரண்மனைகளிலிருந்து இவை அவரை மகிழச் செய்யும்படி வந்தன. இது அரசுக்குரிய இன்னிசைப் பாடல், மனிதர்கள் தேம்பி அழுது, பெருமூச்சு விடும் காலம் முடிவடைந்தது என்றும், பொற்காலத்தின் விடியல் தொடங்கிவிட்டது என்றும் உலகம் மகிழ்ச்சியால் கொண்டாடுவதற்கென எழும் இன்னிசையின் சத்தம்.

45:9 அரசர் தம்முடைய அதிகாரத்தோடு இருக்கும் நாட்களில் தனிமையில் இருப்பதில்லை. இவ்வுலகின் அரசர்களுடைய பெண் மக்கள் அவருடைய அரசப் பணிவிடைப் பெண்களாவார்கள். அவருடைய வலப்புறத்தில் அரசி நிற்கிறாள். **ஓப்பீரின் தங்கத்தால்** செய்யப்பட்ட நகைகளால் குறிப்பிடப்பட்டிருப்பவள் திருச்சபை என்று விளக்கம் அளிக்கும்படியான சோதனை நமக்கு எழக் கூடும். அதனை நாம் தடைசெய்ய வேண்டும், ஏனெனில் பழைய ஏற்பாட்டின் வெளிப்பாட்டில் திருச்சபை இடம் பெறவில்லை (எபே 3:5-9; கொலோ 1:26). மீட்கப்பட்ட இஸ்ரவேலின் மீதியானவர்களே இந்த அரசி என்று நாம் நம்புகிறோம் (எசே 16:10-14). இஸ்ரவேலரின் சாட்சியால் கிறிஸ்துவுக்கென்று பெறப்பட்ட புறவின நாடுகளே இங்கு பணிவிடைப் பெண்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளார்கள்.

45:10,11 அடையாளம் கூறப்படாத ஒரு சத்தத்தால், ஒருவேளை தூய ஆவியானவராக இருக்கக்கூடும், இங்கு அரசிக்கு ஆலோசனை தரப்படுகிறது. அதன்படி அவள் தன்னுடைய மக்களையும் தனது **தகப்பன் வீட்டையும் மறக்க வேண்டும்.** அவள் மனமாற்றம் பெறுவதற்கு முன் வாழ்ந்த வாழ்க்கையோடும் அவளைக் கட்டி வைக்கக்கூடிய எல்லா சூழ்நிலைகளோடும் கொண்டிருக்கும் தொடர்புகளையும் அவள் துண்டித்துப் போட வேண்டும். மேலும் அவள் அரசரையே தனது கர்த்தராக அங்கிகரித்துத் தன்னை அவருக்கு முழுவதுமாக ஒப்புவிக்க வேண்டும். இந்தச் சொற்கள் நம்முடைய இரட்சகரின் சொற்களை எதிர்நோக்கியவையாகும்:

> யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும், மனைவியையும் பிள்ளைகளையும், சகோதரரையும் சகோதரிகளையும், ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீடனாயிருக்கமாட்டான் (லூக்கா 14:26).

நாம் கிறிஸ்துவினிடத்தில் கொண்டிருக்கும் அன்பின் அளவோடு மற்றவர்களிடத்தில் செலுத்தும் அன்பை ஒப்பிட்டுப் பார்க்கையில் அது வெறும் வெறுப்பே என்று சொல்லும் அளவிற்கு முந்தினது மிகப்பெரிதாக இருக்க வேண்டும். உள்ளம் நிறைந்திருப்பதென்னும் அழகு அவரை மன மகிழ்ச்சி அடையச் செய்வதேயாகும். அவர் கர்த்தர் ஆதலால், அவர் நமக்குரிய எல்லாவற்றையும் நம்மையும் சொந்தம் கொண்டாட உரிமை பெற்றவர்.

45:12 செல்வச் செழிப்புமிக்க **தீரு குமாரத்தி காணிக்கையோடு** அரசியினிடம் வருவாள். ஆம், உலகிலுள்ள மிகப்பெரிய செல்வந்தர்கள் மிகச்சிறந்த பரிசுப்பொருட்களோடு எருசலேமுக்குப் பயணம் மேற்கொள்வார்கள்.

45:13 பின்னர் ராஜகுமாரத்தி, அரசருடைய முன்னிலையில் கொண்டுவரப்படும் பொருட்டு, பளிச்சிடும் ராஜரிக ஆடை உடுத்துவிக்கப்படுவாள். ஒரு காலத்தில் பாவத்திற்கு அடிமை வேலை செய்து சோர்வுற்றிருந்தவள் இப்பொழுதோ பொற்சரிகை வேலைப்பாடு செய்த உடைகளால் உடுத்துவிக்கப்பட்டிருக்கிறாள்.

45:14,15 இப்பொழுது **அவள் ராஜாவினிடத்தில் அழைத்துக் கொண்டுவரப்படுகிறாள்.** மேலும் அவள் பலவருண ஆடைகள் அணிந்த வளாக, கன்னிகைகள் புடைசூழ வருகிறாள். அவர்கள் நடந்துவருகிற காட்சி மகிழ்ச்சியால் நிறைந்திருக்கிறது, இறுதியில் அவர்கள் ராஜாவின் **அரண்மனைக்குள்** நுழைகிறார்கள்.

> யாரால் அந்த மகிழ்ச்சியை விவரிக்க முடியும்; திருத்தந்தையின் மகிழ்ச்சி, குமாரனின் மகிழ்ச்சி, தூய ஆவியானவரின் மகிழ்ச்சி, தூய தூதர்களின் மகிழ்ச்சி. அவை மட்டுமல்ல அவர்கள் தங்களுடைய சொந்த மகிழ்ச்சியோடு கர்த்தரின் முன்பாக நுழைகிறார்கள். இதனைச் சொல்லவும் கூடுமோ ! எல்லா இனிமையிலும் மேலான இனிமை, எல்லா அழகிலும் மேலான அழகு, எல்லாக் கிருபையிலும் மேலான கிருபை, எல்லாக் கவர்ச்சியிலும் மேலான கவர்ச்சி, எல்லா இன்பங்களிலும் மேலான இன்பம், தேவனுடைய குமாரனுடைய சாயலுக்கு ஒப்பான சாயல் (ஆதாரம் தெரியவில்லை).

45:16,17 கடைசி இரண்டு வசனங்களில் திருத்தந்தையாகிய இறைவன் அரசராகிய கிறிஸ்துவோடு உரையாற்றுகிறார். முற்பிதாக்களுக்குத் தகுதியான வாரிசுகள் தோன்றுவார்கள், "அவர்கள் தங்களுக்குள்ளே ஆட்சியைப் பகிர்ந்து கொள்வார்கள்" (நாக்ஸ் மொழி பெயர்ப்பு) என்று தேவன் கிறிஸ்துவிடம் குமாரர்களைக் குறித்த வாக்குறுதியைத் தருகிறார்.

அரசரைப் பொறுத்தவரை, அவருடைய திருப்பெயர் **எல்லாத் தலைமுறைகளிலும்** புகழப்படும். மக்கள் அவரைத் துதிக்காமல் இருக்கக் கூடிய காலம் ஒருக்காலும் வராது.

சங்கீதம் 46: கர்த்தர் நம்மோடிருக்கிறார்

முதலாவது உலகப் போரின்போது, ஸ்காட்லேண்ட் நாட்டின் மலைப்பகுதியான தீவொன்றில் வாழ்ந்த மக்களில், பெரும்பாலான இளைஞர்கள் போர்ப் பணியில் சேரும்படி அழைக்கப்பட்டார்கள். ஒவ்வொரு முறையும் அவர்களில் பலர் நகர அரங்கில் ஒன்று சேர்க்கப்பட்டு பெருநிலப் பகுதிக்குக் கப்பலில் அழைத்துச் செல்லப்பட்டார்கள். அப்பொழுதெல்லாம் அவர்களுடைய உறவினர்களும் நண்பர்களும் இந்தப் பாடலைப் பாடினார்கள்:

> இறைவனே என்றும் எங்கள் தஞ்சம்
> அவரே எங்கள் கோட்டையும் ஆவார்,
> மலைபோல இக்கட்டு எழுகிற வேளையில்
> துணையாய் அருகில் இருப்பவர் அவரே,
> குன்றுகள் விலகி நெருங்கி வருமெனில்
> அஞ்சா நெஞ்சினை அருளுவார் அன்பர்,
> கடலலை பொங்கிச் சீறிடும் வேளையில்
> அமைதியை அகத்தில் அளிப்பவர் இயேசு !
>
> அவரது நகரம் அதிசய நகரம்
> அதனது நடுவில் வற்றிடா ஆறு,

அகத்தினில் மகிழ்வினைத் தந்திடும் நகரம்
அசையா ஆற்றல் பெற்றிட்ட நகரம்,
அதிதூய இடத்தினில் உறைகிறார் இறைவன்
அதுவே நமது கர்த்தரின் வீடு,
அவரது வலிமை அதனைக் கர்த்திடும்
அசையா உரத்தினை உளமதில் தந்திடும்!

அமைதியாய் நின்று அவரது செயலினை
அறிந்துநீ மகிழ்ந்திடு என்பது வாக்கு,
அவனியில் அவரது புகழ்ச்சியைக் கூறி
அவரையே போற்றிடு என்பது கட்டளை,
சேனைகளின் கர்த்தர் நம்மோ டிருக்கிறார்
அச்சம் தவிர்த்திடு என்பது ஆறுதல்,
இறைவனே என்றும் எங்கள் தஞ்சம்
போற்றுவேன் வணங்குவேன் வாழ்த்துவேன்
என்றும்!

–ஸ்காட்லேண்ட் நாட்டுப் பண்

மிகக்கடுமையான இடர்ப்பாடுகள் ஏற்படுகின்ற தருணங்களில் இந்தச் சங்கீதம் இறைவனின் பரிசுத்தவான்களுக்கு ஆறுதல் தந்திருக்கிறது. அவ்வித ஆயிரம் நிகழ்வுகளில் ஒன்று மேலே குறிப்பிடப்பட்டுள்ளது. நோய்ப் படுக்கை அறையிலும், துக்க வீடுகளிலும், சித்ரவதைக் கூடங்களிலும், கொடுமைகள் இழைக்கப்படும் இருட்டறைகளிலும் இந்தச் சங்கீதம் படிக்கப்படுகின்ற வேளைகளில் துவண்ட இதயங்கள் எழுந்து பிரகாசிப்பதை யாரால் விவரித்துக் கூறமுடியும்? கடுந்துன்பங்களுக்கு ஆளாக்கப்பட்டு, தொல்லைகள் சூழ்ந்திருந்த நிலையில் முன்னால் அகஸ்து துறவி மார்டின் லுத்தர் அவர்கள், "நமது தேவன் சர்வ வல்ல அரண்" என்னும் சீர்திருத்தப் பாடலை இயற்றும்படி செய்ததும் இந்தச் சங்கீதமே ஆகும். இதன் செய்தி காலத்திற்கு அப்பாற்பட்டது, இதன் உற்சாகம் முடிவற்றது.

இந்தச் சங்கீதம் மூன்று தனிப்பிரிவுகளைக் கொண்டிருக்கிறது, அவற்றைத் திருவாளர் G. கேம்ப்பெல் மோர்கன் கீழ்க்கண்ட தலைப்புகளில் அழைக்கிறார்:

1-3 ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம். தேவன் நம்மோடிருக்கிறார்.

நம்பிக்கையின் அறைகூவல்

4-7 கர்த்தர் எருசலேமில் முடிசூட்டப்பட்டிருக்கிறார்.

நம்பிக்கையின் இரகசியம்

8-11 பூமியில் அமைதி, உலகளாவிய ஆட்சி.

நம்பிக்கையின் வெற்றி

அசீரிய நாட்டுக் கொடுங்கோலன் சனகெரிப் எருசலேம் நகரத்தை முற்றுகை போட்டிருந்த போது, அந்த நகரம் அற்புதமான வகையில் விடுவிக்கப்பட்டதை வரலாற்றுப் பின்னணியாகக் கொண்டது இச்சங்கீதம் என்பதே பொதுவான எண்ணம் (2 இராஜா 18:13-19;35; ஏசாயா 36:1-37:36). இந்தச் சமயத்தில் தேவனுடைய சமுகம் தங்களோடு தனிப்பட்ட வகையில் இருந்தது என்பதை யூத மக்கள் மிகப்பெரிய அளவில் அறிந்திருந்தார்கள். ஆகவே இந்தச் சங்கீதம் இம்மானுவேல் - தேவன் நம்மோடிருக்கிறார் என் பவரைப் புகழ்ந்து கொண்டாடுகிறது.

46:1-3 தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக் காலத்தில் அநுகூலமான துணையுமானவர். "அவர் நெருக்கமான இடங்களில் உதவிபுரிவதற்கு தாராளமான வகையில் ஆயத்தமாயிருக்கிறார்" (NASB அடிக்குறிப்பு). நமது பாதுகாப்பும் ஆதரவும் செல்வத்தையோ பெரும்படையையோ சார்ந்தது அல்ல, யெகோவா ஒருவரையே சார்ந்தது என்று நாம் அறிகிறபோது நற்பேறு அடைகிறோம்!

மிகப்பெரிய தீமை நடப்பதாகக் கற்பனை செய்வோம்! **பூமியே** உருகி மிகப்பெரிய எரிமலை அக்கினி வெள்ளத்தில் அகப்பட்டுக்கொண்டதாக வைத்துக் கொள்வோம். ஒருவேளை பூமியதிர்ச்சி ஏற்பட்டு **மலைகள்** கடலின் ஆழத்தில் தூக்கி எறியப்படலாம். அல்லது கடலின் பேரலைகள் கொந்தளித்து நுரைதள்ளி வெள்ளம் நிலத்திற்குள் நுழைகிறது. அல்லது இயற்கையின் பெருஞ்சீற்றத்தால் மலைகள் தள்ளாடுகின்றன.

மலைகளைப் பேரரசுகள் என்று அல்லது பெருநகரங்கள் என்று எண்ணிப்பாருங்கள். **கடல்களை** இனங்கள் என்று கற்பனை செய்யுங்கள். சமுதாயத்தின் அடித்தளமே நொறுங்குகிறது; அரசுகள் கவிழ்கின்றன; நாடுகள் பிரிகின்றன. உலக நாடுகள் அனைத்திலும் அரசியல், பொருளாதாரம், சமுதாயம் ஆகிய எல்லாப் பிரிவுகளிலும் குழப்பங்கள் நிறைந்து காணப்படுகின்றன. மேலும் இதுவரை காணாத அளவுக்குப் பெருமளவில் பிரச்சினைகள் தலைவிரித்தாடுகின்றன.

ஆனால் தேவன்..! மிக மோசமான நிகழ்வு நடந்தாலும் அதற்காக நாம் அச்சமடையத் தேவையில்லை. அப்போதும் தேவன் நம்மோடிருக்கிறார்!

46:4 தேவனுடைய நகரத்தையும், உன்னதமானவர் வாசம் பண்ணும் பரிசுத்த ஸ்தலத்தையும் சந்தோஷிப்பிக்கிற நீர்க்கால்களைக் கொண்ட **நதி** அவரே ஆவார். உண்மையில் எரு

சலேம் நகரத்தில் ஆறு எதுவும் பாய்வதில்லை. ஆனால் ஒரு நகரத்திற்கு ஓர் ஆறு என்ன சிறப்புகளையெல்லாம் செய்கிறதோ அத்தனை சிறப்புகளாகவும் தேவன் தமது பரிசுத்த குடியிருப்பில் இருக்கிறார் - அதற்கும் கூடுதலாக, அவரே உயிருக்கும் புத்துணர்வுக்கும் ஊற்றாகத் திகழ்கிறார். கிருபைக்கும் நன்மைக்கும் அவரே நதியாக விளங்குகிறார்!

> மகிமையுள்ள கர்த்தர் அங்கே நமக்கு மகா விசாலமான நதிகளும் ஆறுகளுமுள்ள ஸ்தலம் போலிருப்பார்: வலிக்கிற படகு அங்கே ஓடுவதும் இல்லை; பெரிய கப்பல் அங்கே கடந்து வருவது மில்லை (ஏசாயா 33:21).

46:5 தேவன் எருசலேமில் முடி சூட்டப்பட்டிருப்பதால் அது ஒருக்காலும் அசைக்கப்படுவதில்லை. **அதிகாலையில் தேவன் அதற்குச் சகாயம் பண்ணுவார்**. அது தேவனுடைய மக்களுக்கு நீண்ட இருண்ட இரவு, ஆனால் விரைவில் காலை உதிக்கும், கிறிஸ்து தமக்குரிய இடத்தை எடுத்துக்கொள்வார். அவர் தம்முடையவர்களுக்காக அங்கு தம்மையே மாவீரராக வெளிப்படுத்துவார்.

46:6 உலகத்தின் இனங்கள் சினத்தால் கொந்தளிக்கும்; அரசுகள் தத்தளிக்கும். தேவன் தம்முடைய கோபத்தில் பேசுகிறபோது, **பூமி** அவருடைய சத்தத்திற்கு உடன்பட்டு உருகும்.

46:7 இயற்கையின் கடுஞ்சீற்றத்தாலும், அரசியல் திடீர் மாற்றங்களாலும் எண்ணிப்பார்க்க இயலாத கடுந்துன்பங்கள் உண்டாகி பூமியானது அலைக்கழிக்கப்படும். இது ஒரு குறிப்பிட்ட வகையில் மகா உபத்திரவ காலத்தை எதிர்நோக்கிய சொற்களாகும். அப்பொழுது கர்த்தர் வானத்திலிருந்து தோன்றி கீழ்ப்படியாமையையும் கலகத்தையும் ஒடுக்கி, பூமியை நீதியோடும் சமாதானத்தோடும் ஆளுவார். அந்தச் சமயத்தில் விசுவாசிக்கும் இஸ்ரவேல் இனத்தின் மீதியானவர்கள் கூறுவார்கள், **"சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார்; யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர்."**

இந்த வசனம் தருகிற உறுதி சொல்ல முடியாத அளவு இனிமையானது. **சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார்,** அதாவது, வானத்துத் தூதர்களின் படைகளின் கர்த்தர். அவரே யாக்கோபின் தேவனும் ஆவார். இப்பொழுது யாக்கோபு என்னும் சொல்லின் பொருள் "ஏமாற்றுபவன்" அல்லது "நேர்மைற்றவன்" என்பதாகும். ஆனாலும் தேவன் தம்மை **யாக்கோபின் தேவன்** என்று குறிப்பிடுகிறார். இரண்டு சிந்தனைகளையும் ஒன்று கூட்டிப்பாருங்கள். தேவதூதர்களின் சேனைகளின் தேவன், தகுதியற்ற பாவியின் தேவனாகவும் இருக்கிறார். எல்லைக்குட்படாத வகையில் மேன்மையானவர் மிகநெருக்கமான நண்பராகவும் இருக்கிறார். நம்முடைய பாதையின் ஒவ்வொரு அடியிலும் அவர் நம்மோடு இருக்கிறார். நம்முடைய வாழ்க்கையில் ஏற்படுகிற எல்லாப் புயல்களிலும் அவர் நமது தவறாத அடைக்கலமாக விளங்குகிறார்.

46:8 நாம் எட்டாவது வசனத்திற்கு வருவதற்கு முன், மக்கள் கிளர்ச்சியும் இயற்கைச் சீற்றமும் முடிவுக்கு வந்துவிட்டன. மனிதரின் நாள் முடிவடைந்துவிட்டது. இப்பொழுது மாவரசர் எருசலேமில் தமது அரியணையில் வீற்றிருக்கிறார். நாம் வெளியே செல்லும்படியும், வெற்றியின் களத்தைப் பார்வையிடும்படியும் அழைக்கப்படுகிறோம். எங்கு பார்த்தாலும் அவருடைய பகைவரின் சேதம் அடைந்த நிலையே காட்சிப்பொருளாக இருக்கிறது. மகா உபத்திரவ காலத்திலும், கர்த்தருடைய மகிமை நிறைந்த வெளிப்பாட்டைத் தொடர்ந்து வானத்திலிருந்து இறங்கிய நியாயத் தீர்ப்பின் காலத்திலும் நடந்த நிகழ்ச்சிகளின் அடையாளங்களே எங்கும் நிறைந்திருக்கின்றன.

46:9 ஆனால் இப்பொழுது சமாதானப்பிரபு முடிசூட்டப்பட்டவராக வீற்றிருக்கிற நிலையில், உலகமெங்கும் யுத்தங்கள் நின்று போயின. ஆட்சிமன்றங்களும், கூட்டு நாடுகளும், உச்சமாநாடுகளும் நிறைவேற்ற முடியாததைக் கர்த்தராகிய ஆண்டவர் தமது இருப்புக்கோல்கொண்டு நிறைவேற்றினார். ஆயுதக் குறைப்பு வெறும் சர்ச்சையாக இருந்த நிலையிலிருந்து உண்மை நிலையாக மாற்றமடைந்துவிட்டது. போர்க் கருவிகளின் உற்பத்தி நிறுத்தப்பட்டுவிட்டது. இது வரை போர்த் தளவாடங்களுக்காகச் செலவிடப்பட்டு வந்த நிதி இனிமேல் பயிர்த்தொழில் மற்றும் வேறு உற்பத்தித் துறைகளுக்குச் செலவிடப்படும்.

46:10 உலகுவாழ் மக்கள் எல்லோரிடமும் உறுதியும் அதிகாரமும் கொண்ட அழுத்தத்தோடு தேவனுடைய தொனி ஒலிக்கிறது: **"நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்துகொள்ளுங்கள்; ஜாதிகளுக்குள்ளே உயர்ந்திருப்பேன், பூமியிலே உயர்ந்திருப்பேன்!"** ஒவ்வொரு அச்சமும் அகற்றப்பட்டுவிட்டது, ஒவ்வொரு அலைக்கழிப்பும் அமைதிப்படுத்தப்பட்டுவிட்டது. அவருடைய மக்கள் கவலை நீங்கியிருக்கிறார்கள். அவரே தேவன். அவருடைய நோக்கமே வெற்றிபெறும். அவர் எல்லா இனங்களுக்கும் மேலாக முதன்மையாயிருப்பார், பூமியில் எல்லாவற்றின் மேலும் உயர்ந்திருப்பார்.

இந்த 10 -ஆம் வசனமே "அமர்ந்திரு என் மனமே" என்னும் பாடலை எழுதிய காதரீனா வோன் ஸ்லேகல் என்பாருக்கு உயிரூட்டம் கொடுத்தது.

அமர்ந்திரு என் மனமே! நம்தேவன்
அரியநல் செயல்களைச் செய்திடுவார்,
இதுவரை நடத்தின விதம்போல
இனியும் நடத்திட வந்திடுவார்,
புதிரெனத் தோன்றிடும் வேளைகளில்
தவறாமல் ஒளியினைத் தந்திடுவார்,
தளராதே கலங்காதே நம்தேவன்
நம்முடன் என்றுமே இருக்கின்றார்,
புயலோ அலையோ அவர்சத்தம்
தொனிக்கையில் அமைதியைக் காத்திடுமே,
அமர்ந்திடு என்மனமே! நம்தேவன்
நம்முடன் என்றுமே இருக்கின்றார்!

46:11 என்ன நடந்தாலும், இருள் சூழ்ந்த நேரமானாலும் விசுவாசி அச்சமின்றி நம்பிக்கையோடு, **"சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார். யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர்"** என்று கூறலாம். வானத்து சேனைகளை நடத்துகிறவர் நம்பக்கம் இருக்கிறார், நமக்கு எதிராக யாரால் வெற்றிபெற முடியும்? தகுதியற்ற புழுவாகிய யாக்கோபின் தேவன் அரணாவார்; நிலையற்ற வாழ்வின் புயல்களுக்குத் தப்பி நாம் அந்தக் கோட்டைக்குள் தஞ்சம் புகுந்திருக்கிறோம்!

விண்ணை நோக்கி அமர்ந்திரு மனமே
மண்ணின் இருளெலாம் சிதியில் மறைந்திடும்
கதிரவன் வருகையில் காலையும் புலர்ந்திடும்
புதிரெலாம் நீக்கிட வருகிறார் கிறிஸ்து
உற்றநல் நண்பர் மெய்யான இறைவன்
சற்றுநீ பொறுத்திரு நிறைவாய்ச் செய்வார்
மன்னரின் சித்தம் தவறாமல் நடந்திடும்
விண்ணை நோக்கி அமர்ந்திடு மனமே!
– ஃப்ளோரன்ஸ் வில்ஸ்

சங்கீதம் 47: மகிழ்ச்சியான புத்தாண்டு

எருசலேம்: மேசியாவின் பொற்காலத்தின் முதலாவது புத்தாண்டுக் கொண்டாட்டம், அந்திப் பொழுது, தேசிய அரங்கில் புனித இசை நிகழ்ச்சி நடைபெறுகிறது. நிகழ்ச்சி நிரலின் மையப்பகுதியில் 47 -ஆவது சங்கீதத்தின் வசனங்கள் மிகுந்த ஆரவாரத்துடன் ஒலிக்கின்றன, உலக நாடுகளில் அண்மையில் ஏற்பட்ட மாற்றங்களின் காரணமாக அப்பாடல் புதியதொரு பொருளைப் பெற்றிருக்கிறது.

47:1-4 சங்கீதம் தொடங்கியவுடனே, அண்மையில் சர்வதேச அளவில் நிகழ்ந்த உபத்திரவத்திற்குப் பின்னரும் உயிருடன் இருந்த மக்கள் **கைகொட்டி தேவனுக்கு** முன்பாக மகிழ்ச்சிப் பாடல்களை மிகுந்த சத்தத்தோடு பாடும்படி அழைக்கப்படுவதைப் பார்வையாளர்கள் அறிந்துகொண்டார்கள். இதுகாறும் நடந்திராத வகையில், பாடல் குழுவே தலைமையேற்று முன் நடத்துவது போல அவர்கள் யாவரும் இசையொழுங்கோடு கை அசைத்துப் பாடினார்கள். பாடகர்கள் **"உன்னத மானவராகிய கர்த்தர் பயங்கரமானவர்"** என்னும் சொற்களிடமாய் வந்தபோது, மக்கள் யாவரும் தாமாகவே எழுந்து நின்றார்கள். அண்மையில் நடந்து முடிந்த, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் முடிசூட்டு விழாவை நினைவுகூர்ந்தார்கள். அத்தருணத்தில் அவரே, **"பூமியின் மீதெங்கும் மகத்துவமான ராஜாவுமாயிருக்கிறார்"** என்று பொதுமக்களின் முன்னிலையில் அறிவிக்கப்பட்டது. "வெள்ளாட்டு இனங்கள்" யாவும் எவ்விதமாகத் தங்களுடைய **பாதங்களுக்குக் கீழாக** ஒடுக்கப்பட்டன என்பதை மக்கள் நினைவுகூர்ந்து நன்றியால் பெருகினார்கள். அந்த இனங்கள் அந்த உபத்திரவ நாட்களில் இஸ்ரவேலுக்கு எதிராக சிறிதளவும் விட்டுக் கொடுக்காமல் செயல்பட்டவர்கள்.

தமக்குப் பிரியமான யாக்கோபின்
சிறப்பான தேசத்தை

நமக்குச் சுதந்தரமாகத் தெரிந்தளிப்பார்.
(சேலா).

என்னும் வரியை அவர்கள் பாடியபோது அந்த அரங்கம் முழுவதும் ஒலி அலைகளால் நிறைந்தன.

47:5 தமது பகைவரை ஒடுக்கிக் கீழ்ப்படுத்தும்படி யுத்த மனிதராக வந்த மேசியாவின் புகழ்ச்சி, இப்பொழுது அவருடைய மக்கள் ஆரவாரித்து எழுப்பிய தொனி மற்றும் அவருடைய முழு நிறைவான வெற்றியை அறிவிக்கும் எக்காள தொனி இரண்டும் முழங்க, எருசலேமில் உள்ள அவரது அரியணைக்கு **உயர எழுந்து** செல்லுகிறது.

47:6,7 பாடகர் குழு **தேவனைப் போற்றிப் பாடும்**படியும், **நம்முடைய ராஜாவைப் போற்றிப்** பாடும்படியும் அழைத்த தருணம் உள்ளத்தைச் சிலிர்க்கவைத்த தருணமாக இருந்தது. அரசராகிய இயேசுவே தேவன் என்றும், கல்வாரியில் ஆணிகளால் அறையுண்ட கரங்களே இவ்வுலகின் அரசின் அதிகாரத்தை ஏந்தியிருக்கின்றன என்றும் அறிக்கை செய்வதற்கு இப்பொழுது தயக்கமேதும் இல்லை! ஒவ்வொருவரும் திறமைமிக்க சங்கீதத்தைப் பாடுவதற்குத்

தருணம் ஏற்புடையதாயிருப்பதை உணர்ந் தார்கள் - கருத்துடனும் சிந்தனையுடனும் பாடு வதற்குத் தகுந்த சங்கீதம்.

47:8 திரும்பத் திரும்ப பாடகர் குழு மேசியா அரசருடைய தெய்வீகத்தை வலியுறுத்தியது. அவரே இப்பொழுது **ஜாதிகளின்மேல் அரசாளு பவர்**, அவருடைய சிங்காசனம் பரிசுத்தத்தி னாலே கட்டப்பட்டுள்ளது.

47:9 கீழ்க்காணும் சொற்கள் பாடப்பட்டபோது சிலருக்குச் சிறிதளவு கவலை ஏற்படக்கூடும்.

ஜனங்களின் பிரபுக்கள்... சேர்க்கப்படு கிறார்கள்.

கடந்த நாட்களில் இஸ்ரவேலைக் கடலுக்குள் தள்ள வேண்டும் என்று பிரபுக்கள் அவ்வப்போது ஒன்றுகூடினார்கள். ஆனால், பாடகர் குழு தனது பாடலைத் தொடர்ந்தபோது, அவர்களோ இப் பொழுது **ஆபிரகாமின் தேவனுடைய ஜனங் களாகக்** கூடினார்கள் என்பது தெளிவாகிறது. அரசருக்கெல்லாம் அரசரும் கர்த்தருக்கெல்லாம் கர்த்தருமாகியவருக்குப் புகழ்ச்சியைச் செலுத் தும் படியே அவர்கள் இஸ்ரவேலருடன் சேர்ந்து கொண்டார்கள்.

பூமியின் கேடகங்கள் அரசாட்சி செலுத்து பவர்களைக் குறிப்பிடுகிறது என்பதை ஒவ்வொரு வரும் அறிந்திருந்தார்கள். அவர்கள் மக்களைக் காக்கும்படி நியமிக்கப்பட்டவர்கள். அவர்களோ இப்பொழுது **தேவனுடையவர்கள்**. பூமியின் ஆளுநர்கள் எல்லோரைக் காட்டிலும் **அவர் மகா உன்னதமானவர்.**

இசை நிகழ்ச்சியின் முடிவின்போது, அந்த நாட்டின் வரலாற்றில் இதுகாறும் இத்தகைய செறிவுமிக்க நிகழ்வு நடந்ததில்லை என்று திறனாய்வு செய்பவர்கள் ஒப்புக்கொள்வார்கள்.

சங்கீதம் 48: அவர்கள் என்ன கண்டார்கள்?

வேற்று நாட்டினர் படையெடுத்து எருசலேமின் நகரவாசல் வரை வந்துவிட்டார்கள். நகரத்தின் உட்புறத்தில், முற்றுகை நீண்ட காலம் நீடிக்கும், அதனால் பெரிதான அளவில் இடர் அடைய நேரிடும் என்று மக்கள் எதிர்பார்த்தார்கள். மனி தர்களுடைய எண்ணத்தின்படி, இடர் நீங்குவதற் கான வாய்ப்பு எதுவும் இல்லை. அப்பொழுது கர்த்தர் ஓர் அற்புதத்தைச் செய்தார். பகைவர் முற்றிலும் கலக்கம் அடையும்படி ஏதோவொரு நிகழ்வு நடந்தது. அவர்கள் அச்சத்தினால் பின் வாங்கினார்கள். எருசேலம் அழிவிலிருந்து காக் கப்பட்டது. மிகப் பெரிதான அளவில் ஆரவாரத் தோடு கூடிய புகழ்ச்சி தேவனுக்கு ஏறெடுக்கப்பட் டது. அத்தருணத்தின் ஆனந்த பரவசத்தின் சில விவரங்கள் இங்கு படம் பிடித்துக் காட்டப்பட்டுள் ளன.

48:1,2 கர்த்தர் விவரித்துக் கூறவியலாதபடி **பெரியவர்**. அவர் வல்லமையிலும், அறிவிலும், மகிமையிலும், கிருபையிலும் பெரியவர். அவரு டைய அன்பு, இரக்கம், பரிவு எல்லாம் பெரிதா யிருக்கின்றன. அவர் ஞானத்திலும், அறிவிலும், பெரியவராயிருக்கிறார். அவருடைய நியாயங் கள் ஆராய்ந்து முடியாதவை, அவருடைய வழி கள் மர்மமானவை.

தேவன் அவ்வளவு பெரியவராக இருக்கின்ற காரணத்தால், அவர் **மிகவும் துதிக்கப்**பட வேண் டும். அவர் மிகப்பெரிய படைப்பாளர், மிகப்பெரிய அளவில் வாழ்வாதாரம் அளிப்பவர், மிகப்பெரிய தீர்க்கதரிசி, மகா பிரதான ஆசாரியர், அரசர் களுக்கெல்லாம் அரசர், மிகப் பெரிய மீட்பர், மிகப் பெரிய அளவில் விடுதலை பெற்றுத் தருவர் என்ப தால் துதிக்கப்படுவதற்குத் தகுதிபெற்றவர் ஆவார். இந்த 48 -ஆவது சங்கீதத்தில் அவரு டைய நகரத்தையும், அவருடைய மக்களையும் இரட்சித்துப் பாதுகாப்பு அளிக்கும் அவருடைய மேன்மை காட்சியளிக்கிறது.

மக்கள் தேவனைக் குறித்தும் தேவனுடைய நகரத்தைக் குறித்தும் ஒரே நேரத்தில் பேசுகிறார் கள். அந்நகரத்தில் அமைந்திருந்த தேவாலயத் தின் உட்கருவறையில் தேவன் வாசம்பண்ணி வந்த காரணத்தால் அவர்கள் தேவனையும் அந் நகரத்தையும் ஒன்றிணைத்துப் பேசுகிறார்கள். எருசலேமே இவ்வுலகில் மிக அழகிய நகரம் என் பதே அவர்களுடைய கருத்து. அது அவருடைய **பரிசுத்த பர்வதத்தின்** சிகரத்தில் அமைந்திருந் தது. மிகக் கம்பீரமான கிரீடத்தில் பதிக்கப்பட்ட இரத்தினக் கல்லைப் போன்று **வடிப்பமான ஸ்தானத்தில்** அந்நகரம் அமைந்திருந்தது - **சர்வ பூமியின் மகிழ்ச்சி.**

சில நேரங்களில் எருசலேம் **சீயோன் மலை** என்று குறிப்பிடப்பட்டுள்ளது (எருசலேம் சீயோன் மலையில் அமைந்துள்ள பல மேட்டுத் திடல் களில் ஒன்று). மேலும் அது "வடதிசையின் தொலைதூரத்தில்" என்றோ **"வடதிசைப் பர் வதம்"** என்றோ விவரிக்கப்பட்டுள்ளது. திரு வாளர் நாக்ஸ் மற்றும் திருவாளர் கெலிநேயு ஆகிய இருவரும் இதனை "பூமியின் மெய்யான துருவம்" என்று மொழிபெயர்த்திருக்கிறார்கள். தேவனுடைய பண்டைய மக்களுடைய கண் களில் எருசலேம் மெய்யான துருவமாகவே காணப்பட்டது; அதுவே காந்த ஈர்ப்பு சக்தியின் தலைநகராக விளங்குகிறது, உலகத்தின் அரசி யல், சமயம், பண்பாடு எல்லாம் அந்த நகரத்தால்

ஈர்க்கப்படுகின்றன. அதுவே மகாராஜாவின் நகரம், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அரசருக் கெல்லாம் அரசராக இவ்வுலகிற்கு மீண்டும் வருகைபுரிந்து தமது ஆட்சியை நிறுவும்போது எருசலேமே தலைநகராக விளங்கும்.

48:3 அந்நகரத்தின் மதிற்சுவர்களுக்குள் தேவன் தம்மை நம்பத்தகுந்த பாதுகாப்பாளராக மெய்ப்பிக்கிறார். அது வெகுவிரைவில் அழிந்து போகும் என்று காணப்பட்ட நிலையில் அற்புத மாகக் காப்பாற்றப்பட்டதை எல்லோரும் அறிந் திருக்கிறார்கள். என்ன நிகழ்ந்தது என்று இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது:

48:4 பகைவரின் பெரும்படை நகரத்திற்கு வெளியே சூழ்ந்துகொண்டது. திரளான எண்ணிக் கையில் அவர்கள் தாக்குவதற்கு ஆயத்தமாக, ஏதுவான இடங்களில் நின்றார்கள். இவ்விதமாகப் பெருமளவில் படைவீரர்கள் நகரத்தைச் சூழ்ந் திருந்த நிலையில், இராணுவப் பார்வையின்படி, அந்த நகரம் தப்புதவற்கு வாய்ப்பே இல்லை.

48:5 அந்த நேரத்தில் தாக்க வந்தவர்கள் ஏதோ ஒன்றைக் கண்டு வலுவிழந்து போனார் கள். அவர்கள் கண்டது என்ன?

இந்த வசனங்களில் எருசலேம் நகரத்தைக் கண்ட அந்த மக்கள் கலங்கினார்கள் என்று குறிப் பிட்டிருப்பது போலத் தோன்றுகிறது. ஆனால் அந்தச் சிறிய நகரத்தைக் கண்டு, இராணுவப் பயிற்சி பெற்ற படை கலங்குவதென்பது நடை பெற முடியாத நிகழ்வு.

ஒருவேளை அவர்களுக்கு முன்பாக, காண்ப தற்கு இயலாத உலகத்தைக் கொண்ட திரை தொங்கவிடப்பட்டது போலும். அவர்கள் அந் நகரத்தைக் காக்கும்படி வந்திறங்கியிருந்த தேவ தூதர்களின் படையைக் கண்டார்கள் போலும். அல்லது அந்த மலை குதிரைகளாலும் அக்கினி இரதங்களாலும் நிறைந்திருந்ததைக் கண்டி ருக்க வேண்டும் (2 இராஜா. 6:17 -ஐக் காணவும்). அல்லது அவர்கள் கர்த்தருடைய தூதனான வரைக் கண்டார்களா - கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மனுவுரு எடுப்பதற்கு முன்னர் தோன்றிய காட்சிகளில் ஒன்றா? (ஏசாயா 37:36 -ஆம் வசனத் தைக் காணவும்).

48:6,7 வெளிப்படையாகச் சொல்ல வேண்டு மெனில், அது என்னவென்று நாம் அறியோம். ஆனால் அது எதுவாயினும், கடினமனதுடன் இருந்த போர் வீரர்களே தங்களுடைய நெஞ் சுரத்தை இழந்து போகுமளவிற்கு, பயங்கரமான அது ஓர் ஆவியுருவாகத்தான் இருக்க வேண்டும். அந்தக் காட்சி அவர்களைக் கலங்கடித்தது. அவர்களுடைய பாளையத்தில் பெருங்குழப்பம் ஏற்பட்டது. அவர்கள் உடனடியாகப் பின்வாங்கி னார்கள், திரும்பிச் சென்றபோது நடுங்கினார் கள். அவர்களுடைய வேதனை பிள்ளைப்பேற் றின் போது பெண் அடைகிற வேதனைக்கு ஒப்பா யிருந்தது. பெரும்புயலால் தாக்குண்டு சிதறிச் செல்லுகிற கப்பல்களைப் போல எதிரிகளின் இராணுவம் குழப்பத்தாலும் ஒழுங்கற்ற நிலை யாலும் சிதறுண்டது.

48:8 நகரத்திற்குள் இருந்த மக்கள் இப்பொழுது மகிழ்ச்சியால் பிதற்றத் தொடங்கி விட்டார்கள். சடிதியில் அழிவு ஏற்படும் என்னும் நிலை மாறி அற்புதமான வெற்றி கிடைத்திருக்கிறது. தேவனே எருசலேம் நகரத்தை நிறுவியவரும் பாதுகாப்பவ ரும் என்று கூறப்பட்டு வந்ததை அவர்கள் எப் போதும் கேட்டிருக்கிறார்கள். அவர்கள் இப் பொழுது அந்த உண்மையைத் தங்களுடைய சொந்தக் கண்களாலே காண்கிறார்கள். "காலங் காலமாக எங்களுக்குச் சொல்லப்பட்டது. இப் பொழுது மெய்ப்பிக்கப்பட்டுள்ளது - தேவன் தாமே நகரத்தை எக்காலத்திலும் நிலை நிறுத்துகிறார்" (நாக்ஸ் மொழிபெயர்ப்பு).

48:9-11 ஆகவே அவர்கள் தேவனைப் புக ழும்படி தங்களுடைய இருதயங்களை உயர்த்து கிறார்கள். அவர்கள் தங்களுடைய நன்றியறி தலின் காணிக்கையோடு **ஆலயத்திற்கு** ஏறிச் செல்லுகையில், கர்த்தருடைய **கிருபையைக்** குறித்துத் தியானிப்பதற்கு எண்ணிக்கையில் அடங்கா காரணங்கள் இருக்கின்றன. பூமியில் தேவனுடைய திருப்பெயர் எங்கெல்லாம் அறியப் பட்டிருக்கிறதோ, அங்கெல்லாம் அவரது **வலது கரம்** நீதியின் வெற்றியால் நிறைந்திருக்கிறது என்று புகழப்படுகிறார் என்பதையே அவர்கள் பிரதிபலிக்கிறார்கள். எருசலேமும் **யூதாவின்** சிறு நகரங்களும் **களிகூரவேண்டும்** என்று அவர்கள் அழைப்பு விடுக்கிறார்கள்.

48:12-14 இப்பொழுது அவர்கள் வெற்றி பெற்றதற்கு அடையாளமாக நகரத்தைச் சுற்றி உலாவுகிறார்கள். அங்குள்ள **கொத்தளங் களை** எண்ணும்படியும் (அவை யாவும் இன்ன மும் இருக்கின்றன), அலங்கங்களைக் கவனிக் கும்படியும் (அவை ஒரு மாற்றமும் அடையாமல் உள்ளன), மக்கள் நிறைந்துள்ள அரண்மனை யின் வழியாக நடந்து செல்லும்படியும் (எதிரிகள் வருவதற்கு முன் எப்படி இருந்ததோ அது போலவே பாதிக்கப்படாமல் இருக்கிறது) அவர் கள் ஒருவரையொருவர் உற்சாகப்படுத்துகிறார் கள். தங்களுடைய பிள்ளைகளிடமும் பேரப் பிள்ளைகளிடமும் விவரிப்பதற்கு இது ஓர் அற்புத மான கதை - எவ்விதச் சிறு பாதிப்பும் ஏற்படாமல் இயற்கைக்கு அப்பாற்பட்ட வகையில் தேவன்

எருசலேம் நகரத்தைப் பாதுகாத்தது எவ்வாறு என்பதே அக்கதை! அவர்கள் இதனைப் புதிய சந்ததிக்குக் கற்பிப்பார்கள். இதனைச் செய்த **"தேவன் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நம்முடைய தேவன்; மரணபரியந்தம் நம்மை நடத்துவார்."**

14 -ஆவது வசனத்தை மிக அழகாக ஒருவர் கீழ்க்கண்டவாறு எழுதிக் கொடுத்திருக்கிறார்:

> நித்தியம் முதல் நித்தியம் வரையிலும் தேவன் நம்முடைய தேவன். மரணம் வரையிலும்கூட அவர் நம்முடைய வழிகாட்டியாக இருப்பார், மரணத்தின் மேலும், மரணத்தின் அப்பாலும் அவர் வழிநடத்துவார்.

சங்கீதம் 49:
தீயவரும் அவர்களுடைய செல்வமும்

தீயவர் பெரும்பாலும் செல்வச் செழிப்போடு இருக்கிறார்கள், ஆனால் விசுவாசிகளோ வறிய வராகவும் உடைமைகளைப் பறிகொடுத்தவர் களாகவும் இருக்கிறார்கள், இது வாழ்வின் மிகப் பெரிய புதிர்களில் ஒன்றாக இருக்கிறது. ஆனால் இதுவே முழுக் கதையன்று. துன்மார்க்கர் மிகத் தீவிரமாக நம்பியிருக்கிற செல்வம், அவர்கள் மிகவும் நெருக்கடியான நிலையில் இருக்கிற போது அவர்களுக்கு உதவுவதில்லை. மரணத்தி லிருந்து அது அவர்களைக் காப்பாற்றுவது இல்லை. அந்தச் செல்வத்தை அவர்களால் எப் போதும் அனுபவிக்க முடியாது; அவர்கள் கல்ல றையில் அழுகுவதை அது தடைசெய்யாது. அவர்கள் உலகைவிட்டுச் செல்லும்போது எதை யும் எடுத்துச் செல்வதும் இல்லை, திரும்ப வந்து அனுபவிக்கப் போவதும் இல்லை. கர்த்தரை விடுத்து, பணத்தில் நம்பிக்கை வைப்பது இறுதி யில் முட்டாள்தனமாகவே முடிவடையும்! அதுவே 49 -ஆவது சங்கீதத்தின் சாராம்சமாகும்.

49:1-4 இந்தச் செய்தியானது எல்லா மனித ருக்கும், சிறியோராயினும் பெரியோராயினும், செல்வந்தராயினும், வறியவராயினும் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் பொருத்தமுடையது. நுண்ண றிவுத் திறம்மிக்க இருதயத்திலிருந்து வருகிற, கலப்படமற்ற நீதிமொழியாக இது விளங்குகிறது. வாழ்க்கையில் பொதுவாகக் காணப்படும் சமத்து வமற்ற நிலையை நோக்கி கோராகின் மக்கள் தங்களுடைய கவனத்தைத் திருப்புகிறார்கள். அதற்கான விடையை அவர்கள் அறிந்தபோது, **சுரமண்டலத்தின்** உதவியோடு அதைப் பாடு கிறார்கள்.

49:5-9 ஒடுக்குபவர்கள் தங்களுடைய குதி கால்களைக் கொண்டு விடாப்பிடியாகப் பின் தொடர்ந்து வந்ததும், துன்புறுத்துகிறவர்கள் கொடுஞ்செயல் புரிவதற்கென்று சதித்திட்டம் தீட்டி சூழ்ந்திருந்ததுமான அந்த இருண்ட நாட் களைக் குறித்து இறைமக்கள் கவலைப்படு வதற்கு உண்மையாகவே ஏதொரு காரணமும் இல்லை. அந்த எதிரிகள் தங்களுடைய பொன்னி லும், அது தருகிற அதிகாரத்திலும் நம்பிக்கை வைத்திருந்தார்கள்; அவர்கள் எந்த அளவிற்குச் செல்வச் செழிப்போடு இருந்தார்கள் என்பதில் பெருமைப்பட்டார்கள். ஆனால், இந்த ஆனால் மிகப்பெரியது - அவர்களுடைய செல்வம் யாவும் அவர்களுடைய சகோதரனை மரணத்திலிருந்து காப்பாற்றாது (KJV) அல்லது அவர்களையே காப்பாற்றாது. ஒரு மனிதனுடைய வாழ்க்கை மீட்கப்படுவது மிகப்பெரிய விலைமதிப்புடையது. பணத்தைப் பேரமாக வைத்து ஒரு மனிதனுடைய மரண நாளை தள்ளி வைப்பது **என்றைக்கும்** கைவிடப்படவேண்டும். எவனொருவனும் இவ் வுலகில் முடிவில்லா வாழ்வை விலைகொடுத்துப் பெறமுடியாது அல்லது கல்லறைக்குத் தப்ப முடி யாது.

49:10 இறுதியில் **ஞானிகளும்** மரிக்கிறார் கள். அதுபோலவே செல்வந்தனாயிருந்த மூட னும், சிந்தனையற்றவனும் மரணமடைந்து தங்க ளுடைய **ஆஸ்தியை மற்றவர்களுக்கு வைத் துப் போகிறார்கள்**. ஞானிகள் தங்களுடைய செல்வத்தைப் பிறருக்காக வைத்துவிட்டுப் போகி றார்கள் என்று இந்த வசனம் சொல்லவில்லை என்பதைக் கவனியுங்கள். அத்தகைய மனிதனு டைய மரண சாசனம் கீழ்க்கண்டவாறு இருக்கும்:

> நல்ல நினைவோடு, நான் இன்னும் உயிரோடி ருக்கும்போதே என்னுடைய பணத்தைக் கர்த்த ருடைய ஊழியத்துக்காகக் கொடுத்துவிட்டேன்.

49:11,12 நுண்ணறிவு மிக்க மனிதர்கள் இவ் வுலகில் தங்களுக்கென்று ஓர் எதிர்காலத்தை உருவாக்க வேண்டுமென்று முயற்சி செய்கிறார் கள், ஆனாலும் அவை அழிந்து போகக்கூடி யவை என்பதை அறியாமல் இருக்கிறார்கள் என்பது விநோதமான உண்மை. அவர்களுடைய உள்ளுணர்வு தங்கள் உறைவிடங்கள் தலை முறை தலைமுறையாக இருக்குமென்று கூறு கிறது, அவர்கள் முடிவில்லா வாழ்வை வாழப் போகிறதாகவும் நினைக்கிறார்கள். தங்களு டைய உடைமைகளுக்கும், தெருக்களுக்கும், நகரங்களுக்கும், தங்களுடைய பெயரைச் சூட்டிக்கொள்கிறார்கள். ஆனால் தவிர்க்கவிய லாத உண்மை, **கனம்பொருந்திய மனிதனும் அழியவே** வேண்டும். அந்நிலையில் அவன் **மிரு கங்களுக்கு ஒப்பாயிருக்கிறான்**. ஆனால் மற்ற

அம்சங்களில் அவன் மிருகங்களிலிருந்து வேறு பட்டவனாயிருக்கிறான். எடுத்துக்காட்டாக, மனி தன் இறந்தவுடன் அவனுடைய உடல் கல்லறைக் குச் சென்றாலும், அவனுடைய ஆவியும் ஆத்து மாவும் அழிவதில்லை. மேலும் அவனுடைய உடல் நித்திய ஆக்கினைக்கென்று அல்லது நித்திய நன்மைக்கென்று உயிரோடு எழுப்பப் படும். மனிதன் முடிவில்லாதவன், ஆனால் மிரு கமோ முடிவடைந்து போகும்.

49:13,14 இறைவனுக்குப் பதிலாகத் தங்களு டைய சொத்தின்மேல் ஞானமற்ற முறையில் நம் பிக்கை வைக்கிறவர்களுடைய முடிவு இவ்வாறு தான் இருக்கிறது - அவர்கள் இறந்து போவ தில்லை என்பது போலத் தங்கள் வாழ்க்கையை நடத்துகிறார்கள். அவர்கள் சாகவே வேண்டும், அப்பொழுது அவர்களுடைய உறவினர்களும் நண்பர்களும் அவர்களுடைய நுண்ணறிவுமிக்க ஞானத்தைப் பற்றிப் பேசுகிறார்கள். அவர்கள் சரீரத்தை விட்டுப் பிரிய வேண்டியது நிச்சயம் என்னும் நிலையில், மரணத்தின் மேய்ப்பனாலே கல்லறையை நோக்கி இரக்கமற்ற முறையில் **ஆட்டு மந்தையைப் போல** நடத்தப்படுகிறார் கள். **"செம்மையானவர்கள் அதிகாலையில் அவர்களை ஆண்டுகொள்வார்கள்."** அதாவது, செல்வந்தன் லாசரு ஆகியோருக்கு நடந்தது போல நிலைமை தலைகீழாக மாறும். ஆபிரகாம் செல்வந்தனிடம் கூறியதை நினைவு கூருங்கள்:

> மகனே, நீ பூமியிலே உயிரோடிருக்குங் காலத் தில் உன் நன்மைகளை அனுபவித்தாய், லாசருவும் அப்படியே தீமைகளை அனு பவித்தான். அதை நினைத்துக்கொள்; இப் பொழுது அவன் தேற்றப்படுகிறான், நீயோ வேதனைப்படுகிறாய் (லூக்கா 16:25).

செல்வந்தனுடைய சிறப்பும் அழகும் அழிந்து போயின, பாதாளமேயல்லாமல் அவனுக்கு வேறு வீடு இல்லை - அவன் உலகில் அனுபவித்த வீட் டிற்கு முற்றிலும் மாறான நிலையில் இப்பொழுது இருக்கிறான்!

49:15 பழைய ஏற்பாட்டு வசனங்களில் உயிர்த் தெழுதலைப் பற்றிய சில ஒளிக்கீற்றுகளில் ஒன்றை நாம் இங்கு பெற்றிருக்கிறோம். மரணத் தைப் பற்றியும் அதற்குப் பின்னான வாழ்க்கை யைப் பற்றியும் பழைய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் தெளிவற்ற வகையிலேயே எழுதியிருக்கிறார் கள். ஆனால் இங்கு பாடலாசிரியன், **தேவன்** தனது **ஆத்துமாவைப் பாதாளத்தின் வல்ல மைக்குத் தப்புவித்து மீட்பார்** என்று நம்பிக்கை யோடு பேசுகிறான். அதாவது, தேவன் அவனு டைய சரீரத்திலிருந்து பிரிந்த ஆத்துமாவை மீண்டும் உயிர்த்தெழுந்த சரீரத்தோடு ஒன்று சேர்ப்பார். **"அவர் என்னை ஏற்றுக்கொள்வார்"** என்று அவன் கூறிய இடத்தில் ஏனோக்கையும் எலியாவையும் தேவன் ஏற்றுக்கொண்டதை விவரிக்கப் பயன்படுத்தப்பட்ட அதே சொல்லைப் பயன்படுத்தியிருக்கிறான்.

49:16-19 ஆகவே துன்மார்க்கன் மிகுந்த செல்வந்தனாகி, அவனுடைய வீடு அலங்கரிக்கப் பபட்டு செல்வாக்கு மிகுந்தாலும் விசுவாசி அதைக் கண்டு கவலைப்பட வேண்டியதில்லை. இந்த பூமியே அவன் அனுபவிக்கப் போகிற ஒரே பர லோகம்! அவன் மரணமடையும்போது அவனு டைய சொத்தில் **ஒன்றையும் கொண்டுபோவ தில்லை**. அவன் வெறுங்கையோடு சவக்குழிக் குச் செல்கிறான். அவன் தனது மேன்மை எதை யும் எடுத்துச் செல்வதில்லை. அவன் உயி ரோடிருக்கும் வரை அவனுடைய மகிழ்ச்சியை ஒருவராலும் கொள்ளையிட முடியாது என்று எண்ணுகிறான். அவன் தன்னுடைய செல்வத் தைப் பெருக்கிக் கொள்கிறபோது மக்கள் அவனைப் புகழ்கிறார்கள். முடிவில் அவன் தனது மூதாதையரைப் போலவே மரணமடைகிறான். அவர்களுடைய நீண்ட இருளடைந்த இரவையே இவனும் அவர்களோடு சேர்ந்து அனுபவிக் கிறான்.

49:20 ஒருவன் தனது உலகச் செல்வத்தை யும் **கனத்தையும்** தொடர்ந்து வைத்துக்கொண்டி ருக்க முடியாது. மரணத்தை **மிருகங்கள்** எவ் வாறு தவிர்க்க முடியாதோ அதுபோலவே அவனா லும் தவிர்க்க முடியாது.

தீயவன் சாகிறது போலவே நீதிமானும் சாகி றான் என்று ஒருவர் எதிர்க்கக் கூடும் என்பது உண்மையே. இது உண்மைதான். கர்த்தருடைய வருகை தாமதமானால் நாம் அனைவரும் மரண மடைவோம். ஆனால் பாடலாசிரியன் கூறுகிற கருத்து யாதெனில், தீயவன் தன்னுடைய சொத்து முழுவதையும் இவ்வுலகிலேயே விட்டு விட்டுச் செல்கிறான்; ஆனால் நீதிமான் நித்திய பரிசுப் பொருளாகிய அளவிடமுடியாத செல் வத்தை அடையும்படி செல்கிறான்.

இறுதியாக ஒரு கருத்து. திருமறையில் பெரும் பாலான இடங்களில் செல்வந்தன் பொல்லாங் கான மனிதனோடு இணைத்துப் பேசப்படுகிறான். இது நம்மை மட்டுப்படுத்துகிறது. செல்வந்தனாக இருப்பதைப் பாவம் என்று திருமறை கூறவில்லை என்றாலும் ஜீவனுள்ள தேவனை நம்புவதை விட்டுவிட்டு செல்வத்தை நம்புவதையே அது வன் மையாக கண்டிக்கிறது (செல்வத்தின்மேல் நம் பிக்கை வைக்காமல் அதை வைத்திருப்பது என்

பது கடினம்!). பண ஆசையைத் திருமறை கண்டிக்கிறது; அது பிறரை ஒடுக்கி நேர்மையற்ற முறையில் செல்வத்தைப் பெருக்கிக்கொள்வதைக் கண்டிக்கிறது. இழந்துபோனதும் பாடுபடுகிறதுமான உலகத்தின் தேவைகளைக் குறித்து சுரணையற்ற வகையில் செல்வத்தைக் குவிப்பதை அது கண்டிக்கிறது.

சங்கீதம் 50: தொடர்ந்து செலுத்தப்படும் தேவனுடைய நியாயத்தீர்ப்பு

இந்தச் சங்கீதத்தின் பின்னணி தேவன்தாமே நியாயாதிபதியாக வீற்றிருக்கிற நீதிமன்றம், அங்கு இஸ்ரவேல் பிரதிவாதியாகவும், வானமும் பூமியும் சாட்சிகளாகவும் இருக்கின்றன.

ஏதோ இஸ்ரவேலின் வரலாற்றின் வெகு காலத்திற்கு முன்னர் நடந்த தெளிவற்ற விசாரணை நடந்த நீதிமன்றக் காட்சி என்று நாம் நினைத்து விடக் கூடாது; மாறாக அது உலகெங்குமுள்ள பரிசுத்தவான்களைக் குறித்த தேவனுடைய தொடர்ச்சியான மதிப்பீடு ஆகும்.

நீதிமன்றம் நடைபெறும் காலம் (50:1-6)

50:1 முதலாவதாக, இஸ்ரவேலின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் அனைத்து மக்களையும் நீதியரசர் வரும்படி அழைக்கிறார்; கிழக்கிலிருந்து மேற்குவரை எல்லா இடங்களிலிருந்தும் தம்முடைய நீதிமன்றத்துக்கு வரும்படி அழைக்கிறார். நீதியரசருக்கு அவ்வாறு அழைக்கும்படி அதிகாரம் அளித்ததன் அடிப்படையைக் காண்போமாயின், அவரே **வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர்.**

50:2,3 அடுத்ததாக, நீதியரசர் சீயோன் மலையிலுள்ள தேவாலயத்தில் இருக்கிற தமது அறையிலிருந்து, கண்ணைக் கவருகிற மகிமையுள்ள சுடரொளி போன்று பிரகாசிக்கிற மேகமாக - செக்கினா மகிமையாக வெளியே செல்வது காணப்பட்டது. அவருடைய மக்களின் பாவத்தைக் குறித்து இனிமேல் அவர் **மவுனமாயிரார்.** சீனாய் மலையிருந்து இறங்கி வந்ததுபோல அவர் வருகிறார்; அவருக்கு முன்பாக **அக்கினி** விரைந்துசெல்கிறது. **அவரைச் சுற்றிலும்** கடுமையான புயலும் இடிமுழக்கமும் மின்னலும் காணப்படுகின்றன. இந்தத் தடவை அவர் நியாயப்பிரமாணத்தைக் கொடுக்க வரவில்லை, மாறாக அதனுடைய உள்ளார்ந்த ஆவிக்குரிய பொருள்விளக்கம் அளிக்கும்படி வருகிறார்.

50:4,5 அவர் தமது நியாயாசனத்தில் அமர்ந்தவராக, **வானங்களையும் பூமியையும்** சாட்சிக் கூண்டில் வந்து நிற்கும்படி ஆணையிடுகிறார். பிறகு பிரதிவாதிகளை அழைத்துவரும்படி தமது ஊழியர்களுக்குக் கட்டளையிடுகிறார். முதலில் அவர் இஸ்ரவேலின் **பரிசுத்தவான்களை** விசாரிப்பார், அவர்களே அவரோடு **பலியினாலே உடன்படிக்கை பண்ணினவர்கள்**. (இதுவே ஓரேப் மலையில் கொடுக்கப்பட்டு பின்னர் பலிகளின் இரத்தத்தினாலே உறுதிசெய்யப்பட்ட நியாயப்பிரமாணமாகும் - யாத். 24:3-8). அவருக்கு உண்மையோடிருந்த மக்களை விசாரிக்கும் நிகழ்ச்சி 7-15 வசனங்களில் காணப்படுகிறது. அதன் பிறகு பொல்லாதவர்களை விசாரிக்கும் பிரத்தியேகமான நிகழ்வு இடம்பெற்றுள்ளது (வச. 16-19).

50:6 தேவனுடைய நியாயத்தீர்ப்பின் நீதிக்குச் சாட்சியாக விளங்கும்படி அவர் வானங்களுக்குக் கட்டளையிடுகிறார். இதன் அடிப்படை உண்மை என்னவெனில், தேவனே நியாயதிபதி, அதாவது அவர் எல்லாச் செய்திகளையும் முழுமையாக அறிந்திருக்கிறார், அவர் முற்றிலும் நடுநிலை வகிப்பவர், அவருடைய எல்லாத் தீர்ப்புகளும் ஞானமுள்ளவை, நியாயமானவை.

சமயச் சடங்குகள் என்னும் பாவம் (50:7-15)

50:7 இப்போது தேவன் குற்றச்சாட்டுகளை எடுத்துரைத்து வாதாடும் வழக்குரைஞராகக் கருதிக்கொண்டு, தம்முடைய மக்களாகிய இஸ்ரவேலருக்கு எதிராகக் குற்றஞ்சாட்டுகிறார். மனித வாழ்வில் நீதி அரசரே குற்றவியல் வழக்குரைஞராகச் செயல்படுவதென்பது நினைத்துப் பார்க்கவும் முடியாததாக இருக்கிறது. ஆனால் இந்த வழக்கில் அது முழுவதும் சரியானதே, ஏனெனில் நீதியரசர் உன்னதமான **தேவனே** ஆவார்.

50:8 எடுத்தவுடனேயே தேவன் குற்றச்சாட்டைத் தெளிவுபடுத்துகிறார்; அவருக்குப் **பலிகளைக்** கொண்டுவருவதில் இஸ்ரவேல் கடமையைச் சரிவர செய்யாமல் இல்லை, அவர்கள் தங்களுடைய **தகனபலிகளைக்** கொண்டுவருவதில் உண்மையோடு நடந்துகொண்டார்கள். ஆனால் இந்தச் சடங்குகளைச் செய்வதன் மூலமாக யெகோவாவுக்குச் செய்யவேண்டிய கடமை முடிந்துவிட்டது என்று நினைத்ததே பிரச்சினை. ஆண்டு முழுவதும் தங்களுடைய தாயை அலட்சியப்படுத்திவிட்டு, அவருடைய பிறந்தநாளில் இனிப்புகளால் சரிக்கட்ட நினைக்கும் பெண்பிள்ளையைப் போல இருந்தார்கள்! அல்லது எல்லாத் தேவைகளையும் செய்த தகப்பனுக்கு நன்றியே சொல்லாமல், பெற்றோர் தினத்தன்று ஓர் ஆடையை வாங்கித் தருகிற மகனுக்கு நிகராயிருந்தார்கள்!

ஆகவே, தேவனிடத்தில் எவ்வித அக்கறையும் இல்லாமல் அவர்கள் அவரைப் புறக்கணித்த அதே நேரத்தில் அவருடைய பலிபீடத்தை மிருகங்களால் நிரப்பினார்கள். இதனை யெகோவா

எதிர்க்கிறார். காணிக்கைகளைக் குறித்த விதி களில் அவர்கள் மிக நுணுக்கமான எல்லாவற்றை யும் செய்தார்கள். ஆனால் கர்த்தரோடு கொண்டி ருக்க வேண்டிய இணக்கமான தனிப்பட்ட உற வைப் பொறுத்தவரையில் அவர்கள் மிகவும் குறைவுபட்டிருந்தார்கள். திருவாளர் F. B. மேயர் எழுதுகிறார்:

> தேவனுக்குத் தனது இருதயத்திலிருந்து அன்பையும் மரியாதையையும் செலுத்தாமல், அவருடைய வீட்டில் செய்யவேண்டிய சமயச் சடங்குகளில் வெறுமனே வெளியரங்கமாகக் கீழ்ப்படிந்து மனநிறைவு அடைகிற மாய்மாலக் காரனுக்கு இந்தச் சங்கீதம் கடுமையான கடிந்துகொள்ளுதலாக விளங்குகிறது.[37]

50:9 ஆகவே அவர்களுடைய வீட்டிலிருந்து காளைகளையும், அவர்களுடைய தொழுவங் களிலிருந்து ஆட்டுக்கடாக்களையும் தேவன் வாங்கப் போவதில்லை என்று தேவன் சொல் கிறார். அவர் சமயச் சடங்குகளிலோ பண்டிகை களிலோ மனநிறைவு அடைவதில்லை. உள் ளார்ந்த தவறான மனப்பான்மையை வெளியரங்க மான செயலின் மூலமாக மூடி மறைப்பதைச் சரி யென்று காணச்செய்யும் நோக்கத்துடன் தேவன் பலிமுறைகளை ஏற்படுத்தவில்லை.

50:10-13 தேவனுடைய மக்கள் சிந்திப்பதற் குச் சற்று நேரம் எடுத்துக்கொள்வார்களானால், இவ்வுலகில் உள்ள அனைத்துப் படைப்புகளுக் கும் அவரே உரிமையாளர் என்பதைப் புரிந்து கொள்வார்கள் - **சகல காட்டு ஜீவன்களும், பர்வதங்களில் ஆயிரமாயிரமாய்த் திரிகிற மிரு கங்களும்**, வானத்துப் பறவைகளும் வெளியில் நடமாடுகிற அனைத்தும் அவருடையவை. மனித ரிடத்திலிருந்து ஒரு பொருளும் தேவனுக்குத் தேவையில்லை என்பதை அவர்கள் விரைவில் அறிவார்கள். அவர் பசியால் பாதிக்கப்படுவ தில்லை; அவ்வாறு நடக்குமானால் அவர் நம் மிடத்தில் ஏதொன்றையும் கேட்க வேண்டிய அவசியமில்லை, ஏனெனில் அவருடைய சேமிப்பு அறை நிறைந்திருக்கிறது. காளைகளின் மாம்சத் தாலோ ஆடுகளின் இரத்தத்தாலோ அவர் தமக் குத் தேவையான சத்தையோ மனநிறைவையோ அடைய வேண்டிய தேவையில்லை. அந்த அர்த் தத்தில் தேவன் முழுவதும் தன்னிறைவு பெற் றிருக்கிறார்.

50:14,15 அவ்வாறெனில் தேவன்தம் மக்க ளிடத்திலிருந்து எதிர்பார்ப்பது என்ன? மூன்று விசயங்கள்:

நன்றிபாராட்டுதல். எளிமையான முறை யில் நன்றிபாராட்டும் செயலின் இடத்தை வேறு எந்தப் பரிசுப்பொருளும் எடுத்துக் கொள்ளாது. பெரும்பாலான நேரங்களில் நாம், தங்களுடைய தாயின் வாழ்நாளில் அவர்களைக் குறித்து எந்தக் கவலையும் இல்லாமல் இருந்துவிட்டு, அவர் இறந்த பிறகு தங்களுடைய தவறைச் சரிசெய்யும் வகையில் பணச்செலவுமிக்க ஆடையை அந்த உடலுக்கு அணிவிக்கும் குடும்பத் தாரைப் போல செயல்படுகிறோம்.

சூளுரைகளை நிறைவேற்றுதல். **"உன்னத மானவருக்குப் பொருத்தனைகளைச் செலுத்துங்கள்."** அன்பு, ஆராதனை, ஊழி யம், பக்தி ஆகியவற்றில் கூறப்பட்ட சூளுரை கள்.

மன்றாட்டில் ஐக்கியம். **"ஆபத்துக் காலத் தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகி மைப்படுத்துவாய்."** இங்கு நாம் தேவனு டைய இருதயத்தைக் குறித்த வியத்தகு தெளிவைப் பெறுகிறோம். அவர் தம்மு டைய மக்களுடைய ஜெபத்தைக் கேட்க ஆவலுடன் இருக்கிறார். மேலும் அந்த ஜெபங்களுக்கு விடைகூறவும் விரும்பு கிறார். அவர் தமது மக்களோடு நெருக்க மான, மென்மையான உறவில் பிரியப்படு கிறார்.

ஆனால் துன்மார்க்கரிடமோ... [50:16-21]

50:16,17 இப்பொழுது நீதியரசர் அவ்வினத் தாரின் வேறொரு கூட்டத்தினரிடமாகப் பேசத் திரும்புகிறார், அவர்கள் தங்களைப் பக்திமான் கள் என்று சொல்லிக்கொண்டாலும், வெளிப் படையாக உண்மைக்கு மாறாகச் செயல்படு கிறார்கள். அவர்கள் பக்தியோடு வேத வசனங் களை எடுத்துரைக்கவோ, உடன்படிக்கையின் ஆசிர்வாதங்கள் தங்களுக்குச் சொந்தம் என்று உரிமைபாராட்டவோ தகுதியற்றவர்கள் என்று நீதியரசர் மறுத்துரைக்கிறார். தொடர்ந்து அவர் நீண்டதொரு குற்றப்பத்திரிக்கையை எடுத் துரைக்கிறார்.

அவர்கள் சிட்சையை வெறுத்தார்கள். திருத்தப்படுவதற்கு அப்பாற்பட்டவர்கள் என்று அவர்கள் தங்களைக் குறித்துச் சிந்தித்தார்கள். ஆக்கப்பூர்வமான கருத்துக்களை அவர்கள் வரவேற்பதும் இல்லை, பொறுத்துக்கொள்வதும் இல்லை. எவரேனும் அவ்வாறு கருத்துச் சொல்ல வந்தால் இந்த மாய்மாலக்காரர்கள் அதனைக்

கடுமையாக எதிர்த்தார்கள் - கர்த்தரே கூறினாலும் அவர்கள் எதிர்த்தார்கள்.

தேவனுடைய வார்த்தையை அவர்கள் ஏளனம் செய்தார்கள். வேத வசனங்களுக்கு ஆழ்ந்த மரியாதை செலுத்துவதற்குப் பதிலாக, அவர்கள் அவை பயனற்றவை என்று எண்ணித் தங்களுக்குப் பின்னாக எறிந்துபோட்டார்கள்.

50:18 *பிரிந்து வாழ்கிற வாழ்க்கையை மறுத்துரைத்தார்கள்.* **திருடர்களோடும் விபசாரரோடும்** தோழமை கொள்வதாலே அவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படியவில்லை, அவருடைய திருப்பெயருக்கு நிந்தை உண்டாக்கினார்கள்.

50:19,20 *அவர்களுடைய பேச்சு பொல்லாத தாயிருந்தது.* எவ்விதத் தடையுமின்றி அவர்களுடைய வாய்களிலிருந்து **பொல்லாப்பை** வெளிப்படுத்தினார்கள். பொய் சொல்லுவதிலும் ஏமாற்றுவதிலும் அவர்கள் திறமைசாலிகளாக மாறினார்கள். அவர்களுடைய நெருங்கிய உறவினர்களும்கூட அவர்களுடைய பகைமையை ஏற்படுத்தக்கூடிய பழிதூற்றலைச் சந்திக்க நேரிட்டது.

50:21 அவர்கள் உடனடியாக தேவனால் தண்டிக்கப்படாததால், தங்களைப் போலவே அவரும் தங்களுடைய நிலையைப் பொருட்படுத்துவதில்லை என்று **நினைத்துக்கொண்டார்கள்**. அவர்கள் மனந்திரும்ப வேண்டும் என்பதற்காகவே அவர் பொறுமையோடு இருந்தார் என்பதை அவர்கள் அறிந்துகொள்ளவில்லை. ஆனால் இப்பொழுதோ, கர்த்தர் தமது அமைதியை களைந்து மேற்சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகளை எடுத்துரைத்து அவர்களைக் கடிந்துகொள்கிறார்.

எச்சரிப்பும் வாக்குறுதியும் (50:22,23)

இந்தச் சங்கீதம் ஓர் எச்சரிப்போடும் ஓர் உறுதிமொழியோடும் முடிவடைகிறது. தேவனை மறந்து, அவரைப் பொருட்படுத்தாத மக்களுக்கு எச்சரிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் மனந்திரும்பாவிடில், ஒரு சிங்கத்தைப் போல அவர்கள்மேல் பாய்ந்து அவர்களை முற்றிலுமாக அழித்துப் போடுவார். ஆனால் அவரிடத்திற்கு ஸ்தோத்திர பலிகளோடு வந்து அவரை மகிமைப்படுத்துகிறவர்களுக்கு வாக்குறுதி தரப்பட்டுள்ளது. அவருடைய கீழ்ப்படிதலின் பாதையில் நடக்கிறவர்கள் ஆபத்து நாட்களில் தேவனுடைய வியத்தகு மீட்பின் அனுபவத்தைப் பெறுவார்கள்.

சங்கீதம் 51: பாவத்திற்காக வருந்துதல் என்னும் இனிமையான நற்கந்தம்

"தெய்வீக அன்பு பாவமென்னும் குப்பைக் கூளத்திலிருந்து தவறுக்காக வருந்துதல் என்னும் இனிமையான நற்கந்தத்தையும் புகழ்ச்சியையும் பிழிந்து தருகிற இரசவாத வேலையைச் செய்கிறது" என்று திருவாளர் அலெக்சாண்டர் மேக்லேரன் ஒருமுறை கூறினார். இதற்கோர் எடுத்துக்காட்டினை 51- ஆவது சங்கீதத்தில் நாம் பெற்றிருக்கிறோம். இதன் தலைப்பு விவரிப்பதுபோல தீர்க்கதரிசியாகிய நாத்தான், தாவீது பத்சேபாளிடத்தில் விபசாரம் செய்ததையும், உரியாவைக் கொலை செய்ததையும் துணிவுடன் சுட்டிக்காட்டி அவனுடைய குற்றங்களை உணர்த்திய பிறகு தாவீது இப்பாடலை எழுதினான். தனது பாவத்தை முழுவதும் உணர்ந்து ஒப்புக்கொண்ட நிலையில், அவன் உள்ளம் நைவுற்று தனது வருத்தத்தை நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்திலிருந்து ஊற்றுகிறான்.

அவன் செய்த அறிக்கையை நாம் கீழ்க்கண்டவாறு பொழிப்புரையாகத் தருகிறோம்:

51:1 தேவனே... இரங்கும்! நான் உம்முடைய இரக்கத்தை வேண்டுகிறேன்! நான் தண்டிக்கப்பட வேண்டியதே என் தகுதியாயிருந்தது. நீர் **மிகுந்த இரக்கமுள்ள** தேவன், அதனடிப்படையில் நீர் என்னை நடத்தும்படி வேண்டுகிறேன். என்னுடைய தகுதியின் அடிப்படையில் நீர் என்னை நடத்தாதீர். உம்முடைய **இரக்கங்கள்** பெருமளவில் அதிகரித்துக் கொண்டே இருக்கும் இயல்புடையவை, அதன் காரணமாக உம்முடைய பரிசுத்த பிரமாணங்களை மீறிய பயங்கரமான செயல்களை அழித்துவிட வேண்டும் என்று உம்மிடத்தில் விண்ணப்பிக்க நான் துணிவு கொண்டேன்.

51:2 உம்முடைய நேர்கோட்டைவிட்டு விலகிச் சென்ற ஒவ்வொரு நிகழ்விலிருந்தும் நீர் என்னை முழுவதுமாகக் **கழுவியருளும்**. மேலும் கோர பயங்கரமான பாதைகளில் நான் சென்று இலக்கைத் தவறவிட்டேன், அவற்றிலிருந்து நீர் **என்னைச் சுத்திகரியும்**.

51:3 என் தேவனே, உம்முடைய பிரமாணத்தை நான் மீறினேன் என்பதை எல்லோருடைய முன்னிலையிலும் ஒப்புக்கொள்கிறேன். என்னுடைய பாவம் வெளிப்படையானது, என்னுடைய மனந்திரும்புதலும் வெளிப்படையானது. என்னுடைய பாவத்தின் குற்றவுணர்வு இரவும் பகலும் என்னைச் சுற்றி சுற்றி வருகிறது, இனியும் என்னால் அதை எதிர்த்து நிற்க முடியாது.

51:4 உமக்கு விரோதமாக, **உமக்கு ஒரு வருக்கே விரோதமாக நான் பாவம் செய்தேன்** என்பதை நான் தெளிவாகக் காண்கிறேன். நான்

பத்சேபாளுக்கு எதிராகவும், அவளுடைய நேர்மை யான கணவன் உரியாவுக்கு எதிராகவும் பாவம் செய்தேன் என்பதை நான் அறிகிறேன். அந்த மாவீரனுக்கு எதிராக நான் செய்த வஞ்சகச் செயலை தேவரீர் மன்னித்தருளுவீராக. ஆனால் எல்லாப் பாவமும் முதலாவதும் முதன்மை யானதுமாக உமக்கு எதிரானது என்பதை நான் அறிகிறேன். உம்முடைய சட்டம் மீறப்பட்டது. உம்முடைய சித்தம் அவமதிக்கப்பட்டது. உம்மு டைய திருப்பெயர் கனவீனப்படுத்தப்பட்டது. ஆகவே எனக்கு எதிரான வழக்கில் நான் உமது பக்கம் சேருகிறேன். ஆகவே நீர் எந்தத் தண் டனை வழங்கினாலும் உம்முடைய தீர்ப்பு முழு வதும் நீதியானது, உம்முடைய தீர்மானங் களுக்கு எதிராக ஒருவரும் குற்றம் கண்டுபிடிக்க முடியாது.

51:5 கர்த்தாவே, நான் நல்லவனல்லன். நான் துர்க்குணத்தில் பிறந்தேன், அதைக் காட்டிலும் பின்னுக்குச் சென்று பார்க்கிறேன், நான் **பாவத் தில் கர்ப்பந்தரிக்கப்பட்டேன்**. இவ்வாறு கூறுவ தால் நான் என்னுடைய தாய்க்கு எவ்விதத்திலும் அவமானத்தைச் சூட்டவில்லை, அல்லது என்னு டைய குற்றத்தின் கடுமையைக் குறைக்க வில்லை. நான் பாவங்களைச் செய்தது மட்டு மின்றி, என்னுடைய இயல்பே பாவமாயிருக்கிறது என்பதே நான் சொல்ல வந்ததன் கருத்து.

51:6 ஆனால் நீர் பாவத்தை வெறுக்கிறீர்; ஒரு மனிதனுடைய **உள்ளம்** உண்மையாயிருப்பதை நீர் விரும்புகிறீர். ஆகவே நான் இப்பொழுது உம்மி டத்திற்கு வருகிறேன், எனது இருதயத்திற்கு **ஞானத்தைப்** போதித்தருளும்.

51:7 ஒரு தொழுநோயாளி சுத்திகரிக்கப்படும் சடங்கில் **ஈசோப்பும்** ஊற்று நீரும் பயன்படுத்தப் படவேண்டும் என்று நீர் கட்டளையிட்டீர் (லேவி. 14:1-8). ஒழுக்கத்தின் அடிப்படையில் நான் தொழு நோயாளியாகவே இருக்கிறேன். **நீர் என்னை ஈசோப்பினால் சுத்திகரியும், அப்பொழுது நான் சுத்தமாவேன்; என்னைக் கழுவியருளும், அப் பொழுது நான் உறைந்த மழையிலும் வெண் மையாவேன்.**

51:8 நான் பாவம் செய்தபோது என்னுடைய பாடலை இழந்துபோனேன். மெய்யான சந்தோஷ மும் மகிழ்ச்சியும் என்னவென்பதை உணர்ந்து வெகு காலம் கடந்துவிட்டது. மீண்டும் களிகூரு தலின் இசையைக் கேட்க நீர் என்னை அனுமதிப் பீராக. நான் பின்மாற்றம் பெற்றிருந்த நிலையில், நான் முடமாகிப்போகும்படி எனது எலும்புகளை நொறுக்கினீர் என்று தோன்றுகிறது. பரிசுத்த பண்டிகைகளில் இனிமேல் என்னால் நடனமாட முடியாது. அந்த முறிவுகளையெல்லாம் நீர் குண மாக்குவீராக, அப்பொழுது நான் நடனம் செய்து உமது திருப்பெயரைப் புகழ்ந்து போற்ற மக்க ளோடு சேருவேன்.

51:9 தேவனே, நியாயந்தீர்த்து தண்டனை வழங்கும்படி **நீர் என் பாவங்களைப்** பார்க்காத படி **உமது முகத்தை மறைத்துக் கொள்ளும்படி** கெஞ்சுகிறேன். என்னுடைய தவறான அக்கிரமங் களையெல்லாம் அடிச்சுவடு இல்லாதபடி நீக்கி யருளும். அவற்றைக் குறித்து நினைக்கும் போதெல்லாம் அவை என்னைக் குத்துகின்றன.

51:10 திரும்பிப் பார்க்கும்போது, என்னுடைய பிரச்சினைகள் யாவும் முதலாவது என் மனதில் தான் தோன்றின என்பதை உணருகிறேன். நாம் பொல்லாப்பைச் செய்யுமட்டும் அவற்றைக் குறித்தே சிந்தித்துக் கொண்டிருந்தேன். என்னு டைய சிந்தனை வாழ்க்கை மாசு படிந்துவிட்டது. ஆகவே நீர் எனக்குச் **சுத்த இருதயத்தைத்** தர வேண்டுமெனக் கேட்கிறேன். ஊற்று தூய்மை யாயிருந்தால் அதிலிருந்து ஓடிவருகிற கால்வாய் தூய்மையாயிருக்கும் என்பதை நான் அறிவேன். எதிர்காலத்தில் பாவம் என்னில் வெளிப்படாதபடி, கர்த்தாவே, என்னுடைய **உள்ளம்** உறுதியாக இருக்கும்படி புதுப்பியும்.

51:11 கர்த்தாவே, நீர் என்னைக் கைவிட்டு விடாதீர், அல்லது உம்முடைய சமுகத்திலிருந்து என்னைத் துரத்திவிடாதீர், அல்லது என்னை விட்டுப் பரிசுத்த ஆவியை எடுத்துப்போடாதீர். நான் வாழ்கிற இந்தக் காலத்தில், மனிதர்கள் உமக்குக் கீழ்ப்படியாதபோது உம்முடைய பரி சுத்த ஆவியை அவர்களிடத்திலிருந்து எடுத்துப் போடுகிறீர். அவ்வாறு நீர் சவுலுக்குச் செய்தீர் (1 சாமு. 16:14) - அதன் விளைவுகளைச் சிந்தித் துப் பார்க்க அஞ்சுகிறேன். கர்த்தாவே, தயவு செய்து அந்த நிலையிலிருந்து தப்ப உதவி செய்ய வேண்டுகிறேன்.

51:12 நான் முன்னர் குறிப்பிட்டது போல என்னு டைய பாடலை இழந்து போனேன். என்னுடைய ஆத்துமாவையல்ல, என்னுடைய பாடலையே இழந்துபோனேன். நீர் தந்த இரட்சிப்பையல்ல, உமது **இரட்சணியத்தின் சந்தோஷத்தையே** இழந்து போனேன். இப்பொழுது நான் மனந் திரும்பினவனாக, அறிக்கைசெய்து, பாவத்தை விட்டுவிட்டவனாக உம்மிடத்திற்கு வந்திருக் கிறேன். "அறுந்துபோன கட்டுகள் மீண்டும் இசை யெழுப்ப" நீர் உதவி செய்ய வேண்டும் என்று நான் வேண்டுகிறேன். உமது **இரட்சணியத்தின் சந்தோஷம்** எனக்குத் திரும்பக் கிடைக்கச் செய்வீர் என்று நான் மன்றாடுவதோடு, உம்மு

டைய **உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும் படி செய்யும்** என்றும் மன்றாடுகிறேன். அதாவது, எல்லாவற்றிலும் உமக்குக் கீழ்ப்படியவும், உமக்கு மனமகிழ்ச்சி உண்டாக்கவும் விருப்ப முள்ளவனாக என்னை உமது ஆவி மாற்ற வேண் டுமென்று வேண்டுகிறேன். அப்பொழுது நான் நீதியின் பாதைகளில் நிலைநிற்பேன்.

51:13 நான் மன்னிப்பைப் பெறுவதாலே உண் டாகிற பிறிதொரு விளைவு, மற்ற **பாதகருக்குத்** தீவிரமாக உம்மைக் குறித்துச் சாட்சி கூறுவேன். மேலும் மன்னிப்பிற்கான, சமாதானத்திற்கான உமது **வழிகளைக்** கூறுவேன். நீர் என்னுடைய வாழ்க்கையில் செய்த நன்மைகளைக் குறித்து அவர்கள் கேள்விப்பட்டு, அவர்களும் உம்மிடத் திற்கு வருவார்கள்.

51:14 நான் பிறருடைய இரத்தத்தைச் சிந்தி னேன். அந்தக் குற்றத்தை **தேவனே** நீர் மன் னித்து, அந்தப் பழிகளுக்கு **என்னை விடுவிப் பீரானால்** இந்த உலகம் முழுவதும் என்னுடைய சாட்சியைக் கேட்கும். என் இரட்சிப்பின் தேவனே, உரியாவின் இரத்தப்பழி என்மேல் மிகவும் பார மாயிருக்கிறது. என்னுடைய வாழ்க்கை என்னும் பலகையைக் கழுவித் தூய்மையாக்குவீராக, நான் உம்மை என்றென்றும் போற்றுவேன்.

51:15 என்னுடைய பாவத்தால் **உதடுகள்** மூடப்பட்டுக் கிடக்கின்றன. உமது மன்னிப்பால் அவற்றைத் திறந்தருளும். அப்பொழுது **என் வாய் உமது புகழைப்** பேசவும் பாடவும் செய்யும்.

51:16,17 மன்னிப்பிற்கான சடங்குகளையோ பண்டிகைகளையோ, கர்த்தாவே நான் சார்ந் திருக்கவில்லை. சடங்குகளை மட்டுமே நம்புகிற மனிதன் நான் அல்ல, நீர் விரும்பினால் மிருக **பலிகளை** என்னால் கொண்டுவர முடியும். ஆனால் தகனபலி உமது இருதயத்திற்கு மன மகிழ்ச்சியைத் தருவதில்லை. நீரே பலிகளையும் காணிக்கைகளையும் ஏற்படுத்தினீர். ஆனால் அவை ஒருக்காலும் உமது இறுதியான கருத்தை வெளிப்படுத்தவில்லை. ஆகவே நான் **நொறுங் குண்ட இருதயத்தோடு** உம்மிடத்திற்கு வரு கிறேன். அதுவே நீர் விரும்புகிற பலியாகும். சிதற டிக்கப்பட்டதும் **நருங்குண்டதுமான இருத யத்தை நீர் புறக்கணியீர்**, அதை நான் உம் மிடத்திற்குக் கொண்டுவருகிறேன்.

51:18 இப்போதும் கர்த்தாவே, உமக்கு அன் பான மக்களுக்காகவும் எனக்காகவும் நான் ஜெபிக்க விரும்புகிறேன். நன்மைகளால் என்னை நிரப்புவதில் நீர் மகிழ்ச்சியடைவீர். **எருசலேமின் மதில்களைத்** திரும்பக் **கட்டுவீராக.** உமது ஊழியம் முன்னேறுவதை எனது பாவங்கள் தடைசெய்துவிட்டன என்பதில் ஐயமில்லை. உம்முடைய திருப்பெயருக்கு நான் களங்கத்தை உண்டாக்கிவிட்டேன். இப்பொழுது உமது நோக் கம் எத்தடையுமின்றி முன்னேறிச் செல்லட்டும்.

51:19 நாங்கள் எல்லோரும் நம்முடைய பாவங் களை அறிக்கை செய்து, விட்டொழித்து உம் முடன் ஐக்கியமாக நடந்து செல்கையில், எங்க ளுடைய **நீதியின் பலிகளில்** பிரியப்படுவீர். அந் தப் பலிகள் உமக்கு முழுமையாக ஒப்புக்கொடுக் கப்பட்ட நிலையைக் குறிக்கின்றன, அவை உமது இருதயத்தை மகிழ்விக்கின்றன. நாங்கள் உமது **பலிபீடத்தின்மேல் காளைகளைப் பலியிடுவோம்** - பாவங்களையும் அக்கிரமங்களையும் மன்னிக் கிற தேவனுக்குச் செலுத்தப்படுகிற புகழ்ச்சியே இந்தப் பலிகள்.

சங்கீதம் 52: நம்பிக்கைத் துரோகியின் முகமூடி கிழித்தெறியப்படுதல்

இந்தச் சங்கீதத்தின் வரலாற்றுப் பின்னணி 1 சாமுவேல் 21,22 -ஆகிய அதிகாரங்களில் காணப் படுகிறது. **ஏதோமியனாகிய தோவேக்கு** அரச னாகிய சவுலின் மேய்ப்பர்களின் தலைவன். ஆசாரியனாகிய அகிமெலேக்கினிடத்திலிருந்து உணவையும் கோலியாத்தின் பட்டயத்தையும் தப்பியோடிவந்த தாவீது பெற்றுக்கொண்டபோது தோவேக்கு அங்கிருந்தான். உடனடியாக அவன் சவுலினிடத்திற்குச் சென்று கோள் சொன்னான், அதற்குப் பரிசாகக் கர்த்தருடைய ஆசாரியனா கிய அகிமெலேக்கையும் எண்பத்து நாலு ஆசா ரியர்களையும் கொல்லும்படியான வேலையைப் பெற்றான். தொடர்ந்து, அவன் நோபில் இருந்த பெண்டிரையும் பிள்ளைகளையும் கொன்று அந்த ஊரையே அழித்தான், மேலும் அங்கிருந்த கால்நடைகளையும் அழித்தான்.

தோவேக்கின் குணவியல்பு முதல் நான்கு வசனங்களில் சித்திரித்துக் காட்டப்பட்டுள்ளது, அவனுடைய அழிவு 5-7 வசனங்களில் சொல்லப் பட்டுள்ளது. அதற்கு மாறான பாடலாசிரியனின் குணவியல்பு 8,9 -ஆகிய வசனங்களில் விவரிக் கப்பட்டுள்ளது.

52:1-4 அவன் பொல்லாப்பின் உச்சநிலையில் இருப்பதைக் குறித்துப் பெருமை பாராட்டுவதை யும், "தேவனுடைய உண்மையான ஊழியனுக்கு எதிராக நாள்முழுவதும் நாகரிகமற்ற பொய்களைத் திரித்துக் கூறுவதையும்" (NEB) பற்றி தாவீது முதலாவது கேள்வி எழுப்புகிறான். நம்பிக்கைத் துரோகத்தில் அந்திக் கிறிஸ்துவுக்கு ஒத்த மறு படிவமாக இருந்த மனிதனின் **நாவு** கத்தி போன்று

கூர்மையாகச் செயல்பட்டு மனிதர்களைப் பழிச் சொற்களால் கீழே விழத்தள்ளிற்று. **நன்மை யைப் பார்க்கிலும்** தீமை செய்யவும், உண்மை யைப் பார்க்கிலும் பொய் பேசவும் அவன் அதிக நாட்டம் கொண்டிருந்தான். வஞ்சனையின் உரு வாயிருந்த அந்த மனிதன் பிறருடைய வாழ்க் கையை நாசமாக்கக் கூடிய பேச்சுக்களைப் பேசுவதில் பெருமகிழ்ச்சி கொண்டிருந்தான்.

52:5 தோவேக்கு மற்றும் அவனுக்கு ஒப்பான யாவரும் எவ்விதமான அழிவை அடைவார்கள் என்று பாடலாசிரியன் முன்னுரைப்பதைத் தெய் வீக மற்றும் மனித நியாயத்தீர்ப்புகள் ஒப்புக் கொள்ளும். ஒரு கட்டடம் விழுந்து தரைமட்டமாவ தைப் போன்று, தேவன் அவனை நொறுக்குவார். உன்னதமானவர் அவனுடைய கூடாரத்திலிருந்து அவனை வெளியேற்றி, உயிருள்ள மனிதர்கள் வாழும் உலகத்திலிருந்து அவனை முழுவது மாகப் **பிடுங்கிப் போடுவார்**.

52:6,7 தேவனுக்குப் பயந்த மனிதர்கள் அந்த நாளைக் காண்பார்கள், தேவனுடைய பயங்கர மான நியாயத்தீர்ப்பைக் கண்டு திகைப்படைவார் கள், அவனுடைய நிலை இவ்வித மாற்றத்தை அடைந்ததைக் கண்டு இவ்வாறு கூறி நமட்டுச் சிரிப்பு சிரிப்பார்கள்:

> **இதோ, தேவனைத் தன் பெலனாக எண் ணாமல், தன் செல்வப் பெருக்கத்தை நம்பி, தன் தீவினையில் பலத்துக்கொண்ட மனி தன் இவன்தான்.**

52:8,9 பாடலாசிரியனின் நடத்தை பளிச்சிடும் வகையில் வேறுபட்டதாயிருக்கிறது. அவன் தன்னை **தேவனுடைய ஆலயத்தில்** பச்சையான **ஒலிவ மரத்துக்கு** ஒப்பிடுகிறான். வளமைக்கும் உண் மைத்தன்மைக்கும் ஓர் எடுத்துக்காட்டு. திரு வாளர் F. W. கிராண்ட் கூற்றின்படி, ஒலிவமரம்:

> இந்த மரம் தேவனுடைய ஆவிக்கு நிழலான எண்ணெயைத் தன்னிடத்தில் கொண்டிருக் கிறது. அதனுடைய பசுமை புத்துணர்வையும் நித்திய வாழ்வையும் எடுத்துரைக்கிறது. அது தேவனுடைய ஆலயத்தில் இருக்கிறது. பொல் லாத மனிதன் கூடாரத்தில் நிலைத்திராதபடி எறியப்படுகிறான். ஆலயமோ கூடாரத்திலி ருந்து வேறுவகையானது.[38]

தேவனைத் தனது புகலிடமாக ஏற்காத தோவேக்குக்கு மாறுபட்ட நிலையில் தாவீது **தேவனுடைய கிருபையை என்றென்றைக்கும் நம்பியிருக்க** முடிவுசெய்திருந்தான்.

பொல்லாதவரைத் தண்டித்து, நீதிமானின் மேன்மையை நிலைநிறுத்துகின்ற கர்த்தருடைய செயலுக்காக தாவீது அவரை என்றென்றும் துதிப்பான்.

இறுதியாக, அவன் கர்த்தருடைய **நாமத்தை** அவருடைய உண்மையுள்ள **பரிசுத்தவான் களுக்கு முன்பாக** மேன்மைப்படுத்துவான், ஏனெ னில் அவருடைய நாமம் **நலமானது**, அவர் நன் மையே உருவானவர்.

சங்கீதம் 53: இறைமறுப்புக் கொள்கையின் தவறு

14 -ஆவது சங்கீதத்திற்கும் இந்தச் சங்கீதத் திற்கும் இடையிலுள்ள முக்கியமான வேறுபாடு, தேவனுடைய யெகோவா (யாவே) என்னும் பெயர் எலோஹிம்[39] என்று மாற்றப்பட்டுள்ளது. 14 -ஆவது சங்கீதத்தில், தம்முடைய மக்களிடத்தில் ஆழ்ந்த அக்கறையும் அவர்களுடைய நலத்தில் ஈடுபாடும் கொண்டு, உடன்படிக்கையை நிறைவேற்றுகிற தேவனுடைய (யெகோவா, கர்த்தர்) உளவாம் தன்மையை மதிகேடன் மறுத்துரைக்கிறான். இங்கு பிரபஞ்சத்தைப் பராமரித்து ஆளுகிற சர்வ வல்லமையுள்ளவரும் எல்லா அதிகாரத்தையும் கொண்டவருமாகிய தேவனுடைய (எலோஹிம்) உளவாம் தன்மையை மதிகேடன் மறுத்துரைக் கிறான்.

> இவ்விரு பொருள்களிலும் தேவன் மறுத்துரைக் கப்படக்கூடும். ஒரு குறிப்பிட்ட இனத்தின் மேல் அல்லது மக்கள் கூட்டத்தின்மேல் படைப்பாள ருக்கு அக்கறையில்லை என்று படைப்பாள ரைச் சிலர் மறுத்துரைக்கலாம், தேவன் என்று ஒருவர் இல்லவே இல்லை என்று வேறுசிலர் மறுத்துரைக்கலாம் (வேதாகம ஐக்கியம், அனு தின தியானக் குறிப்பு).

53:1 மதிகேடன் மந்தபுத்தியுள்ளவனாகவோ முட்டாளாகவோ இருக்க வேண்டிய அவசிய மில்லை. ஒரு குறிப்பிட்ட காலக் கல்வி நிலையில் அவன் நன்கு தேர்ச்சி பெற்ற புத்திசாலியாக இருக் கக்கூடும். ஆனால் அவன் தேவனுடைய ஆளுமை, வல்லமை, நிருவாகம் ஆகியவை குறித்த சான்று களைச் சந்திக்க விரும்புவதில்லை. அவன் வேண்டுமென்றே அறியாமையில் மூழ்கியிருக் கிறான். "தீய எண்ணத்தோடு சத்தியத்தை ஏற்க மறுக்கிறவன் என்னும் பொருளை மதிகேடன் என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிற எபிரெயச் சொல் தன்னகத்தே கொண்டிருக்கிறது."

இறைமறுப்புக் கொள்கை சீர்கேட்டோடும் இழிநிலையோடும் தொடர்புடையது, சிலவேளைகளில் அது காரணமாகவும் சிலவேளைகளில் அது விளைவாகவும் செயல்படுகிறது. ஆகவே எலோஹிம் என்பவர் **இல்லை** என்று சொல்பவர்கள் தங்களைக் **கெடுத்துக்கொண்டவர்கள்** என்பதில் எவ்வித ஆச்சரியமுமில்லை. அவர்களில் **நன்மை செய்கிறவன் ஒருவனும் இல்லை**.

53:2 இப்பொழுது சங்கீதத்தின் ஆய்வுப் பொருள் நாத்திகரை விடுத்து பொதுவான மனுக்குலத்தை நோக்கித் திரும்புகிறது. எல்லா மனிதர்களும் முற்றிலும் கேடுற்றவர்களாகவே இருக்கிறார்கள் என்பதை நிலைநிறுத்தும் பொருட்டு இந்த வசனங்களிலிருந்து சில பகுதிகளை ரோமர் 3 -ஆவது அதிகாரத்தில் அதன் ஆசிரியர் எடுத்தாளுகிறார். அந்தக் குற்றச்சாட்டுகள் உண்மைதான் என்பதில் ஐயமில்லை. மனுக்குலத்தில் எவரேனும் கர்த்தருக்குப் பயப்படுகிற ஞான முள்ளவன் உண்டோ என்று **தேவன் பரலோகத்திலிருந்து பார்க்கிறபோது** அவரால் ஒருவரையும் காணமுடியவில்லை. முதலாவது ஒருவரிடத்தில் பரிசுத்த ஆவியானவர் ஈடுபாடுகொள்ளாமல் அவர் **தேவனைத் தேடுகிறதில்லை**.

53:3 அவர்கள் ஜீவனுள்ள தேவனைவிட்டு **வழிவிலகிப்** போய்விட்டார்கள். அவர்கள் யாவரும் இழிநிலையை அடைந்துவிட்டார்கள். கர்த்தருடைய தயவை அல்லது பாராட்டைப் பெறும்படி ஏதொரு **நன்மையான** செயலை ஒருவரும் **செய்யவில்லை**.

53:4,5 மீண்டும் பாவிகளில் ஒரு குறிப்பிட்ட வகையினரை நோக்கி ஆய்வுப்பொருள் திரும்புகிறது, யாரெனில் இறைமக்களைக் கொடுமைப்படுத்துகிற தேவநம்பிக்கையற்ற மனிதர்களை நோக்கியே அவர்கள் தொலைநோக்குப் பார்வையற்றவர்களாக இருப்பதன் காரணம் என்ன? உண்மையுள்ள மீதியானவர்களை அப்பத்தை உண்பது போல அழித்துப்போடுகிறார்கள். ஜெபத்தில் தேவனோடு பேசுவதன் தேவையை அவர்கள் உணரவேயில்லை. ஒருநாளில் இதுவரை நடந்திராத பயங்கரத்தைச் சந்திக்க நேரிடும் என்பதை அவர்கள் சிறிதளவும் எண்ணிப் பார்க்காமல் உணர்வற்று இருக்கிறார்கள். தேவன் தம்மை உண்மையாகப் பின்பற்றுகிறவர்களுக்கு எதிராகப் போர்புரிகிறவர்களுடைய **எலும்புகளைச்** சிதறப்பண்ணுவார்.

53:6 இந்தக் கடைசி வசனத்தில, மேசியாவின் வருகைக்காக தாவீது மன்றாடுகிறான். அவரே **சீயோனிலிருந்து வருகிற** மீட்பர் (ரோமர் 11:26), அவரே இஸ்ரவேலின் விசுவாசிகள் யாவரையும் காப்பாற்றுகிறவர். அந்த நாளில் இஸ்ரவேல் முன்னிருந்த நிலைக்குச் சீர்படுத்தப்படும்; **யாக்கோபுக்குக் களிப்புண்டாகும் இஸ்ரவேலுக்கு மகிழ்ச்சியுண்டாகும்.**

சங்கீதம் 54: தேவன் எனக்குச் சகாயர்

தாவீது சவுலுக்குத் தப்பி ஓடியபோது, அவன் ஒளிந்துகொண்டிருந்த இடத்தை சீப்பூரார் அரசனுக்கு இரண்டுமுறை தெரிவித்தார்கள் (1 சாமு. 23:19; 26:1). இவ்வாறு காட்டிக்கொடுக்கப்பட்ட நிகழ்வுகள், இந்தச் சங்கீதம் இயற்றப்படுவதற்குக் காரணமாயின. மனிதர்களுடைய கைகளால் துன்பமடைகிற வேளைகளில் இறைமக்கள் ஏறெடுப்பதற்கு ஏற்ற மன்றாட்டு.

54:1 தேவனுடைய **திருப்பெயரால்** இரட்சிப்பும், அவருடைய **வல்லமையால்** நியாயமும் வேண்டுமென்னும் கதறுதலோடு இச்சங்கீதம் தொடங்குகிறது. அவருடைய திருப்பெயர் அவருடைய இயல்பு அல்லது பண்புக்கு அடையாளமாயிருக்கிறது, அவருடைய வல்லமை அவருடைய சர்வ வல்லமைக்கு அடையாளமாயிருக்கிறது. இரட்சிப்பு இங்கே எதிரிகளிடமிருந்து கிடைக்கப் பெறுகிற தற்காலிக பாதுகாப்பைக் குறிக்கிறது.

54:2,3 இப்பொழுது அல்லது எப்பொழுதுமே இல்லை என்னும் பாடலாசிரியனின் அவசரம், தேவன் தனது விண்ணப்பத்தைக் கேட்க வேண்டுமென்றும், அவனுடைய சீறிஎழுகிற கடினமான வாயின் வார்த்தைகளைக் கவனிக்க வேண்டுமென்றும் ஓயாமல் கெஞ்சி ஏறெடுக்கிற மன்றாட்டில் காணப்படுகிறது.

நடந்தது என்னவெனில் இந்த அந்நியர்கள் தாவீதுக்கு எதிராகச் சதித்திட்டம் தீட்டி துரோகம் இழைக்க முயற்சி செய்தார்கள்; தேவனைக் குறித்து எவ்வித அக்கறையுமற்ற இறைமறுப்புக் கொள்கையாளர்களாகிய இரத்தப் பிரியர் தாவீதை அழிக்க முற்படுகிறார்கள்.

54:4,5 தேவனே இதற்கு விடையாவார். விசுவாசியின் **ஆத்துமாவை ஆதரிக்கிறவர்களோடு ஆண்டவர் இருக்கிறார்**. தமது மக்களுக்கு எதிராகத் தீமை செய்பவர்களுக்கு ஒருநாள் ஆபத்தையும் அழிவையும் ஏற்படுத்தி ஆண்டவர் அதைச் சரிக்கட்டுவார்.

தேவன் என்ன செய்வார் என்பதைக் குறித்த அறிவு உடனடியாக மன்றாட்டாக மாறுகிறது, “கர்த்தாவே நீர் இதைச் செய்வீராக. உம்முடைய

சத்தியத்திற்கு நிரூபணமாக அவர்களுடைய பொல்லாத செயல்களை முடிவுக்குக் கொண்டுவரும்."

54:6 முதல் வசனத்தில் இடம்பெற்றுள்ள இரட்சிக்கும் பெயர் இங்கு துதிக்கப்படும் திருப்பெயராக மாறியிருக்கிறது. தானாக மனமுவந்து தாவீது கர்த்தருக்குப் பலிகளைச் செலுத்தி, மனமுவந்து அவருடைய நாமத்துக்குத் துதியைச் செலுத்துகிறான் - அந்த மேன்மையான திருப்பெயரில் எல்லா நலமும் அடங்கியிருக்கிறது.

54:7 தனக்கு ஏற்பட்ட துன்பங்கள் யாவும் கடந்த காலத்தவை, அவனுடைய எதிரிகள் யாவரும் இறந்துவிட்டார்கள் என்பது போலத் தாவீது பேசுவதாகக் கடைசி வசனம் காணப்படுகிறது. "ஆபத்தின் நடுவில் இருக்கின்றபோதே, ஏற்கனவே எல்லாம் முடிவடைந்தது போல, அவன் மீட்பின் பாடலைப் பாடுகிறான்" என்று திருவாளர் மோர்கன் எழுதுகிறார். இவ்வாறாக, "விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது" (எபி. 11:1).

சங்கீதம் 55: கர்த்தர்மேல் உங்கள் பாரத்தை வைத்துவிடுங்கள்

அகித்தோப்பேல் தாவீதின் மிகவும் நம்பகமான ஆலோசகர்களில் ஒருவனாக இருந்தான், அவன் பிற்பாடு பதவியை அபகரித்துக்கொண்ட அப்சலோமின் பக்கமாகச் சேர்ந்துகொண்டான். இந்தக் கசப்பான நிகழ்வு தாவீதின் இதயத்திற்கு மிகுந்த வேதனையளித்தது என்பதை இச்சங்கீதத்திலிருந்து நாம் அறிகிறோம். நமது இரட்சகரை யூதாஸ் காட்டிக்கொடுத்தபோது அவருடைய ஆத்துமாவில் எழுந்த உணர்வுப் பேரலைகளைக் குறித்துச் சில உண்மைகளையும் இங்கு நாம் படிக்க முடியும். எதிர்காலத்தில் தோன்றவிருக்கிற அந்திக் கிறிஸ்துவின் சதித்திட்டத்தின் காரணமாகப் பாடுபடும் மீதியானவர்கள் ஏறெடுக்கும் மன்றாட்டின் நிழலாகவும் இச்சங்கீதம் விளங்குகிறது.

55:1,2 கடுந்துன்பம் ஏற்படுகிறபோது தேவனுடைய கவனத்தை ஈர்ப்பதற்கான பலவகை இயல்புகளில் அல்லது புதுமைச் செயல்களில் ஆத்துமா குறைவுபடுகிறதில்லை. செவிசாய்ப்பதற்கான விண்ணப்பம் ஏறெடுக்கப்படுவது நேரடியான செயலாகும். "**நீர் மறைந்திராதேயும்**" என்னும் சொல் எதிர் வினைச் சொல்லாகும். அங்கே பார்க்கிறவருக்கு ஒரு விண்ணப்பம் விடுக்கப்படுகிறது. "**எனக்குச் செவிகொடும்.**" மேலும் செயல்புரியும்படியான ஒரு விண்ணப்பம் "எனக்கு **உத்தரவு அருளிச் செய்யும்**."

55:2-5 இருதயத்தைத் தகர்க்கக்கூடிய தனிப்பட்ட துன்ப நிகழ்ச்சிகள், அவசரத் தேவைகள் ஆகியவற்றின் பட்டியல் அடுத்து தொடர்கிறது.

முறையிடுவதிலும் துக்கப்படுவதிலும் உண்டாகிற அமைதியற்ற நிலை.
எதிரியின் கூக்குரலினால் கவனம் திசைதிருப்பப்படுதல்.
துன்மார்க்கரால் ஒடுக்கப்படுதல்.
இடுக்கத்தின் குவியலில் அவர்களால் புதைக்கப்படுதல்.
கடுஞ்சினத்தின் தாக்குதலுக்கு ஆளாகுதல்.
மனவேதனையால் இருதயம் நொறுங்குதல்.
சடிதியில் வரப்போகிற ஆபத்தால் திகிலடைதல்.
அடக்கமுடியாத நடுக்கத்தால் துன்பமடைதல்.
பேரச்சத்தில் மூழ்கிவிடுதல்.

55:6-8 இந்த எல்லாத் தொல்லைகளுக்கும் விலகிப் பறந்துபோக வேண்டுமென்பதே அவனுடைய உள்ளத்தில் எழுந்த ஏவுதல் ஆகும். அவனுக்குச் **சிறகுகள்** இருந்தால் **வனாந்தரத்தில்** ஓர் அமைதியான இடத்திற்குப் பறந்து சென்றிருப்பான். அவனைச் சுற்றி வீசிக்கொண்டிருந்த சூறாவளிக்குத் தப்ப அதிக நேரம் காத்திருக்க மாட்டான்.

55:9 ஆனால் இப்பொழுது பேரிடர் உண்டாக்கிய வன்முறை எரிகிற தீயாக மாறுகிறது. சூழ்ச்சி செய்தவர்களின் துரோகம், அவர்களைக் கர்த்தர் உடனடியாக அழித்துப்போட வேண்டுமென்னும் விண்ணப்பத்தை ஏறெடுக்கும்படியான கலக மனப்பான்மையை அவனிடத்தில் ஏற்படுத்தியது. கர்த்தர் அவர்களை அழிக்க வேண்டுமா அல்லது அவர்களுடைய திட்டத்தை அழிக்க வேண்டுமா என்று இங்கு குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லை. மேலும் தேவன் அவர்களுடைய மொழியைப் **பிரிந்து போகும்படி** செய்யவேண்டும் என்பது அடுத்த வேண்டுதல். அகித்தோப்பேலின் ஆலோசனையைக் கர்த்தர் அவமாக்கிப் போடவேண்டும் என்று தாவீது ஏறெடுத்த விண்ணப்பத்தையே இது மறைமுகமாகக் குறிப்பிடுகிறது (2 சாமு. 15:31).

55:9-11 ஈசாயின் மகனாகிய தாவீது தான் வெற்றிபெற்று, தெரிந்து கொண்ட நகரமாகிய எருசலேமை நோக்கிப் பார்க்கிறான், அப்பொழுது அந்நகரம் **கொடுமையாலும் சண்டையாலும்** நிறைந்திருந்தது. **இரவும் பகலும்** இவ்விரண்டு பொல்லாப்புகளும் **அதன் மதில்கள்மேல் சுற்**

றித் திரிகின்றன. சமாதானத்தின் நகரம் இப் பொழுது தீங்கும் உபத்திரவமும் நிறைந்த நகர மாக இருக்கிறது. இடிபாடு அங்கு குடியிருக் கிறது. நீதியும் நேர்மையும் இருக்க வேண்டிய அந்நகரத்தின் வர்த்தக சாலையில் **கொடுமை யும் கபடும்** இருக்கின்றன.

55:12-15 தாவீதின் குற்றச்சாட்டின் மையப் பொருள் யாதெனில் அவன் கொடூரமாகக் காட் டிக்கொடுக்கப்பட்ட செயல் என்பதில் ஐயமில்லை. அந்தக் குற்றவாளி வெளிப்படையான எதிரியாக இருந்திருப்பான் என்றால், அடைந்த வேதனை சகித்துக்கொள்ளக்கூடியதாக இருந்திருக்கும். எல்லா நிலைகளிலும் அவன் பகைவனாகவே இருந்திருப்பான் என்றால், பாடலாசிரியன் தனக்கு எதிராகக் கூறப்பட்ட பழிச்சொற்களையும், அவ தூறுகளையும் ஒரு பொருட்டாக எண்ணியிருக்க மாட்டான். ஆனால் அவனுக்கு நெருக்கமானவர் களில் ஒருவன், தோழன், அன்புபாராட்டி நம்புதற் குரியவனாக இருந்த நண்பன், அவனே புறமுது கில் கத்தியைப் பாய்ச்சிவிட்டான். அவனோடு தான் சங்கீத ஆசிரியன் **இன்பமான** தோழமை கொண்டிருந்தான், ஆசரிப்புக் கூடாரத்தின் பிரா காரங்களில் இருவரும் ஒருமித்து **நடந்தார்கள்.** இந்த மனிதன் மற்றும் இவனைப் பின்பற்றுகிறவர் கள் செய்த நயவஞ்சகத்தின் காரணமாக இவர் களுக்கு உடனடி மரணம் ஏற்படவேண்டும், விரைவாகப் பாதாளத்திற்கு அனுப்பப்பட வேண் டும், "ஏனெனில் பொல்லாப்பு அவர்களுடைய வீட் டில் குடியிருக்கிறது, அவர்களுடைய இருதயங் களின் ஆழத்தில் நிறைந்திருக்கிறது" (கெலி நேயு மொழி பெயர்ப்பு).

55:16-21 இப்படிப்பட்ட உணர்ச்சிக் கொந் தளிப்புக்கு இடையிலும், தாவீது தனது மன்றாட் டுக்கான விடை கிடைக்கும் என்று உறுதிபெற் றிருந்தான். அவனுடைய அழுகையும் புலம்பலும் தேவனிடத்திற்குக் காலை மாலை நண்பகல் வேளைகளில் ஏறிச்சென்று அவருடைய செவி களில் ஒலிக்கும். அவனுக்கு எதிராக அணி வகுத்து நிற்பவர்கள் எண்ணிக்கையில் மிகுந் திருந்த போதிலும் தாவீது போரில் வெற்றிசிறந்து, சமாதானத்தைத் தன்னுடைய பங்காகப் பெறு வான். ஆம், என்றென்றும் சிங்காசனத்தில் **வீற்றி ருக்கும் தேவன் கேட்டு** அவர்களுக்குத் தண் டனை வழங்குவார். மாற்றத்திற்கு இடம் கொடுக் காதவர்கள், அதாவது மனந்திரும்பாதவர்கள், **தேவனுக்குப் பயப்படாதவர்கள்** அடையும் ஆக் கினைத் தீர்ப்பு இதுவே. காட்டிக் கொடுத்த துரோகி அடையும் ஆக்கினைத் தீர்ப்பும் இதுவே - உள்ளத்தில் ஒன்றுபட்டு தோழனாயிருந்த மனி தன் தனது கையை நீட்டி நண்பனுக்கு துரோகம் இழைத்தவன், நட்பின் உடன்படிக்கையையும் விசுவாசத்தையும் மீறியவன் அடையும் தண் டனை இதுவே. அவனுடைய **சொற்கள் வெண் ணெயைப் போல மெதுவானவை,** ஆனாலும் அவை **உருவின பட்டயங்கள்.**

55:22 இந்த வசனம் 55 -ஆவது சங்கீதத்தின் பொன் உச்சியை அடைந்திருக்கிறது:

> **கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு**
> **அவர் உன்னை ஆதரிப்பார்**
> **நீதிமானை ஒருபோதும்**
> **தள்ளாடவொட்டார்.**

பிரச்சினைகள் மிகுந்த நேரத்தில் செய்ய வேண்டிய மிகச் சிறந்த செயல் அவற்றைவிட்டு ஓடுவது அல்ல, மாறாக **பாரத்தைக் கர்த்தர் மேல் வைத்து விடுவது** தான் என்பதைப் பாட லாசிரியன் அறியும் நிலைக்கு வந்துவிட்டான். திருவாளர் பிஷப் ஹோர்ன் முன்மொழிந்துள்ள இனிய பாடத்தை நாம் கற்போம்: "நமது பாவங் கள் மற்றும் துன்பங்கள் யாவற்றையும் ஒரு சம யம் சுமந்தவர், நம்முடைய கவலைகளின் பாரத்தையும் சுமக்க இப்பொழுது அனுமதி கேட்கிறார்."

55:23 கொலைபாதகர், நம்பிக்கைத் துரோகம் செய்தவர் கொடூரமான, இளவயது மரணத்தை அடைவார்கள். அகித்தோப்பேல் அவ்வாறுதான் மரணமடைந்தான் (2 சாமு. 17:14,23). யூதாசும் அதுபோலவே மரணமடைந்தான் (மத். 27:5). ஆனால் தேவனுடைய மக்களோ தங்களுடைய பாதுகாப்புக்காக தேவனைச் சார்ந்திருக்க முடியும்.

சங்கீதம் 56: தேவன் என் பட்சத்தில் இருக்கிறார்

தனது இனத்தாரிடத்திலிருந்து தப்புவதற்காக காத் என்னுமிடத்தில் இருந்த பெலிஸ்தரிடத்தில் தஞ்சம் கேட்பது தாவீதுக்குக் கசப்பு மாத்திரை உண்பது போல இருந்தது (1 சாமு. 21:10-15; 27:4; 29:2-11). ஆனால் மன்னன் சவுலின் கொடிய பகைமை அவனை அவ்வாறான நிலைக்கு விரட்டியது - அல்லது அவ்வாறு அவன் எண்ணினான். அந்தச் சமயத்தில் அவன்மேல் மாறிமாறி வீசிய அச்சம் மற்றும் விசுவாசம் ஆகிய வற்றின் அலைகளில் சிலவற்றை 56 -ஆவது சங்கீதம் விவரிக்கிறது.

56:1,2 தன்னைத் தொடர்ந்து வருகிற எதிரிகளின் இடைவிடாத தொல்லைகளின் காரணமாக தேவனுடைய கிருபையை நாடி ஜெபத்தோடு தாவீது இப்பாடலைத் தொடங்குகிறான். எதிரிகளிடத்திலிருந்து மூன்று வகையான அச்சுறுத்தல்கள் நாள்முழுவதும் அவனைத் தாக்கின என்பதைக் கவனியுங்கள்:

அவன் என்னை ஒடுக்குகிறான்
என் சத்துருக்கள் விழுங்கப்
பார்க்கிறார்கள் (வச. 2).
என் வார்த்தைகளைப்
புரட்டுகிறார்கள் (வச. 5).

அவனுடைய பகைவர் அவனைத் தற்செருக்கு நிறைந்து தாக்குகிறார்கள், இடைவிடாமல் அவனுக்கு எதிராகச் சதித் திட்டம் தீட்டுகிறார்கள், தங்களுடைய வலிமையைப் பெருக்கிக்கொள்ளும் பொருட்டு கூட்டு சேருகிறார்கள், பாய்ந்து தாக்க ஒளிந்திருக்கிறார்கள், தொடர்ந்து வேவு பார்க்கிறார்கள் (வச. 2,5,6). இது அவனை அழிப்பதற்கான தெளிவான பெருமுயற்சியாகவே தோன்றுகிறது.

56:3 ஆனால் விசுவாசமோ இருளை அகற்றி நம்பிக்கையின் அறிக்கையாக வெளிப்படுகிறது, **"நான் பயப்படுகிற நாளில் உம்மை நம்புவேன்"**. திருவாளர் டெலிட்ஸ் இதனை "நாடோடியின் உற்சாகம் மிக்க துணிவு" என்று கூறுகிறார். இது தேவனுடைய இயல்பை அடிப்படையாகவும் அவருடைய வாக்குறுதிகளின் உண்மைத் தன்மையைச் சார்ந்ததாகவும் இருக்கிறது. அவர் நம்முடைய எதிரிகள் அனைவருடைய ஒட்டு மொத்த வலிமையிலும் அதிக ஆற்றல் உடையவர், அவரே எல்லாவிதத் தீங்கிலிருந்தும் நம்மைக் காப்பாற்றுவதாக வாக்குரைத்துள்ளார். அவருடைய சித்தத்தினாலன்றி, அவர் நம்மைச் சுற்றி அமைத்துள்ள வேலியை ஒருவராலும் தாண்டி உள்ளே வரமுடியாது. இதன் அடிப்படையிலேயே எவ்வித அச்சமுமின்றி நாம் தேவனிடத்தில் நம்பிக்கை கொண்டிருக்க முடியும்.

56:4-6 "சாதாரண மனிதன் எனக்கு என்ன செய்வான்?" என்னும் துணிவான அறைகூவலுக்குப் பகுத்தறிவு இவ்வாறு பதில் கூறும், "அவனால் நிறைய செய்ய முடியும். உபத்திரவப்படுத்துதல், காயப்படுத்துதல், நொண்டியாக்குதல், சுடுதல், கொல்லுதல் எதை வேண்டுமானாலும் அவனால் செய்ய முடியும்." ஆனால் தேவனுடைய பிள்ளை, அவனுடைய வேலையைச் செய்து முடிக்கும் வரை சாகமாட்டான். நமது இரட்சகருடைய சொற்களின் வெளிச்சத்தில் தாவீதின் அச்சமற்ற தன்மையை நம்மால் அறிய முடியும்:

ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள் (மத். 10:28).

56:7 தன்னை அழித்துப் போட வேண்டுமென்ற பகைவர் தீர்மானித்துச் செய்த முயற்சிகளைக் கூறியபிறகு, அவர்களுடைய சதித்திட்டத்தின் காரணமாக **தேவன்** அவர்களைத் தமது கோபத்தில் கீழே விழத் **தள்ள வேண்டும்** என்று தாவீது விண்ணப்பிக்கிறான்.

56:8 இங்கு நம்முடைய கர்த்தருடைய நேர்த்தியான, மென்மையான, தனிமனிதனோடு கொண்டுள்ள தொடர்பின் அடிப்படையில் அமைந்த அக்கறை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. நம்முடைய அலைச்சல், இளைப்பாறுதல் இல்லாமல் இரவிலே அலைக்கழிக்கப்படுதல், கலக்கத்தால் மாறி மாறிப் புரளுதல் இவை எல்லாவற்றையும் அவர் எண்ணி வைத்திருக்கிறார். நம்முடைய துயரத்தின் கண்ணீரைத் துருத்தியில் அவர் வைக்கவேண்டும் என்று நாம் கேட்கக்கூடிய அளவிற்கு, அவர் நம்மேல் அக்கறை கொண்டிருக்கிறார். பண்டைய நாட்களில் துக்கிக்கிறவர்கள் தங்களுடைய அழுகையின் கண்ணீரைச் சிறிய குப்பிகளில் சேகரித்து இறந்துபோன நண்பர்களுடைய கல்லறைகளில், தங்களுடைய நட்பை வெளிப்படுத்தும்படி வைக்கும் வழக்கத்தை இது குறிப்பாய்த் தெரிவிக்கிறது. அது எதுவாயினும், தேவன் கண்ணீரைத் தமது புத்தகத்தில் எழுதி வைக்கிறார். அவர் நம்முடைய தலைகளில் உள்ள முடிகளை எண்ணி வைத்திருக்கிறார் என்று பின்னர் இயேசு கற்பித்த வண்ணமாக இது இருக்கிறது.

56:9 நம்முடைய மன்றாட்டுகளுக்குப் பதில் தரும் வகையில் தேவன் நமது பகைவரை திரும்பிப் போகும்படி செய்வார் என்று தாவீதோடு சேர்ந்து நாமும் நம்பிக்கையோடு இருப்போம். தேவன் நம் பட்சத்தில் இருக்கிறார் என்பதால் இதனை நாம் அறிந்திருக்கிறோம். தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? (ரோமர் 8:31).

முடிவாக, ஒரே ஒரு கேள்விதான் வாழ்க்கையில் முக்கியமானது; மற்ற யாவும் இதற்கு அடுத்

ததே – தேவன் நம் பட்சத்தில் இருக்கிறாரா? தேவன் தன் பட்சத்தில் இருந்ததாகத் தாவீது இறுதியில் நம்பிக்கை கொண்டிருந்தான்; தேவனைப் பற்றிய இத்தகைய நம்பிக்கை உடையவன் பயமில்லாமல் இருப்பான் (வச. 11) (வேதாகம ஐக்கியம், அனுதின தியானக் குறிப்புகள்).

56:10,11 நான்காவது வசனம் 10,11 ஆகிய வசனங்களில் பல்லவியாகத் திரும்ப இடம் பெற்றுள்ளது. ஆனால் இந்தத் தடவை தேவனுடைய வேறு இருபெயர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன:

> **தேவனை** முன்னிட்டு [எலோஹிம்] (**அவருடைய வார்த்தையைப் புகழுவேன்**),
>
> **கர்த்தரை** முன்னிட்டு [யாவே, யெகோவா] (**அவருடைய வார்த்தையைப் புகழுவேன்**),
>
> **தேவனை** [எலோஹிம்] **நம்பியிருக்கிறேன்; நான் பயப்படேன்.**
>
> **மனிதன் எனக்கு என்ன செய்வான்?**

பாடலாசிரியன் சர்வ வல்லவருடைய மற்றும் உடன்படிக்கையைக் காக்கிறவருடைய வாக்குறுதிகளை, அவர் காப்பாற்றுவதற்கு அக்கறை கொண்டிருக்கிறார் என்னும் அடிப்படையிலும், வலுவற்ற மனிதன் தன்னைக் காயப்படுத்த இயலாது என்னும் அடிப்படையிலும் புகழுகிறான்.

56:12,13 எதிர்காலத்தில் விடுவிக்கப் போகிறார் என்னும் தற்போதைய உறுதிமொழி, கர்த்தருக்குத் தாவீது செய்த பொருத்தனையை நிறைவேற்றும்படி நெருக்கி ஏவுகிறது, மேலும் தனது நன்றியறிதலின் கடனைச் செலுத்த அது அவனை வற்புறுத்துகிறது. இன்னமும் எதிரியின் எல்லைக்குள் இருந்த போதிலும், அவன் முழுமையான பாதுகாப்பின் நன்மையை அனுபவிக்கிறான். அவனுடைய வாழ்வு பாதுகாக்கப்பட்டுள்ளது, அவனுடைய கால்கள் இடறாதபடி தப்புவிக்கப்பட்டுள்ளன. ஆகவே அவன் ஜீவ வெளிச்சத்தில் தேவனுடைய முன்னிலையில் நடப்பான்.

சங்கீதம் 57:
அவருடைய செட்டைகளின் நிழலில்

தாவீது சவுலுக்குத் தப்பி ஒளிந்து கொண்டிருந்தபோது இந்தச் சங்கீதத்தை எழுதினான் - அதுல்லாம் குகை அல்லது என்கேதி குகைகளில் ஒன்றாக இருக்கலாம். அவனுக்கு முன்பாக எப்பொழுதும் இருக்கக்கூடிய உண்மை நிலைகள் - ஒன்று கிருபையுள்ள தேவன் மற்றொன்று அச்சுறுத்துகிற எதிரி. இந்தச் சங்கீதம் இரண்டுக்கும் இடையே ஊசலாடுகிறது, ஆனால் முந்தைய நிலையில் உள்ள விசுவாசம் பிந்தைய நிலையில் உள்ள பயத்தைக் காட்டிலும் பெரியதாகையால் அந்தப் பக்கம் அதிக சாய்வு ஏற்படுகிறது.

எப்பொழுதும் உடனிருக்கும் தேவன் (57:1-3)

பாடலாசிரியன் தனக்கு உரிமை இருக்கிறது என்னும் அடிப்படையில் விடுதலையைக் கோரவில்லை. அதனை அவன் தேவனிடத்தில் கிடைக்கப் பெறும் இரக்கமாகவே வேண்டுகிறான். அவருடைய தயவினால் அருளப்படுகிற உரிமையற்ற நன்மையே அந்த இரக்கம். தான் ஈரக்கசிவுள்ள இருண்ட சூழ்நிலையில் இருப்பதை மறந்தவனாக, தேவனுடைய **செட்டைகளின் நிழலில்** தங்கியிருப்பதாகவே அவன் கருதினான். ஒரு தாய்க் கோழியின் செட்டைகளுக்குள்ளாக வெதுவெதுப்பான இடத்தில் நெருங்கிப்படுக்கிற ஒரு குஞ்சுக்கு ஒப்பாகவே அவனுடைய நிலை இருக்கிறது. வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கிற புயல் கடந்து செல்லும்வரை அவன் அங்கேயே இருப்பான். இந்தச் சிறப்புமிக்க நெருக்கமான நினைவுடன் கூடிய சூழ்நிலையில் இருந்து, **உன்னதமான தேவனுடைய** நோக்கங்களை அவர் தமது மக்களுடைய வாழ்க்கையில் நிறைவேற்றி முடிப்பதை ஒருவராலும் தடைசெய்ய முடியாது என்ற நம்பிக்கையோடு அவன் அவரைக் **கூப்பிடுகிறான். பரலோகத்திலிருந்து** விடைவருகிற போது, நம்பிக்கையுள்ள இருதயத்திற்கு மீட்பாகவும், அவரைப் புறக்கணித்து நடப்பவர்களுக்கு அவமானமாகவும் அது விளங்கும். தேவனுடைய அன்பு நம்பகத்தன்மை ஆகியவற்றின் மறக்கவியலா வெளிப்பாடாகவே அது விளங்கும்.

எப்பொழுதும் எதிர்த்து நிற்கும் பகைவன் (57:4)

பகைவர்கள் அஞ்சத்தக்கவர்கள் - கொடிய மூர்க்கமான கிழித்துப் பீறுகிற சிங்கங்களைப் போன்றவர்கள்; அவர்களுடைய பற்கள் ஈட்டிகளையும் அம்புகளையும் போல இருக்கின்றன, அவர்களுடைய நாவுகள் கருக்கான பட்டயம் போல இருக்கின்றன. ஆயினும் இத்தகைய ஆபத்துக்கு மத்தியில் இளைப்பாறும்படி பாடலாசிரியன் படுத்திருக்கிறான் - உண்மையாகவே இது விசுவாசத்தின் குறிப்பிடத்தக்க அருஞ்செயல்.

எப்பொழுதும் உடனிருக்கும் தேவன் (57:5)

பதினோராவது வசனத்தில் திரும்பச் சொல்லப்பட்டுள்ள இந்தப் பல்லவியில், தேவனுடைய

பகைவர் அவருடைய கால்களுக்குக் கீழாக மிதியுண்டு, அவருடைய நியாயம் நிலைநின்று, அவருடைய மகிமை வெளிப்படுவதைத் தாவீது காண வாஞ்சிக்கிறான். அவருடைய **மகிமை** அதனுடைய அளவுகளில் விண்மீன்கள் போல வும் உலகளாவியதாகவும் இருக்கிறது.

எப்பொழுதும் எதிர்த்து நிற்கும் பகைவன் (57:6)

ஈசாயின் மகனைப் பிடிக்க எதிரிகள் மிகக் கவ னமாகத் திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள்; அவனுடைய **ஆத்துமா** பாரத்தால் தொய்ந்து போயிருக்கிறது. ஆம், அவனைப் பிடிக்க **ஒரு குழியை** வெட்டியிருந்தார்கள், ஆனால் அவர் களே அதில் **விழுந்தார்கள்**.

எப்பொழுதும் உடனிருக்கும் தேவன் (57:7-11)

கர்த்தருக்குப் புகழ்ச்சியாக இன்னிசை பாடிக் கீர்த்தனம் பண்ண பாடலாசிரியனின் இருதயம் உறுதியுடன் தீர்மானம் செய்திருந்தது என்பதில் ஆச்சரியமில்லை. வீணை சுரமண்டலம் ஆகிய வற்றைத் தட்டியெழுப்பி, அவன் தனது ஆத்து மாவைச் சுறுசுறுப்பாக்கினான் என்பதிலும் ஆச் சரியமில்லை. அவன் புகழ்ச்சியின் கீதங்களால் அதிகாலைப் பொழுதில் துதித்துப் போற்றுவதி லும் வியப்பில்லை.

அது தனிமையில், குறுகிய மனப்பான்மை யோடு ஏறெடுக்கப்பட்ட பாடலன்று. அவன் கர்த் தரை மக்களின் நடுவில் **துதிப்பான்**; எல்லா இனத்தினருடைய முன்னிலையிலும் அவரைக் **கீர்த்தனம் பண்ணுவான்**. ஏனெனில் தேவனு டைய **கிருபை வானத்தைப்** போல எல்லை கடந் தது, அவருடைய சத்தியம் **மேகமண்டலத்தைப்** போல அளவுக்குட்படாதது.

திருவாளர் F. B. மேயர் கூறினது போன்று, "தனது சொந்தத் துக்கத்தைத் தாண்டி தேவ மகிமையை நாடி தாவீது எழுந்தான்." அது போலவே நாமும் சிறிய காரியங்களுக்காக அடைகிற வருத்தங்களை விட்டொழித்து, அவரு டைய புகழ்ச்சிக்காக **ஆர்வத்துடன்** செயல்படு வோம்.

சங்கீதம் 58: நியாயாதிபதிகள் நியாயந்தீர்க்கப்படுதல்

58:1,2 நேர்மையற்ற நீதிபதிகள், ஆளுநர்கள் ஆகியோருக்கு எதிரான கடுந்தாக்குதலுடன் இந்தச் சங்கீதம் தொடங்குகிறது. இவ்வுலகின் வலிமை மிக்க பிரபுக்கள் இக்கட்டான நிலைக் குத் தள்ளப்படுகிறார்கள். அவர்கள் எடுத்த முடிவுகளில் நேர்மை இருந்ததா? சாதாரண பொது மக்களுக்கு நீதி வழங்கினார்களா? இதற்குச் சரியான பதில் "இல்லை" என்பதே. அவர்கள் தங்களுடைய இருதயங்களில் எல்லாவிதமான நேர்மையற்ற முறைகளையும் சேர்த்துப் போலி யாகக் கதை கட்டினார்கள். மேலும் அவர்களு டைய இருதயங்கள் தீட்டிய திட்டங்களை, வன் முறையின் மூலமாகத் தங்களுடைய கைகளால் நிறைவேற்றுகிறார்கள். தேசமானது நியாயக் கேட்டால் நிறைந்திருக்கிறது.

58:3 ஆய்வுப்பொருள் நேர்மைற்ற நீதிபதி களிடத்திலிருந்து இன்னும் பலவகைத் துன்மார்க் கர்களை நோக்கித் திரும்புகிறது. அவர்களது கேடுற்ற நிலை பிற்கால வாழ்க்கையில் தோன் றியதன்று; அவர்களுடைய பிறப்பு முதல் அத னைக் காணமுடியும். அவர்களுடைய கட்டுப் பாடற்ற தன்மையும், கலகமனப்பான்மையும் அவர்களது பிறவிக்குணம், அவர்கள் பேசத் தொடங்கியவுடனேயே பொய் சொல்லத் தொடங்கு கிறார்கள்.

58:4,5 அவர்களுடைய பேச்சு மரணத்தை வருவிக்கும் பாம்பின் நஞ்சுக்கு ஒப்பாகவும் அவ தூறாக தீங்கு விளைவிப்பதாகவும் இருக்கிறது. பாம்பாட்டி எவ்வளவுதான் திறமையுடன் ஊதினா லும் அதைக் கேட்காத **செவிட்டு விரியனைப் போல** அவர்கள் தேவனுடைய சத்தத்துக்குச் செவிசாய்க்காத செவிடர்களாயிருக்கிறார்கள்.

58:6,7 அவர்களுடைய பொல்லாப்பை விளக் கிக் கூறுவதற்கு, தாவீது எவ்வாறு இயற்கை உல கினின்று எடுத்துக்காட்டுகளைப் பயன்படுத் தினானோ அதுபோல நியாயத்தீர்ப்பை விவரிப்ப தற்கு இயற்கை சார்ந்த அறிவியலுக்குள்ளாக மூழ்கிவிடுகிறான். இந்தக் கொடிய சிங்கங்களின் பற்கள் உடைந்து போகட்டும், அவற்றின் **கடை வாய்ப் பற்கள்** பிடுங்கப்பட வேண்டும். அவர்கள் நிலத்துக்குள் விரைவாக மறைந்து போகிற தண் ணீரைப் போல் மறைந்து போகட்டும், அல்லது ஊற்றுநீர் எவ்வாறு நிலத்துக்குள் அதிசயமாக ஒடி மறைந்து போகிறதோ அதுபோல அவர்கள் இல்லாமல் போகட்டும்.

ஏழாவது வசனத்தின் பிற்பகுதி எபிரெய மொழியில் நிச்சயமற்றதாக இருக்கிறது. "முனை மழுங்கி எவ்வித ஊறும் விளைவிக்காத அம்பு களைப் போல அவர்கள் இருக்கட்டும்" என்பது அதன் பொருள் என்று தோன்றுகிறது.

58:8 அதன் பிறகு நத்தை மற்றும் ஓடற்ற நத்தை ஆகியவற்றின் உலகத்துக்குள் தாவீது

செல்கிறான். சேற்றில் நத்தை கரைந்து போவது போல, இந்தக் குற்றவாளிகள் மனிதர்கள் நட மாடும் இடத்திலிருந்து காணப்படாமற் போகட் டும். சேற்றில் நத்தை கரையுமா என்பது முக்கிய மற்ற அறிவியல் உண்மையைப் பற்றிய கேள்வி. ஒரு வீடு எரிகின்ற போது "அந்த வீடு புகையாகப் போகிறது" என்று சொல்வோமானால் அதை யாரும் எதிர்க்க மாட்டார்கள். அப்படியிருக்க, திரு மறையில் உவமையாகச் சொல்லப்பட்ட ஒரு செய்தியை நாம் ஏன் புரட்டிப் பேச வேண்டும்?

பொல்லாங்கு செய்கிற இந்த மனிதர்கள் முதிர் வயது அடையாமல் சாகட்டும் என்பது அடுத்த சாபமாகும், அவர்கள் **சூரியனைக் காணாத முதிராப் பிண்டத்தைப் போல** அழிந்து போகட் டும். "துன்மார்க்கரின் கண்கள் ஒருக்காலும் திறக் கப்படவில்லை; அவர்கள் செயல்களைச் செய் வதற்கான நிலையை அடையவே இல்லை; பாவி ஒரு கருக்கலைப்பாக இருக்கிறான், வாக்குறுதி நிறைவேற்றப்படாத நிலையே அவனுடைய நிலை" என்று திருவாளர் ஸ்க்ரோஜி கூறுகிறார்.[41]

58:9 இறுதியாக, அவர்கள் அடுப்பில் வைக்கப் பட்ட பானை சூடு ஏறுவதற்கு முன் அங்கு வைக் கப்பட்ட **முள்நெருப்பு சுழற்காற்றினால்** அடித் துச் செல்லப்படுவது போல, அவர்கள் சடிதியில் **அடித்துச் செல்லப்பட** வேண்டுமென்று கேட் கிறான். திருவாளர் மேக்லேரன் கூறுகிறார்:

> பாடலாசிரியனுடைய முன்னிலையில் ஒரு காட்சி தோன்றுகிறது. பயணிகள் கூட்டமாக ஓரிடத்தில் கூடாரமிட்டிருக்கிறார்கள். கூடாரங் களைச் சுற்றிலும் தங்களுக்காக உணவு ஆயத்தம் செய்கிறார்கள். அடுப்பில் பானைக்கு அடியில் குச்சிகளைக் குவியலாக வைத்துத் தீப்பற்ற வைக்கிறார்கள், உணவு ஆயத்தமாகி தங்களுடைய பசி ஆறிவிடும் என்று எதிர் பார்க்கிறார்கள்; ஆனால் அந்தப் பானை கூடு ஏறுவதற்குள், பானையில் உள்ள நீர் கொதிப் பதற்கு முன் என்றோ உணவு ஆயத்தமா வதற்கு முன் என்றோ சொல்ல வேண்டிய தில்லை, சூறாவளிக் காற்று விரைந்து வரு கிறது, அது தீயையும் பானையையும் எல்லா வற்றையும் அடித்துச் செல்கிறது.[42]

58:10 இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள எபிரெய மொழியில் நிச்சயமற்ற தன்மை எதுவும் இல்லை. **துன்மார்க்கர்** தண்டிக்கப்படும் போது இறை மக்கள் மகிழுவார்கள்; அதாவது **அவன் தன் பாதங்களைத் துன்மார்க்கனுடைய இரத்தத் திலே கழுவுவான்** என்று மிகத் தெளிவாகஇந்த வசனம் கூறுகிறது. இது பழிக்குப் பழிவாங்கும் இயல்பாகவும் அன்பற்ற செயலாகவும் கிறிஸ் தவச் செவிகளில் ஒலிக்குமானால், நாம் திரு வாளர் J. G. பெல்லட் என்பவருடன் சேர்ந்து இதனை நியாயப்படுத்தலாம்; இந்தக் கிருபையின் காலத் தில் தண்டனையில் நாம் மகிழ்ச்சியடைய முடி யாது, ஆனால் கர்த்தர் **பழிவாங்குவதன்** மூலம் தமது தெய்வீக மகிமையைப் நியாயப்படுத்தும் போது விசுவாசிகள் களிகூரலாம். அல்லது திரு வாளர் மோர்கன் என்பாருடைய சொற்களைக் கருத்திற்கொள்ளலாம் "தேவனுடைய கோபத்தின் மேல் கொண்டிருக்க வேண்டிய மரியாதையைக் காட்டிலும் சீர்கெட்ட வன்முறையாளர்கள் மேல் பரிதாபம் கொள்கிற செயல் பலவீனமான முறை யில் உணர்ச்சிகளுக்கு இடம்கொடுப்பதாகவும், பொல்லாப்பாகவும் விளங்கும்."[43]

58:11 துன்மார்க்கர் மேல் தொடர்ந்து செலுத் தப்படுகிற தண்டனையின் மூலமாக, நீதிமான் களுக்கு வெகுமதி அளிக்கப்படுகிறது என்பதை யும், பூமியிலேயே தேவன் உண்மையாக மனிதர் களை நியாயந்தீர்க்கிறார் என்பதையும் மனிதர் கள் அறிவார்கள்.

சங்கீதம் 59:

நம்மைச் சந்திக்க வருகிற தேவன்

தாவீது இருந்த வீட்டைச் சுற்றிலும் சவுல் தனது மனிதர்களை அனுப்பி, சுருக்குக் கயிறை இறுக்கியதால், அவன் தேவனுடைய சிங்கா சனத்தை நோக்கி மூச்சுவாங்கிய நிலையில் புயலென விரைகிறதை இங்கு காண்கிறோம்.

59:1-4 பாய்ந்து வரும் கொதிக்கும் வெள்ளம் போல் சொற்கள் வெளிப்படுகின்றன - "என்னைத் தப்புவியும்.. அடைக்கலத்தில் வையும்.. இரட்சி யும்." இங்கு பயன்படுத்தப்பட்ட மொழிநடை எழுச்சி மிகுந்ததாகவும், தொடர்ச்சியற்றதாகவும், விரைந்து நெருக்குவதாகவும் இருக்கிறது. அவனுடைய இரத்தத்தைக் குடிக்கத் துன்மார்க் கர் தாகமாயிருக்கிறார்கள். அவனைக் கொல்லும் படி கருணையின்றிக் காத்திருக்கிறார்கள்; அவனை அழிக்கும்படியான முயற்சியில் அவர் கள் ஒன்றுகூடிச் செயல்படுகிறார்கள். எனினும் இவை யாவும் வேண்டுமென்றே செய்யப்பட்டவை. அவர்கள் குற்றஞ்சுமத்துவதுபோலப் பாடலாசிரி யன் துரோகம் செய்தோ உண்மையற்ற முறை யில் நடந்தோ குற்றமிழைக்கவில்லை. அவன்

அக்கிரமம் எதுவும் செய்யாமலேயே இத்தகைய வெறித்தனமான செயல்களில் ஈடுபடுகிறார்கள். அவனைக் காக்கும் பொருட்டு தேவன் விழித்து எழுந்து வரவேண்டாமா!

59:5 ஒரு கணப்பொழுது, அருகில் இருக்கிற எதிரிகளுக்கு அப்பால், ஈசாயின் மகன், இஸ்ரவேலின் எதிரிகள் யாவரையும் எண்ணிப்பார்த்தவனாக எல்லாவற்றிற்கும் உரிய தண்டனைகளை தேவன் வழங்கும் வேலையை உடனடியாகச் செய்ய வேண்டுமென மன்றாடுகிறான். இங்கு அவன் தேவனே யெகோவா, எலோஹிம் சாபோத், எலோஹிம் இஸ்ரவேல் என்றெல்லாம் அழைக்கிறான். தேவன் யார் என்றும், அவருடைய உளவாந்தன்மை என்னவென்றும், இஸ்ரவேலுடனான அவருடைய உறவு என்னவென்றும் தெரிவிக்கும்படி இப்பெயர்கள் திரும்பத் திரும்பக் கூறப்பட்டுள்ளன.

59:6,7 அவர்கள் காட்டு நாய்கள் கூட்டம் போல மறுபடியும் பாடலாசிரியனைச் சுற்றிக் கொண்டு ஊளையிட்டு இரையாக்கப் பார்க்கிறார்கள். அவர்களுடைய இடையறாத குரைப்பும், அச்சுறுத்தும் சினங்கொண்ட உறுமலும் அந்த இடத்தை நிரப்புகின்றன. அவர்களைக் கண்டு பிடிக்க முடியாதபடி மறைந்திருப்பதாக இறுமாப்புடன் அவர்கள் இருக்கிறார்கள்.

59:8,9 ஆனால் அவர்களைக் கர்த்தர் அறிவார் - அவர்களுடைய முட்டாள்தனமான தவறைக் கண்டு கர்த்தர் நகைக்கிறார்; பெருமை கொள்கிற புறவினத்தாரை இகழுகிற தேவனே அவர். இந்தப் பெரிய **தேவனே** தாவீதின் **வல்லமை**. அவருக்காகவே அவன் காத்திருக்கிறான், அவரே அவனுடைய நிச்சயமான **அடைக்கலம்**.

59:10 இவ்வசனத்தின் முந்தின பாகத்தை மறக்கமுடியாதபடி ஒருவர் பொழிப்புரையாக்கித் தந்திருக்கிறார், **"என் தேவன்**, அவருடைய கிருபையோடு ஒவ்வொரு மூலையிலும் **என்னைச் சந்திக்கும்படி வருவார்**." எந்தக் காலமாயினும் புயலால் அலைக்கழிக்கப்பட்ட ஆத்துமாக்களுக்கும் இது எவ்வளவு ஆறுதலாயிருக்கும்! இந்த உறுதி, நம்முடைய பகைவரைத் தோற்கடிக்கும் தேவன் நம்மைக் காப்பாற்றுவார் என்னும் அறிவுடன் தொடர்புடையது.

59:11-13 பதினோராவது வசனத்தின் ஜெபம் தனிச்சிறப்பு வாய்ந்தது. பகைவரைச் சடிதியில் கொன்றுபோடக் கூடாது என்று கர்த்தரிடம் தாவீது வேண்டுகிறான். அவ்வாறு அவர் கொன்று போட்டால் இஸ்ரவேல் மக்கள் பாவத்தின் ஆபத்தான நிலையை ஆழ்ந்து சிந்திக்காமல் விட்டுவிடுவார்கள். தண்டனை கொஞ்சம் கொஞ்சமாக அதிகரிக்குமானால், தேவனுடைய கடுமை அவர்களுடைய உள்ளத்தில் அழிக்க இயலாதபடி பதியும். ஆனால், பாடலாசிரியன் தன்னைக் கொடுமைப்படுத்துகிறவர்கள் அடையப்போகிற கடுமையான தண்டனைகளைச் சொல்லுகின்ற இடத்தில் இறுதி அழிவையும் குறிப்பிடுகிறான். அதனை அடுத்து வருகிற பகுதியின் மூலம் அறியலாம். அவர்கள் தேவனுடைய வல்லமையால் சிதறடிக்கப்பட வேண்டும்; இஸ்ரவேலைக் காக்கிற கர்த்தர்தாமே அவர்களைத் தாழ்த்த வேண்டும் என்று அவன் மன்றாடுகிறான். அவர்கள் தங்களுடைய **பெருமையின்** உச்சநிலையை வெளிப்படுத்தி, தங்களுடைய பாவமுள்ள பொல்லாத **பேச்சைக்** கவனத்திற்குக் கொண்டுவருகிறபோது அவர்களைப் பிடிக்க வேண்டும் என்றும் அவன் ஜெபிக்கிறான். இறுதியாக அவர்களுடைய சாபமும் பொய்யும் நிறைந்த பேச்சின் காரணமாக அவர்களை முற்றிலுமாக அழிக்க வேண்டுமென்று அவன் ஜெபிக்கிறான். அதன் பிறகு தேவன் உண்மையாகவே யாக்கோபின் சந்ததியின் மேல் அக்கறை கொண்டிருக்கிறார் என்று கிழக்கிலிருந்து மேற்கு வரை இந்த உலகம் அறியும்.

59:14,15 இதற்கிடையில் மனித நாய்கள் நகரத்துக்குத் திரும்பி வந்து சங்கீத ஆசிரியனின் உயிரை மாய்க்க உறுமி, ஊளையிட்டு, கடுஞ் சினத்தோடு அவனைத் தேடுகிறார்கள், அவனைக் காணவில்லையென்று மூர்க்கமாக இருக்கிறார்கள்.

59:16,17 நாய்கள் மாலையில் ஊளையிடும், ஈசாயின் மகனோ **காலையில்** பாடுகிறான். தேவை ஏற்படுகின்ற நேரங்களில் கர்த்தர் தஞ்சமும் அடைக்கலமுமாக இருக்கிறார் என்பதை மெய்ப்பித்திருப்பதால் அவருடைய வல்லமையையும் கிருபையையும் புகழ்ந்து அவன் பாடுகிறான். தேவனுடைய எல்லா மக்களுக்கும், அவர்களுடைய எதிரிகள் இல்லாமற் போகும்போது, இரட்சகரின் வல்லமையும் அன்பும் முடிவில்லாத பாடலின் கருத்தாக விளங்கும்போது காலை புலருகிறது.

சங்கீதம் 60: நமது நம்பிக்கை கர்த்தருக்குள் இருக்கிறது

தாவீது மெசொப்பொத்தாமியரோடும் சோபா தேசத்துச் சீரியரோடும் யுத்தம் பண்ணின போது, யோவாப் திரும்பி உப்புப் பள்ளத்தாக்கிலே ஏதோமியரில் பன்னீராயிரம் பேரை

வெட்டிய நிகழ்வே இச்சங்கீதத்தின் வரலாற்றுப் பின்னணி என்பது தலைப்பின்படி அறியப்படும். சீரியரோடும் ஏதோமியரோடும் செய்த போரில் தற் காலிகப் பின்னடைவு ஏற்பட்டது என்றே தோன்று கிறது (2 சாமு. 8:3-14). பரலோகத்தின் வாசலுக்கு விரைந்து சென்று ஓயாமல் வற்புறுத்திக் கேட்கிற மன்றாட்டுக்கு அதுவே காரணமாயிற்று.

சங்கீதத்தின் பொருளடக்கம் பின்வருமாறு:

1. இஸ்ரவேலின் தோல்வி கர்த்தரால் ஆனது (வச. 1-4).
2. இஸ்ரவேலின் நம்பிக்கை கர்த்தருக்குள் இருக்கிறது (வச. 5).
3. இறுதி வெற்றி கர்த்தருடைய வாக்குறுதி (வச. 6-8).
4. இஸ்ரவேலுக்குக் கர்த்தரே தேவை (வச. 9-11).
5. இஸ்ரவேலின் உறுதி கர்த்தருக்குள் இருக்கிறது (வச. 12).

இஸ்ரவேலின் தோல்வி கர்த்தரால் ஆனது (60:1-4)

60:1-3 ஏதோமியர் சீரியர் கூட்டணியாக இஸ்ர வேலரை முறியடித்தார்கள் என்னும் செய்தியைப் படிக்கையில், தேவன் தம்முடைய மக்களைக் தனிமையில் விட்டுச் சென்றதாகவே அந்தப் பேரி டர் சுட்டிக்காட்டுகிறது என்று தாவீது விளக்க மளிக்கிறான். அதனுடைய ஒரே பொருள் **தேவன்** இஸ்ரவேலை நிராகரித்துவிட்டார் என்பதாகும். அவர் தமது கோபத்தில் தேசத்தின் பாதுகாப்பு அரண்களை நொறுக்கிவிட்டார், எதிரிகள் தாக்கு வதற்கு ஏதுவாக உதவியற்ற நிலையில் கை விட்டுவிட்டார். கர்த்தர் தமது இரக்கத்தினாலே திரும்பி, சிதறிக்கிடக்கும் படைகளை ஒன்று கூட்டுவதற்குரிய நேரம் இதுவல்லவா?

மாபெரும் நிலநடுக்கத்தால் நாடே சின்னா பின்னமானதுபோல இருக்கிறது. நாட்டின் பொரு ளாதார, அரசியல், சமுதாய அடித்தளங்கள் யாவும் சிதைந்து போயின. சமுதாயத்தின் மதிற் சுவர் பலவீனமடைந்து உடைப்புகளினாலே விழுந்தறுவாயிலிருக்கிறது. அந்த உடைப்பு களைச் சரிசெய்து, இயல்பான நிலைக்கு மக்க ளைத் திரும்பச் செய்ய கர்த்தர் ஒருவராலேயே முடியும்!

மக்கள் கூட்டம் கடும் சோதனை ஊடாகச் சென்றிருக்கிறது. துன்பம், தோல்வி என்னும் மதுபானம் அவர்களைக் குடிகாரர்களுக்கு ஒப்பா கக் கீழே விழத்தள்ளிற்று.

60:4 மூலமொழியில் இந்த வசனம் சற்று தெளிவற்று இருக்கிறது. **சத்தியத்தினிமித்தம்** காட்சிப்பொருளாக வைக்கப்படும்படி **கர்த்தருக் குப் பயந்து நடக்கிறவர்கள்**மேல் அவர் ஒரு **கொடியை** அவிழ்த்துப் பறக்கவிடுகிறார் என்பது இதன் பொருளாக இருக்கக்கூடும். NKJV மொழிபெயர்ப்பு இந்தப் பொருளையே தருகிறது. ஆனால் RV மொழிபெயர்ப்பின் அடிக்குறிப்பு அதனுடைய நேர்மாறான பொருளைத் தருகிறது:

> **உமக்குப் பயப்படுகிறவர்கள் வில்லுக்குக் கீழே ஓடிச்செல்லும்படி அவர்களுக்கு நீர் ஒரு கொடியைக் கொடுத்தீர்.**

இங்கு எவ்வித ஒளிவு மறைவுமின்றி ஏளனச் சொற்களால் தாவீது குறைகூறுவதாகவே காணப் படுகிறது; அதாவது தேவன் இஸ்ரவேலுக்காக உயர்த்திய கொடி வெற்றிக்கான கொடியன்று, மாறாக தோல்வியின் கொடியே இது; பகைவரின் படைகளைக் கண்டு பின்வாங்குவதற்கு அந்தக் கொடி சைகை காட்டுகிறது.

இஸ்ரவேலின் நம்பிக்கை கர்த்தருக்குள் இருக்கிறது (60:5)

அவமானமடையத்தக்க தோல்வியிலிருந்து மன்றாட்டு பிறக்கிறது. "உமது பிரியர்" என்று பாட லாசிரியன் தனக்காகவும் தனது மக்களுக் காகவும் பேசி, தங்களை விடுவிக்கும்படியும், வெற்றி யைத் தரும்படியும், தொடர்பைப் புதுப்பிக்கும் படியும் மன்றாடுகிறான். "கர்த்தரே, வாரும், வந்து உமது பதிலைத் தாரும்" (கெலிநேயு மொழி பெயர்ப்பு).

இறுதி வெற்றி கர்த்தருடைய வாக்குறுதி (60:6-8)

60:6,7 ஆறு முதல் எட்டு வரையிலான வசனங் கள் பரிசுத்த இடத்தில் ஒலிக்கிற தேவனுடைய சத்தம் என்னும் தெய்வீக வாக்காக விளங்கு கின்றன. இஸ்ரவேல் நாடு முழுவதும் மீண்டும் கைப்பற்றப்படுவதற்கான தீர்மானமான முடிவை யும், அவருடைய புறவின எதிரிகள்மேல் வெற்றி பெற இருப்பதையும் குறித்து அவை கூறுகின்றன.

சீகேம், சுக்கோத், கீலேயாத், மனாசே, எப் பிராயீம் மற்றும் யூதா யாவும் யூத எல்லைக் குட்பட்டவை. தமக்குச் சொந்தமானவை என்றே தேவன் உரிமை கோருகிறார். அவர் யோர் தானுக்கு மேற்கே **சீகேமைப்** பங்கிட்டு, கிழக்கே **சுக்கோத்தின்** பள்ளத்தாக்கை அளந்துகொள் வார். மேலும் யோர்தானுக்கு மறுபுறத்தில் உள்ள கீலேயாத் நிலப்பகுதியையும் யோர்தானின் இரு

புறமுமுள்ள மனாசேயின் இருண்ட நிலப்பகுதி களையும் அவர் தமக்குச் சொந்தமாக்கிக் கொள் வார்.

நாட்டின் பாதுகாப்பு நடவடிக்கையைத் தலை மையேற்று நடத்தும் எப்பிராயீம் கோத்திரத்தின் நிலப்பகுதி இஸ்ரவேலின் மையப்பகுதியாகும். அதுவே அவருடைய **தலைக்கவசம்**. மரணத் தறுவாயில் யாக்கோபு உரைத்த தீர்க்கதரிசனத் தின்படி யூதா அவருடைய செங்கோல் (ஆதி. 49:10). அதுவே அரசின் ஆசனம்.

60:8 அடுத்ததாக, சூழ இருந்த நாடுகளில் மூன்றை நோக்கி, கர்த்தர் அவற்றின்மேல் கொண்டிருந்த தமது ஆதிக்கத்தை உறுதிப் படுத்துகிறார். மோவாப் சவக்கடலின் தென்கிழக் குக் கரையில் அமைந்திருக்கிறது, அது அவரு டைய **பாதபாத்திரம்**. அவர் தமது பாதரட்சையை ஏதோமின் மேல் எறிந்துபோடுவார்; அவர் வலுக் கட்டாயமாக அதைக் கீழ்ப்படுத்தித் தமது உடை மையாக்கிக்கொள்வார், அதை அடிமைப் படுத்துவதோடு ஒருவேளை அவமானத்துக்கும் ஏதுவாக்குவார். **பெலிஸ்தியா** தேவனுடைய நியாயத்தீர்ப்பின் நிமித்தம் வெற்றியினால் **ஆர்ப் பரிக்கும்**.

இஸ்ரவேலுக்குக் கர்த்தரே தேவை (60:9-11)

60:9 பேச்சாளர் இங்கு தமது கருத்தை மாற்று கிறார் என்பது தெளிவு.[44] இது கர்த்தருடைய சத்த மாக இருப்பதற்கான வாய்ப்பே இல்லை, ஏனெ னில் **அரணான பட்டணத்திற்கு** அவரை **நடத் திக்கொண்டு செல்ல** ஒருவருடைய உதவியும் தேவையில்லை. ஆகவே இவை தாவீதின் சொற் கள் என்றே நாம் புரிந்துகொள்கிறோம். ஏதோ மின் தலைநகர் (போஸ்றா, சேலா, பெத்றா என் னும் பெயர்களால் அது அழைக்கப்பட்டுள்ளது) எப்பொழுது இஸ்ரவேலரின் கரங்களில் விழும் என்று அவன் ஆவலோடு எதிர்நோக்குகிறான். இங்கு பட்டணம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது ஏதோம் நாடு முழுவதையும் குறிக்கும் என்பதில் ஐயமில்லை. தேவன் தமது பாதரட்சையை அதன் மேல் எறிய வேண்டும் என்று நினைத்ததை நிறைவேற்ற தான் ஒரு கருவியாகச் செயல்பட வேண்டும் என்று தாவீது விரும்புகிறான்.

60:10 ஆனால் அது வீணான நம்பிக்கை, ஏனெனில் அத்தருணத்தில் தேவன் தமது முகத் தைத் தமது மக்களிடத்திலிருந்து மறைத்துக் கொண்டிருந்தார். அவர் அவர்களைத் **தள்ளி விட்டிருந்தார்.** வெற்றி கிடைக்கும் என்பதற்கு உறுதி தரும்படி அவர் இஸ்ரவேல் படையோடு செல்லவில்லை.

60:11 ஆகவே இடர்களுக்கு உட்பட்ட தேவ னுடைய மக்களுக்காக மீண்டும் அவர் போரிட வேண்டுமென்று தாவீது வேண்டுகிறான். தெய் வீக உதவி தவிர்க்க இயலாதது. **மனிதனுடைய உதவி** பயனற்றது.

இஸ்ரவேலின் உறுதி கர்த்தருக்குள் இருக் கிறது (60:12)

நம்பிக்கையின் குறிப்போடு இந்தச் சங்கீதம் முடிவடைகிறது. தேவனுடைய உதவி உறுதிய ளிக்கப்பட்ட நிலையில், இஸ்ரவேல் படை மிகச் சிறந்த வெற்றியைப் பெறப்போகிறது என்னும் நம்பிக்கை பெற்றிருக்கிறது. பகைவர் அவரு டைய காலின் கீழ் மிதிக்கப்படுவார்கள்.

நடைமுறைப் பயன்பாட்டுக்கான விளக்கம்

உலகமும் மாம்சமும் பிசாசும் விசுவாசிகளின் எதிரிகள் ஆவார்கள். தன்னில்தானே அவன் அவற்றை வெற்றிபெற வலிமையற்றவன். மற்ற மனிதர்கள் எவ்வளவுதான் நல்ல நோக்க முடையவர்களாக இருந்தாலும், அவர்களுடைய உதவி பயனற்றது. ஆனால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக வெற்றி உண்டு. மீட்பு கிடைக்கும் என்று அவரிடத்தில் நம்பிக்கை வைத் திருப்பவர்கள் ஒருபோதும் ஏமாந்துபோகமாட் டார்கள்.

கடைசிநாட்களில் இஸ்ரவேலின் மீதியான வர்கள் எதிரிகளால் தாக்குண்டு, உள்ளம் தொய் வுற்று, இரட்சிப்புக்காகவும் வெற்றிக்காகவும் மேசியாவை எதிர்நோக்குகையில் 60 -ஆவது சங்கீதம் இறுதி நிறைவு பெறும். அதன்பிறகு இஸ்ரவேல் நாடு கோத்திரங்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கப்படும், அவர்களது எதிரிகள் தப்பிச் செல்ல முடியாதபடி ஒடுக்கப்படுவார்கள்.

சங்கீதம் 61: என்னிலும் உயர்ந்த கன்மலை

தாவீது கர்த்தருடன் வியத்தகு உறவு கொண் டிருந்தான். அவனுக்கு தேவன் தருவது யாதெ னில்:

ஒளிவீசும் உயிருள்ள உண்மை

உலகத்தின் பார்வை உலகினைக் காணும்
அதனினும் சிறந்தது விசுவாசப் பார்வை
அதனைக் கூர்மை யாக்குவார் கர்த்தர்!

உலகத்தின் உறவு நெருக்கத்தைத் தருமோ?
அதனினும் நெருக்கம் கூடுதல் அன்பு
அதனைத் தருவது அவரது உறவு!

குறிப்பாக ஆபத்துக் காலங்களில், சூழ்நிலை முற்றிலுமாக நம்பிக்கையற்றதாகக் காணப்படும் போது, அவன் தனது பாரத்தைக் கர்த்தர்மேல் வைத்து, அங்கேயே விட்டுவிடுவதற்குக் கற்றுக் கொண்டிருக்கிறான்.

செங்குத்தான பாறையில் தொங்குகிற மற் றொரு இக்கட்டான சூழ்நிலையில் அவன் இங்கே இருக்கிறான். சூழ்நிலைகளால் உண்டான அழுத் தம் அவனுடைய இருதயத்தைப் பிழிந்து ஒரு ஜெபமாக வெளிப்படுகிறது. அந்த ஜெபத்தில் காணப்படும் கலப்படமற்ற கடுந்துன்பத்தையும், தெளிவான முறையில் கருத்து வெளிப்படுத்தப் பட்டிருப்பதையும் வேறு எதனாலும் விஞ்சமுடி யாது. ஆயிரமாயிரம் இறைமக்கள் உபத்திரவங் கள், பாடுகள், பெருந்துயர் ஆகியவற்றின் ஊடா கச் சென்ற நிலையில் வெளிப்படுத்தியிருக்கிற முடிவுறாத சொற்களாக அந்த ஜெபம் மாறியிருக் கிறது, ஏனெனில் அவர்கள் அனுபவித்தும் அவ் வளவு தெளிவாகச் சொல்லமுடியாத உண் மையை அது வெளிப்படுத்துகிறது.

61:1 இப்பிரபஞ்சத்தின் சிங்காசனம் இருக் கின்ற அறைக்குள்ளாகத் தாவீதின் நன்கு அறி முகமான சத்தம் ஒலிக்கிறது.

தேவனே என் கூப்பிடுதலைக் கேட்டு, என் விண்ணப்பத்தைக் கவனியும்.

தேவனுடைய இருதயம் பெருமகிழ்ச்சி அடைந் திருக்கிறது. அவருடைய ஊழியனின் சிறுபிள்ளை போன்ற விசுவாசம் மாவரசரின் கவனத்தை உட னடியாக ஈர்த்தது.

61:2 என் இருதயம் தொய்யும்போது, பூமியின் கடையாந்தரத்திலிருந்து உம்மை நோக்கிக் கூப்பிடுவேன்.

பாடலாசிரியன் **பூமியின் கடைசியில்** இல்லை, ஆனால் உண்மையாகவே அவன் பாதுகாப்பும் விடுதலையும் கிடைக்க வாய்ப்பில்லை என்று சொல்லத்தக்க இடத்தில் இருந்தான், வாழ்வு முடிவடைந்து மரணம் தொடங்குகிற இட மாகவே அது இருந்தது. உடலிலும் உள்ளத்திலும் அவன் சோர்வுற்று நலிந்து போயிருந்தான், ஆனாலும் கிருபாசனம் அவனுக்கு மிக அருகில் இருப்பது தெரியும், ஆகவே அவன் இரக்கத்தைப் பெறவும் ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும் அதனருகில் வருகிறான். "தூரம் அர்த்தமற்றது, வாழ்வின் எல்லை மன்றாட்டைத் தடுக்க இயலாதது" என்று ஒருவர் கூறினார்.

எனக்கு எட்டாத உயரமான கன்மலையில் என்னைக் கொண்டுபோய்விடும்.

தனது பாதுகாப்புக்கு ஒரு கன்மலை தேவை என்று தாவீதின் ஆவிக்குரிய உள்ளுணர்வு கற் பிக்கிறது; மேலும் அந்தக் கன்மலை அவனைக் காட்டிலும் உயரமாக இருக்க வேண்டும், அதைச் சென்றடைய தெய்வீக வழிநடத்துதல் தேவை என்பதையெல்லாம் அந்த உள்ளுணர்வால் அவன் அறிகிறான், அந்தக் கன்மலை கிறிஸ் துவே (2 சாமு. 22:32), இந்த உவமையானது திரு மறையில் எங்கும் ஒரு மனிதனைக் குறிக்கப் பயன்படுத்தப்படவில்லை.[45] கன்மலை மனித னைக் காட்டிலும் பெரியதாக இருக்க வேண்டும்; அவ்வாறு இல்லையெனில் அவனால் அங்கு பாதுகாப்பிடத்தைக் கண்டடைய முடியாது. இது கிறிஸ்துவின் தெய்வீகத்தைச் சுட்டிக்காட்டுகிறது. (அந்தக் கன்மலைப்பிளவு எதிரியிடமிருந்து ஒளிந்து கொள்வதற்கு இடமளிக்கிறது.) இறுதியில், தன்னுடைய சொந்த நடையின் மூலமாக அங்கு சென்றடைவதற்கான ஞானமோ வலிமையோ தனக்கு இல்லையென்று தாவீது ஒப்புக்கொள் கிறான், ஆகவே அவன் கர்த்தரிடத்தில், அதா வது, நித்திய கன்மலையினிடத்தில், தன்னை நடத்தும்படி அவரையே வேண்டுகிறான்.

61:3 நீர் எனக்கு அடைக்கலமும், சத்துருவுக்கு எதிரே பெலத்த துருகமுமாயிருந்தீர்.

தேவனே கன்மலை என்று இந்தச் சொற்கள் உறுதிசெய்கின்றன. அவர் நம்புதற்குகந்த அடைக் கலமும் வலிமைமிக்க துருகமுமாக இருக்கிறார் என்பதையும், நீதிமான் பாதுகாப்பை நாடி அவருக்குள் ஓடிச்செல்கிறான் (நீதி. 18:10) என்பதையும் தாவீது மெய்ப்பித்திருந்தான். அவர் யாராக இருக்கிறாரோ அதுபோலவே இருப்பார்.

61:4 நான் உம்முடைய கூடாரத்தில் சதா காலமும் தங்குவேன்;

உமது செட்டைகளின் மறைவிலே வந்து அடைவேன். (சேலா)

இத்தகைய மன்றாட்டு தேவனுடைய சிங்காச னத்தைத் தொடாமல் இருக்காது! இவ்விதமான மென்மையான பாசமும், எளிமையான நம்பிக் கையும் ஒருக்காலும் மறுக்கப்படுவதில்லை. தேவ னுடைய இருதயத்திற்கு ஏற்ற மனிதனாகத் தாவீது விளங்கினதாக அவர் கூறியதில் வியப்பு ஏதும் இல்லை (1 சாமு. 13:14). **"உமது செட்டை களின் மறைவு"** என்னும் சொற்றொடர் கேரு

பீனின் செட்டைகள் இரத்தம் தோய்ந்த கிருபாசனத்தை மூடியிருப்பதைக் குறிப்பாய்ச் சுட்டிக் காட்டுகிறது.

61:5 தேவரீர், நீர் என் பொருத்தனைகளைக் கேட்டீர்;

உமது நாமத்திற்குப் பயப்படுகிறவர்களின் சுதந்தரத்தை எனக்குத் தந்தீர்.

சுதந்தரம் என்னும் சொல் பழைய ஏற்பாட்டில் கானான் தேசத்தையும் (யாத். 6:8), இஸ்ரவேல் மக்களையும் (சங். 94:5), ஒரு குடும்பத்தில் உள்ள பிள்ளைகளையும் (சங். 127:3), இறைவனுடைய வார்த்தையையும் (சங். 119:111), இடர் ஏற்படாத வண்ணம் காக்கப்படுவதையும் (ஏசாயா 54:17), இறுதியாக, ஆசரிப்புக் கூடாரம் அல்லது தேவாலயத்தையும் (எரே. 12:7) குறிக்கப் பயன்படுத்தப் பட்டுள்ளது. கடைசியாகச் சொல்லப்பட்டுள்ள பொருளே இங்கு முதன்மையான அர்த்தம் என்று குறிப்பாய் இவ்வசனம் சுட்டிக்காட்டுகிறது. இந் நாட்களில் **தேவனுடைய நாமத்திற்குப் பயப் படுகிறவர்கள்** அடைகிற **சுதந்தரம்** நித்திய வாழ்வு என்பதே நினைவுகூரப்படுகிறது (கொலோ. 1:12).

61:6,7 ராஜாவின் நாட்களோடே நாட்களைக் கூட்டுவீர்;

அவர் வருஷங்கள் தலைமுறை தலைமுறையாய் இருக்கும்.

அவர் தேவனுக்கு முன்பாக என்றென்றைக்கும் நிலைத்திருப்பார்;

தயையும் உண்மையும் அவரைக் காக்கக் கட்டளையிடும்!

இவ்விரு வசனங்களில் தாவீது தன்மையிலிருந்து படர்க்கைக்கு மாறுவது குறிப்பிடத்தக்கது. இது கவனத்தை ஈர்ப்பதற்கான காரணம் அவன் இன்னமும் தன்னைக் குறித்தும், அவனோடு தேவன் செய்த உடன்படிக்கையைக் குறித்தும்தான் பேசிக்கொண்டிருக்கிறான் என்பதில் ஐயமில்லை (2 சாமு. 7), அவனுடைய சொற்கள் வேறொரு மன்னருக்கு அதிகப் பொருத்தமாக உள்ளன. அவனுடைய சொற்கள் தாவீதைப் பற்றியவை என்போமானால், அவன் நீண்ட வாழ்வு தனக்கு வேண்டும் என்றும் அவனுடைய அரசு நிலைத்திருக்க வேண்டும் என்றும் கேட்பதாகவே புரிந்துகொள்ளப்படும். ஆனால் அவை கர்த்தராகிய இயேசுவைக் குறித்தவை என்போமானால், அவை உண்மையாகவே நடந்து முடிந்திருக்கின்றன:

அவர் துன்புறுத்தப்பட்டும் அவருடைய வாழ்வு முடிவற்றபடி நீட்டிக்கப்பட்டுள்ளது (எபி. 7:16).

அவருடைய நாட்கள் தலைமுறைதோறும் நிலைத்திருக்கும் (எபி. 1:12).

தேவனுடைய முன்னிலையில் அவர் என்றென்றைக்குமாக முடிசூட்டப்பட்டிருப்பார் (எபி. 1:8).

நிலையான அன்பும், சத்தியமும் அவரை மெய்க்காப்பாளர் போலப் பாதுகாக்கும் (சங். 91:1-16).

பண்டைய கால யூத வேத விளக்கமும் இங்கே மேசியாவே குறிப்பிடப்பட்டுள்ளார் என்று கூறுகிறது.

61:8 இப்படியே தினமும் என் பொருத்தனைகளை நாம் செலுத்தும்படியாக, உமது நாமத்தை என்றைக்கும் கீர்த்தனம் பண்ணுவேன்.

பேரிடரில் தொடங்கிய சங்கீதம், களங்கமற்ற அமைதியில் முடிவடைகிறது. தாவீது தனக்கு எட்டாத உயரத்தில் இருந்த கன்மலையைச் சென்றடைந்துவிட்டான். ஆகவே இடைவிடாமல் கர்த்தருக்குப் புகழ்ச்சியாகப் பாடவும் ஆராதிக்கவும், அன்புகூரவும், சேவைபுரியவும் தீர்மானிக்கிறான். சிலர் துன்பப்படுகிறபோது மட்டுமீறிய பொருத்தனைகளைச் செய்துவிட்டு, துன்பம் நீங்கிய பிறகு விரைவாக அந்தப் பொருத்தனைகளை மறந்துவிடுவதுபோல அவன் நடந்து கொள்ளமாட்டான். “ஜெபத்தில் துள்ளிக்குதிக்கிறவர்களாகவும் ஆராதனையில் முடமாகிப் போனவர்களாகவும்” இருப்பது போன்று அவன் செயல்படமாட்டான்.

61 -ஆவது சங்கீதம் அழகிய இனிமையான பாடல் உருவாக உயிரூட்டம் பெற்றுள்ளது:

எனக்கெட்டாத உயரத்தில்
கன்மலைக் கிறிஸ்துவே
பறந்தோடி வந்திட
உதவிடும் இறைவா!
கோட்டையும் அரணும் நீரல்லவா
வீட்டினை அடைந்திட விரைந்திடுவேன்
இருதயம் தொய்ந்திடும் நேரங்களில்
தருவீர் ஆறுதல் நிறைவாக!
போகும் இடமோ வெகுதொலைவு
சோர்வுறும் வேளையில் திடப்படுத்தும்
களைத்துத் தள்ளாடும் கால்களைநீர்
இளைப்படை யாமல் காத்திடுமே!
மண்ணில் தோன்றினீர் எனைக்காக்க

விண்ணில் பரிசினைப் பெற்றிடுவேன்
கன்மலை நிழலில் இளைப்பாறி
மன்னவர் புகழைப் பாடிடுவேன்!

சங்கீதம் 62: தேவன் ஒருவரே!

தேவன் ஒருவரே மெய்யான புகலிடம் என்பதே இந்தச் சங்கீதத்தின் செய்தி. தேவனே, அவரே ஆகிய சொற்களில் இடம் பெற்றுள்ள ஏகாரம், நம்முடைய முழுமையான கலப்படமற்ற நம்பிக்கைக்கு அவர் ஒருவரே உரிமை படைத்தவர் என்பதை வலியுறுத்துகிறது.

பல அழகிய வகைகளில் அவர் இங்கு அறிமுகப்படுத்தப்படுகிறார்:

நமது **இரட்சிப்பின்** ஆதாரம் (வச. 1,2,6,7).

நமது **கன்மலை** (வச. 2,6,7).

நமது **அடைக்கலம்** (வச. 2,6)

நமது **நம்பிக்கையின்** அடித்தளம் (வச. 5).

நமது **மகிமை** (வச. 7).

நமது **புகலிடம்** (வச. 7,8)

வல்லமைக்கான ஆதாரம் (வச. 11)

கிருபையின் ஊற்று (வச. 12).

எவனொருவன் தேவனைத் தனது நம்பிக்கைக்கும் வல்லமைக்கும் அடித்தளமாகக் கொண்டிருக்கிறானோ, அவன் கீழ்க்காணும் உறுதிகளைப் பெற்றிருப்பான்:

அவன் **அதிகமாய் அசைக்கப்படுவதில்லை** (வச 2).

அவன் எதிரிகளைக் கடிந்துகொள்ள துணிவுகொண்டிருக்கிறான் (வச. 3).

அவன் அவர்களுடைய திட்டங்களையும் போர்த்திறத்தையும் கண்டறிகிறான் (வச.4).

அவன் அசைக்கப்படுவதில்லை (வச. 6).

தேவனை நம்புவதால் அடைகிற மகிழ்ச்சியைப் பிறர் அறிய அவன் விரும்புகிறான் (வச. 8).

மனிதர்கள் நம்புவதற்கு வேறு ஐந்து பொருட்கள் இருக்கின்றன, ஆனால் அத்தகைய நம்பிக்கை ஏமாற்றத்தை வருவிப்பது நிச்சயம். (1) **கீழ்மக்கள்**, அதாவது, சாதாரண மக்கள், அவர்கள் புகையைப் போல லேசானவர்களும் நிலையற்றவர்களுமாவார்கள். (2) **மேன்மக்கள்**, அவர்கள் ஆளுகிறவர்களோ செல்வந்தர்களோ யாராயிருந்தாலும், உதவியும் பாதுகாப்பும் தருகிறவர்களாகக் காணப்பட்டாலும் அவர்கள் சார்ந்திருக்கத்தக்கவர்கள் அல்லர், அது வெறும் ஏமாற்றத்தை உண்டாக்கும் நிலையேயாகும். கீழ்மக்களையோ மேன்மக்களையோ எவரை நீங்கள் தராசில் வைத்தாலும் அவர்களுடைய நம்பகத்தன்மை மிகவும் லேசானதாகவே இருக்கும். (3) **கொடுமைப்படுத்துதல்** சார்ந்துகொள்வதற்கு முட்டாள்தனமானது; "அது தேவனுடைய சாபத்தோடு துர்நாற்றம் அடைந்ததாயிருக்கிறது." (4) **கொள்ளை**, அதிகாரம் மற்றும் செல்வம் பெறுவதற்கு இது குறுக்குவழியாகத் தோன்றுகிறது, ஆனால் தவறாகப் பெற்ற ஆதாயம் தேவனுடைய நியாயத்தீர்ப்பில் அழிந்து போகும். (5) நம்முடைய பாசத்திற்கும் சேவைக்கும் கர்த்தருக்கு நாம் அளிக்கும் இடத்தை நேர்மையான விடா முயற்சியின் மூலம் சம்பாதித்த செல்வத்தினாலும்கூட பெறமுடியாது. திருவாளர் F. B. மேயர் எழுதிய தாவது: "மீண்டும் மீண்டும் மனிதர்கள் மற்றும் பணம் ஆகியவற்றின் மூலம் எத்தனை முறை உதவியைப் பெற முயன்றிருக்கிறோம் - ஆனால் தேவன் ஒருக்காலும் நம்மைக் கைவிட்ட தில்லை.

அப்சலோம் செய்த கலகமே இந்தச் சங்கீதம் எழுதுவதற்கான ஏவுதலைக் கொடுத்தது என்று தோன்றுகிறது. தாவீது ஏதோ **சாய்ந்த மதிலுக்கும் இடிந்த சுவருக்கும்** ஒப்பானவன் என்பது போல அந்தக் கலகக்காரர்கள் அவனை அழிக்க முயன்றார்கள். **அவனுடைய மேன்மையிலிருந்து அவனைத் தள்ளிவிடுவதே** அவர்களுடைய இலக்கு, அதாவது, அவனுடைய அரியணையிலிருந்து அகற்ற வேண்டும். விசுவாசமுள்ளவர்கள் போல அவர்கள் நடித்தாலும், துரோகம் செய்யவே திட்டமிட்டார்கள். தப்பியோடிய அரசன் தனது விசுவாசமுள்ள குடிமக்கள் கர்த்தரிடத்தில் தடுமாற்றமில்லாத நம்பிக்கை கொண்டிருக்கும்படி வலியுறுத்துகிறான். அவனுடைய பகைவர், மனிதரிடத்திலும் செல்வத்திடத்திலும் நம்பிக்கை வைத்திருந்தார்கள். ஆனால் இவையிரண்டிலும் இரட்சிப்பு இல்லை. அவனுடைய நம்பிக்கையோ கர்த்தரிடத்தில் இருந்தது. வல்லமைக்கும் அன்புக்கும் கர்த்தரே ஊற்றின் தொடக்கமாக இருப்பதாக அவர் மீண்டும் மீண்டும் வாக்குரைத்துள்ளார்; அவருடைய வல்லமை உண்மையுள்ளவர்களை விடுவித்து, எதிரிகளை தண்டிக்கப் பயன்படும், அவருடைய அன்பு அவருடைய மக்களை ஆறுதல்படுத்தவும் ஆசிர்வதிக்கவும் உதவும். அவருடைய கிருபையை மறுத்துரைப்பவர்கள் மேல் நியாயத்தீர்ப்பு செலுத்தப்படுவதை அவர் உறுதி செய்வார்.

இந்தச் சங்கீதத்திற்கான திருவாளர் ஜான்டான் அவர்களின் விளக்கவுரை நினைவுகூரத்தக்கது:

அவரே என் கன்மலையும் என் இரட்சிப்பும், என் நம்பிக்கையும், என் உயர்ந்த அடைக்கல மும், என் மகிமையுமானவர்.

அவர் என் அடைக்கலமானால், எந்தப் பகை வரால் என்னைப் பின்தொடர முடியும்?

அவர் என் நம்பிக்கையானால் எந்தச் சோதனை என்னை ஊறுபடுத்தும்?

அவர் என் கன்மலையானால், எந்தப் புயல் என்னை அசைக்கும்?

அவர் என் இரட்சிப்பானால், எந்தத் துக்கம் என்னை ஊக்கமிழக்கச் செய்யும்?

அவர் என் மகிமையானால், எந்த அவதூறு என்னை மதிப்பிழக்கச் செய்யும்?

சங்கீதம் 63: ஜீவனைப் பார்க்கிலும் நல்லது

தற்காலிகமாக அரியணையை இழந்த தாவீது, யோர்தானுக்குக் கிழக்கே கட்டாயமாக நாடு கடத்தப்பட்டவனாக, யூதாவின் பாலைவனத்தின் ஊடாக மிகுந்த இடர்ப்பாட்டுடன் பயணம் செய் தான் (2 சாமு. 15:23-28; 16:2; 17:16). அரசனுடைய அரசியல் நற்பேறு தாழ்நிலையை நோக்கிப் பின்னடைவு அடைந்தபோதிலும் அவனுடைய ஆவிக்குரிய உற்சாகம் மேலோங்கியிருந்தது.

63:1 அவன் தேவனைத் தமக்குச் சொந்தமாக உரிமை கோரியதைக் கேட்பது உன்னதமான செயலாயிருக்கிறது: **"தேவனே, நீர் என்னுடைய தேவன்."** அந்தச் சொற்கள் எளிமையானவை, சிறு பிள்ளையின் சொற்களைப் போன்றவை, ஆனால் அவற்றின் பொருள் உலகளாவியது. **என் தேவன்** - நெருக்கமான, தனிப்பட்ட உறவு. என் தேவன் - எல்லாம் இழந்துபோன நிலையில் அவரே நிலையான செல்வம். **என் தேவன்** - ஒவ் வொரு இக்கட்டு நேரத்திலும் அவரே போதுமான ஆதாரம்.

நாம் பல நேரங்களில் தேவனிடத்தில் ஆர்வ மற்றவர்களாகவும் எளிதில் மருளுகிறவர்களாக வும் இருப்பதை நினைவுகூருகிற வேளைகளில், பாடலாசிரியன் அவரிடத்தில் மிகுந்த ஆர்வம் கொண்டிருப்பது நம்மைத் தாழ்த்துகிறது. அவன் **அதிகாலையில்** அவரைத் தேடினான் - வாழ்வின் தொடக்கத்திலும் ஒவ்வொரு நாள் தொடக்கத் திலும். மறுக்க முடியாத தீவிரத்தோடு அவன் அவ ரைத் தேடினான். அவனுடைய **ஆத்துமா** தேவனி டத்தில் தாகமாயிருந்தது, அவனுடைய **மாம்சம்** தேவனுக்கென்று தளர்ச்சியுற்றுப் போயிற்று - அதாவது, அவனுடைய உடல் ஆத்துமா முழுமை யும் நித்தியமானவரோடு உறவு கொண்டிருக்க வேண்டும் என்று கதறியது. **வறண்டு** தண்ணீரற்ற **நிலத்தில்** இளைப்படைந்த ஒரு பயணியைப் போல அவனுடைய வாஞ்சை தீவிரமாயிருந்தது. இவ்வுலகினைப் பற்றிய விவரமாக இது உள்ளது என்போமானால் அது பொருத்தமானதே ஆகும் - வறண்ட தரிசு நிலம்.

63:2 எருசலேம் நகரத்தின் **பரிசுத்த ஸ்தலத் தில்** அவன் தேவனைத் தொழுதுகொண்ட நாட் களை நோக்கி அவனுடைய நினைவு செல்லு கிறது, சொற்களால் வருணிக்க இயலாத அத்தரு ணத்தை அவன் நினைவுகூருகிறான். புனிதமான சிந்தனையின் ஆனந்த பரவசத்தில் பிடிக்கப்பட்ட வனாக அவன் தேவனை அவருடைய எல்லா **வல்லமையோடும் மகிமையோடும்** கண்டான். சுடரொளியும் கம்பீரமும் கூடியு புதியதொரு வெளிப்பாட்டுடன் கர்த்தரைக் காண்பதிலும் குறைவான ஒன்றில் அவன் மனநிறைவடைய மாட்டான். இதனைச் சிலர் தெய்வீகத் தரிசனம் என்று கூறுகிறார்கள் - இது தெய்வீக மகிமையில் தேவனுடைய தரிசனமாகும். இதனை எந்தப் பெயரில் அழைத்தாலும், மற்ற எல்லா மகிமையும் மந்தமானதும் மங்கலானதும் என்று சொல்லத் தக்க அளவிற்கு அது சிறந்ததோர் அனுபவ மாகும்.

என்இதய நாயகரே உம்மைக்
காண்பதென் வாஞ்சை
உம்மை யல்லால் வேறெதுவும்
எனக்கின்பம் தந்திடுமோ?
நண்பகலோ நள்ளிரவோ சிந்திக்கச்
சிறந்தவர் நீர்தாமே!
துயிலெனினும் விழிப்பெனினும் உம்சமுகம்
ஒன்றுதான் என்வெளிச்சம்!
– எட்டாம் நூற்றாண்டு ஐரிஷ்
மொழிக் கவிதை

(ஆங்கில மொழிபெயர்ப்பு – மேரி E. பைன்னி செய்யுளாக்கியவர் – எலியனார் H. ஹில்)

63:3,4 அதன் பிறகு நிகழ்தற்கரிய யூதாவின் பாலைவனத்திலிருந்து உணர்ச்சிமிக்க புகழ்ச்சிப் பாடல் எழுகிறது.

ஜீவனைப் பார்க்கிலும் உமது கிருபை நல்லது;
என் உதடுகள் உம்மைத் துதிக்கும்.
என் ஜீவனுள்ள மட்டும் நான் உம்மைத் துதித்து,

உமது நாமத்தைச் சொல்லிக் கையெடுப் பேன்.

ஜீவனால் கொடுக்கக்கூடிய ஏதொன்றையும் விட கர்த்தருடைய **கிருபை நல்லது.** அவரைப் போற்றுவதே மனிதனுடைய உதடுகள் பெறக் கூடிய சிறந்த வேலை. மனிதனுடைய வாழ்நாள் முழுவதும் அவரைப் புகழ்வதற்காகச் செலவிடப் படுமானாலும் கூட அதனை நீண்டதொரு காலம் என்று சொல்ல முடியாது. புகழ்ச்சியோடும் மன் றாட்டோடும் நமது கைகள் உயரத் தூக்கப்படு கிற போது நிறைவேற்றியிருக்கிறோம் என்னும் எண்ணத்தில் அவை துடிக்கின்றன.

63:5-8 இந்தப் புனிதமான ஐக்கியத்தோடு எந்தவொரு விருந்தும் ஒப்பிடத்தக்கதல்ல. நம் முடைய ஆத்துமாக்கள் மிகச்சிறந்த வகையில் மகிழ்விக்கப்பட்டுள்ளன. உறக்கம் வராத நீண்ட இரவுகளை, மகிமை நிறைந்த கர்த்தரைக் குறித்த தியானத்தின் மூலமாக மீட்டெடுத்தவர் களாகப் பொங்கியெழுகிற நன்றிகளால் **ஆனந் தக் களிப்புள்ள உதடுகளால்** போற்றுகிறோம். எப்படிப்பட்ட உதவியாக அவர் நமக்கு விளங்கு கிறார் - அவர் நமக்குச் செய்த எல்லாவற்றையும் யாரால் அளக்க முடியும்? அவருடைய செட்டை களின் நிழலில் நமது களிகூருதலாகிய பாடலை ஏறெடுக்கிறோம். நாம் அவரிடத்தில் அன்போடு சார்ந்துகொள்கிறவர்களாகவும், தேவையின் உணர்வோடு பற்றிக்கொள்கிறவர்களாகவும் இருக்கிறோம். காணக்கூடியதும், காணக்கூடா ததுமான அபாயங்களிலிருந்து அவர் நம்மைக் காக்கிறார்; மேலும் பரிசைப் பெறுவதற்கான இலக்கை நோக்கித் தருவதற்கான ஆற்றலை அவரே தருகிறார்.

63:9,10 "பகைவர்கள்?" என்று நீங்கள் சொன்னீர்களா. "ஆம், எனக்கும் பகைவர்கள் இருக்கிறார்கள், அவர்கள் என்னை இல்லாமல் போகும்படி அழித்துவிட முயற்சி செய்கிறார்கள். ஆனால் அவர்களோ அழிவுக்கென்று நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் கொடூர மரணம் அடைந்து, மரியாதைக்குரிய அடக்கத்தைப் பெறாமல் அவமானப்படுவார்கள்.

63:11 "ஆனால் நானோ தொடர்ந்து தேவனில் களிகூர்ந்திருப்பேன். உண்மையில், அவர்பேரில் பற்றுதல் உண்டு என்று சத்தியம் பண்ணுகிற யாவரும், இந்த மகிழ்ச்சியில் பங்கு பெறுவார்கள்; அதே நேரத்தில் பொய் கூற விரும்புகிறவர்கள் வாயடைக்கப்படும்."

சங்கீதம் 64: வில்லுகளும் அம்புகளும்

64 -ஆவது சங்கீதத்தில் வில்விளையாட்டுப் போட்டிகள் இரண்டு காட்சிகளைத் தருகின்றன. ஒன்று தொடக்கநிலைப் போட்டி, அது பொல்லாத வர்களுக்கும் நீதிமான்களுக்கும் இடையிலா னது (வச. 1-6). இரண்டாவது இறுதி நிகழ்வு, அது தேவனுக்கும் பொல்லாதவர்களுக்கும் இடை யிலானது (வச. 7-10).

64:1-6 முதலாவது போரில் ஒரு சாராருக்கே முழு வெற்றி என்பது போலத் தோன்றுகிறது. கய வர் பலர் நீதிமானாகிய **தாவீதை** எதிர்க்கிறார் கள். அவனிடத்திலோ அம்புகள்கூட இல்லை, அவர்களிடத்திலோ அம்பறாத்தூணிகள் நிறைந் திருக்கின்றன. ஆனால் இரகசிய ஆயுதமாகிய மன்றாட்டு அவனிடத்தில் உள்ளது, அதன் வாயி லாக அவன் கண்களுக்குப் புலப்படாத தனது கூட் டாளியைத் தனது படையில் சேர்த்திருக்கிறான். முதலாவதாக, அவன் தனக்கு ஏற்பட்டிருக்கிற **பயத்திலிருந்து** விடுதலையும், **துன்மார்க்கர் செய்யும் இரகசிய ஆலோசனையிலிருந்து** பாது காப்பும் வேண்டுமென்று தனது விண்ணப்பத்தை தேவனிடத்திற்கு ஏறெடுக்கிறான். அதன்பிறகு, தனது பகைவரைக் குறித்த தகவல் ஒன்றை அவ ரிடம் சமர்ப்பிக்கிறான். அவர்கள் தங்கள் **நாவு களை,** சானைக்கல் கொண்டு தீட்டப்பட்ட பட்ட யத்தைப் போலத் தீட்டியிருக்கிறார்கள். குற்றஞ் சுமத்துதல் என்னும் **அம்புகளை எய்யும் பொருட்டு அவற்றை அவர்கள் நாணேற்றி வைத் திருக்கிறார்கள்**. அவ்வாறு சுமத்திய குற்றங்கள் **கசப்பான வார்த்தைகளாலான** நிந்தையே யாகும். அவர்கள் மறைந்து எதிர்பாராமல் தாக் கும்படி இரகசியமான இடங்களில் ஒளிந்து கொண்டிருக்கிறார்கள், பதிலடி கிடைக்கும் என் னும் பயம் அவர்களுக்கு இல்லை. குற்றமற்றவர் களை அழிக்க வேண்டும் என்னும் அவர்களுடைய தீர்மானம் மாற்ற இயலாததாயிருந்தது. பாட லாசிரியனைக் கண்ணியில் சிக்கவைக்க வேண் டும் என்று சதித்திட்டம் தீட்டியவர்கள், தங்களை எவராலும் கண்டுபிடிக்க முடியாது என்று கற் பனை செய்துகொண்டிருக்கிறார்கள். "அவர்கள் தங்கள் திட்டங்களை நன்கு ஆராய்ந்து தீட்டி யிருக்கிறார்கள்; ஒவ்வொருவனும் சூழ்ச்சி நிறைந்த இருதயத்தோடும், ஆழ்ந்த வஞ்சகத் தோடும் இருக்கிறான்" (வச. 6. மோ.ர்.பட் மொழி பெயர்ப்பு)

64:7 இதுகாறும் எல்லாம் கயவரின் பக்கம் இருப்பதுபோலத் தோன்றுகிறது. ஆனால் நீதி

மானோ, "கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார்; நீங்கள் சும்மாயிருப்பீர்கள்" (யாத். 14:14) என்னும் வாக்குறுதியைப் பற்றிக்கொண்டிருக்கிறான். "யுத்தம் உங்களுடையதல்ல, தேவனுடையது" (2 நாளா. 20:15).

64:8 இவ்வாறாக இரண்டாவது போட்டியில் தேவன் தமது அம்பை (ஒருமை) அவர்கள்மேல் எய்வதைக் காண்கிறோம் (தமிழில் அம்புகள் என்று சொல்லப்பட்டுள்ளது). அதுவே அம்பு எய்வதற்கான இலக்கின் மையம். அவர்கள் **காயமடைந்து** தரையில் விழுவார்கள். அவர்களுடைய பொல்லாத சொற்கள் அவர்களை நோக்கித் திரும்பும்படி தேவன் செய்கிறார், காண்கிறவர்கள் யாவரும் பயந்து **ஓடுகிறார்கள்.**

64:9,10 மக்கள் யாவருடைய மனதிலும் பெரிதான பயம் பற்றிக்கொள்கிறது. செய்தி விரைந்து பரவுகிறது, நீதி வெற்றிபெற்று விட்டது என்று மக்கள் உணருகிறார்கள். **நீதிமான்கள் மகிழ்வதற்கு** இது காரணமாகிறது. யெகோவாவிடத்தில் **நம்பிக்கை** வைப்பதற்கும் இது காரணம் என்பதில் ஐயமில்லை. எது சரியோ அதில் பிரியம் வைப்பவர்கள் கொண்டாடுகிறார்கள்.

சங்கீதம் 65: ஆயிரமாண்டு அறுவடைப் பாடல்

65 -ஆவது சங்கீதம் பொதுவாக "அறுவடை வீட்டின்" உன்னதமான இலக்கியப் பாடலாகப் பயன்படுத்தப்பட்டாலும், இதன் முதன்மையான விளக்கம் கர்த்தருடைய இரண்டாம் வெளிப்பாட்டின்போது காணப்படும் சூழ்நிலையைப் பற்றி விவரிக்கிறது என்பதில் ஐயமில்லை.

65:1 இஸ்ரவேல் தேவனோடு கொண்டிருந்த நெருக்கத்தை விட்டு விலகியிருந்த பல நூற்றாண்டு நீண்ட காலத்தின்போது, **தேவனுக்குச்** செலுத்த வேண்டிய **துதி** செலுத்தப்படாமல் **சீயோன்** கனியற்ற நிலையில் இருந்தது. ஆனால் தேவன் பண்டைய கால மக்களை முன்னிருந்த சீரான நிலைக்குத் தம்மிடமாகக் கொண்டுவரும் போது, பெருமதிப்பும் பயபக்தியும் கூடிய அமைதியோடு துதி செலுத்த அவ்வினத்தார் காத்திருப்பார்கள். இறுதியாக அவருக்குப் **பொருத்தனை செலுத்தப்படும்.** முழங்கால் யாவும் அவருக்கு முன்பாக முடங்கும் என்னும் அவருடைய சொந்த ஆணையே இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பொருத்தனையாகும் (ஏசாயா 45:23). "சபை நடுவே உம்மைத் துதிப்பேன்" (சங். 22:22) என்னும் மேசியாவின் ஆணையாகவும் இது பொருள்படும். அல்லது உபத்திரவ காலத்தில் நடைபெறும் பயங்கரமான நிகழ்ச்சிகளால் அவதிப்படும் மீதியானவர்கள் செலுத்துகிற அன்பு, ஆராதனை, ஊழியம் ஆகிய பொருத்தனைகளாகவும் இருக்கலாம்.

65:2 முதல் வசனத்தின் செய்தி முதன்மையாக இஸ்ரவேலரைப் பற்றியதாக இருந்தபோதிலும், இங்கு அது விரிவாக்கம் பெற்ற எல்லா மனிதர்களையும் உட்கொண்டதாயிருக்கிறது. **"ஜெபத்தைக் கேட்கிறவர்"** என்னும் மாபெரிய உயர்ந்த பெயரால் தேவன் அறியப்பட்டிருக்கிறார். விசுவாசமுள்ள **ஜெபத்தால்** மனமாற்றம் பெற்ற புறவினத்தார் கர்த்தரைப் பற்றிக்கொள்வார்கள்.

65:3 இங்கு பேச்சாளர்கள் வெவ்வேறு நபர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. வசனத்தின் முந்தின பகுதி பதிலாளாக மேசியா கல்வாரியில் செய்து முடித்த, அதாவது, பயங்கரமான சுமைக்குக் கீழாக அவர் நசுக்கப்பட்ட நிகழ்வை அவர் திரும்பவும் எடுத்துரைக்கிறார். ஆனால் மீதியான யூதர்கள் அவை அவருடைய பாவங்கள் அல்ல மாறாக, **"எங்கள் மீறுதல்கள்"** என்று உடனடியாக ஒப்புக்கொள்கிறார்கள். "நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்" (ஏசாயா 53:5) என்று அவர்கள் கூறுகிறார்கள். இஸ்ரவேல் தனது குற்றத்தை இவ்வாறு அறிக்கை செய்தவுடனே, அவர்களுடைய மீறுதல்கள் யாவும் மன்னிக்கப்பட்ட உறுதியைப் பெறுவார்கள்.

65:4 மீண்டுமாக, இந்த வசனத்தின் முந்தின பகுதி மேசியாவாகிய இயேசுவைப் பற்றிப் பேசுகிறது என்றும், அதே நேரத்தில் இதன் இரண்டாவது பகுதி மீட்கப்பட்ட இஸ்ரவேலின் சொற்கள் என்றும் நாம் அறிந்திருக்கிறோம். இறைவனுடைய நற்பேறுபெற்ற மைந்தனே அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர். இதனை ஏசாயா 42:1 இவ்வாறு கூறுகிறது: "இதோ, ... நான் தெரிந்துகொண்டவரும், என் ஆத்துமாவுக்குப் பிரியமானவரும் இவரே. "மேலும் அவர் ஒருவரையே தேவன் தம்மிடம் **சேர்த்துக்கொள்ள** அனுமதித்தார் - மெல்கிசேதேக்கின் முறைமையின்படி அவர் என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறார். அவர் கர்த்தருடைய ஆலயத்தின் **பிராகாரங்களில்**, சிறப்பான வகையில் அவரை நெருங்கி **வாசமாயிருக்கும்படி** தெரிந்தெடுக்கப்பட்டவர்.

அதன் பிறகு தேவனுடைய வீட்டின் அதாவது அவருடைய பரிசுத்த ஆலயத்தின் நன்மையைக் குறித்து முழு மனநிறைவின் உறுதியை மீதியான வர்கள் எடுத்துரைக்கிறார்கள். ஆலயத்தைக் குறித்து இங்கு காணப்படும் குறிப்பு, இச்சங்கீதம் தாவீதால் எழுதப்பட்டதுதானா என்ற ஐயத்தைச் சிலருடைய உள்ளத்தில் எழுப்பியிருக்கிறது; ஏனெனில் தாவீதின் மரணம் வரை ஆலயம் கட்டப்பட வில்லை. ஆனால், ஆலயம் என்ற சொல் சில வேளைகளில், சாலொமோனுடைய ஆலயம் கட்டப்படுவதற்கு முன்னிருந்த ஆசாரிப்புக் கூடாரத்தைக் குறிக்கும்படி பயன்படுத்தப்பட்டது என்பதை நாம் அறியும்போது, அந்த ஐயம் இருந்த இடம் தெரியாமல் மறைந்துபோகிறது (1 சாமு. 1:89; 3:3; 2 சாமு. 22:7).

65:5-7 மீதியானவர்கள் இன்னமும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய மன்றாட்டுக்குப் பதில் கூறும் வகையில், கர்த்தர் அவர்களது எதிரிகளை நேர்மையாகத் தண்டித்து பயங்கரமான முறையில் நியாயந்தீர்க்கிறார். இவ்வாறாக அவர் தம்மை அவர்களுடைய **இரட்சிப்பின் தேவனென்றும்**, உலகமெங்கும் மற்றும் **தூரமான சமுத்திரங்களிலும்** உள்ளவர்கள் யாவருடைய **நம்பிக்கையாகவும்** வெளிப்படுத்துகிறார். அவர் எவ்வளவு பெரிய தேவன்! அவர் சர்வ வல்லமையைத் தமது இடைக்கச்சையாகக் கொண்டிருக்கிறார், பெரிதான வல்லமையாலே அவர் **பர்வதங்களை** அதனதன் இடத்திலே **உறுதிப்படுத்தியிருக்கிறார்**. கடலின் பேரலைகளை அமைதிப்படுத்துவது அவருக்கு ஒரு பெரிய செயலல்ல. ஒருவேளை அது கலிலேயாக் கடலாகவோ புறவின மக்களுடைய கொந்தளிப் பாகவோ எதுவாகவும் இருக்கலாம், எதுவானாலும் அது அவருக்குப் பெரிதல்ல.

65:8 அடையாளங்களாலும் அற்புதங்களாலும் இறைவன் வெகு தொலைவில் உள்ள அவிசுவாச மக்களைச் சந்திக்கும்போது, அவர்கள் அச்சமடைவதில் ஆச்சரியம் எதுவும் இல்லை. அல்லது அந்த நாடுகளில் விசுவாசிகள் சூரியன் உதிப்பதையும் மறைவதையும் கண்டு மகிழ் வடைவதும் ஆச்சரியமானது அல்ல.

65:9 ஒன்பது முதல் பதின்மூன்றாவது வசனம் வரை, விதை விதைப்பது முதல் அறுவடை வரை நடைபெறும் நிகழ்வுகளின் தொகுப்பாக அறுவடை ஆண்டு விவரிக்கப்படுகிறது. மக்கள் மேல் உள்ள சாபம் நீக்கப்பட்டு, திரளான அறுவடை செய்யப்படும் ஆயிரமாண்டு ஆட்சியின் தன்மை இங்குள்ள விவரங்களுக்குப் பொருந்துகிறது.

வசந்த காலம் தேவன் மக்களைச் சந்திக்கும் நிகழ்வுக்கு ஒப்பானது. அவர் தமது வானத்து நதியிலிருந்து மழையைப் பொழியப்பண்ணுவார். மேகங்கள் வானில் விரைந்து செல்கின்றன. நிலம் ஆயத்தப்படுத்தப்பட்ட பிறகு அவர்தாமே விதைப்பதற்கான தானியங்களைத் தருகிறார்.

65:10 பயிர் முளைத்து வளருகின்ற காலத்தில், முதலாவது உழப்பட்ட நிலம் நீர் பாய்ச்சப் படுகிறது, மழைநீர் மண்கட்டிகளை உடைத்து நிலத்தை மிருதுவாக்குகிறது, விரைவாக விதைகள் முளைத்து ஏராளமாகப் பயிர் வளருகிறது.

65:11-13 வளர்ச்சியை **தேவன்** தமது **நன்மையால் முடிசூட்டுகிறார்**. அவருடைய கால்கள் எங்கெல்லாம் நடந்து சென்றனவோ அங்கெல்லாம் ஓடைகள் பாய்ந்து செல்லுகின்றன (திருவாளர் நாக்ஸ்). **மேய்ச்சல்** நிலங்கள் தீவனத்தை உற்பத்தி செய்கின்றன. சிறுமலைகள் புல்வெளியால் மூடப்பட்டுப் பசுமையாயிருக்கும் காட்சி, மகிழ்ச்சி நிறைந்த நிலைக்கு ஒப்பாயிருக்கிறது. மேய்ச்சல் நிலங்கள் ஆட்டுத்தோல் விரிப்பால் மூடப்பட்டது போல **ஆடுகள்** நிறைந்திருக்கின்றன. தானியங்கள் முற்றி கதிர்கள் சாய்ந்திருக்கும் அழகு. **பள்ளத்தாக்கின்** அடுக்குகளில் அளவொத்த இசை ஒழுங்கு போலக் காணப்படுகிறது. மேசியாவின் வருகையின் காலத்தை இயற்கையே கொண்டாடுவது போன்ற காட்சி காணப்படுகிறது.

சங்கீதம் 66:
வாருங்கள், பாருங்கள், கேளுங்கள்

66:1-4 முதல் நான்கு வசனங்களில், பாடலாசிரியன் தேவனைப் புகழ்ந்து பாடுவதற்காக உலகம் முழுவதையும் தன்னோடு சேரும்படி அழைக்கிறான். அது மகிழ்ச்சியின் கீதமாக இருக்க வேண்டும், மேலும் அவருடைய திருப்பெயரின் மகத்துவங்களைக் கொண்டாடும் பாடலாக இருக்க வேண்டும். அந்தப்பாடலின் கருப்பொருள் மகிமை நிறைந்ததாகையால் **துதியும் மகிமை** நிறைந்ததாக இருக்க வேண்டும். உலகளாவிய தொழுகைக்கான சொற்களே இங்கு தரப்பட்டுள்ளன. அவற்றை நாம் இங்கு பொழிப்புரையாகத் தருகிறோம்

கர்த்தாவே, உமது சாதனைகள் பயங்கரமானவை. உமது பகைவர் உம்முடைய முன்னிலையில் அஞ்சி நடுங்கும்படி உமது வலிமை பேரழிவை உண்டு பண்ணக் கூடியது. இறுதியில் இவ்வுலகம் முழுவதும் உம்மைத் தொழுது கொள்ளும்படி உமது முன்னிலையில் முழங்காற்

படியிடுகிறது. எல்லா இடங்களிலும் உமது திருப் பெயரை மக்கள் புகழ்ந்து பாடுகிறார்கள்.

அரசரின் காலம் வருகிறபோது இந்தச் சங் கீதம் தனிச்சிறப்பு பெற்றதாக விளங்கும் என்ப தில் ஐயமில்லை.

66:5-7 ஐந்து முதல் பன்னிரண்டு வரையிலான வசனங்களில் நம்முடைய, எங்கள் என்னும் சொற்கள் திரும்பத் திரும்ப இடம் பெற்றிருப்பது, மீதியான யூதர்களின் மனதில் அந்தக் கடைசி நாட்களில் நற்செய்திச் சிந்தனை நிறைந் திருக்கும் என்பதை வெளிப்படுத்துகிறது. அந்தச் சிந்தனையின் காரணமாக அவர்கள் தேவன் இஸ்ரவேலருக்குச் செய்த திகைப்பூட்டும் செயல் களை வந்து காணும்படி புறவினத்தார் யாவரை யும் அழைக்கிறார்கள். அவர் செய்த இரண்டு மகத்துவமான செயல்கள் நினைவுக்கு வரு கின்றன. அவர் சிவந்த சமுத்திரத்தின் வழியாக **உலர்ந்த தரையால்** ஆன நெடுஞ்சாலையை உண்டு பண்ணினார். நாற்பது ஆண்டுகள் கழித்து இஸ்ரவேலர் யோர்தான் **ஆற்றை** வந்தடைந்த போது. அவர்கள் கால்கள் நனையாமல் மறுகரை சென்றார்கள். இஸ்ரவேலில் எத்தகைய மகிழ்ச்சி அப்பொழுது வெளிப்பட்டது. மக்கள் தங்களு டைய தேவனில் எவ்வளவாக வெற்றிப் பெருமிதம் அடைந்தார், தேவனுடைய ஆளுகை ஒருக் காலும் முடிவடைகிறதில்லை, இத்தகைய இறை வனுக்கு எதிராகக் கலகம் செய்வதென்பது எவ னொருவனுக்கும் முட்டாள்தனமானதாகவே இருக்கும்.

66:8-12 இஸ்ரவேல் மக்களை இறைவன் அற் புதமான முறையில் பாதுகாத்ததற்காகப் புற வினத்தாரும் அவரைத் **துதிக்க** வேண்டும். அடுத் தடுத்து விரைவாக உவமைகள் மாற்றப்பட்டு இஸ்ரவேல் கீழ்க்கண்ட வண்ணம் சித்திரிக்கப் பட்டுள்ளது.

உலோகத் தாதுவை உருக்கும் இடத்தில் கடுஞ்சூட்டில் புடமிடப்படுகிற வெள்ளியைப் போலப் புடமிடப்பட்டார்கள் (வ.ச. 10)

ஒரு வலையில் சிக்கிக் கொண்டது போன்று சிறையில் அடைக்கப்பட்டார்கள் (வச.11)

அடிமை வேலையாட்களைப் போன்று கட் டாயப்படுத்தப்பட்டார்கள் (வச 11)

துன்பப்படுத்துகிற இழிவான மனிதர் களாலே ஒடுக்கப்பட்டார்கள் (வச. 12).

தீயின் ஊடாகவும் தண்ணீரின் ஊடாகவும் கடந்து சென்றது போன்று அச்சுறுத்தும் ஆபத்துகளுக்குள்ளாக நடத்தப்பட்டார் கள் (வச. 12).

ஆயினும் அவர்கள் இறுதியில் அழிந்து போகும் படி தேவன் அனுமதிக்கவில்லை. மாறாக, அவர் அவர்களைச் செழிப்பான இடத்திற்குக் கொண்டு வந்தார் - இ.ஃ.து இஸ்ரவேலர் ஆயிரமாண்டு ஆட் சிக் காலத்தில் அபரிமிதமான செல்வச் செழிப் பைப் பெற்றிருப்பார்கள் என்பதைக் குறிக்கிறது. திருவாளர் வில்லியம்ஸ் இதனை விவரிக்கிறார்:

> சாத்தானும் மனிதனும் இஸ்ரவேலை முற்றிலு மாக அழித்துவிட வேண்டும் என்று இடைவிடா மல் முயற்சி செய்தபோதிலும், அந்நாட்டின் பன்னிரண்டு கோத்திரத்தாரும் ஆயிரமாண் டின் விடியலின் போது சீயோன் மலையின் மேல் நிற்பார்கள். இவ்வாறாக ஒன்பதாவது வச னத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உண்மை மெய்ப் பிக்கப்படும். அவர்கள் மேல் நேர்மையாக செலுத்தப்பட்ட சிட்சை (வச. 10–12) அன்பினால் வடிமைக்கப்பட்டது என்றும், ஞானத்தால் நிறை வேற்றப்பட்டது என்றும் சாட்சி கூறுவார்கள்.[46]

66:13-15 பதின்மூன்று முதல் இருபது வரை யிலான வசனங்களில் "நான்" "என்னுடைய" என்னும் சொற்கள் இதுவரை குழுவாகப் பாடப் பட்ட பாடல் தனிப்பாடலாக மாறியிருப்பதைக் குறிக்கின்றன. ஆர்ந்தமைந்த விரிவுரையாளர் கள் பலர், இங்க பேசுபவர் கர்த்தராகிய இயேசு, இஸ்ரவேலின் அரசர், மகா பிரதான ஆசாரியர் என்று கருதுகிறார்கள். அவர் முழுவதும் திருத் தந்தையின் சித்தத்திற்கு ஒப்புவிக்கப்பட்ட வாழ்க் கையாகிய சர்வாங்க தகனபலியோடு தேவனிடத் திற்கு வருகிறார். அவர் துன்பப்பட்டவேளையில் கொடுத்த வாக்கின்படி புகழ்ச்சி என்னும் பொருத் தனைகளைச் செலுத்துகிறார். அவர் சிலுவை யில் அடைந்த அவரது சொந்தப் பாடுகளையோ, அவருடைய மக்கள் அடைந்த துன்பங்களில் அவர் அனுபவித்த பாடுகளையோ இது குறிக்கக் கூடும். ஏனெனில், "அவர்களுடைய எல்லா நெருக்கங்களிலும் அவர் நெருக்கப்பட்டார்" என்று கூறப்பட்டுள்ளது (ஏசாயா 63:9).

இங்கு நாம் **சர்வாங்க தகனபலிகளை** அதா வது, **ஆட்டுக்கடாக்கள், காளைகள்** மற்றும் **செம்மறியாடுகள்** ஆகிய விலங்குகளைப் பலி யிடுவது குறித்துப் படிக்கிறபோது, அவற்றை நாம் எழுத்தின்படியான பொருள்கொள்ள வேண்டி யதில்லை; பாடலாசிரியனின் சொந்த அனுபவ மாக மட்டுமே இதனை எடுத்துக்கொள்ள

வேண்டும். தம் மக்களோடு ஒன்று சேர்ந்து, மேசியாவும் மீதியானவர்களும் ஏறெடுக்கிற ஆவிக்குரிய தொழுகையைக் குறிக்கின்ற உரு வகமாகவே இதனைக் கருதவேண்டும். இருந்த போதிலும் ஆயிரமாண்டு ஆட்சியின்போது மாற்றி யமைக்கப்பட்ட பலிமுறைகள் நிறுவப்படும் என் பதை நம்மால் மறுத்துரைக்க முடியாது.

66:16-19 "வந்து பாருங்கள்" என்பது 5 -ஆவது வசனத்தில் கொடுக்கப்பட்ட அழைப்பு. இங்கு, 16 - ஆவது வசனத்தில் **"வந்து கேளுங்கள்"** என் பதே அழைப்பு. வரலாற்றில் இறைவன் ஆற்றிய செயல்களைக் காண முடியும், ஆனால் ஆத்துமா வோடு அவர் ஈடுபடுகிற விதத்தைக் கேட்க மட் டுமே முடியும். மன்றாட்டுகளுக்குப் பதில் கிடைக் கப் பெற்ற தமது சான்றினை தேவனுக்குப் பயப்படு கிற மக்கள் வந்து கேட்கும்படி மேசியா அழைக் கிறார். அவர் தேவனிடத்தில் விண்ணப்பத் தோடும் வேண்டுதலோடும் கூப்பிட்டார். இது "அவர் மாம்சத்தில் இருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி, வேண்டுதல் செய்தார்" (எபி. 5:7 - JND) என்பதையே குறிக்கிறது. அவர் தமது **இருதயத்தில் அக்கிரமத்தை** எண்ணி யிருந்தால், **கர்த்தர்** அவருக்குச் செவிகொடுத் திருக்க மாட்டார். ஆனால் அவரே பாவமில்லாத வர், ஆகவே அவர் "அவருடைய பயபக்தியினித் தம்" கேட்கப்பட்டார் (எபி. 5:7 - JND).

66:20 இறுதி எழுச்சிமிக்க புகழ்ச்சி இதனால் உயிரூட்டம் பெற்று எழுகிறது:

> **என் ஜெபத்தைத் தள்ளாமலும்,**
>
> **தமது கிருபையை என்னைவிட்டு விலக் காமலும் இருந்த தேவனுக்கு ஸ்தோத் திரம் உண்டாவதாக!**

சங்கீதம் 67:
இஸ்ரவேலின் திருப்பணி அழைப்பு

இறைவன் இஸ்ரவேல் இனத்தை அழைத்த போது, அவர்கள் திருப்பணி ஆற்றும் இயல்பைப் பெற்றிருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். இரண்டு உண்மைகளைக் குறித்து அவர்கள் சுற்றிலுமுள்ள இனத்தாருக்கு அறிவித்துச் சாட்சி களாக வாழ்ந்துகாட்ட வேண்டும் என்பதே அவ ரது நோக்கம்.

1. ஒரே இறைவன் என்னும் உண்மை - அதாவது தேவன் ஒருவரே (யாத். 20:2,3; உபா. 6:4; ஏசாயா 43:10-12).
2. யெகோவாவின் ஆட்சியின் கீழ்ப் பணிந்து வாழ்கிற மக்கள் மகிழ்ச்சியோடும் வளத் தோடும் இருப்பார்கள் என்னும் உண்மை (லேவி. 26:3-12; உபா. 33:26-29; 1 நாளா. 17:20; எரே. 33:9).

தங்களுக்குக் கிடைக்கிற நன்மைகளுக்கு இஸ்ரவேல் முடிவிடமாக இருந்துவிடக்கூடாது, மாறாக வாய்க்காலாக இருக்க வேண்டும் என் பதே தேவனுடைய விருப்பம். தேவனுடைய இரட் சிப்பு யூதர்களுக்கு மட்டுமல்லாமல் புறவினத் தாருக்கு அருளப்படும், இஸ்ரவேலரோ ராஜரிக ஆசாரியக் கூட்டமாயிருந்து தேவனுக்கும் புற வின மக்களுக்கும் மத்தியஸ்தராகச் செயல்பட வேண்டும் என்பதற்கான குறிப்புகள் பழைய ஏற்பாட்டில் பெரும் எண்ணிக்கையில் உள்ளன.

ஆனால் இஸ்ரவேல் இவ்விதத் திருப்பணி யைச் செய்யத் தவறிவிட்டது என்பது அவப் பேறான நிலையே ஆகும். இஸ்ரவேலரே உருவ வழிபாட்டில் விழுந்து, தாங்கள் அறிக்கை செய் யும்படி அழைக்கப்பட்ட உண்மையை மறுத்து ரைப்பவர்கள் ஆனார்கள்.

ஆனால் தேவனுடைய நோக்கங்கள் அவ் வளவு எளிதாகத் தோல்வியடைவதில்லை. உபத் திரவ காலத்தில், யூதர்களுக்குள் விசுவாசிக்கும் மீதியானவர்கள் ராஜ்யத்தின் நற்செய்தியை உலகமெங்கும் ஏந்திச் செல்வார்கள் (மத். 24:14). நிறுவப்படவிருக்கும் ஆட்சியில், எல்லா இனத் தாருக்கும் நன்மை சென்று சேரத்தக்க வாய்க் காலாக இஸ்ரவேலர் விளங்குவார்கள் (ஏசா. 61:6; சக. 8:23).

67:1,2 இந்தச் சங்கீதம் அந்தக் காலத்தை எதிர்நோக்கியிருக்கிறது. புறவின மக்களுக்கு நற்செய்தியை அறிவிக்கும் ஊழியத்தைச் செயல் படுத்துபவர்களாக விளங்கும்படி **தேவன்** தங் களை **ஆசிர்வதிக்க** வேண்டுமென்று விசுவாசி களான யூதர்கள் வேண்டுகிறதை இங்கு நாம் கேட்கிறோம். **"பூமியில் உம்முடைய வழி விளங் கும்படி"** என்னும் சொற்களை நாம் படிக்கும் போது, கிறிஸ்துவே வழி என்பதை நாம் நினைவு கூர வேண்டும் (யோவான் 14:6). அவர் மூல மாகவே தேவனுடைய இரட்சிக்கும் ஆற்றலைப் புறவினத்தார் அல்லது தனிமனிதர்கள் அனுப விக்க இயலும்.

67:3,4 வியக்கத்தக்க வகையில் எழுந்த திருப்பணி உற்சாகத்தில், புறவினத்தாரிடத்திலி ருந்து தேவனுக்குப் புகழ்ச்சி பெருவெள்ளமெனப்

பாய்ந்து வரவேண்டுமென்று இஸ்ரவேல் மன்றாடு கிறது. அந்தப் புகழ்ச்சியானது, கிறிஸ்துவின் நன்மை பயக்கும் நேர்மையான ஆட்சியையும், அவருடைய மென்மையான மேய்ப்பனின் அக் கறையையும் அனுபவிப்பதால் ஏற்படும் விழாக் காலக் கொண்டாட்டத்தில் எழுந்ததாகும்.

67:5 இவ்வுலக மக்கள் யாவரும் தேவனைப் புகழுவதை இஸ்ரவேல் கேட்க வேண்டும் என்று வாஞ்சிப்பது போலவே நாமும் "கிறிஸ்துவின் நெற்றியில் கிரீடங்கள் அணிவிக்க வேண்டும் என்று விரும்புகிறோம்" என்று திருவாளர் F. B. மேயர் நினைவுபடுத்துகிறார்.

67:6,7 கடைசி இரண்டு வசனங்களும் ஆயிர மாண்டு ஆட்சி ஏற்கனவே வந்துவிட்டது போல அதனைச் சித்திரித்துக் காட்டுகிறது. தானியங் கள் அறுவடை செய்யப்பட்டுவிட்டன, களஞ்சியங் களும் கிடங்குகளும் நிறைந்து வழிகின்றன. இஸ்ரவேலை தேவன் இவ்விதமாக ஆசிர்வதித் திருப்பது, எல்லாப் புறவினத்தாருக்கும் அவரைப் பற்றிய வலிமை மிக்க சான்றாக விளங்கும். எபிரெய அறிஞர் .'.பிரான்ஸ் டெலிட்ஸ் தொகுத்து வழங்குகிறார்: "இஸ்ரவேலுக்கான தேவன் வெளிப்படுத்துகிற எல்லா நன்மையும், மனுக் குலத்தின் நன்மைக்காகவே வெளிப்படுத்தப்படு கிறது, இதுவே தேவனுடைய வழியாகும்."[47]

சங்கீதம் 68:
அணிவகுத்துச் செல்லும் நமது தேவன்

இது இஸ்ரவேலின் தேசிய அணிவகுப்பு, சீனாய் மலையிலிருந்து சீயோன் மலை வரைக்கும் நடை பெறும் அணிவகுப்பில் உடன்படிக்கைப்பெட்டி பயணம் செய்வது, இறுதி வெற்றியை நோக்கி தேவன் மேற்கொள்கிற அணிவகுப்புக்கு அடை யாளமாயிருக்கிறது. யூத மனதிற்கு உடன்படிக் கைப் பெட்டி மிகச்சரியாக தேவனுடைய பிரசன் னத்தைப் பிரதிபலிக்கிறது. உடன்படிக்கைப்பெட்டி பயணம் செய்தபோது தேவனும் பயணம் செய்தார்.

உடன்படிக்கைப்பெட்டியின் வரலாற்றில் நடந்த ஒரு குறிப்பிட்ட நிகழ்வைக் கொண்டாடும் படி இந்தப் பாடல் புனையப்பட்டது என்று பொது வாக நம்பப்படுகிறது - உடன்படிக்கைப்பெட்டி யானது அவமானத்தை உண்டாக்கும்படி பெலிஸ் தரால் கைப்பற்றப்பட்டு, அதன்பிறகு சிறிது காலம் ஓபேத் ஏதோமின் வீட்டில் வைக்கப்பட்டிருந்தது. பின்னர் அது சீயோன் மலைக்குக் கொண்டு வரப் பட்ட நிகழ்ச்சியே இந்தக் கொண்டாட்டத்திற்கான காரணம் (2 சாமு. 6:2-18).

இந்த அணிவகுப்புப் பாடலைக் கீழ்க்கண்ட வாறு ஏழு பகுதிகளாக பகுத்துக் காண்போ மானால் நாம் பாடலின் மெய்ப்பொருளுக்குள் செல்பவர்களாக இருப்போம்:

1. தேவனுக்குப் புகழ்ச்சியாக ஏறெடுக்கப்பட்ட முன்னுரைப் பாடல் (வச. 1-6).
2. உடன்படிக்கைப் பெட்டி சீனாய் மலையிலி ருந்து பாலைவனத்தின் வழியாகப் பயணப்படு தல் (வச. 7,8).
3. கானானுக்குள் நுழைதலும், அதை வெல்லு தலும் (வச. 9-14).
4. தாவீது எருசலேமைக் கைப்பற்றுதல் (வச. 15-18).
5. எபூசியரை வென்றதற்காக தேவனுக்கு ஏறெ டுக்கப்பட்ட புகழ்ச்சிப்பாடல் (வச. 19-23).
6. எருசலேமின் புனிதத் தலத்திற்குள்ளாக உடன் படிக்கையைக் கொண்டு செல்வதற்கான அணிவகுப்பு (வச. 24-27).
7. தேவனுடைய இறுதி வெற்றியை எதிர்நோக்கி ஆர்ப்பரிக்கும் மக்கள் கூட்டம் (வச. 28-35).

மேசியாவைக் குறித்த பின்னணியோடு காண் கிறபோது, இச்சங்கீதம் கிறிஸ்து மனுவுருவெடுத் ததையும், அவர் கல்வாரியில் வெற்றிபெற்றதை யும், அவர் விண்ணிற்கு ஏறிச்சென்றதையும், அவருடைய இரண்டாம் வருகையையும் படவுரு வில் வரைந்து தருகிறது.

முன்னுரைப் பாடல் (68:1-6)

68:1-3 உடன்படிக்கை ஓரிடம்விட்டு மற்றோர் இடம் செல்லுகின்ற பயணங்களே இப்பாடலின் முக்கியமான கருத்தாக விளங்குகிறது என்ப தற்கு முதல் வசனம் ஒரு குறிப்பை நமக்குத் தரு கிறது. முதலாவதாக சீனாய் மலையிலிருந்து உடன்படிக்கைப் பெட்டி புறப்பட்டபோது மோசே பயன்படுத்திய சொற்கள் கிட்டத்தட்ட இங்குள்ள சொற்களைப் போலவே உள்ளன (எண். 10:35). புனிதமான அந்தப் பெட்டி இடம் பெயர்ந்து செல் வது, தேவன் எழுந்து இடம்பெயர்ந்து செயல்படு வதைக் குறித்த நேரங்களை விவரிக்கிறது என லாம். அவருடைய எதிரிகளைப் பொறுத்தவரை அச்செயல் பேரிடரையும் சிதறடிக்கப்படுதலையும் குறிக்கிறது; நீதிமான்களுக்கோ அது உள் ளார்ந்த பேருவகை தருகிறது. அவருடைய எதிரி கள் எல்லாத் திக்குகளிலும் சிதறடிக்கப்படு கிறார்கள். பெருங்குழப்பத்தின் காரணமாக அவர் கள் **ஓடிப் போகிறார்கள்**. உறுதியற்ற புகையைப் போலவும், தடுத்து நிறுத்த முடியாத உருகுகிற

மெழுகைப் போலவும் அவர்கள் அழிவை நோக்கித் தடுமாறுகிறார்கள். ஆனால் நீதிமான்களுக்கோ அது நியாயமென நிறுவுதலுக்கும், பரிசைப் பெறுவதற்கும், பேருவகைக்கும், ஆர்ப்பரிப்புக்குமான நேரமாக இருக்கிறது.

68:4-6 தேவனுக்குத் துதிகளைப் பாடுவதற்கும், பாலைவனத்தில் கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துவதற்குமான நேரமே இது (மோ.ெபட் மொழிபெயர்ப்பு, NKJV அடிக்குறிப்பைக் காண்க; ஒப்பிடுக ஏசாயா 40:3; 62:10). **அவருடைய பெயர் யா**, உடன்படிக்கையை நிறைவேற்றும் யெகோவா; அவர் முடிவில்லாத துதிக்குப் பாத்திரர். அவர் எல்லைக்குட்படாத அளவு உயர்ந்தவரெனினும், நண்பர்களே இல்லாதவர்களுக்கும், கட்டுண்டு விடுதலை பெற்றவர்களுக்கும் அவர் நெருக்கமாயிருக்கிறார். அவர் எல்லா நற்பண்புகளும் உடையவராக இருக்கும் நிலையில், **திக்கற்ற பிள்ளைகளுக்குத் தகப்பனாகவும், விதவைகளுக்குப்** பாதுகாப்பு அளிப்பவராகவும் திகழ்கிறார். தனிமையானவர்களுக்கு நெருக்கமும் ஐக்கியமுமுள்ள மகிழ்ச்சியான குடும்பத்தை ஏற்படுத்துகிறார்; நேர்மையற்றபடி சிறையில் அடைக்கப்பட்டவர்களுக்கு வளத்தைக் கொடுத்து மகிழ்ச்சியால் ஆர்ப்பரிக்கச் செய்கிறார்.

கலகக்காரர்களுடைய கதையோ வேறு; அவர்கள் வறண்ட பாலைவனத்துக்கு அனுப்பப்படுவார்கள்.

இந்த அறிமுக வசனங்கள் "குடியரசின் யுத்த" கீதத்திலும், "நமது தேவன் அணிவகுத்துச் செல்கிறார்" என்னும் கீதத்திலும் இடம் பெற்றுள்ளன. மேலும் அவருடைய அணிவகுப்பு நீதிமான்களிடத்திலும் கலகக்காரரிடத்திலும் எத்தகைய வேறுபட்ட விளைவை ஏற்படுத்தும் என்பதைத் தெரிவிக்கின்றன.

ஆங்கில மொழிப் பிரதியில் (தமிழிலும்) நாம் கண்கூடாகக் காணமுடியவில்லையெனினும், தேவனுடைய ஏழு பெயர்கள் இந்தச் சங்கீதத்தில் பின்னப்பட்டுள்ளன: எலோஹிம் (வச. 1), யா (வச. 4), யெகோவா (வச. 10), எல் சடாய் (வச. 14), யா எலோஹிம் (வச. 18), அடோனாய் (வச. 19), யெகோவா அடோனாய் (வச. 20).

உடன்படிக்கைப் பெட்டி சீனாய் மலையிலிருந்து பாலைவனத்தின் வழியாகப் பயணப்படுதல் (68:7,8)

இஸ்ரவேலர் சீனாயில் பாளையமிருந்து, பின்னர் அங்கிருந்து உடன்படிக்கைப் பெட்டியை முன்னணியில் சுமந்தவர்களாக வாக்குத்தத்த நாட்டை நோக்கிப் பயணப்பட்டார்கள். அது உணர்ச்சிப்பூர்வமான தருணமாக இருந்தது. அந்த நிகழ்வின் திகில் நிறைந்த நிலைக்குள்ளாக இயற்கையே நுழைந்தாற்போல இருந்தது. பூமி அதிர்ந்தது, வானம் மழையைப் பொழிந்தது, சீனாய் மலையே அந்தக் காட்சியைக் கண்டு அதிர்வுற்றது.

கானானுக்குள் நுழைதலும் அதை வெல்லுதலும் (68:9-14)

68:9,10 ஒன்பதாவது வசனத்தின் பின்னணியில், இஸ்ரவேல் ஏற்கனவே கானானுக்குள் நுழைந்துவிட்டது, தேவன் வானிலை மாற்றங்களை ஏற்படுத்தி தேசம் பெருமளவு மழையைப் பெறும்படி செய்திருக்கிறார் - இது வரவேற்கத்தக்க மாற்றம், கால்வாய்கள் மூலம் நீர் பாய்ச்சி பயிர்த் தொழில் நடைபெறும் எகிப்திலிருந்தும், வறண்ட பாலைவனத்திலிருந்தும் இது வேறுபட்டது. வயல் நிலங்கள் கொண்ட பகுதியில் இருந்த வாடிப் போயிருந்த பயிர் வகைகள் புத்துயிர் பெற்று வளமடைகின்றன. வீடுகளில் மக்கள் தங்கி, கர்த்தரால் தாராளமான நன்மைகளைப் பெறுகிறார்கள்.

68:11-13 நாடு கைப்பற்றப்படுவதை நோக்கி விவரம் விரைந்து செல்கிறது. **ஆண்டவர் வசனம்** தருகிறார், அதாவது, பகைவருக்கு எதிராக அணிவகுத்துச் செல்லும்படி கூறுகிறார். அவருடைய சொற்களுக்குள் வெற்றிக்கான உறுதி அடங்கியிருக்கிறது. அடுத்தாக நீங்கள் அறிவது யாதெனில், பெண்களின்[48] பெருங்கூட்டம் அச்செய்தியை வீடுகளில் பரப்புகிறார்கள் **"சேனைகளின் ராஜாக்கள் தத்தளித்து ஓடுகிறார்கள்."** தெபொராள் பாடிய பாடலை இது எழுச்சிமிக்க வகையில் நினைவுபடுத்துகிறது (நியா. 5). பெண்கள் தங்களுடைய மந்தையை விட்டுவிட்டுச் செல்லாமலேயே, போரின் **கொள்ளைப் பொருட்களைப்** பங்கிடுகிறார்கள். அவர்கள் அணிகலன்களையும் ஆபரணங்களையும் அணிந்து பார்க்கிறபோது, வெள்ளியால் அலங்கரிக்கப்பட்ட புறாச்சிறகுகள் போல இருக்கிறார்கள், அல்லது ஒளி வேறொரு திசையிலிருந்து பிரகாசிக்கிறபோது, பொன்மயமான **இறகுகள்** போலப் பளிச்சிடுகிறார்கள்.

68:14 எதிரிகளுக்கோ அது பேரிடர் தரும் படுதோல்வி. தேவன் தாமே அரசர்களை **சல்மோன்** மலையின் உறைந்த பனியைப் போலச் **சிதறடிக்கிறார்.**

தாவீது எருசலேமைக் கைப்பற்றுதல் (68:15-18)

68:15,16 எருசலேம் நகரம் இன்னமும் புறவின மக்களாகிய எபூசியரின் கட்டுப்பாட்டுக்குள்தான் இருந்தது. தாவீது இஸ்ரவேலின் அரசனாக முடி சூட்டப்பட்ட பிறகு, முதலாவதாக அவன் அந்த நகரத்திற்கு எதிராகத் தாக்குதல் நடத்தினான். கண்தெரியாதவர்களும் முடவர்களும் கூட அந்த நகரைப் பாதுகாக்கக் கூடிய அளவிற்கு, அது தாக்கவியலாதபடி கட்டப்பட்டிருக்கிறது என்று அந்நகர் வாழ் மக்கள் மனநிறைவு கொண்டிருந்தார்கள். ஆனால் தாவீதும் அவன் மனிதர்களும் அந்த வலிமையான நகரத்தைக் கைப்பற்றி, அதைத் தாவீதின் நகரம் என்று பெயரிட்டு அழைத்தார்கள் (2 சாமு. 5:1-9).

இந்நிகழ்வையே பாடலாசிரியன் இங்கு குறிப்பிடுகிறான். எருசேலம் நகரத்தின் அரண் கைப்பற்றப்பட்ட நிகழ்வு அது தெரிந்தெடுக்கப்பட்ட நகரம் என்பதை வெளிப்படுத்தியது. **பாசானுக்கு** வடக்கே அமைந்திருக்கும் பனிபடர்ந்த சிகரத்துடன் கூடிய உயரமான எர்மோன் மலை பொறாமையோடு சீயோன் மலையைப் பார்த்துக் கொண்டிருக்கிறது. எர்மோன் கம்பீரமான மலைத்தொடர், அதில் பல **சிகரங்கள்** கம்பீரமான தோற்றத்துடன் உள்ளன. ஆனாலும் **தேவன்** அவற்றையெல்லாம் விடுத்து தமது நிரந்தர இருப்பிடமாக சீயோனைத் தெரிந்துகொண்டார். ஆகவேதான் அது பொறாமையோடு சீயோனைப் பார்க்கிறது.

68:17 எபூசியரிடமிருந்து எருசலேமைக் கைப்பற்றியதைத் தாவீது நினைவுகூருகிறான். ஆனால் வெற்றியின் உண்மையான ஆதாரம் எதுவென்பது பற்றிய தவறான எண்ணம் சிறிதளவும் அவனிடத்தில் இல்லை. அவனுடைய சாதுரியமான திட்டமோ, அவனுடைய படைவீரர்களின் பேராற்றலோ வெற்றியைத் தரவில்லை. தேவனுடைய எண்ணிக்கையில் அடங்கா இரதங்களே அந்நகரைத் தாக்கின. சீனாய் மலையில் தொடங்கிய தேவ அணிவகுப்பு, சீயோனில் தனது மகிமை நிறைந்த இறுதிக் கட்டத்தை வந்தடைந்தது.

68:18 எருசலேமின் உயரமான பகுதிகளுக்குள்ளாகத் தாவீதின் வீரர்கள் தாக்கி அதைப் பிடித்த விதத்தை நினைவுகூர்ந்தவனாக, மனித எண்ணங்களுக்கு அப்பாற்பட்டு தேவனே அவ்வுயர்ந்த மலையில் ஏறியதாகவும், சிறைப்பட்டவர்களைத் தமது பரிவாரமாக வரும்படி அவர் சிறையாக்கியதாகவும், முன்னர் துரோகிகளாக இருந்த அவர்களுக்காக வெற்றியின் கொள்ளைப் பொருட்களை கைப்பற்றியதாகவும் அவன் எண்ணிப் பார்க்கிறான். இவை யாவற்றையும் அவர் செய்த தன் காரணம் அவர்கள் நடுவில் அவர்களுடைய கர்த்தரும் இரட்சகருமாக **வாசம்பண்ணுவதே** ஆகும்.

கிறிஸ்து விண்ணகம் சென்றதற்கு இந்த வசனங்களைப் பவுல் பொருத்திக் காண்பிக்கிறார் (எபே. 4:8-10). கிறிஸ்து இவ்வுலகினின்று விண்ணகம் ஏகியபோது **சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கிக்** கொண்டுபோனார், அதாவது, அவர் தமது பகைவர்மேல் மகிமைநிறைந்த வகையில் வெற்றிபெற்று, மனிதர்களுக்கு வரங்களை நல்கினார். அவர் சிலுவையில் நிறைவேற்றி முடித்த செயலுக்கான பரிசுப்பொருளே மனிதர்களுக்குள்ளாக அவர் பெற்ற வரங்கள் (சங். 68:18). அவர் திரும்பிப் பார்த்து அதே வரங்களை, தமது திருச்சபையை நிறுவி, விரிவாக்கம் செய்வதற்கென்று மனிதர்களுக்கு அருளினார் (எபே. 4:8).

எபூசியரை வென்றதற்காக தேவனுக்கு ஏறெடுக்கப்பட்ட புகழ்ச்சிப் பாடல் (68:19-23)

68:19,20 சீயோன் கைப்பற்றப்பட்டதன் நினைவுகள் புகழ்ச்சியை தேவனுக்கு ஏறெடுக்கும்படி தவிர்க்கவியலாத எழுப்புதலை உண்டாக்கின. மீட்டு விடுவிப்பவரும் அழிப்பவருமாக தேவன் இந்தச் சங்கீதத்தில் அறிமுகப்படுத்தப்படுகிறார். மீட்டு விடுவிப்பவர் என்னும் நிலையில் அவர் "நம்முடைய பாரங்களைச் சுமந்து, வெற்றியை நமக்கு ஈட்டித் தருகிறார்" (நாக்ஸ் மொழி பெயர்ப்பு). அவரே நமது **இரட்சிப்பின் தேவன்**, அவரிடத்தில் நம்மை **மரணத்தினின்று** விடுவிக்கும் வல்லமை உள்ளது.

68:21-23 அழிப்பவர் என்னும் நிலையில், அவர் தமது எதிரிகளை நொறுக்குவார், கலகக்காரருடைய நீண்ட தலைமுடி அவர்கள் சட்டத்திற்கு அடிபணியாதவர்கள் என்பதற்கும், அவர்களுடைய பொல்லாத வாழ்க்கைக்கும் அடையாளமாயிருக்கிறது. அவர்களைத் தொடர்ந்து சென்று பாசானின் தரிசு நிலங்களில் கீழே விழத் தள்ளுவதாக அவர் வாக்குரைத்திருக்கிறார், மேலும் கடலின் ஆழங்களிலும் அவர்கள் வீழ்த்தப்படுவார்கள். இஸ்ரவேல் தன் **கால்களை** அவர்களுடைய **இரத்தத்தில்** கழுவும், இஸ்ரவேலின் **நாய்கள்** அவர்களது உடலைத் தின்னும்.

இஸ்ரவேல் மீண்டும் ஒன்று சேர்க்கப்படுவதை 22 -ஆவது வசனம் குறிப்பிடவில்லை. மாறாக இஸ்ரவேலின் எதிரிகளைத் தொடர்ந்து சென்று அழிப்பதையே அது குறிப்பிடுகிறது.

எருசலேமின் புனிதத் தலத்திற்குள்ளாக உடன் படிக்கையைக் கொண்டு செல்வதற்கான அணி வகுப்பு (68:24-27)

தாவீது எருசலேமைக் கைப்பற்றிய சிறிது காலத்திற்குள், உடன்படிக்கைப் பெட்டியை வைப்பதற்கென்று அங்கு நிறுவப்பட்ட ஆசரிப்புக் கூடாரத்துக்கு அதை எடுத்து வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்தான் (2 சாமு. 6:12-19). அதற்கான அணிவகுப்பு இங்கே விவரிக்கப்பட்டுள்ளது. அது **பரிசுத்த ஸ்தலத்தை** நோக்கிச் செல்கிற நிகழ்வைப் பாடலாசியன் "இதோ, இங்கே அவர் வருகிறார்" என்னும் பொருளில் வருணிக்கிறான்.[49] பாடற்குழு முன்னே செல்லுகிறது, இசைக் கருவிகளை மீட்ட வண்ணம் கலைஞர்கள் பின்செல்கிறார்கள். இரு கூட்டத்தாருக்கும் இடையே இளம் பெண்கள் தம்புரு வாசிக்கிறார்கள். பாடலின் சொற்களைக் கேளுங்கள்:

இஸ்ரவேலின் ஊற்றிலிருந்து
தோன்றினவர்களே,

சபைகளின் நடுவே ஆண்டவராகிய
தேவனை ஸ்தோத்திரியுங்கள்.

எல்லாக் கோத்திரத்தாரும் அங்கு வந்திருக்கிறார்கள், தென்கோடியிலிருந்து **சின்ன பென்யமீனும் யூதாவும்** - வடக்கிலிருந்து **செபுலோனும் நப்தலியும்**.

தேவனுடைய இறுதி வெற்றியே எதிர்நோக்கி ஆர்ப்பரிக்கும் மக்கள் கூட்டம் (68:28-35)

ஆசரிப்புக் கூடாரத்திற்குள் உடன்படிக்கைப் பெட்டி மறைந்த பிறகு வெளியிலிருந்த மக்கள் கூட்டம் இறுதி மன்றாட்டில் சேருகிறார்கள் (வச. 28-31). மேலும் பாடலின் மூலமாக உலகம் முழுவதும் சேர்ந்து கர்த்தரைத் துதிக்கும்படி வற்புறுத்துகிறார்கள் (வச. 32-35).

68:28,29 தம்முடைய மக்களுக்காக தேவன் தமது வலிமையைக் காண்பித்து, அவர்களுக்காகத் தொடங்கின செயலை முடிக்கும்படி முதலாவது மன்றாட்டு ஏறெடுக்கப்படுகிறது. எருசலேமின் மகிமையாக தேவாலயம் விளங்கும்போது, அரசர்கள் அங்கு பொன்னையும் தூபவர்க்கத்தையும் காணிக்கையாகக் கொண்டுவரும்போது, அதாவது மாவரசரின் ஆயிரமாண்டு ஆட்சிக் காலத்தில் இந்த மன்றாட்டு நிறைவேறும்.

68:30 முப்பதாவது வசனத்தின் எபிரெய மொழி தெளிவற்றிருக்கிறது, ஆனால் மொத்தத்தில் அங்கு வெளிப்படுத்தப்பட்டுள்ள கருத்து என்னவெனில், மிருகக் கூட்டத்தையும், ரிஷப கூட்டத்தையும் அதட்டும்படி தேவனை மக்கள் அழைக்கிறார்கள். நாணலில் வாழும் மிருகங்கள் பெரும்பாலும் முதலைகளும் நீர்யானைகளும் என்றே தோன்றுகிறது, இது பெரும்பாலும் எகிப்து நாட்டின் தலைவர்களையே குறிக்கிறது. காளைகள் மற்ற ஆட்சியாளர்களைக் குறிக்கிறது என லாம். அவர்கள் "புறவின நாடுகளின் அமைதியான மக்கள் கூட்டத்தின்மேல் அதிகாரம் செலுத்திய வர்கள்" (நாக்ஸ் மொழிபெயர்ப்பு).

"ஒவ்வொருவனும் வெள்ளிப்பணங்களைக் கொண்டுவந்து பணிந்து கொள்ளுவான்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொற்றொடர், "அந்தத் தேசத்தார் தீர்வை செலுத்தும்படி வெள்ளியைக் கொண்டுவந்து உம்மைப் பணிந்துகொள்ளும்வரை" என்று பொருள்படும் அல்லது "வெள்ளியைத் தீர்வையாகப் பெற்று அதன் மூலம் வள மடைந்து வந்த தேசங்களைத் தோற்கடித்து" என்று பொருள்படும். பொருள் எதுவானாலும் அதிலுள்ள கருத்து நன்றாகவே இருக்கிறது. அதே வேகத்தில் மேல்நோக்கி ஜெபம் ஏறெடுக்கப்படுகிறது **"யுத்தங்களில் பிரியப்படுகிற மக்களைச் சிதறடிப்பீர்."** இந்த வேண்டுதல் கிறிஸ்துவின் இரண்டாம் வெளிப்பாட்டின்போது முற்றிலுமாக நிறைவேறும். அப்பொழுது பிறரை ஒடுக்கி வாழ்பவர்களும் யுத்தப்பிரியரும் அழிக்கப்படுவார்கள்.

68:31 அந்நாளில், எகிப்திலிருந்து பிரபுக்கள் காணிக்கைகளைக் கொண்டுவருவார்கள். உலகம் முழுவதையும் ஆளுகிற அரசரை எத்தியோப்பியா தொழுதுகொள்ளும்படி கைகளை ஏறெடுத்து மன்றாடி புகழ்ந்து போற்றும்.

68:32-35 எல்லாப் புகழ்ச்சிக்கும் துதிக்கும் இஸ்ரவேலின் **தேவன்** ஒருவரே தகுதிபெற்றவர் என்று பூமியிலுள்ள **எல்லா நாடுகளும்** அறிக்கை செய்யும்படி இந்தக் கடைசி வசனங்கள் அழைப்பு விடுக்கின்றன. தேவனுடைய மேன்மையையும் வீறார்ந்த தன்மையையும் பெருமளவில் வெளிப்படுத்தும் சொற்கள் இவை. அவர் ஒருவரே எல்லாவற்றையும் விஞ்சியவர், அவரே ஆதி முதலான **வானாதி வானங்களில் எழுந்தருளியிருப்பவர்.** அவரே வல்லமையுள்ள தொனியோடு பேசுகிற வெளிப்பாட்டின் தேவனாவார். அவரே சர்வ வல்லமையுள்ளவர். இஸ்ரவேலுக்காக வல்லமை பெற்றவர், ஆனால் **மேகங்களுக்கு** அப்பாலும் வலிமைபெற்றவர்.

அவர் தமது **பரிசுத்த ஸ்தலங்களில் பயங்கரமானவராக** இருக்கின்ற போதிலும், தம்மு

டைய மக்களுக்கு வலிமை தரும்படி கீழிறங்கி வருகிறார்.

இனியும் சொல்ல வேண்டியது ஒன்றே ஒன்று தான்:

தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக!

சங்கீதம் 69: தேவனே, என்னை இரட்சியும்!

நமது நற்பேறுமிக்க மீட்பரின் பாடுகளும் மரணமும், அவருக்கு, தேவனுடைய கடுஞ்சினம் என்னும் பெருங்கடலுக்குள் மூழ்கிய ஒரு செயலாகும். தம்மை நெருங்கி வந்த பாடுகளை அவர் தாமே ஸ்நானம் என்று குறிப்பிட்டுள்ளார்:

ஆகிலும் நான் முழுக வேண்டிய ஒரு ஸ்நான முண்டு, அது முடியுமளவும் எவ்வளவோ நெருக்கப்படுகிறேன் (லூக்கா 12:50).

42 -ஆவது சங்கீதம் 7 -ஆவது வசனத்தில் அவரது கூக்குரலை நாம் கேட்கிறோம்:

உமது மதகுகளின் இரைச்சலால் ஆழத்தை ஆழம் கூப்பிடுகிறது;

உமது அலைகளும் திரைகளும் எல்லாம் என்மேல் புரண்டுபோகிறது.

மரணம் என்னும் தமது பெருந்துன்பத்தில், நம் முடைய பாவங்களுக்கு எதிரான தேவனுடைய நியாயத்தீர்ப்பின் ஆழத்தில் அவர் குதித்தார்.

69:1-3 இந்த 69 -ஆவது சங்கீதத்தில், அவர் மரணத்தில் அமிழ்ந்து கொண்டிருக்கிற தருணத்தில் அவருடைய தூய ஆத்துமா அனுபவிக்கிற ஆழ்ந்த துன்பப் பெருமூச்சுகளைக் கேட்கக் கூடிய வாய்ப்பை நாம் பெற்றிருக்கிறோம். **வெள்ளங்கள்** அவருடைய கழுத்தளவு **பெருகி**, அவரை முழுவதுமாக மூழ்கடிக்கக்கூடிய நிலை விரைவில் ஏற்படும் என்று தோன்றுகிறது. அவருக்கு ஆதரவாக ஒன்றும் இல்லை - அவருடைய கால்களுக்குக் கீழே **ஆழமான உளையைத்** தவிர வேறு ஒன்றுமில்லை. இப்பொழுது வெள்ளம் அவருடைய தலைக்குமேல் அடித்துச் செல்கிறது. நீரின் ஆழம் மிக அதிகம் - மீட்கப்பட்ட எவரும் அறியாத அளவிற்கு அது ஆழமானது. உண்மையான அர்த்தத்தில் தேவன் எல்லா நீரையும் ஓரிடத்திற்குக் கொண்டுவந்திருக்கிறார் - கல்வாரி என்னும் இடம் - நம்முடைய பாவங்களுக்கான தண்டனையைச் செலுத்தித் தீர்க்கும்படி பெருங்கடல் என்னும் நியாயத்தீர்ப்பை அன்பின் குமாரன் பொறுத்துக் கொண்டிருக்கிறார்.

அங்குமிங்குமாக அடித்துச் செல்லும் வெள்ளத்திற்கும் மேலாக, அவருடைய அவசரமான வேண்டுகோள் தொடர்ந்து எதிரொலிக்கிறது, **"தேவனே, என்னை இரட்சியும்!"** அவர் நித்தியத்தை வேண்டி விண்ணப்பிக்கிறதாகத் தோன்றுகிறது. அவருடைய தொண்டை கரகரப்பாயிருப்பதோடு உலர்ந்தும் போயிருக்கிறது - அவருடைய கூக்குரலால் அது இளைத்துப் போயிருக்கிறது. அவருடைய கண்கள் வீங்கி மூடியிருக்கின்றன. அடிவானத்தின் எல்லையிலிருந்து ஏதாவது உதவி தேவனிடத்திலிருந்து வருமோ என்று இடைவிடாமல் நோக்கிப் பார்த்ததால் அவ்வாறாயிற்று.

69:4 கடுங்சினம் கொண்ட கூட்டம் சிலுவைக்கு முன்பாகச் சுற்றிவந்து கொண்டிருக்கிறது; நஞ்சு, வெறுப்பு, கசப்பு, கொடுமை ஆகியவை ஒன்றிணைந்து சீறிப் பொங்குகின்றன. என்ன காட்சி! இப்பிரபஞ்சத்தின் படைப்பாளரும் பராமரிப்பாளருமானவர் குற்றவாளிச் சிலுவையில் தொங்குகிறார். அவரைக் கொலைசெய்யும் குற்றவாளிகள் அவருடைய முன்னிலையில் நிற்கிறார்கள். அவர்கள் யார்? ஆண், பெண் இருபாலருமாகிய அவர்கள் அவரிடத்திலிருந்தான் உயிர் பெற்றார்கள், ஆனாலும் அவர்கள் எவ்வித **நிமித்தமுமில்லாமல்** அவரைப் **பகைக்கிறார்கள்**. அவர்கள் அவரைக் கொல்ல வகைதேடுகிறார்கள். பொய்களினால் அவர்கள் அவரைத் தாக்குகிறார்கள்.

> என்றன் கர்த்தர் செய்தது என்ன?
> சீறினர் பகைத்தனர் காரணம் என்ன?
> குருடரைப் பார்வை யடையச் செய்தார்
> முடவரை யெழுந்து நடக்கச் செய்தார்.
> இனிமை நிறைந்த காயங்கள் அன்றோ!
> ஆயினும் இவற்றைக் கண்ட மாக்கள்
> களிகூர்ந் திலரே வெறுப்பை கொண்டனர்
> அண்ணலுக் கெதிராய்ப்
> போர்க்கொடி தொடுத்தனர்.
> – சாமுவேல் க்ராஸ்மேன்

இப்பொழுது மனவேதனையளிக்கக் கூடிய அறிவிப்பு இரட்சகருடைய உதடுகளினின்று வெளிப்படுகிறது: "நான் திருடாததைக் **கொடுக்க வேண்டியதாயிற்று.**" மனிதனுடைய பாவத்தால் தேவன் பெறவேண்டிய சேவை, தொழுகை, கீழ்ப்படிதல், மகிமை யாவும் கொள்ளை போயின. மனிதனும் கூட தனது வாழ்வை, அமைதியை, மகிழ்ச்சியை, தேவனோடுகூடிய ஐக்கியத்தை இழந்து போயிருக்கிறான். உண்மையான பொருளில் கிறிஸ்து தாம் திருடாததைக் கொடுக்கும்படி வந்தார்.

இறைமையின் உடையினைக்
களைந்தவர் களிமண்ணைத்
திரையாக்கி மறைத்தனர்
தெய்வீகம் – மறைத்திடாமல்
அவ்வுருவில் பேரன்பைக் காட்டியே தந்திட்டார்
இவ்வுலகில் மனிதர்க்கு மீட்பு.

இதனடிப்படையில் அவர் குற்றநிவாரண பலியை நமக்கு நினைவூட்டுகிறார் (லேவி. 5). பலி செலுத்துகிறவர் ஏற்படுத்திய இழப்பைத் திரும்பச் செலுத்திச் சரிசெய்ய வேண்டும் என்பது இந்தப் பலியின் முக்கியமான கருத்தாகும், மேலும் ஐந்தில் ஒரு பங்கு சேர்த்துச் செலுத்தப்படவேண்டும். நம்முடைய குற்ற நிவாரண பலி என்னும் நிலையில், மனிதனுடைய பாவத்தால் எவையெல்லாம் திருடப்பட்டனவோ, அவற்றைத் தந்ததுமட்டுமின்றி, அவற்றிற்கும் மேலாக அவர் சேர்த்துக் கொடுத்திருக்கிறார், பாவம் உலகத்தில் நுழைந்திராவிடில் தேவன் எவ்வளவு மகிமையைப் பெற்றிருப்பாரோ அதைக் காட்டிலும் அதிகமான அளவு மகிமையை இப்பொழுது அவர் பெற்றிருக்கிறார். பாவத்தின் மூலமாக அவர் படைப்பை இழந்தார்; கிருபையின் மூலமாக அவர் குமாரர்களைப் பெற்றார். விழுந்து போகாத ஆதாமுக்குள்ளாக நாம் எப்படி இருந்திருப்போமோ அதனினும் சிறந்த வராக நாம் கிறிஸ்துவுக்குள்ளாக இருக்கிறோம்.

ஆதாமின் பிள்ளைகளின்
கிறிஸ்துவில் அடைந்தநல்
அருட்பேறு வெள்ளம்போல்
கணக்கினில் அடங்கிடா,
முதற்தந்தை இழந்ததோ
கொஞ்சமே அறியீரோ,
இவர்தந்த நற்பயன்கள்
விஞ்சியே பொழிந்தன!

69:5 இயேசு தம்மேல் மனமுவந்து ஏற்றுக் கொண்ட நமது பாவங்களை 5 -ஆவது வசனம் குறிப்பிடுகிறது என்றே நாம் புரிந்துகொள்ள வேண்டும். அவர் தவறோ குற்றமோ எதுவும் செய்யவில்லை. ஆனால், "நம்முடைய பாவங்களையும் துக்கங்களையும் அவர் ஏற்றுக்கொண்டு, தம்முடையவை போன்று அவற்றை மாற்றினார்." நமது பாவங்களை அவர் தமது பாவங்கள் போலப் பேசி நம்மோடு இவ்வளவு நெருக்கமாகத் தம்மை இணைத்துக்கொண்டிருப்பதென்பது அற்புதமான கிருபையாகும்.

69:6 அதன் பிறகு அவருடைய பரிசுத்த மனதில் ஒருவகை அச்சம் நிழலிடுகிறது. அவருடைய மன்றாட்டுக்கு விடை தரப்படாமல் போகுமோ என்று சில வாஞ்சைமிக்க விசுவாசிகள் இடறல் அடைந்து விடுவார்களோ என்று அவர் அஞ்சுகிறார். அவ்வாறு நடக்கக்கூடாது என்று அவர் விண்ணப்பிக்கிறார் - அவருக்கு என்ன நிகழ்கிறதோ அதைக் கண்டு தேவனிடத்தில் நம்பிக்கை வைத்திருப்பவர்கள் **வெட்கப்பட்டுப் போகக் கூடாது** என்று விண்ணப்பிக்கிறார். மேலும் இஸ்ரவேலின் தேவனைத் தேடுகிறவர்கள், அவருடைய தாழ்நிலையாலும் கைவிடப்பட்ட நிலையாலும் கனவீனமடையக் கூடாது என்றும் அவர் விண்ணப்பிக்கிறார்.

69:7,8 அவர் தம்முடைய திருத்தந்தையின் சித்தத்திற்குக் கீழ்ப்படிந்ததன் **நிமித்தமே நிந்தையைச்** சுமக்க வேண்டியதாயிற்று. தேவனுக்குப் பிரியமாயிருப்பதை அவர் விரும்பியதே தமது **முகத்தைக்** குறிப்பிட முடியாத **இலச்சையாலும்** எச்சிலாலும் மனிதர்கள் மூடுவதற்கு இடங் கொடுக்கச் செய்தது. அவருடைய சொந்தத் **தாயின் பிள்ளைகளிடத்திலிருந்து** அவர் விலகியிருந்ததால் ஏற்பட்ட துக்கம் கீழ்ப்படிதலுக்கென்று அவர் செலுத்திய விலையில் ஒரு பங்காகும்: அவருடைய ஒன்றுவிட்ட சகோதரர்கள் அவர் மனநிலை பாதிப்படைந்தவர் என்று எண்ணினார்கள்.

69:9 கர்த்தராகிய இயேசு தமது திருத்தந்தையின் **வீட்டைக் குறித்த பக்திவைராக்கியத்தால்** முற்றிலும் செலவழிந்து போனார். தேவனைக் குறித்து மனிதர்கள் தரக்குறைவாகப் பேசிய போதெல்லாம், அவர் தமக்கு ஏற்பட்ட அவமானமாகவே எடுத்துக்கொண்டார். காசுக்காரரை எருசலேம் ஆலயப்பிராகாரத்திலிருந்து அவர் துரத்திய நாளில், அவருடைய சீடர்கள் இங்கு 69 -ஆவது சங்கீதத்தில் எழுதப்பட்டிருந்ததை நினைவுகூர்ந்தார்கள். **"உம்முடைய வீட்டைக் குறித்து உண்டான பக்திவைராக்கியம் என்னைப் பட்சித்தது"** (யோவான் 2:17).

69:10-12 முழுநிறைவான மனிதராக அவர் இவ்வுலகில் செய்த ஏதொன்றும் அவரைக் குறை கூறியவர்களுக்கு மனமகிழ்வை உண்டு பண்ணவில்லை. அவருடைய ஆத்துமா வாடும்படி உபவாசித்துத் தாழ்த்தினபோது அவர்கள் குறை கூறினார்கள் - தாம் பக்திமான் என்று காண்பிக்க முயன்றார் என்று அவர்கள் எண்ணினார்கள் போலும். அவர் ஆழ்ந்த துக்கத்தில் மூழ்கிய போது, அவர்கள் அவர்மேல் இரக்கம்பாராட்டவில்லை; மாறாக அவர் **அவர்களுக்குப் பழ**

மொழியானார். சமுதாயத்தின் எல்லாத் தரப்பினரும் அவருக்கு எதிராகப் பேசினார்கள் - **வாசலில்** அமர்ந்திருந்த அதிகாரிகள் முதல் உள்ளூர்ச் சத்திரத்திலே தங்கிய மதுபானப் பிரியர்கள் வரை ஏளனப் பாடல்களால் பேரொலி எழுப்பினார்கள். இது உண்மையாகவே விநோதமான நிகழ்ச்சி - வாழ்வுக்கும் புகழ்ச்சிக்கும் கர்த்தரானவர் இவ்வுலகிற்கு வருகைபுரிந்தார், அவரோ **மதுபானம் பண்ணுகிறவர்களின் பாடலானார்!**

69:13-18 ஆகவே அவர் மீண்டும் தேவனிடமாய்த் திரும்பி வருகிறார், அவருடைய ஒரே ஆதாரம் அவர்தாம். அவருடைய **விண்ணப்பம்** எந்த அளவிற்கு ஊக்கமாகவும் வற்புறுத்திக் கெஞ்சுவதாகவும் இருக்கிறது! அடுத்தடுத்து அவர் ஏறெடுத்த வேண்டுதல்களால் வானத்தின் வாசல்களை உடைத்துச் செல்கிறார். ஆனாலும் **ஏற்ற காலத்தில்** அதற்குரிய விடையைத் தரும் உரிமை தேவனுக்கு இருக்கிறது என்று அவர் உறுதிப்படுத்துகிறார். அவர் உளையான சேற்றில் அமிழ்கிற வேளையில், தேவன் தமது சத்தியத்தின் உதவியால் தம்மை மீட்கவேண்டும் என்று விண்ணப்பிக்கிறார்; அவருடைய எதிரிகளிடத்திலிருந்து விடுவிக்க வேண்டுமென்றும், ஆழமான நீரிலிருந்து வெளிக்கொணர வேண்டுமென்றும் விண்ணப்பிக்கிறார். புரண்டுவருகிற வெள்ளத்திலிருந்தும் ஆழமான குழியிலிருந்தும் தாம் விடுவிக்கப்பட வேண்டுமென்பதே அவருடைய வேண்டுதல். அவர் தமது ஆழ்ந்த வேதனையில், தேவனுடைய தயையையும் அவருடைய பெரிதான இரக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டு தமது வேண்டுதலை ஏறெடுக்கிறார். அவருடைய விண்ணப்பங்கள் சிறியவையாகவும் குறிப்பிட்டு ஏறெடுக்கப்பட்டவையாகவும் இருந்தன. **எனக்குச் செவிகொடுத்தருளும்**... என் பக்கமாகத் திரும்பும்... **உமது முகத்தை** எனக்கு **மறைக்காதேயும், தீவிரமாக** என்னிடம் வாரும்... **என்னை விடுதலைபண்ணும், என்னை மீட்டுவிடும். "என் சத்துருக்களினிமித்தம் என்னை மீட்டுவிடும்"** என்னும் சொற்றொடர் "துயர் தணியாத என்னுடைய மனவேதனையைக் குறித்து அவர்கள் மகிழ்ச்சி கொள்கிறார்கள்" என்னும் கருத்தைக் கொண்டிருக்கிறது என்பதில் ஐயமில்லை.

69:19,20 அவருடைய எதிரிகளைப் பற்றிய குறிப்பு, அவர் மனிதர்களாலே அடைந்த பாடுகளை நினைவுபடுத்துகிறது. அவருடைய வாழ்க்கையென்னும் பாதையில் நிந்தை, அவமானம், வெட்கம் சிதறிக்கிடந்தன. அவருடைய குழந்தைப் பருவம் முதல், அவருடைய எதிரிகள் அவரைப் பின்தொடர்ந்தார்கள். அவர்கள் அதிகமான எண்ணிக்கையில் இருந்தார்கள் என்பதை தேவன் அறிந்திருந்தார். **நிந்தையால்** அவருடைய இருதயம் பிளந்துபோயிருந்தது - அந்த இருதயம் மனுக்குலத்திற்கு நன்மை செய்வதையே விரும்பியிருந்தது. அதனுடைய வருத்தமும் பாரமும் அவரை மனங்கசந்து போகும்படி செய்துவிட்டன. அவருடைய துக்கத்திலும் பாடுகளிலும் இரக்கம் பாராட்டுவார் ஒருவரும் இல்லை. தேற்றுவார் உண்டோ என்று அவர் காத்திருந்தது வீண். அவருடைய சீடர்களும்கூட அவரைக் கைவிட்டு ஓடிப்போனார்கள். அவர் தனித்திருந்தார்.

69:21 இயேசுவில் மட்டுமே நிறைவேறிய திடுக்குறச் செய்யும் தீர்க்கதரிசனத்தைத் தாவீது சொல்வதாக நாம் படிக்கிறோம்:

> **என் ஆகாரத்தில் கசப்புக் கலந்து கொடுத்தார்கள்,**
>
> **என் தாகத்துக்குக் காடியைக் குடிக்கக் கொடுத்தார்கள்.**

இதன் நிறைவேறுதல் மத்தேயு 27:34, 48 - ஆகிய வசனங்களில் காணப்படுகிறது:

கசப்புக் கலந்த காடியை (Gall) அவருக்குக் குடிக்கக் கொடுத்தார்கள்; அவர் அதை ருசி பார்த்து, குடிக்க மனதில்லாதிருந்தார். உடனே அவர்களில் ஒருவன் ஓடி, கடற்காளானை எடுத்து, காடியில் (Vinegar) தோய்த்து, அதை ஒரு கோலில் மாட்டி, அவருக்குக் குடிக்கக் கொடுத்தான்.

காடி (Gall) கசப்பு நிறைந்தது, ஒருவேளை நச்சுக் கலந்தது என்று தோன்றுகிறது. அதில் சிறிதளவு உட்கொண்டால் அது நோவு தணிக்கும் மருந்தாகச் செயல்படும். ஆனால் நம்முடைய கர்த்தர் அதை உட்கொள்ளவில்லை, ஏனெனில் முழு உணர்வுடன் அவர் நம்முடைய பதிலாளாகப் பாடுபடவேண்டும். மற்ற காடி (Vinegar) புளிக்க வைக்கப்பட்ட பானம், அது அவருடைய தாகத்தைத் தணிப்பதற்குப் பதிலாக அதை அதிகப்படுத்தியிருக்கும்.

69:22 இந்த வசனத்தில் சங்கீதத்தின் தொனி முற்றிலும் வேறுபடுகிறது. அடுத்த ஏழு வசனங்களில், மரணமடைகின்ற இரட்சகர் தம்மை சாவுக்கு ஒப்புவித்த தேசத்தைத் தண்டிக்க வேண்டுமென்று தேவனிடத்தில் விண்ணப்பிக்கிறதைக் கேட்கிறோம். கர்த்தராகிய இயேசு, "பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறதை இன்னதென்று அறியாதிருக்கிறார்கள்"

என்று வேண்டுதல் செய்ததை நாம் நினைவு கூருகிறபோது இங்கு சொல்லப்பட்டிருக்கிற செய்தி நமக்கு வியப்பை ஏற்படுத்துகிறது (லூக். 23:34). ஆனால் இவ்விரண்டு விண்ணப்பங்களுக்கும் இடையே ஏதொரு முரண்பாடும் இல்லை. அவர்கள் மனந்திரும்பியிருந்தால் அவர்களுக்கு மன்னிப்புக் கிடைத்திருக்கும். ஆனால் இருதயத்தில் எவ்விதமாற்றமும் ஏற்படாத நிலையில், அங்கு நியாயத்தீர்ப்பு வழங்கப்படுவதைத் தவிர வேறு எதுவுமில்லை.

இஸ்ரவேல் தேசத்துக்கு மட்டுமே இந்த வசனங்கள் பொருந்தும் என்பது குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்தது. ரோமர் 11:9,10 ஆகிய வசனங்களில் பவுல் 22,23 ஆகிய வசனங்களை இஸ்ரவேல் தேசத்துக்குப் பொருத்திக்காட்டுகிறார். மேலும் "அவர்களுடைய கூடாரங்கள்" என்னும் சொற்றொடர் (வச. 25), யூதர்களுடைய கூடாரவாசத்தைக் குறிப்பாய்ச் சுட்டிக்காட்டுகிறது.

தங்களுடைய மேசியாவை வேண்டாமென்று மறுத்துரைத்து, அவருடைய சாவுக்குக் காரணமாயிருந்த இனத்தின்மேல் வரவிருந்த கோபாக்கினையை இந்த வசனங்கள் முன்னுரைக்கின்றன.

அவர்களுடைய பந்தி அவர்களுக்குக் கண்ணியாக மாறும். இஸ்ரவேலர் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட பூமிக்குரிய மக்கள் என்னும் நிலையில் அவர்களுக்கு வழங்கப்பட்ட ஒட்டுமொத்த சிறப்புரிமைகளை இது குறிக்கிறது. அந்தச் சிறப்புரிமைகள் ஆசிர்வாதங்களாக விளங்குவதற்குப் பதிலாக, அவர்கள் அடையவிருக்கிற தண்டனையின் அளவைத் தீர்மானிப்பதற்கான காரணங்களாயின.

அவர்களுடைய **செல்வம்** (சமாதானம், எபி. சாலோம்) என்னும் அனுபவம் அவர்களைச் சிக்க வைக்கும் **வலையாயிற்று.** எல்லாம் நன்றாயிருக்கிறது என்னும் எண்ணம் மக்களை ஆட்கொண்டிருக்கும்போது உபத்திரவம் ஊற்றுப் போல பொங்கியெழும்.

69:23 அவர்கள் பார்க்கக் கூடாதபடி அவர்களுடைய கண்கள் இருளடையும். இஸ்ரவேல் தேசம் என்னும் நிலையில் நீதியான இந்தப் பார்வையற்ற தன்மை உண்மையாகவே அவர்களுக்கு ஏற்பட்டதை இது குறிக்கிறது (2 கொரி. 3:14). அவர்கள் ஒளியை மறுத்துரைத்த காரணத்தால், அவர்களுக்கு ஒளி மறுத்துரைக்கப்பட்டது.

அவர்களுடைய இடுப்புகள் தள்ளாடும். புறவின நாடுகளுக்குள்ளாகச் சிதறடிக்கப்பட்ட நிலையில் அவர்களுடைய கால்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்காது. ஆனால் கர்த்தரோ அவர்களுக்குத் "தத்தளிக்கிற இருதயத்தையும், சோர்ந்து போகிற கண்களையும், மனச்சஞ்சலத்தையும்" தருவார் (உபா. 28:65).

69:24 அவர்கள்மேல் தேவனுடைய **உக்கிரம் ஊற்றப்படும்,** அவருடைய **கோபாக்கினை** அவர்களைப் பற்றிப்பிடிக்கும். யூதர்களுக்கு எதிரான படுகொலை நிகழ்ச்சிகளிலும், சித்ரவதைக் கூடங்களிலும், நச்சுவாயு அறைகளிலும், அக்கினிச் சூளைகளிலும் நடந்த நிகழ்ச்சிகளிலும் இவை நடந்தேறின என்பதை நாம் ஆழ்ந்த துக்கத்தோடு நினைவுகூருகிறோம். பொல்லாத மனிதர்களாலே இந்தக் கொடுமைகள் செய்யப்பட்ட போதிலும், "இவனுடைய இரத்தப்பழி எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருப்பதாக" என்று சொன்ன மனிதர்களுடைய வழிவந்தவர்கள்மேல் அந்தக் கொடுமைகள் வந்தபோது தேவன் அவற்றைத் தடைசெய்யவில்லை (மத். 27:25).

69:25 அவர்களுடைய குடியிருப்புகள் **பாழாகும், அவர்களுடைய கூடாரங்களில்** எவனொருவனும் **குடியிருக்கமாட்டான்.** மத்தேயு 23:38 -இல் மேசியா கூறிய சொற்கள் இங்கு நமக்கு நினைவுபடுத்தப்படுகின்றன, "இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்." இந்தச் சொற்கள் கி. பி. 70 -இல் தீத்துவும் ரோமப் படையும் எருசலேமைத் தரைமட்டமாக்கி ஆலயத்தை இடித்துப் போட்டபோது மிகச்சரியாக நிறைவேறின.

69:26 இந்தத் தண்டனைகள் மிகக் கடுமையானவை என்று தோன்றுகிறது, ஆனால் இதனைத் தூண்டிய குற்றச் செயலை எண்ணிப் பாருங்கள்.

தேவரீர் அடித்தவனை அவர்கள்
துன்பப்படுத்தி,
நீர் காயப்படுத்தினவர்களை நோகப்
பேசுகிறார்களே.

திராட்சைத் தோட்ட உவமையில், வீட்டு உரிமையாளரின் குமாரனைக் குறித்துக் குத்தகைக்காரர்கள், "இவன் சுதந்தரவாளி; இவனைக் கொன்று இவன் சுதந்தரத்தைக் கட்டிக்கொள்வோம்" என்று சொன்னதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது (மத். 21:38). அவரே குமாரன் என்று அவர்கள் அறிந்திருந்தார்கள். அதுமட்டுமின்றி அவரைக் கொலையும் செய்தார்கள். 26 -ஆவது வசனத்தின் பிந்தைய பகுதி மேசியாவைப் பின்பற்றி தியாக மரணம் அடையவிருந்தவர்களைக் குறிக்கிறது.

69:27,28 இதன் பின்னணியில் காணுமிடத்து, இரட்சகரின் சொற்கள் கடுமையாக இருப்பது குறித்து நாம் மனவருத்தம் அடைய வேண்டியதில்லை:

அக்கிரமத்தின் மேல் அக்கிரமத்தை அவர்கள்மேல் சுமத்தும்,

அவர்கள் உமது நீதிக்கு வந்தெட்டாதிருப்பார்களாக.

ஜீவ புத்தகத்திலிருந்து அவர்கள் பேர் கிறுக்கப்பட்டுப் போவதாக;

நீதிமான்கள் பேரோடே அவர்கள் பேர் எழுதப்படாதிருப்பதாக.

தேவகுமாரன் சிலுவையில் அறையப்பட்ட பிறகும், தேவ ஆவியானவர் இஸ்ரவேல் தேசத்தார் மனந்திரும்பி மேசியாவாகிய இயேசுவிடம் திரும்ப வேண்டுமென்று வேண்டியதை நாம் மறந்துவிடக் கூடாது. அப்போஸ்தலருடைய காலம் முழுவதும், தேவன் அன்புபாராட்டிய இனத்தாரை வாஞ்சித்து அவருடைய இரக்கத்தையும் கிருபையையும் ஏற்றுக்கொள்ளும்படி பாசத்தோடு அழைத்ததை உங்களால் கேட்க முடியும். இக்காலத்திலும் கூட புறவினத்தாரிடம் எவ்வாறு நற்செய்தி அறிவிக்கப்படுகிறதோ, அதுபோலவே யூதரிடமும் அறிவிக்கப்படுகிறது. தேவனுடைய கிறிஸ்துவை நிராகரித்து, வேண்டுமென்றே வினைப்பயனைத் தெரிந்தெடுப்பவர்களே 22 முதல் 28 வரையிலான வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிற தண்டனைகளை அனுபவிப்பார்கள்.

69:29 பாவிகளின் நண்பரிடத்திலிருந்து இறுதியாக ஒரு சொல் இப்பொழுது பிறக்கிறது. கடுந்துன்பத்துக்கு ஆளாகி விவரிக்க இயலாத வேதனையடைந்தவராக, தேவனுடைய **இரட்சிப்பு** அவரை **உயர்ந்த அடைக்கலத்தில்** பாதுகாப்பாக வைக்க வேண்டுமென்று விண்ணப்பிக்கிறார்.

அதுவே மிகத்துல்லியமாக நடந்தது. தேவன் தாமே அவரை இறந்தோரிலிருந்து மூன்றாம் நாள் உயிரோடு எழுப்பி, தமது சொந்த வலப்புறத்திலே கர்த்தரும் இரட்சகருமாக அமர்த்தினார். பாவத்திற்கான அவருடைய பாடுகள் என்றென்றைக்குமாக முடிவடைந்து விட்டது; நாம் இப்பொழுது களிகூருகிறோம்!

இடையனை வெட்டுவேன் என்றுரைத்த யெகோவா
வெட்டிடார் இனிமேல் நண்பரே,
கடைச்செயல் புரிந்திட்ட கயவரும் தம்செயலால்
வெட்கியே அழிந்திடுவர் அறிவீரே!

இராபர்ட் C. சேப்மேன்

மேலும் இப்பொழுது நாம் அவரைப் புகழ்ந்து பாடுவோம்:

அண்ணலின் தலைதாழ்த்தச்
செய்திட்ட கடும்புயலும்
மௌனமாக ஓய்ந்ததே என்றைக்கும்,
மன்னரின் திருச்செயலால்
நாம்பெற்றோம் உளவமைதி
சூட்டிடுவோம் பொற்கிரீடம் அவர்தலையில்!

– H. ரோசியர்

69:30-33 கடைசி ஏழு வசனங்களில் பேசுபவர் உயிர்த்தெழுந்த மீட்பர். மரணத்தினின்றும் சவக்குழியினின்றும் தம்மை விடுவித்ததற்காக அவர் தேவனைப் புகழ்ந்து போற்ற வேண்டுமென்று ஆணையிடுகிறார். அவர் **தேவனுடைய நாமத்தைப் பாட்டினால் துதித்து, அவரை ஸ்தோத்திரத்தினால் மகிமைப்படுத்துவார்.** மிக விலையுயர்ந்த பலிகளைக் காட்டிலும் கர்த்தருக்கு மேலானது, இரட்சகரின் மன்றாட்டைக் கேட்டு, கர்த்தர் அவரை எவ்வாறு விடுவித்தாரோ அது போலவே அவர் தேவையுள்ள மக்களின் விண்ணப்பத்தைக் கேட்டு, கட்டுண்டவர்களை விடுதலை பண்ணுவார் என்பதை அறியும்போது எங்குமுள்ள ஒடுக்கப்பட்ட மக்கள் இருதயங்களில் உறுதியடைவார்கள்.

69:34-36 இஸ்ரவேல் தேசத்திற்கு என்ன நிகழும்? கடைசி மூன்று வசனங்கள் பிரகாசமான எதிர்காலத்தை முன்னுரைக்கின்றன. தற்காலிகமாக அவர்கள் ஒதுக்கப்பட்ட போதிலும் இஸ்ரவேல் ஆசிர்வதிக்கப்பட்ட நிலைக்கு புதுப்பிக்கப்படும். அவர்கள் தாங்கள் குத்தினவரை நோக்கிப் பார்த்து ஒரே குமாரனுக்காகப் புலம்புகிறவர்கள் போல துக்கிப்பார்கள். அப்பொழுது அவர்கள், "கர்த்தருடைய நாமத்தில் வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்" என்று கூறுவார்கள்." **தேவன் சீயோனை இரட்சித்து யூதாவின் பட்டணங்களைத்** திரும்பக் கட்டுவார். இனிமேல் அவனுடைய ஊழியக்காரர் வேறெங்கும் சிதறடிக்கப்படாமல், தங்களுடைய சொந்த நாட்டிலேயே **குடியிருப்பார்கள்.** அவர்களுடைய பிள்ளைகள் அதைச் **சுதந்தரித்துக்கொள்வார்கள்.** இது கர்த்தராகிய இயேசு மேசியா அரசராக ஆட்சிபுரியும் ஆயிரமாண்டுக் காலத்தை எதிர்நோக்கிப் பார்க்கிறது, அப்பொழுது இஸ்ரவேல் பாதுகாப்பாகக் குடியிருக்கும்.

சங்கீதம் 70: விரைந்து உதவிபுரிவீராக!

எழுபதாவது சங்கீதத்தின் பெரும்பகுதி 40:3-17 ஆகிய வசனங்கள் மீண்டும் கூறப்பட்டதுபோல இருக்கிறது. தாவீதின் நினைவூட்டும் சங்கீதம் என்பது இதன் தலைப்பு. இதில் தெளிவான நான்கு இயக்கங்கள் தெரிகின்றன.

விரைந்து உதவிபுரிவீராக (70:1)

"விரைந்து செயல்படுவதற்கென ஏறெடுக்கப் பட்ட கவலையோடு கூடிய அழுகை" என்று இத னைத் திருவாளர் மோர்கன் குறிப்பிடுகிறார். தன்னை விடுவிக்கும் பொருட்டு கர்த்தர் விரைந்து செயல்படவேண்டும் என்று தாவீது வற்புறுத்தி விண்ணப்பித்திருப்பதில் இக்கருத்தைப் பெறு கிறோம்.

முழுமையான தண்டனை வழங்குவீராக (70:2,3)

பகைவர் தோற்கடிக்கப்பட்டு, அவர்கள் நிலை குலைந்து போக வேண்டும் என்பதே அத்தருணத் தின் முக்கியமான எண்ணமாயிருந்தது. அவர்கள் அவனைக் கொலை செய்ய முயற்சி செய்தார் கள், அவனுக்குத் தீங்கு விளைவிப்பதில் மகிழ்ச்சி யடைந்தார்கள், அவனுடைய இன்னல்கள் அவர் கள் நையாண்டி செய்வதற்குத் தூண்டுதலாக இருந்தன. அவர்கள் முற்றிலும் செயலற்றுப் போக வேண்டும், பின்னிட்டுத் திரும்பி குழப்ப மடைய வேண்டும், அச்சத்தால் அதிர்ச்சியடைய வேண்டும், அவமானத்தால் வெட்கமடைய வேண் டும் என்பன அவனுடைய வேண்டுகோள்களாகும்.

தொடர்ந்து புகழப்படுவாராக (70:4)

கருத்து ஓட்டத்தின் அடிப்படையில் காண்கை யில், பாடலாசிரியனின் உதவிக்கு தேவன் வரு வாரெனில், மிகப்பெரிய அளவில் அலைகள் போல அவரை நோக்கிப் புகழ்ச்சி பாய்ந்து வரும். கர்த்தரைத் தேடுகிற யாவரும், அவருடைய உத விக்காக அவரைப் போற்றிப் புகழவும், இரட்சிப் பின் தேவன் என்று கூறித் துதிக்கவும் கூடிய தரு ணம் உண்டாகும்.

விரைந்து உதவிபுரிவீராக (70:5)

விரைந்து வந்து உதவிபுரிய வேண்டும் என்று அந்த ஆதரவு அற்ற மனிதன் மீண்டும் குரல் எழுப்புகிறான். தாவீது தனது நம்பிக்கையின் உச்ச நிலையில் இருக்கிறான் என்று சொல்லு வதற்கில்லை. கர்த்தர் உதவிபுரிபவர், விடுவிக் கிறவர் என்னும் அவனுடைய விசுவாசம் அதற் குரிய பலனை அவனுக்குத் தாராமல் போகாது.

சங்கீதம் 71: முதிர்வயது

பாடலாசிரியனின் அனுபவங்களும் இஸ்ரவேல் தேசத்தின் அனுபவங்களும் பல விசயங்களில் ஒன்றுபோல மிக நெருக்கமாக இருப்பதை நம் மால் காணமுடியும். ஆகவே, திருவாளர் பெல்லட் கருதுவது போல, இந்தச் சங்கீதத்தை இஸ்ர வேலின் முதிர்வயதில் வாழும் துன்புறுத்தப்பட்ட மீதியானவர்களின் ஜெபமாகக் கருதி விளக்க முற்படுவோம்.[50]

71:1-3 முதன் மூன்று வசனங்கள் 31 -ஆவது சங்கீதத்தின் முதல் மூன்று வசனங்களுக்கு ஒத்திருக்கின்றன. கர்த்தர் அடைக்கலமாகவும் **கன்மலையாகவும் கோட்டையாகவும்** இருப்ப தற்காகத் துதிக்கப்படுகிறார். மேலும் பாடலாசி ரியனின் விடுவிப்பு, மீட்பு, இரட்சிப்பு ஆகியவை குறித்த நம்பிக்கை வீண்போகாமல் நிச்சயமாக நிறைவேற வேண்டும் என்றும், அவர் கன்மலை யாகவும் கோட்டையாகவும் இருந்து பாதுகாக்க வேண்டும் என்றும் அவன் கெஞ்சி மன்றாடு கிறான்.

71:4 மன்றாட்டு தொடருகிற நிலையில், முந் தைய நாட்களில் தேவன் செய்த உதவிக்காக வும், அவர் தொடர்ந்து முதிர்வயதிலும் தமது இரக்கத்தைக் காட்டுவார் என்னும் நம்பிக்கைக் காகவும் அவனுடைய உள்ளத்தில் நன்றியறிதல் நிறைந்திருக்கிறது.

இவ்வசனத்தை நாம் இஸ்ரவேலுக்குப் பொருத்திப் பார்ப்போமானால், 4 -ஆவது வசனத் தில் குறிப்பிடப்பட்டுள்ள **துன்மார்க்கனும்** நேர்மை யற்ற முறையில் கொடுமை விளைவிப்பவனும் அந்திக்கிறிஸ்துவே ஆவான். அவனுடைய அச்ச மூட்டும் கொடுங்கோண்மை பரிசுத்தவான்களின் பொறுமையைச் சோதிப்பதாகவும், மிகவும் வருந் திக் கேட்கிற விண்ணப்பங்களை அவர்களிடத்தி லிருந்து பிழிந்தெடுப்பதாகவும் அமையும்.

71:5,6 சிறுவயது முதல் தேவனே தனது **நம்பிக்கையும் நோக்கமுமாக** இருக்கிறார் என்று எவனொருவனால் சொல்ல முடியுமோ அவன் பாக்கியவான். ஒருவன் தனது பிறப்பு முதல் யெகோவாவைச் சார்ந்து வாழ்வானென்றால், அவனுடைய வாழ்வின் இறுதி நாட்களிலும் ஆதரவு குறைவுபடாது. அவனுடைய பிறப்பின் போது அவன் பெற்ற வியத்தகு கிருபையை ஆராய்ந்து கண்டுபிடிப்பானானால், அவனுடைய பிந்தைய நாட்களில் அவரைத் **துதிப்பதற்கான** காரணங்களில் குறைவு இருக்காது.

71:7,8 பாடலாசிரியன் நிராகரிக்கப்பட்டவனாக பாடுகள் அனுபவித்த விதத்தையும், வியத்தகு வகையில் விடுதலைகள் பெற்றதையும் அறிந்த மனிதர்களுக்கு அவன் **புதுமை போலானான்**. ஆனால் அவனுடைய வாழ்வில் எல்லாவித மாறுதலடையும் சூழ்நிலைகளிலும் தேவன் அவனுடைய **பலத்த அடைக்கலமாயிருந்தார்**. ஆகவே அவன் ஒவ்வொரு நாளும் துதியாலும் மகிமையாலும் நிறைந்திருக்க வேண்டுமென்று விரும்புகிறான்.

71:9 முதிர்வயதில் என்னைத் தள்ளிவிடாமலும், என் பெலன் ஒடுங்கும்போது என்னைக் கைவிடாமலும் இரும்.

நேர்த்தியான முறையில் முதிர்வயதடைவதற்கு இயற்கை தருகிறதைக் காட்டிலும் கூடுதல் கிருபை தேவைப்படுகிறது. விநோதமான மனப் போராட்டங்கள் இரகசியமான பயங்கள் நிறைந்த புதிய உலகமே முதிர்வயது; தனிமையில் விடப்படுவது குறித்த அச்சம், அன்பானவர்களுக்குப் பாரமாக இருப்பது குறித்த அச்சம், ஒன்றுக்கும் உதவாத நிலையைக் குறித்த அச்சம், கட்டுப்பாட்டை இழப்பது குறித்த அச்சம், வஞ்சிக்கப்பட்டுவிடுவோமோ என்னும் அச்சம். இந்த அச்சங்கள் புதியவையல்ல. தங்களுடைய முதிர்வயதில் இருக்கும் அனைவரும் உற்சாகமடைய வேண்டும் என்று பாடலாசிரியன் இங்கு உரக்க சிந்திக்கிறான் (வேதாகம ஐக்கியம், அனுதின தியானக் குறிப்பு).

71:10,11 அவனுடைய பகைவர் அவனுக்கு எதிராகச் சதித்திட்டம் தீட்டி, அவனைக் கொல்ல முயற்சி செய்ததால், அதைக் குறித்த அச்சமும் கூடுதலாக இருந்ததை மறுக்க முடியாது. தேவன் ஏதோ தவறாக அவனைக் கைவிடுவாரெனில், எதிர்ப்பு எதுவும் இருக்காது என்னும் துணிவுடன் அவனுக்கு எதிராக இறுதித் தாக்குதல் நடத்த அவர்கள் ஆயத்தப்படுகிறார்கள்.

71;12,13 அவன் தேவனை நோக்கி அவசர அழைப்பு விடுக்க அந்தப் பிரச்சினை ஏவியது, அவர் அவன் பக்கமாகச் சேர்ந்து உதவி செய்ய வேண்டும் என்பதே அவனுடைய அழைப்பின் நோக்கம். வேறு எந்த உபத்திரவமும் கூடுதலாக ஏற்படா வண்ணம், தேவன்தாமே அவனுடைய பகைவரைத் தோல்வியினாலும் அவமானத்தினாலும் **நிந்தையினாலும் இலச்சையினாலும்** மூழ்கடிக்க வேண்டும்.

71:14-16 ஆனால் அச்சத்திற்கும் மேலாக **நம்பிக்கை** உயர எழுகிறது, துதி தனது கம்பீரமான ஒலியைப் பெருக்கத் தொடங்குகிறது. தேவனுடைய நீதியான செயல்களையும், அவருடைய அலைக்கழிக்கப்பட்ட பிள்ளை எண்ணிக்கையில் அடங்கா தடவைகள் விடுவிக்கப்பட்டதையும் தனது பாடல்களால் ஓயாமல் சொல்கிறான். தூய தீர்மானத்துடன், "யெகோவா எலோஹிம் செய்த வல்லமைமிக்க செயல்களின் சொல்லி முடியாத விவரங்களோடு நான் வருவேன்" என்று பாடலாசிரியன் கூறுகிறான்.[51]

71:17,18 ஐந்து முதல் பதினோராவது வசனம் வரை சொல்லப்பட்டது போலவே, மீண்டும் அவன் இளவயது முதல் முதிர்வயது வரையிலான முழு விவரங்களையும் கூறுகிறான் (வச. 17-21); இவையெல்லாவற்றிலும் தேவனுடைய சத்தியத்தைத் தவிர அவன் வேறொன்றையும் காணவில்லை. அவனுடைய இளவயது முதல் அவர் அவனுக்குக் கற்றுத் தந்தார்; திருவாளர் நாக்ஸ் தொடருகிறார், "இன்னமும் உம்முடைய அதிசயங்களின் கதையைக் கூறுகிறவனாகவே காணப்படுகிறேன்." இப்பொழுதோ அவன் **முதிர் வயதும் நரை முடியுள்ளவனாகவும்** இருக்கிறான், ஆனால் தனது வேலை முடிந்துவிட்டதாகக் கருதவில்லை. புதிய தலைமுறைக்கும் **வரப்போகிறவாவருக்கும்** கர்த்தருடைய வல்லமைமிக்க அதிசயங்களைக் கூறுவதற்குத் தனக்கு நேரம் தேவை என்று அவன் வேண்டுகிறான். இந்த மன்றாட்டு கேட்கப்பட்டது என்பதில் ஐயமில்லை, ஏனெனில் அதற்காகவே இந்தச் சங்கீதம் தூய திருமறையில் பாதுகாக்கப்பட்டு இருக்கிறது.

71:19-21 தேவன் மெய்யாகவே அதிசயமானவர்! அவருடைய வலிமையும் **நீதியும்** வானங்களைவிட உயரமானவை. அவர் செய்த **பெரிதான** செயல்களை எண்ணிப் பார்க்கிறபோது, ஒருவரும் அவருக்கு நிகரானவர் இல்லை.

சில வேளைகளில் தேவன் அனுமதித்தவற்றை அவரே செய்ததாகக் கூறுகிறோம். அவ்வாறாகவே இங்கு பாடலாசிரியன் (இஸ்ரவேலும் கூட) பல கசப்பான அனுபவங்களை எதிர்கொள்ளும்படி அவர் செய்கிறார். இஸ்ரவேலைப் பொறுத்தவரை, இது உபத்திரவ காலத்தைக் குறிக்கிறது. ஆனால் அவரோ அவர்களைக் கல்லறையின் பிடியிலிருந்து விடுவித்துக் காப்பாற்றுபவர். அதுமட்டுமல்ல! நிந்தைக்குப் பதிலாக மேன்மையைக் கொடுத்து வசதிகளால் அவர்களைச் சூழச் செய்வார்.

71:22 தேவனுடைய **சத்தியத்தைப்** பாடுவதற்கு வீணை பயன்படுத்தப்படும், **இஸ்ரவேலின் பரிசுத்தரை உயர்த்த சுரமண்டலம்** சேர்க்கப்படும். **இஸ்ரவேலின் பரிசுத்தர்** என்னும் தேவனுடைய பெயர் சங்கீதங்களில் வேறு இரண்டு இடங்களில் இடம்பெற்றுள்ளது.

71:23,24 ஆனால் பாடலாசிரியன் தனது **உதடுகளோடும், ஆத்துமாவோடும், நாவோடும் பாடுகிறபோது வீணையும் சுரமண்டலமும்** சேர்ந்துகொள்ளும். அவனுடைய உதடுகள் பொங்கியெழுந்து பாடுவதில் களிகூர்ந்திருக்கும். ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தால் **மீட்கப்பட்ட** அவனுடைய ஆத்துமா பாடலில் **கெம்பீரித்து மகிழும்**. அவனுடைய எதிரிகள் யாவரும் முற்றிலும் வெட்கமடைவார்கள். ஆகையால் அவனுடைய நாவு தேவன் சார்ந்துகொள்ளத் தக்கவர் என்று புகழ்பாடுவதில் களைப்படையாது.

சங்கீதம் 72:
மேசியாவின் மகிமை நிறைந்த ஆட்சி

இவ்வுலகில் ஓர் அரசனாக ஆட்சிபுரிந்த சாலொமோன் என்பவனுக்காக ஏறெடுக்கப்பட்ட மன்றாட்டுடன் இச்சங்கீதம் தொடங்குகிறது, ஆனால் அதிகத் தொலைவு செல்வதற்கு முன்பே, இதன் ஆசிரியர் சாலொமோனின் ஆட்சியின் புகழ்ச்சிக்கு அப்பால் சென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஆட்சியின் மேன்மைகளைக் காண்கிறான் என்பதை நம்மால் உணர முடிகிறது. களைப்புற்று போராடுகிற இவ்வுலகிற்கு அது அற்புதமான காலமாக விளங்கும். மனுக்குலம் எதிர்நோக்கிய பொற்காலம் தொடக்கம் பெறும். படைப்பின் ஏக்கப் பெருமூச்சு அடங்கி, அமைதியும் வளமும் பெருகும்.

72:1 முதல் வசனத்தில், அரசன் முடிசூட்டப்பட்ட நிலையில் கூட்டப்பட்டிருக்கும் பரிசுத்த அவையிலிருந்து மன்றாட்டு ஏறெடுக்கப்பட்டிருப்பதை நாம் கேட்கிறோம். “நியாயத்தீர்ப்பை வழங்குவதற்கான உமது சொந்தத் திறமையை அரசனுக்கு வழங்குவீராக; நீர் எவ்விதமாக நீதியுடையவராக இருக்கிறீரோ, அதுபோலச் சிங்காசனத்தைச் சுதந்தரித்தவரும் நீதிபரராக விளங்கட்டும்” என்று திருவாளர் நாக்ஸ் இவ் வசனத்தை மொழிபெயர்த்திருக்கிறார்.

“அவர் செய்வார்” என்பது போன்ற பல சொற்றொடர்கள் இந்தச் சங்கீதத்தின் எஞ்சிய வசனங்களில் காணப்படுகின்றன. அவையாவும் மீட்பரின் முழுநிறைவான ஆட்சியில் உண்மைச் செய்திகளாகக் காணப்படும்.

72:2 **அவர்** மக்களை **நீதியோடும் ஏழைகளை நியாயத்தோடும் விசாரிப்பார்**. கையூட்டு, ஊழல், அடக்குமுறை யாவும் ஒழிந்துபோயிருக்கும். விசாரணை நடுநிலையோடு நெறிவழுவாமல் நடத்தப்படும், ஏழைகளுக்கு ஒருக்காலும் அனுகூலமற்ற நிலை ஏற்படாது.

72:3 மலைகளின் காரணமாக மக்கள் சமாதானத்தையும் செல்வ வளத்தையும் பெறுவார்கள், சிறு மலைகளை நீதி மூடியிருக்கும். திருமறையில் மலைகள் பெரும்பாலும் அரசு அதிகாரங்களைக் குறிக்கும். ஆகவே இங்கு சொல்லப்பட்டுள்ள கருத்து என்னவெனில், உச்ச நீதிமன்றம் முதல் குற்றவியல் நீதிமன்றம் வரை, எல்லா நீதிமன்றங்களிலும், கிறிஸ்துவின் அரசின் குடிமக்கள் யாவரும் நடுநிலையையும் நேர்மையையும் பெற முடியும் என்பதே.

72:4 காலங்காலமாக ஏழைகளும் வறியவரும் ஒடுக்கப்படுகிறார்கள், குறைவான ஊதியம் பெறுகிறார்கள், துன்பப்படுத்தப்படுகிறார்கள், சில வேளைகளில் கொலையும் செய்யப்படுகிறார்கள். ஆயிரமாண்டு ஆட்சியின்போது அரசரே அவர்களுடைய வழக்கறிஞராகச் செயல்படுவார். அவர்தாமே அவர்களை அடிமைத்தளையிலிருந்து விடுதலையாக்கி, தங்களுடைய சொந்த நலனுக்காக அவர்களைப் பயன்படுத்துபவர்களைத் தண்டிப்பார்.

72:5,6 **சூரியனும் சந்திரனும் உள்ளமட்டும், தலைமுறை தலைமுறையாக** அவருடைய குடிமக்கள் அவருக்கு மரியாதை செலுத்திப் பயந்திருப்பார்கள். அவருடைய சமுகம் பயனளிக்கும், புத்துணர்ச்சி தரும் - அது **புல்வெளியின் மேல் பெய்யும் மழையைப் போலவும்** வறண்ட **பூமியின் மேல் விழும் தூறலைப் போலவும்** இருக்கும்.

72:7 அவரே மெய்யான மெல்கிசேதேக் - நீதியின் அரசனும் **சமாதானத்தின்** அரசனும் அவரே. அவருடைய ஆட்சியின்போது நீதி தழைக்கும், **சமாதானம்** பெருகும், அந்நிலை சந்திரன் இருக்குமட்டும் தொடரும். சமாதானத்திற்கு முந்தையது நீதி என்பதைக் கவனியுங்கள். “நீதியின் கிரியை சமாதானமும், நீதியின் பலன் என்றுமுள்ள அமரிக்கையும் சுகமுமாம்” (ஏசாயா 32:17). அவர் சிலுவையில் நிறைவேற்றிய நீதியான செயலின் மூலமாக, அவர் நமக்குச் சமாதானத்தை விட்டுச் சென்றிருக்கிறார். அவர் தமது நீதியான ஆட்சியின் மூலமாக ஒரு நாளில், போரில் உருவழிந்துபோன உலகிற்குச் சமாதானத்தைக் கொண்டுவருவார்.

72:8 "பிரிட்டிஷ் பேரரசில் சூரியன் அஸ்தமிக்காது" என்று இங்கிலாந்து ஐக்கிய அரசினர் பெருமைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அதன் குடியேற்ற நாடுகள் உலகமெங்கும் ஆங்காங்கே இருந்தன. ஆனால் கிறிஸ்துவின் அரசோ உலகளாவியது. அது ஏதோ சிதறிக் கிடக்கும் குடியிருப்புகளாக இருக்காது. எல்லா நாடுகளும் அதில் அடங்கும். அவருடைய ஆளுகை ஒரு கடல் தொடங்கி மறுகடல் வரைக்கும், ஐபிராத்து **நதி தொடங்கி பூமியின் எல்லைவரைக்கும்** விரிந்திருக்கும்.

72:9 இறுதியில் பாலைவனத்தில் வாழும் கட்டுப்பாடற்ற நாடோடிகள் **அவருக்கு முன் பாகக் குனிந்து வணங்குவார்கள்**; அவருடைய எதிரிகள் தோற்கடிக்கப்படுவார்கள். **மண்ணை நக்குதல்** என்னும் சொற்றொடர் இழிவான முறையில் அவமானத்தோடு அடிமைப்படுத்தப் படுதலைக் குறிக்கிறது.

72:10,11 புறவின அரசர்கள் வெகுமதிகளையும் பரிசுகளையும் எருசலேமுக்குக் கொண்டு வந்து அரசருக்கெல்லாம் அரசரிடம் வழங்குவார்கள். இங்கு ஸ்பெயின் நாட்டு ஆளுநரையும், பல தீவு நாடுகளின் தலைவர்களையும் காண்கிறோம். மேலும் இப்பொழுது தெற்கு அரேபியா நாட்டு அரசர்களும் அங்கு வருவதைக் காண்பீர்கள். விமான நிலையங்கள் மக்கள் கூட்டத்தால் நிறைந்திருக்கும், ஏனெனில் பன்னாட்டு அரசுத் தலைவர்கள் அவருடைய ஆட்சி அதிகாரத்தை ஏற்றுக்கொண்டவர்களாக அங்கு வருவார்கள், எல்லா இனத்தாரும் மறுப்பின்றி **அவரைச் சேவிப்பார்கள்**.

"செல்வச் செழிப்புள்ள அரசர்கள், சிந்தனையாளர்கள், இசை மேதைகள், கலைத்துறைத் தலைவர்கள் எல்லோரும் அவருடைய மேதகைமையை அங்கிகரித்தார்கள், அங்கிகரிப்பார்கள்" என்று கூறினார் திருவாளர் மேயர்.

72:12-14 சிறுமைப்பட்டவர்களிடத்தில் அரசர் கொண்டிருக்கும் பேரிரக்கம் இங்கு காணப்படுகிறது. எளியவர், தாழ்த்தப்பட்டோர், சமுதாயத்தில் கீழ் மட்டத்தில் இருப்பவர் யாவருக்கும் வல்லமை மிக்க மீட்பர் உதவிபுரிவார். வலிமையற்றவரும், சிறுமையடைந்தவர்களும் உடனடியாக அவரைச் சந்திக்க முடியும், அவர்கள் பரிவோடு கவனிக்கப்படுவதோடு, உடனடி நடவடிக்கை எடுக்கப்படும். நேர்மையற்ற, கொடுமையான முறையில் நடத்துபவர்களின் பிடியிலிருந்து அவர் அவர்களை விடுவிப்பார். அவர்களுடைய ஆத்துமாக்கள் அவருக்கு எவ்வளவு அருமையானவை என்பதை அவர் வெளிப்படுத்துவார்.

72:15 "அரசர் நீடு வாழ்வாராக" என்னும் பேரொலி அவருடைய உண்மையான குடிமக்களிடத்திலிருந்து எழும். அவர்களுடைய நன்றியறிதலின் காரணமாக அவர்கள் **ஷேபாவின் பொன்னைத்** தருவார்கள். உலகம் முழுவதிலிருந்தும் அவருக்காக **ஜெபம்** ஏறெடுக்கப்படும். காலை முதல் இரவு வரை மக்கள் அவரைப் போற்றிப் புகழுவார்கள்.

72:16 தேசத்தின் வளம் சொல்லி முடியாத தாயிருக்கும். களஞ்சியங்களும் பண்டகசாலைகளும் தானியத்தில் நிறைந்திருக்கும். இதுவரை பயிரிடப்படாத மலை உச்சிகளிலும் விளைந்த பயிர்கள் லீபனோன் காடுகள்போல் காற்றில் அசைந்து ஆடும்.

வெளி நிலங்களில் புல் வளருவது போல் நகரங்கள் மக்கள் பெருமளவு குடியிருக்கும் பகுதிகளாக விளங்கும். மக்கள் தொகைப் பெருக்கம் நம்புதற்கியலாத அளவு பெரிதாயிருந்தாலும் உணவுப் பற்றாக்குறை ஏற்படாது.

72:17 அவருடைய திருப்பெயர் என்றென்றும் விரும்பப்பட்டதாகவும், மதிப்பு நிறைந்ததாகவும் விளங்கும். **சூரியன்** இருக்குமட்டும் அவருடைய புகழ்ச்சி தொடரும். ஆபிரகாமுக்கு தேவன் வாக்குரைத்தபடி, எல்லா மனிதர்களும் அவருக்குள் ஆசிர்வதிக்கப்பட்டிருப்பார்கள். மேலும் எல்லா இனத்தாரும் **அவரைப் பாக்கியமுடையவர் என்று வாழ்த்துவார்கள்.**

72:18,19 இச்சங்கீதம் ஒரு துதிப்பாடலுடன் முடிவடைகிறது. கர்த்தராகிய இயேசுவின் மகிமைநிறை ஆட்சி தேவனுடைய சாதனையாகும். அவரே இத்தகைய வியத்தகு நிலையை ஏற்படுத்துகிறவர், வேறு ஒருவராலும் அவ்வாறு செய்ய முடியாது. ஆகவே அவருடைய மகிமை நிறைந்த திருப்பெயர் என்றென்றும் புகழப்படுவது இயல்பானதே ஆகும். **அவருடைய மகிமை பூமி முழுவதும் நிறைந்திருக்கும்**.

72:20 ஈசாயின் புத்திரனாகிய தாவீதின் விண்ணப்பங்கள் முடிவடைந்தன. சங்கீத நூலைப் பொறுத்தவரை தாவீதின் மன்றாட்டுகள் முடிவடைந்தன என்பது இதன் பொருளன்று, ஏனெனில் இன்னும் பல தொடருகின்றன. சங்கீதத்தின் இரண்டாவது நூலைப் பொறுத்தவரை அவனுடைய மன்றாட்டுகள் முடிவடைகின்றன என்பதே இதன் பொருளாக இருக்க வேண்டும்.

ஏனெனில் 72 -ஆவது சங்கீதமே இரண்டாம் சங்கீத நூலின் கடைசிச் சங்கீதம். ஆனால் இதைக் காட்டிலும் நியாயமாகத் தோன்றுகிற விளக்கம் யாதெனில், அவனுடைய **விண்ணப்பங்களின்** இறுதி நிறைவேறுதல்களாக விளங்குவது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் முன்னுரைக் கப்பட்ட ஆட்சியேயாகும். முந்தின வசனங்களில் விவரிக்கப்பட்டுள்ள அரசு அவனுடைய கடைசிச் சொற்களின் கருப்பொருள் ஆகும் (2 சாமு. 23:1-4). அந்நிகழ்வை நோக்கியவாறே அவனுடைய விண்ணப்பங்கள் ஏறெடுக்கப்பட்டுள்ளன. அரியாசனத்தில் அமர்ந்து மேசியா தமது ஆட்சியைத் தொடங்கும்போதுதான் தாவீதின் விருப்பம் முழுமையாக நிறைவேறும்.

3. மூன்றாம் நூல் [சங்கீதங்கள் 73-89]

சங்கீதம் 73: விசுவாசத்தின் இக்கட்டான நிலை

73:1 இங்கு பேசுகிற என் பெயர் ஆசாப். முதலில் ஒரு செய்தியைத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். ஓர் உண்மையை நான் அறிவேன், அது என்னவெனில், **சுத்த இருதயமுள்ளவர்களாகிய இஸ்ரவேலருக்கு தேவன் நல்லவராகவே இருக்கிறார்.** ஒருபோதும் எவரொருவரும் கேள்வி கேட்க முடியாதபடி இந்த உண்மை ஐயத்திற்கிடமற்றதாக விளங்குகிறது.

73:2,3 ஆனால் நான் உண்மையாகவே ஐயுறுவதற்குரிய தருணம் ஏற்பட்டது. இது குறித்த என்னுடைய கருத்தில் தடுமாற்றம் ஏற்பட்டது, என்னுடைய விசுவாசம் தற்காலிகமாக நிலை குலைந்து போயிற்று. துன்மார்க்கரைக் குறித்து எண்ணிப் பாருங்கள், அவர்கள் எவ்வளவு மேலான நிலையில் இருக்கிறார்கள் அவர்களிடத்தில் அதிகமாகப் பணம் இருக்கிறது, இன்பக் கொண்டாட்டம், தொல்லையற்ற நிலை, அவர்களைப் போல இருக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

73:4-9 எல்லாம் அவர்களுக்குச் சாதகமாக நடப்பது போலவே தோன்றுகிறது. விசுவாசிகள் படுகிற சரீரப் பாடுகள் போல அவர்கள் பாடுகள் அனுபவிப்பதில்லை. அவர்களுடைய சரீரங்கள் நலத்துடனும் நேர்த்தியாகவும் இருக்கின்றன (இயல்பாகவே எல்லாவற்றிலும் சிறந்ததைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்த வசதிகள் பெற்றிருக்கிறார்கள்). நம்மைப் போல பண்பாடுள்ள மனிதர்களுக்கு ஏற்படுவது போல அவர்களுக்குத் தொல்லைகளோ துன்பங்களோ ஏற்படுவதில்லை. அவர்கள் அந்த அளவிற்குத் தன்னம்பிக்கையோடு இருப்பது குறித்து ஆச்சரியப்பட வேண்டியதில்லை. அவர்களுக்குத் தொல்லைகள் ஏற்பட்டாலும், எண்ணிப்பார்க்கத்தக்க எந்த இழப்பையும் தாங்கக்கூடிய பலத்த உறுதியைப் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் மயிலைப் போல பெருமையோடும், புலியைப் போல கொடியவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்களுடைய உடல்கள் கொழுப்பால் பருமனாயிருப்பது போல, அவர்களுடைய சிந்தனைகளும் கபடுகள் நிறைந்தவை. அவர்கள் எப்பொழுதும் இறுமாப்பு நிறைந்திருக்கிறார்கள்! அவர்கள் தங்களுக்குக் கீழ் பணிபுரிபவர்களை ஏளனம் செய்து சபிக்கிறார்கள்; அவர்களைக் கீழ்த்தரமாக நடத்தி, தொடர்ந்து அச்சுறுத்துகிறார்கள். அவர்களுடைய வெறுப்புக்கு தேவனும்கூட தப்பவில்லை. அவர்களுடைய பேச்சு தெய்வ நிந்தையோடு இருப்பதோடு, அவரை ஆணவத்தோடு தூஷிக்கிறார்கள். அவர்களுடைய வாய் தருக்கோடு பீடு நடைபோட்டு ஆணவத்தோடு உலகைச் சுற்றி வருகிறது. "நான் இங்கு வருகிறேன், என் வழியை விட்டு விலகிச் செல்" என்று கூறுவதுபோல அவர்கள் பேசுகிறார்கள்.

73:10-12 சாதாரண மக்களில் பெரும்பாலோர் அவர்களை மிகப் பெரியவர்கள் என்று நினைக்கிறார்கள். அவர்கள் குனிந்து பணிந்து அளவுக்கு மீறி மரியாதை செலுத்துகிறார்கள். பொல்லாதவர்கள் என்ன தவறு இழைத்தாலும், மக்கள் அவர்களிடத்தில் ஒரு குற்றத்தையும் காண்கிறதில்லை. இது ஒடுக்குபவர்களை மேலும் இறுமாப்புக் கொள்ளச் செய்கிறது. தேவன் என்று ஒருவர் இருந்தாலும், என்ன நடக்கிறது என்று அவருக்குத் தெரியாது என்று அவர்கள் கற்பனை செய்கிறார்கள். ஆகவே அவர்கள் தங்களுடைய கபட்டு வழியைத் தொடர்ந்து கைக்கொள்கிறார்கள். மேலும் இவ்வித வசதிகளில் அவர்கள் புரளுவதோடு, எல்லா நேரங்களிலும் மிகுதியாகச் சம்பாதிக்கிறார்கள்.

73:13,14 நன்று! நான் சிந்திக்கத் தொடங்கினேன். "பண்பாடுமிக்க, நேர்மையான, மரியாதைக்குரிய வாழ்க்கை வாழ்வதால் அது எனக்கு என்ன நன்மையை உண்டுபண்ணியிருக்கிறது?" ஜெபத்தில் நான் செலவிட்ட பல மணி நேரம். திருமறையைப் படிப்பதற்கு நான் செலவிட்ட நேரம், கர்த்தருடைய வேலைக்காக நான் செலவழித்த பணம், வெளிப்படையாகவும் தனிமையிலும் நற்சாட்சியுடன் ஊக்கமாகக் கர்த்தருக்காக

வாழ்ந்த வாழ்க்கை, இவையெல்லாவற்றிற்கும் நான் பெற்ற பலன், ஒவ்வொரு நாளும் கொஞ்சம் பாடுகளும், தண்டனையும். இப்படிப்பட்ட விசுவாச வாழ்க்கை, அதற்குரிய விலை பெறுமா என்று ஐயப்படுகிறேன்.

73:15 இருந்தபோதிலும், என்னுடைய ஐயங்களையும், அவநம்பிக்கையையும் வேறு யாரிடமும் பகிர்ந்துகொள்ளவில்லை. அவ்வாறு செய்வதைக் காட்டிலும் மேலானதைச் செய்ய நான் அறிவேன். "நீங்கள் என்ன நிச்சயங்களைக் கொண்டிருக்கிறீர்களோ அதைச் சொல்லுங்கள்; எனக்குள்ள சந்தேகங்கள் எனக்குப் போதும்" என்று சொன்ன மனிதனைக் குறித்து நான் அவ்வப்போது சிந்திக்கிறேன். ஆகவே என்னுடைய சந்தேகங்களையெல்லாம் எனக்குள்ளேயே வைத்துக்கொள்கிறேன். எளிமையான நம்பிக்கையுள்ள சில ஆத்துமாக்கள் புண்படவோ இடறலடையவோ நான் காரணமாகி விடக் கூடாது.

73:16 ஆனாலும் இவையாவும் எனக்குப் புதிராகவே இருக்கின்றன. துன்மார்க்கன் செழிப்போடு இருக்கிறான், நீதிமான் இன்னலடைகிறான். இது புரிந்துகொள்ளக் கடினமானது. உண்மையில், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் களைப்படைந்து போனேன்.

73:17 பின்னர் வியத்தகு நிகழ்வு ஒன்று நடந்தது. ஒருநாள் நான் **தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசித்தேன்** - உண்மையான எருசலேம் ஆலயத்தை நான் குறிப்பிடவில்லை, எவ்வித மாற்றத்துக்கும் இடமற்றபடி அது விண்ணகத்தைக் குறிக்கிறது. விசுவாசத்தினாலே நான் அங்கு சென்றேன். இவ்வுலக வாழ்க்கையில் பொல்லாதவர்கள் செல்வச் செழிப்போடு இருக்கிறார்களே என்று நான் குறைகூறுகையில், என்னுடைய மனதில் ஒரு கேள்வி பளிச்சிட்டது, "ஆனால் வரப்போகிற வாழ்க்கையைக் குறித்து என்ன சொல்வது?" நித்திய நிலையைக் குறித்து நான் கூடுதலாகச் சிந்திக்கத் தொடங்கினேன், எல்லா விசயங்களும் என்னுடைய கவனத்திற்கு வந்தன.

73:18-20 ஆகவே நான் கர்த்தரிடம் இது போன்று சில விசயங்களைப் பேசினேன்: கர்த்தாவே, தோற்றங்கள் எப்படி இருந்தாலும், பொல்லாதவரின் வாழ்க்கை நிச்சயமற்றது என்பதை இப்பொழுது உணருகிறேன். பெரிய செங்குத்தான வழுக்குப் பாறையின் விளிம்பில் அவர்கள் நடக்கிறார்கள். உடனடியாகவோ காலம் கடந்தோ அவர்கள் **பாழாய்ப் போகும்படி** விழுகிறார்கள். ஒரு நொடிப்பொழுதில் நினைத்துப் பார்க்க முடியாத பயங்கரமான பேரழிவுக்குரிய அலைகளிலே அடித்துச் செல்லப்படுகிறார்கள். ஒருவன் காலையில் எழும்போது அவனுடைய கனவு எப்படியிருக்குமோ அதுபோலத்தான் அவர்களைப் பற்றி நான் எண்ணுகிறேன் - ஒரு மனிதனுக்குத் தொல்லைகள் கொடுத்த கனவுகள் வெறுமனே மாயையே தவிர வேறொன்றுமில்லை.

73:21,22 எனக்குப் பொறாமை உணர்வுகளை ஏற்படுத்தின யாவும் வெறும் நிழல்களே என்பதை இப்பொழுதுதான் உணருகிறேன். துன்மார்க்கர் செல்வச் செழிப்போடு வாழ்வது குறித்து கசப்பும் எரிச்சலும் அடைந்த நான் முட்டாள்தனமாகவே இருந்தேன். உம்முடைய நோ்மையைக் குறித்துக் கேள்வி எழுப்பிய நான் மனிதனாக அல்ல **மிருகமாகவே** செயல்பட்டேன். (அவ்வாறு நடந்து கொண்டதற்காக வருந்துகிறேன்.)

73:23,24 என்னுடைய அறியாமையாலே அவ்வாறு நடந்துகொண்ட போதிலும் நீர் என்னைக் கைவிடவில்லை. **நான் எப்பொழுதும் உம்மோடிருக்கிறேன்**; நீர் என்னைத் தாங்கி வருகிறீர், ஒரு தகப்பன் தனது பிள்ளையின் கையைப் பிடித்து நடத்துவது போல நடத்துகிறீர். என்னுடைய வாழ்நாள் முழுவதும், **உம்முடைய ஆலோசனையின்படி** வழிநடத்தினீர், இறுதியில் **என்னை மகிமையில் ஏற்றுக்கொள்வீர்.**

73:25,26 பரலோகத்தில் எனக்கு நீர் இருந்தால் அதுபோதும், அது என்னை மிகப்பெரிய செல்வந்தனாக்கும். உம்மைத் தவிர இந்த **உலகில்** எனக்கு வேறொரு விருப்பம் இல்லை. துன்மார்க்கர் செல்வந்தராக இருக்கட்டும். உம்மிலே நான் மனநிறைவு அடைகிறேன், உமக்குள்ளாக என் முழுநிறைவைக் கண்டடைகிறேன். எனது உடல் அழிந்து போகலாம், **இருதயம் மாண்டு** போகலாம், ஆனால் **தேவனே என்** வாழ்வின் **கன்மலையாக** இருக்கிறார், நித்தியம் முழுவதற்கும் எனக்கு வேறு எந்தத் தேவையும் இல்லை.

73:27,28 உம்மைவிட்டு எவ்வளவு தொலைவு தூரமாக இருக்க முடியுமோ அவ்வளவு தூரமாக இருப்பவர்கள் நீர் இல்லாமல் **நாசமடைவார்கள்**. தேவனல்லாதவர்களைப் பின்பற்றும்படி உம்மைவிட்டு விலகிச் சென்றவர்கள் யாவரும் அழிக்கப்படுவார்கள். என்னைப் பொறுத்தவரை உம்மிடம் எவ்வளவு நெருக்கமாக இருக்க முடி

யுமோ அவ்வளவு நெருக்கமாக **அண்டிக்கொள் வேன்**. பாதுகாப்பு வேண்டி நான் என்னையே உம்மிடம் ஒப்புக் கொடுத்திருக்கிறேன். மேலும் உமது வியத்தகு செயல்களைக் கேட்க விரும்பும் ஒவ்வொருவரிடமும் அறிவிக்க விரும்புகிறேன்.

சங்கீதம் 74: நினைத்தருளும்!

நேபுகாத்நேச்சாரின் கீழ் பாபிலோனியர் தேவாலயத்தை இடித்து அழித்த நிகழ்வை நோக்கி இந்த மனதை உருக்கும் புலம்பல் திரும்பிப் பார்க்கிறது. எனினும் எதிர்காலத்தில் நிகழவிருந்த இதற்கொப்பான மூன்று பேரிடர் நிகழ்வுகளை இது முன்னோக்கிப் பார்க்கிறது:

அந்தியோகஸ் எபிபெனஸ் பரிசுத்த ஸ்தலத் தின் தூய்மையைக் கெடுத்த நிகழ்வு, கி. மு. 170 - கி. மு. 168.

ரோம நாட்டுத் தீத்துவும் அவனுடைய படை வீரர்களும் தேவாலயத்தைத் தரைமட்டமாக் குதல், கி.பி. 70.

மூன்றாவது நிகழ்வு இனி நடக்கவிருப்ப தாகும். மத்தேயு நற்செய்தி நூலில் முன்னு ரைக்கப்பட்டது, தேவாலயம் பாழாக்கப்படும் நிகழ்வு, (24:15).

தேவாலயத்தைப் பாபிலோனியர் இடித்துத் தள்ளியபோது, தேவன் தமது மக்களை என் றென்றைக்குமாகக் கைவிட்டதாகவே தோன் றியது. இடிபாடுகளிலிருந்து புகை எழுந்தபோது, அது தேவனுடைய கோபத்தால் எழுந்த பேரழிவுப் புகை என்று மிகச்சரியாக அதனைக் கவனித்த வர்கள் விளக்கினார்கள். ஆயினும் அவர்கள் இன்னமும் கீழ்க்கண்ட குறிப்புகளில் சொல்லப் பட்டவர்கள்போலவே இருக்கிறார்கள் என்பதை உணர்ச்சிமிக்க வகையில் கர்த்தருக்கு நினை வூட்டுகிறார்கள்:

அவருடைய மேய்ச்சலின் ஆடுகள் (வச. 1).
அவருடைய சபை (வச. 2).
அவர் மீட்டுக்கொண்ட அவருடைய சுதந்தரமான கோத்திரம் (வச. 2).
அவருடைய காட்டுப்புறா (வச. 19).
துன்பப்பட்டவன் (வச. 21).
சிறுமையும் எளிமையுமானவன் (வச. 21).

மேலும் அவர்கள் "நினைத்தருளும்" என்னும் சொல்லால் மாற்றங்களை அவருக்குத் தெளி வான முறையில் தெரிவிக்கிறார்கள்.

உமது சபையை நினைத்தருளும் (வச. 2).

சீயோன் பர்வதத்தை நினைத்தருளும் (வச. 2).

சத்துரு தூஷித்ததை நினைத்துக்கொள்ளும் (வச. 18).

மதியீனன் எவ்விதமாக தேவனுடைய பெய ருக்கு நிந்தையைக் கொண்டுவருகிறானோ அதை அவர் நினைக்க வேண்டும் (வச. 22).

74:1-4 என்ன நடந்தது என்பது தேவனுக்குத் தெரியாது என்பதுபோல, எவ்விதமாகக் கல்தே யப் படைவீரர்கள் புனிதக் கட்டடத்தைத் தரை மட்டமாக்கினார்கள் என்பதை வந்து காணும்படி அவரை அழைக்கிறார்கள். பின்னர் அவர்கள் நேரடியாகப் பார்த்த காட்சியை அதே வண்ணம் கூறினார்கள். அந்நிய நாட்டினர் தீவிரமாகப் பரி சுத்த ஸ்தலத்தின் நடுவே புகுந்து தாக்கினார்கள். அவர்கள் அங்கு **தங்களுடைய கொடிகளை அடையாளங்களாக நாட்டினார்கள்**, அதாவது யெகோவாவின் திருமறை ஆராதனை முறை மையை மாற்றும்படி புறவினச் சடங்குமுறைமை யையும், சிலை வணக்க முறைமையையும் நிலை நாட்டும்படி அந்த அடையாளங்களை ஏற்படுத் தினார்கள்.

74:5-8 மரத்தை வெட்டுகிறவர்கள் திறம்பட வெட்டுவதால் பெரிய **மரங்கள்** அடுத்தடுத்து விழு வதுபோல, விலைமிகுந்த **சித்திரவேலைகளும்** பதிக்கப்பட்ட மரத்தினாலான வேலைப்பாடு களையும் கோடரிகளையும் நீண்ட கைப்பிடிகள் கொண்ட பளுவான **சம்மட்டிகளையும்** பயன் படுத்தி அந்தப் புறச்சமய போர்வீரர்கள் ஆலயத் தைச் சிதறடித்தார்கள். அந்த இடம் அலங் கோலமான உடனேயே இடுபாடுகளைத் தீயிட் டுக் கொளுத்தினார்கள். இவ்வாறாக தேவனு டைய **பரிசுத்த ஸ்தலத்தின்** தூய்மை கெடுக்கப் பட்டது. முழுவதுமாக இஸ்ரவேலையும் அதன் ஆராதனை இடத்தையும் சூறையாடும் நோக்கத் துடன், தேசத்திலிருந்த தேவனுடைய **ஆலயங் களையெல்லாம் சுட்டெரித்துப் போட்டார்கள். (இறைவனை வழிபட்ட எல்லா இடங்களையும் - இலகு தமிழ்.)**

74:9 தேசத்தின் மிகப்பெரிதான அவல நிலையானது வெறுமையைக் குறிப்பிடக்கூடிய மூன்று விசயங்களாலும் நான்கு கேள்விகளாலும் தொகுத்துரைக்கப்பட்டுள்ளது. வெறுமையைக் குறிக்கும் விசயங்கள்:

அடையாளங்கள் இல்லை. முந்தைய நாட் களில் வியத்தகு வகையில் தேவன் தலை யிட்டு இஸ்ரவேலுக்காகச் செய்த நிகழ்வு களின் அனுபவங்கள் இப்பொழுது இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

தீர்க்கதரிசி இல்லை. அந்த நாட்களில் தீர்க்க தரிசியின் சத்தமும் அமைதிப்படுத்தப்பட்டு விட்டது (எசே. 3:26).

தண்டனை தணியும் என்பதற்கான நம்பிக்கை இல்லை. எதுவரைக்கும் இந்த அவலநிலை நீடிக்கும் என்பதை ஒருவரும் அறியவில்லை.

74:10,11 நான்கு கேள்விகள்:

எதிரி ஏளனம் செய்வதற்கு தேவன் எவ்வளவு காலம் அனுமதிப்பார்?

முடிவில்லாதபடி தேவனுடைய நாமம் திட்டப் படுவதற்கு தேவன் அனுமதிப்பாரா?

ஏன் அவருடைய கரம் அழிவைத் தடைசெய் யாதபடி தடுக்கப்பட்டுள்ளது?

அவர் தமது வலது கரத்தை முடக்கி தமது ஆடைக்குள் மறைத்து வைத்திருப்பதன் கார ணம் என்ன?

74:12-17 ஆனால், முந்தைய காலத்தில் தேவன் தமது மக்களுக்காகச் செய்த வல்லமைமிக்க செயல்களை எடுத்துரைப்பதால் பாடலாசிரியன் நம்பிக்கையும் ஆறுதலும் பெறுகிறான். பல்வேறு இடங்களில் அவர் நீண்ட காலமாக இஸ்ரவேலின் அரசராக இருந்து நம்ப இயலாத விடுதலை களைப் பெற்றுத் தந்திருக்கிறார். எடுத்துக்காட் டாக அவர் செங்கடலை தமது வல்லமையாலே **இரண்டாகப் பிளந்து**, எகிப்திலிருந்து யூதர்கள் தப்புவதற்கு எளிதான பாதையை உண்டாக்கி னார். அதன் பிறகு எகிப்தியர் கடலின் **வலுசர்ப் பங்களைப்** போலப் பின்தொடர முயன்றபோது, அவர் கடல்நீர் முன்னிருந்த நிலைக்குத் திரும்பும்படி செய்து எதிரிகளை மூழ்கச் செய்தார். எகிப்தின் வலிமைக்கு அடையாளமான கோர வுரு கொண்ட லிவியதான் என்னும் **முதலை களின் தலைகளை** நசுக்கிப் போட்டார். அந்தப் போர்வீரர்களின் செத்த உடல்கள் கடற்கரைக்கு அடித்துச் செல்லப்பட்டு, அவை கழுகுகளுக்கும் பாலைவனத்து விலங்குகளுக்கும் உணவாயின. நீரூற்றுகளையும் சிற்றோடைகளையும் மலை களைப் **பிளந்து** உருவாக்கிப் பாலைவனத்தில் தண்ணீர் கொடுத்தார். மேலும் யோர்தானை வற்றிப்போகச் செய்து, மக்கள் வாக்குறுதி செய் யப்பட்ட நாட்டுக்குள் நுழைய ஏற்பாடு செய்தார். **பகலும் இரவும்** அவருடைய கட்டுப்பாட்டுக்குள் இருந்தன. அவருடைய தீர்மானத்தின்படியே **சூரியனும்** சந்திரனும் நட்சத்திரங்களும் செயல் பட்டன. அவரே உலகின் நில அமைப்பையும், இடத்தின் இயல்பையும் உண்டாக்கியவர்; தட்ப வெப்பநிலை மாற்றங்களையும் கட்டுப்படுத் துபவர் அவரேயாவார்.

74:18-21 தானும் அந்தப் பேரிடரில் அகப்பட் டுக் கொண்டதைப் பாடலாசிரியன் தேவனுக்கு நினைவுபடுத்துகிறான். அவருடைய திருப் பெயரை எதிரி **நிந்தித்தான்**; ஆம் இழிந்த, மதி யீனமான மனிதர்கள் அவர்மேல் அவமரியாதை யைக் குவித்தார்கள்.

ஆனால் அவருடைய மக்களின் நிலை மிக வும் ஆபத்தானதாயிருந்தது. அவர்களைக் கை விட்டு அவர் போய்விடக்கூடாதென்று அவர்கள் வேண்டிக் கொண்டார்கள். அவர்களே அவரு டைய காட்டுப்புறா, பாபிலோனிய மிருகத்திடம் அதை விட்டுவிடக்கூடாது. அல்லது எப்பொழுதும் துன்புறுத்தப்படும்படி அவர்களைக் கைவிடக் கூடாது. இஸ்ரவேலின் இருண்ட இடங்களில் வன் முறையும் கொடுமையும் நிறைந்திருக்கும் அந்த நாட்களில், அவர் ஆபிரகாமோடு செய்த உடன் படிக்கையை நினைத்தருள வேண்டுமென்று வருந்திக் கேட்டுக்கொண்டார்கள். மேலும் அவ ருடைய ஒடுக்கப்பட்ட மக்கள் அவமானமடையா மல் மீண்டும் மேன்மையடைய வேண்டும், அவர் களுடைய மன்றாட்டு கேட்கப்பட்டதன் காரண மாக அவருடைய திருப்பெயரை அவர்கள் புதிய வகையில் துதிக்க வேண்டும் என்று அவர்கள் வருந்தி விண்ணப்பித்தார்கள்.

74:22,23 இறுதியாக தேவனுடைய நோக்கம் இடருக்குள்ளாயிருக்கிறது. அவர் தமது பெயரின் மேன்மையை நிலைநிறுத்த வேண்டும், ஏனெ னில் தெய்வபக்தியற்ற மனிதர்கள் அவரை நாள் தோறும் ஏளனம் செய்கிறார்கள். அவருடைய எதிரிகள் பேசுகிற ஏளனப்பேச்சு பெருகிக்கொண்டே போகிறது, அவர்களுடைய அறைகூவல்கள் தொடர்ந்து ஆகாயத்தை நிரப்புகின்றன. ஆகவே அதை அவர் **மறவாமல்** நினைவுகூரவேண்டும்.

சங்கீதம் 75: துதி செலுத்துவதற்கானஆதாரம்

74 -ஆவது சங்கீதத்தில் ஏறெடுக்கப்பட்ட மன் றாட்டுக்கான விடை 75 -ஆவது சங்கீதத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. தமது நோக்கத்தை நிறை வேற்றுவதற்கு வழக்காட அவரே எழுந்தருளு வார் (சங். 74:22), எல்லாவிதமான கீழ்ப்படியாமை யையும் அவர் அடக்குவார். இறுதியில், நீதியோடு இவ்வுலகை அரசாளும்படி கர்த்தராகிய இயேசு திரும்பவும் பூமிக்கு வரக்கூடிய வரலாற்று நிகழ்வை இச்சங்கீதம் எதிர்நோக்கியிருக்கிறது.

75:1 அந்த நிகழ்வை எதிர்நோக்கியவாறு, இறை மக்கள் தேவனைத் துதிக்கும்படி இரட்சகர் தாமே அவர்களை முன்னின்று வழிநடத்துகிறார். தேவனுடைய **அதிசயமான கிரியை** யாவும் அவருடைய தெரிந்துகொள்ளப்பட்ட மக்களை விடுவிக்க அவர் அவர்களுக்கு சமீபமாகவும் அவருடைய எதிரிகளைத் தண்டிக்க ஆயத்தமாகவும் இருக்கிறார் என்பதைத் தெரிவிக்கின்றன. அவருடைய வல்லமைமிக்க அற்புதச் செயல்கள் யாவும் அவர் அக்கறை கொண்டிருக்கிறார் என்பதற்கான நிரூபணமாகும்.

75:2 அதே பேச்சாளர் தொடருகிறார், **"நியமிக்கப்பட்ட காலத்திலே, யதார்த்தமாய் நியாயந்தீர்ப்பேன்."** பிதாவாகிய தேவனே காலத்தை முடிவு செய்பவர் (மாற்கு 13:32). அது வரும்போது அதைக் கைப்பற்றுவார்; "இதோ ஒரு ராஜா நீதியாக அரசாளுவார்" என்னும் ஏசாயாவின் தீர்க்கதரிசனம் முழுமையாக நிறைவேறும் (ஏசா. 32:1).

75:3 மனிதன் நிறுவின அரசாங்கங்களின் அடித்தளங்கள் உடைந்து நொறுங்கும் இக்கட்டான காலத்தில், ஒருக்காலும் அசைக்கப்படாத ஆட்சியை அவர் நிறுவுவார். மனித சமுதாயமானது ஆவிக்குரிய நிலையிலும், அரசியல் மற்றும் ஒழுக்கம் ஆகியவற்றிலும் கேடுற்றிருந்தாலும் அவருடைய அரசின் **தூண்கள்** உறுதியாகவும் பாதுகாப்பாகவும் இருக்கும்.

75:4,5 தற்பெருமை கொண்டிருப்பவர்களிடத்தில், "உங்களுடைய வீம்புப் பேச்சை விட்டொழியுங்கள்" என்று அவர் கூறுகிறார். துன்மார்க்கரிடத்தில், "நீங்கள் யார் என்று நினைக்கிறீர்கள்? நீங்கள் பெருமைப்படவோ தன்னம்பிக்கை கொள்ளவோ, வளைந்து கொடுக்காமல் இருக்கவோ வேண்டாம். இறுமாப்போடு உங்களையே உயர்த்தாதீர்கள்" என்கிறார் அவர்.

75:6,7 "மெய்யான **உயர்வு** அவ்விதம் வராது. அது **கிழக்கிலிருந்தோ மேற்கிலிருந்தோ தெற்கிலுள்ள** பாலைவனத்திலிருந்தோ வராது..." வடக்கு இங்கு சொல்லப்படவில்லை, பெரும்பாலும் தாக்குதல் வடக்கிலிருந்து வருவதால் அது சொல்லப்படவில்லை போலும், அங்கிருந்து வருவது அடிமையாக்குதலாக இருக்குமேயொழிய புகழ்ச்சியாக இருக்காது. அல்லது சில வேளைகளில் வடக்கு தேவனுடைய குடியிருப்போடு தொடர்புபடுத்திப் பேசப்படுகிறது (ஏசாயா 14:13; சங். 48:2). அது எதுவானாலும் இங்கு சொல்லப்பட்டுள்ள கருத்து தெளிவாக இருக்கிறது, மனிதனிடத்திலிருந்தோ மனித ஆதாரத்திலிருந்தோ உயர்வு வருகிறதில்லை, அது கர்த்தரிடத்திலிருந்து மட்டுமே வருகிறது. அவரே மிகப்பெரிய ஆளுநர், **ஒருவனைத் தாழ்த்துகிறார் மற்றவனை உயர்த்துகிறார்.**

75:8 தாழ்த்துகிறவர் என்னும் நிலையில், அவர் தமது **கையில் ஒரு பாத்திரத்தை** வைத்திருக்கிறார். **மதுபானம்** என்னும் நியாயத்தீர்ப்பு அந்தப் பாத்திரத்தில் இருக்கிறது. அது நுரைத்து, சிவந்து முழுவதும் **கலங்கிப் பொங்குகிறது.** அதாவது, அது அடங்காமல் மிகுந்த வீரியம் கொண்டதாக இருக்கிறது. அதை **அவர் வார்க்கும்போது**, இவ்வுலகிலுள்ள **துன்மார்க்கர்** யாவரும் அதனுடைய வண்டல்வரை உறிஞ்சிக் குடிக்கும்படி கட்டாயப்படுத்தப்படுவார்கள்.

75:9,10 கடைசி இரண்டு வசனங்களிலும் கர்த்தராகிய இயேசுவே இன்னமும் பேசிக் கொண்டிருக்கிறார். அவர் என்றென்றும் **யாக்கோபின் தேவனுக்குக் கீர்த்தனங்களைப் பாடுவார்.** அந்த தேவன் தகுதியற்ற தமது மக்களை உயர்த்தியவர். துன்மார்க்கரின் கொம்புகளை, அதாவது அவர்களுடைய வலிமையையும் மேன்மையையும் உடைத்தெறிவார். ஆனால் **நீதிமானுடைய** வலிமையும் மகிமையும் **உயர்த்தப்படும்.**

சங்கீதம் 76: மனிதனுடைய கோபம் தேவனைப் புகழுகிறது

கி. மு. 701 -இல் சனகெரிப் என்பவன் தலைமையில் அசீரியப் படை எருசலேமை அழித்துவிடுவதாக அச்சுறுத்தியது. ஆனால், அவர்கள் எருசலேம் நகரத்தை நெருங்குவதற்கு முன்னமே, கர்த்தருடைய தூதனானவர் இரவில் அவர்களுடைய பாளையத்திற்குள் புகுந்து 185000 வீரர்களை வெட்டி வீழ்த்தினார்.

அசீரியரின் அழிவு திருவாளர் பைரோனின் வீர காவியத்தில் நினைவு விழாவாகக் கொண்டாடப்படுகிறது. "சனகெரிபின் அழிவு" என்னும் பெயர் பெற்ற அப்பாடல் ஏசாயா 37:36 -இன் விளக்கமாக மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. இந்த வரலாற்றுப் பின்னணியில் 76 -ஆவது சங்கீதத்தைக் காண்போமெனில், அது கிளர்ச்சியூட்டும் வகையில் புத்துயிர் பெற்று காட்சிதரும். இப்பாடலோடு அதனைச் சேர்த்துப் படிப்பது தகுதியாயிருக்கும்.

76:1 யூதாவில் தேவன் புகழ்பெற்றவர், ஏனெனில் அவருடைய நகரத்தையும் ஆலயத்

தையும் அழித்துப் போடுவதாக அச்சுறுத்திய படையை வியத்தகு வகையில் வீழ்த்தினார். அவருடைய திருப்பெயர் இஸ்ரவேலில் சிறப்பு வாய்ந்ததாயிருக்கிறது, ஏனெனில் அந்நாட்டின் வரலாற்றில் அது ஒரு மறக்கமுடியாத அத்தியாய மாகும்.

76:2-4 சமாதானத்தின் நகரமாகிய எருச லேமை அவருடைய தலைநகரமாக அவர் நியமித் தார், சீயோன் மலையை அவருடைய குடியிருப் பாக ஏற்படுத்தினார். அங்கு தானே அவர் எதிரி யின் போர்த் தளவாடங்களை அடித்து வீழ்த்தி னார் - மின்னிப் பளிச்சிடும் **அம்புகளும், கேட கமும்**, போர்புரியும் **பட்டயங்களும்** இன்ன பிற ஆயுதங்களும் அழிக்கப்பட்டன.

மலையின் மேல் நிறுவப்பட்ட நகரம் **கொள் ளையுள்ள பர்வதங்களைக் காட்டிலும்** கம்பீர மாக இருக்கிறது, அதாவது அந்நகரைக் கொள் ளையிட்ட புறவின அரசுகள், மேலும் இது ஆகு பெயராக விளங்கி, யூதாவுக்கு எதிராகத் தனது கையை உயர்த்துகிற எந்த அதிகாரத்தையும் விட எருசலேமின் தேவன் அதிக **மகத்துவமான வர்** என்னும் பொருளைத் தெரிவிக்கிறது.

76:5,6 அசீரியரின் படைக்கு என்ன நிகழ்ந்தது என்பதாலே இது அறியப்படும். **தைரிய நெஞ் சுள்ள** போர்வீரர்கள் சடிதியில் தங்களுடைய ஆயுதங்களைக் கீழே எறிந்தார்கள். ஒரு நொடிப் பொழுதில் அவர்கள் வலுக்குன்றிப் போய்விட் டார்கள். **யாக்கோபின் தேவனிடத்திலிருந்து** ஒரு சொல் பிறந்தது, குதிரை வீரர்களும் **குதிரை களும்** மரணத்தின் உறக்கத்திற்குள்ளாக அமிழ்ந்து போனார்கள்.

76:7-9 இவர் எப்படிப்பட்ட இறைவன்! இவர் எவ்வளவாகப் பயப்படத்தக்கவர்! அவருடைய கோபம் தூண்டிவிடப்படுகையில் எதிரிகள் யாவ ரும் பயனற்றுப் போகிறார்கள். வானத்திலிருந்து நியாயத்தீர்ப்பு வரும்படி அவர் கட்டளையிட்ட வுடனே, பூமி நடுநடுங்குகிறது, அமைதியாகிறது - புயலுக்கு முன் இருக்கிற அமைதிபோல் அது இருக்கிறது. பின்னர் பூமியின் தவறுகளைச் சரிசெய்யவும் ஒடுக்கப்பட்டவரை விடுவிக்கவும் தேவன் இறங்கி வருகிறார்.

76:10 மனிதனுடைய கோபம் அவருக்கு **மகி மையை** ஏற்படுத்தும்படி வியத்தகு முறையில் அவர் செயல்படுவார். வெற்றிபெற்ற தளபதி பட்ட யத்தைத் தமது இடுப்பில் செருகி வைத்திருப்பது போலத் தம்மைப் புகழாத அனைத்தையும் வைப் பார்.

மண்ணுலக மனிதனின்
கடுங்சினக் கொடுமைகள்
விண்ணுலக வேந்தரின்
புகழ்ச்சியாக மாறிடும்,
இன்னல்கள் பெருகிடும்
காரிருள் சூழ்ந்திடும்
மன்னவன் வரும்நாளில்
நன்மையே நிலைத்திடும்.
கேடுற்ற மனிதனின்
பொல்லாத நோக்கங்கள்
பாடுற்ற அரசரின்
சித்தத்தை நிறைவேற்றும்,
ஒப்பிலாத மன்னவர்
அரியணையில் வீற்றிருக்க
தப்பொன்றும் நிகழாது,
நம்பீநீ அமர்ந்திரு!
அமர்ந்திருந்து அறிந்திடு
நானே இறைவனென,
சுமந்திட்ட அச்சங்கள்
சடிதியில் மறைந்திடும்,
கடந்திடும் பாதைகள்
வருத்தங்கள் நிறைந்தவை
நடத்துவார் கரம்பிடித்து
கவலைகள் மறைந்திடும்.
விண்ணக சேனைகள்
அவர்முன்னர் பணிந்திட
மன்னவர் கரத்தினில்
செங்கோலும் நிலைத்திடும்,
"என்னநீர் செய்கிறீர்?"
எனும் கேள்வி எழுப்பிட
மன்னவா யாருளர்,
ஒருவரும் இல்லையே!

76:11 கர்த்தருடைய மேன்மையும் மகிமையும் விவரிக்கக்கூடாத அளவு பெரிதாக இருக்கின்ற காரணத்தால், யூதாவின் மக்கள் அவர்களுடைய **தேவனாகிய கர்த்தருக்குப் பொருத்தனை பண்ணி** அதை **நிறைவேற்ற** வேண்டுமென்று புத்திபுகட்டப்பட்டிருக்கிறது.

76:11,12 அடுத்ததாக இஸ்ரவேலைச் சுற்றி யுள்ள புறவின மக்கள் யாவரும் இணையற்ற அரசருக்குக் **காணிக்கைகளை** வெகுமதியாகக் கொண்டுவந்து கொடுக்கும்படி, அவர்களுக்கு ஆலோசனை வழங்கப்படுகிறது. இவ்வுலகத்தின் பிரபுக்களின் மேன்மை குறைக்கப்படும், வலிமை மிக்க ஆட்சியாளர்களுக்கும்கூட பயரங்கரமான சூழ்நிலைகள் ஏற்படும், இவையெல்லாவற்

றையும் செய்ய வல்லவரே அந்த இணையற்ற அரசர்.

சங்கீதம் 77: தன்னைத்தானே நுணுகிக் காண்பதற்கான சிகிச்சை

முதல் பத்து வசனங்களில் மிகப் பெரிய அளவில் ஆசாப் தன்னைத்தானே நுணுகிக் காண்கிறான். தன்மைப் பிரதிப் பெயர்ச் சொற் களாகிய நான், என், எனக்கு என்பன இருபதுக் கும் மேற்பட்ட இடங்களில் காணப்படுகின்றன, ஆனால் இறைவனுடைய பெயர்கள் ஏழு இடங் களில் மட்டுமே காணப்படுகின்றன, இறைவனைச் சுட்டும் பிரதிப் பெயர்ச் சொற்கள் மேலும் ஏழு இடங்களில் காணப்படுகின்றன. ஆனால் 10 -ஆவது வசனத்தில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற் படுகிறது. கடைசிப் பத்து வசனங்களில் தன்மைப் பிரதிப் பெயர்ச் சொற்கள் மூன்று இடங்களில் மட்டுமே இடம்பெற்றுள்ளன. ஆனால் இறை வனைக் குறிக்கும் பெயர்ச்சொற்களும் பிரதிப் பெயர்ச் சொற்களும் இருபது இடங்களுக்கு மேலே இடம்பெற்றுள்ளன. பரிசுத்த ஆவியான வரின் மூலமாகக் கிறிஸ்துவின் ஊழியத்தால் நான், என், எனக்கு என்பன மறைந்து போயின.

இதன் கருத்து ஓட்டத்தை யாரோ ஒருவர் நான்கு சொற்களின் மூலமாக விளக்கிக் கூறியிருக்கிறார்:

வேதனையின் பெருமூச்சு (வச. 1–6)
கீழ்நோக்கிச் சரிவடைதல் (வச. 7–10)
மகிழ்ந்து பாடுதல் (வச. 11–15)
வானளாவப் புகழுதல் (வச. 16–20)

77:1-3 முதலாவது, ஆசாப் தன்னுடைய வேத னையின் கதையை தேவனிடத்தில் ஊற்று கிறான். அவனுடைய வாயிற்படியில் ஏதோ பெயர் தெரியாத துயரம் வந்து முற்றுகையிட்டிருக்கிறது. அவனுடைய அவல நிலையில் அவன் தன்னைத் தவிர வேறு எவரையும் குறித்து நினைத்துப் பார்க்க முடியவில்லை. இடைவிடாமல் மன்றாடிய போதிலும், ஆறுதல் அவனை வந்தடைய வில்லை என்று குற்றஞ்சாட்டுகிறான். தேவனைக் குறித்த சிந்தனை அவனுடைய வேதனையின் புலம்பலை அதிகப்படுத்துகிறதேயொழிய மகிழ்ச் சியின் பாடலைத் தரவில்லை, இப்படிப்பட்ட முரண்பட்ட நிலையிலேயே அவன் இருந்தான். அவன் கூடுதலாகத் தியானித்தபோது, கூடுதலாக மனச்சோர்வே ஏற்பட்டது.

77:4-6 தன்னால் சிறிதுநேரம்கூட உறங்கமுடி யவில்லை என்பதற்குக் காரணம் தேவனே என்று அவன் குற்றஞ்சாட்டுகிறான். அவனுடைய ஆவி யில் ஏற்பட்ட மனவேதனையை அவனால் சொற் களால் விவரிக்க முடியவில்லை. இடறலற்றபடி நடந்த முந்தைய நல்ல நாட்களை நினைவு கூர்ந்தவனாக அவன் ஆறுதல் அடையவே விரும் பினான். ஆனால் அவன் தன்னைக் குறித்தும், தனக்குள்ளாக இருக்கும் வெற்றி வாய்ப்பைக் குறித்தும் கூடுதலாகச் சிந்திக்கிறபோது, கர்த்தரு டைய தயவைக் குறித்த சந்தேகம் கூடிக் கொண்டே போகத் தொடங்கிற்று. சந்தேகங் களால் அவன் தாக்குண்டதை நம்ப முடியாத ஐந்து கேள்விகள் வெளிப்படுத்துகின்றன.

77:7-10 முதலாவது கேள்வி, கர்த்தர் அவனை முடிவுக்குக் கொண்டு வந்துவிட்டார் என்பது போன்ற அச்சுறுத்தும் நிலையை உண்டுபண்ணு வதாகத் தோன்றுகிறது. தேவன் அன்புகூருவதை நிறுத்திவிட்டாரோ என்று இரண்டாவது கேள்வி எழுகிறது. அடுத்ததாக, தேவன் தமது வாக் குறுதிகளைத் தேவையற்றவை என்று தள்ளி விட்டாரோ என்று அவன் வியந்து கேட்கிறான். மீண்டுமாக அவனுடைய மனதில் ஒரு துடுக்கான எண்ணம் உதிக்கிறது. ஒருவேளை, **தேவன் இரக்கஞ்செய்ய மறந்தாரோ?** இறுதியாக, தேவன் **கோபத்தாலே** அவருடைய **இரக்கம்** பாய்ந்து வருவதைத் தடுத்து விட்டாரோ என்று அவன் கேட்கிறான். அவன் தனது கேள்விகளுக் கெல்லாம் இவ்வாறு பதில் சொல்கிறான். **உன் னதமானவருடைய வலதுகரம்** மாறிப்போயிற்று. அவனுடைய துக்கத்திற்கான காரணம் என்ன வென்று ஆராய்ந்து பார்க்கிறபோது, அவனிடத் தில் தேவன் கொண்டிருக்கிற மனநிலையில் ஏதோ மாற்றம் ஏற்பட்டிருக்கிறது.

77:11-13 ஆனால் 11 -ஆவது வசனத்தில், ரோமர் 7 -லிருந்து 8 -க்கு உண்டாயிருக்கிற ஆவிக்குரிய மாற்றத்திற்கு ஒப்பான ஒரு மாற்றம் உண்டாயிருக்கிறது என்பதை அறிய முடியும். அவன் தன்னைத்தானே நுணுகி ஆராய்ந்த பிறகு மிகுந்த ஆழமான சேற்றுக்குள் விழுந்துவிட்டான். பின்னர் ஆசாப் தனது கண்களை வானத்தை நோக்கித் திருப்புகிறான். மேலும் தமது மக்கள் இக்கட்டான சூழ்நிலைகளில் இருந்த போதெல் லாம் தேவன் எவ்விதமாகக் குறுக்கிட்டுச் செயல் புரிந்தார் என்பதை நினைவுகூர முடிவு செய்தான். உடனடியாக, தேவன் பரிசுத்தர், அவர் செய்வ தெல்லாம் நிறைவானவை, நீதியானவை, நல் லவை, அவர் ஒரு தவறும் செய்வதில்லை என்று அவன் அறிக்கை செய்யும்படியான நிலைக்கு அது மாற்றியது.

77:14,15 இஸ்ரவேல் மக்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பதற்காக தேவன் தமது வல்லமையை அற்புதமாகவும் அதிசயமாகவும் விளங்கச் செய்ததைப் பாடலாசிரியன் குறிப்பிட்டுச் சிந்தித்துப் பார்க்கிறான். அந்த நினைவு அவனை உயர எடுத்துச் செல்கிறது. அவனுடைய சொல்லாட்சியில் தன்மைப் பிரதிப் பெயர்ச் சொற்கள் முழுவதுமாக மறைந்து போகின்றன. தேவனை மையப்படுத்துவதற்கு வழிகொடுக்கும்படி தன்னை மையப்படுத்திய நிலை விலகிச் செல்கிறது.

77:16-18 செங்கடலின் தண்ணீர்கள் தங்களுடைய படைப்பாளரை மேல்நோக்கிப் பார்த்து, அவரைக் கண்டவுடன் பயத்தாலே மீண்டும் ஒன்று சேர்ந்தன என்று அவன் தனது இலக்கியத் திறமையின் மிகுதியாலே அழகுறப் படவுருவில் வரைந்து தருகிறான். இயற்கை யாவும் தீவிரமான புயலின் காரணமாக வெடித்துச் சிதறின. பெருமழை இடைவிடாமல் பொழிந்தது. தலைக்கு மேலே இடிமுழக்கங்கள் விரைந்து இறங்குகின்றன. வானத்தில் ஒருமுனையிலிருந்து மறுமுனை வரைக்கும் மின்னல் வளைந்து நெளிந்து பளிச்சிட்டது. அதனுடைய ஒளியில் பூமியின் மேற்பரப்பு பளிச்சிட்டது. அந்தப் பகுதியில் கடும் சூறாவளி திடீரென்று தாக்கியது, நாட்டுப்புறப் பகுதிகள் கடுந்தாக்குதலால் அலைக்கழிக்கப்பட்டது.

77:19,20 தேவன்தாமே கடலின் வழியாக ஒரு நெடுஞ்சாலையை உண்டுபண்ணினார். அவரே அந்தப் **பாதையைத்** திறந்து வைத்துத் தமது மக்கள் வெட்டாந்தரையிலே நடந்து போகும்படி செய்தவர். ஆனாலும் ஒருவரும் அவருடைய பாதங்களின் தடங்களைக் கண்டதில்லை. இது போன்று அவ்வப்போது நிகழ்வுகள் நடந்துள்ளன, அவருடைய சமுகம் இருந்ததற்கான சான்றுகள் பெருமளவில் இருந்தன, ஆனாலும் அவர் தம்மை நிழல்களுக்குள்ளாக மறைத்துக்கொண்டார்.

இச்சங்கீதம் ஓர் அமைதியான முறையில் முடிவடைகிறது. மேய்ப்பராகிய தேவன், **மோசே ஆரோன்** என்பவர்களின் கவனிப்பின்கீழ் இஸ்ரவேலைப் பாலைவனத்தின் ஊடாக நடத்திச் சென்றார். தொடக்கத்தில் ஆசாப் மனநோய் மருவத்துவமனைக்குச் செல்ல வேண்டிய நிலையில் இருந்தான். சங்கீதத்தின் முடிவில் அவன் அமைதியாகவும், மனக்கலக்கம் இன்றியும் காணப்படுகிறான். ஆகவே இந்தச் சங்கீதம் நன்கு அறியப்பட்ட முதுமொழிக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது:

தன்னைப் பற்றிய நினைவிலேயே இருப்பது
அவலநிலையை உண்டுபண்ணுகிறது;
பிறரைப் பற்றிய நினைவிலேயே இருப்பது
சோர்வுநிலையை உண்டுபண்ணுகிறது;
கிறிஸ்துவைப் பற்றிய நினைவிலேயே
இருப்பது மனமகிழ்ச்சியை
உண்டுபண்ணுகிறது.

சங்கீதம் 78: வரலாற்றிலிருந்து ஒரு நீதிமொழி

"தேவனுடைய வழிகள் கிருபையால் ஆனவை, இஸ்ரவேலின் வழியோ தவறான பாதை" - இவ்விதமாகவே இச்சங்கீதத்தின் செய்தியைத் திருவாளர் பெல்லட் சுருக்கமாகக் கூறுகிறார். இஸ்ரவேல் வரலாற்றில் இது மிகச்சிறந்த பாடல்களில் ஒன்று. முந்தைய வரலாற்றிலிருந்து கற்பிப்பதே இப்பாடலின் நோக்கமாகும். அவ்வாறு நாம் கற்போமெனில் அவர்கள் வாழ்ந்த தவறான வாழ்வை மீண்டும் வாழும் குற்றச்சாட்டிலிருந்து காக்கப்படுவோம்.

வரலாற்றிலிருந்து கற்கும்படி பாடலாசிரியன் அழைப்பு விடுத்தல் (78:1-4)

பாடலாசிரியன் தனது மக்களை (நம் எல்லோரையும்கூட) கவனித்துக் கேட்கும்படி அழைப்பு விடுக்கிறான்; ஏனெனில் அவன் உவமைமொழியில் பேசவிருக்கிறான், அதாவது அவன் கூறவிருக்கும் விவரங்களின் ஆழத்தில் மதிநுட்பமுள்ள பொருள் அடங்கியிருக்கிறது. அவனுடைய நாட்டின் முந்தைய வரலாற்றிலிருந்து பற்பல நிகழ்வுகளை அவன் எடுத்துரைக்கையில், **பூர்வகாலத்து மறைபொருள்கள்** என்று அவன் பெயரிட்டு அழைக்கிற, புதைந்து கிடக்கிற பாடங்களைக் காணவியலும். முந்தின நாட்களில் நடந்த சில நிகழ்வுக் குறிப்புகளை நம்முடைய பெற்றோர்கள் நம்மிடம் சொன்னதுபோல, நாமும்கூட கர்த்தர் தமது மக்களிடம் கிருபையினாலும் ஆளுகையினாலும் நடந்து கொண்ட முறையை அடுத்த தலைமுறையினருக்கு எடுத்தியம்பக் கடமைப்பட்டிருக்கிறோம்.

நியாயப்பிரமாணத்தைத் தருவதில் தேவனுடைய கிருபையுள்ள நோக்கம் (78:5-8)

நியாயப்பிரமாணம் நிறுவப்பட்டதைக் குறித்து ஆசாப் தனது நீதிக்கதையால் கற்பிக்கிறான். தேவன் இஸ்ரவேலருக்கு அதைக் கொடுத்த போது, அவர்கள் அதனை அடுத்தடுத்து வரும் தலைமுறையினருக்கு உண்மையானபடி ஒப்பு

விக்க வேண்டும் என்று கட்டளையிட்டார். தேவனுடைய விருப்பம் இவையெல்லாவற்றிலும் நான்கத்தனையாயிருந்தது:

1. தேவன் மேல் அவருடைய மக்கள் நம்பிக்கை வைக்க வேண்டும் .
2. அவருடைய மகிமை நிறைந்த செயல்களை அவர்கள் மறக்கக்கூடாது.
3. அவர்கள் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும்.
4. அவர்கள் முந்தைய வரலாற்றிலிருந்து கற்றிட வேண்டும், கலகம் செய்வித்த மூதாதையரைப் போன்று அவர்கள் நடந்துகொள்ளக் கூடாது.

மக்களின் கீழ்ப்படியாமை, கிளர்ச்சி மற்றும் நன்றிகெட்ட தன்மை (78:9-11)

ஆனால் என்ன நடந்தது? எப்பிராயீம் கோத்திரத்தாரின் தலைமையின் கீழ் இஸ்ரவேலர் கர்த்தர் சொல்லை நிறைவேற்றவில்லை. வில்லுகளை ஏந்திய வீரர்கள் **யுத்தநாளிலே புறமுதுகு காட்டினார்கள்.** காதேஸ் பர்னேயாவில் கெட்டதே நடக்கும் என்னும் செய்தி ஒற்றர்களால் கொண்டுவரப்பட்டபோது அவர்கள் கோழைத்தனமாக வருத்தத்திற்குரிய வகையில் நடந்து கொண்டதைக் குறிப்பிடுவதாகத் தோன்றுகிறது. அல்லது அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலப் பகுதியிலிருந்து கானானியரை முழுவதுமாக வெளியேற்றத் தவறிய நிகழ்ச்சியை இது குறிக்கலாம். அவர்களுடைய பொதுவான குணநல நடத்தையை இது குறிப்பிடுகிறது என்று எண்ணுவதற்கும் அதிக வாய்ப்புண்டு. அவர்கள் மீண்டும் மீண்டும் வேண்டுமென்றே தேவனுடைய நியாயப் பிரமாணத்தை மீறினார்கள். அவர்களுடைய நலனுக்காக தேவன் செய்த வல்லமைமிக்க **அற்புதச் செயல்களை** வழக்கமாக **மறக்கும்** இயல்புடையவர்களாக அவர்கள் இருந்தார்கள்.

எகிப்திலிருந்து மக்கள் பெற்ற விடுதலையை மறந்த செயல் (78:12-14)

அவர்கள் எகிப்தை மறந்துவிட்டார்கள் - சோவான் நாட்டில் அவர்கள் கடினமாக உழைக்கும்படி அடிமைப்படுத்தப்பட்ட நிலையிலிருந்து விடுவிக்கப்பட்டதையும் மறந்துவிட்டார்கள். செங்கடலைக் கடந்து வந்ததையும்கூட அவர்களால் எவ்வாறு மறக்க முடிந்தது - தண்ணீர் இருபுறமும் நிமிர்ந்து நின்றதால் அவர்கள் வெட்டாந்தரையில் நடந்தார்களே? பகலில் மகிமையின் **மேகமும்** இரவில் **வெளிச்சமும்** அதிசயமாக அவர்களை நடத்திச் சென்றனவே.

பாலைவனத்தில் அற்புதமான முறையில் தேவன் அவர்களுக்குத் தண்ணீர் வழங்கியதை மறந்த செயல் (78:15,16)

வனாந்தரத்தில் கன்மலைகளைப் பிளந்து தேவன் அவர்களுக்குத் தாராளமாகத் தண்ணீர் கொடுத்ததையும் அவர்கள் விரைவாக மறந்து போனார்கள் - அங்கே மிகப்பெரிய நீரூற்று இருந்ததுபோல நீர் பீறிட்டு வந்தது. பாலைவனத்தில் ஆறு! ஆனால் அவர்களுடைய நினைவோ மங்கிப் போனது.

மக்கள் உண்பதற்காக அப்பத்தையும் புலாலையும் ஆணவத்தோடு கேட்ட செயல் (78:17-22)

அவர்கள் தங்களுடைய உணவைக் குறித்துக் கர்த்தரிடம் முறையிட்டார்கள். மனநிறைவு அடையாமல் முணுமுணுத்தவர்களாக, **உன்னத மானவரிடத்தில்** புதிய வேண்டுகோள்களைச் சமர்ப்பித்தார்கள். பட்டினியால் சாகும்படி தேவன் அவர்களை **வனாந்தரத்துக்குக்** கொண்டு வந்தார் என்று அவர்கள் மறைமுகமாகக் குற்றஞ் சாட்டினார்கள். அவரால் அவர்களுடைய தேவையை நிறைவு செய்ய முடியுமோ என்று சந்தேகப்பட்டார்கள். அவர் தண்ணீரைக் கொடுத்தார் என்று மனவெறுப்போடு ஒப்புக்கொண்ட அந்த மக்கள், **அப்பத்தையும் புலாலையும்** அவரால் கொடுக்க முடியுமா அல்லது கொடுக்க விருப்பப்படுவாரா என்று கேள்வி எழுப்பினார்கள்.

தம்முடைய மக்கள் தம்மீது நம்பிக்கை வைக்க வில்லை என்னும் உண்மை கர்த்தருக்குக் கடுஞ் சீற்றத்தை உண்டுபண்ணியது. அவருடைய பாதுகாக்கும் ஆற்றலை அவர்கள் நம்பவில்லை என்பது அவருக்குக் கோபத்தை உண்டுபண்ணியது என்பதில் ஆச்சரியமில்லை. **இஸ்ரவேலுக்கு எதிராக** எழுந்த அவருடைய **கோபம் அக்கினியைப் பற்றியெரியச்** செய்தது.

தேவனுடைய கிருபையாலே அருளப்பட்ட மன்னா (78:23-25)

அவர்கள் அப்பத்தைக் கேட்டார்கள். ஆனால் பாலைவனத்தில் பெரும் சந்தை எதுவும் இல்லை. அப்பத்தைச் செய்வதற்கான பொருட்களும் அங்கு இல்லை. ஆகவே தேவன் **வானத்துக்** களஞ்சியங்களைத் திறந்து, **மன்னா** தவறாமல் பொழியும்படி செய்தார். அப்பத்தைக் காட்டிலும் சிறப்பான உணவை அவர்கள் பெற்று மகிழ்ந்து உண்டார்கள்; அது வானத்தின் அப்பமாகிய தூதர்களின் உணவு.

தேவனுடைய கிருபையாலே அருளப்பட்ட காடை (78:26-31)

அவர்கள் புலாலையும் கேட்டார்கள். ஆனால் பாலைவத்தில் அத்தனை திரளான கூட்டத்துக் குத் தரும்படி புலாலுக்கு எங்கே போவது? அந்தப் பிரச்சினைக்கு தேவனே தீர்வு கண்டார். கிழக் கிலிருந்து **கீழ்க்காற்றை** வரப்பண்ணி இஸ்ர வேல் பாளையமிருந்த இடத்திலே காடைகள் கூட்டம் கூட்டமாக வந்து விழும்படி செய்தார். நிச்சயமாக அந்தப் பறவைகள் பாலைவனத்தைச் சேர்ந்தவையல்ல, தொலைவிலிருந்து தான் அவை கொண்டுவரப்பட்டிருக்கும். ஆனால் அவை பெரு மளவில் இலவசமாகக் கொடுக்கப்பட்டன.

மக்கள் அந்தப் பறவைகளின் கறியை மென்று ஆவலுடன் உண்டுகொண்டிருந்த போதே **தேவ கோபம் அவர்கள்மேல் எழுந்தது**. இஸ்ரவேல் மனிதர்களில் மிகவும் வலிமையோடு இருந்தவர் கள் செத்துப்போகும்படி கொள்ளை நோயை அவர் அனுப்பினார்.

மக்கள் தொடர்ந்து பாவம் செய்ததும், தேவனு டைய நீங்காத இரக்கமும் (78:32-39)

அவருடைய அன்பிற்கான அனைத்து நிரூ பணங்களும் இருந்தபோதிலும், அவர்களுடைய இருதயங்கள் உண்மையற்று இருந்தன. தேவன் செய்த எந்தச் செயலும் அவர்களுக்கு இன்ப மளிக்கவில்லை. அவர் அற்புதங்கள் செய்த போதிலும் அவர்கள் குறைசொல்லுகிற மனப் பான்மையோடே இருந்தார்கள். ஆகவே அவ்வப் போது இஸ்ரவேலரிடத்தில் யெகோவா மரணத் தையும் அழிவையும் அனுப்பினார். உயிர் தப்பிய வர்களிடத்தில் கொஞ்சக்காலம் அவை புத்திபுகட் டியது போலக் காணப்பட்டது; அவர்கள் கர்த்த ரிடத்தில் திரும்பினார்கள். தங்களுடைய பொல் லாப்பைக் குறித்து மனம் வருந்தி அவரிடம் வாஞ் சையோடு திரும்பினார்கள். அவர்களுக்கு எத்த கைய தஞ்சமாக அவர் விளங்கினார் என்பதை யும், எகிப்தின் கொடுமையிலிருந்து எவ்விதமாக அவர் விடுவித்தார் என்பதையும் அவர்கள் உணர்ந்தார்கள். ஆனால் சிறிது காலத்திற்குள் அவர்கள் பொய்யான வாழ்வை வாழத் தொடங் கினார்கள், பக்திநிறைந்த பேச்சும் நெறிபிறழ்ந்த வாழ்வும் அவர்களுடைய வாழ்க்கை முறையா யிற்று. அவர்கள் நிச்சயமற்றவர்களாகவும் கீழ்ப்படியாதவர்களாகவும் இருந்தார்கள்.

கர்த்தர் பெருமளவில் தம்மைக் கட்டுப்படுத் திக் கொண்டார். அவருடைய மிகுதியான **இரக் கத்தின்** காரணமாக, அவர் அவர்களுடைய நீண்டகாலப் பின்மாற்றத்தை **மன்னித்தார்**, அவர்கள் அடையவேண்டிய பேரழிவைத் தடுத்து நிறுத்தினார். அவர்கள் இன்று இங்கிருந்து நாளை மறைந்துபோகிற வெறும் மனிதர்களே என்று அவர் **நினைவுகூர்ந்தார்.**

மக்களின் கிளர்ச்சி, கோபமூட்டிய செயல் மற்றும் நன்றிகெட்ட செயல் (78:40,41)

வருந்தத்தக்க வரலாற்றைப் பாடலாசிரியன் மீண்டும் எடுத்துரைக்கப் போகிறான் (வச. 40-58). திரும்பக் கூறப்படுகிறபோது நாமே களைப்புறு வோமானால், கர்த்தருக்கு அது எவ்வளவு எரிச்ச லைத் தந்திருக்கும் என்பதை எண்ணிப் பாருங் கள்!

மீண்டும் மீண்டும் அவர்கள் பாலைவனத்தில் கலகம் செய்தது, அவருடைய இருதயத்திற்கு எவ்வளவாக **விசனத்தை உண்டுபண்ணியிருக் கும்.** திரும்பத் திரும்ப அவர்கள் அவரைச் சோதித்து, இஸ்ரவேலின் பரிசுத்தரை மட்டுப்படுத்தி அவ ருக்கு மனவேதனையை உண்டுபண்ணினார்கள்.

எகிப்திலிருந்து மக்கள் பெற்ற விடுதலையை மறந்த செயல் (78:42-53)

78:42 தாம் வலிமைமிக்கவர் என்பதை அவர் அவர்களுக்காக மெய்ப்பித்த செயலையும் எவ் விதமாக அவர் அவர்களை எதிரிகளிடத்திலி ருந்து மீட்டார் என்பதையும் அவர்கள் **நினை - யாமற் போனார்கள்**. அந்த நாள் வரையிலும் மனித வரலாற்றில் அவர்கள் எகிப்திலிருந்து விடுவிக்கப்பட்ட நிகழ்வே தெய்வீக ஆற்றலின் மிகப் பெரிய சாதனையாக விளங்கியது. ஆனால் அவர்களோ அதைத் தங்களுக்குக் கிடைக்க வேண்டிய ஒன்று என்று நினைத்தார்கள்.

78:43 நாற்பத்துமூன்று முதல் ஐம்பத்து மூன்று வரை எகிப்து மீண்டும் நினைவுகூரப்படுகிறது. இந்த முறை அங்கு நிகழ்ந்த ஆறு பேரிடர்கள் கீழ்க்காணும் வரிசை முறையில் வலியுறுத்தப்படு கின்றன.

முதலாவது பேரிடர் - ஆறுகள் இரத்தமாக மாறிய நிகழ்ச்சி (வச. 44)

நான்காவது பேரிடர் - வண்டுகள் (வச. 45).

இரண்டாவது பேரிடர் - தவளைகள் (வச. 45).

எட்டாவது பேரிடர் - வெட்டுக்கிளிகள் (வச. 46)

ஏழாவது பேரிடர் - கல்மழை (வச. 47,48)

பத்தாவது பேரிடர் - முதற்பிறந்தவர்களின் மரணம் (வச. 49-51).

78:44 தேவன்தாமே அவர்களுடைய **நதி களை இரத்தமாக மாற்றினார்**. அதன் காரண மாக எகிப்தியர் அவற்றிலிருந்து நீர் அருந்த முடிய வில்லை. புனித நதி என்று அவர்கள் கருதிய நைல் சடிதியில் களங்கமடைந்தது. ஆனால் இஸ்ர வேலருடைய நீர்நிலைகள் மாசடையவில்லை.

78:45 எகிப்தியர் எல்லோருடைய வீடுகளுக் கும் அவர் கூட்டங்கூட்டமாய் **வண்டுகளை** அனுப்பினார். அவர்கள் பெயெல்செபூல் என்னும் "வண்டுகளின் அரசனை" வணங்கிவந்தார்கள். அவர்களுடைய தெய்வமே இப்பொழுது அவர் களை அழிக்கும்படி மாறிவிட்டது. இதில் கவனிக் கத்தக்கது என்னவெனில் இஸ்ரவேலர் வசித்து வந்த கோசேன் நாட்டுக்குள் வண்டுக் கூட்டங்கள் படையெடுத்து வரவில்லை.

மேலும் அவர் தவளைகளைக் கொண்டு எகிப்துக்கு ஒரு பேரிடரை அனுப்பினார். தவளை இன உற்பத்திக்கு அடையாளமாயிருந்தது. **அவர்களைக் கெடுக்கும்படி** என்னும் சொற் றொடர் அவர்களுடைய இயல்பான வாழ்க்கை ஸ்தம்பித்துப் போகும்படி என்னும் பொருளையே தருகிறது. ஆனால் அந்தப் பேரிடர் எகிப்தியரை மட்டுமே பாதித்தது. இஸ்ரவேலர் தேவனுடைய கரத்தால் பாதுகாக்கப்பட்டார்கள்.

78:46 எகிப்து நாட்டையே மூடும்படி தேவன் வெட்டுக்கிளிகளை அனுப்பினார். இவ்விதமாக அழிவை ஏற்படுத்தும் பூச்சிகளிலிருந்து அவர் களை செராபிஸ் என்னும் தெய்வம் காப்பாற்றும் என்பது அவர்களது நம்பிக்கை. ஆனால் செரா பிஸ் அழிவைத் தடுக்க வகைதெரியாமல் இருந் தது. பயிர் சேதமடைந்தது, அறுவடை முற்றிலும் நாசமடைந்தது. இவையெல்லாம் நடந்த தருணத் தில் இஸ்ரவேலரோ **புழுக்களையும் வெட்டுக் கிளிகளையும்** பார்க்கவும் இல்லை.

78:47,48 ஏழாவது பேரிடரில் **கல்மழை, ஆலங்கட்டிகள், இடிமின்னல்கள்** ஆகியவை இடம்பெற்றன. அது மனிதர்களையும், கால் நடைகளையும், ஆடுகளையும், திராட்சைத் தோட்டங்களையும் பெருமளவில் பாதித்தது. ஆனால் அந்தத் தண்டனை பாகுபாட்டுடன் செயல்படுத்தப்பட்டது. "இஸ்ரவேல் புத்திரர் இருந்த கோசேன் நாட்டிலே மாத்திரம் கல்மழை இல்லை" (யாத். 9:26).

78:49 அதன் பிறகு தேவன் மிகக் கடுமையான தாக்குதலை நிகழ்த்தினார் - முதற்பிறந்தவர் களின் மரணம். தேவனுடைய உக்கிரமான **கோபம், மூர்க்கம், உபத்திரவம், தூதர் களாலே** ஏற்படுத்தப்பட்ட அழிவு எல்லாம் அவிழ்த்துவிடப்பட்டன என்று பாடலாசிரியன் கூறு கிறான். சில வேத பகுதிகளில் கர்த்தர் தாமே எகிப்து தேசத்தில் முதற்பிறந்தவர்களை அழிக் கும்படி சென்றார் என்று கூறப்பட்டுள்ளது (யாத். 11:4; 12:12, 23, 29). ஆனால் யாத்திராகமம் 12:23 - இல் அவர் தமது செயலாற்றும் பிரதிநிதியாகச் சங்காரக்காரனை அனுப்பினார் என்று சொல்லப் பட்டுள்ளது. ஒரு குழுவின் உறுப்பினர்களாகத் **தீங்குசெய்யும் தூதர்கள்** அனுப்பப்பட்டார்கள் என்று பாடலாசிரியன் கூறுகிறான்.

78:50-53 அவருடைய கோபம் எவ்விதத் தடை யுமின்றிக் கொழுந்துவிட்டு எரியும்படி, **அதற்கு வழிதிறந்தார்**. எகிப்தியன் ஒவ்வொருவனுடைய வீட்டிலும் தலைப்பிள்ளை சாகும்படி பெயர்தெரி யாத **கொள்ளைநோய்** தாக்கியது. எகிப்தின் ஆண்மக்களின் மிகச்சிறந்த பகுதி அன்று இரவு அழிந்துவிட்டது. ஆனால் இஸ்ரவேலின் வீடுகள் பஸ்கா ஆட்டின் இரத்தத்தால் பாதுகாக்கப்பட் டன. எபிரெயப் பிள்ளைகளில் ஒருவனும் சாக வில்லை.

இந்தக் கொள்ளைநோய்கள் யாவும் பாரபட்ச மாகவே தாக்கின, அதற்கான இயற்கை முறை சார்ந்த விளக்கமளிப்பது முடியாத செயல். யூதர் களுக்காக வியத்தகு வகையில் தேவன் செயல் புரிந்ததை நினைத்து நன்றி செலுத்துவதை அவர்களால் எப்படி நிறுத்த முடியும்?

எகிப்திலிருந்து அவர் தமது மக்களை **ஆட்டு மந்தையைப் போலப் புறப்படப்பண்ணி**, பாதையே இல்லாத பாலைவனத்தின் ஊடாக அவர்களை வழிநடத்தினார். "அவருடைய பகைவரைக் கடல் மூழ்கடித்த அதே நேரத்தில் அவர் அவர்களை எவ்வித அச்சத்திற்கும் இடமின்றி, பாதுகாப்புடன் வழிநடத்தினார்" (கெலிநேயு). அது அவருடைய அன்புக்கும் ஆற்றலுக்கும் அதிசயமான காட்சிப் பொருளாக விளங்கியது!

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டிற்கு அவர் களைக் கொண்டுவந்த தேவனுடைய தயவை மக்கள் மறந்த செயல் (78:54,55)

அவர் அவர்களைப் **பரிசுத்த** நாட்டின் எல் லைக்கு **அழைத்துக்கொண்டு வந்தார்,** அவரு டைய **வலதுகரத்தினால்** அவர்களுக்காகச் சம்பாதித்த மலைப்பாங்கான நாடே அது. உண் மையில், அந்த நாட்களில் உருவ வழிபாடு செய்து வந்த புறச்சமய மக்கள் அங்கு குடியிருந்தார்கள். ஆகவே அவர் அங்கிருந்து புறவின மக்களைத் துரத்திவிட்டு, அதை இஸ்ரவேலின் கோத்திரத்

தாருக்குப் பங்கிட்டுக் கொடுத்தார். யெகோவா தமது மக்களை மென்மையாக நடத்தினது போல வேறு எந்த மேய்ப்பனும் தனது ஆடுகளை நடத்தி யதில்லை!

பரிசுத்த நாட்டில் மக்கள் செய்த துரோகமும் உருவவழிபாடும் (78:56-58)

அவர்கள் அவருக்கு நன்றியோடு இருந்தார் களா? இல்லை! நீதிபதிகளின் காலத்தில் அவர் கள் எல்லைக்குட்படா அளவு அவரைச் சோதித் தார்கள், அவருக்கு எதிராகக் கலகம் செய்தார் கள், அவருடைய கட்டளைகளைப் பொருட் படுத்தவில்லை. பெற்றோரைப் போலவே பிள்ளை களும் இருந்தார்கள், அவர்கள் உண்மையற்ற வர்கள் மற்றும் நம்பிக்கையற்றவர்கள் என்பதை மெய்ப்பித்தார்கள். ஏறுமாறாகச் செயல்படும் வில் லைப் போல அவர்கள் நம்பிக்கைக்கு எதிராகச் செயல்பட்டார்கள். மலை உச்சிகளில் அவர்கள் உருவ வழிபாட்டுக்கென கோயில்களைக் கட்டி கர்த்தருக்குக் கோபமூட்டினார்கள், மேலும் அவர் கள் **தங்களுடைய விக்கிரகங்களால்** தேவ னுக்கு மிக அதிகமாக எரிச்சலூட்டினார்கள்.

தேவனுடைய கோபமும், அவர் இஸ்ரவேலைப் புறக்கணித்த செயலும் (78:59-67)

78:59,60 தேவன் இஸ்ரவேல் மக்களின் நன்றி யற்ற செயல்களைக் கண்டு அவருடைய கடுஞ் சினத்தை வெளிப்படுத்தியதாகப் பாடலாசிரியன் கவிதை நடையில் இங்கு வரைந்து தருகிறான். உண்மையில் யெகோவாவுக்கு அவர்களுடைய செயல் வியப்பை ஏற்படுத்தவில்லை; அவர்கள் செய்த கலகங்களில் அது கடைசி நிகழ்வே யாகும். ஆனால் இந்தத் தருணத்தில் அவர் இஸ்ர வேலின் மேல் தமது இடிமுழக்கத்தைச் செலுத்தி னார், அதாவது கலகமும் கிளர்ச்சியும் செய்வதில் தலைமை வகித்த வட பகுதி கோத்திரங்கள் மேல் அது விழுந்தது. ஆசரிப்புக் கூடாரத்தின் இருப் பிடமாகத் திகழ்ந்த **சீலோவை** விட்டு அவர் வில கினார்; தம்முடைய மக்களோடு குடியிருக்கும்படி பூமியில் அவர் முதலில் தெரிந்துகொண்ட இடமே அது.

78:61-64 அந்தத் தருணத்தில் தேவன் தமது **பலத்தை**, அதாவது உடன்படிக்கைப் பெட்டி யைப் பெலிஸ்தரின் **சிறையிருப்புக்குக்** கொண்டு போக அனுமதித்தார். அவருடைய மகிமைக்கு அடையாளமான பொன்னால் மூடப்பட்ட பெட்டி பகைவரின் கைகளில் பிடிபட்டது (1 சாமு. 4:11). இஸ்ரவேல் மக்களில் பெருமளவினர் கொல்லப் பட்டார்கள்; அந்தப் போரில் 30000 காலாட்படை வீரர்கள் மடிந்தார்கள் (1 சாமு. 4:10). பெருமளவு இளைஞர்கள் போரில் கொல்லப்பட்டதன் காரண மாக, திருமணப் பாடல்களின் இசை அங்கு ஒலிக்கவில்லை, கன்னிப் பெண்களுக்கான திருமண அறிவிப்புகளும் கேட்கவில்லை. ஏலி யின் கெட்டுப்போன ஆண்மக்களாகிய ஓப்னி பினெகாஸ் என்னும் **ஆசாரியர்கள் பட்டயத் தால் விழுந்தார்கள்** (1 சாமு. 4:11). பெலிஸ்த ரால் உடன்படிக்கைப் பெட்டி பிடிபட்டுப் போயிற்று என்னும் செய்தியால் ஏற்பட்ட துக்கம், அந்த ஆசாரியரின் விதவைகள் தங்களுடைய கணவர் கள் இறந்ததால் ஏற்பட்ட துக்கத்தை வெளிப் படுத்த முடியாதபடி தடுத்துவிட்டது. இஸ்ரவேலை விட்டு மகிமை சென்று விட்டது என்பதை அவர் கள் அறிந்துகொண்டார்கள் (1 சாமு. 4:19-22).

78:65,66 தமது மக்களின் அவல நிலையைக் கண்டு சிறிது காலம் யெகோவா கவலைப்படாதது போலத் தோன்றியது. ஆனால் உடனடியாக அவர் கடுஞ்சினத்துடன் எழுந்தார், அவ்வாறு அவர் எழுந்த செயல் **திராட்சை ரசத்தால்** கெம்பீரித்து எழுகிற மனிதனுடைய செயலுக்கு ஒப்பாயிருந்தது. அது பெலிஸ்தரை எந்த அளவிற்குத் தோற்கடித்திருக்கும்! அவர்கள் ஓடுவதற்குத் திரும்பியபோது அவர் பின்புறமாக அடித்தார். அது அவர்களுடைய தோல்விக்குப் பெருத்த அவமானச் சின்னமாக விளங்கியது (1 சாமு. 7:10,11; 13:3,4; 14:23).

78:67 ஆனாலும் **யோசேப்பின் கூடாரத்தைப்** புறக்கணிக்க தேவன் செய்த தீர்மானத்தில் உறுதியாயிருந்தார். **எப்பிராயீம் கோத்திரத் தையும்** அவர் தெரிந்தெடுக்கவில்லை. இங்கு யோசேப்பு, எப்பிராயீம் என்னும் பெயர்கள் வட நாட்டுப் பத்துக் கோத்திரங்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதற்பிறப்பு உரி மையை ரூபன் இழந்தபிறகு, யோசேப்பு தனது இரு ஆண்மக்களாகிய எப்பிராயீம், மனாசே ஆகியோரின் மூலமாக நில எல்லையில் இரு மடங்கு பங்கைப் பெற்றான்.

யூதா, சீயோன்மலை, தாவீது – தேவனுடைய தெரிந்தெடுப்புகள் (78:68-72)

78:68,69 ஆனால் கலகம் செய்ததில் எப்பி ராயீம் தலைவனாயிருந்தான், ஆகவே தேவன் ஆளுகையை எப்பிராயீமுக்குக் கொடுக்காமல், யூதாவுக்குக் கொடுத்துச் சிறப்பித்தார். மேலும் அவர் தமது ஆலயத்தைக் கட்டுவதற்கு யூதா

வின் எல்லையில் சீயோன் மலையைத் தெரிந் தெடுத்தார். உயர்ந்த வானங்களைப் போல உயரமாகவும் பூமியைப் போல அசைக்கப்படாத தாகவும் அந்த மலை இருந்தது.

78:70,71 அந்த யூதா கோத்திரத்திலிருந்தே அவர் **தம்முடைய தாசனாகிய தாவீதைத் தெரிந்துகொண்டார்**. மேய்ப்பனாகிய அரசன் தமது பயிற்சியை **ஆட்டுத் தொழுவங்களில்** கற்றான். **கறவலாடுகளைப்** பராமரித்து வந்த தாவீது, இயற்கைச் சூழ்நிலைகளின் மூலமாக ஆவிக்குரிய உண்மைகளைக் கற்றான். பின்னர் யெகோவா **தம்முடைய மக்களாகிய யாக் கோபையும் தம்முடைய சுதந்தரமாகிய இஸ்ர வேலையும் மேய்ப்பதற்காக** அவனை **அழைத் துக்கொண்டுவந்தார்**. தாவீது அதை நிறை வேற்றினான்.

78:72 இவன் அவர்களைத் தன் இருதயத் தின்படியே மேய்த்து, தன் கைகளின் திறமை யினால் அவர்களை நடத்தினான்.

இவ்வாறாக மேய்ப்பருக்குரிய அமைதி வாய்ந்த குறிப்போடு இந்தச் சங்கீதம் முடிவடை கிறது. ஆனால், இதைவிட்டு நாம் செல்வதற்கு முன், இஸ்ரவேலின் வரலாறு நம்முடைய சொந்த வாழ்க்கையைப் பிரதிபலிப்பதாகவே இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. சொல்லப் போனால், நாம் பெற்றிருக்கிற சிலாக்கியங்கள் மிகப் பெரியவையாக இருப்பதால், அவர்களைக் காட்டிலும் நாம் அதிகக் குற்றத்திற்குரியவர்களா கக் கருதப்படுவோம். கல்வாரியின் முழு வெளிச் சத்தில் வாழ்கிற நாம், ஏன் குறைகூறவேண்டும், கலகம் செய்யவேண்டும், கர்த்தரை ஓர் எல்லைக் குட்படுத்தவேண்டும், அல்லது நன்றிசெலுத்தத் தவற வேண்டும்? ஆனால் நாமோ குற்றஞ் சுமத்தப்பட்டவர்களாகவே இருக்கிறோம். எண் ணிக்கையில் அடங்கா தடவைகள் இஸ்ரவேலின் பரிசுத்தருக்குக் கோபமூட்டியிருக்கிறோம். ஆயி ரம் முறை தவறிழைத்து அவருக்கு மனவருத் தத்தை ஏற்படுத்தியிருக்கிறோம். அவரிடத்திலி ருந்து எண்ணிலடங்கா நன்மைகளைப் பெற்றும் நாம் முணுமுணுக்கிறோம், குறைகூறுகிறோம்.

தேவனுடைய பொறுமை எடுக்க எடுக்கக் குறையாதது. நாம் அடைந்த பின்மாற்றத்தின் கசப்பை நாம் ருசிக்க ஒரு நேரத்தை அவர் வாய்க் கச் செய்கிறார். அவருடைய கிருபையை நாம் பயனற்றதாகக் கருதுவோமானால், அவருடைய ஒழுங்கு நடவடிக்கையை எதிர்கொள்ள நேரிடும். உண்மையோடும் விசுவாசத்தோடும் அவருக்குப் பணிபுரிய நாம் மறுப்போமானால், அதைச் செய் வதற்கு அவர் வேறு மனிதர்களைத் தெரிந்தெடுப் பார். நாம் ஆசிர்வாதங்களை இழக்க நேரிடும், நாம் பணிவிடை புரிய இவரைக் காட்டிலும் சிறந்த எஜமானரை ஒருக்காலும் கண்டடையோம்.

சங்கீதம் 79: சிறைப்பட்டவரின் புலம்பல்

சங்கீதம் 79, 74 -ஆவது சங்கீதத்தின் கூட் டாளி. அந்தச் சங்கீதம் முதன்மையாக தேவனு டைய சொத்தாகிய ஆலயம் அழிக்கப்பட்டதைக் குறித்துப் பேசுகிறது. அந்த ஆலயம் தரைமட்ட மாக்கப்பட்டதைக் குறித்து இந்தச் சங்கீதம் சுருக்கமாகக் குறிப்பிட்டாலும், இஸ்ரவேலராகிய தேவனுடைய மக்கள் பாழாக்கப்பட்டதைக் குறித்தே இது பெரும்பாலும் பேசுகிறது. பாடலாசிரியன் அரிய நாவன்மையோடு யூதர்களின் தேவையை முன்னிறுத்தி வேண்டுதல் செய்கிறான். மேலும் வேதனையிலிருந்து நிவாரணம் அளித்து முன்னி ருந்த நிலைக்குப் புதுப்பிக்க வேண்டுமென்று விண்ணப்பிக்கிறான்.

79:1 புறச்சமய ஆக்கிரமிப்பாளர்கள் இஸ்ர வேல் நாட்டின்மேல் போர்தொடுத்து, தலைநக ரத்திற்குள்ளாகக் கவசம் பூண்ட குழுக்களைப் போலவிரைந்து தாக்கினார்கள். புனித ஆலயம் அவர்களுடைய பரிசுத்தமாக்கப்படாத கால் களாலே தீட்டுப்படுத்தப்பட்டது. இனிய நகரம் இப்பொழுது கற்கூளமாக மாறிப் போயிற்று.

79:2-4 படுகொலை மிகப் பயங்கரமாயிருக் கிறது. அழுகிய மாம்சத்தின் துர்நாற்றம் காற்றின் வாசனையைக் கெடுத்துக்கொண்டிருக்கிறது. யூதர்களுடைய உடல்கள் எங்கும் சிதறிக் கிடக் கின்றன. கடைசி அவமதிப்பாக அச்சடலங்கள் அடக்கம் செய்யப்படாமல் கிடக்கின்றன. பருந்து கள் அவற்றின் மேல் பாய்ந்து வருகின்றன. மாம் சத்தைத் தின்னும் விலங்குகள் தங்களுடைய இரையை பேராசையோடு விரைந்து பெருத்த சத்தத்தோடு விழுங்குகின்றன. **எருசலேம்** எங் கும் **இரத்தம் தண்ணீரைப் போலப்** பாய்ந்து ஓடியது, வெட்டப்பட்டவர்களைப் புதைப்பதற்கு எந்த ஏற்பாட்டையும் போர்தொடுத்தவர்கள் செய்யவில்லை. இஸ்ரவேலைச் சுற்றிலும் இருந்த புறவின அண்டை நாட்டினர் காழ்ப்புணர்ச்சியுடன் கூடிய மகிழ்ச்சியில் ஆரவாரித்தார்கள்.

79:5-7 கர்த்தருடைய கடுஞ்சினம் மற்றும் எரிச் சல் ஆகியவற்றின் அடையாளமே இது என்பதில் ஐயமேதுமில்லை. எதுவரைக்கும் அவரது எரிச் சல் அக்கினியைப் போல எரியும்? புறவினத்

தாருக்கு எதிராகச் செயல்படவேண்டிய தருண மில்லையா இது? அந்தப் புறவினத்தார் யெகோ வாவை அறிய விரும்பவில்லையே; அவருடைய திருப்பெயரைத் தொழுதுகொள்ள அவர்களுக் குச் சற்றேனும் விருப்பமில்லை, வேண்டு மென்றே எதிர்த்து நின்றார்கள். இப்பொழுது அவர்கள் தங்களுடைய பாவங்களின் சிகரமாக தேவனு டைய மக்களைப் படுகொலை செய்து, தேசத் தைச் சின்னாபின்னமாக அழித்துப் போட்டார்கள்.

79:8-10 இதுகாறும் சொல்லப்பட்டவை அனைத் தும் முன்னுரையே, பாடலாசிரியன் இப்பொழுது செய்தியின் முக்கிய கட்டத்திடமாய் வருகிறான், இஸ்ரவேல் இனத்தாரின் பாவமே இந்தப் பேரிடருக்கான அடிப்படைக் காரணம் என்று அவன் அறிகிறான். "எங்களுடைய மூதாதையரின் **அக்கிர மங்களை எங்களுக்கு விரோதமாக நினை யாதேயும்!**" அவ்வித அறிக்கை வெளிப்பட்டவுடன் சர்வ வல்லவருடைய பரிவைத் தூண்டிவிடத்தக்க தடையில்லா வாதங்களை அவன் முன்மொழி கிறான். முதலாவது தேவனுடைய இரக்கத்திற் காக அவன் விண்ணப்பிக்கிறான். இப்போது அதற் கான தேவை அதிகம், வேறு எந்தச் சமயத்தைக் காட்டிலும் இப்போது அது அதிகமாகத் தேவைப் படுகிறது. பின்னர், அவன் தேவனுடைய திருப் பெயரின் மகிமையை அடிப்படையாகக் கொண்டு தனது வேண்டுதலை முன்வைக்கிறான்; அவரு டைய திருப்பெயரின் மேன்மை இப்பொழுது கேள்விக்குறியாக இருக்கிறது. இறுதியாக, எதிரி களின் பேச்சை ஒடுக்க வேண்டியது முக்கிய மானது. இஸ்ரவேலின் தேவன் இப்பொழுது உயி ரோடில்லை என்று அவர்கள் சொல்கிறார்கள். அவருடைய விசுவாசமுள்ள ஊழியக்காரர் சிந் திய இரத்தத்திற்குப் பதிலாகப் பழிவாங்கித் தம்மு டைய உளவாம் தன்மையை வெளிப்படுத்து வதற்கு மிகப் பெரிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

79:11,12 பின்னர் பாடலாசிரியன் **கட்டுண்ட வருடைய** துயர்மிக்க **பெருமூச்சை** தேவன் கேட்க வேண்டுமென்று விண்ணப்பிக்கிறான். மேலும் மரணம் அடையும்படி கைவிடப்பட்டவர் களை அவருடைய மிகப்பெரிய வலிமைக்கு உகந்த வண்ணம் மீட்க வேண்டும் என்றும் அவன் விண்ணப்பிக்கிறான். கர்த்தருடைய புனிதத் தன் மையை மதிக்காமல் அவர்மேல் நிந்தைகளைச் சுமத்திய எதிரிகள் அதன் காரணமாக **ஏழத் தனையாகத்** தண்டிக்கப்படவேண்டும் என்றும் அவன் விண்ணப்பிக்கிறான்.

79:13 இது இஸ்ரவேலின் சமாதானத்திற்கும் தேவனுடைய புகழ்ச்சிக்கும் காரணமாக விளங் கும். அவருடைய அன்பார்ந்த மந்தை அவருக்கு நன்றி செலுத்துவதை ஒருக்காலும் நிறுத்தாது. அவருக்குப் புகழ்ச்சியைச் செலுத்தும்படி தலை முறை தலைமுறையாக மக்கள் எழுவார்கள்.

சங்கீதம் 80:
தேவனுடைய வலதுகரத்து மனிதர்

பல சங்கீதங்களை ஊடுருவியுள்ள துக்கமும் பெருமூச்சும் இந்தச் சங்கீதத்திலும் தொடர்கிறது. முதலாவது மந்தை, அடுத்தது திராட்சைச் செடி என்னும் உவமைகளின் அடிப்படையில் இஸ்ர வேல் பாவமன்னிப்புக்காகவும் சீர்திருத்தத்துக் காகவும் வேண்டுதல் செய்கிறது.

80:1-3 மன்றாட்டு **இஸ்ரவேலின் மேய்ப்பரை** நோக்கி ஏறெடுக்கப்படுகிறது. யாக்கோபு **யோசேப்பை** ஆசிர்வதிக்கையில் பயன்படுத்திய தேவனுடைய திருப்பெயர் இதுவே - "மேய்ப்பனும் இஸ்ரவேலின் கன்மலையும் (ஆதி. 49:24). அவரே **யோசேப்பை ஆட்டுமந்தையைப் போல** எகிப்தி லிருந்து கானானுக்கு வழிநடத்தியவர். அவரே மகிமையின் மேகத்தில், மகாபரிசுத்த ஸ்தலத் தின் கிருபாசனத்தை நிழலிட்டு மறைத்துக் கொண்டிருந்த **கேருபீன்கள் மத்தியில்** முடி சூட்டப்பட்டிருந்தவர். ஆனால் இப்பொழுதோ அவர் இஸ்ரவேலைவிட்டு விலகிச் சென்றுவிட்ட தாகத் தோன்றுகிறது, புனிதத்தலம் அழிக்கப் பட்டுவிட்டது; ஆகவேதான் அவர் இரக்கத்தால் **பிரகாசிக்க** வேண்டும், **எப்பிராயீம் பென்யமீன் மனாசே** ஆகியோருக்கு தயவுகாட்ட வேண்டும் என்னும் விண்ணப்பங்கள் ஏறெடுக்கப்படுகின் றன. இந்த மூன்று கோத்திரத்தாரே கோகாத்தியர் உடன்படிக்கைப் பெட்டியை ஏந்திச் சென்றபோது முன்னணியில் அணிவகுத்துச் சென்ற படைவீரர் கள் ஆவார்கள். இங்கு அவர்கள் இஸ்ரவேல் எல்லோருக்கும் பிரதிநிதிகளாக விளங்குகிறார் கள். தேவன் தமது **வல்லமையை எழுப்ப** வேண்டுமென்று பேராவலோடு வேண்டுகிறார்கள். ("அவர் தமது புயத்தை முறுக்கிவிட வேண்டும்" என்று நாம் சொல்லுவது போல இது இருக்கிறது.) அவர் அவர்களைச் சிறையிருப்பிலிருந்து மீட்க வேண்டும் என்று விண்ணப்பிக்கிறார்கள். இரக் கத்தின் காரணமாக அவருடைய முகம் அவர் கள்மேல் பிரகாசித்தால் மட்டுமே, அவர்களு டைய விடுதலை உறுதிபெறும்.

80:4-7 சேனைகளின் தேவனாகிய கர்த்த ருக்கும் (யெகோவா எலோஹிம் சாபோத்) இஸ்ர

வேலுக்கும் இடையே பெரும் இடைவெளிதூரம் உண்டாயிற்று. அவர்களுடைய பாவங்களுக்கு எதிராக மட்டுமின்றி, அவர்களுடைய விண்ணப்பங்களுக்கு எதிராகவும் அவர் **கோபம்** கொண்டிருக்கிறார். அவர்களுடைய உணவாகக் கண்ணீரின் அப்பத்தையும், குடிப்பதற்கு பொங்கிவழிகிற அழுகையையும் அவர் கொடுத்தார். புறவின **அயலகத்தாருக்குச்** சண்டையும் **வழக்கும்** ஏற்படுவதற்கான காரணராக அவர் அவர்களை மாற்றினார். அவர்களுடைய பகைவரின் நடுவில் எள்ளி நகையாடுவதற்கான ஏளனப் பொருளாக அவர்கள் ஆக்கப்பட்டார்கள். இதற்கான தீர்வு ஒன்றே ஒன்றுதான் - சேனைகளின் தேவன் (எலோஹிம் சாபோத்) கிருபையோடும் இரட்சிக்கும்படியும் அவர்களை நோக்கிப் பார்க்கவேண்டும்.

80:8-11 தேவன் இஸ்ரவேலை **எகிப்திலிருந்து** இளம் **திராட்சைக் கொடியாகக்** கொண்டுவந்தார். வாக்குறுதி பண்ணப்பட்ட நாட்டில் அதனை நடும் பொருட்டு, அங்கிருந்து அவர் **கானானியரைத் துரத்தினார்**. திராட்சைத் தோட்டத்தின் உரிமையாளராக அவர் நிலத்தைப் பண்படுத்தி, அதை நட்டார்; இவ்விதமாகவே கர்த்தர் தமது மக்களுக்காக மிகப்பெருமளவில் வருத்தத்தைச் சுமந்தார். அவர் அந்த நாற்றைப் பிடுங்கி நட்டதில் வெற்றிபெற்றார். திராட்சைக் கொடி ஆழமாக வேரூன்றி, மக்கள்தொகை பெருகி தேசமெங்கும் படர்ந்தது. திராட்சைக்கொடி செழிப்போடு வளர்ந்தது; மகிமையில் மலைகளைக் காட்டிலும் உயரமாகவும் **திவ்வியமான கேதுரு** மரங்களைக் காட்டிலும் பலம் பொருந்தினதாகவும் இருந்தது. அதனுடைய கொடிகள் ஒரு திசையில் மத்திய தரைக்கடலையும், மறுதிசையில் ஐபிராத்து **நதியையும்** தொட்டன. சாலொமோனின் ஆட்சியின் கீழ் இஸ்ரவேல் ஐபிராத்து நதிமட்டும் விரிவடைந்திருந்தது (1 இராஜா. 4:21,24). ஆனால் அந்நிலை சிறிது காலம் மட்டுமே நிலைத்திருந்தது.

80:12,13 ஆனால் பின்னர் தேவன் தமது பாதுகாப்பு வேலியைக் கீழே இறக்கி, அந்தத் திராட்சைக் கொடியைக் கொள்ளைக் கூட்ட நாடுகள் பிடுங்கிச் செல்ல அனுமதித்தார். காட்டுப் பன்றியும் கொடிய விலங்குகளும் அங்கு வந்து நாட்டையே நாசமாக்கின - அவ்வாறு வந்த நாடுகள் எகிப்து, அசீரியா, பாபிலோன், பிற்காலத்தில் பெர்சியா, கிரேக்கு, ரோம். காட்டுப்பன்றி என்னும் உருவகத்தைப் பாடலாசிரியன் தனது அறிவுக்கு அப்பாற்பட்டு எழுதினான். ஏனெனில் பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு ரோமர்கள் தங்களுடைய போர்க்கொடியில் பன்றியையே சின்னமாகக் கொண்டு இஸ்ரவேலைத் தாக்கித் தரைமட்டமாக்கினார்கள். அந்தச் சின்னத்தை உயர்த்திக்காட்டுவதில் அவர்கள் பெருமைகொண்டிருந்தார்கள்.

80:14,15 ஆசிர்வாதத்தோடு **சேனைகளின் கர்த்தர்** தங்களிடமாகத் **திரும்பிவர** வேண்டும் என்று மக்கள் மீண்டும் ஒருமுறை விண்ணப்பிக்கிறார்கள். வானத்தின் அலங்கத்திலிருந்து அவர் கீழ்நோக்கிப் பார்க்க வேண்டும், **"உமது வலது கரம் நாட்டின கொடி, உமக்கு நீர் திடப்படுத்தின கிளை"** என்று அவர்கள் விவரித்து, அதனிடத்தில் அவர்கள் இரக்கம் பாராட்ட வேண்டும் என்று விண்ணப்பிக்கிறார்கள். யூதர்களுடைய வேதம் இதனை இவ்வாறு கூறுகிறது: "உமக்கு நீர் திடப்படுத்தினவராகிய மேசியா அரசர்மேல்" என்று அவர்கள் குறிப்பிடுவது கவனத்தை ஈர்க்கிறது. பதினைந்தாவது வசனத்தில் **திராட்சைத் தோட்டமும் கிளையும்** இஸ்ரவேலைக் குறிப்பதாகவே தோன்றுகிறது. இரண்டு வசனங்களுக்குப் பிறகு எவ்வித ஐயத்திற்கும் இடமின்றி மேசியா அறிமுகப்படுத்தப்படுகிறார்.

80:16 திராட்சைக் கொடியானது போர்தொடுத்து வந்த படைகளால் **வெட்டப்பட்டு, அக்கினியால் எரிக்கப்பட்டது**. கர்த்தருடைய குற்றஞ்சுமத்தும் சினத்தால் **அவர்கள் அழிக்கப்படுவதற்குத்** தகுதியானவர்களே ஆவார்கள்.

80:17,18 "உமது கரம் உமது வலதுபாரிசத்தின் மனிதர்மேலும், உமக்கு நீர் திடப்படுத்தின மனிதகுமாரன் மேலும் இருப்பதாக" தேவனுடைய வலதுகரத்தின் மனிதர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே ஆவார் (சங். 110:1; எபி. 1:3; 8:1; 10:12). நற்செய்தி நூல்களில் அடிக்கடி அவர் தம்மை **மனிதகுமாரன்** என்றே குறிப்பிட்டுப் பேசினார். அவருக்குரிய இடம் தரப்படும் போது தான் இஸ்ரவேல் தனது முழுமையும் நிறைவுமான நன்மையைப் பெறும். அவ்வாறு பெறுகிற போது அது ஒருக்காலும் பின்மாற்றம் அடைவதில்லை. கர்த்தராலே புதுப்பிக்கப்பட்ட நிலையில், அவர்கள் கர்த்தருடைய **நாமத்தைத் தொழுதுகொள்வார்கள்.**

80:19 மீண்டும் மீண்டும் இடம்பெற்றுள்ள பல்லவியோடு இந்தச் சங்கீதம் முடிவடைகிறது. அலைந்துதிரிகிற ஆடுகளை முன்னிருந்த நிலைக்குச் சீர்திருத்தும்படி மேய்ப்பர் வலியுறுத்தப்படுகிறார். **சேனைகளின் தேவனாகிய கர்த்தருடைய** புன்முறுவல் **இஸ்ரவேலை இரட்சிக்கும்.**

சங்கீதம் 81: எக்காளப் பண்டிகை

யூதர்களுடைய பண்டிகையைத் திருவாளர் அங்கர் இவ்வாறு விவரிக்கிறார்:

> எக்காளப் பண்டிகை ஒரு விழாவாகக் கொண் டாடப்பட்டது. கண்டிப்பான பொருளில், எல்லா வேலைகளிலிருந்தும் ஓய்வெடுத்து, நினை வூட்டுதலின் வகையில் எக்காளங்களை ஊதிப் பரிசுத்த சபை கூடுதலே அவ்விழா. பிற்காலத் தில், பானபலி ஊற்றப்பட்டபோது ஆசாரியரும் லேவியரும் 81 –ஆவது சங்கீதத்தைப் பண் ணிசைத்துப் பாடினார்கள், மாலையில் பலி செலுத்தப்பட்ட நேரத்தில் அவர்கள் 29 –ஆவது சங்கீதத்தைப் பாடினார்கள். எருசலேம் நகரத் தில் காலை முதல் மாலை வரை பகல் முழுவதும் எக்காளங்கள் ஊதப்பட்டன... அந்த நாளில் தேவன் எல்லா மனிதர்களையும் நியாயந் தீர்த்ததாக போதகர்கள் (ரபீக்கள்) நம்பினார் கள். மேய்ப்பனுக்கு முன் ஆடுகள் கூட்டமாகச் செல்வதுபோல அவர்கள் சென்றார்கள்.[52]

திருச்சபை பிரித்தெடுக்கப்பட்ட பிறகு இஸ்ர வேல் அவர்களுடைய சொந்த நாட்டில் மீண்டும் ஒன்றுகூட்டப்படுவதற்கு எக்காளப் பண்டிகை மாதிரியாக இருக்கிறது.

81:1-5அ இப்பாடலின் தொடக்க வசனங் களில், இஸ்ரவேலின் வலிமையின் ஆதாரமாக விளங்கும் தேவனைப் புகழ்ந்து பாடவும், **யாக் கோபின் தேவனைக் குறித்து ஆர்ப்பரிக்கவும்** இஸ்ரவேல் மக்கள் அழைக்கப்படுகிறார்கள். யாக் கோபின் தேவன் என்னுமிடத்து எல்லாக் கிருபை யும் நிறைந்த இறைவன் என்பது பொருளாம். லேவியர் தங்களுடைய இசைக் கருவிகளோடு வந்து பாடற்குழுவினரோடு சேர்ந்து கொள்ளும் படியும், ஏழாவது **மாதப்பிறப்பை** அறிவிக்கும் பொருட்டு ஆசாரியர் எக்காளத்தை ஊதும்படியும் அழைக்கப்படுகிறார்கள். அது இஸ்ரவேல் மக்க ளுக்காக தேவன் நியமித்த ஓய்வுநாள் (லேவி. 23:23-25; எண். 29:1). அவர் அதனை அவர்கள் **எகிப்து தேசத்தைவிட்டுப் புறப்படுகையில் யோசேப்பிலே** (இங்கு யோசேப்பு இஸ்ரவேலையே குறிக்கிறது) **சாட்சியாக ஏற்படுத்தினார்.** எகிப்து நாட்டோடு இறைமக்கள் எதிர்த்து நின்று, அவர் களுடைய தேசத்தை விட்டுப் புறப்படுகையில் தேவன் இதனை நியமித்தார் என்பதே இதன் பொருள்.

81:5ஆ **"நான் அறியாத பாஷையைக் கேட் டேன்"** என்று இந்த வசனம் கூறுகிறது. பேசுபவர் பாடலாசிரியனா, இஸ்ரவேலா, தேவனா என்பதை நாம் அறிய வேண்டும்.

பாடலாசிரியனோ இஸ்ரவேலோ இந்தச் சொற் களைக் கூறினால் அங்கு பாஷை என்று குறிப் பிடப்பட்டுள்ளது:

1. எகிப்து நாட்டாரின் அந்நிய மொழியாகும் (சங். 114:1).
2. எகிப்திலிருந்து தேவன் தமது மக்களை மீட்டபோது, அவர் அவர்களுடைய ஆத்து மாக்களுக்கு வெளிப்படுத்தின புதிய செய்தி யாக அது இருக்கக்கூடும், அதாவது தேவன் இஸ்ரவேலுடன் பேசியவை.
3. இந்தச் சங்கீதத்தில் எஞ்சிய வசனங்களா கிய தேவவாக்கு இவ்வாறு குறிப்பிடப்பட் டுள்ளது.

தேவனே இதைக் கூறுகிறார் எனில், இங்கு காணப்படும் சிந்தனை கீழ்க்கண்டவாறு இருக்குமென்று தோன்றுகிறது:

"நான் அறியாத பாஷையைக் (ஏற்றுக் கொள்ளாத மொழி என்னும் பொருளில் எகிப் திய மொழியை இது குறிக்கிறது) **கேட்டேன்."** "எகிப்தியரை தேவன் தமது ஆடுகளாக ஏற் றுக் கொள்ளவில்லை" என்று திருவாளர் வில்லியம்ஸ் குறிப்பிடுகிறார்.

"நான்" என்று இந்தச் சங்கீதத்தில் இடம்பெற் றுள்ள எஞ்சிய பகுதிகள் யாவும் தேவனையே குறிப்பிடுவதால், கடைசியில் சொல்லப்பட்டுள்ள பொருளே சரியென்று தோன்றுகிறது.

81:6,7 எகிப்தியருக்குக் கீழ் அடிமை வேலை செய்துவந்த தமது மக்களுடைய தோள்களை தேவன் அந்தச் **சுமையிலிருந்து** விடுவித்தார். களிமண்ணும் செங்கற்களும் நிறைந்திருந்த **கூடைகளைச்** சுமப்பதிலிருந்து அவர்களுடைய **கைகள் நீங்கலாக்கப்பட்டன.** அவர்கள் கூப் பிட்டபோது, அவர்களுடைய எல்லாத் தீமைகளி லிருந்தும் அவர் தப்புவித்தார். **இடிமுழக்கமுண் டாகும் மறைவிடத்திலிருந்து** அவர் அவர் களுக்கு விடைபகர்ந்தார். இது அவர்களை வழி நடத்தின மேகத்தையோ, சீனாய் மலையிலி ருந்து நியாயப்பிரமாணம் அவர்களுக்குக் கொடுக் கப்பட்டதையோ குறிப்பிடுகிறது எனலாம். **மேரி பாவின் தண்ணீரிடத்தில்** அவர் அவர்களைச் சோதித்தார். அங்குதானே மோசே கன்மலையை அடித்து தேவனுடைய வெறுப்புக்கு ஆளானான்.

81:8-10 அவரே மெய்யான ஒரே தேவன் என் பதை உணர்ந்து உண்மையோடு இருப்பதில்

தான் ஆசிர்வாதத்திற்கான வழி அமைந்திருக் கிறது என்று அவர் அவர்களை எச்சரித்தார். உருவ வழிபாட்டை அவர் தடைசெய்தது ஐயத் திற்கிடமற்றது. இவற்றை அவர்களுக்கு நினை வூட்டியதற்குப் பிறகு, அவர் அவர்களை எகிப்திலி ருந்து புறப்படப்பண்ணினார். அவர்கள் தங்களு டைய வாயை விரிவாய்த் திறந்தால் அதனை நிரப்புவதாக அவர் வியத்தகு வாக்குறுதியைக் கொடுத்தார். சில நேரங்களில் சோம்பேறிப் பிர சங்கிகள் தங்களுடைய ஆயத்தமின்மைக்கு இத னைக் காரணம் காட்டுவார்கள்; அவர்கள் செய்ய வேண்டியதெல்லாம் அவர்கள் வாயைத் திறக்க வேண்டியதுதான், கர்த்தர் அவர்களுக்குச் செய்தியை வழங்குவார் என்பது அவர்கள் கூறும் பொருள். ஆனால் அதுவன்று இதன் பொருள்! அவர்கள் தேவனிடத்தில் மிகப்பெரிதான வேண்டு தலோடு வருவார்கள் என்றால், அவர் அவர் களுக்கு இதனை நிறைவேற்றுவார் என்பதே இதன் பொருள். கீழ்ப்படிதலுள்ள மக்களுக்கு அவரால் செய்ய முடியாத நன்மை எதுவுமில்லை. கேபலீன் என்பார் இதனை நன்கு எடுத்துரைக் கிறார்:

> இந்த வாக்கியத்தின் முழுப் பொருளையும் யாரால் புரிந்துகொள்ள முடியும்! அவர் எல்லா வல்லமையும் உடைய கர்த்தர்; கர்த்தருக்குக் கடினமானது என்று எதுவும் இல்லை. உங்களால் முடிந்த மட்டும் உங்களது வாயை விரிவாய்த் திறவுங்கள், நான் அதனை நிரப்பு வேன் என்று அவர் கூறுகிறார். எனது பெயரில் நீங்கள் எதைக் கேட்டாலும் நான் அதை செய்வேன். அவர் கேட்பதெல்லாம் அவருக்கு நீங்கள் கீழ்ப்படிய வேண்டும் என்பதே, அதா வது உங்களுடைய இருதயத்தையும் சித்தத் தையும் அவருக்கு ஒப்புவிக்க வேண்டும்.[53]

81:11-16 ஆனால் இறைமக்களோ அவரு டைய சத்தத்திற்குச் செவிகொடுக்காமல் தங்க ளுடைய காதுகளை மூடிக்கொண்டார்கள். இஸ்ரவேலர் அவருக்குக் கீழ்ப்படியவில்லை. ஆகவே அவர் அவர்களுடைய வழியிலே செல் லும்படி விட்டுவிட்டார். மேலும் அவர்கள் தங்க ளுடைய சொந்த ஆலோசனையின்படி சென்ற தால் வருத்தத்தின் பாதையில் நடந்தார்கள். ஆனால் இவ்வாறு அவர்கள் கைவிடப்பட்டது தேவனுடைய இருதயத்துக்கு பெரும் வேதனை யைக் கொடுக்காமல் இல்லை. அவர்களது தொடர்ச்சியான மதியீனமும் பிடிவாதமும் அவரு டைய துக்கத்திற்குக் காரணமாயின. அவருக்கு அவர்கள் செவிசாய்த்திருந்தால், அவர்களு டைய எதிரிகளை விரைந்து தாக்கியிருப்பாரே. அவர்களுடைய பகைவர் அவருக்கு முன்பாக அஞ்சி நடுங்கியிருப்பார்கள், இஸ்ரவேலின் செழிப்பு எந்த இடையூறையும் அறிந்திருக்காது. உச்சிதமான கோதுமையால் அவர் தமது மக்க ளுக்கு உணவூட்டியிருப்பார் - இதுவே மிகச் சிறந்த ஆவிக்குரிய ஊக்கமும் சரீரத்துக்குரிய ஊட்டமும் ஆகும். மேலும் பாலஸ்தீனத்தின் கன் மலையின் தேன்கூடுகளிலிருந்து கிடைக்கின்ற சுவைமிக்க தேனையும் வழங்கியிருப்பார்.

சங்கீதம் 82: உலக அரசர்கள் விசாரிக்கப்படுதல்

82:1 நீதிமன்றம் கூட்டப்படுகிறது. அரசர் தமது இருக்கையில் அமர்கிறார். அவர் **தேவன்** தாமே. உலகின் அரசர்களையும் நீதிபதிகளையும் விசாரித்துக் கடிந்துரைக்கும்படி சிறப்பு மிக்க தெய்வீக ஆலோசனைக் கூட்டம் ஒழுங்குபடுத் தப்பட்டிருக்கிறது. அவர்கள் **தேவர்கள்** என்று அழைக்கப்படுகிறார்கள், ஏனெனில் அவர்கள் தேவனுடைய பிரதிநிதிகள், சமுதாயம் ஒழுங் காக இருக்கவேண்டும் என்பதற்காக அவர்தாமே அவர்களைத் தமது ஊழியர்களாக ஏற்படுத் தினார். உண்மையில் அவர்கள் நம்மைப் போன்ற மனிதர்கள்தான் என்பதில் ஐயமில்லை. ஆனால் அவர்கள் வகிக்கும் பதவியின் நிமித்தம், அவர் கள் கர்த்தராலே அபிஷேகம் பண்ணப்பட்டவர் கள். அவர்கள் தேவனைத் தனிப்பட்ட முறையில் அறியாதவர்களாக இருந்தாலும் அதிகாரபூர்வ மாக அவர்கள் தேவனுடைய பிரதிநிதிகளே. ஆகவே இங்கு **தேவர்கள்** என்னும் மதிப்புக்குரிய பெயரால் குறிப்பிடப்பட்டுள்ளார்கள். அப்பெயரின் அடிப்படைப் பொருள் வீறார்ந்தவர்கள் என்பதே ஆகும்.

82:2 முதலாவது அவர்கள் தங்கள் அதி காரத்தை முறையற்ற வகையில் பயன்படுத்திய தற்காக அவர் அவர்களைக் கடிந்துகொள்கிறார். மோசடி, கையூட்டு ஆகிய குற்றங்களுக்கு அவர் கள் ஆளாயிருந்தார்கள். அவர்களுடைய நிரு வாகத்தில் பணக்காரர் சலுகை பெற்றார்கள், எளி யோர் ஒடுக்கப்பட்டார்கள். குற்றவாளிகள் தண் டனை பெறாமல் தப்பினார்கள், ஆனால் குற்ற மற்றவர்களோ எவ்வித வழியுமின்றி துன்பம் அனு பவிக்க வேண்டியதாயிற்று. நீதியின் தராசுகள் ஒடுக்குதலின் தராசுகள் ஆயின.

82:3,4 சமுதாய நீதியில் அவர்களுடைய பொறுப்புகள் எவை என்று இவ்வுலகம் முழுவதற்குமான நீதியரசர் மீண்டும் ஒருமுறை நினைவூட்டுகிறார். **ஏழைகளுக்கும், திக்கற்றவர்களுக்கும்.... பலவீனருக்கும், எளியவருக்கும்** உரிமைகளைப் பெற்றுத்தர அவர்கள் பரிந்து போராட வேண்டும். சொத்தைப் பறிகொடுத்தவர்களுக்கும், ஒடுக்கப்பட்டவர்களுக்கும் அவர்கள் உதவிபுரிபவர்களாகச் செயல்பட வேண்டும்.

82:5 ஆனால் கர்த்தருடைய எல்லா எச்சரிப்புகளுக்கும் பிறகு, முன்னேற்றம் ஏற்படுவதற்கான எந்த நம்பிக்கையும் காணப்படவில்லை. தனிமையில் பேசுபவர் போல, அவர்கள் அறிவும் புரிதலும் இல்லாமல் செயல்படுகிறார்கள் என்று அவர் பெருமூச்சுடன் கூறுகிறார். அவர்களே இருட்டில் தடுமாறிக்கொண்டு இருக்கிறார்கள், அவ்வாறிருக்க எந்த வழியில் செல்ல வேண்டுமென்று அறியாமல் இருப்பவர்களுக்கு அவர்களால் எவ்வாறு உதவிசெய்ய முடியும்? அதற்கான நம்பிக்கை சிறிதளவும் இல்லை. நீதியோடும் ஞானத்தோடும் அவர்கள் செயல்பட தவறியதன் காரணமாக, சமுதாயத்தின் அடித்தளம் உறுதியற்றிருக்கிறது. சட்டமும் ஒழுங்கும் கண்களுக்குத் தென்படவில்லை.

82:6,7 நற்பேற்றை வானளாவப் பெற்றிருந்த போதிலும், அவர்கள் தண்டனையடைந்து கீழே தள்ளப்படுவார்கள். தேவர்கள் என்றும் உன்னதமானவரின் மக்கள் என்றும் அவர்கள் தேவனாலே அழைக்கப்படுவது உண்மையாயினும், அந்நிலை அவர்கள் தண்டனை அடைவதிலிருந்து விலக்கு அளிப்பதில்லை. அவர்கள் மற்றவர்களைப் போலவே நடத்தப்படுவார்கள். இவ்வுலகத்தின் **பிரபுக்களில் ஒருவனைப் போலவே விழுந்து போவார்கள்**. அவர்கள் கூடுதலாகச் சலுகை பெற்ற காரணத்தால் அவர்கள் அடைகிற தண்டனையும் பெரிதாயிருக்கும்.

நம்முடைய கர்த்தர் தமது எதிரிகளை நேருக்கு நேர் சந்தித்த போது ஒருமுறை ஆறாவது வசனத்தை எடுத்தாண்டார் (யோவான் 10:32-36). அவர் தம்மை தேவனுக்குச் சமமானவர் என்று உரிமைகோரியதன் காரணமாக, அவர் தேவ நிந்தனை செய்வதாக அவர்கள் குற்றஞ்சாட்டினார்கள்.

> "இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: தேவர்களாயிருக்கிறீர்கள் என்று நான் சொன்னேன் என்பதாய் உங்கள் வேதத்தில் எழுதியிருக்கவில்லையா? தேவவசனத்தைப் பெற்றுக்கொண்டவர்களை தேவர்கள் என்று அவர் சொல்லியிருக்க, வேதவாக்கியமும் தவறாததாயிருக்க, பிதாவினால் பரிசுத்தமாக்கப்பட்டும், உலகத்தில் அனுப்பப்பட்டும் இருக்கிற நான் என்னை தேவனுடைய குமாரன் என்று சொன்னதினாலே தேவதூஷணஞ் சொன்னாய் என்று நீங்கள் சொல்லலாமா?" (யோவான் 10:34-36).

மேற்கத்திய நாட்டினருக்கு, இந்த வாதம் தெளிவாகவோ நம்பிக்கை தருவதாகவோ இல்லை; ஆனால் அவரைக் கேட்டவர்களுக்குத் தீவிர உணர்ச்சியைத் தூண்டிவிடுகிறதாக அது இருந்தது. சிறியதைச் சொல்லிப் பெரியதை விளக்க இயேசு முற்படுகிறார் என்பதை அவர்கள் புரிந்து கொண்டார்கள். இந்த வாதத்தின் ஆற்றலைக் கீழ்க்கண்டவாறு விவரிக்கலாம்:

82 -ஆம் சங்கீதத்தில் அரசர்களும் நீதிபதிகளும் தேவர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். உண்மையில் அவர்கள் தெய்வத்தன்மை பெற்றவர்கள் அல்லர். அவர்கள் தேவனுடைய ஊழியர் என்னும் பதவியைப் பெற்றிருப்பதாலே தேவர்கள் என்னும் பெயரால் மதிக்கப்படுகிறார்கள். மிகப் பெரிய வேறுபாடு என்னவெனில் அவர்களிடத்தில் தேவ வார்த்தை வந்தது, அதாவது, அரசாங்கம், நீதி ஆகியவை குறித்த மேலான பதவிகளில் அவர்கள் தேவனாலே அதிகாரபூர்வமாக நியமிக்கப்பட்டார்கள் (ரோமர் 13:1).

இவ்விதமாக தேவர்கள் என்னும் பெயர் அவர்களைப் போன்ற மனிதர்களுக்குத் தாராளமாகச் சூட்டப்படுமென்றால், தேவன் என்னும் திருப்பெயர் எவ்வளவு கூடுதலாக முழுமையாவும் மிகச்சரியாகவும் கர்த்தராகிய இயேசுவுக்குப் பொருத்தமாக இருக்கும். இறைவனாகிய திருத்தந்தையின் மூலமாகவே அவர் பரிசுத்தமாக்கப்பட்டு இவ்வுலகிற்கு அனுப்பப்பட்டார். அவர் இறைவனாகிய திருத்தந்தையோடு நித்தியமாக என்றென்றும் விண்ணுலகில் வாழ்ந்தவர் என்பதே இது சுட்டிக்காட்டும் பொருள். அப்பொழுது திருத்தந்தையே இவரை இவ்வுலக ஊழியத்திற்கெனப் பிரித்தெடுத்தார், பெத்லகேமில் பிறக்கும்படியாக அனுப்பினார்.

தாம் இறைவனுக்குச் சமமானவர் என்று இயேசு உரிமை கோரியதை யூதர்கள் மிகச் சரியாகப் புரிந்துகொண்டவர்களாக, அவரைப் பிடிக்க முயன்றார்கள், அவரோ அவர்கள் கைக்குத் தப்பினார் (யோவான் 10:39).

82:8 இப்பொழுது சங்கீதத்தின் இறுதி வசனத்துக்கு வருவோம்,

தேவனே, எழுந்தருளும், பூமிக்கு நியாயத்தீர்ப்புச் செய்யும்;

நீரே சகல இனங்களையும் சுதந்தரமாகக் கொண்டிருப்பவர்.

மனிதர்களுடைய செயல்பாடுகளில் வந்து குறுக்கிடும்படி ஆசாப் கர்த்தரை நோக்கி அழைக்கிறான். அவர்களுடைய கேடுற்ற நிலை மற்றும் அக்கிரமங்கள் ஆகியவற்றை மாற்றி நீதியையும் நேர்மையையும் நிலைநாட்டும்படி அவன் வேண்டுகிறான். இவ்வுலகை ஆளும்படி கர்த்தராகிய இயேசு திரும்பி வரும்போது இந்த மன்றாட்டுகள் நிறைவேறும். அந்தக் காலத்தில், தீர்க்கதரிசி முன்னுரைத்து போல, "வனாந்தரத்தில் நியாயம் வாசமாயிருக்கும், செழிப்பான வயல் வெளியிலே நீதி தங்கியிருக்கும்" (ஏசாயா 32:16). பூமியானது சமுதாய நீதி நிறைந்த நாட்களை அனுபவிக்கும்; மேலும் அது மோசடி மற்றும் வஞ்சனை ஆகியவற்றிலிருந்து விடுதலை பெற்றிருக்கும்.

சங்கீதம் 83:
ஆறு நாட்கள் போர் பற்றிய சங்கீதம்

1967 -ஆம் ஆண்டு மே 28 -ஆம் நாள் ஐக்கிய அரபுக் குடியரசின் தலைவர் கமால் அப்தல் நாசர் இவ்வாறு அறிவித்தார்: "இஸ்ரவேலுக்கு எதிராக ஒன்றிணைந்த தாக்குதலை நடத்த நாங்கள் திட்டமிடுகிறோம். இது மிகப் பெரிய போராக இருக்கும். இஸ்ரவேலை முற்றிலுமாக அழிப்பதே எங்கள் முக்கியமான நோக்கம்." ஜீன் 5 -ஆம் நாள் போர் வெடித்தது. ஐக்கிய அரபுக் குடியரசுடன் ஜோர்டன், சீரியா, ஈராக், அல்ஜீரியா, சூடான், குவைத், சௌதி அரேபியா, மொரோக்கா ஆகிய நாடுகள் சேர்ந்துகொண்டன. இஸ்ரவேலை கடலுக்குள்ளாகத் தள்ளிவிட வேண்டும். இந்தக் கூட்டு நாடுகள் எடுத்த முயற்சி பலிக்கவில்லை. ஆறு நாட்களில் போர் முடிவடைந்தது. மறுத்துக் கூற இயலாதபடி இஸ்ரவேல் வெற்றி நாடாகத் திகழ்ந்தது.

ஆறுநாட்கள் போருக்குப் பின்னர் இறைநூல் பற்றாளர் பலருக்கு 83 -ஆவது சங்கீதம் புதிய பொருளுடன் காணப்பட்டது. மேலும் இஸ்ரவேல் தனது நாட்டை உரிமை கோருவதற்கு முன்னமேயே, கர்த்தராகிய இயேசுவின் வருகையின் மூலமாக, பல நிறைவேறுதல்கள் நடைபெறவுள்ளன என்னும் செய்தி மாற்றத்திற்கிடமற்றபடி உறுதிசெய்யப்பட்டுள்ளது.

83:1-4,7 முற்றுகை போடப்பட்ட இஸ்ரவேலின் பேச்சாக இது இருக்கிறது என்பதில் ஐயமில்லை. தேவன் தமது அமைதியைக் கலைத்துவிட்டு தீர்மானமாகச் செயல்புரிய வேண்டுமென்று விண்ணப்பிக்கப்படுகிறது. மக்கள் தங்களுடைய சொந்தப் பாதுகாப்புக்காகவும், அழியாமல் நிலைத்திருப்பதற்காகவும் வேண்டுதல் செய்த போதிலும், அது தேவனுடைய நோக்கத்திற்காக ஏறெடுக்கப்படுகிற மன்றாட்டாகவே காணப்படுகிறது: **"உம்முடைய சத்துருக்கள்... உம்முடைய பகைஞர்.. உமது ஜனங்கள் ... உமது மறைவிலிருக்கிறவர்கள்.. உமக்கு விரோதமாக ஒப்பந்தம் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள்."** இஸ்ரவேலின் பகைவர் அவருடைய பகைவரே என்பதை அவர் மறந்துபோக அவர்கள் விடமாட்டார்கள்.

விவரங்கள் உண்மையாகவே நிகழ்ந்தவை. பகைவர் கொந்தளிக்கிறார்கள் - எதிரிகளின் வீறாப்பான பேச்சையும் அச்சுறுத்தல்களையும் இது தெளிவாக விவரிக்கிறது. அவர்கள் உபாய தந்திரங்களை யோசித்துத் திட்டமிடுகிறார்கள் - சோவியத் ரஷ்யாவின் ஆலோசகர் திரைக்குப் பின் இருந்து உதவிபுரிந்தார்கள். அவர்கள் ஒருமித்து ஆலோசனை பண்ணுகிறார்கள் - அரபு நாடுகளின் உச்சி மாநாடு என்னும் பெயருடன் இப்பொழுது அது அறியப்படுகிறது. இஸ்ரவேலை அழித்துப்போடப் போவதாக அச்சுறுத்துகிறார்கள் - மேற்கூறப்பட்டவையின்படி இது உறுதியாகிறது. வெல்வதற்கு அரிதான கூட்டு நாடுகளாக அவை ஒன்றிணைந்தன - இஸ்ரவேலருக்கு நெருங்கிய உறவினர்களாகிய மக்களே அவர்கள்.

83:5,6,8 தற்போதைய நாடுகளோடு இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பெயர்களை இணைத்துப் பார்க்கும்போது சிக்கல் ஏற்படுகிறது. **அசீரியா** என்பது தற்கால ஈராக் என்று நாம் அறிவோம், மேலும் அரபியரின் மூதாதையரான **இஸ்மவேலரும்** ஆபிரகாம் ஆகார் ஆகியோரின் வழிவந்தவர்கள் ஆவார்கள். **ஏதோமியரும் அமலேக்கியரும்** ஏசாவின் வழிவந்தவர்கள் என்பதையும், மோவாபியரும் அம்மோனியரும் **லோத்தின்** வழிவந்தவர்கள் என்பதையும் நாம் அறிவோம்; தற்போதைய நாடுகளில் இவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதைக் கண்டுபிடிப்பது கடினம். காசா என்னும் நீண்ட குறுகிய நிலப்பகுதியில் இப்பொழுது பெலிஸ்தர் குடியிருக்கிறார்கள். **தீரு** நகரம் இப்போது லெபனன் என்று அறியப்படும் நாட்டில் உள்ளது. பண்டைய நாட்களில் குப்லா

அல்லது பைப்பேலாஸ் என்னும் பெயர் பெற்றி ருந்த பட்டணமே கேபால், அது பெனிக்கே நாட் டில் உள்ளது. சில ஆதாரங்கள் **ஆகாரியர்** என்ப வர்கள் ஆகாரின் வழிந்தவர்கள் என்று கூறுகின் றன. ஆகவே அவர்கள் இஸ்மவேலரின் ஒரு வகுப்பினர் என்பது தெரிகிறது, ஆனாலும் அவர் களைக் குறிப்பிட்டு அறிவது இயலாதது. இந்தப் பெயர்கள் தெளிவற்று இருக்கின்ற காரணத்தால் தற்போதைய மத்திய கிழக்கு நாடுகளில் இவை எந்த நாடுகளைக் குறிப்பிடுகின்றன என்று இணைப்பதை விட்டுவிடுதலே நல்லது. இவையாவும் இஸ்ரவேலின் புறவின எதிரிகள் என்பதை நாம் புரிந்துகொண்டால் போதும்.

அடக்கியாளும் வலிமைமிக்க கூட்டு நாடு களுக்கு எதிராக அந்தச் சிறிய இஸ்ரவேல் எவ் வாறு எதிர்த்து நிற்க முடியும்? தேவனுடைய மக்கள் அவருடைய "மறைவிலிருக்கிறவர்கள்" (வச. 3) என்னும் உண்மையே இக்கேள்விக்கான ஒரு பங்கு விடையாகும். அவருக்குள்ளாக "மறைந்திருக்கிறவர்கள்" (A. V), "விலையேறப் பெற்றவர்கள்" (LB), அவரால் "அன்புகூரப்பட்டவர் கள்" என்றெல்லாம் இது மொழிபெயர்க்கப்பட் டுள்ளது. ஆபத்துக் காலத்தில் வியத்தகு வகை யில் அவர் அவர்களை மறைத்துப் பாதுகாக் கிறார், அவர்களுடைய பலவீனத்தில் அவர் நிறை வான பலமாகத் திகழ்கிறார். எல்லாம் அவர் களுக்கு எதிராக நிகழ்கிறபோது, அவர் வெற் றியை அனுப்பி எல்லா மனிதர்களுடைய எதிர் பார்ப்புகளையும் தவறு என்று மெய்ப்பிக்கிறார்.

83:9,10 முந்தைய நாட்களில் நடந்த மூன்று வெவ்வேறு நிகழ்வுகளில் யெகோவா எவ்வாறு செயல்புரிந்தாரோ அதுபோல இப்போதும் செய்ய வேண்டும் என்று முற்றுகையிடப்பட்ட மக்கள் வேண்டுகிறார்கள்.

கானானின் அரசனாகிய **யாபீன்,** அவனுடைய படைத்தளபதி **சிசெரா** ஆகியோர் **கீசோன் ஆற் றண்டையில்** அடைந்த படுதோல்விக்குப் பிறகு எந்தோர் என்னுமிடத்தில் இழிவான முறையில் கொல்லப்பட்டார்கள் (நியா. 4). இஸ்ரவேலின் நிலத்தில் அழுகிப்போன அவர்களுடைய சவங் கள் எருவாயின.

83:11,12 மீதியானின் இளவரசர்களாகிய **ஓரேபு, சேபு** என்பவர்கள் கொல்லப்பட்டு, அவர் களுடைய தலைகள் துண்டிக்கப்பட்டன (நியா. 7:23-25). ஏசாயாவின் சொற்களின்படி அந்நிகழ்வு வீரகாவியக் கொலைகளாகும் (ஏசாயா 10:26).

மீதியானின் அரசர்களாகிய **சேபாவும் சல்மு னாவும் தேவனுடைய வாசஸ்தலங்களை** ஆக்கிரமித்துக் கொள்ள முயன்றார்கள். ஓரேபும் சேபுவும் கொல்லப்பட்டபோது இஸ்ரவேலரிட மிருந்து அவர்கள் தப்பிச் சென்றார்கள். ஆனால் பிற்பாடு அவர்களைப் பிடித்து கிதியோன் கொன் றான் (நியா. 8).

83:13-18 தேவனுடைய எதிரிகள் மேல் அவர் தண்டனை வழங்க வேண்டுமென்று துணிவுடன் வேண்டுகோள் விடுத்த இஸ்ரவேலர் தெய்வீகக் கற்பனைக்கு எதையும் விட்டுவைக்கவில்லை. தண்டனையின் விவரங்கள் கொடுக்கப்பட்டுள் ளன. அவர்கள் **சுழற்காற்றின் புழுதி** போலாக வேண்டும், அல்லது சில மொழிபெயர்ப்புகளில் காணப்படுவதுபோல பிடுங்கப்பட்ட களை போல ஆகவேண்டும். அவர்கள் **காற்றில்** பறக்கும் பதர்போல ஆகவேண்டும். காட்டில் தீ பரவி வரு வதுபோல அவர்கள் துரத்தப்பட்டு, பெருந்தீயில் முற்றிலும் அழிந்துபோக வேண்டும். கர்த்தரு டைய **புயலில்** அவர்கள் பயப்படட்டும். அவர்கள் முழுவதும் அவமானத்துக்குட்படுத்தப்பட்டு, மனி தர்கள் கர்த்தரைத் தேட வேண்டும். பூமி அனைத் திற்கும் யெகோவா ஒருவரே இறையாண்மை பெற்ற அரசர் என்பதை மனிதர்கள் யாவரும் அறி யும்படி அவர்கள் வெட்கத்தில் மடிந்துபோகட்டும்.

கடினமான சொற்களா? ஆம், கடினமான சொற்கள்தான், ஆனால் நீதியற்றவையல்ல. இறைவனுடைய மேன்மைக்கு ஆபத்து ஏற்படுகிற போது, அன்பு மாற்றவியலாத உறுதியோடு இருக்கமுடியும். திருவாளர் மோர்கன் விளக்கிக் கூறுகிறார்:

> பண்டைய மக்களுக்குள்ளாக இந்தப் பாட கர்கள் தேவனுடைய பெருமதிப்பைக் குறித்த பேரார்வத்தோடு உயிரூட்டம் பெற்றவர்களாக வாழ்ந்தார்கள். தீர்க்கதரிசிகளைப் போலவே இவர்களும் தன்னல நோக்கமின்றி செயல்பட் டார்கள். தன்னலம் பாடல் பாடுவதில்லை, அது தரிசனத்தைக் காண்பதில்லை. இதற்கு மாறாக, தேவனுடைய புகழ்ச்சியைக் குறித்த பேரார்வம் மிகவும் கண்டிப்பானது, அதே நேரத் தில் இன்கனிவு கொண்டது.[54]

சங்கீதம் 84:
விண்ணக வீட்டைக் குறித்த ஏக்கம்!

84 -ஆவது சங்கீதத்தின் முதன்மையான விளக்கத்தைப் பற்றிய ஏதொரு கேள்வியும்

இல்லை. நாடு கடத்தப்பட்ட யூதர்கள் மீண்டும் எருசலேமில் இருந்த தேவாலயத்திற்குச் செல்ல வேண்டும் என்னும் ஆழமான வாஞ்சையை இந்தச் சங்கீதம் வெளிப்படுத்துகிறது.

ஓர் உள்ளூர் சபையின் கூட்டங்களில் கலந்து கொள்ள முடியாதபடி ஏதோ ஒரு வகையில் தடை பட்டிருக்கிற ஒரு கிறிஸ்தவனுக்கு இந்தச் சங் கீதத்தைப் பொருத்திப் பார்க்க முடியும் என்பதும் உண்மையே. இறை மக்கள் கர்த்தரைத் தொழும் படி கூடிவருகிற வேளையில் அவர்களோடு சேர வேண்டும் என்று அவனுடைய உள்ளம் அவனை வாட்டுகிறது.

ஆனால், தெய்வீகப் பயணி ஒருவன் தற்போது தனது விண்ணக வீட்டைக் குறித்துக் கொண்டி ருக்கும் ஏக்கத்தை இந்தச் சங்கீதம் எடுத் துரைக்கிறது என்னும் விளக்கத்தையே சிறந்த தாக நான் கருதுகிறேன். அந்த நோக்கத்தில் இந் தச் சங்கீதத்தை நாம் காணலாம்.

84:1,2 தேவனுடைய குடியிருப்போடு ஒப்பிட் டுப் பார்க்கையில் வேறு எந்த இடம் அதனைவிட இனிமையானதாக இருக்க முடியும்! அது இணை யற்ற அழகான தனிச்சிறந்த வகையில் ஒளிவீசக் கூடிய, சொல்லிமுடியாத மகிமையான இடமாகும். நாம் இதைக் குறித்து தெளிவோடு இருப்போம். இடவாகுபெயர் என்னும் இலக்கணத்தின் அடிப் படையில், அந்தக் குடியிருப்பு அங்கு வாழ்கிறவ ரையே குறிக்கிறது. ஆகவே சங்கீத ஆசிரியன், **"என் ஆத்துமா கர்த்தருடைய ஆலயப் பிரா காரங்களின்மேல் வாஞ்சையும், தவனமுமா யிருக்கிறது"** என்கிறான். அவன் உண்மை யாகவே கர்த்தரோடு இருக்க வாஞ்சித்தான். அடுத்த வாக்கியத்தில் அதையே அவன் குறிப் பிடுகிறான் **"என் இருதயமும் என் மாம்சமும் ஜீவனுள்ள தேவனை நோக்கிக் கெம்பீர சத்தமிடுகிறது."**

84:3 அந்தப் பயணி தன்னை **அடைக்கலான் குருவிக்கும் தகைவிலான் குருவிக்கும்** ஒப்பிடு கிறான். மற்றொரு சங்கீதத்தில் குருவியானது தனித்து விடப்பட்ட நிலையைக் குறிக்கும்படி சொல்லப்பட்டுள்ளது, ".... வீட்டின்மேல் தனித் திருக்கும் குருவியைப்போல் இருக்கிறேன்" (102:7). **தகைவிலான் குருவியைக்** கவனித்துப் பார்த்தவர், அது எப்படிப்பட்ட அமைதியற்ற உயி ரினம் என்பதை அறிவார்கள். அது அங்கும் இங்கும் வேகமாகப் பறந்து, காற்றில் மேலும் கீழும் சென்று வருவதைக் காணலாம். இவ்வுலக வாழ்க்கையென்னும் பாலைவனப் பயணத்தைச் செய்யும் இறைமக்கள் பற்றிய சரியான விவரமாக இது இருக்கிறது. அவர்கள் தனித்து அமைதி யின்றி இருக்கிறார்கள். அவர்களுக்கும் அவர் களுடைய குடும்பங்களுக்கும் இளைப்பாறுதலும் பாதுகாப்பும் கர்த்தருடைய **பீடங்களண்டையில்** கிடைக்கின்றன.

ஆசரிப்புக் கூடாரத்திலும் தேவாலயத்திலும் இரண்டு **பலிபீடங்கள்** இருந்தன. ஒன்று வெண் கலப் பலிபீடம், மற்றொன்று பொற்பீடம். முதலா வது கிறிஸ்துவின் மரணத்திற்கும், இரண்டாவது அவருடைய உயிர்த்தெழுதலுக்கும் நிழல்களாக உள்ளன; இரண்டும் சேர்ந்து இரட்சகரின் முடிவு பெற்ற மீட்பின் செயலைப் பிரதிபலிக்கின்றன. தகைவிலான் குருவி தஞ்சமடைந்து இளைப் பாறுவது போல, நாமும் நம்முடைய பிள்ளை களும் இளைப்பாறுவதற்கான இடம் இதுவே. "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப் பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படு வீர்கள்" (அப். 16:31).

84:4 பரிசுத்தமாக்கப்பட்ட வைராக்கியம் என்று நாம் அழைக்கக்கூடிய வகையில், வெடிச்சிதறல் போன்று நாடு கடத்தப்பட்டவர்கள் கூறுகிறார்கள்: **"உம்முடைய வீட்டில் வாசமாயிருக்கிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் எப்பொழுதும் உம்மைத் துதித்துக்கொண்டிருப்பார்கள்."** கர்த்தரோடு இருக்கும்படி தங்களுடைய சொந்த வீட்டுக்குச் சென்ற நமக்கு அன்பானவர்களைக் குறித்து நாம் வருத்தமடையத் தேவையில்லை. நமக்கு அது இழப்பு, ஆனால் அவர்களுக்கோ அது நித்திய ஆதாயம். நம்மைக் காட்டிலும் அவர்கள் மேலான நிலையில் இருக்கிறார்கள்.

84:5 ஐந்து முதல் ஏழு வரையிலான வசனங் களில், ஏற்கனவே விண்ணக வீட்டைச் சென்ற வர்களின் ஆசிர்வதிக்கப்பட்ட நிலையிலிருந்து, அதை நோக்கிச் சென்றுகொண்டிருப்பவர்கள் குறைவான ஆசிர்வாத நிலையில் இருக்கிறார் கள் என்னும் எண்ணத்தை நோக்கி நாம் மீண்டும் வருகிறோம். அவர்களைக் குறித்துப் பல செய்தி கள் சொல்லப்பட்டுள்ளன. முதலாவதாக அவர் களுடைய வலிமை அவர்களிடத்தில் அல்ல, கர்த் தரிடத்திலேயே உள்ளது. அவர்கள் "கர்த்தரி லும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்பட்டவர்கள்" (எபே. 6:10). அடுத்ததாக, அவர்களுடைய இருதயத்தில் சீயோனுக்குச் செல்லுகிற பெரும்பாதையில் செல்லுகிறவர் களாக அவர்கள் காணப்படுகிறார்கள். உலகம் அவர்களுடைய சொந்த வீடு அல்ல. அவர்கள் அதில் இருந்தாலும், அதற்கு உரியவர்கள் அல் லர். அவர்களுடைய இருதயம் புனிதப் பயணம் செய்துகொண்டிருக்கிறது.

84:6,7 அவர்கள் **அழுகையின்** (Baca என்பதன் பொருள் அதுதான்) **பள்ளத்தாக்கை உருவ நடந்து**, அதனை **நீரூற்றாக** மாற்றுகிறார்கள்; இதுவே மூன்றாவது செய்தி. வெல்வதற்கு இயலாத இந்த ஆத்துமாக்கள் துன்பத்தின் நடுவே பாடுகிறார்கள். அவர்களுடைய கண்ணீரின் மூலமாக வானவில்லைக் கண்டடைகிறார்கள். அவர்கள் இன்னல்களை வெற்றிகளாக மாற்றி, பேரிடர்களை மேன்மையானவற்றிற்கான படிகளாக்குகிறார்கள். சூழ்நிலைகளை எதிர்த்து அவர்கள் வெற்றிபெறுவதற்கான இரகசியம் அடுத்த சொற்றொடரில் காணப்படுகிறது, "மழையும் குளங்களை நிரப்பும்." பொதுவாகவே மழையானது பரிசுத்த ஆவியானவருக்கு அடையாளமாகச் சொல்லப்படுகிறது. இங்கு புதிய வலுவூட்டும் ஊழியத்தை அவர் செய்கிறார், குளிர்ச்சி தரும் குளங்கள், பாலைவனப் பயணிகளுக்குத் தெளிவான நீரைத் தருகின்ற ஊழியம். நீரானது தேவனுடைய வார்த்தையைக் குறிப்பதாகவே நாம் எடுத்துக்கொள்கிறோம் (எபே. 5:26 -இல் அவ்வாறுதான் பொருள் தருகிறது). **அவர்கள்** எவ்வாறு **பலத்தின்மேல் பலம் அடைகிறார்கள்** என்பதை இது விவரிக்கிறது. பயணம் தொடரும் வேளையில், பலவீனமடைவதற்குப் பதிலாக, அவர்கள் எல்லா நேரங்களிலும் பலமடைந்தார்கள். புற இயல்பு அழிந்து போனாலும் உள்ளான இயல்பில் ஒவ்வொரு நாளும் புதுப்பிக்கப்படுகிறார்கள் (2 கொரி. 4:16). பின்னர் வியத்தகு வகையில் உறுதி தரும் சொற்றொடர் தரப்பட்டுள்ளது: ஒவ்வொருவரும் **சீயோனிலே தேவசந்நிதியில் வந்து காணப்படுவார்**. அதைக் குறித்து ஐயமேதும் இல்லை, பாலைவன நெடுந்தூரப் பயணத்தின் இறுதியில் அரசரின் நிறைவான அழகில், அவரைக் காணும் மகிழ்ச்சியால் அவர்கள் முடிசூட்டப்படுவார்கள்.

84:8 இப்பொழுது பாடலாசிரியன் மனவெழுச்சி மிக்க மன்றாட்டை ஏறெடுக்கிறான். அது முதலாவதாக **சேனைகளின் தேவனாகிய கர்த்தரை** நோக்கியும், அடுத்த மூச்சில் அது **யாக்கோபின் தேவனை நோக்கியும்** ஏறெடுக்கப்படுகிறது. **சேனைகளின் தேவனாகிய கர்த்தர்** என்னும் நிலையில் அவர் திரள் கூட்டமாகிய தேவ தூதர்களின் அரசராக விளங்குகிறார். **யாக்கோபின் தேவன்** என்னும் நிலையில் அவர் தகுதியற்ற ஒருவனின் தேவனாக, ஏமாற்றுபவனின் தேவனாக இருக்கிறார். சற்று சிந்தித்துப் பாருங்கள்! எண்ணிலடங்கா தேவதூதர்கள் புழு போன்ற யாக்கோபின் தேவனாகவும் இருக்கிறார். அளவிற் கடங்கா நிலையில் உயர்வானவர் மிக நெருக்கமாக அருகில் இருக்கிறார். அதன் காரணமாகவே நீங்களும் நானும் அவருடைய முன்னிலைக்கு எப்பொழுது வேண்டுமானாலும் செல்வதற்குத் தகுதி பெற்றிருக்கிறோம்.

84:9 நாம் அங்கு இருப்பதற்கான தகுதி எது? **எங்கள் கேடகமாகிய தேவனே, கண்ணோக்கமாயிரும்; நீர் அபிஷேகம் பண்ணினவரின் முகத்தைப் பாரும்**. கர்த்தராகிய இயேசு என்னும் ஆளுமை மற்றும் அவருடைய செயல் ஆகியவற்றின் மூலமாகவே நாம் அத்தகுதியைப் பெற்றிருக்கிறோம்.

அண்ணலைக் கண்ணுற்ற இறைவனின் கண்கள்
அடியேனைக் கண்டன,
மன்னவர் இயேசுவின் பிள்ளையாய் ஏற்றனர்
விடுதலையும் தந்தனர்!

84:10 விண்ணகத்தில் சேருவது எதற்கு ஒப்பாகும்? வேறு எங்கேனும் **ஆயிரம் நாட்கள்** இருப்பதைப் **பார்க்கிலும்**, அவருடைய **பிராகாரங்களில் செல்லும் ஒரே நாள் நல்லது**. ஒப்பிடுவதற்கு இயலாதது என்று கூறுவதற்குப் பதிலாக இங்கு வேறு சொற்களில் அவ்வுண்மை கூறப்பட்டுள்ளது. இயேசு இருக்கும் இடத்தில் இருப்பதால் பெறுகிற புகழ்ச்சி, மகிழ்ச்சி, அழகு, விடுதலை ஆகியவற்றை நம்மால் எளிதில் புரிந்து கொள்ள முடியாது. அதனை அறியாமலிப்பதே நல்லது. இல்லையெனில் நாம் இங்கு தொடர்ந்து இருந்து நம்முடைய வேலையைச் செய்வதில் மகிழ்ச்சியற்றவர்களாக மாறி விடுவோம்.

கேடுற்றவர் கூடாரங்களில் குடியிருப்பதைக் காட்டிலும், **தேவனுடைய ஆலயத்தின் வாசற்படியில் காத்திருப்பது** சிறந்தது. "பிசாசின் சிறந்ததைக் காட்டிலும் தேவனுடைய மோசமானது மேன்மையானதாகும்" என்று திருவாளர் ஸ்பர்ஜன் இதைக் கூறுகிறார். அது மேலானது மட்டுமன்று, நிலையானதுமாகும். தேவனுடைய வீட்டிற்கும் பொல்லாதவர்களின் கூடாரங்களுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டைக் கண்டுணர்க. ஒன்று நிலைபேறான குடியிருப்பு, மற்றதோ சிறிது காலக் குடியிருப்பிற்காகப் போடப்பட்டது.

84:11 இருளின் ஊடாக வெளிச்சத்தைப் பிரகாசிப்பிக்கிற **சூரியனாக தேவனாகிய கர்த்தர்** இருக்கிறார். மேலும் செல்லுகின்ற வழியில் வாட்டும் வெப்பத்திலிருந்து பாதுகாக்கிற **கேடகமாகவும்** அவர் விளங்குகிறார். வழியில் நமக்குத் தேவை ஏற்படுகிற ஒவ்வொரு சமயத்திலும் **கர்த்**

தர் கிருபையை அருளுவார். மேலும் பயணத்தின் முடிவில் மகிமையைக் கொடுத்து அவர் மீட்கப்பட்ட தமது பிள்ளைகளை நித்திய வீட்டிற்குள் வரும்படி வரவேற்கிறார். உண்மையான செய்தி என்னவெனில், பயணம் செய்பவன் பூமிக்கும் வானத்திற்கும் நடுவில் ஒரு குறைவும் அடையான், ஏனெனில் அவர் **உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார்.** நமக்கு நல்லது எதுவோ அதை அவர் வழங்காமல் இருப்பதில்லை; அவர் எதையேனும் வழங்கவில்லையெனில் அது நமக்கு நல்லதல்ல. "தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி" (ரோமர் 8:32).

84:12 "சேனைகளின் கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிற மனிதன் பாக்கியவான்" என்று உளமார்ந்த வகையில் பாடலாசிரியன் வியந்து போற்றியதில் எவ்வித ஆச்சரியமுமில்லை! என்னுடைய இருதயமும் அதற்கு பதிலுரைக்கிறது "ஆம், கர்த்தாவே, நான் கிறிஸ்தவனாக இருப்பதற்காக நித்திய காலமெல்லாம் உமக்கு நன்றியோடு இருப்பேன்."

சங்கீதம் 85: எங்களுக்கு உயிர்மீட்சி தாரும்!

உயிர்மீட்சிக்கான இந்த மன்றாட்டு புரிந்து கொள்வதற்கு ஏதுவான எளிய முறையில் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன:

முந்தின நாட்களில் இஸ்ரவேலில் நடந்த உயிர்மீட்சி (வச. 1-3).

மீண்டும் அவ்வாறு நடைபெறவேண்டுமென்னும் விண்ணப்பம் (வச. 4-7).

கர்த்தர் எவ்வாறு விடைகூறுவார் என்று காத்திருத்தல் (வச. 8,9).

எதிர்காலத்தில் உயிர்மீட்சி நடைபெறும் என்பதற்கான வாக்குறுதி (வச. 10-13).

இங்கு விவரிக்கப்பட்டுள்ள இஸ்ரவேல் உயிர்மீட்சி அடைந்த நிகழ்ச்சி இதுதான் என்று குறிப்பிட்டுச் சொல்லுவது முடியாத செயல். இந்தச் சங்கீதம் **கோராகின்** மக்கள் எழுதிய **சங்கீதம்**, அவர்கள் பாபிலோனியச் சிறையிருப்புக்கு வெகு காலத்திற்கு முன் வாழ்ந்தவர்கள். ஆகவே இந்நிகழ்ச்சி அதற்குப் பின்நிகழ்ந்தது அல்ல. ஆனால் இது எது என்பதை அறிவது முக்கியமல்ல. இதில் குறிப்பிடத்தக்கது என்னவெனில் இதைச் செய்தவர் தேவனே ஆவார். ஒருமுறை அவர் செய்தார் என்றால், அவர் அவ்வாறு மீண்டும் செய்வது திண்ணம்.

85:1-3 யாக்கோபின் நல்வாழ்வு மீண்டும் முன்னிருந்த நிலைக்குக் கொண்டுவரப்பட்டது; **கர்த்தர்** தமது **தேசத்தின்மேல் பிரியம் வைத்த** காலம் என்று அந்த உயிர்மீட்சி நிகழ்ச்சி விவரிக்கப்பட்டுள்ளது. மூன்று செயல்கள் அதை நோக்கி வழிநடத்தின. முதலாவது **பாவம்** அறிக்கை செய்யப்பட்டது. இந்தச் செயல் பற்றிய விவரம் வெளிப்படையாகச் சொல்லப்படவில்லையெனினும், அறிக்கைசெய்தல் தொடர்ந்து நிகழவேண்டியவற்றிற்கு முன் நடைபெறவேண்டிய தவிர்க்கவியலாத ஒழுங்காக இருக்கிறது. இரண்டாவது அவருடைய மக்களின் **அக்கிரமம் மன்னிக்கப்பட்ட** செயல், மூன்றாவது தேவனுடைய **உக்கிரம்** தடுக்கப்பட்டது.

85:4 முந்தின காலத்தில் தேவன் மன்னித்த செயல், அவ்வித இரக்கத்தின் செயல் மீண்டும் நடைபெற வேண்டும் என்று மன்றாடுவதற்கான அடிப்படைக் காரணம் ஆகும். வரலாற்றில் விசுவாசம் மனநிறைவு அடைகிறதில்லை; தற்காலத்தில் தேவன் அதை நடப்பிக்க வேண்டும் என்று அது விரும்புகிறது. பாடலாசிரியன் அறிக்கை செய்தல் பற்றி ஒன்றும் சொல்லவில்லை என்றாலும், **"எங்களைத் திருப்பிக் கொண்டு வாரும்"** என்று ஏறெடுத்த மன்றாட்டில் அந்தப் பொருள் தொக்கியிருக்கிறது. முதலாவது அவர் தமது மக்களை மனந்திரும்பும்படி செய்கிறார், பின்னர் அவர் அவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறார். அதன் பிறகு அவரது கடுஞ்சினத்தால் உண்டான தண்டனையைத் தடுத்து நிறுத்துகிறார்.

85:5 கர்த்தரை விட்டு விலகிச் செலவிடுகிற எந்த நேரமும் நித்திய மனவேதனை போலக் காணப்படும். ஆனால் 5 -ஆவது வசனத்தில் வேதனையூட்டும் வகையில் ஏறெடுக்கப்பட்ட விண்ணப்பம், பல நூற்றாண்டுக் காலமாகத் துன்பம் அனுபவித்து, சொந்த நாட்டிலிருந்து துரத்தப்பட்டு தவித்த இஸ்ரவேல் இனத்தாரின் உதடுகளிலிருந்து சிறப்பான பொருளுடன் வெளிப்பட்டது: **"என்றைக்கும் எங்கள்மேல் கோபமாயிருப்பீரோ? தலைமுறை தலைமுறையாக உமது கோபத்தை நீடித்திருக்கப் பண்ணுவீரோ?"**

85:6 ஆவிக்குரிய வீழ்ச்சியின் காரணமாக ஏற்படுகிற மகிழ்ச்சியற்ற நிலையைத் தவிர்க்க வியலாது. ஐக்கியத்தில் ஏற்பட்ட முறிவு விசுவாசியின் பாடலை அவனைவிட்டு நீக்குகிறது. அறிக்கை செய்யப்படாத பாவத்துடன் மகிழ்ச்சி

சேர்ந்து இருப்பதில்லை. ஆகவே இங்கு மன்றாட்டு இறக்கை கட்டி விண்ணகத்தை நோக்கிப் போகிறது: **"உமது மக்கள் உம்மில் மகிழ்ந்திருக்கும் படி நீர் எங்களைத் திரும்ப உயிர்ப்பிக்கமாட்டீரோ?"** ஆவிக்குரிய உயிர்மீட்சி மகிழ்ச்சியின் மணிகளை மீண்டும் ஒலிக்கச் செய்கிறது. ஒவ்வொரு பெரிதான உயிர்மீட்சியுடனும் பாடல் சேர்ந்து ஒலித்திருக்கிறது.

85:7 தேவன் தமது மக்களை முன்னிருந்த நிலைக்குத் திரும்பச் செய்கிறபோது, அவருடைய இரக்கத்தின் கிருபை நிறைந்த வெளிப்பாடாக அது விளங்கும். அவர் நம்மோடு ஈடுபடுகிற எல்லா விதச் செயல்களிலும் அது வெளிப்படுகிறது. அவருடைய அன்பே நம்மைச் சிட்சிக்கிறது, நம்மை ஒழுங்குபடுத்துகிறது, சரிசெய்கிறது, இறுதியில் முன்னிருந்த நிலைக்குத் திரும்பச் செய்கிறது. நாம் அலைந்து திரிகிற எல்லா நேரங்களிலும், நம்முடைய பின்மாற்ற நிலைகளிலும், நம்முடைய கீழ்ப்படியாத நேரங்களிலும் அந்த அன்பு எவ்வளவாக உறுதியோடிருந்து நம்மைத் தாங்கி நடத்துகிறது. கர்த்தருடைய அன்பைப் போல வேறு எந்த அன்பும் இருப்பதில்லை.

மேலும் உயிர்மீட்சி கர்த்தரிடத்திலிருந்து பெறுகிற **இரட்சிப்பின்** நன்கொடையாகும் - இங்கு சொல்லப்பட்டிருப்பது ஆத்தும இரட்சிப்பு அல்ல, உண்மையற்ற நிலையினால் உண்டான விளைவுகளிலிருந்து மீட்பு - சிதறடிக்கப்படுதல், சிறைப்படுதல், இடர்ப்பாடு, அதிகாரமின்மை, மகிழ்ச்சியின்மை.

85:8,9 உயிர்மீட்சி வேண்டும் என்று கிருபாசனத்தண்டைக்கு தனது வேண்டுதலைக் கொண்டுவந்த பாடலாசிரியன் விடைக்காகக் காத்துக் கொண்டிருக்கிறான். அது **சமாதானத்தோடு** கூடிய விடையாக இருக்குமென்று அவன் உறுதியோடு இருக்கிறான். தங்களுடைய இருதயங்களில் தேவனிடத்திற்குத் திரும்பியவர்களிடத்தில், உடன்படிக்கையை நிலைநிறுத்துகிற அவர் எப்போதும் **சமாதானத்தையே** கூறுவார், அவருக்குப் பயந்தவர்கள் மதிகேட்டுக்குத் திரும்பாதபடி அவர்களை மீட்பார் என்னும் உண்மையே அவனுக்கு அந்த உறுதியைத் தந்தது. இங்கு மகிமை என்னும் சொல் மகிமையின் தேவனைக் குறிப்பிட பயன்படுத்தப்பட்டுள்ளது. இறைமக்கள் அவரோடு ஐக்கியத்தோடு இருக்கிறபோது, அவர்கள் நடுவே கர்த்தர் குடியிருப்பார் என்பது நம்புவதற்குரியது என்பதே இங்கு காணப்படும் சிந்தனை.

85:10 உயிர்மீட்சிக்கான மன்றாட்டின் விடை இந்தக் கடைசி வசனங்களில் கொடுக்கப்பட்டுள்ளது. வரவிருக்கிற மகிமையின் காலத்தில் உயிர்மீட்சி பெற்ற இஸ்ரவேலைக் கர்த்தராகிய இயேசு அரசாளுகிறபோது நிலவும் சீரான நிலையை அவை விவரிக்கின்றன. ஆனால், உயிர்மீட்சியின் தீப்பிழம்புகள் எரிகிறபோது, அந்நிலை எப்படியிருக்கும் என்பதை இவ்வசனங்கள் விரிவாக்கம் பெற்ற கவிதை நடையில் சொல்லுகின்றன.

கிருபையும் சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கும். உலகத்தில் வாழ்கிற மனிதர்களுடைய நடவடிக்கைகளில் சத்தியத்தைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்னும் வற்புறுத்தல்கள் பொதுவாக அன்பு கிருபை ஆகியவை வெளிப்படுவதைத் தடைசெய்கின்றன. ஆனால் தேவனோ தமது மக்களிடம் தமது நிலையான அன்பைப் பொழிந்தருள முடியும், ஏனெனில் சத்தியத்தின் உரிமைகோரல்கள் அனைத்தையும் கர்த்தராகிய இயேசு சிலுவையில் முழுவதுமாக நிறைவேற்றியிருக்கிறார். அதே பொருளில் **நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தஞ் செய்யும்**. விசுவாசிகள் யாவரும் தேவனோடு சமாதானம் பெற்றிருக்கிறார்கள், ஏனெனில் தெய்வீக நீதியின் அனைத்து உரிமைகோரல்களும் இரட்சகர் பதிலாளாகச் செய்து முடித்த செயல்களாலே நிறைவேற்றப்பட்டன.

அண்ணல் இயேசுதம் தலையினில்
நமது பாவத்தைச் சுமந்தாரே
உண்மையாய்க் குருதியைச் சிந்தியே
நமது கடன்களைத் தீர்த்தாரே
தண்டிக்கும் நீதி அதற்கும் மேலாக
ஒன்றையும் கேட்காதே
பண்டக சாலையைக் கிருபை
திறந்து அருள்மழை பொழியுதே!
– ஆல்பர்ட் மிட்லேன்

85:11-13 சத்தியம், அதாவது உண்மையுள்ளதன்மை, **பூமியிலிருந்து முளைக்கும், நீதி வானத்திலிருந்து தாழப் பார்க்கும்**. விசுவாசி தனது நித்திய நேசருக்கு உண்மையோடு இருக்கின்ற நிலையில், வானங்கள் பன்மடங்கு ஆசிர்வாதங்களோடு பதிற்செயல் புரிகிறது. எப்போதும் தமது வார்த்தைக்கு உண்மையோடு இருக்கின்ற **கர்த்தர் நன்மையானதைத் தருகிறார்**. உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு அவர் நன்மையை வழங்காதிரார் (சங். 84:11). வறட்சியும் பஞ்சமும் நீங்கி, **தேசம்** பெருமளவில் விளைச்சலைத் தரும். கர்த்தர் தமது தேசத்தைப் பார்வையிடும்

படி வருகின்ற வேளையில், அவருடைய பிரசன்னத்தைச் சந்திக்க நன்னெறியோடு ஆயத்தப் பட்டவர்களாக நீதியின் வாழ்க்கை வாழும் மக்களின் மத்தியில் பவனிவருவார்.

சங்கீதம் 86: மன்றாட்டும் அதற்கான காரணங்களும்

தாவீது இந்தச் சங்கீதத்தில் கூறியிருக்கும் அனைத்திற்கும், அது வேண்டுதலானாலும், புகழ்ச்சியானாலும், காரணங்களைக் கொடுத்திருப்பது இதன் சிறப்புகளில் ஒன்று. இதனை நாம் கீழ்க்கண்ட வரிசையில் விளக்கிக் கூறலாம்.

வேண்டுதல்	காரணம்
86:1 கர்த்தர் விண்ணப்பத்தைக் கேட்க வேண்டும் என்பதற்கான மன்றாட்டு.	பாடலாசிரியனின் உதவியற்ற நிலையும் தேவையும்.
86:2 பாதுகாப்பிற்கான மன்றாட்டு (வச. 4 மற்றும் வச. 16 ஆகியவற்றிலும் "அடியேன்" - வேலையாள் என்ற சொல் இடம் பெற்றிருப்பதைக் காண்க).	பாடலாசிரியன் பரிசுத்தவான் என்னும் தகு நிலை.
86:2 இவ்வாழ்வுக்குரிய இரட்சிப்புக்கான மன்றாட்டு.	வெளிப்படையான காரணம் கொடுக்கப்பட வில்லை. **நீர் என் தேவன்** என்னும் சொற் றொடரில் அது மறைந்திருக்கிறது எனலாம்.
86:3 கிருபையோடு கருத்திற்கொள்ள வேண்டும் என்பதற்கான மன்றாட்டு.	நாள்முழுவதும் தாவீது ஜெபத்தில் தரித்திருக்கும் நிலை.
86:4 மகிழ்ச்சிக்காகவும், களிகூருதலுக்காகவும் செய்யப்பட்ட விண்ணப்பம்.	கர்த்தரிடத்தில் மட்டுமே அவன் கொண்டிருந்த நம்பிக்கை. வேறு எதிலும் அவன் நம்பிக்கை வைக்கவில்லை.
86:5	முன்னர் கூறப்பட்டுள்ள வேண்டுதல்களுக்கான கூடுதல் காரணத்தை இந்த வசனம் கூறுகிறது. அல்லது 6-ஆவது வசனத்தில் ஏறெடுக்கப்பட்டுள்ள விண்ணப்பத்திற்கு இதனை இணைக்கலாம். **கர்த்தர் நல்லவரும், மன்னிப்பதற்கு** ஆயத்தமுடையவரும், **கிருபை மிகுந்தவருமாய்** இருக்கிறார். அவரை **நோக்கிக் கூப்பிடுகிறவர்களிடத்தில்** இவை பொழியப்படுகின்றன.
86:6 கர்த்தர் விண்ணப்பத்தைக் கேட்க வேண்டுமென்பதற்கான மன்றாட்டு. 86:7 துயரப்படுகிற நாளில் உதவி வேண்டுமென்னும் மன்றாட்டு.	தேவன் ஜெபத்தைக் கேட்டுப் பதில் தருவார் என்னும் உண்மை.

அடுத்துவரும் வசனங்களில் பாடலாசிரியன் புகழ்ந்து போற்றத் தொடங்குகிறான்.

புகழ்ச்சி	காரணம்
86:8 கர்த்தருடைய ஆளுமையும் செயல்களும் ஒப்பிட இயலாதவை. 86:9 எல்லா இனத்தாராலும் புகழப்படுவதற்கான தகுதிபெற்றவர். (இது ஆயிரமாண்டு ஆட்சிக்காலத்தில் நிறைவேறும்.) 86:10	தேவன் **மகத்துவமானவர்.** அவருடைய செயல்கள் **அதிசயமானவை.** வேறு **தேவன்** இல்லை.

விண்ணப்பம்	காரணம்
86:11 கர்த்தருடைய வழியைப் பற்றிய போதனைக்கான மன்றாட்டு.	தேவனுடைய **சத்தியத்தின்படி** பாடலாசிரியன் **நடக்க** வேண்டும். கர்த்தரை உயர்வாய் மதித்து அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று முற்றிலும் ஒப்புவித்த **இருதயம்** வேண்டும்.
புகழ்ச்சி	**காரணம்**
86:12,13 தனது முழு இருதயத்தோடு கர்த்தரைப் புகழ்ந்து போற்றுவதாகவும், அவருடைய நாமத்தை என்றென்றைக்கும் மகிமைப்படுத்துவதாகவும் தவீது இங்கு தீர்மானித்திருப்பதாகக் கூறுகிறான்.	பாதாளத்திலிருந்து அவனைக் காப்பாற்றிய தேவனுடைய பெரிதான கிருபை. நாம் இந்தச் சங்கீதத்தைக் கர்த்தரைப் பற்றியது என்று எண்ணுவோமானால், இது அவருடைய உயிர்த்தெழுதலைக் குறிக்கும்.

86:14-16 பாடலாசிரியனின் வாழ்க்கையில் சடிதியில் ஏற்படக்கூடிய ஆபத்தைக் குறித்துச் சங்கீதத்தின் எஞ்சிய வசனங்கள் விவரிக்கின்றன. அகந்தை கொண்ட ஒரு கூட்டம், கொடுமை செய்யும் மனிதர்கள் அவனுடைய உயிரைப் பறிக்கத் திட்டமிட்டார்கள். இந்த மனிதர்களுக்கு தேவனைக் குறித்துச் சிந்திக்க நேரமில்லை. ஆனால் தாவீதோ தேவனை அறிந்திருக்கிறான். ஆகவே, **மனவுருக்கமும், இரக்கமும், நீடிய பொறுமையும், பூரண கிருபையும், சத்தியமும்** உள்ளவர் தேவன் என்னும் அறிவினால், அவன் இந்த இக்கட்டான கட்டத்தில் தன்னைத் தேற்றிக் கொள்கிறான். ஆகவே கர்த்தர் தன்னை நோக்கிப் பரிவுடன் திரும்ப வேண்டும் என்றும், பலப்படுத்த வேண்டும் என்றும், தன்னை இரட்சிக்க வேண்டும் என்றும் விண்ணப்பிப்பதில் அவன் நம்பிக்கையோடு இருக்கிறான் - அவன் தன்னை தேவனுடைய **அடியாளின் குமாரன்** என்று கூறுகிறான். **"உம்முடைய அடியாளின் குமாரன்"** என்னும் சொற்றொடர் உருவகமாக "உம்முடைய சொத்து" என்று பொருள்படும் என்று சிலர் கருதுகிறார்கள்; ஓர் அடிமைப் பெண்ணின் மகன் எஜமானின் சொத்தாக இருப்பதுபோல இதுவும் கூறப்பட்டுள்ளது. இந்தச் சங்கீதத்தை மேசியாவின் சங்கீதம் என்று கருதுகிறவர்கள் இது கன்னி மரியாளைக் குறிப்பதாகவே எண்ணுகிறார்கள்.

86:17 இறுதியாக, கர்த்தர் தமது தயவை வெளிப்படுத்தும்பொருட்டு ஒரு குறிப்பிட்ட அடையாளத்தைக் கொடுக்கும்படி பாடலாசிரியன் வேண்டுகிறான். தேவன் தாவீதுக்குத் **துணைசெய்து** அவனைத் **தேற்றுகிறதைக்** காணும்போது பகைவர் தாம் தவறான இடத்தில் இருப்பதை உணருவார்கள்.

இப்பாடலிலுள்ள பெரும்பாலான மன்றாட்டுகளுக்கும் புகழ்ச்சிகளுக்கும் காரணங்களை இது கொண்டிருப்பது இதன் சிறப்பு என்று நாம் தொடக்கத்தில் கூறினோம். மேலும் இரண்டு தனிச்சிறந்த அம்சங்கள் இதில் உள்ளன என்பதை நாம் குறிப்பிட வேண்டும். முதலாவது, வேறு வேதபகுதிகளிலிருந்து ஏராளமான மேற்கோள்களைத் தாவீது எடுத்தாண்டிருக்கிறான். வெட்டி ஒட்டுதல் என்னும் முறையில் அவன் வேத வசனங்களை எடுத்துத் தனது மன்றாட்டுகளை ஏறெடுக்கிறான். மேலும் 3,4,5,8,9,12,15 - ஆகிய வசனங்களில் "கர்த்தர்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள "Adonai" என்னும் சொல் ஏழு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. தேவனுக்குப் பயப்படுகிற யூதன் யெகோவா என்னும் பெயருக்குப் பதிலாக, "Adonai" என்னும் பெயரையே அவ்வப்போது பயன்படுத்தி வந்தான்.

சோ.ச்.பெரிம் அல்லது புனித வேதத்தின் பண்டைக்கால பாதுகாவலர் வேதத்தை உரக்கப் படிக்கும்போது யெகோவா என்னும் சொல்லை 134 இடங்களில் அடோனை என்று மாற்றிப் படித்தார்கள். சொல்லுவதற்கரிய யெகோவா என்னும் பெயருக்குப் பெருமதிப்பு அளிக்கும்படி அவர்கள் இவ்வாறு செய்தார்கள்.

தேவனுடைய திருப்பெயருக்குப் (வச. 11) பயப்படும்பொருட்டு நம்முடைய இருதயங்களை ஒருமுகப்படுத்தும்படி திருவாளர் F. W. கிராண்ட் எழுதுகிறார்:

> எங்குமுள்ள இறைமக்களிடம் காணப்படும் மிகப்பெரிய குறையாக இது இருக்கிறது. ஐயத்திற்கிடமற்ற தீமைகளில் காலத்தைக் கழிக்காமல் நம்மில் எத்தனையோ பேர் இருக்கிறார்

கள்; ஆனால் அவர்கள் எண்ணிலடங்கா அற்ப மான விசயங்களில் காலத்தை வீணாகக் கழிக் கிறார்கள், அது இறைவனுக்காக உறுதியோடு பயன் விளைவிக்கக்கூடிய சாட்சிகளாக வாழ் வதைக் கெடுத்துவிடுகிறது! நம்மில் மிகக் குறை வானவர்களே அப்போஸ்தலனுடன் சேர்ந்து, ''ஒன்று செய்கிறேன்!'' என்று சொல்லுகிறோம். ஏற்கனவே நாம் பயணத்தைத் தொடங்கும்படி சாலைக்கு வந்துவிட்டோம்... ஆனால் பய ணத்தை நிறுத்திவிட்டு பூக்களைச் சுற்றிவரும் வண்ணத்துப் பூச்சிகளைத் துரத்திப் பிடிக்கும் படி ஓடுகிறோம். இந்த உலகத்தின் ஆளுகை களையும் அவற்றின் மகிமைகளையும் விட்டு நாம் விலகிச் செல்வதைக்காணும் சாத்தான் எவ்வளவாக வியப்படைகிறான்.. முடிவில்லாத அற்ப விசயங்களில், அதாவது, நெரிஞ்சில் செடியைக் காட்டிலும் சிறிய விசயங்களில் தன் னுடைய வலிமை முழுவதையும் செலவிடுகிற பிள்ளையைக் கண்டு நகைக்கிற நாம்,அதைக் குறித்த ஆழ்ந்த சிந்தனை எதுவுமற்றவர் களாக இருக்கிறோம். நாம் உண்மையாகவே நம்முடைய வாழ்க்கையை மிகக் கவனமாகச் சோதித்துப் பார்ப்போமென்றால்... பேரெண் ணிக்கையில் தேவையற்ற மனக்கவலைகள், சுய கற்பனையில் தோன்றிய கடமைகள், அனு மதிக்கப்பட்ட பொழுதுபோக்குகள், ''தவறற்ற'' அற்ப விசயங்கள் யாவும், ஆதாயம் மிகுந்த அந்த ஒன்றிலிருந்து, எப்போதும் நம்மைத் திசைதிருப்பிவிடுகின்றன என்பதை உணரு வோம்! எழுதப்படாத நமது வாழ்க்கை வரலாறு களின் ஒவ்வொரு நாளிலும் அத்தகைய சோத னைகளை எதிர்கொள்ள நம்மில் மிகக் குறை வானவர்களே கவனத்தோடு இருக்கிறோம்![56]

சங்கீதம் 87: இராஜரிக மக்கள்தொகைக் கணக்கெடுப்பு பற்றிய சங்கீதம்

எருசலேம் மாநகரத் தலைவர் டெட்டிகோலேக் என்பாரும், அவருடைய உடன் நூலாசிரியரும் தங்களுடைய 4000 ஆண்டுகள் பழைமையான நகரத்தின் இயற்கை அதிசயத்தின் வியத்தகு மேன்மையை விவரிக்கிறார்கள்:

> அகழ்வாராய்ச்சி நிபுணர்களும் வரலாற்று ஆசிரியர்களும் எருசலேம் நகரம் இருந்த இடத் தில் அது நிறுவப்பட்டதற்கான காரணத்தையும், இவ்வளவு சிறப்பு வாய்ந்த நகரமாக விளங்கிய தற்கான காரணத்தையும் நீண்ட காலமாக எண்ணி வியந்திருக்கிறார்கள். இந்த உலகத் தில் இருக்கக்கூடிய வேறு முக்கியமான நகரங் கள் முன்னேற்றம் அடைவதற்கும் வளம் பெறு வதற்கும் நில அமைப்பில் பெற்றிருந்த தனிச் சிறப்புகள் எதுவும் இந்நகரத்துக்கு இல்லை. மிகப்பெரிய ஆற்றின் கரையில் இது அமைந் திருக்கவில்லை. இது துறைமுகத்தை நோக்கிய வண்ணமும் இல்லை. பெருவழிச்சாலையும் இதன் வழியாகச் செல்லவில்லை, குறுக்குச் சாலைகளும் இல்லை. பெருமளவில் நீர்நிலை களும் இதனருகில் இல்லை, அவையே பெரும் பாலும் மக்கள் குடியிருப்புப் பெருக்கத்திற்கு ஆதாரமாயிருக்கும். இந்த நகரத்திற்கு முக்கிய மான ஒரே ஒரு இயற்கை நீரூற்று இணைப்பு மட்டுமே இருந்தது, அதுவும் ஓரளவு நீரை மட் டுமே வழங்கிற்று. இங்கு மிகுதியான தாதுப் பொருட்கள் கிடைப்பதற்கும் வாய்ப்பு இல்லை. முக்கியமான வர்த்தக சாலைகளோடு இந் நகரம் இணைக்கப்படவும் இல்லை. பண்டைக் காலப் பேரரசுகள் பெருமளவில் நிலப்பகுதி களைக் கைப்பற்றுவதற்குத் தேவையான போர்க்கலைகளில் தேர்ச்சி பெற்றிருந்தன; அவற்றில் ஒன்றையும் இந்நகரம் பெற்றிருக்க வில்லை. உண்மையில் இவ்வூர் மிகப்பெரிய நகரமாக மாறுவதற்குத் தேவையான பொரு ளாதாரச் சிறப்பு அம்சங்களையோ, மேலான இட அமைப்பையோ பெற்றிருக்கவில்லை; குறுகிய காலத்திற்கு மட்டுமே இருந்து பின்னர் காணப்படாமற்போன ஒத்தகாலத்துப் பற்பல ஊர்களிலிருந்து இந்தப் பெயர்தெரியாத மலைப் பட்டணம் எவ்வகையிலும் வேறுபட்ட தன்று.[57]

87:1-3 இந்நகரத்தின் பெருஞ்சிறப்புக்குக் காரணம், உண்மையாகவே, இது தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டது ஆகும். அவரே இதனைப் **பரிசுத்த பர்வதங்களில்** நிறுவினார். இவ்வுலகில் உள்ள எல்லா மாநகரங்களை அல்லது ஊர் களைக் காட்டிலும் அவர் இதன் **வாசல்களில் பிரியமாயிருக்கிறார்**. இதனுடைய மிகப்பெரிய மகிமை வரப்போகிற நாட்களில்தான் வெளிப் படும் - மேசியா அரசரின் தலைநகராக இது அப்பொழுது விளங்கும், நீண்டகாலமாக எதிர் பார்க்கப்படுகிற மாவரசரின் ராஜரிக நகரம் இதுவே. **தேவனுடைய நகரமாகிய** இந்தச்

சீயோனைக் குறித்து மகிமையான செய்திகள் கூறப்படும்.

உலகத்தின் பல இனத்தாருக்கு ஒரு பொருளில் இந்நகரம் ஆவிக்குரிய பிறப்பிடமாக விளங்கும்:

"கடைசிநாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும்; எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள். திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்" (ஏசாயா 2:2,3).

87:4 நான்காவது வசனத்தில் காணப்படும் கருத்து அதுவே என்று தோன்றுகிறது. இங்கு சீயோன் ஆளுருவாக வருணிக்கப்படுகிறது. பல தேசங்களுக்குள் தன்னைத் தாயாக அறிந்தவர்களில் தெற்கே **ராகாப்** (அதாவது, எகிப்து), வடக்கே **பாபிலோன்** ஆகியவை இருக்கும் என்று அந்தத் தாய் கூறுவாள். மேலும் மக்கள் **பெலிஸ்தியா, தீரு, எத்தியோப்பியா** ஆகிய நாடுகளையும் எருசலேமில் பிறந்ததாகச் சொல்லுவார்கள். உலகின் ஆன்மீக, அரசியல் மற்றும் பொருளாதாரத் தலைநகராகச் சீயோனை ஏற்றுக்கொண்ட நாடுகளுக்குள் இவை இடம் பெறும். இவ்வினத்தார் மாவரசரைத் தொழுதுகொள்ளவும் காணிக்கைகளைச் செலுத்தவும் அங்கு போவார்கள் (ஏசா. 60:5-7). கூடாரப் பண்டிகையைக் கொண்டாடும்படி அங்கு போவதற்கு மறுத்துரைக்கும் இனத்தார் பஞ்சத்தாலும் வாதைகளாலும் பாதிக்கப்படுவார்கள் (சக. 14:16-19).

87:5 ஆகவே எல்லா இனத்தாரும் ஆவிக்குரிய மறுபிறப்பைப் பெறுவதற்குரிய இடம் சீயோன் என்று ஏற்றுக்கொள்ளப்படும், ஏனெனில் உலகளாவிய அனைத்து அதிகாரங்களும் கொண்ட நகரமாக **உன்னதமானவர் தாமே அதை ஸ்திரப்படுத்துவார்**.

87:6 கர்த்தர் மக்களைத் தொகையிட்டுப் பார்க்கின்றபோது, சில இனத்தார் சீயோனின் குடிமக்களாக மாறியதன் காரணமாகத் தங்களுடைய உண்மையான சேருமிடத்தைக் குறித்து அறிவு பெற்றிருக்கிறார்கள் என்பதை அவர் கவனத்தோடு குறித்து வைக்கிறார். அவர்கள் தலைநகருக்கு வருவதன் காரணம்:

அதனுடைய கட்டடக் கலையைக் கண்டு வியந்து போற்றுவதற்காக அல்ல, அதனுடைய கொத்தளங்களைக் காண்பதற்காகவும் அல்ல, கச்சிதமாக அமைந்திருக்கும் நகரத்திற்கு ஆராதனை செலுத்த வந்திருக்கும் கோத்திரத்தாரைக் கண்டு பொறாமைப்படுவதற்காகவும் அல்ல, அதன் நகர வரி விலக்கையும் பாதுகாப்பையும் அனுபவிப்பதற்காகவும், சட்டங்களுக்குக் கீழ்ப்படிவதற்காகவும், அந்த மகிழ்ச்சி நிறைந்த சமுதாயத்தில் சேர்ந்து அன்புகூர்ந்து வாழ்வதற்காகவும், அதனுடைய மகிமைநிறைந்த நிறுவனரும் பாதுகாவலருமானவருடன் தொடர்பு கொள்வதற்காகவும் வருகிறார்கள்.[58]

கேபலீன் எழுதுகிறார்:

சீயோனின் மேன்மை மற்றும் ஆசிர்வாதம் ஆகியவற்றின் காரணமாக அங்கு அழைத்து வரப்படுகிற ஒவ்வொரு இனத்தாரையும் குறித்த பதிவேட்டை யெகோவா வைத்திருக்கிறார். அப்பொழுது இவ்வுலக முழுவதிலும் மகிமை பொருந்தின பெருநகரமாகச் சீயோன் மாறும்.[59]

87:7 அது பண்டிகை நாளாகவும் ஒய்வு நாளாகவும் விளங்கும். பாடற் குழுவோடு **பாடுவோரும்** இசைக்கருவிகளைப் பயன்படுத்துவோரும் சேர்ந்து கொள்வார்கள். **"எங்கள் ஊற்றுகளெல்லாம் உன்னில் இருக்கிறது"** என்பதே அப்பாடல். இனிமேல் அங்கு அழுகையில்லை, பிரச்சினையுமில்லை. எருசலேம் ஆசிர்வாதங்களின் ஊற்றாக விளங்கும், புத்துணர்வு தருவதற்கான ஆதாரமாக விளங்கும், உலகின் அனைத்து இனத்தாருக்கும் ஆவிக்குரிய வீடாகத் திகழும்.

இந்தச் சங்கீதத்தை விட்டு அடுத்துச் செல்வதற்கு முன், தனிநபர் வாழ்க்கையோடு இதனை நாம் பொருத்திப் பார்க்க வேண்டும். இதுவே அது. தேவன் மக்களைக் கணக்கெடுக்கும் நாள் வரப்போகிறது. விண்ணகத்தில் குடியிருக்கும் மக்களின் கணக்கெடுப்பு. புதிய பிறப்பு ஒன்றே அதைப் பெறுவதற்கான மிக மேன்மையான ஒரே தகுதி. மறுபடியும் பிறந்தவர்கள் மட்டுமே இறையரசைக் காணவும், அங்கு நுழையவும் முடியும் (யோவான் 3:3-5). அவ்வாறு தேவன் தமது பதிவேட்டில் எழுதும்போது, "இந்த மனிதன் இந்த இடத்தில் மறுபடியும் பிறந்தான்" என்று கூறுவார்.

உங்களைக் குறித்து அவரால் அவ்வாறு சொல்ல முடியுமா?

விண்ணகக் குடியிருப்பைப் பெறுவதற்கான தகுதியடைய ஒரு வழி இருக்கிறது. அது யோவான் 1:12 -ஆம் வசனத்தில் கூறப்பட்டுள்ளது:

> அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ள வர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர் களுக்கு அதிகாரம் கொடுத்தார்.

சங்கீதம் 88: துக்கம் நிறைந்த சங்கீதம்

நாம் 88 -ஆவது சங்கீதத்திடமாய் வருகிற போது, மனுக்குலத்தின் துக்கம் மற்றும் பாடுகள் ஆகியவற்றின் மிகவும் தாழ்நிலைக்கு வந்திருக் கிறோம். பாடலாசிரியன் தனது நம்பிக்கையற்ற நிலையை விவரிக்கும் பொருட்டு துக்கம் மற்றும் பாடுகள் பற்றிய சொற்களஞ்சியத்தைத் துருவித் தேடி சொற்களைப் பயன்படுத்தியிருப்பதாகத் தோன்றுகிறது. அந்நிலை, உறுதியாக முடிவுற்ற நிலை என்றே அவன் கருதுகிறான் - குணம் பெற முடியாத நோய்கள் தாக்குண்டு, மருத்துவ மனை யில் ஒதுக்கிவைக்கப்பட்ட படுக்கை யறையில் தனித்து விடப்பட்ட நோயாளிகளில் கவலைக் கிடமானவரின் பட்டியலில் இருப்பது போன்ற எண் ணம். எஞ்சியிருப்பது பிணவறை ஒன்றுதான், அவனுடைய முகத்தைத் துணியால் மூடி வண்டி யில் இழுத்துக் கொண்டுபோவதற்கு இன்னும் கொஞ்ச நேரந்தான்.

88:1,2 இந்தச் சங்கீதத்தில் பளிச்சிடும் ஒரே பகுதி, இறைவனுடைய திருப்பெயரோடு இது தொடங்கும் வசனமேயாகும் - **"என் இரட்சிப்பின் தேவனாகிய கர்த்தாவே."** துக்கத்தின் ஊடாகக் கடுமையாகப் போராடி உட்புகுகிற ஒளிக்கதிர், நள்ளிரவு இருட்டின் கருமைக்குள் ஊடுருவுகிற விண்மீன் என்று இதனைத் திருவாளர் கேபலீன் வருணிக்கிறார்.

ஆனால், ஆசிரியன் உடனடியாகத் தனது ஏமாற்றமிக்க இக்கட்டுநிலையை துயர் மிகுந்த விவரங்களோடு கூற முனைகிறான். அவன் கர்த்தரை நோக்கி **இரவும் பகலும்** கதறுகிறான், ஆயினும் கவலை தீரவில்லை. எப்பொழுது தேவன் அவனுடைய **கூப்பிடுதலைக்** கேட்டு இக்கட்டு நிலையை நீக்குவதற்குத் தேவையானவற்றைச் செய்வார்?

88:3-7 அதிகப்படியான இடர்ப்பாடுகளின் காரணமாகக் கொந்தளிக்கும் மனநிலையோடு கூடிய வாழ்க்கையே அவனுடைய வாழ்வாக இருக் கிறது; தடைசெய்ய இயலாதபடி அவன் சாவை யும் சவக்குழியையும் நோக்கிச் சென்றுகொண்டி ருக்கிறான். அவன் ஏற்கனவே செத்தவன் போலக் கணக்கிடப்பட்டுவிட்டான். அவனிடமிருந்த சிறி தளவு வலிமையும் அற்றுப்போயிற்று. இப்பொழுது அவன் **மரித்தவர்களில் ஒருவனைப் போல நெகிழப்பட்டிருக்கிறான்**. போர்க்களத்தில் கிடக் கும் சவங்களில் ஒன்றைப் போல அவன் தன் நினைவு அற்றவனாகக் கிடக்கிறான். அல்லது போரில் இறந்தவர்கள் ஒருமித்துப் புதைக்கப் படுவது போல இருக்கிறான். தேவனால் மறக்கப் பட்டவனாகவும், அதன் காரணமாகத் தெய்வீக உதவி கிடைக்கக் கூடாதபடி **அறுப்புண்டவனாக வும்** அவன் தன்னைக் கருதுகிறான். சிறைபிடிக் கப்பட்டு இருட்டறைக்குக் கொண்டுபோகப்படுகிற மனிதனைப் போல, அவன் தேவனால் கைவிடப் பட்டு பாதாளக்குழிக்குள், இருளும் அச்சுறுத்த லும் நிறைந்த, கொடுமைகள் சூழ்ந்த அறைக் குள் செல்பவனாகக் காணப்படுகிறான். இதற்கு ஒரே ஒரு விளக்கம்தான் தரமுடியும் என்று அவன் எண்ணுகிறான்: இறைவன் அவனிடத்தில் கடுஞ் சினம் கொண்டிருக்கிறார், தெய்வீக நியாயத் தீர்ப்பின் மலைபோன்ற **அலைகளுக்குள்** அவன் மூழ்கடிக்கப்படப் போகிறான்.

88:8,9 ஒரு தொழுநோயாளி கைவிடப்பட்டது போல அவனுடைய நண்பர்கள் அவனைக் கைவிட்டார்கள். அருவருப்பான பேயை நடத்து வது போல அவர்கள் அவனை நடத்துகிறார்கள். அல்லது "சபிக்கப்பட்ட ஒன்றைப் போல் நடத்து கிறார்கள்" (நாக்ஸ்). தப்புவதற்கு முடியாத சிறைச்சாலையில் ஒரு சிறிய அறையில் அவன் **அடைபட்டிருக்கிறான்**. ஒரு காலத்தில் பளிச் சென்று இருந்த அவனுடைய கண்கள் இப் பொழுது பேச்சின்றி ஒளிகுன்றிப் போயின. அவனு டைய மன்றாட்டுகள் கேட்கப்படுவதில்லை. ஒவ் வொரு நாளும் அவன் தனது கைகளை ஏறெ டுத்து ஊக்கத்தோடு விண்ணப்பித்தவனாகக் கர்த்தரை நோக்கிக் கதறுகிறான், ஆனால் ஒன் றும் நடை பெறவில்லை.

88:10 பாடலாசிரியனின் சாவு தேவனுக்கு என்ன நன்மையை உண்டாக்கும் என்று அவன் அடுக்கடுக்கான கேள்விகளைக் கேட்டு அறை கூவல் விடுக்கிறான். பழைய ஏற்பாட்டுப் பரிசுத்த வான்கள் சாவைப் பற்றியும் அதற்குப் பிறகு என்ன நிகழும் என்பது பற்றியும் நிறைவான அறிவு அற்ற வர்களாக விளங்கினார்கள் என்று அந்தக்

கேள்விகள் வெளிப்படுத்துகின்றன; மேலும் மரணம் கிறிஸ்துவுடனேகூட இருக்கும்படி செய்கிறது, அது அதிக நன்மையாயிருக்கும் என்னும் உறுதிகளை நாம் பெற்றிருப்பதால் இடைவிடாமல் அவருக்கு நன்றிபாராட்டும்படி அக்கேள்விகள் நம்மை நடத்துகின்றன (பிலி. 1:23). இப்பொழுது அந்தக் கேள்விகளைக் காணலாம்.

இறந்து போனவர்களுக்காக தேவன் **அதிசயங்களைச் செய்வாரா**? அதில் மறைந்திருக்கும் விடை "இல்லை" என்பதேயாகும். நியாயப் பிரமாணத்திற்குக் கீழ் வாழும் யூதனுக்கு மரணம் எவ்வித ஆக்கப்பூர்வமான நிகழ்வும் ஏற்படாத, குழப்பமான புறக்கணிக்கப்பட்ட பகுதியாக விளங்குகிறது. "ஆவிகள்" **எழுந்து** அவரைத் **துதிக்குமா**? இறந்து போனவர்கள் ஆவிகளாகக் கருதப்படுகிறார்கள்; அந்நிலையில் அவை கர்த்தரைத் துதிப்பதென்பது நடைபெறுவதற்கு இயலாதது.

88:11,12 பிரேதக் குழியில் தேவனுடைய நிலையான **கிருபை விவரிக்கப்படுமா**? அல்லது **அழிவில்** அதாவது அபெத்தோன் என்னும் பாதாளக் குழியில் அவருடைய **நீதி** அறிவிக்கப்படுமா?

பாதாளத்தின் மங்கிய கொடூரமான தூசு போன்ற அறைகளில் செயலுக்கும் பேச்சுக்கும் இடமில்லை என்று நம்பப்பட்டதால், தேவனுக்கு எப்போதும் இனிமை தரக்கூடிய வண்ணம் ஊக்கமாகப் புகழ்ந்து போற்றுபவர்களை எவ்வளவு காலம் உயிரோடு வைத்திருக்க முடியுமோ அவ்வளவு காலம் உயிரோடு வைத்திருப்பது தானே நிச்சயமாக அவருக்கு நன்மை பயக்கும்.[60]

88:13-18 புத்துணர்ச்சி பெற்ற உத்வேகத்துடன் பாடலாசிரியன் கர்த்தரிடத்தில் தனது வேண்டுதலைச் சமர்ப்பிக்கிறான். அவன் உண்மையாக உயிரோடு இருக்கும் வரை அவனுடைய ஊக்கமான மன்றாட்டு ஒவ்வொரு நாளும் அவருடைய முன்னிலைக்கு வரும். இந்த அளவிற்கு தேவன் அவனை முற்றிலுமாகத் தள்ளிவிட்டார் என்பதும், இரக்கமோ தயவோ கூடிய பார்வையை அவன்மேல் செலுத்தாதபடி தமது கண்களை அவர் மறைத்துக்கொண்டார் என்பதும் அவனுக்குப் பெரும் குழப்பத்தை உண்டுபண்ணிற்று. அவனுடைய வாழ்க்கை அவனது சிறுவயது முதல் இடைவிடாத பாடுகளும் மரணமும் கூடிய கதையாகவே இருந்து வந்திருக்கிறது. இப்பொழுதோ தெய்வீகத் **திகில்** என்னும் சூறாவளியில் சிக்குண்டு **மனங்கலங்கி** உதவியற்றவனாயிருக்கிறான். பேரலை போல தேவனுடைய கோபம் அவன்மேல் **எரிச்சலோடு புரண்டுபோகிறது**, மேலும் அவருடைய **பயங்கரங்கள்** அவனை பேச்சற்றவனாக்கிவிட்டது. சீற்றம் நிறைந்த வெள்ளம் சூழ்ந்துகொண்டு தணியாமல் ஒன்று சேர்ந்து பேரலைகளாக அவனைத் தாக்கின. **சிநேகிதனும் தோழனுமானவனைக்** கைவிடுவதற்கு தேவன் காரணரானது போலாயிற்று. இருள் ஒன்றே அவனுடைய கூட்டாளி.

இவ்விதமாக, துக்கம் நிறைந்த சங்கீதம் முடிவுக்கு வருகிறது. இப்பாடல் திருமறையில் இடம் பெற்றிருப்பது ஏன் என்று நாம் வியப்படைவோமெனில் திருவாளர் J. N. டார்பியின் சான்றை நாம் கேட்கவேண்டும். ஒரு குறிப்பிட்ட நேரத்தில் அவருக்குத் துணையாக இருந்த ஒரே வேத பகுதி இதுதான், ஏனென்றால் தன்னைப்போல் முன்னொரு காலத்தில் தாழ்வாக ஒருவன் இருந்ததை இப்பகுதியில் அவர் கண்டார். யார் எழுதியது என்று தெரியாத ஒரு குறிப்பைத் திருவாளர் கிளார்க் மேற்கோள் காட்டுகிறார்:

> "எப்போதாவது நிகழ்கிற இவ்வித அனுபவத்தைக் குறித்துப் பேசுகிற சங்கீதம் திருமறையிலேயே இது ஒன்றுதான், ஆனால் மிகவும் துன்புற்று விரக்தியடைந்த மனிதனை தேவன் கைவிடமாட்டார் என்று இங்கே ஒருவன் உறுதியளிக்கிறான்."[61]

சங்கீதம் 89: தேவன் தாவீதுடன் செய்த உடன்படிக்கை

89:1,2 தேவன் தாவீதுடன் செய்த உடன்படிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள யெகோவாவின் நிலையான அன்பிலும் **உண்மையிலும் ஏத்தான்** தனிப்பட்ட வகையில் களிகூர்ந்திருக்கிறான் என்பதைத் தொடக்கத்திலேயே அறிவிக்கிறான். **கர்த்தரின் கிருபைகளை** அவன் **என்றென்றும் பாடுவதாக** முடிவு செய்திருக்கிறான், ஏனெனில் அவை **என்றென்றைக்கும்** நிலைத்திருக்கும்.

89:3,4 தேவன் **தாவீதுடன்** செய்த **உடன்படிக்கையை** விசுவாசம் மரியாதையுடன் அவருக்கு நினைவுபடுத்துகிறது. தாவீது அவருடைய **தாசனாக** இருந்ததால், அவனுடைய **சிங்காசனத்தில்** அமருவதற்கு வாரிசு இல்லாமல் போவதில்லை என்றும், அவனுடைய அரசு தலைமுறை தலைமுறையாக நிலைத்திருக்கும் என்றும் அவர் **ஆணையிட்டார்**. முறிவுறாத மன்னர் பரம்பரை

நிலைபேறான **சிங்காசனத்தில்** அமர்ந்திருக்கும்!

89:5 அவ்வுடன்படிக்கையைச் செய்த கர்த்தருடைய அதிசயங்களை அந்த விசுவாசம் மீண்டும் எடுத்துரைக்கிறது. கர்த்தருடைய திருப்பெயரின் மேன்மை கேள்விக்குறியாக இருப்பதுபோல ஏத்தான் இதனை அவருக்கு நினைவுபடுத்துகிறான்.

89:6-8 ஆகாய மண்டலத்தில் உள்ள தேவ தூதர்களின் சேனைகள் எல்லோரைக் காட்டிலும் அவர் பெரியவர். அவருடைய அதிசயங்களையும் **உண்மையையும்** புகழ்ந்து போற்றும்படி தூதர் குழாம் அழைக்கப்படுகிறது. எந்தவொரு தேவ தூதனும் அவருடன் ஒப்பிடத்தக்கவன் இல்லை; அவரே வானசேனைகள் எல்லோரையும்விட மேலானவர். தூதர்களில் முதன்மையானவன் அவருடைய முன்னிலையில் பயபக்தியுடன் பணிந்து நிற்கிறான்; எல்லா வகையிலும் அவரே மிகப் பெரியவர் என்பதை அவர்கள் அறிந்திருக்கிறார்கள். **சேனைகளின் தேவனாகிய கர்த்தரைப்** போல வல்லமையுள்ளவர் ஒருவரும் இல்லை, உண்மையை ஆடையாக அணிந்து சுடரொளி வீசுபவர் வேறு எவரும் இல்லை.

89:9,10 ஆனால் அத்துடன் முடிவடைய வில்லை. தேவன் படைப்பிலும் தெய்வச் செயலிலும் ஒழுக்கத்தின் நிறைவிலும் பெரியவர் (வச. 9-15). அவருடைய படைப்பின் சிறப்புகளில் ஓர் எடுத்துக்காட்டு, சீறிவருகின்ற கடலலைகளை அவர் ஆளுகைசெய்து அவற்றை **அடக்குகிறார்.** நீல நிற கலிலேயாக் கடலைப் பல ஆண்டுகளுக்கு முன் அவர் அவ்வாறு அடக்கினார், அதுபோலப் புயலால் தாக்குண்ட தமது மக்களின் வாழ்க்கையையும் அவர் தொடர்ந்து அடக்கி ஆளுகிறார். அவருடைய அருட்செயலின் சிறப்புக்கு, அவர் எகிப்தை (ராகாப்) இஸ்ரவேல் மக்களின் பயணத்தின் போது வென்ற செயலைக் காட்டிலும் மேலான எடுத்துக்காட்டைக் கூற முடியுமா? அகந்தை கொண்ட அந்த இனத்தாரை, சிங்கம் தனது இரையைப் பாய்ந்து தாக்குவது போலத் தாக்கி நொறுக்கினார். புயலில் அடிபட்டுச் செல்லும் சருகுகளைப் போல அவருடைய பகைவர் **சிதறடிக்கப்பட்டார்கள்.**

89:11-13 வானங்களும் பூமியும் படைப்பின் காரணமாக அவருக்குச் சொந்தமானவை. இவ்வுலகத்தையும் அதிலுள்ள எல்லாவற்றையும் அவர் நிறுவியதன் காரணமாக இவை யாவும் அவருடைய உடைமைகள். **வடக்கிற்கும் தெற்கிற்கும்** அவரே தொடக்கம், ஆகவே அவை அவருக்குக் கடன்பட்டவை. **தாபோர்** மலையும் **எர்மோன்** மலையும் தலைகளை உயர்த்தி அவரே தங்களைப் படைத்தவர் என்று மகிழ்வுடன் அறிக்கை செய்கின்றன. அவருடைய **புயம்** அளவுகடந்த **வல்லமையுடையது**, அவருடைய **கரம் பராக்கிரமமுள்ளது.** எல்லாவற்றையும்விட அவருடைய **வலதுகரம் உன்னதமானது**, உலக வல்லமைகளில் அதுவே முதன்மையானது.

89:14 அவருடைய ஒழுக்கத்தின் நிறைவைப் பொறுத்தவரை, அவருடைய சிங்காசனம் **நீதி நியாயம்** என்னும் இரட்டைக் கொள்கைகளின் அடிப்படையில் நிறுவப்பட்டது. அவர் எங்கு செல்கிறாரோ, அங்கெல்லாம் கிருபையும் சத்தியமும் பொழியும்.

89:15-18 உடன்படிக்கையின் தேவனுடைய மேன்மைகளை எடுத்துரைத்த ஏத்தான் இப் பொழுது அவருடைய மக்களின் நற்பேற்றைக் குறித்து விரிக்கிறான்: **"கெம்பீர சத்தத்தை அறியும் மக்கள் பாக்கியவான்கள்!"** சமய நாட்காட்டியின்படி பரிசுத்த பண்டிகை நாட்களில் எருசலேமை நோக்கிப் பயணம் செய்த மக்கள் கூட்டம் விழாக்கோலத்துடன் இடுகிற சத்தமே பக்தியுள்ள யூதனுடைய **கெம்பீர சத்தம்.** நம்மைப் பொறுத்த வரை நற்செய்தியே எப்பொழுதும் கெம்பீர சத்தமாகும். இவ்வாறு களிகூரும் மக்களைக் குறித்துப் பல செய்திகள் வரைந்து தரப்பட்டுள்ளன. அவருடைய **முகத்தின் வெளிச்சத்தில் அவர்கள் நடக்கிறார்கள்**, அதாவது, அவர்கள் அவருடைய தயவில் நடக்கிறார்கள், மேலும் அவருடைய சமுகம் அவர்களை வழிநடத்துகிறது. அவர்கள் அவரிடத்தில் அவர்களுடைய மகிழ்ச்சியின் ஊற்றைக் கண்டடைகிறார்கள், மேலும் அவருடைய **நீதியில்** களிகூருவதை அவர்கள் ஒருக்காலும் நிறுத்துவதில்லை. அவர்கள் தங்களுடைய சொந்த பலத்தில் மேன்மை பாராட்டுவதில்லை, மாறாக அவருடைய பலத்தில் மட்டுமே மேன்மை பாராட்டுகிறார்கள். அவருடைய **தயவினால்** மட்டுமே அவர்களுடைய **கொம்பு உயரும்,** அதாவது அவர்கள் வலிமை பெறுகிறார்கள். **உண்மையாகவே எங்கள் கேடயம் கர்த்தருக்குரியது; எங்கள் அரசர் இஸ்ரவேலின் பரிசுத்தருக்குரியவர்** (இலகு தமிழ்).

89:19 இதுவே, யெகோவா **தாவீதுடன்** செய்த உடன்படிக்கையினிடமாய் ஏத்தானைக் கொண்டு வருகிறது (வச. 19-37). பல ஆண்டுகளுக்கு முன் தேவன் தமது விசுவாசமுள்ள ஊழியக்காரனுக்கு

ஒரு தரிசனத்தில் காட்சி தந்தார். **பக்தன்** என்னும் சொல் சாமுவேலை (1 சாமு. 16:1-12), அல்லது நாத்தானை (2 சாமு. 7:1-17) அல்லது ஒருவேளை யெகோவாவின் தாசராகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் குறிக்கக் கூடும். அவர் நிபந்தனை யற்ற இலவசமான கிருபையோடுகூடிய உடன் படிக்கையை ஏற்படுத்தினார். அதன் மூலம் **சவுரி யவான்** தலையில் முடிசூட்டினர், மேலும் அவ் வாறு மக்களில் **தெரிந்துகொள்ளப்பட்டவனை** உயர்த்தினார். தாவீதைக் குறித்த விவரங்களில் பெரும்பாலானவற்றில், இயல்பாகவே நாம் தாவீ துக்கு அப்பாற்பட்டு கடந்து வரப்போகிற மேசியா அரசரைக் காண்கிறோம்.

89:20-24 தாவீதின் சகோதரருக்குள் யெகோவா அவனைத் தெரிந்தெடுத்து, அரசர்களாக்குவதற் குரிய தனித்தன்மை வாய்ந்த **பரிசுத்த தைலத் தால்** சாமுவேலைக் கொண்டு **அபிஷேகம்** செய் வித்தார். தேவனுடைய கரம் எப்போதும் தாவீதின் மேல் இருக்கும் என்றும், அவனுடைய சிங்கா சனத்திற்கு உரிமை பெற்ற வாரிசுகள் பேணிப் பாதுகாக்கப்படுவார்கள் என்றும், அவருடைய **புயம்** தேவையான எல்லா வலிமையையும் அவர் களுக்குத் தரும் என்றும் அந்த உடன்படிக்கை உறுதியளித்தது. அரசரின் பகைவர் அவனைத் தந்திரத்தால் ஏமாற்ற முடியாது, பொல்லாதவர் களால் அவனை **ஒடுக்கவும்** முடியாது. அவனு டைய எதிரிகளை மடங்கடித்து, அவனைப் பகைக் கிறவர்களை **வெட்டுவதாகக்** கர்த்தர் உறுதி யளித்தார். கர்த்தருடைய உண்மையும் கிருபை யும் ஒருக்காலும் அவனைவிட்டு நீங்காது, மேலும் தாவீதின் வீட்டார் அவரிடத்திலிருந்து தமது வலிமையைப் பெறுவார்கள்.

89:25 ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதியின் (ஆதி. 15:18) அடிப்படையில், அவ்வரசின் எல்லைகள் இறுதியில் மத்திய தரைக் கடல் முதல் ஐபிராத்து வரை விரிவடையும். ஆதி யாகமம் 15 -ஆம் அதிகாரம் எகிப்தின் ஆறு முதல் ஐபிராத்து ஆறு வரை என்று அதை விவரிக்கிறது. எகிப்து ஆறு மத்தியதரைக் கடலில் சேருவதால் எல்லைகளில் எந்த மாற்றமும் இல்லை.

89:26,27 தாவீது யெகோவாவைத் தனது **பிதா** என்றும், தனது **தேவன்** என்றும், தனது அடைக்கலமாகிய **கன்மலை** என்றும் அறிக்கை யிடுவான். தேவனும் பதிலுக்கு அவனைத் தமது **முதற்பேறானவனாகவும், பூமியின் அரசர்கள்** எல்லோரையும்விட மிகவும் **உயர்ந்தவனாகவும்** ஆக்குவார். **"முதற்பேறானவன்"** என்னும் சொற் றொடர் சில இடங்களில் காலத்தில் முதன்மை என்னும் பொருளைத் தருகிறது; எடுத்துக்காட் டாக, மரியாள் தன் முதற்பேறானவனைப் பெற் றாள் (லூக்கா 2:7). ஆனால் தாவீதைப் பொறுத்த வரை இச்சொற்றொடர் அந்தப் பொருளைத் தராது, ஏனெனில் தாவீது ஈசாயின் கடைசி மகனா வான். இங்கு அவன் தரவரிசையிலும், மதிப்பிலும் முதன்மையானவன் என்னும் பொருளிலேயே இச்சொற்றொடர் பயன்படுத்தப்பட்டுள்ளது. வச னத்தின் எஞ்சிய பகுதி இதனை விளக்கிக் கூறு கிறது, **"பூமியின் ராஜாக்களைப் பார்க்கிலும் மகா உயர்ந்தவனுமாக்குவேன்."** இதே பொரு ளிலேயே பவுல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார், "சர்வ சிருஷ்டிக் கும் முந்தின பேறுமானவர்" (கொலோ. 1:15). சில கள்ளக் குழுவினர் கற்பிப்பது போல இயேசு படைப்புகளில் முதலானவர் என்பது இதன் பொரு ளன்று. அவர் எல்லாப் படைப்புகளுக்கும் மேலாக ஒப்புயர்வற்றவர் என்பதே இதன் பொருளாகும்.

89:28,29 தாவீதினிடத்தில் தேவன் கொண்டி ருந்த அன்பை எதுவும் ஒருக்காலும் மாற்றாது, அவர் செய்த **உடன்படிக்கையையும்** எதுவும் பாதிக்காது. தாவீதின் சிங்காசனம் என்றென்றும் நிலைநிற்கும்; ராஜ வம்சம் **என்றென்றைக்கும்** நிலைபேற்றுடன் விளங்கும்.

89:30-32 தாவீதின் பிள்ளைகள் பாவம் செய்த போது இந்த உடன்படிக்கையானது அவர் களுக்கு அதனின்று விலக்கு அளிக்கவில்லை. நியமங்கள் மீறப்படுகிறபோது நீதியாக நியாயந் தீர்க்கப்படும். வரலாறு பூர்வமாக இதுவே நிகழ்ந் தது. தாவீதின் வழித்தோன்றல்கள் யெகோவா வுக்கு உண்மையற்றவர்களாக நடந்தார்கள். அவர் அவர்களை மிலாற்றினாலும், பாபிலோனி யச் சிறையிருப்பினாலும் தண்டித்தார்.

89:33 ஆனாலும், இன்னமும் உடன்படிக்கை நிலைநின்றது. அரசு ஒரு குறிப்பிட்ட காலம் மறைந்துபோன போதிலும், எருசேலமில் அரசன் வீற்றிருந்து ஆளுகை செய்யவில்லை என்ற போதிலும், தேவன் அரச வம்சத்தை வியத்தகு வகையில் பாதுகாத்தார். மேலும் அவர் தமது தீர்மானத்தின்படி ஏற்ற நேரத்தில் அரசை மீண் டும் நிறுவுவார்.

89:34-37 உடன்படிக்கை மாற்றுவதற்கு இயலாதது என்பதையும், தாம் **தாவீதுக்குக்** கொடுத்த வாக்குறுதியை நிச்சயமாக நிறைவேற் றத் தீர்மானித்திருப்பதையும் தேவன் பொருத்த மான சொற்களில் மீண்டும் உறுதிப்படுத்துகிறார்.

தாவீதின் **சந்ததி என்றென்றைக்கும் இருக்கும். சூரியனும் சந்திரனும் ஆகாயமண்டலமும்** இருக்குமளவும் அவனுடைய சிங்காசனம் இருக்கும்.

89:38,39 தேவன் தாவீதோடு பண்ணின உடன்படிக்கையை மறந்துவிட்டது போன்று வெளித்தோற்றத்தில் காணப்படலாம். பாபிலோனியர் யூதாவின்மேல் போர்தொடுத்து, மக்களைச் சிறைப்பிடித்துக் கொண்டுபோனார்கள். அந்நாள் முதல் இதுகாறும் ஒருவனும் தாவீதின் அரியணையில் அமரவில்லை. ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தாவீதின் நகரத்தில் கர்த்தராகிய இயேசு பிறந்தார். அவர் யோசேப்பின் தத்துப்பிள்ளை; யோசேப்பு யூத அரச பரம்பரையில் தோன்றின நேரடி வாரிசு ஆவான். ஆகவே இயேசு தாவீதின் அரியணைக்குச் சட்டபூர்வமாக உரிமை பெற்றவராவார் (மத். 1). இயேசு மரியாளின் உண்மையான மகன், மேலும் மரியாள் நாத்தானின் வழியில் தாவீதின் வாரிசாக இருந்ததால் நம்முடைய கர்த்தர் தாவீதின் சந்ததி ஆவார் (லூக்கா 3:23-38). ஆகவே கர்த்தராகிய இயேசுவில் அந்த உடன்படிக்கை நிறைவேறியிருக்கிறது. தாவீதின் அரியணை அவர் மூலமாக என்றென்றும் நிலை பேறுடையதாக ஆக்கப்பட்டுள்ளது. மேலும் அவர் முடிவில்லாத வாழ்வின் வல்லமையில் வாழ்வதால் தாவீதின் அரியணையில் என்றென்றும் அமருவதற்கு ஒரே வாரிசாக இருக்கிறார். ஒரு நாள், ஒருவேளை அது விரைவாக நடக்கும், அவர் பூமிக்குத் திரும்பிவந்து, தமக்கு உரிய தான தாவீதின் சிங்காசனத்தில் அமர்ந்து தாவீதின் குமாரனாக ஆட்சிபுரிவார்.

உண்மையில், ஏத்தான் இதைப் பார்த்திருக்க முடியாது. உடன்படிக்கை ஒதுக்கித் தள்ளிவிடப்பட்டது என்றே அவனுக்குத் தோன்றியது. தேவன் தாம் அபிஷேகம் பண்ணினவனுக்கு எதிராக உக்கிரம் கொண்டவராக, அரச வம்சத்தைக் கைவிட்டார் என்றும், நிராகரித்துத் தள்ளிவிட்டார் என்றும் அவன் குறைகூறுவதைக் கவனியுங்கள். தேவன் தாவீதுக்குக் கொடுத்த வாக்குறுதியிலிருந்து பின்சென்றுவிட்டார், அவனுடைய கிரீடத்தை மண்ணிலே தள்ளிவிட்டார் என்று விளக்கிக் கூறுவதைத் தவிர வேறொன்றும் ஏத்தானுக்குத் தெரியவில்லை. தேவன் தம்முடைய வாக்குறுதியைத் தொடரமுடியாமல் விட்டுவிடமாட்டார் என்பதை ஏத்தான் தனது உள்ளத்தின் ஆழத்தில் அறிந்திருந்த போதிலும், எல்லாத் தோற்றமும் அதற்கு எதிராக நடந்தது போலவே காணப்படுகிறது.

89:40-45 எருசலேம் மதில்களில் துவாரங்கள் ஏற்பட்டுவிட்டன. அவற்றின் அரண்கள் சிதறடிக்கப்பட்டன. அந்த நகரத்தின் வழியாகச் சென்றவர்கள் பாதுகாப்பில்லாமல் இருந்த செல்வத்தைக் கொள்ளையடித்தார்கள்; நட்பு பாராட்டாத புறவின அயலகத்தார் யூதாவின் அவலநிலையைக் கண்டு ஏளனம் செய்தார்கள். இஸ்ரவேலின் எதிரிகள் கையோங்கி வெற்றியால் நகைக்கிறார்கள். தேவனுடைய மக்களின் போர்க்கருவிகள் யுத்தத்தில் பயனற்றுப் போயின; போர்வீரர்களும் தங்களுடைய எதிரிகளுக்கு முன்னால் நிற்க முடியாமல் திடனற்றுப் போனார்கள். அரசன் பதவியிலிருந்து நீக்கப்பட்டு, அவனுடைய சிங்காசனம் நொறுக்கப்பட்டது. அவன் **வெட்கத்தால் மூடப்பட்டு** குறுகிய காலத்திலேயே முதிர்வயதினன் ஆனான்.

89:46-48 உடன்படிக்கை செய்த கர்த்தர் தமது மக்களுடைய பார்வையிலிருந்து தம்மை மறைத்துக் கொண்டதாகத் தோன்றுகிறது. அவர்களுக்கு எதிரான அவருடைய **கோபம் அக்கினியைப் போலப்** பற்றி எரிந்தது. **"எதுவரைக்கும்?"** என்னும் வருத்தம் தோய்ந்த கேள்வி விண்ணை நோக்கி இறக்கை கட்டிப் பறக்கிறது. மனிதனுடைய வாழ்நாட்களை தேவன் எவ்வளவாகக் குறுகிப்போகச் செய்திருக்கிறார், அவன் எவ்வளவாக நலிவுற்றிருக்கிறான், முக்கியமற்றவனாகவும் அவன் இருக்கிறான், இவையாவற்றையும் அவர் நினைவு கூரவேண்டுமென்று நாத்தான் வேண்டுகிறான். அவனுடைய நாட்களில், ஒவ்வொரு மனிதனும் மரணத்தைச் சந்திப்பான் என்பது நிச்சயம். எவன் ஒருவனாலும் பாதாளத்தின் வல்லமையை வெற்றிபெற முடியாது. ஏத்தானைக் காட்டிலும் மேலான நம்பிக்கை நமக்கு இருக்கிறது; எல்லோரும் மரணமடைய மாட்டார்கள், மாறாகக் கர்த்தராகிய இயேசு தமது திருச்சபையைத் தமது விண்வீட்டுக்கு அழைத்துச் செல்லும்படி வருகிறபோது விசுவாசிகள் யாவரும் மறுரூபமடைவார்கள் என்பதை நாம் அறிந்திருக்கிறோம் (1 கொரி. 15:51; 1 தெச. 4:13-18). ஆனால் பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களைப் பொறுத்தவரையில் இவை யாவும் இரகசியங்களாகவே இருந்தன.

89:49-51 ஏத்தானுடைய வேண்டுதல் துணிவோடும் வற்புறுத்தலோடும் இருக்கிறது. **தாவீதுக்கு** தேவன் வாக்குறுதி செய்த **கிருபைகள்** என்னவாயின என்று அவன் அவரிடத்தில் பொருத்தமான சொற்களில் வலியுறுத்திக் கேட்கிறான். இஸ்ரவேலின் எதிரிகள் பழித்துரைத்து ஏளன

மாய் நகைத்துச் செய்த செயல்களால் அவன் மிகவும் வருந்துகிறான். ஏத்தானையும் அவர்கள் அவமானப்படுத்தி, புகழ்பெற்ற அரசனை ஏளனம் செய்தார்கள், இவை அவனுடைய உள்ளத்தை வருத்தின.

89:52 ஆனால் கடைசி வசனத்தில் விசுவாசம் வெற்றி ஆரவாரம் செய்கிறது. ஏத்தான் தனது குழப்பத்திற்கான விடையைக் காணமுடியவில்லை, ஆயினும் அவன் யெகோவாவைப் புகழ்ந்து போற்றுகிறான். "என்னால் புரிந்து கொள்ள முடிய வில்லை, ஆனாலும் கர்த்தாவே, இன்னமும் நான் நம்புவேன்" என்பது போல அவன் பேசுகிறான். ஆகவே அவன் தனது மன்றாட்டை பெருமகிழ்ச்சி யோடு முடிக்கிறான், **"கர்த்தருக்கு என்றென் றைக்கும் ஸ்தோத்திரமுண்டாவதாக, ஆமென், ஆமென்."**

4. நான்காம் நூல் [சங்கீதங்கள் 90-106]

சங்கீதம் 90: சாவு மணி ஒலிக்கிறது

இச்சங்கீதத்தை விளக்கிக் கூறுவதற்கு நான் சற்று புனிதமான கற்பனையைப் பயன்படுத்த எனக்கு அனுமதி தாருங்கள். சீனாய் பாலைவனமே காட்சியின் நிகழ்விடம். உளவாளிகள் தங்களு டைய பொல்லாத அறிக்கையோடு காதேஸ் பர்னே யாவுக்குத் திரும்பி வந்து பல ஆண்டுகள் கடந்து விட்டன. இன்னமும் மக்கள் பாலைவனத்தைச் சுற்றி நடந்து திரிகிறார்கள். ஆனால் அவர்களால் நினைத்த இடத்தைச் சென்றடைய முடியவில்லை. அது வீணான முயற்சியாகவே இருந்தது.

ஒவ்வொரு நாள் காலையிலும் எத்தனை மனி தர்கள் இறந்து போனார்கள் என்னும் செய்தி யோடு ஓர் அறிவிப்பாளன் மோசேயின் கூடாரத் தண்டை வருகிறான். மரணம், மரணம், மரணம், இன்னும் அதிகமான மரணங்கள். துக்கச் செய்தி களே பெரும்பாலும் வந்துகொண்டிருந்தன, பாலை வனம் கல்லறையாக விரிவடைந்து கொண்டி ருக்கிறது. ஒவ்வொரு முறையும் மக்கள் பாளை யத்தை விட்டுப் புறப்படுகையில் மற்றொரு கல்ல றைத் தோட்டத்தை உருவாக்கி விட்டுச் சென்றார் கள்.

அந்தக் குறிப்பிட்ட நாளில், **தேவ மனிதனா கிய மோசே** தன்னால் முடிந்த மட்டும் செய்தி யைக் கேட்டான். மரணங்களின் எண்ணிக் கையின் பெருக்கத்தால் மனக்கலக்கம் மேலிட்ட வனாக, தனது கூடாரத்துக்குள் திரும்பிச் செல் கிறான், தரையில் முகங்குப்புற வீழ்ந்தவனாகத் தனது மன்றாட்டை தேவனிடம் ஏறெடுக்கிறான்.

90:1,2 பெருமளவு உயிரிழப்பு, சடிதியில் மாறும் நிலையற்ற தன்மை ஆகியவற்றிற்கிடையே, அவன் முதலாவது கர்த்தருடைய நிலையான தன்மையில் மனக்குறை நீங்கி ஆறுதல் பெறுகிறான். மற்றவை யாவும் மங்கி இல்லாமல் போகும்போது, தேவன் தமது மக்களுக்குக் குடியிருப்பாகவும் அடைக்கலமாகவும் விளங்கி என்றும் மாறாதவராக இருக்கிறார். நித்தியத்தின் கடந்த காலம் முதல் நித்தியத்தின் வருங்காலம் வரை அவரே **தேவனாயிருக்கிறார்,** "அவர் ஞானமும், வல்லமையும், தூய்மையும், நீதியும், தயவும், உண்மையும் உடையவராக எவ்வித மாற்றமுமின்றி எல்லைக்குட்படா, நித்திய, உளவாம் தன்மை கொண்டவர்."

90:3,4 தேவன் காலத்திற்குட்படாதவராக இருக்கின்ற நிலைக்கு முற்றிலும் மாறாக மனித வாழ்வு குறுகிய காலத்திற்கே உரியது. தேவன், "மண்ணுக்குத் **திரும்புங்கள்**" என்று இடை விடாமல் கட்டளையிடுவது போன்று தோன்று கிறது, முடிவில்லாத நீண்ட வரிசையில் மனிதர் கள் கல்லறையை நோக்கிச் சென்று கொண்டி ருக்கிறார்கள். தொடக்கத்தில் வீழ்ச்சியுற்ற மனிதன் **ஆயிரமாண்டுகள்** உயிர்வாழ்ந்தான், நித்திய மானவருக்கு அந்த நாட்கள் கடந்துபோன நினைவு போலவும், ஓர் **இரவின்** சிறுபகுதி போல வும் இருக்கிறது.

90:5,6 மனித வாழ்வு விரைவில் மறைந்து போகிற நித்திரை போலவே மோசேக்குத் தோன்று கிறது. நீங்கள் உறங்குகிறீர்கள், கனவு காண் கிறீர்கள், துயில் எழுகிறீர்கள்; நேரம் கடந்து போகிறது பற்றிய நினைவு கொஞ்சமும் இருப்ப தில்லை. அல்லது, வேறொரு காட்சியைச் சிந்தித் துப் பார்க்கலாம், வாழ்வு புல்லைப் போல இருக் கிறது, காலையில் புதியதாகப் பசுமையோடு காணப்படும் புல், மாலையில் மங்கி உலர்ந்து போகிறது. "விதைக்கப்படுகிறது, வளருகிறது, அடித்துச் செல்லப்படுகிறது, வெட்டப்படுகிறது, மறைந்து போகிறது" என்று திருவாளர் ஸ்பர்ஜன் கூறினாற் போல இது இருக்கிறது.

90:7-10 எல்லா மரணமும் பாவம் உட்புகுந்த தால் ஏற்பட்ட விளைவாயிருக்க, பாலைவனத்தில் நடந்த நிகழ்வு தேவனுடைய பிரத்யேக தண் டனை என்பதை மோசே உணருகிறான். அவர்கள் எகிப்தை விட்டுப் புறப்பட்டபோது இருபது வய துக்கு மேற்பட்டவர்களாயிருந்த போர்வீரர்கள் யாவரும் கானானைச் சென்றடைவதற்கு முன் மரணமடைய வேண்டும். இஸ்ரவேல் மக்கள்

காலேபும் யோசுவாவும் உற்சாகப்படுத்தியபடி கானானுக்குள் செல்லாமல், நம்பிக்கையற்ற உளவாளிகளின் பக்கமாகச் சேர்ந்துகொண்ட தால் தேவன் அவர்களிடம் கடுஞ்சினம் கொண்டிருந்தார் என்பதன் அடையாளமே சாவு மணியின் ஒலியாகும். அவர்களுடைய அக்கிரமங்களும் அந்தரங்க பாவங்களும் எப்போதும் அவருக்கு முன்பாக இருக்கின்றன; அவை இடைவிடாமல் எரிச்சலூட்டி மனவேதனை அளித்துக்கொண்டிருக்கின்றன. அதன் விளைவாக இஸ்ரவேலர் அவருடைய சினத்தின் இருண்ட மேகத்திற்குக் கீழாக வாழ்கிறார்கள். மேலும் அவருடைய கோபத்தின் நுரை தள்ளுகிற அலைகளுக்குள் மூழ்கடிக்கப்படுகிறார்கள். சிலர் அவர்களுக்கென்று குறிக்கப் பெற்ற **எழுபது** ஆண்டுகள் வாழ்கிறார்கள், சிலர் **எண்பது** ஆண்டுகள் வரை வாழ்கிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் அவர்களுடைய வாழ்க்கையோ சஞ்சலம் நிறைந்ததாயிருக்கிறது. நோய் பற்றிக்கொள்கிறது, அது போனவுடன் வேறொரு நோய் பற்றிக்கொள்கிறது. சிறிய வேலையும் கூட பெருமுயற்சியோடு செய்யப்பட வேண்டியதாயிருக்கிறது. நாடித் துடிப்பு நின்று போனவுடனே, அவன் காணப்படாத முகமாகிறான்."

90:11,12 கோபத்தில் விழித்தெழுந்த தேவனுடைய வல்லமையின் பயங்கரத்தில், தேவ மனிதன் அசையாமல் நிற்கிறான். தான் வியந்து போற்றுகிறவருடைய கோபத்தின் உக்கிரத்தை ஒருவன் எண்ணிப் பார்க்கையில், அவருக்குச் செலுத்த வேண்டிய மரியாதையை அவனால் செலுத்த முடியுமா? ஒன்று நிச்சயம்: நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு நாளையும் நாம் மதிப்பீடு செய்யும்படி அது வழிநடத்துவது நிச்சயம். நாம் நித்தியத்திற்கென்று அதைக் கணக்கிடும்படி ஒவ்வொரு நாளிலும் நாம் கீழ்ப்படிந்து வாழுவோம்.

90:13.14 கர்த்தர் **பரிவுடன்** தம் மக்களிடமாகத் **திரும்பி** வரவேண்டும் என்று மோசே விண்ணப்பிக்கிறான். அவருடைய கோபம் எப்போதும் பற்றி எரியுமா? அவர்கள் தங்களுடைய எஞ்சிய வாழ் நாட் காலத்தைச் சமாதானத்தோடும் மகிழ்ச்சியோடும் வாழும்படி, அவர் தயவுசெய்து அவர்களிடம் இரக்கம் பாராட்டி, அவருடைய கிருபையால் விரைவாக அவர்களை மனநிறைவு அடையச் செய்ய மாட்டாரா?

90:15,16 "ஈடு செய்யும் காலம்" வேண்டுமென்று இப்பொழுது மோசே விண்ணபிக்கிறான். அதாவது இஸ்ரவேல் துன்புறுத்தலையும் பாடுகளையும் அனுபவித்த ஆண்டுகளுக்கு இணையாக மகிழ்ச்சியின் ஆண்டுகள் வேண்டுமென்று அவன் விண்ணப்பிக்கிறான். அவர் தண்டனை வழங்கி அவருடைய வல்லமை வெளிப்பட்டதை அவர்கள் ஏற்கனவே கண்டிருக்கிறார்கள்; இப்பொழுது கர்த்தர் தமது முகத்தின் மறுபக்கத்தை காட்டவேண்டுமென்று, அதாவது கிருபையின் செயல்பாட்டைக் காட்ட வேண்டுமென்று விண்ணப்பிக்கிறான்.

90:17 இறுதியாக, கர்த்தர் தம்மால் தெரிந்தெடுக்கப்பட்ட இப்பூமிக்குரிய மக்களைத் தயவுடன் நோக்கிப் பார்க்க வேண்டும் என்றும், அவர்கள் தங்களுடைய முயற்சிகள் எல்லாவற்றிலும் பலன்பெற வேண்டும் என்றும் மோசே பரிந்து பேசுகிறான்: **"எங்கள் கைகளின் கிரியையை எங்களிடத்தில் உறுதிப்படுத்தியருளும்."**

பெரும்பாலான கிறிஸ்தவர்களின் அடக்க நிகழ்ச்சிகளில் 90 -ஆவது சங்கீதம் படிக்கப்படுகிறது. இவ்வாறு அது தனிச்சிறப்பு பெற்றிருப்பதற்கான காரணமில்லாமல் இல்லை. ஏனெனில் நமது வாழ்க்கை எவ்வளவு குறுகியது என்பதை அது நினைவுபடுத்துகிறது; மேலும் நாம் நம்முடைய நாட்களை எண்ணும் அறிவைப் பெற வேண்டும் அல்லது வாய்ப்புகளைப் பயன்படுத்த வேண்டும் என்னும் பாடத்தை அது கற்பிக்கிறது. ஆனால் புதிய ஏற்பாட்டுக் காலத்தின் ஆறுதலையும் உறுதியையும் இச்சங்கீதம் சொல்லாமல் விட்டுவிட்டது. கிறிஸ்து "ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார்." சாவு நமக்கு ஆதாயம் என்பதை நாம் அறிந்திருக்கிறோம்; அந்நிலை தேகத்தை விட்டுப் பிரிந்து, கிறிஸ்துவுடனே இருப்பது என்பதையும் நாம் அறிந்திருக்கிறோம். ஆகவே இச்சங்கீதத்தின் இருளார்ந்த எழுச்சி குன்றிய வெளித்தோற்றம் கிறிஸ்துவின் மேல் விசுவாசி கொண்டிருக்கிற நம்பிக்கையால் மகிழ்ச்சியாகவும் வெற்றியாகவும் மாற்றப்பட வேண்டும். ஏனெனில் மரணத்தின் கூர் முறிந்து போய்விட்டது, பாதாளத்தின் வெற்றி கொள்ளையடிக்கப்பட்டுவிட்டது. விசுவாசி இவ்வாறு பாடுகிறான்:

மரணமே உன்கூர் எங்கே?
பாதாளமே உன்ஜெயம் எங்கே?
வல்லவர் இயேசு உயிர்த்தெழுந்தாரே
வல்ல பிதாவின் செயலிதுவே!
உயிர்த்தெழுந்தாரே அல்லேலூயா
ஜெயித் தெழுந்தாரே

உயிருடன் எழுந்த – மீட்பர் இயேசு
எம் சொந்தமானாரே!

சங்கீதம் 91 - என்னுடைய சங்கீதம்

1922 -ஆம் ஆண்டு வெஸ்டர்ன் ஹெப்ரைட்ஸ் என்னுமிடத்தில் ஐந்து வயதுச் சிறுவன் ஒருவன் தொண்டையில் ஏற்பட்ட தொற்றுநோயால் சாவை நோக்கிச் சென்றுகொண்டிருந்தான். அவனுடைய தொண்டையில் சவ்வு போன்ற சளி கட்டிக்கொண்டிருந்தது. கிறிஸ்தவப் பெண்மணியான அவனுடைய தாயார், அவனுடைய கடைசி மூச்சைப் பார்க்கக் கூடாது என்னும் எண்ணத்துடன் தனது முகத்தைத் திருப்பிக் கொண்டார். அதே நேரத்தில் கதவு தட்டும் ஒலி கேட்டது. அருகில் இருந்த சிற்றூரிலிருந்து அம்மையாரின் மைத்துனர் உள்ளே வந்தார். "இந்தப் பையனைக் குறித்து நீங்கள் கவலைப்பட வேண்டாம், இவன் குணமடைவான், ஒருநாள் இறைவன் இவனுடைய ஆத்துமாவை இரட்சிப்பார். இதைச் சொல்லவே நான் வந்தேன்" என்று அவர் கூறினார். அம்மையாரின் உள்ளம் குழம்பியது, அவர் நம்பிக்கை அற்றவராக "நீங்கள் அவ்வாறு கூறுவதற்குக் காரணம் என்ன?" என்று வினவினார். அவர் அனல் அருகில் தனது இருக்கையில் அமர்ந்து 91 -ஆவது சங்கீதத்தைப் படித்துக்கொண்டிருந்தபோது, கடைசி மூன்று வசனங்களின் மூலமாக தேவன் தனிப்பட்ட வகையில் பேசியதாகக் கூறினார்:

என்னிலவன் அன்புகூர்ந்தான்
அவனை நான் விடுவிப்பேன்
என்பெயரை அவனறிந்தான்
அவனை நான் உயர்த்திடுவேன்!
அவன் என்னை அழைத்திடுவான்
அவனுக்குச் செவிசாய்ப்பேன்
அவன் துன்பம் அகற்றிடுவேன்
மேன்மைதனை அளித்திடுவேன்!
அவன் வாழ்நாளைக் கூட்டியே
நீடித்த நாட்களால் நிரப்புவேன்
அவன் இரட்சிப்பைக் கண்டவனாய்
களிகூர்ந்து மகிழ்ந்திடுவான்!

நானே அந்தச் சிறுவன். அந்த இரவில் இறைவன் என்னை மரணத்திலிருந்து காப்பாற்றினார்; பதின்மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு அவர் என்னுடைய ஆத்துமாவை இரட்சித்தார். நீண்ட வாழ்நாளை அவர் எனக்குக் கொடுத்து மன நிறைவு அடையச் செய்தார். 91 -ஆவது சங்கீதத்தை என்னுடைய சங்கீதம் என்று நான் கூறுவதன் பொருளை இப்பொழுது நீங்கள் அறிந்திருப்பீர்கள். இதை நான் மற்றவர்களுடன் பொருளற்ற முறையில் பகிர்ந்துகொள்வதில் விருப்பம் கொண்டிருக்கிறேன், ஆனால் இது நிச்சயமாக என்னுடைய சங்கீதம்தான்!

இறையியல் அறிஞர்கள் பலர் இதனை ஒப்புக் கொள்ள மாட்டார்கள். இது மேசியாவைக் குறித்த சங்கீதம் என்று அவர்கள் கூறுகிறார்கள். அவர்கள் மிகச் சரியாகவே கூறுகிறார்கள், அதில் ஐயமேதுமில்லை. இச்சங்கீதத்தின் முதன்மையான விளக்கம் அற்புதர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றியதே ஆகும். அந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு இப்பாடலை நாம் படிக்க விருக்கிறோம்; ஆயினும் இதில் கூறப்பட்டுள்ள உன்னத வாக்குறுதிகள் நமக்குரியவை என்னும் சற்றுக் குறைவான பொருளோடும், அவற்றை நினைவுகூர்ந்து ஏற்றுக்கொள்வோமாக.

உமது கிருபையின் ஊற்றுகள்
யாவும் எனக்குரியவை
உமது வாக்குகள் அனைத்திலும்
என்பெயர் எழுதிடும்!

91:1,2 ஒப்பற்ற முதன்மையான வகையில் **உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவர்** கர்த்தராகிய இயேசுவே ஆவார். மேலும் அவர் **சர்வ வல்ல வருடைய நிழலில் தங்குகிறார்.** அவருடைய வாழ்வைப் போன்று வேறொரு வாழ்வு இருந்ததில்லை. அவர் தம்முடைய திருத்தந்தையுடன் முறிவுபடாத, முழுமையான ஐக்கியம் கொண்டிருக்கிறார். அவர் ஒருக்காலும் தமது சொந்த சித்தத்தில் செயல்பட்டதில்லை; எப்போதும் திருத்தந்தை நடத்திய வண்ணமே அவர் செயல்பட்டார். அவர் பரிபூரணமான இறைவனாக இருந்தபோதிலும், அவர் நிறைவான மனிதராகவும் இருந்தார். அவர் இப்புவியில் தேவனை முழுநிறைவாகச் சார்ந்தே வாழ்ந்தார். எவ்வித மழுப்புதலும் அற்ற வகையில் அவர் மேல்நோக்கிப் பார்த்து, **"நீர் என் அடைக்கலம், என் கோட்டை, என் தேவன், நான் நம்பியிருக்கிறவர்"** என்று கூறுகிறவராக இருந்தார்.

91:3 மூன்று முதல் பதின்மூன்று வரையிலான வசனங்கள் பரிசுத்த ஆவியானவரின் சொற்களாகத் தோன்றுகின்றன. கர்த்தராகிய இயேசு நிறைவான நம்பிக்கையோடு தமது வாழ்வை வாழ்ந்ததன் காரணமாகப் பெருமளவு பாதுகாப்புப் பெற்றிருந்தார் என்று இந்தச் சொற்கள் உறுதி

கூறுகின்றன. பாதுகாப்பின் உறுதிகள் எவை? ஒன்பது உள்ளன:

பதுங்கித் தாக்கும் ஆபத்துகளிலிருந்து விடுதலை. கவனமற்றிருக்கையில் எதிரியின் சதித் திட்டத்தின் வலையில் சிக்கிக்கொள் வதைப் பற்றியே பறவையைப் பிடிக்கும் வேடனு டைய கண்ணி பேசுகிறது.

உயிர்க்கொல்லி நோயிலிருந்து பாதுகாப்பு. நம்முடைய கர்த்தர் எப்போதாவது நோயுற்றிருந் தார் என்பதற்கான காரணம் ஒன்றும் இல்லை.

91:4 சர்வ வல்லவரிடத்தில் *தங்குமிடமும் அடைக்கலமும்* உள்ளன. ஒரு தாய்ப் பறவை தனது குஞ்சிடம் காட்டும் அக்கறை போல தேவன் தனிப்பட்ட முறையில் மென்மையாக அக்கறை செலுத்துகிறார்.

தேவனுடைய சத்தியத்தில் பாதுகாப்பு. அவருடைய வாக்குறுதிகள் நிச்சயமானவை. அவர் சொன்னதைச் செய்வார். இதுவே விசு வாசியின் **பரிசையும் கேடகமுமாம்**.

91:5 *அச்சத்திலிருந்து விடுதலை.* நான்கு வகையான ஆபத்துகள் சொல்லப்பட்டுள்ளன. அவையே பொதுவாக அச்சம் ஏற்படுத்துபவை.

இரவு என்னும் போர்வைக்குள் மறைந்து பகைவன் தாக்குதல் நடத்துவது உண்மை யாகவே பயமுறுத்தக் கூடியதாகும், ஏனெ னில் அந்தத் தாக்குதல் எங்கிருந்து வருகிறது என்பதை அறிவது கடினம்.

பகலில் பறக்கும் அம்பு என்பது உண்மையாகவே ஏவுகணைகளாக இருக்கக்கூடும், அல்லது "பொல்லாதவர்களின் சதித்திட்டங்களையும் அவதூறுகளையும்" குறிக்கும் உருவகமாக இருக்கக்கூடும் (விரிவாக்கமொழிபெயர்ப்பு).

91:6 இருளில் நடமாடும் கொள்ளை நோய் கள். இதனையும் நாம் எழுத்தின்படியோ உருவக மாகவோ எடுத்துக்கொள்ளலாம். உடல்கூறு சம்பந்தப்பட்ட சில நோய்கள் இருளில் அதிகரிக் கும் கதிரவனின் ஒளியில் ஒழிந்துபோகும். அதுபோலவே ஒழுக்கக் கேடுகள் இருளில் அதிகரிக்கின்றன.

மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரம். இது என்னவென்று குறிப்பிடப்படவில்லை. இதை அவ்வாறே விட்டுவிடுவது நல்லது என்று தோன்றுகிறது. இதன் பின்னணியில் கொடுக் கப்பட்டுள்ள வாக்குறுதிகள் பலதரப் பட்டவை யாக விளங்கும்.

91:7,8 *படுகொலை நடக்கும்போது பாது காப்பு.* பெருமளவு கொலைகள் நடக்கும் காலத் திலும்கூட கர்த்தருக்கு இன்பமானவர் முழுமை யான பாதுகாப்புப் பெறுவார். **துன்மார்க்கர்** தண் டிக்கப்படுகிற வேளையில் அவர் அவர்களைக் காண்கிறவராக இருப்பாரெயொழிய எவ்விதக் காயமும் அடையமாட்டார்.

91:9,10 *பேரிடரில் பாதுகாப்பு.* இரட்சகர் **உன்னதமானவரைத்** தமது **அடைக்கலமாக வும் தாபரமாகவும்** கொண்டிருப்பதால் பேரிடர் எதுவும் அவரைத் தாக்காது. எந்த வாதையும் அவரை அணுகாது.

91;11,12 *தேவதூதர்களின் கூட்டத்தால் பாதுகாப்படுதல்.* ஆலயத்தின் கோபுரத்திலி ருந்து கர்த்தராகிய இயேசுவைக் கீழே தள்ளிவிடு வதாகச் சாத்தான் சோதனை செய்தபோது அவன் மேற்கோள் காட்டிய வசனங்கள் இவையே (லூக்கா 4:10,11). இந்த வசனங்கள் தம்மைக் குறித்தவை அல்ல என்று இயேசு மறுத்துரைக்க வில்லை. தேவனைச் சோதிப்பதற்கு இவற்றைச் சாக்குப்போக்காக எடுத்துக்கொள்ளக்கூடாது என்றே அவர் மறுத்துரைத்தார். அவர் ஆலயத் தின் உப்பரிகையிலிருந்து குதிக்க வேண்டு மென்று தேவன் சொல்லவில்லை. இரட்சகர் அவ்வாறு குதித்திருந்தால் தேவனுடைய சித் தத்திற்கு அப்பாற்பட்டு அவர் செயல்பட்டதாகக் காணப்பட்டிருக்கும், அப்பொழுது பாதுகாப்புக் கான வாக்குறுதி செயலற்றுப் போயிருக்கும்.

91:13 *சிங்கத்தின் மேலும் விரியன் பாம் பின்மேலும் வெற்றி.* இந்த வசனத்திடமாக வருவதற்கு முன்பே சாத்தான் தடுத்து நிறுத்தப் பட்டது கவனத்தை ஈர்க்கிறது. அவன் இதனைப் பயன்படுத்தியிருந்தால், அவன் *தனது அழி வையே* விவரிப்பதாகக் காணப்பட்டிருக்கும்! பிசாசு கர்ச்சிக்கிற சிங்கம் என்று திருமறை அவனை அறிமுகப்படுத்துகிறது. (1 பேதுரு 5:8). சிங்கம் என்னும் நிலையில் அவன் பயங்கரமான வலிமையோடு சரீரப்பிரகாரமான கொடுமை களை இழைக்கக் கூடியவன். அவன் பழைய பாம்பு என்றும் குறிப்பிடப்பட்டுள்ளான் (வெளி. 12:9). அந்நிலையில் அவன் வஞ்சகத் திட்டங் களைத் தீட்டி ஏமாற்றி அழிக்கக் கூடியவன்.

ஆகவே, மனிதகுமாரன் இவ்வுலக வாழ்க்கை யின்போது நிறைவான நம்பிக்கையோடும் கீழ்ப் படிதலோடும் வாழ்ந்ததால் தூய ஆவியானவர் அவருடைய பாதுகாப்புக்காக இந்த ஒன்பது உறுதிகளைத் தந்திருக்கிறார். இந்தத் தருணத்

தில் திருத்தந்தையாகிய இறைவன் "நான் செய்வேன்" என்று ஆறுமுறை கூறி அந்த உறுதிமொழிகளை வலியுறுத்தியிருக்கிறார். இப்பகுதியில் கிறிஸ்து இயேசு என்னும் மனிதரின் முழு வாழ்க்கையும் சிந்தனைக்குக் கொண்டுவரப்படுகிறது எனலாம்.

91:14 *அவரது களங்கமற்ற புவிவாழ்வு.* **"அவர் என்னிடத்தில் வாஞ்சையாயிருக்கிறபடியால் அவரை விடுவிப்பேன்; என் நாமத்தை அவர் அறிந்திருக்கிறபடியால் அவரை உயர்ந்த அடைக்கலத்தில் வைப்பேன்."**

91:15 *பாவங்களுக்கான அவருடைய பாடுகள்.* **"அவர் என்னை நோக்கிக் கூப்பிடுவார், நான் அவருக்கு மறுஉத்தரவு அருளிச் செய்வேன்; ஆபத்தில் நானே அவரோடிருப்பேன்"**

அவருடைய உயிர்த்தெழுதலும் விண்ணகம் ஏகுதலும். **"அவரைத் தப்புவித்து, அவரைக் கனப்படுத்துவேன்."**

91:16 *தேவனுடைய வலதுபுறத்தில் அவர் தற்போது இருக்கும் நிலையும், நிறுவப்படவிருக்கிற அவருடைய அரசும்.* **"நீடித்த நாட்களால் அவரைத் திருப்தியாக்கி, என் இரட்சிப்பை அவருக்குக் காண்பிப்பேன்"**

இந்தச் சங்கீதம் இவ்வளவு செய்திகளை வழங்குகிறது! சற்று பொறுத்திருங்கள்! நீங்கள் ஒருவேளை இந்தச் சங்கீதம் எதைக் கூறவில்லை என்று சிந்தித்துக் கொண்டிருப்பீர்கள். எந்த முக்கியமான கேள்விக்கு இது விடையளிக்கவில்லை? எடுத்துக்காட்டாக, இவ்வுலக மனிதர்கள் இறுதியில் அவரைக் கொலைசெய்தார்களே, அவ்வாறிருக்க மேசியாவுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படும் என்னும் வாக்குறுதிகள் யாவும் நிறைவேறின என்று நாம் எவ்வாறு ஒப்புக்கொள்ள முடியும்? இந்தச் சங்கீதம் விசுவாசிகளுக்குப் பொருந்தும் என்று நாம் எண்ணுவோமானால், சில விசுவாசிகள் நோயில் மாய்ந்து போகிறார்கள், போர்க்களத்தில் இறந்து போகிறார்கள் அல்லது விமானம் விழுந்து மரணமடைகிறார்கள், இவையாவற்றையும் என்னவென்று கூற முடியும்?

இதற்கான விடையில் ஒரு பகுதி கீழ்க்காணும் விளக்கத்தில் காணப்பெறும்: யெகோவாவை நம்புகிறவர், அவருடைய வேலை முடியும்வரை மரணமடைய மாட்டார். அவ்வாறுதான் இயேசு தமது சீடர்களிடம் கூறினார். யூதேயாவுக்குத் திரும்பிச் செல்லலாம் என்று அவர் கூறியபோது அவருடைய சீடர்கள் உரைத்த பதில்:

> "ரபீ, இப்பொழுதுதான் யூதர் உம்மைக் கல்லெறியத் தேடினார்களே, மறுபடியும் நீர் அவ்விடத்திற்குப் போகலாமா?"
>
> இயேசு பிரதியுத்தரமாக: "பகலுக்குப் பன்னிரண்டு மணிநேரம் இல்லையா? ஒருவன் பகலிலே நடந்தால் அவன் இந்த உலகத்தின் வெளிச்சத்தைக் காண்கிறபடியினால் இடற மாட்டான். ஒருவன் இரவிலே நடந்தால், தன்னிடத்தில் வெளிச்சம் இல்லாதபடியினால் இடறுவான்" என்றார் (யோவான் 11:7-10).

கர்த்தர் தமது வேலையை முடிக்கும்வரை யூதர்களால் தம்மைத் தொட முடியாது என்பதை அறிந்திருந்தார். இவ்வுண்மை எல்லா விசுவாசிகளுக்கும் பொருந்தும்; ஒவ்வொருவனும் விசுவாசத்தால் தேவ வல்லமையால் காக்கப்படுகிறான்.

மேலும், ஒரு விசுவாசியிடம் தனிப்பட்ட முறையில் இந்தச் சங்கீதத்தின் சில வசனங்களின் மூலமாகக் கர்த்தர் பேசலாம். அவ்வாறு அவர் பேசுவாரானால், அவன் அந்த வாக்குறுதியைத் தனக்குரியது என்று கோரி அதன் மேல் சார்ந்து கொள்ள வேண்டும். தொடக்கத்தில் நாம் கூறிய தனிநபர் குறித்த நிகழ்வு அதற்கோர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

இறுதியாக, இங்கு சொல்லப்பட்டுள்ள செய்தி பொதுவாக உண்மையாயிருக்கிறது, அதாவது கர்த்தரை நம்புகிறவர்கள் அவருடைய பாதுகாப்பைப் பெறுவார்கள். அதற்கு விதிவிலக்காக நடந்த நிகழ்வுகளை நாம் அதிகப்படியாக வலியுறுத்திப் பேசுகிறோம். எனினும் பொதுவான விதி இன்னமும் உண்மையாகவே இருக்கிறது: கர்த்தரிடத்தில் பாதுகாப்பு இருக்கிறது.

சங்கீதம் 92:
ஆன்மீக தாவரவியலில் ஒரு பாடம்

92:1-5 **கர்த்தரைத் துதிப்பது** முற்றிலும் **நல்லது** என்னும் உண்மையை ஒருவரும் மறுத்துரைக்க மாட்டார்கள். அத்தகைய நன்றியறிதலுக்குக் கர்த்தர் தகுதியானவர் என்னும் அடிப்படையில் அது **நல்லது**. அவ்வாறு கர்த்தருக்குத் **துதிகளைச்** செலுத்துபவருக்கும், அதைக் கேட்பவருக்கும் அது **நல்லது. உன்னதமானவருடைய** திருப்பெயருக்குக் **கீர்த்தனம் பண்ணுவது**, அவ்வாறான செயலில் ஈடுபடுகிற எவரொருவருக்கும் தகுதியாயிருக்கும். அவருக்குத் துதிகளைச் செலுத்துவதற்கான ஆய்வுப்பொருட்களில் ஒரு குறைவும் இல்லை. அவருடைய

கிருபை காலைப்பொழுதில் செய்யப்படும் துதி களுக்கு முடிவில்லாத கருப்பொருளாக விளங்கு கிறது; இரவு நேரம் முழுவதையும் நிரப்புவதற்கு அவருடைய சத்தியம் போதுமானது மட்டுமின்றி கூடுதலாகவே இருக்கிறது. அவருடைய புகழைப் பாடுவதற்கான இசையின் அழகை மேம்படுத்தப் **பத்து நரம்பு வீணையும், தம்புருவும் சுரமண்ட லமும்** இணைந்து ஒலிக்கும். கர்த்தருடைய வியத் தகு படைப்பையும், கொடையையும், மீட்பையும் புகழ்ந்து பாட எந்த அளவு இனிமையான இசை யும் போதாது. அவருடைய செயல்களையெல் லாம் சிந்தித்துப் பார்க்கும்போதே நமது இருதயம் பாடுகிறது. சிக்கல் நிறைந்ததும் வியந்து போற்றக் கூடியதுமான தேவனுடைய திட்டங்கள், அதாவது ஆழமான வடிவமைப்புகளும் ஞானம் நிறைந்த திட்டங்களும் புகழ்ந்து பாடுதல் என்னும் தீப்பந் தத்திற்கு எரிபொருளாகத் திகழ்கின்றன.

92:6-9 உலகீய குணமுடைய மனிதன் இறை வனின் ஆழ்ந்த நோக்கங்களைப் புரிந்துகொள் வான் என்று நீங்கள் எதிர்பார்க்காதீர்கள். அப் படிப்பட்டவன் அவற்றை அறிவதில்லை. "அவை ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக் கப்படுகிறவை" (1 கொரி. 2:14). அவன் உலகீய அறிவில் மிகுந்த நுண்ணறிவு படைத்தவனாக இருந்தாலும், தெய்வீக சத்தியங்களைப் பொறுத் தவரை மந்தபுத்தியோடும் மதியீனனாகவும் செயல்புரிகிறான். துன்மார்க்கனை அழிவுக்கு நியமிக்கக்கூடிய உலகளாவிய நிலையான நன் னெறிச் சட்டங்கள் குறித்த உண்மைகள் அவனு டைய அறிவுக்கு எட்டுவதில்லை. சிறிது காலம் அவன் வளம் பெற்றது போலத் தோன்றினாலும், அவனுடைய வெற்றி புல்லைப் போலத் தோன்றி மறைகிறதாகவே காணப்படும். கர்த்தர் முடிசூட் டப்பட்டிருப்பது **என்றென்றும்** நிச்சயமாக இருப் பதுபோலவே அவருடைய பகைவர் சிதறடிக்கப் படுவதும் நிச்சயம்.

92:10,11 இதற்கு மறுபுறமாக, காண்டாமிருகத் தின் கொம்பைப் போல நீதிமானின் கொம்பை தேவன் உயர்த்துகிறார். அதாவது, அவர் தமது மக்களுக்கு வல்லமையையும் மகத்துவத்தையும் தருகிறார். உண்மையோடு இருப்பவர்களை அவர் **புது எண்ணெயால் அபிஷேகம் பண்ணு கிறார்**. அது தூய ஆவியானவரின் கிருபை மிக்க ஊழியத்திற்கு மாதிரியாக இருக்கிறது. கடைசி அதிகாரம் எழுதப்படுகிறபோது, தேவனுடைய பரி சுத்தவான்கள் தங்களுடைய பகைவரின் சாவைக் கண்டிருப்பார்கள், மேலும் அவர்களுடைய அழிவின் கூக்குரலைக் கேட்டிருப்பார்கள்.

92:12-15 நீதிமான்களின் செழிப்பு **பனைமரத் துக்கும், லீபனோனின் கேதுருவுக்கும்** ஒப்பா யிருக்கிறது. **பனைமரம்** அழகிற்கும் உண்மைத் தன்மைக்கும் அடையாளமாக இருக்கையில், **கேதுரு** வலிமைக்கும் நிலைத்த தன்மைக்கும் அடையாளமாக விளங்குகிறது. விசுவாசிகள் செழிப்போடு வளர்வதற்கான காரணம், அவர்கள் கர்த்தருடைய ஆலயத்தில் நடப்பட்டவர்கள், தேவனுடைய பிராகாரங்களில் செழித்திருக் கிறார்கள். அவர்கள் ஒவ்வொரு நாளும் கர்த்த ருடன் ஐக்கியம் கொண்டவர்களாக வாழ்கிறார் கள். மேலும் அவரிடத்திலிருந்து வலிமையையும் வாழ்வாதாரத்தையும் பெறுகிறார்கள். அவர்களு டைய கனிதரும் திறனை வயதின் முதிர்ச்சி தடை செய்வதில்லை. அவர்கள் தொடர்ந்து தங்களு டைய ஆவிக்குரிய வாழ்வில் ஊக்கத்துடன் கூடிய துடிப்போடு செயல்படுகிறார்கள். அவர் களது உள்ளுரம் நிறைந்த வாழ்வால் அவர்களு டைய சாட்சி எப்போதும் பசுமையாயிருக்கிறது. கர்த்தருடைய வாக்குறுதிகளை நிறைவேற்று வதில் அவர் நீதியுள்ளவராக விளங்குகிறார் என்பதற்கு அவர்களுடைய செழிப்பு எடுத்துக் காட்டாக விளங்குகிறது. அவர் சார்ந்துகொள் வதற்கான கன்மலை, அவரைக் குறித்து நம்பா திருக்க ஒரு காரணமுமில்லை.

துன்மார்க்கர் புல்லுக்கு ஒப்பிடப்பட்டிருக் கிறார்கள் (வச. 7). நீதிமான்களோ எப்போதும் பசுமையாயிருக்கிறார்கள் (வச. 15). துன்மார்க்கர் உலர்ந்து உதிர்ந்து போகிறார்கள், ஆனால் நீதிமான்களோ மென்மேலும் வலுவடைகிறார் கள். இதுவே ஆன்மீக தாவரவியலின் ஒழுங்கு.

சங்கீதம் 93: நித்திய அரசரும் அவருடைய நித்திய அரியணையும்

93:1,2 கர்த்தர் முடிசூட்டப்படுகின்ற வேளை யில் பாடப்படும் பாடல்களில் இதுவும் ஒன்று. இஸ்ரவேலின் மேசியா தம்மை அரசராக அறிவிக் கும் மகிமை நிறைந்த நாளை இப்பாடல் எதிர் நோக்கியிருக்கிறது. அவருடைய முதல் வருகை யின்போது தாழ்மையை அணிந்தவராக வெளிப் பட்டார், அதற்கு நேர் எதிராக அன்று அவர் **மகத் துவத்தை அணிந்துகொண்டிருப்பார்**. உல கத்தை ஆளுவதற்குத் தேவையான பராக்கிர மத்தை அணிந்துகொண்டவராக அவர்தாமே வெளிப்படுவார். உலகத்தின் தரங்கள் உறுதி யான அசைக்கப்படாத கொள்கையின்மேல் நிலைநிறுத்தப்பட்டிருக்கும். அது ஒழுக்க நெறியி லும் அரசியலிலும் வன்முறைத் தாக்குதல் களுக்கு இடமளிக்காது.

யெகோவாவின் சிங்காசனம் எப்போதும் இருந்து வந்திருக்கிறது என்பதில் ஐயமேது மில்லை. ஆனால் ஆயிரமாண்டு ஆட்சி தொடங் கும்போது அது எவ்வண்ணம் தெளிவாகக் காட்சி யளிக்குமோ அவ்வண்ணம் இதுகாறும் வெளிப் படவில்லை. மாவரசர் எவ்வாறு நித்திய உளதாம் தன்மை பெற்றிருக்கிறாரோ, அதுபோலவே அவ ருடைய அதிகாரமும் தொடக்கமும் முடிவும் அற்றது.

93:3,4 நதிகளையும் இரைச்சலிடும் அலை களையும் குறித்துப் பாடலாசிரியன் பேசுகிற போது, கர்த்தருடைய மக்களைக் காலங்காலமாக ஒடுக்கி வந்த புறவின நாடுகளைக் குறித்தே சிந் திக்கிறான் என்பது தெளிவு. அந்நாட்டினர் அவர் ஆளுகை புரிவதற்கென வருகிறபோது அவருக்கு எதிராகச் சதியாலோசனை செய்வார்கள். ஆனால் அவர்களுடைய முயற்சி வீணாகி, குறுகிய காலத்தில் முறியடிக்கப்படும். அவர்கள் தங்களு டைய சத்தத்தைப் பயங்கரமான அச்சுறுத்தல் களோடும் பெருமைபாராட்டலோடும் உயர்த்தி னாலும் நாடுகளின் எல்லாக் கூட்டமைப்புகளை யும், அவர்களுடைய எல்லாப் படைபலத்தையும் காட்டிலும் யெகோவா வல்லமையுள்ளவர் என் பதை அறிவார்கள்.

93:5 இவ்வாறாக தேவனுடைய வார்த்தை உண்மையுள்ளது என்று காணப்படும். அவரு டைய எதிரிகள் தோற்கடிக்கப்படுவார்கள் மற்றும் அவருடைய நீதியுள்ள ஆட்சி நிறுவப்படும் என்பன பற்றிய அவருடைய வாக்குறுதிகள் நிறைவேறும். எருசலேம் ஆலயம் எல்லாப் பொல் லாப்புகளுக்கும் தூய்மைப்படுத்தப்பட்டு அது யாருடைய வீடோ அவருடைய தகுதிக்கு ஏற்ப விளங்கும்.

> அவர் ஆட்சிபுரிகிறபோது ஏசாயா 23:18; சக ரியா 14:20,21; மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் 4:8 ஆகிய வசனங்களில் முன்னுரைக்கப்பட்டபடி எல்லாம் பரிசுத்தமாயிருக்கும், எல்லாம் பரிசுத்த குணவியல்பை வெளிப்படுத்தும்.[62]

சங்கீதம் 94: நீதியைச் சரிக்கட்டுகிற தேவன்

இறைவனின் தனியியல்புகள் என்னும் சிறப்பு வாய்ந்த நூலில் திருவாளர் A. W. பிங் எழுது கிறார்:

> தேவனுடைய கோபாக்கினைக்காகத் தாங்கள் வருத்தம் தெரிவிக்க வேண்டும் என்று அதைக் குறித்து எண்ணுகிற பெயரளவுக் கிறிஸ்தவர்கள் பலர் இருக்கிறார்கள், இவர்களைக் காண்பது நமக்கு வருத்தத்தை உண்டாக்குகிறது. அப்படிப் பட்ட மனிதர்கள் தேவனுடைய கோபாக்கினை என்று ஒன்று இருக்கக்கூடாது என்று விரும்பு கிறார்கள்... அவருடைய நற்குணத்துக்குக் கோபாக்கினை ஏற்புடையதன்று என்று சிலர் அப்படிப்பட்ட சிந்தனையைத் தங்களுடைய மன திலிருந்து அகற்றி, தங்களையே ஏமாற்று கிறார்கள் கொள்கிறார்கள்... ஆனால் தேவனோ தமது கோபம் மற்றும் சீற்றம் ஆகியவற்றை வெளிப்படுத்த வெட்கப்படுவதில்லை.. தேவனு டைய உண்மைத்தன்மை, வல்லமை, இரக்கம் ஆகிய பண்புகளைப் போலவே அவருடைய கோபமும் தெய்வீக நிறைவேயாகும்... விண் ணகத்தை உண்டாக்கின தேவனுடைய அதே இயல்பே நரகமும் தேவை என்று உணர்ந்து அதை உண்மையாக உருவாக்கியிருக்கிறது.[63]

94:1-3 தேவன் தீமையை வெறுக்கிறார் என் பதை அவர் வெளிப்படுத்த வேண்டும் என்று இஸ்ர வேலின் உண்மையுள்ள மீதியானவர்கள் **நீதி யைச் சரிக்கட்டுகிற தேவனிடத்தில்** விண் ணப்பிக்கிறதை 94 -ஆவது சங்கீதத்தில் நாம் கேட்கிறோம். தம்முடைய பிரியமான மக்களுக்கு எதிராகத் தீங்கிழைத்த பொல்லாத ஆட்சியாளர் களை நேர்மையான அனைத்துலக நீதி அரசர் பழிவாங்க வேண்டிய தருணம் வந்துவிட்டது. **"எதுவரைக்கும்?"** என்னும் கூக்குரல் தணிவதற் கான நிலை விரைவில் வரப்போகிறது. **துன்மார்க் கரின்** கொண்டாட்டம் தடைபண்ணப்படும்.

94:4-7 பிறருக்குத் துன்பம் தரும் அகந்தை மிக்க மனிதர்களுக்கு எதிரான குற்றச்சாட்டு இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. "அவர்களுடைய ஆணவத்தைப் பாருங்கள்! இங்கு அவர்களு டைய கர்வம் வெளிப்படுகிறது. இந்தத் துன்மார்க் கர் எவ்வளவாகப் பெருமைபாராட்டுகிறார்கள்?" (L. B). அவர்கள் தங்களுடைய கால்களின் கீழே யெகோவாவின் மக்களை மிதிக்கிறார்கள்; அவர் மேல் விசுவாசம் கொண்ட மீட்கப்பட்ட மக்களை இடைவிடாமல் துன்புறுத்துகிறார்கள். பாதுகாப் பற்ற விதவைகளையும், சந்தேகப்படாத விருந் தினரையும், உதவியற்ற அநாதைகளையும் அவர்கள் ஏமாற்றுகிறார்கள். **யாக்கோபின் தேவன் கவனிக்க மாட்டார்** அல்லது என்ன நடக் கிறது என்பது அவருக்குப் புரிகிறதில்லை என் பதே அவர்களுடைய மனப்பான்மை

94:8-11 தேவனுக்குத் தெரியாது என்று அவர் கள் சிந்திக்கிறார்களெனில், அவர்கள் எந்த அள விற்கு **மூடராக** இருப்பார்கள்! மனிதனுடைய

உடலில் காதை வைக்கும் அளவிற்கு அவர் திறம் பெற்றவர், அவ்வாறிருக்க துன்மார்க்கர் என்ன கூறுகிறார்கள் என்பதைக் கேட்பதற்கான ஆற்றல் இல்லாமலிருப்பாரா? கண்ணைப் படைத்தவரால் என்ன நிகழ்கிறது என்பதைக் காணாமலிருக்க முடியுமா? வரலாறு நமக்கு வெளிப்படுத்துவது போல, வெவ்வேறு இனமக்களைத் துரத்த ஆற்றல் பெற்றிருக்கும் அவர் தமக்குப் பிரியமான மக்களை ஒடுக்குகிற கொள்ளைக் கும்பலை அடக்க ஆற்றலற்று இருப்பாரோ? மனுமக்களுக்கு அறிவுபுகட்டுகிற அவருக்கு **அறிவு** குறைவாக இருக்குமோ? உண்மை யாதெனில் அவர் எல்லாவற்றையும் **அறிந்திருக்கிறார்**. கபடு நிறைந்த மனிதர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதையும், அவர்களுடைய சிந்தனைகள் வெறுமனே காற்றைத் திரித்தது போலிருக்கும் என்பதையும் அவர் அறிவார்.

94:12-15 அல்லற்பட்ட பாடலாசிரியன் தனது தொல்லைகளை தேவன் கற்பிக்கும் பாடத்தின் ஒரு பகுதி என்று கண்டுணர அவனுடைய விசுவாசம் தகுதிப்படுத்துகிறது. இவ்வாறு கர்த்தரால் கற்பிக்கப்படுதல் மற்றும் அவருடைய நியாயப் பிரமாணத்தில் பயிற்சி பெறுதல் இரண்டும் மேன்மையானவை. **துன்மார்க்கனுக்குக் குழிவெட்டப்படும்வரை, தேவன்தாமே தீங்குநாட்களில்** இளைப்பாறுதலைத் தருகிறார். யெகோவா தமது மக்களை ஒருக்காலும் கைவிடமாட்டார் அல்லது அவர்தாம் அன்புகூருகிற சுதந்தரத்தை விட்டுவிட மாட்டார் என்று அவனால் நம்பிக்கையோடு இருக்க முடியும். நீதி முன் இருந்தது போல தனக்குரிய இடத்தைப் பெறுவதைத் தடை செய்ய முடியாது. மேலும் நேர்மையான மனிதர்கள் நீதியை மற்றவர்களிடத்தில் செலுத்தி, அதை பதிலாகத் திரும்பப் பெறுவார்கள்.

94:16-19 துன்மார்க்கரின் மூழ்கடிக்கக்கூடிய ஆற்றலுக்கு எதிராகப் பாதுகாப்பவர் யார் என்று பாடலாசிரியன் ஆச்சரியப்படும் நேரங்கள் உண்டாயிருந்தன. ஆனால் அவன் தனியே விடப்படவில்லை. அவனுக்கு உதவிபுரிவதற்கென்று கர்த்தர் ஆயத்தத்தோடு வந்தார்; இல்லையெனில் அவன் எப்பொழுதோ கல்லறையில் மவுனமாயிருக்கும்படி வரவேற்கப்பட்டிருப்பான். மனிதர்களுடைய கடுந்தாக்குதலில் விழுந்து போகக் கூடிய நிலை வந்த போதெல்லாம், **கர்த்தருடைய கிருபையாலே** தான் வியத்தகு முறையில் பாதுகாப்பு பெற்றதை உணர்ந்தான். அவனுடைய மனதில் **விசாரங்களும்** ஐயங்களும் எழுந்தபோதெல்லாம், எல்லாவிதமான ஆறுதல்களோடும் கர்த்தர் அவனுடைய ஆத்து மாவைத் தேற்றி, பாசத்தோடு நடத்தியிருக்கிறார்.

94:20-23 யெகோவாவுக்கும் இந்தப் பொல்லாத ஆட்சியாளர்களுக்கும் இடையே ஏதேனும் ஐக்கியம் இருக்க முடியுமா? கிறிஸ்துவுக்கும் அந்திக்கிறிஸ்துவுக்கும் இடையே உடன்பாடு இருக்க முடியுமா? பாவத்தைச் சட்டமாக்க முயலும் மனிதரைக் கர்த்தர் ஏற்பாரா? பதில் தருவதற்கென்றே கேள்வி கேட்கப்படுகிறது. அதிகாரவர்க்க ஆட்சியாளர்கள் **நீதிமானைக்** கொன்று, **குற்றமில்லாத** மனிதரைக் **குற்றப்படுத்துகிறார்கள்.** ஆனால் **கர்த்தர்** தமக்குச் சொந்தமானவர்களுக்கு **அடைக்கலமாக** விளங்கி, அவர்கள் மறைந்துகொள்வதற்குரிய **கன்மலையாகத்** திகழ்கிறார். நீதியற்ற மனிதர்களுடைய செயல்களுக்குத்தக்க முழு அளவிலான பதிற்செயலை அவர் செய்வார். அவர்களுடைய அக்கிரமங்களின் நிமித்தம் அவர் அவர்களை இல்லாமற் போகும்படி அழிப்பார். ஆம், ஐயா, அவர் அவர்களை முற்றிலும் அழிப்பார்.

கொடுங்கோலர் யாவருக்கும் எப்போதும் இவ்விதமாகவே நடக்கும்!

சங்கீதம் 95: துதியும் எச்சரிப்பும்

துதி செலுத்துவதற்கான எழுச்சிமிக்க அழைப்புடன் இப்பாடல் தொடங்குகிறது. இதன் ஆசிரியனின் உற்சாகத்தால் கவர்ந்து இழுக்கப்படாமல் இதனைப் படிப்பது கடினம்.(எபிரெயர் 4:7 -இல் இப்பாடலை இயற்றியவன் தாவீது என்று குறிப்பிடப்பட்டுள்ளது, தாவீதின் சங்கீதத்தில் [J. N. டார்பி மொழிபெயர்ப்பில் "தாவீதில்" என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது.] என்னும் சொற்றொடர் சங்கீதப் புத்தகத்தையே குறிக்கும். ஏனெனில் சங்கீதப் புத்தகத்தில் பல பாடல்களைத் தாவீதே எழுதியிருக்கிறான்.)

95:1,2 இஸ்ரவேல் தனது இருண்ட காலமாகிய உபத்திரவ நாட்களின் முடிவில் யெகோவாவைத் தொழுதுகொள்ளும்படி பரிசுத்த ஆவியானவர் அழைக்கும் சத்தத்தை இந்த வசனங்களில் நம் கேட்கிறோம் என்பதில் ஐயமேதுமில்லை. ஆனால் "நம்மைப்பற்றிக்கொண்டிருக்கிற ஒவ்வொரு சிலையிலிருந்தும்" வெளியே வரும்படி நம்மை அழைக்கிற ஆவியானவரின் சத்தத்தை நாம் கேட்காமல் விட்டுவிடக் கூடாது.

மெய்யான ஆராதனை என்னவென்பதை விவரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிற பல்வேறு

சொற்றொடர்களைக் கவனிப்பது ஆவலைத் தூண்டுவதாக இருக்கிறது. அது **கர்த்தரைப் பாடுவதாகும்**. அது **இரட்சணியக் கன்மலை யைக் கெம்பீர** சத்தத்தோடு பாடுவதாகும், அதா வது, என்றென்றைக்கும் நாம் அடைக்கலம் பெறு கிற பிளவுண்ட நித்திய கன்மலையாகிய அவ ரைப் பாடுவதாகும். **அவர் சந்நிதியின்** முன்பாக வந்து, அவர் நமக்காகச் செய்த எல்லாவற்றை யும் நன்றியறிதலோடு அறிக்கை செய்வதாகவும் அது விளங்குகிறது. வீட்டிலுள்ள கைமரமும் ரீங்காரமிட்டு **சங்கீதங்களால்** அவரைப் புகழ்ந்து பாடுவதாகவும் அது இருக்கிறது.

95:3-5 நாம் அவருக்குச் செலுத்துகிற புகழ்ச்சி பெரிய அளவில் வகைவகையாக இருப்பது போல, அதைச் செய்வதற்கான வாய்ப்பு எல்லைக்குட் படாததாயிருக்கிறது. **கர்த்தர் மகா தேவனாக** இருப்பதால் அவரே புகழப்படத்தக்கவர் (மகா தேவன் - எபி. ஏல் El அதாவது சர்வ வல்லமை யுள்ள ஒருவர்). புறச்சமயத்தாரின் சிலைகளாகிய **தேவர்கள்** எல்லோருக்கும் **மகாராஜனுமாக** அவர் திகழ்கிறார். **பூமியின் ஆழங்கள் அவரு டைய கையில்** இருக்கின்றன, இதன் பொருள் யாதெனில் அவரே அவற்றின் உரிமையாளர். மலைச்சிகரங்களும் அவருக்குச் சொந்தமான வை, ஏனெனில் அவரே அவற்றை உருவாக்கின வர். பெருங்கடல்களை அவர் படைத்தார்; அவருடைய கரங்களே பெருநிலப்பகுதிகளையும் தீவுகளையும் உருவாக்கி அமைத்தன.

95:6,7 இப்பொழுது ஆராதனை செய்வதற்கு இரண்டாவது முறையாக அழைப்பு விடுக்கப்படு கிறது, இத்தொனி ஒவ்வொருவரையும் மிக நெருக்கமான முறையில் அழைக்கிறது. **நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக முழங் கால்படியிட்டுப் பணிந்திட** வேண்டும். முதலா வது நம்மைப் படைத்ததன் மூலமாகவும், பின்னர் நம்மை மீட்டதன் மூலமாகவும் அவர் நமது தேவனாக விளங்குகிறார். நமக்காகத் தம்முயிர் கொடுத்த நல்ல மேய்ப்பர் அவரே. இப்பொழுது **நாம் அவர் மேய்ச்சலின் ஜனங்களும் அவர் கைக்குள்ளான ஆடுகளாகவும்** இருக்கிறோம்; ஆணிகள் அடிக்கப்பட்ட அவருடைய கரமே நம்மை வழிநடத்திப் பாதுகாக்கிறது.

95:8,9 எட்டாவது வசனத்தின் தொடக்கத்தில், துதி செலுத்துதலிலிருந்து எச்சரிப்பை நோக்கி விவரம் சடிதியில் திரும்புகிறது. அது ஆவியான வரின் வாஞ்சையுடன் கூடிய நாவன்மை மிக்க பெருமூச்சாக விளங்குகிறது:

இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர் களாகில்....

நம்பிக்கையற்ற பொல்லாத இருதயத்திற்கு எதிரான யெகோவாவின் சத்தத்தை எஞ்சிய வசனங்களில் நாம் கேட்கிறோம், அது யெகோவா தமது மக்களுக்கு எதிராக உரைத்தது. நீரின் பற்றாக்குறை குறித்து இஸ்ரவேல் மக்கள் ரெவி தீமுக்கு அருகிலிருந்த மேரிபா என்னுமிடத்தில் குற்றஞ்சாட்டி தேவனுக்குக் கோபமுண்டாக் கினார்கள் (அது மாசா என்னும் பெயரில் அழைக் கப்பட்ட அதே இடம்தான் யாத். 17:7). காதேசின் அருகிலிருந்த மற்றொரு மேரிபாவில் கன்மலை யுடன் பேசுவதற்குப் பதிலாக மோசே அதை அடித்து தேவனுக்கு எதிராகச் செயல்புரிந்து குற்றம் செய் தான் (எண். 20:10-12). பாலைவனப் பயணத்தில் ஒரு முறையும், அதனுடைய முடிவுக்குச் சற்று முன் மறுமுறையும் அந்நிகழ்ச்சிகள் நடந்த இடங்களின் பொருளுக்குத் தக்கவாறு நிறை வேறின (மேரிபா கோபமூட்டின செயல், மாசா சோதனை). அப்பயணத்தின் இரு எல்லைகளி லும் நடந்த அந்நிகழ்ச்சிகள் மக்களின் மனநிலை அக்காலத்தில் உண்மையற்றதாயிருந்தது என் பதை வெளிப்படுத்துகிறது. அவர்கள் எகிப்திலி ருந்து விடுதலை பெற்ற வியத்தகு செயலை தேவன் செய்தார் என்பதை அவர்கள் கண்டிருந்தும், அவ ரைச் **சோதித்துப் பரீட்சை பார்த்தார்கள்**.

95:10,11 அவர்கள் கோபமூட்டின காலம் **நாற் பது ஆண்டுகள்** கொண்ட நீண்ட காலமாகும். இறுதியில் தேவன், "நான் பெற்றது போதும். வெறுப்படையச் செய்யும் இந்த மனிதர்களின் **இருதயங்கள்** தொடர்ந்து நெறிதவறிச் செல் கின்றன. அவர்களுக்காக நான் வகுத்த வழியை அவர்கள் மதிக்கவில்லை. ஆகவே அவர்களுக் காக நான் கானானில் திட்டமிட்டு வைத்திருந்த **இளைப்பாறுதலுக்குள் அவர்கள்** நுழைவதில் லையென்று உளப்பூர்வமாக ஆணையிட்டேன்" என்றார்.

இஸ்ரவேலுக்கு முன்னர் விடுக்கப்பட்ட மன வேதனையளிக்கிற வேண்டுகோள் எபிரெயர் 3:7-11 இல் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. கிறிஸ்துவை விடுத்து நியாயப்பிரமாணத்தை நோக்கித் திரும்ப வேண்டும் என்று சோதனைக்குட்படும் எவனொ ருவனிடத்திற்கும் இந்த வேண்டுகோள் விடுக்கப் படுகிறது. தேவனுடைய ஆயிரமாண்டு இளைப் பாறுதலுக்கு இஸ்ரவேலரை விலக்கிவைக்கும் அவநம்பிக்கையிலிருந்து திரும்ப இந்த வேண்டு கோள் கடைசிநாட்களில் எச்சரிப்பாக விளங்கும்.

ஒவ்வொரு காலக்கட்டத்திலும் அவநம்பிக்கை தேவனை விட்டு மனிதர்களை விலக்கி வைக்கி றது.

சங்கீதம் 96: பேரரசர் வருகிறார்

கர்த்தருக்குப் புகழ்ச்சியைச் செலுத்துவதற்கு ஏற்ற பதினேழு வகையான முறைமைகள் 96 - ஆவது சங்கீதத்தில் தெளிவான கட்டளை வடி வில் கொடுக்கப்பட்டுள்ளன. "பாடுங்கள்" (வச. 1,2), "செலுத்துங்கள்" (வச. 7,8), "ஆகட்டும்" (வச. 11,12) என்னும் சொற்கள் மீண்டும் மீண்டும் இடம்பெற்றிருப்பதைக் கவனியுங்கள்.

96:1,2 கர்த்தராகிய இயேசு தமது மகிமை நிறைந்த ஆட்சியைத் தொடங்கும்படி இவ்வுல கிற்குத் திரும்பி வருகிறபோது புதுப்பாட்டு தேசிய கீதமாகப் பொங்கியெழும். அது புதுப்பாட்டாக இருப்பது மட்டுமின்றி உலக முழுவதற்கும் பொதுப் பாட்டாகவும் விளங்கும். பூமியின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் வந்திருக்கும் மக்களின் தொனிகள் அங்கு ஒன்றிணைந்து முழங்கும். மனிதர்கள் கர்த்தருடைய திருப்பெயரை வாழ்த்து வார்கள், மேலும் அவர் இரட்சிப்பதற்கு ஆற்ற லுள்ளவர் என்பதற்குச் சான்றாக அவர்கள் விளங்குவார்கள். "ஒவ்வொரு நாளும் (அவர்கள்) யாரேனும் ஒருவரிடத்தில் அவர் இரட்சிக்கிறார் என்று கூறுவார்கள்" (LB).

96:3-6 எதிர்காலத்தில் அவர்கள் என்ன செய் யப் போகிறார்களோ அதை நாம் இப்பொழுதே செய்கிறோம். அதாவது எல்லா இனத்தாருக்குள் ளும் **அவருடைய மகிமையையும்**, எல்லா மக களுக்குள்ளும் **அவருடைய அதிசயங்களையும் அறிவிக்கிறோம். கர்த்தர் பெரியவர், எல்லா தேவர்களுக்கும்** எல்லையில்லா அளவிற்கு மேலானவர். மரத்தினாலும் கல்லினாலும் செய் யப்பட்ட தேவர்கள் எனப்படுபவை பொய்யானவை. மெய்யான தேவன் யெகோவா ஒருவரே, அவரே **வானங்களை உண்டாக்கினவர்.** அவருடைய இயல்புகள் அவரை விட்டுப் பிரிக்க முடியாதவை. அவை அவரோடு எப்போதும் எங்கேயும் உடன் செல்லுகிற ஊழியர்கள். இவ்வாறாக, **கனமும் மகிமையும்** அவருக்கு முன் செல்லுகின்றன. வல்லமையும் மகத்து வமும் அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் அவரது ஆணைக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றன. "கனமும் மகிமையும் அவ ருடைய மெய்க்காவலர்; ஆராதனையும் கம்பீர மும் அவருடைய புனிதத் தலத்தில் ஏவலாளர் கள்" (நாக்ஸ்).

96:7-9 மெய்யாகவே நாம் கர்த்தருடைய மேன்மையையும் நற்குணத்தையும் போற்றிப் பாராட்டுவோமெனில், மற்றவர்களும் அவரை மேன்மைபாராட்ட வேண்டுமென்று விரும்பு வோம். ஆகவே அனைத்து இன வழித்தோன்றல் களையும் தன்னோடு சேர்ந்து, கர்த்தர் எத்தகைய மாட்சிமையும் வல்லமையும் கம்பீரமும் உடைய வர் என்று அறிவிக்கும்படி அவர்களைப் பாடலா சிரியன் அழைக்கிறான். அவருடைய திருப்பெய ருக்குரிய **மகிமையை** அவர்கள் அவருக்குச் செலுத்த வேண்டும். அவர்கள் அவரது காலடி யில் சமர்ப்பிக்கும்படி **காணிக்கையைக்** கொண்டு வர வேண்டும். **பரிசுத்த அலங்காரத்துடனே** அல்லது பரிசுத்த ஆடை அணிந்தவர்களாக (NASB) அவர்கள் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும். உலகமனைத்தும் அவருக்குத் தலை வணங்க வேண்டும்.

பரிசுத்த ஆடைகளைப் பற்றிய குறிப்பு, நாம் கர்த்தரை ஆராதிக்கும்போது அந்தத் தருணத் திற்கேற்ற ஆடைகளை நாம் அணிந்திருக்க வேண் டும் என்பதை நமக்கு நினைவுபடுத்துகிறது. உயர்வாய்ப் போற்றுதல் முதன்மையாக இரு தயத்தோடு தொடர்புடையது என்பது உண்மை தான். எனினும் நம்முடைய உடைகளின் மூல மாகவும் நாம் நம்முடைய மரியாதையைத் தெரி விக்க முடியும் என்பதும் உண்மைதான். எடுத்துக் காட்டாக, அப்பம் பிட்குதலுக்காக நாம் கூடுகிற வேளையில், அழுக்கான உடைகளை அணிந் திருப்போமெனில், அது நம்முடைய அக்கறை யற்ற தன்மையை வெளிப்படுத்தும். திருமண நிகழ்ச்சிகளிலும், அடக்க நிகழ்ச்சிகளிலும் அவ் வாறு ஆடை அணிந்தவர்களாக வருவதில் லையே.

96:10 மேசியா அரசர் முடிசூட்டப்படுகின்ற வேளையில் பாடப்படும் பாடலை இந்த வசனம் குறித்துக் காட்டுகிறது. **கர்த்தர்** தமது அரசாட் சியைத் தொடங்கி விட்டார்! போர்களினாலும், பொருளாதார வீழ்ச்சியினாலும், வறுமையினா லும், அநீதியினாலும், பேரிடரினாலும் அல்லது வேறு எந்த இக்கட்டான நிகழ்வுகளினாலும் உலக அரசியல் அமைப்பு **அசையாதபடி உறு திப்பட்டிருக்கும். அது அசையாது** என்னும் சொற்றொடர் "கிறிஸ்துவின் ஆயிரமாண்டு ஆட் சிக்காலத்தில் எந்தவொரு தருணத்திலும் அசையாது" என்று புரிந்துகொள்ளப்பட வேண் டும். அந்தக் காலக்கட்டத்தின் முடிவில் அக்கினி யால் வானங்களும் பூமியும் வெந்துருகி அழியும்

என்பதை நாம் அறிவோம் (2 பேதுரு 3:7-12). கர்த்தர் மக்களை நீதியாக ஆளுவார், அவர்கள் நிலையற்றுப் போகக்கூடிய சூழ்நிலைகளிலி ருந்து அவர் அவர்களைக் காப்பாற்றுவார் என் பதே இங்கு சொல்லப்பட்டிருக்கும் செய்தியாகும்.

96:11-13 இவ்வுலகத்தை ஆளும்படி கர்த்தர் (யெகோவா அல்லது யாவே)[64] வருகின்ற களி கூரும் விழாவில் எல்லாப் படைப்புகளும் கலந்து கொள்ள வேண்டும் என்று அழைக்கப்படுகின் றன. வானங்கள் மகிழ்வுறும். பூமி பூரிப்பாகும். "கடலும் அதிலுள்ள யாவும் புகழ்ச்சியின் கீதத்தை முழங்கும்" (கெலிநேயு). எந்த வயல்வெளியும் அமைதியாக இருக்காது. "கர்த்தருடைய வருகை யில் அவரை வாழ்த்தி வரவேற்காதபடி வனங் களின் மரங்களில் ஒன்றுகூட அமைதியாக இருக் காது" (நாக்ஸ்). ஏனெனில் **அவர்** இந்த உலகை ஆள **வருகிறார்**. அவர் பரிபூரண **நீதியோடும்** முழுமையான நேர்மையோடும் அரசாளுவார்.

"இப்போதும் ராஜாவைத் திரும்ப அழைத்து வராமல் நீங்கள் சும்மா இருப்பானேன் என்று சொல்லிக்கொண்டார்கள்" (2 சாமு. 19:10).

சங்கீதம் 97: நீதிமானுக்காக வெளிச்சம் விதைக்கப்பட்டிருக்கிறது

97:1 இந்தச் சங்கீதம் தொடங்குகிறபோது, இயேசு கிறிஸ்துவாகிய கர்த்தர் தமது அரியணை யைப் பெற்றுவிட்டார். முடிசூட்டு விழாவுக்கான நாள் வந்துவிட்டது. உலகளாவிய கொண்டாட் டம் தொடங்கிவிட்டது. தொலைதூரத் **தீவுகளும்** கடல் ஓர நாடுகளும் இதுவரை இவ்வாறான மகிழ்ச்சியைக் கண்டதில்லை.

97:2 ஆழ்ந்த பயபக்தியை உண்டுபண்ணக் கூடிய உயிரூட்டமுடைய உருவகச் சொற் களாலே அரசரின் வருகை விவரிக்கப்பட்டுள் ளது. முதலாவதாக, அவர் **மேகத்தாலும் மந் தாரத்தாலும்** சூழப்பட்டிருக்கிறார், இரகசியமான முறையில் கர்த்தர் அவ்வப்போது மனிதர்களு டைய கண்களுக்கு மறைந்திருக்கிறார் என்பதை யும், அவருடைய வழிகளோ ஆராய்ந்து அறிய முடியாதபடி கம்பீரமாக விளங்குகிறது என்பதை யும் இது நமக்கு நினைவுபடுத்துகிறது. அவரைக் குறித்து நாம் எவ்வளவு குறைவாக அறிந்து வைத்திருக்கிறோம்! மேலும் **நீதியும் நியாயமும் அவருடைய சிங்காசனத்தின் ஆதாரங்களா கும்.** அவருடைய அரசே ஒப்பற்ற மேன்மை படைத் தது - நன்மை பயக்கும் முடியாட்சி - அங்கே நேர்மை தவறக்கூடிய சூழ்நிலை ஏற்படுவதில்லை, உண்மை திரித்துக் கூறப்படுவதில்லை.

97:3-5 மிகப்பெரிய அக்கினி அலைகள் அவருக்கு முன் வேகமாக அடித்துச் சென்றன. தேவனை அறியாதவர்களையும், கர்த்தராகிய இயேசுவின் நற்செய்திக்குக் கீழ்ப்படியாதவர் களையும் அந்த அலைகள் அழித்துப் போட்டன (2 தெச. 1:8). அவருடைய நியாயத்தீர்ப்புகளின் மின்னல்கள் நாட்டுப்புறப் பகுதிகளை ஒளிபெறச் செய்தன. அவற்றின் தீவிரத்தை மக்கள் கண் டார்கள். "சகல மலையும் குன்றும் தாழ்த்தப் படும்" (ஏசாயா 40:4) தருணம் இதுவே. தேவனு டைய அறிவுக்கு எதிராகத் தன்னை உயர்த்தும் எல்லாம் தாழ்த்தப்படும் என்று இதனைக் கூற லாம்.

97:6 வானங்கள் அவருடைய நீதியை வெளிப்படுத்துகின்றன. அவருடைய இரத்தத் தால் விலைக்கு வாங்கப்பட்ட பரிசுத்தவான் களோடு (1 தெச. 3:13) அவர் வானங்களின் மேகங் களின் ஊடாக வருகிறபோது (வெளி. 1:7), அவர் தாம் உரைத்த வாக்குறுதியின்படி இஸ்ர வேலைச் சீர்பெறச் செய்வதற்கான உயர்ந்த நீதி யுடையவராக இருந்தார் என்பதை இந்த உலகம் அறியும். திருவாளர் கேபலீன் இதனை விளக்கு கிறார்:

> கல்வாரி சிலுவையில் அவர் நிறைவேற்றிய மகத்தான நீதியின் செயலால் மீட்கப்பட்டோர் இரட்சிப்படைந்து இப்பொழுது மகிமைப்படுத்தப் பட்டுள்ளார்கள். இவ்விதமாக அவர் மகிமைக் குள் அநேகம் பிள்ளைகளைக் கொண்டு சேர்க் கிறதாலே அவருடைய நீதி அறியப்படும்.[65]

97:6 (ஆ) அனைத்து மக்களும் **அவருடைய மகிமையைக் காண்பார்கள்.**

> அரசர்தம் அழகினில் தோன்றிடும் வேளையில்
> தரணியில் முகத்திரை விலகிடக் காணுவர்,
> இறப்புகள் ஏழு வழியினில் தடுத்தாலும்
> சிறப்புற்ற பயணம் இனிதாய்த் தொடர்ந்திடுமே!
> குறைவிலா இறைமறி அவரது படையுடன்
> மறைமலை சீயோனில் வீறுடன் நின்றிட
> அம்பரம் முழுமையும் வானவர் புகழ்சாற்ற
> இம்மானு வேலரின் அன்பர்கள் கூடுவரே!
>
> – ஆனி ரோஸ் கஷின்

97:7 உருவ வழிபாடு செய்பவர் அப்பொழுது சிந்திப்பது என்ன? தாங்கள் வழிபடுவது ஒன்று மற்ற வெறுமை என்பதை உணர்ந்தவர்களாக,

அம்மக்கள் திகைத்துச் செயலற்றுப் போய்விடு வார்கள்.

"தேவர்களே, நீங்கள் எல்லோரும் அவ ரைத் தொழுதுகொள்ளுங்கள்", இதனை எழுபதின்மர் கிரேக்க மொழிப் பழைய ஏற்பாடு "தேவனுடைய தூதர்கள் யாவரும் அவரைத் தொழுதுகொள்வார்கள்" என்று மொழிபெயர்த் திருக்கிறது. எபிரெயர் 1:6 -இல் அப்பொருளில் தான் இந்த வசனம் மேற்கோள் காட்டப்பட்டுள் ளது. இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள எலோஹிம் என்னும் எபிரெயச் சொல் வழக்கமாக தேவன் என்றே பொருள்படும். ஆனால் தேவ தூதர்களை யும், நீதிபதிகளையும், ஆளுநர்களையும் கூட குறிக்க அச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. புறவினக் கடவுளரையும் தெய்வங்களையும் கூட குறிப்பிட அச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

97:8,9 உருவ வழிபாடு செய்பவர்கள் கலகக் காரர்கள் ஆகியோருக்கு எதிராக அரசர் பெற்ற வெற்றிகளைக் கேள்வியுற்ற **சீயோன் நகரம் மகிழ்கின்றது**. அந்தக் கொண்டாட்டத்தில் யூதா வின் சிற்றூர்களும் தொட்டிபட்டிகளும் இணை கின்றன. "சீயோனுக்கு நற்செய்தி, கர்த்தரின் நியாயத்தீர்ப்புகள் தெரியப்படுத்தப்படுகையில் யூதாவின் நகர்ப்புறக் குடியிருப்புகளும் களிகூரு கின்றன" (நாக்ஸ்). இறுதியில் கர்த்தர் எப்போதும் யாராக இருந்தாரோ அப்படியே காணப்படுகிறார் - **பூமி முழுவதுக்கும் அவர் உன்னதமானவர்**; மற்ற அரசர்கள், அவர்கள் உண்மையான அரசர் களோ, அரசர்களாக உருவாக்கப்பட்டவர்களோ யாராக இருந்தாலும் அவர்களுக்கெல்லாம் அவர் மேலாக **மிகவும் உயர்ந்தவர்.**

97:10 கர்த்தரில் அன்புகூருகிறவர்களே, தீமையை வெறுத்துவிடுங்கள். யெகோவாவின் மேல் அன்புகூருதல், அவருக்கு எதிரானவை அனைத்தின் மேலும் வெறுப்பு ஆகிய இவ் விரண்டு பண்புகளும் ஒன்றோடொன்று தொடர் புடையவை. இந்தக் குறிப்பிட்ட சோதனையில் வெற்றிபெறும் யாவரும் அவருடைய கவனிப்பைப் பெற்றுப் பாதுகாக்கப்படுவதற்குச் சிறப்பான இலக்காகத் திகழ்கிறார்கள்.

97:11 நீதிமானுக்காக வெளிச்சம் விதையாக **விதைக்கப்படுகிறது**, அதாவது, எல்லாவற்றை யும் சரியாகச் செய்கிற மனிதனுக்காக வெளிச்சம் பரவுகிறதாகவும், எவருடைய இருதயங்கள் உண் மையும் நேர்மையுமாக இருக்கின்றனவோ அவர் கள் யாவருக்கும் மகிழ்ச்சியை உண்டுபண்ணு வதாகவும் கர்த்தரின் வருகை அமைந்திருக்கும்.

97:12 தேவனுடைய **பரிசுத்தத்தின் நினைவு கூருதலின்**போது அவருக்கு நன்றிசெலுத்தவும் களிகூருதலில் சேர்ந்துகொள்ளவும் தேவனு டைய நீதிமான்கள் யாவரும் மகிழ்வோடு வர வேற்கப்படுகிற அழைப்பின் தொனி ஒலிக்கிறது (KJV அடிக்குறிப்பு). இந்தச் சங்கீதத்தின் வியத் தகு முடிவாக இது விளங்குகிறது. "தேவனுடைய அன்பின் அல்லது இரக்கத்தின் அல்லது கிருபை யின் அல்லது மகிமையின் நினைவுகூருதலின் போது அவருக்கு நன்றிசெலுத்துங்கள்" என்று இந்தச் சங்கீதம் முடிவடைந்திருக்க வேண்டும் என்றே எதிர்பார்த்திருப்போம். அவ்வாறு இல்லை, அவருடைய பரிசுத்தத்தின் நினைவுகூருதலே அது. ஒரு காலத்தில் அவருடைய பரிசுத்தம் அவ ருடைய முன்னிலையிலிருந்து நம்மை விலக்கி வைத்திருந்தது. ஆனால் இப்பொழுதோ, கர்த்த ராகிய இயேசு நிறைவேற்றி முடித்திருக்கிற மீட் பின் மூலமாக, அவருடைய பரிசுத்தம் நமக்கு எதிராக அல்ல, நம் பக்கமாக இருக்கிறது. ஆகவே அதை நாம் நினைவுகூருகிறபோது நம் மால் **களிகூர**வியலும்.

சங்கீதம் 98: படைப்பின் புதிய இன்னிசை

98:1,2 புறவின நாடுகளின் ஒடுக்குதலிலிருந்து இஸ்ரவேல் இறுதியாக விடுவிக்கப்படுதலே கிறிஸ்துவின் இரண்டாம் வெளிப்பாட்டின் பொரு ளாகும். அந்த மகிமை நிறைந்த அடிமை யொழிப்பு **புதுப்பாட்டை** எழுப்புகிறது, மேசியா வின் எதிரிகள் தோற்கடிக்கப்பட்டதை அது கொண்டாடுகிறது. கர்த்தருடைய **வலதுகரம்** செய்த எல்லாவற்றையும் குறிக்கவும் **அவரு டைய பரிசுத்த புயத்தின்** வல்லமையைக் குறிக் கவும் பயன்படுத்தப்பட்டுள்ள சொல் **"அதிசயம்"** என்பதாகும்.

இறையரசு ஏற்கனவே நிறுவப்பட்டதாகவே இந்தச் சங்கீதம் சித்திரிக்கிறது. அவருடைய வெற்றி இப்பொழுது நன்கு அறியப்பட்டுள்ளது. அவர் இஸ்ரவேலுடன் தமது உடன்படிக்கையை நிறைவேற்றியிருக்கும் உண்மைத்தன்மையை புறவினத்தார் யாவரும் கண்டிருக்கிறார்கள்.

முதல் தடவை இயேசு வந்தபோது, "நம்மு டைய பிதாக்களுக்கு அவர் சொன்னபடியே... தம்முடைய தாசனாகிய இஸ்ரவேலை ஆதரித் தார்" என்று மரியாள் பாடினார் (லூக்கா 1:54,55). "அவர் தம்முடைய பரிசுத்த உடன்படிக்கையை நினைந்தருளி... நம்முடைய பிதாக்களுக்கு இட்ட ஆணையை நிறைவேற்றுவார்" என்று சகரியா முன்மொழிந்தார் (லூக்கா 1:70,72).

98:3 அவர் இரண்டாம் முறை வெளிப்படும் போது இஸ்ரவேல் இவ்வாறு பாடும்:

அவர் இஸ்ரவேல் குடும்பத்துக்காகத் தமது கிருபையையும் உண்மையையும் நினைவு கூர்ந்தார்;

பூமியின் எல்லைகளெல்லாம் நமது தேவனுடைய இரட்சிப்பைக் கண்டது.

கர்த்தருடைய **கிருபையே** இஸ்ரவேலுக்கு வாக்குறுதிகளைத் தரச் செய்தது, அவருடைய **உண்மையே** அவற்றை இப்பொழுது நிறைவேற்றுகின்றன.

98:4-6 இந்த வசனங்களை முதல்முறையாகப் படிக்கிறபோது, எல்லாப் புறவின நாடுகளும் இஸ்ரவேலுடன் சேர்ந்து களிகூர்ந்து கொண்டாடும்படி அழைக்கப்படுவதாகத் தோன்றுகிறது. ஆனால் 4-ஆவது வசனத்தில் சொல்லப்பட்டுள்ள பூமி என்னும் சொல் இஸ்ரவேல் நாட்டையே குறிக்கும் எனலாம்; திருவாளர் F. W. கிராண்ட் மொழி பெயர்ப்பு[66] இந்தப் பொருளையே தருகிறது. இஸ்ரவேலில் இரட்சிக்கப்பட்டவர்கள் மகிழ்ச்சிப் பெருவெள்ளமென இசைத்துப் பொங்கியெழ வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். லேவியர் தங்களுடைய **சுரமண்டலங்களோடு** அவர்களோடு சேரும்படி உற்சாகப்படுத்தப்படுகிறார்கள். ஆறாவது வசனத்தில் ஆசாரியர் தங்களுடைய **பூரிகைகளாலும் எக்காள சத்தத்தாலும்** பாடலின் இசையை நிறைவு செய்கிறார்கள்.

98:7-9 பின்னர் இயற்கையும் புறவினத்தாரும் அவ்விசையில் சேரும்படி அழைப்பு விடுக்கப்படுகிறது. பெருங்கடலும் அதில் வாழும் எண்ணிலடங்கா உயிரினங்களும் பெருமகிழ்ச்சியோடு ஆரவாரிப்பதாகக் கற்பனை செய்து உருவகப்படுத்தப்பட்டுள்ளது. பூமியும் அதன் குடிமக்களும் தன்னிலை மறந்து பெருமகிழ்ச்சி அடைந்திருக்கிறார்கள். **ஆறுகள்** பெரும்பாறைகளில் மோதி **கைகொட்டி** ஆரவாரிக்கின்றன. ஆனந்த பரவசத்தின் கீதத்தில் மயங்கியது போல மலைகள் தங்களுடைய தலைகளை உயர்த்துகின்றன. வறுமையாலும் நோயாலும் விம்மியழுது சோகத்தில் மூழ்கியிருக்கும் இவ்வுலகிற்கு நீதியும் நேர்மையும் நிறைந்த ஆட்சியைக் கொடுத்து அரசாள **(நியாயந்தீர்க்க)** மாவரசர் வருகின்றபோது எல்லாப் படைப்புகளும் தாமாக உணர்ச்சிப் பெருக்கோடு செயல்புரிகின்றன. யார்தான் மகிழ்ச்சியடையாமல் இருக்க முடியும்.

சங்கீதம் 99: பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்

99:1 மாவரசரின் பரிசுத்தம் இந்தப் பாடலின் ஊடாகச் செல்லுகிற முப்பிரி நூல் இழையாகக் காணப்படுகிறது (வச. 3,5,9). மேசியா ஏற்கனவே தமது அரசை நிறுவியதாக இந்தப் பாடலாசிரியன் காண்கிறான். அவர் முடிசூட்டப்பட்டவராகக் "கேருபீன்களுக்கு மேலாக வீற்றிருக்கிறார்" (FWG). அவருடைய அரியணை உருமாதிரியான கேருபீன்களால் தாங்கப்பட்டிருந்தது என்று இதனைக் கூறலாம். மனிதனுடைய பாவத்திற்கு எதிராக தேவனுடைய பரிசுத்தத்தை உயர்த்திக் காட்டுவதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் அந்த தேவதூதர்கள் மனித உடலையும் இறக்கைகளையும் கொண்டிருக்கிறார்கள். முடிசூட்டப்பட்ட மாவரசரின் காட்சி எல்லா இனத்து மனிதர்களும் நடுங்கவும் பூமி பயத்தால் அதிரவும் செய்ய வல்லதாயிருக்கிறது.

99:2,3 கர்த்தர் வல்லமையில் **பெரியவர்; சீயோனிலுள்ள** அவருடைய அரியணையில் வீற்றிருந்து ஆளுகிற செயல் கம்பீரமாக இருக்கிறது. அவரே உலகமனைத்திலும் மிக உன்னதமான அரசர். அவர் குற்றச்சாட்டிற்கு அப்பாற்பட்ட பரிசுத்தர் என்னும் உண்மையை ஏற்றுக்கொண்டவர்களாக இவ்வுலக மனிதர்கள் அவருடைய **மகத்துவமும் பயங்கரமுமான** திருப்பெயரை மேன்மைப்படுத்த வேண்டும்.

99:4,5 வல்லமையில் அரசராக விளங்குகிறவர் **நீதியை** விரும்புகிறவரும் ஆவார். இவ்விரு குணங்களையும் ஒருங்கே படைத்த இவ்வுலக ஆளுநர்களையும் பெரிய மனிதர்களையும் காண்பது அரிது. "வீரமும் நேர்மையும் இறுதியில் ஒன்றிணைந்தன" (FWG). அவருடைய அரசாட்சியில் மோசடியும் கையூட்டும் காணப்படுவதில்லை. ஒருசார்பற்ற நிலை, **நியாயம், நீதி** யாவும் விதிவிலக்கின்றி எங்கும் கடைபிடிக்கப்படும். அவருடைய பாதபடியிலே பணிந்து குடிமக்கள் எவ்வளவாக அவரை மேன்மைப்படுத்த வேண்டும். திருமறையின் பிற பகுதிகள் தேவனுடைய பாதபடி என்னும் சொற்றொடரை, உடன்படிக்கைப் பெட்டி (1 நாளா. 28:2), புனித வாசஸ்தலம் (சங். 132:7), சீயோன் (புல. 2:1), பூமி (ஏசாயா 66:1), அல்லது தேவனுடைய பகைவர் (சங். 110:1) என்றெல்லாம் வெவ்வேறு வகைகளில் விவரிக்கின்றன. இங்கு அது பெரும்பாலும் சீயோனின் புனிதத்தலத்தைக் குறிப்பதாகவே தோன்றுகிறது.

99:6,7 இவரே முந்தைய காலத்தில் தமது குடிமக்களை உண்மையோடு வழிநடத்திய

அரசர். மோசேயும் ஆரோனும் அவருடைய ஆசாரியராகச் செயல்பட்டவர்கள், சாமுவேல் பெருமளவில் பரிந்து பேசியவரில் ஒருவன். (வரையறுக்கப்பட்ட கோட்பாடுகளின்படி மோசே மற்றும் சாமுவேல் இருவரும் ஆசாரியரல்லர். ஆயினும் இருவருமே தெய்வீக அனுமதியின் அடிப்படையில் ஆசாரிய ஊழியத்தைச் செய்தார் கள்.) இங்கு முக்கியமான செய்தி என்னவெனில் அவர்கள் கர்த்தரிடத்தில் கூக்குரலோடு வேண் டிக்கொண்டபோது **அவர் அவர்களுக்கு உத் தரவு** அளித்தார். **மேகஸ்தம்பத்திலிருந்து** அவர் மோசேயுடனும் ஆரோனுடனும் பேசினார், சீனாய் மலையில் அவர்களுக்கு நியாயப்பிரமாணத் தைக் கொடுத்தார். அவர்கள் நிறைவற்ற முறை யிலேனும் அவருடைய சத்தத்திற்குச் செவி கொடுத்தார்கள், நியாயப்பிரமாணத்தை ஓர ளவே கைக்கொண்டார்கள்.

99:8 ஆயினும் அவர்களுடைய மன்றாட்டு களுக்கு **தேவன் உத்தரவு அருளினார்**, இன்றும் அவர் தொடர்ந்து பதில் தருவார் என்பதே இதிலி ருந்து கொடுக்கப்படுகிற செய்தி. அவர்களுடைய பொல்லாத செயல்களைக் காணாதது போல விட்டுவிடவில்லையெனினும் அவர் **மன்னிக்கிற தேவனாயிருந்தார்.** குற்றத்திற்கான தண்டனை மன்னிக்கப்பட்டாலும், அதன் பின்விளைவு இவ் வாழ்வில் நிலைத்திருக்கும். எடுத்துக்காட்டாக மேரிபாவின் நீர் அண்டையில் மோசே செய்த பாவத்தை தேவனுடைய கிருபை மன்னித்தது. ஆனால் தேவனுடைய நிருவாகம் அவனை வாக் குத்தத்த நாட்டுக்குச் செல்லவிடாமல் விலக்கி வைத்தது.

இந்த மூன்று நபர்களும் இஸ்ரவேல் இனத்தாரில் விசுவாசிகளாயிருந்த கூட்டத்தின் பிரதிநிதிகள் என்பது உண்மை. அவர்களைக் குறித்து எது உண்மையாக இருந்ததோ அதுபோலவே தேவனுடைய உண்மையான உடன்படிக்கை மக்களுக்கும் பொருத்தமானதே ஆகும். அவர்கள் தேவனுடைய திருப்பெயரில் மன்றாடி இரட்சிப் படைந்தார்கள், அவருடைய நாமத்தைத் தொழுது கொள்கிறவர்கள் யாவரும் அதுபோலவே இரட்சிப் படைவார்கள்.

99:9 தேவனுடைய பரிசுத்தம் மூன்றத்தனை யாகக் குறிப்பிடப்பட்டிருப்பது ஏசாயா 6:3 மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் 4:8 - ஆகிய பகுதி களை நமக்கு நினைவுபடுத்துகிறது. திருவாளர் ஹேபர் இயற்றிய விழுமிய பாடலையும் நமக்கு முன் கொண்டுவருகிறது:

> தூய, தூய, தூயரே! சர்வ வல்ல தேவனே
> உமக்கே எந்நாளும் சங்கீதம் ஏறுமே
> தூய, தூய, தூயரே! சர்வ வல்ல கர்த்தா
> காருண்யரே, தூய த்ரியேகரே!

சங்கீதம் 100: பண்டைய நூறாவது!

"ஜெனிவா கீதங்கள் (1551) என்னும் நூலில் வகுக்கப்பட்ட மெட்டுடன் இந்தச் சங்கீதம் "பண் டைய நூறாவது" என்று பரவசத்துடன் இசைக்கப் படுகிறது. யெகோவாவைத் தொழுதுகொள்ளும் படி இப்பாடல் உலகம் முழுவதையும் அழைக் கிறது. இஸ்ரவேலின் குறுகிய எல்லைகளுக்கு அப்பால் இவ்வழைப்பு சென்று புறவின நாடுகள் அனைத்தையும் வரவேற்கிறது. திருவாளர் பார்னஸ் எழுதுகிறார்:

> துதி செலுத்துவது ஒரு குறிப்பிட்ட இனத் தாருக்கு மட்டும் உரியதன்று; ஒரு குறிப்பிட்ட மக்கள் கூட்டம் அது தங்களுக்கு மட்டுமே சொந்தம் என்று கொண்டாடுவதும் சரியன்று; எபிரெய மக்கள் மட்டும் இதனைத் தங்கள் கட்டுக்குள் வைத்துக்கொள்ள முடியாது. மாறாக எல்லோரும் துதி செலுத்தச் சரியான காரணம் உள்ளது, அதனடிப்படையில் எல்லா இனத்தினரும், எல்லா மொழியினரும், எல் லாச் சூழ்நிலைகளும் ஒன்றிணைந்து துதிக்க வியலும். அவ்வடிப்படைக் காரணம் யாதெ னில், எல்லோரையும் படைத்தவர் ஒருவரே என்னும் உண்மையேயாகும் (வச. 3).[67]

இச்சங்கீதத்தில் அடங்கியுள்ள ஐந்து சிறிய வசனங்களின் வாயிலாக, துதிசெலுத்துவது எளி மையானது என்பதை நாம் அறிகிறோம். இதி லுள்ள பெரிய சொற்கள் **துதிசெலுத்துங்கள், என்றென்றைக்குமுள்ளது, தலைமுறை தலை முறைக்கும்** என்பன (ஆங்கில மொழிச் சொற் களின்படி). இதன் மொழிநடை சிக்கலானதல்ல, அணிகள் நிறைந்ததுமல்ல. தேவனைக் குறித்த எளிய உண்மைகளை ஒப்பிப்பதே துதி செலுத்து தல் ஆகும். சொற்களே அற்புதம் என்னும் பெரும் சரக்குகளை ஏந்திச் செல்கின்றன, வெளிப்படை யான உண்மைகள் புனைகதைகளைக் காட்டி லும் அதிக அற்புதமானவை.

இச்சங்கீதம் ஒரு குறிப்பிட்ட அமைப்பைப் பெற்றிருக்கிறது. அது கீழ்வருமாறு:

துதிசெலுத்துவதற்கான அழைப்பு (வச. 1,2).

தேவனை ஏன் துதிக்க வேண்டும் (வச. 3).

துதி செலுத்துவதற்கான அழைப்பு (வச. 4).

தேவனை ஏன் துதிக்க வேண்டும் (வச. 5).

துதி செலுத்துவதன் ஏழு மூலக்கூறுகள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன:

கெம்பீரமாய்ப் பாடுங்கள் (வச. 1).

மகிழ்ச்சியோடே கர்த்தருக்கு ஆராதனை செய்யுங்கள் (வச. 2).

ஆனந்த சத்தத்தோடே (பாடல்) அவர் சந்நிதிமுன் வாருங்கள் (வச. 2).

அவர் வாசல்களில் துதியோடு பிரவேசியுங்கள் (வச. 4).

அவர் பிராகாரங்களில் புகழ்ச்சியோடு பிரவேசியுங்கள் (வச. 4).

அவரைத் துதியுங்கள் (அவருக்கு நன்றி செலுத்துங்கள்) (வச. 4).

அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள் (வச. 4).

அவர் யார் என்பதற்காக அவருக்கு நாம் துதி செலுத்த வேண்டும். அவர் நம்முடைய:

கர்த்தர் (வச. 1).

தேவன் (வச. 3).

படைப்பாளர் (வச. 3).

உரிமையாளர் (வச. 3).

மேய்ப்பர் (வச. 3).

அவருடைய தனி இயல்புகளுக்காக அவரை நாம் துதிக்க வேண்டும்:

அவர் **நல்லவர்** (வச. 5),

அவருடைய கிருபை என்றென்றைக்குமுள்ளது (வச. 5).

அவருடைய உண்மை தலைமுறை தலைமுறைக்குமுள்ளது (வச. 5).

முதல் மூன்று வசனங்களில் தேவன் படைப்பாளர் என்பதற்காகத் தொழுதுகொள்ளப்படுகிறார். ஆனால் கடைசி இரண்டு வசனங்களில் கல்வாரியைக் காண்பது அரிதன்று, ஏனெனில் வேறு எங்கும் அவ்வளவு தெளிவாக அவருடைய நற்குணத்தையும், அவருடைய கிருபையையும், அவருடைய உண்மையையும் நம்மால் காண வியலாது.

அவர் கரத்தின் கிரியைகள்
அவர் வல்லமை ஞானமும்
விளக்கிக் காட்டிப் போற்றுது
கர்த்தர் எல்லாம் நன்றாய்ச் செய்தார்!
– சாமுவேல் மெட்லே.

மூன்றாவது வசனத்தில் கருத்துகளை இணைக்கும் அற்புதமான சொற்றொடரை நாம் காணாமல் விட்டுவிடக்கூடாது. அங்கு **கர்த்தரே தேவனென்று** அறிகிறோம்; நாம் சேரக்கூடாத உயர்வான நிலையில் அவர் இருக்கிறார் என்பதே இதன் பொருள். ஆனால் நாம் அவருக்குச் சொந்தமானவர்கள் என்று தொடர்ந்து படிக்கிறோம். அவர் மிகவும் நெருக்கமான முறையில் நமதருகில் இருக்கிறார் என்பது இதன் பொருளாகும். அவர் இவ்வளவு அருகாமையில் இருப்பதால், இந்தச் சங்கீதம் திகிலையும் அச்சத்தையும் வெளிப்படுத்தாமல் மகிழ்ச்சியையும் பாடலையும் வெளிப்படுத்துகிறது.

மகிழ்ச்சி நிறைந்த தேவனுக்கு இந்தச் சங்கீதம் களிப்பின் கீதமாக விளங்குகிறது. இதன் செய்தி பொழிப்புரையாகக் கவிதை வடிவில் நமக்காகப் பாதுகாக்கப்பட்டுள்ளது:

பூவுலக மனிதர்களே எல்லோரும்
கர்த்தரைத் துதியுங்கள்
நிறைவான உவகையுடன் உளமார
வீறுகொண்டு பாடுங்கள்
ஆரவார தொனியோடு அவர்புகழ்
பாடிடக் கூடுங்கள்
அவர்பாதம் தலைவணங்கி நன்றியுடன்
துதிகளைச் செலுத்துங்கள்.
கர்த்தரே தேவனென்னும் உண்மையை
உளமார அறிவீரே,
நாமல்ல அவர்தாமே மனுக்குலத்தைத்
தம்கரத்தால் படைத்திட்டார்
மேய்ப்பரது காலடியைப் பின்தொடரும்
ஆடுகளாய் நாமிருப்போம்
அவரூட்டும் உணவுதனை உண்டுநாமும்
நன்றியுடன் உயிர்வாழ்வோம்.

ஆலயத்தின் வாசல்களில் துதிகலந்த
உளத்தோடு நுழைந்திடுவோம்
சுற்றியுள்ள பாதையினில் பவனிவந்து
நன்றியுடன் பாடிடுவோம்
என்றென்றும் புகழ்மாலை செலுத்தியவராய்
நம்கடனை நிறைவுசெய்வோம்
திருப்பெயரை நினைவுகூரச் சிறியோரும்
பெரியோரும் பணிந்திடுவோம்.
ஏனென்று கேட்பீரோ? கர்த்தராம்
நம்தேவன் நல்லவர்
எந்நாளும் அவர்கிருபை நம்மீது
மழைபோலப் பொழியுதே

அவருண்மை திடமான செங்கோலாய்
உறுதிபட நிற்குதே
அவர்சமுகம் சேர்ந்துநாமும் இடைவிடாமல்
அவர்புகழைப் பாடிடுவோம்.

சங்கீதம் 101: அரசனின் அசையா உறுதி

தன்னுடைய தனி மற்றும் பொது வாழ்க்கையில் தாவீது கொண்டிருந்த நாட்டம், அவனுடைய சாதனைகளைவிட அளவு கடந்ததாக இருந்தது. ஆனால் தாவீது தன்னுடைய வீட்டுக்கும் அரசுக்கும் நியமித்த இலக்குகள், அவனுடைய அரிய ணையில் கர்த்தராகிய இயேசு அமர்ந்து ஆட்சியை நிறுவ வரும்போதுதான் முழுமையாக நிறைவேறும். தாவீது தனது ஆட்சியைத் தொடங்கிய தருணத்தில் அரசாங்கத்தின் கொள்கை விளக்க அறிக்கையாக இந்தச் சங்கீதத்தை எழுதினான். இதில் அவன் தனது சரக்கு வண்டியை ஒரு விண்மீனுடன் கொக்கியால் இணைத்திருக்கிறான்.

101:1 இரக்கத்தையும் நியாயத்தையும் வானளாவப் புகழ்ந்தவனாக அவன் இப்பாடலைத் தொடங்குகிறான். அவையிரண்டும் கர்த்தரிடத்தில் காணப்படும் வண்ணம், தானும் அவற்றைத் தன்னிடத்தில் வெளிப்படுத்திக் காட்ட வேண்டுமென்று விரும்புகிறான். பெரும்பாலும் அவன் முதன்மையாக தேவனை நோக்கியவாறே சிந்தித்ததாகத் தோன்றுகிறது - இஸ்ரவேல் மீது தேவன் காட்டிய **இரக்கம்,** அவருடைய பகைவர் மேல் அவர் செலுத்திய நீதியான **நியாயத்தீர்ப்பு.** "கர்த்தாவே உம்மைக் கீர்த்தனம் பண்ணுவேன்" என்று அவன் உடனடியாகச் சேர்த்துக் கூறியிருப்பதிலிருந்து இது புலனாகிறது.

101:2 அடுத்ததாக, அவன் தனது தனி வாழ்வில் கொண்டிருக்க வேண்டுமென்று விரும்புகிற அம்சங்களை நோக்கித் திரும்புகிறான். குற்றமில்லாத **வழியிலே** நடக்க வேண்டுமென்னும் அசையா உறுதியுடன் அவன் இருக்கிறான், அதாவது கர்த்தருடைய படிப்பினைகளின்படி தன்னை நடத்துவான் எனில் அவன் நிந்தைக்குட்பட நியாயமான காரணங்கள் எதுவும் இரா. அவனுடைய விருப்பங்கள் யாவும் ஆர்வமிக்கவையாகவும் நேர்மையானவையாகவும் இருக்கின்ற காரணத்தால், அவன் தன் நாட்டங்களை இவ்வாறு இடைமறித்து ஏறெடுக்கிறான்: **"எப்பொழுது என்னிடத்தில் வருவீர்!"** இச்சொற்றொடருக்கு வெவ்வேறு வகையான விளக்கங்கள் தரப்படுகின்றன:

> தேவன் தன்னிடத்திற்கு வந்து, தான் உத்தமமான வழியில் நடக்கிறதைக் காண வேண்டும் என்று அவன் நாட்டம் கொண்டிருக்கிறான்; தன்னோடு தேவன் செய்த உடன்படிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்று அவன் நாடுகிறான் (2 சாமு. 7). புவிவாழ்வில் தேவன் தமது ஆட்சியை நிறுவுதல் என்னும் இறுதி நிகழ்வை அவன் நாடுகிறான்;
>
> அவன் எடுத்த தீர்மானங்கள் யாவற்றையும் நிறைவேற்றுவதற்கு தேவனுடைய சமுகம் தேவை என்று அவன் எண்ணுகிறான்.[68]

அவன் தன்னுடைய **வீட்டில் உத்தமமான இருதயத்தோடு** நடக்க வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறான். அவன் தனது இல்லற வழ்க்கையில் நீதியோடும் நேர்மையோடும் நடப்பான். ஏமாற்றுவித்தை எதுவும் அவனிடம் இல்லை, கபடும் இல்லை!

101:3,4 அவன் தன்னுடைய கண்களுக்கு முன்பாக தீங்கானது எதையும் வைக்க மாட்டேன் என்று கூறுகிறபோது, அவன் கீழ்த்தரமான எந்த மனிதனையும், திட்டத்தையும், செயலையும் ஏற்கும் எண்ணத்தோடு பார்க்க மாட்டான் என்னும் பொருள்படவே பேசுகிறான்.

இறை மறுதலிப்புக் கொள்கையாளருடைய **செய்கையைப்** பொறுத்தவரை, அவன் அதை வெறுக்கவும், அதனுடைய கேட்டுக்கு விலகியிருக்கவும் தீர்மானித்திருக்கிறான். சத்தியத்திலிருந்தும் நீதியிலிருந்தும் **வழிவிலகுகிறவர்கள்** தேவனோடு ஐக்கியம் கொண்டிருப்பதில்லை.

அவன் விலகியிருக்க வேண்டும் என்று நினைத்திருந்த இயல்பு **மாறுபாடான இருதயம்** ஆகும். நேர்மையின்மையையும் இழிநிலையையும் விரும்பிச் சார்ந்துகொள்வதே இங்கு மாறுபாடான இருதயம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவன் இத்தகைய தீமைகளைத் தன்னகத்தே கொண்டிருக்க மாட்டான். அது மட்டுமின்றி அத்தகைய குணத்தைக் கொண்ட மனிதர்களை நம்பிக்கைக்குரிய ஆலோசகர்களாகவும் அவன் நியமிப்பதில்லை. **"பொல்லாங்கை நான் அறிய மாட்டேன்"** என்னும் தகுதியான தீர் மானம், அவனுடைய வாழ்க்கைக்கு மட்டுமின்றி அவனுடைய நீதிமன்றத்தில் பங்கு பெறுகிறவர்களுடைய வாழ்க்கைக்கும் பொருந்தும். இதன் காரணமாகவே KJV மொழிபெயர்ப்பு "பொல்லாத வனை நான் அறியமாட்டேன்" என்று மொழி பெயர்த்திருக்கிறது. (தமிழிலும் இவ்வாறே மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.) இங்கு "அறிதல்" என்னும் சொல் அன்போடு ஏற்றுக்கொள்ளுதல் அல்லது உற்சாகப்படுத்துதல் என்று பொருள்படும்.

101:5 தன் அயலகத்தானை **அவதூறாகப்** பேசுகிறவன் எவனும் சங்கரிக்கப்படுவான். RSV மொழிபெயர்ப்பு கூறுவதுபோல அவன் கொலை செய்யப்பட வேண்டும் என்பது இதன் பொருளன்று; மாறாக அரசனின் நிருவாகக் குழுவிலிருந்து அவன் பதவி நீக்கம் செய்யப்படுவான் அல்லது அவன் பேசாதபடி அமைதிப்படுத்தப் படுவான் (NASB - அடிக்குறிப்பு).

பகட்டும் **மேட்டிமையும்** கொண்ட மனிதனுக்கும் இதுபோலவே நடக்கும். அவனுக்கு அரண்மனையில் எவ்விதப் பதவியும் அளிக்கப்படுவதில்லை.

101:6 அரசாங்கத்தில் வேலைக்கு அமர்த்தப் படுவதற்கு நன்னெறி ஒழுக்கம் மற்றும் ஆன்மீக நிலை ஆகியவற்றில் நேர்மையே முதன்மையான தகுதியாக விளங்கும். **தேசத்தில் உண்மையானவர்கள்** அரசனின் சேவகர்களாகவும், தூய்மையான வாழ்க்கை வாழ்பவர்கள் அவனுடைய ஊழியர்களாகவும் இருப்பார்கள்.

101:7,8 கயவர், ஏமாற்றுபவர், பொய்யர் எவரும் அரசனின் ஊதியப் பட்டியலில் இடம்பெற மாட்டார்கள். ஏமாற்றுபவர்களும் நேர்மையற்ற வழக்குரைஞர்களும் அரசனோடு எவ்விதத் தொடர்பும் கொண்டிருக்க முடியாது.

இறுதியாக, எல்லாவிதமான பொல்லாப்பும் உடனடியாகவும் கண்டிப்பாகவும் நடத்தப்படுவதற்கான உறுதியான தீர்மானத்தை அரசன் எடுத்திருக்கிறான். மீண்டுமாக **"அறுப்புண்டு போக... சங்கரிப்பேன்"** என்னும் சொற்றொடர் தண்டிப்பது அல்லது **கர்த்தருடைய நகரமாகிய** எருசலேமை விட்டு அகற்றுவது என்றே பொருள்படும். "எல்லாவிதமான பொல்லாப்புகளும் தேசத்திலிருந்து அடியோடு அழிக்கப்பட வேண்டும், பயனற்ற மனிதர்கள் யெகோவாவின் நகரத்திலிருந்து வேரறுக்கப்பட வேண்டும்."[69]

சங்கீதம் 102: கல்வாரியில் மூவொரு கடவுள்

இந்தச் சங்கீதத்தைப் புரிந்துகொள்வதற்கான முக்கியமான குறிப்பு பேசுபவர்களில் மாற்றம் ஏற்படுவதைக் கண்டறிவதே ஆகும்.

சிலுவையில் தொங்கியவராகக் கர்த்தராகிய இயேசு தேவனோடு பேசுகிறார் (வச. 1-11).

திருத்தந்தை தமது இனிய மகனுக்குப் பதில் கூறுகிறார். எபிரெயர் 1:8 -உடன் 12 - ஆவது வசனத்தை ஒப்பிடுவதால் இதனை நாம் அறிகிறோம். (வச. 12-15).

இந்த வசனங்களைப் பேசுபவர் யார் என்று சொல்லப்படவில்லை, ஆனால் அவர் பரிசுத்த ஆவியானவர் என்று ஊகிப்பது தவறற்றது. எதிர்காலத்தில் மேசியாவின் கீழ் இஸ்ரவேல் புதுப்பிக்கப்படுதல் பற்றிய விவரம் இங்கு கொடுக்கப்பட்டுள்ளது (வச. 16-21).

நம்முடைய பாவங்களுக்காக தேவனுடைய கரங்களில் இரட்சகர் பாடுகள் அனுபவித்தவராக மீண்டும் ஒருமுறை பேசுவதை இப்பகுதியில் கேட்கிறோம் (வச. 23,24 அ).

மீண்டுமாக, எபிரெயர் 1:10-12 ஆகிய வசனங்களோடு இப்பகுதியை ஒப்பிட்டுப் பார்ப்பதாலே திருத்தந்தை தமது மகனுடன் பேசுகிறார் என்பதை நாமறிவோம் (வச. 24 ஆ-28).

கர்த்தராகிய இயேசு இவ்வுலகத்தின் பாவங்களுக்காகப் பரிகாரம் செய்து கொண்டிருந்த தருணத்தில், மூவொரு கடவுளின் மூன்று நபர்களும் தங்களுக்குள் உரையாடிக் கொண்டிருந்தவற்றை நாம் கேட்கும்படி, திருமறையின் இப் பகுதியைத் தவிர வேறு எந்தப் பகுதியும் தெளிவாகத் தரவில்லை.

102:1,2 முதலிரண்டு வசனங்களில், துன்புறுத்தப்பட்ட இரட்சகரின் மன்றாட்டைப் படிக்கும் நாம், தேவனுடைய நித்திய குமாரன் இவ்வளவாகத் தம்மை மரணபரியந்தம் தாழ்த்தினதன், சிலுவையின் மரணபரியந்தம் தாழ்த்தினதன் அதிசயத்தைக் குறித்த உட்கருத்தை நினைவுகூராமல் விட்டுவிடக் கூடாது.

இயேசுவே மன்னவனே உற்றநல் துணைநீரே
நேசமாய் அரவணைத்தீர் நோய்நீக்கி நலம்தந்தீர்
மனுமக்கள் புறக்கணித்துக் கொடுமைகள்
புரிந்தனரே
மரத்தினில் உயிர்நீத்தீர் ஏனென்று
யார்சொல்வார்?

அவர் தமது மன்றாட்டைக் கேட்கும்படி, இக்கட்டுக் காலத்தில் தம்மருகில் வரும்படி, விரைந்து பதில் அளிக்கும்படி கர்த்தரிடம் விண்ணப்பிக்கிறார்.

102:3-7 துக்கம் நிறைந்தவர் என்னும் மனித நிலையில் அவர் அனுபவித்த பாடுகள் சில வற்றை அவர் இங்கு விவரிக்கிறார். வாழ்வின் முடிவு நெருங்குவதாக அவர் உணர்ந்தார்; அவருடைய நாட்கள் புகையைப் போல மறைந்து போயின. அவருடைய உடல் காய்ச்சலால் கொதித்தது. அவருடைய முக்கியமான உடலு

றுப்புகள் யாவும் உலர்ந்து உதிர்ந்து போயின என்று தோன்றியது. இவ்விதமாக அவர் பசியற்றுப் போனார். அவர் அனுபவித்த உபத்திரவங்கள் அவருடைய உடலை எலும்பும் தோலுமாக மாற்றும் அளவிற்கு நீண்டுகொண்டே போயின. பாலைவனப் பறவையைப் போல அல்லது இடி பாடுகளுக்குள் தனித்துவிடப்பட்ட ஆந்தையைப் போல அவர் பாழான நிலைக்கும் துயரார்ந்த நிலைக்கும் உருவாகக் காணப்பட்டார். அவரால் உறங்கமுடியவில்லை என்பது நிச்சயம். தேவனாலும் மனிதனாலும் கைவிடப்பட்டவராக மேற் கூரையின் உச்சியில் **தனித்திருக்கும் குருவியைப்** போல இருந்தார்.

102:8-11 அவருடைய பகைவர் அவமானப் படுத்துவதிலிருந்து ஓயவில்லை, அவருடைய பெயரை சபிப்பதற்குப் பயன்படுத்தினார்கள். (இன்றைய நாட்களிலும் கூட இயேசு என்பதன் எபிரெயச் சொல்லாகிய யெசுவா அவருடைய பகைவரால் யெசு என்று சுருக்கமாகக் கூறப் படுகிறது. "அவருடைய பெயர் இவ்வுலகத்திலி ருந்து அகற்றப்படுவதாக" என்னும் சாபத்தைப் பொருளாக அப்பெயர் கொண்டிருக்கிறது. துக்கத் தின் சாம்பல் அவருக்கு **அப்பமாகவும்**, அவருடைய **பானம்** வருத்தத்தின் கண்ணீரால் திட்பம் குறைந்ததாகவும் விளங்கின.

இவையெல்லாவற்றிலும், அவர் பாடு அனுபவித்ததற்கான காரணம் தேவனுடைய **சினமும் கடுங்கோபமுமே**யாகும் என்பதை அவர் உணர்ந்தார். தனிப்பட்ட முறையில் தேவன் அவரிடத்தில் சினங்கொள்ளவில்லை. மாறாக தேவ ஆட்டுக்குட்டியானவர் நம்முடைய பாவங் களைத் தம்முடைய சரீரத்தில் சுமந்தவராக மரத்தில் தொங்கியதால் அவ்வாறு நிகழ்ந்தது. தேவனால் புறக்கணிக்கப்பட்டவராக அவர் தம்மை **உயரத் தூக்கி, தாழத் தள்ளினதாக** அவர் உணர்ந்தார். மாறாக நிழல்போல அவருடைய நாட்கள் மங்கிக்கொண்டேபோயின, அவருடைய உயிர் **புல்லைப் போல உலர்ந்து** போயிற்று.

102:12-15 இப்பொழுது கர்த்தராகிய இயேசுவுக்கு உறுதியளித்து உற்சாகப்படுத்தும் சொற் களை, தேவன் பதிலாக உரைக்கிறார். குமாரனைக் கர்த்தர் என்று அழைத்து, அவர் **என்றென்றைக்கும் இருப்பார்** என்றும், அவருடைய **பேர் பிரஸ்தாபம் தலைமுறை தலைமுறையாக** விளங்கும் என்றும் கூறுகிறார். அவர் இறந்தாலும் (அது உண்மைதான்) அவர் உயிரோடு **எழுந்து** விண்ணகத்துக்கு ஏகுவார். அதன் பிறகு யூதா கோத்திரத்துச் சிங்கமாக அவர் இந்தப் பூமிக்குத் திரும்பிவருவார், அவர் **சீயோன்** மேல் **இரக்கம்** பாராட்டுவார். இப்பொழுது தள்ளி வைக்கப்பட்டிருக்கிற தேசம் திரும்பவும் **தயை** பெறும் காலம் அதுவே. இவ்வாறு புதுப்பித்தலுக்காகக் காத்துக் கொண்டிருக்கும் வேளையில், இஸ்ரவேல் மக்கள் சீயோனின் கற்கள் மேல் பற்றுக்கொண்டவர்களாக, **அதன் மண்ணுக்காகப் பரிதபிக்கிறார்கள்**. மேற்குச் சுவர் மீது அவர்கள் கொண்டிருக்கும் ஆழ்ந்த மரியாதை இதற்கோர் எடுத்துக் காட்டு; இது முன்னர் அழுகையின் சுவர் என்று அழைக்கப்பட்டு வந்தது. எருசலேம் நகரத்தின் பழைய பகுதியின்மேல் அவர்கள் கொண்டிருக்கும் உணர்ச்சி வயப்பட்ட பெருமளவுப் பிணைப்பு இதற்கு மற்றுமோர் எடுத்துக்காட்டு. சீயோன் தனது அரசரை வரவேற்கிறபோது, புறவின நாடுகள் கர்த்தருடைய நாமத்துக்குப் பயப்படுவார்கள், உலகத்தின் அரசர்கள் அவருக்கு வழிபாடு செய்வார்கள்.

102:16-22 இப்பகுதியில் தன்மை முன்னிலை சார்ந்த பிரதிப்பெயர்ச் சொற்கள் விடுபட்டுள்ளன. படர்க்கைப் பிரதிப்பெயர்ச் சொற்களே பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆகவே, நாம் முன்னர் சிந்தித்தது போல, கிறிஸ்துவின் ஆட்சிக்குக் கீழாக இஸ்ரவேல் எதிர்காலத்தில் பெறவிருக்கிற புதுப்பித்தலைப் பரிசுத்த ஆவியானவரின் சொற்களே இப்பகுதியில் விவரிக்கின்றன எனலாம். மேசியா **சீயோனுக்குத்** தமது வல்லமையோடும் பெரிதான **மகிமையோடும்** திரும்பிவந்து அதைக் கட்டுவார். அந்நாளில் சிதறுண்ட அவருடைய மக்களின் மன்றாட்டுகள் பதிலுரைக்கப்படும். அவர்களுடைய வேண்டுதல்கள் வீணாகிப் போகவில்லை என்பது அப்பொழுது வெளிப்படும். எவ்விதமாகக் கர்த்தர் வானத்திலிருந்து கீழே பார்த்தார், துன்புறுத்தப்பட்டு சிதறுண்ட மக்களின் கதறுதலை எவ்வாறு அவர் கேட்டார், எவ்விதமாக அவர்களை எருசேலமுக்குக் கொண்டுவந்தார் என்பன பற்றிய வீரகாவியத்தை எதிர்காலச் சந்ததியார் படிப்பார்கள். கர்த்தரைத் தொழும்படி புறவினத்தார் எருசலேமுக்கு வருகிறபோது அவர் எவ்வாறு சிறைப்பட்டவர்களையும், குற்றஞ் சுமத்தப்பட்டவர்களையும் விடுதலையாக்கினார் என்பதைக் கூறுவார்கள். மேலும் இஸ்ரவேலிடம் அவர் கிருபையோடு நடந்துகொண்டதன் நிமித்தம் அவர்கள் கர்த்தரைப் போற்றுவார்கள்.

102:23-28 இப்பொழுது சங்கீதம் மீண்டும் கர்த்தரிடமாகத் திரும்புகிறது, அவர் சிலுவையில்

மரணமடையும் தருணம் அது. அச்சமயத்தில் அவர் ஓர் இளைஞர் - முப்பது வயதைச் சற்றே கடந்தவர். ஆனாலும் அவருடைய வாழ்வின் முக்கியமான இளமைப் பருவத்திலேயே அவரது **பெலன்** ஒடுக்கப்பட்டுவிட்டது. அவருடைய வாழ்வு உரிய காலத்திற்கு முன்னரே முடிவடையப் போகிறது. அப்பொழுது அவர் விண்ணப்பிக்கிறார், **"என் தேவனே பாதி வயதில் என்னை எடுத்துக்கொள்ளாதேயும்."**

உடனடியாக தேவனிடத்திலிருந்து அதற்கான பதில் வருகிறது (24ஆ). "கர்த்தாவே நீர் என்றென்றும் உயிரோடிருக்கிறீர்" (TEV). இங்கு தேவன் பேசுகிறார் என்பதை நாம் அறிவோம். ஏனெனில் தொடர்ந்து வருகிற வசனங்களைத் திருத்தந்தை பேசியதாக எபிரெயர் 1:10-12 வசனங்கள் கூறுகின்றன. தேவன் தம்முடைய குமாரனைப் பற்றி உரைக்கின்ற சான்றைக் கவனியுங்கள்:

> அவர் படைப்பில் செயல்திறமிக்க பிரதிநிதியாக விளங்கினார்: அவர் **பூமியை அஸ்திபாரப் படுத்தினார், வானங்கள்** அவர் **கரத்தின் கிரியைகள்**.
>
> படைப்பு **அழிந்துபோம், ஆனால்** அவரோ **நிலைத்திருப்பார்**. ஒரு **வஸ்திரத்தைப் போலப்** படைப்பானது பழைமையாய்ப்போம், வேறொரு சிறந்த உலகிற்காக அது பரிமாற்றம் செய்யப்படும். ஆனால் கிறிஸ்துவோ என்றும் மாறாத நிலைபேறுடையவர்.
>
> அவருடைய நித்திய நிலை உறுதியானது, அது மட்டுமின்றி அவருடைய மக்களும் அவர்களுடைய வழித்தோன்றல்களும் நிலைத்திருப்பார்கள். அவருடைய **அடியாரின் பிள்ளைகள்** பாதுகாப்போடு குடியிருப்பார்கள்; **அவர்களுடைய சந்ததியார்** தொடர்ந்து அவருடைய பாதுகாப்பின் கீழ் குடியிருப்பார்கள்.

சங்கீதம் 103: துதி செலுத்துவதற்கான அழைப்பு

103:1 நாம் அவ்வப்போது சிந்திக்கிறோம், ஆனால் அவற்றை வெளிப்படுத்த நம்மால் சொற்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை, அவற்றைச் சொற்களால் வடிவமைத்து அழகிய முறையில் சங்கீதங்கள் நமக்குத் தந்திருக்கின்றன, நாம் சங்கீதங்களை அதிகமாக விரும்புவதற்கு இது ஒரு காரணம். 103 -ஆவது சங்கீதத்தைக் காட்டிலும் வேறு எங்கும் இந்த உண்மை அதிகமாக வெளிப்படவில்லை. இந்தச் சங்கீதத்தின் நன்றிபாராட்டும் தொனியின் வீறார்ந்த ஏற்றத் தாழ்வுகளில், நம்முடைய சொந்த நன்றியறிதலின் ஆழ்ந்த உணர்ச்சிகள் பிரதிபலிப்பதைக் காணவியலும். இங்கு நாம் **கர்த்தரை ஸ்தோத்திரிக்கும்படி** நமது **ஆத்துமாவை** அழைக்கிறோம். நம்முடைய ஆத்துமா என்று குறிப்பிடுகையில், நம்முடைய உடல்சாராத இயல்பை மட்டும் குறிப்பிடாமல் நம்முடைய முழு ஆளுமையையே குறிப்பிடுகிறோம். ஆவி, ஆத்துமா, உடல் யாவும் யெகோவாவின் தூய திருப்பெயரைப் பாராட்டும்படி அழைக்கப்படுகின்றன.

103:2 துதிப்பதற்கான அழைப்பு இரண்டாவது முறையாக ஒலிக்கிறது. அவர் செய்த அனைத்து நன்மைகளையும் மறக்கலாகாது என்னும் நினைவூட்டும் இன்றியமையாத குறிப்போடு இந்த முறை அழைப்பு விடுக்கப்படுகிறது. இந்த நினைவூட்டும் குறிப்பு மிகவும் அவசியமானது, ஏனெனில் அதனை அவ்வப்போது நாம் மறந்து போகிறோம். நாம் உடல் நலத்தோடும், மனநலத்தோடும் இருக்கிறோம். நமது பார்வை, செவித்திறன், பேச்சுத்திறன் ஆகியவை சீராக உள்ளன, நமக்குப் பசி உண்டாகிறது, இன்னும் எண்ணிலடங்கா இரக்கங்களைப் பெற்றிருக்கிறோம். இவற்றிற்காக நாம் இறைவனுக்கு நன்றிசெலுத்த மறந்து போகிறோம். இவை நமக்கு உரியவை என்று நாம் கருதுகிறோம்.

103:3 இவை எல்லாவற்றைக் காட்டிலும், நம்முடைய **அக்கிரமங்களையெல்லாம்** அவர் மன்னித்திருப்பதற்காக நாம் அவருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். இரத்தாம் பரம் போன்ற சிவப்பான பாவங்களையெல்லாம் பனியைப் போன்று வெண்மையாக்கிய தெய்வீக கருணை சொல்லிமுடியா அற்புதமாகத் திகழ்கிறது. *மன்னிக்கப்பட்டவன்* என்று தனது கல்லறைக்கு பெயர் சூட்டிய மனிதனின் அனுபவத்தை என்னுடையதாக்கிக் காண்கிறேன். "கர்த்தராகிய இயேசு என்னுடைய எல்லாப் பாவங்களையும் மன்னித்தார், அதனுடைய முடிவை அவர் ஒருபோதும் கேட்கப் போகிறதில்லை" என்று சொன்ன அயர்லாந்து மனிதனின் அனுபவத்தையும் சிந்தித்துப் பார்க்கிறேன். கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற செங்குருதியால் நம்முடைய பாவங்கள் அகற்றப்பட்டன என்னும் அறிவு - அதை அப்படியே உளமார ஏற்பதென்பது சற்று அதிகம்தான். இரண்டாவது நன்மை, நம்முடைய எல்லா நோய்களும் குணமாக்கப்பட்டன என்பது நினைவு கூரப்பட வேண்டும். இதைச் சொல்லுகிறபோது ஒரு பிரச்சினை எழுகிறது. மன்னிப்புக்குப் பிறகே குணப்

படுதல் வருகிறது என்பதைக் கவனியுங்கள். ஆவிக்குரியதை உடல் சார்ந்தவை மிகவும் நெருங்கியே உள்ளன. பாவத்தின் காரண மாகவே நோய்களெல்லாம் உண்டாகின்றன என்று சொல்ல முடியாது. ஆனால் சில வேளை களில் அவ்வாறு ஏற்படுகிறது. அப்படிப்பட்ட தொடர்பு இருக்கின்ற இடங்களில் குணப்படுத லுக்கு முந்தி பாவ மன்னிப்பு உண்டாக வேண்டும்.

எனினும் வெளிப்படையாக எழுந்த பிரச்சினை இன்னும் தொடருகிறது. **"அவர் உன் நோய்களை யெல்லாம் குணமாக்கி"** என்று இந்த வசனம் கூறுகிறது. அனுபவத்தில் காண்கிறபோது எல்லா நோய்களும் குணமாவதில்லை என்பதை நாமறி வோம். கர்த்தருடைய வருகை தாமதிக்குமானால், நாம் எல்லோரும் விரைவாகவோ நீண்ட காலத் திற்குப் பிறகோ இறக்க நேரிடும். அவ்வாறு இருக்க, இவ்வசனத்தின் பொருள் என்ன? அதற்கான விடைகாண, கீழ்க்காணும் கருத்துரைகளை நாம் தந்திருக்கிறோம்.

முதலாவது, மெய்யான குணமாக்குதல்கள் யாவும் இறைவனிடத்திலிருந்தே வருகின்றன. நீங்கள் நோய்வாய்ப்பட்டிருந்து, பின்னர் நலம் பெற்றீர்களெனில் அதற்காக இறைவனுக்கு நன்றி செலுத்துங்கள். ஏனெனில் எல்லாக் குணப் படுதலுக்கும் அவரே ஆதாரமாக இருக்கிறார். பழைய ஏற்பாட்டில் தேவனுடைய பெயர்களில் ஒன்று யெகோவா ரோபி - உங்களைக் குண மாக்கும் கர்த்தர். மெய்யாகக் குணப்படும் ஒவ் வொரு நிகழ்வும் அவரிடத்திலிருந்தே வருகிறது.

இரண்டாவது, எல்லாவிதமான நோய்களை யும் கர்த்தரால் குணப்படுத்த முடியும். அவரைப் பொறுத்தவரையில் குணப்படுத்த முடியாத நோய் என்று எதுவும் இல்லை.

மூன்றாவது, ஒரு குறிப்பிட்ட காலத்தில் இயற் கையான முறையைப் பயன்படுத்திக் கர்த்தரால் ஒரு நோயைக் குணமாக்க முடியும், அல்லது உடனடியாக வியத்தகு முறையில் அவரால் குண மாக்க முடியும். அவருடைய குணமாக்கும் வல்லமைக்கு எல்லையை நிர்ணயிக்க முடியாது.

நான்காவது, நம்முடைய கர்த்தர் இவ்வுல கிற்கு வருகைபுரிந்தபோது அவரிடம் வந்த அனைவரையும் உண்மையாகவே குணமாக் கினார் (மத். 8:16).

ஐந்தாவது, ஆயிரமாண்டு ஆட்சியின்போது உண்மையாகவே அவர் அனைத்து நோய்களை யும் குணமாக்குவார் (ஏசாயா 33:24; எரே. 30:17). அவருக்கு எதிராகக் கலகம் செய்யும் எவரையும் அவர் குணமாக்க மாட்டார் (ஏசாயா 65:20).

ஆனால் இந்த வசனத்தின் பொருள் வேறு எதுவாயிருந்தாலும், விசுவாசியானவன் எல்லா வித நோயினின்றும் குணப்படுதலைத் தனக் குரியது என்று உரிமைகோர முடியாது, ஏனெனில் இச்சங்கீதத்தின் வேறு சில வசனங்களில் வாழ்வு குறுகிய காலத்தது, அது முடிவுக்கு வருவது உறுதி என்று நாம் நினைவுபடுத்தப்பட்டுள்ளோம் (வச. 15,16 ஆகியவற்றைக் காண்க). ஒரு விசுவாசி குணமாகும்போது, அது இறைவனின் இரக்கமாயிருக்கிறது, அதன் பொருட்டு அவர் குணமாக்குபவர் என்று அவன் அறிந்து நன்றி பாராட்டவேண்டும் என்பதே இவ்வசனத்தின் பொருள் என்று நான் புரிந்துகொள்கிறேன்.

103:4 அவர் நோய்களினின்று குணமாக்குவது மட்டுமின்றி, அவர் நம்முடைய பிராணனைக் குழி யினின்று அல்லது அழிவிலிருந்து காப்பாற்றவும் செய்கிறார். நாம் நரகத்திற்குள் செல்வதிலிருந்து காப்பாற்றப்படுதலாகிய இரட்சிப்பை இது குறிக் கிறது என்று கருதுவோமானால் அது சரியானதே. ஆனால் அவர் நம்மை ஆபத்துகள், விபத்துகள், துயர நிகழ்வுகள் ஆகியவற்றினின்று தொடர்ந்து காத்து வருகிறார் என்பதே இதன் பொருள் என்று நான் கருதுகிறேன்; இவ்விதமாக நாம் கல்லறைக் குச் செல்வதிலிருந்து காக்கப்படுகிறோம். உரிய காலத்திற்கு முந்தி நாம் சாகாமல் இறைவனு டைய தனிப்பட்ட குறுக்கீட்டால் எத்தனை முறை காக்கப்பட்டிருக்கிறோம் என்பதை விண்ணகத் திற்குச் சென்ற பிறகே உணருவோம்.

கிருபையினாலும் இரக்கங்களாலும் அவர் நம்மை **முடிசூட்டுகிறார்;** இது அவரிடத்திலிருந்து பெறுகிற நான்காவது நன்மை. ஒரு காலத்தில் அன்புகூரப்படுவதற்கு அருகதை அற்றவர்களும் குற்றவுணர்வு நிறைந்தவர்களுமாயிருந்த நமக்கு இது வியத்தகு மகுடமாக விளங்குகிறது. முடி வில்லாத அன்பினால் நாம் அன்புகூரப்படு கிறோம், ஒவ்வொரு நாளும் அவருடைய கிருபை நம்மேல் பொழியப்படுகிறது.

103:5 மேலும் நாம் உயிரோடு இருக்கும் நாள்வரை அவர் நம்மை **நன்மையால்** மன நிறைவு அடையச் செய்கிறார். எபிரெய மொழி யில் இவ்வசனம் சற்று நிச்சயமற்றதாயிருக்கிறது. "அவர் உன்னுடைய ஆபரணத்தை நன்மையான பொருட்களால் திருப்தி செய்கிறார்" என்பதே அதன் எழுத்தின்படியான மொழிபெயர்ப்பு. அதிலி ருந்தே "உனது முதன்மையான," "உனது

வயது", "நீ வாழ்கிற நாட்கள்" என்பன தோன்று கின்றன. துல்லியமான சொற்கள் எவை என்பதை நாம் சொல்லமுடியாவிட்டாலும், கர்த்தர் தாமே இருதயத்தின் வாஞ்சையை நிறைவு செய்கிறார், நேர்மையாக நடக்கிறவர்களிடத்திலிருந்து எந்த நன்மையையும் விலக்கி வைக்கிறதில்லை என்பன உண்மை என்று அறிகிறோம்.

மன்னிப்பு, குணப்படுதல், பாதுகாப்பு, முடிசூட் டப்படுதல், மனநிறைவு ஆகிய இவ்வைந்து நன்மைகளின் விளைவு நம்முடைய **இளமை கழுகைப் போல் புதுப்பிக்கப்படுகிறது** (இலகு தமிழ்). நோயும் மூர்க்க செயல்களும் உடலைத் தாக்கக்கூடும், ஆனால் அவை ஆவியைத் தாக்கு வதில்லை. "எங்கள் புறம்பான மனிதனானது அழிந்தும் உள்ளான மனிதனானது நாளுக்கு நாள் புதிதாக்கவும்படுகிறது" (2 கொரி. 4:16). நம்மு டைய உடலைப் பொறுத்தவரை உலகில் நித்திய இளமைக்கான ஊற்று இல்லை, ஆனால் ஆவியோ ஆற்றல் பெறுவதில் ஒரு கட்டத்திலிருந்து அடுத்த கட்டத்தை நோக்கிச் செல்கிறது.

> கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புது பெலன் அடைந்து, கழுகுகளைப் போலச் செட் டைகளை விரித்து உயரப் பறப்பார்கள். அவர் கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந் தாலும்சோர்ந்துபோகார்கள் (ஏசாயா 40:31).

கழுகு நீண்ட ஆயுளும் அதிகப்படியான வலி மையும் கொண்டது என்னும் பேர் பெற்றுள்ளது. அதனுடைய வாழ்வும் தொடர்ந்து வலிமை கொண்டிருப்பதில்லை, இளமை புதுப்பிக்கப்படு வதுமில்லை; அதுவும் வயது முதிர்ந்து சாகும். ஆனால் பாடலாசிரியன் கூறுவது யாதெனில், இறைவனிடத்தில் குடியிருக்கிறவன் தொடர்ச்சி யான புதுப்பித்தலைப் பெறுவான், அவனுடைய வலிமை கூடிக்கொண்டே போகும். கழுகு ஓரளவு உயரத்திலிருந்து அதிக உயரத்திற்குப் பறப்ப தற்கு அது ஒப்பாயிருக்கிறது.

103:6 கர்த்தருடைய இரக்கமும் தயவும், அவர் எபிரெய மக்களோடு ஈடுபாடு கொண்ட நேரங்களில், குறிப்பாக அவர்கள் எகிப்திலிருந்து பயணம் மேற்கொண்ட காலத்தில் வெளிப்பட்டன. **ஒடுக்கப்பட்ட யாவருக்கும் கர்த்தர்** வெற்றியைக் கொடுத்து **நியாயத்தைச் செய்கிறதே** அவர் செயல்படும் வழியின் மாதிரியாகத் திகழ்கிறது.

103:7,8 எகிப்திலிருந்து வாக்குறுதி தரப்பட்ட நாட்டிற்குச் சென்ற வழியில், இறைவன் தமது வழிகளை மோசேக்கும் தமது செயல்களை இஸ்ரவேல் மக்களுக்கும் வெளிப்படுத்தினார். மோசேயை அவர் தமது உட்புற ஆலோசனை அறைக்கு அழைத்துச் சென்று, தமது திட்டங் களையும் நோக்கங்களையும் அவனுக்குத் தெரி வித்தார். இஸ்ரவேல் மக்களும் அந்தத் திட்டங் கள் வெளிப்படையாக நிறைவேறியதைக் கண் டார்கள். அவருடைய வழிகளுக்கும் அவருடைய செயல்களுக்கும் இடையே உள்ள வேறுபாடு யாதெனில், அவருடைய வழிகள் வெளிப்பாட் டால் அறியப்படும், அவருடைய செயல்கள் கண் கூடாகக் காணப்படும்.

கர்த்தர் தமது மக்களோடு கொண்ட ஈடுபாடு கள் அனைத்திலும் தமது **இரக்கத்தையும் கிருபையையும்** வெளிப்படுத்தினார். பாதையின் ஒவ்வொரு அடியிலும் அவர் வழிநடத்தி, பாது காத்து, பராமரிக்கிறார். அவருடைய மக்களோ அலைந்து திரிகிறார்கள், முறையிடுகிறார்கள், கலகம் செய்கிறார்கள், கீழ்ப்படிவதில்லை; ஆனாலும் அவருடைய கோபம் வெளிப்படு முன் பெருமளவில் பொறுமையைக் காட்டுகிறார். நன்றியற்ற தன்மையைச் சந்திக்க நேரிட்டாலும் அவருடைய இரக்கம் நீடித்திருக்கிறது.

> தகுதியற்ற மானிடனாய்
> வாழ்ந்துவந்த என்னிடத்தில்
> மிகுதியாக அன்புகூர்ந்தீர்
> இறைமைந்தர் இயேசுநாதா!
> உம்சித்தம் செய்திடாமல்
> தோல்வியுற்ற நீசனென்னை
> உம்கிருபை உடனிருந்து
> நடத்துவதால் வாழ்த்துகிறேன்!

103:9,10 கர்த்தர் தம்முடைய மக்களைத் தண் டித்துத் திருத்தவேண்டிய காலம் வரவிருக்கிறது, ஆனாலும் அவருடைய ஒழுங்கு நடவடிக்கை முடி வுறா வண்ணம் நீண்டுகொண்டிருக்காது. தண் டனை வழங்குவது அவருடைய அரிய செயலாக இருக்கிறது. அவருடைய இரக்கம் நியாயத்தீர்ப் புக்கு எதிராகக் களிகூருகிறது. நாம் எதைப் பெறு வதற்குத் தகுதியானவர்களோ அதைப் பெற்றி ருந்தால், நாம் என்றென்றும் நரகத்திலேயே இருக்க நேரிட்டிருக்கும். ஆனால் நமக்குரியதை அவர் நமக்கும் தராதிருப்பதன் மூலம், அவர் தமது இரக்கத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். நம்முடைய பாவங்களுக்கான தண்டனையை மற் றொருவர் கல்வாரி சிலுவையில் செலுத்தித் தீர்த் தார். நாம் அந்த இரட்சகரிடத்தில் விசுவாசம் வைக் கும்போது, தேவன் நம்மை நீதியாக மன்னிக்க வியலும். இருமுறை தண்டனை வழங்கப்படலா காது. கிறிஸ்து என்றென்றைக்குமாகக் கடனைத்

தீர்த்துவிட்டார், ஆகவே நாம் அதை மீண்டும் செலுத்த வேண்டிய அவசியமில்லை.

103:11,12 இவ்வாறு வியத்தகு முறையில் இரட்சிப்பின் திட்டத்தை நல்கியதில் தேவனுடைய அன்பு அளவிற்கடங்காததாயிருக்கிறது. மனிதனுடைய கற்பனையை இது கடும் வறுமைக்குள்ளாக்குகிறது. **பூமியிலிருந்து வானம்** எவ்வளவு தூரம் என்று நம்மால் அளக்கக் கூடுமானால், அவருடைய அன்பின் அளவு எவ்வளவு பெரிதாயிருக்கும் என்று ஓரளவு நாம் அறிவோம். ஆனால் அது நம்மால் முடியாத செயல். நாம் வாழ்கிற இப்பிரபஞ்சத்தின் அளவு என்னவென்பதையும்கூட நாம் அறியோம். அளவிற்குட்படா தொலைவைக் குறித்துப் பேசுவோமாயின், **அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார்.** "கிழக்கு கிழக்கே இருக்கிறது, மேற்கு மேற்கே இருக்கிறது; அவையிரண்டும் ஒருபோதும் சந்திப்பதில்லை" என்பது போல விசுவாசியோடு அவனுடைய பாவங்கள் ஒருபோதும் சந்திக்கா. அந்தப் பாவங்கள் அற்புத அன்பின் மூலமாக தேவனுடைய பார்வையினின்று அகற்றப்பட்டுவிடும்.

103:13,14 "மனிதனுடைய பலவீனம் தேவனுடைய இரக்கத்தை நோக்கி முறையிடுகிறது" என்று ஒருவர் கூறினார். பெருமளவு பாரத்தைச் சுமக்கக் கூடாமல் சிறுவன் ஒருவன் சிரமப்படுகிறதை அக்கறையோடு அவனுடைய தகப்பன் காண்கிறதுபோல, நம்முடைய பலவீனங்களில் நாம் சிரமப்படுவதை இரக்கத்தோடு நம்முடைய **கர்த்தர்** பார்க்கிறார். நாம் யார் என்பதை, அதாவது மண்ணால் உருவாக்கப்பட்டவர்கள் என்பதை அவர் அறிந்திருக்கிறார். நாம் நலிவுற்றவர்கள், பயனற்றவர்கள் என்பதையும் அவர் அறிவார். நாம் மண் என்பதை இறைவன் நினைவு கூருகிறார் என்பதை நாம் அவ்வப்போது மறந்து போகிறோம். இது பெருமைக்கும், தன்னையே நம்பியிருப்பதற்கும், பிறரைச் சார்ந்திராத மனப்பான்மைக்கும், நிலைகுலைவுக்கும் வழிவகுக்கிறது.

103:15,16 மனிதன் மண்ணாயிருப்பது மட்டுமின்றி, அவன் மண்ணுக்கு விரைந்து சென்று விடுகிறான். "நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய்" என்பது உலக வரலாற்றின் தொடக்கத்தில் கூறப்பட்ட ஆணை, அது இரக்க மற்ற முறையில் நிறைவேறுகிறது. ஒரு குறுகிய நாளுக்கென்று மனிதன் பிறக்கிறான். பின்னர் **வெளியின் பூவைப்போல** உதிர்ந்து போகிறான். அவனை வருத்தின முந்தைய விசயங்கள் எதுவும் அவனை மீண்டும் காண்பதில்லை.

103:17,18 இறைவனுடைய கிருபையோ தெளிவான வகையில் இதற்கு முற்றிலும் மாறுபட்டுள்ளது. **அவருக்குப் பயப்படுகிறவர்கள்மேல்** அது என்றென்றும் நிலைத்திருக்கும். அதனுடைய கால அளவு, கொள்ளளவு ஆகியவற்றில் அது எல்லைக்குட்படாதிருக்கிறது. **அவருடைய நீதி** அவர்களுடைய **பிள்ளைகளின் பிள்ளைகள்** மேலும் விரிவடைகிறது. இவ்வுண்மையில் மிகப் பெரிய ஆறுதல் உள்ளது. தீமை பெருகி வரும் இவ்வுலகில் வளரும் பிள்ளைகளையும் பேரப் பிள்ளைகளையும் குறித்து அவ்வப்போது கிறிஸ்தவப் பெற்றோர்கள் கவலைப்படுகிறார்கள். ஆனால், எல்லையற்ற அளவு அன்பும், நம்முடைய பிள்ளைகளுக்கு மட்டுமின்றி அடுத்து வருகின்ற தலைமுறையினருக்கும் போதுமான நீதியும் உள்ளவரிடத்தில் நமது சிறு குழந்தைகளைப் பாதுகாப்போடு நாம் ஒப்புவிக்கலாம். எனினும் இந்த உறுதிமொழிகள் ஒரு நிபந்தனையைக் கொண்டுள்ளன என்பது உண்மைதான். **அவருடைய உடன்படிக்கையைக் கைக்கொண்டு, அவருடைய கட்டளைகளின்படி செய்ய நினைக்கிறவர்களுக்கே** இவை பொருந்தும்.

103:19-22 கர்த்தரே அரசர். அவருடைய சிங்காசனம் வானங்களில் இருக்கிறது. அவருடைய அதிகாரம் இப்பிரபஞ்சம் முழுவதன் மேலும் உள்ளது. அவ்வாறிருக்க ஒவ்வொருவருடைய மற்றும் ஒவ்வொரு பொருளின் துதிக்கும் அவரே இலக்காக இருக்க வேண்டும். ஆகவே தாவீது பிரபஞ்சத்தின் மேடையில் ஏறி இப்பிரபஞ்சத்தின் பாடற் குழு அனைத்தையும் ஒன்றுகூட்டி கம்பீர தொனியில் இசைப் பெருவிழாவை முன்னின்று நடத்தி அவரை ஆராதிக்கிறான். முதலாவது, வல்லமை மிக்க மற்றும் கீழ்ப்படிதலுள்ள தேவதூதர்கள் வாழ்த்துப் பாடலைத் தொடங்கும்படி அவன் சைகை காட்டுகிறான். அதன் பிறகு கர்த்தருக்குப் பணிவிடைபுரிகிற அனைத்துப் படைப்புகளையும் கூட்டி அவற்றின் இனிய ஓசையை எழுப்பிப் புகழ்ச்சியைச் செலுத்தும்படி பணிக்கிறான். மகிமை நிறைந்த வகையில் இசையை இறைவனின் **கிரியைகள்** ஏறெடுக்க வேண்டுமென்பது அவனது அடுத்த கட்டளை. இவ்விதமாக மிக மேன்மையான அல்லேலூயா பாடலைப் பாடற் குழுவினர் தேவனுடைய ஆட்சியிலுள்ள அனைத்து இடங்களிலிருந்தும் பாடுகின்ற வேளையில், அக்குழுவின் தலைவன் கர்த்தரைப் புகழ்ந்து போற்றும்படி தனது தொனியையும் எழுப்புகிறான்.

தாவீது இங்கு இவ்விதமாகக் கூறுவதாக ஒருவர் கற்பனை செய்கிறார்:

படைப்பின் ஆரவார தொனியைக் கேட்டேன்
சொல்லொண்ணா மகிழ்ச்சி பெற்றேன்
தடையின்றிப் பாடிட அடிமையின் வாயினில்
சொல்மழை பொழியச் செய்தார்.

சங்கீதம் 104: படைப்பாளர், பராமரித்துத் தாங்குபவர்

பலகோடி மக்கள் குடியிருக்கும் நியூயார்க், லண்டன், டோக்கியோ போன்ற மாபெரும் நகரங்களைப் பராமரித்து நடத்துவது பற்றிய சிக்கல்களைச் சிந்தித்துப் பாருங்கள்; குடிநீர் வாரியம், வீட்டுவசதி வாரியம், உணவுக் கிடங்குகள் மற்றும் விநியோகம், இன்ன பிற இன்றியமையாத தேவைகளுக்கான வாரியங்கள் அனைத்தும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

நாம் வாழும் இவ்வுலகைப் பராமரிப்பதென்னும் இறைவனின் வேலை எண்ணற்ற சிக்கல்கள் நிறைந்தது என்னும் சிந்தனை நம்மை வியப்புக்குள் ஆழ்த்துகிறது. அவருடைய படைப்புகள் அனைத்திற்கும் தண்ணீர் வழங்க வேண்டும். மனிதர்கள், விலங்குகள், பறவைகள், மீன் இனங்கள் ஆகிய அனைத்திற்கும் உணவு வழங்குவதற்கான ஏற்பாடு செய்வது மிகக் கடினமானது. வீட்டு வசதிகள், குடியிருப்புகள் போன்ற ஏற்பாடுகளும் செய்யப்பட வேண்டும். இயற்கையென்னும் மிகப்பெரிய உலகைப் படைத்தவரும் பராமரிப்பவருமான இறைவனைக் குறித்துத் தியானிப்பதற்கான மேலான சிந்தனையை மேற்கூறப்பட்டுள்ள உண்மைகள் தருகின்றன.

104:1-3 பெயர் குறிப்பிடப்படாத பாடலாசிரியன் கர்த்தரை உயர்த்தித் துதிக்கும்படி தனது ஆவி ஆன்மா உடல்கூறுகள் அனைத்துக்கும் கட்டளையிட்ட வண்ணம் இறைவனின் மேன்மையான விவரங்களில் ஒன்றை எடுத்துரைக்கிறான்; இவ்வுண்மை மைக்கேல் ஏஞ்சலோ என்பாரையும் ஏவியிருக்கும். இதனை நாம் உருவக மொழியாகவே புரிந்துகொள்ள வேண்டும். அவ்வாறின்றி காணக்கூடாத இறைவனை எவ்வாறு நம்மால் விவரித்துக் கூறவியலும், அல்லது அவருடைய எல்லைக்குட்படா மேன்மையை எவ்வாறு வரையறைக்குட்பட்ட சொற்களால் விவரிக்க முடியும்?

பாடலாசிரியன் சற்று நிதானித்து உற்று நோக்கியவனாக வியந்து போற்றுகிறான்: **"என் தேவனாகிய கர்த்தாவே, நீர் மிகவும் பெரிய வராயிருக்கிறீர்!"** தொடர்ந்து இறைவன் தம்மை வெளிப்படுத்திய ஒரு தரிசனத்தின் விவரம் கொடுக்கப்பட்டுள்ளது. அவர் விவரித்துக் கூற வியலாத ஒளிச்சுடருடனும் மகத்துவத்துடனும் கூடிய உடைகளை அணிந்திருக்கிறார், அவரை ஒளி மூடிக்கொண்டிருக்கிறது. அ.ீ.து அவருடைய நிறைவான தூய்மைக்கும் நீதிக்கும் அடையாளமாகும். அவர் விண்மீன்கள் நிறைந்த வானத்தையும் வளிமண்டலத்தையும் திரையைப் போல விரிக்கிறார். அச்செயலின் மகத்துவத்தை நம்முடைய மனது எண்ணிப்பார்க்கிறபோது, அது குழப்பமடைகிறது. நீர் நிறைந்த மேகம் உலகை மூடியிருக்கிறது. அது வானத்தைக் கட்டும்படி நிறுவப்பட்ட தூண்களைத் தாங்குகிறது. காற்றைத் தனது செட்டைகளாகக் கொண்ட மேகங்களாலான யெகோவாவின் இரதம் வானங்களை ஊடுருவி விரைந்து செல்லுகிறது.

104:4 தம்முடைய தூதர்களைக் காற்றுகளாகவும், தம்முடைய ஊழியக்காரரை அக்கினி ஜ்வாலைகளாகவும் செய்கிறார். எபிரெய மொழியில் ஒரே சொல் காற்று, ஆவி ஆகிய இரண்டையும் குறிப்பிடுகிறது. மற்றொரு சொல் தேவ தூதரையும், செய்தி அறிவிப்பாளரையும் குறிப்பிடுகிறது. ஆகவே இந்த வசனத்தை, "அவர் காற்றைத் தமது செய்தி அறிவிப்பாளராகவும், அக்கினி ஜ்வாலையை ஊழியக்காரராகவும் செய்கிறார்" என்றும் மொழிபெயர்க்கலாம். இது மிக அழகான முறையில் இயற்கைப் பின்னணிக்குப் பொருத்தமாக விளங்குகிறது. ஆனால் எபிரெயர் 1:7 -இல் இந்த வசனம் மேற்கோளாக எடுத்தாளப்பட்டுள்ள பகுதியில் பாரம்பரிய மொழிபெயர்ப்பே பொருத்தமாகக் காணப்படுகிறது. (தமிழில் ஆவிகள் என்பதற்குப் பதிலாகக் காற்றுகள் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. கிரேக்க மொழியிலும் இரண்டு பொருட்களைக் கொண்ட இரண்டு சொற்கள் இந்த வசனத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன.)

104:5-9 இந்தச் சங்கீதத்தைப் படிக்கும் வேளையில், ஆதியாகமத்தில் முதல் அதிகாரம் விளக்கிக் கூறும் படைப்பின் நாட்களில் நாம் வாழ்கிறவர்களாகக் காணப்படுவோம். அங்கு சில நாட்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. வேறு சில நாட்கள் அவ்வளவு தெளிவாக இல்லை; எனினும் அந்நாட்களில் வாழும் உணர்வை நாம் பெறுவது உறுதி. இறைவன் தமது படைப்புகளுக்காக, குறிப்பாக மனிதனுடைய தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு, திட்டமிட்டு வைத்திருக்கும் அருட்கொடைகளைக் கண்டு பாடலாசிரியன் வியந்து போற்றுகிறான்.

முதலாவது, கண்களுக்குப் புலப்படாத ஆதாரங்களின் மேல் இறைவன்தாமே பூமியை உருவாக்கி வைத்திருப்பதை அவன் நினைவுபடுத்துகிறான். அவ்வாதரங்களே உயிரினங்கள் வாழ்வதற்கான நிலையான மேற்பரப்பைத் தந்திருக்கின்றன. தொடக்கத்தில் மலைகள் யாவும் மூழ்கத்தக்க அளவிற்குப் பூமி முழுவதும் நீரால் மூடப்பட்டிருந்தது. "ஆகாயத்தின் கீழுள்ள தண்ணீர் ஓரிடத்தில் சேர்ந்து, உலர்ந்த தரை தோன்றட்டும்" என்று இறைவன் மூன்றாவது நாளில் கூறினார் (ஆதி. 1:9 -இலகு தமிழ்). உடனடியாக நீரானது விரைந்து ஓடிச் சென்றது. மலைகளும் பள்ளத்தாக்குகளும் இறைவன் முன்நியமித்த தத்தம் இடங்களில் காட்சியளித்தன. கடல்களும், பெருங்கடல்களும் பூமியின் தரைப் பகுதிக்கு வரம்புமீறி நுழையாதபடி குறிப்பிட்ட எல்லைகளுக்குள் கட்டுப்படுத்தப்பட்டன.

104:10-13 அதன்பிறகு இறைவன் ஏற்படுத்திய வியத்தகு நீர்நிலை அமைப்புகள் செயல்படத் தொடங்கின. நீரூற்றுகள் பெருமளவில் நீரை வெளியேற்றத் தொடங்கின. சிற்றாறுகள் தோன்றி நீரானது பள்ளத்தாக்கை நோக்கிச் சென்றது, இறுதியில் அது கடலைச் சென்றடைந்தது. அது முதல் காட்டு விலங்குகள் நீரோடைகளிலும், ஆறுகளிலும், ஏரிகளிலும் நீரருந்தித் தங்களுடைய தாகத்தைத் தீர்த்துக்கொள்கின்றன. நீர்க்கால்களின் ஓரமாக வளரும் மரங்களில் பறவைகள் தங்களுடைய கூட்டைக் கட்டுகின்றன. நீர்வள அமைப்பின் மற்றொரு பகுதி மழை. "அவர் நீர்த்துளிகளை அணுவைப் போல ஏறப் பண்ணுகிறார். அவை மேகத்திலிருந்து மழையாய்ச் சொரிகிறது. அதை மேகங்கள் பெய்து மனிதர்மேல் மிகுதியாய்ப் பொழிகிறது" என்று எலிகூ இதனைக் கூறுகிறான் (யோபு 36:27,28). இவ்வாறு பொழிகிற நீர்த்துளிகள் மலைகளுக்கும் காடுகளுக்கும் நீர் பாய்ச்சுகின்றன. இறைவனின் பாசன வசதியால் பூமி நிறைவு பெற்றுள்ளது.

104:14,15 அடுத்தது உணவுத் துறை. அவர் கால்நடைகளுக்குப் புல் வகைகளையும் மனிதருக்குத் தானியங்களையும் உண்டுபண்ணி, அவற்றை மனிதன் பயிரிடும்படி செய்கிறார். பூமியில் உணவுப் பொருட்களின் உற்பத்தி மெதுவான, அமைதியான அதிசயத் தோற்றமாகக் காட்சியளிக்கிறது. திராட்சை ரசம் மதுபானமாக மாறும் செயல் வேதியியலின் வியத்தகு செயலாகும். அதனைப் பருகுகிற மனிதன் மகிழ்ந்து களிகூருகிறான். ஒலிவமரம் பொன்னிற எண்ணெயைத் தருகிறது, அதன் பயன்பாடு மிகுதி; அது உடல் நலம் தருவதோடு சுவை மிக்கதாகவும் இருக்கிறது. தானியம் அப்பமாக மாறுகிறது, அதுவே மனிதனுடைய வாழ்க்கைக்குத் தேவையான பிரதான உணவு. மேலும் அவனுடைய உழைப்புக்குத் தேவையான வலிமையை அது தருகிறது.

104:16-18 காடுகளிலுள்ள மிகப்பெரிய மரங்கள் நிலத்திலிருந்து பெருமளவில் நீரை உறிஞ்சுகின்றன. லீபனோனின் கேதுரு மரங்கள் மனிதன் நடாமலேயே வளருகின்றன. இவை பறவைகளுக்கு வீட்டு வசதியை ஏற்படுத்தித் தருகின்றன. எடுத்துக்காட்டாக, கொக்கு தேவதாரு மரத்தில் குடியிருக்கிறது (ஊசியிலை மரத்தையோ, கரும் பச்சையிலை கொண்ட ஜூனிபர் மரத்தையோ இது குறிக்கக்கூடும்). உயரமான மலைகள் **வரையாடுகளின்** ஏற்ற குடியிருப்பு, பாறைகள் **குழிமுயல்களுக்கான** வீடுகள்.

104:19-23 கால அட்டவணையின்படியும், ஒரே விதமான சுழற்சியின்படியும் வாழ்க்கை தொடருகிறது, ஆகவே காலத்தை அளவிட ஏதேனும் ஒரு வழிமுறை இருக்க வேண்டும். அதற்காகவே இறைவன் மாதங்களைக் குறிக்கும்படி **சந்திரனை** அதனுடைய இடத்தில் வைத்தார்; **சூரியனையும்** அவ்வாறு வைத்து, எப்பொழுது உதிக்க வேண்டும் எப்பொழுது மறைய வேண்டும் என்பதை அறிவதற்கான அறிவு இருக்குமாப்போல் செய்து ஒவ்வொரு நாளுக்கும் முடிவைக் குறிக்கும்படி செய்தார். பகலும் இரவும் மாறிமாறி வருவது விலங்குகளுக்கும் மனிதர்களுக்கும் அருளப்பட்ட இறைவனுடைய ஈவே ஆகும். இரவின் இருளுக்குள்ளே விலங்குகள் தங்களுடைய இரையைத் தேடித் திரிகின்றன. காலை புலருகிற போது அவை தங்களுடைய பாதுகாப்பைக் கருதிக் குகைகளுக்குள் சென்றுவிடுகின்றன. ஆனால் மனிதனோ தனது வேலையைச் செய்யும்படி வெளியே சென்று, உற்பத்தி செய்வதற்கான உழைப்பில் ஈடுபட்டு, பகல் முழுவதையும் பயன்படுத்துகிறான்.

104:24-26 இறைவனுடைய **கிரியைகள்** பல வகைப்பட்டதாயிருப்பது நம்மைத் திகைக்கச் செய்கிறது. "அவை எல்லாவற்றையும் வடிவமைத்த ஞானம் எவ்வளவு மேன்மையானது" (நாக்ஸ்). **பூமி** அவருடைய படைப்புகளால் **நிறைந்திருக்கிறது**. வியக்கத்தக்க வகையில் அவர் ஒவ்வொரு உயிரையும் மிகுந்த கவனத்தோடு நடத்தி வருகிறார். கடல் உயிரினங்களால்

நிறைந்திருக்கிறது. நுண்ணுயிர் முதல் பெரிய திமிங்கலம் வரை **சிறியவையும் பெரியவையும்** கடலில் வாழ்கின்றன.

உயிர்வாழ் இனங்களைக் குறித்த விவரத்தின் நடுவே **கப்பல்களைப்** பற்றிய குறிப்பு தொடர் பற்றதாகக் காணப்படுகிறது. சிலர் இதனை மகா மச்சங்கள் (பயங்கரமான உருவமுடையவை) என்று கருதுகிறார்கள் (ஆதி. 1:21), ஆனால் கப்பல் என்பதே சரியான சொல். திமிங்கலங்கள் அல்லது கடல் பன்றிகளுடைய கோமாளித்தன மான விளையாட்டுக்குக் கடலே தகுதியான இடம் (ஆங்கிலத்தில் லிவியாதான் என்று குறிப்பிடப்பட் டுள்ளது. யோபு 41 -ஆவது அதிகாரத்தில் கொடுக் கப்பட்டுள்ள அடிக்குறிப்பைக் காண்க).

104:27-30 அவற்றிற்கு அவ்வகை உணர்வு இல்லையெனினும், உயிர்வாழ் இனங்கள் யாவும் தங்களுடைய உணவுக்கு இறைவனையே சார்ந் திருக்கின்றன. அவர் அதைத் தருகிறபோது, அவை வாங்கிக்கொள்கின்றன. அவர் தமது கையைத் திறக்கிறார், அவை முழுமையாக நிறைவடைகின்றன. இறைவன் மழையை அனுப்பு கிறார், அதன் விளைவாகப் பூமி நிறைவடைகிறது என்று 13 - ஆவது வசனம் கூறுகிறது. மரங்கள் யாவும் நீரை உறிஞ்சி நிறைவாயிருக்கின்றன என்று 16 - ஆவது வசனம் கூறுகிறது. இப்பொழுது எல்லாப் படைப்புகளும் நிறைவாயிருக்கின்றன என்று சொல்லப்படுகிறது.

இறைவனுடைய நிருவாகத்தில் ஒரு தலை முறை மரணத்தால் தாக்குண்டு மறைகிறது, மற் றொரு புதிய தலைமுறை அந்த இடத்தை நிரப்பும் படி எழுகிறது. விலங்குகள் வன்முறையால் அல் லது வயது முதிர்ச்சியால் சாகும்போது, இறை வன் தமது முகத்தை மறைத்துக்கொள்வது போல இருக்கிறது. ஆனால் மனிதர்கள் **மாண்டு மண்ணுக்குத் திரும்புகிறபோது**, இறைவன் தமது ஆவியை அனுப்பி, பூமியை மனிதர்களால் நிரப்பிப் புதிய படைப்பு போலக் காணச் செய் கிறார். ஒருபுறம் தொடர்ச்சியாக அழிவு ஏற்பட்டுக் கொண்டேயிருக்கிறது, மறுபுறம் **பூமியின் ரூபம்** தொடர்ச்சியாக புத்துயிர் பெற்றுக்கொண்டே யிருக்கிறது.

104:31,32 இப்பாடல் படைப்பின் தொடக்கத்தைக் குறித்த விவரத்தோடு தொடங்குகிறதுபோல, பாவத்தின் நாசம் அடக்கப்பட்டு, கர்த்தருடைய மேன்மை தயவு ஆகியவற்றின் நிமித்தம் அவ ருக்குக் கனமும் மகிமையும் செலுத்தப்படுவதற் கான ஆர்வமிக்க மன்றாட்டுடன் முடிவடைகிறது.

> அனைத்தும் முன்னிருந்த நிலைக்குத் திரும்ப வேண்டுமென்று, வல்லமைமிக்க சீரமைப்பின் பங்காகத் தானும் இறைவனுடைய படைப்புகள் யாவும் அதில் காணப்பட வேண்டுமென்று, இறைவனின் இளைப்பாறுதலாகிய படைப்பின் புதியதோர் ஓய்வுநாள் உதிக்க வேண்டு மென்று, அவர் தமது படைப்புகளிலும் அவை அவரிலும் களிகூர வேண்டுமென்று, உலகம் துதியின் பாடலால் நிறைந்து ஆலயமாக விளங்க வேண்டுமென்று பாடலாசிரியன் வாஞ் சிக்கிறான்.[70]

கர்த்தரைக் குறித்தோ, அவருடைய **மகிமை என்றென்றும்** நிலைத்திருக்க வேண்டும், அவர் **தம்முடைய கிரியைகளில்** மகிழ்ந்திருக்க வேண் டும் என்பதே பாடலாசிரியனின் மன்றாட்டு - மாபெரும் இறைவனின் பார்வை பூமியதிர்ச்சியை உண்டாக்கும். அவருடைய தொடுதல் எரிமலை களை எழுப்பும்.

104:33-35 தன்னைக் குறித்து, தான் உயி ரோடிருக்கும்வரை இறைவனுடைய மேதகைமை களைப் பாட வேண்டுமென்பதே புனித பாடலாசி ரியனின் தீர்மானமாகும். அவனுடைய தியானம் யெகோவாவுக்கு இனிமையாக இருக்க வேண் டும், அவருக்குள்ளாக அவன் மகிழ்ந்திருக்க வேண்டும். இதுவே அவனுடைய விண்ணப்பம்.

தேவனுடைய படைப்புகளை அழித்துப் போடும் பாவிகளைக் குறித்தோ, அவர்கள் பூமியிலிருந்து அகற்றப்படுவதில் நன்னெறி நேர்மை விளங்குவ தாகப் பாடலாசிரியன் காண்கிறான். இறைவன் ஏற்கனவே அவ்வாறு நடைபெறும் என்று ஆணை யிட்டிருக்கிறார், ஆகவே பாடலாசிரியனின் விண் ணப்பம் தெய்வீக விருப்பத்திற்கு ஒத்திருக்கிறது.

நம்மைப் பொறுத்தவரை, பாடலாசிரியனின் இறுதிப் புகழுரையோடு நாமும் இணைந்து புகழ்ச் சியை ஏறெடுக்கலாம்:

என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி,

அல்லேலூயா!

சங்கீதம் 105: ஆபிரகாமுடனான உடன்படிக்கை

இறைவன் ஆபிரகாமுடன் செய்த உடன்படிக் கையில், எகிப்து ஆறு முதல் ஐபிராத்து ஆறு வரை யிலான நாட்டை அவனுடைய வழித் தோன்றலுக்குத் தருவதாக வாக்களித்தார் (ஆதி. 15:18-21; யாத். 23:31; உபா. 1:7,8; யோசுவா 1:4). அது நிபந்தனையற்ற வாக்குறுதி, முழுவதும்

கிருபையிலான உடன்படிக்கை. எல்லாம் இறை வனையே சார்ந்தது, மனிதனுடைய பங்கு எதுவு மில்லை.

இறைவன் அந்த உடன்படிக்கையைச் செய்த காலம் முதல், இஸ்ரவேல் மக்களை அவர் வாக் குறுதி செய்த நாட்டுக்கு அழைத்துச் சென்ற காலம் வரை அவர் செய்த அனைத்துச் செயல் களையும் இப்பாடல் மிகுந்த உற்சாகத்துடன் மீண்டும் எடுத்துரைக்கிறது. இறைவன் செய்தவற் றிற்கே எல்லா முதன்மையும் இப்பாடலில் கொடுக் கப்பட்டுள்ளது. இஸ்ரவேலின் பாவங்களைக் குறித்தோ, அதன் பின்மாற்றங்களைக் குறித்தோ பல வரலாற்றுச் சங்கீதங்களைப் போலவே, இதிலும் ஒன்றும் சொல்லப்படவில்லை.

உண்மையில் இதுகாறும் ஒருமுறைகூட வாக் குறுதி செய்யப்பட்ட நாட்டின் எல்லைகள் அனைத் தையும் இஸ்ரவேல் கைப்பற்றவில்லை. சாலொ மோனின் ஆட்சியின்போது மட்டுமே இதில் பெரும் பான்மை இடத்தை இஸ்ரவேல் பெற்றிருந்தது. எகிப்தின் எல்லை தொடங்கி ஐபிராத்து ஆறு வரை யிலும் இருந்த நாடுகளை அவன் ஆளுகை செய்த போதிலும், யூதா மக்களும் இஸ்ரவேல் மக்களும் தாண் முதல் பெயர்செபா வரை மட்டுமே குடி யிருந்தார்கள் (1 இராஜா. 4:21-25). ஆனால், இஸ்ர வேலின் மேசியா தமது வல்லமையோடும் மகிமை யோடும் திரும்ப வருகிறபோது, ஆபிரகாமுக்கு இறைவன் வாக்குறுதி செய்த எல்லா இடத்தை யும் இஸ்ரவேலுக்குக் கொடுத்து அதன் எல்லை களை விரிவுபடுத்துவார். அந்நாள் வருகிறபோது, விசுவாசிக்கும் இஸ்ரவேல் இப்பாடலைப் புதிய ஏவுதலோடும் புரிதலோடும் பாடும்.

நன்றிகூறி, புகழ்ந்து போற்றுங்கள் (105:1-6)

பல சங்கீதங்கள் தாழ்வான ஓசையுடன் தொடங்கி, பெருத்த ஓசையுடன் கூடிய ஆராத னையை எட்டுகின்றன. ஆனால் இந்தச் சங் கீதமோ மெய்யான பெருத்த ஓசையுடன் கூடிய புகழ்ச்சியாகத் தொடங்கி, அதனுடைய சொல்வன்மை மிக்க முறையீட்டினாலே வாச கரைக் கவர்ந்திழுக்கிறது. வழிபாட்டை உற் சாகப்படுத்தும் நோக்கத்துடன் கட்டளை பிறப் பிக்கும் வகையில் பல்வேறு வகையான வினைச்சொற்கள் இங்கு பயன்படுத்தப்பட் டுள்ளன என்பதைக் கவனியுங்கள்:

கர்த்தருக்கு *நன்றி செலுத்தி,* **அவருடைய பெயரைச் சொல்லி** *வழிபடுங்கள்;* **அவர் செய்தவற்றை எல்லா இனங்களுக்கும் மத்தியில்** *அறியப்பண்ணுங்கள்.*

அவரைப் *பாடுங்கள்,* **அவருக்குத்** *துதி பாடுங்கள்;* **அவருடைய புதுமையான செயல் களையெல்லாம்** *எடுத்துச்சொல்லுங்கள்.*

அவருடைய பரிசுத்த பெயரில் *பெருமிதம் கொள்ளுங்கள்;* **கர்த்தரைத் தேடுகிறவர் களின் இருதயங்கள்** *மகிழ்வதாக.*

கர்த்தரையும் அவர் வல்லமையையும் *நோக்கிப் பாருங்கள்;* **எப்பொழுதும் அவர் முகத்தையே** *தேடுங்கள்.*

அவர் செய்த அதிசயங்களையும், அவரு டைய அற்புதங்களையும் அவர் கொடுத்த நியாயத்தீர்ப்புகளையும் *நினைவிற்கொள் ளுங்கள்.*

அவருடைய அடியவனாகிய ஆபிரகாமின் சந்ததிகளே! யாக்கோபின் மகன்களே! அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களே! இவற்றை *நினைவிற்கொள்ளுங்கள்*–(இலகுதமிழ்).

ஆபிரகாமுடன் அவர் செய்த உடன் படிக்கை (105:7-11)

105:7,8 பாடலாசிரியனின் பூரிப்பிற்கான நேரடி யான காரணம் ஆபிரகாமுடன் கர்த்தர் செய்த **உடன்படிக்கையே**யாகும் (ஆதி. 12:7; 13:14-17; 15:7,18-21; 17:8; 22:17,18; யாத். 32:13). அவ்வாறு உடன்படிக்கை செய்தவர் **நம்முடைய தேவனா கிய கர்த்தர்**. அவருடைய நீதியுள்ள செயல்கள் **பூமியெங்கும்** காணப்படும். அவருடைய வாக் குறுதிகள் நிறைவேற **ஆயிரம் தலைமுறைகள்** காலதாமதம் ஏற்பட்டாலும், அவர் அவற்றை ஒருக்காலும் மறக்க மாட்டார். அவர் செய்த வாக் குறுதிகள் யாவும், ஏற்கனவே நடந்து முடிந்தாற் போல நிச்சயமானவை.

105:9-11 அவ்வுடன்படிக்கை முதலாவது ஆபிரகாமுடன் பண்ணப்பட்டது (ஆதி. 12:1-20), பின்னர் **ஈசாக்குக்கு** உறுதிசெய்யப்பட்டது (ஆதி. 26:3,4), அதன் பிறகு சிறிது காலம் கழித்து **யாக் கோபுக்கு உறுதிப்படுத்தப்பட்டது** (ஆதி. 28:13-15). பொய் கூறவியலாத இறைவனுடைய சொல்லே அவ்வுடன்படிக்கை. அதனடிப்படையில் அவருடைய பூமிக்குரிய மக்களுக்கு **கானான் தேசம் சுதந்தர பாகமாக** உறுதிசெய்யப்பட்டது.

தொடர்ந்து நிகழ்ந்த இஸ்ரவேலின் வரலாற் றில், தேவன் எவ்வாறு எல்லாத் தடைகளையும் நீக்கி, எதிரிகளைத் தோற்கடித்துத் தமது சொற் களை நிறைவேற்றினார் என்பதை நாம் காண் கிறோம்.

இஸ்ரவேல் நாட்டின் குழந்தைப் பருவம் (105:12-15)

அவர்கள் மெசொப்பொத்தாமியாவிலிருந்து கானானுக்கு வந்தபோது எவ்விதப் பாதுகாப்பும் இல்லாமல் வெகு சிலராக, அங்கு குடியேறிய வேறு நாட்டு மக்களாக இருந்தார்கள். அந்தத் தொடக்க நாட்களில் அவர்கள் பெரும்பாலும் அங்குமிங்கும் பயணம் செய்தார்கள். அவர்கள் உள்நாட்டில் மட்டுமின்றி வெளிநாடுகளிலும் பயணம் மேற்கொண்டார்கள் (ஆதி. 12:1-13; 20:1-18; 28:1-29:35). ஆனாலும் தேவன்தாமே அவர்களை ஆபத்துகளிலிருந்தும் கொடுமைகளிலிருந்தும் பாதுகாத்தார். மேலும் பார்வோன் அபிமெலேக்கு போன்ற அரசர்களையும் அவர்கள் நிமித்தம் அவர் கடிந்துகொண்டார் (ஆதி. 12:17-20; 20:1-18; 26:6-11). அப்புறவின அரசர்களிடம், "என்னால் தெரிந்தெடுக்கப்பட்ட மக்களை உங்களால் தொட முடியுமா? என்னுடைய தீர்க்கதரிசிகளுக்கு எந்தத் தீங்கும் செய்யாதீர்கள் - இந்த முற்பிதாக்களுக்கு நேரடியான வெளிப்பாட்டை நான் அருளியிருக்கிறேன்" என்னும் பொருள்பட அவர் பேசினார்.

எகிப்து நாட்டின் ஆளுநராக யோசேப்பு உயர்த்தப்படுதல் (105:16-22)

காலம் கடந்தது, கானான் நாட்டில் கொடிய **பஞ்சம்** ஏற்பட்டது. **ஆகாரம்** முற்றிலும் தீர்ந்து போய்விட்டது. வாழ்க்கைக்குத் தேவையான முதன்மையான ஆதாரம் இல்லாமற் போயிற்று. தேவன்தாமே கொடிய பஞ்சத்தை வருவித்து, **ஆகாரமென்னும் ஆதரவுகோலை முற்றிலும் முறித்தார்**; இந்நிகழ்ச்சிகள் யாவும் நடைபெறும்படி தேவன் அனுமதித்தார் என்பதே இதன் பொருள். தேவன் ஒருபோதும் பொல்லாங்கைத் தோற்றுவிக்கிறதில்லை. ஆனால் சில நேரங்களில் அவர் அதை அனுமதிக்கிறார், பின்னர் அதைத் தமது மகிமைக்கென்றும் தம்முடைய மக்களுடைய நன்மைக்கென்றும் மாற்றுகிறார். இந்தத் திருப்புமுனைக்கான தேவ மனிதன் **யோசேப்பு.** உடன் பிறந்தோரால் வெறுக்கப்பட்டு, எகிப்துக்கு அடிமையாக **விற்கப்பட்டான்.** கெடுநோக்குள்ள பெண் ஒருத்தியால் அவன் அங்கு தவறாகக் குற்றஞ்சாட்டப்பட்டு, சிறைக்குள் தள்ளப்பட்டான் (ஆதி. 39:20). வேறு எங்கும் குறிப்பிடப்படாத சிறைச்சாலையைப் பற்றிய விவரம் 18 -ஆவது வசனத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. **"அவன் கால்களை விலங்கு போட்டு ஒடுக்கினார்கள்; அவன் பிராணன் இரும்பில் அடைபட்டிருந்தது."** சிறையில் இருந்த இரண்டாண்டுக் காலத்தில், கனவுகளுக்குப் பொருள் கூறவும் எதிர்காலத்தை முன்னறிந்து கூறவும் கூடிய திறமையை அவன் பெறும்படி **கர்த்தருடைய வசனம் அவனைப் புடமிட்டது**. கடைசியில், அவனுடைய திறமை பார்வோனின் பார்வைக்குக் கொண்டுவரப்பட்டது, அவனே யோசேப்பை விடுதலை பண்ணினான். மேலும் ஆட்சியின் இரண்டாவது இடத்திற்கு அவன் உயர்த்தப்பட்டான். தேவைப்பட்டால் எகிப்தின் பிரபுக்களையும் கட்டுவதற்கான அதிகாரத்தைப் பெற்றிருந்தான். மேலும் தன்னைக் காட்டிலும் வயது முதிர்ந்தவர்களுக்கு அறிவுரை வழங்குவதற்கான ஞானத்தையும் அவன் பெற்றிருந்தான்.

யாக்கோபும் அவன் வீட்டாரும் எகிப்துக்குக் குடியேறுதல் (105:23-25)

யோசேப்பின் குடும்பத்தார் எகிப்துக்குக் குடியேறிய நிகழ்வே அதனால் விளைந்த பயன். ஆண்டுகள் பல சென்றபின் அவர்கள் எண்ணிக்கையிலும், வளத்திலும், இராணுவ வலிமையிலும் பெருகினார்கள். ஆனால் தேவனுடைய நிருவாகமோ வேறுவிதமாக இருந்தது. எகிப்தியர் யூதர்களுக்கு எதிராக வெறித்தனமான செயல்களில் ஈடுபடும்படியும் அவர்களை ஒடுக்கி ஏமாற்றும்படியும் செயல்பட அனுமதிக்கப்பட்டார்கள்.

மோசேயும் எகிப்தின் கொள்ளை நோய்களும் (105:26-36)

105:26,27 இந்தக் கட்டத்தில் பார்வோனுடைய முன்னிலையில் நின்று அடிமைப்படுத்தப்பட்ட தேவனுடைய மக்களை விடுதலை செய்ய வேண்டுமென்று கோரிக்கை எழுப்புவதற்கு, தேவன் மோசேயையும் அவனுக்குத் துணையாக ஆரோனையும் எழுப்பினார். அவ்வாறு விடுத்த கோரிக்கைகள், மன்னனின் எதிர்ப்பைத் தகர்த்து எறியும்படி அமைக்கப்பெற்ற தொடர்ச்சியான கொள்ளை நோய்களால் அழுத்தமாய் எடுத்துரைக்கப்பட்டன.

இங்கு அப்பொழுது நடந்த கொள்ளை நோய்களின் விவரம் வகைப்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. அவை காலவரிசையில் சொல்லப்படவில்லை, மேலும் ஐந்து மற்றும் ஆறு ஆகிய கொள்ளை நோய்கள் குறிப்பிடப்படவில்லை.

105:28 நாடு முழுவதும் தேவன் இருளை அனுப்பினார் (கொள்ளைநோய் - 9). பாடலாசிரியன் இங்கு ஒரு புதிரைச் சேர்த்துக் கூறுகிறான், **"அவருடைய வார்த்தைகளை எதிர்ப்பாரில்லை."**

இதில் ஏற்படுகின்ற சிக்கலைத் தீர்க்க "அவருடைய வார்த்தைகளை அவர்கள் எதிர்த்து நின்றார்கள்" என்று RSV மொழிபெயர்ப்பாளர்கள் மாற்றி எழுதினார்கள். எனினும் மூலப்பிரதிகளில் இதற்கான ஆதாரம் எதுவும் இல்லை. கர்த்தர் கட்டளையிட அவருடைய சொற்களுக்கு மோசேயும் ஆரோனும் எதிர்த்து நிற்கவில்லை என்று திருவாளர் பார்னஸ் இதற்குப் பொருள் கூறுகிறார். இருள் மிகக் கடுமையாயிருந்தது, ஆகவே எகிப்தியர் அதைத் தடுத்து நிறுத்த வகையற்றிருந்தார்கள் என்றும் இதற்குப் பொருள் கூறலாம்.

105:29-31 தேவன் அவர்களுடைய நீர்நிலைகளை இரத்தமாக மாற்றி, மீன்களையெல்லாம் அழித்துவிட்டார் (கொள்ளைநோய் - 1). சுற்றுப்புற மாசு கேடுற்றிருந்த நிலையை இது குறிக்கிறது.

அடுத்ததாகச் சொல்லப்பட்டுள்ள கொள்ளை நோய் தவளைகளால் ஏற்பட்டது (கொள்ளை நோய் - 2). எல்லா இடங்களிலும் தவளைகள். அடுக்களையிலும் தவளை, முற்றத்திலும் தவளை. அரசனின் பள்ளியறையையும் அந்தத் தந்திரமான படைப்பு விட்டுவைக்கவில்லை. அங்கு இவை தாவிக் குறித்து கரகரப்பான குரலில் சத்தம் எழுப்பியதைத் தடுக்க வழியேதுமில்லை!

கர்த்தர் ஒரே ஒரு சொல்லைச் சொன்னார், நாடு முழுவதும் வண்டுக்கூட்டங்களாலும், மேகம் போன்ற ஈக்கூட்டங்களாலும் (அல்லது பேன்) நிறைந்தது (கொள்ளை நோய் - 3).

105:32-36 மழைக்குப் பதிலாக அழிவுண்டாக்கக் கூடிய **கல்மழையையும்** மின்னல்களையும் அவர் அனுப்பினார் (கொள்ளை நோய் - 7). பெரிய பந்துகள் போல் அக்கினி பறந்து வந்து தாக்கிய தால் திராட்சைத் தோட்டங்களும், அத்திமரங்களும் சிதறடிக்கப்பட்டன. இந்தக் கொள்ளை நோய் மனிதர்களைக் காயப்படுத்தியது மட்டுமின்றி சிலரைக் கொன்றும் போட்டது (யாத். 9:25).

அதன் பிறகு வெட்டுக்கிளிகள் வந்தன. அவை போர்த்தாக்குதல் செய்யும் இராணுவ வீரர்களைப் போலவந்தன. அவை முன்னேறி வந்தபோது எல்லாவிதமான பயிர்களையும் தின்றுவிட்டன, எல்லாம் தரிசு நிலம் போலாயின (கொள்ளை நோய் - 8).

இந்தக் கொள்ளைநோய்கள் யாவும் நோக்கத்தை நிறைவேற்றவில்லை, ஆகவே தேவன் எகிப்தின் தலைப்பிள்ளைகளையும் விலங்குகளின் முதற்பேற்றையும் அழித்தார் (கொள்ளை நோய் -10). அந்த இரவு நினைவுகூர வேண்டிய இரவு - எகிப்தியரின் வீடுகளில் பெருமை பாராட்டத்தக்க யாவும் அழிக்கப்பட்டன.

புறப்பாடு (105:37,38)

யூதர்கள் எகிப்துக்கு வந்தபோது வைத்திருந்த பொன்னையும் வெள்ளியையும் காட்டிலும் திரும்பும்போது மிக அதிகமான அளவு எடுத்துச் சென்றார்கள்; அவர்கள் அங்கிருந்து போனால் போதும் என்று எண்ணிய எகிப்தியர் அவர்கள் விரும்பிய எல்லாவற்றையும் கொடுத்தார்கள் (யாத். 12:33-36). கொள்ளை நோய்கள் எகிப்தியரைத் தாக்கிப் பேரிடரை ஏற்படுத்திய போதிலும், இஸ்ரவேலர் சிறிதும் பாதிப்படையவில்லை. அவர்கள் பயணம் செய்வதற்கான நல்ல நிலையில் இருந்தார்கள். ஒருவனும் பின்னடைய வில்லை. அங்கு தங்கிவிடவும் இல்லை.

அவர்கள் புறப்பட்டபோது எகிப்தியர் பெருமளவில் உளவமைதி பெற்றார்கள். அவர்களைக் குறித்து எகிப்தியருக்கு பேரச்சம் உண்டாயிருந்தது.

பாலைவனப் பயணம் (105:39-42)

பாலைவனப் பயணத்தின்போது தேவன் தமது மக்களுக்கு ஏற்படுத்தி வைத்திருந்த அருட்கொடை வியத்தகு வகையில் அமைந்திருந்தது. அவர் அருளிய மேகம் அவர்களுக்கு வழிகாட்டினது மட்டுமின்றி (யாத். 13:21), புகைமண்டலம் போல விளங்கி எதிரிகளிடமிருந்து பாதுகாப்பையும் அளித்தது (யாத். 14:19,20). அது இரவில் அக்கினித் தூணாக மாறி, பயணத்துக்குத் தேவையான வெளிச்சத்தைத் தந்தது. அவர்களுக்கு உணவு தேவைப்பட்ட போது அவர் மிகவும் சிறப்பானதைத் தந்தார் - பெருமளவில் **காடையைத்** தந்தார், **வானத்து அப்பமாகிய** அதிசய மன்னாவை வழங்கினார். அவர்களுக்குத் **தண்ணீர்** தேவைப்பட்டது, அப்பொழுது அவர் **கன்மலையைத் திறந்தார்**, **தண்ணீர்** வேகமாகப் **புறப்பட்டு வந்தது**. அவர்களுடைய தேவை யாவும் நிறைவு செய்யப்பட்ட பின்னர், பாலைவனத்தில் ஆறு உருவாகும் அளவிற்கு நீர் போதுமானதாயிருந்தது. யெகோவா இவ்வித மாக மிகுந்த அக்கறையுடன் அருளியது ஏன்? அவர் **தமது தாசனாகிய ஆபிரகாமுக்குக்** கொடுத்த **பரிசுத்த வாக்குத்தத்தத்தை** மறக்க இயலாததே அதன் காரணம்.

இறுதியில் சொந்த நாட்டைச் சென்றடைதல் (105:43-45)

அது மிகப்பெரிய விடுதலை, விவரிக்க இயலாத **களிப்பும்** பாடலும் உடன் இணைந்தன.

கானானில் வாழ்ந்த புறவினத்தாரை அங்கிருந்து அகற்றி, யெகோவா அங்கு அழைத்து வந்த தமது மக்களுக்கு அந்நாட்டை வழங்கினார். எல்லாம் அவர்களுக்கு ஆயத்தப்பட்டிருந்தன. புறவினத் தாரின் உழைப்பின் பயனை அவர்கள் அறுவடை செய்தார்கள்.

அவருடைய மக்கள் அவருக்குக் கீழ்ப்படிந்து, அவருடைய கட்டளைகளைக் காத்து நடக்க வேண்டுமென்பது தெய்வீக நோக்கம் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. அவர்களுக்கு அந்த நாடு அளிக்கப்பட்டதன் கால அளவு, அவர்களுடைய கீழ்ப்படிதலுக்கு ஏற்ப நிபந்தனைக்கு உட்பட்டதா யிருந்தது (லேவி. 26:27-33; உபா. 28:63-68; 30;19,20).

சங்கீதத்தின் 44 -ஆவது வசனம் திட்டமிட்ட உச்சகட்டத்தை வெளிப்படுத்துகிறது. இந்நிலை யையே தேவன் எல்லாக் காலங்களிலும் தமது நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறார்.

நம்மைக் குறித்தும் இது உண்மையாயிருக் கிறது. அந்த வசனத்தின்படி நாம் வாழவேண்டும் என்பதற்காக தேவன் நம்மை அவருடைய பிள் ளைகளாக உரிமைபாராட்டிச் சொந்தமாக்கிக் கொண்டார்.

தமது கட்டளைகளைக் காத்து நடக்கும் படிக்கும், தமது நியாயப்பிரமாணங்களைக் கைக்கொள்ளும்படிக்கும்.. அல்லேலூயா.

சங்கீதம் 106: வரலாறு புகட்டும் பாடம்

"இறைவன் தம்மைக்குறித்து வெளிப்படுத்து வதே அல்லாமல் வரலாறு என்பது வேறு என்ன?" என்று திருவாளர் க்ராம்வெல் கேட்டார். இச் சங்கீதத்தின் ஆசிரியன் அதனை உடனடியாக ஒப்புக்கொண்டிருப்பான். ஏனெனில் அவன் தன்னு டைய இனத்தாரின் வரலாற்றில் தயவு, பொறுமை மற்றும் நீடித்த அன்பு ஆகியவற்றை வெளிப் படுத்தும் இறைவனாக யெகோவாவைக் கண்டான்.

இப்பாடலாசிரியன் யார் என்பதை நம்மால் சொல்ல முடியாது. எனினும் அவன் பக்தி நிறைந்த யூதன் என்பதையும், இஸ்ரவேல் மக்கள் அடிமை களாக இருந்த காலத்தில் இப்பாடலை அவன் எழுதினான் என்பதையும் நாம் அறிவோம் (வச. 47). தேசத்தின் பாவம் அறிக்கை செய்யப்படுதலே இச்சங்கீதத்தின் முதன்மையான பொருள் (வச. 6-46), ஆயினும் இதில் புகழ்ச்சி செலுத்தப்படுதலும் (வச. 1-3, 48) மன்றாட்டு ஏறெடுக்கப்படுதலும் (வச. 4,5,47) இடம் பெற்றுள்ளன.

புகழ்ச்சி (106:1-3)

106:1 பாடலாசிரியன் இறைவனை அணுகுகிற போது புகழ்ச்சியைச் செலுத்திய வண்ணம் வரு கிறான்; அவன் தெய்வீக வாசல்களை நன்றி பாராட்டுதலுடன் நெருங்குகிறான்; புனித பிரா காரங்களில் துதிசெலுத்திய வண்ணம் நுழை கிறான். **"அல்லேலூயா."** இதன் பொருள் "கர்த்த ருக்கு ஸ்தோத்திரம்" என்பதாகும். இச்சொல்லுட னேயே இப்பாடல் தொடங்குகிறது, முடிவு பெறு கிறது.

முடிவுறா வண்ணம் **கர்த்தருக்கு** நன்றிபாராட் டுதல் தொடங்கவேண்டும். ஏனெனில் அவர் நம் ஒவ்வொருவருக்கும் பெருமளவு நன்மை செய் திருக்கிறார். அவருடைய **கிருபை என்றுமுள் ளது**. நாம் தொடர்ந்து உயிரோடு இருப்பதே அதனை மெய்ப்பிக்கிறது. நமக்கு உரியதை நாம் பெற்றிருப்போமெனில், நாம் என்றென்றைக்கு மாக இழந்து போனவர்களாகக் காணப்படுவோம்.

106:2,3 தேவன் தமது மக்களின் பொருட்டு அற்புதமான வகையில் குறுக்கிட்டுச் செய்த செயல்களைச் சொல்ல வேண்டுமெனில், மனித நாவுகளால் அவற்றைச் சொல்லித் தீர்க்க முடி யாது. அவர் யார் என்பதற்காகவும் அவர் செய்து முடித்த செயல்களுக்காகவும் துதிகளைச் செலுத்துவதற்கு நித்திய காலம் முழுவதும் போதாது.

கர்த்தாவே, என்னை நினைவுகூரும் (106:4,5)

துதி செலுத்திய பின்னர், தனிப்பட்ட வேண்டு தல் சமர்ப்பிக்கப்படுகிறது. இஸ்ரவேல் புதுப்பிக்கப் படுதலையும், மேசியா அரசரின் மகிமை நிறைந்த அரசு நிறுவப்படுதலையும் எதிர்நோக்கிய பாடலா சிரியன் ஆசிர்வதிக்கப்பட்ட அந்நாளில் அவர் தம் மால் மீட்கப்பட்ட பரிசுத்தவான்களுக்குத் தயவு பாராட்டுகிற வேளையில் தானும் அதில் பங்கு பெற வேண்டும் என மன்றாடுகிறான். இஸ்ரவேல் தனது நீண்டகாலத் துக்கத்தின் இரவுக்குப் பிறகு தடை எதுவும் இல்லாத செல்வ வளத்தையும் மகிழ்ச்சியையும் பெற வேண்டுமென்று அவன் வாஞ்சிக்கிறான். தேவனுடைய பண்டைய கால மக்கள் பெறுகிற மகிமையில் தானும் பங்குபெற வேண்டுமென்று அவன் விரும்புகிறான். "ஆண்ட வரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்" என்று மரணமடை யும் தறுவாயில் கள்ளன் ஏறெடுத்த வேண்டுதலி லிருந்து இப்பாடலாசிரியனின் மன்றாட்டு வேறுபட் டது அன்று (லூக்கா 23:42).

செங்கடல் கலகம் (106:6-12)

சங்கீதம் இப்பொழுது, கர்த்தருடைய ஜெபத்தைப் போலவே, அறிக்கையை நோக்கிச் செல்கிறது. இரண்டும் துதி செலுத்துதலுடன் தொடங்குகின்றன, விண்ணப்பத்தை நோக்கிச் செல்கின்றன ("அன்றன்று அப்பத்தை எங்களுக்குத் தாரும்") அதன் பிறகு மன்னிப்பைக் கேட்கின்றன ("எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்").

ஒரு மனிதன் தன்னுடைய பாவங்களை மட்டுமின்றி, தன்னுடைய இனத்தாரின் பாவங்களையும் அறிக்கை செய்வது மெய்யான ஆவிக்குரிய நிலையின் அடையாளமாயிருக்கிறது. இருதயத்திலிருந்து இவ்விதமாகக் கூறுவது எவ்வளவு கடினம்:

> **எங்கள் பிதாக்களோடுங்கூடநாங்களும் பாவம் செய்து, அக்கிரமம் நடப்பித்து, ஆகாமியம் பண்ணினோம்.**

இஸ்ரவேலின் பாவங்களைக் குறித்து நாம் சிந்தித்துப் பார்ப்போமெனில், நம்முடைய இறையியல் அறிவைக்கொண்டு அவர்களைக் கீழ் நோக்கிப் பார்க்கக் கூடாது. எல்லா நிலைகளிலும் நாம் அவர்களைக் காட்டிலும் கீழானவர்களே ஆவோம்! அவர்களுடைய பின்மாற்றம் நம்முடைய பின்மாற்ற நிலைகளைச் சுட்டிக் காட்டட்டும், மேலும் அவை நாம் மனம்வருந்தி அவரிடம் திரும்பும்படி நம்மை முழங்காற்படியிடச் செய்யட்டும்.

> அவர்களுடைய நன்றிகெட்ட தன்மை - அவர்கள் விடுதலை அடையும்படி எகிப்தில் தேவன் செய்த அதிசயங்களை முழுவதுமாக உணர்ந்து போற்றவில்லை.
>
> அவர்களுடைய மறதி - தேவனுடைய எண்ணிலடங்கா **கிருபைகளைக்** குறித்த நினைவு அவர்களுடைய மனதைவிட்டு வெகு விரைவாக மறைந்து போயிற்று.
>
> அவர்களுடைய கலகச்செயல் - அவர்கள் செங்கடலுக்கு அருகே வந்தபோது, பாலைவனத்தில் மரணமடையும்படி தேவன் அவர்களை அங்கு அழைத்துவந்தார் என்றும், அவர்கள் எகிப்திலே இருந்திருந்தால் அதுவே சிறப்பானதாக இருந்திருக்கும் என்றும் கூறினார்கள் (யாத். 14:11,12).

ஆனால் அவர்களுடைய பாவம் கர்த்தருடைய அன்பைத் தணிக்கவில்லை. அவர்கள் கலகம் செய்தபோது, அவர் தம்மை அவர்களுடைய தாசனாகவும் இரட்சகராகவும் வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பாக அதனைக் கண்டார். அவருடைய பெயருக்கு ஏற்றபடி, அவர் அவர்களை விடுவித்தார் - அது எவ்வளவு பெரிய **வல்லமை** மிக்க செயலின் வெளிப்பாடு! அவருடைய அதட்டல், செங்கடலின் நீரைப் பிளந்தது. யூதர்கள் வெட்டாந்தரை போன்ற நடைபாதையில் கடலைக் கடந்தார்கள். அவர்கள் கிழக்குக் கரைக்குப் பாதுகாப்பாகச் சென்று சேர்ந்தபோது, தொடர்ந்து வந்த பகைவர்களிடமிருந்து தப்பினார்கள், தண்ணீர்கள் திரும்பவும் ஒன்று சேர்ந்தன, எகிப்தியர் எதிர்த்து நிற்கமுடியாமல் மூழ்கிப் போனார்கள். இவ்விதமாக நிகழ்வுகள் யாவும் வியத்தகு வகையில் ஒன்றிணைந்ததை யூதர்கள் கண்டபோது, எவ்வளவாக அவர்கள் கர்த்தரை நம்பி, **அவருடைய** மேன்மையைத் **துதித்துப் பாடினார்கள்?**

பாலைவனத்தில் குறைகூறிய செயல் (106:13-15)

ஆனால் பாவத்தின் அடுத்த சுழற்சி மீண்டும் தொடங்குவதற்கு வெகுகாலம் செல்லவில்லை.

> *அவர்களுடைய குறுகிய கால நினைவு* - அவர்கள் அவர் செய்த அதிசயச் செயல்களை விரைவாக மறந்து போனார்கள்.
>
> *அவர்களுடைய சுயசித்தம்* – அவருடைய வழிநடத்துதலுக்காக அவர்கள் காத்திருக்கவில்லை.
>
> *அவர்களுடைய இச்சை* – அவர்கள் உணவுக்காக வேட்கை கொண்டபோது தற்கட்டுப்பாட்டை இழந்து போனார்கள் (எண். 11:1-35).
>
> *அவர்களுடைய சினமூட்டிய செயல்* – அவர்கள் **தேவனைப் பரீட்சை பார்த்தார்கள்.**

இம்முறை அவர்கள் விரும்பியதை தேவன் அவர்களுக்குத் தந்தார். ஆனாலும் அவர்கள் நடுவில் அருவருப்பான நோயை அனுப்பினார் (எண். 11:20). நாம் எப்பொழுதும் தேவனுடைய சித்தத்தின்படி வேண்டுதல் செய்வதற்குக் கவனமுள்ளவர்களாக இருக்கும்படி, அவர்களுடைய வரலாறு நமக்குக் கற்பிக்கிறது. ஏனெனில், "வெறித்தனமாகக் கேட்பவை கடுஞ்சினத்தோடு கொடுக்கப்படும்" என்று திருவாளர் மாத்யூ ஹென்றி கூறினார்.

தாத்தான், அபிராம் மற்றும் கலகக்காரர் கூட்டம் (106:16-18)

தேவனுடைய தலைமைத்துவத்தை அவர்கள் நிராகரித்த செயல் - மோசேக்கும் ஆரோனுக்கும் எதிராகக் கலகம் செய்தவர்

களின் தலைவர்களாகத் தாத்தான், அபிராம், கோராகு மற்றும் ஓன் ஆகியோர் செயல்பட்டார் கள் (எண். 16:1-30). இவ்விரண்டு தேவ மனிதர்கள் மேல் அவர்கள் பொறாமைகொண்டார்கள். மேலும் அவர்கள் ஆசாரிய ஊழியத்தில் பலவந்த மாய் நுழைய முற்பட்டார்கள். தேவனுடைய பரி சுத்த மனிதர்களுக்கு எதிராக, அதாவது தேவனு டைய பிரதிநிதிகளாகப் பிரித்தெடுக்கப்பட்ட மனிதர்களுக்கு எதிராகவே அவர்கள் கிளர்ச்சி செய்தார்கள். அதன் விளைவாக அந்தத் தலை வர்களையும் அவர்கள் கூட்டத்தையும் **பூமி பிளந்து மூடிப்போட்டது.** மேலும் கர்த்தருக்குத் தூபம் காட்டிய இருநூற்று ஐம்பது பேரை அக்கினி அழித்துவிட்டது (எண். 16:31-35).

பொன்கன்றுக்குட்டி (106:19-23)

அவர்களுடைய உருவ வழிபாடு – தேவனு டைய நியாயப்பிரமாணத்தைப் பெற்று, சீனாய் மலையிலிருந்து மோசே இறங்கி வருவதற்கு முன், மக்கள் ஒரு பொன் கன்றுக்குட்டியை உண் டாக்கி அதை வணங்கினார்கள் (யாத். 32:4). அவர்கள் தேவனுடைய மகிமையைப் புல்லைத் தின்கிற மாட்டின் சாயலாக மாற்றினார்கள். எகிப்திலிருந்து இரட்சித்துக் கொண்டு வந்தவர் தேவன் என்பதை அறிக்கை செய்வதற்குப் பதி லாக, எல்லா மேன்மையையும் கன்றுக்குட்டிக் குச் செலுத்தினார்கள். அவர்களுக்காக மோசே பரிந்து பேசாமல் இருந்திருந்தால், அவர்களை தேவன் ஒரு நொடிப் பொழுதில் அழித்துப் போட்டி ருப்பார். சுவரின் இடிந்த பகுதியில் நின்று அது விழாமல் தாங்கிப் பிடிக்கும் ஒரு போர்வீரனைப் போல, தேவனுடைய கோபத்தைத் திசைதிருப்பும் பொருட்டு மோசே அவருக்கு முன்பாகத் திறப்பின் வாசலிலே நின்றான்.

உளவாளிகள் கொண்டுவந்த தவறான அறிக்கை (106:24-27)

காதேஸ் பர்னேயாவில் அவர்களுடைய விசுவாசமற்ற செயல் (எண். 14:2,27,28). தேவன் அவர்களுக்கு இன்பமான நாட்டை நல்கினார், அதனுடைய இருப்பிடம், தட்பவெட்ப நிலை, வாய்ப்பு வளங்கள் யாவும் சிறப்பாயிருந்தன. அவர்கள் அந்நாட்டுக்குள் சென்று, அதைக் கைப்பற்றுவதற்குத் தேவையான அனைத்தை யும் வாக்குறுதி தன்னகத்தே கொண்டிருந்தது. ஆனால் அவர்கள் அந்த வாக்குறுதியை நம்ப வில்லை, மாறாக அவர்கள் அந்நாட்டை **அசட்டை பண்ணினார்கள்.** விசுவாசத்தோடு அணிவகுத்து முன்னேறிச் செல்வற்குப் பதிலாக, அவர்கள் **தங்களுடைய கூடாரங்களில்** சிடுசிடுத்துக் கொண்டிருந்தார்கள். அதன் காரணமாக, அந்தத் தலைமுறையினரைப் பாலைவனத்தில் அழித்துப் போடுவதாகவும், அவர்களுடைய வழித்தோன் றல்களை உலகமெங்கும் சிதறடிக்கப் போவதாக வும் ஆணையிட்டுக் கர்த்தர் தமது கரத்தை உயர்த்தினார்.

மோவாபியரோடு பாவம் செய்தல் (106:28-31)

பேயோரின் பாகாலை வழிபட்ட அவர்களு டைய பாவச் செயல் – இஸ்ரவேலின் ஆண் மக்கள் மோவாபியப் பெண்களோடு தகாத உறவு கொண்டது மட்டுமின்றி, பேயோரின் பாகாலை வணங்கும்படி, இறந்துபோன மனிதர்களுக்குப் பலியிடும் செயல்களில் சேர்ந்துகொண்டார்கள், இன்னபிற புறவினச் சடங்குகளையும் செய்தார் கள் (எண். 25:3-8). ஆயிரக்கணக்கான மனிதர்கள் சாகும்படியான வாதையை தேவன் அனுப்பும்படி யான கடுஞ்சினத்தை அது ஏற்படுத்தியது. ஒரு புறவினப் பெண்ணை இஸ்ரவேலன் ஒருவன் தனது கூடாரத்துக்குள் அழைத்துச் செல்வதைக் கண்ட பினெகாஸ், ஓர் ஈட்டியைக் கொண்டு அந்த மனிதனையும் பெண்ணையும் ஒருசேர உருவக் குத்தினான். அச்செயல் வாதையை நிறுத்தியது, ஆனால் அதற்கு முன்பே இருபத்து நாலாயிரம் பேர் இறந்து போனார்கள். அந்த நிகழ்வு அவனு டைய நீதியின் நிரூபணமாக விளங்கிற்று, அதற் காக சமாதானத்தின் உடன்படிக்கை அவனுக்கு வெகுமதியாக வழங்கப்பட் டது:

> "ஆகையால், இதோ, அவனுக்கு என் சமா தானத்தின் உடன்படிக்கையைக் கட்டளை யிடுகிறேன். அவன் தன் தேவனுக்காக பக்தி வைராக்கியம் காண்பித்து, இஸ்ரவேல் புத்திர ருக்காகப் பாவநிவர்த்தி செய்தபடியினால், அவனுக்கும் அவனுக்குப் பின்பு அவன் சந்த திக்கும் நித்திய ஆசாரிய பட்டத்திற்குரிய உடன்படிக்கை உண்டாயிருக்கும் என்று சொல் என்றார்" (எண். 25:12,13)

மேரிபாவில் ஏற்பட்ட பிரச்சினை (106:32,33)

மோசேயின் பாவம் (எண். 20:2-13) - மேரிபா வின் தண்ணீர்களிடத்திலும் (மேரிபா - சச்சரவு) மக்கள் நாணமற்ற வகையில் அவநம்பிக்கை யோடு இருந்தார்கள். தாகத்தால் மரணமடையும் படி பாலைவனத்தில் தங்களை நடத்திச் செல்வ தாக அவர்கள் மோசேக்கு எதிராகக் குற்றஞ் சாட்டினார்கள். தேவன் கூறியபடி கன்மலையி னிடத்தில் பேசுவதற்குப் பதிலாக, மோசே தனது கோலால் அதை இருமுறை அடித்தான். மக்கள்

கிளர்ச்சி செய்ததன் நிமித்தம் அவன் அவர்களுடைய முன்னிலையில் **பதறிப் பேசினான்**. அதன் விளைவாக, இஸ்ரவேல் மக்களை வாக்குத்தத்த நாட்டுக்குள் வழிநடத்திச் செல்லும் வாய்ப்பு அவனுக்கு மறுக்கப்படுவதாக தேவன் ஆணையிட்டார்.

கானானில் – அதே பழைய கதை (106:34-39)

கானானின் புதிய சூழ்நிலை இஸ்ரவேல் மக்களின் இயல்பில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. அதனைக் காணலாம்:

106:34 *புறச்சமய குடிமக்களை அடியோடு அழிப்பதில் அவர்களுடைய தோல்வி.* இழிநிலையில் வாழ்ந்த கானானியர் மனுக்குலத்தின் அழுகிப்போன ஓர் உறுப்பாக இருந்தார்கள். பல நூற்றாண்டுக் காலம் பொறுமையோடு இருந்த தேவன், அவ்வுறுப்பை வெட்டியெடுப்பதே ஒரே தீர்வு என்று முடிவு செய்தார். அறுவைச் சிகிச்சை செய்யும் பொறுப்பை அவர் இஸ்ரவேலரிடம் ஒப்புக்கொடுத்தார். ஆனால் அவர்கள் அவருக்குக் கீழ்ப்படியத் தவறிவிட்டார்கள் (நியா. 1:27-36).

106:35 *புறச்சமய மக்களுடன் அவர்கள் கலப்பு உறவு கொண்ட செயல்.* புறச்சமய மக்களோடு கலப்பு மணம் புரிதலை இஸ்ரவேலர் ஆதரித்ததன் மூலம் அவர்கள் தங்கள் சொந்த சமயத்தையும், ஒழுக்க நெறிகளையும் கெடுத்துக் கொண்டார்கள்.

106:36 *அவர்கள் உருவ வழிபாடு செய்த செயல்.* ஜீவனுள்ள மெய்யான தேவனை வழிபடுவதற்குப் பதிலாக அவர்கள் சிறிது காலத்திற்குள் சிலைகளை வழிபடத் தொடங்கினார்கள்.

106:37-39 *அவர்கள் நரபலி செலுத்திய செயல்.* அவர்கள் பேய்களைச் சமாதானப் படுத்தும்படி தங்களுடைய குமாரர்களையும் குமாரத்திகளையும் பலிசெலுத்திய செயல் கர்த்தருக்கு எதிரான செயல்களில் மிகவும் கேடுற்ற செயலாகும் (2 இராஜா. 3:27; 21:6 எசே. 16:20,21). கானானின் இழிந்த சிலைகளுக்கு தேவனால் தெரிந்தெடுக்கப்பட்ட மக்களின் குமாரர்களும் குமாரத்திகளும் பலியிடப்பட்டு, **தேசம்** கொலையால் **தீட்டுப்பட்டது.**

நியாயாதிபதிகளின் காலம் (106:40-46)

"தம்முடைய மக்களால் புண்படுத்தப்பட்ட கர்த்தர், தமக்கு அருவருப்பானவர்களைப் போல அவர்களை நடத்தினார்" என்று திருவாளர் பார்னஸ் எழுதுகிறார். அவர் அவர்களைப் புறவினத்தாரிடம் **ஒப்புக்கொடுத்தார்**. மெசபொத்தாமியர், மீதியானியர், பெலிஸ்தர், மோவாபியர் இன்னும் மற்றவர்கள். தேவபக்தியற்ற துன்மார்க்கரான புறவினத்தார் யூதர்கள் மேல் ஆட்சி செலுத்தி, அவர்களை ஒடுக்கித் துன்புறுத்தினார்கள். இவ்விதமாக இஸ்ரவேல் மக்கள் நடத்தப்பட்டும், அவர்கள் தங்களுடைய பாவத்தில் நிலைத்திருந்தார்கள், மேலும் யெகோவாவுக்கு எதிராகச் செயல்பட்டார்கள். ஆனால் அவர்கள் மனந்திரும்பிக் கர்த்தரிடம் வந்தபோதெல்லாம், அவர் கிருபையுள்ளத்தோடு அவர்களைப் பார்த்தார். அவருடைய உடன்படிக்கையை நினைவுகூர்ந்தவராக, அவர் தண்டனை செலுத்துவதிலிருந்து, நீடித்த அன்பைச் செலுத்த உளங்கொண்டார். அவர்கள் அடிமைப்படுத்தப்பட்டிருந்த மிகவும் இருண்ட காலத்திலும்கூட, அவர்களைச் **சிறை பிடித்தவர்களும்கூட** அவர்களிடத்தில் **இரக்கம்** பாராட்டும்படி செய்தார் - கிருபை நியாயத்தீர்ப்பை வெல்லும் என்பதற்கான உணர்ச்சிபூர்வமான எடுத்துக்காட்டு.

இரட்சித்து மீண்டும் ஒன்றுகூட்டுதல் (106:47)

உலகத்தின் பல இனத்தாருக்கு இடையே சிதறடிக்கப்பட்டிருக்கும் தனது மக்கள் மீண்டும் ஒன்றுகூட்டப்படுதலை எதிர்நோக்கியவனாகப் பாடலாசிரியன் மன்றாடுகிறான். இறைவடைய தூய திருப்பெயரை நோக்கிப் பெரிதான துதி எழுகிறதற்கு இது காரணமாகிறது. மக்கள் அவரைத் துதிப்பது அவர்களுக்கே மகிமையை உண்டுபண்ணும் செயலாக அமையும். கிறிஸ்துவின் மகிமை நிறைந்த ஆட்சி தொடங்குவதற்கு முன், உபத்திரவ காலத்தில் வாழும் இஸ்ரவேலின் மீதியானவர்களாகிய விசுவாசிகள் ஏறெடுக்கும் விண்ணப்பங்களை இந்த ஜெபம் எதிர்நோக்கியதாக இருக்கிறது.

துதிப்பாடல் (106:48)

பேருவகையின் குறிப்போடு நாம் இப்பாடலின் முடிவுக்கு வருவதோடு, சங்கீதங்களின் நான்காவது நூலின் முடிவுக்கும் வருகிறோம். இவ்வித மாக முடிவுக்கு வருகிற நாம், இந்தச் சங்கீதத்தைக் காலப்பாகுபாடு என்னும் புறாக்கூண்டுக்குள் அடைக்கக் கூடிய உளத்தூண்டுதலுக்கு எதிர்த்து நிற்க வேண்டும். அவ்வாறு செய்யாவிடில், இஸ்ரவேல் இனத்தாரின் பொல்லாத மனிதர்களுக்குக் கொடுக்கப்பட்ட அறிவுரை என்று இப்பாடலை ஓர் எல்லைக்குட்படுத்தி விடுவோம், மேலும் நம்முடைய சொந்த வரலாறே

இதில் பிரதிபலிக்கிறது என்பதைக் காணவும் தவறிவிடுவோம். 1 கொரிந்தியர் 10:11 -இல் இதனைத் தெளிவாகப் படிக்கிறோம்:

> இவையெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தன. உலகத்தின் முடிவு காலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கின்றன.

நன்றிகெட்ட தன்மைக்கு எதிராக இது நம்மை எச்சரிக்கிறது. எகிப்தின் ஆதிக்கத்திலிருந்து வல்லமையோடு விடுவிக்கப்பட்டமைக்கு இஸ்ரவேல் நன்றியோடு செயல்பட்டிருக்க வேண்டுமெனில், பாவத்தினின்றும் சாத்தானிடத்தினின்றும் கிறிஸ்துவின் இரத்தத்தால் விடுவிக்கப்பட்டதற்காக நாம் எவ்வளவு அதிகமாக நன்றியுணர்வு மிக்கவர்களாக இருக்க வேண்டும்!

மறதிக்கு எதிராக இது நம்மை எச்சரிக்கிறது. நாம் எவ்வளவு எளிதாகக் கர்த்தராகிய இயேசுவின் பாடுகளையும் மரணத்தையும் மறந்து போகிறோம். "கண்ணீர் வற்றிப்போன கிறிஸ்தவன் என்னும் சாபம்" என்னும் குற்றத்திற்குட்பட்டவர்களாக நாம் இருக்கிறோம்.

குறைகூறுதல் என்னும் குற்றத்திற்கு எதிராக இது நம்மை எச்சரிக்கிறது. தட்பவெட்ப நிலை, வாழ்க்கைத் தரம், சிறுசிறு வசதிக் குறைவுகள், சுவை குறைந்த உணவு ஆகியவற்றிற்காகக் குறைகூறும் வழக்கம் நம்முடைய வாழ்க்கையின் வழிமுறையாக மாறிவிட்டது.

சுயசித்தத்திற்கு எதிராக இது நம்மை எச்சரிக்கிறது. தேவனுடைய சித்தத்திற்கு மேலாக நாம் நம்முடையசித்தத்தை வைக்கிறோம்."அவர்கள் கேட்டதை அவர்களுக்குக் கொடுத்தார், அவர்கள் ஆத்துமாக்களிலோ இளைப்பை அனுப்பினார்" (வச.15).

தேவனுடைய தலைமைத்துவத்தைக் *குற்றம் சுமத்துவதற்கு* எதிராக இது நம்மை எச்சரிக்கிறது; அது ஒருவேளை அரசாங்கத்தையோ, சபையின் மூப்பர்களையோ, பெற்றோர்களையோ குற்றப்படுத்துவதாக இருக்கலாம்.

உருவவழிபாட்டுக்கு எதிராக இது நம்மை எச்சரிக்கிறது. பணம், வீடு, வாகனங்கள், கல்வி, இன்பம் அல்லது உலகீய வெற்றி எதுவாகவும் இருக்கலாம்.

தேவனுடைய வாக்குறுதியின் மேல் *அவநம்பிக்கை கொள்ளுதலுக்கு* எதிராக இது நம்மை எச்சரிக்கிறது. இந்தப் பாவம் இஸ்ரவேலரை முப்பத்தெட்டு ஆண்டுகள் பாலைவனத்தில் அலையச் செய்தது. மேலும் குற்றம் புரிந்தவர்கள் வாக்குறுதி செய்யப்பட்ட நாட்டிற்குள் அனுமதிக்கப்படவில்லை.

ஒழுக்கக் கேட்டிற்கு எதிராக இது நம்மை எச்சரிக்கிறது. பேயோரின் பாகாலை வழிபட்ட செயல் கேடுற்ற பாலுறவு ஒழுக்கக்கேடு என்னும் பாவத்தைச் செய்ய வழிவகுத்தது. குற்றம் புரிந்தவர்கள் அடைந்த பேரிடர் இதைக் குறித்து தேவன் என்ன மனப்பான்மை கொண்டிருக்கிறார் என்பதை வெளிப்படுத்துகிறது.

"*அற்பமாகத்*" தோன்றும் விசயங்களில் *கீழ்ப்படியாமைக்கு* எதிராக இது நம்மை எச்சரிக்கிறது. கன்மலையோடு பேசுவதற்குப் பதிலாக மோசே அதை அடித்தான். இது மிகவும் முக்கிய மற்றதாகத் தோன்றுகிறது. ஆனால் எந்தவொரு கீழ்ப்படியாமையும் அற்பமானது அன்று.

அவிசுவாசிகளைத் திருமணம் செய்வதற்கு எதிராக இது நம்மை எச்சரிக்கிறது. தேவன் பரிசுத்த தேவன்; அவருடைய மக்கள் அந்நிய நுகத்தில் இணைந்து தீட்டுப்படுவதை வெறுக்கிறார்.

இறுதியாக, *நம் பிள்ளைகள் பலிசெலுத்தப்படுவதற்கு* எதிராக இது நம்மை எச்சரிக்கிறது. பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளிடத்தில் கர்த்தருக்குத் திருப்பணி ஆற்றுவதை விரும்பத்தக்க வேலையாக உயர்த்திப் பேசுவதில்லை. பெரும்பாலும் நம்முடையபிள்ளைகள் தொழிலிலோ வேலையிலோ தங்களுக்கென்ற புகழைப் பெற வேண்டும் என்னும் நோக்கத்துடனேயே வளர்க்கப்படுகிறார்கள். நாம் அவர்களை இவ்வுலகிற்கென்று - நரகத்திற்கென்று வளர்க்கிறோம்.

நூல் 5 (சங்கீதங்கள் 107 - 150)

சங்கீதம் 107: மீட்கப்பட்டவர்கள் அப்படிச் சொல்லக்கடவர்கள்

இறை மக்களுடைய வாழ்க்கை முறையில் கீழ்க்காணும் பொதுவான பண்பு காணப்படுகிறது. அதனை இருசொல் பட்டியலாகத் தொகுத்துக் கூறலாம்:

பாவம்	அல்லது	கலகம்
அடிமைத்தனம்		தவறு செய்ததற்கு உரிய தண்டனை
வேண்டுதல்		மனந்திரும்புதல்
இரட்சிப்பு		புதுப்பித்தல்

முதலாவதாக எல்லா மனிதர்களும் கர்த்தரை விட்டு விலகி, அவருடைய சொற்களுக்குக் கீழ்ப்

படியாமல் வாழ்கிறார்கள். பின்னர் அவர்களுடைய பின்மாற்றத்தின் கசப்பான விளைவுகளை அனுபவித்துப் பாடுபடுகிறார்கள். அவர்கள் தன்னிலை திரும்புகிறபோது, தங்களுடைய பாவத்தை அறிக்கை செய்து கர்த்தரை நோக்கிக் கதறி அழுகிறார்கள். அப்பொழுது அவர் அவர்களுடைய பாவத்தை மன்னித்து, மீண்டும் ஒருமுறை அவர்களை ஆசிர்வாதத்திற்குரிய இடத்திற்குக் கொண்டுவருகிறார். இது கெட்டகுமாரனுடைய பழைய கதையாகவே இருக்கிறது, அதைக் காட்டிலும் அதிகமாகத் தெரிந்த கதை வேறில்லை; அதுவே மிகவும் பொருத்தமானது, வாழ்க்கையின் உண்மையை வெளிப்படுத்துவது. எப்பொழுதும் திரும்பத் திரும்ப நிகழ்கிற இந்தச் சுழற்சியைக் குறித்துச் சிந்தித்துப் பார்க்கிறபோது இரண்டு அடிப்படையான உண்மைகள் வெளிப்படுகின்றன. ஒன்று, ஜீவனுள்ள தேவனை விட்டு விலகிச் செல்லும் தன்மையை மனித இருதயம் நிலையாகப் பெற்றிருக்கிறது. மற்றொன்று, கர்த்தருடைய மக்கள் அவரிடம் மனந்திரும்பி வருகிறபோது அவர்களைச் சீர்திருந்தச் செய்வதற்கான அவருடைய இரக்கம் வற்றாத ஊற்றாகக் காணப்படுகிறது.

107 -ஆவது சங்கீதத்தில், கர்த்தர் இரக்கத்தின் மிகுதியால் செய்கிற மீட்புப்பணி நான்கு வகையான சித்திரங்களாக அறிமுகப்படுத்தப்படுகிறது:

பாலைவனத்தில் இழந்து போனவர்கள் மீட்கப்படுதல் (வச. 4-9).

சிறைப்பட்டவர்கள் மீட்கப்படுதல் (வச. 10-16).

கடுமையான நோய்க்குட்பட்டவர்கள் குணமடைதல் (வச. 17-22).

கடுமையான புயலில் அகப்பட்ட மாலுமிகள் மீட்கப்படுதல் (வச. 23-32).

முன்னுரை (107:1-3)

முதலாவது, கருத்தைக் கூறும்படி முன்னுரை கொடுக்கப்பட்டுள்ளது. கர்த்தருக்குத் துதிகளைச் செலுத்தும்படி அழைப்பு விடுக்கப்படுகிறது. அதற்கான இரண்டு காரணங்கள் கொடுக்கப்பட்டுள்ளன - கர்த்தர் **நல்லவர்**, **அவர் கிருபை என்றுமுள்ளது.** இடைவிடாமல் நன்றிபாராட்டுவதற்கு இவ்விரு காரணங்களில் ஏதேனும் ஒன்று போதுமானதாக விளங்குகிறது.

அவருடைய தயவையும் அன்பையும் பெறுகிறவர்களாக ஒரு குறிப்பிட்ட மக்கள் கூட்டம் தனிப்படுத்தப்பட்டு இப்பொழுது கூறப்படுகிறது. அதாவது, அவர்கள் துன்புறுத்தல், அடிமைத்தனம், ஒடுக்குதல், தொல்லைகள் மற்றும் உலகமெங்கும் சிதறடிக்கப்பட்ட நிலை ஆகியவற்றிலிருந்து **கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள்**. பாடலாசிரியன் இஸ்ரவேல் மக்களை முன்னிறுத்துகிறான் என்பது மிகவும் தெளிவாகத் தெரிகிற போதிலும், இந்த வசனங்கள் அந்த இனத்தாரை மட்டுமே குறிப்பிடுகிறது என்று நாம் முடிவுசெய்து விட வேண்டாம். ஏனெனில் நாமும்கூட பாவத்தின் அடிமைச் சந்தையிலிருந்து விலைக்கு வாங்கப்பட்டிருக்கிறோம். மேலும் கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் என்னும் நிலையில் அவருக்குத் துதியைச் செலுத்திப் புகழ்ந்து போற்றுவதில் நாமும் பங்குபெறுகிறோம்.

பாலைவனத்தில் இழந்து போனவர்கள் மீட்கப்படுதல் (107:4-9)

தரிசாகவும், காற்று ஊளையிட்டுப் பெரும் சத்தத்தை எழுப்புகிறதுமான பாலைவனத்தில் இஸ்ரவேல் அலைந்து திரிந்த நாற்பது ஆண்டுகளைக் குறிப்பிடும் சித்திரமே முதலாவது பகுதி என்பது தெளிவாகத் தெரிகிறது. அங்கே மக்கள் வழிதப்பிப் போனார்கள். அவர்கள் **பசியாக** இருந்தார்கள். அவர்கள் **தாகமாக** இருந்தார்கள். அவர்கள் மனம் சோர்வடைந்து நம்பிக்கையற்று இருந்தார்கள். பின்னர் அவர்கள் **கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள்**. சடிதியில் அவர்களுடைய வழிதப்பிய பயணம் முடிவுக்கு வந்தது. கர்த்தர் அவர்களை மோவாபிய சமவெளியை நோக்கி நேரான பாதையில் **வழிநடத்தினார்**. அவர்கள் கானானுக்குள் நுழைவதற்குச் சாதகமான இடத்தை அடைந்தார்கள் என்பதை இது உறுதிப்படுத்தியது. இறுதியில் அங்கே அவர்கள் தங்களுடைய சொந்த வீட்டை அடைந்தோம் என்று உணரக்கூடிய ஓர் ஊரைக் கண்டடைந்தார்கள். அவர் தம்முடைய மக்கள் மீது காட்டுகிற அவருடைய மாறாத அன்புக்காகவும் இடைவிடாமல் காண்பிக்கும் வியத்தகு அக்கறைக்காகவும் அவர்கள் (நாமும் கூட) எவ்வளவாக துதிசெலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள். வாக்குறுதிபண்ணப்பட்ட நாட்டில் அவர் தாகத்தைத் தீர்க்கிறார். பசிக்குத் தேவையான மிகச் சிறந்த உணவைத் தருகிறார்.

சிறைப்பட்டவர்கள் மீட்கப்படுதல் (107:10-16)

107:10-12 இஸ்ரவேல் வரலாற்றின் இரண்டாவது வருணனை, அம்மக்கள் பாபிலோனில் சிறைபடுத்தப்பட்ட நிகழ்வைக் குறித்ததாகும். அந்த எழுபது ஆண்டுக் காலத்தைக் காவலில் அடைக்கப்பட்டிருந்ததாகவே பாடலாசிரியன்

கருதுகிறான். பாபிலோன் மங்கிய இருட்டறைக்கு ஒப்பாயிருந்தது. சங்கிலிகளால் கட்டப்பட்டு அடிமை வேலையைச் செய்யும்படி இடருக்குட் படுத்தப்பட்டதாகவே இஸ்ரவேலர் கருதினார்கள் (அவர்கள் எகிப்தில் இருந்தபோது அனுபவித்த இன்னல்களைப் போல பாபிலோன் வாழ்க்கை கடினமாயிருக்கவில்லை.) அவர்கள் தேவனுடைய வார்த்தைகளுக்கு எதிராகக் கலகம் செய்ததாலும், அவருடைய வார்த்தையைப் புறக்கணித்து அலட்சியப்படுத்தியதாலும், நாடு கடத்தப்பட்டார்கள். கடினமான உழைப்பினாலும் அடிகளினாலும் வதைக்கப்பட்டு, பாரத்தால் கீழே **விழுந்துபோனார்கள்**, அவர்களை ஆதரிப்பார் ஒருவருமில்லை.

107:13-16 ஆனால் அவர்கள் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டபோது, அவர் அவர்களை இருண்ட நாட்டினின்று காப்பாற்றினார், அவர்களுடைய சிறையிருப்பின் சங்கிலிகளை **அறுத்தார்**. கர்த்தருடைய மாறாத அன்பினிமித்தமும், அவர்களுக்காக அவர் செய்த **அதிசயச் செயல்களினிமித்தமும்** அவர்கள் இப்பொழுது செய்ய வேண்டிய பண்புமிக்க செயல் அவரைத் **துதிக்கக்** கூடியது ஒன்றுதான்.

கர்த்தர் வெண்கலக் கதவுகளை உடைத்து,
இருப்புத் தாழ்ப்பாள்களை முறித்தார்.

இந்த வசனமே பாடலாசிரியன் பாபிலோனியச் சிறையிருப்பை இங்கு குறிப்பிடுகிறான் என்று நாம் நம்புவதற்கு நம்மை வழிநடத்துகிறது. கர்த்தர் எவ்விதமாக அடிமைத்தளையை முடிவுக்குக் கொண்டுவருவார் என்பதை அவரே இதே போன்ற சொற்களால் விவரித்திருப்பதை ஏசாயா 45:2 - ஆம் வசனம் கூறுகிறது. கோரேசு மன்னனிடம் அவர் பேசிய சொற்கள்:

> நான் உனக்கு முன்னே போய் கோணலான வைகளைச் செவ்வையாக்குவேன். வெண்கலக் கதவுகளை உடைத்து இருப்புத் தாழ்ப்பாள்களை முறிப்பேன் (ஏசாயா 45:2,4)

இப்பகுதியின் பின்னணி, பாபிலோனின் சிறையிருப்பை முடிவுக்குக் கொண்டுவருவதைக் குறித்தே அவர் பேசினார் என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

கடுமையான நோய்க்குட்பட்டவர்கள் குணமடைதல் (107:17-22)

107:17-20 மூன்றாவது பகுதி, கிறிஸ்துவின் முதலாவது வருகையின்போது இஸ்ரவேல் இனத்தார் இருந்த நிலையைக் குறிப்பிடுகிறது. அந்த இனத்தார் அக்காலத்தில் நோய்வாய்ப்பட்டிருந்தார்கள். மெக்கபேயரின் காலம் என்று அறியப்படும் கடுமையான துன்பம் அனுபவித்த நாட்கள் சற்று முன்புதான் முடிவுக்கு வந்திருந்தது. சிலர் **நிர்மூடராயிருந்தார்கள்,** அவர்களுடைய **அக்கிரமங்களால்** தேவனுடைய நியாயத்தீர்ப்பைப் பெற்று பாடுபட்டார்கள். அவர்கள் உணவு உண்ணுவதற்கான பசியை இழந்துபோயிருந்தார்கள். மேலும் **மரணத்தின் வாசல்** வரை சென்றுவிட்டார்கள். இஸ்ரவேல் மக்களுக்குள் பயபக்தி நிறைந்த மீதியானவர்கள் இஸ்ரவேலின் நம்பிக்கைக்காக ஜெபித்து, காத்துக் கொண்டிருந்தார்கள். **தேவன் தமது வசனத்தை அனுப்பி அவர்களைக் குணமாக்கினார்**. இங்கு வசனம் (Logos) என்னும் சொல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் குறிக்கக் கூடும். அவர் இஸ்ரவேல் வீட்டாருக்காகக் குணமாக்கும் ஊழியத்தைச் செய்ய வந்தார். "அவர் அவர்களையெல்லாம் குணமாக்கினார்" என்று நற்செய்தி நூல்களில் நாம் எத்தனை தடவை படிக்கிறோம். ஏசாயா நூல்களில் நாம் எத்தனை தடவை படிக்கிறோம். ஏசாயா தீர்க்கதரிசி குறிப்பிட்டதை நமது இரட்சகர் நிறைவேற்றும்படி பிணியாளிகளைக் குணப்படுத்தினார் என்று மத்தேயு தனது நூலில் நினைவுபடுத்துகிறார். "அவர்தாமே நம்முடைய பலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார்" (மத். 8:17). எல்லா இஸ்ரவேலரும் குணமாக்கப்படவில்லை என்று ஒருவேளை இதனை எதிர்த்துக் கூறலாம், எல்லோரும் வாக்குறுதி பண்ணப்பட்ட நாட்டுக்குள் நுழையவில்லை என்பதையும், பாபிலோனியச் சிறையிருப்பிலிருந்து எல்லோரும் திரும்பவில்லை என்பதையும் நாம் நினைவுகூர வேண்டும்.

107:21,22 மீண்டுமாகப் பாடலாசிரியன் **கர்த்தரை அவருடைய கிருபையினிமித்தமும், அவர் செய்த அதிசயங்களினிமித்தமும்** மனிதர்கள் புகழ்ந்து போற்ற வேண்டுமென்று அழைக்கிறான். அவருடைய குமாரன் நமக்கு ஈவாக அளிக்கப்பட்ட நிகழ்வு அவருக்கு ஸ்தோத்திர பலிகளைச் செலுத்துவற்கும், அவருடைய செயல்களைப் பாடல்களாக எழுதி ஒப்பிக்கவும் சிறந்ததொரு காரணமாக விளங்குகிறது.

கடுமையான புயலில் அகப்பட்ட மாலுமிகள் மீட்கப்படுதல் (107:23-32)

107:23-27 கடைசி வரைபடம் வருணனை நிறைந்த கண்கவர் காட்சியாக விளங்குகிறது. பெருங்கடலில் பயணம் செய்யும் கப்பல்களில்

பணிபுரியும் மாலுமிகளைக் குறித்ததே இச்சித் திரம். கடலில் பெரும்புயல் ஏற்பட்ட வேளைகளில் கர்த்தருடைய வல்லமையைக் குறித்துச் சிறிது அவர்களால் அறிந்துகொள்ள முடிந்தது. தொடக் கத்தில் பெருங்காற்று அச்சமூட்டத்தக்க அள விற்கு வீசும். பின்னர் அலைகள் பிரமாண்டமான மலைகளைப் போல நீரைக் கொண்டுவரும். கப்ப லானது அலைகளுக்கு மேலே எழுந்து, அதனு டைய பலகைகள் ஒன்றோடொன்று உரசிக் கிறீச்சென்று ஒலியெழுப்பும். அலைகளின் முகடு களில் அது அதிர்வுற்று, அலைகளின் நடுவே ஏற்படுகிற பள்ளங்களில் உடைந்து விழும். மிகப் பெரிய கப்பலும்கூட ஒரு தீப்பெட்டியைப் போல சுழன்று, ஆவியும் நுரையும் தள்ளுகிற கொப் பரையைப் போல மாறிப்போகும். அப்படிப்பட்ட புயலில் மிகுந்த உரம்கொண்ட மாலுமியும்கூட சோர்ந்துபோவான். அவர்கள் செய்யக்கூடிய தெல்லாம் வெறித்தவனைப் போலத் தடுமாறி தங்களுடைய பணியைச் செய்வதுதான். அவர் கள் தங்களுடைய இயலாமையைக் குறித்த எண்ணத்தால் அச்சம் மேலிட்டவர்களாக ஞான மற்றுப் போவார்கள்.

107:28-30 இப்படிப்பட்ட தருணங்களில் சபித் தலை வழக்கமாகக் கொண்ட சமயப் பற்றற்ற மாலுமிகளும்கூட இறைவனிடத்தில் மன்றாடுவது வியக்கத்தக்க செயல் அன்று. மனச்சோர்வுற்றவர் களாக அவர்கள் ஏறெடுக்கிற விண்ணப்பங் களைக் கேட்க கர்த்தர் கிருபை நிறைந்தவராக இருக்கிறார். **அவர் கொந்தளிப்பை அமர்த்து கிறார், அலைகள் அடங்குகின்றன**. எப்பேர்பட்ட விடுதலை! அவர்கள் மீண்டும் கப்பலைச் செலுத்து கிறார்கள், அவர்கள் பயணம் மேற்கொண்ட துறைமுகத்தைச் சென்றடைகிறார்கள்.

107:31,32 மீட்கப்பட்ட மாலுமிகள் கர்த்தருடைய மாறாத **கிருபையினிமித்தமும்**, அவர்களுடைய ஜெபத்திற்கு **அதிசயமாகப்** பதிற்செயல் செய்தத னிமித்தமும் அவருக்கு நன்றி செலுத்த மறக்கக் கூடாது. அவர்கள் கர்த்தருடைய மெய்யான விசு வாசிகளுடன் சேர்ந்து புகழ்ந்து போற்றவும், மூப் பர்களின் சங்கத்தோடு சேர்ந்து துதிக்கவும் வேண்டும்.

இங்கு கூறப்பட்டுள்ள பொருளைச் சற்று விரிவு படுத்திக் கூறுவோமெனில், இந்நிகழ்வு இஸ்ர வேலின் இறுதிப் புயலையும், தொடர்ந்து அது சமாதானத்தின் அரசுக்குள்ளாக நுழைவதையும் பற்றி சித்திரிக்கிறது எனலாம் அல்லவா? கடும் புயலானது மகா உபத்திரவ காலத்தைக் குறிக் கிறது. பெருங்கடல் கொதித்து எழுகிற அமைதி யற்ற புறவினத்தாருக்கு மாதிரியாயிருக்கிறது. மாலுமிகள் இஸ்ரவேல் இனத்தாருக்கு அடை யாளமாயிருக்கிறார்கள். அவர்கள் மற்ற இனத் தாரால் அலைக்கழிக்கப்படுகிறார்கள், அதுவே யாக்கோபின் இக்கட்டுக் காலம் எனப்படுகிறது. விசுவாசிக்கும் இஸ்ரவேலின் மீதியானவர்கள் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார்கள். பின்னர் அவர்தாமே நேரடியாகக் குறுக்கிடுவார். இவ்வுல கிற்குத் திரும்பவும் வருகிற அவர் அமைதியும் வளமும் நிறைந்த அரசை நிறுவுவார்.

இறைவனுடைய நிருவாகமும் கிருபையும் (107:33-43)

107:33,34 தம்முடைய மக்கள் கீழ்ப்படியாத போதும், பின்னர் அவர்கள் கீழ்ப்படிகிற போதும் தேவன் எவ்வாறு செயல்படுகிறார் என்பதை இச்சங்கீதத்தின் எஞ்சிய வசனங்கள் விளக்கு கின்றன. அவருடைய எல்லாம் வல்ல ஆற்றலி னாலே, அவர் ஆறுகளை வெட்டாந்தரையாக வும், நீர் குமிழ்விட்டு எழுகிற ஊற்றுகளை வற்றிப் போகச் செய்கிறார். அவருடைய மக்கள் அவருக் குத் தங்கள் முதுகைக் காட்டுகிறபோது **செழிப் பான நிலங்களை உவர்நிலங்களாக** மாற்று வது அவருக்குப் பெரிதல்ல.

107:35-38 ஆனால் அவ்வாறான நிகழ்ச்சியை அவரால் மாற்றிச் செய்யவும் முடியும். சமாதானப் பிரபு ஆயிரமாண்டு ஆட்சிக்காலத்தின்போது பூமிக்கு மீண்டும் வந்தபின் அதைத்தான் செய்யப் போகிறார். தென்திசைப் பாலைவனம் தண்ணீர்த் தடாகங்களால் நிறைந்திருக்கும். சஹாரா மற்றும் மோஜேவ் ஆகிய பாலைவனங்கள் நீர் பாய்ச்சப் பட்ட தோட்டங்களாகக் காணப்படும். பல நூற் றாண்டுக் காலமாக மனிதர்கள் வாழ்வதற்கு இயலாததாக இருந்த இடங்கள் எல்லாவற்றிலும் குடியிருப்புகள் தோன்றியிருக்கும். நவீனகால நகரங்கள் இயற்கை வளம்பெற்ற பகுதிகளைக் கொண்டிருக்கும். பாலைவனங்கள் யாவும் சடிதி யில் சாகுபடி நிலங்களாக மாறிவிடும். தானியங் கள், காய்கறிகள், பழங்கள், சாறு நிறைந்த கனி கள் பெருமளவில் விளையும். அவருடைய ஆசிர் வாதத்தால் எல்லா இடங்களிலும் விளைச்சல் பெருகும். ஆடுமாடுகள் நோய் எதிர்ப்பு சக்தி மிக்கவையாக விளங்கும்.

107:39-43 அச்சித்திரத்தின் மறுபகுதியில், ஆளுகை செய்வோரில் பொல்லாதவர்களாகச் செயல்படுகிறவர்களை நடத்துகிற விதம் காணப் படுகிறது.

> கொடுங்கோலர்கள் தங்களுடைய வலிமையை இழந்து, ஆபத்தினாலும் துயரத்தினாலும் சிக்குண்டவர்களாகத் தாழ்நிலை அடைவார்கள்; அவர் இளவரசர்கள் மேல் இகழ்ச்சியை வரப் பண்ணி, வழியில்லாத தரிசு நிலத்தில் அவர்களைத் திரியச் செய்வார் (வச. 39, 40 NEB).

இவ்வித விளைவே பார்வோனுக்கும், ஏரோதுக்கும், ஹிட்லருக்கும் நியமிக்கப்பட்டிருந்தது. உபத்திரவ காலத்தின்போது நடைபெறும் மூவருடைய பொல்லாத ஆட்சி இவ்வாறுதான் முடிவுக்கு வரும்.

எனினும் தேவன் அவர்களுடைய கொடுமையிலிருந்து வறியவரை விடுவித்து, பெரிய குடும்பத்தைக் கொடுத்து அவர்களை ஆசிர்வதிப்பார். நல்ல மனிதர்கள் இதனைக் காண்பார்கள், பெரு மகிழ்ச்சி அடைவார்கள், துன்மார்க்கர் காண்கிற போது, அவர்கள் பேசுவதற்கு வார்த்தையின்றி வாயடைத்துப் போவார்கள் (இது அவர்களுடைய வழக்கத்துக்கு மாறானது).

மனிதர்களுடைய வாழ்வும் தேசங்களுடைய நிலையும் நற்பேறு அடைவதன் பின்னணியில் தேவனுடைய கரம் இருக்கிறது என்பதை **ஞான முள்ளவன் கண்டு**, வரலாற்றிலிருந்தும் தற்கால நிகழ்வுகளிலிருந்தும் பாடங்களைக் கற்றுக்கொள்கிறான். குறிப்பாக, அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிகிற மக்களோடு அவர் கிருபையோடு நடந்து கொள்வதைக் காணும் அவர்கள் சிந்தித்துச் செயல்புரிவார்கள்.

சங்கீதம் 108: உதவி செய்யும்! விரைந்து உதவி செய்யும்!

இந்தச் சங்கீதம் நன்கு அறிமுகமான ஒலியை எழுப்புமென்றால், அதில் வியப்படைவதற்கு ஒன்றுமில்லை. முதல் ஐந்து வசனங்கள் கிட்டத்தட்ட சங்கீதம் 57:7-11 ஆகிய வசனங்களைப் போலவே இருக்கின்றன; கடைசி எட்டு வசனங்கள் சங்கீதம் 60:5-12 ஆகிய வசனங்களோடு பெரும்பாலும் ஒத்துப் போகின்றன. துதி செலுத்துதல், மன்றாடுதல், வாக்குறுதி, பிரச்சினை, மீண்டும் மன்றாடுதல், இறுதியாகப் பிரகாசமுள்ள எதிர்பார்ப்பு ஆகியவை இந்தச் சங்கீதத்தில் அடுத்தடுத்து வருகின்றன.

துதி செலுத்துதல் (108:1-5)

108:1,2 கர்த்தருடைய இடைவிடாத அன்பிற்காகவும், உண்மைத் தன்மைக்காகவும் பாடலாசிரியன் அவருக்குத் **துதிகளைச்** செலுத்தத் தீர்மானித்து, அதில் நிலைத்திருக்கிறான். உன்னதமானவரை உயர்த்திப் பாடவும் கீர்த்தனம் பண்ணவும் அவன் ஆயத்தமாயிருக்கிறான். பொழுது புலர்வதற்கு முன், இன்னும் இருள் சூழ்ந்திருக்கிறது, அப்பொழுது அவன் தனது ஆத்துமாவை எழுப்புகிறான்; அவனுடைய சுரமண்டலமும் வீணையும் அமைதியாக உறங்கி ஓய்வெடுத்துக்கொண்டிருந்தது போதும், அவை துதிப் பாடலின் மூலமாக காலைப் பொழுதை வாழ்த்தி வரவேற்க வேண்டும். அது நல்ல எண்ணமே - துதி செலுத்தி ஒவ்வொரு நாளையும் தொடங்குதல்!

108:3 அவன் தான் பாடுவதை வீட்டிற்குள்ளே மறைவாகவோ, தன்னுடைய சொந்த அயலகத்தாரோடு மட்டுமோ எல்லைக்குட்படுத்த விரும்பவில்லை. அவன் எங்கெல்லாம் செல்லுகிறானோ அங்கெல்லாம் அவன் கர்த்தரைத் தொழுதேத்துவதை மக்கள் கேட்பார்கள், எல்லா இனத்தாரும் அவன் துதித்துப் பாடுவதை எதிரொலிப்பார்கள். நாமும் இவ்விதத் தீர்மானம் செய்கிறவர்களாக விளங்க வேண்டும்.

108:4,5 கர்த்தரைக் குறித்து, தாவீது இவ்வளவு உற்சாகத்துடன் இருப்பதன் காரணம் என்ன? ஏனெனில் அவருடைய **கிருபையின்** அளவு **வானங்களுக்கு** மேலாக உயர்ந்தோங்குகிறது, அவரது சத்தியம் ஆகாய மட்டும் உயர்ந்திருக்கிறது. அவருடைய மேதகைமைக்கு ஏற்ற வண்ணம் அவருக்குத் துதி செலுத்தப்பட வேண்டும். இவ்விதமாக அதாவது **வானங்களுக்கு மேலாக** அவர் **உயர்த்தப்பட வேண்டும்**, அவருடைய **மகிமை பூமியனைத்தின் மேலும் உயர்ந்திருக்க வேண்டும்.**

பெருமகிழ்ச்சி அடைந்தவனாகத் தாவீது கர்த்தரை உயர்த்திப் பேசுவதைக் கேட்கும் நாம், ஒருவர் ஏன் இவ்விதமாக எழுதியிருக்கிறார் என்பதைப் புரிந்துகொள்வோம்.

> ஜெபத்தைக் காட்டிலும் துதிசெலுத்துதல் அதிக தெய்வீகமானது;
>
> ஜெபம் விண்ணிற்கு நேரான பாதையைச் சுட்டிக்காட்டுகிறது.
>
> துதிசெலுத்துதல் ஏற்கனவே விண்ணகத்தில் இருக்கிறது.

மன்றாட்டு (108:6)

இப்பொழுது அவன் விண்ணப்பத்தை ஏறெடுக்கிறான். எதிரிகளின் படைகள் நாட்டைத் தாக்கிக் கொண்டிருக்கின்றன; சூழ்நிலை அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது. இயற்கைக்கு அப்பாற்பட்ட

வகையில் அருஞ்சாதனை என்று தோன்றும் வெற்றிகளை இஸ்ரவேல் நாடு அடிக்கடி பெற்று வந்தது, இப்பொழுது அது எங்கே போயிற்று என்று தெரியவில்லை. ஆகவே கர்த்தர்தாமே தமக்குப் பிரியமானவர்களைக் காப்பாற்ற வேண்டும், தாக்குதல் நடத்துகிற எதிரிகளைத் திரும்பிச் செல்லும்படி செய்ய வேண்டும் என்று அவன் விண்ணப்பிக்கிறான்.

வாக்குறுதி (108:7-9)

108:7,8 இஸ்ரவேல் மீதும் புறவின தேசங்கள் அனைத்தின் மீதும் தாமே சர்வ அதிகாரமும் உடையவர் என்று தேவன் தமது தூய ஆலயத்தில் இருந்து அமைதியோடும் கம்பீரத்தோடும் உரிமை பாராட்டுகிறார். மேசியாவின் ஆட்சியில் யாக்கோபின் கிணறு இருக்கக்கூடிய **சீகேம்** மாநிலம் இடம்பெற்றிருக்கும்; யாக்கோபு தன்னுடைய கால்நடைகளுக்குக் கூடாரங்கள் கட்டியிருந்த **சுக்கோத்தின் பள்ளத்தாக்கும்** அதில் இடம்பெற்றிருக்கும் (ஆதி. 33:17); மேலும் மேய்ச்சல் நிலங்கள் மிகுந்ததும், மருந்துகள் செய்யக்கூடிய பிசின்கள் இருக்கக்கூடியதுமான உயர்ந்த பீடபூமியாகிய **கீலேயாத்தும்** அதில் இடம்பெற்றிருக்கும். யோர்தான் ஆற்றின் இருபுறமும் நிலப்பகுதியுடைய **மனாசே** அவ்வாட்சியில் காணப்படும். அவ்வரசைப் பாதுகாக்கும் முக்கிய கோத்திரமாகிய **எப்பிராயீம்** தலைக்கவசமாக விளங்கும். ஆதியாகமம் 49:10 -இல் வாக்குரைத்தபடி **யூதா** அவ்வரசின் தலைநகராக விளங்கி **நியாயப்பிரமாணத்தைச்** செயல்படுத்தும்.

108:9 புறவின நாடுகள் மூன்று குறிப்பிடப்பட்டுள்ளன. அவையாவன: **மோவாப், ஏதோம்** மற்றும் **பெலிஸ்தியா.** புறவின நாடுகளும் அவ்வரசில் அடங்கியிருக்கும் என்பதற்கான அடையாளமாக இவை குறிப்பிடப்பட்டுள்ளன. **மோவாப்** அவ்வாட்சியின் **பாதபாத்திரம்,** ஏளனத்தையும் கட்டுப்பாட்டையும் குறிக்கும் உருவகம். அவர் தமது **பாதரட்சையை ஏதோமின்மேல் எறிவார்.** அவரது உரிமையையும், அதன் அடிமைத்தனத்தையும் இகழ்ச்சியையும் இச்சொற்கள் குறிக்கின்றன. **மோவாபும் ஏதோமும்** கப்பல் செலுத்தும் அடிமை நாடுகளாக இருக்கையில், **பெலிஸ்தியா** நொறுக்கப்படும், **"பெலிஸ்தியாவின் மேல் ஆர்ப்பரிப்பேன்."**

பிரச்சினை (108:10,11)

ஏதோமின் மேல் வெற்றி வாக்குரைக்கப்பட்டவுடன் அச்செய்தியின் நிறைவேறுதலை எண்ணினவனாக தாவீது அமைதியற்றவனாகிறான். பெத்ரா என்று அறியப்பட்ட அதன் தலைநகர் சேலா நெருங்க இயலாததும், தாக்குவதற்கு முடியாததுமான பெயர்பெற்ற நகரமாயிருந்தது. யாரேனும் தன்னை ஏதோமுக்கு வழிநடத்திச் செல்ல வேண்டுமென்று அவன் வாஞ்சிக்கிறான். அப்பொழுது அதன்மேல் அடைகிற வெற்றியால் அவனால் ஆர்ப்பரித்துக் களிகூர முடியுமே! ஆனால் அதில் ஒரு பிரச்சினை இருக்கிறது - தேவன் தம்முடைய முகத்தை இஸ்ரவேலுக்கு மறைத்துக்கொண்டிருக்கிறார். அவருடைய உதவி இப்போது கிடைக்கப்பெறவில்லை. அதன் விளைவாகப் பேரிடர் உண்டாயிருக்கிறது. இஸ்ரவேலின் படை போர் முகத்தை நோக்கி அணிவகுத்துச் செல்லுகிறது, ஆனாலும் தோல்வி தான். ஏனெனில் கர்த்தர் அவர்களோடு இல்லை.

மன்றாட்டு (108:12)

கர்த்தர் இல்லையேல் நம்பிக்கை இல்லை, வேறொருவராலும் அதைச் செய்யமுடியாது. மனிதனுடைய உதவியில் பயன் ஏதுமில்லை என்பதை அறியத்தக்க அளவிற்குத் தாவீது வெகுகாலம் வாழ்ந்திருக்கிறான். இஸ்ரவேலின் தேவை சந்திக்கப்படவேண்டும், போர்க்களத்தில் அதற்கு உதவி செய்யப்பட வேண்டும். இதனை தேவனே செய்ய வேண்டும் என்று அவன் வல்லமையுள்ள தேவனிடத்தில் மன்றாடுகிறான்.

நல்வாய்ப்பு (108:13)

மன்றாட்டை ஏறெடுத்தப் பாடலாசிரியன், அங்கிருந்து சென்றவுடன் வெற்றியின் ஆர்ப்பரிப்புடன் முழங்குகிறான். "தேவனாலே பராக்கிரமம் செய்வோம். அவரே எங்கள் சத்துருக்களை மிதித்துப் போடுவார்." தமக்கு அன்பானவர்களுக்கு வெற்றியைத் தருபவரும் அவரே. இதுவே நம்பிக்கை, விசுவாசத்தால் பிறந்தது. திருவாளர் பவுல் கெர்ஹார்ட் இதனைச் சொல்திறம் மிக்க வகையில் வெளிப்படுத்தியிருக்கிறார்:

மறைந்து தாக்கிடும் பகைவர்கள்
புயலென வந்திடினும்
இறைவன் என்னுடன் இருக்கின்றார்
அஞ்சவே மாட்டேன்.
மன்னன் இயேசுவை எண்ணிநான்
அழைக்கையில் வந்திடுவார்
இன்னல் புரிந்திடும் பேய்க்கூட்டம்
சடியியில் மறைந்திடுமே.
உன்னதர் இயேசுவென் உற்றநல்
நண்பராய் இருக்கின்றார்

அன்பினைப் பொழிந்து அணைத்திடும்
மாவல்ல நேசரவர்.
வெள்ளம்போல் பகைவர் பாய்ந்து
வருகின்றார் பயமில்லை
வள்ளல்யேசு தடையாய் நிற்கிறார்
நன்றி சொல்வேன்.

சங்கீதம் 109: இறைவனின் பகைவர் அடையவிருக்கும் முடிவு

சாபத்தைக் கூறுகிற சங்கீதங்கள் எல்லாவற்றிலும் இந்தச் சங்கீதம் இணையற்ற வகையில் முதல் நிலை வகிக்கிறது. வேறு எந்தச் சங்கீதமும் இறைவனுடைய நியாயத்தீர்ப்பு வழங்கப்பட வேண்டும் என்று இந்த அளவுக்குக் கடுமையான கண்டனத்தோடு வேண்டிக்கொண்டதில்லை, மேலும் இந்த அளவுக்கு முழுமையான விவரங்களோடு வேண்டிக்கொண்டதும் இல்லை. பாடலாசிரியன் தனது பகைவர்மேல் வெவ்வேறு வகையான தண்டனைகள் செலுத்தப்பட வேண்டும் என்று ஒளிவுமறைவு இல்லாமல் புனைதிறம் மிக்க வகையில் கேட்பது வாசகருடைய ஆர்வத்தைத் தூண்டிவிடாமலோ கவர்ந்திழுக்காமலோ இருக்காது.

109:1-3 சங்கீதம் நிராயுதபாணியாக்கும் மென்னயத்தோடு தொடங்குகிறது. தாவீது தனது **துதிக்குரிய தேவனுடைய** உதவிக்காக வேண்டுகிறான், அதாவது, அவன் துதிக்கிற தேவனுடைய உதவிக்காக வேண்டுகிறான். அவனுடைய பகைவர் அவன்மேல் கெடுநோக்குடன் கூடிய சொற்களால் தாக்குதல் நடத்திக் கொண்டு இருக்கிறார்கள், எல்லாவிதமான பொய்யான குற்றச்சாட்டுகளையும் சுமத்துகிறார்கள். எல்லாத் திசைகளிலிருந்தும் பகையுண்டாக்கும் சொற்கள் அவனை நோக்கி எய்யப்படுகின்றன. இவையெல்லாவற்றிலும் கடினமானது என்னவென்றால், இந்தத் தாக்குதல்கள் யாவும் நேர்மையற்றவை என்பதே.

109:4,5 தாவீது தன்னைத் தாக்கியவரிடத்தில் நட்பும் தயவும் பாராட்டி வந்தான், அதற்குப் பதிலாக அவன் எதைத் திரும்பப் பெறுகிறான்? இடைவிடாமல் அவன்மேல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகின்றன. அதே நேரத்தில் அவன் அவர்களுக்காக வேண்டுதல் செய்கிறான். தயவுக்குப் பதிலாக அவர்கள் அவனை அவமதிக்கிறார்கள், நட்புக்குப் பதிலாகப் **பகைமை** பாராட்டுகிறார்கள்.

109:6,7 இந்தத் தருணத்தில் அவன் தனது எழுதுகோலை அமிலத்தில் தோய்த்ததாகத் தோன்றுகிறது. இது முதல் அவனுடைய காயப்பட்ட ஆத்துமாவிலிருந்து மரணத்தை விளைவிக்கக் கூடிய கடுமையான சாபங்கள், அம்புகள் போலப் பாய்ந்து வருகின்றன. முதல் ஐந்து வசனங்களில் பல பகைவர்கள் குறிப்பிடப்பட்டுள்ளார்கள், அவர்களில் ஒருவனை நோக்கிப் பாடலாசிரியன் தனது கவனத்தை ஒருமுகப்படுத்துகிறான்.

இறுதியில் அந்த மனிதனைப் பிடித்து விசாரிக்கும்படி கொண்டு வருவார்கள். அவ்வாறு நடக்கும் நேரத்தில், **துஷ்டன்** அவனுக்கு எதிராகச் சாட்சி கூறும்படியும், பிசாசின் மனிதன் அவனுடைய வழக்கறிஞனாகச் செயல்படும்படியும் கர்த்தர் தாமே சூழ்நிலைகளை ஏற்படுத்துவாராக. விசாரணையின் முடிவில் அவன் **"குற்றவாளி"** என்று தீர்ப்பு வழங்கப்பட வேண்டும். அவன் தீர்ப்பை எதிர்த்து முறையிடுவானானால், அது நீதிமன்ற அவமதிப்பாகக் கருதப்பட்டு, தண்டனை அதிகமாக்கப்பட வேண்டும்.

109:8-10 அவனுடைய வாழ்க்கையைப் பொறுத்தவரை, அது குறுகிய காலமாகப் போகக் கடவது, அவனுடைய வேலையை வேறொருவன் பெறக்கடவன். இந்தக் குறிப்பிட்ட சாபம் யூதாசையும் சீடர்கள் கூட்டத்தின் பொருளாளர் பதவியையும் குறித்துப் பேசுவதாக அப்போஸ்தலர் 1:20 - ஆம் வசனம் மேற்கோள் காட்டுகிறது:

> சங்கீதப் புத்தகத்தில் இது எழுதப்பட்டுள்ளது:
>
> "அவனுடைய இருப்பிடம் கைவிடப்பட்டுப் போவதாக. அதில் ஒருவனும் குடியிருக்காது இருப்பானாக." "அவனுடைய தலைமைத்துவ இடத்தை வேறொருவன் பெற்றுக் கொள்ளட் டும்." (இலகு தமிழ்).

இச்சங்கீதம் தாவீதையும் அவனுடைய பகைவனையும் குறித்து மட்டுமே பேசவில்லை, மேசியாவையும் அவரைக் காட்டிக் கொடுத்தவனையும் குறித்தும், எதிர்காலத்தில் நடக்கவிருக்கிற நிகழ்வுகளின்படி பெரும்பாலும் இஸ்ரவேலையும் அந்திக் கிறிஸ்துவையும் குறித்தும் கூடப் பேசுகிறது என்னும் உண்மை இதன் கடுமையை நாம் புரிந்து கொள்ளும்படி செய்கிறது.

அந்தப் பகைவனின் குடும்பத்தைப் பொறுத்த வரையில், அவனுடைய **பிள்ளைகள் திக்கற்றவர்களும்** அவனுடைய **மனைவி விதவையுமாகக்கடவர்கள்**. அதாவது அவனுடைய **பிள்ளைகள்** நாடோடிகளாக **அலைந்து திரிந்து**, தாங்கள் வாழ்ந்த வீடு பாழாகி அங்கிருந்து துரத்துண்டு பிச்சையெடுப்பார்கள்.

109:11-13 அவனுடைய சொத்துக்களைப் பொறுத்தவரை, **கடன் கொடுத்தவன் அவ**

னுக்கு உள்ளதெல்லாவற்றையும் எடுத்துக் கொள்வான், அவன் ஈட்டியது அனைத்தையும் **அந்நியர்** தங்களுக்குள் பங்கிட்டுக்கொள்வார் கள்.

அவன் இரக்கம் பாராட்டாததன் காரணமாக, அவனுக்கு ஒருவரும் **இரக்கம்** பாராட்டமாட்டார் கள், தகப்பனற்ற **பிள்ளைகளுக்காக** ஒருவரும் பரிதவிக்கவும் மாட்டார்கள். அவனுடைய குடும் பத்தின் பெயர் ஒரு தலைமுறை முடிவடைவதற் குள் மறைந்து போகட்டும். (கிழக்கத்திய எண் ணத்தின்படி, கொடுக்கப்படும் தண்டனைகளில் இது மிகவும் அவமானத்துக்குரிய தண்டனை யாகும்.)

109:14,15 அவனுடைய மூதாதையரும் கூட குற்றமற்றவர்கள் அல்லர். **கர்த்தர்தாமே** அவனு டைய **பிதாக்களின் அக்கிரமத்தை** நினைவுகூரு வாராக... **அவனுடைய தாயின் பாவம் நீங்காம லிருப்பதாக.** அவர்கள் என்ன வகையான பாவம் செய்தார்கள் என்று குறிப்பிட்டுச் சொல்லப்பட வில்லை. ஆனால் அவர்களுடைய குற்றம் மிகுந்த சினமூட்டக்கூடியதாக இருந்திருக்கும். ஏனெனில் பாடலாசிரியன், கர்த்தர் அவர்களு டைய பாவங்களை ஒருக்காலும் மறந்துவிடக் கூடாது என்று தொடர்ந்து கேட்கிறான். அதனி மித்தம் **அவர்களுடைய பெயர் பூமியிலிராமல் நிர்மூலமாகட்டும்.**

109:16-20 பதினாறாவது வசனத்தில் பொல் லாத மனிதனின் மனவேதனையளிக்கக் கூடிய குற்றம் உரைக்கப்பட்டுள்ளது. பிறருக்குத் தயவு காட்டக் கூடிய மனதற்றவனாகவே அவனுடைய வாழ்க்கை அமைந்திருந்தது. மாறாக அவன் சிறுமையும் எளிமையுமானவர்களை இடைவிடா மல் தீவிரமாகத் துன்பப்படுத்தி, மனமுடைந்த மக்களை மரணத்தை நோக்கித் தள்ளிவந்தான். இந்த வசனத்தில் யூதாசைக் காண்பது எளிது. தீய எண்ணம் கொண்டவனாக அவன் பாவமற்ற இரட்சகரை சிலுவைக்குச் செல்லும்படி தூண்டி னான்.

ஆனால் நன்னெறி சார்ந்த விசயங்களில் கடுமை குறையாத பழிக்குப் பழி வாங்கும் பிரமாணம் நடைமுறையில் உள்ளது. மனிதன் எதை விதைக்கிறானோ அதையே அறுவடை செய் வான். அவ்வித விளைவைத் தவிர்க்கவியலாது. பாவத்திற்கான தண்டனை வழங்கப்படாமற் போகாது. காரண காரியங்களுக்கான பிரமாணம் முழு அளவில் செயல்படுத்தப்பட வேண்டும் என்று இங்கு பாடலாசிரியன் விண்ணப்பிக்கிறான். பிறரைச் சபிக்க வேண்டும் என்று அந்தக் கயவன் விரும்பினான்; இப்பொழுது அவன் சபித்தவை யாவும் அவன்மேல் திரும்பட்டும். பிறர் ஆசிர் வாதங்களை அனுபவிப்பதை அவன் விரும்ப வில்லை; இப்பொழுது ஆசிர்வாதங்கள் அவனை விட்டுத் தொலைதூரம் விலகிப் போகட்டும். மற்ற வர்களைச் சபிப்பதில் அவன் பெருமைகொண்ட வனாக, அதனைத் தனது மேலாடையைப் போல மதித்து வந்தான்; இப்பொழுது அந்தச் சாபங்கள் கடற்பஞ்சைத் தண்ணீர் ஊடுருவிச் செல்வது போல அவனுடைய வாழ்க்கையில் ஊடுருவட் டும். அவை அவனுடைய ஒவ்வொரு உள்ளுறுப்பை யும் ஊடுருவிச் சென்று, எலும்புகளின் நிணத்திற் குள்ளும் செல்லட்டும். அவன் உடுத்தியிருக்கும் ஆடையைப் போல, சாபங்கள் அவனை மூடிக் கொள்ளட்டும். "அவனால் கழற்ற முடியாத கச்சை யைப் போல அவை அவனை ஒட்டிக்கொள்ளட் டும்" (நாக்ஸ்).

தாவீதின் மேல் குற்றஞ்சாட்டியவர்கள், அவன் மேல் அவதூறு கூறியவர்கள் யாவரும் இவ்வித மாகச் சபிக்கப்படவேண்டும் என்பதே தாவீதின் விருப்பம். கொடுக்கப்பட வேண்டும் என்று அவன் நினைத்த எந்தத் தண்டனையின் விவரத்தையும் அவன் கூறாமல் விட்டுவிடவில்லை. "தங்களு டைய பகைவர் மேல் செலுத்த வேண்டும் என்று மனிதர்கள் நினைக்கக் கூடிய எல்லாத் தண்ட னைகளும் உண்மையில் இங்கு சொல்லப்பட்டு விட்டன" என்று ஒருவர் இதனை விவரிக்கிறார்.

109:21-25 இரண்டு மன்றாட்டுகளை ஏறெடுத் துப் பின்னர், பொங்கியெழும் புகழுரையோடு தாவீது பாடலை முடிக்கிறான். முதலாவது, தொல்லைகள் எல்லாவற்றிலிருந்தும் விடுதலை வேண்டுமென்று அவன் விண்ணப்பிக்கிறான். கர்த்தர் தமது நாமத்தினிமித்தம் அவனுடைய பங்கை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று விரும்பு கிறான், அதாவது தேவன்தாமே வல்லமையும் நீதியும் உடையவர் என்று மகிமைப்படுவதற்காக அவர் இதைச் செய்ய வேண்டும். தாவீதினிமித் தம் அவர் செயலாற்றும்போது, அவருடைய கிருபை நல்லது என்று மீண்டும் ஒருமுறை வெளிப்படும்.

பாடலாசிரியனின் அவலநிலை புதைகுழியே யாகும். அவன் **சிறுமையும் எளிமையுமானவன்.** மேலும் அவனுடைய **இருதயம் அவனுக்குள் குத்துண்டும்** இருக்கிறது. அவனுடைய வாழ்க்கை நீண்ட நிழலைப் போல தெளிவற்றதாயிருக் கிறது. ஒருவன் தன்னுடைய கையிலிருக்கும்

வெட்டுக்கிளியைப் பறக்கவிடுவதுபோல் அவனுடைய வாழ்க்கை எளிதில் அசைக்கப்படக் கூடிய தாயிருக்கிறது. நீண்டகால **உபவாசத்தால்** அவனுடைய முழங்கால்கள் தொய்ந்து போய் உள்ளன, அவனுடைய உடல் எலும்பும் தோலுமாகக் காணப்படுகிறது. அவனுடைய பரிதாப நிலையைக் கண்டு அவனது பகைவர்கள் ஏளனம் செய்கிறார்கள். அவர்கள் அவனைப் பழித்துரைக்கும் எண்ணத்துடன் தங்கள் **தலைகளைத் துலுக்குகிறார்கள்**.

109:26-29 அவனுடைய இரண்டாவது மன்றாட்டு, அவனுடைய பகைவருடைய முன்னிலையில் அவன் நியாயமானவன் என்பதைக் கர்த்தர் மெய்ப்பிக்க வேண்டும் என்பதாகும். யெகோவா அவன் நிமித்தம் உதவிபுரியவும் விடுவிக்கவும் வருவாரானால், அச்செயல் தெய்வீகக் குறுக்கீடு என்பதை அவனைத் தாக்குபவர்கள் **அறிவார்கள்**, அது கர்த்தருடைய கரம் என்பதை உணருவார்கள். கர்த்தர் ஆசிர்வதிக்கையில், பகைவர்களுடைய சாபம் என்ன வேறுபாட்டை உண்டுபண்ணும். அத்தருணத்தில் அவர்கள் வெட்கமடைவார்கள். பாடலாசிரியனோ மகிழ்வடைவான். அவர்கள் இலச்சையாலும் குழப்பத்தாலும் மூடப்படுவார்களாக, ஆம். இரண்டாகக் கிழிக்கப்பட்ட சால்வையைப் போல அவை அவர்களை மூடட்டும்.

109:30,31 இறுதியாக, தனது மன்றாட்டுகளுக்குக் கர்த்தர் விடை தருகிறார் என்பதை அறிந்த தாவீது அவரைத் துதிக்கும்படி தீர்மானிப்பதைக் குறித்துக் கேட்கிறோம். அது சாதாரண துதி அல்ல, மிகப்பெரிய நன்றிபாராட்டுதலாகும். அது தனிப்பட்டது அல்ல, திரளான மக்கள் நடுவில் ஏறெடுப்பதாகும். யெகோவா **எளியவனுடைய வலதுபாரிசத்தில் நின்று**, அவனை **ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்க** எண்ணங்கொண்டவர்களிடத்திலிருந்து விடுதலை பண்ணுவார் என்பதே அந்நன்றியுரையின் கருப்பொருள். கர்த்தரைப் பாதுகாவலராகப் பெற்றிருக்கும் நிலை பெருமளவு மனவுறுதியைத் தருகிறது. திருவாளர் F. B. மேயர் கூறுகிறார்:

> ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டவன் தேசத்தின் இணையற்றபடி உயர்ந்தவராயிருக்கிறவரின் கரத்தின்மேல் சாய்ந்து அவரது மன்றத்துக்குள் நுழைவானாயின் அவன் பெற்றிருக்கிற துணிவு எவ்வளவு பெரியது? எல்லோருக்கும் நீதியரசராக விளங்குபவர் அவனை நீதிமானாக அறிக்கை செய்யும்படி அவனருகில் நிற்பாரானால் அவனைக் குற்றவாளி என்று கூறுவதில் என்ன பயன்? [71]

சாபத்தை உரைக்கும் சங்கீதங்கள்

109 -ஆவது சங்கீதம் உண்மையாக என்ன கூறுகிறதோ அதை இதற்கு மேலும் சொல்ல முடியாது. இவ்வாறான சாபமிடும் சங்கீதங்களில் அடங்கியிருக்கிற சிக்கலை எதிர்கொள்ளாமல் அப்படியே விட்டுச் செல்லுவது அறிவார்ந்த வகையில் நேர்மையான செயல் அன்று. பழிதீர்க்க வேண்டும், தண்டனை கொடுக்க வேண்டும் என்னும் மனப்பாங்குடன் அமைந்துள்ள சங்கீதங்களை, இறைமக்கள் மன்னிக்கவும் அன்பு பாராட்டவும் கூடிய மனப்பான்மையோடு இருக்க வேண்டும் என்று கட்டளையிடுகிற திருமறைப் பகுதிகளோடு எவ்வாறு இணக்குவிப்பது என்பதே அந்தச் சிக்கல். சாபம் உரைக்கும் சங்கீதங்களின் தலைமையிடத்தை 109 -ஆவது சங்கீதம் பெற்றிருப்பதால் அந்தச் சிக்கலை எதிர்கொள்ளுவதற்கு ஏற்ற இடம் இதுவேயாகும்.

முதலாவது, இதற்கென கொடுக்கப்பட்டுள்ள சில விளக்கங்களை நான் பட்டியலிட்டுக் காட்டுகிறேன், ஆயினும் இவை முழு மனநிறைவு அளிப்பதாக எனக்குத் தோன்றவில்லை. அதன் பிறகு, இதன் மெய்யான விளக்கம் என்று நான் புரிந்து கொண்டிருப்பதைத் தருகிறேன், இந்த விளக்கத்திலும் சில பிரச்சினைகள் உள்ளன.

தேவனுடைய பகைவர்களுக்கு என்ன நிகழும் என்று இங்கு முன்னுரைக்கப்பட்டுள்ளனவே தவிர, பொல்லாதவர்களைப் பழிக்குப்பழி வாங்க வேண்டும் அல்லது அவர்கள்மேல் தண்டனை செலுத்தப்பட வேண்டும் என்னும் நோக்கத்துடன் ஏறெடுக்கப்பட்ட விண்ணப்பங்கள் என்று இந்தச் சாபங்களைக் கருத வேண்டியதில்லை என்று கருத்து உரைக்கப்பட்டுள்ளது. திருவாளர் அங்கர் இவ்வாறு கூறுகிறார்:

> பரிசுத்த மனிதர்கள் தனிமனிதர்கள் சிலருக்கு எதிராகக் கூறியிருக்கும் சாபங்கள் பழிதீர்ப்பவை என்றோ, சீற்றத்துடன் கூடியவை என்றோ, பொறுமையிழந்து உரைக்கப்பட்டவை என்றோ சொல்லமுடியாது. மாறாக அவை தீர்க்கதரிசனங்களேயாகும், ஆகவே தேவனால் குற்றமென்று சொல்லப்பட்டவையல்ல. [72]

இதுபோன்ற பகுதிகளில் ஏவல் வினைகளில் கூறப்பட்டுள்ளவை போல, பல சொற்கள் எதிர்கால வினைகளில் சரியாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

இரண்டாவது விளக்கம், தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவன் என்னும் நிலையில் தாவீது பேசினான் என்பதாகும். அவன் பெற்றிருந்த தகுநிலையின் காரணமாக, அவன் தேவனுடைய பிரதிநிதியாவான். ஆகவே இவ்விதக் கடுமையான தண்டனைகளைக் கூற அவன் அனுமதிக்கப்பட்டிருந்தான். (சாபமிடும் பகுதிகளைக் கொண்ட எல்லாச் சங்கீதங்களும் தாவீதால் எழுதப்பட்டவை அல்ல என்பதை நாம் இங்கு கவனிக்க வேண்டும்.)

மேலும் சிலர், இப்பகுதிகளின் கடுமையை ஒப்புக்கொள்ளாமல் இவை யாவும் இந்த மனிதர்கள் எவ்வாறு எண்ணங்கொண்டிருந்தார்கள் என்பதைக் கூறும் வரலாற்றுப் பதிவுகள் என்று கருதுகிறார்கள். இவ்விதமான கருத்தைப் பற்றி திருவாளர் பார்னஸ் எழுதுகிறார்:

> உண்மையில் பாடலாசிரியனின் மனதில் எழுந்த எண்ணங்களே இங்கு பதிவு செய்யப்பட்டிருக்கும் விவரங்களாகும். மேலும் ஓரளவு மட்டுமே பரிசுத்தமாக்கப்பட்ட மனித இயல்பு எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதற்கான எடுத்துக்காட்டுகளாக இவை நமக்காகப் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்தக் கருத்தின்படி உயிரூட்டம் தருகிற ஆவியானவர், தாவீது, ஆபிரகாம், யாக்கோபு, பேதுரு ஆகியோரின் செயல்களுக்கு எவ்வாறு பொறுப்பாளி அல்லவோ, அதைப்போல பாடலாசிரியன் இந்தப் பகுதியில் வெளிப்படுத்தியுள்ள எண்ணங்களுக்கும் அவர் பொறுப்பாளி ஆகமாட்டார்.. உயிரூட்டம் பெற்ற வேத பகுதிகளை எழுதிய ஆசிரியர்கள் முழுவதும் பாவமற்றவர்கள் என்று நாம் கருத வேண்டுமென்று உயிரூட்டத்தைக் குறித்த கோட்பாடு கற்பிப்பதில்லை... இந்தக் கருத்தின்படி, பதிவு செய்யப்பட்டுள்ள விவரங்கள் நாம் மாதிரிகளாகப் பின்பற்றுவதற்காகக் கொடுக்கப்படவில்லை.[73]

இன்னும் சில விளக்கங்களும் சொல்லப்படுகின்றன. இஸ்ரவேல் இனம் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட இனம், ஆகவே இஸ்ரவேலின் பகைவர் தேவனுடைய பகைவர் என்பது நினைவுபடுத்தப்பட்டு, அதனடிப்படையில் சாபமிடுகிற வசனங்களைக் கொண்ட சங்கீதங்கள் நேர்மையானவை என்று விளக்கமளிக்கப்படுகிறது. குற்றங்கள் சரியான முறையில் தண்டிக்கப்பட வேண்டும் என்று நமக்குள்ளாக ஏதோ ஒன்று நீதியாக ஒப்புக்கொள்கிறது. பாவிகள் என்னவிதமான தண்டனைக்குத் தகுதியானவர்கள் என்று பாடலாசிரியர்கள் கூறுகிறார்களே தவிர, அவர்கள் கூறியிருப்பவை எவ்விதப் பழிவாங்கும் நோக்கத்துடன் சொல்லப்பட்டவையல்ல.

நான் முன்னர் கூறியது போல மேலே சொல்லப்பட்டுள்ள விளக்கங்களில் எதுவும் முழு மன நிறைவளிக்கவில்லை. சாபமிடுதலைக் கொண்ட சங்கீதங்கள் *நியாயப்பிரமாணத்துக்குக் கீழ் வாழ்ந்த யூதனுக்கு ஏற்புடைய மனப்பாங்கை வெளிப்படுத்தியதேயல்லாமல், கிருபைக்குக்கீழ் வாழும் கிறிஸ்தவனுக்கு ஏற்புடைய மனப்பாங்கை வெளிப்படுத்தவில்லை* என்னும் விளக்கம் மிகவும் தகுதியானதாக எனக்குத் தோன்றுகிறது. புதிய ஏற்பாட்டின் வெளிப்பாட்டின் வெளிச்சத்தில் நாம் இந்தச் சங்கீதங்களைக் காண்பதாலேயே இவை நமக்கு மிகவும் கடுமையானவையாகத் தோன்றுகின்றன. தாவீதும் பிற பாடலாசிரியர்களும் புதிய ஏற்பாட்டைப் பெறவில்லை. திருவாளர் ஸ்க்ரோஜி குறிப்பிட்டது போல:

> .... நியாயப்பிரமாணமானது நற்செய்திக்கு நேர்மாறானது அல்லவென்றாலும் அதற்கு இணையாகாது; நியாயப்பிரமாணத்தை நிறைவேற்ற கிறிஸ்து வந்தார், மேலும் அவர் அதனைக் கடந்து போகச் செய்யும்படியும் வந்தார்; இவ்விதமாகத் தற்போதைய காலப்பாகுபாட்டைக் காட்டிலும் முந்தைய காலப்பாகுபாடு தாழ்வானது என்னும் உண்மை உடனடியாக நன்கு அறியப்படும். சங்கீதங்களில் காணப்படும் பகைமை மற்றும் பழிக்குப் பழிவாங்கும் உணர்வுகளை நாம் பவுல் எழுதிய மடல்களின் தரத்தின்படி நியாயந்தீர்க்காதபடி எச்சரிக்கையாக இருக்கக்கடவோம்.[74]

ஒரு மனிதனுடைய குடும்பத்தினர் தண்டனை பெறும்படி சேர்க்கப்பட்டிருப்பது வரம்பை மீறிய செயலாகக் காணப்படுகிறது, ஆனால், பிதாக்கள் செய்த அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்திலும், பிள்ளைகளுடைய பிள்ளைகளிடத்திலும் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிப்பதாக தேவன்தாமே அச்சுறுத்தியிருப்பதால் அது நியாயமானது என்று மெய்ப்பிக்கப்பட்டுள்ளது (யாத். 20:5; 34:7; எண். 14:18; உபா. 5:9). நமக்குப் பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும், ஆவிக்குரிய ஆளகையின் பிரமாணங்களுக்குக் கீழ் ஒரு மனிதனுடைய குடும்பத்தினரிடத்திலும் அவனுடைய பாவங்கள்

விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய வகையில் செயல்படுகின்றன. எந்தவொரு மனிதனும் தனித் தீவு அல்ல; அவனுடைய செய்கைகள் பிறரைப் பாதிக்கக் கூடியவை, அவனையும் அவை பாதிக் கின்றன.

கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தில் நாம் இப்பொழுது வாழ்கிறோம். இக்காலப் பாகுபாடு சென்றபிறகு, தேவன் நீதியைச் சரிக்கட்டும் காலம் தொடங்கும், சாபமிடும் சங்கீதங்களின் மொழி மீண்டும் இறைமக்களுடைய உதடுகளில் பிறக்கும். எடுத்துக்காட்டாக, உபத்திரவ காலப் பரிசுத்தவான்கள், "பரிசுத்தரும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிற வர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக் குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர்" என்று முறையிடு வார்கள் (வெளி. 6:10).

இறுதியில் ஒரு கருத்து! சங்கீதங்களில் உரைக்கப்பட்டுள்ள சாபங்களின் கடுமை, நாம் சாபத்திலிருந்தும் சபிப்பதிலிருந்தும் நித்திய காலமாக விடுதலை பெறும்படி எல்லாச் சாபத் தையும் தமது சரீரத்தில் ஏற்று, சிலுவையில் தொங்கியவராகச் சகித்த கர்த்தரைப் போற்றிப் பாராட்ட நம்முடைய இருதயங்களை மென்மை யான வகையில் ஆயத்தப்படுத்தட்டும். இந்தச் சங்கீதங்களில் விவரிக்கப்பட்டுள்ள தண்டனை கள் யாவற்றையும் ஒன்றுகூட்டிப் பார்த்தாலும், இவை யாவும் நமக்குப் பதிலாளாகக் கர்த்தர் சகித்த வீழ்ச்சியுறும் பெரும் பனிப்பாறை போன்ற ஆக்கினைக்கு ஒப்பானவையல்ல, அவை வெறு மனே நலிந்த மங்கலான தண்டனைகளேயாகும்.

சங்கீதம் 110: தாவீதின் குமாரனும் தாவீதின் கர்த்தரும்

தாவீது இயற்றிய இந்தச் சங்கீதம், பழைய ஏற்பாட்டின் எந்தவொரு பகுதியைக் காட்டிலும் கூடுதலாகப் புதிய ஏற்பாட்டில் எடுத்தாளப்பட்டுள் ளது அல்லது குறிப்பிடப்பட்டுள்ளது என்னும் தனிச்சிறப்பைப் பெற்றுள்ளது. இது மேசியாவைப் பற்றிய சங்கீதம் என்பது மிகத் தெளிவாக விளங்கு கிறது - முதலாவது, இறைவனாகிய திருத்தந்தை யின் வலப்புறத்தில் அவர் மகிமை நிறைந்தவரா கக் காட்சி தருகிறார், பிறகு உலகளாவிய அர சாட்சியின் செங்கோலை ஏந்தும் வண்ணம் மகி மையின் அரசராகப் பூமிக்குத் திரும்பும் காட்சி, மேலும் மெல்சேதேக்கின் முறைமையின்படி நித் திய ஆசாரியராகத் தோன்றும் காட்சி.

110:1 முதலாவது வசனத்தில் கர்த்தர் தனது ஆண்டவரிடம் கூறுவதாகத் தாவீது மேற்கோள் காட்டுகிறான்:

> **நான் உம்முடைய சத்துருக்களை உமக் குப் பாதபடியாக்கிப் போடும்வரைக்கும், நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட் காரும்.**

இந்த வசனத்தைப் புரிந்துகொள்வதற்கான முக்கிய குறிப்பு, கர்த்தர் என்னும் ஒரே சொல் லால் குறிப்பிடப்பட்டுள்ள இரு வேறு நபர்கள் யார் என்பதை அறிந்து கொள்வதிலேயே இருக்கிறது. (தமிழில் 'கர்த்தர்' 'ஆண்டவர்' என்னும் இரண்டு சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.) முதலாவது 'கர்த்தர்' என்னும் சொல் எந்தத் தவறுக்கும் இட மளிக்காதபடி யெகோவாவைக் குறிக்கிறது.[75] ஆண்டவர் என்று குறிப்பிடப்பட்டுள்ள அடுத்த சொல், எபிரெய மொழியில் adon என்னும் சொல் லாகும், இதன் பொருள் 'எஜமான்' அல்லது 'ஆளு நர்' என்பதாகும். இச்சொல் சில இடங்களில் தேவ னுடைய பெயராகப் பயன்படுத்தப்பட்டுள்ளது, வேறு சில இடங்களில் மனிதர்களின் முதலாளி களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. அந் தச் சொல் தெய்வீக நபர் என்னும் பொருளை எப்பொழுதும் கொண்டிருப்பதில்லை. ஆயினும் இங்கு அதனைத் தொடர்ந்து வருகிற சொற் களாலே தாவீதின் ஆண்டவர் தேவனுக்குச் சம மானவர் என்பது புலனாகிறது.

ஒருநாள் இயேசு எருசலேமில் பரிசேயரோடு பேசிக்கொண்டிருந்தபோது, மேசியாவைக் குறித்த தனித்தன்மைகள் என்னவென்று அவர்கள் நம்பி னார்கள் என்னும் கேள்வியை எழுப்பினார். வாக் குத்தத்தம் பண்ணப்பட்டவர் யாருடைய வாரிசா கத் தோன்றுவார் என்பதே அவர் எழுப்பிய கேள்வி. அவர் தாவீதின் குமாரன் என்று அவர்கள் சரியா கப் பதிலுரைத்தார்கள். 110 -வது சங்கீதத்தின்படி (அது மேசியாவைக் குறித்த சங்கீதம் என்று அவர்கள் ஒப்புக்கொண்டார்கள்), மேசியா தாவீ தின் ஆண்டவரும் ஆவார் என்பதை உணர்த்தி னார். எவ்வாறு அவர் ஒரே நேரத்தில் தாவீதின் குமாரனும் தாவீதின் ஆண்டவருமாக இருக்க முடியும்? மேலும் அரசனாகிய தாவீதின் கர்த்த ரானவரை அவன் எவ்விதமாகப் பூமியில் பெற்றி ருக்க முடியும்?

மேசியா தேவனும் மனிதனும் ஆவார் என்பதே இதற்கான விடை என்பது நிச்சயம். தேவன் என் னும் நிலையில் அவர் தாவீதின் கர்த்தர் ஆவார். மனிதன் என்னும் நிலையில், அவர் தாவீதின்

குமாரன் ஆவார். இயேசு ஆளுமையில் தெய்வீகத்தையும், மனிதத் தன்மையையும் ஒருங்கே கொண்டவராக இருக்கும் நிலையில் தாவீதின் ஆண்டவராகவும் தாவீதின் குமாரனாகவும் விளங்குகிறார்.

அது பரிசேயருக்கு உண்மையை அறிவதற்கான சிறந்த தருணமாயிருந்தது. எல்லாச் சான்றுகளும் அவ்வுண்மையை வெளிப்படுத்திய போதிலும், வெகு காலமாக எதிர்பார்த்த மேசியா இயேசுவே என்பதை அவர்கள் எற்க விருப்பமற்றவர்களாயிருந்தார்கள். இதையே நாம் படிக்கிறோம்:

> அதற்கு மாறுத்தரமாக ஒருவனும் அவருக்கு ஒரு வார்த்தையும் சொல்லக் கூடாதிருந்தது, அன்று முதல் அவரிடத்தில் கேள்வி கேட்கத் துணியவில்லை (மத். 22:41-46; மாற்கு 12:35-37; லூக்கா 20:41-44).

தேவனுடைய **வலதுபாரிசத்தில்** அமர்ந்திருக்கிறவர் நாசரேத்தூரைச் சேர்ந்த இயேசுவே அல்லாமல் வேறு யாருமில்லை என்பதை ஐயத்திற்கிடமின்றிப் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் கூறியிருக்கிறார்கள் (மத். 26:64; மாற்கு 14:62; 16:19; லூக்கா 22:69; அப். 2:34,35; 5:31; 7:55,56; ரோமர் 8:34; 1 கொரி. 15:24 முதல்; எபே. 1;20; கொலோ. 3:1; எபி. 1:3,13; 8:1; 10:12,13; 12:2; 1 பேதுருரு 3:22; வெளி. 3:21). ஆகவே, கர்த்தராகிய இயேசு விண்ணகத்திற்கு ஏகிய நாளில், தேவனுடைய **வலதுபாரிசத்தில்** அமர்ந்தபோது யெகோவா கூறியவற்றை முதல் வசனம் எடுத்துரைக்கிறது. எனினும் அவருடைய பகைவர் யாவரும் அவருக்குப் **பாதபடியாகும்** வரை மட்டுமே அவர் அங்கிருப்பார்.

110:2 முதல் இரண்டு வசனங்களுக்கும் இடையில் "மிகப்பெரிய இடைப்பிறவரல்"[76] என்று திருவாளர் H. A. அயர்ன்சைடு அவர்களால் அழைக்கப்பட்ட திருச்சபையின் காலத்தைப் பெற்றிருக்கிறோம். அது கிறிஸ்து அரியணையில் அமர்த்தப்பட்ட நாள் முதல் அவருடைய இரண்டாம் வருகை வரை தொடரும். மேசியாவின் ராஜரிகச் செங்கோலை சீயோனிலிருந்து யெகோவா அனுப்பும் செயல் இரண்டாவது வசனத்தில் கூறப்பட்டுள்ளது. அதாவது, எருசலேமைத் தலைநகராகக் கொண்டு கர்த்தர் கிறிஸ்துவை அரசராக நிறுவுவார். செங்கோல் அரச அதிகாரத்தைக் குறிக்கிறது. தமது பகைவரின் நடுவே பூமி முழுவதையும் ஆளும் அதிகாரம் கிறிஸ்துவுக்குக் கொடுக்கப்படுகிறது. **"நீர் உம்முடைய சத்துருக்களின் நடுவே ஆளுகை செய்யும்."** இதற்கு முன்னமே கர்த்தராகிய இயேசு தாங்கள் முன்கொண்டிருந்த நம்பிக்கையில் பிடிவாதமாயிருக்கும் எதிரிகளை முற்றிலும் அழித்திருப்பார். இங்கு அவருடைய பகைவரை அழிக்கும் செயல் குறிப்பிடப்படவில்லை, மாறாக முன்னர் அவருடைய பகைவராயிருந்து இப்பொழுது நண்பர்களாக மாறி, தங்களை அவருடைய ஆட்சிக்கு மகிழ்ச்சியோடு ஒப்புவித்தவர்களை ஆளுகிற நிகழ்வு சொல்லப்பட்டுள்ளது.

110:3 இவ்வுண்மை மூன்றாவது வசனத்தில் உறுதிப்படுத்தப்படுகிறது. அவர் தமது படையைத் தலைமைதாங்கிப் பரிசுத்த பர்வதத்தில் நடத்தும் நாளில் அவருடைய மக்கள் தங்களை மனப்பூர்வமாக ஒப்புவிப்பார்கள். அல்லது NKJV மொழிபெயர்ப்பு கூறுமாற்போல:

> **உம்முடைய மக்கள் உமது பராக்கிரமத்தின் நாளிலே தாமாக மனமுவந்து பரிசுத்த அலங்காரத்தோடு முன்வருவார்கள்.**

இதன்படி, மனவிருப்பமுள்ள மக்கள் பரிசுத்த ஆடை அணிந்திருந்தார்கள் என்பதே பொருள். "அவர்களுடைய வாழ்வு மற்றும் நடத்தை ஆகிய வற்றில் அழகை அல்லது கவர்ச்சியை வெளிப்படுத்துகிறார்கள். அங்கு பரிசுத்தமும் தூய்மையுமுடைய குணநலம் விளங்குகிறது" என்று திருவாளர் பார்னஸ் எழுதுகிறார்.

மூன்றாவது வசனத்தின் கடைசிப் பகுதி மொழிபெயர்ப்பாளர்களுக்கும் விளக்கவுரையாளர்களுக்கும் கடும் சிக்கலாக இருந்து வந்திருக்கிறது. "காலை என்னும் தாய் பெற்றெடுத்த பனியைப்போல, உம்முடைய படை எண்ணில டங்கா வீரர்களாக, புத்துணர்வோடு, ஒளிவீசுகிறவர்களாக, மிகுந்த வல்லமையோடு உம்மிடத்திற்கு வருவார்கள்" என்று திருவாளர் ஸ்க்ரோஜி இதனைப் பொழிப்புரையாக வழங்கியிருக்கிறார்.[77]

110:4 அவ்வரசின் மரபுக்கு மாறான சிறந்த அம்சம், கர்த்தராகிய இயேசு தமது ஆளுமையில் அரசர், ஆசாரியர் ஆகிய இருவேறு அலுவல்களையும் ஒருங்கே கொண்டிருப்பார். வெறுமனே மனிதர்களாகிய அரசர்கள் இவ்வித ஒருங்கிணைப்பைப் பெற்றிருப்பார்களெனில், அது பேராபத்தை விளைவிக்கும்; சபையும் அரசும் வெவ்வேறாகப் பிரிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று நீண்டகாலமாகப் பெருத்த தொனியுடன் ஏறெடுக்கப்பட்ட கோரிக்கை காரணமற்றதன்று. ஆனால் இயேசு அரசராக ஆட்சி செலுத்துகை

யில் அவ்வித ஒருங்கிணைப்பு மிகச்சிறந்ததாகக் காணப்படும். குற்றமில்லாத அரசாங்கம் ஆவிக்குரிய ஆசாரியத்துவம் ஆகிய இரண்டும் சேர்ந்து, இதுகாறும் வாஞ்சித்தும் அறியப்படாத நிருவாகத்தை உலகிற்குத் தரும்.

நான்காவது வசனத்தில், மேசியாவின் ஆசாரிய முறைமையைக் குறித்து நான்கு உண்மைகளை அறிகிறோம்:

யெகோவாவின் ஆணையால் அவர் ஆசாரியராக்கப்பட்டார்.

இந்த நியமனம் மாற்றுதற்கியலாதது.

அவருடைய ஆசாரிய முறைமை நிலை பேறுடையது.

அது **மெல்கிசேதேக்கின் முறைமையின் படியானது.**

"மெல்கிசேதேக்கின் முறைமையின்படி" என்னும் சொற்றொடர் எபிரெயர் 5-7 ஆகிய அதிகாரங்களில் விவரிக்கப்பட்டுள்ளது. அப்பகுதியில் மெல்கிசேதேக்கின் ஆசாரிய முறைமை ஆரோனின் அல்லது லேவியின் முறைமையின்படியான ஆசாரியத்துவத்தோடு ஒப்பிடப்பட்டு ஒற்றுமைகளும் வேற்றுமைகளும் கூறப்பட்டுள்ளன.

நியாயப்பிரமாணத்தின்கீழ் லேவி கோத்திரத்து ஆண்மக்களையும் ஆரோன் குடும்பத்தாரையும் தேவன் ஆசாரியர்களாக ஏற்படுத்தினார். அவர்களுடைய ஆசாரியமுறைமை வம்சாவளியாகக் கிடைக்கப்பெற்றது, மரணத்தோடு முடிவடைந்தது.

புதிரான பிரமுகர் மெல்கிசேதேக்கின் ஆசாரிய முறைமை தேவனுடைய ராஜரிக நியமனமாகும். அது பெற்றோரிடமிருந்து பெறப்பட்டதன்று (இவன் தகப்பனும் தாயும் வம்சவரலாறும் இல்லாதவன்" எபி. 7:3), அவனுடைய ஆசாரிய முறைமையின் தொடக்கமும் முடிவும் சொல்லப்படவில்லை ("இவன் நாட்களின் துவக்கமும் ஜீவனின் முடிவுமுடையவனாயிராமல்" எபி. 7:3). இவற்றின் அடிப்படையிலும் வேறு சில முறைகளிலும் மெல்கிசேதேக்கின் ஆசாரிய முறைமை லேவியின் ஆசாரிய முறைமையைக் காட்டிலும் சிறந்தது. மெல்கிசேதேக் கர்த்தராகிய இயேசுவின் ஒத்த மறுபடிவம். கர்த்தருடைய ஆசாரிய முறைமை வம்சாவளியின் மூலமாகப் பெறப்பட்டதன்று. அவர் லேவி கோத்திரத்தையல்ல, யூதா கோத்திரத்தைச் சேர்ந்தவர். அவருடைய ஆசாரிய நியமனம் தேவனுடைய நித்திய ராஜரிக ஆணையின்படியானது. அவர் முடிவில்லா வாழ்வின் வல்லமையில் வாழ்வதால் அவருடைய ஆசாரிய முறைமை ஒருக்காலும் முடிவடையாது.

மேசியாவுக்கு முன்நிழலாக வேறொரு வகையிலும் மெல்கிசேதேக் செயல்பட்டான், அவன் அரசனாகவும் ஆசாரியனாகவும் இருந்தான். அவனுடைய பெயரும் பதவியும் அவன் நீதியின் அரசனாகவும் சமாதானத்தின் அரசனாகவும் இருந்ததைக் குறித்துக் காட்டுகிறது (எபி. 7:2). மேலும் அவன் உன்னதமான தேவனுடைய ஆசாரியனாகவும் இருந்தான் (ஆதி. 14:18).

110:5 இப்பாடலின் இறுதி மூன்று வசனங்களும் கர்த்தராகிய இயேசுவை வல்லமை மிக்க வெற்றி வீரராகப் படவுருவில் காட்டுகிறது. அவர் தமது ஆட்சியைத் தொடங்கும் முன்னர் சட்டத்திற்குக் கட்டுப்படாதவர்களையும் கலகம் செய்கிறவர்களையும் அழித்துப் போடுவார். இந்த வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் யார் என்பதைப் பற்றிய சிக்கல், இவை மேசியாவைக் குறித்து யெகோவாவிடத்தில் பேசப்பட்டவை என்று கருதுவோமானால் பெருமளவில் தீர்க்கப்படும். 5 - ஆவது வசனத்தை இவ்வாறு படித்தல் தகும்:

உம்முடைய (யெகோவாவுடைய) **வலது பாரிசத்திலிருக்கிற ஆண்டவர்** (Adonai - இங்கு கர்த்தராகிய இயேசு), **தமது** (மேசியா) **கோபத்தின் நாளிலே வெட்டுவார்**.

110:6 யோவேல் 3:9-17; சகரியா 14:3; வெளி. 19:11-21 ஆகிய பகுதிகளில் முன்னறிந்து எதிர்நோக்கியபடி, கர்த்தராகிய இயேசுவே புறவின தேசங்களுக்கு எதிராகச் செல்லுகிறவர். அவர் புறவினத்தாருக்குள் நியாயந்தீர்த்து, அவர்களுடைய இயற்கைச் சூழ்நிலைகளில் பிணங்கள் சிதறுண்டு கிடக்கும்படி செய்வார். **"விஸ்தாரமான தேசங்களின் மேல் தலைவர்களாயிருக்கிறவர்களை நொறுக்கிப் போடுவார்"** என்னும் சொற்றொடரை, "விஸ்தாரமான தேசத்தின் தலையின் ஊடாகத் தாக்குவார்" என்றும் மொழிபெயர்க்கலாம். இது பாவமனிதனின் அழிவைக் குறிக்கக்கூடும், "அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம்பண்ணுவார்." (2 தெச. 2:8).

110:7 அவ்வாறு அவர் தமது பகைவரை எதிர்க்கச் செல்லுகையில், வழியிலே **நதியில் குடிப்பார்.** பல இடங்களில் தண்ணீர் பரிசுத்த ஆவிக்கு மாதிரியாக விளங்குவதால் (யோவான் 7:38,39), பரிசுத்த ஆவியானவரின் ஊழியத்தின் மூலமாகக் கர்த்தர் புது வலிமையும் புத்துணர்ச்சியும் பெறுவார் என்பதை இது காட்டுகிறது எனலாம்.

மேலும் அவர் அடுத்ததாகத் தமது தலையை வெற்றியின் காரணமாக உயர்த்துவார் என்பதை யும் இக்கருத்து விளக்கிக் கூறுகிறது.

சங்கீதம் 111: கர்த்தருடைய வியத்தகு செயல்கள்

மூன்று நூல் இழைகள் இந்தச் சங்கீதத்தின் ஊடாகச் செல்லுகின்றன:

யெகோவாவின் செய்கைகள் (வச. 2-4, 6-7).

யெகோவாவின் சொற்கள்; உடன்படிக்கை (வச. 5,9), கட்டளை (வச. 7) ஆகிய ஒத்த பொருளுடைய சொற்களால் இக்கருத்து கூறப்படுகிறது.

அவர் இன்னார், அவர் செய்பவை ஆகியவற் றின் நிலைத்த தன்மை (வச. 3,5,8-10).

எபிரெய மொழியில் இச்சங்கீதத்தின் முதல் எட்டு வசனங்கள் இரண்டு வரிகளையும், கடைசி இரண்டு வசனங்கள் மூன்று வரிகளையும் கொண் டிருக்கின்றன. இருபத்திரண்டு வரிகளும் எபிரெய எழுத்துக்களை வரிசையாக முதல் எழுத்துக்க ளாகப் பெற்று அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு இச் சங்கீதம் மொழிநயம் கொண்ட பாடலாக விளங்குகிறது.

அரியணையில் முடிசூட்டப்பட்டவராகிய கிறிஸ்துவின் மேதகைமைகளை இச்சங்கீதம் கருப்பொருளாகக் கொண்டிருக்கிறது. எகிப்து மற்றும் பாபிலோன் ஆகிய நாடுகளின் சிறை யிருப்பின் இருளிலிருந்து வியத்தகு ஒளியினிட மாய் அழைத்து வந்தவரின் புகழ்ச்சிகளை இஸ்ர வேல் இங்கு பாடுகிறது.

111:1 உண்மையுள்ளவர்கள் யாவரும் கர்த்த ரைத் துதிக்கும்படி பாடலாசிரியன் விடுக்கும் அழைப்போடு (எபி. அல்லேலூயா - தமிழிலும் இதே சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது) இச்சங் கீதம் தொடங்குகிறது. எவ்விதத் தடையுமில்லா மல், எண்ணங்கள் சிதறடிக்கப்படாமல் கர்த்த ரைத் துதிப்பதற்கான தனது சொந்தத் தீர்மானத் துடன் அவன் இவ்வழைப்பை விடுக்கிறான். விசு வாசிகள் கூடுகின்ற சிறிய சபைகளிலும், மக்கள் திரளாகக் கூடுகின்ற கூட்டங்களிலும், அதாவது தனியிடங்களிலும், பொதுவிடங்களிலும் என்றும் நாம் இதனைக் கூறலாம், அவன் இவ்விதமாகக் கர்த்தரைப் பாடுவான்.

111:2,3 இங்கு சொல்லப்பட்டுள்ள **கர்த்தரு டைய செய்கைகளைக்** குறித்த நான்கு வருண னைகள் அவர் செய்கிற எல்லாவற்றிற்கும் பொருத்தமானவையே, ஆயினும் பழைய ஏற் பாட்டு யூதர்களைப் பொறுத்தவரை, அவர்கள் எகிப்திலிருந்து விடுவிக்கப்பட்ட நிகழ்வே தேவனு டைய எல்லாச் செய்கைகளிலும் "எவரெஸ்ட்" சிகரமாயிருக்கிறது. **கர்த்தருடைய செய்கை கள் பெரியவை; அவற்றில் பிரியப்படுகிற எல் லோராலும்** அவை கற்பதற்குரிய பயனளிக்கக் கூடிய செயல்களாயிருக்கின்றன. அவருடைய மகிமையும் மகத்துவமும் வெளிப்படத்தக்க பேராற்றல் மிக்கவையாக அவை உள்ளன. **அவ ருடைய நீதி என்றென்றைக்கும் நிலைநிற்கும்.**

111:4,5 ஆட்டுக்குட்டியின் குருதியால் இஸ்ர வேலுக்குக் கிடைக்கப்பெற்ற இரட்சிப்பின் நிலை யான நினைவுச் சின்னமாக அவர் பஸ்காவை ஏற்படுத்தினார். அவருடைய கிருபையையும் இரக் கத்தையும் நீடித்த காலமாய் நினைவுக்குக் கொண்டுவருகிற ஏற்பாடாக அது இருக்கிறது. கர்த்தருடைய பந்தியில், உன்னதமான ஆட்டுக் குட்டியின் இரத்தத்தால் நமக்குக் கிடைக்கப் பெற்ற இரட்சிப்பின் நினைவுகூரும் சின்னத்தை அவர் விட்டுச் சென்றிருக்கிறார். அவர் **இரக்கமும் மனஉருக்கமும் உள்ளவர்** என்பதன் மறக்க வியலாத நினைவூட்டும் மடலாக அது விளங்கு கிறது. இஸ்ரவேலர் பாலைவனத்தில் பயணம் மேற்கொண்ட தருணத்தில் தேவன் அவர்களுக்கு அதிசயமான வகையில் உணவு கொடுத்தார் (**ஆகாரம்**, எழுத்தின்படி இரை) என்று 5 -ஆவது வசனம் குறிப்பிடுகிறது. அவர்கள் அவருடைய உடன்படிக்கையின் மக்கள் என்பதை ஒருக் காலும் மறக்கவில்லை. மேலும் அவர் தமது வாக் குறுதிகளுக்கு உண்மையுள்ளவராக இருக் கிறார் என்பது எப்பொழுதும் மெய்யான கூற்றாக விளங்குகிறது.

111:6 வாக்குத்தத்த நாட்டில் குடியிருந்த கானா னிய இனத்தாரைத் துரத்திவிட்டு, தமது மக்களை அங்கு குடியிருக்கச் செய்த செயல் அவர் தமது மக்களுக்குக் காண்பித்த மற்றொரு பராக்கிரம செயலாகும். பாடலாசிரியன் அந்த நாட்டை **"ஜாதிகளின் சுதந்தரம்"** என்று அழைக்கிறான்.

111:7-9 தேவனுடைய அனைத்து செய்கை களும் அவர் எப்பொழுதும் உண்மையும் நீதியும் உள்ளவர் என்பதை வெளிப்படுத்திக் காட்டுகின் றன. **அவருடைய கட்டளைகளெல்லாம்** முற்றி லும் நம்பகமானவை. அவர் தமது வாக்குறுதி களை என்றைக்கும் தவறாமல் கைக்கொண்டு, அவற்றை உண்மையோடும் செம்மையாகவும் நிறைவேற்றி வருகிறார். அவருடைய மக்கள்

எகிப்திலிருந்து பயணம் மேற்கொண்ட போதும், பின்னர் பாபிலோனியச் சிறையிருப்பிலிருந்து திரும்பிவந்த போதும் அவர் தமது **மக்களுக்கு மீட்பை அனுப்பினார்**. அவருடைய மகிமை நிறைந்த அரசாட்சிக்கு முன்னர் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரையும் அவர்களுடைய நாட்டுக்குத் திரும்ப அழைத்து வந்து அதே செயலை மீண்டும் செய்வார். இவை யாவும் அவருடைய உடன்படிக்கையின் பங்காகும், அவை ஒருபோதும் தவறா. அவருடைய திருப்பெயர் **பரிசுத்தமும் பயங்கரமுமானது** அல்லது பயபக்திக்குரியது. அவருடைய திருப்பெயருக்கு ஏற்ப அவர் இருக்கிறார்!

111:10 அவரிடத்தில் பயபக்தியாக இருக்கிற மனிதனே **ஞானத்தின்** பாதையில் நடக்கத் தொடங்கியிருக்கிறான். நாம் அவருக்குக் கூடுதலாகக் கீழ்ப்படிகிறபோது அவர் நமக்குக் கூடுதலாக வெளிச்சத்தைத் தருகிறார். "கீழ்ப்படிதலே ஆவிக்குரிய அறிவுக்கான உயிர்ப்பொருள்."

அவர் **என்றைக்கும்** துதிக்கப்படுவதற்குத் தகுதியானவர்!

சங்கீதம் 112: நீதிமானுடைய பரிசுப்பொருட்கள்

112:1 இந்தச் சங்கீதத்திற்கும் இதற்கு முந்தின சங்கீதத்திற்கும் அமைப்பிலும் ஆவிக்குரிய படிப்பினையிலும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. இச்சங்கீதம் முந்தினதைப் போலவே எபிரெய மொழியின் எழுத்துக்களை வரிசையாக ஒவ்வொரு வரியிலும் முதல் எழுத்தாகக் கொண்டு எழுதப்பட்டது. 111 -ஆவது சங்கீதம் எங்கே முடிவடைந்ததோ, அங்கே இது தொடங்குகிறது - **கர்த்தருக்குப் பயந்து** ஞானத்தைக் கைக்கொள்ளுகிற **மனிதனைப்** பற்றியது. முந்தின பாடலில் கர்த்தரைக் குறித்துச் சொல்லப்பட்ட பல செய்திகள் இவ்விரண்டாவது பாடலில் காணப்படும் பயபக்தியுள்ள மனிதனுக்கும் பொருத்தமானவையாக உள்ளன. நீதியின் சூரியன் தமது எல்லா மகிமையோடும் பிரகாசிப்பதை நாம் 111 -ஆவது சங்கீதத்தில் காண்கிறோம்; இங்கு விசுவாசியானவன் அந்த மகிமையைப் பிரதிபலிக்கும் நிலவாகக் காணப்படுகிறான். கர்த்தருடைய அழகைக் காண்கிறதாலே, பரிசுத்த ஆவியின் மூலமாக அதே அழகை விசுவாசி பெற்றவனாக மாற்றம் பெறுகிறான் (2 கொரி. 3:18).

கர்த்தருக்குத் துதியைச் செலுத்துங்கள் **(அல்லேலூயா).** இந்தச் சொற்கள் பாடலாசிரியனின் மனோபாவத்தை வெளிப்படுத்துபவையாக அடிக்கடி இடம்பெற்றுள்ளன. நம்மெல்லோருக்கும் அவன் நல்ல மாதிரியை பின்வைத்துச் சென்றிருக்கிறான்.

யார் மகிழ்ச்சி நிறைந்த மனிதன்? எவனொருவன் கர்த்தரைக் கனப்படுத்தி, அவருக்குக் கீழ்ப்படிந்து, அவருடைய கட்டளைகளில் பிரியமாயிருக்கிறானோ, அவனே மகிழ்ச்சி நிறைந்த மனிதன்; அவன் அக்கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து அவற்றை மெய்ப்பிக்கிறான். அவன் நடைமுறையில் பயபக்திக்குரிய வாழ்க்கையை வாழ்ந்து அதிலிருந்து ஊற்றெனப் பாயும் பயன்களை அறுவடை செய்கிறான். எடுத்துக்காட்டாக:

112:2 ***புகழ்பெற்ற வழித்தோன்றல்கள்.*** அவனுடைய வழித்தோன்றல்கள் அதிகாரமும் நற்பெயரும் பெற்ற நிலையைப் பெற்றிருப்பார்கள்; பயபக்தி நிறைந்த வழித்தோன்றல்களைப் பெற்றிருப்பதால் அவர்கள் மேன்மைப்படுத்தப்படுவார்கள். (இந்த ஆசிர்வாதங்களை சபையின் காலத்திற்கு விவரித்துக் கூறவேண்டுமானால், பூமிக்குரிய, செல்வம் சார்ந்த ஆசிர்வாதங்களை ஆவிக்குரிய ஆசிர்வாதங்களாக மாற்றிக் கூற வேண்டும்.)

112:3 ***செல்வச் செழிப்பு.*** தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவதால் மனிதர்கள் வீண் செலவு, வறுமை ஆகியவற்றிலிருந்து காக்கப்படுகிறார்கள் என்பது பொதுவான உண்மையாகும். அவனுடைய நீதியின் பயனாக, அதாவது அவனுடைய நேர்மை, தளரா ஊக்கம், வீண் செலவு செய்யாதிருத்தல் போன்ற குணங்கள் அடுத்தடுத்துப் பல தலைமுறையினரிடத்திலும் தொடர்ந்து காணப்படும்.

112:4 ***உறுதிப்படுத்தப்பட்ட வெளிச்சம்.*** இருளிலிருந்து விலக்கு அளிக்கப்படும் என்னும் உறுதி அளிக்கப்படவில்லை, எனினும் **இருளிலே வெளிச்சம்** உதிக்கும் என்னும் வாக்குறுதி தரப்பட்டுள்ளது. வாழ்க்கையில் எல்லா இருண்ட நாட்களிலும் கர்த்தர்தாமே **இரக்கமும் மனவுருக்கமும்** உள்ளவராக விளங்குவார்.

112:5,6 பெருந்தன்மை. பெருந்தன்மையுள்ள மனிதனாக விளங்கி, உண்மையான தேவையுள்ளவர்களுக்கு மறுக்காமல் கடன்கொடுக்கிறவனுக்கு எல்லாம் சிறப்பாக நடக்கும். அவன் தனது தொழிலை **நியாயமாகவும்** நேர்மையாகவும் நடத்துகிறான். அவனுடைய வாழ்வு உறுதியான அடித்தளத்தின் மேல் கட்டப்பட்டிருக்கும்.

அவன் இறந்த பிறகும் வெகு காலமாக நினைவு கூரப்படுவான்.

112:7 ***பயத்திலிருந்து விடுதலை.*** கெட்ட செய்திகள், வணிக இழப்பு, இயற்கைச் சீற்றங்கள் போன்றவற்றைக் குறித்து இடைவிடாத அச்சத்துடன் அவன் வாழ வேண்டியதில்லை. அவன் கர்த்தரிடத்தில் நம்பிக்கை கொண்டிருக்கிறான். தேவனுடைய சித்தமின்றி அவனுக்கு எதிராக எதுவும் நடக்காது என்பதை அவன் அறிந்திருக்கிறான்.

112:8 ***தாக்கப்படுகிறபோது நம்பிக்கையோடு இருத்தல்.*** அவனுடைய சாந்தம் அல்லது அமைதி பகைவரால் நிலைகுலைந்து போவதில்லை. ஒரு தருணத்தில் அவர்களுடைய கை ஓங்கியிருப்பது போலத் தோன்றினாலும் அவன் நம்பிக்கையோடு இருக்கிறான். ஆயினும் அவர்கள் வீழ்ச்சியடைவது நிச்சயம். அவன் வெற்றியின் பக்கமே இருக்கிறான்.

112:9 ***நீடித்த செழிப்பும் மேன்மையும்.*** அவன் பெருந்தன்மையோடு செயல்பட்டதாலும், வறியவருக்கு தயவு காட்டியதன் விளைவாகவும், அவன் ஒருக்காலும் நினைவுகூரப்படாமல் மறக்கப்படுவதில்லை. அவன் அவமானத்தால் தனது கொம்பைத் (வலிமையின் சின்னம்) தாழ்த்த வேண்டியதில்லை. மாறாக அவனுடைய தலை ஆரவாரப் புகழ்ச்சியால் முடிசூட்டப்படும். தாராளமாக வாரி வழங்குவதால் நிலையான பயன்கள் ஏற்படுகின்றன என்பதைக் கூறும் பொருட்டு பவுல் இந்த வசனத்தை 2 கொரிந்தியர் 9:9 -இல் மேற்கோள் காட்டியுள்ளார்.

112:10 ***பொல்லாத மனிதரின் பொறாமை.*** பயபக்தியுள்ள மனிதன் நேர்மை வெளிப்பட்டு, அவன் மேன்மைப்படுத்தப்படுவதைக் காணும் துன்மார்க்கர் எரிச்சலும் பொறாமையும் அடைவார்கள். அவர்கள் கோபத்தின் மிகுதியால் தங்களுடைய பற்களைக் கடிப்பார்கள். அதன் பிறகு அவர்கள் நிலைகுலைந்து மறைந்து போவார்கள். அவர்கள் எவற்றிற்காக வாழ்ந்தார்களோ அவையாவும் அவர்களோடு **அழியும்**. திருவாளர் பார்னஸ் குறிப்பிடுகிறார்:

> நீதிமானுக்கு என்ன நிகழும் என்று இந்தச் சங்கீதத்தில் சொல்லப்பட்டிருப்பவைக்கு கடைசிக் குறிப்பு முற்றிலும் எதிர்மாறானதாக இருக்கிறது. நீதிமான்கள் வளம் பெற்று மகிழ்ச்சியோடு இருப்பார்கள்; அவர்கள் தங்களுடைய திட்டங்களை முறைப்படி நிறைவேற்றுவார்கள்; அவர்கள் உயிரோடிருக்கையில் மரியாதையோடு நடத்தப்படுவார்கள், இறந்த பிறகு நினைவு கூரப்படுவார்கள்; அவர்களுடைய வாழ்க்கையின் இருண்ட நாட்களில் தேவன்தாமே அவர்களுக்காகக் குறுக்கிட்டுச் செயல்புரிவதைக் காண்பார்கள்; ஆபத்து, தொல்லைகள் ஏற்படுகிற நாட்கள் அவர்கள் உறுதியும் அமைதியும் பெற்றிருப்பார்கள்; அவர்கள் தங்களுடைய நம்பிக்கையைக் கர்த்தரிடத்தில் வைத்திருப்பார்கள்; எல்லாம் சிறப்பாய் நடக்கும். உண்மையாகவே தேவனுடைய நண்பனாயிருப்பதில் நன்மை உள்ளது.[78]

சங்கீதம் 113: மிகப்பெரியவர், எனினும் கிருபைமிக்கவர்

113:1-6 முதல் ஐந்து வசனங்கள் தேவன் *எல்லைகடந்த அளவு உயர்ந்தவர்* என்பதை அறிவிக்கின்றன, கடைசி நான்கு வசனங்கள் அவர் *மிக நெருக்கமாக அருகில் இருப்பவர்* என்று கூறுகின்றன.

நம்முடைய தேவன் எல்லைகடந்த அளவு உயர்ந்தவர். ஆகவே அவர் புகழப்படத்தக்கவர்.

எவரால்?

அவருடைய ஊழியக்காரர் அனைவராலும் (வச. 1)

எவ்வாறு?

அவருடைய நாமத்தைப் போற்றித் துதிக்க வேண்டும். அதாவது அவர் யார் என்பதெல்லாவற்றிற்காகவும் அவரைத் துதிக்க வேண்டும் (வச. 2).

எப்போது?

இடைவிடாமல் - இப்பொழுதும் **என்றென்றைக்கும்** (வச. 2)

எங்கே?

எல்லா இடங்களிலும் - **சூரியன் உதிக்கும்** நாட்டிலிருந்து அது மறையும் நாடு வரைக்கும்.

எதற்காக?

அவருடைய மேதகைமைக்காக. **அவர் எல்லா ஜாதிகள் மேலும் உயர்ந்தவர்; அவருடைய மகிமை வானங்களுக்கு மேலானது** (வச. 4).

அவருடைய ஒப்புயர்வற்ற தன்மைக்காக. அவரோடு எவரையும் ஒப்பிடமுடியாது. அவர் **உன்னத தங்களில்** அவருடைய அரியணையில் அமர்ந்திருக்கிறார் (வச. 5).

அவருடைய எல்லைக்குட்படா காட்சிக்காக. வானத்திலும் பூமியிலும் அவரால் காணக்கூடாதது எதுவும் இல்லை (வச. 6). அவர் வானத்தில் இருக்கிறவற்றைக் காண்பதற்கும்கூட தம்மைத் தாழ்த்த

வேண்டியவராயிருக்கிறார் என்று இந்த வசனம் கூறுகிறது!

ஆனால் எல்லைகடந்த அளவு உயர்ந்தவர் மிக நெருக்கமாக அருகிலும் இருக்கிறார் என்ப தற்காக அவருடைய திருப்பெயருக்குப் புகழ்ச்சி யைச் செலுத்துவோம்.

113:7-9 சிறியவன் இதனை அறிய முடியும்! அவர் அப்படிப்பட்டவர்களைப் **புழுதியிலிருந்து தூக்கிவிடுகிறார்**.

எளியவன் இதனை அறிய முடியும்! அப்படிப் பட்டவர்களை அவர்களுடைய தாழ்வான நிலை யிலிருந்து உயர்த்தி இவ்வுலகத்தில் சிறந்தவர் களாகிய பிரபுக்களோடு உட்காரச் செய்கிறார்.

பிள்ளையற்றவள் இதனை அறிய முடியும்! அவளுக்கு அவர் **வீட்டைக்** கொடுத்து **சந்தோஷ மான பிள்ளைத் தாய்ச்சியைப் போல** ஆக்கு கிறார். யூதப் பெண்களுக்குள் பிள்ளையற்ற மலடி யாக இருக்கும் நிலை பயங்கரமான அவமான நிலையாகும். இப்படிப்பட்ட சாபத்திலிருந்து மீட் கப்படும் நிலை, எல்லையற்ற மகிழ்ச்சியை உண்டு பண்ணும் தருணமாகும் என்று ஜெபநூல் விளக்க வுரை (Prayer Book Commentary) கூறுகிறது.

கற்பிக்கும் பாடம்

நான் *சிறியவனாய்* இருந்தேன், ஆனால் கிறிஸ்துவின் மேல் வைத்த பற்றின் மூலமாக ஆவிக்குரிய நிலைகளில் நம்புதற்கறியா வகை யில் செல்வந்தனானேன்.

நான் *எளியவனாய்* இருந்தேன், ஆனால் இவ்வாறு இரந்து திரிபவனைக் குப்பைக் கூளத்தி லிருந்து எடுத்து, அற்புதமான கிறிஸ்தவ சகோதர சகோதரிகளைக் கொடுத்தார். இந்த உலகம் தரக்கூடிய எல்லாக் கூட்டிணக்கங்களிலும் இது உயர்ந்ததாக இருக்கிறது.

நான் தேவனுக்கென்று எவ்விதக் கனியும் கொடுக்காமல் *மலடாய்* இருந்தேன். ஆனால் பயனற்ற வீணனாய் வாழ்ந்த என்னை அவர் அந்நிலையிலிருந்து அர்த்தமுள்ள கனிதரும் வாழ்க்கை வாழ்பவனாக மாற்றினார்.

பாடலாசிரியனோடு சேர்ந்து, "கர்த்தரைத் துதி யுங்கள்!" (அல்லேலூயா) என்று நான் பாடுவதில் வியப்பேதுமில்லை.

உன்னதத்தின் அரியணையில்
வீற்றிருக்கும் எமதரசர்
இன்னல்களை அடைந்தபின்னர்
மகிமையினைப் பெற்றிட்டார்,
திருத்தந்தை அன்பிற்கு
ஆதிமுதல் தகுதிபெற்றோர்
பெருமையினைப் புனைந்திடுவர்
மீட்படைந்தோர் பாடல்களாய்!

வெகுதொலைவில் இருந்தாலும்
தம்மக்கள் புகழ்ச்சியினைப்
பகுத்துணர்ந்து ஏற்றிடுவார்
உளமார மகிழ்ந்திடுவார்,
சிறியவனும் எளியவனும்
ஏறெடுக்கும் கதறல்களில்
அறியாமை நிறைந்திருந்தும்
மறுக்காமல் செவிகொடுப்பார்!

– தாமஸ் கெல்லி

சங்கீதம் 114: கர்த்தரின் ஆற்றல்மிக்க பிரசன்னம்

114:1 இஸ்ரவேல் எகிப்திலிருந்து அடைந்த மீட்பின் வீரகாவியம், அதன் பாலைவன அனுப வங்கள், வாக்குறுதி பண்ணப்பட்ட நாட்டை அது வந்தடைந்த நிகழ்ச்சி தொடக்கமுதல் முடிவு வரை தேவனுடைய ஆற்றலின் மிகப்பெரிய காட் சிப்பொருளாக விளங்குகிறது. உண்மையில், இதுவரை நடந்த ஆற்றல்மிக்க தெய்வீகச் செயல் களிலேயே மிகப்பெரிய செயலாக யூத மனதிற் குத் தோன்றுவது இதுதான்.

இஸ்ரவேல் எகிப்தைவிட்டுப் புறப்பட்ட நிகழ்வு எத்தகைய வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது; நீண்ட கால அடிமைத்தளையும் ஒடுக்குதலும் முடிந்து விட்டன! அடிமைத்தளை நீங்கி எகிப்தியரிடமி ருந்து விடுதலை பெற்ற மக்களின் மட்டற்ற மகிழ்ச் சியை யாரால் அளவிட முடியும்? அந்நியமொழி யின் அச்சுறுத்தல்களுக்கும் சாப உறுமல்களுக் கும் இனிமேல் அவர்கள் பயந்து நடுங்க வேண்டி யதில்லை.

114:2 உரிய காலத்தில் **யூதா** கோத்திரத் துக்கு ஒதுக்கப்பட்ட நிலப்பகுதி தேவனுடைய **பரிசுத்த ஸ்தானமாயிற்று**. எருசலேம் நகரில் ஆலயம் எழுப்பப்பட்டது. இஸ்ரவேல் நாடு முழு வதும் அவருடைய **ராஜ்யமாயிற்று**. அந்த நிலப் பகுதியை அவர் சோர்வில்லாமல் பராமரித்து வந்தார் - நில இயல் சார்ந்த பொருளில் யூதா மற்றும் இஸ்ரவேல் நாட்டின் எல்லைகளுக்கு எது பொருந்துமோ, அது ஆவிக்குரிய பொருளில் இன் றைய நாட்களில் திருச்சபைக்குப் பொருந்தும்.

114:3 இஸ்ரவேல் மக்கள் செங்கடல் அருகே வந்தபோது தண்ணீர்கள் ஒருமுறை பார்த்து அச்சத்தால் பின்னிட்டுச் சென்றன. அகதிகளாக அழுக்கடைந்து வந்த அந்தத் திரளான மக்களின் காட்சி அச்சுறுத்தலுக்கான காரணமில்லை என் பதை நாம் திட்டவட்டமாகக் கூறலாம். அப் பெருங் கடல் மேல்நோக்கிப் படைப்பாளரைக் கண்டது. பின்னர் உடனடியாக **விலகி ஓடிற்று**. அதன் காரணமாக இஸ்ரவேலர் தங்களுடைய பாதங் கள் நனையாமல் அந்தக் கடலைக் கடந்து செல்ல ஏதுவாயிற்று.

நாற்பது ஆண்டுகள் கழித்து அவர்கள் வாக் குறுதி பண்ணப்பட்ட நாட்டுக்குள் நுழைந்தபோது அதே செயல் மீண்டும் நிகழ்ந்தது. ஆதாம் என் னும் நகரத்தில் யோர்தான் ஆற்றின் வெள்ளம் பாய்வது நின்றது, அவர்கள் தங்களுடைய நாட் டுக்குள் நுழைவதற்குத் தடையாயிருந்த ஆறு, நடைபாதையாக மாறிற்று.

செங்கடலையும் யோர்தானையும் இஸ்ர வேலர் கடந்து சென்ற நிகழ்வுகள் அவர்களது வர லாற்றின் வீர காவியமாகிய இந்த அதிகாரத்தில் முக்கிய கட்டங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இதே வல்லமையால் கிறிஸ்துவின் மரணத்தி லும், அடக்கத்திலும் அவருடைய உயிர்த்தெழு தலிலும் ஒன்றிணைக்கப்பட்டதன் மூலமாக நாம் உலகினின்று விடுவிக்கப்பட்டதைச் செங்கட லைக் கடந்த நிகழ்ச்சி பிரதிபலிக்கிறது. பாலை வனத்தில் சுற்றித் திரிகிற நிலையிலிருந்து விடு தலை பெற்று, ஆவிக்குரிய சுதந்தரத்திற்குள் நுழைகிற நிகழ்வை யோர்தானைக் கடந்த நிகழ்ச்சி பிரதிபலிக்கிறது. இதுவும் கிறிஸ்துவின் மரணம் அடக்கம் உயிர்த்தெழுதல் ஆகிய நிகழ்வுகளின் மூலமாகவே நடைபெறுகிறது.

114:4 இவ்விரு நிகழ்வுகளுக்கும் இடையே தேவனுடைய வல்லமையை வெளிப்படுத்தின பயங்கரமான எடுத்துக்காட்டுகளும் சம்பவித்தன. சீனாய் மலையில் நியாயப்பிரமாணம் கொடுக்கப் பட்ட நிகழ்ச்சி மிகவும் கவர்ச்சிமிக்க நிகழ்வு களில் ஒன்று. மலைகள் ஆட்டுக்கடாக்களைப் போலவும், குன்றுகள் ஆட்டுக்குட்டிகளைப் போல வும் துள்ளும் அளவிற்கு இயற்கை அதிர்ந்தது. ஏதோ பிரளயம் ஏற்பட்டாற்போல தேவனுடைய மகிமை அந்த நிலப்பகுதி முழுவதையும் தமது வல்லமைக்குக் கீழ்ப்படுத்தி அசைத்தது. "நான் மிகவும் பயந்து நடுங்குகிறேன்" என்று தேவ மனிதனாகிய மோசே சொல்லுமளவிற்கு அந்தக் காட்சி பயரங்கரமாயிருந்தது (எபி. 12:21). நாமோ அஞ்சத்தக்க நியாயப்பிரமாணத்தின் மலையினி டத்திற்கு அல்ல, கிருபையின் ஆசனத்தண்டை வந்திருக்கிறோம் என்று எபிரெய மடலின் ஆசிரி யர் நினைவுபடுத்துகிறார்.

> இறைவனின் சீற்றமும் சட்டத்தின் கடுமையும்
> குறைவுடைய அடியேனை கலங்கிடச் செய்திடா,
> என் அன்பர் இயேசுவின் நடக்கையும் குருதியும்
> என்வாழ்வின் குற்றங்கள் அனைத்தையும்
> மறைத்திடுமே!
>
> – அகஸ்டஸ் M. டாப்லேடி

114:5,6 கடலும், யோர்தானும், மலைகளும், குன்றுகளும் செய்த செயல்களுக்கான காரணங் களை விளக்கிக் கூறும்படி பாடலாசிரியன் கேள்வி கள் கேட்டுத் தொல்லை கொடுக்கும் அளவிற்கு வெளிப்படுத்தப்பட்ட தேவ வல்லமை அவனு டைய மனதில் பெருமகிழ்ச்சியை உண்டுபண்ணி யிருந்தது. படைப்பில் வலிமைக்கும் உறுதிக்கும் மிகப்பெரிய சின்னங்களாக விளங்குபவை கர்த்த ருடைய கணநேரப் பார்வையால் அதிர்ச்சிய டைந்து பின்வாங்குகின்றன. அதனால் எழுந்த ஏளனப் பாடல் அவற்றை நோக்கிப் புன்னகை பூக் கிறது.

114:7,8 விவாதத்தைத் தொடர்ந்து, இப்பூமி யானது தடங்காணவியலா ஆழமிக்க மதிப்பும் மரியாதையும் தேவனுக்குச் செலுத்த வேண்டும் என்னும் முடிவு கூறப்படுகிறது. என்றென்றும் மிகப்பெரியவராக இருக்கிற "நான் இருக்கிறேன்" என்பவர் அவர், அதே நேரத்தில் அவர் தகுதியற்ற யாக்கோபின் தேவன் என்றும் அழைக்கப்படு கிறார். **அவர் கன்மலையைத் தண்ணீர்த் தடா கமாகவும் கற்பாறையை நீரூற்றுகளாகவும்** மாற்றுகிறார். இச்செயல் இருமுறை நடந்தது (யாத். 17:6; எண். 20:11). தாகத்தால் இஸ்ரவேல் மக்கள் முற்றிலும் நம்பிக்கை இழந்துவிட்டார் கள். அவர்கள் கடுமையாகக் குறைகூறியது மட்டு மின்றி, எகிப்துக்குத் திரும்பிச் செல்வது நலமா யிருக்கும் என்றும் கருதினார்கள். தேவனோ, முதலாவது ஓரேபிலும், பின்னர் மேரிபாவிலும் அற்புதமான வகையில் கன்மலையிலிருந்து **தண் ணீர்த் தடாகத்தை** உண்டுபண்ணினார். அந்தக் கன்மலை கிறிஸ்துவுக்கு மாதிரி என்று பவுல் குறிப்பிடுகிறார். கிறிஸ்துவாகிய அந்தக் கன் மலை கல்வாரியில் அடிக்கப்பட்டு, அவரிடத்தில் விசுவாசத்தோடு வருகிற யாவருக்கும் உயிர்ப்பு நீரை வழங்குகிறார் (1 கொரி. 10:4).

சங்கீதம் 115: இஸ்ரவேல் சிலைகளை விட்டொழித்தல்

யூதமக்கள் இப்பொழுது பாபிலோனியச் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்துவிட்டார்கள்; அவர்கள் தங்களது சொந்த நாட்டுக்கு வந்துவிட்டார்கள். ஆனால், அதற்குத் தாங்களே காரணம் என்று சொல்லிப் பெருமை பாராட்டவில்லை. அவர்கள் முன்னிருந்த நிலைக்கு மீண்டும் உயர்த்தப்பட்டதற்கு யெகோவா ஒருவரே காரணர். அவர் தம்மக்கள்மீது கொண்டிருந்த நிலையான அன்பினாலும், அவருடைய வாக்குறுதிக்கு உண்மையோடு இருந்ததாலும் அவ்வாறு செய்தார்.

115:1,2 "உம்முடைய **தேவன் இப்பொழுது எங்கே**? உங்களிடத்தில் அவருக்கு எவ்வித அக்கறையுமில்லை, நீங்கள் எழுபது ஆண்டுகளாக அடிமைத்தளையில் ஏங்கித் தவிக்கும்படி விட்டுவிட்டார்!" என்று புறவின மக்கள் நீண்ட காலமாக இஸ்ரவேலரைச் சீண்டிக்கொண்டே இருந்தார்கள். ஆனால் இப்பொழுது அவர்களால் அப்படிச் சொல்ல முடியாது. அவர்களுடைய ஏளனப் பேச்சு, நிந்தை யாவும் ஒடுங்கிவிட்டன. தேவன் தமது பெயரின் புகழை நிலைநிறுத்தி விட்டார்.

115:3 மெய்யான **தேவன்** எல்லாவற்றிற்கும் மேம்பட்டவர் என்பதை முழு உலகமும் தெளிவாக அறியும் - **"நம்முடைய தேவன் பரலோகத்தில் இருக்கிறார்."** அவர் சர்வ அதிகாரமும் உடையவர் - "அவர் **தமக்குச் சித்தமானபடி செய்கிறார்.**" எல்லாவற்றிற்கும் மேம்பட்டவர் தேவன் என்பதன் பொருள் யாதெனில், அவர் இப்பிரபஞ்சத்திற்கு மேலானவர், இதிலிருந்து வேறுபட்டவர் என்பதாகும். அவர் சர்வ அதிகாரமும் உடையவர் என்பதன் பொருள் யாதெனில், அவர் தமக்குச் சித்தமானபடி செய்ய அதிகாரம் உடையவர், அவருக்குச் சித்தமானது எப்பொழுதும் நன்மையும், நீதியும், ஞானமுமாக இருக்கும் என்பதாகும்.

115:4-7 யூதர்களுடைய உருவ வழிபாட்டின் காரணமாகவே தேவன் அவர்களை பாபிலோனுக்கு அடிமைகளாகக் கொண்டுபோகும்படி அனுமதித்தார். ஆனால் இப்பொழுது அந்தச் சிலைகள் சக்தியற்றவை, ஒன்றுக்கும் உதவாதவை என்பதை அவர்கள் அறிந்துகொண்டார்கள். ஆகவே அவர்கள் புறவினத்தாரின் செதுக்கப்பட்ட உருவச் சிலைகளுக்காக அவர்களை ஏளனம் செய்தார்கள்.

விக்கிரகங்கள் வெள்ளியினாலும் பொன்னினாலும் செய்யப்பட்டவை, ஆகவே அவற்றின் மதிப்பு வணிகச் சந்தையில் முடிவு செய்யப்படும். அவை மனிதர்களால் உருவாக்கப்பட்டவை, ஆகவே அவற்றைத் தொழுது கொள்பவர்களைக் காட்டிலும் தரங்குறைந்தவை. அவற்றிற்கு **வாய்கள் இருந்தும்**, அவற்றால் போதனை செய்யவோ எதிர்காலத்தை முன்னறிவிக்கவோ முடியாது. அவற்றிற்குக் **கண்கள் இருந்தும்**, அந்த மக்களின் பிரச்சினைகளைக் **காணமுடி யாது.** அவற்றிற்குக் **காதுகள் இருந்தும்,** மன்றாட்டைக் கேட்பதற்கான ஆற்றல் இல்லை. அவற்றிற்கு **மூக்குகள் இருந்தும்,** தூபங்கள் காட்டப்படும் போது அவற்றால் **முகர** முடியாது. அவற்றிற்குக் **கைகள் இருந்தும்** உணரும் ஆற்றல் இல்லை. அவற்றிற்கு **கால்கள் இருந்தும்**, பாதங்களை அசைக்க முடியாது, அவை **தங்கள் தொண்டைகளால் சத்தமிடவும்** முடி யாது.

115:8 அவற்றை உண்டுபண்ணுகிறவர் அவற்றைப் போலவே இருக்கிறார்கள். மனிதர்கள் யாரைத் தொழுதுகிறார்களோ அவரைப் போலவே மாறுவார்கள் என்பது முடிவுசெய்யப்பட்ட ஆவிக்குரிய நியதியாகும். அவர்களுடைய கடவுளைப் போலவே அவர்கள் ஒழுக்கநெறியும் அமையும். விக்கிரகங்களை நம்புகிறவர்கள் தூய்மையற்று, அற்பமானவரும், மதிநுட்பமற்ற வரும், புரிதல் அற்றவருமாக மாறிவிடுகிறார்கள்.

115:9 நம்பிக்கைக்குத் தகுதியானவர் யெகோவா ஒருவரே ஆவார். ஆகவே தனிப்பாடகன் ஒருவன் முன்வந்து, நெறிதவறாமல் கர்த்தரிடத்தில் நம் பிக்கைகொண்ட வாழ்க்கை வாழும்படி இஸ்ர வேலை அழைக்கிறான். **அவரே அவர்களுக்குத் துணையும் அவர்களுக்குக் கேடகமுமாயிருக் கிறார்** என்று பாடற்குழுவினர் அறிக்கையிட்டார் கள்.

115:10,11 அடுத்ததாக, ஐயத்திற்கிடமற்றபடி **கர்த்தரிடத்தில்** நம்பிக்கை வைக்க வேண்டு மென்று ஆரோனின் ஆசாரிய **குடும்பத்தார்** அறிவுறுத்தப்படுகிறார்கள்; அவரே சோதிக்கப் பட்டு மெய்ப்பிக்கப்பட்ட **துணைவரும்** பாதுகாவலரும் ஆவார் என்று மறுபடியும் பாடற்குழுவினர் அறிக்கையிட்டார்கள். கர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள் யாவரும், பெரும்பாலும் மனந்திரும்பிய புறவின மக்களையும் சேர்த்து, கர்த்தரை நம்பவேண்டும் என்று அறிவிப்பாளர் மூன்றாவது முறையாக தனது அறிவிப்பை விரிவாக்கம் செய்கிறான். அவரே அவர்களுடைய மெய்யான

துணையும் கேடகமுமாயிருக்கிறார் என்பதை அவர்களும் அறிந்திருக்கிறார்கள்.

115:12-15 அதைத் தொடர்ந்து ஆசாரியர் அடுத்த பாடலைப் பாடத் தொடங்குவதாகத் தோன்று கிறது. அந்த இனத்தாரை மீண்டும் முன்னிருந்த நிலைக்குக் கொண்டுவர வேண்டும் என்ற நினைவுகொண்ட அதே கர்த்தர் அம்மக்களை **ஆசிர்வதிப்பார்** என்று அவர்கள் உறுதிகூறு கிறார்கள். பொதுமக்களும், ஆசாரியரும், யூத குலத்தமைந்தவர்களும், எல்லா வயதினரும், எல்லா வகுப்பாரும், எல்லா நிலையில் வாழ்பவர் களும் ஆசிர்வதிக்கப்படுவார்கள். அவர் தமது மக்களையும் அவர்களுடைய வழித்தோன்றல் களையும் பெருகப்பண்ணி ஆசிர்வதிக்க வேண் டும் என்று அவர்கள் விண்ணப்பம் பண்ணினார் கள். அவ்வினத்தாரின் எண்ணிக்கை குறைவு பட்ட காரணத்தால் அவர்கள் அவ்வாறு விண்ணப் பம் பண்ணினார்கள் என்று தோன்றுகிறது. அந்த விண்ணப்பத்தில் ஆவிக்குரிய வளமும் செல்வ வளமும் அடங்கும் என்றே தோன்றுகிறது. அத னோடு, **வானத்தையும் பூமியையும் படைத்த கர்த்தர்** தமது பொதுவான ஆசிர்வாதத்தையும் நல்க வேண்டுமென்றும் விண்ணப்பித்தார்கள்.

115:16 தேவன் **வானங்களைத்** தமது சொந்தக் குடியிருப்பாக உண்டுபண்ணினார். ஆனால் அவர் மனிதர்கள் வாழ்வதற்கென்று **பூமியை** ஒப்பு வித்தார். அந்த இடத்தில் மனிதனால் அவரை ஆரா திக்கவும் அவருக்கு ஊழியம் செய்யவும் முடியும்.

115:17,18 மரணத்திற்குப் பிறகு கர்த்தரைத் துதிப்பதற்கான மனித ஆற்றல் முடிவுக்கு வந்து விடும் என்னும் பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான் களின் பொதுவான கருத்து 17 -ஆவது வசனத்தில் பிரதிபலிக்கிறது. அவர்கள் அறிந்தவரையில், இறந்து போனவர்கள் கல்போன்ற அமைதி நிலைக்குச் சென்றுவிடுவார்கள். ஆனால் உண் மையில் விசுவாசத்தோடு இறந்தவர்கள் உடனடி யாகக் கர்த்தருடைய முன்னிலைக்குச் சென்று விடுவார்கள் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். அவர்களுடைய உடல்கள் கல்லறையில் அமைதி யாகக் கிடந்தாலும் அவர்களுடைய ஆவிகளோ கட்டப்படாமல் கர்த்தரைத் தொழுதுகொள்ளவும் புகழவும் கூடிய நிலையில் இருக்கும். ஆனால் அவர்களுடைய வாதத்தின் உச்சகட்டம் நமக்கும் பொருந்தக்கூடியதேயாகும் - அதாவது நாம் உயிரோடிருக்கையில் கர்த்தரைத் துதிக்க வேண்டும். அந்த உறுதிமொழியோடு சங்கீதம் முடிவடைகிறது.

நாமோ, இதுமுதல் என்றென்றைக்கும் கர்த்தரை ஸ்தோத்திரிப்போம்.

அல்லேலூயா.

சங்கீதம் 116: நான் கர்த்தரிடத்தில் அன்புகூருகிறேன்!

முதலாவது உயிர்த்தெழுந்த நாளின் அதி காலையின் மகிழ்ச்சியும் களிப்பும் இந்தச் சங் கீதம் நெடுகிலும் பாடலாகத் தொனிக்கின்றன. தோட்டத்திலிருந்த கல்லறை இப்பொழுது வெறுமையாயிருக்கிறது. கிறிஸ்து அவருடைய திருத்தந்தையின் மகிமையால் இறந்தோரிலிருந்து உயிருடன் எழுப்பப்பட்டுவிட்டார். அவருடைய உயிர்த்தெழுதலின் தொடர்பில் ஏறெடுக்கப்பட்ட மன்றாட்டுக்கான விடை கிடைக்கப் பெற்றதன் பொருட்டு இப்பொழுது நன்றியறிதலின் பாட்டு அவரிடத்திலிருந்து பொங்கியெழுகிறது.

116:1-4 அவர் எவ்வாறு தொடங்குகிறார் என்பதைக் கவனியுங்கள். "நான் கர்த்தரிடத்தில் **அன்புகூருகிறேன்**." இது மிகச் சிறிய சொற் றொடர், ஆயினும் மிகத் தூய்மையான தொழுகை. பெரும் ஆரவாரச் சொற்களோடுதான் இறை வனை அணுகமுடியும் என்று தவறாக எண்ணுகிற துணிவற்ற எளிய ஆத்துமாக்களுக்கு, கர்த்தரி டத்தில் கொண்டிருக்கும் அன்பை மிக எளிமை யான சொற்களால் கூறுவதே மெய்யான தொழுகை என்பதை அறிகிற அறிவு பெருமளவில் உற்சாகத் தைக் கொடுக்கும்.

ஆனால் நாம் அங்கே நின்றுவிட வேண்டாம். நமது இரட்சகரைப் போலவே நாமும் இறைவன் நமக்காகச் செய்த பெரிய செயல்களை மீண்டும் மீண்டும் சொல்லிக்கொண்டே போவோம். இது வும் தொழுகையே. கெத்செமனே, கொல்கொதா ஆகிய இடங்களிலிருந்து அவர் ஏறெடுத்த வேதனை மிகுந்த **விண்ணப்பங்களைக் கேட்ட தால்** தமது திருத்தந்தைக்கு முடிவுறா நன்றி களைப் பெருக்கெடுத்து ஓடச்செய்கிறார். **மரணம்** தனது கயிறை அவரைச் சுற்றிலும் இறுக்கிய போது, சரீரத்தின் சாவின் **இடுக்கண்கள்** அவ ரைப் பிடித்தபோது, விவரிக்க இயலா வேதனை களை அவர் சகித்தபோது அவர் தம்மை **விடுவிக் கும்படி கர்த்தரை** நோக்கி விண்ணப்பித்தார். கர்த்தர் விடுவித்தார். மரணம் அடைவதிலிருந்து திருத்தந்தை கர்த்தராகிய இயேசுவை விடுவிக்க வில்லை, மாறாக மரணத்தினின்றே விடுவித்தார்.

116:5,6 கர்த்தருடைய மேதகைமைகளை விவரித்துக் கூறுவதில் ஆராதனையின் மூன்றா

வது அம்சம் காணப்படுகிறது. இங்கே உயிர்த் தெழுந்த கிறிஸ்து தமது உயிர்த்தெழுதலில் வெளிப்பட்ட இறைவனுடைய சில குணங்களைப் பட்டியலிட்டுக் காட்டுகிறார். தேவன் **கிருபை** நிறைந்தவர்; அதாவது, தயவும் நன்மையும் பாராட்டுபவர். தேவன் **நீதியுள்ளவர்**; அவர் செய்பவை யாவும் நீதியும் நேர்மையுமானவை. அவர் **மனவுருக்கமுள்ளவர்**; அவர் பெருமளவு பரிவு காட்டுபவர். **கர்த்தர் கபடற்றவர்களைக் காக்கிறார்**. சிலுவையில் தொங்கிய கர்த்தராகிய இயேசுவுக்கு இது எவ்வாறு பொருந்தும் என்று காண்கையில், அவர் நேர்மையானவரும் குற்ற மற்றவரும் அல்லது உதவியற்றவருமானவரைக் காத்தார் என்று பொருள்கொள்வோம். தமது மக்கள் ஆபத்தில் இருக்கும்போது தேவன் அவர்களைக் காப்பாற்றுகிறார்.

116:7 தேவன் தம்மிடத்தில் நம்பிக்கை வைத் திருக்கிறவர்களுக்குத் தாராளமாக நன்மை செய்கிறார் - அவர் நம்மை செய்வதில் கஞ்சத்த னமாக நடந்து கொள்வதில்லை. ஆகவே கர்த்த ராகிய இயேசு, **"என் ஆத்துமாவே, நீ உன் இளைப்பாறுதலுக்குத் திரும்பு"** என்று சொல் கிறார். அவருடைய கலக்கம், அவருடைய மன வேதனை, அவருடைய சஞ்சலம் யாவும் முடிந்து விட்டன. தேவன் அவருடைய விண்ணப்பத்தைக் கேட்டு அவரை மீட்டுவிட்டார். இப்பொழுது அவர் ஈட்டிய இளைப்பாறுதலுக்குள் நுழைகிறார்.

116:8-11 நம்முடைய கர்த்தர் தம்முடைய திருத் தந்தை தமக்குச் செய்தவற்றை மீண்டும் புன ராய்வு செய்யத் தொடங்குகிறார். நாம் நம்மு டைய ஆராதனையைத் திரும்பச் சொல்வதற்கு அஞ்ச வேண்டியதில்லை என்பதை இதன் வாயிலாக அறிகிறோம். தேவன் தம்முடைய பிள் ளைகள் ஏறெடுக்கிற புகழ்ச்சியைக் கேட்பதில் ஒருபோதும் களைப்படைவதில்லை. அவருக்குச் செலுத்துகிற புகழ்ச்சி மீண்டும் மீண்டும் கூறப் படுவதற்குத் தகுதியானது. திருத்தந்தை செய்த மீட்பு மூன்றத்தனையானது என்பதை எண்ணி, கிறிஸ்துவின் இருதயம் நன்றியால் நிறைந்திருக் கிறது: அவருடைய **ஆத்துமா** மரணத்தினின்று **தப்புவிக்கப்பட்டுள்ளது**; அவருடைய **கண்கள் கண்ணீர்** சொரிவதிலிருந்து தப்புவிக்கப்பட் டுள்ளன; அவருடைய **கால்கள்** தோல்வியிலி ருந்து அல்லது வீழ்வதிலிருந்து தப்புவிக்கப்பட் டுள்ளன. இப்பொழுதோ அவர் **கர்த்தருக்கு முன் பாக ஜீவனுள்ளோர் தேசத்தில் நடக்கிறார்** - பாவத்தையும், மரணத்தையும், கல்லறையை யும், பாதாளத்தையும் வென்றவர்.

10,11 -ஆகிய வசனங்களில் இக்கருத்தின் தொடர்ச்சியைக் காண்பது கடினம் என்று ஒப்புக் கொள்ள வேண்டும். பெரும்பாலும் TEV மொழி பெயப்பு பொதுவான அர்த்தத்தை வெளிப்படுத்து கிறது எனலாம்.

> "நான் முழுவதுமாக நொறுக்கப்பட்டேன்" என்று கூறிய நேரத்தில், மேலும் "ஒருவரையும் நம்பக் கூடாது" என்று நான் பயந்து கூறிய நேரத்திலும்கூட நான் இடைவிடாமல் விசு வாசித்துக் கொண்டிருந்தேன்.

அவருடைய ஆழ்ந்த துக்கத்திலும் அல்லது மனிதர்கள் எந்த அளவுக்கு நம்பகத்தன்மை அற்றவர்கள் என்று மெய்ப்பித்த தருணத்திலும் அவருடைய விசுவாசம் தவறவில்லை. அவர் கூறிய சொற்கள் நம்பிக்கையற்றுச் சொல்லப் பட்டவை அல்ல, உறுதியான நம்பிக்கையால் எழுந்தவையே.

116:12,13 "கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத் தைச் செலுத்துவேன்?" என்னும் கேள்வியில் இறுதியாக தொழுகையின் ஓர் அம்சத்தைக் காணவியலும். நம்மைப் பொறுத்தவரையில் அவருக்குத் திரும்பச் செலுத்துவதைக் குறித்த எந்தச் சிந்தனையும் இருக்க முடியாது; நாம் எதைத் திரும்பச் செலுத்தினாலும் அது அவரு டைய கிருபைக்கு அவமதிப்பையே கொண்டு வரும். ஏதேனும் சிறப்பான முறையில் அவரு டைய கிருபைக்குப் பதிற்செய்ய வேண்டும் என் னும் இயல்பான உந்துதல் ஏற்படுவது இயற் கையே. **இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு, கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுதலே** அதற்கான வழி. **இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொள்ளுதல்** என்பது கர்த்தர் நம்மை இரட்சித்ததற்காக அவருக்கு நன்றி செலுத்துதல் என்று பொருள்படும். **கர்த் தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுதல்**, அவருடைய இரட்சிப்பின் மேன்மையை அறி வதில் சிறப்பான வகையில் வழிபாடு செய்தல் என்று பொருள்படும்.

116:14 உயிர்த்தெழுந்த இரட்சகர் தாம் **கர்த்த ருக்குச் செய்த பொருத்தனைகளை அவருடைய மக்கள் எல்லோருக்கு முன்பாகவும் செலுத்தத்** தீர்மானித்திருந்தார். புகழ்ச்சி, ஆராதனை, நன்றி பாராட்டுதல் ஆகிய பொருத்தனைகளை அவர் தாம் பாடுஅனுபவித்ததற்கு முன்னும், அனுபவித்த நேரத்திலும் செய்திருந்தார். அவர் இப்பொழுது அந்தப் பொருத்தனைகளை நிறைவேற்றுகிறார்.

116:15 மீண்டுமாக கருத்து ஓட்டம் சடிதியில் கர்த்தருடைய அறிவிப்பால் தடைபடுகிறது, **"கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது."** இந்தச் சொற் றொடரை இந்தப் பகுதியின் பின்னணியோடு நாம் பொருத்திக் காண்பதில் சிக்கல் அடைகிறோம்; ஆயினும் இதனைத் தனியொரு வேத பகுதியாகக் கருதி இதன் இனிமையைச் சுவைக்கலாம். இது எல்லாப் **பரிசுத்தவான்களுக்கும்** பொருந்தும் - அவர்கள் தேவனோடு மகிமையில் இருக்கப் போகிறார்கள் என்பதே இதன் பொருளாகையால் அவர்களுடைய மரணம் அவருக்கு **அருமையானது.** ஆனால் கர்த்தராகிய இயேசுவைப் பொறுத்தவரையில் இது மற்ற எல்லோருடைய மரணத்தைக் காட்டிலும் மிகவும் பொருத்தமான உண்மையாகும். துன்மார்க்கரான பாவிகளை நேர்மையான முறையில் தேவன் நீதிமான்களாக்குவதற்கு வழியை ஏற்படுத்தியதால் அவருடைய மரணம் அவருடைய திருத்தந்தைக்கு அருமையாயிருந்தது.

116:16 பதினாறாவது வசனத்தில் உயிர்த்தெழுந்த கர்த்தர் இன்னமும் "யெகோவாவின் அடிமையாகவே" இருக்கிறார். "என் எஜமானை நேசிக்கிறேன்; நான் விடுதலை பெற்றுப்போக மனதில்லை" என்று அவர் கூறுவதுபோல இருக்கிறது (யாத். 21:5). ஆகவே அவர் தம்மை நிரந்தர அடிமையாக ஒப்பந்தம் செய்துகொண்டார். தேவனுடைய **அடியாளின்** மகன் என்னும் நிலையில், அவருடைய தாய் மரியாள் செய்தது போலத் தாமும் ஊழியம் செய்வதாக அவர் பொருத்தனை செய்கிறார், ஏனெனில் யெகோவா தாமே அவருடைய **கட்டுகளை அவிழ்த்தவர்.**

116:17-19 மீண்டும் அவர் தமது திருத்தந்தைக்கு ஸ்தோத்திர பலியைச் செலுத்தி, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவதாகப் பொருத்தனை செய்கிறார். எருசேலம் ஆலயத்தில் கூடியிருந்த தேவனுடைய மக்களின் சபையில், கர்த்தராகிய இயேசு பாடற்குழுவைத் தலைமையேற்று வழிநடத்துகிறவராக கர்த்தருக்கு ஸ்தோத்திரத்தை செலுத்தித் தமது பொருத்தனையை இனியும் நிறைவேற்றுவார். அவர் மேன்மைமிகு இம்மானுவேலராக இப்புவிக்குத் திரும்பி வந்து, ஆணிகளால் தழும்புகளை அடைந்த கரத்தால் பிரபஞ்சத்தின் செங்கோலைப் பெறுகிறபோது இந்நிகழ்வு நடைபெறும்.

சங்கீதம் 117: புறவினத்தார் இறைவனை மகிமைப்படுத்துதல்

திருமறையிலேயே மிகச் சிறிய அதிகாரமாகிய இந்தச் சங்கீதத்தில், கர்த்தருடைய இரக்கம் மிகுந்த தயவுக்காகவும், அவருடைய நிலை பேறான **உண்மைக்காகவும்** இறைவனைத் துதிக்கும்படி புறவினத்தார் அழைக்கப்படுகிறார்கள். இதனுடைய குறிப்பிடத்தக்க சிறப்பை நன்கு உணர்ந்தவராக அப்போஸ்தலனாகிய பவுல், இஸ்ரவேல் பெற்ற மேசியாவின் இரக்கத்தில் புறவினத்தாரும் பங்குபெறுகிறார்கள் என்பதைக் காண்பிக்கும்பொருட்டு முதல் வசனத்தை ரோமர் 15:11 -இல் எடுத்தாண்டுள்ளார். மூதாதையருக்கு தேவன்கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு மட்டுமின்றி, "புறவினத்தார் எல்லோரும் தேவனுடைய கிருபைக்காக அவரைத் துதிப்பவர்களாக மாற்றும்படியும்" அவர் இவ்வுலகிற்கு வந்தார்.

இச்சங்கீதத்தின் பொருளைத் தனிச்சிறப்பு வாய்ந்த இனிமையோடு தருகிறது வீறார்ந்த பாடல்:

நீலநிற வானத்தின் கீழ்வாழும் மனுமக்கள்
ஏறெடுக்கும் புகழ்மாலை படைத்தவரைச்
சென்றுசேர,
மீட்பரது திருப்பெயரும் உன்னதத்திற்கு
உயர்ந்திட
பன்னாட்டு மானிடரும் பண்ணிசைத்துப்
பாடுவரே!

கர்த்தரே, உமதிரக்கம் எந்நாளும் பொழிந்திட,
நிலையான உண்மையும் உம்வாயில் மலர்ந்திட,
கதிரவனும் புலர்ந்தவராய் நிலையாக
ஒளிகொடுக்க
அனைத்துலகும் உம்புகழை ஓயாமல் பாடிடவே!

– ஐசக் வாட்ஸ்

சங்கீதம் 118: இதோ உமதரசர்!

கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வெளிப்பாட்டின்போது பாடப்படும் பாடலே இந்த உன்னதமான புகழ்ச்சிக் குழுப் பாடல். நீண்ட காலமாக இஸ்ரவேல் எதிர்நோக்கியிருந்த மேசியாவின் வெளிப்பாட்டைக் கொண்டாட திரளான மக்கள் குழுமியிருந்த காட்சி எருசலேமை அலங்கரித்துக் கொண்டிருந்தது. ஆலயத்தின் நிழலில் ஒரு தனிப்பாடகன் ஒலிபெருக்கியை ஏந்தியவனாகத் தனது இடத்தில் நின்றான், பாடற்குழு அவன் பிறகே நின்றது. பார்வையாளர்களை ஒருவகையான அமைதி மேற்கொண்டது.

118:1 தனிப்பாடகன்: **கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர்!**
பாடற்குழு: **"அவர் கிருபை என்றுமுள்ளது."**
(பார்வையாளர்கள் யாவரும் தங்கள் மனப்பூர்வமான ஒப்புதலைத் தெரிவிக்கும் வண்ணம் தலைகளை அசைக்கிறார்கள்.)

118:2 தனிப்பாடகன்: **இஸ்ரவேல் சொல்வதாக,**
பாடற்குழு: **"அவர் கிருபை என்றுமுள்ளது."**

118:3 தனிப்பாடகன்: **ஆரோனின் குடும்பத்தார் சொல்வார்களாக,**
பாடற்குழு: **"அவர் கிருபை என்றுமுள்ளது."**
(ஆலயத்தின் கதவருகில் நிற்கிற ஆசாரியர் உரத்த தொனியில் "ஆமென்" என்னும் சத்தத்தை எழுப்புகிறார்கள்.)

118:4 தனிப்பாடகன்: **கர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள் சொல்வார்களாக,**
பாடற்குழு: **"அவர் கிருபை என்றுமுள்ளது."**
(இத்தருணத்தில் தேவனுக்குப் பயப்படுகிற பெருந்திரளான புறவினத்தார் மகிமைநிறைந்த அந்நிகழ்வில் தாங்களும் கிருபையாகப் பங்கு பெற்றதை எண்ணி, தங்களுடைய உதடுகளை மடக்கி அழுகையை அடக்கிக்கொள்கிறார்கள்.)

118:5-9 தனிப்பாடகன்: **நெருக்கத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன்,**
கர்த்தர் என்னைக் கேட்டருளி விசாலத்திலே வைத்தார்.
கர்த்தர் என் பட்சத்தில் இருக்கிறார், நான் பயப்படேன்;
மனிதன் எனக்கு என்ன செய்வான்?
எனக்கு அநுகூலம் பண்ணுகிறவர்கள் நடுவில் கர்த்தர் என்
பட்சத்திலிருக்கிறார்;
என் சத்துருக்களில் சரிக்கட்டுதலைக் காண்பேன்.
மனிதனை நம்புவதைப்பார்க்கிலும்,
கர்த்தர்பேரில் பற்றுதலாயிருப்பதே நலம்.
பிரபுக்களை நம்புவதைப் பார்க்கிலும்,
கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம்.
(உபத்திரவ காலத்தில் தேவனாலே அற்புதமாகப் பாதுகாக்கப்பட்ட விசுவாசமிக்க இஸ்ரவேலின் மீதியானவர்களுடைய கூற்று இது என்பதை மக்கள் புரிந்துகொள்வார்கள். அவர்கள் தேவனிடத்தில் மட்டுமே நம்பிக்கை கொண்டிருக்கக் கற்றவர்கள், மேலும் அவர் மனிதர்களுக்கு அஞ்சுவதில்லை. இறுதியில் **பிரபுக்களை** அதாவது மனிதர்களில் சிறந்தவர்களை **நம்புவதைப் பார்க்கிலும் கர்த்தரிடத்தில் பற்றுதலாயிருப்பது நலம்** என்று உணருகிறார்கள்.)

118:10 தனிப்பாடகன்: **எல்லா இனத்தாரும் என்னை வளைந்துகொள்கிறார்கள்;**
பாடற்குழு: **கர்த்தருடைய நாமத்தினால் அவர்களைச் சங்கரிப்பேன்.**

118:11 தனிப்பாடகன்: **என்னைச் சுற்றிலும் வளைந்துகொள்கிறார்கள்;**
பாடற்குழு: **கர்த்தருடைய நாமத்தினால் அவர்களைச் சங்கரிப்பேன்.**

118:12 தனிப்பாடகன்: **தேனீக்களைப் போல என்னை வளைந்துகொள்கிறார்கள்;**
முள்ளில் பற்றின நெருப்பைப் போல அணைந்து போவார்கள்;

(முட்செடிகள் கண்கவர் சுவாலையை வீசும், ஆனாலும் வெகு விரைவில் சாகும்.)

பாடற்குழு: **கர்த்தருடைய நாமத்தினால் அவர்களைச் சங்கரிப்பேன்.**

118:13,14 தனிப்பாடகன்: **நான் விழும்படி நீ என்னைத் தள்ளினாய்;**
கர்த்தரோ எனக்கு உதவி செய்தார்.
கர்த்தர் என் பெலனும் என் கீதமுமானவர்.
அவர் எனக்கு இரட்சிப்புமானார்.

(அந்திக் கிறிஸ்துவையும், அவனுடைய அதிகாரத்துக்குக் கீழ்ப்படிய மறுத்த மீதியானவர்களைக் காட்டுமிராண்டித்தனமாக நடத்திய செயலையும் தனிப்பாடகன் 13- ஆவது வசனத்தில் குறிப்பிடுகிறான். ஆனால் சரியான தறுவாயில் கர்த்தர் குறுக்கிட்டு கள்ள மேசியாவை அக்கினிக் கடலுக்குள் தள்ளினார் (வெளி. 19:19,20).

118:15,16 தனிப்பாடகன்: **நீதிமான்களுடைய கூடாரங்களில் இரட்சிப்பின்**
கெம்பீரசத்தம் உண்டு;

(மேசியாவின் வெற்றியின் காரணமாகக் கட்டுக்கடங்காத கொண்டாட்டம் இஸ்ரவேல் எங்கும் முழங்குகிறது. ஒவ்வொரு வீட்டிலும் மக்கள் வெற்றிப் பாடலைப் பாடுகிறார்கள்.)

பாடற்குழு: **கர்த்தரின் வலதுகரம் பராக்கிரமம் செய்யும்.**
கர்த்தரின் வலதுகரம் உயர்ந்திருக்கிறது;
கர்த்தரின் வலதுகரம் பராக்கிரமம் செய்யும்.

118:17,18 தனிப்பாடகன்: **நான் சாவாமல், பிழைத்திருந்து,**
கர்த்தருடைய செய்கைகளை விவரிப்பேன்.
கர்த்தர் என்னை வெகுவாய்த் தண்டித்தும்,
என்னைச் சாவுக்கு ஒப்புக்கொடுக்கவில்லை.

(மீதியானவர்களைப் போலப் பேசுகிற தனிப்பாடகன், யூதர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட படுகொலைகள், அந்த இனமே அழிந்து விடுமோ என்னும் அளவுக்குச் செய்யப்பட்ட கொடுமைகள் யாவற்றையும் நினைவுகூருகிறான். ஆனால் கர்த்தரோ அவர்களை அற்புதமான முறையில் சிங்கத்தின் வாயிலிருந்து தப்புவித்தார். இப்பொழுது, அவர்கள் எதிர்காலத்தை நம்பிக்கையோடும் பாதுகாப்பின் உறுதியோடும் சந்திக்கிறார்கள்.)

118:19,20 தனிப்பாடகன்: **நீதியின் வாசல்களைத் திறவுங்கள்;**
நான் அவைகளுக்குள் பிரவேசித்துக் கர்த்தரைத் துதிப்பேன்.

(கர்த்தருக்கு ஸ்தோத்திர பலிகளைச் செலுத்துவதற்காக மீட்கப்பட்ட இஸ்ரவேல் அனுமதி கேட்கிறது. கிறிஸ்து ஆளும்போது கல்வாரியைப் பின்னோக்கிய வண்ணம் பலிமுறைகள் மீண்டும் ஒரு பங்கு நடைமுறைக்குக் கொண்டுவரப்படும். அதாவது, அவை நினைவுகூரப்படும் வகையில் செயல்படுத்தப்படும்.)

பாடற்குழு: **கர்த்தரின் வாசல் இதுவே;**
நீதிமான்கள் இதற்குள் பிரவேசிப்பார்கள்.

(இவை ஆலயத்தின் வாயிற்காப்பாளர்களாகிய லேவியரின் சொற்கள். அந்த வாசல் யெகோவாவுக்குச் சொந்தமானது என்று அவர்கள் விவரிக்கிறார்கள். மேலும் தேவபக்தி நிறைந்த மனிதர்கள் அவரிடம் நெருங்கிச் சேருவதற்கென்று பயன்படுத்துகிற வாசலாகும்.)

118:21,22 தனிப்பாடகன்: **நீர் எனக்குச் செவிகொடுத்து,**

எனக்கு இரட்சிப்பாயிருந்தபடியால்,

நான் உம்மைத் துதிப்பேன்.

(கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே தனது இரட்சகர் என்று இஸ்ரவேல் கைகொட்டி ஆரவாரிக்கிறது.)

பாடற்குழு: **வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே,**

மூலைக்குத் தலைக்கல்லாயிற்று.

கர்த்தராகிய இயேசுவே **கல். வீடுகட்டுகிறவர்கள்** யூத மக்கள், குறிப்பாக அவர்களுடைய தலைவர்கள், அவர்களே அவருடைய முதல் வருகை யின்போது நிராகரித்தவர்கள். இப்பொழுதோ, இஸ்ரவேல் மக்கள் முன்னர் தாங்கள் இழிவுபடுத்திய நாசரேத் ஊரார் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப் பெற்றவராக இருப்பதைக் கண்டு, திருவாளர் பார்க்கர் கூறுவது போல, "வல்லுநரின் முட்டாள்தனம்" என்று முந்தைய நிகழ்ச்சியைக் குறித்து அறிக்கை செய்கிறார்கள். அவர்கள் வேண்டாமென்று நிராகரித்த கல் இப்பொழுது மூலைக்குத் தலைக்கல்லாயிற்று (ASV).

அந்தத் தலைக்கல் கீழ்க்காண்பனவற்றில் எதுவென்னும் கேள்வி எழு கிறது.

1. மாளிகையின் மூலைக்கல்.

2. வளைவின் முக்கியமான கல்.

3. கூம்புக் கோபுரத்தின் உச்சியிலுள்ள கல்.

மேற்கூறியவற்றுள் எது சரியெனினும், பின்னணி மகிமைக்குரிய மேன் மையைக் கருத்தாகக் கொண்டிருக்கிறது.

118:23 **அது கர்த்தராலே ஆயிற்று;**

நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது.

(தம்முடைய மக்களுடைய இதயங்களிலும், பாசங்களிலும் கர்த்தராகிய இயேசுவுக்குரிய மேன்மையான இடத்தைக் கொடுத்தவர் யெகோவாவே என்று இஸ்ரவேல் ஒப்புக்கொள்வதாகப் பாடற்குழு ஏற்கிறது. இறுதியில் அவ்வுன்னதமான நாள் வந்துவிட்டது)

118:24 **இது கர்த்தர் உண்டுபண்ணின நாள்;**

இதிலே களிகூர்ந்து மகிழக்கடவோம்.

("அந்தக் குறிப்பிட்ட நிகழ்வுக்காக உருவாக்கப்பட்டதுபோல, மக்கள் எதிர்பாராத நாளாக, அது ஒரு புதிய நாளாகக் கருதப்பட்டது. சாதாரண முறையில் உருவாக்கப்படும் நாட்களிலிருந்து வேறுபட்ட முறையில் அந்நாள் உருவாக்கப்பட்டு மற்ற நாட்களோடு சேர்க்கப்பட்டது" என்று இதனைத் திருவாளர் பார்னஸ் விவரிக்கிறார்.)[79]

118:25 **கர்த்தாவே, இரட்சியும்;**

கர்த்தாவே, காரியத்தை வாய்க்கப்பண்ணும்!

(கிறிஸ்து எருசலேமுக்குள் வெற்றி வாகை சூடியவராக நுழைந்தபோது - உண்மையில் அப்பொழுது அவர் வெற்றி பெற்றவராக நுழையவில்லை - அந்நகர மக்கள் இந்த வசனத்தையே எடுத்துரைத்தார்கள்; "ஓசன்னா" என்னும் எபிரெய மொழிச் சொல் "இப்பொழுது இரட்சியும்" என்று பொருள்படும் (மத். 21:9). ஆனால் அவர்கள் தங்களுடைய வரவேற்புச் சொற்களை அவருடைய மரணத்திற்கான கோரிக்கையாக மாற்றினார்கள்.

ஆயினும் இஸ்ரவேல் இப்பொழுது கர்த்தருடைய அதிகாரத்தின் நாளில் அவரை வரவேற்கிறது. அம்மக்களுடைய மனநிலை உண்மையோடும் நேர்மையோடும் இருக்கிறது.)

118:26 தனிப்பாடகன்: **கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்;**

(கர்த்தர் ஆலயப் பகுதியை நெருங்குகிற வேளையில் தலைமைப் பாடகன் மக்களின் வாழ்த்தை எழுச்சியூட்டும் தொனியில் பாடுகிறான். அது வரலாறுபூர்வமான சிறந்த தருணம். பல நூற்றாண்டுகளுக்கு முன்னர், "கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்" (மத். 23:39) என்று கூறும்வரை இஸ்ரவேல் தம்மைக் காண முடியாது என்று கர்த்தர் அம்மக்களை எச்சரித்தார். இப்பொழுதோ, இறுதியில் அவரைத் தங்களுடைய மேசியாவாகவும் அரசராகவும் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டார்கள்.)

பாடற்குழு: **கர்த்தருடைய ஆலயத்திலிருந்து உங்களை ஆசிர்வதிக்கிறோம்.**

(இது பெரும்பாலும், ஆலயத்தின் வாசலில் உட்புறமாக நின்று கொண்டிருக்கும் ஆசாரியரின் வாழ்த்து என்று தோன்றுகிறது.)

118:27 **கர்த்தர் நம்மைப் பிரகாசிப்பிக்கிற தேவனாயிருக்கிறார்;**
பண்டிகைப் பலியைக் கொண்டுபோய் பலிபீடத்தின்
கொம்புகளில் கயிறுகளால் கட்டுங்கள்.

(இஸ்ரவேல் சபை இயேசுவை தேவனென்று தொழுதுகொள்கிறார்கள். மேலும் அவர்களுடைய இருளான இருதயங்களுக்கு வெளிச்சத்தைக் கொண்டு வந்தவர் அவரென்று வாழ்த்துகிறார்கள். அவர் முன்னணியில் நின்று வழிநடத்த ஊர்வலம் வெண்கலபலிபீடத்தை நோக்கி நகருகிறது, அவர்கள் பலிகளைக் கட்டுவதற்குக் கயிறுகளைக் கேட்கிறார்கள்.)

118;28,29 தனிப்பாடகன்: **நீர் என் தேவன், நான் உம்மைத் துதிப்பேன்;**
நீர் என் தேவன், நான் உம்மை உயர்த்துவேன்.

(கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பெயரைப் பழமொழியாகப் பயன்படுத்திய வர்கள் இப்பொழுது அவரே தேவனென்று அறிக்கை செய்கிறார்கள்.)

பாடற்குழு: **கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர்;**
அவர் கிருபை என்றுமுள்ளது.

(மிக ஆழமான துதியும் ஆராதனையும் பெருத்த ஒலியுடன் புகழ்ச்சிப் பாடல் எழுகிறது. பழைய எருசலேம் நகரத்தின் சுற்றுப்புறத்தின் தெருக்களில் இசை எதிரொலிக்கிறது. அந்நிகழ்வு முடியும் தறுவாயில் மக்கள், ஆளுகை புரிவதற்கு உரிமை பெற்ற மகிமையின் கர்த்தருடைய ஆயிரமாண்டு அதிசய ஆட்சியை மகிழ்வுடன் அனுபவிக்கும் பொருட்டுத் தங்களுடைய குடியிருப்புகளுக்குத் திரும்புகிறார்கள்.)

சங்கீதம் 119: திருமறையைக் குறித்த அனைத்து விவரங்களும் அடங்கிய பாடல்

திருமறையின் பொன்னாலான அகரவரிசை என்று இச்சங்கீதம் அழைக்கப்படுகிறது. இது இருபத்திரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதியும் எபிரெய மொழி எழுத்துகள் ஒவ்வொன்றையும் பிரதிபலிப்பதே அப்பெயருக்கான காரணமாகும். ஒவ்வொரு பகுதியிலும் எட்டு வசனங்கள் உள்ளன, ஒவ்வொரு வசனமும் குறிப்பிட்ட எபிரெய எழுத்தை முதல் எழுத்தாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. எபிரெய மொழியில் முதல் பகுதியில் உள்ள எட்டு வசனங்களும் ஆலெப் (Aleph) என்னும் எழுத்தை முதல் எழுத்

தாகக்கொண்டு அமைக்கப்பட்டுள்ளன; அது போலவே இரண்டாவது பகுதியின் ஒவ்வொரு வசனமும் பேத் (Beth) என்னும் எழுத்தை முதல் எழுத்தாகக்கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக இந்தச் சங்கீதம் முழுவதும் அமைந்துள்ளது.

NKJV மொழிபெயர்ப்பில் இந்த மிகப்பெரிய சங்கீதத்தில் நான்கு வசனங்கள் தவிர மற்ற எல்லா வசனங்களிலும் தேவ வார்த்தையைக் குறிக்கும் அல்லது விவரிக்கும் பெயர் இடம் பெற்றுள்ளது. 84, 121, 122 மற்றும் 132 ஆகிய வசனங்கள் இதற்கு விதிவிலக்காக உள்ளன. தேவ வார்த்தையை விவரித்துக் கூறும் பெயர்கள்: வேதம், சாட்சிகள், வழிகள், கட்டளைகள், பிரமாணங்கள், கற்பனைகள், நீதிநியாயங்கள், வார்த்தை (வார்த்தைகள்), வாக்குத்தத்தம், நியாயத்தீர்ப்புகள், உண்மைகள், வாக்கு, நீதி, வசனங்கள்.

எபிரெய மொழியின் எழுத்துகளை இவ்வாறு வரிசைப்படுத்திப் பயன்படுத்தியிருப்பதன் மூலம் "தேவ வார்த்தையின் நிறைவையும் முழுமையையும் அமைத்துக் கொடுக்க மனுக்குல மொழிகள் யாவும் செலவழிந்து போயின" என்று பாடலாசிரியன் கூறுவதாகத் திருவாளர் ரிட்அவுட் கருதுகிறார்.[80] இது போன்ற கருத்தைப் புதிய ஏற்பாட்டிலும் நாம் காணவியலும். நமது கர்த்தராகிய இயேசு தம்மை அல்பாவும் ஓமெகாவும் என்று வருணிக்கிறார் (வெளி. 1:8). இவையிரண்டும் கிரேக்க மொழியில் முதல் மற்றும் கடைசி எழுத்துகள் ஆகும். அகரவரிசை எழுத்துகள் ஒவ்வொன்றாலும், எந்த முறையில் அவை இணைக்கப்படினும், அவரே அனைத்து நன்மையும் நிறைவுமாக இருக்கிறார் என்று அவர் வெளிப்படுத்தப்படுகிறார் என்னும் சிந்தனையை இதில் காண்கிறோம்.

இந்தச் சங்கீதத்தில் எந்த இரண்டு வசனங்களும் எவ்வித வேறுபாடுமின்றி ஒன்றுபோல இல்லை. ஒவ்வொரு வசனத்திலும் சொற்கள் நுட்பமான பொருள் வேற்றுமை கொண்டிருக்கின்றன.

119 -ஆவது சங்கீதத்தைக் குறித்துத் திருவாளர் லேவிஸ் விளக்கமளிக்கிறார்:

> இந்தப் பாடல் 18 –ஆவது சங்கீதத்தைப் போல இருதயத்திலிருந்து திடீரென வெளிப்பட்ட சிந்தனையல்ல, அவ்வாறு இது காட்டிக்கொள்வதுமில்லை. இது ஒரு குறிப்பிட்ட அமைப்பைக் கொண்டுள்ளது, சித்திரத் தையல் வேலை போன்றது, ஒவ்வொரு இழையாகத் தைக்கப் பட்டது; அமைதியான நீண்ட நேரம் செல வழித்து இதன் கருப்பொருளின் மேல் கொண்ட பற்றாலும், நிதானமும் ஒழுங்கும் கடைப்பிடிக் கப்பட்ட வேலைப்பாட்டில் கொண்ட மகிழ்ச்சியாலும் இயற்றப்பட்டது.[81]

இச்சங்கீதத்தின் வெவ்வேறு பகுதிகளுக்குத் திருவாளர் F. W. க்ராண்ட் தந்திருக்கும் குறிப்பை முதன்மையான அடிப்படையாகக் கொண்டு தரப்பட்டுள்ள தலைப்புகள்:

வச. 1-8	வசனத்திற்குக் கீழ்ப்படிவதால் பெறுகிற நன்மை.
வச. 9-16	வசனத்தால் தூய்மை அடைதல்.
வச. 17-24	வசனத்தால் உய்த்துணர்தல்.
வச.25-32	வசனத்தின் மூலம் தன் குறைவை உணர்தல்.
வச. 33-40	வசனத்தின் ஆற்றல்.
வச. 41-48	வசனத்தின் மூலம் பெறுகிற வெற்றி.
வச.49-56	வசனத்தின் மூலம் பெறுகிற இளைப்பாறுதலும், ஆறுதலும்.
வச. 57-64	வசனத்தில் உண்டாகிற பாதுகாப்பு.
வச. 65-72	நல்ல, கெட்ட நேரங்களில் வசனத்தின் பெருமதிப்பு.
வச. 73-80	வசனத்தின் மூலம் பெறுகிற நுண்ணறிவு.
வச. 81-88	வேதனையுற்றவர் வசனத்தால் ஊக்குவிக்கப்படுதல்.
வச. 89-96	வசனத்தின் நிலைபேறு.
வச. 97-104	வசனத்தின் மூலம் பெறுகிற ஞானம்.
வச. 105-112	எல்லாச் சூழ்நிலைகளிலும் வசனம் தீபமாகவும், வெளிச்சமாகவும் விளங்குதல்.
வச. 113-120	பொல்லாதவனும் வசனமும்.
வச. 121-128	வசனத்தின் மூலம் பெறுகிற பிரிந்த வாழ்க்கையும், மீட்பும்.
வச.129-136	வசனத்தின் மூலம் பெறுகிற மகிழ்ச்சியும், ஐக்கியமும்.
வச. 137-144	வசனத்தின் மேல் கொண்ட ஆர்வம்.
வச. 145-152	வசனத்தின் மூலம் பெறுகிற அனுபவம்.
வச. 153-160	வசனத்தின் மூலம் பெறுகிற இரட்சிப்பு.

வச. 161-168 வசனத்தின் நிறைவு.

வச. 169-176 வசனத்தின் மூலம் ஏறெடுக்கப் படுகிற மன்றாட்டும், புகழ்ச்சியும்.

மிகச் சிறந்த பொருளில் கூறவேண்டுமாயின், நம்முடைய இரட்சகர் இவ்வுலகில் மனிதராக அனுபவித்தது போல, தேவ வார்த்தையின் மேல் கொண்டுள்ள பற்றை இந்தச் சங்கீதம் வெளிப் படுத்துகிறது. "இந்தச் சங்கீதத்தின் முழுமை யான தீர்க்கதரிசன இயல்பின்படி காண்கிறபோது, இஸ்ரவேல் மீண்டும் இறைவனிடத்திற்கும், அது புறக்கணித்திருந்த இறைவாக்கினிடத்திற்கும் திரும்புகிற வேளையில் கூறுகின்ற சொற்களாக இது விளங்குகிறது" என்று திருவாளர் பெல்லட் கருத்துரை வழங்குகிறார்.[82]

119:1 கர்த்தருடைய வசனத்திற்குக் கீழ்ப் படிந்த வாழ்க்கை வாழ்கிற மனிதன் **பாக்கிய வான்** அல்லது மகிழ்ச்சி நிறைந்த மனிதன் ஆவான். அவன் பாவம் செய்து தோல்வியுற்றாலும், அறிக்கை செய்வதற்கும் முன்னிருந்த நிலைக் குச் சீரடைவதற்கும் வசனத்தில் முன்னேற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவன் **உத்தமமான** நிலை யில் விளங்குவதற்கு இது வழிவகுக்கிறது.

119:2 அவருடைய சாட்சிகளுக்குக் கீழ்ப்படி வதே கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும் - விருப்ப மற்ற முறையிலோ, அரை மனதோடோ, தொய்ந்து போன கால்களோடோ அல்ல; மாறாக **முழு இருதயத்தோடு அவரை** மகிழ்விக்கும் பொருட்டு ஆழ்ந்த, பெருமளவு விருப்பத்தோடு செயல்படு வதே இங்கு சொல்லப்பட்டுள்ளது.

119:3 எதிர்மறையாகக் கூறுவோமெனில், ஒவ்வொரு **அநியாயத்திற்கும்** விலகி வாழ்வதி லேயே மகிழ்ச்சி விளங்கும். நேரடியாகக் கூறுவோ மெனில், அவர் நமக்குத் திருமறையில் வரைந்து கொடுத்திருக்கிற வழியில் செல்லுவோமெனில் மகிழ்ச்சியைக் கண்டடைய முடியும். பொல்லாப் பிலிருந்து விலகியிருப்பதற்கு நிச்சயமான வழி, நன்மை செய்வதில் முழுவதுமாக நமது நேரத் தைச் செலவிடுவதே ஆகும்.

119:4 தேவனுடைய **கட்டளைகள்** கட்டாயமற் றவை அல்ல, மாறாக கண்டிப்பான ஆணைகளா கும். அவற்றை ஏனோதானோ என்றல்ல, **கருத் தாய்க்** கைக்கொள்ள வேண்டும்.

119:5 பொதுவான உண்மைகள் தனது சொந்த வாழ்விலும் உண்மையாக இருக்க வேண்டுமென்று பாடலாசிரியன் விரும்புகிறதைக் குறித்துச் சொல்லத் தொடங்குகிறான். கட்டளை களிலிருந்து விண்ணப்பத்தை நோக்கிப் புலப் படாத வகையில் செல்கையில், விருப்பமும் உறுதியான கீழ்ப்படிதலுக்கான ஆற்றலும் முடி வாக தேவனிடத்திலிருந்துதான் வரவேண்டும் என்று அவன் ஒப்புக்கொள்கிறான்.

119:6 கர்த்தருடைய எல்லாப் பிரமாணங் களையும் அவன் கைக்கொள்கிற காலத்தில் மட் டுமே, உள்ளத்தை வேதனைக்குட்படுத்துகிற, கன்னத்தைச் சிவக்கச் செய்கிற, சில வேளை களில் உடலை நாணிக் குறுகச் செய்கிற அவ மானத்திலிருந்து விடுபடுவான்.

119:7 "மன்றாட்டிலிருந்து புகழ்ச்சியை நோக் கிச் செல்வது தொலைதூரப் பயணம் அன்று." தேவனுடைய நீதியான நியாயங்களுக்குக் கீழ்ப் படியக் கற்கிறவர்கள் நிறைந்த மகிழ்ச்சியைப் பெறுவார்கள். மேலும் அது தன்னியல்பான துதி செலுத்துதலுக்கு வழிவகுக்கும்.

119:8 உறுதியான தீர்மானம் தாழ்மையோடு சார்ந்திருக்கும் பண்போடு இணைந்திருக்கிறது. பாடலாசிரியன் உறுதியுடன் கர்த்தரைப் பின் தொடரத் தீர்மானித்திருக்கிறான். எனினும் அவன் தனது ஆற்றாமையை உணர்ந்திருக்கிறான். **"முற்றிலும் என்னைக் கைவிடாதேயும்."** இத்தகைய நிலைக்கே தான் தகுதியானவன் என்று எழுத்தாளன் உணர்ந்து விண்ணப்பம் செய் யும் அளவிற்கு, அவனுடைய உண்மை நிலை இருந்திருக்க வாய்ப்பில்லை.

119:9 ஒவ்வொரு இளைஞனுடைய வாழ்க்கை யிலும் மிக முக்கியமான பிரச்சினை எவ்வித மாகத் தன்னைத் தூய்மையாக வைத்துக்கொள் ளுதல் என்பதேயாகும். அதற்கான விடை நடை முறை வாழ்க்கையில் திருமறை வசனங்களுக் குக் கீழ்ப்படிவதாலேயே கிடைக்கும்.

119:10 பரிசுத்தத்தைக் குறித்த விசயத்தில் மனித விருப்பமும் (**என் முழு இருதயத்தோடும் உம்மைத் தேடுகிறேன்**). தெய்வீக ஆற்றலளிப் பும் (**என்னை உமது கற்பனைகளைவிட்டு வழிதப்ப விடாதேயும்**) விநோதமான முறையில் இணைந்திருக்கின்றன.

119:11 நம்முடைய விருப்பமின்றியோ நம்மு டைய ஒத்துழைப்பின்றியோ அவர் நம்மைப் பரிசுத்தமாக்கமாட்டார். "உலகத்திலேயே மிகச் சிறந்த நூல் திருமறை ஒன்றே. அதனை வைப்ப தற்கு மிகச் சிறந்த இடம் இருதயமே ஆகும். அதனை அங்கு வைப்பதற்கான மிகச் சிறந்த காரணம் தேவனுக்கு எதிராகப் பாவம் செய்வதி

லிருந்து அது நம்மை இரட்சிக்கிறது" என்று ஒருவர் ஞானமாகக் கூறினார்.

119:12 தேவன் மிகப்பெரியவரும் கிருபை நிறைந்தவருமாக இருக்கின்ற காரணத்தால், விசுவாசியின் புதுப்பிக்கப்பட்ட இயல்பு அவருடைய **பிரமாணங்களைக்** கற்கவும் அவற்றின் மூலமாக நற்பண்புகளைப் பெறவும் விரும்புகிறது.

119:13 திருமறை வசனங்களில் உள்ள அரும் பொருளின்மேல் வைக்கும் பேரார்வம் அவற்றை மற்றவர்களிடம் பகிர்ந்தளிக்கக்கூடிய விருப்பத்தை நிச்சயமாக ஏற்படுத்தும். நாம் உண்மையாக ஏதொன்றை நம்புகிறோமோ அதை மற்றவர்களிடம் கூறவேண்டுமென்று விரும்புகிறோம், இது வாழ்வின் பொதுவான பிரமாண மாகும்.

119:14 திருமறையில் புதைந்திருக்கிற செல்வத்தைத் தேடிக் கண்டடைகிற ஒரு மனிதனைக் காட்டிலும், விலையுயர்ந்த பொன், வெள்ளி போன்ற கனிமங்களைத் தேடி தங்கக்கட்டிகளைக் கண்டுபிடிக்கிற எவனும் கூடுதலாக மகிழ்வடைய மாட்டான்.

119:15 மிகக் கூடுதலாக மனநிறைவு தரக்கூடிய தியானத்திற்கு தேவனுடைய வசனமே முடிவில்லாத ஆதாரங்களைத் தருகிறது. ஆனால் அந்த வசனங்களை நடைமுறை வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டும் என்னும் முடிவிலிருந்து ஒருக்காலும் விலக்கிவிடக் கூடாது.

119:16 "அவருடைய கற்பனைகள் பாரமானவையல்ல" (1 யோவான் 5:3). தேவனாலே பிறந்திருக்கிற எவனும் கர்த்தருடைய **பிரமாணங்களில் மனமகிழ்ச்சியாயிருக்கிறான்**. மேலும் அவன் அவற்றைத் தொடர்ந்து நினைவுகூர உறுதிபூண்டிருக்கிறான்.

119:17 அவரின்றி நம்மால் ஒன்றும் செய்ய வியலாது. நாம் வாழ்வதற்கும் அவருடைய வசனத்திற்குக் கீழ்ப்படிவதற்கும் அவருடைய கிருபை நமக்குத் தேவை. நம்முடைய தேவை மிகப் பெரியதாயிருப்பதால் அவருடைய கிருபையை மிக அதிகமான அளவு வேண்டுவோம்.

119:18 மேற்போங்காகப் படிக்கும்போது மறைந்திருக்கிற **அதிசயமான** ஆவிக்குரிய நன்மைகள் திருமறையில் நிறைந்திருக்கின்றன. அவற்றைக் காண்பதற்கு நம்முடைய **கண்கள்** திறக்கப்பட வேண்டும்.

119:19 ஒரு பயணி தான் சேர வேண்டிய இடத்தைத் தவறாமல் சென்றடைய வழிகாட்டும் பாதையின் வரைபடமாகத் திருமறை திகழ்கிறது.

119:20 நாம் திருமறையின் மேல் கொண்டுள்ள தாகம் பெருமளவிலானதாகவும், சஞ்சல மற்றதாகவும் இருக்குமாயின் அது நல்லது. திருமறை வசனங்களின் மேல் பாடலாசிரியன் கொண்டிருந்த வாஞ்சையால் அவனுடைய ஆத்துமா விழுங்கப்பட்டது போலாயிற்று. இவ்வித ஆர்வமிக்க, உச்ச அளவிலான வாஞ்சையை அவன் **எக்காலமும்** வைத்திருந்தான்.

119:21 அகங்காரிகளும் நிந்திக்கிறவரும் எவ்விதமாகக் கர்த்தருடைய கற்பனைகளை அவமதித்தார்கள் என்றும், தேவனுடைய கரத்தாலே அவர்கள் விரைவாகத் தாழ்த்தப்பட்டார்கள் என்றும் காட்டுகிற நிகழ்ச்சிகளாலே வரலாறு நிறைந்திருக்கிறது.

119:22 உலகம் விசுவாசியை ஏளனம் செய்து இகழுகிறது. "அந்தத் துன்மார்க்க உளையிலே அவர்களோடேகூட நீங்கள் விழாமல் இருப்பதாலே அவர்கள் ஆச்சரியப்பட்டு, உங்களைத் தூஷிக்கிறார்கள்" (1 பேது. 4:4). ஆனால் வாய்மை வெகுமதி பெறும், "நல்லது செய்தாய்" என்று அவர் கூறும் பாராட்டு **நிந்தையையும் அவமானத்தையும்** ஈடுசெய்வதிலும் பெரியது.

119:23 ஆளுகை செய்யும் அதிகாரிகள் கிறிஸ்தவனை இழித்துப் பேச ஒன்று சேர்ந்தாலும், அவன் திருமறையைத் தியானிப்பதிலே ஆறுதல் அடைகிறான். "அவனைப் பழிதூற்றும் மனிதர்களுக்கு எவ்விதப் பதிலையும் கூறாததன் மூலம், அவன் அவர்களுக்குப் பதில் கூறுகிறான்."

19:24 மாத்யூ ஹென்றி விவரிக்கிறார்:

> தாவீதுக்கு எதிராக இளவரசர்கள் பேசியபோது, அவன் என்ன செய்வதென்று திகைத்தானா? தேவனுடைய கற்பனைகள் அவனுக்கு ஆலோசகராயிருந்தன. மேலும் அவை அவனைப் பொறுமையோடு சகிக்கும்படியும் தனது நிலையை தேவனிடத்தில் சமர்ப்பிக்கும்படியும் ஆலோசனை கூறின.[83]

119:25 வாழ்க்கையில் பள்ளத்தாக்கு மற்றும் மலையுச்சி அனுபவங்கள் ஏற்படுகின்றன. நாம் துக்கத்தால் தள்ளிவிடப்படுகையில், கர்த்தருடைய **வசனத்தின்** வல்லமையால் நம்மை **உயிர்ப்பிக்கும்படி** வேண்டுதல் செய்வோம்.

119:26 நாம் நம்முடைய **வழிகளை** அவரிடத்தில் விவரிக்கும்போது, அதாவது, நம்முடைய பாவங்களை அவரிடத்தில் அறிக்கை செய்யும்போது, கர்த்தர் அவற்றை மன்னிப்பதன் மூலம் நமக்கு விடைதருகிறார். இது புதுப்பிக்கப்பட்ட

வகையில் பரிசுத்தத்திற்கான விருப்பத்தைத் தருகிறது. **"உமது பிரமாணங்களை எனக்குப் போதியும்"** என்னும் விண்ணப்பத்தில் அவ் விருப்பம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

119:27 தேவனுடைய **கட்டளைகளின்** பொருளை அறிவதும், அவற்றை நமது வாழ்க் கையில் நடைமுறைப்படுத்துவதும் நமக்கு அவசி யம். தேவனுடைய **அதிசயச்** செயல்களைத் **தியானிக்க** அது வழிநடத்தும்.

119:28 வாழ்வின் இருண்ட இக்கட்டான நேரங் களில், நம்முடைய ஆத்துமாக்கள் கண்ணீரால் கரைந்துபோகுமெனில், சகலவித ஆறுதலின் தேவன் தாழக் குனிந்து ஒரு தனி வசனத்தின் மூலமாக நம்மைத் தூக்கியெடுத்து, தொடர்ந்து முன்னேறிச் செல்லும்படி பலப்படுத்துகிறார்.

119:29 தேவனுடைய ஆவியினாலும், தேவனு டைய வசனத்தினாலும் உண்மைக்கும் தவறுக் கும் இடையேயுள்ள வேறுபாட்டை நம்மால் பகுத் தறிய முடியும். ஒவ்வொரு வகையான **பொய்யை யும்** பரிசுத்தத்தோடு வெறுக்கத்தக்க பண்பைத் திருமறை நமது மனதிற்குள்ளாகப் பதிய வைக் கிறது. ஒன்றைக் குறித்து தேவன் என்ன கூறு கிறாரோ அதுவே உண்மை என்றும் வேதம் கற் பிக்கிறது (யோவான் 17:17).

119:30 ஒருவனும் பரிசுத்தத்தை நோக்கமின்றி அடையமுடியாது. புனித வேதத்தில் **"மெய் வழி யைத் தெரிந்துகொண்டு"** என்று சொல்லப்பட் டுள்ள வண்ணம் கருத்தூன்றிய தெரிந்தெடுப் பினாலேயே அதைப் பெறமுடியும். "தேவனுடைய கட்டளைகள் நமது இலக்காக நமக்கு முன் நிறுத்தப்பட வேண்டும், நாம் செயல்புரிவதற்குரிய மாதிரியாக அது விளங்கவேண்டும், நாம் நடப்ப தற்குரிய பாதையாக அது திகழவேண்டும்" என்று திருவாளர் ஸ்பர்ஜன் கூறுகிறார்.

119:31 தேவனுடைய **சாட்சிகளிடமாய்ப்** பாட லாசிரியன் வழிநடத்தப்பட்டது போல அவற்றை அவன் கைக்கொள்கிறான். ஆனாலும் அவற்றை விட்டு விலகித் திரிவதற்கான வேட்கையை உணர்ந்தவனாக, நெஞ்சறிந்த நம்பிக்கையோடு கர்த்தரிடம் கதறுகிறான்.

119:32 தேவன் நமக்கு அறிவாற்றல் மிகுந்த தலைகளைத் தராமல், பரந்த இருதயங்களைத் தந்திருப்பதாலேயே அவருடைய கற்பனை களைக் கைக்கொள்ள விரைகிறோம். அவ்வாறு கீழ்ப்படியும் செயல் அன்புணர்வாலேயல்லாமல் அறிவாற்றலாலே ஏற்படுவது அன்று.

119:33 நாம் கட்டளைகளை நாடி விண்ணப் பிக்க வேண்டும். இறைவனுடைய பள்ளி மாண வர்களாக, கட்டளைகளை நடைமுறைச் செயல் களாக மாற்றவும், நம்முடைய வாழ்க்கையின் முடிவுபரியந்தம் அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவதற்கும் நாம் கற்பதற்கு வாஞ்சையோடு செயல்புரிய வேண்டும்.

119:34 நாம் உணர்வடைவதற்கான அறிவைப் பெற மன்றாட வேண்டும். திருமறை வசனங்களை யும், அவற்றின் பொருளையும், அவற்றை நிறைவேற்றுவதற்கான கடமைகளையும் குறித்த சரியான அறிவை நாம் பெற்றிருக்க வேண்டும். முழுமையான பற்றுடன் அவரைப் பின்தொடர்ந்து செல்வதற்கு வேறு என்ன வழி?

119:35 வழிநடத்துதலுக்காக நாம் மன்றாட வேண்டும். ஆவி விரும்புகிறது. ஆனால் மாம் சமோ பலவீனமாயிருக்கிறது. ஆகவே கர்த்தர் தாமே அவருடைய சித்தத்தின் **பாதையில்** நமது கால்களை வழிநடத்த நாம் விரும்ப வேண்டும். ஏனெனில் அதுவே நாம் உண்மையாக மகிழ்ந் திருப்பதற்கான ஒரே வழி.

119:36 பொருட்செல்வத்திற்காக அல்ல, ஆவிக்குரிய செல்வத்திற்காக நாம் மன்றாட வேண்டும். "போதுமென்ற மனதுடனேகூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம்" (1 தீமோ. 6:6). பணத் தின்மேல் உள்ள ஆசையை நீக்கி அதற்குப் பதி லாகத் திருமறையின்மேல் ஆவலை உண்டுபண் ணுவது கிருபை செய்யும் அற்புதச் செயலாகும்.

119:37 நிழல்களுக்காக அல்ல, தெய்வீக உண்மை அனுபவங்களுக்காக நாம் மன்றாட வேண்டும். தொலைக்காட்சியைக் குறித்த தேவ னுடைய கருத்து: **"மாயையைக் காணாதவாறு நீர் என் கண்களை விலக்குவீராக."** இல்லாத உலகத்தை, ஒருக்காலும் இல்லாத தேசத்தை அது விவரித்துக் காட்டுகிறது. தேவனுடைய வச னமோ உண்மையான வாழ்க்கையைக் குறித்து விவரிக்கிறது.

119:38 தேவனுடைய வாக்குறுதி நிலைநிறுத் தப்படுவதற்காக நாம் மன்றாட வேண்டும். "உமது கிருபையின் எல்லா ஆறுகளையும் எனது உரிமையாகக் கோருகிறேன்; ஒவ்வொரு வாக் குறுதியின் மேலும் எனது பெயரை எழுதுவீராக." நாம் அவருக்குப் பயப்படுகிறோம் என்னும் உண் மையிலேயே நாம் உரிமைகோரும் வாக்குறுதி கள் சார்ந்திருக்கின்றன.

119:39 கர்த்தராகிய இயேசுவின் திருப்பெயருக்கு அவமானம் அல்லது அவமரியாதை கொண்டுவரக்கூடிய எல்லா நிந்தைக்கும் ஆளாகாதபடி பாதுகாக்கப்பட நாம் மன்றாட வேண்டும். அவருடைய **நியாயத்தீர்ப்புகள் நல்லவை.** நாம் அவற்றை உண்மையோடு பின்பற்ற வேண்டும்.

119:40 நாம் தனிப்பட்ட உயிர்மீட்சிக்காக மன்றாட வேண்டும். "வெட்டாந்தரை தண்ணீர்த் தடாகமும், வறண்ட நிலம் நீரூற்றுகளாகவும் மாறும்" (ஏசாயா 35:7). நாம் அனல்பெற்று அவருடைய **கட்டளைகளை வாஞ்சிப்போமானால்**, அவர் தமது **நீதியால்** நம்மை **உயிர்ப்பிப்பார்**.

119:41 அவருடைய **தயவும் இரட்சிப்பும்** தாமாக நமக்குக் கிடைக்கும் என்று எண்ணிவிடக்கூடாது. நாம் இரட்சிக்கப்பட்ட தருணத்தில் எவ்விதமாக அவருடைய இரக்கங்களையும் பாதுகாப்பையும் சார்ந்திருந்தோமோ அதுபோலவே எப்போதும் அவரைச் சார்ந்திருக்க வேண்டிய நிலையிலேயே இருக்கிறோம். ஆகவே ஒவ்வொரு நாளும் அவர் நம்மீது அக்கறை செலுத்த வேண்டும், பாதுகாக்க வேண்டும் என்று அவருடைய வாக்குறுதிகளை உரிமைகோருகிறோம்.

119:42 நம்முடைய மன்றாட்டுகளுக்குக் கர்த்தர் விடை தருகிறார் என்பதற்கான மறுக்கவியலாத நிரூபணங்கள் அவிசுவாசிகளின் **நிந்தைகளை** அடக்குகின்றன. நம்முடைய விசுவாசமோ ஒருபோதும் தவறாத தேவ வசனத்தை அடிப்படையாகக் கொண்டது.

119:43 நாம் **சத்திய வசனத்தைப்** பேசுவதற்குப் பயப்படாமலும் வெட்கப்படாமலும் இருப்போமாக. நாம் தேவனுடைய **நியாயத்தீர்ப்புகளில் நம்பிக்கை** கொண்டிருப்போமானால், அவருக்காகத் தொடர்ந்து சான்று பகர இடைவிடாமல் வாய்ப்புகளை அவர் தந்தருளுவார்.

119:44 அவருடைய அன்புக்கும் கிருபைக்கும் பதிற்செயலாக, அவருடைய வசனத்தை நாம் உயிருடன் இருக்கும்வரை கைக்கொள்ள மாற்றமில்லாத தீர்மானத்தை எடுக்க வேண்டும். "எனக்காக எல்லாவற்றையும் செய்துமுடித்த அவருக்காக, என்னுடையதில் சிறப்பானதைக் கொடுக்காமல் குறைவாகக் கொடுக்க முடியுமா? அவ்வாறு குறைவாகக் கொடுப்பேனெனில் அவருக்கான நிறைவான வாழ்க்கை வாழ்வது எப்படி?"

119:45 தேவனுடைய குமாரனாலே விடுதலை பெற்றவர்கள், மெய்யாகவே விடுதலை பெற்றவர்கள் ஆவார்கள் (யோவான் 8:36). கிறிஸ்தவ வாழ்வு ஓர் அடிமை வாழ்வுக்கான அமைப்பு என்று உலகம் கூறுகிறது. ஆனால் அவருடைய கட்டளைகளை ஆராய்கிறவர்கள் நிறைவான விடுதலையை அனுபவிக்கிறவர்கள் ஆவார்கள்.

119:46 அரசர்களின் முன்னிலையில் இயேசுவைக் குறித்துப் **பேசுவதற்கான** துணிவை விசுவாசம் தருகிறது. தாழ்மையான மற்றும் அவ்வப்போது இழிவுபடுத்தப்பட்ட குடிமக்களிடத்திலிருந்து எத்தனை அரசர்கள் நற்செய்தியைக் கேட்டிருக்கிறார்கள்!

119:47 திருமறையை நேசிக்கிறவர்கள், அதன் பக்கங்களில் தனிப்பட்ட ஆழமான களிகூர்வதற்கான சிந்தனைகளைப் பெற்றிருக்கிறார்கள். அது மனமகிழ்ச்சியின் நீரூற்று, இன்பமளிக்கும் ஆறு, ஒருக்காலும் தோல்வியடையாத மனநிறைவுக்கான ஆதாரம்.

119:48 திருமறையின் நோக்கம், அதன் ஆழ்ந்த சிந்தனைகள், அதன் ஆற்றல், அதன் செல்வ வளம், அதன் எல்லையற்ற தன்மை ஆகிய வற்றைக் கண்டு நாம் பயபக்தியோடு நிற்கிறோம், இதுவே நாம் அதனை மதிக்கிறோம் என்பதன் பொருள். திருமறை என்றால் என்ன, அது நமக்கு என்ன செய்திருக்கிறது என்பதாலேயே அதில் நாம் **பிரியப்படுகிறோம்**. மேலும் அதை இரவும் பகலும் **தியானிக்கிறோம்.**

119:49 தேவன் தமது வாக்குறுதியை மறப்பதற்கு வாய்ப்பே இல்லை. ஆயினும் நாம் உபத்திரவம் என்னும் சூளையில் இருக்கும்போது, விசுவாசம் மங்கிப்போகிறபோது "கர்த்தாவே, **நினைத்தருளும்**" என்று மன்றாட அனுமதிக்கப்பட்டுள்ளோம். "அவருடைய திருப்பெயரின்மேல் நம்பிக்கை வைக்கும்படி அவர் நமக்குப் பாடம் புகட்டிவிட்டு, நாம் அவமானம் அடையும்படி அவரால் நம்மை வழிநடத்த முடியாது."

119:50 அவருடைய **வாக்கில்** உயிர்ப்பிக்கும் ஆற்றலைக் கண்டடைந்தவர்கள் அதில் **ஆறுதலுக்கான** வற்றாத ஆதாரத்தைக் காண்கிறார்கள். பொருள் செறிந்த பேச்சாளர்களின் பேச்சுகளும்கூட அவ்வப்போது வெறுமையானவையாகவும் பயனற்றவையாகவும் இருக்கின்றன. ஆனால் தேவனுடைய வசனங்களோ உயிருள்ளவையாகவும், பொருத்தமானவையாகவும், செயல்திறம் மிக்கவையாகவும் உள்ளன.

119:51 கர்த்தருக்கு உண்மையோடு நாம் இருப்போமெனில், ஏளனம் மற்றும் இகழ்ச்சிப் பேச்சு ஆகியவற்றுக்கு நாம் இலக்காவோம் என

எதிர்பார்க்க முடியும். ஆயினும் தெய்வீகக் கோட் பாடுகளைக் காணும்போது, அவற்றில் நாம் உறுதியாக நிலைத்திருக்க வேண்டும்.

119:52 முந்தின நாட்களில் கர்த்தர் நமக் காகக் குறுக்கிட்டுச் செயல்புரிந்தார் என்பதைப் பற்றிய நினைவு நம்மைத் தேற்றுகிறது. இதுவரை நம்மை நடத்தின கிருபை எஞ்சிய வழியிலும் நம்மை நிச்சயமாக வழிநடத்தும். "முந்தின நாட் களில் நாம் பெற்ற அவருடைய அன்பு, இருளில் நாம் மூழ்கிவிடத் தக்கதாக அவர் நம்மைக் கை விட்டுவிடுவார் என்று எண்ணுவதைத் தடைசெய் கிறது."

119:53 தேவனுடைய பிரமாணம் அவமதிக்கப் படுகிறபோதும், மீறப்படுகிறபோதும், அதை காண்கிற விசுவாசிக்கு மிதமிஞ்சிய சீற்றம் எழு கிறது. கர்த்தராகிய இயேசுவிடத்திலும் அவ்வித மான சீற்றம் எழுந்தது: "உம்மை நிந்திக்கிறவர் களுடைய நிந்தைகள் என்மேல் விழுந்தன" (ரோமர் 15:3). திருத்தந்தைக்கு இழைக்கப்பட்ட எந்த அவமதிப்பும் தமக்கே இழைக்கப்பட்டதாகக் குமாரன் கருதினார்.

119:54 தேவனுடைய அதிசயமான வார்த் தைக்கு நன்றி செலுத்துவோம், ஒரு பயணி தான் பரதேசியாய்த் தங்கும் வீட்டிலே அவற்றைப் பாட லாம். அல்லது "நாடு கடத்தப்பட்ட நாட்டில்" என்று திருவாளர் நாக்ஸ் கூறினாற்போல அவற்றை எங்கும் பாடலாம். பாதை கரடுமுரடாக இருந் தாலும், அது நீண்ட தொலைவாக இருக்காது. இரவு இருளாக இருப்பினும், இறைவன் இதயத் தில் இனிமையாக இசைக்கிறார்.

119:55 உறக்கமில்லாத இரவு முடிவுறாதது போலத் தோன்றினாலும், திருமறையில் கர்த்தர் வெளிப்படுத்தப்படுவதாலே, அவரைக் குறித்த சிந்தனையால் அவ்விரவைப் பயனுள்ளதாக்க லாம். அவரைக் குறித்துக் கூடுதலாக நாம் அறி கிறபோது, கூடுதலாக அவரிடத்தில் அன்புகூரு கிறோம், அவருடைய வேதத்தைக் கைக் கொள்ள விரும்புகிறோம்.

119:56 கீழ்ப்படிதல் நன்மை பயக்கும் செயல், "இறைபக்தியாயிருப்பது எல்லாவற்றிற்கும் மிகப் பயனுள்ளது. அது தற்போதைய வாழ்வுக்கும், வருங்கால வாழ்வுக்கும் உதவும் வாக்குறுதி யைக் கொண்டிருக்கிறது" (1 தீமோ. 4:8 - இலகு தமிழ்).

119:57 கர்த்தரிடத்தில் ஒப்பிடவியலா செல் வத்தை நாம் பெற்றிருக்கிறோம் என்னும் அறிவு, அவருடைய **வசனங்களைக் கைக்கொள்ள** நம்மை உறுதிபெறச் செய்ய வேண்டும். அவரே எல்லாவற்றிற்கும் போதுமானவர். அவரைப் பெற் றிருப்பது திகைக்கத்தக்க அளவு நம்மைச் செல் வந்தராகக் காணச் செய்யும்.

119:58 அவர் எல்லாவற்றிற்கும் போதுமான வராக இருப்பினும் நாம் அப்படிப்பட்டவர்கள் அல்லர். "எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது" (2 கொரி. 3:5). ஆகவே நாம் மன்றாடுகிறவர்களாக, தேவ தயவை வேண்டுகிற வர்களாக, அவர் வாக்குரைத்த இரக்கத்தை உரிமை கோருகிறவர்களாக இருக்க வேண்டும்.

119:59 வழிகாட்டுதல் நீண்டகாலப் பிரச்சினை யாக இருக்கிறது. எந்த வழியாக நாம் செல்ல வேண்டும்? வெளிப்படையாகச் சொல்ல வேண்டு மானால், அதை அறிவதற்கான ஞானம் நம்மிடத் தில் இல்லை. எல்லாம் நன்மைக்கே. திருமறை யில் வரைந்து தரப்பட்டுள்ள பாதையில் செல்ல நம்முடைய **கால்களைத்** திருப்புவோம்.

119:60 உடனடி உணவு, உடனடி சேவை, எல்லாம் உடனடியாகச் செயல்பட வேண்டும் என் னும் காலத்திலே நாம் வாழ்கிறோம். வெளிப்படுத் தப்பட்டுள்ள தேவ சித்தத்திற்கு உடனடியாகக் கீழ்ப்படிதல் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய பொரு ளாகும் - மேலும் அது செயல்படுத்த வேண்டிய பொருளுமாகும்.

119:61 ஒன்றுமறியா விசுவாசியைத் **துன் மார்க்கரான** மனிதர்கள் இடறிவிழச் செய்யும்படி சதிசெய்வார்கள், ஆனால் அதுவே இன்னும் கூடுதலாக வழிநடத்துதலுக்கும் பாதுகாவலுக் கும் தேவ வார்த்தையை நினைவுகூருவதற்கும் காரணமாக விளங்கும்.

119:62 "நடு இரவில் பவுலும் சீலாவும் ஜெபம் பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள்" (அப். 16:25). மனிதர்களால் அவர்கள் நேர்மை யற்ற முறையில் நடத்தப்பட்டார்கள், ஆயினும் தேவனுடைய **நீதியான நியாயத்தீர்ப்புகளைக்** குறித்துப் பாட முடிந்தது.

119:63 தேவனிடத்தில் அன்புபாராட்டுகிறவர் கள் அவருடைய மக்களிடத்திலும் அன்பு பாராட்டு வார்கள். மேலும் திருமறையை விரும்புபவர்கள் எல்லாத் திருமறை விரும்பிகளையும் நேசிப்பார் கள். இது உலகளாவிய கூட்டுறவு; நாடு, சமு தாயம், இனவேறுபாடு எல்லாவற்றையும் கடந் தது.

119:64 தேவனுடைய நீடித்த அன்பை உல கில் எங்கும் காணவியலும், ஆனாலும் அதைக் காட்டிலும் அவ்வன்பு **பூமியில் ... நிறைந்திருக் கிறது.** "உம்முடைய பரிசுத்த ஆவியினாலே கற் கும்படியான நிலையில் என்னை வைத்திரும் கர்த் தரே" என்று நாம் நன்றியுள்ள இதயத்தோடு பதிற் கூறுவோம்.

119:65 கர்த்தருடைய **வசனத்தின்** வாக்குறுதி யின்படி அதிசயமான வழியிலே அவர் என்னை நடத்தியதால் நான் எவ்வளவு காலமாக அவ ருக்கு நன்றி செலுத்தினேன்? "நீர் பெற்ற ஆசிர் வாதத்தை எண்ணுங்கள்: அவை என்னவென்று ஒவ்வொன்றாகச் சொல்லுங்கள். கர்த்தர் உங்க ளுக்காகச் செய்தது உங்களை வியப்பிற்குள் ளாக்கும்!"

119:66 உத்தம நிதானிப்புக்காகவும் அறிவுக் காகவும் நாம் மன்றாடுவது அவசியம். உய்த்துண ருதல் இல்லாமலும் நன்கு நிதானிக்கும் திறமை இல்லாமலும் ஒருவர் அறிவைப் பெற்றிருக்கக் கூடும். வசனத்திலிருந்தும் ஒழுங்கான வாழ்க்கை யிலிருந்தும் நாம் நிதானித்தறியும் திறமையைப் பெறமுடியும்.

119:67 தேவனுடைய சிட்சை, "பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு நீதியாகிய சமாதான பலனைத் தரும்" (எபி. 12:11). நாம் வழிவிலகி அலைந்தபோது என்ன இழப்பை அடைந்தோம் என்னும் நினைவு, அவற்றை நாம் மீண்டும் செய் யாதபடி நல்லதொரு தடையாகச் செயல்படும்.

119:68 ஆங்கில மொழியில் தேவன் (God) மற்றும் நல்லவர் (good) இரு சொற்களும் ஒரே வேர்ச் சொல்லிலிருந்து தோன்றியவையாக இருக்கக் கூடும். தேவன் **நல்லவர்**, அவர் செய் கிற ஒவ்வொரு செயலும் **நன்மையாக** இருக் கிறது. நல்லவர்களாக நாம் மாறுவதற்கு அவரு டைய நுகத்தை எடுத்துக்கொண்டு, அவரிடத்தில் கற்க வேண்டும்.

119:69 துன்மார்க்கரான மனிதர்கள் பொய்யி னாலே நமது நற்பெயரைக் கெடுக்க முயற்சி செய்கிறார்கள். நாம் திருமறைக்கு உண்மை யாக இருப்பதாலும், பின்வாங்காமல் அதற்குக் கீழ்ப்படிவதாலும் பாதுகாப்பைக் கண்டடைய முடியும்.

119:70 உலகியல் வாழ்வில் பற்றுள்ளவர் செல்வச் செழிப்பிலும் இன்பத்திலும் கூத்தாடி மகிழட்டும். சீர்கெட்ட நடக்கையில் அல்ல, ஆவிக்குரிய அறிவுரையிலேயே நாம் மனநிறை வைப் பெறுகிறோம்.

119:71 பாடுகள் ஒருகணப் பொழுதுதான், ஆனால் பாடுகளின் பயன்கள் என்றென்றும் நிலைத்திருக்கும். மனிதர்கள் நமக்குத் தீங்கு விளைவிக்கும் நோக்குடன் தொல்லை கொடுக் கிறார்கள், ஆனால் தேவனோ அதை நன்மைக் கென மாற்றுகிறார்.

119:72 திருமறையே இவ்வுலகில் நாம் பெற்றிருக்கிற பொருட்செல்வங்களில் மிகவும் மதிப்புடையது. மிகப்பெரிய நம்பவியலாத எண் ணிக்கைகளை ஒரு கணினியில் கூட்டிப்பார்க் கலாம். ஆனால் திருமறையின் விலைமதிப்பை அதில் பதிவு செய்ய முடியாது.

119:73 வியத்தகு செயல் திறத்தால் தேவன் நம்மை **உருவாக்கியதாலே**, அதைக் காட்டிலும் அறிவுக்குகந்தது யாதெனில் அவர் நமது ஆசிரியராக இருக்க வேண்டும் என்பதே. அவர் நம்மைப் படைத்ததற்கான அவருடைய நோக்கம் என்னவென்று அறிந்து, முற்றிலுமாக அதை நிறைவேற்றவேண்டும்.

119:74 கர்த்தராகிய இயேவுக்காக அனல் கொண்ட ஒரு கிறிஸ்தவரைச் சந்திப்பது ஆவிக் குரிய புதிய வலிமைக்கான ஆர்வத்தைத் தூண்டி விடும். தேவனுடைய வார்த்தையில் நம்பிக்கை யாயிருப்பவர்கள் பரிசுத்த ஆவியானவராலே கதிரியக்கம் பெறுகிறார்கள்.

119:75 நோய், பாடுகள், துன்புறுத்தல் எதுவும் தேவனிடத்திலிருந்து நேரடியாக வருவதில்லை, ஆனால் சில சூழ்நிலைகளில் அவர் அவற்றை அனுமதிக்கிறார், பின்னர் அவருடைய சொந்த நோக்கங்களுக்காகப் பயன்படுத்துகிறார். அவை எல்லாவற்றிலும் அவர் நீதியோடும் உண்மை யோடும் செயல்பட்டார் என்று நாம் நியாயப் படுத்துவோமானால், அது நமது ஆவிக்குரிய முதிர்ச்சியின் அடையாளமாகும்.

119:76 இருந்தபோதிலும் நாம் தூசியைப் போல வலிமைற்றவராக இருக்கிறோம். நாம் பராமரிக்கப்படுவதற்கு அவருடைய இரக்கம் மிகுந்த அன்பு நமக்குத் தேவை. "ஆகையால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யும் கிருபையை அடையவும், தைரிய மாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கட வோம்" (எபி. 4:16).

119:77 மிகவும் துன்பத்திற்குள்ளான பரிசுத்த வானுக்கு வெளிப்படுத்தப்படும் தேவனுடைய இரக்கங்கள் ஒவ்வொன்றும் புதிய வாழ்வினை அவனுக்குள் செலுத்துவதுபோல் இருக்கும். அவருடைய **வேதத்தில் மனமகிழ்வு** அடைகிற

வன், அவர் கூட இருந்து உதவிபுரிவார் என்னும் நம்பிக்கை கொண்டிருக்கிறான்.

119:78 திருவாளர் கெலிநேயு இவ்வசனத்தை இவ்வாறு மொழிபெயர்த்திருக்கிறார்: **உமது கட்டளைகளை** நான் தியானிக்கையில், பொய் களின் மூலமாக எனக்குத் தீங்கிழைக்கிற அகங் காரிகள் வெட்கமடைவார்கள்." பாவம் அதனு டைய வேலையைத் திறம்பட செய்ய தேவன் அனுமதிக்கிறார்; அவர் தாம் செய்வதாகச் சொன் னதை செய்ய வேண்டுமென்று மட்டுமே பாடலா சிரியன் விண்ணப்பிக்கிறான்.

119:79 தேவனுடைய வார்த்தையை **அறிந்து** அதை நேசிக்கிறவர்களின் கூட்டுறவு ஆவிக் குரிய இயல்பூக்கத்தைத் தருகிறது. ஆனால் தேவனுக்குப் **பயந்தவர்கள்** என் வாழ்க்கைப் பாதையில் வரும்படி அவர்களைக் கர்த்தர் வழி நடத்த வேண்டுமென்று எத்தனை முறை விண் ணப்பித்திருக்கிறோம்?

119:80 நாம் கர்த்தருடைய **பிரமாணங்களுக் குக்** கீழ்ப்படிவதில் **உத்தமமாயிருக்க** விரும்பு வதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றில் ஒன்றைப் பாடலாசிரியன் தனிப்படுத்திக் கூறுகிறான்: பாவத்தில் விழுவதால் ஏற்படுகிற சூடிட்டு வாட்டு கிற அவமானத்தை நாம் தவிர்க்கிற செயல்.

119:81 விசுவாசி எப்பக்கத்திலும் நெருக்கப்பட் டும் ஒடுங்கிப் போகிறதில்லை; கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை; துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுவதில்லை; கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை (2 கொரி. 4:8,9). இங்கே அவன் தேவனுடைய பாதுகாக்கும் உதவிக்காக ஏங்குகிறான், ஆனாலும் நம்பிக்கை இன்னும் உயிருடன் இருக்கிறது.

119:82 தேவனுடைய வாக்குறுதியின்படி அவர் எப்போது விடுவிப்பார் என்று தேடித்தேடி அவனு டைய கண்கள் மங்கிப் போனாலும், "என்னைத் தேற்றுவீரோ" என்று அவன் வேண்டுதல் செய்யா மல் "எப்பொழுது என்னைத் தேற்றுவீர்" என்று ஜெபிக்கிறான்.

119:83 **புகையில்** இருக்கும் **துருத்தி** வாடி வதங்கிக் கருத்துப் போயிருக்கும். உவமையே பொருளை விவரித்துக் கூறுகிறது. ஒடுக்கப்பட்ட விசுவாசி சுருங்கி, கருகி, காத்திருந்து அழகற்றுப் போகிறான். ஆனாலும் அவன் சார்ந்து கொள் வதற்குத் திருமறையை பெற்றிருக்கும்வரை அவன் நம்பிக்கையற்றுப் போகிறதில்லை.

119:84 வாழ்க்கை குறுகியது, அதில் பெரும் பங்கு துன்பம் மிகுந்த நாட்களாகும். ஒடுக்கிறவர் களைக் கர்த்தர் தண்டிக்க வேண்டிய காலம் வந்துவிட்டது.

119:85 இந்த வசனத்தின் எதிரிகள் தேவனற்ற வர்களும், கட்டுப்பாடற்றவர்களும் ஆவார்கள்; இவ்விரு பண்புகளும் இசைந்திருக்கின்றன. நீதிமானையும் குற்றமில்லாதவனையும் வீழ்த்த அவர்கள் திட்டம் தீட்டுகிறார்கள் - அவர்கள் தேவ னுடைய வேதத்துக்கு இணங்க மறுத்தவர்கள் என்பதற்கு இது ஓர் அடையாளமாயிருக் கிறது.

119:86 தேவனுடைய வார்த்தையைப் போல நம்பகமானது வேறு எதுவுமில்லை. துன்புறுத்த லுக்கு உள்ளான தமது மக்களை விடுவிப்பதாக அவர் வாக்குறுதி தந்திருக்கிறார். ஆகவே பொய் கூறிக் குற்றஞ்சாட்டுபவர்களால் நாம் தாக்கப் படும்போது நாம் நம்பிக்கையோடு **"நீர் எனக்குச் சகாயம் பண்ணும்"** என்னும் "பொன்னான வேண்டுதலை" ஏறெடுப்போம்.

119:87 "நாம் அவருடைய **கட்டளைகளில்** நிலைத்திருந்தால், அவருடைய வாக்குறுதி களால் விடுவிக்கப்படுவோம்" என்று திருவாளர் ஸ்பர்ஜன் கூறினார். நம்முடைய வாழ்வு முடிந்து விடுமோ என்னும் நம்பிக்கையற்ற நிலைக்கு நாம் வந்தாலும் கீழ்ப்படிதலை விட்டுவிடக் கூடாது. அவர் வருவார், நம்பிக்கையோடு இருங்கள்!

119:88 தீவிரமான உள்ளார்ந்த தேவை ஏற் படுகிற போதுதான் மிகச்சிறந்த மன்றாட்டு வெளிப்படுகிறது. பாடலாசிரியன் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து தேவனை மகிமைப் படுத்த முன்னேறிச் செல்வதற்காக அவனுடைய உயிரை விட்டுவைக்கும்படி இங்கு வேண்டு கிறான்.

119:89 இருளுக்குள் பாய்வதில்லை விசு வாசம். அண்டசராசரத்திலேயே மிகவும் நிச்சய மான ஒன்றை அது அடிப்படையாகக் கொண்டிருக் கிறது. அதுவே திருமறை. **வானங்களில் என் றென்றும்** இருக்கும்படி உறுதியாக நிலைநிறுத் தப்பட்ட வார்த்தையை விசுவாசிப்பதில் ஆபத்து எதுவுமில்லை.

119:90 தேவனுடைய **உண்மை** அவருடைய வார்த்தையில் மட்டுமின்றி அவருடைய செய்கை களிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அது எல் லாத் தலைமுறைகளுக்கும் விரிவாக்கம் செய் யப்பட்டு 'இயற்கையின் ஒழுங்கிலும்' விதிமுறை வழுவாமல் செயல்படுவதிலும் காணப்படுகிறது.

119:91 அவருடைய பிரமாணங்களுக்கு வான மும் பூமியும் கீழ்ப்படிகின்றன. விதைப்பும் அறுப் பும், குளிரும் சூடும், கோடையும் மழையும், பகலும் இரவும் எல்லாம் தேவனுடைய ஊழியர்கள். இவை யாவும் அவருடைய வல்லமையுள்ள வசனத்தாலே ஒழுங்குபடுத்தப்பட்டு பராமரிக்கப்படுகின்றன.

119:92 திருவாளர் பார்னஸ் விரிவுரை வழங்கு கிறார்:

> "அநாதி தேவனே உனக்கு அடைக்கலம், அவ ருடைய நித்திய புயங்கள் உனக்கு ஆதாரம்" என்னும் அறிக்கை தேவனுடைய திருமறை யில் இடம் பெற்றிராவிடில் நான் ஆயிரம் தடவைகள் மூழ்கிப் போயிருப்பேன்" என்று மிக மேன்மையான, ஆனால் அதிகமாக அல் லல்களுக்குட்பட்ட மனிதர் ஒருவர் என்னிடம் கூறினார்.[84]

119:93 திருமறையின் வல்லமையைத் தங்களு டைய வாழ்க்கையில் அனுபவித்தவர்கள் அவற்றை மறக்க மாட்டார்கள். "அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள் ளதுமான தேவ வசனமாகிய அழியாத வித்தி னாலே" நாம் மறுபிறப்படைந்தோம் (1 பேதுரு 1:23).

119:94 நாம் பாவத்தின் தண்டனையிலிருந்து இரட்சிக்கப்பட்ட பிறகும், நாம் ஒவ்வொரு நாளும் தூய்மை கெடுவதிலிருந்தும் சேதமடைவதி லிருந்தும் இரட்சிப்படைய வேண்டும். தேவனு டைய **கட்டளைகளிலும்** நம்முடைய சொந்த இருதயத்தோடும் நாம் கொண்டிருக்கும் ஈடுபாடு நிகழ்கால இரட்சிப்பின் தேவையை நாம் அறியும் படி செய்யும்.

119:95 துன்மார்க்கரால் தாக்கப்படாதிருக்க வேண்டுமானால், முக்கியமற்றதும் எவ்விதப் பயனுமற்றதுமான வாழ்க்கை வாழ்வதுதான் ஒரே வழி. மாறாக தேவனுக்குப் பயனுள்ளபடி வாழ் வோமாயின் எதிர்ப்பு வருவது எதிர்ப்பார்க்கக் கூடி யதே. ஆனால் நாம் தேவனுடைய **சாட்சிகளைச் சிந்தித்துக்** கொண்டிருப்போமானால் வலிமை யையும் ஆறுதலையும் கண்டடைவோம்.

119:96 இவ்வுலகிலேயே மிகச்சிறந்ததும்கூட **சகல சம்பூரணத்திற்கும்** குறைவானதே, அது நிலைத்திருப்பதும் இல்லை. ஆனால் தேவனு டைய வார்த்தை நிறைவானது, முடிவில்லாதது. நாம் அதிகமாகத் திருமறையை அறிகிறபோது, நாம் எவ்வளவு குறைவுடையவர்கள் என்பதைக் கூடுதலாக அறிவோம்.

119:97 கர்த்தரிடத்தில் **பிரியமாயிருப்பவர்கள்** அவருடைய வார்த்தையிலும் பிரியமாயிருப்பது நிச்சயம். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் திரு மறையை ஆழ்ந்து சிந்திப்பதன்மூலம் ஒருவரிடத் தில் இவ்வன்பு வெளிப்படும். நாம் திருமறையைத் தியானிக்கும்போது, புதிய அழகினையும் அதிச யத்தையும் அதில் திடீரென்று காண்போம்.

119:98 எளிய விசுவாசி, திருமறை ஞானத் தால் நிறைந்திருக்கும்போது, தனது முழங் காலில் நின்று, அவனுடைய எதிரிகள் தங்களு டைய கால்களின் நுனிவிரலில் நின்று பார்ப்ப தைக் காட்டிலும் அதிகமாகப் பார்ப்பார்கள்.

119:99 ஆசிரியர் தன்னிறைவு பெற்ற எண்ணத் தில், தனது வெற்றிகளில் அகமகிழ்வடைந்த வராக இளைப்பாறுவாரானால், திருமறையை இடைவிடாமல் தியானிக்கிற இளைஞன் அவரை விஞ்சி வெற்றிபெறுவான்.

119:100 இது பொறுப்பற்ற வகையில் பெருமை பாராட்டுவதாகத் தோன்றுகிறது, ஆனால் அப்படி யல்ல. ஒரு மனிதனின் வயதோ அவனுடைய புத்தியோ பொருட்டன்று, மாறாக அவனுடைய கீழ்ப் படிதலே கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். ஆகவே ஓர் இளைஞன் கூடுதலாகக் கீழ்ப்படிபவ னாக இருப்பானென்றால் முதியவரை முந்தக் கூடும்.

119:101 இங்கு கீழ்ப்படிதல் செயல்புரிகிறது. பாடலாசிரியன், அவனுடைய முடிவு வரை கீழ்ப் படியும்படி தனது **கால்களைப்** பாவ வழிக்கு விலக்கிக் காத்துக்கொள்கிறான்.

119:102 திருமறையின் பரிசுத்தப்படுத்தும் திறன் மிகப்பெரியது. அதன் பக்கங்களில் கர்த்த ரால் கற்பிக்கப்பட்டு, நாம் பாவத்தை வெறுக்கவும் பரிசுத்தத்தை நேசிக்கவும் கூடியவர்களாக வளரு கிறோம்.

119:103 தூய்மையான இன்பத்திற்குத் திரு மறை ஆதாரமாக விளங்குகிறது என்பதில் ஐய மில்லை. இவ்வுலகில் வேறு எந்த நூலும் இவ் வளவு இன்பமளிப்பது இல்லை. தேன் இனிமை யானது, அதனினும் இனிமையானது திருமறை.

119:104 கள்ள நோட்டுகளைக் கண்டுபிடிக்க, மனிதர்கள் நல்ல நோட்டுகளை ஆராய்ச்சி செய் கிறார்கள். ஆகவே மெய்ம்மையோடு நாம் கொண்டிருக்கும் பழக்கம் எல்லாப் பொய் வழி களையும் அறியவும் வெறுக்கவும் தக்கவர்களாக மாற்றுகிறது.

119:105 சில நடத்தைகளைத் தவிர்ப்பதற்குத் திருமறை **வசனம்** நம்மை வழிநடத்துகிறது. மேலும் அது ஆக்கபூர்வமாகச் செயல்படுவதற்குச் சரியான வழியில் நடத்துகிறது. இந்தத் **தீபத்தின்** நன்மை பயக்கும் ஒளிக்கதிர்களுக்காக நாம் எவ்வளவாகக் கடன்பட்டிருக்கிறோம்!

119:106 பரிசுத்த வேதத்திற்குக் கீழ்ப்படிய இங்கு பரிசுத்த தீர்மானம் எடுக்கப்படுகிறது. இது தேவனுக்கு மகிமையளிக்கிறது, பிறருக்குப் பயனளிக்கிறது, மேலும் நமக்கே நன்மை பயக்கிறது.

119:107 திருவாளர் ஸ்பர்ஜன் கூறுகிறார்:

> இதற்கு முந்தின வசனத்தில் கர்த்தருடைய போர்வீரன் போலப் பாடலாசிரியன் ஆணையிட்டான், இந்த வசனத்தில் அதே பதவியில் தீங்கநுபவிக்க அழைக்கப்படுகிறான். கர்த்தருக்காக உழைப்பதில் நமக்கு சோதனையிலிருந்து விலக்கு அளிக்கப்படுவதில்லை. மாறாக நமக்கு அது உறுதிசெய்யப்பட்டிருக்கிறது.[85]

119:108 நாம் கர்த்தருடைய முன்னிலையில் ஆசாரியராகவும் மாணாக்கராகவும் வருகிறோம். ஆசாரியர் என்னும் நிலையில் நாம், "அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்" (எபி. 13:15). மாணாக்கர் என்னும் நிலையில் நாம் நமது இருதயங்களையும் உள்ளங்களையும் அவருடைய தெய்வீக அறிவுரைகளுக்குத் திறக்கிறோம்.

119:109 நமது உயிருக்கு ஆபத்து எப்போதும் ஏற்படுகிறது, அப்போதெல்லாம் கர்த்தருடைய வேதத்தை நினைவுகூருவதாலே பாதுகாப்பும் உறுதியும் கிடைக்கின்றன. எவ்வழியிலாயினும் பீதியடைவதிலிருந்தும், மனவேதனையால் பிதற்றுவதிலிருந்தும், தேவ வசனத்தை மறந்து போவதிலிருந்தும் நம்மைக் காத்துக்கொள்ள வேண்டும்.

119:110 திருமறையில் பயிற்சி பெற்றவர்கள் பிசாசின் தந்திரங்களை அறியாமல் இருக்க மாட்டார்கள். அவர்கள் திருமறைக்கு ஒளிவு மறைவில்லாமல் கீழ்ப்படிந்து அவனுடைய சூழ்ச்சிப் பொறிக்குத் தப்புவார்கள்.

119:111 திருமறை வசனங்களை விலைமதிப்புள்ள உடைமைப் பொருளாகத் தெரிந்துகொள்ள வேண்டும்; அவை பெருமதிப்புடைய **சுதந்தரமாகக்** கருதப்பட வேண்டியவை. பெரும் செல்வத்தை வாரிசுரிமையாகப் பெறுகிறபோது அடைகிற மகிழ்ச்சியை எண்ணிப் பாருங்கள். நூல்களில் எல்லாம் சிறந்த நூலாகிய திருமறையை நம்முடைய சொத்தாகப் பெற்றிருக்கிற நாம் எவ்வளவு கூடுதலாக மகிழ்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

119:112 அதனுடைய மதிப்பை உணர்ந்த யாவரும் தங்களுடைய வாழ்நாள் முடிவு வரையிலும் அதற்குக் கீழ்ப்படிய தங்களை ஒப்புவிக்க வேண்டும். கீழ்ப்படிதல் என்னும் பள்ளியில் விடுமுறையோ ஓய்வோ இல்லை.

119:113 அரைகுறை மனதுடைய மனிதர்களை நான் வெறுக்கிறேன், நான் உமது வேதத்தில் பிரியமாயிருக்கிறேன் என்று திருவாளர் மொ.ர்.பட் இந்த வசனத்தை மொழிபெயர்த்திருக்கிறார். இருமன **சிந்தையுள்ள** மனிதர்கள் ஒரு மணித்துளி இறைவனையும், அடுத்த மணித்துளி உலகையும் சார்ந்திருக்கிறார்கள். அவர்கள் இருவகையாகப் பேசுவது மட்டுமின்றி தேவனுடைய வேதத்திற்குத் துரோகிகளாக இருக்கிறார்கள்.

119:114 மனிதர்கள் நம்மைத் தொடர்ந்து பிடிக்க வருகிறபோது **மறைவிடமாகவும்,** நேரடியாகத் தாக்குகிறபோது **கேடகமாகவும்** கர்த்தர் இருக்கிறார். அவர் ஏமாற்றுவது இல்லை, ஏமாறுகிறதும் இல்லை; ஆகவே அவருடைய வாக்குறுதிகளை நம்பியிருப்பவர்கள் ஒருக்காலும் ஏமாறுவதில்லை.

119:115 நமது தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாத மனிதர்களுடைய நட்பை நாம் விட்டுவிடுகிறோம். அவர்களுடைய பாவ வழிகளிலிருந்து நாம் பிரிந்திருந்த போதிலும், நாம் இவ்வுலக மனிதர்களுக்கு நற்செய்தியை அறிவிக்கும் பொருட்டு அவர்களோடு தொடர்பு கொண்டிருக்கிறோம்.

119:116 இங்கு கூறப்பட்டுள்ள வாதம்: "நீர் என்னை நிலைநிறுத்துவதாக வாக்களித்துள்ளீர். இப்பொழுது நீர் சொன்னபடி செய்யும். இல்லையெனில் நீர் என்னைக் காப்பாற்றத் தவறிவிட்டீர் என்று மனிதர்கள் கூறுவார்கள். மேலும் நான் எனது **நம்பிக்கையில்** ஏமாந்துபோனவனாகக் காணப்படுவேன்."

119:117 நாம் முதலாவதாக நம்மை இரட்சிக்கக் கூடாதவராயிருக்கிறோம், அவ்வாறிருக்க நாம் தொடர்ந்து இரட்சிப்பில் நிலைத்திருக்க நம்மால் ஒன்றும் செய்ய இயலாது. தேவன் நம்மை நிலைத்திருக்கச் செய்யும்போது நாம் பாதுகாப்பாக இருப்போம். ஆனால் அவருடைய **பிர**

மாணங்களில் எப்பொழுதும் நிலைத்திருப்பது நம்முடைய பங்காகும்.

119:118 கர்த்தருடைய **பிரமாணங்களை விட்டு** வழிவிலகுகிற மனிதர்களைக் கர்த்தர் வெறுத்துப் புறக்கணிக்கிறார். அவர்களுடைய சாதுரியம் ஒருநாள் உண்மையான வெளிச்சத்தில் மதியீனமாக வெளிப்படும்.

119:119 உருக்கிய உலோகத்தின் மேற்புறமாகப் பொங்கிவருகிற அழுக்கு நுரை போன்ற கழிவுப் பொருட்களை அகற்றித் தூய்மைப்படுத்துகிற மனிதனைப் போலவே தேவனும் **பூமியிலுள்ள துன்மார்க்கர்** யாவரையும் அகற்றுவார். பாவத்தை அவர் நீதியான முறையில் தண்டிக்காவிடில் அவருடைய வேத எழுத்துக்களை நம்மால் மதிக்க முடியாது.

119:120 துன்மார்க்கருக்கு எதிராகச் செலுத்தப்படும் நியாயத்தீர்ப்பைக் குறித்து நாம் சிந்திக்கையில் நிச்சயமாக நடுங்குவோம். ஆனால் "அவருடைய வேதத்தின் கண்டிப்பு, ஆவிக்குரிய தன்மை, கடுமை ஆகியவற்றைக் கருதும்போது நாம் பயத்தால் நிறைகிறோம்" என்று திருவாளர் பார்னஸ் கூறுகிறார்.

119:121 நான் நியாயத்தையும் நீதியையும் செய்தவன் என்று பாடலாசிரியன் முறையிடுவது பொதுவான ஒழுங்குமுறை என்றே நாம் புரிந்து கொள்ள வேண்டும், எப்பொழுதும் மாற்றமற்றபடி அவன் செய்தான் என்று எண்ணிவிடக் கூடாது. அவனுடைய நீதியுள்ள வாழ்க்கை அவர் அருளிய இரட்சிப்பின் கனியேயாகும். ஆகவே அவனை **ஒடுக்கினவர்களிடத்தில்** கர்த்தர் அவனை ஒப்புக்கொடுத்துவிடக் கூடாது.

119:122 ஒருவருக்காக மற்றவர் துணைநிற்பாரெனில் அவரே பிணையாளி, அவரே பிரதிநிதியாகச் செயல்படுகிறார். கல்வாரியில் நம்முடைய பிணையாளியாகச் செயல்பட்டவர், நமது வாழ்நாள் முழுவதும் நமக்காகப் போராடி, அகந்தை கொண்ட மனிதர்கள் ஒடுக்காதபடி தடைசெய்து வெற்றிபெறுகிறார்.

119:123 தேவனுடைய விடுதலைக்காகக் காத்திருந்து வேதனைக்குள்ளான கண்களைக் கொண்ட ஒரு மனிதன் இங்கு இருக்கிறான். கர்த்தர் தனக்காகக் குறுக்கிட்டு தமது **நீதியின்** வாக்குறுதியை நிறைவேற்றுவார் என்று இவன் சோர்வடையும்வரை காத்திருக்கிறான்.

119:124 நீதியை நாடி வேண்டுதல் செய்வதாக 121 -ஆவது வசனம் தோன்றியபோதிலும் இங்கே அவன் தன்னையே கர்த்தருடைய இரக்கம் அல்லது கிருபையினிடமாய் ஒப்புவிக்கிறான். அவருடைய கிருபையின் ஒரு வெளிப்பாடு அவருடைய கருணைமிகுந்த கற்பிக்கும் ஊழியமாகும். **"உமது பிரமாணங்களை எனக்குப் போதியும்."**

119:125 ஓர் அடிமை எவ்வளவாகத் தனது எஜமானை அறிந்திருக்கிறானோ அவ்வளவு அதிகமாக அவன் பயனுள்ள, திறமைமிக்க ஊழியனாக விளங்குவான். ஆகவே தேவனுடைய சாட்சிகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற அவருடைய சித்தத்தை நாம் **அறிகிற உணர்வோடு** இருக்க வேண்டும்.

119:126 இது மறுபக்கமாக இருக்கிறது. கர்த்தருடைய நியாயப்பிரமாணம் மீறப்பட்டதன் காரணமாக அந்த அடிமை உடனடியாகச் செயல்படும்படி எஜமானை மறைமுகமாக அழைக்கிறான். ஒவ்வொரு இருண்ட காலத்திலும் இறைமக்கள் ஏறெடுக்கும் கதறுதலாக இது இருக்கிறது, **"நீதியைச் செய்யக் கர்த்தருக்கு வேளைவந்தது."**

119:127 நாம் எவ்வளவாகத் திருமறைக்கு முக்கியத்தும் அளிக்கிறோம் என்பதற்கு, அதனை நாம் எவ்வளவு நேரம் படிக்கிறோமோ, அது அளவுகோலாக இருக்கிறது. நாம் பசும்பொன்னிலும் அதிகமாக அதனை மதிப்பிடுவோமெனில் அதனுடைய அட்டைகள் கிழிந்து, பக்கங்கள் இற்றுப் போயிருக்கும்.

119:128 நாம் திருமறையை மதித்துப் போற்றுகிறோம் என்பதற்கான மற்றோர் அளவுகோல் எவ்வளவாக இதற்குக் கீழ்ப்படிகிறோம் என்பதே. அது என்ன கூறுகிறதோ அதைச் செய்யாமல், **சகல பொய்வழிகளையும் வெறுக்காமல்** இருப்போமெனில் நம்மை நாமே ஏமாற்றுபவர்களாக இருப்போம்.

119:129 காலத்தைக் கடந்த தன்மை, தூய்மை, பிழையின்மை, இணக்கம், பிரபஞ்சத்துடன் கூடிய தொடர்பு, ஆற்றல், போதுமான தன்மை, ஆகியவற்றில் தேவனுடைய வார்த்தை அதிசயமானது. அத்தகைய நூல் படிக்கப்படத்தக்கது, கைக்கொள்ளத்தக்கது.

119:130 இனங்களினிடத்திலும், இல்லங்களினிடத்திலும், தனிமனிதனிடத்திலும் வசனம் வருகைபுரிகிறபோது **வெளிச்சத்தைத் தருகிறது.** உலகமெங்கும் அதனுடைய பரிசுத்தமாக்குவதற்கான ஆற்றலை நாம் அறியாமலிருக்கிறோம். தாம் பேதைகள் என்றும் தங்களுக்கு உதவி தேவை என்றும் ஒப்புக்கொள்கிறவர்களுக்கு அது

உணர்வையும் புரிந்துகொள்ளும் ஆற்றலையும் தருகிறது.

119:131 தேவனுடைய வார்த்தையினிடத்தில் நமக்கு மிகவும் ஆழமான, பெருமளவிலான தாகம் தேவை. "புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள்" (1 பேதுரு 2:2).

119:132 மீண்டும் மீண்டும் இரக்கத்தை நாடி இவ்விதமாக ஏறெடுக்கப்படுகிற வேண்டுதலைக் குறித்து நாம் சோர்வடையக் கூடும், ஆனால் பாடலாசிரியன் அவ்வாறு சோர்வடைவதில்லை, தேவனும் சோர்வடைவதில்லை. அவருடைய கிருபை போதும், இனிமேல் தேவையில்லை என்னும் நிலைக்கு நாம் இந்த வாழ்க்கையில் ஒருக்காலும் ஓரிடத்தைச் சென்று சேரமுடியாது.

119:133 பரிசுத்தம் என்னும் நாணயத்தின் இரு பக்கங்கள் இங்கு உள்ளன- கர்த்தருடைய **வார்த்தைக்கு** ஏற்ப தொடர்ந்து சீராக முன்னேறிச் செல்வது, உள்ளான பாவத்தின் ஆற்றலிலிருந்து விடுவிக்கப்படுவது ஆகியவையே.

119:134 இந்த மன்றாட்டின் முதல் பகுதி வழக்கத்திற்கு மாறானது அன்று; மனிதனுடைய ஒடுக்குதலிலிருந்து விடுவிக்கப்பட வேண்டுமென்று நம்மில் ஒவ்வொருவரும் விரும்புகிறோம். ஆனால் வழக்கத்திற்கு மாறான நோக்கத்தைக் கவனியுங்கள், அதன் விளைவாக நான், **"உம்முடைய கட்டளைகளைக் காத்துக்கொள்ளுவேன்."**

119:135 கர்த்தருக்காக நாம் ஆற்றும் திருப்பணியில் அவருடைய ஆதரவு, சமுகம், ஆற்றல் ஆகியவற்றின் அடையாளம் சில வேண்டுமென்று நாம் வேண்டுதல் செய்யலாம். நம்முடைய மன்றாட்டுக்கு விடையளிக்கும் வகையில் உற்சாகமளிக்கும் அதிகப்படியான நன்மைகளை தந்தருளுவது எப்படி என்பதை அவர் அறிந்திருக்கிறார். நாம் மேலும் மேலும் அவரால் படிப்பிக்கப்பட வேண்டும் என்னும் விருப்பத்தை ஒருக்காலும் இழந்துவிடக் கூடாது.

119:136 கண்ணீர் **நீர்த்தாரைகளைப்** போல ஓடுகிறது - ஆழ்ந்த மனவேதனை மற்றும் வருத்தம் ஆகியவற்றை வெளிப்படுத்தும் உயிர்த்துடிப்புள்ள வருணனை! எதற்காக? பாடலாசிரியனுக்கு ஏற்பட்ட அநீதியின் காரணமாகவோ? இல்லை, தேவனுடைய வேதத்தை மனிதன் அவமதித்து, அதன் மூலமாக அவருக்கு அவமரியாதையை ஏற்படுத்துகிறான். அதுவே காரணம்.

> பென்டட்டி என்னும் நூலாசிரியர் ஒருநாள் அழுதுகொண்டிருந்தார்; ஏன் அழுதுகொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டபோது, "அன்பு கூராதவரிடமாய் அன்பு செல்கிறது, எனவே அழுகிறேன்" என்றார்.[86]

119:137 திருமறையின் ஆசிரியர் நீதிபரர். ஆகவே அந்நூல் **செம்மையாக** இருப்பது வியப்பிற்குரியதில்லை. நம்மில் பலர் இதனை அறிந்திருக்கிறோம். ஆனால் அதற்காகக் கர்த்தருக்கு நன்றிசெலுத்தி எத்தனைபேர் அவருக்குப் புகழ்ச்சியும் ஆராதனையும் செலுத்துகிறோம்?

119:138 தேவன் கூறுகிற யாவும் **நீதியும் உண்மையும்** ஆனவை. மேலும் அவருடைய வார்த்தை முழுவதும் நம்பகமானது. தேவனுடைய வார்த்தையை நம்புவது ஏதோ பாராட்டத்தக்க செயலன்று. அது பகுத்தறிவுடைய செயல்.

119:139 திருவாளர் பார்னஸ் நுண்ணறிவுத் திறத்தோடு விவரிக்கிறார்:

> துன்புறுத்துகிறவர்கள், பொய்க்குற்றம் சாட்டுகிறவர்கள், பழிதூற்றுகிறவர்கள் ஆகியோருடைய நடத்தையைக் காண்கிற மனிதனுடைய ஆத்துமா மிகப்பெரிய வெற்றியை அடைகிறது; அவர்கள் அவனுக்கு இழைக்கிற தீங்கால் ஏற்படுகிற துக்கத்தைக் காட்டிலும் அவர்கள் தேவனுடைய வேதத்தை மீறுகிறபோது அதிக துக்கத்தை அடைகிறான்.[87]

119:140 திருமறை நன்கு சோதிக்கப்பட்டது. ஆயிரக்கணக்கானோர் அதில் கூறப்பட்டுள்ள வாக்குறுதிகளைச் சோதித்து அவை உண்மை என்று கண்டறிந்திருக்கிறார்கள். "அது மனிதருடைய வெறுப்பையும், கள்ள ஆசாரியனின் எரிச்சலையும், கடவுள் நம்பிக்கையற்றவரின் இகழ்ச்சியையும், தற்கால திறனாய்வாளரின் உலகீய ஞானத்தையும் எதிர்கொண்டு நிலைத்திருக்கிறது" (வேதாகம ஐக்கியம்).

119:141 பாடலாசிரியனின் பகைவருடைய மதிப்பீட்டின்படி **சிறியவனும் அசட்டை பண்ணப்பட்டவனுமாக** இருக்கிறான். ஆனால் அவன் திருமறையைப் பற்றிக்கொண்டிருப்பதிலிருந்து மனிதனுடைய ஏளனப்பேச்சு அவனைப் பயமுறுத்தி விரட்டுவதில்லை.

119:142 தேவனுடைய நீதி ஏதோ சடிதியில் கடந்துசெல்கிற மனநிலை அல்ல. மாறாக **நித்திய** மதிப்புடையது. திருமறை சத்தியத்தைக் கொண்டிருக்கிறது என்று சொல்வது போதுமான

தன்று; திருமறையே **சத்தியம்**. தேவன் கூறுகின்ற ஒவ்வொன்றும் சத்தியமே.

119:143 இக்கட்டும் நெருக்கமும் நிறைந்த பாத்திரத்தை இப்பாடலின் ஆசிரியன் பெற்றிருந் தான். ஆனால் தேவனுடைய வார்த்தையாலே, அவனுடைய அழுகையின் மூலமாக வான வில்லைக் கண்டுபிடிக்கிறான்.

119:144 தேவனுடைய **சாட்சிகள்** இப்பொழுது மட்டுமல்ல, அவை எப்பொழுதுமே நீதியானவை. நாம் அவற்றை எவ்வளவு கூடுதலாகப் புரிந்து கொள்கிறோமோ அதைப் பொருத்தே நம்முடைய வாழ்க்கையை அனுபவிக்கக்கூடிய ஆற்றலை இப்பொழுதும் பரலோகத்திலும் பெறுவோம்.

119:145 "கூப்பிடுதல் (கதறியழுதல்)" என் னும் சொல்லே இந்தப் பகுதியின் விளக்கச் சொல் ஆகும்.[88] நம்பிக்கை கொண்ட இருதயம் இங்கு உதவியை நாடி வேண்டுதல் செய்கிறதைக் காண் கிறோம். முழு இருதயத்துடன் சர்வ வல்லமை யுள்ள தேவனுடைய சித்தத்தைச் செய்யும் விருப் பத்தோடு ஏறெடுக்கப்படுகிற மன்றாட்டை அவரால் தடுத்து நிறுத்த முடியாது.

119:146 அலைகளுக்குக் கீழே நாம் மூழ்கக் கூடிய சூழ்நிலை ஏற்படத் தொடங்குகிற வேளை யில், நாம் பேதுருவைப் போல "என்னை இரட்சி யும்" என்னும் சிறிய மன்றாட்டை ஏறெடுப்போ மாக. அப்போது கர்த்தர்தாமே நம்மை உயர்த்தி மீண்டும் அவருக்காக வாழும்படி அனுப்புகிறார்.

119:147 திருவாளர் வேகில் எழுதுகிறார், "ஒரு பயபக்தியுள்ள மனிதனின் பக்தி நிறைந்த வழக் கங்களின் விவரமே இது. அந்த மனிதன் அதி காலையில் எழுந்து அவனுடைய நாளை தியானத் தோடும் ஜெபத்தோடும் தொடங்குகிறான்." நம்மு டைய கோட்பாடு, "வேதம் இல்லையேல், காலை உணவு இல்லை" என்பதாக இருக்க வேண்டும்.

119:148 உறக்கமற்ற **இரவு** நேரங்களையும் கூட வேதத்தைத் தியானிப்பதற்குப் பயன்படுத்த லாம். "இரவு நேர பொக்கிஷங்களைக்" கர்த்தர் அந்தத் தருணங்களில் தருவது வழக்கத்துக்கு மாறானது அல்ல.

119:149 நாம் ஜெபம் செய்கின்ற வேளையில் தேவனுடைய முன்னிலைக்குச் செல்வதற்கான உடனடி நுழைவு நமக்குத் தரப்பட்டுள்ளது என் னும் வியத்தகு உண்மையை நாம் ஒருக்காலும் மறந்துவிடக்கூடாது. நாமும் பாடலாசிரியனைப் போல நம்முடைய வாழ்க்கையைப் பாதுகாக்கும் படி தேவனுடைய **கிருபைக்காகவும் நியாயத் திற்காகவும்** மன்றாடுவோம்.

119:150 பகைவன் அருகில் இருக்கிறான். அவர் கள் தேவனுடைய ஊழியனைத் தாக்க எண்ணங் கொண்டிருக்கிறார்கள். தங்களுடைய வாழ்க்கை யில் தேவனுடைய வேதத்தின் அதிகாரத்தை நிரா கரித்த அந்த மனிதர்கள் எதையும் செய்யத் தயங்குவதில்லை.

119:151 ஆனால் கர்த்தரோ அருகில் இருக் கிறார், கர்த்தரோடு இருக்கிறவன் பெரும்பான் மையைச் சேர்ந்தவன்: "எதிரி எவனும் நமக்குத் தீங்கிழைக்க முடியாது, எந்த பயமும் நம்மைத் திகிலடையச் செய்யாது, நாம் வெற்றியின் பக்கம் இருக்கிறோம்." தேவனுடைய வார்த்தை சத்திய மாயிருக்கிறது, அவர் தமது மக்களை ஒரு போதும் கைவிடமாட்டார்.

119:152 தேவனுடைய வார்த்தை என்றென் றும் நிலைத்திருக்கிறது என்னும் உண்மையை அறிவது நமக்குப் பெருமளவு ஆறுதலைத் தரு கிறது. "ஒருபோதும் தவறாத வாக்குறுதிகளின் மேல் நிற்கும்போது, ஐயமும் அச்சமும் ஊளை யிடுகிற பெரும்புயல் தாக்கினாலும், உயிரூட்டும் தேவனுடைய வார்த்தையாலே நாம் வெற்றி பெறு வோம்; தேவனுடைய வாக்குறுதிகளின் மேல் நிற்கிறோம்."

119:153 கர்த்தர் உண்மையாகவே நம்மு டைய **உபத்திரவத்தைப்** பார்க்கிறார். "இருதயத் தைப் பிளக்கிற ஒவ்வொரு வேதனையிலும், துக்கம் நிறைந்தவருக்குப் பங்கு உள்ளது." அவ ரையும் அவருடைய வார்த்தையையும் பற்றிக் கொள்ள வருகிற ஒவ்வொருவரையும் அவர் **விடு விக்கிறார்**.

119:154 தனக்காக வழக்காடும்படியும் தன்னை உயிர்ப்பிக்கும்படியும் தேவனிடத்தில் இப்பாட லின் எழுத்தாளன் வேண்டுகிறான். அவனுக்கு எதிராகக் கடுமையான குற்றச்சாட்டுகள் சுமத்தப் பட்டுள்ளன. அவனுக்காக வாதிடுபவர் தேவை. அவன் முழுவதும் சோர்வடையும் அளவிற்குத் துன்புறுத்தப்பட்டுள்ளான், அவன் புதிதாக உயி ரூட்டம்பெற வேண்டிய நிலையில் இருக்கிறான்.

119:155 மனிதர்களுடைய விருப்பத்திற்கு மாறாக தேவன் அவர்களை இரட்சிப்பதில்லை. விண்ணகத்தைச் சென்று சேர வேண்டுமென்னும் விருப்பம் இல்லாதவர்களால் அவர் அவ்விடத்தை நிரப்பமாட்டார். தேவ வசனங்களைக் கவனித்துக் கேட்க விரும்பாதவர்களுக்கு **இரட்சிப்பு** இல்லை.

119:156 தேவனுடைய கிருபையை விவரித்துக் கூறுவதற்கு எந்த மனித மொழியும் போதாது. நம்முடைய விண்ணப்பங்களின் காரணமாக அவருடைய **இரக்கங்கள்** ஒருக்காலும் குறைவுபட்டு இல்லாமற்போகா. தனக்கு வாழ்வு வேண்டும், அதாவது கொலையாளிகளிடத்திலிருந்து தான் விடுவிக்கப்பட வேண்டும் என்று துன்புறுத்தப்பட்ட பாடலாசிரியன் தேவனுடைய இரக்கத்திற்காக வேண்டுதல் செய்கிறான்.

119:157 இந்த வசனங்களில் பல கர்த்தராகிய இயேசுவினிடத்தில்தான் உண்மையாக நிறைவேறியுள்ளன என்பதில் ஐயமில்லை. **துன்பப்படுத்தினவர்களாலும், விரோதித்தவர்களாலும்** சூழப்பட்டிருந்தவர் தம்முடைய திருத்தந்தையின் நற்சான்றிதழுக்கு உண்மையோடிருந்தார்.

119:158 தனக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட தவறுகளுக்காக வருந்துவதைப் பார்க்கிலும் தேவனுக்கு எதிராகச் செய்யப்பட்ட அவமானச் செயல்களுக்காக வருந்துவது ஆவிக்குரிய முதிர்ச்சியின் அடையாளமாகும். இவ்விதமாக கர்த்தருக்காக வைராக்கியத்துடன் தன்னை முழுவதுமாக ஒப்புவிப்பது நல்லது.

119:159 பாடலாசிரியன் 153 -ஆவது வசனத்தில் "என் உபத்திரவத்தைப் பாரும்" என்று எழுதினான். இங்கு திருவாளர் ஸ்பர்ஜன் கூறினாற் போல, "என் நேசத்தைப் பாரும்" என்னும் பொருளில் பேசுகிறான். அந்த நேசம் அவருடைய கட்டளைகளின் மேல் உள்ளது. மேலும் அவன் மூன்றாவது முறையாக இந்தப் பகுதியில் தனது உயிர் பாதுகாக்கப்பட வேண்டும் என்று மன்றாடுகிறான் (வச. 154, 156).

119:160 தேவனுடைய வசனம் முழுமையும் **சத்தியமாக** இருக்கிறது. அதில் கூறப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்குறுதியும் நிச்சயமாக நிறைவேறும். "வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும் அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஓர் எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்து போகாது" (மத். 5:18).

119:161 அதிகாரத்தில் உள்ள மனிதர்கள் தேவனுடைய ஊழியர்களை ஒடுக்குகிறார்கள். ஆனாலும், தேவனுடைய வசனத்தின்மேல் உள்ள ஆழ்ந்த மரியாதையும் **பயமும்** கர்த்தரிடத்தில் உண்மையாயிருக்கிறவன் துரோகியாக மாறாமல் பாதுகாக்கிறது.

119:162 திருமறையைத் தோண்டி ஆராய்ந்து அதிலுள்ள ஆவிக்குரிய வியத்தகு செல்வங்களைக் கண்டடைகிறவன், மறைத்து வைக்கப்பட்டுள்ள புதையலைக் கண்டுபிடிக்கிறவனுடைய உள்ளக் கிளர்ச்சியை அனுபவிப்பான்.

119:163 தேவன் **நேசிக்கிற** வேதத்தை அதில் நாம் கொண்டிருக்கும் பழக்கம் அதை நேசிக்கும்படி கற்பிக்கிறது, அதேபோல தேவன் வெறுக்கிற **பொய்யை** நாமும் வெறுக்கும்படியும் அது கற்பிக்கிறது. தேவன் சிந்திக்கிற சிந்தனைகளை நாமும் சிந்திக்கத் தொடங்குகிறோம்.

119:164 **ஏழு** என்னும் எண் நிறைவையும் முழுமையையும் குறிப்பதால், பாடலாசிரியன் இடைவிடாமலும் முழுமனதோடும் கர்த்தருடைய **நீதியான** கட்டளைகளுக்காக அவரைப் புகழ்ந்து போற்றினான் என்று இவ்வசனத்தைப் புரிந்து கொள்கிறோம்.

119:165 கொந்தளிப்பு நிறைந்த இவ்வுலகில் சமாதானத்தையும், சோதனையின் ஆற்றலிலிருந்து பாதுகாப்பையும் இந்த வசனம் தருகிறது. துக்கம், இடறல் ஆகியவற்றிலிருந்து விசுவாசிகளுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாக இந்த வசனம் பொருள்படுவதில்லை. மாறாக அவர்கள் வேதத்திற்குக் கீழ்ப்படிவதன் மூலமாகப் பாவத்தின் எதிர்பாராத தாக்குதல்களைத் தவிர்க்க முடியும்.

119:166 சங்கீதம் 37:3 "கர்த்தரை நம்பி நன்மை செய்" என்று கூறுகிறது. இங்கு அந்த ஆலோசனையைத் தான் பின்பற்றியதாகப் பாடலாசிரியன் கூறுகிறான். விசுவாசம் முதலில் வருகிறது, பின்னர் விசுவாசத்தின் விளைவாகக் கிரியைகள் செய்யப்படுகின்றன.

119:167 கீழ்ப்படிதல் சலிப்பை ஏற்படுத்துவதாக மல்கியா காலத்து மனிதர்கள் கருதினார்கள் (மல். 1:13). ஆனால் பாடலாசிரியன் அத்தகையவன் அல்லன். அவன் வசனத்திற்குக் கீழ்ப்படிந்து அதை நேசிப்பதில் வளர்ந்திருக்கிறான்.

119:168 இப்பகுதியின் கடைசி மூன்று வசனங்கள் நடைமுறையில் திருமறைக்குக் கீழ்ப்படிதலைக் குறித்துப் பேசுகின்றன. இவை சராசரி விசுவாசிக்கும். பொருந்தும் என்று விரிவாக்கம் அடைந்திருப்பதாகத் தோன்றுகிறது; இவை இரட்சகரின் சொற்கள் என்று எண்ணிப்பாருங்கள், பிரச்சினை மறைந்துபோகிறது.

119:169 இந்தச் சங்கீதம் முடிவை நெருங்குகையில், ஊக்கமான வேண்டுதலோடு இசை ஒலிப் பெருக்கம் அடைவதாகத் தோன்றுகிறது. "வருவதாக, கடவது" போன்ற சொற்கள் ஏழு

முறை இப்பகுதியில் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதலாவது செவிசாய்க்கும்படி மிக அவசரமான வேண்டுதல், பின்னர் மெய்யான ஆவிக்குரிய **உணர்வுக்கான** வேண்டுதல்.

119:170 இந்த வசனங்களில், பகைவன் வெகு தொலைவில் அல்ல, அருகில் இருப்பவனாகவே தோன்றுகிறது. ஆகவே வசனத்தில் வாக்குரைக் கப்பட்ட வண்ணம் தான் விடுவிக்கப்பட வேண்டும் என்னும் விண்ணப்பம் மீண்டும் வலியுறுத்தப்படு கிறது.

119:171 தேவனுடைய பிரமாணங்களைக் குறித்த கூடுதல் அறிவு பெருமைக்கோ, மிகைப் படுத்தின தற்புகழ்ச்சிக்கோ வழிநடத்தக்கூடாது. மாறாக கர்த்தருடைய துதிக்கும், புகழ்ச்சிக்குமே வழிநடத்த வேண்டும்.

119:172 அற்பமான விசயங்கள், நீடித்த முக்கியத்துவம் இல்லாதவை ஆகியவற்றைக் குறித்துப் பேசுவதற்கு பதிலாக, நாம் ஆவிக்குரிய விசயங்களைக் குறித்து மட்டுமே பேசுவதற்கு நம்மை ஒழுங்குபடுத்த வேண்டும். தேவனுடைய **கற்பனைகளெல்லாம் நீதியுள்ளவை**, பெருமள வில் பயனுள்ளவை.

119:173 இது ஓர் அழகிய சித்திரம்: எளிய மனி தன், ஆனால் கர்த்தருடைய கட்டளைகளைத் தனது வாழ்வின் கொள்கையாக மனமுவந்து கடைப்பிடிப்பவன், அப்படிப்பட்டவனை ஆணிகள் பாய்ந்த சர்வ வல்லவருடைய **கரம்** ஆபத்திலி ருந்து விடுவிக்க விண்ணகத்திலிருந்து இறங்கி வருகிறது.

119:174 நமது ஆத்தும **இரட்சிப்பு** நிறை வேற்றி முடிக்கப்பட்டது என்னும் உண்மையை நாம் இன்புற்று அனுபவிக்கையில், கர்த்தராகிய இயேசு மீண்டும் வருகிறபோது பாவத்தின் முன் னிலையிலிருந்து இரட்சிக்கப்பட்டவர்களாகக் காணப்பட நாம் வாஞ்சிக்கிறோம். இக்காலத் திலே திருமறையைப் படிப்பதிலும் அதற்குக் கீழ்ப்படிவதிலும் நாம் பெருமளவு **மனமகிழ்ச்சி** பெறுகிறோம்.

119:175 நாம் ஊழியம் செய்வதற்காக மட் டுமே இரட்சிக்கப்படவில்லை, மாறாக நேரடியாக அவரைத் துதிப்பதற்காகவும் அந்நிலையைப் பெற்றிருக்கிறோம். நோயினின்றும் விபத்தினின் றும் நாம் பெறுகிற ஒவ்வொரு விடுதலையும் நம் முடைய ஆராதனைக்குப் புதியதோர் ஊக்கத்தை கொடுக்க வேண்டும், உதவி தேவை என்பதற் கான புதியதோர் தீவிரத்தைத் தரவேண்டும்.

119:176 இந்தச் சங்கீதத்தில் காணப்படுகிற சில பாவ அறிக்கைகளில் இதுவும் ஒன்று. "தூய்மை நிறைந்த பெருமகிழ்ச்சியின் மிகவுயர்ந்த விண் பயணத்திலிருந்து பாவத்தையும் தகுதியற்ற தன் மையையும் தாழ்மையோடு அறிக்கை செய்யும் இடத்தினிடமாய் எப்பொழுதும் திரும்பி வர வேண்டும்."

சங்கீதம் 120: அவதூறுக்கு ஆளான உதவியற்ற மனிதன்

ஒரு விசுவாசியின் வாழ்க்கையில் ஏற்படக் கூடிய கசப்பான அனுபவங்களில் ஒன்று பொய் களுக்கும் அவதூறுக்கும் ஆளாகுதலாகும். "பொய்யானது உலகத்தைச் சுற்றி வருகையில், உண்மை தனது காலணியை அணிந்துகொண்டி ருக்கிறது" என்று திருவாளர் ஸ்பர்ஜனுடைய கூற் றின் பொருளை அப்பொழுதுதான் உணர்கிறான். அவமானத்துக்கும் ஏமாற்றத்துக்கும் ஆளாகி, உடைந்து நொருங்கிய பொருளைப் போல அவன் எளிதில் மாறிவிடுகிறான்.

120:1,2 "ஆரோகண சங்கீதங்களில்"[89] முதலாவது பாடலில் பாடலாசிரியனைக் கர்த்தரி டமாய் ஓடிச் செல்லும்படி செய்த ஒருவகை **நெருக் குதல்** இங்கு காணப்படுகிறது. அவனுடைய வேண்டுதல் சிறியது, எளிமையானது, குறிப்பிட்டு ஏறெடுக்கப்பட்டது. பகைவரின் பொய் உதடு களுக்கும் புற சமயத்தாரின் **கபடநாவுக்கும்** தான் தப்புவிக்கப்பட வேண்டும் என்று அவன் விரும்பினான்.

120:3,4 பின்னர் அவன் மிக விரைவாக ஒரு குறிப்பிட்ட குற்றவாளியை நோக்கித் திரும்பிய வனாக, கடுமையான தண்டனைக்கு ஆளாவான் என்று முன்னுரைக்கிறான். அவனுக்கு **என்ன** தண்டனை கொடுக்கப்பட வேண்டும்? மிகச் சிறந்த வில்வீரனுடைய வில்லிலிருந்து **கூர்மை யான அம்புகள்** எய்யப்படும். அந்தக் கபட நாவுக்கு என்ன செய்யப்படும்? அது சவுக்காரத் தால் கழுவப்படுமா? இல்லை, அது **சூரைச்செடி களின் தழலால்** சுட்டெரிக்கப்படும். பாலைவன முட்செடியின் வேர், தழல் உண்டாக்கும் கட்டைக் கரியாகப் பயன்படுத்தப்படும், அதனுடைய கடுமையான வெப்பத்திற்கு அது பேர்பெற்றது.

120:5 ஒரு கணப்பொழுது தன்மேல் பரிவு கொண்டவனாக, சமாதான விரும்பியாகிய பாட லாசிரியன் **மேசேக்கு** மற்றும் **கேதார்** ஆகிய கோத்திரத்தாரோடு கட்டாயமாகக் குடியிருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டதற்காகப் புலம்பு

கிறான். **மேசேக்கு** யாப்பேத்தின் புதல்வன் (ஆதி. 10:2). அவனுடைய வழிவந்தவர்கள் நாகரிமற்ற காட்டுமிராண்டிகளாக மாறிப்போனார்கள். **கேதார்** இஸ்மவேலின் இரண்டாவது புதல்வன் (ஆதி. 25:13). அவன் வழிவந்தவர்களும் கொடுமை இழைக் கிறவர்களும் இரக்கமற்றவர்களுமாக இருந்தார் கள். பன்னாட்டுத் தரமான திருமறைக் கலைக் களஞ்சியம் கூறுவதாவது: "இஸ்லாமியக் குடி வழிப் பட்டியல் ஆய்வாளர்கள் இஸ்மவேலின் புதல்வனாகிய கேதாரின் வழியில் தோன்றியவரே முகமது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்."

120:6,7 சமாதானத்தை வெறுக்கிற காட்டு மிராண்டிகளுக்கிடையே வாழும்படி கட்டாயமாக நாடுகடத்தப்பட்ட பாடலாசிரியனுக்கு அந்த நீண்ட காலம் ஏற்றதாக இல்லை. அவர்களோடு சேர்ந்து சமாதானமாக வாழலாம் என்று அவன் செய்த முயற்சிகள் யாவும் புதிதான போர்ச் செயல் களாலே முறியடிக்கப்பட்டன.

அவன் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் வாழ்கிற வனாக இருந்திருந்தால் அவதூறுகளையும் சச்சரவுகளையும் எதிர்கொள்ளக் கூடுதலாக ஆயத்தப்பட்டிருப்பான். மேலும் அவற்றை எதிர்த்து முன்னேறிச் செல்ல திறம் பெற்றிருந்திருப்பான். கர்த்தராகிய இயேசுவின் முன்மாதிரியை அவன் பெற்றிருந்திருப்பான்:

> அவர் வையப்படும்போது பதில்வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாய மாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார் (1 பேதுரு 2:23).

பேதுருவின் அறிவுரையையும் பெற்றிருந் திருப்பான்:

> நீங்கள் நன்மைசெய்து பாடுபடும்போது பொறுமையோடு சகித்தால் அதுவே தேவ னுக்கு முன்பாகப் பிரீதியாயிருக்கும் (1 பேதுரு 2:20).
>
> தீமைக்குத் தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிக்கட்டாமல் அதற்குப் பதிலாக, நீங்கள் ஆசிர்வாதத்தைச் சுதந் தரித்துக்கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக் கிறவர்களென்று அறிந்து, ஆசிர்வதியுங்கள் (1 பேதுரு 3:9).

இறுதியாக அவன் கர்த்தராகிய இயேசுவின் சொற்களைப் பெற்றிருந்திருப்பான்:

> என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப் படுத்தி, பலவிதமான தீமையான மொழிகளை யும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார் களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்; சந்தோஷப்பட்டு களிகூருங்கள், பரலோகத் தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்க ளுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே (மத். 5:11,12).

சங்கீதம் 121: பாதுகாக்கப்பட்ட நிலை!

121:1,2 KJV மொழிபெயர்ப்பில் இந்தச் சங் கீதம் கீழ்க்கண்டவாறு தொடங்குகிறது:

எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன்.

வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த் தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்.

பிற்கால மொழிபெயர்ப்பாளர்கள் இதில் புறச் சமய கருத்து தொனிப்பதாகக் கருதினார்கள். என்னவெனில், ஒத்தாசையானது கர்த்தரிடத்திலி ருந்து அல்ல, குன்றுகளிலிருந்து வருவது போன்ற கருத்து இம்மொழிபெயர்ப்பில் உள்ளது (எரே. 3:23). ஆகவே முதல் வசனத்தில் முதல் பகுதியில் ஒரு கேள்விக்குறியைச் சேர்த்துக் கருத்தை மாற்றினார்கள்:

> எங்கிருந்து எனக்கு உதவி வரும்? குன்று களை நோக்கி என் கண்களை உயர்த்திப் பார்க் கிறேன்.
>
> வானத்தையும் பூமியையும் படைத்தவரான கர்த்தரிடமிருந்தே, எனக்கு உதவி வருகிறது.

(இலகு தமிழ் - NKJV மொழிபெயர்ப்புக்கு இது ஒத்திருக்கிறது).

நான் KJV மொழிபெயர்ப்பையே சிறந்தது என்று தேர்ந்தெடுக்கிறேன். அதற்கான காரணத் தையும் கூறுவேன். இப்பூமியில் தேவன் குடியிருக் கும்படி தெரிந்துகொண்ட இடம் எருசலேம் தேவா லயமாகும். மகா பரிசுத்த ஸ்தலத்திலே இருந்த மகிமையின் மேகம் கர்த்தர் தம் மக்களுடன் இருந்தார் என்பதைக் குறித்துக் காட்டியது. எருச லேம் நகரம் ஒரு மலையின்மேல் அமைந்திருந் தது. அந்த மலையைச் சுற்றிலும் பல மலைகள் இருந்தன. ஆகவே இஸ்ரவேலில் வேறு இடங் களில் குடியிருந்த யூதன் தனக்கு உதவி தேவைப்பட்டபோது, பர்வதங்களை ஏறெடுத்துப் பார்த்தான். அவனுக்கு அச்செயல் கர்த்தரை ஏறெடுத்துப் பார்த்தாகவே இருந்தது. படைப் பாளரின் குடியிருப்பு எருசலேம் பர்வதங்களில் இருந்ததால், பர்வதங்களிலிருந்து எல்லா ஒத்தா சையும் வந்ததாக கவிதை நடையில் பொருள் படுத்தப்பட்டுள்ளது.

முதல் இரண்டு வசனங்களின் பேச்சாளன், பாடலாசிரியனே ஆவான். வானத்தையும் பூமியையும் உண்டாக்கினவர் மேல் அவன் தனது முழு நம்பிக்கையையும் கொண்டிருந்ததை இவ்வசனங்கள் வெளிப்படுத்துகின்றன.

121:3 மூன்றாவது வசனத்திலிருந்து பேசுபவர் வேறொருவர். கர்த்தரிடத்தில் நம்பிக்கை கொண்டிருப்பவர்களுக்கு நித்திய பாதுகாப்பு உள்ளது என்று பரிசுத்த ஆவியானவர் உறுதியளிப்பதை எஞ்சிய வசனங்களில் நாம் கேட்கிறோம். மறுத்துரைக்கக் கூடாத உறுதி இங்கு வாக்களிக்கப்பட்டுள்ளது. விசுவாசியின் **கால் தள்ளப்படாத படி** பாதுகாக்கப்பட்டுள்ளது. கால் அடித்தளத்தை அல்லது நிற்றலைக் குறித்துப் பேசுவதால், தேவன் தம்மை விசுவாசிக்கும் பிள்ளை வழுவாமலும் தவறாமலும் பாதுகாப்பார் என்று இவ்வசனம் பொருள்படும்.

121:4 நம்முடைய பாதுகாவலைக் குறித்த உறுதியும் இங்கு அளிக்கப்பட்டுள்ளது. அவர் **உறங்குவதுமில்லை தூங்குவதுமில்லை.** மகா அலெக்சாண்டர் "நீங்கள் உறங்கும்படி நான் விழித்திருக்கிறேன்" என்று தனது போர்வீரர்களிடம் கூறினான்.[90] இரவு முழுவதும், நம்மைச் சூழ உலகில் என்ன நிகழ்கிறது என்பதை உணராமல் உறங்குகிற வேளையில், அலெக்சாண்டரை விடப் பெரியவர் இடைவிடாமல் நம்மைக் கவனித்து, சோர்வுறாமல் அக்கறை செலுத்துகிறார்.

121:5,6 அவ்விதமாக நம்மைக் **காக்கிறவர்** கர்த்தர்தாமே என்னும் வாக்குறுதியும் வழங்கப்பட்டிருக்கிறது. இப்பிரபஞ்சத்தின் சர்வ அதிகாரமும் உடையவர், தாமே நேரடியாக மிகவும் தாழ்ந்த பரிசுத்தவானுடைய பாதுகாவலராகச் செயல்படுகிறார்.

ஒவ்வொரு தீய சக்தியிடத்திலிருந்தும் அவர் பாதுகாக்கிறார் என்னும் வாக்குறுதியும் தரப்பட்டுள்ளது. அவர் **"உன் வலதுபக்கத்திலே உனக்கு நிழலாயிருக்கிறார்"** என்று வசனம் கூறுகிறபோது, இரவும் பகலும் அவர் தமக்குச் சொந்தமானவனுக்கு மெய்க்காப்பாளராகக் கூட இருக்கிறார் என்பது பொருளாகும். **பகலிலே வெயிலாகிலும்... உன்னைச் சேதப்படுத்தாது** என்னும் சொற்றொடர், வெயிலின் வெப்பத்தாக்குதல் என்று பொதுவாக தற்காலக் கல்வியாளர்கள் கருகிறார்கள்.[91] பழங்காலத்து மூடநம்பிக்கை, நாடோடி இனத்தாரிடம் பரம்பரையாய் வழங்கி வருகிற எண்ணங்கள் ஆகியவற்றிற்கு எதிராக இறைவனின் அருள்பாலிப்பு செயல்படுவதைக் குறிப்பிட நிலவு (நிழல்) என்னும் சொல்லுக்குத் திருமறையில் இடமளிக்கப்பட்டுள்ளது. பேய்களின் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கும், தீயசக்திகளின் செயல்பாடுகளில் சூரியனும் சந்திரனும் எத்தகைய முக்கியமான சக்திகளாக இடம்பெற்றுள்ளன என்பதை அறிந்தவர்களுக்கும் இந்த வசனங்கள் வரவேற்கப்படத்தக்க பாதுகாப்பையும், பேய்களின் கட்டிலிருந்து விடுதலையையும் தருகின்றன.

121:7,8 எல்லாத் தீங்கினின்றும் பாதுகாப்பு வாக்குறுதி தரப்பட்டுள்ளது. தேவனுடைய அனுமதிக்கும் சித்தத்திற்கு அப்பாற்பட்டு விசுவாசியின் வாழ்க்கையில் எதுவும் நிகழாது என்பது திடமான உண்மையாகும். தொடற்பற்ற சூழ் நிலைகள், நோக்கமற்ற விபத்துகள், பேரிடர் இழப்புகள் எதுவும் நிகழா. நோய், பாடு, மரணம், ஆகியவற்றை அவர் உண்டாக்கவில்லையெனினும் தமது மேலான அதிகாரத்தால் தமது நோக்கங்களை நிறைவேற்றும்படி அவற்றைப் பயன்படுத்துகிறார். அதே நேரத்தில், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அவரிடத்தில் நம்பிக்கை கொண்டிருக்கும் மனிதன் அறிந்திருக்கிறான் (ரோமர் 8:28).

இறுதியாக தற்காலத்திலும் நித்திய காலத்திலும் நம்முடைய எல்லாப்போக்குவரத்திலும் தேவன் நம்மைக் கவனித்து அக்கறை செலுத்துகிறார் என்னும் வாக்குறுதியும் தரப்பட்டுள்ளது. அவர் நம்முடைய **போக்கையும்** நம்முடைய **வரத்தையும் இதுமுதற்கொண்டு என்றென்றைக்கும் காப்பார்**.

தமிழ் மொழிபெயர்ப்பில் "காப்பார்," "காக்கிறவர்" ஆகிய இருசொற்களும் இப்பாடலின் எட்டு வசனங்களில் ஆறுமுறை பயன்படுத்தப்பட்டுள்ளன.[92] அவை ஒன்று சேர்ந்து, கர்த்தரைத் தனது ஒரே நம்பிக்கையாக ஏற்றுக்கொண்டவன் எவ்வித மான பாதுகாப்பைப் பெற்றிருக்கிறானோ அவ்வித மாக வேறு எவனும் பெற்றதில்லை என்று அறிவிக்கின்றன.

> கர்த்தரைச் சார்ந்திட்ட மானிடன் ஒருக்காலும்
> எதிரியின் கையில் அகப்பட மாட்டான்,
> மாற்றானின் கூட்டங்கள் அசைத்திட முயன்றாலும்
> அண்டிய மனிதனைக் கைவிட மாட்டார்!
>
> – ரிச்சர்ட் கீன் (1787)

சங்கீதம் 122: சமாதான நகரம்

என்னிறைவன் முன்னிலையில்
செலவிட்ட மணிப்பொழுது
என்வாழ்வின் தூய்மைநிறை
மனமகிழ்வின் தருணமாமே!
முழங்கால்கள் முடக்கியவளாய்
ஏறெடுத்த மன்றாட்டு
தோழரோடு தோழியாக தொடர்பு
கொண்ட நேரமாமே!
– ஃபேன்னி J. கிராஸ்பி

122:1 தேவனுக்குப் பயந்த யூதர்கள், எருசலேமில் நடைபெற்ற பண்டிகைக்குத் தாவீது செல்வதற்கு ஏற்ற தருணம் அதுவே என்று நினைவுபடுத்தியபோது அந்தத் தூய்மைநிறை மனமகிழ்வின் நறுமணத்தை அவன் முகர்ந்தான். அவன் **மகிழ்ச்சியாயிருந்தான்**. அது ஏதோ பாரமான கடமையல்ல அல்லது வழக்கமாகச் செய்யக் கூடிய மந்தமான வேலையுமல்ல. ஆலயத்துக்குச் சென்று தொழுதுகொள்வதில் அவன் மன நிறைவையும் மகிழ்ச்சியையும் பெற்றான்.

122:2 இப்பொழுது விசுவாசத்தின் புனிதப் பயணிகள் உண்மையாகவே நகரத்திற்குள்ளே நின்று கொண்டிருந்தார்கள். **"எருசலேமே, உன் வாசல்களில் எங்கள் கால்கள் நிற்கின்றன!"** தேவன் தெரிந்துகொண்ட இடத்திற்கு அதாவது தங்களுடைய சொந்த வீட்டுக்குத் திரும்பிச் செல்லும்படியான தெய்வீக உள்ளுணர்வை அவர்கள் பெற்றார்கள். அங்கு செல்வதென்பது மிகச்சிறந்த நிகழ்வு.

122:3,4 இசைவிணைப்பாகக் கட்டப்பட்டிருந்த, மஞ்சட்காவி வண்ணம் பூசப்பட்ட அந்நகரத்தைக் கண்ட அந்த மனிதர்கள் திகைத்து நின்றார்கள். சூரிய ஒளியில் நனைந்த சுவர்களைக் கொண்ட அந்நகரம், ஒரு சதுர மைல் பரப்பளவுள்ளது, அந்தச் சுவர்கள் அதன் காரணமாகப் பாதிக்கப்பட்டிருந்தன. சமதளமான மேற்கூரை கொண்ட வீடுகளும், குப்பை கூளம் நிறைந்த ஒடுக்கமான தெருக்களும் நிறைந்திருந்தன. ஆனால் அங்கே ஒரு கட்டடத்தின்மேல் மக்கள் தீவிரமான பற்றுதல் கொண்டிருந்தார்கள், அவ்வாறு கவர்ச்சிமிக்கதாய் இருந்த கட்டடம் கர்த்தருடைய ஆலயமேயாகும். உண்மையான பொருளில் கூறவோமானால் அந்த ஆலயமே அவர்களுக்கு அந்த நகரத்தை உண்டாக்கிக் கொடுத்தது.

அந்த இடத்திற்கே **கர்த்தருடைய** மக்களாகிய **கோத்திரங்கள்** புனிதப் பயணம் மேற்கொண்டார்கள். தமது மக்கள் ஒன்றுகூடி தமது திருப்பெயருக்குத் துதிசெலுத்தும்படி தேவன் ஆணையிட்ட ஒரே இடம் அதுதான்.

122:5 எருசலேம் இஸ்ரவேல் நாட்டின் அரசியல் தலைநகரம் என்பதில் ஐயமில்லை. அது **தாவீதின்** ராஜரிக **வம்சத்தாரின்** அரியணை இருந்த இடம். ஆகவே நீதி செலுத்தப்படும்படி நியமிக்கப்பட்ட இடமும் அதுவே.

122:6 அந்நகரத்தின் பெயரின் பொருள் "சமாதான நகரம்" என்றாலும், இதுகாறும் அந்தப் பெயருக்கு ஏற்றாற்போல சமாதானம் அங்கு இல்லை. அது எதிர்கொண்ட சண்டைகள், உபத்திரவம், படுகொலை ஆகியவற்றை வேறு எந்த நகரமும் எதிர்கொண்டதில்லை.

> எருசலேமின் கற்கள் அந்நகரத்தின் புனிதத் தன்மைக்கு அடையாளமாக சிலுவையின் தடங்களைப் பெற்றுள்ளன, அதன் மதில்கள் சமயத்தின் பெயரால் அவற்றிற்குள்ளாக நடத்தப்பட்ட குற்றங்களின் நினைவுகளைப் பிரதிபலிக்கின்றன. தாவீதும் பார்வோனும், சனகெரிப்பும் நேபுகாத்நேச்சாரும், தாலமியும் ஏரோதும், தீத்துவும் காட்.்.பிரேயின் சிலுவை வீரர்களும், தாமர்லேனும் சாரசென்களும் அங்கு சண்டையிட்டு மாண்டார்கள்.[93]

"எருசலேமின் சமாதானத்திற்காக வேண்டிக்கொள்ளுங்கள்!" என்னும் மனவேதனையளிக்கும் வேண்டுதலுக்குத் தீர்க்கதரிசனங்களிலும் வரலாற்றிலும் எண்ணிலடங்கா அர்த்தங்கள் உள்ளன. இருண்ட காலம் இனிமேல்தான் வரவிருக்கிறது. அந்நகரத்தின் தெருக்கள், இஸ்ரவேலின் மேசியாவாகிய சமாதானப் பிரபு தமது அரசை அங்கே நிறுவும்படி வருவதுவரையிலும், போர்த்தாக்குதல் செய்யும் புறவினத்தாரின் கால்கள் மிதிபட்டு எதிரொலிக்கும் (லூக்கா 21:24).

திருவாளர் F. B. மேயர் இந்த வசனத்தில் முதலெழுத்து அடுத்தடுத்து நேர்த்தியாக ஒன்றி வருவதைக் குறிப்பிட்டுள்ளார்:

> அமைதிப் பட்டணத்தில் அமைதி பரவட்டும்.
>
> அரணை விரும்புவோர் அமைதியை விரும்பட்டும்.
>
> மாபெரிய அரசரின் பட்டணத்தை விரும்புவோர் அனைவர்மேலும் அமைதி என்னும் அருள் தங்குவதாக.

122:7-9 அந்நகரத்தின் அலங்கத்திற்குள்ளாக அமைதியும் அதனுடைய கோபுரங்களுக்

குள்ளாகப் பாதுகாப்பும் நிலவ வேண்டும் என்று மன்றாடுவதிலும் ஊக்கமளிப்பதிலும் இவ் விருப் பம் வெளிப்படுத்தப்படுகிறது. தெய்வ பக்தியுள்ள யூதன் எருசலேமைக் குறித்து எவ்விதமாக விரும்பி னானோ அவ்விதமாகவே நாம் திருச்சபையின் மேல் விருப்பம் கொண்டிருக்கவேண்டும். சமா தானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத் துக்கொள்ள எவ்விதமாக நாம் முயற்சி செய்வோம் (எபே. 4:3)! அது திருச்சபையின் சமாதானத் தினாலும் வளமையினாலும் உண்டாகி உலக மெங்கிலும் ஆசிர்வாதம் பாய்ந்துசெல்லும்.

எட்டாவது வசனத்தில் காணப்படும் சிந்தனை இதுவே. உறவினர்கள் மற்றும் நண்பர்கள் **நிமித் தம்**, திருச்சபையின் உட்காயங்கள் ஆற வேண் டும் என்றும், அதன் சச்சரவுகளும் பிரிவினை களும் நீங்க வேண்டும் என்றும் நாம் வாஞ்சிக்க வேண்டும். திருவாளர் பார்னஸ் விவரிக்கிறார்:

> உலகமெங்கும் காணப்பட வேண்டிய அன்புடை மையின் மெய்யான உணர்வுகளை இது வெளிப் படுத்துகிறது; திருச்சபையின்மேல் தேவனுடைய நண்பர்கள் கொண்டிருக்க வேண்டிய தீவிர மான அன்பிற்கு இது அடித்தளமாயிருக்கிறது – ஏனெனில் தங்களுடைய இருதயங்களுக்கு நெருக்கமானவர்கள் திருச்சபையின் மூலமாக இரட்சிப்பை அடைவார்கள் என்று அவர்களே நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்.[94]

ஏற்கனவே குறிப்பிட்டதுபோல, கர்த்தருடைய ஆலயம் அங்கிருப்பதே அந்நகரத்தின் மிகப் பெரிய மகிமையாகும். அந்த நகரத்தின் இருப் பிடமோ அதிலுள்ள கட்டடங்களின் அருவருப் பான தோற்றமோ, அதன் சோகமிக்க வரலாறோ அதற்குக் காரணமல்ல - அல்ல, அதற்கான முக்கி யமான காரணம் தமது ஆலயம் நிறுவப்படுவ தற்கு தேவன் அந்த நகரத்தைத் தெரிந்தெடுத் தார் என்பதே ஆகும். கர்த்தர் கிருபையாகத் தொட்ட எல்லாவற்றின் மேலும் மகிமையின் ஒளி வட்டம் அவருடைய பிரசன்னத்தால் உண்டா யிருக்கிறது.

பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர் பரிசேயருக் கும் வேதபாரகருக்கும் இதனை இயேசுநாதர் நினைவுபடுத்த வேண்டியதாயிற்று. அவர்கள் ஆலயத்தின் பொன்னை ஆலயத்தைக் காட்டி லும் மேலாகக் கருதினார்கள், பலிபீடத்தின் மேல் வைக்கப்பட்ட காணிக்கையை பலிபீடத்தைக் காட்டிலும் மேலாகக் கருதினார்கள். ஆலயமே பொன்னைப் புனிதப்படுத்துகிறது, பலிபீடமே காணிக்கையைப் பரிசுத்தப்படுத்துகிறது என்று இயேசு நாதர் சுட்டிக்காட்டினார் (மத். 23:16-22). ஆகவே, மற்ற எல்லா நகரங்களிலிருந்தும் எருச லேமை வேறுபடுத்திக் காட்டியவர் கர்த்தரே ஆவார்.

சங்கீதம் 123: இரக்கத்தை நாடும் கண்கள்

இந்த ஆரோகண சங்கீதத்தில் இடம்பெற் றுள்ள இரண்டு முக்கியமான சொற்கள் “கண் கள்,” “இரக்கம்” என்பவையே. முதற்சொல் நான்கு தடவையும், இரண்டாவது மூன்று தடவை யும் இடம்பெற்றுள்ளன. காட்சி அடிமைத்தள நாடு - ஒடுக்கப்பட்ட அந்நிலையை அவர்கள் எகிப்தி லும், பாபிலோனிலும், ஜெர்மனியில் நாசி ஆட்சி யின்போதும், வார்சாவின் ஒதுக்குப்புறக் குடி யிருப்புகளிலும், சிறிது காலத்திற்கு முன் சைபீரி யாவின் அடிமை வேலையாட்கள் முகாம்களிலும் கண்டிருக்கிறார்கள். பெயர் சொல்லப்படவில்லை யெனினும், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எதிரி நாடு பாபிலோனே ஆகும்.

123:1 தங்களுடைய நீண்டகால அடிமைத் தளையும், இருண்ட இரவின் கொடுமைகளும் நீங்க வேண்டுமென்று சிறையிருப்பில் இருந்தவர் கள் கர்த்தரிடம் வேண்டியவர்களாக, தங்களு டைய கண்களின் தசை நார்களை இறுக்கி அங்கி ருந்து வரும் தெய்வீக இரக்கத்தின் காட்சியைக் காணவேண்டும் என்னும் வேட்கையோடு அவர் கள் **பரலோகத்தை** நோக்கித் தங்கள் **கண் களைத்** திருப்பினார்கள்.

123:2 எஜமான்களின் கையை நோக்கிப் பார்க்கிற **வேலைக்காரரோடும், எஜமாட்டியின் கையை நோக்கிப்** பார்க்கிற **வேலைக்காரி யோடும்** அவர்கள் தங்களை ஒப்பிடுகிறார்கள். எஜமானின் சித்தத்தை அறிந்து அதற்குக் கீழ்ப் படிய ஆயத்தமாக இருந்ததையே இது குறிப்பிடு கிறது என்று பொதுவாகப் பொருள்கொள்ளப்படு கிறது. ஆனால் இங்கு காணப்படும் சித்திரம் அது வன்று. மாறாக யெகோவா தங்கள்மீது **இரக் கத்தைக்** காட்டுவார் என்று யூதர்கள் கவனத் தோடு இருந்ததையும் அவர்களது எதிர்பார்ப்பை யும் இது குறிக்கிறது. சிறையிருப்பிலிருந்து விரை வாக விடுதலை, சொந்த நாட்டுக்குத் திரும்பிச் செல்லவேண்டும் என்னும் விருப்பம் ஆகியவை நிறைவேறுவதற்கான இரக்கமே அவர்கள் உள் ளத்தில் எழுந்த வேண்டுதல். அவர்களை ஒடுக் கியவர்களிடமிருந்து இரட்சிப்படைய வேண்டும் என்று அவர்கள் அவருடைய **கையை** நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

123:3,4 **நிந்தையால்** நிறையப் பெற்றிருந்த மக்கள் இரக்கத்தை வேண்டி ஏறெடுத்த மன்றாட்டு இரண்டு முறை தேவனுடைய கிருபாசனத்தை நோக்கிச் செல்கிறது. ஒவ்வொரு நாளும் அவர்களுடைய புறவின முதலாளிகளிடத்திலிருந்து **இகழ்ச்சி** என்னும் உணவு பரிமாறப்பட்டது. சுக ஜீவிகளாக இருந்த அந்த மனிதர்கள் புண்படுத்தும் சொற்களாலும் வஞ்சகப் பேச்சுகளினாலும் செய்யப்பட்ட கொடுமைகளை நீண்டகாலமாகச் சகித்துக் கொண்டிருந்தார்கள் (சக. 1:15). அவர்களைச் சிறைப்பிடித்துச் சென்ற **அகங்காரம்** நிறைந்த பாபிலோனியரின் இறுமாப்பினால் நீண்டகாலமாக அவர்கள் பாடு அனுபவித்து வந்தார்கள் (எரே. 50:31,32). இப்பொழுது அவர்கள் வரம்புகடந்து செயல்படுகிறார்கள். இதுவரை நடந்தது போதும்! சங்கிலி உடைத்தெறியப்பட வேண்டிய நேரம் வந்துவிட்டது.

யூதர்களுக்கு எதிரானதும் பாகுபடுத்தித் தீர்ப்பு வழங்குகிறதுமான இவ்வுலகில் தங்களுடைய ஒரே அடைக்கலமும் பாதுகாவலருமான ஒருவரிடம் - ஒடுக்கப்பட்டவர்கள் மற்றும் நசுக்கப்பட்டவர்கள் ஆகியோரின் நண்பரிடம் அவர்கள் தங்களுடைய நிர்ப்பந்திக்கும் வேண்டுதலை ஏறெடுக்கிறார்கள்.

சங்கீதம் 124: எல்லாவற்றிலும் மிக முக்கியமான ''ஆல்'' என்னும் விகுதி

124:1"கர்த்தர் நமது பக்கத்தில் இராவிட்டால்..."

எல்லாம் "ஆல்" என்ற விகுதியையே சார்ந்திருக்கிறது. அது விடுவித்தலுக்கும் பேரிடருக்கும் இடையேயுள்ள வேறுபாட்டைத் தெரிவிக்கிறது. ஆனால் அங்கே கர்த்தர் இருந்தார், அது எல்லா வேறுபாட்டையும் ஏற்படுத்தியது.

யூதர்களைப் போல வேறு எந்த இனத்தாரும் இத்தனை முறை மயிரிழையில் உயிர்தப்பியது இல்லை. இயற்கை விதிகளின் அடிப்படையில் காண்போமாயின் வெகு காலத்திற்கு முன்னரே அவர்கள் அழிந்து போயிருக்க வேண்டும். முற்றுகை இடப்பட்ட தருணங்கள், படுகொலைகள், திட்டமிட்ட இனக்கொலைகள், நச்சு வாயு அறைகள், தீச்சூளைகள், வெடிகுண்டுகள் இவை எல்லாவற்றையும் எண்ணிப்பார்த்தால், அவர்கள் தப்பியது ஓர் அற்புதமே ஆகும். ஆனால் அவர்கள் தப்பி இருப்பதற்கான ஒரே காரணம் **கர்த்தர்** அவர்கள் **பக்கத்தில் இருந்தார்**.

ஆனால் இஸ்ரவேலரோ இந்த உண்மையை ஒப்புக்கொள்ள எப்போதும் மனதற்றவர்களாக இருந்தார்கள் என்பது வருந்தத்தக்கது. பெரும்பாலான நேரங்களில் அவர்கள் பெற்ற வெற்றிகளுக்குத் தங்களுடைய அறிவுக்கூர்மையும் வலிமையுமே காரணம் என்று பெருமிதம் கொண்டார்கள். ஆனால், கர்த்தராலேயன்றி தாங்கள் அழிந்து போயிருக்க வேண்டும் என்று உணர்ந்த பயபக்தி நிறைந்த யூதர்கள் எப்போதும் இருந்திருக்கிறார்கள்.

124:2-5 பகைவர் தங்களுக்கு எதிராக எழுந்த போது அவர்களுடைய மிகுதியான எண்ணிக்கையாலும் உயர்தரப் படைத்தளவாடங்களாலும் இஸ்ரவேல் அடக்கி ஆட்கொள்ளப்பட்டிருக்கும் என்று பாடலாசிரியன் அந்த நேரங்களைக் குறித்து எண்ணிப் பார்க்கிறான். உணவுப் பொருட்களின் கையிருப்பு குறைந்து நிச்சயமற்ற நிலைக்குச் சென்றுவிட்டது. மருந்துகளும் இல்லை. தொலைத்தொடர்பு அறுந்து போயிற்று. கையில் இருந்த பொருட்களைக் கொண்டு ஆயத்தமற்ற முறையில் நிலையை எதிர்கொள்ள நேரிட்டது. அவர்கள் முற்றிலும் சூழ்ந்துகொள்ளப்பட்டிருந்தார்கள். பகைவர் அவர்களைக் கடலுக்குள் தள்ளிவிடப் போவதாக அச்சுறுத்திக் கொண்டிருந்தார்கள். நிலைமை கடுமையாயிருந்தது.

124:6,7 மூர்க்கமான விலங்குகளைப் போல, எதிரி அவர்களை உயிருடன் விழுங்கக் கூடிய நிலை ஏற்பட்டிருந்தது. அல்லது இவ்வுவமையை மாற்றிச் சொல்வோமெனில், புறவின ராணுவ வல்லமையின் மிகப்பெரிய அலையில் அவர்கள் மூழ்கடிக்கப்படக் கூடிய தருணம் வந்துவிட்டது.

ஆனால் சடிதியில் எதிர்பாராத நிகழ்வு ஏற்பட்டது. எவ்விதமாகப் போரை நடத்துவது என்பது பற்றி பகைவருக்குள்ளாகச் சண்டை உண்டாகும்படி கர்த்தர் செய்தார். அல்லது யூதர்களுடைய நிலைமை பற்றிய தவறான தகவல்களை ஒற்றர்கள் அவர்களுக்குக் கொடுக்கும்படி அவர் செய்தார், அல்லது ஒரு தலைவனின் சாவால் அவர்களுக்குத் திகைப்பும் கலக்கமும் ஏற்படச் செய்தார். இல்லையெனில் அவர்களுக்கு வெற்றி நிச்சயம் என்னும் தறுவாயிலும் சண்டை நிறுத்தத்திற்குச் சம்மதிக்கச் செய்தார்.

மறுபுறம், எதிர்பாராத உணவுக் கிடங்குகளை நோக்கிக் கர்த்தர் யூதர்களை வழிநடத்தினார், அல்லது மறைத்துவைக்கப்பட்டிருந்த பெருமளவு ஆயுதங்கள் அவர்களுக்குக் கிடைத்தன. அல்லது நிச்சயமாக உதவி கிடைக்காது என்று சொல்லக்கூடிய இடத்திலிருந்து உதவி கிடைக்

கச் செய்தார். அது எவ்வாறு இருந்தாலும், சூழ் நிலைகள் ஒன்றுகூடியபோது, அது தேவனுடைய கரத்தால் கொண்டுவரப்பட்ட அற்புதச் செயலே யன்றி வேறன்று.

ஆவிக்குரிய நுண்ணறிவு பெற்றவர்கள், தாங்கள் பெற்ற புதிரானதும் அற்புதமானதுமான விடுவிப்புக்காகக் கர்த்தருக்கே எல்லா மகிமை யையும் செலுத்தினார்கள். ஊனைத் தின்னும் புறவின விலங்குகளால் சிறிய இஸ்ரவேலை விழுங்க முடியவில்லை. தேவனுடைய மக்களைக் கண்ணி யில் சிக்க வைக்கப் புறவின நாடுகளின் ஒருங்கி ணைப்பு மாநாடுகள் மேற்கொண்ட திட்டங்கள் அனைத்திற்கும் அவர்கள் தப்பினார்கள். **கண்ணி தெறித்தது**, யூதர்களைச் சுற்றிலும் வைக்கப்பட்டி ருந்த இரும்பு வளையம் உடைத்தெறியப்பட்டது, மீண்டும் அவர்கள் **தப்பினார்கள்**.

124:8 தாழ்மையோடும் நன்றியறிதலோடும் அவர்கள் செய்த அறிக்கை:

> **வானத்தையும் பூமியையும் படைத்தவரான கர்த்தருடைய பெயரிலேயே**
>
> **எங்களுக்கு உதவி உண்டு** (இலகு தமிழ்).

ஆயினும், தேவனுடைய அதிசயச் செயல் களுக்கு இஸ்ரவேல் மட்டுமே தனிஉரிமை கோர முடியாது. மயிரிழையில் விடுவிக்கப்பட்ட நிகழ்வு களைக் கொண்டாடுவதில் திருச்சபையும் இச்சங் கீதத்தின் சொற்களை உரிமை பாராட்ட முடியும். தனிப்பட்ட விசுவாசிகளும்கூட கர்த்தர் தமது பக்கத்தில் இராவிட்டால் உலகம், மாம்சம், பிசாசு ஆகியவற்றால் முழுவதும் கீழ்படுத்தப்பட்டிருப் பார்கள் என்பதை அறிவார்கள்.

சங்கீதம் 125: சமாதான வழி

125:1 எருசலேமில் உள்ள சீயோன் மலை கட லில் பாய்ந்துள்ள நில முனைக் கோடிகளில் ஒன்று. சில வேளைகளில் அது அந்த நகரத்தைக் குறிக்கும் உருவகச் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இங்கு அச்சொல் அதனுடைய முடிவான நிலைத்த தன்மையையும் வலிமையையும் குறிக்கிறது. அது அசைக்கமுடியாத பாதுகாப்பு அரணாகும்.

விசுவாசிக்கிற மனிதனும் அப்படித்தான் இருக் கிறான். அவனுடைய வாழ்வு கற்பாறையின்மேல் கட்டப்பட்டிருக்கிறது. மழை பெய்கிறபோது, வெள் ளம் பெருக்கெடுத்துவந்து, காற்றுவீசி வீட்டைத் தாக்குகிறது. ஆனாலும் அவனுடைய வீடு விழு வதில்லை, ஏனெனில் அது கற்பாறையின் மேல் கட்டப்பட்டுள்ளது (மத். 7:25).

சீயோன் மலை **என்றென்றைக்கும் நிலைத் திருக்கும்.** பூமியில் இருக்கும் நகரத்தைப் பொறுத் தவரை, அன்றைய நாட்களில் இருந்த விசுவாசி களுக்கு அது எவ்வாறு தோற்றமளித்ததோ அவ் வண்ணமே இதை நாம் புரிந்துகொள்ள வேண் டும். இந்தப் பூமியானது ஒருநாளில் அழிக்கப் படும் என்பதை நாம் புதிய ஏற்பாட்டிலிருந்து அறிந்திருக்கிறோம் (2 பேதுரு 3:7,10,12). ஆயி னும் இதுபோன்ற சொற்களை நாமும் பயன்படுத்து கிறோம். என்றென்றும் நிலைத்திருக்கும் மலை களையும் நித்திய நகரத்தையும் குறித்துப் பேசு கிறோம் (ரோம்).

சீயோன் மலை ஒருநாள் அழிக்கப்படினும், கிறிஸ்துவுக்குள்ளான விசுவாசி ஒருக்காலும் அழிவதில்லை என்பதே முக்கியமான கருத்து. தகுநிலையின் அடிப்படையில் நாம் கிறிஸ்துவுக் குள் இருப்பதால், எத்தகைய பாதுகாப்பை தேவன் ஏற்பாடு செய்ய முடியுமோ அத்தகைய பாதுகாப் பைப் பெற்றிருக்கிறோம்.

125:2 எருசலேம் நகரம் இருக்குமிடத்தைக் குறித்து மேலும் ஓர் ஆவிக்குரிய உண்மையைப் பாடலாசிரியன் காண்கிறான். அது பர்வதங் களால் சூழப்பட்டுள்ளது. நகரத்துக்கு வரக்கூடிய எல்லா வழிகளையும் இராணுவம் அந்த மலை களிலிருந்து காவல்காக்க முடியும். அதுபோலவே கர்த்தரும் தமது பிள்ளைகளைச் சுற்றிப் பாது காப்பு வளையத்தை உண்டுபண்ணியிருக்கிறார். **"கர்த்தர் இதுமுதல் என்றென்றைக்கும் தமது மக்களைச் சுற்றிலும் இருக்கிறார்."** இத்தகைய வேலியே யோபுவைச் சுற்றிலும் போடப்பட்டிருந் ததாகச் சாத்தான்கூறினான்.

> நீர் அவனையும் அவன் வீட்டையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சுற்றி வேலிய டைக்கவில்லையோ? (யோபு 1:10).

விசுவாசியான பரிசுத்தவானை, தேவனுடைய அனுமதிக்கும் சித்தத்தினாலேயன்றி, எதுவும் அணுகாது என்பதே இதன் பொருள் என்பது நிச்சயம்.

125:3 வேறொரு மிகப்பெரிய உரிமைகோர லும் 3 -ஆவது வசனத்தில் சொல்லப்பட்டுள்ளது:

> **நீதிமான்கள் அநியாயத்திற்குத் தங்களு டைய கைகளை நீட்டாதபடிக்கு, ஆகாமியத் தின் கொடுங்கோல் நீதிமான்களுடைய சுதந்தரத்தின்மேல் நிலைத்திராது.**

பொல்லாத மனிதர்கள் இஸ்ரவேல் நாட்டுக்கு எதிராகப் பலமுறை போர்த்தாக்குதல் நடத்தி

வெற்றியும் பெற்றார்கள் என்று குறிப்பிட்டு, இவ் வசனத்தின் முதல் பகுதிக்குச் சிலர் எதிர்ப்புத் தெரிவிக்கக் கூடும். அது உண்மையே. ஆனால் இந்த வசனத்திற்கு அதன் பின்னணியில் பொருள் கூறவேண்டும். இந்தச் சங்கீதம் கர்த்தரிடம் நம் பிக்கை கொண்ட மக்களைக் குறித்துப் பேசு கிறது; இங்கு கூறப்பட்டுள்ள வாக்குறுதிகள் அப்படிப்பட்ட மனிதர்களுக்கே தகும். இஸ்ரவேல் கர்த்தரைவிட்டு விலகிச் சென்ற தருணங்களில் தான் அதன் எல்லைகள் தாக்கப்பட்டன, மதில் கள் உடைக்கப்பட்டன. அவர்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, அவரிடத்தில் நம்பிக்கையாயிருந்த காலமெல்லாம் ஆகாமியத்தின் செங்கோல், அதாவது, பொல்லாத புறவின அரசர்களின் ஆட்சி அவர்கள் அருகே வருவதற்கு அனுமதிக்கப்பட வில்லை.

இஸ்ரவேல் மக்கள் கர்த்தரோடு நடந்த கால மெல்லாம் கேடு விளைவிக்கிற எதிரிகள் தேவ னால் தடுத்து நிறுத்தப்பட்டதற்குக் கவனத்தை ஈர்க்கும் காரணம் கூறப்பட்டுள்ளது. அந்தக் கார ணம் யாதெனில் அவ்வாறு தடுத்து நிறுத்தப்படா விட்டால் **நீதிமான்களாகிய** இஸ்ரவேலர் தவறு செய்வதற்குத் **தங்களுடைய கைகளை நீட்டும் படி சோதனை ஏற்பட்டு விடும் என்பதே.** வெளி யிலிருந்து தாக்கக்கூடிய எதிரிகளிலிடத்திலி ருந்து மட்டுமின்றி, நாம் நேர்மையற்ற முறையில் நடத்தப்படுகிறபோது பாவம் செய்யக் கூடிய உள் ளான சுய விருப்பத்திலிருந்தும் தேவன் நம்மைக் காக்கிறார்.

125:4 நான்காவது வசனத்தையும் அதன் பின்னணியைக் கொண்டே புரிந்துகொள்ள வேண்டும்: **கர்த்தாவே நல்லவர்களுக்கும் இருதயத்தில் செம்மையானவர்களுக்கும் நன்மை செய்யும்.** இங்கு **நல்லவர்கள்** என்று குறிப்பிடப்பட்டுள்ள மக்கள் கர்த்தரால் இரட்சிக் கப்பட்டவர்களும் அவருக்குக் கீழ்ப்படிந்து வாழ் கிறவர்களுமே ஆவார்கள். அவர்களுடைய நேர்மையான நடத்தை அவர்களது இரட்சிப்பிற் கான அடிப்படைக் காரணமல்ல, மாறாக அவர் களுடைய விசுவாசம் கீழ்ப்படிதல் ஆகியவற்றின் கனியே அந்த இரட்சிப்பு.

125:5 வேறுபலரும் தேவனுடைய மக்கள் கூட்டத்தின் உறுப்பினர்கள் என்று கூறுவார்கள், ஆனால் **தங்கள் கோணலான வழிகளுக்குச் சாய்கிற** அவர்களைக் கர்த்தர் சிறையிருப்புக்கு அனுப்பி **அக்கிரமக்காரர்** நடுவில் சிதறடிப்பார்.

இஸ்ரவேலுக்கோ சமாதானம் உண்டு! இஸ்ர வேலுக்கும், மேலும் ஒவ்வொரு மனிதனுக்கும் சமாதானத்திற்கான வழிமுறை இச்சங்கீதத்தில் கூறப்பட்டுள்ளது. கர்த்தராகிய இயேசுவினிடத் தில் வைக்கிற நம்பிக்கையினாலேயே அது கிடைக் கிறது. இஸ்ரவேல் தாங்கள் குத்தினவரிடம் திரும்பி, ஒரே பிள்ளைக்காகத் துக்கிக்கிறது போலத் துக்கித்து அவரிடத்தில் நம்பிக்கை வைக் கிறபோதுதான், பல நூற்றாண்டுகளாக அவர் களைவிட்டு விலகிச் சென்றுள்ள அமைதி அவர் களிடத்துக்குத் திரும்பும்.

சமாதானம், சமாதானம் உண்டாவதாக!

சங்கீதம் 126: கண்ணீரோடு விதைத்தலும், களிப்போடு அறுவடை செய்தலும்

126:1 சிறையிருப்பில் இருந்த யூத இனத்தாரி டம் அறிவிப்பு எட்டியபோது அவர்கள் திடுக்கிட்டு ஆனந்தக் களிப்பு அடைந்தார்கள். பெர்சியாவின் மன்னனாகிய கோரேசு சிறையிருப்பில் இருந்த மக்கள் தங்களுடைய சொந்த நாட்டுக்குத் திரும்பிச் செல்லலாம் என்று ஆணையிட்டான். உண்மையாக இருக்குமோ என்று ஐயுறும் அள விற்கு அது நல்ல செய்தியாகத் தோன்றியது. நீண்டகாலச் சிறையிருப்பின்போது, தங்களால் மீண்டும் எருசலேமைக் காணமுடியுமா என்று ஐயம் கொண்டிருந்தார்கள். ஆனால் இப்பொழுதோ அந்தச் செய்தி வந்துவிட்டது. அவர்களுடைய ஈன மான உடைமைகளை அவர்கள் சேகரித்தபோது சொப்பனத்தில் நடந்தவர்கள் போலக் காணப்பட் டார்கள்.

126:2 வழக்கமாகத் தெளிவாகவும் விருப்பத் தோடும் பேசுகிற மனிதர்கள், உணர்ச்சி வயப்பட்டு தெளிவின்றி உரத்த குரலில் பேசினார்கள். ஏறத் தாழ எழுபது ஆண்டுக் காலத்தில் முதன்முத லாக அவர்களுடைய வாழ்க்கையில் மிகுந்த ஆர்வத்தை உண்டுபண்ணிய இன்பம் உண்டா யிற்று. அவர்களுக்கு அது பெருமகிழ்ச்சியை ஏற்படுத்தியது. அவர்கள் தங்களுடைய சொந்த வீடுகளுக்குப் போய்க்கொண்டிருந்தார்கள். அவர் களுடைய ஆயத்தம் உச்சநிலையை அடைந்த போது, அவர்கள் நகைக்கவும் பாடவும் தொடங்கி னார்கள். அது அவர்களுக்குப் புதிய அனுபவமா யிருந்தது.

இது யூதரல்லாத மக்களுக்கு வியக்கத்தக்க சாட்சியாக விளங்கியது. இயற்கை நியதிகளின் அடிப்படையில் விவரித்துக் கூறவியலாதபடி யூதர் களுக்குச் சாதகமாகச் சம்பவங்கள் நிகழ்வதாக

அவர்களுக்குத் தோன்றியது. அதிசயிக்கத்தக்க வகையில் அவர்களுக்காக எபிரெயரின் தேவன் குறுக்கிட்டுச் செயல்புரிந்ததாக அவர்கள் ஒப்புக் கொண்டார்கள். மற்ற எல்லா இனத்தாரையும் விட யெகோவாவின் அன்புக்கும் அக்கறைக்கும் தகுதிபெற்ற தனிச்சிறப்புடன் இஸ்ரவேலர் காணப் பட்டார்கள்.

126:3 நன்றியறிதலுடன் விளங்கிய நாடுகடத் தப்பட்ட மக்கள், தாங்கள் பெற்ற விடுதலைக்குக் கர்த்தர் ஒருவரே காரணர் என்று மகிழ்வுடன் புற வினத்தாரின் கூற்றுக்கு ஒப்புதல் தெரிவித்தார்கள்.

கர்த்தர் நமக்குப் பெரிய காரியங்களைச் செய்தார்

இதனிமித்தம் நாம் மகிழ்ந்திருக்கிறோம்.

126:4 ஆனால் பரிதவிக்கத்தக்க மீதியானவர் களாக, அவர்கள் தாங்கள் அணிந்த ஆடைகளே யன்றி வேறு எதுவும் இல்லாதவர்களாகத் தங்க ளுடைய சொந்த நாட்டுக்குத் திரும்பினார்கள். அவர்களுக்கு ஆட்பலம், நிதி, பாதுகாப்பு யாவும் தேவையாயிருந்தன. அவர்களுடைய மன்றாட் டுக்கு இதுவே காரணம்:

கர்த்தாவே, தெற்கத்தி வெள்ளங்களைத் திருப்புவது போல,

எங்கள்சிறையிருப்பைத் திருப்பும்.

தெற்கு (எபி. Negev) என்னும் சொல் தெற்கே இருந்த பாலைவனத்தைக் குறிக்கும். பொதுவாக அது வறட்சியும் தரிசுமாகவுமே இருக்கும். ஆனால் பெருமழை பெய்தபின் நீர்த்தடாகங்கள் வற்றாத சிற்றோடைகளாக மாறி அந்தப் பாலைவனமே செழிப்பாகிவிடும். அதுபோலவே நீர்த்துளிகளைப் போலக் காணப்படும் மக்கள், பன்னிரண்டு கோத் திரத்தாரும் திரும்பக் கொண்டுவரப்படும்போது பெருங்கூட்டமாக விளங்க வேண்டுமென்று நாடு கடத்தப்பட்ட மக்கள் வேண்டிக்கொண்டார்கள். திரும்பக் கட்டவும் திரும்பச் சேகரிக்கவும் கர்த்தர் அவர்களுக்குத் தேவையானவற்றைத் தந்தருள வேண்டுமென்று அவர்கள் விண்ணப்பித்தார்கள். அவர்கள் மகிழ்ச்சி நிறைந்தவர்களும் கனிதரு கிறவர்களுமாக மாறுவதற்குத் தேவையான எல்லாவற்றையும் தரும்படி மன்றாடினார்கள்.

126:5,6 அவர்கள் சொந்த நாட்டுக்குத் திரும் பிய முதல் ஆண்டு மிகவும் கடினமானதாயிருக் கும். சென்றவுடன் அறுவடை செய்ய விளைச்சல் எதுவும் இருக்காது. அவர்கள் புதிதாகப் பயிர் களை நட்டு விளைச்சலுக்காகக் காத்திருக்க வேண்டும். அந்த நாட்கள் மிகவும் எளிமையாக வாழ வேண்டிய காலமாயிருக்கும். உணவுப் பொருட்களின் கையிருப்பு மிகவும் குறைவாக இருக்கும் என்பதால், சிக்கனமாகச் செய்ய வேண் டிய சூழ்நிலையே இருக்கும்.

முதலாவதாகப் பயிரிடும்போது விதைகளை நடுவதில் ஒருவித வருத்தம் அல்லது ஆர்வமற்ற தன்மையே காணப்படும். இங்கே ஓர் உழவன், அவனிடத்தில் தானியக் கையிருப்பு சிறிதளவே இருக்கிறது. இருக்கிற தானியத்தில் பெரும் நம்பிக்கையோடு விதைக்கலாம் அல்லது அதைக் கொண்டு தனது குடும்பத்தைப் பராமரிக்கலாம். அவன் தானியத்தை **விதைக்கவே** முடிவு செய் கிறான்; ஆனால் அவன் தனது கையைத் தானியப் பைக்குள்ளாக விட்டு, உழப்பட்ட நிலத்தில் தூவுகிறபோது அவனுடைய கண்களிலிருந்து கண்ணீர் அவன்மேல் ஆடையில் வழிகிறது. அவன் தனது மனைவியையும் குழந்தைகளை யும், குறைவான கூழ் ஊற்றப்பட்ட பாத்திரங் களையும் எண்ணிப்பார்க்கிறான். அறுவடை நாள் வரை தியாக உள்ளத்தோடு அவர்கள் வாழ வேண்டும். ஏதோ அவர்களுடைய வாயில் இடப் பட்ட உணவைப் பிடுங்குவது போன்ற உணர்வு அவனுக்கு ஏற்படுகிறது.

ஆயினும் மகிழ்ச்சி நிறைந்த சொற்கள் திரும்பிவந்த மக்களின் வாயிலிருந்து புறப்படு கின்றன:

அள்ளித் தூவும் விதையைச் சுமக்கிறவன் அழுதுகொண்டு போகிறான்;

ஆனாலும் தான் அறுத்த அரிகளைக் சுமந்து கொண்டு கெம்பீரத்தோடு திரும்பி வருவான்.

இவ்வாறாக அவர்கள் சென்று விதைக்கிறார் கள். அவர்களுடைய தற்போதைய வேதனை, முதிர்ந்த கதிர்களை அறுத்து, தானியத்தைக் களஞ்சியத்தில் கொண்டு வந்து சேர்க்கையில் ஏற்படுகிற மகிழ்ச்சியால் அளவுக்கு அதிகமாக ஈடு செய்யப்படும்.

ஆவிக்குரிய செயல்பாடுகளிலும் இந்தக் கோட் பாடு பொருந்தும் என்பதில் ஐயமில்லை. நற் செய்தி பரப்பப்படும் பொருட்டு தியாக வாழ்க்கை வாழ்ந்து, தற்காலத்தில் வாழ்க்கை வசதிகளைத் துறந்து துன்பங்களைச் சகிப்பவர்கள், ஆத்து மாக்கள் இரட்சிக்கப்பட்டு விண்ணகத்தில் என் றென்றும் தேவ ஆட்டுக்குட்டியானவரைத் தொழுது கொள்ளும் காட்சியைக் காணும்போது அடைகிற மகிழ்ச்சிக்கு எதனை ஒப்பிட முடியும்?

ஆத்தும ஆதாயம் செய்யும் பணியிலும் இது உண்மையாக விளங்குகிறது. “ஆத்தும ஆதாயம் செய்பவர்கள் முதலில் ஆத்துமாக்களுக்காக அழுகிறவர்களாக இருந்தவர்கள்” என்று ஒருவர் ஞானமாகக் கூறினார். ஆகவே நம்முடைய மன்றாட்டு இவ்விதமாக அமைய வேண்டும்:

மக்கள் பெருங்கூட்டத்தைக்
கண்ணுறும் வேளையில்,
எந்தன் இரட்சகர் கண்டதுபோலக்
காணவேண்டுமே!
கண்ணீர்த்துளிகளால் எனது
பார்வை மங்கவேண்டுமே!
அலையும் ஆடுகளைப் பரிவுடன்
நான் காணவேண்டுமே!
அன்பர்நிமித்தம் அவர்களிடத்தில்
அன்புகூர வேண்டுமே!

சங்கீதம் 127: எல்லாவற்றிலும் தேவன்

“கொஞ்சத்தில் இறைவன் இருந்தால் அது நிறைவாகும்” என்று ஒரு முதுமொழி உண்டு. ஆனால் அதற்கு நேர்மாறானதும் உண்மையே, “மிகுதியானதில் தேவன் இல்லையென்றால் அது ஒன்றுமற்றது.” அதனையே இச்சங்கீதம் எடுத்துரைக்கிறது: நம்முடைய செயல்பாடு கர்த்தரால் கட்டளையிடப்பட்டு வழிநடத்தப்படவில்லை என்றால், அது நேரத்தையும் ஆற்றலையும் வீணாக்கும் செயலாகி விடும். நாம் நமது சொந்தத் திட்டத்தை உருவாக்கலாம், அது கிறிஸ்தவப் பணியாகவும் இருக்கக் கூடும்; நாம் மிகப்பெரிய நிறுவனம் என்னும் பேரரசைக் கட்டலாம்; அதன் அதிசயிக்கத் தக்க பயன்கள் எவை என்பது பற்றிய புள்ளி விவரங்களைச் சேகரிக்கலாம்; ஆனால் அந்தத் திட்டங்கள் கர்த்தரால் நடப்பட்ட திராட்சைச் செடிகளாக இராவிடில், அவை பயனற்ற பொருட்களைக் காட்டிலும் கேவலமானதாகப் போய்விடும். “மனிதன் முன்மொழிகிறான், தேவன் முடிவு செய்கிறார்.”

பாடலாசிரியன் தனது கருத்தை விளக்கிக் கூறுவதற்கு வாழ்க்கையின் பொதுவான நான்கு செயல்களை தெரிந்தெடுக்கிறான். அவையாவன: வீடு கட்டுதல், உள்நாட்டுப் பாதுகாப்பு, பொதுவான வேலைகள், குடும்பத்தைக் கட்டுதல்.

127:1 ஒரு **வீட்டைக்** கட்டுவதற்கு இரண்டு வழிகள் உள்ளன. ஒருவன் தனது சொந்த அறிவு, திறமை, பொருளாதாரம் ஆகியவற்றைக் கொண்டு வேலையைத் தொடங்கிவிட்டு அந்த வீடு கட்டி முடிக்கப்படுவதற்காக தேவனுடைய ஆசீர்வாதத்தை வேண்டி மன்றாடுகிறான். மற்றொருவன் எவ்வித ஐயத்திற்கும் இடமற்றபடி கர்த்தருடைய வழிநடத்துதலைப் பெறுவது வரையிலும் காத்திருந்து, பின்னர் அவரைச் சார்ந்திருக்கும் எண்ணத்தோடு முன்னேறிச் செல்கிறான். முதலாவது முறையில் அந்தத் திட்டமானது மாம்சத்தையும் இரத்தத்தையும் காட்டிலும் ஒருபோதும் உயரச் செல்வதில்லை. இரண்டாவது முறையில், அற்புதமான வகையில் குறித்த நேரங்களில் தேவையானவை கிடைக்கப் பெறுதல், அடுத்தடுத்து முறையாகச் செயல்கள் நிறைவேறுதல், சூழ்நிலைகள் ஒன்றுகூடி வருதல் இவையாவும் தற்செயலாக நிகழும் என்னும் விதிகளுக்கும் அப்பாற்பட்டு நடப்பதன் காரணமாக எல்லாம் தேவனுடைய செயல் என்னும் அறிவு சிலிர்க்கச் செய்கிறது. தேவனுடன் சேர்ந்து கட்டுதல் உலகில் எல்லா வேறுபாடுகளையும் உண்டுபண்ணுகிறது.

127:2 இரண்டாவது எடுத்துக்காட்டு, பாதுகாப்பைப் பற்றியது; தேவனில்லாமல் செய்யப்படுகிற மனிதனுடைய எந்த முயற்சியும் வீண்: **கர்த்தர் நகரத்தைக் காவாராகில் காவலாளர் விழித்திருக்கிறது விருதா**. காவலர் படையோ, பாதுகாப்பு நிறுவனங்களோ இருக்கக் கூடாது என்பது இதன் பொருளன்று. மாறாக, நம்முடைய பாதுகாப்பு கர்த்தரிடத்திலேயே இருக்கிறது. உண்மையாகவே நம்முடைய பாதுகாப்புக்காக அவரைச் சார்ந்திராவிடில், நாம் எடுக்கிற வழக்கமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் நமது பாதுகாப்புக்குப் போதுமானவையாக இரா.

127:3 நம்முடைய வேலைகளில், ஒவ்வொரு நாளும் வெகுநேரம் வேலை செய்வது வீண்; தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட இடமேயன்றி வேறு இடத்தில் தன் வாழ்க்கைக்காக மன உலைவோடு கடினமாக உழைப்பதும் வீண். தயவு செய்து தவறாகப் புரிந்துகொள்ளாதீர்கள். நம்முடைய தேவைகளுக்காகவும், நம்முடைய குடும்பத்தின் தேவைகளுக்காகவும், பிறருடைய தேவைகளுக்காகவும் கடினமாக உழைக்க வேண்டும் என்று திருமறை நெடுகிலும் சொல்லப்பட்டுள்ளதே. இந்தச் சங்கீதம் நாள் முழுவதும் அமர்ந்து குடித்துக்கொண்டு நண்பர்களுடைய செலவில் வாழ்வதை ஆதரிக்கிறதில்லை. ஆனால் சொல்லப்பட்டுள்ள விவரம் இதுதான் - நாம் தேவனை விட்டுத் தனித்து வேலை செய்கிறவர்களாக இருந்தால், அது எவ்விதப் பயனையும் ஏற்படுத்துவதில்லை. ஆகாய் இப்படிப்பட்ட சூழ்நிலையை அழகாக விவரிக்கிறான்:

"நீங்கள் திரளாய் விதைத்தும் கொஞ்சமாய் அறுத்துக்கொண்டுவருகிறீர்கள்; நீங்கள் புசித்தும் திருப்தியாகவில்லை; நீங்கள் வஸ்திரம் உடுத்தியும் ஒருவனுக்கும் குளிர்விடவில்லை; கூலியைச் சம்பாதிக்கிறவன் பொத்தலான பையிலே போடுகிறவனாய் அதைச் சம்பாதிக்கிறான்" (ஆகாய் 1:6).

இதற்கு மறுபுறம், நாம் கர்த்தருக்கு உண்மையாகவே ஒப்புவித்தவர்களாக, அவருடைய புகழ்ச்சிக்காக வாழ்வோமென்றால், அவரில்லாமல் நீண்டநேரம் கடினமாக உழைத்துப் பெற முடியாத ஈவுகளை உறங்கும்போதே பெறுவோம். **"அவரே தமக்குப் பிரியமானவனுக்கு நித்திரை அளிக்கிறார்"** என்னும் சொற்றொடருக்கு இதுவே பொருள் என்று தோன்றுகிறது, அல்லது திருவாளர் மொ.ஃ.பட் மொழிபெயர்த்திருப்பது போல இதற்குப் பொருள் கூறலாம், "தேவனுக்குப் பிரியமானவர்கள் உறங்குகிறபோது, அவருடைய வரங்கள் வருகின்றன."

127:4 நான்காவதும் கடைசியுமான எடுத்துக் காட்டு குடும்பத்தைக் கட்டுவது பற்றிய செய்தி. பிள்ளைகள் தேவனுடைய ஈவுகளில் ஒன்று. **"இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன்."**

கர்த்தருடைய திருப்பெயரை மதித்து அவருக்குக் கீழ்ப்படிகிற வீட்டில் அவர்கள் வளர்க்கப்படுகிறார்கள் என்னும் அனுமானத்தில் பிள்ளைகளைப் பற்றிய செய்திகள் இங்கு சொல்லப்பட்டுள்ளன. அவர்கள் கர்த்தருடைய அறிவுரையிலும் ஒழுங்கிலும் வளர்க்கப்பட்டவர்கள்.

127:5 "வாலவயதின் குமாரர் பலவான் கையிலுள்ள அம்புகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்." பெற்றோர்கள் வயது முதிர்வடையும்போது, அவர்கள் தங்களுக்காகப் பலவான் போல போர் செய்யக்கூடிய பயபக்தியுள்ள பிள்ளைகளைச் சார்ந்திருக்க முடியும். மேலும் வேட்டைக்காரன் தன்னுடைய வில்லாலும் அம்பாலும் வேட்டையாடிப் பெற்றோரைப் பராமரிப்பது போல அவன் பராமரிப்பான்.

127:6: "அவற்றால் தன் அம்பறாத் தூணியை நிரப்பின மனிதன் பாக்கியவான்!" பெரிய குடும்பங்களுக்கு எதிரான தற்காலப் பரப்புரை பெரு வெள்ளம் போல ஒலித்துக்கொண்டிருக்கிற வேளையில், **அம்பறாத் தூணி** நிறையப் பிள்ளைகளைப் பெற்றிருக்கிற மனிதனுக்கு தேவன் ஆசிர்வாதத்தை உரைக்கிறார். மீண்டுமாக அவர்கள் விசுவாசிக்கிற பிள்ளைகள் என்று ஊகிக்கவேண்டும், மேலும் அவர்கள் விசுவாசக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இல்லையெனில் அவர்கள் ஆசிர்வாதமாக இருப்பதற்குப் பதிலாக மிகப்பெரிய தலைவலியாக இருப்பார்கள்.

"அவர்கள் நாணமடையாமல் ஒலிமுக வாசலில் சத்துருக்களோடே பேசுவார்கள்." ஒரு நகரம் முற்றுகை போடப்பட்டிருக்கிற தருணத்தில் எதிர்த்துப் போரிடுகிற இராணுவத்தினர் நகரவாசலில் கூடிப்பேசுவார்கள் என்பதைத் திருவாளர் F. B. மேயர் நினைவுபடுத்துகிறார். ஒரு மனிதனுடைய ஆண் மக்கள் அவனுக்கு எதிரான வழக்குகளில் அவனுக்கு ஆதரவு அளிப்பதால் அவன் இழப்பையோ காயங்களையோ அடைய வேண்டியதில்லை என்பதே இங்கு கூறப்படும் கருத்து. அவர்கள் நீதியை நிலைநிறுத்துவார்கள்.

சகரியாவின் மூலம் உரைக்கப்பட்ட கர்த்தருடைய சொல்லை மிகச்சிறப்பாக வெளிப்படுத்திக் காட்டும் சங்கீதமாக இது விளங்குகிறது, "பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் (சக. 4:6). பணம், மனிதரின் கூர்மதி ஆகியவற்றின் வலிமையை நாம் சார்ந்து வாழக்கூடிய ஆபத்து இருக்கிறது; ஆனால் அந்த வழியில் கர்த்தருடைய சித்தம் நிறைவேறுவதில்லை. அவருடைய ஆவியானவர் மூலமாகவே நாம் நித்தியத்திற்கென்று கட்டக்கூடியவர்களாக இருக்கிறோம். நாம் நம்முடைய செல்வ வளத்தினாலே செய்வது தேவனுக்காக செய்வது அன்று, மாறாக அவருடைய வல்லமையின் ஆற்றலினாலே நம்மைக் கொண்டு அவர் செய்கிற செயலே தகும். நாம் உண்டுபண்ணுவதெல்லாம் மரமும் புல்லும் வைக்கோலுமே ஆகும். பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கற்கள் ஆகியவற்றை உண்டுபண்ணுவதற்கு அவர் நம்மைப் பயன்படுத்த முடியும். நாம் நம்முடைய சொந்தச் சக்தியால் செயல்படுவோமெனில், நாம் நம்முடைய சக்கரங்களைச் சுழற்றுகிறவர்களாக இருப்போம். எல்லாவற்றிலும் தேவனை நாம் அழைத்து வருவோமென்றால், நம்முடைய வாழ்க்கை உண்மையாகவே திறமை மிக்கதாக விளங்கும். உலகீய ஆயுதங்கள் உலகீய விளைவுகளை உண்டாக்கும். ஆவிக்குரிய ஆயுதங்கள் ஆவிக்குரிய விளைவுகளை உண்டாக்கும்.

சங்கீதம் 128: கர்த்தருடைய ஆசிர்வாதம்

128:1 வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் கர்த்தரை முன்னிறுத்தியும், தேவனுடைய

வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து தனது நடைமுறை நடத்தையில் அதனை வெளிப்படுத்தி வாழ்கிற விசுவாசியே தனது வாழ்வில் முழுமையாக மன மகிழ்ச்சியோடு வாழ்பவன் ஆவான்.

மோசேயின் நியாயப்பிரமாணத்தின்கீழ் இந்த மனிதன் இயற்கையான ஆசிர்வாதங்களாலே ஆசிர்வதிக்கப்பட்டான்.

128:2 ***நீடிய வாழ்வு.*** அவன் அகால மரணம் அடையவில்லை, தான் உழைத்து ஈட்டிய பொருட் செல்வத்தை அனுபவிக்கும்படி உயிர் வாழ்ந் தான்.

மகிழ்ச்சி. முரண்பாடு மற்றும் சச்சரவு ஆகிய வற்றிலிருந்து விடுதலையை அவன் அனுபவித் தான். தேவனுடைய முகம் அவன்மேல் பிர காசித்த நிலையில் போதுமென்ற மனநிலை யோடு மகிழ்ந்திருந்தான்.

செல்வம். எல்லாம் அவனுக்கு நன்மையா யிருக்கும். இயற்கைச் சீற்றம், நோய்நொடி, வறட்சி, கொள்ளைநோய், தோல்வி ஆகியவற்றி லிருந்து அவன் பாதுகாக்கப்பட்டான்.

128:3 ***உற்பத்தித் திறன்.*** கனிமிகுந்த திராட் சைச்செடியைப் போல அவனுடைய **மனைவி** பல **பிள்ளைகளைப்** பெற்றாள். அவர்கள் இளம் ஒலிவ மரக் கன்றுகளைப் போல அவனுடைய பந்தியைச் சுற்றிலும் கூட்டமாக இருந்தார்கள் - அவர்கள் ஊக்கமும் ஆற்றலும் உடல்திறமும் மிக்கவர்களாக இருந்தார்கள்.

128:4 கிருபையின் காலக்கட்டத்தில், விசுவாசி ஏற்கனவே கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய எல்லா ஆசிர்வாதங்களைப் பெற்றி ருக்கிறான் (எபே. 1:3). ஆனால் திருவாளர் வில்லி யம்ஸ் கூறுவதுபோல, "இந்தச் சங்கீதத்தில் கூறப்பட்டுள்ள பொருட்செல்வ ஆசிர்வாதங் களை, விசுவாசமானது ஆவிக்குரிய ஆசிர்வாதங் களாக மாற்றி, அவற்றை உண்மையானதாகவும் தற்காலத்துக்குரியதாகவும் விளங்கச் செய்யும். "இவ்வுலகில் நீடித்து வாழ்வதைக் காட்டிலும், கர்த்தராகிய இயேசு நம்மை வலுப்பெறச் செய்த வாழ்க்கையே சிறந்தது. ஆத்துமா விடுதலை பெறுவதால் உண்டாகிற மகிழ்ச்சியோடு வேறு எதன் காரணமாக உண்டாகிற மகிழ்ச்சியையும் ஒப்பிட முடியாது. ஆத்தும வளமே சிறந்த செல் வம். மேலும் ஆவிக்குரிய வகையில் பெறுகிற மக்கட்பேறே, சரீரப்பிரகாரமான இனப்பெருக்கத் திலும் மேலான மகிழ்ச்சியைத் தரும்.

128:5,6 இச்சங்கீதத்தின் கடைசி இரண்டு வச னங்களையும் வாக்குறுதியாகவோ மன்றாட் டாகவோ எடுத்துக்கொள்ளலாம். இரண்டாவது கருத்தின்படி, கர்த்தர் தம்மை விசுவாசிக்கும் மக்களைத் தமது குடியிருப்பாகிய **சீயோன்** புனி தத்தலத்திலிருந்து அல்லது **எருசலேமிலுள்ள** தமது சிங்காசனத்திலிருந்து ஆசிர்வதிக்க வேண்டுமென்று அவர்கள் விண்ணப்பிக்கிறார் கள். தேவபக்தியுள்ளவர்கள் தங்கள் வாழ்நாட் காலம் முழுவதும் எருசலேமின் நன்மையைக் காண வேண்டுமென்று விண்ணப்பிக்கிறார்கள். இரண்டாவது தலைமுறையினரைக் காணக் கூடிய நீடித்த வாழ்வு வேண்டுமென்றும் அவர்கள் கேட்கிறார்கள். **இஸ்ரவேலின் சமாதானத்துக் காக** அவர்கள் மன்றாடுகிறார்கள்.

இஸ்ரவேலின் அரசர் திரும்ப வந்து நீதியோடு அரசாட்சி புரிகையில் தனிமனிதர்களும் இஸ்ரவேல் தேசமும் நன்மையால் நிறைந்திருக்கும் என்று இச்சங்கீதம் மகிழ்ச்சியோடு எதிர்நோக்குகிறது.

சங்கீதம் 129: யூதருக்கு எதிரானவற்றின் அறுவடை

கடந்த காலத்தில் இஸ்ரவேல் அதனுடைய பல எதிரிகளாலே எவ்வாறு நடத்தப்பட்டது என்ப தைத் திரும்பக்கூறி இந்த ஆரோகண சங்கீதம் பின்னர் அந்தக் கொடுமைக்காரர்களுக்கு எதிர் காலம் தோல்வியுற்றதாக உறுதிசெய்யப்பட வேண்டும் என்று வேண்டுகிறது.

129:1,2 இஸ்ரவேல் ஒரு தேசமாக இயங்கத் தொடங்கிய காலத்திலிருந்து அது மிகவும் கடுமையாக **நெருக்கப்பட்டது.** எடுத்துக்காட் டாக, அவர்கள் எகிப்தில் ஒடுக்கப்பட்ட செயல், அந்தத் தேசம் **சிறுவயதாக** இருந்த காலத்தில் ஏற்பட்ட மறக்க முடியாத அடிமைத்தனமும் பாடு களும் நிறைந்த அத்தியாயமாகும். ஆயினும் அந்த எதிரியால் யூதர்கள் இல்லாமற் போகும்படி அவர்களை அழிக்க முடியவில்லை. சிறையிருப் பிலிருந்து தேவ மக்கள் ஒவ்வொரு முறையும் விடுவிக்கப்பட்டார்கள். அவர்கள் புதுப்பிக்கப் பட்ட நிகழ்வு வரலாற்றில் நடைபெற்ற மிகப்பெரிய அதிசயங்களில் ஒன்று.

129:3 அவர்கள் அனுபவித்த பாடுகள் ஆழ மானவை, நீண்ட காலத்தவை. ஓர் உழவன் ஏரைக் கொண்டு உழுவதுபோலப் புறவின ஆளோட்டி கள் அவர்கள் மேல் உழுதார்கள். அவர்களு டைய **முதுகில்** ஏற்பட்ட **படைசால்கள்,** சாட்டை யால் ஏற்பட்ட வரித்தழும்புகளே.

129:4 ஆனால் **நீதியுள்ள** கர்த்தரோ குறித்த தருணத்தில் குறுக்கிட்டு, தமது மக்களை அந்த இரக்கமற்ற கொடுமைக்காரர்கள் அடிமைகளாகக் கட்டி வைத்திருந்த **கயிறுகளை** அல்லது சங்கிலிகளை அறுத்தார்.

129:5-7 யூதர்களுடைய எதிரிகள் அவமானமடைவதும் படுதோல்வி அடைவதுமே, அவர்களுடைய நிலையாக எப்போதும் இருக்க வேண்டும். ஆசிர்வாதமான அறுவடையை அவர்கள் ஒருக்காலும் அனுபவிக்கக் கூடாது. மத்திய கிழக்கு நாடுகளில் மேற்கூரையின் மேலே முளைக்கும் ஒரு சில கரிக்கட்டைகளை அவர்கள் அறுவடை செய்யட்டும். ஏனென்றால் அவற்றிற்கு ஆழமான மண் இல்லாததால், அந்த ஒரு சில புல் கொத்துகள் நன்கு வேர்விட முடியாமல் சூரியனின் கடும் வெயிலில் கருகிப்போயிருக்கும். உண்மையில் புல் வளர்ந்து பெருகுவதற்கு முன்னரே உலர்ந்து போம். அறுக்கிறவன் அறுப்பதற்குக் கைப்பிடி நிறைய புல் கிடைப்பதில்லை, அவ்வாறிருக்க அவன் தோள்களில் சுமக்கும் அளவு அரிகள் எங்கே கிடைக்கும்.

129:8 அறுக்கிறவர்களைப் பார்த்து வழிப்போக்கர் "கர்த்தருடைய ஆசிர்வாதம் உங்களுக்கு உண்டாவதாக" என்று கூறவோ, அறுக்கிறவர்கள் "கர்த்தரின் நாமத்தினால் உங்களை ஆசிர்வதிக்கிறோம்" என்று பதிலுரைக்கவோ முடியாதபடி மேற்கூரையில் புல் அறுக்கிற காட்சி மகிழ்ச்சியற்றதாகவே காணப்படும். (ரூத் 2:4 - ஐக் காண்க). ஆகவே பல நூற்றாண்டுக் காலமாக இஸ்ரவேலரைக் கொடுமைப்படுத்தி உழுத பகைவர்கள் மகிழ்ச்சியுள்ள எதிர்காலத்தைக் காணாதிருப்பார்களாக. மாறாக, அவர்கள் விதைத்ததையே அறுவடை செய்யட்டும்.

சங்கீதம் 130: ஆழங்களிலிருந்து

தீவிரமான உள்ளார்ந்த தேவையின் காரணமாக எழுகிற மன்றாட்டே சிறந்த மன்றாட்டு என்று ஒருவர் கூறினார். வாழ்வின் இன்பமான மற்றும் செல்வச் செழிப்பு மிகுந்த நாட்களில் முதலாவது அர்த்தமுள்ள மன்றாட்டு இல்லாமற் போகிறது. ஆனால் வாழ்க்கையின் புயலால் நாம் அங்குமிங்கும் அலைக்கழிக்கப்படுகிறபோது, ஊக்கமும் விடாப்பிடியும் நிறைந்த ஜெபத்தால் கிருபாசனத்தை உண்மையான முறையில் தொடுவதற்கு நாம் அறிந்திருக்கிறோம்.

130:1,2 மனிதன் தன் சரீரத்தில் துயரம், பாடுகள் ஆகியவற்றின் ஆழங்களைச் சகிக்கக் கூடியவனாக இருப்பதைக் கண்டு நான் அவ்வப்போது வியப்படைவதுண்டு. பாடலாசிரியன் வாழ்வின் அப்படிப்பட்ட இருண்ட ஆழத்தில் இருந்த ஒரு தருணமே அது. மேலே நோக்குவதைத் தவிர வேறு எதுவும் செய்ய முடியாது. ஆகவே ஆழத்திலிருந்து விண்ணக அரியணையை நோக்கி அவனுடைய அவசர அழைப்பு இறக்கை கட்டிப் பறக்கிறது.

அவனுடைய நலிந்த, தனித்த சத்தத்தை உடனடியாகக் கேட்க வேண்டும் என்று அவன் கர்த்தரை நோக்கி அவருடைய செவிமடுத்தலுக்காக மன்றாடுகிறான். அவனுடைய வேண்டுதல் கேட்கப்பட்டது. எப்போதும் கேட்கப்பட்டு விடை தரப்படும்!

பரிந்து கேட்கிற மனதில், அவனுடைய துக்கம் ஏதோ ஒரு பாவத்துடன் தொடர்புடையது போலத் தோன்றுகிறது. இது உண்மையாகவோ உண்மையற்றதாகவோ இருக்கலாம். அது எதுவாக இருந்தாலும், நம்முடைய கடுந்துயரங்களுக்குக் காரணமாக இருக்கக்கூடிய அறிக்கை பண்ணப்படாத பாவம் இருக்குமானால் அதை அகற்றுவது எப்போதும் நல்லது.

130:3,4 கர்த்தர் அக்கிரமங்களை கவனித்திருந்தால், அதாவது நாம் செய்த ஒவ்வொரு பாவத்தையும் குறித்துவைத்து ஒவ்வொருவரும் அந்த வரிசையின் பிரகாரமாக அதற்கான பரிகாரத்தைச் செலுத்த வேண்டுமென்றால், அது எந்தவொரு பயனையும் ஏற்படுத்த முடியாத நம்பிக்கையற்ற நிலையை ஏற்படுத்திவிடும். ஆனால் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கான ஒரு வழி இருப்பதற்காக நாம் நித்திய காலமாக நன்றியோடிருக்க வேண்டும். குற்றமுள்ள பாவிக்கு **மன்னிப்பு உண்டு,** பாவம் செய்யும் பரிசுத்தவானுக்கும் **மன்னிப்பு உண்டு.**

முதலாவது சட்டப்படியான மன்னிப்பு, அதாவது நீதி அரசராகிய தேவனிடத்திலிருந்து வருகிற மன்னிப்பு. இது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேல் வைக்கும் விசுவாசத்தால் பெறக்கூடியது. இது எல்லாப் பாவத்திற்குமானது - கடந்தகால, நிகழ்கால மற்றும் எதிர்கால எல்லாப் பாவத்தையும் உள்ளடக்கியது. கல்வாரியில் கிறிஸ்து நிறைவேற்றி முடித்த செயலினால் உண்டானது; அவர் தமது மரணத்தின் மூலமாக நம்முடைய பாவங்கள் அனைத்திற்குமான தண்டனையைச் செலுத்தித் தீர்த்தார். நம்முடைய பதிலாளாகிய இரட்சகர் தேவனுடைய நீதியான அனைத்துக் கோரிக்கைகளையும் நிறைவேற்றியிருப்பதால் அவரால் நம்மை இலவசமாக மன்னிக்க முடியும்.

இரண்டாவது பெற்றோர் காட்டும் உருக்க மான மன்னிப்பு - நம்முடைய திருத்தந்தையாகிய தேவன் அருளுகிற மன்னிப்பு. நம்முடைய பாவங் களை அவரிடம் அறிக்கை செய்வதால் இவ்வகை மன்னிப்பைப் பெறுகிறோம். தேவனோடும் அவரு டைய குடும்பத்தாரோடும் நமது ஐக்கியம் முன்னி ருந்த நிலைக்குக் கொண்டுவரப்படுதல் இதன் பயனாகும். இதுவும் கூட இயேசு சிலுவையில் சிந்தின இரத்தத்தாலே வாங்கப்பட்டது.

அவருடைய மன்னிப்பால் ஏற்படக்கூடிய ஒரு விளைவு யாதெனில் அவருக்குப் **பயப்படுதலா கும்**. எனது பாவங்களை மன்னிப்பதற்கு அவர் என்ன விலை கொடுத்தார் என்பதை நான் எண் ணிப் பார்க்கிறபோது, அவருடைய மன்னிப்பு முழுமையானது, இலவசமானது, நித்தியமானது என்பதை உணருகிறேன். என்றென்றும் அவ ருக்கு மரியாதை செலுத்தவும், அவரிடத்தில் நம் பிக்கை வைக்கவும், அன்புகூரவும், அவரை ஆரா திக்கவும் அது என்னை ஏவுகிறது.

130:5,6 பாடலாசிரியன் நேரடியாக மன்னிப்புக் கேட்கவில்லையென்றாலும், 3,4 ஆகிய வசனங் களில் அது குறிப்பாய்க் கூறப்பட்டிருப்பது நிச்ச யம். ஆனால் 5 -ஆவது வசனத்தில் **"கர்த்தருக் குக் காத்திருக்கிறேன்"** என்று அவன் கூறுகிற போது, அவன் மன்னிப்புக்காகக் காத்திருக்கிறான் என்பது பொருளன்று. அவன் அறிக்கை செய்த உடனேயே அது அவனுக்கு உறுதிசெய்யப்பட்டு விட்டது. மாறாக, ஆழங்களிலிருந்து தன்னைக் கர்த்தர் மீட்க வேண்டுமென்று அவன் **காத்திருக் கிறான்**. சில வேளைகளில் கர்த்தர் உடனடியாக ஜெபத்திற்கு விடை தருகிறார். சில வேளைகளில் நாம் காத்திருக்கும்படி அவர் கற்பிக்கிறார்.

இதயம் தொய்ந்த மக்களின் வேண்டுதல்
இறைவனின் விடையைச் சடியில் பெற்றிடும்
அண்ணலின் பிள்ளைகள் கேட்கும் நன்மைகள்
கேட்டது போலவே தந்திடும் நல்லவர்.
ஆயினும்,
அடிக்கடி இறைவன் அமைதியைக் காத்துப்
பொறுமை யோடிருக்கக் கற்றிடச் செய்கிறார்.
அன்பெனும் பெயரைத் தாங்கிய இறைவன்
உரியநல் நேரத்தில் சிறந்தது தருவார்.
விண்மீன் விழலாம் மலைகளும் மறையலாம்
கர்த்தரே சத்தியம் அவர்வழி உத்தமம்
வாக்குகள் நிச்சயம் தேடுவோர் பெறுவரே!

ஆகவே, **கர்த்தருக்குக் காத்திருக்கவும் அவரு டைய வார்த்தையை நம்பியிருக்கவும்** அவன் கற்கிறான். அதாவது, அவர் கேட்டு விடைதருவ தாகச் சொன்ன வாக்குறுதியில் அவன் நம்பிக்கை கொண்டிருக்கிறான். காவலாளிகள் பொழுதுவிடி வதற்காகக் காத்திருப்பதைக் காட்டிலும் அவன் தானிருக்கும் இருளுக்குள் கர்த்தர் வெளிச்சத் தைக் கொண்டுவருவார் என எதிர்பார்க்கிறான்.

ஆயினும் 5,6 - ஆகிய வசனங்கள் இதனினும் பரந்த பொருளைக் கொண்டுள்ளன, அதை நாம் கவனிக்காமல் விட்டுவிடக்கூடாது. கிறிஸ்து தமது திருச்சபையை விண்ணகத்திற்கு அழைத்துச் செல்லும்படி வரவிருப்பதை மிகுந்த வாஞ்சை யோடு விசுவாசி எதிர்பார்த்திருப்பதை இவ்வச னங்கள் குறிப்பிடுகின்றன. இந்த நல்நம்பிக்கை ஏமாற்றம் அடையாது.

130:7,8 பாடலாசிரியன் தான் இக்கட்டிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்று ஏறெடுத்த விண் ணப்பத்திற்கு விடை கிடைத்தவுடன் தனது சாட்சி யைக் கூறுவதாகவே கடைசி இரண்டு வசனங் களின் கருத்து விளங்குகிறது எனலாம். தேவன் தனக்கு உண்மையுள்ளவராக விளங்கினார் என்பதை மெய்ப்பித்துக்காட்டியபின், அந்த அனுப வத்தை மற்றவர்களும் பெறவேண்டும் என்று அவன் விரும்புகிறான். எப்பொழுதும் இவ்வாறா கவே நடைபெறுகிறது; ஒரு மனிதன் உண்மை யாக ஒன்றை விசுவாசித்திருந்தால், மற்றவர்களி டம் அதைக் கூற வேண்டும் என்று ஆவல் மிக்க வனாயிருக்கிறான்.

இவ்வாறாக **இஸ்ரவேல் கர்த்தரிடத்தில் நம் பிக்கையாயிருக்கும்படி** உற்சாகப்படுத்தப்படு கிறது. மூன்று காரணங்கள் சொல்லப்பட்டுள்ளன. முதலாவது, அவருடைய கிருபை என்றும் மாறா தது. இரண்டாவது, அவரது **மீட்பு திரளான** வகை யில் அளிக்கப்படுகிறது. இறுதியாக, அவர் **இஸ்ரவேலை அதன் சகல அக்கிரமங்களினின் றும் மீட்டுக்கொள்ள** விருப்பத்துடன் இருக் கிறார்.

இருளின் ஆழத்தில் இச்சங்கீதம் தொடங் கியது. தேவனுக்கு எந்தவொரு பிரச்சினையும் மலைபோலக் கரடுமுரடானதாகவோ, தடுமாற் றம் உண்டாக்கத்தக்க சிக்கல் நிறைந்ததாகவோ இருப்பதில்லை; அப்படிப்பட்ட தேவனிடம் நம் பிக்கை வைக்கும்படி விடுக்கப்பட்ட உயிர்த்துடிப் பான அழைப்போடு முடிவடைகிது.

சங்கீதம் 131:
அறிவுக்கூர்மையுடைய தாழ்மை

விளக்கம் அளிக்க முடியாதபடி சில பிரச்சினைகள் வாழ்க்கையில் ஏற்படுகின்றன. ஆழ்ந்து அறிவதற்கு இயலாதபடி மர்மங்கள் ஆழமானவை. விநோதமான சூழ்நிலைகள் நுண்ணறிவுமிக்க புத்திசாலிகளுக்கும் புதிராயிருக்கின்றன.

எடுத்துக்காட்டாக, மனிதருக்குரிய பாடுகள் என்னும் பிரச்சினையைக் குறித்த கடைசிச் சொல்லை எவரால் சொல்ல முடியும்?

விடைகொடுக்கப்படாத மன்றாட்டுகள் பற்றி எழுகிற கேள்விகளுக்கு யாரால் பதில் கூறமுடியும்?

தேவனுடைய இறையாண்மைத் தெரிந்தெடுப்பையும் மனிதனுடைய தன்னிச்சையான விருப்பத் தேர்வையும் யாரால் இணக்குவிக்க முடியும்?

131:1 தனக்கு எல்லா விடைகளும் தெரியும் என்று தாவீது உரிமை கொண்டாடவில்லை. எல்லாவற்றையும் அறிந்தவன் என்று தன்னைக் குறித்துச் சொல்லும்படியான சகிக்க முடியாத அளவிற்குத் தன் **இருதயத்தை** அவன் உயர்த்தவில்லை. புத்திசாலித்தனம் நிறைந்தவன் என்று தற்பெருமைகொண்ட மனிதனைப் போல அவன் தன் **கண்களை** மிக உயரமாக உயர்த்தவுமில்லை. அவன் தனது குறையை அறிந்திருந்தான்; "எனக்குத் தெரியாது" என்று சொல்வதற்கு அவன் வெட்கப்படவில்லை. தன்னால் எதை அறிந்து கொள்ளக் கூடுமோ அதை அறிந்து, மறை பொருள் யாவற்றையும் தேவனிடம் விட்டுவிட்டான். **பெரிய காரியங்களையும் மிஞ்சிய செயல்களையும்** குறித்துச் சிந்தித்து அவன் தனது நேரத்தை ஏன் வீணடிக்கவேண்டும்? தனக்குப் புரியாதவற்றைப் புரிந்துகொள்வதற்கான அறிவைத் தருபவர் தேவனே ஆவார் என்று அவன் அவருக்கே புகழைச் செலுத்துகிறான்.

131:2 ஞானம், அன்பு, தேவ வல்லமை ஆகிய வற்றில் நம்பிக்கையாயிருக்கும் மனப்பான்மை அவனுடைய ஆத்துமாவுக்கு சமாதானத்தையும் அமைதியையும் கொண்டுவந்தது. தாயின் பால் குடித்து திருப்தியடைந்த குழந்தையானது இப் பொழுது **பால் மறந்திருப்பது போல** அவன் இருந்தான். தொடக்கத்தில் குழந்தை வீறிட்டு அலருகிறது, அமைதியாக இருப்பதில்லை, பொறுமையில்லை. ஆனால் பின்னர் பால் கொடுக்கும் நேரம் வந்துவிட்டது, குழந்தை சடிதியில் அமைதியாகிறது, தன் தாயின் மடியில் அமைதியாயிருக்கிறது. இவ்வாறாகவே நாமும் நமக்கு அப்பாற்பட்ட பெரிய காரியங்களை அறிய முயற்சி செய்து எவ்வித நம்பிக்கையுமில்லாமல் தாறுமாறாகச் செயல்புரிகிறோம். ஆனால் விடை கிடைக்காத கேள்விகளை தேவனிடத்தில் விட்டு விட்ட பிறகு நம்முடைய பதற்றத்திலிருந்து விடு படுகிறோம்.

131:3 கர்த்தரிடத்தில் இவ்விதமான நம்பிக்கை கொண்ட மனப்பான்மையோடு இஸ்ரவேலர் எல் லோரும் இருக்கும்படி பாடலாசிரியன் அறிவுரை கூறுகிறான். அதுபோலவே திருவாளர் A. W. டோசர் அறிவுறுத்தி எழுதினார்: "வியப்படைவது நம்முடைய நற்பேறு என்பதை ஒருபோதும் மறக்காமல், ஒப்புயர்வற்ற மறைபொருளின் முன்னிலையில் மன மகிழ்வுடன் நின்று 'கர்த்தராகிய இறைவனே, நீர் அறிவீர்' என்று நாம் தாழ்குரலில் கூறுவோமாக."

சங்கீதம் 132: மன்றாட்டும் வாக்குறுதியும்

இச்சங்கீதத்தின் ஆசிரியர் யார், இது எழுதப் பட்ட காலம் எது என்பது பற்றி பெருமளவு மாற்றுக் கருத்துகள் உள்ளன. எருசலேமில் புதிய ஆலயம் கட்டப்பட்டபோது, உடன்படிக்கைப் பெட்டியை சாலொமோன் அதற்குரிய இடத்திற்கு வரவழைத் தான்; அத்தருணத்தில் சாலொமோனே இச்சங் கீதத்தை எழுதினான் என்னும் கருத்து பொருத்த மான கருத்துகளில் ஒன்று. அது சரியெனில், முதல் பத்து வசனங்கள், கர்த்தர்தாமே செக்கினா மகிமையின் மேகத்திற்கு இறங்கி வந்து உடன் படிக்கைப் பெட்டிக்கு மேலே குடியிருக்க வேண் டும் என்று சாலொமோன் ஏறெடுத்த விண்ணப் பமே ஆகும். 11,12 - ஆகிய வசனங்கள் தேவன் தாவீதுடன் செய்த உடன்படிக்கையை மீண்டும் உறுதிப்படுத்துபவை. கடைசி ஆறு வசனங்கள் சாலொமோனின் குறிப்பிட்ட வேண்டுதல்களுக்கு தேவன் அளித்த தகுந்த வாக்குறுதிகளாகும்.

132: 1-5 தாவீது சகித்த எல்லா **உபத்திரவங் களையும் கர்த்தர் நினைத்தருள** வேண்டும் என்று ஏறெடுக்கப்பட்ட தொடக்க விண்ணப்பம், அவனுடைய வாழ்நாட்கள் முழுவதும் அவனுடைய அடிகளை விடாப்பிடியாகப் பற்றிக்கொண்ட பொதுவான கடுந்துன்பங்களைக் குறிப்பதில்லை. மாறாக தேவனுடைய குடியிருப்பாக பூமியில் ஆலயத்தை எழுப்ப வேண்டும் என்பதற்காக அவனுடைய மனதிலும் சரீரத்திலும் அனுபவித்த வேதனையளித்த நிகழ்வுகளையே குறிக்கின்றன. இவ்வுண்மை அடுத்துவரும் மூன்று வசனங்களிலும் விளக்கிக் கூறப்பட்டுள்ளது. திருமறையில்

வேறு எங்கும் பதிவு செய்யப்படாத ஒரு தருணத்தில், தாவீது யெகோவாவுடன் முக்கியமான ஒப்பந்தம் செய்துகொண்டான்; அதன்படி அவன் கர்த்தருக்கு ஒரு வீட்டை ஆயத்தம் பண்ணும் வரை, அதாவது யாக்கோபின் வல்லவர் குடியிருக்கத்தக்க ஓரிடத்தை ஆயத்தம் பண்ணும் வரை தன்னுடைய சொந்த வீட்டுக்குச் செல்வதில்லையென்றும், தன்னுடைய சொந்தப் படுக்கையில் படுப்பதில்லையென்றும், அல்லது உறங்கப் போவதில்லையென்றும் உறுதிபூண்டான். இந்த ஆணை சொல்லுக்குச் சொல் துல்லியமாகப் பொருள்கொள்ளப்பட வேண்டியது என்று எடுத்துக்கொள்ளக் கூடாது. தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டிக்கு ஒரு நிரந்தரமான இடத்தை அவன் நிறுவும்வரை மனநிறைவோடு ஓய்ந்திருக்க மாட்டான் என்பதையே தாவீது உருவக மொழியில் கூறினான். ஆலயத்தைக் கட்டுவதற்குத் தாவீது அனுமதிக்கப்படவில்லை, ஏனெனில் அவன் போரில் இடைவிடாமல் ஈடுபட்ட மனிதன். ஆனால் மிகமுக்கியமான பொருட்களை ஆயத்தம் செய்து, அவற்றை அவன் சாலொமோனிடம் ஒப்படைக்கக்கூடிய வாய்ப்பு அவனுக்குத் தரப்பட்டது, இவ்வாறாக அவனுடைய விருப்பத்திற் கிணங்க அவனுக்கு தேவன் பரிசளித்தார்.

132:6 கீரியாத்தில் உடன்படிக்கைப் பெட்டி இருந்ததை இந்த வசனங்கள் நினைவுபடுத்து பவையாக உள்ளன. மேலும் தாவீதின் மனிதர்கள் அதனை எருசலேமுக்குக் கொண்டுவர வேண்டும் என்று தெளிவாக வெளிப்படுத்திய முடிவையும் இவை நினைவுபடுத்துகின்றன. ஆறாவது வசனம் சற்றுக் கடினமானது, ஏனெனில் அது எப்பிராத்தாவை (பெத்லகேம்) உடன்படிக்கைப் பெட்டியோடு தொடர்புபடுத்துகிறது. எனினும் பெட்டகம் அங்கு இருந்ததற்கான குறிப்பை நாம் திருமறையில் எங்கும் காண்கிறதில்லை. இந்தச் சிக்கலுக்குத் தீர்வு காண்பதற்குப் பொதுவான முயற்சிகள் கீழ்க்கண்பவையே:

1. அரசனும் அவனுடைய மனிதர்களும் பெத்லகேமில் இருந்தபோதுதான் உடன்படிக்கையின் இருப்பிடத்தைப் பற்றி முதன்முதலாகக் கேள்விப்பட்டார்கள். ஆனால் இறுதியில் அதனைக் கீரியாத் யெயாரீமில் (வானத்தின் வெளிகள்) கண்டுபிடித்தார்கள்.
2. எப்பிராத்தா எப்பிராயீமைக் குறிக்கக்கூடும், பெட்டகத்தினுடைய இருப்பிடமாகிய சீலோவைக் குறிக்கிறது எனலாம்.
3. எப்பிராத்தா பெத்லகேமைக் குறிக்காமல் காலேப் எப்பிராத்தாவைக் (1 நாளா. 2:24) குறிக்கக் கூடும். இந்தக் கருத்தின்படி காலேப் எப்பிராத்தாவும் கீரியாத் யெயாரீமில் இருந்த ஜார் காடுகளைக் குறிக்கக்கூடும் (வானத்தின் வெளிகள்). இதனை "**வன** நகரம்" என்றும் பொருள்படுத்தலாம். இது சரி எனக்கொள்வோமெனில் 6 -ஆவது வசனத்திலுள்ள இரண்டு சொற்றொடர்களும் ஒன்றுக்கொன்று இணையானவை, இரண்டின் பொருளும் ஒன்றுதான்.

இதோ நாம் எப்பிராத்தாவிலே அதன் செய்தியைக் கேட்டு, வனத்தின் வெளிகளில் அதைக் கண்டோம்.

132:7 புனிதப் பெட்டகத்தை எடுத்துக்கொண்டு எருசலேமை நோக்கி அணிவகுப்புச் சென்றது. தேவனுடைய **வாசஸ்தலத்துக்குச்** சென்று **அவருடைய பாதபடியில் பணிந்து**கொள்ளப் போவதாக மக்கள் ஆர்ப்பரித்தார்கள். பெட்டகமே தேவனுடைய பாதபடியாகக் கருதப்பட்டது, ஏனெனில் அதன்மேலே மகிமையின் மேகம் பிரசன்னமாயிருந்தது.

132:8-10 அடுத்ததாக நாம் சாலொமோன் தேவாலயத்தை அர்ப்பணித்த போது ஏறெடுத்த மன்றாட்டைக் கேட்கிறோம் (வச. 8-10; ஒப்பிடுக. 2 நாளா. 6:41,42). தேவன்தாமே புனித ஆலயத்தில் வந்து குடியிருக்கும்படியும், அதன் மூலமாக உடன்படிக்கைப் பெட்டியின் அடையாளச் செய்தியை உண்மையானதாக மாற்றும்படியும் அவன் தேவனிடத்தில் விண்ணப்பிக்கிறான். மேலும் அவன் தேவபக்தி நிறைந்த ஆசாரியனின் தலைமுறையினர் வேண்டும் என்றும், **கெம்பீரித்து** ஆரவாரிக்கும் மக்கள் வேண்டும் என்றும், தொடர்ந்து தேவனுடைய தயவு அரசன்மேல் பொழிய வேண்டும் என்றும் விண்ணப்பிக்கிறான். "நீர் அபிஷேகம் பண்ணுவித்தவன்" என்னும் சொற்றொடர் சாலொமோனைக் குறிக்கிறது எனப் பொருள்கொள்ள வேண்டும். ஆயினும் முடிவாக அது மேசியாவையே குறிக்கும்.

132:11-13 முதலாவது கர்த்தர் தாம் தாவீதோடு செய்த ஆணையைச் சுருக்கமாகக் குறிப்பிட்டு, பின்னர் சாலொமோனின் ஜெபத்திற்கு விடை கொடுக்கத் தொடங்குகிறார். அந்த ஆணை தாவீதைப் பொறுத்தவரை நிபந்தனையற்றது; அவனுக்கு என்றென்றும் ஒரு சிங்காசனம் இருக்கும் என்றும், அவனுடைய வழியில் தோன்றும் ஒருவர் என்றென்றும் அதில் வீற்றிருப்பார் என்றும் வாக்

களிக்கப்பட்டது. ஆனால் அவனுடைய வழியில் தோன்றுவோருக்கு அது நிபந்தனைக்குட்பட்டது; அது அவர்களுடைய கீழ்ப்படிதலைச் சார்ந்திருந்தது. இவ்வாறாகவே, இயேசு தாவீதின் வழியில் தோன்றியவராக இருந்தபோதிலும், அவர் சரீரப் பிரகாரமாகச் சாலொமோனின் வழியில் தோன்றவில்லை, மாறாக தாவீதின் மற்றொரு மகனாகிய நாத்தான் வழியில் தோன்றினார் (லூக்கா 3:31).

132: 14-18 பிறகு சாலொமோனின் குறிப்பிட்ட விண்ணப்பங்களுக்கான குறிப்பிட்ட பதில்கள் கொடுக்கப்பட்டன. கீழ்க்கண்டவாறு ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலம் அதனை அறியலாம்:

கர்த்தாவே, உமது வல்லமை விளங்கும் பெட்டியுடன் நீர் உமது தாபர ஸ்தலத்திற்குள் எழுந்தருளும் (வச. 8)	**இது என்றென்றைக்கும் நான் தங்கும் இடம்; இதை நான் விரும்பினபடியால், இங்கே வாசம்பண்ணுவேன்** (வச. 10).
உம்முடைய ஆசாரியர்கள் நீதியைத் தரிப்பார்களாக (வச. 9 முற்பகுதி).	**அதன் ஆசாரியர்களுக்கு இரட்சிப்பை உடுத்துவேன்** (வச. 16 முற்பகுதி).
உம்முடைய பரிசுத்தவான்கள் கெம்பீரிப்பார்களாக (வச. 9 பிற்பகுதி).	**அதிலுள்ள பரிசுத்தவான்கள் மிகவும் கெம்பீரிப்பார்களாக** (வச. 16 பிற்பகுதி).
நீர் அபிஷேகம் பண்ணுவித்தவனின் முகத்தை உமது தாசனாகிய தாவீதினிமித்தம் புறக்கணியாதேயும் (வச. 10).	**அங்கே தாவீதுக்காக ஒரு கொம்பை முளைக்கப்பண்ணுவேன்; நான் அபிஷேகம் பண்ணுவித்தவனுக்காக ஒரு விளக்கை ஆயத்தம்பண்ணினேன்.. அவன் மீதிலோ அவன் கிரீடம் பூக்கும் (வச. 17,18 பிற்பகுதி)**

உண்மையில் சாலொமோன் கேட்ட எல்லாவற்றிலும் கர்த்தர் கூடுதலாகத் தருவதாகப் பதிலுரைத்தார். அங்கே தேவையானவற்றை மிகுதியாகத் தருவதாகவும் **ஏழைகளுக்கு அப்பத்தைத்** தருவதாகவும் வாக்குரைக்கப்பட்டது (வச. 15). ஆசாரியர்கள் வெறுமனே நீதியை மட்டுமின்றி இரட்சிப்பை உடுத்துவார்கள் என்று வாக்குறுதி தரப்பட்டது (வச. 16). பரிசுத்தவான்கள் மிகவும் கெம்பீரிப்பார்கள் என்ற வாக்குறுதியும் இருக்கிறது (வச. 16). பகைவர் வெட்கத்தால் உடுத்துவிக்கப்படுவார்கள் என்னும் வாக்குறுதியும் தரப்பட்டது.

எருசலேமில் தாவீதின் வழியிலே ஒரு வல்லமைமிக்க அரசரை தேவன் தோன்றச் செய்வார் என்பதே 17 -ஆவது வசனத்தின் பொருள். (லூக். 1:69 - ஐக் காணவும்). மேலும் அவர் **தாவீதுக்கு அபிஷேகம் பண்ணுவித்த ஒரு விளக்கை** அல்லது மகனை ஆயத்தம் பண்ணுவார் (1 இரா. 15:4 - ஐக் காணவும்). என்றென்றும் நிலைத்திருக்கும் அரசர் பரம்பரை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில் நிறைவேறியுள்ளது.

கிறிஸ்துவின் பகைவர் **வெட்கத்தால்** மூடப்படுவார்கள், ஆனால் அவருடைய தலை மகிமையாலும் கனத்தாலும் முடிசூட்டப்படும்.

அன்றவர் தலையினில் முள்முடி சூட்டினர்
இன்றவர் தலையினில் மகிமையைத் தரித்தாரே!
விண்ணக மகுடம் நெற்றியை அலங்கரிக்க
மண்ணில் ஆட்சியை நிறுவிட வந்திடுவார்!

சங்கீதம் 133: ஒருமித்திருப்பதன் புகழ்ச்சி

பெரிய விசயங்கள் சிறிய கட்டுகளில் வருகின்றன. இந்தச் சங்கீதம் சிறியது, ஆனால் இலக்கியம், ஆவிக்குரிய செய்தி ஆகியவற்றில் இது ஓர் இரத்தினக் கல். அளவின் குறைவை இதனுடைய தரம் நிறைவாக்குகிறது.

பாடலாசிரியன் முக்கியமான நான்கு குறிப்புகளைத் தருகிறான். முதலாவது, இறைவனின் மக்கள் ஒற்றுமையுடன் ஒருமித்து வாழ்வது நல்லதும் மகிழ்ச்சிக்குரியதும் ஆகும். இரண்டாவது அது நறுமணம் வீசக்கூடியது. மூன்றாவது, அது புதுக் கிளர்ச்சி ஊட்டவல்லது. கடைசியாக, அது தேவனுடைய ஆசிர்வாதத்தை நிச்சயமாகத் தரவல்லது.

133:1 சகோதரர்களுக்குள்ளான ஒற்றுமை காண்பதற்கு இனிமையானது. ஆயினும் ஒருமித்திருத்தல் என்பது எல்லாவற்றிலும் ஒத்த கருத்து கொண்டிருப்பது என்னும் பொருளைத் தருவதில்லை. அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்த கோட்பாடுகளில் அவர்கள் ஒருமித்த கருத்துகொண்டிருக்கிறார்கள். அத்தகைய முக்கியத்துவம் இல்லாத விசயங்களில் மாறுபட்ட கருத்துகளைக் கொண்டிருக்க அவர்கள் விடுதலை பெற்றிருக்கிறார்கள். எல்லாவற்றிலும் அன்பின் ஆவி இருக்க

வேண்டும். ஒரே மாதிரியாக இல்லாமலேயே ஒரு மித்து இருக்க முடியும்; நாம் வெவ்வேறு நபர் களாக இருந்தபோதிலும், ஒன்றுசேர்ந்து பணிபுரி யத் தடையேதும் இல்லை. மனித உடலின் அனைத்து உறுப்புகளும் வெவ்வேறாக உள்ளன, ஆனால் அவை யாவும் தலைக்குக் கீழ்ப்படிந்து வேலை செய்கின்றன, அங்கே மகிமைக்குரிய ஒற்றுமை விளங்குகிறது. ஒத்த கருத்து இல்லா மலேயே ஒருமித்து இருக்க முடியும். குறைந்த முக்கியத்துவம் வாய்ந்த விசயங்களில் எல் லோரும் ஒத்த கருத்தைக் கொண்டிருக்க வேண் டும் என்று தேவன் ஒருக்காலும் எதிர்பார்க்க வில்லை. அடிப்படைக் கோட்பாடுகளில் ஒத்த கருத்து இருந்தால் போதும். மற்ற எல்லாவற்றி லும் நாம் மாறுபட்ட கருத்தைக் கொண்டிருந்தா லும், ஒன்றைச் செய்கிறபோது வெறுப்பு ஏற்படா திருந்தால் அதைச் செய்யலாம். பொறாமை, வம்புப் பேச்சு, புறம்பேசுதல், குறை கூறுதல், அன்பில் லாமை ஆகியவையே ஒற்றுமையின் எதிரிகள்.

133:2 ஒருமித்திருத்தல் ஆசாரியனாகிய **ஆரோனை** அபிஷேகம் பண்ணுவதற்குப் பயன் படுத்தப்பட்ட நறுமண தைலத்தைப் போன்றது (யாத். 30:22-30). அது அவனுடைய **தலையின் மேல்** ஊற்றப்பட்டு, பின்னர் **தாடியில் வடிந்து**, அங்கிருந்து அவனுடைய ஆடையின் **தொங்கல் வரை இறங்கியது**. இன்பமூட்டும் நறுமணத்தை ஆசாரியன் மட்டுமின்றி சுற்றிலுமிருந்த ஒவ் வொருவரும் அனுபவித்தார்கள். பரிசுத்த அபி ஷேகதைலம், இறைமக்கள் ஒருமித்து மகிழ்ச்சி யாக வாழ்கிறபோது அவர்கள்மேல் இறங்கி வரு கிற சுகந்த மணமாகவும், அவர்களுடைய சாட்சி சுற்றிலுமுள்ள பகுதிகளில் பரவுகிற நறுமண மாகவும் விளங்கி பரிசுத்த ஆவியின் ஊழியத்தை உருவகப்படுத்துகிறது.

133:3 மேலும் ஒருமித்து வாழுதல் புது வலிமை யைக் கொண்டுவருகிறது. **"எர்மோன்மேலும், சீயோன் பர்வதங்கள் மேலும் இறங்கும் பனிக்கு ஒப்பாயிருக்கிறது."** தொலைவில் உள்ள மலை களுக்கு வருகிற புதுவலுவூட்டும் ஈரப்பதத்திற்கு ஆதாரமாயிருப்பது **எர்மோன்** மலைதான் என்று பாடலாசிரியன் காண்கிறான். மீண்டுமாக, பனி பரிசுத்த ஆவியானவரையே சுட்டிக்காட்டுகிறது. இவ்வுலகமெங்கிலும் ஒருமித்திருக்கும் சகோ தரர்களிடமிருந்து ஆவியானவர் புதுபலனை ஏந்தி வருகிறார். தேவனோடும் உடன் சகோதரரோடும் ஐக்கியம் கொண்டு நடக்கிற விசுவாசிகளின் கண்களுக்குப் புலப்படாத ஆற்றல் தொலை தூரம் கடந்து செல்லக்கூடியது, அதனுடைய அளவை ஒருவராலும் அளக்கமுடியாது.

கடைசிக் குறிப்பு, சகோதர சகோதரிகள் ஒரு மித்திருக்கிற இடத்தில் தேவன் ஆசிர்வாதத்தைக் கட்டளையிடுகிறார். பெந்தெகொஸ்தே நாள் நிகழ்வு அதற்கு ஓர் எடுத்துக்காட்டு, இயேசுவின் மாணாக்கர் இணக்கத்தோடும் சமாதானத்தோ டும் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் ஜெபத்தில் ஒருமித்து வாக்குரைக்கப்பட்ட பரிசுத்த ஆவிக் காகக் காத்திருந்தார்கள். சடிதியில் தேவ ஆவி யானவர் பரிபூரணமாக அவர்கள்மேல் வந்து இறங் கினார்; அவர்கள் நற்செய்தியின் நறுமணத்தோடும் புதுவலிமையோடும் எருசலேம், யூதேயா, சமாரியா மற்றும்உலகத்தின்கடைசிவரையிலும்சென்றார்கள்.

ஆசிர்வாதமானது **என்றென்றைக்கும்** உள்ள **ஜீவன்** என்று விளக்கிக் கூறப்பட்டுள்ளது. இதனை இரண்டு வழிகளில் புரிந்துகொள்ளலாம். இறைமக்களிடையே ஒற்றுமை விளங்கும்போது அவர்கள் மெய்யான பொருளில் வாழ்க்கையை இன்பமாக அனுபவிப்பார்கள். அது மட்டுமின்றி, பிறருக்கு அந்த ஜீவன் பாய்ந்துசெல்லும்படி அவர் கள் வாய்க்கால்களாகச் செயல்படுவார்கள்.

சங்கீதம் 134: வாருங்கள், கர்த்தரைத் துதியுங்கள்

134:1,2 எருசலேம் ஆலயத்தில் வழக்கமான அனுதின நடவடிக்கைகள் யாவும் முடிவடைந்த பிறகு, மக்கள் தத்தம் இல்லங்களுக்குத் திரும் பிச் சென்றார்கள். ஆனால் இரவு நேரத்தில் அங்கு ஆசாரியரும் லேவியரும் காவல்காத்து நின்று கொண்டிருந்தார்கள் (1 நாளா. 9:33). அவர்கள் தூபங்காட்டி, நன்றிசெலுத்தி, கர்த்த ரைத் துதித்தார்கள் (2 நாளா. 29:11; 31:2).

மக்கள் யாவரும் ஆலயத்திலிருந்து திரும்பிச் செல்லுகிறபோது, இந்தச் சங்கீதத்தின் முதல் இரண்டு வசனங்களையும் ஆசாரியரை நோக்கிப் பாடினார்கள். இந்த வரிகள், ஆலயத்தில் இரவு நேரப் பணிபுரியும் கர்த்தருடைய ஊழியக்காரரை நோக்கிப் பாடப்பட்டன என்பது உறுதி. அந்த மனி தர்கள் **கர்த்தரை ஸ்தோத்திரித்து**, ஜெபம் செய் கிற தோரணையில் தங்கள் **கைகளைப் பரிசுத்த ஸ்தலத்துக்கு நேராக** ஏறெடுக்க வேண்டும்.

134:3 ஆசாரியர் அதற்குப் பதில் கூறும் வகை யில் மக்களை ஆசிர்வதித்து, கர்த்தருடைய ஆசிர்வாதத்தை மக்கள் தனித்தனியாகப் பெறும் படி அவரிடம் பரிந்து கேட்டார்கள். ஆசிர்வாதத் தின் நான்கு கூறுகளைக் கவனியுங்கள்.

ஆசிர்வதிப்பவர்

- **கர்த்தர்**, யெகோவா,

உடன் படிக்கையைக் காக்கிற தேவன்.

அவருடைய மேன்மை

- **வானத்தையும் பூமியையும் உண்டாக்கினவர்.**

ஆசிர்வாதத்தைப் பெற்றவர்

- **கர்த்தர் உன்னை ஆசிர்வதிப்பாராக** (ஒருமை)

ஆசிர்வதிப்பவரின் இருப்பிடம்

- **சீயோன்,** பரிசுத்த ஸ்தலம்

சங்கீதம் 135: புகழ்ச்சிக்கான காரணம்

135:1,2 "கர்த்தரைத் துதியுங்கள்!" என்னும் பொதுவான அழைப்பின் தொனியாகவே முதல் இரண்டு வசனங்கள் தோன்றுகின்றன. ஆசாரியரையும் லேவியரையும் நோக்கிக் கூறப்பட்ட அறிவிப்பு என்பதில் ஏதொரு ஐயமில்லை. எனினும் இந்த அறிவிப்பு பெரும்பாலும் இஸ்ரவேலின் எல்லா மனிதர்களையும், கர்த்தருக்குப் பயந்த யாவரையும் நோக்கிக் கொடுக்கப்பட்டதாகவும் தோன்றுகிறது (வச. 19,20 - காணவும்).

135:3 அவருடைய திருப்பெயரைத் துதிப்பதற்கான பல காரணங்கள் குறிப்பிடப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். அவர் **நல்லவர்**. அவர் எவ்வளவு நல்லவர் என்பதைப் படைக்கப்பட்ட எந்த நாவும் இவ்வுலகிலும் நித்தியத்திலும் ஒருபோதும் சொல்ல இயலாது. நாம் செய்யக்கூடியதெல்லாம் அவ்வுண்மையை எடுத்துரைத்து வணங்குவதுதான்.

அவருடைய திருப்பெயர் **இன்பமானது** அல்லது இனிமையானது. பாவம் நிறைந்த இழிமக்களை இரட்சித்து நித்திய மகிமைக்கு ஏற்புடையவர்களாக்குவது வியத்தகு கிருபையே.

135:4 கர்த்தர் இஸ்ரவேலைத் தமது சொந்த உடைமையாகத் தெரிந்தெடுத்தார். வியப்புற்ற ஆத்துமா என்றைக்கும், "என்னை ஏன் தெரிந்தெடுத்தீர்?" என்று கேட்கும்படி தேவனுடைய இறையாண்மைத் தெரிந்தெடுப்பு செய்தியிருக்கிறது. இதுவே நம்மை ஆராதிப்பவர்களாக மாற்றியிருக்கிறது.

135:5 கர்த்தர் பெரியவர். அவர் படைப்பாளர், பராமரிப்பவர், மீட்பர் என்பதை நாம் சிந்தித்துப் பார்ப்போமானால், "நீர் எவ்வளவு **பெரியவர்**" என்னும் ஆழ்ந்த பாராட்டுதலோடு நாம் பாடுவோம்.

நம்முடைய ஆண்டவர் எல்லா தேவர்களுக்கும் மேலாக உயர்ந்தவர், அதாவது, அவர் எல்லா ஆட்சியாளர்களுக்கும், அரசர்களுக்கும், சிலைகளுக்கும் மேலானவர். "அவருடைய அங்கியிலும், அவருடைய தொடையிலும், 'அரசர்களுக்கு அரசர், ஆளுநர்களுக்கெல்லாம் ஆளுநர்' என்னும் பெயர் எழுதப்பட்டிருந்தது" (வெளி. 19:16 - இலகு தமிழ்).

135:6 அவர் இப்பிரபஞ்சத்தின் அரசர் (வச. 6). கற்பனை செய்து பார்க்கக் கூடிய எல்லாச் செயற்களத்திலும் அவர் **தமக்குச் சித்தமானபடி** செய்கிறார். திருவாளர் ஆர்தர் பிங்க் எழுதினாற்போல:

> தெய்வீக இறையாண்மை என்பதன் பொருள் செயலிலும், பெயரிலும் தேவன் தேவனாகவே இருக்கிறார், மேலும் அவர் பிரபஞ்சத்தின் அரியணையில் வீற்றிருந்து, ''தமது சொந்தச் சித்தத்தின் ஆலோசனையின்படி'' எல்லாவற்றிற்கும் கட்டளையிட்டு எல்லாவற்றையும் செய்கிறார் என்பதே.[95]

135:7 அவர் இயற்கையின் மீது முழு அதிகாரம் உடையவர். மேகங்கள், **மின்னல், காற்று** - இவை யாவும் அஞ்சத்தக்க நிலையில் இருந்தாலும் அவருடைய வல்ல கரத்தால் நடத்தப்படுகின்றன. திருவாளர் ஸ்டீ.பன் சார்னாக் கூறுகிறார்: "தேவனுடைய வல்லமை அவருக்கு ஒப்பாகவே இருக்கிறது: எல்லைக்குட்படாதது, நித்தியமானது, புரிந்துகொள்வதற்கு இயலாதது; இதனைப் படைக்கப்பட்ட ஏதொன்றின் மூலமாகக் கட்டுப்படுத்தவோ தடைசெய்யவோ, செயலிழக்கச் செய்யவோ முடியாது."

135:8,9 அவர் இஸ்ரவேலை **எகிப்திலிருந்து** விடுவித்தார். இஸ்ரவேலின் வரலாற்றில் மிகப் பெரிய வல்லமையின் காட்சிப்பொருளாக வெளிப்பட்ட நிகழ்வுகள், கொள்ளை நோய்களின் மூலமாகப் பார்வோன் வீழ்த்தப்பட்ட நிகழ்வும் (அவற்றின் உச்சக் கட்டமாகத் தலைப்பிள்ளை மரண மடைந்த நிகழ்வு), செங்கடல் இரண்டாகப் பிளவுபட்ட நிகழ்வுமேயாகும்.

135:10,11 இஸ்ரவேலின் பகைவரை அவர் தோற்கடித்தார். சீகோன் ஒக் என்பவர்கள்மேல் தேவன் தமது மக்களுக்குக் கிருபையாக வெற்றியைத் தந்தார். மேலும் கானான் நாட்டில் வாழ்ந்த புறச்சமய மக்கள்மேலும் அவர் அவர்களுக்கு வெற்றியைத் தந்தார்.

135:12 கானான் நாட்டை அவர் **இஸ்ரவேலுக்குக்** கொடுத்தார். எகிப்திலிருந்து தப்பி வந்த மக்களுக்குக் கானான் நாட்டைச் சுதந்தரமாகக் கொடுத்தார்.

135:13 அவர் நித்தியமானவர். அவருடைய **நாமம் என்றுமுள்ளது,** அவருடைய நாமம், அவர் யாராக இருக்கிறாரோ அதையெல்லாம் குறிக்கிறது என்பது திண்ணம்.

அவர் நித்திய புகழ்பெற்றவர். நித்திய கால மெல்லாம் அவர் பாசத்துடன் நினைவுகூரப்படு வார்.

135:14 அவர் நேர்மையும் இரக்கமும் உடைய வர். இவ்வுண்மையை நாம் சார்ந்துகொள்ளலாம். தம்முடைய மக்கள் நியாயமானவர்கள் என்பதை தேவன் மெய்ப்பித்து, **அவருடைய ஊழியக் காரர்மேல்** அவர் இரக்கம் பாராட்டுவார். முதன் முதலாக இந்தப் பாடலை உபாகமத்தில் (32:36) மோசே பாடினான், ஆனால் இந்தப் பாடல் ஒரு போதும் முடிவுறாது.

135:15-18 அவர் **விக்கிரகங்களுக்கு** மேலான வர். இந்தக் கள்ள தேவர்களுடைய விவரமே அவற்றின் பயனற்ற தன்மையை வெளிப்படுத்து கிறது. அவை வெள்ளியும் பொன்னுமாகும், ஆகவே அழிந்துபோகக் கூடியவை. அவை மனித ரால் உண்டாக்கப்பட்டவை, ஆகவே மனிதர் களைக் காட்டிலும் கீழானவை. அவை ஊமை யும், குருடும், செவிடுமாக இருப்பதோடு உயிரற் றும் இருக்கின்றன. **அவற்றை உண்டுபண்ணு கிறவர் அவற்றைப் போலவே இருக்கிறார்கள்,** இது வருத்தத்திற்குரிய உண்மை - ஆவிக்குரிய நிலையில் அவர்கள் ஊமையரும், குருடரும், செவிடரும், உயிரற்றவருமாக இருக்கிறார்கள்.

135:19,20 இவ்விதமாக தேவனுடைய மேன் மையைக் குறித்துச் சிந்தித்துப் பார்ப்பது, அவ ரைத் துதிக்கத்தக்கவாறு நம்மை நடத்துகிறது. அதாவது, அவர்மீது கனத்தையும், புகழ்ச்சியை யும், மரியாதையையும், ஆராதனையையும், நன்றிபாராட்டுதலையும் பொழியச் செய்கிறது. இஸ்ரவேல் வீட்டார் யாவரும் அவரைத் துதிக்க வேண்டும். ஆசாரிய ஊழியம் செய்கிற யாவரும் (ஆரோன் குடும்பத்தார்) அவரைத் துதிக்க வேண் டும். லேவியராகப் பணிபுரிபவர் யாவரும் அவ ரைத் துதிக்க வேண்டும். கர்த்தரை மதிக்கிறவர் கள் யாவரும் அவரைத் துதிக்க வேண்டும், எல்லா தரப்பட்ட மனிதர்களும் அவரைத் துதிக்க வேண்டும் என்பதே இவ்வாறு வேறுவகையாகக் கூறப்பட்டுள்ளது. மேசியா சீயோனுக்குத் திரும்பி வந்து, எருசலேமிலிருந்து ஆளுகை செய்யும் போது இஸ்ரவேல் இவ்வாறுதான்பாடும்.

135:21 எருசலேமில் வாசம்பண்ணுகிற கர்த்தருக்கு சீயோனிலிருந்து ஸ்தோத்திரம் உண்டாவதாக.

அல்லேலூயா!

இதையே நாம் இப்பொழுது சொல்லவும் செய்யவும் வேண்டும்.

சங்கீதம் 136: மிகப்பெரிதான புகழ்ச்சி!

இச்சங்கீதத்தைத் தனிச்சிறந்ததாக விளங்கச் செய்வது எதுவெனில், இதன் இருபத்தாறு வசனங் களின் இரண்டாவது பகுதிகளாகிய "அவர் கிருபை என்றுமுள்ளது" என்னும் ஒரேவிதமான எதிர்ப்பாடல் சொற்களே ஆகும். "ஓர் என்று முள்ளது போதாது என்றால், அங்கே ஒரே சங் கீதத்தில் இருபத்தாறு தடவை என்றுமுள்ளது என்னும் சொல் இடம்பெற்று இருக்கிறது" என்று திருவாளர் தாமஸ் குட்வின் எழுதி னார்.

பெரிதான புகழ்ச்சி என்று அறியப்படும் இப் பாடல், பேசாக் மற்றும் ரோஷ் ஹாசனா என்னும் பஸ்கா மற்றும் புத்தாண்டு யூத விழாக்களிலே வழக்கமாகப் பாடப்படும். மேலும் அவர்களுடைய வழக்கமான அனுதின ஆராதனையிலும் இப் பாடல் பாடப்பட்டது.

கருத்து மீண்டும் மீண்டும் சொல்லப்படுவது களைப்பை ஏற்படுத்துவதில்லை; கர்த்தருடைய மாறாத அன்பு எப்போதும் நமது முன்னிலையில் இருக்க வேண்டும், அந்தப் பொருள் பற்றிய சிந் தனை ஒருக்காலும் முடிவுறுவதில்லை என்று இது நம்மிடத்தில் கூறுகிறது. அவருடைய தயவு, விசு வாசம், கடமையில் உறுதி ஒருபோதும் குறைவு படா.

துதிப்பதற்கான அழைப்பு (136:1-3)

பாடலின் முன்னுரையில், **கர்த்தர்** யார் என்ப தற்காகவும் அவருடைய உள்ளார்ந்த நல்ல தன் மைக்காகவும் அவரைத் **துதிக்கும்படி** நாம் அழைக்கப்படுகிறோம். அவரே யெகோவா - உடன்படிக்கையைக் கைக்கொள்ளுகிற கர்த்தர். அவர் **தேவர்களுக்கெல்லாம் தேவன்** - இப்பிர பஞ்சத்தை ஆளுகிற வல்லமைமிக்க ஆளுநர் களுக்கெல்லாம் மேலானவர். அவர் **கர்த்தருக் கெல்லாம் கர்த்தர்** - தலைமை இடத்தை வகிக் கிற எல்லோருக்கும், தேவதூதர்களிடையே உள்ள தலைமையானாலும் மனிதர்களிடையே உள்ள தலைமையானாலும் அவர்களுக்கும் மேலாக சர்வ அதிகாரமும் உடையவர். அவர் பெரியவர் மட்டும் இல்லாமல் அவர் நல்லவராகவும் இருக் கிறார் - படைப்பாளர், மீட்பர், வழிகாட்டி, வீர முதல்வர், தம்முடைய மக்களைப் பராமரிப்பவர்.

படைப்பாளர் (136:4-9)

அவருடைய நற்குணம், இரக்கம் ஆகியவை அவருடைய **பெரிதான அதிசயப்** படைப்பில் முதலாவது காணப்படுகின்றன. அவருடைய **ஞானத்தால் வானத்தின்** பரந்த வெளியை அவர் உண்டாக்கினார். மிகப்பெரிய நிலப்பகுதியை ஏதோ நீரில் மிதக்கும் தீவுகளைப் போல அவர் உண்டாக்கினார். வெளிச்சத்தைத் தரக்கூடிய மாபெரும் விளக்குகளை அவர் வானத்தில் வைத்தார் - **சூரியன்** பகலில் வெளிச்சத்தைத் தருகிறது, சந்திரனும் நட்சத்திரங்களும் மனிதன் படுத்துறங்கும் வேளையில் குறைந்த வெளிச்சத்தைத் தரக் கூடியவை.

மீட்பர் (136:10-15)

மகாபெரிய படைப்பாளர் வல்லமை மிக்க மீட்பராகவும் இருக்கிறார். எகிப்திய கொடுங்கோலரிடமிருந்து தமது மக்களை விடுவிக்கும் பொருட்டு, அவர் எகிப்தியரின் ஆண்மக்களின் துளிரை அறுத்தார், அதன் பிறகு அவர் தமது **பலத்த கையால்** தம்மக்களை அங்கிருந்து வெளிநடத்தி விடுதலை பெறச்செய்தார். அவர் செங்கடலை இரண்டாகப் பிரித்து இரு பக்கங்களுக்கும் நடுவே உலர்ந்த தரையை வழியாக அமைத்துக் கொடுத்தார். இஸ்ரவேல் அதன் வழியாகப் பாதுகாப்பாகச் செல்கின்றது, பார்வோனின் படைவீரர்களோ தண்ணீர் தங்களிடத்திற்குத் திரும்பியபோது மூழ்கிப் போனார்கள். யெகோவா தம்மக்கள் மீது கொண்டிருந்த ஒருக்காலும் மறக்க முடியாத மாறாத அன்பின் காட்சிப்பொருளாக அது விளங்கியது.

வழிகாட்டி (136:16)

நாற்பது ஆண்டுக்காலமாக, தேவன் இஸ்ரவேலரைத் தரிசாகவும், ஊளையிடுதலின் தொனி கேட்கும் பாலைவனமாகவும் இருந்த இடத்தின் ஊடாக **நடத்தி** வந்தார். அங்கே தளமிட்ட பாதை இல்லை, வழிகாட்டி மரங்கள் இல்லை, நிலப்படங்கள் இல்லை, ஆனால் அவர்களுக்குத் தேவையான எல்லாமுமாகக் கர்த்தர் இருந்தார் - ஒப்பிட இயலா வழிகாட்டி.

வீர முதல்வர் (136:17-22)

அவர்களுடைய போர்களை அவர்களுக்காக அவரே நடத்தினார். அவர்களுடைய வழியை சீகோன், ஓக் என்னும் அரசர்கள் இடைமறித்த போது, அவர் முற்றிலுமாக அவர்களைத் தோற்கடித்தார். அவர்களுடைய நாடுகளையும் இஸ்ரவேல் நாட்டின் ஒரு பங்காக அவர்களுக்குக் கொடுத்தார்.

உதவிபுரிபவர், இரட்சகர், பராமரிப்பவர் (136:23-25)

ஒருவகை நிறைவுக் கருத்தாக, யெகோவா வியத்தகு உதவிபுரிபவராகவும் இரட்சகராகவும், பராமரிப்பவருமாக விளங்குகிறார் என்று பாடலாசிரியன் அவரை உயர்த்திப் புகழுகிறான். இஸ்ரவேல் எண்ணிக்கையில் குறைந்திருந்த போது, பாதுகாப்பு இல்லாமல் இருந்தபோது, ஒடுக்கப்பட்டபோது அவர் நினைவுகூர்ந்தார். அவர்களுடைய பகைவரின் பிடியிலிருந்து அவர் விடுவித்தார். உயிர்வாழ் அனைத்திற்கும் அவர் குறைவுபடா வண்ணம் உணவளித்தார்.

விண்ணக இறைவன் (136:26)

பெரும்பாலான நேரங்களில் அவரை ஒரு பொருட்டாக எண்ணாமல் நடந்துகொள்கிறோம். அவருடைய தனிப்பட்ட மேன்மைகளும், முடிவுறா கிருபையும், நாம் அவருக்கு மென்மேலும் துதியைச் செலுத்துவதற்குக் காரணங்களாக அமைய வேண்டும்.

சங்கீதம் 137: எருசலேமே, நான் உன்னை மறந்தால்

1948 -ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் யூதர்களுடைய கட்டுப்பாட்டிலிருந்த எருசேலம் நகரத்தின் ஒருபகுதி ஏறத்தாழ முற்றுகை போடப்பட்டிருந்த நிலையில் இருந்தது. உணவுக் கையிருப்பு பெரும்பாலும் தீர்ந்து போயிற்று. மக்கள் வாரத்துக்கு ஒருமுறை வழங்கப்பட்ட இரண்டு வீசம் செயற்கை வெண்ணெய், கால் இராத்தல் உருளைக்கிழங்கு, கால் இராத்தல் காயவைத்த இறைச்சி ஆகியவற்றைக் கொண்டு உயிர்வாழ்ந்தார்கள். பின்னர் ஒரு செய்தி வந்தது, பல பார வண்டிகளில் பெருமளவு உணவுப்பொருட்கள் டெல் அவிவ் என்னுமிடத்திலிருந்து வருகின்றன என்பதே அந்தச் செய்தி. அந்த வண்டிகளை வரவேற்க நூற்றுக்கணக்கான மக்கள் ஓடிவந்தார்கள். முதல் வண்டி கண்ணுக்குப் புலப்பட்ட காட்சி அவர்களுக்கு மறக்க முடியாத காட்சியாக இருந்தது. நீலநிற .·.போர்டு வண்டியின் முகப்பில் ஒருவர் இவ்விதமாக வண்ணத்தைத் தீட்டினார்:

எருசலேமே, நான் உன்னை மறந்தால்....

இவ்வாறாக, யூதமக்கள் சிறையிருந்த காலங்கள் மற்றும் சிதறடிக்கப்பட்ட நேரங்கள் அடங்கிய குழப்பமும் கொந்தளிப்பும் நிறைந்த வரலாற்றில், அவர்கள் மீண்டும் மீண்டும் ஒன்றுகூடி புது முயற்சியில் ஈடுபடுவதற்கு 137 -ஆவது சங்கீதத்தின் 5 -ஆவது வசனத்தின் சொற்களே உந்துதலாக அமைந்திருந்தன.

137:1 பாபிலோனியச் சிறையிருப்பிலிருந்து விடுதலை பெற்று வந்த பிறகு இது எழுதப்பட்டது, சீயோனிலிருந்து நாடுகடத்தப்பட்ட கசப்பான அனுபவத்தை இச்சங்கீதம் பின்னோக்கிப் பார்க்கிறது.

ஒய்வு நாட்களிலே, அவர்களுக்கு நேரம் கிடைத்த போதெல்லாம், அவர்கள் **பாபிலோன் ஆறுகள் அருகே** ஜெபம் பண்ணுவதற்காக ஒன்று கூடினார்கள். முந்தின நினைவுகள் அடுத்தடுத்து வந்தன, கண்களிலிருந்து கண்ணீர் சொரிந்தது. அவர்கள் **சீயோனை நினைத்தார்கள்**. அவர்களுக்கு அது உலகிலேயே ஆவிக்குரிய தலைமையிடமும், அவர்களுடைய வாழ்க்கையின் மையமும் ஆகும். பரிசுத்த சபை கூடும் நாட்களில் ஆவிக்குரிய மகிழ்ச்சியும் உற்சாகமும் நிறைந்தவர்களாக அவர்கள் அங்கு இருந்ததை எண்ணிப்பார்த்தார்கள். இனிமேல் அவர்களால் ஆராதிக்கும்படி அங்கு போக முடியாது, அந்தப் பரிசுத்த இடங்கள் விருத்தசேதனம் செய்யாத அசுத்தமான புறச் சமய மக்களிடம் இருந்தன. அவர்கள் **பாபிலோன் ஆறுகளைக்** கண்ட போது, அவர்கள் தங்களுடைய சொந்தக் கண்ணீரும் மனவேதனையும் நிறைந்த ஆறுகளின் சித்திரமாகவே கண்டார்கள். எரேமியா, "என் மக்கள் அழிக்கப்பட்டதால் என் கண்களிலிருந்து கண்ணீர் அருவியாய் ஓடுகிறது" என்று மன்றாடியது போல அவர்கள் அழுதார்கள் (புல. 3:48 - இலகு தமிழ்). மேலும்:

> என் தலை தண்ணீரூற்றாகவும், என் கண்கள் கண்ணீர் ஊற்றாகவும் இருக்குமானால், என் மக்களுள் கொலையுண்டவர்களுக்காக நான் இரவும் பகலும் அழுவேனே! (எரே. 9:1 - இலகு தமிழ்).

137:2 அவர்கள் தங்களுடைய **கின்னரங்களை அலரிச் செடிகளின் மேல் தூக்கி வைத்தார்கள்**. அல்லது அவர்கள் அவற்றை நிலையடுக்குகளில் பூட்டி வைத்தார்கள் என்று நாம் இதைச் சொல்லலாம். ஏன் அவ்வாறு செய்யக்கூடாது? இசைக்கருவிகளுக்கு வேலையில்லை. மனிதனுடைய மனப்பான்மையின்படி, பாடுவதற்கு ஒன்றுமில்லை. பாடுவதற்குப் பாடல் எதுவுமில்லாத போது இசைக்கருவி தேவையில்லை.

137:3 பாபிலோனுக்கு அவர்களைச் சிறை பிடித்துக் கொண்டுசென்றவர்கள் ஒரு நாட்டுப் புறப் பாடலைப் பாடும்படி அவர்களை அவ்வப் போது வற்புறுத்தினார்கள். வெந்த புண்ணில் வேல் பாய்ச்சினதுபோல, "உங்களுடைய சொந்த நாட்டில் நீங்கள் பாடிய மகிழ்ச்சிக்குரிய **சில பாடல்களைப் பாடுங்கள்**" என்று அவர்கள் கூறினார்கள்.

137:4 ஏளனச் சொற்கள்! யூதர்கள் அவ்வாறு பாடமாட்டார்கள். அவர்களுடைய இருதயங்கள் நொறுங்கிப்போனதால் மட்டுமல்ல, அதைக் காட்டிலும் முக்கியமான காரணம் இருக்கிறது, கர்த்தரின் பாட்டை உருவ வழிபாடு செய்யும் புறச்சமய நாட்டில் பாடுவது முற்றிலும் முரணானது. அது எருசலேமை மறப்பதற்கு ஒப்பாகும். கர்த்தருடைய காரியங்களையும் உலகக் காரியங்களையும் ஒன்றாகக் கலப்பதில் ஒழுங்கின்மையை அவர்கள் கண்டார்கள். "அந்நிய நாடும் கர்த்தருடைய பாடலும் ஒருபோதும் இணைந்து காண முடியாதவை" என்று எழுதினார் திருவாளர் F. B. மேயர்.

137:5,6 இப்பொழுது, சொந்த நாட்டுக்குத் திரும்பியவனாகப் பாடலாசிரியன் மிகப்பெரிய தீர்மானத்தைத் தெரிவிக்கிறான், அவர்களுடைய வாழ்வின் மையமாக **எருசலேமையே** அவனுடைய மக்கள் கொண்டிருக்க வேண்டும் என்பதே அந்தத் தீர்மானம் - **எருசலேம்** அங்கு குடியிருந்த கர்த்தரையே பிரதிபலிக்கிறது என்பதை நாம் நினைவுகூருகிறோம். சீயோன் மீது விவரித்துக் கூற இயலாததும், உள்ளுணர்வால் உந்தப் பெற்றதுமான பற்றுதல் அவனுக்கு இல்லாமற் போகக் கூடிய நிலை ஏற்படுமென்றால், அதற்குரிய தண்டனையாக அவனுடைய **வலதுகை** வதங்கி கின்னரத்தின் நரம்புகளை இசைக்க முடியாமல் போக வேண்டும். ஆம், அவனுடைய இருதயத்தில் எருசலேமுக்கு முதலிடம் இல்லாமற்போனால், அவனுடைய **நாவு** அவனுடைய **மேல் வாயோடு ஒட்டிக் கொள்வதற்கும்**, அதன் காரணமாக அவன் சீயோனின் இனிய பாடல்களை இனிப் பாட முடியாமல் போவதற்கும் சம்மதிக்கிறான்.

137:7 முதலாவது மேற்கூறப்பட்டுள்ள நிபந்தனைக்குரிய சாபங்களைத் தன்மேல் கூறினவனாக, அந்தப் பரிசுத்த நகரத்தை அழிப்பதற்கு உடன்பட்டவர்களைக் குறித்துச் சிந்திக்க இடமளிக்கிறான்.

எடுத்துக்காட்டாக, **ஏதோமின் புத்திரரை** எடுத்துக்கொள்ளுங்கள். அவர்கள் அந்த நகரத்தை முழுவதுமாக இடித்துப் போடும்படி அதற்கு எதிராக வந்த படையை ஊக்குவிப்பவர்களாகவும் தூண்டிவிடுபவர்களாகவும் செயல்பட்டார்கள். "**இடித்துப் போடுங்கள்**, அதை நொறுக்குங்கள் **அஸ்திபாரமட்டும் இடித்துப் போடுங்கள்**" என்று அவர்கள் கூக்குரலிட்டார்

கள். கர்த்தர்தாமே அவர்களுடைய தீய எண்ணத்தை நினைக்கட்டும், நகரம் இடிக்கப்படுவதைக் கண்டு பகைமை எண்ணத்தில் மன நிறைவு அடைந்தார்கள்.

137:8 பின்னர் பாபிலோனியர், கொடுமைக் காரரான அவர்கள் சூறையாடினார்கள். தேவன் தமது மக்களைத் தண்டிக்க அந்த நாட்டை அவர் ஒரு கருவியாகப் பயன்படுத்தினார் என்பது உண்மையாயினும் அவர்கள் செய்த இரக்கமற்ற அட்டுழியங்களை அவர் மன்னிக்க மாட்டார்.

> நான் எனது மக்களுடன் கோபங்கொண்டு எனது உரிமைச் சொத்தாய் இருக்கிறவர்களைத் தூய்மைக்கேடு அடையச் செய்தேன். அவர்களை உனது கையில் ஒப்படைத்தேன். நீயோ அவர்களுக்கு இரக்கம் காட்டவில்லை. வயோதிபர் மேலும் மிகவும் பாரமான நுகத்தை வைத்தாய் (ஏசாயா 47:6 - இலகு தமிழ்).
>
> ஆனால் பாதுகாப்புடன் இருக்கிறோம் என எண்ணிக்கொண்டிருக்கும் பிற இன மக்கள் மீது நான் கடுங்கோபம் கொண்டுள்ளேன்; ஏனெனில் நான் எனது மக்கள்மேல் சிறிதளவு மட்டுமே கோபமாயிருந்தேன். அப்போது பிற இனங்களோ அவர்கள் மேல் பேராபத்தை அதிகரித்து எனது மக்களை அழிக்கப்பார்த்தார்கள் (சக. 1:15 - இலகு தமிழ்).

பாபிலோனின் அழிவைக் குறித்த சிந்தனையே பாடலாசிரியனுக்கு இருந்தது என்பதில் கேள்வி எதுவுமில்லை. அது தீர்க்கதரிசிகளால் முன்னுரைக்கப்பட்டிருந்தது (ஏசா. 13:1-22; எரே. 50:15; 51:6,36). தேவன் தமது நியாயத்தீர்ப்பை நிறைவேற்றுவதற்குக் கருவியாகப் பயன்படுத்துகிற மக்கள், அதை நினைத்து மனநிறைவு அடைவார்கள்.

137:9 இச்சங்கீதத்தின் கடைசி வசனம் மிகவும் அதிகமான சிக்கலைத் தருகிறது:

> **உன் குழந்தைகளைப் பிடித்துக் கல்லின் மேல் மோதியடிக்கிறவன் பாக்கியவான்!**

வன்முறையற்ற வாழ்க்கை நடத்தவேண்டும் என்று புதிய ஏற்பாட்டுப் போதனையில் கற்பிக்கப்பட்டு வளர்ந்தவர்களுக்கு இது நெறி தவறிய வகையில் கடுமையாகவும், பழிக்குப் பழி வாங்குவதாகவும் , அன்பற்றதாகவும் காணப்படுகிறது. ஒன்றுமறியா பாதுகாப்பற்ற குழந்தைகள் மனிதத் தன்மையற்றபடி ஏன் நடத்தப்பட வேண்டும்? இக்கேள்விக்கான பதிலாகக் கீழ்க்காணும் கருத்துகளைத் தருகிறோம்:

முதலாவது, இந்த வசனம் எழுத்திலும் அதிகாரத்திலும் ஆவியானவரால் உயிரூட்டம் பெற்ற தேவ வார்த்தையின் ஒரு பகுதியே என்னும் மெய்யான ஆதாரத்தில் நாம் தொடங்குகிறோம். ஆகவே சிக்கல் நமது புரிந்துகொள்ளுதலில் இருக்கிறதேயொழிய தேவ வார்த்தையில் இல்லை. இரண்டாவதாக, பாபிலோனின் சிறு குழந்தைகளின் அழிவு தெளிவாக ஏசாயா தீர்க்கரிகளின் மூலமாக முன்னுரைக்கப்பட்டது:

> அவர்கள் குழந்தைகள் அவர்கள் கண்களுக்கு முன்பாக மோதியடிக்கப்படும்; அவர்கள் வீடும் கொள்ளையிடப்படும்; அவர்கள் மனைவிகள் அவமானப்படுவார்கள். (ஏசாயா 13:16)

ஆகவே தேவன் ஏற்கனவே முன்னுரைத்ததையே பாடலாசிரியன் கூறுகிறான். (தேவனுடைய தீர்ப்பை நிறைவேற்றுகிறவன் மகிழ்ச்சியடைவான் என்னும் பகுதி முன்னுரைத்ததில் இல்லை.)

மேலும், பெற்றோருடைய பாவத்தின் காரணமாக ஏற்படுகிற விளைவுகளைப் பிள்ளைகள் சந்திக்க நேரிடும் என்பதை நாம் அறிவோம் (யாத். 20:5; 34:7; எண். 14:18; உபா. 5:9 -ஆகிய வசனங்களைக் காண்க). எந்த மனிதனும் தனியொரு தீவு அல்ல. அவன் செய்கிற செயல், நன்மையானாலும் தீமையானாலும், பிறரிடம் விளைவுகளை உண்டுபண்ணுகிறது. பாவத்தின் கசப்பின் பங்காக, அது தானே கிரியையை விளைவித்து, பிறர்மீது தண்டனையைச் செலுத்தி இன்னல்களுக்குள்ளாக அவர்களை மூழ்கடிக்கிறது.

இவ்விதமான சாபமிடும் பகுதிகளில், மோசேயின் நியாயப்பிரமாணத்துக்குக் கீழ் வாழ்ந்த மனிதனுக்கு இத்தகைய நடத்தையும் மனப்பான்மையும் ஏற்புடையவையாக இருந்தன என்றும், கிருபைக்குக் கீழாக வாழும் கிறிஸ்தவனுக்கு இவை பொருந்தா என்றும் உணருகிற நிலைக்கு நாம் திரும்பி வரவேண்டும். இதனைக் கர்த்தராகிய இயேசு மலைப்பிரசங்கத்தில் போதுமான அளவு விவரித்திருக்கிறார் (மத். 5:21-48 வசனங்களைக் காண்க).

நீங்கள் இந்த வசனத்தை எவ்விதமாக விளக்கிப் பொருள் கூறுகிறீர்கள் என்பது பொருட்டன்று. இதன் ஆவிக்குரிய பாடம் தெளிவாயிருக்கிறது. நாம் நம்முடைய வாழ்க்கையில் செய்கிற சிறிய பாவங்களையும் தீவிரமாகச் செயல்பட்டு முறியடிக்க வேண்டும். அந்தச் சிறிய கவர்ச்சிகளை நாம் அழிக்க வேண்டும், இல்லையேல்

அவை நம்மை அழித்துவிடும். இது குறித்துத் திருவாளர் C. S. லூயிஸ் எழுதுகிறார்:

> உள்ளமெனும் உலகில் இருக்கக் கூடியவற்றில் சில குழந்தைகளைப் போல இருக்கின்றன; குழந்தைத்தனமாகத் தொடங்கப்படுகிற சிறிய அனுபவங்கள், சிறிய மனக்கசப்புகள், ஒரு நாளில் பேராவலாக மாறிவிடும் அல்லது நிரந்தர வெறுப்பாக மாறிவிடும். ஆனால் நம்மிடம் கவர்ச்சியாகப் பேசி, விசேஷமான வேண்டுதலோடு இணங்கச் செய்பவை, எதிர்த்துச் செயல்படுவதற்கு மிகச் சிறியவையாகவும், தவறற்றவை போலவும் காணப்பட்டு, அவற்றை எதிர்ப்பது விலங்குகளைக் கொடுமைப்படுத்துவது போலக் கருதப்படுகிறது. ''நான் அதிகமாகக் கேட்கவில்லை, ஆனால்'' என்றோ, ''நான் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தேன்'' என்றோ, ''நீர் இதைக் குறித்து சற்று கரிசனை காட்டக் கடன்பட்டிருக்கிறீர்'' என்றோ அவை நம்மிடம் சிணுங்கத் தொடங்குகின்றன. அப்படிப்பட்ட சிறிதான அழகிய குழந்தைகள் எல்லோருக்கும் எதிராக இந்தச் சங்கீதமே சிறந்த அறிவுரையாக விளங்குகிறது. (அந்தப் பிரியமான சிறியவை வெற்றி பெறுவதற்கான வழிகளை அறிந்திருக்கின்றன.) அப்படிப்பட்ட முரடர்களை மூளை சிதறும்படி அடிக்கவேண்டும். அவ்வாறு செய்கிறவன் ''பாக்கியவான்''. ஏனெனில் செய்வதைக் காட்டிலும் சொல்வது எளிது.[96]

சங்கீதம் 138: தேவனுடைய நம்பிக்கைக்குரிய வார்த்தை

தனது மன்றாட்டுக்குப் பெரிதான பதில் சிலகிடைத்ததற்காகத் தாவீது எழுச்சிமிக்க உற்சாகத்துடன் நன்றியைச் செலுத்தினான். இவ்விதமான நன்றியுரையின் மூலமாக, தேவன் நம்மை வியத்தகு வகையில் விடுவித்த செயல்களுக்காக நாம் எத்தகைய கடப்பாடு உடையவர்களாகச் செயல்படவேண்டும் என்பதற்கு ஒரு முன்மாதிரியை விட்டுச் சென்றிருக்கிறான். எந்த ஐயத்திற்கும் இடமின்றி இந்தச் சங்கீதத்தின் உட்பொருள் யாவும் மேசியாவாகிய இயேசுவின் ஆதரவுடன் இஸ்ரவேல் புதுப்பிக்கப்படுகின்ற போது முபமையாக அந்நாட்டுக்குப் பொருத்த முடையதாக விளங்கும்.

138:1 தாவீது செலுத்துகிற துதியில் அரைமனதோடு கூடிய அம்சம் எதுவும் இல்லை. யெகோவாவைப் புகழ்ந்து போற்றுவதில் அவனுடைய அனைத்து ஆற்றல்களும் பயன்படுத்தப்படுகின்றன.

மேலும் அவனுடைய ஆராதனையில் வெட்கி ஒதுங்குகிற அல்லது மறைவாகச் செய்கிற செயல் எதுவுமில்லை. அவன் வெட்கப்படாமல் தேவர்களுக்கு முன்பாகப் பாடுகிறான், அதாவது, இவ்வுலகத்தின் அரசர்களுடைய முன்னிலையில் பாடுகிறான். இங்கு "தேவர்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ள சொல் தேவதூதர்களை அல்லது உருவச் சிலைகளைக் குறிக்கக் கூடும். ஆனால் இப்பகுதியின் பின்னணி, சூழ ஆளுகிற அரசர்களையே குறிப்பதாகத் தோன்றுகிறது.

138:2 பயபக்தியுள்ள யூதர்களின் வழக்கத்திற்கேற்ப, தாவீது ஆராதிக்கும்போது பரிசுத்த ஆசரிப்புக் கூடாரத்தை நோக்கிப் பணிந்துகொண்டான் (ஆலயம் இன்னும் கட்டப்படவில்லை).[97] யெகோவாவின் திருப்பெயரை, அவருடைய நிலையான அன்புக்காகவும், உண்மைத்தன்மைக்காகவும் வானளாவப் பாராட்டினான். "அவருடைய விலையேறப்பெற்றவையும் மிகப் பெரியவையுமான வாக்குறுதிகளை" அவர் நமக்குத் தரும்படி அவரை ஏவியது அவருடைய அன்பேயாகும்; அவருடைய உண்மைத்தன்மையானது அந்த வாக்குறுதிகள் யாவும் நிறைவேறுவதற்கான உறுதியை வழங்குகிறது.

"உமது சகல பிரஸ்தாபத்தைப் பார்க்கிலும் உமது வார்த்தையை நீர் மகிமைப்படுத்தியிருக்கிறீர்." இதன் பின்னணி, தேவனுடைய உண்மைத்தன்மை அவருடைய வார்த்தையை நிறைவேற்றுவதில் உறுதியாயிருக்கிறது என்பதைக் கூறுகிறது; தாம் செய்வதாகக் கூறியதை மட்டுமின்றி, அதற்கு மேலும் கூடுதலாக அவர் செய்திருக்கிறார் என்பதே இவ்வாசகத்தின் பொருள் என்று தோன்றுகிறது. "(தாவீதுக்கு) தேவன் அளித்த வாக்குறுதியை, அவர் கூறியதற்கும் மிக அதிகமாக நிறைவேற்றியதன் மூலமக, முந்தின வெளிப்பாடுகளை அவர் விஞ்சிவிட்டார்."[98] இந்த வசனம் மனுவுருவெடுத்த வார்த்தையைக் குறிக்குமாயின், தேவன்தாமே தம்மைக்குறித்த தமது வெளிப்பாடுகள் எல்லாவற்றிற்கும் மேலாக கர்த்தராகிய இயேசுவை உயர்த்தினார் என்பதே இதன் பொருள் என்பதில் ஐயமில்லை.

138:3 அண்மையில் நடந்த நிகழ்வின் காரணமாகவே பாடலாசிரியன் உணர்ச்சிவயப்பட்ட புகழ்ச்சியைச் செலுத்தினான் என்பதை இந்த வசனம் வெளிப்படுத்துகிறது. மிகவும் ஆபத்தான

நாளில் அவன் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான், விடையும் உடனடியாகக் கிடைத்தது. பெருமளவு பெலன் அவனுடைய **ஆத்துமாவுக்குள்** ஊற்றப் பட்டது, பயம் நீங்கி ஆபத்தை எதிர்கொள்ளத் தேவையான துணிவைக் கொடுத்தது.

138:4-6 தாவீதின் மன்றாட்டு கேட்கப்பட்டதன் மூலம் தேவனுடைய உண்மைத்தன்மையின் சாட்சி பூமியின் அரசர்களுடைய முன்னிலையில் வல்லமையாக வெளிப்பட்டது. தேவன் என்ன வாக்குறுதி தந்தார் என்பதை அவர்கள் அறிந்தி ருந்தார்கள், இப்பொழுது முன்னுரைத்தவை நிறைவேறியிருப்பதை அவர்கள் கண்டார்கள். ஆகவே அவர்களும்கூட யெகோவாவின் **மகிமை பெரிதாயிருக்கிறது** என்று தங்களது ஒப்புதலைத் தெரிவிக்கிறார்கள். தேவன் மிகவும் உயர்ந்த வராக இருந்தும் தாழ்மையுள்ளவனைப் (தாவீ தைப் போன்ற) பற்றிய ஆர்வம் கொண்டிருக் கிறார்.

138:7 இது மிக அழகிய சித்திரம் - தாவீது எல்லா வகையான எதிரிகளாலும், எல்லா வகை யான ஆபத்துகளாலும், எல்லா வகையான துன் பங்களாலும் சூழப்பட்டிருக்கிறான். ஆயினும் அவற்றின் ஊடாக, அவை இல்லாததுபோல, தாவீது **நடப்பதற்குக்** கர்த்தர் சாத்தியமாக்கு கிறார். எதிரிகளுக்கு எதிராகச் செயல்படும் அதே கரம், ஆபத்திலிருந்து அவனை **இரட்சிக்கும்.**

138:8 நீதிமானாக்கப்பட்ட நம்பிக்கையோடு தாவீது உறுதிப்படுத்துகிறான், **"கர்த்தர் எனக் காக யாவையும் செய்து முடிப்பார்."** அதே நம்பிக்கையோடு பவுல் பிலிப்பியர் 1:5 - இல் தெரிவித்திருப்பதாவது: "உங்களில் நற்கிரியை யைத் தொடங்கினவர் அதை இயேசு கிறிஸ்து வின் நாள்பரியந்தம் முடிய நடத்தி வருவாரென்று நம்பியிருக்கிறேன்."

அண்ணலின் நற்குணம்
தொடங்கிய திருப்பணியை
விண்ணவரின் வலக்கரம்
நிறைவேற்றி முடித்திடும்.
அவருரைத்த வாக்குறுதி
ஆமென்றும் ஆமெனென்றும்
தவறாமல் நிறைவேறி
அதையுறுதி செய்திடும்.
நிகழ்காலம் எதிர்காலம்
நிகழ்பவை எவையெனினும்
வானுலகு பாதாளம்
இருப்பவை எவையெனினும்
அவர்நோக்கம் நடைபெறாமல்
தடைசெய்ய இயலாது
அவரன்பின் கட்டிலிருந்து
நமைப்பிரிக்க முடியாது!

ஆம், அவருடைய மாறாத அன்பு என்றும் நிலைத் திருக்கிறது. **"உமது கரத்தின் கிரியைகளை நெகிழவிடாதிருப்பீராக"** என்று நாம் தாவீ தோடு சேர்ந்து மன்றாட அனுமதிக்கப்பட்டாலும் அவரால் அது முடியாது, அவ்வாறு செய்யவும் மாட்டார் என்பதே உண்மை!

சங்கீதம் 139: இறைவன் மிகப்பெரியவர்

இறைவன் மிகப்பெரியவர்!

அவர் அறியாத மறைபொருள் இல்லை,

அவர் இல்லாத இடமொன்றும் இல்லை,

அவர்க் கியலாத செயலொன்றும் இல்லை!

இவ்வளவு பெரிதான இறைவனுக்கு எதிரான பகைவராக இருக்கவேண்டும் என்று மனிதர்கள் வற்புறுத்துவார்களானால், அவர்கள் பெருமளவு எதிர்வினையைச் சந்திக்க நேரிடும்.

இந்தக் கம்பீரமான சங்கீதத்தில் தாவீதின் தியானத்தின் ஓட்டம் மேலே உள்ள பத்தியில் சுருக்கமாகச் சொல்லப்பட்டுள்ளது.

139:1,2 முதலாவது, அவன் *சர்வஞானி யாகிய* தேவனோடு தொடங்குகிறான். தேவன் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார்.

எல்லையற்ற பிரபஞ்சம்
மிகப்பெரிதாய் இருந்தபோதும்
எல்லையெலாம் அறிந்ததேவன்
அறிந்திடாத தொன்றுமில்லை,
துகள்போன்ற சிறுகற்கள்
முடிவில்லாப் பெருங்கதையை
பகலிரவு படைத்திட்ட என்னிறைவன்
அறிவாரே!

ஆனால் இப்பகுதியில் ஒவ்வொரு தனிமனித னையும் பற்றிய அவர் அறிவே ஆய்வுப் பொருளாக இருக்கிறது. 2018 கணக்கின்படி உலகின் மக்கள் தொகை எண்ணிக்கை 760 00 00 000. எனினும் இறைவன் ஒவ்வொரு தனிமனிதனோடும் தொடர்பு கொண்டிருக்கிறார். நம் ஒவ்வொருவரையும் குறித்து எல்லாம் அறிந்தவர் அவர்.

அவர் நம்மை **ஆராய்ந்து அறிந்திருக்கிறார்!** சொற்கள், செயல்கள், சிந்தனைகள், நோக்கங் கள், உள்ளும் புறமும் அவர் நம்மை அறிந்திருக் கிறார். நாம் தளர்வுற்று **உட்காருவதையும்** வாழ்

வின் பலவித அலுவல்களைச் செய்யும்படி **எழுந்திருப்பதையும்** அவர் அறிவார். நாம் என்ன சிந்திக்கிறோம் என்பதையும் அவர் அறிவார், நாம் என்ன சிந்திக்கப்போகிறோம் என்பதையும் அவர் அறிவார்.

139:3 நாம் எப்பொழுது நடக்கிறோம் என்பதையும் எப்பொழுது படுக்கிறோம் என்பதையும் அவர் காண்கிறார். அவர் இடைவிடாமல் நம்மைக் கவனித்து வருகிறார் என்றும் இதனைக் கூறலாம். நம்முடைய **வழிகளில்** எதுவும் அவருக்கு மறைவாயிருப்பதில்லை.

139:4 நாம் ஒரு சொல்லைப் பேசுவதற்கு முன்னரே நாம் என்ன பேசப்போகிறோம் என்று அவர் அறிந்திருக்கிறார். எதிர்காலம், கடந்த காலம், நிகழ்காலம் முழுவதும் அவருக்கு முன் திறந்திருக்கிறது.

139:5 "அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயும் இருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்" (எபி. 4:13). நம்மைக் குறித்த அவருடைய அறிவு கற்பனைக் கெட்டா அளவு முழுமையாக விளங்குகிறது. **முற்புறத்திலும் பிற்புறத்திலும்** அவரால் நம்மைப் பாதுகாக்க முடியும். எல்லாக் காலங்களிலும் எல்லா நேரங்களிலும் நம்மைக் காக்கும்படி அவருடைய **கரம்** நம்மீது **வைக்கப்**பட்டிருக்கிறது.

139:6 இறைவனுடைய எல்லைக்குட்படா **அறிவு** என் உள்ளத்தைத் தடுமாறச் செய்கிறது. அந்தக் கருத்தின் சுமை நம்முடைய மனித மூளையைக் கசக்கிப் பிழிகிறது. நாம் புரிந்துகொள்ளக் கூடாதபடி மிக உயரத்திலிருக்கிறது. ஆனால் நாம் நம்முடைய அறிவுத்திறனின் எல்லைக்குச் சென்று புரிந்துகொள்ள முயற்சி செய்கிறபோது, இனியும் நாம் செல்லமுடியாமல், இறைவனின் வரம்பற்ற அறிவை எண்ணியவர்களாக அவருடைய முன்னிலையில் பணிந்து வணங்க முடியும்!

139:7,8 இறைவன் சர்வ ஞானியாக இருப்பது மட்டுமின்றி, சர்வ வியாபியாகவும் திகழ்கிறார். ஒரே நேரத்தில் அவர் எல்லா இடங்களிலும் இருக்கிறார். ஆயினும் எங்கும் பிரசன்னமாயிருக்கிற தேவன் என்று கூறுவதும் எல்லாம் கடவுள் என்னும் கோட்பாடும் ஒன்றல்ல. எல்லாம் கடவுள் என்னும் கோட்பாடு படைப்பே தேவன் என்று கற்பிக்கிறது. தேவன் தமது படைப்பிலிருந்து வேறுபட்ட, தனித்துவம் வாய்ந்தவர் என்று திருமறை கற்பிக்கிறது. தேவனுடைய பரிசுத்த **ஆவியானவரை** மனிதன் தவிர்க்கக்கூடிய ஏதாவது ஓரிடம் இருக்கிறதா? கர்த்தருடைய சமுகத்தைவிட்டு அவன் தன்னை மறைத்துக் கொள்ளக்கூடிய இடம் இருக்கிறதா? ஒருவேளை மனிதன் **வானத்திற்கு ஏறினாலும்**, அவனால் இறைவனைத் தவிர்க்க முடியுமா? நிச்சயமாக முடியாது; வானமே தேவனுடைய சிங்காசனம் (மத். 5:34). அவன் தனது **படுக்கையைப்** பாதாளத்தில் போட்டாலும், உடலிலிருந்து ஆவி பிரிந்த நிலையில் இருக்கும் அந்தத் தருணத்திலும் **கர்த்தர்** அங்கே இருப்பதை அறிவான்.

139:9,10 "நான் விடியற்காலத்துச் செட்டைகளை எடுத்து, சமுத்திரத்தின் கடையாந்தரங்களிலே போய்த் தங்கினாலும், அங்கேயும் உமது கை என்னை நடத்தும், உமது வலது கரம் என்னைப்பிடிக்கும்." விடியற்காலத்துச் செட்டைகள் என்னும் சொற்றொடர், கிழக்கிலிருந்து மேற்குவரை ஒரு வினாடிக்கு 186000 மைல் வேகத்தில் வண்ணக் கோடிடும் உதய சூரியனின் ஒளிக்கதிர்களைக் குறிப்பாய்ச் சுட்டிக்காட்டுகிறது. ஒருவேளை நாம் இப்பிரபஞ்சத்தின் ஏதோவொரு மூலைமுடுக்கிற்குப் பயணம் சென்றாலும் கர்த்தர் நம்மை வழிநடத்தி ஆதரிப்பதற்கு அங்கு இருப்பார் என்று காண்போம்.

நாம் வாழ்கிற வளிவிசை விமானப் பயணம் நிகழ்கிற காலத்திற்கு 9,10 -ஆகிய வசனங்கள் நம்புவதற்கு அரியவகையில் பொருத்தமாக இருக்கின்றன. 1969 -இல் நான் மேற்கொண்ட ஊழியத்தின் காலம் விரிவாக்கம் அடைந்த தருணத்தில் இந்த விலையேறப் பெற்ற வாக்குறுதியின் மூலமாகக் கர்த்தர் என்னோடு பேசிய விதத்தை என்னால் ஒருக்காலும் மறக்க முடியாது. நான் பயணம் செய்த பல விமானங்கள் விடியற்காலத்துச் செட்டைகள் போலவே இருந்தன. உண்மையாகவே அவை என்னை பூமியின் கடைக்கோடிக்குக் கொண்டுசென்றன. ஆனால் அப்பொழுதெல்லாம் அந்தப் பயணங்களின் வேகம் அல்லது செல்லும் தூரம் எதுவாயிருந்தாலும் கர்த்தருடைய சமுகம், பாதுகாப்பு என்னோடு இருந்ததை உணர்ந்தேன். ஆகவே இந்த வாக்குறுதியை நீங்கள் உரிமை கோருங்கள், விமானத்தின் மூலம் பயணம் செய்யும் உங்களுடைய கிறிஸ்தவ நண்பர்களோடு இவ்வுண்மையைப் பகிர்ந்துகொள்ளுங்கள்.

139:11,12 ஒரு மனிதன் தேவனிடத்திலிருந்து தன்னை மறைத்துக்கொள்ள இருளை விரும்பினால், அவன் தவறான அடைக்கலத்தை நம்பு

வதாக அமையும். இரவு கர்த்தருடைய பிரசன்னத்தை வெளியேற்றிக் கதவை மூடிவிடாது. **இருள்** அவருக்கு இருட்டன்று. **"இரவும் பகலைப் போல வெளிச்சமாயிருக்கும்; உமக்கு இருளும் வெளிச்சமும் சரி."**

தேவனிடத்திலிருந்து தப்புவதற்குச் சற்றேனும் முடியாது. "அவருடைய மையம் எங்குமிருக்கிறது; அவருடைய சுற்றளவு என்று ஒன்று இல்லவே இல்லை" என்று திருவாளர் பாஸ்கல் கூறினாற்போல இது இருக்கிறது.

139:13,14 தேவன் எங்குமிருக்கிறார் என்பது பற்றி இதுகாறும் பேசினோம். இப்பொழுது தாவீது இறைவனுடைய *ஆற்றலையும் செயல்திறத்தையும்* குறித்துத் தனது கவனத்தைத் திருப்புகிறான். தெய்வீக சர்வ வல்லமையைக் குறித்துப் பேசுவதற்கு, ஒரு குழந்தை தனது தாயின் வயிற்றில் உருவாகி வளர்கிற படிப்படியான வளர்ச்சியை எடுத்துக்காட்டாகத் தெரிந்துகொள்கிறான். ஓர் எழுத்தின்மேல் வைக்கிற புள்ளியைக் காட்டிலும் சிறிதான திரவப்பொருளில், ஒரு குழந்தையின் எதிர்காலக் குணங்கள் அனைத்தும் திட்டமிடப்பட்டிருக்கின்றன - அந்தக் குழந்தையின் தோலின் நிறம், கண்கள் மற்றும் முடி ஆகியவற்றின் நிறம், முகத்தின் சாயல், இயல்பான ஆற்றல் கூறுகள் யாவும் திட்டமிடப்பட்டுவிடுகின்றன. கருத்தரித்த முட்டையில் பிள்ளையின் சரீரம் மற்றும் மனது ஆகியவற்றின் அனைத்துக் கூறுகளும் கரு வடிவில் இருக்கும். அதிலிருந்து வளர்வது:

> ... 6000000 கோடி அணுக்கள், ஒரு லட்சம் மைல் நீளமுள்ள நரம்புகள், 60000 மைல் நீளமுள்ள இரத்த நாளங்கள், 250 எலும்புகள், இவைபோக மூட்டுகள், தசைநார்கள், தசைகள்.[99]

கரு வளர்ந்து சிசுவாகிற நிகழ்வைத் தாவீது நேர்த்தியான நுட்பத்தோடும், அழகாகவும் விவரிக்கிறான்: **"நீர் என் உள்ளிந்திரியங்களை உருவாக்கினீர்; என் தாயின் கர்ப்பத்தில் என்னைக் காப்பாற்றினீர்."** ஆம், உண்மையாகவே இறைவன் நமது உள்ளுறுப்புகளையெல்லாம் உருவாக்கினார்; ஒவ்வொரு உறுப்பும் தெய்வீகத் தொழில் நுட்பக் கலையின் படைப்பாக விளங்குகிறது. எடுத்துக்காட்டாக மூளையைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்; செய்திகள், ஓசைகள், மணங்கள், காட்சிகள், தொடு உணர்வுகள், வலி இவை யாவற்றையும் அது பதிவு செய்து வைக்கிறது; மீண்டும் அவற்றை நினைவுக்குக் கொண்டு வருகிறது; அதனுடைய கணக்கிடும் திறமை சிறந்ததைத் தேர்ந்தெடுத்து முடிவெடுக்கும் ஆற்றல், சிக்கல்களுக்குத் தீர்வு காணும் ஆற்றல் இவற்றிற்கு முடிவேயில்லை என்று தோன்றுகிறது.

மேலும் தேவன்தாமே நம் ஒவ்வொருவரையும் தாயின் கருவில் ஒன்றாய் இணைத்திருக்கிறார். (தமிழ் வேதத்தில் காப்பாற்றினீர் என்னும் சொல் இணைத்தீர் என்று காணப்படவேண்டும்.) அதிசயிக்கத்தக்க வகையில் தசைகள், தசைநார்கள், தசையையும் எலும்பையும் இணைக்கும் நார்கள், நரம்புகள், இரத்த நாளங்கள், எலும்புகள் யாவும் ஒன்றாக இணைக்கப்பட்டு பின்னல் வேலையைப் போல இருப்பதை இது துல்லியமாக எடுத்துரைக்கிறது.

தாவீது கர்த்தரைத் துதிக்கும்படி உணர்ச்சி வயப்பட்டு பொங்கி எழுகிறான். அவன் இறைவனின் படைப்பில் மகுடம் போலத் திகழும் மனிதனைக் குறித்து நினைத்தவனாக, தான் **பிரமிக்கத்தக்க அதிசயமாக உண்டாக்கப்பட்டதாக** அறிக்கை செய்கிறான். மனித உடலின் அதிசயங்களைக் குறித்து நாம் கூடுதலாகச் சிந்திக்கையில், அதன் ஒழுங்கு, சிக்கல் நிறைந்த தன்மை, அதன் அழகு, அதன் இயல்பூக்கம், பாரம்பரியமாய் பெற்ற குணங்கள் இவற்றையெல்லாம் குறித்துச் சிந்திக்கையில், மனித உடல் பற்றி பயிற்சி பெற்ற மனிதர்கள் எல்லைக்குட்படா படைப்பாளரை விசுவாசிக்கத் தவறியது குறித்து நாம் ஆச்சரியப்படுகிறோம்.

139:15 தன்னுடைய தாயின் வயிற்றில் தனது உடல் உருவானதைக் குறித்துப் பாடலாசிரியன் மீண்டும் நினைக்கத் திரும்புகிறான். இங்கே அவன் கருவுருவில் அல்லது சிசுவாகத் தனது தாயின் வயிற்றில் இருந்ததைக் குறிப்பிட *நான், என், எனக்கு* என்னும் பிரதிப்பெயர்ச் சொற்களைப் பயன்படுத்துவதைக் கவனியுங்கள். பிறப்புக்கு முன்னரே மனித ஆளுமை உள்ளது என்றும், அதன் காரணமாக மருத்துவக் கட்டாயம் ஏற்பட்டால் ஒழிய, கருக்கலைப்பு கொலை என்றும் திருமறை கருதுகிறது என்பது தெளிவாகிறது.

தொடக்க முதலே இறைவன் தன்னை அறிந்திருந்தார் என்று தாவீது புரிந்துகொண்டிருந்தான். அவனுடைய உருவ அமைப்பு, அதாவது, எலும்புக் கூடு **ஒளிப்பிடத்தில் உண்டாக்கப்பட்டு, பூமியின் தாழ்விடங்களிலே விசித்திர விநோதமாய் உருவாக்கப்பட்டபோது** தேவனுக்கு **மறைவாயிருக்கவில்லை**. பூமிக்குக் கீழே என்பது இதன் பொருளன்று, ஒருவரும் அங்கே உருவாக்கப்படவில்லை. இதன் பின்னணியைக்

காண்கையில், "தாயின் கருப்பையில்" என்பதே இதன் பொருளாகும். இதற்கு இணையான ஒரு சொற்றொடர் எபேசியர் 4:9 -இல் காணப்படுகிறது, கிறிஸ்து பூமியின் தாழ்விடங்களிலே இறங்கினார் என்று அப்பகுதி கூறுகிறது. அவர் கன்னியின் கருப்பையின் மூலமாக இப்பூமிக்குள் நுழைந்தார், அந்தக் கருப்பை முன்னறையாக விளங்கியது. இதுவே அப்பகுதியின் பொருள் என்பதை வசனங்களின் பின்னணியைக் கொண்டு அறியலாம். அங்கு ஆய்வுப்பொருள் அவர் மனுவுருவெடுத்த நிகழ்வேயாகும்.

139:16 பாடலாசிரியன் தனது அவயவங்கள் உருவாவதற்கு முன் இருந்த நிலையைக் குறிப்பிட, ஒன்றாகச் சுருட்டி வைக்கப்பட்ட பொருள் என்னும் அர்த்தத்துடன் கூடிய சொல்லைப் பயன்படுத்துகிறான். திருவாளர் பார்னஸ் மற்றும் சிலர் அந்தச் சொல் கருவையே குறிக்கும் என்று கருதுகிறார்கள். (தமிழ்வேதத்தில் **கரு** என்றே அச்சொல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.) "உடலின் பல உறுப்புகளும் விரிவடைவதற்கு முன் அல்லது வளர்ச்சியடைவதற்கு முன், அதாவது, அவை ஒவ்வொன்றும் உருவ அமைப்பை அதன தன் விகிதத்தில் பெறும்வரை" இருக்கும் நிலையை இச்சொல் சரியாகப் பிரதிபலிக்கிறது. அவ்விதத் தொடக்க நிலையில் அவன் இருந்தபோதே, தேவனுடைய கண்கள் தன்னைக் கண்டதாக இஸ்ரவேலின் இனிய பாடகன் கூறுகிறான்.

மேலும், இந்த உலகத்தில் தனது வருகையை அறிவிக்கும்படி தனது சக்தியையெல்லாம் ஒன்று கூட்டி வீச்சென்று முதன்முதலாகக் கத்தியதற்கு முற்பட்ட தனது வாழ்வின் நாட்கள் எல்லாவற்றையும் தெய்வீகக் சிற்பக் கலைஞர் தமது நூலில் எழுதி வைத்திருப்பதாகத் தாவீது கூறுகிறான்.

139:17,18 தனது ஆவி, ஆத்துமா, சரீரம் ஆகிய வற்றை உருவாக்கும்பொருட்டு தேவன் மிகக் கவனமாகத் திட்டமிட்டதைப் பாடலாசிரியன் எண்ணிப் பார்க்கிறான். அவருடைய **ஆலோசனைகள்... எத்தனை அருமையானவை** - நுணுக்கமான விவரங்களை அவர் மிகுந்த கவனத்தோடு கண்டிருக்கிறார். திருவாளர் ஆண்ட்ரூ ஐவி இது குறித்துக் கூறுகிறார்: "ஒன்றுவிடாமல் ஒவ்வொரு அணுவும் ஒட்டுமொத்த உடலின் அமைப்பு அல்லது உடலின் நோக்கத்தின் நன்மைக்காகத் தனது பணி என்ன என்பதை அறிந்திருக்கிறது."

139:18 "நான் விழிக்கும்போது இன்னும் உம்மண்டையில் இருக்கிறேன்." பாடலாசிரியன் தன்னுடைய பிறப்பின் தருணத்தைக் குறித்தே பேசுவதாக எனக்குத் தோன்றுகிறது. அவனுடைய பிறப்பிற்கு முன் ஒன்பது மாதங்கள் தேவன் அவனோடு மிக நெருக்கமாக இருந்ததை இதற்கு முந்தின வசனங்கள் (வச. 13-18 முற்பகுதி) கூறவ தாக அவன் வலியுறுத்தி வந்தான். ஆனால் அவனுடைய பிறப்பிற்குப் பிறகும்கூட சித்திரத்தில் எந்த மாற்றமும் இல்லை; அவன் இன்னும் தனது பராமரிப்பாளரும், பாதுகாப்பாளரும், வழி காட்டியுமான கர்த்தருடனேயே இருக்கிறான். அவன் தனது பிறப்பை, "ஒருநாளின் தொடக்கத்தில் பார்க்கிற வெளிச்சம்" என்று நாம் கூறுவதைப் போல உறக்கத்திலிருந்து விழிப்பதற்கு ஒப்பிடுகிறான்.

139:19-22 இறைவன் எல்லாம் அறிந்தவர், எங்கும் இருப்பவர், எல்லாம் வல்லவர் என்பன பற்றி சிந்தித்த பிறகு, அவரை எதிர்த்து நிற்கும்படி சிறிய உருவம்கொண்ட மனிதர்கள் துணிவதைக் குறித்துப் பாடலாசிரியன் சிந்திக்கிறான். அவ்வாறு சிந்தனை செய்பவன் நிச்சயமாகவே அவர்கள் தண்டனை பெற வேண்டியவர்கள் என்னும் முடிவுக்கு வருகிறான். 19 முதல் 22 -வரையிலான வசனங்களில் தாவீது ஏறெடுக்கும் வேண்டுகோளின் தொனி கிறிஸ்தவர்களுடைய வேண்டுகோளைப் போல இல்லாமல் இருப்பதைக் காணும் சிலர், தங்களுடைய புருவங்களை உயர்த்துவதைத் தவிர்க்க முடியாது. பாடலாசிரியனின் மன நிலை தண்டனை வழங்கித் தீர்ப்பளிக்கக் கூடிய தாக இருக்கிறதேயொழிய, அது தெய்வீக அன்புக்கு இசைவாக இல்லை என்று அவர்கள் எதிர்பார்ப் பார்கள். என்னுடைய கருத்தின்படி, தேவனுடைய அன்பு அவருடைய பரிசுத்தம் மற்றும் நீதி ஆகிய வற்றை விட அதிக விகிதாச்சார முறையில் கணக்கிடப்படுகிறது என்று எண்ணுகிறேன். தேவன் அன்பாயிருக்கிறார் என்பது உண்மைதான், ஆனால் அதுவே எல்லா உண்மையும் அல்ல. அது அவருடைய இயல்புகளில் ஒன்று. அவருடைய மற்ற இயல்புகளைத் தியாகம் செய்துவிட்டு, அன்பை மட்டும் அவரால் செலுத்த முடியாது. மேலும், தேவன் அன்பாயிருக்கிறார் என்று சொல்வதாலே, அவராலே வெறுக்க முடியாது என்று பொருளாகாது. "துன்மார்க்கனையும் கொடுமையில் பிரியமுள்ளவனையும் அவருடைய உள்ளம் வெறுக்கிறது" (சங். 11:5). அக்கிரமக்காரர் யாவரையும் அவர் வெறுக்கிறார் (சங். 5:5). கர்த்தர் வெறுக்கிறவை: மேட்டிமையான கண், பொய்நாவு, குற்றமற்றவர்களுடைய இரத்தம் சிந்துங்கை, துராலோசனையைப் பிணைக்கும் இருதயம், தீங்கு செய்வதற்கு விரைந்தோடும் கால், அபத்தம் பேசும் பொய்ச் சாட்சி,

சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டுபண்ணுதல் (நீதி. 6:16-19).

திருவாளர் எட்வர்ட் J யெங் நமக்கு நினைவூட்டுகிறார்:

> தாவீதின் மன்றாட்டுக்காக அவனைக் குற்றஞ் சாட்டத் தொடங்குவதற்கு முன், ''உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக'' என்னும் கர்த்தருடைய ஜெபத்தின் சொற்களை நம்முடைய மன்றாட்டாக நாம் ஏறெடுக்கிற வேளையில், நாமும் அவனைப் போலவே ஜெபிக்கிறவர்களாக இருக்கிறோம் என்பதை அறிவது நல்லது.[100]

கிறிஸ்துவின் அரசு நிறுவப்படுவதற்கு முன்னர் அவருடைய எதிரிகள் அழிக்கப்படுவார்கள், ஆகவே ஒன்றிற்காக ஜெபிக்கிறபோது மற்றொன்றிற்காக ஜெபிப்பதாக அமையும். துன்மார்க்கரை தேவன் கொல்லும் தருணத்தை தாவீது வெட்கப்படாமல் வாஞ்சையோடு எதிர்பார்க்கிறான். மேலும் அவனை அலைக்கழிக்கும் இரத்தப்பிரியர், அவனைவிட்டு அகன்று இல்லாமற்போக வேண்டுமென்று வாஞ்சிக்கிறான்.

அந்த மனிதர்களைத் தாவீது வெறுத்ததற்குக் காரணம் அவர்கள்மேல் அவன் கொண்டிருந்த தனிப்பட்ட பகைமை அல்ல. மாறாக, அவர்கள் தேவனை வெறுத்தார்கள், உன்னதமானவருக்கு எதிராக அவர்கள் கலகம் செய்தார்கள். கர்த்தருடைய புகழைக் குறித்து அவன் கொண்டிருந்த பேரார்வமே, அவரைப் **பகைக்கிறவர்களை** அவன் **முழுமையுமாகப் பகைக்கும்படி** செய்தது. மேலும் அவர்களைத் தனது சொந்தப் பகைவர்களாக எண்ணுவதற்கும் அதுவே காரணம். இதன் மூலமாக, தமது திருத்தந்தையின் வீட்டைக் குறித்த பக்திவைராக்கியத்தின் காரணமாக, கர்த்தராகிய இயேசு காசுக்காரரை ஆலயத்திலிருந்து துரத்தும்படி செய்த நிகழ்ச்சியை அவன் நமக்கு நினைவுபடுத்துகிறான். "தாவீதின் யாழின் நாண்கள் இயேசுவின் இருதயத்தின் நாளங்கள் போல் இருந்தன." திருவாளர் யெங் விவரிக்கிறார்:

> தாவீதின் பகைமை இறைவனின் பகைமை போலிருந்தது; அது எந்தவிதப் பொல்லாத உணர்ச்சியின் மூலமாகவும் தோன்றவில்லை. மாறாக அது தேவனுடைய நோக்கங்கள் நிறைவேற வேண்டும், பொல்லாங்கு அழிந்துபோக வேண்டும் என்னும் தீவிரமான மற்றும் முழுமையும் மெய்யான விருப்பத்தின் காரணமாக எழுந்தது. அவ்வாறு தாவீது பகைக்கவில்லையெனில், தீமை வெற்றி பெற நேரிடும்; மேலும் தேவன் தோல்வியுற வேண்டும் என்று அவன் விரும்பியதாகக் காணப்பட்டிருக்கும். தாவீதின் பகைமையின் இயல்பைக் குறித்துச் சிந்திக்கிற நாம் இந்த எண்ணங்களை நம்முடைய மனதில் நிறுத்திக்கொள்ள வேண்டும்.[101]

139:23,24 தேவனுடைய மக்கள் எல்லோருக்கும் எக்காலத்தும் பொருத்தமான ஒரு மன்றாட்டுடன் இந்தச் சங்கீதம் முடிவடைகிறது. பாவம் செய்கிற பரிசுத்தவான்கள் இப்பூமியில் இல்லாமற்போகும்வரை இந்த மன்றாட்டு நீடித்திருக்கும். வல்லமையுள்ள தேவன் **இருதயத்தின் சிந்தனைகளை** அல்லது விருப்பங்களை முழுமையாகச் சோதிக்க வேண்டும் என்றும், அறிய வேண்டும் என்றும் இங்கு விண்ணப்பிக்கப்படுகிறது. ஒவ்வொரு **வேதனையுண்டாக்கும் வழியையும்** அறிக்கையிட்டு விட்டுவிட வேண்டும் என்பதற்காக அவை வெளிப்படுத்தப்பட வேண்டும் என்றும் அது விண்ணப்பிக்கிறது. இறுதியாக அது தன்னை **நித்திய வழியிலே** அவர் **நடத்த** வேண்டும் என்று விண்ணப்பிக்கிறது.

தனது குற்றமற்ற தன்மையை அல்லது நீதியைக் கூறி ஒருவன் எதிர்த்து நிற்பதாக இந்த வசனம் பொருள்படுவதில்லை. மாறாக, கர்த்தருடைய முன்னிலையில் ஒருவன் செய்கிற அறிக்கையாக இது விளங்குகிறது, மேலும் அவன் தனது சொந்தப் பாவ நிலையின் காரணமாக மனதில் குற்றஞ்சாட்டப்பட்டவனாக அறிக்கை செய்கிறான். அவன் தன்னுடைய எல்லா அக்கிரமங்களையும் அறியவில்லை என்று உணர்ந்தவனாக, அவற்றைக் குறித்து அவன் தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காகக் கர்த்தர்தாமே அவற்றைத் தனக்குச் சுட்டிக்காட்ட வேண்டும் என்று விண்ணப்பிக்கிறான்.

சங்கீதம் 140: பொல்லாத மனிதர்களின் கைகளிலிருந்து

140:1-3 பகைவனின் அவதூறான பேச்சிலிருந்து தனக்கு விடுதலை வேண்டும் என்னும் விண்ணப்பத்தோடு **தாவீது** தொடங்குகிறான். **பொல்லாத மனிதர்** அவனுக்கு எதிராகப் பழிதூற்றினார்கள், **கொடுமைக்காரர்கள்** அவனுக்கு எதிராகப் பயங்கரமான திட்டங்களை வகுத்தார்கள். அவர்கள் **யுத்தத்தைத்** தூண்டியிராவிடில் அவர்களால் மகிழ்ச்சியாக இருந்திருக்க முடியாது. அவர்கள் தங்களுடைய நாவுகளைக் கூர்மை

யாகத் தீட்டினார்கள், அவர்களுடைய உதடுகளி லிருந்து சாகடிக்கும் நஞ்சு பீறிட்டு வந்தது.

140:4,5 மேலும் பகைவனின் கண்ணியிலிருந் தும் பாடலாசிரியனுக்குப் பாதுகாப்பு தேவையா யிருந்தது. இந்தப் பொல்லாத மனிதர்கள் சூழ்ச்சி செய்யும் கலையில் தேர்ச்சிபெற்றவர்கள். அவனை இடறச் செய்யும் கண்ணிகளை அவர்கள் விரித் தார்கள். அவன் செல்லும் பாதையில் எதிர்பாரா மல் வெடிக்கும் மருந்துப்பொருட்களைப் பதித்து வைத்தார்கள். அவனைச் சூழ்ச்சியால் பிடிக்கும் படி அவர்கள் **வலையை விரித்தார்கள்**. மேலும் அவனுடைய பயணத்தின்போது கவர்ந்து இழுக் கக்கூடிய சூழ்ச்சித் திட்டங்களை அவர்கள் செய்து வைத்திருந்தார்கள்.

140:6-8 மேலும் அவனுக்குப் பகைவரின் கொலைத் திட்டங்களிலிருந்து பாதுகாப்பு தேவை யாயிருந்தது. எனவே அவன் தேவனை நெருங் கிச் சேருகிறான்.

ஒப்படைத்தலில்

- **"நீர் என் தேவன் என்றேன்."**

முறையிடுவதில்

- **"என் விண்ணப்பங்களின் சத்தத்துக்குச் செவிகொடும்."**

சார்ந்துகொள்வதில்

- **"ஆண்டவராகிய கர்த்தாவே, என் இரட்சிப் பின் பெலனே."**

நன்றிபாராட்டுவதில்

- **"யுத்தநாளில் என் தலையை (கவசத் தால்) மூடினீர்."**

விண்ணப்பிப்பதில்

- **"கர்த்தாவே, துன்மார்க்கனுடைய ஆசை கள் சித்தியாதபடி செய்யும்; அவனு டைய யோசனையை நடந்தேற வொட் டாதேயும்."**

"எனக்கு எதிராக அவன் செய்ய விரும்புகிற வற்றை செய்யாதபடி தடைசெய்வீராக. அவனு டைய திட்டத்தை அனுமதிப்பதன் மூலம் நீர் அவ னுடைய கூட்டாளிபோல காணப்படாதீர்" என்பதே கடைசி விண்ணப்பத்தின் பொருள். தேவன் ஒரு போதும் பொல்லாப்புக்கு உதவிபுரியவோ, அதை ஊக்குவிக்கவோ மாட்டார் என்பதை நாம் அறி வோம். ஆனால் இங்கு காணப்படும் சிந்தனை யாதெனில் அதை வெறுவனே பொறுத்துக்கொள் வதே அவரால் ஒப்புதல் அளிக்கப்பட்டது என்று கருதுவதற்கு இடமளித்துவிடும்.

140:9-11 அடுத்ததாக, பொல்லாதவர்களுக்கு எதிராக நிலைமை திரும்பவேண்டும் என்று பாட லாசிரியன் மன்றாடுகிறான். பேரிடர் விளைவிக் கும்படி அவர்கள் தீட்டிய திட்டங்கள், அவர்களு டைய கர்வம் கொண்ட தலைகளில் விழுந்து அவர் களை நொறுக்கிப் போட வேண்டும், **நெருப்புத் தழல்** அவர்கள்மேல் மழைபோலப் பொழிய வேண்டும். அவர்கள் தப்ப வகையில்லாதபடி இருட்டறைகளில் அடைக்கப்படவேண்டும். **பொல் லாத நாவுள்ளவன்** தேசத்தில் கால்பதிக்க ஆதா ரமற்றுப் போக வேண்டுமென்று அவன் விண்ணப் பிக்கிறான், அந்தப் பேரிடர் **கொடுமையான மனிதனைக்** கீழே விழத்தள்ள வேண்டும்.

140:12,13 நீதியுள்ள கர்த்தரிடம் வைத்த நம்பிக் கையால் அடைந்த மனவமைதியோடு சங்கீதம் முடிவடைகிறது. எது நடந்தாலும், நீதியே வெல் லும் என்பதைத் தாவீது அறிந்திருந்தான். அதா வது, கர்த்தர் சிறுமையானவர்கள் மற்றும் எளிய வர்கள் பக்கம் இருக்கிறார். கர்த்தர் செய்த உத விக்கு நீதிமான்கள் அவருக்கு எப்போதும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள். செம்மை யானவர்கள் என்றென்றும் அவருடைய சமுகத் தில் குடியிருப்பார்கள். இவ்வாழ்க்கையில் ஏற் படக்கூடிய எல்லாத் துன்பங்களும் வெறுமனே நச்சரிப்பாகக் காணப்படும்படி அது மாற்றிவிடும்.

சங்கீதம் 141: மன்றாட்டு நற்கந்தமாகக் கணக்கிடப்படுதல்

141:1 இப்பாடலின் தொடக்கத்திலேயே செவி சாய்க்கப்பட வேண்டும், தனது மன்றாட்டு ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று தாவீது விண்ணப் பிக்கிறான். அவனுடைய வருத்தந் தோய்ந்த கூக் குரல் விண்ணகத்தை நோக்கி இறக்கை கட்டிப் பறக்கிறது. கர்த்தர் விரைவாகத் தன்னிடத்திற்கு வரவேண்டும், கவனமாகத் தனது மன்றாட்டைக் கேட்க வேண்டும் என்று அவன் முறையிடுகிறான்.

141:2 இந்த வசனம் மிதமிஞ்சிய வகையில் அழகு பொருந்தியாக இருக்கிறது. அவனுடைய **விண்ணப்பம்** தேவனுக்கு மனமகிழ்ச்சி உண் டாக்கும் நற்கந்தமாகவும் **தூபமாகவும்** விளங்க வேண்டும், வேண்டுதலோடு அவன் உயர்த்துகிற கை கர்த்தருக்குச் செலுத்தப்படுகிற **அந்திப்பலி யின்** விளைவை உண்டுபண்ண வேண்டும் என்பதே அவனுடைய மன்றாட்டு.

141:3,4 இப்பொழுது அவன் பொதுவான விசயங்களிலிருந்து குறிப்பிட்ட விசயங்களை நோக்கிச் செல்கிறான். சொல்லிலும் செயலிலும்

இறைப்பற்று அற்ற மக்களோடு கூட்டுறவு வைத்துக் கொள்வதிலிருந்து தான் காக்கப்பட வேண்டுமென்பது அவனுடைய முதலாவது முக்கியமான கவலை. எந்தத் தவறான சொல்லும் தனது **வாயினின்று** தப்பி வெளிவரக் கூடாதென்றும், கர்த்தரை மேன்மைப்படுத்தாத பேச்சு வெளிவராதபடி **உதடுகளின் வாசல் காக்கப்பட** வேண்டுமென்றும் அவன் விண்ணப்பிக்கிறான். மேலும் **அக்கிரமம்** செய்யும் மனிதர்களின் நடத்தைகளில் பெருவிருப்பம் கொண்டு அவர்களுக்கு ஒத்து ழைப்புத் தரக்கூடிய **இருதயத்திலிருந்து** தனக்கு விலக்கு வேண்டுமென்று அவன் விண்ணப்பிக் கிறான். அவர்களுடைய செய்கைகள் எவ்வளவு தான் கவர்ச்சியாக இருந்தாலும் அல்லது தூண்டி விடக்கூடியவையாக இருந்தாலும் தனது சொந்த நலன் கருதி அவற்றில் பங்கு பெறுவதை அவன் விரும்பவில்லை.

141:5 தெய்வப்பற்று மிக்க நண்பர்களின் ஆலோசனைகள், குறைகாணல்கள், கண்டிப்புகள் யாவற்றையும் அறிவுமிக்க மக்கள் வரவேற்பார்கள். பிறரிடம் நாம் காணும் தப்பிதங்களை, நம்மிடத்தில் அவ்வளவு தெளிவாகக் காண அவ்வப்போது தவறிவிடுகிறோம். நம்மிடத்தில் உண்மையாக அக்கறைகொண்டவர்கள் மட்டுமே நம்முடைய குறைவுகளை, "கண்களுக்குப் புலப்படாத" விசயங்களை நம்மிடம் கூற விருப்பப்படுவார்கள். அது அவர்களுடைய **தயவு** என்று கருதி, நமக்கு ஏற்ற மருந்தாக வரவேற்க வேண்டும்.

ஆனாலும் என் மன்றாட்டு எப்பொழுதும் தீயோரின் செய்கைகளுக்கு விரோதமாகவே இருக்கிறது (இலகு தமிழ்).

மேலே உள்ள பகுதிக்கும் இதற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. தாவீது இன்னமும் 4 -ஆவது வசனத்தில் குறிப்பிட்ட தீயோரின் குற்றச் செயல்களின் திட்டங்களுக்கு எதிராக விண்ணப்பம் செய்கிறான் என்றே தோன்றுகிறது. திருவாளர் டார்பி இதனைக் கீழ்க்கண்டவாறு மொழிபெயர்த்திருக்கிறார்:

"அவர்கள் இக்கட்டுகளில் நான் இன்னும் ஜெபம் பண்ணுவேன்."

(நாம் பயன்படுத்தும் தமிழ் வேதத்தில் இவ்வாறுதான் உள்ளது.) தயவாகத் தன்னை கடிந்து கொள்கிறவர்களுடைய வாழ்க்கையில் இடர்ப்பாடுகள் ஏற்படுகிறபோது அவர்களுக்காகத் தாவீது ஜெபிப்பதாகக் கூறுகிறான், இதுவே இங்கு காணப்படும் கருத்து. அவனுடைய பகைவர் துன்பங்களைச் சந்திக்கும் வேளையில் தாவீது அவர்களுக்காக ஜெபித்தான் என்பதே பொருள் என்று சிலர் கருதுகிறார்கள். ஆனால் அத்தகைய பெருந்தன்மையுள்ள கிறிஸ்தவப் பண்புக்கு எதிரான சொற்களே 10 -ஆவது வசனத்தில் காணப்படுகின்றன.

141:6 அவர்களுடைய நியாயாதிபதிகள் கன்மலைச் சார்புகளிலிருந்து தள்ளுண்டு போகிறபோது, என் வார்த்தைகள் இன்பமான வையென்று கேட்பார்கள்.

அவர்களுடைய நியாயாதிபதிகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் பெரும்பாலும் பொல்லாத கூட்டத்தாரின் தலைவர்கள் என்றே தோன்றுகிறது. தவிர்க்க முடியாமல் அவர்கள் தங்களுக்கு நியமிக்கப்பட்ட அழிவை அடைகிறபோது, மற்ற பாவிகள் தாவீதின் சொற்கள் உண்மையானவை என்று அறிவார்கள்.

141:7 ஒருவன் உழுது நிலத்தைப் பிளக்கிற போது நிகழ்வது போல, **எங்கள் எலும்புகள்** கல்லறையின் **வாய்க்கு நேராகச் சிதறடிக்கப் பட்டுள்ளன.**

இங்கே இஸ்ரவேலின் பகைவரிடத்திலிருந்து யூத மக்களை நோக்கியே ஆய்வுப்பொருள் திரும்பியிருப்பதாகத் தோன்றுகிறது. அவர்களுக்கு ஏற்பட்ட துன்பம் நிலத்தை உழுகின்ற போது நிகழ்வது போல இருந்தது. இப்பொழுதோ அவர்களுடைய எலும்புக் கூடுகளைத் தவிர வேறு எஞ்சியது எதுவும் இல்லை. பாதாளமானது அந்த **எலும்புகளை** விழுங்கும்படி தனது **வாயைத்** திறந்து வைத்திருக்கிறது. இப்பகுதி எசேக்கியேல் உலர்ந்த எலும்புகளைத் தனது தரிசனத்தில் கண்டதை நமக்கு நினைவுபடுத்துகிறது, அது இஸ்ரவேலைக் குறிக்கிறது என்பதில் ஐயமில்லை (எசே. 37:1-14).

141:8-10 கடைசி மூன்று வசனங்களில், தனக்கு விடுதலை வேண்டுமென்றும், அவனுடைய பகைவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டுமென்றும் தாவீது விண்ணப்பிக்கிறான். அவனுடைய எதிர்பார்ப்பு கர்த்தரிடத்திலிருந்து மட்டுமே வரவேண்டும், அடைக்கலம் பாதுகாப்பு ஆகியவற்றிற்கான நம்பிக்கை தேவனிடத்தில் மட்டுமே இருக்கின்றன. ஆகவே துன்மார்க்கர் விரித்திருக்கும் கண்ணியிலிருந்து தான் தப்புவிக்கப்பட வேண்டுமென்றும், அவர்களே அதில் சிக்க வேண்டுமென்றும் விண்ணப்பிக்கிறான்.

சங்கீதம் 142: ஒரு மனிதனும் அக்கறைகொள்ளவில்லை

எதிரிகளால் துரத்துண்டு, நண்பர்களால் கைவிடப்பட்டு, ஒரு குகையில் தப்பிக்க வழி யின்றி அடைப்பட்டுக் கிடக்கிற **தாவீதை** நாம் இப்பொழுது காண்கிறோம்.

142:1,2 அவன் தனியாக இருந்தபோதிலும் சத்தமிட்டு மன்றாடுகிறான். கைவிடப்பட்ட மனித னின் கூக்குரல் அடிநிலக் குகையிலிருந்து எதி ரொலிக்கிறது. அவன் தன்னுடைய **சஞ்சலத்தை** கர்த்தருடைய **முன்னிலையில்** ஊற்றுகிறான்- அவன் ஏதோ கோபமாகவோ மனக்கசப்புடனோ இருக்கிறான் என்பதல்ல பொருள், தன்னுடைய எல்லா நெருக்கங்களையும் வருத்தங்களையும் கர்த்தரிடம் சொல்லிவிட வேண்டுமென்பதே அவ னுடைய விருப்பம். அவனுடைய சக்தியெல்லாம் அவனை விட்டு நீங்கிப்போனபோது, அவன் என்ன நிலையில் இருக்கிறான் என்பதை யெகோவா அறிந்திருக்கிறார் என்னும் உண்மை அவனுக்கு ஆறுதல் தருகிறது.

142:3,4 அவனுடைய கடுந்துயரக் கதையில் முக்கியமான ஓர் அம்சம் அவனுடைய பகைவர் களிடத்திலிருந்து வரக்கூடிய இடைவிடாத அச் சுறுத்தல் ஆகும். அவன் நடக்கிற பாதை என்று அவர்கள் எண்ணிய இடத்தில் அவர்கள் கண் ணியை வைத்திருந்தார்கள். அவன் வலப்புறம் திரும்பிப் பார்க்கிறபோது, அதாவது, பரிந்துபேசு பவர் அல்லது உதவிபுரிபவர் யாரேனும் இருக் கிறாரா என்று பார்க்கிறபோது அங்கே ஒருவரும் இல்லை. நம்பிக்கையற்ற நிலையிலிருந்த அவ னுடைய தேவையை அறிந்தும் அவர்கள் அலட்சியப்படுத்துகிறார்கள். அவனுடைய உயி ரைக் குறித்து ஒருவரும் பொருட்படுத்தவில்லை. **"என் ஆத்துமாவை விசாரிப்பார் ஒருவரும் இல்லை"** நிச்சயமாக மனவேதனையுடன் கூடிய கூக்குரல்; தன்னலமிக்க, தங்களையே முக்கியப் படுத்தும் சமுதாயம் - இதற்கு எதிரான பயங்கர மான குற்றச்சாட்டு - ஒருவேளை இன்றைக்கு இந்தக் கூக்குரல் உறங்குகிற சபைக்கு எதிரான குற்றச்சாட்டு எனத் தோன்றுகிறது.

142:5-7 மனிதர்களிடையே அடைக்கலம் தருவோர் ஒருவரும் இல்லையெனில், அவனால் **கர்த்தரிடம்** திரும்ப முடியும். அவர் நம்புதற்குரிய **அடைக்கலமாகவும் ஜீவனுள்ளோர் தேசத் தில்** நன்மையான **பங்குமாகவும்** இருக்கிறார். ஆகவே ஆபத்திலிருந்து தன்னை விரைவாக விடுவிக்கும் பொருட்டு கர்த்தர் வரவேண்டு மென்று தாவீது விண்ணப்பிக்கிறான், ஏனெனில் அவன் பாறையின் விளிம்பில் தொங்கிக்கொண்டி ருக்கிறான். அவனைப் பின்தொடருகிறவர்கள் அதிகாரத்தின் தராசைப் பிடித்துக் கொண்டிருக் கிறார்கள், ஆகவே கர்த்தர் அந்தத் தராசை அவ னுக்கு ஆதரவாகச் சாய்க்கும்படி வேண்டுகிறான். நாடு கடத்தப்பட்ட நிலையிலிருந்தும், துன்பத் திலிருந்தும் யெகோவா அவனை விடுவிக்கிற போது, அவன் எவ்வளவு நன்றியுள்ளவன் என் பதை வெளிப்படுத்துவான்.

அவனுக்கு நன்மை செய்கிறவராகக் கர்த்தர் செயல்பட்டபோது, விசுவாசிகளும் அவனைச் சூழ்ந்துகொண்டு அவனோடு சேர்ந்து அவருக்கு நன்றி செலுத்தினார்கள். "நாம் துன்பப்படுகிற வேளைகளில் நம்மைக் காப்பாற்ற இயலாதவர் கள், நம்முடைய வெற்றியில் பங்குபெறக் கூடும்" என்று திருவாளர் கிளார்க் கூறுகிறார்.[102]

சங்கீதம் 143: வானவில் போன்ற பரந்த மன்றாட்டு

பன்னிரண்டு வசனங்கள் கொண்ட ஒரு சங் கீதத்தில் வெவ்வேறான பல கருப்பொருட்களும் மனநிலைகளும் தொடப்படுவது பெரும் வியப் பைத் தருகிறது. இங்கு நாம் பெற்றிருப்பவை:

143:1 *செவிமடுக்க வேண்டும் என்னும் பொதுவான வேண்டுதல்.* "கேளும்... செவி கொடும்... உத்தரவு அருளிச்செய்யும்." சொற் களுக்குப் பஞ்சமில்லை, ஆனால் வலியுறுத்து வதில் வேற்றுமை. தேவன் தமது **உண்மையின் படியும்** (வாக்குறுதிகளுக்கேற்ப), தமது **நீதி யின்படியும்** (பாதுகாப்பற்ற தமது ஊழியனுக்குப் பாதுகாப்பளிப்பது அவருக்கு நேர்மையானது) தனக்கு உத்தரவு அருளிச் செய்ய வேண்டு மென்று தாவீது விண்ணப்பிக்கிறான்.

143:2 *தவறுக்காக வருந்துதல்.* தேவன் தன்னை நியாயந்தீர்ப்பதை அவன் விரும்பவில்லை. அது பேரிடராக முடிந்துவிடும். எல்லோரும் பாவிகளே. தேவன் எதிர்பார்க்கிற முழுநிறைவான நீதியை ஒருவராலும் தானாகவே உண்டுபண்ண முடி யாது. ஆகவே மனிதன் தன்னை தேவனுடைய கிருபையினிடத்தில் ஒப்படைக்க வேண்டும்.

நாம் நம்முடைய பாவங்களை ஒப்புக்கொண்ட வர்களாக, தகுதியற்ற நிலையில், செய்த பாவங் களுக்காக மனஉலைவு அடைந்தவர்களாக, பாவத்திலிருந்து நம்மை இரட்சிக்கிறவராகக் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவரிடம் வருகிற

போது, தேவன் தமது சொந்த நீதியை நம் கணக்கில் வரவு வைக்கிறார்; நாம் கிறிஸ்துவுக்குள் விண்ணகத்திற்குத் தகுதிபெறுகிறோம்.

143:3 *கடுமையான நெருக்கடி*. சூழ்நிலை மிகவும் கடுமையாயிருக்கிறது. எதிரி இரக்கமற்ற முறையில் அவனைப் பின்தொடருகிறான். தான் **தரையோடே நசுங்கி** அடிப்பட்டவனைப் போன்ற உணர்வு அவனுக்கு ஏற்பட்டது. அவனைத் துன் புறுத்தியவர்கள் அவன் தனியாக வாழும்படியான ஒரு நிலைக்குத் தள்ளிவிட்டார்கள். பழங்காலத் துச் செத்த உடல்கள் கல்லறையில் தனித்து விடப்பட்டதுபோல அவன் இருளில், தன்னை ஒளித்துக்கொண்டவனாக, எல்லோராலும் மறக் கப்பட்டவனாகத் தனித்திருந்தான்.

143:4 *நம்பிக்கையிழந்த நிலை*. இன்னும் கூடுதலாகத் தன்னால் தாங்க முடியாது என்று அவன் அஞ்சுகிறான். அவனுடைய ஆவி சரண டைய ஆயத்தமாயிருக்கிறது, அவனுடைய இருத யம் உணர்வு இழந்த நிலைக்குப் போய்விட்டது.

143:5 *முந்தின நிகழ்வுகளின் நினைவு*. முந் தின நாட்களில் தேவன் அவனுக்கும் இஸ்ரவேல் இனத்துக்கும் கொடுத்த வல்லமையான வெற்றி களை அவன் நினைவுகூருகிறான். அந்த நேரங் கள் இப்பொழுது எங்குபோயின?

143:6 *ஊக்கம்*. அவனுடைய ஜெபத்தின் கபடற்ற தன்மையும் பேரார்வமும் தேவனை நோக்கி அவன் தனது கைகளை விரித்த செய்கை யால் வெளிப்படுகின்றன.

தீவிரம். அவன் தேவனுக்காகத் **தாகமா யிருந்தான்**. அது வறண்ட நிலம் புதுப்பொலி வூட்டும் நீருக்காகத் தாகமாயிருப்பது போலிருந் தது.

143:7 *உடனடித் தேவை*. அவனைக் காப் பாற்றுவதற்குக் கர்த்தர் உடனடியாகச் செய லாற்ற வேண்டும், இல்லையேல் வெகுநாட்கள் அவனால் உயிர்வாழ முடியாது என்பது நிச்சயம்.

தயவுபாராட்டும்படி வேண்டுதல். தேவன் தமது முகத்தை மறைத்துக் கொண்ட செயல், அது கோபத்தாலோ அக்கறையின்மையாலோ இருந்தாலும், மரணத்துக்கு இணையானது.

143:8 *காருண்யத்தை நாடி வேண்டுதல்*. நிலையான அன்புடன் கூடிய சொற்களோடும் தொனியோடும் தேவன் விரைந்து வந்து தன் னோடு பேசுவதைக் கேட்க வேண்டுமென்று அவன் வாஞ்சிக்கிறான். **"அதிகாலையில்"** என்னும் சொல் உடனடியாக அல்லது தாமதம் செய்யாமல் என்று பொருள்படும்.

வழிநடத்துதலுக்கான மன்றாட்டு, வாழ்க் கையின் பொன்மொழியாக ஒவ்வொருவரும் இந்த வசனத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று ஒருவர் கூறினார்: **"நான் நடக்க வேண்டிய வழியை எனக்குக் காண்பியும்; உம்மிடத்தில் என் ஆத்துமாவை உயர்த்துகிறேன்."** தெய்வீக வழிநடத்துதல் இன்றியமையாதது. நாம் வழியை அறியாதிருக்கிறோம் அல்லது நமக்கு எது சிறந் தது என்பதை அறியாதிருக்கிறோம். தேவனால் வழிநடத்தப்பட்ட வாழ்க்கை பயன் விளைவிப்ப தாகவும், மகிழ்ச்சி நிறைந்ததாகவும் இருக்கும்.

143:9 *வெற்றிக்கான விண்ணப்பம்*. பகை வரின் அச்சுறுத்தல், தனக்குப் பாதுகாப்பும் உதவி யும் தேவை என்று கர்த்தரிடம் தாவீது கூக்குர லிட்டு மன்றாடும்படி செய்தது. தனது பாதுகாப்புக் காக அவன் வேறு எவரையும் சார்ந்திருக்க வில்லை, கர்த்தரையே சார்ந்திருந்தான். இவ்வித மான தனித்தன்மை வாய்ந்த நம்பிக்கை அவனு டைய மன்றாட்டுக்கு அடித்தளமாயிற்று.

143:10 *அறிவுரை நாடி வேண்டுதல்*. தேவ னுடைய சித்தம் என்னவென்று அறிவது மட்டு மின்றி (வச. 8), அந்தச் சித்தத்திற்குக் கீழ்ப்படி வதற்கான பயிற்சி பெற்ற இருதயமும் வேண்டு மென்று பாடலாசிரியன் வேண்டுகிறான். தேவன் அவனுடைய தேவன். படைப்பு தனது படைப் பாளருக்குக் கீழ்ப்படிவதைக் காட்டிலும் சிறந்த செயல் வேறு என்ன இருக்கமுடியும்?

சமமான பாதை வேண்டுமென்னும் விண் ணப்பம். ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட வாய்ப்புண்டு. ஆனால் தாவீது பெற்றது போன்ற கரடுமுரடான பாதை ஒவ்வொருவருக்கும் உண்டாவதில்லை. சமதள மான பாதையில் கர்த்தருடைய நல்ல ஆவி தன்னை வழிநடத்த வேண்டுமென்று அவன் விரும்பு கிறான். அதாவது எந்த விதமான பேராபத்தோ பேரிடரோ தன்னைத் தாக்குவதற்கான சூழ்நிலை உண்டாகக் கூடாது என்பதே அவன் வேண்டுதல்.

143:11 *தீமையிலிருந்து காக்கப்பட வேண்டு மென்னும் விண்ணப்பம்*. தான் தொடர்ந்து கெடாமல் காக்கப்பட வேண்டும் என்பதை தேவனுடைய மகிமையோடு (**"உம்முடைய நாமத்தினிமித்தம்"**) தொடர்புபடுத்துகிற பாடலா சிரியன், சர்வவல்லவருடைய கையையும் இரு தயத்தையும் அசைக்கும்படி மிகவும் வலிமை யான நெம்புகோல்களில் ஒன்றைப் பயன்படுத்து

கிறான். அதுபோலவே இடுக்கத்திலிருந்து அவன் மீட்கப்படுவதற்குக் காரணமாக தேவனுடைய **நீதியைச்** சுட்டிக்காட்டுகிறான். இது ஆற்றல் மிக்க ஜெபம்.

143:12 ***பகைவர் செய்த தவறுக்குத் தண்டனை.*** இறுதியாக தேவன் தமது **கிருபையை** வெளிப்படுத்திக் காட்டும்படி அவனுடைய பகை வரைக் கண்டுபிடித்து அழிக்க வேண்டுமென்று அவன் விண்ணப்பிக்கிறான். கிருபை அழித்தல் ஆகியவை ஒன்றுக்கொன்று முரண்பட்டவை யாகத் தொனிக்கின்றன, நாம் கீழ்க்காணும் உண்மையை நினைவுகூரவேண்டும்:

> தீயோர் அழிக்கப்படுதல் பிரபஞ்சத்திற்கு நன்மை பயக்கும்; ஒரு கொள்ளைக்காரன் கைதுசெய்யப்பட்டு தண்டனை வழங்கப்படுவது சமுதாயத்திற்கு, மனுக்குலத்திற்குச் செய்யப்படுகிற கிருபையாகும். ஒவ்வொரு சிறைச் சாலையும் கிருபை நீதி ஆகியவற்றின் காட்சிப் பொருளாகும், அது பெருமளவு சமுதாயத்திற்குச் செய்யப்படுகிற கிருபை; குற்றவாளிகளுக்கான நியாயத்தீர்ப்பாகவும் அது விளங்குகிறது.[103]

தாவீது யெகோவாவின் அடியான் என்னும் உண்மையின் அடிப்படையில் விடுவிக்கப்பட்டதே இந்தக் கடைசி வேண்டுகோள். அவன் கர்த்தரைச் சேர்ந்தவன். அவன் கர்த்தருக்கு ஊழியம் செய்கிறான். அவனுடைய பகைவர் அகற்றப்படுவதன் மூலமாகவே தன்னால் தொடர்ந்து பணி புரிய முடியும் என்று அவன் நினைக்கிறான்.

சங்கீதம் 144: மகிழ்ச்சி நிறைந்த மக்கள்

பிற சங்கீதங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்ட பகுதிகளினாலே பெரும்பாலும் இந்தச் சங் கீதம் எழுதப்பட்டிருந்தாலும், இது நோக்கமற்ற முறையில் ஏனோதானோவென்று தொகுக்கப் பட்டதன்று. மெய்யான தொடர்ச்சி இதில் உள் ளது.

144:1,2 வாழ்க்கையின் போர்களில் தனக்குத் தேவையான எல்லாவற்றிற்குமாகத் தாவீது தேவனைக் கனப்படுத்துகிறான். பகைவனோடு நேருக்கு நேர் எதிர்த்து நிற்பதில் திறமையையும் சாமர்த்தியத்தையும் கற்பிப்பவர் கர்த்தரே ஆவார். கர்த்தர் அவனுடைய கன்மலை, அவனுடைய தயாபரர், அவனுடைய கோட்டை, அவனுடைய உயர்ந்த அடைக்கலம், அவனை விடுவிக்கிறவர், அவனுடைய கேடகம், அவன் நம்பினவர், அவனுடைய வெற்றி. இதற்குமேல் அவனுக்கு என்ன தேவை, என்ன விருப்பம் இருக்க முடியும்?

144:3,4 தேவனுடைய மகாபெரிய நிலை யோடு ஒப்பிடுகையில் மனிதன் முற்றிலும் அற்ப மானவன். தேவன் மனிதனைக் கவனித்துப் பார்க்கிறார் என்னும் விசயமே ஆச்சரியப்படத்தக் கது. ஒரு குளிர்ச்சியான நாளில் சடிதியில் மறைந்து போகிற ஒரு மூச்சைப் போல, **கடந்துபோகிற நிழலைப்** போல அவன் இருக்கிறான். இது மனுக் குலம் முழுவதுக்கும் உண்மையானது. ஆனால் தாவீது ஒருவேளை தனது பகைவரைப் பற்றி இவ்வாறு சிந்திக்கிறான் போலும்.

144:5-8 வெல்வதற்கு இயலாத தேவன் அவருடைய அற்பமான எதிரிகளை நோக்கி வெற்றிநடை போடுகிற தருணத்தைக் குறித்துத் தாவீது விண்ணப்பிக்கும்படி மேற்காணும் செய்தி வழிநடத்துகிறது. ஆனால் கண்களுக்குப் புலப் படாத தேவனுடைய வருகையை எவ்வாறு உங்க ளால் விவரிக்க முடியும்? இயற்கை முழுவதும் அதிர்ந்து, பிரபஞ்சமே நடுங்கும்படியான தேவனு டைய மனுவுரு வருகையை மேலோட்டமாக வருணிப்பதே ஒரே வழி. தேவன் இறங்கிவருகிற போது **வானங்கள்** தங்களைத் **தாழ்த்துகின்றன**. அவர் மலைகளைத் தொட, அவற்றிலிருந்து எரிகுழம்பு பீறிட்டு எழுகிறது. **மின்னல்கள்** சர்வ வல்லவர் எய்கிற அம்புகளாக வானத்தை ஊடு ருவிச் செல்லுகின்றன. பகைவன் தாறுமாறாக் கப்பட்டு சிதறுண்டு போன பின்னர், தேவன் இறங்கி வந்து சீறி எழுந்து அலைபோல வருகிற இடுக்கண்களிலிருந்து தாவீதை விடுவிக்கிறார். நீடித்த காலமாகப் பொய் பேசிவருகிற வெளிநாட் டுப் பகைவர்களின் கையிலிருந்து அவர் அவனை விடுவிக்கிறார். அவர்கள் பொய் பேசுவதற் காகவே தங்களுடைய **வலதுகையை** உயர்த்து கிறார்களேயொழிய உண்மையை உறுதிப் படுத்துவதற்காக அல்ல.

144:9-11 தான் தப்புவிக்கப்பட்டதற்காக, பாடலாசிரியன் கர்த்தருக்கு ஒரு **புதுப்பாட்டைப் பாடுவான்**. பத்து நாண்கள் உள்ள யாழின் மூலமாக, பொல்லாத பட்டயத்தைக் கொண்டு தாக்க வந்த அந்நிய நாட்டுப் பகைவரிடமிருந்து தன்னைக் காப்பாற்றியவரை அவன் உயர்த்து வான். ஆணையிட்டு உண்மையைச் சொல்லும் படி கட்டளை பெற்ற பிறகும் இவர்கள் வழக்க மாகப் பொய்கூறும் மனிதர்கள்.

144:12 சதியாலோசனை செய்யும் இந்தக் கூட்டத்தாரிடமிருந்து அரசன் விடுவிக்கப்பட்ட

போது, இங்கு கூறப்பட்டுள்ள மிகச்சிறந்த நிலையை அரசு அனுபவிக்கும். உண்மையில் கர்த்தர் இப்பூமிக்குத் திரும்பி வந்து, கலகக் காரரையெல்லாம் அழித்து, தமது ஆயிரமாண்டு ஆட்சியை நிறுவும்வரை கூறப்பட்டுள்ள சிறந்த நிலை முழுவதுமாக நிறைவேறாது.

முதலாவதாக, குடும்பங்கள் உரம் பெற்று சிறந்து விளங்கும். **குமாரர்கள்** உடலுரம் பெற்ற வர்களாக, அழகும் வலிமையும் கொண்ட ஓங்கி வளருகிற மரங்களைப் போல இருப்பார்கள். பெண் மக்களும் சிலைபோன்று அழகுமிக்கவர்களாக செதுக்கப்பட்ட **அரண்மனைத்** தூண்களைப் போல இருப்பார்கள்.

144:13-15 அடுத்ததாகப் பயிர்த்தொழில் உற் பத்தி பெருமளவு இருக்கும். எல்லாவிதத் தானி யங்களாலும் விளைச்சல்களாலும் களஞ்சியங் கள் நிறைந்திருக்கும். வயல்களில் பதினாயிரம் ஆடுகளுள்ள மந்தைகள் தங்கும் அளவிற்கு ஆடுகளின் இனப்பெருக்கம் பெருமளவு நிகழும். மாடுகள் தவறாமல் ஈனும் அல்லது எருதுகள் பெருஞ்சுமையையும் தாங்கும் அளவு வலிமை யானவையாக இருக்கும். **"சத்துரு உட்புகுதலும் குடியோடிப் போகுதலும் இராது," "வீதிகளில் கூக்குரலும் உண்டாகாது"** ஆகிய சொற்றொடர் கள், நாடு அந்நியத் தாக்குதலுக்குட்பட்டு மக்கள் வேறு நாடுகளுக்குக் குடியேறுதல், ஆர்ப்பாட் டங்கள் கலகங்கள் வீதிகளில் நிகழா என்றே பொருள்படும்.

இணையற்ற மகிழ்ச்சியின் படவுருவே இது. யெகோவாவைத் தங்களுடைய தெய்வமாகக் கொண்டிருக்கிற மக்களுக்குச் சொந்தமான மகிழ்ச்சியே இது.

சங்கீதம் 145: காணாமற்போன 'ந'

தாவீதின் "ஸ்தோத்திர சங்கீதம்" எபிரெய மொழியின் அகர வரிசையில், ஒவ்வொரு வசன மும் எபிரெய மொழி எழுத்துகளை வரிசையாகக் கொண்டு எழுதப்பட்டது. ஆயினும் பாரம்பரிய (masoretic) எபிரெய மொழிப் பிரதியில் "ந" என்ற எழுத்துக்கு இணையான "நுன்" என்ற எழுத்து 13 மற்றும் 14 ஆகிய வசனங்களுக்கிடையே இடம் பெறவில்லை. கிரேக்கு, சிரியாக், லத்தீன் ஆகிய மொழிப் பிரதிகளில் கீழ்க்காணும் வசனம் அந்தக் குறிப்பிட்ட இடத்தில் காணப்படுகிறது:

> கர்த்தர் தம்முடைய எல்லா வாக்குத்தத்தங் களிலும் உண்மையுள்ளவராய் இருக்கிறார்; அவர் படைத்த அனைத்தின் மேலும் அன்பு டையவராய் இருக்கிறார். (இலகு தமிழ்)

எபிரெய மொழிப் பிரதியில் காணாமற்போன "நுன்" என்னும் வரி இருபதாவது நூற்றாண்டில் கண்டெடுக்கப்பட்ட சாவுக்கடல் சுருளில் இடம் பெற்றுள்ளது.

145:1-3 கர்த்தர் மகத்துவமானவர் என்பதே இப்பாடலின் கருப்பொருள் ஆகும். தனது இறை வனும் அரசருமானவரை இன்றும் **(நாள் தோறும்)** நித்தியத்திலும் **(என்றென்றைக்கும்) புகழ்ந்து யர்த்தவும் துதிக்கவும் பாராட்டவும்** பாடலாசிரி யன் பரிசுத்த தீர்மானத்தில் முற்றிலும் ஆட்கொள் ளப்பட்டிருந்தான். அவனுடைய முடிவற்ற பாடலின் சாரம் தேவன் **பெரியவர்** என்பதே, பெரியவர் என் னும் அவருடைய பண்பு பெரிதான புகழ்ச்சிக்குத் தகுதியானது. அவருடைய **மகத்துவம்** அளவில் எல்லைகடந்தது.

145:4 அவருடைய **செயல்களையும், வல்ல மையான செய்கைகளையும்** ஒரு **தலைமுறை யினர்** அடுத்த **தலைமுறையினருக்குச்** சொல் லிப் புகழ்வார்கள். இந்தப்பாடல் ஒருபோதும் முடி வடையாது.

145:5 வெற்றியை ஈட்டுத்தருகிற தேவனுடைய **அதிசயச்செயல்**களின் மூலமாக வெளிப்படுத் தப்பட்டுள்ள அவருடைய மகத்துவத்தின் **மகி மைப் பிரதாபத்தைப்** பாடலாசிரியனே நன்றி யுணர்வுடன் தியானிப்பான்.

145:6 தேவனுடைய **பயங்கரமான** நியாயந் தீர்க்கும் **செய்கைகளை** மனிதர்கள் மீண்டும் மீண்டும் எடுத்துரைப்பார்கள். தாவீதோ கர்த்தரு டைய **மகத்துவத்தைத்** தொடர்ந்து அறிவிப்பான்.

145:7 கர்த்தருடைய **மிகுந்த தயவை** எங்கு முள்ள மக்கள் உற்சாகத்துடன் புகழ்ந்து பேசு வார்கள். அவர்களுடைய மகிழ்ச்சியின் கீதத்தின் கருப்பொருள் அவருடைய நீதியின் மகத்துவமே ஆகும்.

145:8 கர்த்தருடைய மகத்துவம் அவருடைய கிருபை மற்றும் இரக்கம் ஆகிய பண்புகளின் விரிவாக்கமாகும். அவர் தன்னடக்கத்தில் மற்றும் **மனஉருக்கத்தில்** பெரியவர்.

145:9,10 அவருடைய தயவு **எல்லோருக்கும்** விரிவடைந்துள்ளது, அதில் பாரபட்சம் இல்லை. அவர் தமது படைப்புகள் எல்லாவற்றின்மேலும் **இரக்கம்** பாராட்டுகிறார், ஒருவரும் விடப்பட வில்லை.

அவருடைய கிரியைகள் சத்தமிடாமல் அவ ருக்கு நன்றி செலுத்துகின்றன. அவற்றின் உள

தாம் தன்மையே அவருடைய ஞானத்தையும் வல்லமையையும் வெளிப்படுத்துகிறது. அவருடைய முடிவற்ற நிறைவுகளுக்காக அவரைப் புகழ்ந்து துதிப்பதில் அவருடைய பரிசுத்தவான்களும் சேர்ந்துகொள்கிறார்கள்.

145:11-13 அடுத்ததாக அவருடைய அரசின் மகத்துவம் கூறப்பட்டுள்ளது. அவருடைய அரசு **வல்லமையும் மகிமையும்** கொண்டது. அவருடைய செய்கைகளின் மகத்துவத்தையும், அவருடைய ஆட்சியின் மகிமைப் பிரதாபத்தின் நிறைவையும் குறித்து அவருடைய சொந்த மக்கள் மனுக்குலத்தில் எஞ்சிய மக்களுக்கு அறிவிப்பார்கள். அவருடைய அரசு என்றென்றுமிருக்கும், தலைமுறை தலைமுறையாக அது நிலைத்திருக்கும்.

145:14 தங்களுடைய வாழ்க்கையின் பாரத்தால் அழுத்தப்பட்டு **விழுகிறவர்களை** அவர் பாதுகாப்பதில் மகத்துவம் நிறைந்தவராக இருக்கிறார். ஒடுக்குவதாலும் துன்பங்களாலும் இறுக்க முற்றவர்களை அவர் **தூக்கிவிடுகிறார்.**

145:15,16 மேலும் அவர் தேவையான பொருட்களை அருளுவதில் மகத்துவம் நிறைந்தவர். எல்லாப் படைப்புகளும் அவரையே சார்ந்து எதிர் நோக்கிப் பார்க்கின்றன. அவர் அவற்றிற்குத் தேவையான உணவு தருகிறார் - உணவு உற்பத்தி, ஆயத்தம், பகிர்ந்தளித்தல் இவையாவும் வியத்தகு வகையில் ஒழுங்குபடுத்தப்பட்ட அருஞ் செயல். அவர் தமது கையைத் திறப்பதைத் தவிர வேறு எந்தப் பெரிய செயலையும் செய்ய வேண்டியதில்லை, இப்பிரபஞ்சத்திலுள்ள எண்ணிக்கையில் அடங்கா உயிரினங்கள் அனைத்திற்கும் அவர் உணவளித்துப் பாதுகாக்கிறார். தேவன் எவ்வளவு பெரியவர்!

145:17 அவர் தமது நீதியிலும் தயவுபாராட்டுவதிலும் மகத்துவம் நிறைந்தவர். அவர் செய்கிற எந்தச் செயலும் தவறோ கருணையற்றதோ அல்ல. தேவன் ஒருவரிடத்தில் மட்டுமே இந்த நற்பண்புகள் யாவும் முழுநிறைவாக ஒன்று சேர்ந்துள்ளன.

145:18 அருள்பாலிப்பிலும், அணுகுவதற்கு எளிமையாக இருப்பதிலும், அவர் மகத்துவமுள்ளவர் - அவரை உண்மையாகத் தேடுகிற யாவருக்கும் அவர் அருகில் இருக்கிறார்.

145:19 அவர் தமது இரட்சிப்பில் மகத்துவமுள்ளவர். செய்த தவறுக்கு உளநைவு கொண்டு விசுவாசத்தோடு வருகிற எவரையும் அவர் புறந்தள்ளுவதில்லை.

145:20 அவரிடத்தில் அன்புபாராட்டுகிற யாவரையும் கவனித்து அக்கறை செலுத்துவதில் அவர் மகத்துவம் நிறைந்தவர். அவர்களுடைய கவலைகளையெல்லாம் தம்மிடம் வைக்கும்படி அவர் வரவேற்கிறார்.

இறுதியாக, அவர் தமது கோபத்தில் மகத்துவமுள்ளவர். முடிவாக, **துன்மார்க்கர்** யாவரும் அழிக்கப்படுவார்கள்.

145:21 இந்த மகத்துவம் நிறைந்த தேவனை என்றென்றும் துதிக்க, தாவீது தன்னுடைய உள்ளத்தில் தீர்மானித்திருந்தான். மேலும் மற்ற எல்லோரும் அதுபோலவே அவரைத் துதிக்க வேண்டும் என்று அறிவுறுத்தினான்.

இ.ந்து என்னைக் காணாமற்போன 'நுன்' என்னும் எழுத்தைக் குறித்துப் பேசும்படி வழி நடத்துகிறது. இப்பிரபஞ்சத்திலுள்ள அனைத்தும் கர்த்தரைத் துதிக்கையில் காணாமற்போனவராக நீங்கள் இருந்து விடாதீர்கள்!

சங்கீதம் 146: யாக்கோபின் தேவனுடைய புகழ்ச்சி

146:1 முதல் வசனம் இரண்டு கட்டளைகளைக் கொண்டுள்ளது, அங்கே பாடலாசிரியன் தன்னையே "கர்த்தரைத் துதிக்கும்படி" அழைக்கிறான்.

146:2 இரண்டாவது வசனம் இரண்டு அறிவிப்புகளைக் கொண்டுள்ளது. அதில் அவன் கூறுகிறபதில், **"நான் உயிரோடிருக்குமட்டும் கர்த்தரைத் துதிப்பேன், நான் உள்ளளவும் என் தேவனைக் கீர்த்தனம் பண்ணுவேன்"** என்பதாகும். ஒரு மனிதன் தனக்குத் தானே பேசுகிற உரையாடலில் இது மிகச்சிறந்தது.

146:3,4 மனிதனல்ல, தேவனே நம்முடைய முழுமையான நம்பகத்தன்மையுள்ள விசுவாசத்துக்கு தகுதிபடைத்தவர் என்பதற்கான காரணத்தை இந்தச் சங்கீதத்தின் எஞ்சிய பகுதி விவரிக்கிறது. **மனிதனை நம்புவதில்** பயனில்லை, மிகவும் உயர்ந்தவர்கள் என்று கருதப்படுகிற **பிரபுக்களையும்** நம்புவதில் பயனில்லை என்பதை நம்மில் பலர் அவ்வப்போது கற்றிருக்கிறோம். மனிதர்களில் சிறந்தவர்கள் அதிகபட்சம் மனிதர்களாகத் தான் இருக்க முடியும். அவர்களால் தங்களையே இரட்சிக்க முடியாது, மற்றவர்களை அவர்களால்

எவ்வாறு இரட்சிக்க முடியும்? மனிதனுடைய இருதயம் துடிப்பது நிற்கிறபோது அவன் மரண மடைகிறான், அவனுடைய உடல் புதைக்கப்பட்டு மண்ணுக்குத் **திரும்புகிறான்**. அவனுடைய ஆரவாரம் மிகுந்த அனைத்துத் திட்டங்களும் **அழிந்துபோம்.** ஆகவே, மனிதனைக் குறித்து நாம் கூறவேண்டியவை, நம்பத்தகாதவன், ஆற்ற லற்றவன், நிலையற்றவன், சாவுக்கேதுவானவன்.

146:5 யாக்கோபின் தேவனைச் சார்ந்திருப்பதே மகிழ்ச்சிக்கும், உதவிக்கும், நம்பிக்கைக்கும் ஒரே வழி ஆகும். அதாவது, தகுதியற்றவனாகிய மனிதனின் தேவன். அவர் நமது நம்பிக்கைக்குத் தகுதியுள்ளவர் என்பதற்கான சில காரணங்கள் இங்கு கூறப்பட்டுள்ளன:

146:6 *சர்வ வல்லமையுள்ள படைப்பாளர்.* அவர் இப்பிரபஞ்சத்தின் வானங்களையும், **பூமி யையும்**, கடலையும் உயிரினங்களையும் **உண் டாக்கினார்.** இவை அனைத்தையும் அவரால் செய்ய முடியுமென்றால் அவரால் செய்ய முடியா தது எது?

சார்ந்திருப்பதற்கு ஏதுவானவர். **அவர் என் றென்றைக்கும் உண்மையைக் காக்கிறவர்.** அவர் தாம் கூறிய வார்த்தையிலிருந்து பின் வாங்கமாட்டார். அவரால் பின்வாங்கவும் முடி யாது. அவரை நம்புவதில் எந்தப் பாதிப்பும் ஏற் படாது. அவரால் கைவிட முடியாது.

146:7 *உதவியற்றவர்களின் வழக்குரைஞர்.* நீதிமான்கள், நியாயமானவர்கள் என்பதை அவர் மெய்ப்பிக்கிறார், முடிவில் அவர்களுடைய வழக்கு வெற்றி பெறும். அலைகள் அவர்களுக்கு எதிராக அடிப்பது போலத் தோற்றமளிக்கும், ஆனால் அவர்களுடைய போக்கே நிச்சயமாக வெற்றியடையும்.

அருள்பாலிப்பவர். **பசியாயிருப்பவர் களுக்கு** அவர் உணவளிக்கிறார். இ.ந்து ஆவிக் குரிய மற்றும் உடல் சம்பந்தமான இரண்டிற்கும் பொருந்தும். அவர் நம்மை அவருடைய விருந்து சாலைக்கு அழைத்துச் செல்கிறார். அவர் பரி மாறுகிற விருந்து எத்தனை சிறப்புடையது!

அடிமைகளுக்கு விடுதலை அளிப்பவர். அவர் அடிமைகளுக்கு விடுதலை பெற்றுத் தரு கிறார் - மனிதர்களுடைய ஒடுக்குதலிலிருந்து, பாவச்சங்கிலியின் கட்டுகளிலிருந்து, உலகத் தின் பிடியிலிருந்து, பிசாசின் கட்டிலிருந்து, சுய நல வாழ்க்கையிலிருந்து விடுதலை பெற்றுத் தருகிறார்.

146:8 *பார்வையளிப்பவர்.* **குருடரின் கண் களைக் கர்த்தர் திறக்கிறார்.** சிலர் சரீரப்பிரகார மாகக் குருடராக இருக்கிறார்கள். சிலர் மன நிலையில், சிலர் பிறப்பில், சிலர் விபத்தில், சிலர் அவர்களுடைய சொந்தத் தெரிந்தெடுப்பால் குருடராக இருக்கிறார்கள் அல்லது மாறிவிடு கிறார்கள். எந்தவொரு நிலையும் கர்த்தருக்குக் கடினமானதன்று.

தூக்கிவிடுபவர். கவலை, உபத்திரவம், தொல்லை, துக்கம் ஆகிய சுமையின் காரணமாக அவற்றிற்குக் கீழாக **மடங்கடிக்கப்பட்டவர்களின்** ஊக்கம் குன்றிய ஆவியைத் தூக்கிவிடுகிறார்.

நல்ல மனிதர்களிடத்தில் அன்புகூருபவர். "இது தேவனுடைய நற்பண்புகளில் ஒன்று, புகழ்ச்சிக்கு அடித்தளம்; சட்டத்திற்குக் கீழ்ப்படி பவரிடமும், எது சரியோ அதைச் செய்பவரிடமும் அவர் அன்புகூருகிறார்" என்று திருவாளர் பார்னஸ் எழுதுகிறார்.

146:9 *நாடுகடத்தப்பட்டவர்களைப் பாது காப்பவர்.* அவர் அந்நியரை, நாடோடிகளை, நாடுகடத்தப்பட்டவர்களைக் குறித்து அக்கறை கொண்டவர். யாத்திரிகர்கள் மெய்யான வழக் குரைஞரை இவரிடத்தில் காண்கிறார்கள்.

இழப்பு ஏற்பட்டவர்களின் நண்பர். அவர் திக்கற்ற பிள்ளைகளையும், விதவைகளையும் தாங்குகிறார். மேலும் மனிதர்களின் உதவி யில்லாதவர்களையும் அவர் தாங்குகிறார்.

தீயோருக்குத் தீர்ப்பு வழங்கும் நீதியரசர். இறைப்பற்று இல்லாத தீய மனிதரின் தந்திரமான திட்டங்களை முறியடிக்கிறார், **துன்மார்க்கரின் வழி** அழிவில் முடிவடையும்படி செய்கிறார்.

146:10 *நிலையான அரசர்.* மனிதனுடைய நிலையற்ற தன்மைக்கு முற்றிலும் மாறானது தேவனுடைய நிலைத்த தன்மை. **கர்த்தர் சதா காலங்களிலும் அரசாளுவார் - தலைமுறை தலைமுறையாக** ஆட்சிபுரிபவர். அல்லேலூயா!

அவரை அறிவதில் நீங்கள் மகிழ்ச்சியோடு இருக்கிறீர்கள் அல்லவா?

சங்கீதம் 147: எருசலேம் புதுப்பித்துக் கட்டப்பட்டது - கர்த்தருக்குத் துதியுண்டாவதாக

பாபிலோனியச் சிறையிருப்புக்குப் பின்னர் எருசலேம் புதுப்பித்துக் கட்டப்பட்டதைக் கொண் டாடும் பாடலாகவே இது பொதுவாக எண்ணப்பட் டது. அது சரியாக இருக்குமென்றால், அரசர் மீண்

டும் வந்து இறுதியாக நகரத்தின் நற்பேற்றைப் புதுப்பித்து, தேசத்தின் செல்வ வளத்தைச் சீராக்கும்போதுதான் இதனுடைய முழுமையான வாக்கு நிறைவுபெறும்.

பாடலின் தொடர்ச்சி பின்வருமாறு:

புகழ்ச்சிக்கான தகுதி (வச. 1).

இஸ்ரவேல் புதுப்பித்துக் கட்டப்படுவதற்கான புகழ்ச்சி (வச. 2-6).

இறைவன் இயற்கையில் செய்கிற நன்மைகளுக்கான புகழ்ச்சி (வச. 7-9).

உடல்வலிமையில் அல்ல, ஆவிக்குரியவற்றில் மனமகிழ்ச்சிகொண்டதற்கானபுகழ்ச்சி(வச.10,11).

எருசலேமுக்கு அவர் தயவு பாராட்டியதற்கான புகழ்ச்சி (வச. 12-14).

இயற்கைச் சக்திகளை கட்டுப்படுத்துவதற்கான புகழ்ச்சி (வச. 15-18).

இஸ்ரவேலுக்கு அவர் செய்த சிறப்பான சலுகைக்கான புகழ்ச்சி (வச. 19,20).

147:1 மனிதனுடைய புதுப்பிக்கப்பட்ட இயல்பு இயற்கையாகவே **கர்த்தரைத் துதிப்பது நல்லது** என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. அது **இன்பமும்** மிகவுயர்ந்த வகையில் **ஏற்றதுமாக இருக்கிறது.**

147:2-4 அவர் புதுப்பித்துச் சீராக்கும் தேவன். அவர் இஸ்ரவேலைப் புதுப்பித்து மீண்டும் கட்டுவதற்காகவும், இஸ்ரவேலிலிருந்து நாடு துரத்தப்பட்ட மக்களை மீண்டும் கூட்டிச் சேர்ப்பதற்காகவும் துதிக்கப்படுகிறார். ஓரினமோ ஒரு தனிப்பட்ட மனிதனோ வீழ்ச்சியடைந்துவிட்டால் தேவன் அவர்களுக்கு முடிவுகட்டிவிட்டார் என்பது பொருளன்று. அவருடைய புதுப்பிக்கும் கிருபை நிறைந்த ஊழியத்தில், அவர் **இருதயம் நொறுங்குண்டவர்களைக் குணமாக்குகிறார், அவர்களுடைய காயங்களைக் கட்டுகிறார்**. மேலும் அவர் **நட்சத்திரங்களை எண்ணி,** அவை ஒவ்வொன்றின் **பெயர் சொல்லி அழைப்பதன்** காரணமாக, அவர் தமது மக்களின் எண்ணிக்கையை அறிந்திருக்கிறார், ஒவ்வொருவரையும் தனிப்பட்ட வகையில் நெருக்கமாக அறிந்திருக்கிறார் என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும்.

மூன்று மற்றும் நான்கு ஆகிய வசனங்களில் அவருடைய மனவுருக்கம் நிறைந்த இரக்கம் கூறப்பட்டுள்ளது; அவருடைய அளவற்ற ஞானத்தைத் தொடர்ந்து இது கூறப்பட்டதன் நிமித்தம் திருவாளர் ஆர்ச்சிபால்ட் G. பிரவுன் வியந்து பாராட்டுகிறார்.

> பரிசுத்த ஆவியானவரே, நீர் எழில்நலம் கொண்ட இரண்டு அறிக்கைகளை தெரிந்தெடுத்து அடுத்தடுத்து வைத்திருக்கிறீர்; வேறு எங்கும் இவ்வாறு தெரிந்தெடுத்த சொற்றொடர்கள் தரப்படவில்லையென்று நாங்கள் உம்மை மதித்துப் போற்றுதலோடு சொல்லத் துணிகிறோம். அவையாவன: "இருதயம் நொறுங்குண்டவர்களைக் குணமாக்குகிறார், அவர் நட்சத்திரங்களின் இலக்கத்தை எண்ணுகிறார்."[104]
>
> பரிந்துபேசி நொறுங்குண்ட
> இதயத்தைக் குணமாக்க ஒருகை
> விரிந்தகன்ற வானத்தில் ஒளிவீசும்
> விண்மீனில் மறுகை,
> இவையிரண்டும் இறைவனது
> பார்வையில் ஒருமித்துக் காட்சிதர
> இவையிரண்டும் அருகருகே இருப்பதுபோல்
> தோன்றிடுதே என்மனதில்.
>
> – M. P. ஃபெர்குஷன்

147:5,6 அவர் மாபெரும் கர்த்தர், ஆற்றலில் வல்லமை மிக்கவர், அறிவில் எல்லை கடந்தவர். அவர் ஒடுக்கப்பட்டவர்களுக்கு புத்துயிர் கொடுத்து இழந்த சக்தியை மீண்டும் பெறச்செய்கிறார். மேலும் அவர்களைத் துன்புறுத்திய துன்மார்க்கரைத் தூக்கி எறிகிறார்.

147:7-9 தேவன் தேவையானவற்றைத் தந்தருளும் இயல்புடையவராக இருப்பதால், அவர் துதிக்கப்படத்தக்கவர். வானங்களில் அவர் மேகத்தை விரிந்து பரவச் செய்வதற்காக நன்றி செலுத்தும்படி நாம் பாடக்கடவோம். மழைக்காகவும், அது பூமிக்குச் செய்கிற நன்மைக்காகவும் அவருக்கு இனிய பாடலைப் பாடுவோம். மலைகளை மூடும்படி வளருகிற புல்வெளிக்காக அவருக்குப் புகழ்ச்சி செலுத்துவோம். **மேகங்கள், மழை, புல்** ஆகியவை செய்கிற முக்கியமான பணிகளைக் குறித்து ஒரு நூலையே இயற்றலாம்.

அவர் மகத்துவமானவராக இருந்தபோதிலும் காட்டுவிலங்குகள் தங்களுக்குத் தேவையான உணவை அவர் தரப் பெறுகின்றன. வருத்தத்தோடு **காக்கைக் குஞ்சுகள்** கரையும்போது அவற்றிற்கு அவர் உணவு தருகிறார்.

147:10,11 உடல்வலிமையைக் காட்டிலும் ஆவிக்குரிய செயல்களுக்கு அவர் முதலிடத்தைத் தருவதற்காக அவருக்குத் துதியைச் செலுத்த வேண்டும். குதிரைப்படையில் பங்குவகிக்கும் குதிரைகளைக் கண்டு அவர் வியப்படைவ

தில்லை. அல்லது வலிமைமிக்க, காலாட்படை வீரனுடைய இறுகிய தசையுடன் கூடிய கால்களைக் கண்டும் அவர் வியப்படைவதில்லை. இந்த உருவகத்தைச் சற்று மாற்றிக் கூறுவோம்; குதிரைப் பந்தயத்தில் ஓடுகிற குதிரைகளில் அவர் மகிழ்ச்சி அடைவதில்லை, ஒலிம்பிக் ஓட்டப் பந்தயத்தில் ஓடுகிற வீரனிலும் அவர் மன மகிழ்ச்சி அடைவதில்லை. ஆனால் தம்மை மதித்து, தமது **கிருபையின்மேல்** நம்பிக்கை வைத்திருப்பவர்கள்மேல் **கர்த்தர் பிரியமாயிருக்கிறார்**.

147:12-14 மேலும் அவர் **எருசலேமின்**மேல் தயவு பாராட்டுவதற்காக அவர் புகழ்ந்து போற்றப்பட வேண்டும். நான்கு குறிப்பிடத்தக்க நன்மைகள் காட்சிக்கு வருகின்றன:

> சமுதாயப் பாதுகாப்பு - வெளிநாட்டுத் தாக்குதலுக்கு எதிராக நகரத்தின் வாசல்களின் தாழ்ப்பாள்களை அவர் பலப்படுத்தியுள்ளார்.
>
> உள்நாட்டு மனநிறைவு - குடியிருப்போர் மகிழ்ச்சியும் நிறைவும் உள்ள வாழ்க்கை வாழுகிறார்கள்.
>
> நாட்டின் அமைதி - நாட்டின் எல்லைகளில் அவர் சமாதானத்தைத் தருகிறார்.
>
> பயிர்த்தொழில் வளம் - உச்சிதமான உணவால் மக்களை மனநிறைவு அடையச் செய்கிறார்.

147:15-18 யெகோவாவைத் துதிக்கும்போது அவர் இயற்கைச் சக்திகள் மேல்கொண்டுள்ள கட்டுப்பாட்டை நாம் மறந்துவிடக்கூடாது. அவர் தமது கட்டளைகளை **அனுப்பும்**போது, அவை உடனடியாக வியத்தகு விளைவுகளை உண்டு பண்ணுகின்றன. **பனியானது**, அது ஏதோ கம்பளிப் போர்வை போல, பூமியை மூடுகிறது. அவர் **சாம்பல்** போன்ற வெள்ளை நிறப் பனித்துகள்களை நிலத்தின்மேல் தூவிவிடுகிறார். **கல்மழையானது** தீவிரமாகக் கீழே விழும்போது மறைவுக்காக விரைந்தோடாமல் யாரால் அதை எதிர்த்து நிற்க முடியும்? பின்னர் அவர் தமது கட்டளையை மாற்றுகிறார், பனியும், பனித்தூளும் உருக ஆரம்பிக்கின்றன. வடகாற்று வெப்பத்தை அதிகரிக்கச் செய்கிறது, இளவேனிற் காலத்தில் பனிக்கட்டிகள் நீர்த்தடாகங்களாக மாறுகின்றன. அதுபோலவே மனிதர்களுடைய வாழ்க்கையிலும் இருண்ட, குளிர்ந்த மழைக்கால அனுபவங்கள் மாறி இளவேனிற் காலத்து இனிமை உண்டாகிறது.

147:19,20 இறுதியாக, அவர் இஸ்ரவேலுக்குத் தனிச்சலுகை புரிவதற்காக அவருக்குக் கனத்தைச் செலுத்தவேண்டும். இந்த இனத்தாருக்கு மட்டுமே அவர் நியாயப்பிரமாணத்தையும் உடன் படிக்கையையும் கொடுத்தார். வேறு எந்த இனமும் இவ்விதத் தனிச்சலுகையைப் பெறவில்லை. அவருடைய சட்டங்களைப் புறவின மக்கள் பெறவில்லை. திருவாளர் வில்லியம்ஸ் எழுதுகிறார்:

> தமது வார்த்தைக்குப் பாதுகாப்பிடமாகவும், அதனை உலகிற்கு எடுத்துரைக்கும் வழிதுறையாகவும் தேவன் இஸ்ரவேலைத் தெரிந்தெடுத்த செயல் (வச. 19,20) மோசே மற்றும் பவுல் ஆகியோர் அவரை வியந்து போற்றும் படியும் ஆராதிக்கும்படியும் செய்தது (உபா. 4:8; ரோமர் 3:2; 11:33).[105]

சங்கீதம் 148: படைப்பின் பாடற்குழு

நான் பல பாடற்குழுக்களைக் கண்டிருக்கிறேன், ஆனால் இது போன்றதொரு குழுவைக் கண்டதில்லை. உயிருள்ள, உயிரற்ற படைப்புகள் யாவும் ஒன்றிணைந்த குழுவே இது. பிரபஞ்சம் பாடற்குழுவின் மேடை, முடிவில்லா வரிசைகளில் இருக்கைகள் இருந்தன. வரிசைகள் அடுக்கடுக்காய் அமைந்திருந்தன.

148:1-6 மிகவும் உயர்ந்த வரிசையில், வானங்களிலிருந்து தேவதூதர்கள் கர்த்தரைத் துதித்தார்கள், வானசேனைகள் யெகோவாவின் மகிமையைக் குறித்துப் பாடினார்கள். அடுத்த வரிசையில் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் இருந்தன, அவை வானுலகக் கீதங்களைப் பாடின. மிகவுயர்ந்த வானங்களும் தண்ணீர் நிறைந்த மேகங்களும் “உன்னதத்தில் இருக்கிற தேவனுக்கு மகிமை...” என்று பாடின. அவை யாவும் தங்களைப் படைத்தவரை தேவன் என்று கூறி அவரை மேன்மைப்படுத்தின. அவரே சொற்களைப் பேசி உலகத்தை உருவாக்கினார். தமது படைப்புக்கு நிலையான தன்மையையும் உறுதியையும் தந்தவராகிய அவரே என்றென்றும் மாறாத சில பிரமாணங்களையும் கோட்பாடுகளையும் கொடுத்தார்.

148:7,8 அடுத்தாகக் கீழ்நோக்கிய வரிசையில் வருவது பெருங்கடல்களும், கடல்வாழ் உயிரினங்களும் ஆகும். அவையும் தங்களை உருவாக்கிய கை, தெய்வீகக் கரமே என்று சான்று கூறுகின்றன. அக்கினி, கல்மழை, உறைந்த மழை, மூடுபனி, பெருங்காற்று யாவும் அவரு

டைய கட்டளைகளுக்கு உடனடியாகக் கீழ்ப்படி கின்றன. யெகோவா காலங்களையும், தட்ப வெப்ப நிலையையும் கட்டுப்படுத்தி, அவருடைய சித்தத்தின்படி அவை கீழ்ப்படியும்படி செய்கிறார் என்பதை இது நினைவுபடுத்துகிறது.

148:9,10 அதைத் தொடர்ந்து, **மலைகளும் குன்றுகளும்** அவரை உயர்த்தித் துதிக்கும்படி தங்களுடைய தலைகளை உயர்த்துகின்றன. எல்லா மரங்களும் அங்கு இருக்கின்றன. கனி தருபவையும், பெரிய மரக்கட்டைகளைத் தரு வையும் அவற்றில் அடங்கும். அவருடைய திருப் பெயரைக் கேட்கும்போது அவை தங்களுடைய கிளைகளை உயர்த்துகின்றன. காட்டுவிலங்கு கள், வீட்டில் வளர்க்கப்படும் விலங்குகள், ஊர் வன, பறப்பன - யாவும் கர்த்தரின் ஞானத்தையும் வல்லமையையும் குறித்துப் பாடுகின்றன.

148:11,12 நாம் முன்வரிசைகளிடமாக வரும் போது மனுமக்களின் வெவ்வேறு வகுப்பாரின் கூட்டங்கள் குழுமியிருந்தன - அரசர்கள், பிரபுக் கள், அரசு அதிகாரிகள், பொதுமக்கள், இளைஞர் கள், சிறுபெண்கள், வயதுமுதிர்ந்தவர்கள், சிறு பிள்ளைகள் - யாவரும் தங்களுடைய தலைகளைச் சற்றுத் திருப்பி வாய்களை விரிவாய்த் திறந்து யெகோவாவைத் தொழுதுகொள்கிறார் கள்.

148:13,14 பெருந்திரளாகக் கூடிய பாடற்குழு கர்த்தருடைய திருப்யெரை எல்லாப் பெயர்களுக் கும் மேலானது என்று பாடித் தொழுதுகொள் கிறது, விஞ்ச இயலாத மகிமை பெற்றவர் அவரே என்று அது போற்றுகிறது. பாடற்குழுவின் பாடலில் ஒரு குறிப்பிட்ட கருப்பொருள் அடங்கியிருக்கிறது - **இஸ்ரவேலுக்குக்** கர்த்தர் செய்த நன்மைக்காக அவர்கள் அவரை உயர்த்திப் போற்றுகிறார்கள். அவர் தம்முடைய மக்களுக்காக **ஒரு கொம்பை உயர்த்தினார்**, அதாவது, மேசியாவை உயர்த் தினார். கர்த்தராகிய இயேசுவின் இரண்டாம் வெளிப்பாட்டில், **அவருடைய பரிசுத்தவான்கள்** யாவரும் அவரைத் துதிப்பதற்கு ஒரு சிறப்பான தருணத்தைத் தருவார். இஸ்ரவேல் மக்கள் பாடற்குழுவின் முதல் வரிசையில் அமர்ந்திருப் பார்கள், அது அவருக்கு அருகில் இருக்கக்கூடிய சிறப்பு பெற்ற வரிசை. இஸ்ரவேல் இனம் மீண்டும் புதுப்பிக்கப்பட்ட நிலையில் அதன் மூலமாக உல கம் முழுவதும் நன்மை பாயும். ஆகவேதான் பாடற்குழுவானது மிகப்பெரிதாக அல்லேலூயா என்று துதியில் கலந்துகொண்டிருக்கிறது - "கர்த்தருக்குத் துதி உண்டாவதாக!

சங்கீதம் 149: தேவனுக்குச் செலுத்தப்படுகிற உயர்ந்த துதிகள்

இச்சங்கீதத்தில் இரண்டு பகுதிகள் உள்ளன. முதலாவது பகுதியில் (வச. 1-5) பரிசுத்தவான்கள் பாடுகிறார்கள். இரண்டாவது பகுதியில் (வச. 6-9) அவர்கள் ஆளுகிறார்கள். இங்கு நடக்கிற நிகழ் வின் காலம், கர்த்தராகிய இயேசு பூமிக்குத் திரும்பி, நீண்ட காலம் எதிர்பார்த்திருந்த அரசின் வாயிலில் இருக்கும் தருணமே ஆகும்.

149:1-3 இஸ்ரவேல் பாடுகிற **புதுப்பாட்டு** படைப்பு, மீட்பு, ஆளுகை ஆகியவை பற்றியதே ஆகும். அவர்களுடைய இயற்கையான மற்றும் ஆவிக்குரிய படைப்பை உருவாக்கியவரும், அவர் களுடைய மகிமை பொருந்திய மன்னரும் யெகோ வாவே ஆவார் என்று அவர்கள் மகிழ்வடை கிறார்கள்.

அவர்கள் பாடலின் மூலமாக மட்டுமின்றி ஆடலின் மூலமாகவும் அவரைத் துதிக்கிறார்கள். இது என்ன? விசுவாசிகள் ஆடலாமா? ஆம், பரி சுத்தமும் தூய்மையும் நிறைந்த களிகூருதலோடு அவர்கள் கர்த்தருடைய முன்னிலையில் நடன மாடுகிறார்கள். மெய்யான ஆவிக்குரிய மகிழ்ச்சி யையும் தொழுகையையும் அந்த நடனம் வெளிப் படுத்துகிற காரணத்தால் அது தேவனால் ஏற்கப் படுகிறது. ஆனால் இன்றைய நாட்களில் ஆடுகிற ஆட்டங்களுக்கு இந்த வசனத்தை ஆதாரமாகக் கொள்வது தவறு. நடனத்தின் பயனையும், அத னைத் தவறாகப் பயன்படுத்துவதையும் வெவ் வேறாகப் பிரித்துக் காணவேண்டும். அதனுடைய தெய்வீக அங்கிகாரத்தைப் பயன்படுத்துவதைப் பற்றியே பாடலாசிரியன் பேசுகிறான். இசைக் கருவிகளின் பயன்பாட்டைக் குறித்தும் இது உண்மையே. கஞ்சரா, யாழ் போன்ற கருவிகள் உணர்வை எழுப்புமென்றால் அவை கர்த்தருக்கே இன்னிசையாக எழவேண்டும். ஆனால் அவ்வப் போது அவை உடலின்பத்தைத் தூண்டிவிடக் கூடியவையாகப் பயன்படுத்தப்படுகின்றன. அவற் றின் முறையான பயன்பாடு நல்லது, தவறான பயன்பாடு பயங்கரமானது.

149:4-5 இந்த ஆரவாரமெல்லாம் எதற்கு? கொண்டாட்டம் எதற்கு? ஏனென்றால் **கர்த்தர் தம்முடைய** புதுப்பிக்கப்பட்ட மக்களின்மேல் **பிரி யம் வைக்கிறார்**. விசுவாசமுள்ள மீதியானவர் களுக்கு வெற்றியின் மாலையை வழங்குகிறார். மகா உபத்திரவ காலம் முடிவடைந்துவிட்டது. இன்று மழை நின்று இளவெயில் வீசும் நன்னாள்.

மகிமையின் அரசரோடு மக்கள் ஐக்கியம் கொண்டிருப்பதால் அந்த **மகிமையைத்** தங்களுடையது என்று களிகூர அவர்களுக்குத் தகுந்த காரணங்கள் உள்ளன. அவர்கள் தங்களுடைய அரியணையில் அமர்ந்தவர்களாகவோ, இரவு நேரங்களில் **படுக்கையில்** படுத்துக்கொண்டோ **கெம்பீரமான** பாடல்களாலே மேற்கூரையின் சட்டங்களை உயர்த்துவார்கள். (படுக்கை என்பதற்கான மூலச்சொல் மரச்சட்டம் என்றும் பொருள்படும்.) அவர்களுடைய குரல்வளை அதிர்வு நாளங்கள் கர்த்தரை **உயர்ந்த துதியால்** துதிக்கக் கூடிய ஒலியால் நிறைந்திருப்பது மிகவும் பொருத்தமானதே (வச. 8).

149:6-8 ஆறாவது வசனத்தில் திடீரென்று கருத்து மாறுவதைக் கவனியுங்கள். இது முதல் கடைசிவரை இப்பாடலில் இஸ்ரவேல் நியாயாதிபதிகளுடைய வேலையை, நீதி வழங்கும் வேலையைச் செய்வதாகக் கூறப்படுகிறது. மேசியா உலகிற்குத் திரும்பி வந்த பிறகு எதிரிகள் அழிக்கப்படும் நிகழ்வை இது குறிக்கக் கூடும். நியாயத்தீர்ப்பு கர்த்தரால் வழங்கப்படும், ஆனால் இஸ்ரவேல் இனம் அதில் பங்கு வகிப்பதாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது எனலாம். ஆனால் ஆயிரமாண்டு ஆட்சியின்போது எல்லா தேசங்களுக்கும் மேலான தலைமையிடத்தில் இஸ்ரவேல் பணிபுரியும் என்றே நான் கருதுகிறேன். கர்த்தராகிய இயேசு அந்தக் காலத்தில் இரும்புக்கோல் கொண்டு அரசாளுவார் (வெளி. 2:27). அப்போஸ்தலர்கள் அரியணைகளில் அமர்ந்து பன்னிரண்டு யூத கோத்திரத்தாரையும் நியாயந்தீர்ப்பார்கள் (மத். 19:28). இஸ்ரவேலோ புறவினத்தார் மேல் செலுத்தப்படும் ஆட்சியில் பங்குவகிக்கும் (தானி. 7:22).

ஆகவே, பரிசுத்தவான்கள் தங்கள் கரங்களில் இருபுறமும் கூர்மையான பட்டயத்தை வைத்திருப்பார்கள். தேவை ஏற்படும்போது அவர்கள் மக்களைப் **பழிவாங்கவும்**, மக்களைத் **தண்டிக்கவும்** செய்வார்கள். கலகம் செய்யும் அரசர்களையும் அவர்களுடைய **மேன்மக்களையும் சங்கிலிகளால்** கட்டி, **இரும்பு விலங்குகளால் கட்டுவார்கள்.** அது முற்றிலும் நீதியைச் செலுத்தும் ஆட்சியாக இருக்கும், நீதி ஒருக்காலும் தவறாத ஆட்சி நடைபெறும்.

149:9 அந்த நாளில் இஸ்ரவேலின் மதிப்பு வாய்ந்த பணியாக இது இருக்கும் - கீழ்ப்படியாமை, சூழ்ச்சியால் கவிழ்க்க முயற்சி செய்தல் யாவும் உடனடியாகத் தண்டிக்கப்படும்.

புதிய ஏற்பாட்டு விசுவாசிகளும் கிறிஸ்துவின் ஆட்சியில் பங்கு வகிப்பார்கள் என்பதும் உண்மையே. அதனை நாம் 1 கொரிந்தியர் 6:2,3 ஆகிய வசனங்களில் படிக்கிறோம்.

சங்கீதம் 150: கர்த்தரைத் துதியுங்கள்!

நாம் மிகச்சிறந்த இறுதிக் கட்டத்துக்கு வந்திருக்கிறோம். தேவனைத் தொழுதுகொள்வதில் வகுத்து அமைக்கப்பட்ட மெய்யான விதிமுறைகளைப் படைப்புகளிடம் குறித்துக்காட்டும் மிகச்சிறிய முறையீட்டினைக் காட்டிலும் எது கூடுதலாகப் பொருத்தமாயிருக்கும்? இந்தச் சங்கீதம் துதித்தலைப் பற்றிய முக்கியமான நான்கு கேள்விகளுக்கு விடை தருகிறது. எங்கே, எதற்காக எவ்வாறு, எவர்?

படைப்பின் நோக்கம் தேவனுடைய மகிமையேயாகும். ஆகவே மனிதன் தான் வாழ்வதற்கான முக்கிய காரணத்தைக் கர்த்தரைத் துதிப்பதன் மூலமாக அறிகிறான். அது இரத்தினச் சுருக்கமாக ஒரு சிறிய வினாவிடையின் மூலமாகச் சொல்லப்பட்டுள்ளது, "மனிதனுடைய மிகச் சிறந்த நோக்கம் தேவனை மகிமைப்படுத்துவதும் அவரை என்றென்றும் அனுபவிப்பதுமேயாகும்."

150:1 ஆனால் *எங்கே?* **அவருடைய பரிசுத்த இடத்திலே, அவருடைய வல்லமையுள்ள வானங்களில் அவரைத் துதியுங்கள்** (இலகு தமிழ்). *எல்லா இடங்களிலும்* என்று சொல்வதையே வேறுவிதமாக இப்பாடல் சொல்கிறது - பூமியிலும், வானத்திலும். எந்தவொரு இடமானாலும் தொழுதுகொள்வதற்கு ஏற்ற இடமில்லையென்று சொல்ல முடியாது.

150:2 *எதற்காக?* **அவருடைய வல்லமையின் செயல்களுக்காகவும், இணையற்ற மகத்துவத்திற்காகவும் அவரைத் துதியுங்கள்**. இதனை வேறுவிதமாகச் சொல்லவேண்டுமானால், அவர் நமக்காக என்ன செய்தார் என்பதற்காகவும், அவர் யார் என்பதற்காகவும் நாம் அவரைத் துதிக்க வேண்டும் என்று சொல்லலாம். அவருடைய இணையற்ற மகத்துவத்திற்காக மட்டுமின்றி, அவருடைய இணையற்ற மகத்துவத்திற்கு *ஏற்றபடியும்* நாம் துதிக்க வேண்டும். நமது படைப்பாளரும் மீட்பருமானவரின் இணையற்ற மேன்மைகளை உற்சாகமற்ற முறையில் மீண்டும் மீண்டும் கடனுக்குச் செய்வதுபோல ஒப்பிப்பது பாவம்.

150:3-5 *எவ்வாறு?* எல்லாவிதமான இசைக் கருவிகளையும் கொண்ட இசைக்குழுவோடு அவரைத் துதிக்க வேண்டும். **எக்காளத்தோடு**, அதாவது வீரமிக்க கட்டளையிடும் இசைக்குறி யீட்டுடன்; **யாழுடன்**, அதாவது செவிக்கினிய மேய்ப்பருக்குரிய தொனியுடன்; **வீணையுடன்**, இதமான, இனிமையான மீட்டும் இசையுடன் அவ ரைத் தொழுதுகொள்ள வேண்டும். களிப்புடன், இயல்பான **நடனத்துடன் தம்புரு** வாசிக்கப்படும். எல்லாவகையான நரம்பு வாத்தியங்களோடு செல்லோ, வயலின், கிட்டார் போன்ற எல்லாக் கருவிகளோடும், உலகிலுள்ள அனைத்து இசை களோடும் மாபெரிய அரசரைத் தொழுதுகொள்ள வேண்டும். காற்றை ஊதி வாசிக்கக் கூடிய இசைக் கருவிகளோடும், அதாவது புல்லாங்குழல், நாதஸ் வரம் போன்ற கருவிகளோடு மாபெரும் இசை விழா நடைபெற வேண்டும்; ஓர் இசைக்கருவியும் விடுபடலாகாது. மேலும் முரசு, செவிப்பறை, கைத் தாளம் போன்ற செவியைப் பிளக்கும் இசைக் கருவிகளில் எழும் ஓசை யோடும், உரத்த ஆமென் என்னும் வார்த்தையோடும் புகழ்ச்சிப் பாடல் முடி வடைய வேண்டும்.

150:6 ஆனால் அது கடைசிக்கேள்வியை நமது நினைவுக்குக் கொண்டு வருகிறது. *எவர் கள்* தொழ வேண்டும்? **"சுவாசம் உள்ள யாவும் கர்த்தரைத் துதிப்பதாக"** என்பதே விடை என்ப தில் ஐயமில்லை. உலகில் உயிர்வாழும் அனைத்து உயிரினங்களும் பெருந்திரளான பாடற்குழு வாகக் கூடி வந்திருக்கும் வேளையில் ஒன்று சேர்ந்து பெருந்தொனியாகப் பாடவேண்டுமென் னும் குறிப்பு கொடுக்கப்படுகிறது. அப்பொழுது நித்தியப் புகழ்ச்சிப் பாடல் தேவனுக்கு முன்பாகப் பொங்கி எழுகிறது. *அல்லேலூயா!* **கர்த்தருக் குத் துதி உண்டாவதாக!**

அடிக்குறிப்புகள்

1(Intro) Graham Scroggie, *Daily notes of the Scripture Union.*

2(Intro) Albert Barnes, *Notes on the Book of Psalms,* I:xix.

3(Intro) C. S. Lewis, *Reflections on the Psalms*, p. 10.

4(Intro) F. W. Grant, "Psalms," in *The Numerical Bible*, III:10

5(1:3) ''நடப்படுதல்'' என்று மொழிபெயர்க் கப்பட்டுள்ள சொல் *(shatul)* எழுத்தின்படி பறித்து நடுதல் என்னும் பொருளையே தருகிறது. (Koehler - Baumgartner, Lexican in veteris Testamental Libros. p. 1015). இது மறுபடியும் பிறந்த ஒருவனைக் குறிக்கக்கூடிய சரியான உருவகமாக இருக்கிறது.

6(1:3) D. L. Moody, *Notes from My Bible,* p. 64.

7(2:முன்னுரை) அப்போஸ்தல நடபடிகள் 4:25–28 –இல் பேதுரு இரண்டாம் சங்கீதத்தைக் கிறிஸ்து நிராகரிக்கப்பட்ட நிகழ்வோடு பொருத் திக் காட்டுகிறார். ஏரோது, பொந்தியு பிலாத்து, புற வினத்தார், இஸ்ரவேல் மக்கள் யாவரும் கிறிஸ்து வைக் கொல்ல ஒன்றுகூடினார்கள் என்பது உண் மையே. ஆயினும் இறுதியான நிறைவேறுதல் எதிர்காலத்தில் நடைபெற வேண்டிய ஒன்று.

8(3:1,2) *International Standard Bible Encyclopaedia*, III:2096.

9(4:1) Charles H. Spurgeon, quoted in *"Choice Gleanings Calendar."*

10(5:முன்னுரை) கோஹ்லர் மற்றும் பாம் கார்ட்னர், மிக்தாம் என்னும் சொல் அக்காடியன் மொழியைச் சேர்ந்தது என்று ஊகிக்கிறார்கள். இதன் பொருள் மூடுதல் என்பதாகும். ஆகவே இந்தச் சங்கீதம் செய்த தவறுக்குக் கழுவாய் தேடுதலைக் கருப்பொருளாகக் கொண்ட சங்கீத மாகும்.

11(8:5) எபிரெய மொழியில் எலோஹிம் (Elohim) என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள் ளது - NKJV அடிக்குறிப்பைக் காண்க.

12(9:முன்னுரை) பத்தாவது சங்கீதம் எபிரெய எழுத்துகளின் பிற்பகுதியை வரிசையாக முதல் எழுத்தாகக் கொண்ட வசனங்களால் அமைக்கப்பட்டது. ஆகவே 9,10 ஆகிய இரண் டும் சேர்ந்து ஒரே சங்கீதம் என்று சிலர் கருது கிறார்கள்.

13(10:முன்னுரை) முந்தின குறிப்பைக் காண்க.

14(14:1) Henry Bosch, *Our Daily Bread.*

15(14:1) Barnes, *Psalms*, I:114.

16(16:3) Documentation unavailable.

17(17:15) E. Bendor Samuel, *The Prophetic Character of the Psalms*, p.26.

18(19:3, 4a) Immanuel Kant, *General History of Nature*, further documentation unavailable.

19(19:7-9) Quoted from Wallace's Kant, by Alexandar Wright in *The Psalms of David and the Higher Criticism, Or Was David "The Sweet Psalmist of Israel"?*, p. 109.

20(19:12) Barnes, *Psalms,* I:175.

21(23:Intro) J. R. Littleproud, further documentation unavailable.

22(24:9,10) F. B. Meyer, *F. B. Meyer on the Psalms,* p. 35.

23(25:முன்னுரை) 'r' (eresh) என்னும் எழுத்து **18,19** ஆகிய இரண்டு வசனங்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது, ஆனால் 'q' *(qoph)* என்னும் எழுத்தே இடம்பெற்றிருக்க வேண்டும் என்று சில வேத அறிஞர்கள் கருதுகிறார்கள். எவ்வாறாயினும் பொருள் ஒன்றே.

24(26:12) J. C. Ryle, *Expository Thoughts on the Gospels, Luke*, II:239.

25(29:10,11) W. E. Vine, *Isaiah*, p. 205.

26(29:10,11) H. A. Ironside, *Studies on the Psalms*, p. 173.

27(31:Intro) Lewis, *Reflections*, p.10

28(32:8,9) Jay Adams, *Competent to Counsel,* p. 124.

29(34:8,9) Murdoch Campbell, *From Grace to Glory*, p. 66.

30(34:10) Some scholars believe that "Young lions" should be read as "deniers of God", but the meaning of the verse remains the same.

31(36:5) Albert Barnes, *The Bible Commentary, Psalms,* Vol.1, p.312.

32(36:5) Arthur W. Pink, *The Attributes of God,* p. 47.

33(36:7) JohnBrine, quoted in *the Attributes of God* Arthur W. Pink, p.80.

34(37:5,6) Barnes, *Psalms,* I:320.

35(37:28) F. W. Dixon, further documentation unavailable.

36(50:1) *eretz* என்னும் எபிரெயச் சொல் பூமி, நிலம் ஆகிய இரு பொருள்களைக் கொண்டது.

37(50:8) Meyer, *Psalms,* p. 63.

38(52:8,9) Grant, "Psalms," III:212.

39 (53:முன்னுரை) **14** –ஆவது சங்கீதத்தில் யெகோவா என்னும் பெயர் நான்கு முறையும் எலோஹிம் என்னும் பெயர் மூன்று முறையும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இங்கு எலோஹிம் என்னும் பெயர் ஏழு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.

40(54:7) G. Campbell Morgan, *An Exposition of the Whole Bible*, p. 240.

41(58:8) W. Graham Scroggie, *Psalms,* p.50.

42(58:9) A. Maclaren, quoted in *Psalms* by W. Graham Scroggie, II:49.

43(58:10) Morgan, *Exposition,* p. 242.

44(60:9) எட்டாவது வசனம் மேற்கோள் குறியுடன் முடிவடைவதாக NKJV பதிப்பகத்தார் ஒப்புக்கொண்டுள்ளார்கள்.

45 (61:2) "அவர் யூதர்களுடன் பேசுகிறார் என்பதை நினைவிற் கொள்ளுங்கள். எபிரெய வேதத்தில் இந்தச் சொல் எங்கெல்லாம் உருவகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை ஆராய்ந்து பார்ப்போமென்றால், இது மனிதனைக் குறிக்க ஓரிடத்திலும் பயன்படுத்தப்படவில்லை, தேவனுக்கு அடையாளமாகவே பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே இங்கு பிலிப்பு செசராவில், திருச்சபை பேதுருவின் மேல் கட்டப்படவில்லை. இயேசு உருவக சொற்களாலே விளையாடவில்லை. அவர் அவர்களுடைய பழங்கால எபிரெய உவமையையே எடுத்துக்கொண்டார் – கன்மலை எப்போதும் தெய்வீகத்தையே அடையாளப்படுத்துகிற சொல், இதைப் பயன்படுத்தியவராக அவர் கூறியதாவது: தேவன் மேலேயே, ஜீவனுள்ள

தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து – நான் என் சபையைக் கட்டுவேன்'' என்று மத்தேயு 16:18 – ஆம் வசனம் கூறுவதாகத் திருவாளர் G. கேம்ப் பெல் மோர்கன் கூறுகிறார். அவர் கூறியதற்கு மாறாக ஓரிடத்தில் வேறுவிதமான பயன்பாட்டைக் காணமுடியும், உபாகமம் 32:31, ''அவர்களுடைய கன்மலை நம்முடைய கன்மலையைப் போல் அல்ல.'' எனினும் இந்த இடத்திலும் கன்மலை தெய்வத்தையே (கள்ள தெய்வத்தை) குறிக்கும் படி பயன்படுத்தப்பட்டுள்ளது.

46(66:8-12) Williams, *Student's Commentary on the Holy Scriptures,* p. 67.

47(67:6,7) Franz Delitzsch, "Psalms," in *Biblical Commentary on the Old Testament,* XII:240.

48(68:11-13) இங்கு ''பிரசித்தப்படுத்துகிறவர்கள்'' என்பதற்கான சொல் *(hamebasserot)* பெண்பால் பன்மைச் சொல் ஆகும்.

49(68:24) Lewis, *Reflections*, p. 45.

50(71:Intro) merrill F. Unger, *Unger's Bible Dictionary,* p. 350.

51(71:14-16) Williams, *Commentary*, p. 72.

52(81:Intro) Merrill F. Unger, *Unger's Bible dictionary*, p. 350.

53(81:8-10) Gaebelein, *Psalms*, p. 316.

54(83:13-18) Morgan, *Exposition*, p. 252.

55(86:17) E. W. Bullinger, *The Companion Bible*, Appendix 32, p. 31.

56(86:17) Grant, *"Psalms,"* III:330.

57(87:Intro) Teddy Kollek and Moshe Pearlman, *Jerusalem, A History of Forty Centuries*, p. 12.

58(87:6) Documentation unavailable.

59(87:6) Gaebelein, *Psalms*, p. 332.

60 (88:11,12) *The New Bible Commentary*, p. 474.

61(88:13-18) Quoted by A. G. Clarke, *Analytical studies*, p. 219.

62(93:5) Williams, *Student's Commentary* p. 372.

63(94:Intro) Pink, *Attributes*, p. 75.

64(96:11-13) JHWH (அல்லது YHWH) என்ற மெய்யெழுத்துக்களும் Adonai (Lord) என்ற சொல்லின் உயிரெழுத்துக்களும் ஒன்றி ணைந்தே யெகோவா (Jehovah) என்று பாரம் பரியமாய் உச்சரிக்கப்படுகிறது. இந்த எபிரெயப் பெயர் தொடக்கத்தில் யாவே *(yahweh)* என்று உச்சரிக்கப்பட்டிருக்கும். தேவனுடைய பெயரை உச்சரிப்பது தெய்வநிந்தனை என்று கருதிய யூதர்கள் வேத பிரதிகளில் YHWH என்ற புனித எழுத்துகள் எங்கெல்லாம் காணப்பட்டனவோ அங்கெல்லாம் கர்த்தர் (Adonai) என்ற பெயரையே கூறினார்கள். எபிரெய மொழி வேதத்தில் பதினோராவது வசனத்தின் முதல் நான்கு சொற்கள் இணைந்து தேவனுடைய பெயராகிய யாவே (YHWH) என்ற சொல்லை உச்சரிக்கின்றன. தேவனுடைய பெயரை "LORD" என்று கொட்டை எழுத்துகளால் KJV, NKJV மொழி பெயர்ப்புகள் குறிப்பிட்டுள்ளன. ஆனால் வசனங்கள் மேற்கோளாகக் காட்டப்படுகின்ற இடங்களில் பொதுவாக இப்படிப்பட்ட முறை கைக் கொள்ளப்படுவதில்லை.

65(97:6a) Gaebelein, *Psalms*, p. 363.

66 (98:4-6) திருவாளர் F. W. க்ராண்ட் எழுதிய ''சங்கீதங்கள் *(Psalms)*'' என்ற நூலைப் பார்க்கவும் III. 363. இந்தச் சொல் பற்றிய முந்தின குறிப்பையும் காண்க. சாவுக்கடல் சுருள்களிலும்கூட உபாகமம் 32:43 –ஆம் வசனத்தில் இதே சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் தெய்வீகத்தை ஆதரித்துப் பேச இந்தப் பகுதியைப் பயன்படுத்துவதால் யூதப் பாரம்பரிய மாசோரிடெஸ் பிரதியில் இச்சொல் நீக்கப்பட்டுள்ளது (எபிரெயர் 1:6 – இல் இருப்பது போல).

67(100:Intro) Barnes, *Psalms*, III:56.

68(101:2) Clarke, *Psalms*, p. 247.

69(101:7,8) Grant, *"Psalms,"* III:368.

70(104:31,32) J. J. Stewart Perowne, *The book of Psalms*, II:234.

71(109:30,31) Meyer, *Psalms*, p.133.

72(Essay) Unger, *Bible Dictionary,* p.231.

73(Essay) Barnes, *Psalms*, I:xxxvii.

74(Essay) Scroggie, *The Psalms*, p. 32.

75(110:1) KJV மற்றும் NKJV மொழிபெயர்ப்பு களில் "LORD" என்னும் கொட்டை எழுத்துகளில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர் யெகோவாவையே *(Jehovah = Yahweh)*, அதாவது தேவனுடைய தனிப்பட்ட உடன்படிக்கைப் பெயரையே குறிக் கும். **64** –ஆவது அடிக்குறிப்பைக் காண்க.

76(110:2) திருவாளர் அயர்ன்சைடு இந்தச் சொற்றொடரையே தனது நூலின் தலைப்பாக வைத்துள்ளார் *(The Great Parenthesis)*. இது தற்போதைய கிறிஸ்தவத் திருச்சபையின் காலக் கட்டத்தைக் குறிக்கும்.

77(110:3) Scroggie, *The psalms*, p. 85.

78(112:10) Barnes, *Psalms,* III:149.

79(118:24) *Ibid*., pp. 173,174.

80(119:Intro) Samuel Ridout, *How to study the Bible*, p. 73.

81(119:Intro) Lewis, *Reflections*, p. 52.

82(119:Intro) Bellett, *Short Meditations,* p. 131.

83(119:24) Matthew Henry, *Commentary in One Volume*, p. 706..

84(119:92) Barnes, *Psalms*, III:204.

85(119:107) Charles H. Spurgeon, *The Treasury of David,* VI:244.

86(119:136) Quoted by Moody, *Notes*, p. 79.

87(119:139) Barnes, *Psalms*, III:217.

88(119:145) **145** முதல் **152** வரையிலான வசனங்கள் "கூப்பிடுதல்" (cry) என்னும் சொல் லுக்கான மூலமொழிச் சொல்லின் முதல் எழுத் தாகிய "qoph" என்னும் எழுத்தைக் கொண்டு தொடங்கப்பட்டுள்ளன.

89(120:1,2) **120** முதல் **134** வரையிலான சங்கீதங்கள் "ஆரோகண சங்கீதங்கள்" என்று அழைக்கப்படுகின்றன, ஏனெனில் ஒவ்வொரு ஆண்டும் நடைபெறுகிற கர்த்தருடைய பண்டிகைகளையும் கொண்டாடும்படி யாத்திரிகர் எருசலேமை நோக்கி ஏறிச்செல்கிறபோது இந்தச் சங்கீதங்களைப் பாடுவார்கள் (பஸ்கா பண்டிகை மற்றும் சில).

(ஆரோகணம் = கற்படிகள், ஏறுதல்).

90(121:4) Moody, *Notes,* p. 79.

91(121:5,6) இது கவிதை அல்லது செய்யுள் என்பதை நாம் நினைவுகூர வேண்டும். இது ஓர் உருவகம், புறக்கோடிகளிலுள்ள இரண்டைக் கூறி இடைப்பட்ட எல்லாவற்றையும் குறிக்கும்படி இவ்வாறு கூறப்பட்டது எனலாம். இதற்கு இன்னு மோர் எடுத்துக்காட்டு **8** –ஆவது வசனம் "உன் போக்கையும் உன் வரத்தையும்," இது முழு வாழ்க்கை நடைமுறையையும் குறிக்கிறது.

92(121:7,8) இங்கு காணப்படும் வெவ்வேறு சொல் பயன்பாடுகள் யாவும் *Shamar* என்னும் ஒரே சொல்லின் மொழிபெயர்ப்புகள் ஆகும்.

93(122:6) Collins and Lapierre,*O Jerusalem*!, p. 33.

94(122:7-9) Barnes, *Psalms*, III:238.

95(135:6) Pink, *Attributes*, p. 27.

96(137:9) Lewis, *Reflections,* pp. 113, 114.

97(138:2) ஆலயம் என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ள *hekel* என்னும் சொல் அரண்மனை அல்லது கட்டடம் (ஆசரிப்புக் கூடாரம் உட்பட) என்றும் பொருள்படும். எல்லா இடங்களிலும் யூத ஆலயத்தையே இச்சொல் குறிப்பதில்லை.

98(138:2) Clarke, *Psalms*, p. 337.

99(139:13,14) Radmacher, further documentation unavailable.

100(139:19-22) Edward J. Young, *Psalm* 139, p. 95.

101(139:19-22) Ibid., p. 105.

102(142:5-7) Clarke, *Psalms*, p. 343.

103(143:12) Barnes, Psalms, III:314.

104(147:2-4) Archibald G. Brown, further documentation unavailable.

105 (147:19,20) Williams, *Student's Commentary*, p. 148.

நூல் விவரத் தொகுப்பு

Alexander, Joseph A. *The Psalms Translated and Explained.* Grand Rapids,Baker Book House, Reprinted from 1873 Edinburgh edition, 1977.

Barnes, Albert. *Notes on the Old Testament, Psalms,* 3 vols. Grand Rapids: Baker Book House, 1973.

Bellett, J. G. *Short Meditations on the Psalms.* Oak Park, IL: Bible Truth Publishers, 1961.

Bridges, Charles. *Psalm 119.* Edinburgh: The Banner of Truth Trust, Reprinted from 1827 edition, 1977.

Clarke, A. G. *Analytical Studies in the Psalms.* Kilmarnock: John Ritchie, Ltd., 1949.

Delitzsch, Franz. "Psalms." In *Biblical Commentary on the Old Testament.* Vols. 11—13. Grand Rapids: Wm. B. Eerdmans Publishing Co., 1970.

Gaebelein, A. C. *The Book of Psalms.* Neptune, N.J.: Loizeaux Bros., 1939.

Grant, F. W. "Psalms." In *The Numerical Bible.* New York: Loizeaux Bros.,1897.

Ironside, H. A. *Studies on Book One of the Psalms.* Neptune, N.J.: Loizeaux Bros., 1952.

Kidner, Derek. *Psalms 1-72.*

Downers Grove, IL: InterVarsity Press, 1973.

_____ *Psalms 73—150.* Downers Grove, IL: InterVarsity Press, 1975.

Lewis, C. S. *Reflections on the Psalms.* London: Collins, Fontana Books, 1969.

Maclaren, A. *The Book of Psalms.* London: Hodder & Stoughton, 1908.

Meyer, F. B. *F. B. Meyer on the Psalms.* Grand Rapids: Zondervan Publishing House, n.d.

Morgan, G. Campbell. *Notes on the Psalms.* Westwood, N.J.: Revell Co., 1947.

Perowne, J. J. Stewart. *The Book of Psalms.* 2 vols. Grand Rapids: Zondervan Publishing House, Reprinted from 1878 edition, 1966.

Samuel, E. Bendor, *The Prophetic Character of the Psalms.* London: Pickering & Inglis, n.d.

Scroggie, W. Graham. *Psalms.* Vol. 2. London: Pickering & Inglis, 1949.

_____*The Psalms.* Old Tappan, N.J.:Fleming H. Revell Co., 1948.

Spence, H.D.M. and Exell, Joseph S., Editors. *Pulpit Commentary,* Vol. 8. Grand Rapids: Wm. B. Eerdmans Publishing Co., 1950.

Spurgeon, C. H. *The Treasury of David.* Grand Rapids: Baker Book House, 1983.

Wright, *The Psalms of David and the Higher Criticism, Or Was David "The Sweet Psalmist of Israel"?* Edinburgh and London: Oliphant Anderson & Ferrier, 1900.

Young, E. J. *Psalm 139.* London: The Banner of Truth Trust, 1965.

நீதிமொழிகள்

முன்னுரை

இஃது உருவப்படங்களின் செருகேடுமல்ல, பழக்கவழக்கங்களை விவரித்துக் கூறும் நூலுமல்ல; வாழ்க்கைக்குத் தேவையான முக்கிய கருத்துகள் அடங்கியதே இந்நூல். நமது பார்வைக்கு இது கொண்டுவரும் நடத்தைகளுக்கான மாதிரிகள் யாவும் ''இது ஞானமா அல்லது மதியீனமா?'' என்னும் கேள்வியால் சுருங்கக் கூறத்தக்க ஒரே ஒரு அளவுகோலைக் கொண்டு மதிப்பிடப்படுகின்றன.

– டெரக் கிட்னர்

1. வேதநூல் தொகுப்பில் தனிச்சிறந்த இடம்

நீதிமொழிகள் இன்றைய நாளுக்கும் பொருத்தமான புதுமையான நூல் ஆகும். நாம் ஒவ்வொரு வரும் நம்முடைய வாழ்க்கையில் எதிர்கொள்ளக் கூடிய இடர்ப்பாடுகளை இந்நூல் பகுத்தாராய்கிறது.

சிறப்பாக இளைஞர்களை நோக்கி ஒளி பொருந்திய பார்வையைச் செலுத்தும் திருமறை நூல் எதுவென்னும் கேள்விக்கு விடையாக அமைவது இந்நூலே ஆகும்.

> ஓர் இளைஞன் நீதிமொழிகளில் ஒன்று மில்லை என்று திருவாளர் கார்லைல் என்பவரிடம் கூறியபோது, "நீதிமொழிகள் சிலவற்றை நீ கைக்கொள், அப்பொழுது அதைக் குறித்த உனது கருத்து வேறுவிதமாக இருக்கும்," என்று அவர் பதிலுரைத்தார்.[1]

முழுவதும் செம்மையான, பரிசுத்தமாக்கப் பட்ட பகுத்தறிவுச் செய்திகள் அடங்கிய உலகிற் சிறந்த தொகுப்பே நீதிமொழிகள் ஆகும். தங்களுடைய மூதாதையர் செய்த துயரூட்டும் தவறுகள் சிலவற்றைத் தவிர்த்து இளம் தலைமுறையினர் வாழ்வதற்கென்றே இந்நூல் எழுதப்பட்டது.

நீதிமொழிகள் நூலின் நோக்கம் 1:1-7 ஆகிய வசனங்களில் சொல்லப்பட்டுள்ளது. சுருங்கக் கூறின், ஓரிளைஞன் தனது வாழ்க்கையில் மெய்யான ஆசிர்வாதத்தைக் கண்டடையவும், பாவத்தின் சதியாலோசனைக்கும் கண்ணிக்கும் தப்பவும் தேவையான ஞானத்தையும் அறிவையும் தருவதே அதன் நோக்கமாகும். அதன் முக்கிய மான வசனம் 9:10: "கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்; பரிசுத்தரின் அறிவே அறிவு."

"உலக வாழ்க்கைக்கான விண்ணகச் சட்டங்கள்"[2] என்று திருவாளர் ஆர்னாட் இந்நூலை வருணிக்கிறார். அது இந்நூலின் உள்ளடக்கத்தை மிகச் சுருக்கமாக விவரிக்கிறது.

நீதிமொழி ஞானத்தை எடுத்துரைக்கும் பொருட்செறிவு மிக்க அறிக்கை, பெரும்பாலும் எளிமையாக நினைவுகூரும்பொருட்டு சாதுரியமான முறையில் அமைக்கப்பெற்ற சொற்களால் இது எழுதப்பட்டுள்ளது. பெரும்பாலான நீதிமொழிகள் இரண்டு சொற்றொடர்களைக் கொண்டிருக்கும், ஒன்றுக்கொன்று இணையாகவோ எதிர்மறையாகவோ அவை அமைந்திருக்கும்.

பல்வேறு வகையான இயல்புள்ள நீதிமொழிகள் உள்ளன, அவற்றை நாம் கீழ்க்கண்ட வகையில் காணவியலும்:

1. சில, எளிய கருத்தை எடுத்துரைக்கும் ஒற்றை அறிக்கையாகக் காணப்படும்:

   ஒருவனுடைய வழிகள் கர்த்தருக்குப் பிரியமாயிருந்தால், அவனுடைய சத்துருக்களும் அவனோடே சமாதானமாகும்படி செய்வார் (16:7).

2. சில நீதிமொழிகள் இரண்டு சொற்றொடர்களைக் கொண்டிருக்கும், ஒன்று மற்றொன்றோடு ஒப்பிடப்பட்டிருக்கும்:

   தூர தேசத்திலிருந்து வரும் நற்செய்தி விடாய்த்த ஆத்துமாவுக்குக் கிடைக்கும் குளிர்ந்த தண்ணீருக்குச் சமானம் (25:25).

3. வேறு சில இரண்டு சொற்றொடர்களைக் கொண்டிருக்கும், அவை பெரும்பாலும் "ஆனால்" என்ற சொல்லால் இணைக்கப்பட்டு ஒன்றுக்கொன்று எதிர்மாறான பொருட்களை விவரித்துக் கூறும்:

நீதிமானுடைய பேர் புகழ்பெற்று விளங்கும்; (ஆனால்) துன்மார்க்கனுடைய பேரோ அழிந்து போகும் (10:7). (தமிழில் ஆனால் என்னும் சொல் தொக்கி நிற்கிறது.)

இத்தகைய நீதிமொழிகள் பெரும்பாலும் 10-15 அதிகாரங்களில் இடம்பெற்றுள்ளன.

4. சில நீதிமொழிகள் இரண்டு சொற்றொடர்களைக் கொண்டிருக்கும், இரண்டிலும் ஒரே கருத்து, சற்று வேறு விதமாகக் கூறப்பட்டிருக்கும்:

வேசி ஆழமான படுகுழி; பரஸ்திரீ இடுக்கமான கிணறு (23:27).

2. நூலாசிரியர்

இந்நூல் சில நேரங்களில் "சாலொமோனின் நீதிமொழிகள்" என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில் இவற்றில் பெரும்பாலானவை, ஞானம் மிகுந்த அரசனால் இயற்றப்பட்டவை (1:1; 10:1; 25:1). 3000 நீதிமொழிகளை சாலொமோன் இயற்றினான் என்று 1 இராஜா. 4:32 கூறுகிறது. ஆகவே இங்குள்ள பல நூறு நீதிமொழிகள் தேவ ஆவியானவரால் உயிரூட்டம் பெற்ற தூய வசனங்களாகத் திருமறையில் இடம்பெற்றுள்ளன.

"யாக்கோபின் குமாரனாகிய ஆகூர் என்பவனுடைய வசனங்கள்" என்று 30 -ஆவது அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது (30:1). 31 -ஆவது அதிகாரம் "ராஜாவாகிய லேமுவேலுக்கடுத்த வசனங்கள்" என்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ்விரண்டு மனிதர்களும் யார் என்பதை நாம் அறியோம். சாலொமோனின் வேறு பெயர்களே இவை என்று சிலர் கருதுகிறார்கள்.

3. எழுதப்பட்ட காலம்

சாலொமோனின் நீதிமொழிகளில் ஒரு பகுதியை எசேக்கியாவின் ஆட்கள் பேர்த்தெழுதினதாக நீதிமொழிகள் 25:1 கூறுவதால், இந்நூலின் இறுதிப் படிவம் கி. மு. 700 என்னும் பிற்காலத்தைச் சேர்ந்ததாக இருக்க வேண்டும். எனினும் சாலொமோனின் மூல எழுத்துகள் கி. மு. 900 -லிருந்து எழுதப்பட்டிருக்க வேண்டும். ஆகூர், லேமுவேல் என்பன சாலொமோனின் புனை பெயர்கள் இல்லையெனில் அவர்கள் கி. மு. 900 -க்கு முந்தியோ கி. மு. 700 -க்கு பிந்தியோ வாழ்ந்திருக்க வேண்டும். அவ்வாறு இருக்குமெனில் இந்நூல் தொகுக்கப்பட்ட காலம் இன்னும் பிந்தையதாகக் கணக்கிடப்படும்.

4. நூலின் பின்னணியும் கருப்பொருட்களும்

சாலொமோனும் இன்னும் சிலரும் எழுதிய வண்ணமிகு கவிதை நூலாகிய நீதிமொழிகள், ஏராளமான பாடங்களைக் கற்பிக்கிறது. பல வகைத் தலைப்புகளை இந்நூல் உள்ளடக்கியதாக விளங்குகிறது - ஒரு குழந்தையை அடித்து வளர்ப்பதிலிருந்து ஓர் அரசை ஆளுவதுவரை இது கற்பிக்கிறது. இந்நூலில் சொல்லப்படாத உண்மை எதுவுமில்லை என்று சிலர் வியந்து போற்றுகிறார்கள்; அவ்வுண்மைகள் குறைந்தது கருவடிவத்திலாவது இருக்கும். குடிப்பிரச்சினை, தவணையில் பொருட்கள் வாங்குதல்,சிறுவர் குற்றம், தொழிலாளிகள் நிருவாகம் ஆகியவை குறித்து இந்நூல் பேசுகிறது. அனைத்து வகையான மக்களையும் நீங்கள் இங்கு சந்திக்கலாம் - கூச்சலிட்டுச் சண்டையிடுகிற பெண், தற்பெருமை மிக்க மதியீனன், தன்னுடைய தவறுகளைக் குறித்து ஒருவரும் சொல்லக்கூடாது என்று எண்ணுகிற மனிதன், குறையில்லாத மனைவி. எல்லாவற்றிற்கும் மேலாக, இங்கு கர்த்தராகிய இயேசு இருக்கிறார், ஞானம் மனுவுரு எடுத்தவராக அவர் நம்மோடு பேசுகிறார். "இந்நூலில் இடம்பெற்றுள்ள குறைவற்ற மூலக்கூறுகள் அவரைக் குறித்துப் பேசுகின்றன. உண்மையான குறைபாடுகள் அவரை வேண்டிக் கூப்பிடுகின்றன." (அனுதின தியானக் குறிப்பில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.)

இதனுடைய பொருட்சுருக்கத்தை வரையறுத்துக் கூறுவது கடினமானது. ஓர் இயங்கு படத்தைப் போன்று தொடர்ச்சியான கருத்தை இது தருகிறதில்லை. தனித்தனிப் படங்களைக் காட்டும் வண்ணக் கண்ணாடி வில்லைகள் போன்று இந்நூல் உள்ளது.

இந்நூலை நீங்கள் படிக்கும்போது, பலநிலைகளில் இது யாக்கோபு நிருபத்தைப் போல இருக்கிறது.

இதைப் படிப்பதற்கான வேறொரு திட்டம், ஒரு பொருளை விளக்கிக் கூறுவதற்குக் கீழ்க்காண்பனவற்றில் பயன்படுத்தப்பட்டுள்ள நீதிமொழிகளை அறிதல்:

1. திருமறை நூல்
2. வரலாறு
3. வாழ்க்கை வரலாறு
4. இலக்கியம்
5. இயற்கை

6. செய்தித்தாட்கள், சஞ்சிகைகள்

7. வானொலி, தொலைக்காட்சி

8. உங்களுடைய சொந்த அனுபவம்

சில நீதிமொழிகள் முழுவதும் உண்மையாக இருக்கும். அதே நேரத்தில் சில பெரும்பாலும் உண்மையான அறிக்கைகளாக இருக்கும், அங்குமிங்கும் அவற்றிற்குச் சில விதிவிலக்குகள் காணப்படும். இதனை நாம் மனதிற்கொள்வது பயனுள்ளதாயிருக்கும். எடுத்துக்கட்டாக, "கர்த்தரின் நாமம் பலத்த துருகம்" (18:10) என்பது எப்பொழுதும் உண்மையாக விளங்குகிறது. ஆனால், "சிநேகிதன் எல்லாக் காலத்திலும் சிநேகிப்பான்" (17:17) என்னும் கூற்றுக்கு விதிவிலக்குகள் இருக்கக் கூடும்.

விசுவாசிகளின் வேதாகம விளக்கவுரையைப் படிக்கையில், அந்தந்த வசனத்தை அல்லது வசனங்களை முதலாவது படிப்பது இன்றியமையாதது. நீங்கள் அந்த நீதிமொழியைப் படித்திராவிட்டால் பெரும்பாலான விளக்கங்கள் அர்த்தமற்றவையாகக் காணப்படும்.

நீதிமொழிகள் நூலில் உள்ள சில தலைப்புகளின் வகுப்பொழுங்கு

கர்த்தர்

கர்த்தருடைய ஆசிர்வாதம் (10:22)

கர்த்தரிடத்தில் நம்பிக்கை (3:25,26)

கர்த்தருடைய படைப்பு (3:19,20; 16:4; 20:12; 22:2b; 29:13b)

கர்த்தருடைய ஒழுங்கு நடவடிக்கை (3:11,12)

கர்த்தருக்குப் பயப்படுதல் (1:7,29; 2:5; 8:13; 9:10; 10:27; 14:26,27; 15:16,33; 16:6; 19:23; 22:4; 23:17; 24:21; 28:14)

கர்த்தருடைய வழிநடத்துதல் (3:5,6; 16:3,9)

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பும் நேர்மையும் (15:25a; 17:3; 21:2; 29:26)

சர்வ வியாபியாகிய கர்த்தர் (15:3)

எங்குமிருக்கும் கர்த்தர் (15:11; 16:2)

மன்றாட்டுக்கு விடைதரும் கர்த்தர் (15:8,29)

கர்த்தருடைய பாதுகாப்பு (15:25b; 18:10)

செல்வந்தனும் ஏழையும் (10:15; 13:7,8; 14:20, 21,31; 15:16; 17:1,5; 18:23; 19:1,4,17; 21:13; 22:2,7, 16,22,23; 28:3,6,11,27; 29:7,13)

ஞானத்தின் ஆதாரம் (2:6-8)

கர்த்தருடைய இறையாண்மையும் வல்லமையும் (16:1,7,9,33; 19:21; 20:24; 21:30,31; 22:12)

நம்பிக்கைக்குரிய கர்த்தர் (29:25b)

பிள்ளை வளர்ப்பு

பிள்ளைகளை பயிற்றுவிப்பதற்கான அறிவுரை (13:24; 19:18; 22:6,15; 23:13,14; 29:15,17).

பெற்றோருக்குக் கீழ்ப்படிதல், கீழ்ப்படியாமை (1:8,9; 6:20,22; 13:1,19-26; 20:20; 23:22; 30:17)

பெற்றோரின் அறிவுரை (1:8-19; 2:1-22; 3:1-35; 4:1-27; 5:1-23; 6:1-35; 7:1-27; 23:19-35; 24:4-22; 31:1-9)

பேச்சு

பொருத்தமான பேச்சு (15:23; 25:11)

புறம்பேசுதல் (25:23)

இழித்துப் பேசுதல் (11:12a)

தொல்லையளிக்கும் பேச்சு (27:14)

தீமையான பேச்சு (12:13a; 15:28b)

வரம்பு கடந்த பேச்சு (10:19a; 13:3b)

முகத்துதி (20:19; 26:28b; 28:23; 29:5)

முட்டாள்தனமான பேச்சு (12:23b; 14:3a,7; 15:2b; 18:6,7)

மென்மையான பேச்சு (15:1a, 4a)

நல்ல பேச்சு (10:20a, 21a; 16:21,23,24; 23:16)

ஊறு விளைவிக்கிற பேச்சு (11:9,11; 12:18a; 15:4b; 16:27; 18:21; 26:18,19)

கடுமையான பேச்சு (15:1b)

பதற்றமான பேச்சு (18:13; 29:20)

குணப்படுத்தும் பேச்சு (12:18b; 15:4a; 16:24; 18:21)

நேர்மையான பேச்சு (12:19a; 13:5)

பொருத்தமற்ற பேச்சு (17:7)

பொய்யான, ஏமாற்றுகிற பேச்சு (6:17; 10:18a; 12:19b,22a; 14:25b; 17:4; 26:18,19,23-26,28a)

முறைகேடான பேச்சு (4:24; 10:31b,32b; 15:4b; 17:20b)

கட்டுப்பாடுள்ள பேச்சு (10:19b; 11:12b,13b; 12:23a; 13:3a; 17:27a,28; 21:23)

மனநிறைவளிக்கும் பேச்சு (12:14; 18:20)

அவதூறான பேச்சு (10:18b; 30:10)

கோள்சொல்லுதல், வதந்தி (11:13a; 16:28; 17:9b; 18:8; 20:19; 22:11a; 26:10,22-26,28)

கருத்தூன்றிய பேச்சு (15:28a)

மெய்யான சாட்சி, பொய்ச்சாட்சி (6:19; 12:17; 14:5,25; 19:5,9,28; 21:28; 25:18)

புத்திசாலித்தனமான பேச்சு (10:31a; 14:3b; 15:2a; 18:4)

பயனற்ற பேச்சு (14:23b)

பலவகைக் கருத்துகள்

அருவருக்கத்தக்கவை

- கர்த்தருக்கு (3:32; 6:16; 8:7; 11:1,20; 12:22; 15:8,9,26; 16:5; 17:15; 20:10,23; 21:27; 28:9)

- மற்றவர்களுக்கு (13:19; 16:12; 24:9; 26:25; 29:27)

பழங்காலத்தவை (22:28; 23:10,11)

கடன்பெறுதல், கடன்கொடுத்தல் (23:7b)

விடாமுயற்சியுள்ள மனிதன் (21:5; 22:29; 27:18,23-27; 28:19a)

கடின உழைப்பாளியும் சோம்பேறியும் (10:4,5; 12;24,27; 13:4)

பகைவன் (16:7; 24:17,18; 25:21; 27:6)

பொறாமை (3:31; 14:30; 23:17; 24:1,19; 27:4)

கள்ளத்தராசும் எடைக்கற்களும் (11:1; 16:11; 20:10,23)

நண்பர்கள், அயலகத்தார், நட்பு (3:27-29; 6:1-5; 11:12; 12:26; 14:21; 16:28; 17:9,17; 18:17,24; 21:10; 22:24,25; 24:17,19; 25:8,9,17,20,21,22; 26:18,19; 27:6,9,10,14,17; 28:23; 29:5)

தேன் (16:24; 24:13; 25;1627; 27:7)

பெருமுயற்சி (12:9,11; 14:4,23a)

உடல்நலம், மனநலம், ஆவிக்குரிய நலம் ஆகியவற்றிற்கிடையிலான தொடர்பு (3:1,2,7,8,16; 4:10,22; 9:11; 13:12; 14:30; 15:13,30; 16:24; 17:22; 18:14; 27:9)

நீதியும், அநீதியும் (13:23; 17:15,26; 18:5; 21:15; 22:8,16; 24:23,24)

அரசன், ஆளுநன் (14:28,35; 16:10,12-15; 19:12; 20:2,8,26,28; 21:2; 22:11,29; 23:1; 24:21,22; 25:2-7,15; 28:15,16; 29:2,4,12,14,26; 30:31; 31:4,5)

சீட்டுப் போடுதல் (16:33; 18:18)

முதிர்வயது (16:31; 17:6; 20:29)

ஒருதலைச்சார்பு (18:5; 24:23b-25; 28:21)

பெருமையும், தாழ்மையும் (3:34b; 8:13; 11:2; 15:33; 16:5,18,19; 18:12; 22:4; 29:23)

புகழ் (10:7; 22:1)

நீதிமானும், துன்மார்க்கனும் (3:32,33; 10:3,6,7,9,11,16,24,25,28,29-32; 11:3-11,17-21, 23, 27,31; 12:2,3,5-8,12-14,20,21,26,28; 13:2,5,6,9,21,25; 14:2,9,11,14,22,32; 15:8,9,26 24:15,16; 28:1,12)

ஏளனமாய்ப் பேசுபவர் (3:34ய; 9:7,8,12; 13:1; 14:6; 15:12; 19:25; 21:11, 24; 22:10; 24:9; 29:8ய)

வேலைக்காரரும் அடிமைகளும் (14:35; 17:2; 19:10; 29:19,21)

சோம்பேறி (6:6-11; 10:26; 15:19; 18:9; 19:15,24; 20:4,13; 21:25; 22:13; 24:30-34; 26:13-16)

ஆத்தும ஆதாயம் செய்தல் (11:30; 24:11,12)

சண்டையும் சச்சரவும் (10:12; 12:18; 13:10; 15:1-4,18; 16:27,28; 18:6-8; 21:9,19; 28:25)

பிணைபடுதல் (6:1-5; 11:15; 17:18; 20:16; 22:26,27; 27:13)

கற்பதற்கு ஆயத்தமுள்ள மனிதன் (அறிவுரை, தவறு திருத்துதல் ஆகியவற்றை ஏற்கும் மனதுடைய) (1:5; 9:7-9; 10:17; 12:1,15; 13:1,10,18; 15:5,10, 12,31,32; 17:10; 19:20,25; 21:11; 25:12; 27:5,6; 28:23; 29:1)

கோபமும், பொறுமையும் (14:17,29; 15:18; 16:32; 19:11)

தன்னடக்கமும், தற்கட்டுப்பாடும் (23:1-3; 25:28)

திராட்சைச் செடி (20:1; 21:27; 23:20, 21, 29-35; 31:4-7)

வழிநடத்துதல், பிறருடைய அறிவுரை ஆகிய வற்றைப் பெறக்கூடிய ஞானம் (11:14; 12:15; 15:22; 20:28; 24:6)

மனுவுருவெடுத்த ஞானம் (1:20-33; 8:1-36; 9:1-6; 14:1ய; 16:16,22; 19:23)

புத்திமானும், மதிகேடனும் (3:35; 10:8,13,14,23; 12:15,16,23; 13:16; 14:3,8,15,16,18,19,24,33; 15:7,14, 20,21; 17:11,12,16,21,24,25,28; 18:2,6-8; 29:8,9,11)

திருமறை வார்த்தையும், அதற்குக் கீழ்ப்படி தலும் (13:13,14; 16:20; 19:16; 28:4,7,9; 29:18; 30:5,6)

செல்வம்

பிரச்சினையோடு சேர்ந்து வருதல் (15:6,16,17; 16:8; 17:1)

நண்பர்களை அழைத்துவருதல் (19:4,6)

வன்முறையால் பெறுதல் (11:16)

நேர்மையற்ற முறையில் பெறுதல் (10:2; 13:22b; 15:6b; 20:17; 21:6; 22:16; 28:8)

தீவிரமாகச் சேர்த்தல் (13:11; 20:21; 28:20b,22)

நேர்மையான முறையில் ஈட்டுதல் (10:16)

அன்பளிப்பும் லஞ்சமும் (15:27; 17:8,23; 18:16; 19:6; 21:14; 25:14; 29:4)

வாரிசுரிமையாகப் பெறுதல் (19:14)

அதன் குறைந்த மதிப்பு (11:4)

ஞானத்தைவிட மதிப்பில் குறைந்தது (16:16)

நம்பக்கூடாதது (11:28)

பாசாங்கு செய்தல் (13:7)

பாதுகாப்பு (10:15a; 13:8; 18:11)

உக்கிராண ஊழியமும், பெருந்தன்மையும் (3:9,10,27,28; 11:24-26; 19:6; 21:26bb; 22:9; 28:27)

தற்காலிகமானது (23:4,5; 27;24)

துன்மார்க்கமான பெண்

துன்மார்க்கமான பெண் அல்லது பரத்தை (2:16-19; 5:3-23; 6:24-35; 7:5-27; 9:13-18; 22:14; 23:27,28; 30:20)

மற்ற பெண்கள்

பகுத்தறிவற்ற அழகிய பெண் (11:22)

சண்டையிடும் பெண் (19:13; 21:9,19; 25:24; 27:15,16)

நற்குண மனைவி (12:4; 18:22; 31:10-31)

நல்லொழுக்கமுள்ள பெண் (11:16)

புத்தியுள்ள மனைவி (19:14)

அன்புகூரப்படாத பெண் (30:23)

இளவயதின் மனைவி (5:18.19)

பொருட்சுருக்கம்

1. முன்னுரை (1:1-7)

2. ஞானம், மதியீனம் பற்றிய சாலொமோனின் நீதிமொழிகள் (1:8-9:18)

அ. ஞானம் கடிந்துரைத்தல் (1:8-33)

ஆ. ஞானத்தின் வழிகள் (அதி. 2)

இ. ஞானத்தின் பரிசுகள் (3:1-10)

ஈ. பரிசுப்பொருளாக ஞானம்

உ. நடைமுறையில் ஞானம் (3:21-35)

ஊ. ஞானம் ஒரு குடும்பச் சொத்து போன்றது

எ. ஞானமும் இரண்டு வழிகளும் (4:10-27)

ஏ. ஒழுக்கக்கேட்டின் மதியீனம் (அதி. 5)

ஐ. பிணைபடுதல், சோம்பேறித்தனம், ஏமாற்றுதல் ஆகிய அறிவற்ற நடத்தைகள் (6:1-19)

ஒ. விபசாரம் வேசித்தனம் ஆகிய குற்றங்கள் (6:20-7:27)

ஓள. ஞானத்தினிடத்திலிருந்தும், மதியீனத்திடத்திலிருந்தும் வரும் அழைப்பு (9:1-18)

3. நடைமுறை நன்னடத்தை பற்றிய சாலொமோனின் நீதிமொழிகள் (10:1-22:16)

அ. நீதிமான்கள், துன்மார்க்கர் இவர்களுடைய வாழ்க்கைமுறை வேறுபடுத்திக் காட்டப்படுதல் (10:1-15:33)

ஆ. நீதியுள்ள வாழ்க்கைமுறை பாராட்டப்படுதல் (16:1-22:16)

4. ஞானிகளுடைய நீதிமொழிகள் (22:17-24:34)

அ. ஞானியின் சொற்கள் (22:17-24:22)

அ. ஞானி தொடர்ந்து கூறும் சொற்கள் (24:23-34)

5. எசேக்கியாவின் மனிதர்கள் சாலொமோனின் நீதிமொழிகளைத் தொகுத்துத் தருதல் (25:1-29:27)

6. ஆகூரின் வாக்கியங்கள் (அதி. 30)

7. லேமுவேல் என்னும் அரசனின் தாய் அவனுக்குக் கற்பித்த பாடம் (31:1-9)

8. மிகச்சிறந்த முன்மாதிரியான மனைவி மற்றும் தாய் (31:10-31)

பொருட்சுருக்க அட்டவணை

தலைப்பு	நூலின் நோக்கம்	சாலொமோனின் நீதிமொழிகள்		ஞானிகளுடைய நீதிமொழிகள்	எசேக்கியாவின் தொகுப்புகள்	ஆகூரின் வாக்கியங்கள்	லேமுவேலின் நீதிமொழிகள்
பகுப்பு	முகவுரை	தந்தையின் அறிவுரை	நடைமுறை நன்னடத்தை அறிவுரை	ஞானியின் சொற்கள்	சாலொமோனின் பழமொழி தொகுப்பு	எண் சூழ்ந்த மொழிகள்	நற்றிறம் வாய்ந்த மனைவி
வசனம்	1:1-7	1:8-9:26	10:1-22:16	22:17-24:34	25:1-29:27	30:1-33	31:1-31
இடம்	யூதேயா						
காலம்	கி. மு. 950-700						

விளக்கவுரை

1. முன்னுரை [1:1-7]

1:1 தாவீதின் குமாரனாகிய சாலொமோன் ஞானத்திலும் செல்வத்திலும் மிகச் சிறந்து விளங்கினான்; மேலும் இஸ்ரவேலின் அரசர்கள் எல்லோரிலும் மிகவும் மதிக்கப்பட்டவனாகவும் இருந்தான் (1 இராஜா. 3:12,13; 4:30,31). அவன் மூவாயிரம் **நீதிமொழிகளைக்** கூறினான், அவற்றில் சில மட்டுமே இந்நூலில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. 1:1 முதல் 29:27 வரை அவற்றைக் காணலாம்.

1:2,3 இரண்டு முதல் ஆறு வரையிலான வசனங்களில் நீதிமொழிகளைத் தான் எழுதியதற்கான காரணத்தை அவன் நம்மிடம் கூறுகிறான். சுருங்கக் கூறின், அவை வாழ்வதற்கும், வாழ்க்கையை நிருவகிப்பதற்கும் தேவையான நடைமுறை **ஞானத்தைத்** தருகின்றன.

இதன் வாயிலாக மனிதர்கள் நுண்ணறிவுத் திறமையைக் கற்றிடுவார்கள்; மேலும் ஒரு செயலைச் செய்வதற்கான ஆற்றலை அல்லது செயற்திறனை அடைவதற்கான அறிவுரையைப் பெறுவார்கள். மேலும் இதன் வாயிலாக நுண்ணறிவுள்ள வார்த்தைகளை விளங்கிக்கொள்வதற்கான பாடங்களைக் கற்கலாம். நன்மை தீமை, பயனளிப்பது பயனற்றது, அனுகூலமானது ஊறு விளைவிப்பது போன்றவற்றை இது பகுத்துணரச் செய்கிறது. இங்கு விவேகம், நீதி, நியாயம், நன்மதிப்பிற்குரியது ஆகியவற்றின் பாடங்களைக் கற்கலாம்.

1:4 இந்த நீதிமொழிகளைக் கேட்பதன் மூலம் **பேதைகள் வினாவை** அல்லது கூரறிவைப் பெருக்கிக்கொள்ள முடியும். மேலும் இளைஞர்கள் தெளிவையும் தூய்மைப்படுத்தப்பட்ட பொது அறிவையும் வளர்த்துக் கொள்வார்கள்.

1:5 இந்த நீதிமொழிகளுக்குச் செவிமடுக்கிற **புத்திமான்கள்** அதிக புத்தியுடைவராக வளருவார்கள், நிதானிக்கும் அறிவுள்ளவன் தன்னை வழிநடத்தவும், மற்றவர்களுக்கு ஆலோசனை வழங்கவும் கற்பான். முதன்மையாக இளைஞருக்கு எழுதப்பட்ட இந்நூல் தொடக்கத்திலேயே **"புத்திமான் கேட்பான்"** என்று அறிவிப்பது குறிப்பிடத்தக்கது அல்லவா? நீதிமொழிகள் நூலில் புத்திமானைக் குறித்து அவ்வாறுதான் சொல்லப்பட்டுள்ளது. அவன் கற்பதற்கு விருப்பமுள்ளவன். அவன் எப்போதும் பேசிக்கொண்டே இருப்பதற்கல்ல, கேட்பதற்கு விருப்பத்தோடு இருக்கிறான். அவன் சகிக்க முடியாத "எல்லாம் அறிந்தவன்" அல்லன்.

1:6 ஒருவன் **நீதிமொழியையும்** பழமொழியையும் விளங்கிக்கொள்வதற்காக இந்நூல் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. அதாவது, மறைபொருளான பாடத்தைக் கற்க இது உதவுகிறது. மேலும் இது ஞானிகளின் வாக்கியங்களையும், அவற்றில் மறைந்திருக்கும் உண்மைகளையும் விளங்கிக் கொள்ள உதவிபுரிகிறது.

1:7 நாம் இப்பொழுது இந்த நூலின் மிக முக்கியமான வசனத்திடம் வந்திருக்கிறோம் (9:10 - ஐயும் காண்க). **கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்** அல்லது முக்கிய பங்கு. ஒரு மனிதன் புத்திமானாக இருக்க விரும்பினால், அதற்கான இடம் தேவனை மதிப்பதும், அவரை விசுவாசித்துக் கீழ்ப்படிவதுமே ஆகும். படைப்பு தனது படைப்பாளரை நம்புவதைப் பார்க்கிலும் பகுத்தறிவு மிக்க செயல் எது? இதற்கு மறுபுறம், ஒருவன் தேவனுடைய வார்த்தையை நிராகரித்து, தன்னுடைய சொந்த மனம்போகிற போக்கில் வாழ்வானானால் அதைக் காட்டிலும் வாதத்திற்கு பொருந்தாதது என்ன இருக்க முடியும்? ஒருவன் தனது பாவங்களுக்காக மனம்வருந்தி, இயேசு கிறிஸ்துவைக் கர்த்தரும் இரட்சகருமாக நம்பி, அவருக்காக முழு இருதயத்தோடும் விசுவாசத்தோடும் வாழ்வானானால் அதுவே புத்தியுள்ள செயல்.

மூடர் ஞானத்தையும் போதகத்தையும் அசட்டைபண்ணுகிறார்கள். இந்நூலில் காணப்படும் புத்திமான் கற்பதற்கு விருப்பமும் ஆர்வமும் கொண்டிருக்கிறான், ஆனால் மூடனிடம் ஒன்றும் சொல்லமுடியாது. அவன் பிடிவாதமும் ஆணவமும் கொண்டவன்; வாழ்க்கைப் பாடங்களைக் கடினமான வழியில்தான் கற்கிறான்.

2. ஞானம், மதியீனம் பற்றிய சாலொமோனின் நீதிமொழிகள் [1:8-9:18]

அ. ஞானம் கடிந்துரைத்தல் [1:8-33]

1:8 முதல் ஏழு அதிகாரங்கள் பெரும்பாலும் **"என் மகன்"** என்னும் முகவரியுடன் எழுதப்பட்டுள்ளன. இந்தச் சொற்றொடர் ஏறத்தாழ 15 இடங்களில் காணப்படுகிறது. இந்த அதிகாரங்களில், தன்னுடைய பிள்ளையின் வாழ்க்கையில் மிகச் சிறந்தது வேண்டும் என்று விரும்புகிற ஒரு தகப்பனின் இதயத்துடிப்பை நாம் கேட்கிறோம். இவ்விதமான பெற்றோரின் அறிவுரையைக் கேட்டு நடக்கிற இளைஞன் முட்டாள்தனமான கண்ணிகளுக்குத் தப்பி, நடைமுறை வாழ்க்கையிலும் அனுதின அலுவல்களிலும் சாதுரியமாகச் செயல்பட தன்னை வளர்த்துக் கொள்வான்.

நாம் எவ்வளவாக தெய்வபக்தியுள்ள பெற்றோருக்கு, குறிப்பாக தெய்வபக்தியுள்ள தாய்மார்களுக்குக் கடன்பட்டிருக்கிறோம். திருவாளர் ஹென்றி போஸ்ச் நமக்கு நினைவுபடுத்துகிறார்:

> கடந்தகாலத்தில் வாழ்ந்த பல பெரிய மனிதர்கள், தங்களுடைய தாயின் காலடியில் கற்றுக்கொண்ட பாடங்களின் காரணமாகப் பெருமளவு நற்பேறு அடைந்தார்கள். மோசே, சாமுவேல், தீமோத்தேயு ஆகியோரைக் குறித்துச் சிந்தித்துப் பாருங்கள். ஆவிக்குரிய தலைவர்களாகிய இவர்கள் அனுபவித்த தாயின் அக்கறையும், தெய்வீக செல்வாக்கும் இவர்களுடைய வாழ்க்கையில் பெருமளவு கனிகளைத் தந்தன. அகஸ்டின், ஜான் நியூட்டன், வைராக்கியம் மிகுந்த வெஸ்லி சகோதரர்கள் ஆகியோரைக் குறித்தும் சிந்தியுங்கள். அன்பின் சட்டமும், கிறிஸ்தவச் சான்றும் அனுதின வழிகாட்டியாகவும் உயிரூட்டமாகவும் விளங்கிய வீடுகளில் வளர்க்கப்பட்ட இந்த மனிதர்களின் பெயர்கள், தெய்வபக்தி நிறைந்த தாய்மார்கள் இல்லாமல் போயிருந்தால், வரலாற்றின் பக்கங்களில் ஒருக்காலும் ஒளிபெறாமல் போயிருக்கும்.[3]

1:9 பெற்றோரின் அறிவுரை கைக்கொள்ளப்பட்டால், அது தலையைச் சிறப்பிக்கும் மகுடமாகவும், கழுத்தைச் சுற்றி அலங்கரிக்கும் மாலைகளாகவும் விளங்கும். கீழ்ப்படிதல் மரியாதையையும் நன்னெறி அழகையும் புத்திமானுடைய வாழ்வில் கொண்டுவரும் என்று கவிதை வடிவில் இங்கு கூறப்பட்டுள்ளது.

1:10 ஓரிளைஞன் தன்னுடைய வாழ்க்கையைக் கெடுத்துச் சீரற்றுக் காணப்படுகிறபோது, "அவனுடைய சேர்க்கை சரியில்லை" என்று பொதுவாக விளக்கமளிப்பது உண்டு. அது எவ்வாறு நடைபெறுகிறது என்பது 10-19 வசனங்களில் வண்ணமிகு வகையில் கூறப்பட்டுள்ளது.

முதலாவது, எச்சரிப்பின் கொடி பறக்கவிடப்படுகிறது. கவர்ச்சியுட்டி இழுக்கக்கூடிய தீமைகள் வாழ்க்கையில் நிறைந்திருக்கின்றன. ஒவ்வொரு வாரமும் ஆயிரம் தடவை "முடியாது" என்று நாம் சொல்வதற்குரிய துணிவையும் முதுகெலும்பையும் பெற்றிருக்க வேண்டும்.

1:11 ஒரு தெரு முனையில் நின்றுகொண்டிருக்கும் போக்கிரிக் கும்பல் கொள்ளையடிக்கச் செல்வதற்கான அழைப்பை நமது இளம் நண்பனிடம் விடுக்கிறார்கள். தேவைப்பட்டால் அவர்கள் "கொலைசெய்யவும்" தயங்கமாட்டார்கள். அவர்களுடைய பசப்பு வார்த்தைகளைக் கேட்கும் நமது நண்பன், இந்த அஞ்சா நெஞ்சம் கொண்ட கூட்டம் தன்னையும் அவர்கள் கும்பலில் ஒருவனாகச் சேர்த்துக்கொள்ளும் என்று நினைப்பான். **"எங்களோடே வா"** என்று அவர்கள் அழைப்பார்கள். அவனும் தான் ஒரு துணிகரச் செயலைச் செய்யப்போவதாக எண்ணி, உணர்ச்சி வயப்பட்டு அதில் சிக்கிக்கொள்வான்.

1:12-14 ஒருவேளை அவன் கூண்டுக்குள் வாழ்ந்த வாழ்க்கையில் சலிப்படைந்திருந்தான் போலும், ஏதாவது ஒன்றைச் செய்து "தனது விளையாட்டைத்" தொடங்க நினைத்தான். அது இங்கே இருக்கிறது! திறம்பட செய்யப்படவிருக்கும் குற்றம்! வன்முறையில் ஏற்படும் திடீர் மரணம், காட்டிக்கொடுக்கக்கூடிய எல்லாச் சான்றுகளையும் அழித்துவிடலாம். அதற்குப் பெரிய பரிசுத்தொகை கிடைக்கும், ஆம் ஒரே நாளில் அவர்கள் எல்லோரும் பெரும் செல்வந்தர்களாகி விடலாம். கூட்டாளிகள் எல்லோருடைய வீடுகளும் கொள்ளைப் பொருட்களால் நிரப்பப்படும். "இதைப் புரிந்துகொள், உனக்கு ஒரு பங்கு கிடைக்கும், எல்லோரும் சமமாகப் பங்கிட்டுக் கொள்ளலாம், உனக்கு எந்த இழப்பும் உண்டாகாது."

1:15,16 ஆனால் புத்திபுகட்டும் சத்தம் கூறுகிறது, "**என் மகனே**, அவ்வாறு செய்யாதே, அவர்களை விட்டு எவ்வளவு விலகிச் செல்லமுடியுமோ அவ்வளவு விலகு. உடனடிச் செல்வத்தைப் பெறலாம் என்று அவர்களுடைய திட்டத்திற்குச் சம்மதிக்காதே, உன்னால் வெற்றிபெற முடியாது."

"இந்த மனிதர்கள் இடைவிடாமல் குற்றம் செய்துகொண்டே இருப்பார்கள் என்பதை நீ உணர வேண்டும், அவர்கள் சுடுவதற்குத் தயங்குவதில்லை. அவர்கள் அடுத்தடுத்து கொலை செய்துகொண்டே இருப்பார்கள்."

1:17,18 தெளிவாகத் தெரிகிற வலையில் எந்தப் பறவையானாலும் சிக்கிக்கொள்ளாமல் இருப்பதற்கான உணர்வைப் பெற்றிருக்கும். ஆனால் இந்த மனிதர்கள் தங்களுடைய சொந்த உயிருக்கே குழிதோண்டுகிறார்கள், பிறகு அதற்கு நேராக நடக்கிறார்கள்.

1:19 இந்தக் கதையில் ஒரு நன்னெறி கற்பிக்கப்படுகிறது. வெகுவிரைவில் பெருஞ்செல்வந்தராக வேண்டும் என்று எண்ணுகிறவர்கள் தங்களுடைய பேராசையின் காரணமாகத் தங்களு

டைய உயிரையே கொடுக்க நேரிடும். "**பொருளாசையுள்ள எல்லோருடைய வழியும் இதுவே; இது தன்னுடையவர்களின் உயிரை வாங்கும்.**

வன்முறையின் மூலமாக செல்வத்தைச் சம்பாதிக்க வேண்டும் என்று செய்கிற முயற்சியைக் குறித்து இந்தப் பகுதி பேசுகிறது. ஆனால் கற்பிக்கப்படும் பாடம் விரிவானது. விரைவாகச் செல்வத்தைப் பெருக்குவதற்கான திட்டங்கள், ஒருவேளை அது சூதாட்டமாக இருக்கலாம், பங்குகளில் லாபம் கருதி செய்யப்படும் வர்த்தகம் போன்ற எல்லாம் அதில் அடங்கும்.

அடுத்ததாக நாம் வழிப்போக்கரை அழைக்கும் இரண்டு சத்தங்கள். ஒன்று ஞானத்தின் சத்தம், மற்றது அறிமுகமாகாத பெண். இங்கு ஞானம் பெண்பாலில் குறிப்பிடப்பட்டிருப்பினும், அது கர்த்தராகிய இயேசுவுக்கு அடையாளமாயிருக்கிறது.[4] அறிமுகமாகாத பெண் பாவச் சோதனையையும் துன்மார்க்கமான உலகத்தையும் பிரதிபலிக்கிறாள். (தமிழில் ஞானம் அ.ி.றிணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.)

20 முதல் 33 வரையிலான வசனங்களில் ஞானம் இல்லாமல் செயல்படலாம் என்று மதியீனமாகச் சிந்திக்கிறவர்களை நோக்கி வேண்டுகிற சொற்களாகும்.

1:20 ஞானம் முக்கியமான இடங்களில், எல்லோரும் அது கூறுகிற செய்தியைக் கேட்கும்படி சத்தமிட்டுப் பேசுவதைக் கவனியுங்கள். **அது நகரத்தின் வெளியில் நின்று கூப்பிடுகிறது.**

1:21 இப்பொழுது அது சந்தடியுள்ள தெருச் சந்தியில் அல்லது நகரத்தின் நுழைவு **வாசலில் நின்று கூப்பிடுகிறது**. அதுபோலவே நமது கர்த்தரும் மனிதர்கள் நடந்து செல்கிற இடங்களில் நின்று எல்லா இனத்தாரையும் அழைக்கிறார்:

> எண்ணற்ற பிரிவுகள் விதவிதக் கொள்கைகள்,
> மொழியினம் சாதிகள் குழப்பங்கள் பலப்பல,
> ஞானத்தின் உருவாய் நடுவினில் நின்றவர்
> இனிதுடன் அழைத்திடும் தொனியினைக் கேட்பீரே!

1:22 பேதைகளையும், நிந்தனை செய்பவர்களையும், மதியீனரையும் நோக்கி ஞானம் சத்தமிடுகிறது. பேதைகள் சூதுவாதற்றவர்கள், எதையும் எளிதில் ஏற்கக் கூடியவர்கள், நன்மையோ தீமையோ எல்லாவிதமான தூண்டுதல்களுக்கும் இடங்கொடுக்கிறவர்கள்; இங்கு அவர்களுடைய உறுதியற்ற தன்மை தவறான பாதையில் அவர்கள் செல்லும்படி வழிநடத்துவதாகத் தோன்றுகிறது. **நிந்தனை செய்பவர்கள்** அல்லது ஏளனம் செய்பவர்கள் புத்திபுகட்டும் ஆலோசனைகளை இறுமாப்போடு எதிர்க்கிறார்கள்; அவர்களுக்கு எதுவும் புனிதமானது அல்ல, முக்கியமானதும் அல்ல. **மதியீனர்கள்** அறிவுரைகளை முட்டாள்தனமாக நிராகரிக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய அறியாமையின் காரணமாக இறுமாப்புடனும், தங்களுடைய கொள்கையில் பிடிவாதத்தோடும் செயல்படுகிறார்கள்.

1:23 இந்த வசனத்தை இரண்டு வகையாகப் புரிந்துகொள்ளலாம். முதலாவது இதன் பொருள்:

> என்னுடைய அழைப்பை நீங்கள் ஏற்றுக் கொள்ளமாட்டீர்கள், இப்பொழுது என்னுடைய **கடிந்துகொள்ளுதலைக்** கேட்கத் **திரும்புங்கள்**, நியாயத்தீர்ப்பைக் கூறும்படி **என் ஆவியை** ஊற்றுவேன், உங்களுக்கு அடுத்து என்ன நடக்கப்போகிறது என்பதைச் சொல்லுவேன்.

மேற்கூறப்பட்டுள்ள விளக்கத்தின்படி, 24 முதல் 27 வரையிலான வசனங்கள் அவர்கள் அடையப் போகிற அழிவை விவரிக்கிற சொற்களாகும்.

இரண்டாவது விளக்கம் கீழ்க்கண்டபடி இருக்கக்கூடும்:

> நான் கடிந்துகொள்ளும்படிபோது நீங்கள் **திரும்புங்கள்**, அவ்வாறு செய்வீர்களானால் அப்பொழுது **நான் என் ஆவியை** ஆசீர்வாதமாக உங்களுக்கு **அருளுவேன்**, எனது ஞானத்தின் வார்த்தைகளை நீங்கள் அறியும்படி தெரிவிப்பேன்.

இங்கு **"ஆவி"** என்னும் சொல் "சிந்தனைகள்" அல்லது "மனம்" என்னும் பொருள்படும் என்று தோன்றுகிறது. கிறிஸ்துவின் அழைப்புக்குச் செவிமடுக்கிறவர்கள்மேல் அவர் பரிசுத்த ஆவியை அருளுவது உண்மையாக இருந்தபோதிலும், இவ்வுண்மை புதிய ஏற்பாட்டில் தெளிவாக உரைக்கப்பட்டிருப்பது போலப் பழைய ஏற்பாட்டில் உரைக்கப்படவில்லை.

1:24 வாழ்க்கையில் ஏற்படக்கூடிய மிகப் பெரிய சோக நிகழ்ச்சிகளில் ஒன்று, ஞானத்தின் கிருபையுள்ள வேண்டுதல்களை முட்டாள்தனமாக நிராகரிப்பது ஆகும். இப்பொழுது வாய்ப்பை இழந்து தேம்பி அழுகிறவர்களை, அது ஒலிவ மலையின் உச்சியிலிருந்து முன்னொரு சமயம் அழைத்தது, "நான் ஆயத்தமாயிருக்கிறேன்.. நீங்களோ மாட்டோம் என்கிறீர்கள்."

1:25 ஞானத்தின் **ஆலோசனையையெல்லாம்** புறக்கணித்துத் தள்ளி, அது உரைத்த

ஆக்கபூர்வமான குறைபாடுகளைகளைக் குறித்து ஒன்றும் செய்யாத மனிதர்களுக்காக அது வருந்தியது.

தேவனுடைய கட்டளைகளும் எச்சரிப்புகளும் தேவனுக்காக அல்ல மனிதனுடைய நன்மைக் காகவே கொடுக்கப்பட்டுள்ளன; மனிதன் பிடிவாதத்தோடு மறுத்துரைப்பது பகுத்தறிவுக்கு ஏற்றதல்ல என்பதை இவ்வுண்மையே வலியுறுத்துகிறது. திருவாளர் D. G. பார்ன்ஹவுஸ் கூறிய ஒரு நிகழ்ச்சியில் இது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. வாஷிங்டன் மிருகக்காட்சி சாலையில் ஒரு சிங்கத்தின் கூண்டிற்கு ஆறு அடி தூரத்தில் இரும்புக் கம்பிகளால் ஆன தடுப்பு போடப்பட்டிருந்தது. அந்தக் கம்பிகளின் இடையே இருந்த இடுக்கின் வழியாகத் தன்னை நெளித்துக்கொண்டு ஒரு சிறுமி அதற்குள்ளே சென்றாள். அவளை வெளியே வரும்படி அவளுடைய தாத்தா கண்டிப்பான குரலில் சொன்னபோது, அவரைக் கேலி செய்து கொண்டே பின்புறமாக அவள் சென்றாள். காத்திருந்த சிங்கம் கூண்டின் உள்ளேயிருந்து அவளை இழுத்து, அடித்துச் சிதைத்துக் கொன்று போட்டது. பார்ன்ஹவுஸ் கற்பிக்கிற பாடம்:

> நம்முடைய நன்மைக்காகவே தேவன் கட்டளைகளையும் ஒழுக்கமுறை விதிகளையும் தந்திருக்கிறார். நம்மை அடக்கியாள வேண்டும், மனமகிழ்வுடன் இருக்கக்கூடாது என்பதற்காக அவர் ஒருபோதும் நமக்குக் கட்டளைகளைத் தருகிறதில்லை. ''என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்'' என்று தேவன் கூறுகிறார். அவர் தமது தகுதி, உரிமை ஆகியவற்றிற்குப் பங்கம் ஏற்பட்டுவிடும் என்னும் பொறாமையால் அல்ல, அவருக்கும் நமக்கும் இடையே நாம் எதையேனும் வைப்போமெனில் அது நமக்கு இடர்ப்பாட்டை உண்டுபண்ணும். இவ்வுண்மையின் பின்னணியில் இருக்கும் கொள்கையை நாம் புரிந்துகொள்வோமெனில், தேவன் நம்மை ஏன் சிட்சிக்கிறார் என்பதையும் புரிந்துகொள்வோம். ''கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சிக்கிறார்'' (எபி. 12:6). நாம் பின்னிட்டுச் சிங்கத்திடம் செல்வதை அவர் விரும்புவதில்லை, ஏனெனில் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித் திரிகிற சிங்கமாகிய பிசாசு அங்கே இருக்கிறான்.[5]

1:26 ஒருவன் தொடர்ந்து செவிமடுக்க மறுத்து ரைப்பானாகில், அவனுடைய மறுப்பு பேரிடரையும் அழிவையும் ஏற்படுத்துவது நிச்சயம். பின்னர் ஞானம் நகைப்பதற்கான சந்தர்ப்பம் ஏற்படும். **"நானும் உங்கள் ஆபத்துக் காலத்தில் நகைத்து, நீங்கள் பயப்படுங் காரியம் வரும்போது ஆகடியம் பண்ணுவேன்."**

இங்கும் சங்கீதம் 2:4 -லும் நாம் காண்கிறபடி, துன்மார்க்கர்மேல் பேரிடர் விழுகிறபோது கர்த்தர் மெய்யாகவே நகைப்பார் என்பதுதான் இதன் பொருளா? அந்த நகைப்பில் ஏதோ கொடூரமோ, பகைமை எண்ணமோ, பழிக்குப் பழிவாங்கும் எண்ணமோ இருக்குமென்றால், அதன் விடை "இல்லை" என்பது தெளிவாகத் தெரிகிறது. மாறாக, இந்த நகைப்பை நாம் உருவகமாக எண்ணிப் பார்க்க வேண்டும். மரபுமொழி வழக்கத்தின்படி, ஒரு சாதாரண மனிதன் எல்லாம் வல்ல இறைவனுடைய வார்த்தையை எதிர்ப்பது, வெடிமருந்துச் சூளையை எதிர்ப்பது போல நகைப்புக்கிடமானதும் ஏளனத்துக்குரியதும் ஆகும். மேலும் அதில் இத்தகைய கருத்தும் அடங்கியுள்ளது. ஒருவன் ஞானத்தின் கட்டளைகளைக் கேட்டு நகைக்கலாம், அல்லது அவை இல்லாததுபோல நடந்து கொள்ளலாம், ஆனால் அந்த மனிதன் தன்னுடைய தவறுக்கான பலனை அறுவடை செய்கிற போது, அந்தக் கட்டளை இன்னும் அசைக்கப்படாமல் நிலைத்து நிற்கும். ஒருவேளை ஏளனம் செய்து நகைத்தவனுக்காவது, அவருடைய நகைப்பு முடிவான நகைப்பாகக் காணப்படும்-நியாயத்தீர்ப்பின் நகைப்பு.

1:27 செய்த செயலுக்கான கூலி தரப்படும் நாள் நிச்சயமாக வரும். மனிதர்கள் அஞ்சுகிற நியாயத்தீர்ப்பு **புயலைப்போல** அவர்கள்மேல் இறங்கும். இயற்கைச் சீற்றம் சூறாவளி போல் கர்ச்சிக்கும். **துன்பமும் தொல்லையும்** அதிர்ச்சியும் நம்பிக்கையின்மையும் அவர்களைப் பற்றிக்கொள்ளும்.

1:28 அப்பொழுது அந்த மனிதர்கள் வீணாக ஞானத்தைக் **கூப்பிடுவார்கள்**. அதைக் கண்டு பிடிக்க வேண்டுமென்று தேடுவார்கள், அவர்களுடைய முயற்சி நிறைவேறாது. தவிர்க்கப்பட்ட ஒளி மறுக்கப்பட்ட ஒளியாகும் என்பதை அவர்கள் காலம் கடந்தே உணருவார்கள். அவர்கள் முதலில் காண மறுத்தார்கள்; இப்பொழுது அவர்களால் காண முடியவில்லை. தேவனுடைய ஆவியானவர் எப்போதும் மனிதனுடன் போராடிக் கொண்டிருக்கமாட்டார் (ஆதி. 6:3). நற்செய்தி

அழைப்புக்கான அவசரத் தன்மையைக் கொடுப் பது இதுவே:

இயேசுவின் அழைப்புத் தொனித்திடும் வேளையில்
வருவீர் நண்பரே, காலம் கடந்திடும்,
பாவத்தில் மகிழ்ந்து காலத்தைக் கடத்தினால்
திறந்த வாசலைக் கண்டிட மாட்டீர்,
காலம் கடந்து நீர்சிந்தும் கண்ணீர்
பயனற்றுப் போகும் வருவீர் நண்பரே!

1:29 அவர்கள் ஞானத்தின் அறிவுரைகளை **வெறுத்துத்** தள்ளினார்கள். யெகோவாவை மதித்துப் போற்ற மாட்டோம் என்று பிடிவாதமாக எதிர்த்து நின்றார்கள் என்பன ஏளனம் செய்தோ ருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் ஆகும். பெண் களுக்கும் சிறுவர்களுக்குமே இந்த நற்செய்தி, தங்களுக்கு அல்ல என்று அவர்கள் ஏளனமாகச் சிரித்தார்கள், "அவர்கள் தங்களை ஞானிகள் என்று சொல்லியும் பயித்தியக்காரர் ஆனார்கள்" (ரோமர் 1:22). ஞானத்திற்கு எதிராக வெறுப்பைக் காண்பிக்கும் செயல் யோவான் 3:19-21 வசனங் களிலும் விவரிக்கப்பட்டுள்ளது.

1:30 தேவனுடைய வசனங்களில் கொடுக்கப் பட்டுள்ள நல்லாலோசனைகளுக்கு அவர்கள் தங்களுடைய வாழ்க்கையில் இடம்கொடுக்க வில்லை; மேலும் அவர்களுடைய தீய பேச்சை யும் செயலையும் திருமறை குற்றஞ்சாட்டிய போது அவர்கள் நகைத்தார்கள். அவர்கள் தேவனுக்குப் பயப்படவில்லை, அவருடைய **கடிந்துகொள்ளுதலுக்கும்** பயப்படவில்லை.

1:31 இப்பொழுது அவர்கள் தங்களுடைய பிடிவாதத்திற்கான அதிர்ச்சியளிக்கும் விலை யைச் செலுத்த வேண்டும், அவர்களுடைய சொந்தத் திட்டங்களின் பலனை வயிறாற உண்ண வேண்டும். அது அவர்களுடைய சொந்தத் தவறேயொழிய ஞானத்தின் தவறன்று. அவர்கள் அசட்டை செய்து அறிவுரைகளைக் கேட்க மறுத் தார்கள்.

1:32 "செவிமடுக்க மறுக்கும் கூட்டம், அவர் களது சொந்தத் சித்தத்தின் காரணமாக விழும், அறிவற்ற மனிதர்கள் தங்களுடைய மாறுபாட் டால் அழிவார்கள்" (மொ.ஃபட்). ஒவ்வொரு மனித னும் தனது வாழ்க்கையில் தீர்மானம் செய்ய உரிமை பெற்றிருக்கிறான். ஆனால் அவனுடைய தெரிந்தெடுப்புகளுக்கான விளைவைத் தெரிந் தெடுக்க உரிமை இல்லை. இவ்வுலகில் தேவன் சில நன்னெறி ஒழுங்குகளை நிறுவியிருக்கிறார். இந்த ஒழுங்குகள் ஒவ்வொரு தெரிந்தெடுப்புக்கு மான விளைவை ஆணையிட்டுக் கூறும். தேவன் ஒன்று சேர்த்தவற்றைப் பிரிக்க ஒரு வழியும் இல்லை.

1:33 இதற்கு மறுபக்கம், ஞானத்துக்குச் செவிகொடுக்கிறவன் பாதுகாப்போடும் பயமின்றி யும் வாழ்வான். ஞானத்தின் மாணாக்கர் நல் வாழ்வை அனுபவிப்பார்கள்; பிடிவாதமாகத் துன்மார்க்கமாகச் செயல்படுபவர்கள் வாசல் களில் விடாது துரத்துகிற துன்பங்களுக்கும், துயரங்களும், அவமானத்துக்கும் தப்புவார்கள்.

ஆ. ஞானத்தின் வழிகள் [அதி. 2]

இரண்டாவது அதிகாரத்தில், ஞானத்தின் வழி யில் நடக்கும்படி சாலொமோன் தனது மகனை அறிவுறுத்துகிறான். தேவனை அறிகிற அறிவைப் பெறுவதற்கான நிபந்தனைகளை முதல் நான்கு வசனங்கள் கூறுகின்றன; ஒரு மனிதன் தனது முழு இருதயத்தோடு அதை வாஞ்சித்து உண் மையோடு தேடவேண்டும். அதிகாரத்தின் எஞ் சிய வசனங்கள் ஞானமும் பகுத்தறிவும் தரப்படும் என்று வாக்குறுதி கொடுக்கின்றன. இந்த 22 வசனங்களும் எபிரெய மொழியின் 22 எழுத்துக ளோடு பொருந்தியிருக்கின்றன.

2:1 முதலாவது, **மகன்** தன்னுடைய தகப்பனு டைய போதகத்தை தனது இருதயத்தினிடமாய்ச் சேர்த்துக்கொண்டு, அவனுடைய **கட்டளைகளைப் பத்திரப்படுத்த** வேண்டுமென்று வலியுறுத்தப்படு கிறான். நீதிமொழிகள் **"உன்னிடத்தில்"** சேர்த்து வைக்கப்படவேண்டும், அல்லது மனப்பாடம் செய்யப்பட வேண்டும் என்னும் நோக்கத்துடன் கொடுக்கப்பட்டுள்ளன.

2:2 திறந்த **செவியும்** திறந்த **இருதயமும்** அல்லது மனதும் இருக்க வேண்டும். மகன் கவ னத்தோடு கேட்கவேண்டும், அதிகாரத்தோடு பேசுகிறவனாக இருக்கக்கூடாது. தற்கால ஆலோசகர்கள் கூறுவதுபோல, அவன் தன்னு டைய பிரச்சினைகளை வெளிப்படையாகச் சொல்லவேண்டும் என்று இங்கு அவனிடம் கூறப் படவில்லை. மாறாக அவன் பிறருடைய புத்தி யுள்ள ஆலோசனைகளைக் கவனமாகக் கேட்க வேண்டும்.

2:3,4 மெய்யாகவே அவன் இந்த விசயத்தைக் குறித்துக் கருத்துள்ளவனாக இருப்பானெனில், அவன் பகுத்தறிவு வேண்டுமென்று **சத்தமிட்டுக் கூப்பிட** வேண்டும், மேலும் புத்திசாலித்தனம் வேண்டுமென்று முறையிட வேண்டும். நோக்கம் எது என்னும் ஆழ்ந்த உள்ளுணர்வு முதன்மை

யான முக்கியத்துவம் வாய்ந்தது. நாம் எதை நாடிச் செல்கிறோமோ அதையே அடைவோம் என்பது வாழ்க்கையின் விதியாகும்.

வெள்ளியை நாடி சுரங்கத்தில் தேடிக் கண்டு பிடிக்கிற அல்லது மறைத்து வைக்கப்பட்டிருக்கிற **புதையலைத்** தேடுகிற மனிதனுக்கு ஒப்பான ஊக்கம் நமக்குத் தேவை. ஆனால் ஆவிக்குரிய செல்வத்தையல்ல, உலகீய செல்வங்களைச் சேர்த்து வைப்பதிலேயே அதிக ஆர்வம் கொண்டிருப்பதை அவ்வப்போது மனிதன் வெளிப்படுத்துவது சோகக் கதையாகும்.

2:5 தவிர்க்காமல் தேடுகிற மனிதர்கள் **கண்டடைவார்கள்**. கர்த்தரோடு முறையான உறவு வைத்துக்கொள்ள வேண்டும். தேவனை மெய்யாக அறிய வேண்டும் என்று ஆவலோடு செயல்படுபவர்கள், ஒருக்காலும் ஏமாற்றம் அடையமாட்டார்கள். எனவேதான் தொடக்ககாலத் திருச்சபைத் தந்தைகள் தேவனைத் தேடுகிற மனிதர்கள் ஏற்கனவே அவரைக் கண்டுபிடித்துவிட்டார்கள் என்று கூறினார்கள். கிறிஸ்துவை நம்புகிற அனைவருக்கும் அவர் திருத்தந்தையை வெளிப்படுத்துகிறார். கிறிஸ்துவை அறிவதே தேவனை அறிவதாகும்.

2:6 கிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைத்து இரட்சிப்படைந்த பிறகு, நாம் தெய்வீக **ஞானத்தைக் கர்த்தரிடத்திலிருந்து** கற்கும் நிலையை அடைகிறோம். நேர்மையாகச் சிந்திக்கவும், சரியாக மதிப்பிடவும், சத்தியத்தையும் தவறையும் பகுத்தறியவும், தெய்வீக உணர்வடைந்து பெருகுவது எவ்வாறு என்றறியவும் அவர் நமக்குக் கற்றுத் தருகிறார்.

2:7 அவர் **நீதிமான்களுக்கு மெய்ஞானத்தை** அளவில்லாமல் சேர்த்துக் கொடுக்கிறார், நேர்மையாக நடக்கிறவர்களுக்குச் சிறப்பான பாதுகாப்புக் **கேடகத்தைத்** தருகிறார்.

2:8 தூய்மையோடும் நன்னெறி ஒழுக்கத்தோடும் வாழ்கிறவர்களுடைய **பாதையை அவர் பாதுகாக்கிறார்**. பாவம் ஒருவரிடத்தில் விட்டுச் செல்கிற வேதனை, மனக்கசப்பு ஆகியவற்றிலிருந்து அவருடைய **பரிசுத்தவான்கள்** தப்பித்துக் கொள்கிறார்கள். "தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட அவருடைய நண்பர்கள் நலத்தோடும் பாதுகாப்போடும் வருவதும் போவதுமாக இருக்கிறார்கள்" (நாக்ஸ்)

2:9 இந்த வசனமும் 5 -ஆவது வசனமும் இணையாக இருக்கின்றன. இரண்டும் அப்பொழுது என்னும் சொல்லோடு தொடங்கி, தேவனை அறிகிற அறிவை உண்மையாகத் தேடுவதால் அடைகிற நன்மைகளைப் பட்டியலிட்டுக் காட்டுகின்றன.

தேவனுடைய சித்தத்தை அறியவும் அதன்படி செய்யவும் வேண்டுமென்று மிகுந்த ஆர்வம் கொண்ட மனிதன் நீதிமானாக நடக்கவும், நேர்மையாகச் செயல்படவும், நிதானத்தைக் கடைப்பிடிக்கவும் கற்கிறான். சுருங்கக் கூறின், சரியான பாதையைத் தெரிந்தெடுக்கவும் சகல நல்வழிகளில் நடக்கவும் அவன் கற்கிறான்.

2:10 ஒருவருடைய மனதை அல்லது **இருதயத்தைக்** கட்டுப்படுத்தும் வேலையை **ஞானம்** எடுத்துக்கொள்வதாலேயே இவ்வாறு நடைபெறுகிறது. அந்நிலையில் எது சரி என்று அறியும் **அறிவு** சுவையற்றதாயிராமல் **இன்பமாயிருக்கும்**. மெய்யான விசுவாசிக்கு தேவனுடைய கட்டளைகள் சலிப்பூட்டுவதில்லை. கிறிஸ்துவின் நுகம் மெதுவாயும் அவருடைய சுமை இலகுவாயும் உள்ளன.

2:11 ஒருவனது நல்யோசனை அல்லது புத்தியுள்ள தீர்மானங்களை எடுப்பதற்கான ஆற்றல் "தவறான செயல்களைச்" செய்யாதபடி அவனைக் காப்பாற்றும். சரியான தீர்மானங்கள் பொல்லாத மனிதர்களோடு சேராத வண்ணம் நம்மைப் பாதுகாக்கும். ஆவிக்குரிய, நன்னெறி சார்ந்த மற்றும் உடலோடு தொடர்புடைய ஆபத்துகளிலிருந்து ஒவ்வொரு நாளும் எந்த அளவுக்குப் பாதுகாக்கப்படுகிறோம் என்பதை நம்மில் ஒருவரும் உணருவதில்லை. இச்சையின் மூலமாக இவ்வுலகம் கேடுற்றுப் போன நிலைக்குக் கிறிஸ்தவன் தப்பினவனாக நன்கு பாதுகாக்கப்பட்ட வாழ்க்கையை அனுபவிக்கிறான்.

2:12 துன்மார்க்கரான மனிதர்களோடு கூட்டுறவு வைத்துக்கொள்வதிலிருந்து நாம் பாதுகாக்கப்படுகிறோம் (வச. 12-15), மேலும் கற்பில்லாத பெண்ணின் அணைப்பிலிருந்தும் பாதுகாக்கப்படுகிறோம் (வச. 16-19).

முதலாவது, செய்திகளைத் தவறாகச் சொல்லி, உண்மையைத் திரித்துக் கூறுகிற துன்மார்க்கரின் உலகிலிருந்து காக்கப்படுகிறோம். அவர்களுடைய பேச்சு முழுவதும் நம்பத்தகாதது.

2:13-15 நீதிநெறிகளால் ஒளியூட்டப்பட்ட தெருக்களை விடுத்து, குற்றங்களுக்கும் தீமைகளுக்கும் ஏதுவான இருண்ட ஒடுக்கமான சந்துகளுக்குள்ளே ஒளிந்து செல்கிற மனிதர்கள் இருக்கிறார்கள்.

அவர்கள் **தீமை செய்வதில்** நாகரிகமற்ற வகையில் மகிழ்ச்சி கொள்கிறார்கள். அவர்களுடைய பாவம் எல்லாவற்றையும் தலைகீழாக மாற்றும்போது களிகூருகிறார்கள்.

அவர்களுடைய பாதைகள் **கோணலாக** இருக்கின்றன. அவர்களுடைய நடத்தை சூதும் வாதும் வஞ்சகமும் நிறைந்ததாக இருக்கிறது.

2:16 இப்படிப்பட்ட மனிதர்களுடைய தோழமையிலிருந்து மட்டுமின்றி பரத்தையின் பிடியிலிருந்தும் ஞானம் காக்கிறது. இந்தப் பெண்மணி உண்மையாகவே விலைமகளாக இருக்கலாம் அல்லது கள்ள மதம் அல்லது துன்மார்க்கமான உலகம் இவற்றில் ஒன்றைக் குறிக்கலாம்.

பசப்புச் சொற்களால் அவள் கவர முயற்சி செய்கிறாள்: "உங்களைப் பாராட்ட வேண்டிய அளவு உங்களுடைய வீட்டில் ஒருவரும் பாராட்டுவதில்லை. நீங்கள் மிகவும் அழகாயிருக்கிறீர்கள், மிகவும் திறமைசாலி. உங்களுக்கு அதிகமாகக் கொடுக்க வேண்டும். உங்களுக்கு அன்பு தேவை, பரிவுடன் உங்களைப் புரிந்துகொள்ள வேண்டும். அதை நான் உங்களுக்கு நிச்சயமாகக் கொடுப்பேன்."

2:17 அவள் **தனது இளவயது நாயகனுக்கு** உண்மையற்றவள், அதாவது, அவள் தனது கணவனுக்கு உண்மையற்றவள். அவள் **தன் தேவனுடைய உடன்படிக்கையை மறக்கிறாள்,** அதாவது, தேவனுடைய முன்னிலையில் செய்த திருமண உறுதிமொழியை மீறுகிறாள். அல்லது "தன் தேவனுடைய உடன்படிக்கை" என்பது பத்துக்கட்டளைகளை, குறிப்பாக ஏழாவது கட்டளையைக் (விபசாரத்தைத் தடை செய்கிற கட்டளையை) குறிக்கக் கூடும்.

2:18 இந்த வசனத்தின் முதல் பகுதியை **"அவளுடைய வீடு மரணத்துக்குச் சாய்கிறது"** அல்லது "அவளுடைய வீடாகிய மரணத்துக்குள் அமிழ்ந்து போகிறாள்" என்று மொழிபெயர்க்கலாம். (R.V. அடிக்குறிப்பு). இதன் இரண்டாவது பகுதி NKJV மொழிபெயர்ப்பை ஆதரிக்கிறது. இரண்டையும் ஒன்றுகூட்டி "அவளுடைய வீடு மரணத்துக்குச் சாய்கிறது, ஆகவே அவளுடைய வீட்டுக்குள் நுழைகிறவர்கள் கல்லறையை நோக்கிச் சாய்கிறார்கள்" என்று பொருள் கூறலாம். **அவளுடைய பாதைகள் மரித்தோரிடத்திற்கு** வழிநடத்துகின்றன. ஆகவே அவளைப் பின்தொடருகிறவர்கள் வெகு விரைவில் கடந்து சென்று ஆவிகளின் உலகிற்குப் போய்விடுவார்கள். ஒவ்வொருவரும் ஒருநாள் மரணம் அடைய வேண்டும், ஆகவே இங்கு மரணம் என்பது மரண மடையக் கூடிய பொதுவான விசயத்துக்கும் கூடுதலான ஒரு பொருளைக் கொண்டிருக்கிறது. இது நித்திய சாவை நோக்கி வழிநடத்தும் சாவையே குறிக்கிறது எனலாம்.

2:19 ஒருமுறை ஒருவன் அவளுடைய வலையில் சிக்கிக்கொண்டான், பெரும்பாலும் அதிலிருந்து விடுபட முடியாது. உண்மையில் அங்கிருந்து திரும்பி வருவது குறித்த நம்பிக்கை இல்லவே இல்லை என்று இந்த வசனம் கூறுவதாகத் தோன்றுகிறது. ஆனால் திருமறையில் சொல்லப்பட்டுள்ள பல அறிக்கைகள் பொதுவான விதிகள் என்றே எடுத்துக்கொள்ள வேண்டும், அவற்றிலும் சில விதிவிலக்குகள் இருக்கக்கூடும். அதுவே நாம் இங்கு கவனிக்க வேண்டியது. அவளுடைய வீட்டுக்குள் சென்று, அவளுடைய இரகசியங்களில் பழக்கம் ஏற்படுத்திக் கொண்டவன், சரியான பாதைக்குத் திரும்பி வருவது மிகவும் கடினம்.

2:20 இருபதாவது வசனத்தை 11 -ஆவது வசனத்தோடு தொடர்புபடுத்துங்கள். ஞானம் மனிதனைத் துன்மார்க்கரிடத்திலிருந்தும் அந்நியப் பெண்ணிடத்திலிருந்தும் விடுவிப்பது மட்டுமின்றி, நல்லவர்களோடும் நீதிமான்களோடும் தோழமை பாராட்டுவதற்கு உற்சாகப்படுத்துகிறது.

2:21,22 மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழ் நேர்மையாக வாழ்ந்த மனிதர்களுக்கு - செவ்வையானவர்களும் உத்தமர்களும் - கானான் தேசத்தில் பாதுகாப்பான இடம் வழங்கப்பட்டது. நாம் புதிய ஏற்பாட்டினிடமாக வருகிறபோது, உலகப் பொருட்களாலான நன்மைகள் ஆவிக்குரிய நன்மைகளுக்கு இடமளிக்கின்றன. ஆனால் நீதியும் நன்னடத்தையும் இவ்வாழ்க்கையிலும் இனிவரும் நித்திய வாழ்க்கையிலும் நன்மை பயக்கும் என்பது எப்போதும் உண்மையாயிருக்கிறது.

துன்மார்க்கரோ பூமியிலிருந்து அதாவது ஆசீர்வாத தேசத்திலிருந்து அறுப்புண்டு போவார்கள் என்பதும் அதற்கு நிகரான உண்மையாகும். நம்பிக்கையற்ற துரோகிகளுக்கு நிலையான வாரிசுரிமை இல்லை.

இ. ஞானத்தின் பரிசுகள் (3:1-10)

3:1 நல்ல பெற்றோர்கள் எல்லோரையும் போலவே, ஞானமும் தனது பிள்ளைகளுக்கு மிகச் சிறந்ததைக் கொடுக்க விரும்புகிறது. தனது போதகத்திற்குக் கீழ்ப்படிந்தால் மட்டுமே அது

கிடைக்கப்பெறும் என்பதை அது அறிந்திருக் கிறது. அதாவது, புனிதத் திருமறைக்குக் கீழ்ப் படிந்தால் மட்டுமே அது கிடைக்கும் என்பதே இங்கு வேறுவிதமாகச் சொல்லப்பட்டுள்ளது. ஆகவே அது தன் மகனிடம், அவன் தன்னுடைய மனதில் நினைவுகூரவும், இருதயத்தில் கீழ்ப்படியவும் வேண்டுமென்று கோருகிறது.

3:2 பொதுவாக, தங்களுடைய பெற்றோருக் குக் கீழ்ப்படிந்து வாழ்கிறவர்கள் நீண்ட நாட்கள், சிறப்பான வாழ்க்கை வாழ்வார்கள். பெற்றோர் கள் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கிறபோது, தங்க ளுடைய கால்களை உதறி எதிர்த்து நிற்பவர்கள் நோய், விபத்து, துயர நிகழ்ச்சிகள், முதிர்வயது அடைவதற்கு முன்னரே மரணம் ஆகியவற்றை வரவேற்பவர்களாக இருப்பார்கள். இந்த வசனம் ஐந்தாவது கட்டளைக்கு இசைந்திருக்கிறது (யாத். 20:12). தமது பெற்றோரைக் கனப்படுத்து வோர் **நீடித்த நாட்கள்** வாழ்வார்கள் என்று அது வாக்குரைக்கிறது. திருவாளர் ஜேஆடம்ஸ் எழுது கிறார்:

> தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொண்டு வாழ்வதால் நீடித்த நாட்கள் மகிழ்ச்சியோடு வாழ்வதற்கான மனஉலைவு அற்ற உள்ளத் தைப் பெற முடியும் என்று வேதம் கற்பிக்கிறது. குற்ற உணர்வோடு வாழ்தல் சரீரத்தை நொறுக்கும் பாரமாயிருக்கிறது. நல்மனச்சாட்சி நீடித்த வாழ்க்கையையும் உடல்நலத்தையும் பெறுவதற்கான காரணியாக விளங்குகிறது. ஆகவே, ஒருவருடைய உடல்நலம், ஆத்தும நலத்திலிருந்து பெருமளவு வெளிப்படுகிறது. ஒருவர் தேவனுடைய முன்னிலையில் எவ்வித நடத்தையுடைவராக இருக்கிறாரோ அதற்கும் அவருடைய உடல்நிலைக்கும் மிக நெருக்க மான உறவு இருக்கும். இது சரீரம் சார்ந்த கோட் பாடுகளில் மெய்ப்பிக்கப்பட்ட உண்மை யாகும்.[6]

3:3,4 கிருபையும் சத்தியமும் வெளிப்படை யான நடத்தையில் **(உன் கழுத்திலே பூண்டு)** காணப்பட வேண்டும், அது உள்ளான வாழ்க்கை யிலும் உண்மையாயிருக்க வேண்டும் (அவற்றை உன் இருதயமாகிய பலகையில் எழுதிக்கொள்.)

இது **தேவனுடைய பார்வையிலும் மனிதரு டைய பார்வையிலும் தயவும் நற்பெயரும்** (அல்லது வெற்றி - A. V. அடிக்குறிப்பு) பெறுவதற் கான வழி. இதிலிருந்து நாம் அறிய வேண்டிய உண்மை யாதெனில், தேவனுடைய சித்தத்தை மையமாகக் கொண்டு வாழ்கிற வாழ்க்கையே மனநிறைவளிக்கும் வாழ்க்கை. ஆனால் அது ஒரு கேள்வியை எழுப்புகிறது, "எனது வாழ்க்கை யில் தேவனுடைய சித்தம் என்னவென்று நான் அறிவேன்?" இதற்கு அடுத்துவரும் இரண்டு வச னங்களில் உன்னதமான விடை கொடுக்கப்பட் டுள்ளது.

3:5 முதலாவது, நாம் நம்மையே முழுவது மாக, அதாவது, ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவது மாகக் கர்த்தருக்கு ஒப்புவித்திருக்க வேண்டும். நாம் நம்முடைய ஆத்துமாவின் இரட்சிப்புக்காக மட்டும் அவரிடத்தில் நம்பிக்கை வைக்காமல், நம்முடைய வாழ்க்கையின் வழிநடத்துதலுக் காகவும் அவரிடத்தில் நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும். அது எவ்வித நிபந்தனையுமற்ற ஒப்புவித்தலாக இருக்க வேண்டும்.

அடுத்ததாக, நமக்கு எது சிறந்தது என்பதை நாம் அறியாமலிக்கிறோம், அதாவது நம்மை நாமே வழிநடத்துவதற்குரிய ஆற்றல் அற்றவர் களாக நாம் இருக்கிறோம் என்பதை ஒப்புக் கொண்டவர்களாக நாம் இருக்கவேண்டும்; இவ் விதமாக நாம் நமது சுயத்தில் அவநம்பிக்கை கொண்டிருப்பது நலமானது. எரேமியா இதனைத் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கிறான்: "கர்த் தாவே, மனிதனுடைய வழி அவனாலே ஆகிற தல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக் கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்" (எரே. 10:23).

3:6 இறுதியாக, கிறிஸ்துவின் கர்த்தத்துவம் எற்றுக்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்: **"உன் வழிகளிலெல்லாம் நீ அவரை ஏற்றுக்கொள்"** (இலகு தமிழ்). நம்முடைய வாழ்க்கையின் ஒவ் வொரு அம்சத்தையும் அவருடைய கட்டுப்பாட் டுக்குள் ஒப்படைத்திருக்க வேண்டும். நமக்குச் சொந்தமான சித்தம் எதுவும் இருக்கக் கூடாது. அவருடைய சித்தத்தை அறிந்து அதன்படி நடப் பது ஒன்றே நம்முடைய தூய நோக்கமாக இருக்க வேண்டும்.

இந்த நிபந்தனைகள் யாவும் நிறைவேற்றப் படும்போது, தேவன் அவனுடைய **பாதையைச் செவ்வைப்படுத்துவார்**. அவன் அதனைத் திருமறையின் மூலமாகச் செய்யலாம், பயபக்தி யுள்ள கிறிஸ்தவர்களின் ஆலோசனையின் மூல மாகச் செய்யலாம், சூழ்நிலைகள் யாவும் வியத் தகு வகையில் ஒன்றுகூடி வருவதாலே அதைச் செய்யலாம், ஆவியானவர் தருகிற உள்ளான

சமாதானத்தாலே அல்லது இவையாவும் ஒன்று சேர்வதாலே நாம் அதைச் செய்யலாம். நாம் காத்திருப்போமென்றால், அவர் நிச்சயமாக தமது வழி நடத்துதலைத் தெளிவாக அறியச் செய்வார், நாம் மறுத்துரைத்தோமெனில் அது கீழ்ப் படியாமையாகிவிடும்.

3:7,8 தற்செருக்கு நம்மைத் தெய்வீக வழி நடத்துதலைப் பின்பற்றவிடாமல் தடுத்து நிறுத்தி விடும். கர்த்தருக்குப் பயந்து தீமையை விட்டு விலகு என்னும் சொற்றொடர் "முறைப்படுத்தப் பட்ட திட்டங்கள்" எல்லாவற்றையும் விட்டு விலக வேண்டும் என்று பொருள்படும். அது உடலுக்கு **ஆரோக்கியத்தையும்**, எலும்புகளுக்கு **ஊட்டத் தையும்** (ஊட்டம் எழுத்தின்படி பானம் அல்லது புத்துணர்ச்சி) தரும். மீண்டுமாக இங்கு மனிதனு டைய நன்னெறி ஒழுக்கமும் ஆவிக்குரிய நிலை யும் அவனுடைய உடல்நலத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கின்றன என்னும் உண்மை யினிடமாக நாம் அழைத்துவரப்பட்டிருக்கிறோம்.

அச்சம், வருத்தம், பொறாமை, சீற்றம், வெறுப்பு, குற்றவுணர்வு இன்னும் பல உணர்ச்சிவயப்பட்ட அழுத்தங்கள் நம்முடைய உடல்நலக் குறைவுக் கான காரணத்தில் 60% -க்கும் மேல் பங்குவகிக் கின்றன என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதனோடு மதுபானத்தால் ஏற்படும் சீரழிவு (கல்லீரல் அரிப்பு), புகையிலையால் ஏற்படும் நோய்கள் (நுரையீரல் வீக்கம், புற்றுநோய், இதய நோய்), ஒழுக்கக்கேடு (பாலுறவு நோய்கள்) பெருமளவு கேட்டை வரவழைக்கின்றன. பின்னர், "அவர் உன் பாதைகளைச் செவ்வைபண்ணுவார்" என் பதற்கு எழுத்தின்படியே பொருள்கொள்ள வேண் டும். அதாவது, "அவர் உன் பாதைகளை மேடு பள்ளமில்லாத நிலைக்கு மாற்றுவார்" அல்லது "நேராக்குவார்" என்பதை நாம் உணரத் தொடங்கு வோம். தெய்வீக உயிரூட்டத்தினாலே, சாலொ மோன் மருத்துவத்துறையில் தன் காலத்து நிலையிலும் பன்மடங்கு முன்னேற்றம் அடைந் திருந்தான்.

3:9 கிறிஸ்துவின் கர்த்தத்துவத்தை நாம் **கனம்பண்ணுவதற்கான** ஒருவழி நம்முடைய **பொருள்** உடைமையைக் கொண்டு உக்கிராண ஊழியம் செய்வதாகும். நமது உடைமைகள் யாவும் அவருக்குச் சொந்தமானவை. நாம் உக்கி ராண ஊழியர், அவற்றை நிருவகிப்பது நம்மு டைய வேலை. நமக்கென்று ஆரவாரமற்ற வாழ்க் கைப் படிநிலையைத் தெரிந்தெடுப்பது நமது உரி மையாகும். அதற்கு மேலாக இருப்பன யாவற் றையும் இறையூழியத்துக்குக் கொடுத்துவிட்டு, எதிர்காலத்திற்காக தேவனையே நம்பியிருக்க வேண்டும். திருவாளர் டேவிட் லிவிங்ஸ்டன் இருந்ததுபோல, நம்முடைய உடைமைப் பொருள் ஒன்றையும் நாம் எதிர்நோக்காமல், இறையர சோடு தொடர்புடையதை மட்டுமே நோக்கிப் பார்க்க வேண்டும்.

3:10 பழைய ஏற்பாட்டுக்காலப் பெருந்தன் மையுள்ள யூதனுக்குப் பெரிதான **களஞ்சியங் களும்** நிரம்பிவழிகிற **திராட்சைப்** பிழிவுத் தொட்டிகளும் வாக்குரைக்கப்பட்டன. நமக்கு அளிக்கப்பட்டுள்ள நன்மைகள் பெரும்பாலும் ஆவிக்குரிய தன்மையுடையவை என்ற போதி லும், கர்த்தர் தருவதைக் காட்டிலும் நம்மால் அவருக்குத் தரமுடியாது என்பது இன்னமும் உண்மையாகவே விளங்குகிறது.

ஈ. பரிசுப்பொருளாக ஞானம்

3:11,12 கர்த்தருடைய ஒழுங்கிற்கு நம்மைக் கீழ்ப்படுத்துவதன் மூலம் நாம் அவருடைய கர்த் தத்துவத்தை அறிக்கை செய்யலாம். பெரும் பாலான நேரங்களில் ஒழுங்கு நடவடிக்கையைத் தண்டனை என்றே கருத முற்படுகிறோம். ஆனால் குழந்தைக்குப் பயிற்சி அளிப்பதில் சம்பந்தப்பட் டவை யாவும் இதில் அடங்கியுள்ளன. அதாவது, அறிவுரை, எச்சரிக்கை, உற்சாகமூட்டுதல், ஆலோ சனை, **திருத்துதல், கடிந்துகொள்ளுதல்**. நம் முடைய வாழ்க்கையில் தேவன் அனுமதிக்கிற எதுவும் ஒரு நோக்கத்துடனேயே அனுமதிக்கப் படுகிறது. அதனை நாம் வெறுக்கவோ இழிவாகக் கருதவோ கூடாது. அதிலிருந்து நாம் விலகிச் செல்லவோ, அடியில் மறைந்துகொள்ளவோ கூடாது. அந்த ஒழுங்கு நடவடிக்கையின் மூலம் தேவனுடைய நோக்கம் நிறைவேறுகிறது. அதி லிருந்து நாம் பெருமளவு ஆதாயம் பெறுவோம் என்பதைக் குறித்தே நாம் கருத்துடன் இருக்க வேண்டும். வாழ்க்கையில் அனுமதிக்கப்படுகிற அனைத்து ஒழுங்கு நடவடிக்கைகளும், அவரு டைய பரிசுத்தத்தில் நாம் பங்குபெறுவதற்கான தேவனுடைய முடிவான நோக்கத்தையே கொண் டிருக்கின்றன.

ஒழுங்கு நடவடிக்கை அன்பின் நிரூபணமே யொழிய அவருடைய கோபத்தின் வெளிப்பாடு அன்று. நாம் அவருடைய பிள்ளைகள் என்பதற் கான நிரூபணமே திருத்துதல் ஆகும் (எபி. 12:6-8 வசனங்களைக் காண்க).

கருத்து: தோட்டக்காரர் திராட்சைச் செடி யையே சுத்தம் செய்வார், முட்செடியை அல்ல.

3:13 ஞானத்தைக் கண்டைகிற மனிதன் பாக்கியவான். இங்கு ஞானம் என்று குறிப்பிடப் பட்டிருப்பது கிறிஸ்து தம்மைத் திரையிட்டு வெளிப் படுத்தியிருப்பதையே குறிக்கிறது என்று நினைவு கூருகிறபோது நிச்சயமாக அந்த மனிதன் பாக்கி யவானே ஆவான். கீழ்க்காணும் வசனங்களில் நாம் கிறிஸ்து என்று பெயரிட்டு என்ன நடக்கிறது என்று காண்போம்.

3:14 கர்த்தராகிய இயேசுவை அறிவதாலே அடைகிற பயன், ஒரு மனிதன் வெள்ளியினாலும் பொன்னினாலும் அடைகிற பயனைக் காட்டிலும் மேலானது. பணத்தால் வாங்க முடியாததை அவர் தருகிறார்.

அழியாத பெருஞ்செல்வம் என் அன்பர் இயேசு,
ஒழியாத மகிழ்ச்சியின் மெய்யான ஆதாரம்.
களிகூரச் செய்யும் புகழ்ச்சியை விரும்பேன்
ஒளிவீசும் வைரமும் கவர்ந்திழுப் பதில்லை.
இன்பமதை அடைந்திட இவ்வுலகம் வேண்டாம்,
புன்முறுவல் செய்வீர் அகமகிழ்வு அடைவேன்.
விண்ணகர் இயேசு என்மனதை நிறைக்க
மண்ணின் மைந்தன் எனக்கென்ன தருவான்.
என்சொந்தம் இயேசு என்னோ டிருக்க
பின்தொடரேன் உலகைப் பொருட்செல்வம் தேடி.
அவருக்குள் புதைந்திருக்கும் பெரும்புகழ் யாவும்
தவமின்றிப் பெற்றேன், நம்புவீர் பெற்றிடுவீர்!

3:15 அவர் **முத்துக்களைப் பார்க்கிலும் விலையேறப்பெற்றவர்.** எந்த நகையானாலும் அல்லது பூமியில் விரும்பத்தக்க பரிசுப்பொருளா யினும் எல்லாவற்றையும் விட அவர் மேன்மை யானவர்.

3:16 அவர் ஒரு **கையின்** மூலமாக நீடித்த வாழ்வை, உண்மையில் நித்திய வாழ்வைத் தருகிறார், மற்றொரு கையின் மூலமாக **செல்வத் தையும் கனத்தையும்** தருகிறார்.

3:17 அவருடைய **வழிகள்** யாவும் **இனிதான வழிகள்**, அவருடைய **பாதைகளெல்லாம் சமா தானம்.** "அவர் வழிநடத்துகிற பயணம் இனிமை யானது, அவர் சுட்டிக்காட்டுகிற வழி சமாதானத் தால் நிறைந்திருக்கிறது." (நாக்ஸ்)

3:18 அவரைப் பற்றிக்கொண்டவர்களுக்கு அவர் தகுதியானபடி வாழ்கிற வாழ்வாகிய கனி யைத் தருகிற மரமாக இருக்கிறார். அவரிடத்தில் நெருங்கி வாழ்கிறவர்கள் எப்போதும் **பாக்கிய வான்களாக** இருக்கிறார்கள்.

3:19,20 இவ்விரண்டு வசனங்களும் படைப் பிலும், நியாயத்தீர்ப்பிலும், தந்தருளுவதிலும் தேவனுடைய ஞானம் செயல்படுவதைக் குறித்து விளக்கிக் கூறுகின்றன. அவர் தமது படைப்பில் **பூமியை அஸ்திபாரப்படுத்தி வானங்களை** நிறு வினார். அவர் தமது அறிவினால் மகா ஆழங் களின் ஊற்றுகளை பெருவெள்ளம் உண்டாகும் படி திறந்தார். அவருடைய அருள்பாலிப்பால் பெருங்கடல்களிலிருந்து நீரை மேகங்களிட மாகக் கொண்டு சென்று பூமியின் மேல் மழை யாக வெவ்வேறு இடங்களில் பொழியச் செய்தார்.

இவை யாவற்றையும் செய்வதற்கு தேவ தலைமையில் யார் பிரதிநிதியாகச் செயல்புரிந் தார்? தேவ ஞானமாகிய கிறிஸ்துவே செயல்புரிந் தவர் (யோவான் 1:3; கொலோ. 1:16; எபி. 1:2).

உ. நடைமுறையில் ஞானம் (3:21-35)

3:21 இப்பிரபஞ்சத்தைப் படைத்து, பராமரித்து வருகிற ஞானத்தால் அறிவுறுத்தப்படுதல் தவிர்ப்ப தற்குக் கூடாத மிகப்பெரிய சிறப்புரிமையாகும். நமது பார்வையைவிட்டு **மெய்ஞ்ஞானமும் நல்லாலோசனையும்** பிரிந்துசெல்லாதபடி காத்துக்கொள்ள வேண்டும்.

3:22-24 அவை உள்ளான ஆற்றலை **(உன் ஆத்துமாவுக்கு உயிர்)** மற்றும் வெளிப்புற அழ கையும் **(உன் கழுத்துக்கு அலங்காரம்)** தரு கின்றன.

நாம் தவறி விழாதபடியும், இடறாதபடியும் நம்மு டைய **பாதையில்** அவை ஆபத்து ஏற்படாமல் **பாதுகாப்பாக** விளங்கும்.

அவை இரவில் குற்றவுணர்வு இல்லாத மனச் சாட்சியையும் அச்சமற்ற மனதையும் கொடுத்து நல்ல உறக்கத்துக்கு வாக்குறுதியாக விளங்கும்.

3:25 அவை **சடிதியில் வரக்கூடிய பயங்கரத் திலிருந்து** அதாவது **கொடுமையானவர்மேல்** வரக்கூடிய **அழிவிலிருந்து** ஒரு மனிதனைப் பாதுகாக்கும். துன்மார்க்கன் வளமிக்க வாழ்வு வாழ்கிறானே என்று பொறாமைப்படுகிறவர்கள், அப்படிப்பட்ட வாழ்க்கையில் மறைந்திருக்கும் ஆபத்தை அறிவதில்லை - அவை அச்சுறுத்திப் பணம் பறித்தல், திருட்டு, பழிவாங்குதல், லஞ்சம், காட்டிக்கொடுத்துவிடுவதாக அச்சுறுத்திப் பணம் பறித்தல், ஆள்கடத்தல் மற்றும் கொலை.

3:26 கர்த்தருடைய வழியில் நடக்கிறவர் களை அவர் பாதுகாப்பார். நமது கால்களைக் கண்ணியில் சிக்குவதற்கு அவர் விடமாட்டார். நம்முடைய வாழ்க்கையில் பலமுறை வியத்தகு வகையில் தேவன் குறுக்கிட்டு நம்மைக் காப் பாற்றியிருக்கிறார் என்பதை நாம் அறிவோம்.

இவை யாவும் பெருங்கடலில் ஒரு துளி நீர் போன்றவை. நாம் எவற்றிலிருந்து பாதுகாப்பட்டிருக்கிறோம், எதை அடையும்படி பாதுகாக்கப்பட்டிருக்கிறோம் என்பதை ஒருநாள் மிகத் தெளிவாக அறிவோம்.

3:27 இருபத்தேழு முதல் முப்பத்தொன்று வரையிலான வசனங்களில் உள்ள எதிர்மறை விசயங்களைக் காணுங்கள்: **செய்யாமல் இராதே**... சொல்லாதே... தீங்கு நினையாதே... வழக்காடாதே... பொறாமைகொள்ளாதே... தெரிந்துகொள்ளாதே.

முதலாவது **நன்மை செய்யத்தக்கவர்களுக்கு** அவற்றில் எதையும் **செய்யாமல் இராதே**. உங்களால் அதைச் செய்யக்கூடிய தருணத்தில் செய்யாமல் இருக்கக்கூடாது. ஈட்டிய ஊதியத்தையோ, கொடுக்கவேண்டிய கடனையோ, கடன் பெற்ற பொருட்களையோ இது குறிப்பிடக்கூடும்.

இன்னும் விரிவாகக் காண்கையில், "ஒரு மனிதனுக்கு உரிமையான ஒன்றை, அது நல்ல செயலோ அல்லது தயவோ அதை அவனுக்குக் கொடுக்காமல் இருக்கக் கூடாது. "நீதிமான்களாக இருக்கக்கூடியவர்கள் தங்களுக்கு தேவனோடு இருக்கக்கூடிய சரியான உறவில் அதிகப்படியாக ஈடுபாடுகொண்டு, தங்களுக்கு அளிக்கப்பட்ட பொறுப்புகளை, குறிப்பாகப் பிறருக்குச் செலுத்தவேண்டியதைச் செலுத்தாமல் இருப்பதற்கு எதிரான எச்சரிப்பாக இது இங்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது (யாக்கோபு 4:17 - ஆம் வசனத்தைக் காண்க).

3:28 உன்னுடைய **அயலானுக்குத்** தேவையானதைத் தருவதற்கு அப்பொருள் உன்னிடத்தில் இருக்குமானால், அவனை **நாளைக்குவா** என்று சொல்லித் திருப்பி அனுப்பாதே.

யார் என்னுடைய அயலான்? என் உதவி தேவையாயிருக்கிற எவனும்.

என் அயலானுக்கு எது தேவை? அவன் இரட்சிப்பின் நற்செய்தியைக் கேட்க வேண்டிய தேவையில் இருக்கிறான்.

ஒரு மனிதனுக்கு நற்செய்தியைப் பகிர்ந்தளிக்க வேண்டும் என்று பரிசுத்த ஆவியானவர் என்னுடைய இருதயத்திற்குப் பாரத்தைக் கொடுத்தால் இன்று நான் அதைக் கூறவேண்டும். தூய ஆவியானவர் ஏவுகிறபோது அதை மறுத்துரைக்கக் கூடாது.

3:29 அடுத்த வீட்டில் குடியிருக்கிற மனிதன் உன்மேல் நம்பிக்கையோடும் எவ்வித ஐயமும் இன்றி வாழ்கிறபோது, அவனுக்கு எதிராக எந்தச் **சூழ்ச்சியும்** செய்யாதபடி அன்பு உன்னைத் தடை செய்கிறது. பழிதூற்றுதல், கொடுமையான முறையில் பழிக்குப் பழி வாங்குதல் இவை பெரும் பாலான நேரங்களில் அயலகத்தாரிடையே நடக்கும் சச்சரவுகளைத் தொடர்ந்து நடைபெறக் கூடும். அவற்றை இது தடைசெய்கிறது.

3:30 உனக்கு எதிராக எந்தக் குற்றமும் செய்யாத மனிதனோடு வழக்கு உண்டாக்கிச் சண்டையிடுவதற்கு எதிரான எச்சரிப்பு இங்கு கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வுலகில் ஏற்கனவே போதுமான சச்சரவுகள் உள்ளன. நாம் அதைத் தேவையில்லாமல் கூட்டிக்கொண்டே போகக்கூடாது!

3:31,32 கொடுமை இழைக்கிறவர்கள் உடனடியாக வெற்றிபெறுவதுபோலக் காணப்படுகிறது. ஆனால் நாம் அவர்களுடைய செல்வத்தைக் கண்டு பொறாமைப்படவோ, அவர்களுடைய வழியில் நடக்கவோ கூடாது. கர்த்தர் மாறுபாடுள்ளவனை அதாவது நெறி தவறியவனைப் பகைத்து, அருவருத்து, இழிவாக எண்ணி, வெறுத்துத் தள்ளுகிறார், ஆனால் நீதிமானையோ தன்னுடைய நெருக்கமான நம்பிக்கைக்கு உரியவனாக்குகிறார் (யோவான் 14:23 -ஆம் வசனத்தைக் காண்க).

3:33 தேவனுடைய குற்றச்சாட்டு அல்லது அவருடைய நம்பிக்கை, அவருடைய சாபம் அல்லது அவருடைய ஆசிர்வாதம். இவ்வித வாய்ப்பே தரப்படுகிறது! **துன்மார்க்கனுடைய வீட்டைச்** சுற்றிலும் இருண்டமேகம் மூடிக்கொண்டிருக்கிறது. **நீதிமானுடைய வீட்டை** தேவனுடைய தயவு என்னும் ஒளிக்கதிர் பிரகாசிக்கச் செய்கிறது.

3:34 தேவனுடைய **இகழ்ச்சி** அல்லது அவருடைய **கிருபை**, மீண்டுமாக இரண்டிற்கும் இடையிலான தெரிந்தெடுப்பு. **இகழுகிறவர்களை** அவர் **இகழுகிறார்**. ஆனால் தாழ்மையுள்ளவனுக்கோ தமது கிருபையை அளிக்கிறார். இந்த வசனத்தின் முக்கியத்துவம் இது புதிய ஏற்பாட்டில் இரண்டு இடங்களில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளதால் அறியப்படும் (யாக். 4:6; 1 பேதுரு 5:5).

3:35 கடைசி வாய்ப்பு கனத்திற்கும் கனவீனத்திற்கும் இடையிலானது. **ஞானவான்கள்** மகிமையைச் சுதந்தரிக்கிறார்கள். மதிகேடர் அவமதிப்பை அடைந்து வீழ்வதாலே அறியப்படுவார்கள்.

ஊ. ஞானம் ஒரு குடும்பச் சொத்து போன்றது

4:1 சாலொமோனின் தகப்பன் தனக்குக் கற்பித்த செறிவுமிக்க பாடங்களை முதல் ஒன்பது வசனங்களில் திரும்பவும் எடுத்துரைத்து, அவற்றில் பொதிந்துள்ள மெய்யான அறிவைப் பெறுவதற்கென செய்ய வேண்டிய முயற்சிகளில் ஒன்றையும் செய்யாமல் விட்டுவிடக்கூடாது என்று தன் **பிள்ளைகளிடம்** வற்புறுத்துகிறான். ஒரு புத்தியுள்ள **தகப்பனின்** அறிவுரைகளுக்குச் செவிமடுக்க வேண்டும் என்று இளைஞர்களுக்குக் கூறும் ஆர்வமிக்க புத்திமதிகளால் நீதிமொழிகள் நூல் நிறைந்திருக்கிறது.

4:2 தெய்வபக்தியுள்ள வயதான மக்களோடு நட்பை வளர்க்க வேண்டுமென்று இது கூறுகிறது. நீங்கள் பெருமளவு அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளலாம், அவர்களுடைய பல்லாண்டு அனுபவத்திலிருந்து நீங்கள் பயனடையலாம். அவர்களுடைய உபதேசம் நல்லது, அதைப் புறக்கணித்து விட்டுவிடக் கூடாது.

4:3 இங்கு தன்னுடைய **தகப்பனுக்குக் குமாரனாக** இருந்த காலத்தை சாலொமோன் குறிப்பிடுகிறான். மேலும் அவன் அப்பொழுது தன்னுடைய **தாய்க்கு "ஒரே பிள்ளையாக"** இருந்தான். உண்மையில் அவன் தாய்க்கு ஒரே மகன் இல்லை. என் தாயின் பார்வையில் ஒரே பிள்ளை என்ற சொற்றொடரின் பொருள் **"என் தாய்க்கு மிகவும் அருமையான ஒரே பிள்ளை"** என்று தோன்றுகிறது (நாக்ஸ் - தமிழிலும் இவ்வாறே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

4:4 சாலொமோனின் தகப்பனாகிய தாவீது, தனது மகனுக்கு ஆரோக்கியமான அறிவுரைகளைக் கற்பித்து அவற்றைக் கைக்கொண்டு, சிறப்பான வாழ்க்கை வாழும்படி ஆலோசனை கூறினான். தாவீதின் அறிவுரைகளின் சுருக்கம் 4 முதல் 9 வரை கொடுக்கப்பட்டுள்ளது.

4:5,6 ஞானத்தையும் புத்தியையும் தன் மகன் சம்பாதிக்க வேண்டும் என்பதே அவனுடைய பெரிய கவலையாக இருந்தது - அதனுடைய மெய்யான பொருள் கர்த்தருக்காக வாழ்வதே ஆகும். சாலொமோன் வேறு எதைச் செய்தாலும் இதை ஒருபோதும் மறக்கக் கூடாது. ஏனெனில் தேவனுக்காக வாழ்கிற வாழ்க்கையே கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

4:7 ஞானத்தைப் பெறுவதன் முதல் கட்டம், அதற்கான ஊக்கத்தைப் பெற வேண்டும் அல்லது முடிவெடுக்க வேண்டும். நம்முடைய வாழ்க்கையில் எதைப் பின்தொடருகிறோமோ அதையே பெறுவோம். என்ன விலையாயினும் நாம் **ஞானத்தைப்** பெறவேண்டும், அவ்வாறு தொடருகிற போது நல்ல **புத்தியை** அல்லது பகுத்தறிவைப் பெறுவோம். கெட்டது நல்லது இவற்றில் எதைத் தெரிந்தெடுப்பது என்பதைக் கற்றுக்கொள்வோம்; நல்லது எது சிறந்தது எது என்றும், ஆத்துமாவுக்குரியது எது ஆவிக்குரியது எது என்றும், தற்காலிகமானது எது என்றும் நிலையானது எது என்றும் நம்மால் பகுத்தறிய முடியும் என்பதே இதன் பொருள்.

4:8 நமது தெரிந்தெடுப்புகளில் ஞானத்திற்கு முதலிடம் கொடுப்போமானால் அது நம்மைப் பெருமளவு **மேன்மைப்படுத்தும்**. அதை நாம் அன்புடன் **தழுவிக்கொண்டால்** அது நம்மைக் **கனமுள்ள** இடத்திற்கு வழிநடத்தும்.

4:9 "அது உன்னைக் கவர்ச்சியால் அலங்கரித்து, மகிமையால் முடிசூட்டும்" (மொ.ம்.பட்). ஞானம் தன்னுடைய பிள்ளைகளுக்கு நன்னெறி அழகை அணிவிக்கும். இதற்கு மாறான ஓர் எடுத்துக்காட்டு, வெறுப்பூட்டும் வகையிலான வாழ்க்கை இழிநடத்தையிலும் ஒழுக்கக் கேட்டிலும் கைவிட்டுவிடும்.

எ. ஞானமும் இரண்டு வழிகளும் (4:10-27)

4:10 தனது தகப்பனுடைய ஆலோசனையைத் திரும்ப எடுத்துரைத்த பிறகு, சாலொமோன் இப்பொழுது தனது சொந்த மகனிடம் தனது அறிவுரைகளைக் கூறத் தொடருகிறான். தூய்மையான வாழ்க்கை நீடித்த வாழ்வுக்குச் சாதகமாயிருக்கும் என்பது பொதுவான விதி, ஆயினும் விதிவிலக்குகள் இல்லாமல் இல்லை. புகையிலை, மது, போதைப் பொருட்கள், பாலுறவுச் சீர்கேடுகள் நேரடியாக நோய்களோடும் மரணத்தோடும் தொடர்புடையன என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

4;11,12 ஒரு தகப்பன் தன்னுடைய மகனுக்கு ஞானத்தின் வழியைக் குறித்த போதனையைக் கற்றுக் கொடுத்து நல்ல முன்மாதிரியாகத் திகழ்ந்திருந்தால் அவனால் மனநிறைவு பெற்றிருக்க முடியும். கற்பித்தலும் நல்ல முன்மாதிரியும் இணைந்திருக்க வேண்டும். தகப்பனின் செயல்கள் அவனுடைய சொற்களைக் காட்டிலும் சத்தமாய்ப் பேசுகின்றன.

ஒரு மகன் **செவ்வையான பாதையில்** செல்கிறபோது தடையின்றி **நடப்பான்**, இடறிவிழாமல் **ஓடுவான்**.

"நீ ஒவ்வொரு படியாகச் செல்லும்போது, உன் பாதையைக் கொஞ்சம் கொஞ்சமாகத் திறப் பேன்" என்று சிரியாக் மொழி வேதம் கூறுகிறது. இது இரண்டு முக்கியமான கோட்பாடுகளைக் கற்பிக்கிறது. முதலாவது, திட்டம் முழுவதையும் ஒரேயடியாக வெளிப்படுத்தாமல் தேவன் படிப்படி யாக வெளிப்படுத்துகிறார். இரண்டாவது, மக்கள் தேவனுக்காக முன்னேறிச் செல்கிறபோது, அவர் அவர்களை நடத்துகிறார். ஒரு தலைவன் கப்பல் நகரத்தொடங்கிய பிறகுதான் அதனைத் திசை திருப்ப முடியும். அதுபோலவே மிதிவண்டியை யும், அது நகரத் தொடங்கிய பின்னரே அதனு டைய திசையைத் திருப்ப முடியும். நம்மைக் குறித் தும் அது உண்மையாக இருக்கிறது; நாம் தேவ னுக்காக முன்னேறிச் செல்கிறவர்களாக இருந் தால் மட்டுமே அவரால் நம்மை வழிநடத்த முடியும்.

4:13 நாம் நல்ல அறிவுரைகளை **உறுதி யாய்ப் பற்றிக்கொள்ள** வேண்டும், அவை நம்மைவிட்டு விலகாமல் இருக்கும்படி காத்துக் கொள்ள வேண்டும். நாம் நம்முடைய உயிரைப் பாதுகாப்பதுபோல நாம் ஞானத்தைக் காத்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால் அதுவே நம்மு டைய **ஜீவனாக** இருக்கிறது. குறிப்பாக நாம் கர்த்தராகிய இயேசுவின் ஆளுமையில் மனுவுரு வெடுத்த ஞானத்தைக் காண்கையில் இது உண்மையாக விளங்குகிறது.

4:14 பதினாலு முதல் பத்தொன்பது வரை யிலான வசனங்களில் தீயோரின் தோழமை குறித்த எச்சரிப்பும், இருளின் வழிக்கும் வெளிச்சத்தின் வழிக்கும் இடையேயுள்ள வேறுபாடும் கொடுக் கப்பட்டுள்ளன.

நீதியற்ற மனிதர்களோடு நாம் தோழமை கொள்ளக்கூடாது என்று இங்கு எச்சரிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளதால், நாம் அவர்களுக்குச் சாட்சி கூறுவதற்குத் தடைசெய்யப்பட்டிருக் கிறோம் என்பது பொருளன்று. ஆனால் அவர் களுடைய திட்டங்களில் கூட்டாளிகளாகச் செயல் படுவதிலிருந்தே நாம் தடைசெய்யப்பட்டுள் ளோம்.

4:15 இடைவெளிவிட்டு கொடுக்கப்பட்டுள்ள சிறிய கட்டளைகளில் விரைந்து செயல்பட வேண் டிய ஓர் எச்சரிப்பின் தொனி கேட்கிறது. பாவ வாழ்க் கையை **வெறுத்துத்** தள்ள வேண்டும். அதைக் குறித்து ஆராய வேண்டுமென்று அதன் பாதை யில் செல்லக்கூடாது. வேறு வழியாகத் திரும்புங் கள். தொடர்ந்து செல்லுங்கள். அது கவர்ச்சி யுள்ளதாக, ஆர்வத்தைத் தூண்டுவதாக, கிளர்ச்சி யூட்டுவதாக இருக்கலாம், ஆனால் முடிவில் அது உன்னை அழித்துவிடும்.

4:16,17 பாவத்தின் கையாள் ஏதாவது தவ றான செயலைச் **செய்தால் ஒழிய** நன்றாகத் தூங்க மாட்டான். அப்படிப்பட்டவர்கள் **யாரையாகிலும்** அழிவுக்கும் பேரிடருக்கும் கவர்ந்திழுத்தால் ஒழிய, பெருமளவு உறக்கமின்மை நோயைப் பெற்றிருப்பார்கள்.

அவர்களுடைய உணவு, **கொடுமையின் அப்பமும், வன்முறையின் மதுவுமாகும்**. அல் லது பொல்லாப்பு அவர்களுடைய புலால் உண வும் பானமும் என்று சொல்லலாம்.

இந்த வசனங்கள் மனிதனின் பாவ இயல்பின் சித்திரத்தைத் தீர்க்கமாக வரைந்து காட்டுகின் றன. அவனுடைய இயல்பே பாவமாக இருக்கிறபடி யால், பாவம் செய்தல் அவனுடைய சரீரத்துக்குத் தேவையான புலால் உணவும் பானமுமாக இருக் கிறது. இந்தப் பகுதி குற்றவாளிகளுக்கு மட்டும் பொருந்தும் என்று கூற முடியாது (எரே. 17:9 -ஆம் வசனத்திற்கான விளக்ககத்தை நமது உரையில் காண்க).

4:18,19 நீதிமான்களுடைய வாழ்க்கை அப் படிப்பட்டதல்ல. அது அதிகாலை ஒளிக்கதிர் போன் றது; நடுப்பகலில் அது எவ்வாறு முழுமையான வெப்பக் கதிர்களை வீசிப் **பிரகாசிக்கிறதோ** அதுபோல அவர்களுடைய வாழ்க்கையும் பிர காசிக்கும். இதனை, **நீதிமான்களுடைய பாதை** எல்லா நேரங்களிலும் கூடுதல் **பிரகாசத்தை** அடைந்து கொண்டே இருக்கும் என்றும் சொல்ல லாம்.

துன்மார்க்கரோ கடுமையான **இருளில்** தடு மாறுகிறார்கள், அவர்கள் எதன்மேல் இடருகிறார் கள் என்பதுகூட அவர்களுக்குத் தெரியாது.

4:20 ஞானத்தில் தான் கொடுக்கிற அறிவுரை களுக்கு தன்னுடைய மகன் கவனமாகச் **செவி சாய்க்க** வேண்டுமென்று சாலொமோன் தொடர்ந்து வலியுறுத்துகிறான். இதுபோன்ற வசனங்களில் கர்த்தர் நம்மோடு பேசுகிற தொனியைக் கேட் கிறோம்.

4:21 ஞானத்தின் போதனையை நமது பார்வையைவிட்டு விலக்காமலிருப்பது நமது சொந்த நலன் கருதிய செயலாகும், மேலும் அதை நம்முடைய இருதயங்களில் புதையை லைப் போலச் சேர்த்துவைக்க வேண்டும்.

4:22 ஞானத்தின் சொற்கள் ஜீவன் தருபவை, புத்துயிர் ஊட்டுபவை. "நான் உங்களுக்குச்

சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கின்றன" என்று இயேசு கூறினாற்போல இது இருக்கிறது (யோவான் 6:63).

மேலும் அவை உடல் முழுவதற்கும் ஆரோக்கியமாக உள்ளன, ஏனெனில் நோய்களுக்குக் காரணமான ஒருவனுடைய பாவத்திலிருந்தும் மனஅழுத்தத்திலிருந்தும் அவை விடுவிக்கின்றன.

4:23 இருபத்து மூன்றிலிருந்து இருபத்தேழு வரையிலான வசனங்கள் ரோமர் 12:1 -இன் பழைய ஏற்பாட்டுச் சரிநேர்படிவமாகும். அவை நம்முடைய அனைத்து ஆளுமையையும் தேவனுக்கு ஒப்புவிக்க வேண்டுமென்று கூறுகின்றன. நமது அனைத்து ஆளுமையும் என்கிறபோது, நமது இருதயம், வாய், உதடுகள், கண்கள், கால்கள் அனைத்துமாகும். தேவன் உள்ளான மனிதனில் தொடங்குகிறார். அதன்பிறகு வெளிப்புறத்தில் செயல்புரிகிறார்.

இருதயம் முதலாவது ஆகும். அது உள்ளான வாழ்க்கையைக் குறிக்கிறது, மனம், சிந்தனைகள், நோக்கங்கள், விருப்பங்கள். மனதே செயல்கள் பீறிட்டுப் பாய்ந்து வெளிப்படுவதற்கான நீரூற்று போன்று விளங்குகிறது. நீரூற்று தூய்மையாக இருக்குமென்றால், அதிலிருந்து பாய்ந்து வருகிற ஓடைநீரும் தூய்மையாக இருக்கும். ஒரு மனிதன் எவ்விதமாகச் சிந்திக்கிறானோ அது போலவே இருக்கிறான். ஆகவே இந்த வசனம் நம்முடைய சிந்தனை வாழ்க்கை தூய்மையாக இருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது.

4:24,25 வஞ்சகமான வாய் நேர்மையற்ற, கபடமான பேச்சைக் குறிக்கிறது. மாறுபாடான உதடுகள் ஒளிமறைவு அற்றதும், நேர்மையானதுமான உரையாடலாக இல்லாமல் அதற்கு எதிர்மாறான உரையாடலைக் குறிக்கின்றன.

முன்னோக்கி நேராகப் பார்க்கிற கண்களும் கண்ணிமைகளும் பாவத்தைச் செய்யும் பொருட்டு அங்குமிங்கும் திரும்பாமல், அல்லது பயனற்றது எதையும் காண்பதற்குத் திரும்பாமல் ஒரே நோக்கத்தோடு நடக்கிற நடையைக் குறிக்கின்றன. நம்முடைய மிருகத்தனமான இச்சைகளை ஏவிவிடக் கூடிய விளம்பரங்களால் குண்டுவீசி நம்மைத் தாக்கக்கூடிய செய்தித் தொடர்பு சாதனங்கள் பெருகியிருக்கும் காலத்தில் நாம் நம்முடைய கண்களைக் கிறிஸ்து இயேசுவுக்கு நேராகத் திருப்புவதற்குக் கற்றிட வேண்டும் (எபி. 12:2).

4:26,27 நாம் பரிசுத்தமுள்ள ஒழுங்கான பாதைகளை அமைப்பதற்குக் கவனத்தோடு இருப்போமென்றால், நம்முடைய வழிகள் யாவும் நன்கு செப்பனிடப்பட்டதாகவும் பாதுகாப்பாகவும் இருக்கும்.

பெரும் சாலைகளின் இருபுறமும், **வலப்புறமும் இடப்புறமும்** நம்மைப் பாவத்துக்குள் விழத்தள்ளுகிற தெருக்கள் இருக்கின்றன. "உலகத்திலிருந்து ஆயிரம் அழைப்புகள் வந்தாலும், நாம் இயேசுவுக்கு உண்மையோடு இருப்போம்."

கேள்விக்குரிய இடத்திற்குச் செல்வதற்கு நீங்கள் சோதிக்கப்படுவீர்கள் எனில், "இயேசு மீண்டும் வருகிறபோது நான் அங்கே இருப்பதை அவர் காண்பதற்கு நான் விரும்புவேனா?" என்னும் கேள்வியை உங்களிடமே கேளுங்கள். **உங்கள் கால்களைத் தீமைக்கு விலக்குவீர்களாக.**

ஏ. ஒழுக்கக்கேட்டின் மதியீனம் (அதி. 5)

5:1,2 இளம் வயதில் மனிதனைச் சூழ்ந்து சிக்க வைக்கிற பாவங்களில் ஒன்றைக் குறித்துத் தன் மகனிடம் கூறி எச்சரிக்கும்படி சாலொமோன் மிகுந்த தீவிரமாக இருந்தான். ஆரோக்கியமான ஆலோசனைக்குக் **கவனத்தைச்** செலுத்தி பிறருடைய அனுபவத்திலிருந்து கற்பவர்கள் மெய்யான **புத்தியைப்** பெருக்கிக்கொள்வார்கள். அவர்களுடைய பேச்சு தூய்மையும் உண்மையுமாக இருப்பதால் இடர்ப்பாடுகளுக்குள் சிக்கிக் கொள்வதிலிருந்து அது பாதுகாப்பளிக்கிறது. இன்றைய நாட்களில் தடையின்றிப் பெருகியிருக்கிய நெறி தவறச் செய்தல், ஏமாற்று வேலை ஆகிய வற்றிலிருந்து பாதுகாப்பளிப்பது தேவனுடைய வார்த்தையேயல்லாமல் வேறொன்றுமல்ல. இறைப் பற்றை விடுத்து மறுதலித்தவர்கள் சுற்றிப்பெருகியிருந்த காலத்தில் பவுல் தீமோத்தேயுவினிடத்தில் தேவ வார்த்தையில் நிலைத்திருக்கும்படி அறிவுறுத்துகிறான் (2 தீமோ. 3:13-17).

5:3 இவ்வதிகாரத்தின் எஞ்சிய வசனங்கள் "நீண்ட காலமாக வழங்கி வருகிற தொழில்" என்று அழைக்கப்படுகிற வேசித்தனத்தைக் குறித்துப் பேசுகின்றன. பரத்தை என்பவள் ஒழுக்கமற்றவள், அவள் இழிவான வேலைக்குத் தன்னை விற்கிறவள். மனிதர்கள் எதிர்கொள்கிற இந்தப் பொல்லாத உலகம், பாவம், தவறான மதம், உருவ வழிபாடு அல்லது நெறிதவறிச் செய்வதற்கான எந்தவிதமான சோதனையாகவும் இருக்கலாம், இவை எல்லாவற்றிற்கும் அவள் சின்னமாக

விளங்குகிறாள். அவளுடைய உதடுகள் ஒழுகும் தேன்கூடுபோல இனிமையானது, மிருதுவானது, போலியானது, அவள் முகத்துதி செய்கிறாள், நயமாகவும் தந்திரமாகவும் பேசுகிறாள்.

5:4 முதலில் அவள் இனிமையானவளாகவும் விரும்பப்படத்தக்கவளாகவும் தோன்றுகிறாள், ஆனால் **முடிவில் அவள் எட்டியைப் போலக் கசப்பாக** இருப்பாள். இது பழைய கதை - பாவம் மகிழ்ச்சி நிறைந்த எதிர்காலம் என்னும் கவர்ச்சியுடையது, ஆனால் அது அருவருக்கத்தக்க கடந்த கால நினைவுகளாயிருக்கும்.

அவளுடன் படுக்கச் செல்வதற்குக் கொடுக்கப்படுகிற விலை மிக அதிகம் - குற்றவுணர்வுள்ள மனச்சாட்சி, உளநைவு, அவதூறு, பாலுறவு நோய்கள், திருமண உறவு நொறுங்குதல், முறிவடைந்த இல்லம், மனநிலை பாதிப்பு, இன்னும் பற்பல கேடுகள்.

5:5,6 அவள் தன்னுடைய தீமைக்கு ஆளான மனிதனை **மரணத்துக்கும்** நகரத்துக்குமான ஒருவழிப் பாதையில் நடத்துவாள். நடத்தை கெட்ட பெண், நல்வாழ்வைக் குறித்த எவ்வித அக்கறையும் இல்லாதவள். அவளுடைய நடத்தை நிலையற்றது, வஞ்சகம் நிறைந்தது. அவள் எவ்வளவு கீழ்த்தரமானவள் என்பதை உணராதிருக்கிறாள். "வாழ்க்கையின் பொதுவழிச்சாலை அவளுக்குரியதல்ல வஞ்சகமும் தரக்குறைவும் நிறைந்ததே அவளுடைய பாதை" (மொ.ஃபட்).

5:7 இடர் உண்டாக்கும் எல்லாவற்றையும் குறித்துச் சிந்தித்தவனாக, சாலொமோன் தனது **பிள்ளைகளிடம்**, தனக்குச் **செவிசாய்க்கும்படியும்**, தான் கூறப்போகிறவற்றிலிருந்து விலகாமல் நிலைத்திருக்கும்படியும் வேண்டிக்கொள்கிறான்.

5:8 சோதனையிலிருந்து எவ்வளவு தொலைவு விலகியிருக்க முடியுமோ அவ்வளவு தூரம் விலகியிருப்பது மிகப்பெரியதொரு பாதுகாப்பாகும். பாவத்தோடு தொடர்புடைய பொருட்களோடு அல்லது அப்படிப்பட்ட இடங்களில் பொழுதுபோக்க வேண்டும் என்று விடாப்பிடியாக இருந்துவிட்டு, தேவனிடம் தனக்கு விடுதலை வேண்டும் என்று விண்ணப்பிப்பதில் பயன் எதுவும் இல்லை.

சில வேளைகளில் நாம் உண்மையாகவே ஓடவேண்டிய கட்டாயம் ஏற்படும். யோசேப்பு இதையே செய்தான், அவன் தன் மேலாடையை இழந்தான், ஆனாலும் அவன் தனது தூய்மையைக் காத்துப் பின்னர் மகுடத்தைப் பெற்றான்.

எட்டாவது வசனத்திற்குக் கீழ்ப்படிவதன் மூலமாக நாம் ஒருவேளை புதிய வேலையைத் தேட நேரிடும், வேறு இடத்திற்கு மாறிச் செல்ல நேரிடும், அல்லது இது போன்ற தீர்மானத்தைச் செய்ய நேரிடும்.

5:9,10 விபசார விடுதிகளுக்குச் செல்கிறவர்கள் தங்களுடைய ஆண்மகனுக்குரிய வீரியத்தை வீணடித்துவிடுகிறார்கள்; மேலும் தங்களுடைய வாழ்க்கையின் மிகச்சிறந்த பொன்னான ஆண்டுகளை **கொடூரமான** வேசியிடம் கொடுத்துவிடுகிறார்கள்.

மேலும், "மதிப்பிற்குரிய" குடிமக்கள் இரகசியமான கள்ளத்தொடர்புகளில் ஈடுபட்டு - அது உண்மையான தொடர்பாகவோ, கீழ்த்தரமான புத்தகங்கள், திரைப்படங்கள், தொலைக்காட்சித் தகடுகள் ஆகியவற்றின் மூலமாக ஏற்படுகிற தொடர்பாகவோ இருக்கலாம். எதுவானாலும் - பின்னர் அச்சுறுத்திப் பணம் பறிக்கப்படுவதற்கு ஆளாகிறார்கள். மறைத்து வைப்பதற்கு அவர்கள் பணம் தரவில்லையென்றால் உண்மை வெளியிடப்படும் என்னும் அச்சம் தொடர்ந்து இருந்துகொண்டே இருக்கும்.

5:11 அத்தகைய வாழ்க்கை நீண்டகாலக் கொடுமைக்கு உட்பட்டு, சரீரமானது பலவகைப் பாலியல் நோய்களால் தாக்குண்டு அவதிப்பட்டு, மன உலைவால் பாதிக்கப்படும்.

5:12,13 அதற்கு மேலும், செய்த தவறுக்கான வருத்தமும் துக்கமும் தொடரும். உருவழிந்து நாசத்துக்குட்பட்ட மனிதன், தனது பெற்றோருடைய சொற்களுக்கும் ஞாயிறு வேதபாட ஆசிரியர்களுடைய அறிவுரைகளுக்கும், கிறிஸ்தவ நண்பர்களுடைய ஆலோசனைகளுக்கும் கீழ்ப்படியாததை எண்ணி, தன்னையே நொந்துகொள்கிறான். அவன் பெருங்கடலைப் போன்ற கடுந்துயர்களைத் தவிர்த்திருக்கலாம், ஆனால் அவன் எச்சரிப்புகளைப் புறக்கணித்துப் பிடிவாதமாயிருந்தான்.

5:14 மேலும் வெளியரங்கமாக அவமான மடையக்கூடிய சூழ்நிலைகளும் ஏற்பட வாய்ப்புண்டு. அவன் தன்னுடைய தகாத செயல்களுக்காகத் தண்டனை அனுபவிக்க நேரிடும் என்பது இந்த வசனத்தின் பொருளாக இருந்தாலும் வெளியரங்கமான அவமானத்தை அடையக்கூடிய நிலையையே இது முதன்மைப்படுத்துவதாகத் தோன்றுகிறது.

5:15,16 ஓர் உவமை மொழியாக, தனது சொந்த மனைவியிடமே எல்லாவிதமான சிற்றின்பத்தையும் அனுபவித்து மனநிறைவு அடைய

வேண்டுமென்று சாலொமோன் தன் மகனுக்கு ஆலோசனை கூறுகிறான். அதுவே, தம்பதிகளுக்கிடையே காணப்படவேண்டிய தூய்மையான அன்பின் உறவு.

நாம் KJV மொழிபெயர்ப்பின்படி பார்க்கிற போது, உண்மையான தாம்பத்ய உறவு குடும்பமாகவும் நண்பர்களாகவும் மலருகிற ஆசிர்வாதத்தையே இந்த வசனம் விளக்கிக் கூறுகிறது என அறியலாம் (தமிழிலும் அவ்வாறே இருக்கிறது).

NKJV மொழிபெயர்ப்பு 16 -ஆவது வசனத்தை ஒரு கேள்வியாக மாற்றித் தருகிறது: **"உனது ஊற்றுகள் வீதிகளில் வழிந்தோட வேண்டுமோ? உனது நீரோடைகள் பொது இடங்களில் ஓட வேண்டுமோ?"** (இலகு தமிழ்). ஒரு மனிதன் தன்னுடைய இனப்பெருக்க ஆற்றல்கள் எல்லாவற்றையும் பரத்தையினிடத்தில் சென்று வீணாக்குவதை இது சித்திரமாக வரைந்து காட்டுகிறது.

திருவாளர் நாக்ஸ் இதனை இவ்விதமாக மொழிபெயர்த்திருக்கிறார்: "அப்பொழுது உமது வழித்தோன்றல்கள் பெருகுவதாக. உமது சொந்த ஊற்றிலிருந்து பொதுப் பாதைகளில் வழிந்தோடுகிற தண்ணீர்களைப் போல அவர்கள் காணப்படுவார்களாக." இங்கு மனைவியே ஊற்று, தண்ணீர்கள் என்று குறிப்பிடப்பட்டிருப்பவர்கள் பிள்ளைகள், அவர்கள் இல்லத்திலிருந்து வெளியே பாய்ந்து சென்று தெருக்களில் மகிழ்ச்சியோடு விளையாடுகிறார்கள்.

5:17 மெய்யான திருமண உறவு கணவன் மனைவிகளுக்கு மட்டுமே உரிய உறவு. பிள்ளைகள் "தனிப்பட்ட சொந்தம்" என்னும் பாதுகாவலை மகிழ்வுடன் அனுபவிக்கிறார்கள். இவ்வாறாக இந்த வசனம் முறைகேடாகப் பிறக்கும் பிள்ளைகள் என்னும் சோகமான சூழ்நிலைக்கு எதிரான எச்சரிப்பாகும். அல்லது தாறுமாறான பாலுறவின் காரணமாகப் பிறந்து பெற்றோர் பெயர் அறியாத சோக நிலைக்கு எதிரான எச்சரிப்பாகும்.

5:18 மீண்டுமாக இங்கு **ஊற்றுக்கண்** என்று குறிப்பிடப்பட்டிருப்பது ஒருவனுடைய சொந்த மனைவியையே ஆகும். அவன் தன்னுடைய இளவயதின் மனைவியில் மகிழ்ச்சியையும் தோழமையையும் கண்டடைவானாக. திருவாளர் மைக்கேல் கிரி.ஃபித்ஸ் கூறினாற்போல, "மற்ற எல்லாவற்றையும் விட்டொழித்து தம்பதிகளுக்கு இடையே மட்டும் இருக்கிற பிரத்யேக உறவில் பொங்கி எழுகிற நிறைவான மகிழ்ச்சிக்கு முடிவே இல்லை; மேலும் அந்த வீட்டிலிருந்து வெளிப்படுகிற இனிமையான வரவேற்பு எங்கும் வெளிப்படும்."[7]

5:19,20 நெருக்கமான திருமண உறவை ஒரு மனிதன் தன் மனைவிக்காக மட்டும் ஒதுக்கிவைக்கக்கடவன். அவன் அவளை **நேசிக்கப்படத்தக்க** பெண்ணாக நடத்தக்கடவன். **அவளுடைய ஸ்தனங்கள்** அவனை மனநிறைவு அடையச் செய்கிறவையாக இருக்கட்டும், மேலும் அவன் **அவளுடைய நேசத்தால் எப்பொழுதும் மயங்கியிருப்பானாக.**

அவன் பரத்தையின் போலியான கவர்ச்சியில் ஏன் மயங்கிக் கிடக்க வேண்டும்? அல்லது அவன் ஏன் கற்பற்றவளைத் தனது கரங்களால் அணைக்க வேண்டும்?

5:21,22 அவன் விபசார விடுதிக்குச் செல்வதை, அல்லது சுற்றுலா விடுதிக்குச் செல்வதை, அல்லது இரகசியமான முன்னேற்பாடு செய்யப்பட்ட இடத்திற்குச் செல்வதை மனிதக் கண்கள் காணாமல் இருக்கலாம், எனினும் தேவன் எல்லாவற்றையும் காண்கிறார். "பூமியில் நடக்கிற இரகசிய பாவம், அவமானச் செயலாக வெளியரங்கமாகக் காணப்படும்."

மனிதன் பாவம் செய்துவிட்டு தண்டனைக்குத் தப்பமுடியாது. அதில் அடங்கியுள்ள விளைவுகளுக்குத் தப்புவது இயலாத செயல். திருவாளர் ஜே ஆடம்ஸ் அறிவுறுத்துகிறார்:

> பாவப் பழக்கங்கள் உடைத்தெறிவதற்குக் கடினமானவை. ஆனால் அவற்றை உடைத்தெறியாவிட்டால், அவை வாடிக்கையாளரை இறுகக் கட்டிவிடும். அவன் தன்னுடைய சொந்தப் பாவத்தின் கயிறுகளால் இறுகப் பிடிக்கப்பட்டிருப்பான். அவன் அந்தப் பாவத்தின் சுருள்களுக்குள்ளாகச் சிக்கி, கீழ்நோக்கிச் செல்லும் சுழற்சியில் இழுக்கப்படுவான். அவன் பாவத்தின் கட்டுகளால் பிடிக்கப்பட்டு, கட்டப்பட்டிருக்கிறான், அவை தொடர்ந்து இறுக்கிக் கொண்டே போகிற கயிறுகளைப் போன்றவை. காலம் செல்லச் செல்ல அவன் பாவத்தின் அடிமையாகிவிடுகிறான்.[8]

5:23 ஓர் ஒழுக்கங்கெட்ட மனிதனுடைய வாழ்க்கையின் இறுதிக்காட்சியாக இந்த வசனம் விளங்குகிறது என்கிறார் திருவாளர் எல்லிகாட்.

அவன் தற்கட்டுப்பாட்டைச் செயல்படுத்த முடியாதவன். அதன் விளைவாக அவன் இப்பொழுது சாகிறான். "அவன் உணர்வற்றுச் சாகிறான்; அவனுடைய கீழ்த்தரமான தவறு அவனை அழித்துப் போடுகிறது" (மொ.ஃபட்).

ஷெல்லி என்னும் கவிஞர் இதற்கோர் எடுத்துக் காட்டாக இருந்தார். அவருடைய ஆணவத்தாலே, ஒரே மனைவியை உடைய திருமண உறவை ஏளனமாக எண்ணினார். அது ஒரு பெண்ணைத் திருமணம் செய்து ஆயிரம் பேரை ஏமாற்றும் செயல் என்று கூறினார். அவருடைய அணுகுமுறையின் காரணமாகக் கைவிடப்பட்ட நிலை, தற்கொலைகள், முறைகேட்டில் பிறந்த பிள்ளைகள் மற்றும் பொறாமைகள் பெருகியிருக்கின்றன என்கிறார் திருவாளர் க்ரி.ஃபித்ஸ். "எந்தவொரு கவிஞனுடைய வாழ்க்கையிலாவது இந்த "அழகிய ஆனால் பயனற்ற" தூதன் விட்டுச்சென்ற அளவிற்குத் துன்ப நிகழ்வுகளின் தொடர்ச்சி நடைபெற்று இருக்கின்றனவா?" என்று கேட்கிறார் திருவாளர் G. சாம்சன்.

ஐ. பிணைபடுதல், சோம்பேறித்தனம், ஏமாற்றுதல் ஆகிய அறிவற்ற நடத்தைகள் (6:1-19)

6:1 முதல் ஐந்து வசனங்கள் **பிணைபடுதலுக்கு** எதிரான எச்சரிக்கை, அதாவது, வேறொருவன் தன் கடனை அடைக்க வகையற்றுப் போவானெனில் அவனுடைய கடனைத் தானே அடைப்பதாக ஒருவன் உறுதி கூறுதல். உங்களுடைய நண்பர் தவணைமுறையில் பணத்தைச் செலுத்துவதாக ஒரு வாகனத்தை வாங்குவதாக வைத்துக் கொள்வோம், ஆனால் கடன் பெறுவதற்கான மதிப்பீடு அவருக்கு இல்லை. ஆகவே கடன் கொடுக்கும் நிறுவனம் அவர் தவறுகிறபோது அவருக்குப் பதிலாகப் பணத்தைச் செலுத்தக் கூடிய ஒருவருடைய கையொப்பத்தைக் கேட்கிறது. அந்த அயலகத்தார் உங்களை அணுகி, அந்தக் கடன் பத்திரத்தில் உங்களையும் கையொப்பம் இடும்படி வேண்டுகிறார். அவர் தவணையைக் கட்டவில்லை என்றால் அதை நீங்கள் கட்டுவீர்கள் என்பது அதன்பொருள்.

இந்த வசனத்தில் நண்பர் என்று குறிப்பிடப்பட்டுள்ளவர் உங்களுடைய அயலகத்தார். **அந்நியன்** என்னும் சொல் கடன் கொடுக்கும் நிறுவனத்தைக் குறிக்கிறது. அந்த நிறுவனத்துக்கே நீங்கள் உறுதி தருகிறீர்கள்.

6:2 நீ உன் வாய்மொழிகளால் சிக்குண்டாய், உன் வாயின் வார்த்தைகளால் பிடிபட்டாய். நீங்கள் எண்ணாமல் துணிந்து வாக்குறுதி கொடுத்துவிட்டீர்கள், நீங்கள் ஒரு கண்ணியில் சிக்கிக்கொண்டீர்கள், இது மிகப்பெரிய தவறு.

6:3 இப்பொழுது நீங்கள் செய்யக்கூடிய மிகச்சிறந்த செயல், அந்த ஒப்பந்தத்தில் இருந்து விடுதலை பெறுவதே ஆகும். நீங்கள் கையெழுத்துப் போட்ட பத்திரத்திலிருந்து நீங்கள் விடுதலை பெறவேண்டும் என்று உங்களுடைய நண்பரிடம் கூறி அதற்கான ஏற்பாட்டைச் செய்யும்படி அவரை இணங்கச் செய்யுங்கள்.

6:4,5 அந்தக் கடனிலிருந்து நீங்கள் விடுதலைபெறுவது மிகவும் முக்கியமானது ஆகும். அவ்வாறு நீங்கள் விடுதலை பெறுகிறபோது, **வெளிமான்** தன்னைப் பிடித்தவனுடைய கையிலிருந்து தப்பினதுபோல அல்லது **வேடனுடைய** கையிலிருந்து ஒரு பறவை பறந்து சென்றதுபோல அது காணப்படும்.

இவ்வளவு கண்டிப்பான முறையில் திருமறை பிணைபடுதலைக் குறித்து எச்சரிப்பதன் காரணம் என்ன? ஒரு நண்பருக்கோ அயலகத்தாருக்கோ நாம் செய்யக்கூடிய தயவல்லவா அது? அது தயவு செய்வதாகக் காணப்படும், ஆனால் உண்மையில் அது தயவில்லை.

1. அவர் ஒரு பொருளை வாங்குவதற்கு நீங்கள் உதவிசெய்வதாக எண்ணினாலும், உண்மையில் அவர் அந்தப் பொருளை வாங்குவது தேவனுடைய சித்தமாக இருக்காது.
2. அவர் ஊதாரித்தனமாகச் செலவுசெய்வதற்கு அல்லது ஒருவேளை சூதாட்டம் ஆடுவதற்கு நீங்கள் ஊக்குவிப்பராகக் காணப்படுவீர்.
3. அவர் பணத்தைத் திரும்பச் செலுத்தத் தவறுகிறபோது அதை நீங்கள் செலுத்துகிறீர்கள். நீங்கள் உங்களுடையது அல்லாததற்காகச் செலுத்துகிறபோது நட்பு முறிவடைந்து, கசப்பு தோன்றுகிறது.

ஒருவருக்கு நியாயமான தேவை உண்டென்று நீங்கள் அறிகிறபோது, நேரடியாக அந்தப் பணத்தைக் கொடுப்பது சிறந்தது. எதுவாயினும் நீங்கள் அவருக்காகப் பிணைபடக்கூடாது.

6:6,7 ஆறு முதல் பதினோராம் வசனம் வரைக்கும் சோம்பேறிக்கு எதிரான வார்த்தைகள் உரைக்கப்பட்டுள்ளன. இங்கு எறும்பு காட்சிப்பொருளாகக் காட்டப்பட்டு பாடம் கற்பிக்கப்படுகிறது. அது முன்னும் பின்னும் நகர்ந்து, இடைவிடாமல் சென்று கொண்டிருக்கிறது, அவ்வப்போது பாரமான சுமையைச் சுமந்துகொண்டு போகிறது. அங்கே அதற்குத் தலைவனுமில்லை, மேற்பார்வையாள

னுமில்லை, நிருவாகியுமில்லை; ஆனாலும் அவர் களுடைய துணையில்லாமல் பெரிய வேலை களைச் செய்கிறது. எறும்புக் கூட்டத்தை நாம் காண்கிறபோது, அவை எல்லாத் திசைகளிலும் ஏறுமாறாகச் செல்வதாகத் தோன்றுகிறது. ஆனால் அவற்றின் செயல்கள் ஒரு நோக்கத்தோடு கட்டுப் பாட்டுக்குள் அமைந்திருக்கின்றன. அங்கே அடுக் கடுக்கான கட்டளைகள் கொடுக்கப்படுவதுபோலத் தெரியவில்லை, ஆனால் எல்லாம் சீராக நடை பெறுகிறது.

6:8 இந்தச் சிறிய உயிரினம் கவனத்தோடு கடுமையாகக் **கோடைகாலத்தில்** வேலைசெய்து **அறுப்புக்காலத்தில் தனக்கு ஆகாரத்தைச் சேர்த்துவைக்கிறது.** இங்கு பிற்காலத் தேவைக் குச் சேர்த்து வைப்பதல்ல, கடின உழைப்பே வலி யுறுத்திக் கூறப்பட்டுள்ளது.

பிற்காலத் தேவைகளுக்காகக் கிறிஸ்தவன் சேமித்து வைக்கவேண்டும் என்று கற்பிப்பதற் காக நாம் இந்தத் திருமறைப் பகுதியைப் பயன் படுத்தக்கூடாது. நாம் பூமியில் செல்வத்தைக் குவிக் கக் கூடாது என்று தடைசெய்யப்பட்டிருக்கிறோம் (மத். 6:19). எறும்புகள் தங்களுடைய பிற்காலத் திற்காகச் சேர்த்து வைக்கின்றன என்பது உண் மையே, கிறிஸ்தவர்களும் தங்களுடைய பிற் காலத்திற்காகச் சேகரிக்க வேண்டும் என்பதும் உண்மையே. ஆனால் அங்கே ஒரு வேறுபாடு இருக்கிறது, எறும்பின் எதிர்காலம் இவ்வுலகில் இருக்கிறது. விசுவாசியின் எதிர்காலமோ விண்ண கத்தில் இருக்கிறது. ஞானமுள்ள கிறிஸ்தவன் தன்னுடைய செல்வத்தை விண்ணில் சேர்த்து வைக்கிறானேயொழிய பூமியில் அல்ல.

6:9 சோம்பேறி தூங்குவதற்கு முடிவில்லாத ஆற்றலைப் பெற்றிருப்பதாகத் தோன்றுகிறது. "காலையில் எழுவது இனிமையானது, ஆனால் படுக்கையில் படுத்திருப்பது அதனினும் இனிமை யானது" என்பதுதான் அவனுடைய தத்துவம். அவன் அறிவிப்பு மணியோசை கேட்கக்கூடாதபடி முழுச்செவிடனாக இருப்பதுபோலத் தோன்று கிறது.

6:10,11 கடைசியாக அவன் தூக்கத்திலிருந்து எழும்போது, "இன்னும் கொஞ்சம் கண்களை மூடிக்கொள்கிறேன், இன்னும் கொஞ்சம் உறங்கு கிறேன், சிறிது நேரத் தூக்கம், சிறிது இளைப் பாறுதல்" என்று சொல்கிறான்.

வீட்டிலிருக்கிற மற்றவர்கள் காத்திருக்க நேரிடும், ஆனால் **தரித்திரம்** காத்திருக்காது. **"அந்நேரத்தில் வறுமை கள்வனைப் போல் வரும், பற்றாக்குறை ஆயுதம் ஏந்தியவை போல் உன்னிடம் வரும்"** (இலகு தமிழ்).

6:12 பன்னிரண்டு முதல் பதினைந்து வரை யிலான வசனங்கள் மோசடி செய்கிற மனித னைக் குறித்து மிகச்சிறப்பாக விவரிக்கின்றன. அவன் கெடுநோக்கத்துடன் ஏமாற்றுகிறவன், அவனுடைய தந்திரமான புன்னகை நயவஞ்ச கமான இருதயத்தை மூடிமறைத்துவிடுகிறது. அவன் உதடுகளில் கள்ளத்தனத்தை ஏந்திச் செல்கிறான்.

6;13,14 அவன் எல்லாவகையான மறைமுகக் குறிப்புகளாலும், கெடுநோக்கத்துடன் கூடிய சைகைகளாலும் தன்னுடைய கூட்டாளிகளுக்குக் கட்டளையிடுகிறான் அல்லது பாதிக்கப்படுகிறவர் களுடைய கவனக்குறைவைப் பயன்படுத்திக் கொள்கிறான். அவன் **தன் கண்களால்** சைகை காட்டி, தன் **கால்களால்** உரசுகிறான் அல்லது தரையைத் தேய்க்கிறான், தன் **விரல்களால்** அழைக்கிறான்.

அவனுடைய இருதயம் பகைமையாலும் முறை கேட்டினாலும் நிறைந்திருக்கிறது. அவன் இடை விடாமல் தீங்கு செய்யத் திட்டமிடுகிறான், **பிரி வினையைத் தூண்டிவிடுகிறான்** (இலகுதமிழ்).

6:15 "அத்தகைய மனிதர்கள் கூடிய விரை வில் பேராபத்தால் சூழ்ந்துகொள்ளப்படுவார்கள், இழப்பீடு செய்ய முடியாதபடி சிதியில் நசுக்கப் படுவார்கள்" (நாக்ஸ்). இதற்கான எடுத்துக்காட் டைக் காண முயற்சி செய்வீர்கள் என்றால், இன் றைய செய்தித்தாளில் அதைக் கண்டுபிடிக்க முடியும்.

6:16 இந்தப் பொல்லாத மனிதனின் குணவியல் புகளின் (வச. 12-15) வருணனைகளை தேவன் வெறுக்கிறார் (வச. 16-19). அவற்றில் முக்கிய மானது பிரிவினையைத் தூண்டிவிடுகிற செயல் (வச. 14 மற்றும் 19 இரண்டையும் ஒப்பிடுக).

"ஆறு காரியங்கள்... ஏழும்.." இவ்விதமான சூத்திரம் அந்தப் பட்டியலில் சில குறிப்பிடப்பட் டுள்ளன, ஆனால் முழுவதும் சொல்லப்பட வில்லை என்று பொருள்படும் எனலாம். அல்லது ஏழாவது அந்தப் பட்டியலில் மிகவும் மோசமான தாக இருக்கக் கூடும்.[9]

6:17 மேட்டிமையான கண் (பார்வை). ஒரு துகள் தன்னையே தெய்வமாக ஆக்கிக்கொள் வதே பெருமை எனப்படும். ஒரு பேரரசரின் பணி விடைக்காரன் கூறியதாவது:

> என்னுடைய எஜமானன் தற்பெருமை கொண்ட முட்டாள் என்பதை என்னால் மறுக்க முடியாது. எல்லாவற்றிலும் அவரே நடுநாயகனாக விளங்க வேண்டுமென்று எண்ணினார். ஒரு பெயர் சூட்டுவிழாவுக்குச் சென்றால், அவரே குழந்தையாக இருக்க வேண்டுமென்று நினைத்தார்; ஒரு திருமண விழாவுக்குச் சென்றால், அவரே மணமகனாக இருக்க வேண்டுமென்று விரும்பினார். ஒரு சாவுக்குச் சென்றால், அவரே பிணமாக இருக்க வேண்டுமென்று விரும்பினார்.[10]

பொய்நாவு. கர்த்தரைப் புகழுவதற்காகவே நாவு படைக்கப்பட்டது. பொய் பேசுதல் அதனுடைய பயன்பாட்டை நெறிபிறழச் செய்வதாகும், அவ்வாறு பொய் பேசுதல் இழி செயலாகும். ஒரு விசுவாசி பொய் கூறுவது எப்போதாகிலும் சரியாக இருக்குமா? இதற்கான விடை, தேவனால் பொய் சொல்ல முடியாது, வேறு எவரும் அவ்வாறு பொய்கூறுவதற்கு அவரால் உரிமை வழங்க முடியாது.

குற்றமற்றவர்களுடைய இரத்தம் சிந்துங்கை. ஒவ்வொரு மனித உயிரும் தேவனுக்கு அளவற்ற மதிப்புடையது. நம்முடைய மீட்புக்காக அவர்தாமே அளவிடமுடியாத விலையைக் கல்வாரியில் செலுத்தியதன் மூலம் அவ்வுண்மையை மெய்ப்பித்திருக்கிறார். அவர் மரண தண்டனையை ஏற்படுத்தி வைத்திருப்பது (ஆதி. 9:6) கொலையைக் குறித்து தேவன் என்ன மனப்பான்மை கொண்டிருக்கிறார் என்பதைப் பிரதிபலிக்கிறது.

6:18 கொடுமையான சூழ்ச்சிகளைத் திட்டமிடும் இருதயம் (இலகு தமிழ்). எப்பொழுதும் தீமையானவற்றைத் திட்டமிடுகிற மனதை இது குறிக்கிறது என்பதில் ஐயமில்லை. இவ்வகைப் பொல்லாத எண்ணங்களில் சிலவற்றைக் கர்த்தராகிய இயேசு மாற்கு 7:21,22 -இல் பட்டியலிட்டுக் காட்டுகிறார்.

தீங்கு செய்வதற்கு விரைந்தோடும் கால்கள். தீங்கானவற்றைத் திட்டமிடுகிற மனதை மட்டும் தேவன் வெறுக்கிறதில்லை, அதை நிறைவேற்ற ஆர்வத்தோடு செல்லுகிற கால்களையும் வெறுக்கிறார்.

6:19 பொய்களைப் பேசும் கள்ளசாட்சி. நீதிமன்றத்தில் எல்லோருக்கும் முன்பாகப் பொய்ச் சாட்சி கூறுவதையே இது குறிக்கிறது. பதினேழாவது வசனத்தில் அன்றாட உரையாடலில் பொய் பேசுவது குறிப்பிடப்பட்டுள்ளது.

சகோதரர்களுக்குள்ளே பிரிவினையைத் தூண்டிவிடுகிற மனிதன் (இலகு தமிழ்). கொலைகாரர், பொய்பேசுகிறவர், பொய்ச்சாட்சிகள் ஆகியோருடன் **சகோதரர்களுக்குள்ளே பிரிவினையைத்** தூண்டிவிடுகிற மனிதனை தேவன் தரம் பிரித்திருப்பது கவனத்தை ஈர்க்கக்கூடியது!

நம்முடைய கர்த்தருக்கு எதிரான விசாரணை மற்றும் சிலுவை மரணம் ஆகியவற்றோடு மேற்கூறப்பட்டுள்ள ஏழு பாவங்களில், எத்தனை பாவங்களை உங்களால் தொடர்புபடுத்திக் காணமுடியும்?

ஒ. விபசாரம் வேசித்தனம் ஆகிய குற்றங்கள் (6:20–7:27)

6:20 விபசாரம் அல்லது உண்மையற்ற தன்மை என்னும் பொருள் மீண்டும் இங்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. மீண்டும் மீண்டும் அது கூறப்பட்டிருப்பது ஏதோ தற்செயலாக நடந்தது அல்ல. இருபதாவது வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிற வாய்பாடு முக்கியமான அறிவுரைகளை அறிமுகப்படுத்துவதற்கென்று பயன்படுத்தப்பட்டுள்ளது.

6:21 இயேசு நாதர் வாழ்ந்த நாட்களிலே இருந்த மனிதர்கள் சிலர், எல்லாவற்றையும் எழுத்தின் படியே செய்யவேண்டும் என்று கற்பித்தவர்கள், தாயத்து போன்ற பொருளைக் கட்டிக்கொள்வதன் மூலம் இந்த வசனத்திற்குக் கீழ்ப்படிந்ததாக எண்ணினார்கள். தோலினால் செய்யப்பட்ட சிறிய பைகளில் வேத பகுதிகள் சில வைக்கப்பட்டிருக்கும். ஜெப நேரங்களில் அந்த யூதர்கள் ஒரு தாயத்தை இடது கையிலும் (**இருதயத்துக்கு** அருகில்) மற்றொன்றை தலையிலும் **(கழுத்திலும்)** அணிந்து வந்தார்கள். இன்றைய நாட்களிலும் அவ்வாறு அணிகிற வழக்கம் சில யூதர்களிடம் இருந்து வருகிறது.

ஆனால் இந்த வசனம் உண்மையாகக் கூறுவது என்னவெனில், நாம் எங்கெல்லாம் செல்கிறோமோ அங்கெல்லாம் நம்மோடு வரும்படியும் நம்மை வழிநடத்தும்படியும் தேவனுடைய வார்த்தையானது நம்முடைய வாழ்க்கையின் ஓர் அம்சமாக விளங்கவேண்டும் என்பதே. வெளியரங்கமாக நாம் தேவனுடைய வசனத்தை மேன்மைப்படுத்துவதல்ல இங்கு எழுப்பப்பட்டுள்ள கேள்வி. மாறாக நாம் இருதயத்திலிருந்து அதற்குக் கீழ்ப்படிவதே முக்கியமானது.

6:22 தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படி வதால் அது நமக்குத் தருவது:

வழிநடத்துதல் - **நீ நடக்கும்போது அவை உனக்கு வழிகாட்டும்.**

பாதுகாப்பு - **நீ படுத்திருக்கும்போது அவை உன்னைப் பாதுகாக்கும்.**

அறிவுரை வழங்குதல் - **நீ விழிக்கும்போது அவை உன்னோடு சம்பாஷிக்கும்.**

6:23 இதற்கு முந்தின வசனத்தை இது விரிவுபடுத்துகிறது:

கட்டளையே விளக்கு - வழிகாட்டுவதற்கு.

வேதமே வெளிச்சம் - பாதுகாப்புக்கு.

நற்கட்டுப்பாட்டின் திருத்தங்களே வாழ்வுக்கு வழி (இலகு தமிழ்) - அறிவுறுத்துதலுக்கு.

6:24,25 நம்பத்தகாதவற்றைச் சரளமாகவும் மயக்கும் வகையிலும் பேசுகிற நாவையுடைய துன்மார்க்கமான **பரத்தையிடத்திலிருந்து** ஆண் களைப் பாதுகாக்கக் கூடிய குறிப்பிடத்தக்க ஊழியத்தை திருவசனம் செய்கிறது.

அவளுடைய இயற்கையான அழகினாலோ, அருகில் வாரும் என்று அழைப்பு விடுக்கும் நோக் குடன் கண்இமைகளைச் சிமிட்டுவதாலோ ஒரு வரும் அகப்பட்டுக் கொள்ளக்கூடாது.

6:26 வெவ்வேறு பிரதிகளின் அடிப்படையில் இந்த வசனத்திற்கான விளக்கம் மாறுபடுகிறது.

NKJV மற்றும் NASB மொழிபெயர்ப்புகளின் படி, ஒரு விலைமகளின் மூலம் ஒரு மனிதன் வறுமைக்குள்ளாவான் (ஒரு ரொட்டித்துண்டின் காய்ந்த பகுதிக்காக அலையும் நிலை), அவன் தன்னுடைய விலையேறப்பெற்ற உயிரை **விப சாரியிடம்** இழக்க நேரிடும். இரண்டு விதமான சிக்கல்களாலும் பெரிய விலையைக் கொடுக்க நேரிடும்.

"ஒரு விலைமகளை ரொட்டித்துண்டு ஒன்றால் பெற முடியும், ஆனால் விபசாரியோ ஒரு மனிதனு டைய உயிரையே வேட்டையாடி விடுவாள்" என்று இவ்வசனத்தை RSV மொழிபெயர்த்துள்ளது. இங்கு விலைகொடுத்து வாங்கப்படக்கூடிய விலை மகளுக்கும், ஒரு மனிதனைத் தனது ஆதிக்கத் துக்குள் முழுவதுமாகக் கொண்டுவருதால் மட் டுமே மனநிறைவு அடைகிற விபசாரிக்கும் இடை யேயுள்ள வேறுபாடு கூறப்பட்டுள்ளது.

6:27,28 வேறொருவனுடைய மனைவியோடு தகாத உறவு வைத்திருப்பது **மடியில் நெருப் பைக்** கொண்டுபோவதற்குச் சமம். **வெந்து போகாமல்** உங்களால் அவ்வாறு கொண்டு போக முடியாது. அது **தழலின் மேல்** நடப்பது போன்றது, உங்களுடைய **கால்கள்** வெந்து போகாமல் அவ்வாறு நடக்க முடியாது. திருவாளர் க்ரி.ச்.பித்ஸ் எச்சரிக்கிறார்:

> ஒழுக்கக் கேட்டில் ஈடுபடுவது முற்றிலும் தவ றான செயலாகும், அதனுடைய விளைவு தன் னையே அழித்துக்கொள்வதாகவும், மனவேத னையும் இகழ்ச்சியும் அடைவதாகவும், வெட் கக்கேடானதாகவும், தவறு இழைக்கப்பட்ட வரின் பொறுக்கவியலா கோபத்தை ஏற்படுத்து வதாகவும் அமையும்.[11]

6:29 ஒருவன் தன்னுடைய அயலகத்தானின் மனைவியிடத்தில் பிரவேசிப்பானாயின், அவன் பிடிக்கப்பட்டு தண்டனை பெறுவது நிச்சயம். நன் னெறி சார்ந்த உலகில் ஒரு கொள்கையுண்டு, அதன்படி இத்தகைய பாவம் நிச்சயமாக வெளிச் சத்திற்கு வரும்; ஒருவேளை இவ்வுலக வாழ்க்கை யின்போது அது வெளிப்படாவிடில், அடுத்த உலகில் அதற்குக் கணக்குக்கொடுக்கப்பட வேண்டும்.

6:30,31 இந்த வசனங்களை இரண்டு வகை யாகப் புரிந்துகொள்ளலாம். KJV மற்றும் NKJV மொழிபெயர்ப்புகளின்படி, ஒருவன் **பசியுற்ற** தனது குடும்பத்துக்காகவும் தனக்காகவும் **திருடி னால்** மக்கள் அவனிடம் ஓரளவு பரிவுகாட்டு வார்கள், ஆனாலும் **அவன் கண்டுபிடிக்கப்படு கிறபோது,** அவன் அதற்குரிய இழப்பீடு செய்ய வேண்டும்; அவ்வாறு இழப்பீடு செய்வதால் அவ னுக்குரிய எல்லாவற்றையும் இழக்க நேரிட் டாலும் அவன் அதைச் செய்தே தீரவேண்டும்.

முப்பதாவது வசனத்தை RSV ஒரு கேள்வி யாக மொழிபெயர்த்து, ஒரு திருடன் தனது பசியை ஆற்றிக்கொள்ளத் திருடினாலும் மக்கள் அவனை இகழுவார்கள், மேலும் அவன் அதற்கான ஒரு இழப்பீடு செய்யவேண்டும் என்று பொருள் தரு கிறது.

பொருள் எதுவாக இருந்தாலும், ஒரு திருடன் தன்னுடைய குற்றத்துக்கு இழப்பீடு செய்ய முடி யும், ஆனால் விபசாரம் செய்தவன் அவன் செய்த பாதிப்பை ஒருக்காலும் முழுமையாக அழித்துத் தூய்மைப்படுத்த முடியாது.

6:32 விபசாரம் பண்ணுகிற எவனும் சமுதாய நிலை, ஆவிக்குரிய நிலை, ஒழுக்கநிலை, ஒரு வேளை உடல்நிலை ஆகியவற்றில் தன்னையே **கெடுத்துப்போடுவதால்** அவன் அறிவற்றவனாக இருக்கிறான் (உபா. 22:22).

6:33 ஒரு கணப்பொழுது வெறியைத் தீர்க்க அவன் **வாதையையும் இலச்சையையும்** அடை கிறான், பெரும்பாலும் சீற்றமடைந்த கணவனின் மூலமாக அந்நிலையை அவன் அடையக் கூடும். அவனுடைய எஞ்சிய வாழ்நாள் முழுவதும் அவனை விடாமல் துரத்துகிற அவமானத்தையும், இழிவையும் அவன் சந்திக்க நேரிடும். (அந்த மனிதன் தன்னுடைய பாவத்துக்காக மனம் வருந்தி, அறிக்கையிட்டு, தன் பாவத்தை விட்டொழிப் பானானால் அவனுக்கு மன்னிப்பு உண்டு.)

6:34 இங்கே ஐயுறவுகொண்ட கணவன் எதிர் பாராத நேரத்தில் திரும்பிவந்து, தன் மனைவி வேறொருவனுடைய தோளில் சாய்ந்துகொண்டி ருப்பதைக் கண்டு, அடைகிற எரிச்சலை நாம் காண்கிறோம். அவன் பழிவாங்கத் தொடங்கு கிறான், எவ்விதமான வேண்டுதலும், சமாதான மும் அவனுடைய கோபத்தைத் தணித்து அமை திப்படுத்தாது.

6:35 தவறு செய்தவன் அதற்காக என்ன கொடுத்தாலும் அது கணவனை அமைதிப்படுத் தாது. அவனுடைய திருமண உடன்படிக்கையில் ஏற்பட்ட மீறுதலுக்குப் பதிலாக என்ன லஞ்சம் கொடுத்தாலும் போதுமான மனஅமைதியைத் தராது.

7:1 இளைஞர்கள் தங்களுடைய வாழ்க் கையை ஒழுக்கக் கேட்டினால் சீரழித்துக்கொள் வதற்கு எதிரான எச்சரிப்பு 7 -ஆவது அதிகாரத்தி லும் தொடருகிறது. ஆவியின் உயிரூட்டம் பெற்ற இந்தக் **கட்டளைகளைப்** பூமிக்குரிய பொருட் செல்வத்தைக் காட்டிலும் மேலாகப் **பத்திரப் படுத்த** வேண்டும்.

7:2 நிறைவான வாழ்வுக்கு தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிதலே பாதையாக விளங்கு கிறது. ஆகவே அதனைக் கண்ணின் மணியைப் போலப் பாதுகாக்க வேண்டும். இந்தச் சொற் றொடருக்கு அனைத்துலக மாதிரி வேதாகம கலைக்களஞ்சியம் கூறுகிற விளக்கம்:

> கண்விழி, உருண்டை வடிவமுடையது, அதன் நடுவில் கண்மணி உள்ளது. கண்விழிக்கு ஏதேனும் சிறிய பாதிப்பு ஏற்படக்கூடிய நிலை ஏற்படுகிறபோது அதன் இமைகள் தானாக மூடி அதனைப் பாதுகாக்கின்றன. அதனுடைய மேலான மதிப்பும், கவனமான பாதுகாப்பும், ஒரு பொருளினுடைய விலையேறப்பெற்ற மதிப்பையும் அதற்குச் செலுத்தப்படக்கூடிய ஆர்வமிக்க பாதுகாப்பையும் குறிக்கும் சின்ன மாக அதனை ஆக்கின.[12]

7:3 தேவனுடைய வார்த்தை நாம் செய்கிற எல்லாவற்றையும் கட்டுப்படுத்த வேண்டும் (**அவற்றை உன் விரல்களில் கட்டி**) என்பதை யும், மேலும் எதிர்க்கேள்வி கேட்கக்கூடாதபடி அதற்குக் கீழ்ப்படிய வேண்டும் (**அவற்றை உன் இருதயப் பலகையில் எழுதிக்கொள்**) என்பதை யும் இந்த வசனம் கவிதை நடையில் கூறுகிறது.

7:4,5 ஒரு சகோதரிக்குக் கொடுக்க வேண்டிய மதிப்பையும் மரியாதையையும் நாம் **ஞானத்துக் குக்** கொடுக்க வேண்டும், அதுபோல ஒரு நெருங் கிய இனத்தாளுக்குக் கொடுக்கவேண்டிய மதிப் பையும் மரியாதையையும் **புத்திக்குக்** கொடுக்க வேண்டும். இப்பகுதியில் ஞானத்திற்கும் கவ னத்தோடு தவிர்க்கப்படவேண்டிய ஒழுக்கமற்ற பெண்ணுக்கும் இடையிலான வேறுபாடு கூறப் பட்டுள்ளது.

ஞானத்தையும் அதனுடைய அறிவுரைகளை யும் பின்பற்றுகிற மனிதர்கள் **விபசாரியினிடத் திலிருந்தும் மயக்கும் வார்த்தையுடைய ஒழுக்கங்கெட்ட பெண்ணிடத்திலிருந்தும்** பாது காக்கப்படுவார்கள் (இலகு தமிழ்). கெட்ட பெண் ணைக் குறிக்க இங்கு இரண்டு சொற்கள் பயன் படுத்தப்பட்டுள்ளன. **விபசாரி** என்பவள் தனது திருமண உறுதிமொழிக்கு உண்மையற்றவள். **ஒழுக்கங்கெட்டவள்** அந்நியப் பெண், துணிந்து தன்னுடைய சொந்த ஆதாயத்துக்காக கீழான செயலைச் செய்கிறவள்.

7:6 ஆறு முதல் இருபத்துமூன்று வரையிலான வசனங்களில், ஒரு விலைமகள் (வேசி) தன்னு டைய தொழிலை எவ்வாறு திறமையுடன் செய் கிறாள் என்பது மிகத் தெளிவாக விவரிக்கப்பட் டுள்ளது; ஓர் இளைஞன் எவ்வாறு அவளுடைய சூழ்ச்சியில் அகப்படுகிறான் என்பது பற்றிய விவர மும் அங்கு கூறப்பட்டுள்ளது. இதனுடைய எழுத் தாளன் பலகணித் திரையின் இடுக்குகளின் வழி யாக அங்கு நடந்த சோகக் காட்சியைக் கண் டான்.

7:7 அறிவற்ற இளைஞன் ஒருவன் எவ்வித நோக்கமுமின்றி நகரத்திலே சுற்றித் திரிகிறான். பெரும்பாலும் அவன் ஒரு நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவனாக இருக்க வேண்டும், ஆனால் இப்பொழுது அவன் நேரத்தை இன்பமாகக் கழிக்க வேண்டும் என்று வெளியே வருகிறான். அவன் "பெரிய இடத்துப் பையனாக" இருப்பதால், அவனுடைய தற்பெருமைகொண்ட நண்பர்கள் அவனை விஞ்ச முடியாது. உண்மையில் அவன் நீண்டகாலமாகப் பாவம் செய்து சீர்கெட்ட

வாழ்க்கை வாழ்கிறவன் அல்லன், அனுபவமற்ற சிற்றூர் வாசி.

7:8,9 இப்பொழுது அவன் சிவப்பு விளக்குப் பகுதிக்குள் நுழைகிறான். அவள் குடியிருக்கும் தெருக்கோடிக்கு வந்தவன் சோம்பேறித்தனமான பாணியில் மெல்ல நடக்கிறான். அதுவே எல்லாப் பிரச்சினைக்கும் காரணமாயிற்று. அவனுக்கு ஏதோ ஆக்கபூர்வமான பயனளிக்கும் வேலை இருந்திருந்தால் அவன் இங்கு வந்திருக்க மாட்டான். அவனுடைய பாதங்கள் சமாதானத்தின் நற்செய்தியாகிய காலணியை அணிந்திருந்தால், நேரத்தை வீணாகக் கழிப்பதற்குச் சமயம் வாய்த்திருக்காது! தேவனுக்கென்று ஒப்புவிக்கப் பட்ட வாழ்க்கையில் பாவத்திலிருந்து விலகியிருக்கக் கூடிய மெய்யான பாதுகாப்பு இருக்கிறது. இதற்கு மாறாக, "சோம்பேறியான கைகள் செய்வதற்கு சாத்தான் சில தீய செயல்களைக் கண்டுபிடித்து வைத்திருக்கிறான்" என்று திருவாளர் ஐசக் வாட்ஸ் கூறியிருப்பது உண்மையே.

அவன் மாலைப்பொழுது முழுவதும் அங்கு நடந்து கொண்டிருக்கிறான் - சூரியன் மறைந்தது அந்திப்பொழுதாயிற்று, இப்பொழுது நள்ளிரவு, இருள் சூழ்ந்த நேரம் - "இங்கே நிச்சயமாக ஓர் அடைகுறி இருக்கிறது, இருளார்ந்த சித்திரத்தில் அந்த எண்ணம் பிரதிபலிக்கிறது. அவ்விளைஞனின் வாழ்க்கையில் இரவு நுழைகிறது, இருளின் ஆழம் அதிகரிக்கிறது" என்கிறார் திருவாளர் பார்னஸ்.

அவன் தீச்சுவாலையை நோக்கிப் பறக்கிற அந்துப் பூச்சியைப் போல இருக்கிறான். பாவம் செய்வதற்கான சோதனையும், பாவம் செய்வதற்கான வாய்ப்பும் பயங்கரமான ஆபத்து நிறைந்த தருணத்தில் ஒன்று சேர்ந்து நெருங்கி வருகின்றன. நமது வாழ்க்கையில் இவையிரண்டும் ஒரு சேர வரக்கூடாது என்று நாம் இடைவிடாமல் மன்றாட வேண்டும்.

7:10 இப்பொழுது வேசி நவீன திரையுலக ஆடை அணிந்தவளாக, சாயத்தைப் பூசிக் கொண்டு, வாசனைப் பொடிகளையும் தைலத்தையும் போட்டுக்கொண்டளாகக் காட்சிதருகிறாள். கவர்ச்சிமிக்க ஆடை ஆபரணங்களை அணிந்திருந்தவளுக்கு உள்ளாகப் புலனுணர்வைத் தூண்டுகிற, இரகசியங்களை மறைத்து வைக்கிற, தந்திரமான இருதயம் இருந்தது.

7:11,12 பண்புகள் நிறைந்த நாணமிக்கப் பெண் அல்ல இவள். இவள் துடுக்கான **வாயாடி,** தீவிரமாகச் செயல்புரிபவள். அவள் தனது இல்லத்தைப் பராமரிப்பதில் இப்படிச் செயல்புரிவதில்லை! அவள் தனது வாடிக்கையாளர்களை நாடி தெருக்களில் சுற்றித்திரிபவள்.

அவள் பெரும்பாலும் எல்லா இடங்களிலும் காணப்படுவாள். **சிலவேளை வெளியிலிருப்பாள், சில வேளை வீதியிலிருப்பாள், சந்துகள்தோறும் பதிவிருப்பாள்**. பாவம் அப்படிப் பட்டதுதான்; அதனைக் கண்டுபிடிப்பது எளிது. நற்செய்தி எளிதில் கண்டடையத்தக்கதாக இருக்க வேண்டும். ஆனால் அது எங்கும் கிடைக்கக் கூடியதாக அதைப் பரப்ப நாம் தவறிவிட்டோம். இது வருத்தத்திற்குரியது.

7:13 அவளுடைய தொழில் திறமையின் முதல் கட்டம் அதிர்ச்சி அளிக்கும் செயலாகும். அவள் அவனிடம் வேகமாக ஓடிச்சென்று, அவனைத் தன்னுடைய கரங்களால் அணைத்து, அவனுக்கு முத்தங்கள் தருகிறாள். ஆஹா! அவளுடைய வியக்கத்தக்க அன்பின் வெளிப்பாடு அவனுடைய கால்களைத் தடுமாறச் செய்தது. அது அன்பல்ல, இச்சை என்பதை அவன் அறியவில்லை.

7:14 அடுத்ததாக, சமய வேடத்தை அணிந்த வளாகப் பேசுகிறாள்: **"சமாதானபலிகள் என் மேல் சுமந்திருந்தன, இன்றைக்குத்தான் என் பொருத்தனைகளை நிறைவேற்றினேன்."** அவன் தன்னுடைய தாயையும், வீட்டின் பெரிய அறையின் மேசையில் வைக்கப்பட்டிருந்த திருமறையையும் தனக்குள்ளே நினைத்துப் பார்க்கிறான், "இந்தப் பெண் நல்ல பெண்ணாகத்தான் இருக்க வேண்டும். இவள் சமயப்பற்றுள்ளவள். தன்னுடைய சமாதானபலியையும் பொருத்தனைகளையும் நிறைவேற்றிய பெண்ணை நான் தவறாக நினைக்கக்கூடாது." சுருக்குக் கயிறு இறுக்குகிறது.

சமாதான பலியில் கவர்ச்சித் திறன் ஒன்று கூடுதலாக இருக்கிறது. அதைச் செலுத்தியவர்கள் அந்த நாளிலோ, அடுத்த நாளிலோ அதை உண்ணவேண்டும் (லேவி. 7:15 -ஆம் வசனம் தொடங்கி வாசிக்கவும்). ஆகவே அவளிடம் நல்ல உணவு மிகுதியாக இருக்கிறது, அதைக் கொண்டு அவள் அவனுக்குப் பெரிய விருந்து அளிக்கப் போகிறாள். ஒரு மனிதனுடைய இருதயத்திற்குள் செல்வதற்கான ஒரு வழி அவனுடைய வயிறுதான் என்று அவள் நம்புகிறாள்.

7:15 அடுத்து, அவள் பலநாட்கள் தேடிவந்த மனிதன் அவன்தான் என்று அவள் நாடகமாடுகிறாள். எப்பேர்ப்பட்ட பொய்! அந்த வழியாக

வந்த முதல் மனிதனை அவள் அழைத்துச் சென்றிருப்பாள். ஆனால் அவன் மிகவும் முக்கிய மானவன் என்பதை நினைத்துப் பார்க்கிறபோது, அது அவனுக்கு எவ்வளவு மனமகிழ்ச்சியைத் தரும், உண்மையாகவே ஒருத்தி தன்னைப் பராட்டுகிறாள், உண்மையாகவே அவள் தன்னி டத்தில் அக்கறை கொண்டிருக்கிறாள்.

7:16,17 இப்பொழுது அவள் தன்னுடைய படுக்கையறையைக் குறித்து வருணித்துத் தன் னுடைய திட்டத்தைக் குறிப்பாக முன்மொழி கிறாள்: **"என் மஞ்சத்தை இரத்தினக் கம்பளங் களாலும், எகிப்துதேசத்து விசித்திரமான மெல்லிய வஸ்திரங்களாலும் சிங்காரித்தேன். என் படுக்கையை வெள்ளைப்போளத்தாலும் சந்தனத்தாலும் இலவங்கப் பட்டையாலும் வாசனை கட்டினேன்."** இங்கு குறிப்பிடப்பட் டுள்ள ஒவ்வொரு பொருளும் அவனுடைய சிற் றின்ப வேட்கையைத் தூண்டிவிடும்படி அமைக் கப்பெற்றிருக்கின்றன. அவனுடைய முகர்வுணர் வும் கூட அயல்நாட்டு வாசனைப் பொருட்களால் சிறைப்பிடிக்கப்பட வேண்டும்.

7:18 இப்பொழுது முகத்திரை கிழிகிறது. அவனைத் தன்னுடன் படுக்கும்படி நேரடியாக அவள் அழைக்கிறாள். கவனமாகத் தெரிந் தெடுக்கப்பட்ட சொற்களாலே, எல்லாம் மிகுதி யான இன்பத்தை அளிக்கக்கூடியவை என்று தெரியப்படுத்துகிறாள்.

7;19,20 வீட்டுக்குச் சொந்தக்காரன், அதாவது அவளுடைய கணவன் **வீட்டில் இல்லை**, நீண்ட நாட்கள் அவன் வரமாட்டான், ஏனென்றால் அவன் வெகுதொலைவு பயணம் சென்றிருக்கிறான் என்று விளக்கிக் கூறி அவள் அவனை நிராயுத பாணியாக்குகிறாள். அவன் இன்னும் அதிக நாட்கள் வரமாட்டான், ஏனெனில் அவன் நிறையப் பணத்தைப் பையில் எடுத்துச் சென்றிருக்கிறான். அவன் பௌர்ணமி நாள்வரை வரமாட்டான் (20 - ஆவது வசனத்தின் பிற்பகுதி NASB மொழி பெயர்ப்பின்படி). 9 -ஆவது வசனத்தல் குறிப் பிடப்பட்டுள்ள இருள் பௌர்ணமி வருவதற்கு இன்னும் சிலநாட்கள் ஆகும் என்பதைக் குறிக் கிறது.

7:21 அவள் கூடுதலாகப் பேசப்பேச அவனு டைய மனத்தடை உருகிப்போகிறது. இன்னும் சற்றுக் கூடுதலான பசப்பு வார்த்தைகளால், அவள் **அவனை இணங்கப் பண்ணினாள்**.

7:22 அவன் அவளோடு அவளுடைய வீட்டுக் குச் செல்லச் சட்டென்று முடிவு செய்கிறான். அவள் பின்னே அவன் மெல்ல நடந்துசென்ற காட்சி நெஞ்சறியாமல் ஒரு காளை அடிக்கப்படு வதற்குச் செல்வதுபோல ஓர் அவலக்காட்சியாக இருந்தது.

கடைசி வசனத்தின் எபிரெய மொழிவாசகம் தெளிவற்று இருக்கிறது. வெவ்வேறு பிரதிகள் வெவ்வேறு வகையாக மொழிபெயர்த்துள்ளன என்பதால் அதனை அறிய முடியும்:

"ஒரு மூடன் தொழுமரத்திலிட்டுத் தண்டிக்கப் படுவதற்காகக் கொண்டுபோகப்படுவது போல" (KJV, NKJV).

"ஒரு மூடன் விலங்கிடப்பட்டு தண்டனைக் குப் போவது போலும்" (A. S. V. தமிழிலும் இது போலவே உள்ளது)

"கண்ணியில் கால்வைக்கும் மானைப் போல" (R. S. V - இலகுதமிழ்).

"ஒரு நாயின் வாயில் மூடிபோட்டு இழுக்கப்படு கிறதுபோல" (மொ.்.பட்)

"குதித்து விளையாடுகிற ஆட்டுக்குட்டியைப் போல" (நாக்ஸ்)

"தண்டிக்கப்படும்படி விலங்கிட்டுக் கொண்டு போகப்படுகிற மூடன் போல" (பெர்க்லே).

ஆனாலும் பொதுவான பொருள் தெளிவாக தெரிகிறது, என்னவெனில் அகப்பட்டுக் கொண்ட வன் தடையில்லாதபடி விலங்கையும் தண்டனை யையும் நோக்கிப் போகிறான்.

7:23 "அம்பு அவன் ஈரலைப் பிளந்தது" என்பதன் பொருள்:

1. முந்தின வசனத்தில் காளை கொல்லப்பட்ட விதம், அதாவது கத்தியானது அதன் குடல் களை ஊடுருவியது.
2. மனிதனுடைய காமவெறி முழுவதும் கொழுந்து விட்டு எரிகிறது.
3. ஒழுக்கக்கேட்டின் காரணமாக அவனுடைய உடலில் ஏற்பட்ட விளைவுகள். இளைஞன் விலைமகளிடம் ஒரு பறவை கண்ணியை நோக்கிப் பறப்பது போலச் செல்கிறான். அதன் காரணமாக அவன் என்ன விலை கொடுக்க நேரிடும் என்பதை அறியாதவனாகச் செல் கிறான் (எ. கா. VD அல்ல து AIDS).

7:24,25 பின்னர் நூலாசிரியன் தனது பிள்ளை கள் கவனத்தோடு **செவிகொடுக்கும்படி** வேண்டு கிறான்! அவர்கள் இப்படிப்பட்ட பெண்களோடு சேர்ந்து பழகாமல் தங்களுடைய **இருதயங்களைக்** காத்துக்கொள்ள வேண்டும். அவளுடைய பாதை

களில் அவர்களுடைய கால்கள் திரியாமல் காத்துக்கொள்ள வேண்டும் என்றும் அவன் எச்சரிக்கிறான்.

7:26,27 அவளால் பாதிக்கப்பட்டவர்களின் பட்டியல் பெரியது. அவள் மிகப்பெரிய சேனையையே காயப்படுத்தினாள் அல்லது கொலை செய்தாள்.

அவளுடைய வீட்டிற்குள் நுழைகிற எவனும் நரகத்திற்குச் செல்கிற அகலமான சாலையில் இருக்கிறான். அவன் **மரண அறையை** நோக்கி நடக்கிறான்.

ஓ. ஞானம் ஆளுருவாக்கப்படுதல் [அதி. 8]

8:1 எட்டாவது அதிகாரம் 7 -ஆவது அதிகாரத்திலிருந்து முற்றிலும் முரண்பட்டது. அங்கே விபசார பெண் மக்களை அழைத்தாள். இங்கு ஞானம் தன்னைப் பின்பற்றும்படி மனிதர்களை அழைக்கிறது. மேலும் அது அவ்வாறு செய்வதற்கான வலிமையான காரணங்களைக் கூறுகிறது. இதற்கு இணையான புதிய ஏற்பாட்டு வேத பகுதியேவான் 7:37, அங்கே மனிதர்களைத் தம்மிடத்தில் வரும்படியும் பானம்பண்ணும்படியும் கிறிஸ்து அழைக்கிறார்.

8:2,3 எங்கு ஞானத்தைக் கண்டடைய முடியும் என்று இந்த வசனங்கள் கூறுகின்றன. அது கண்டடையப்படுவதற்கு ஏதுவாக ஆயத்தமாயிருக்கிற இடங்கள், மனிதர்கள் ஒவ்வொரு நாளும் பயணம் செய்கிற இடங்களே என்று இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

8:4,5 எல்லா வகையான மனிதர்களுக்கும், மதிக்கப்படத்தக்கவர்கள் தாழ்நிலையில் உள்ளவர்கள் அனைவருக்கும் அது அழைப்புவிடுக்கிறது. அது எளியவர்களையும் மூடர்களையும் நோக்கிப் பேசுகிறது. "ஒவ்வொரு மனிதனுக்கும் வழிகாட்டியாகச் செயல்படுகிறது" என்கிறார் கிட்னர்.

8:6-9 ஞானத்தின் போதகத்தின் பண்புகள் அடுத்து விவரிக்கப்பட்டுள்ளன. அது **மேம்பாடான காரியங்கள்.... உத்தம காரியங்கள்... சத்தியம் மற்றும் நீதி** ஆகியவற்றைப் பற்றிப் பேசுகிறது. அதனுடைய உதடுகளிலிருந்து தீயவை வெளிப்படுகிறதில்லை, புரட்டும் விபரீதமும் அங்கு இல்லை. ஓரளவு பகுத்தறிவும் புரிந்துகொள்ளும் ஆற்றலும் உள்ள எவனும் அவை நேர்மையானவை நீதியானவை என்பதை அறிவான்.

8:10,11 ஞானத்தின் அறிவுரைகள் மதிப்பில் ஒப்பிட முடியாதவை. அவை வெள்ளி, பசும்பொன், முத்துகள் மற்றும் மனிதன் உயர்வாக மதிப்பவை, எல்லாவற்றையும் விடக் கூடுதலாக விரும்பப்படத்தக்கவை.

8:12,13 விவேகம் எங்கு குடியிருக்கிறதோ அங்குதான் **ஞானமும்** குடியிருக்கிறது. அவை யிரண்டும் சேர்ந்து செல்கின்றன. உங்களிடத்தில் ஞானம் இருக்குமென்றால், உங்களுக்குத் தெளிவான அறிவும் இருக்கும் வாழ்க்கையின் அனைத்து அம்சங்களையும் நிருவகிக்கக் கூடிய புத்தியையும் நுண்ணறிவையும் ஞானம் தருகிறது.

ஞானம் சேர்ந்து குடியிருக்காத சில விசயங்கள் உள்ளன. அவை ஒழுக்கத்திற்கு எதிரானவை, எல்லாவகையான தீமைகளும் அவற்றில் அடங்கும், ஞானம் அவற்றை வெறுக்கிறது. பெருமை, அகந்தை, தீய நடத்தை அல்லது பொய் பேசுதல் எதுவானாலும் அதை ஞானம் வெறுக்கிறது.

8:14-21 ஞானத்தின் சில பயன்கள் அல்லது பரிசுகள்:

நல்ல **ஆலோசனை** (வச. 14)

நிதானிக்கும் ஆற்றல் (வச. 14)

புத்தி (வச. 14)

சரியானதைச் செய்யவும் தீமையை எதிர்க்கவும் ஒழுக்கத்தின் **வல்லமை** (வச. 14)

தலைவருக்குரிய ஆற்றல் (வச. 15,16)

தீர்ப்புசெலுத்தும் திறமை (வச. 15,16)

பாசமும் தோழமையும் (யோவான் 14:21 - ஐப் பார்க்கவும் - வச. 17)

முழுமனதோடு வருகிறவர்கள் காண்பதற்கு உடனடி அனுமதி (வச. 17)

நிலையான செல்வமும் கனமும் நீதியும் (வச. 18)

பசும்**பொன்னிலும் சுத்த வெள்ளியிலும்** சிறந்த நடத்தை (வச. 19)

நீதி, நேர்மை ஆகியவற்றின் பாதையில் நடத்தி, செல்வத்தைப் பெருமளவில் கொண்டுவருதல் (வச. 20,21).

ஞானத்தைப் பற்றிப் பேசுகிற இந்தத் திருமறைப் பகுதிகள் மிகச்சரியாகக் கர்த்தராகிய இயேசுவுக்குப் பொருந்தக் கூடியவை, ஏனெனில் புதிய ஏற்பாடு அவரை ஞானம் என்று குறிப்பிடுகிறது (மத். 11:19; லூக்கா 11:49; 1 கொரி. 1:24,30; கொலோ. 2:3). வேறு எந்த இடத்திலும் கீழ்க்காணும் வசனங்களைக் காட்டிலும் கூடுதல் தெளிவாகவும் அழகாகவும் இந்தப் பொருத்தம்

காணப்படுகிறதில்லை. கிறிஸ்தவத் திருச்சபை யானது தொடர்ந்து இந்தப் பத்தி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் குறிப்பதாகவே கருதி வந்திருக்கிறது.

"புனிதமான சொல்வன்மை கொண்ட இவ் வுன்னத எடுத்துக்காட்டிலிருந்து" நாம் கிறிஸ்து வைப்பற்றி வேறு என்ன கற்கிறோம்?

8:22 அவருடைய நித்திய உளவாம் தன்மை: **"கர்த்தர் தமது கிரியைகளுக்கு முன் பூர்வ முதல் என்னைத் தமது வழியின் ஆதியாகக் கொண்டிருந்தார்."** "கொண்டிருந்தார்" என்னும் சொல் கிறிஸ்துவுக்கு ஏதோ தொடக்கம் இருந் தது என்று சுட்டிக்காட்டுவதாக நாம் புரிந்து கொள்ளக்கூடாது. தேவன் குணநலன் இல்லா மல் ஒருக்காலும் இருந்ததில்லை அல்லது ஞானம் என்னும் இயல்பு இல்லாமல் அவர் இருந்த தில்லை. அவருடைய குமாரனுடைய ஆளுமை இல்லாமலும் அவர் இருந்ததில்லை. இந்த வசனத்திற்கான பொருளும் யோவான் 1:1 -இன் பொருளும் மிகத் துல்லியமாக ஒன்றாகவே இருக்கிறது: "ஆதியிலே... அந்த வார்த்தை தேவ னிடத்திலிருந்தது."

8:23 அவருடைய நியமனம் நித்தியம் முதல் இருக்கிறது. **"நியமிக்கப்பட்டேன்"** (இலகு தமிழ்) என்னும் சொல் அபிஷேகம் பண்ணப்பட்டேன் என்னும் பொருளையும் கொண்டிருக்கிறது (இந் தச் சொல் இந்திய வேதாகமச் சங்க வேதத்தில் அபிஷேகம்பண்ணப்பட்டேன் என்றே காணப்படு கிறது). படைப்புக்கு வெகு காலத்துக்கு முன்னர் அவர் இஸ்ரவேலின் மேசியாவாகவும், உலக ரட்சகராகவும் நியமிக்கப்பட்டார்.

8:24-26 அவர் என்றென்றும் இருக்கிறார். **ஜநிப்பிக்கப்பட்டேன்** அல்லது பிறப்பிக்கப்பட் டேன் (இலகு தமிழ்) என்னும் சொல் அவர் ஏதோ வொரு சமயத்தில் படைக்கப்பட்டார் என்றோ அவ ருக்கு ஒரு தொடக்கம் இருந்தது என்றோ பொரு ளாகாது. குமாரன் என்றென்றும் இருக்கிறவர், அவருடைய ஆளுமை திருத்தந்தையாகிய தேவ னுடைய ஆளுமையிலிருந்து தனி வேறுபட்டது என்பனவற்றைக் கவிதை நடையில் இச்சொற்கள் விவரிக்கின்றன.

மூல ஆதாரமான **மண்ணின் திரள்** அல்லது புழுதி என்பது உலகத்தின் தொடக்கத்தைக் குறிக்கிறது.

8:27-29 படைப்பின்போது அவருடைய சமு கம். வானங்கள் நிலத்திற்கும் கடலுக்கும் மேலாக விரிக்கப்பட்டபோது, மேகங்கள் உரு வாக்கப்பட்டபோது, சுனைகளும் **ஊற்றுகளும்** நீரைப்பீறிட்டு வெளியேற்றிய தொடக்கத்தில் அவர் அங்கே இருந்தார். பெருங்கடல்களின் எல்லைகள் குறிக்கப்பட்டபோது, அதாவது அந் தக் குறிக்கப்பட்ட எல்லைகளை நீரானது தாண் டக்கூடாது என்று கட்டளையிட்டபோது அவர் அங்கே இருந்தார். பூமியின் அஸ்திபாரங்கள் நிலைப்படுத்தப்பட்டபோது, வெளியில் காட்சி தரக்கூடிய பூமியின் மேல்பகுதியும் அதனைத் தாங்கும் உட்புறக் கட்டுமானம் உட்பட யாவும் படைக்கப்பட்டபோது அவர் அங்கே இருந்தார்.

8:30 படைப்பில் அவருடைய செயல்பாடு. கர்த்தராகிய இயேசு படைப்பின் செயற்பிரதிநிதி யாக இருந்தார் என்பதை நாம் இங்கு கற்கிறோம். முப்பதாவது வசனத்தின் முற்பகுதியை NKJV மொழிபெயர்ப்பு மிகச் சரியாகத் தந்திருக்கிறது. **"அப்பொழுது நான் அவர் அருகில் ஒரு திறமை வாய்ந்த சிற்பியாக இருந்தேன்"** (இலகு தமிழ்). (**செல்லப் பிள்ளையாக இருந்தேன்** என்று பழைய மொழிபெயர்ப்பு கூறுகிறது.) இலகு தமிழ் மொழிபெயர்ப்பு யோவான் 1:3; கொலோசெயர் 1;16 மற்றும் எபிரெயர் 1:2 ஆகிய வசனங்களோடு இசைவாயிருக்கிறது.

8:30 (நடுப்பகுதி) **தேவனுடைய நேசமும் மனமகிழ்ச்சியுமாக** அவர் இருந்த நிலை. திருத்தந்தை தமது குமாரனிடம் கொண்டிருந்த அளவற்ற நித்திய அன்பையும், அவர் தமது குமாரனைப் பாவிகளுக்காக மரணமடையும்படி பின்னர் அனுப்பவிருந்தார் என்பதையும் நாம் எண்ணிப் பார்க்கிறபோது நம்முடைய வியப்பு மென்மேலும் அதிகரிக்கிறது.

8:30 (பிற்பகுதி) திருத்தந்தையின் முன்னிலை யில் அவர் பெற்றிருந்த தனிப்பட்ட மனமகிழ்ச்சி. இவ்வுண்மை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையைப் பன்மடங்கு பெரிதுபடுத்திக்காட்டு கிறது - தூய்மையும் நிறைவும் கொண்ட மன மகிழ்ச்சியின் காட்சியே திருத்தந்தையின் முன் னிலை. அங்கிருந்து அவமானம் துக்கம் பாடுகள் நிறைந்த இந்தக் காட்டுக்குள் வருகைபுரிந்தார்.

8:31 மக்கள் வாழும் **பூவுலகில்** அவருடைய **மகிழ்ச்சி**. இத்தனை பெரிய பிரபஞ்சத்தில், ஒரு துகள் போன்ற பூமி என்னும் கோளின்மேல் அவர் அக்கறை கொண்டிருப்பது வியக்கத்தக்கது.

மனுமக்களிடத்தில் அவர் கொண்டிருந்த சிறப்பான **மகிழ்ச்சி**. கலகம் செய்து எதிர்த்து நிற் கும் மனித இனத்தின்மேல் அவர் நேசம் கொண்டி ருக்கிறார் என்பது இறுதி வியப்பு.

இருபத்திரண்டு முதல் முப்பத்தொன்று வரை யிலான வசனங்களின் அடிப்படையில் திருவாளர் வில்லியம் கௌபர் இந்த மேதகு கவிதையை நமக்காக விட்டுச் சென்றிருக்கிறார்:

மாபெரும் மலைகள் சிறுசிறு குன்றுகள்
ஓங்கிய மரங்கள் நிறைந்த காடுகள்
வற்றிடா நீரினை வழங்கிடும் சுனைகள்
விலங்குகள் தாகத்தைத் தணித்திடும் ஓடைகள்
இறைவன் யாவும் படைத்திடும் முன்னர்
அநாதி முதலாய் "இருக்கிறேன்" என்றவர்
அவருடன் இருக்கிறார் மகிழ்ச்சியால் நிறைந்து
அவரது திருப்பெயர் ஞானம் என்பதே!

மனிதர்கள் தங்கிடும் கூடாரம் போலவே
எட்டாத உயரத்தில் வானங்கள் விரித்தார்
பெருங்கடல் ஆழத்தில் அளவிடாப் பெருவெள்ளம்
அமைதியா யிருக்க எல்லையை வகுத்தார்
அதனதன் இடத்தில் அளவுடன் வைத்தார்
இதையெலாம் இறைவன் செய்தநல் நேரத்தில்
அவருடன் இருந்தவர் அன்பின் மைந்தன்
பூவுலக மனிதர்கள் அன்பரின் மகிழ்ச்சி!

புழுதிகள் போன்ற மனுக்குலம் மீதினில்
பழுதிலா அன்பைப் பாசமாய்ப் பொழிந்தார்
வஞ்சகரைத் தேடியே பூவுலகு வந்தார்
மரத்தினில் ஏற்றி ஆணியால் அடித்தனர்.
அறியாத புதிரென வியந்து நிற்கையில்
அறிந்திடச் செய்தார் தெய்வீக அன்பென
இடிபோன்ற முழக்கம் வானத்தில் தொனித்தது
"பாவியே அறிந்திடு, நான் உந்தன் சொந்தம்!

8:32-36 ஞானத்தின் அழைப்புக்கு மனிதனு டைய பதிற்செயலைப் பொருத்து நிகழப்போகிற நித்திய விளைவுகள் இந்தக் கடைசிப் பத்தியில் முன்மொழியப்பட்டுள்ளன. ஞானத்தின் அறிவு ரைக்குச் **செவி கொடுத்து** அதன் **வழியில்** நடக் கிறவர்கள்மேல் ஆசிர்வாதம் தங்கும். அதன் வாசற்படியில் நித்தம் விழித்திருந்து, அதன் கத வருகே காத்திருப்பவர்களுக்கு அது மகிழ்ச்சி யைத் தருவதாக வாக்குறுதி கொடுத்துள்ளது. அதைக் கண்டடைகிறவர்களுக்கு வாழ்வைத் தருவதாகவும் தெய்வீகத் தயவை அருளுவதாக வும் அது கூறுகிறது. ஆனால் அதைப் பெறாத வர்கள் தங்களுடைய சொந்த வாழ்வை இழந்து மரணமடைவார்கள்.

கடைசி இரண்டு வசனங்களையும் கிறிஸ்து வுக்குப் பொருத்திப்பாருங்கள். அவரைக் கண்ட டைகிறவன் எவனும் நித்திய வாழ்வைப் பெறு கிறான், தேவனிடத்தில் நிறைவான தயவைப் பெறுகிறான் (யோவான் 8:51; 17:3; எபே. 1:6; 1 யோவான் 5:12 - ஆகிய வசனங்களைக் காண்க). ஆனால் அவரைக் காணாதவன் தன்னைக் கெடுத்துக்கொள்கிறான்; அவரை **வெறுக்கிற வன் மரணத்தை விரும்புகிறான்** (யோவான் 3:36).

ஒள. ஞானத்தினிடத்திலிருந்தும், மதியீனத் திடத்திலிருந்தும் வரும் அழைப்பு [9:1-18]

9:1 இங்கு ஞானம் தன் வீட்டைக் கட்டி, தன்னு டைய அழைப்புக்குத் தக்க பதிற்செயல் புரிவோ ருக்குப் பெரிய விருந்தொன்றை ஆயத்தம் செய் திருக்கிறது. ஞானம் தன் விருந்தினருக்கு தரு கின்ற மகிழ்ச்சி, ஐக்கியம், மனநிறைவு ஆகிய வற்றிற்கு மிகப்பொருத்தமான சித்திரமாக விருந்து காணப்படுகிறது.

ஏழு தூண்கள் என்பதற்குப் பல்வேறு விளக் கங்கள் கூறப்பட்டுள்ளன. சில விரிவுரையாளர் கள் ஏசாயா 11:2 -ஆம் வசனத்தை நம்மிடம் குறித் துக் காட்டுகிறார்கள், மேசியாவின் மேல் தங்கின பரிசுத்த ஆவியானவரின் ஏழு வரங்களே அவை என்று அவர்கள் கூறுகிறார்கள்; ஆனால் உண் மையில் அங்கே ஆறு மட்டுமே தெளிவாகக் குறிப் பிடப்பட்டுள்ளன. இதற்கு மாற்றாகக் கொடுக்கப் படுகிற விளக்கம் யாக்கோபு 3:17 -இல் காணப்படு கிறது. அங்கு பரத்திலிருந்து வருகிற ஞானம் என்று விவரிக்கப்பட்டுள்ள விசயங்கள் (1) சுத்தம், (2) சமாதானம், (3) சாந்தம், (4) இணக் கம், (5) இரக்கம் நற்கனி ஆகியவற்றின் நிறைவு, (6) பட்சபாதமின்மை, (7) மாயமின்மை.

9:2,3 இறைச்சியும் **திராட்சைரசமும்** அள வில்லாமல் பரிமாறப்படுகின்றன. மேசை உண வுப் பொருட்களால் நிறைந்திருக்கிறது. **பட்டணத் தின் உயர்ந்த மேடைகளின் மேல் நின்று** அழைப்பு விடுக்கும்படி விருந்தளிக்கும் அரசி (ஞானம்) தனது **பணிப்பெண்களை** அனுப்புகிறாள். பணிப் பெண்களுக்கு விடுக்கப்பட்ட கட்டளை தேவனு டைய ஞானத்தை அறிந்தவர்களாகிய நமக்கு ஒன்றை நினைவுபடுத்தவேண்டும். கர்த்தராகிய இயேசுவே தேவஞானம், அந்த ஞானத்தை மற்ற வரிடம் பகிர்ந்தளிக்க வேண்டும், அவர்களை வரும் படி அழைத்து, அவர்களே அதைக் கண்டடைந்து மகிழ்ந்து அனுபவிக்கும்படி கூறவேண்டும்.

9:4-6 அந்த அழைப்பில் காணப்படும் அனைத் துச் சொற்களும் அப்படியே இங்கு தரப்பட்டுள் ளன. அது எளியவர்களுக்கு, அதாவது, எளிதில் ஏற்கும் இயல்புள்ளவர்களுக்கு விடுக்கப்படு

கிறது. அவர்கள் எளிதில் வழிவிலகிப் போகக்கூடி யவர்கள், ஆகவே அவர்களுக்கு உதவியும் வழிகாட்டுதலும் தேவை. அது புத்திமான்களுக் குக் கொடுக்கப்படவில்லை, ஏனெனில் அவர்கள் ஏற்கனவே அரண்மனைக்குள் இருக்கிறார்கள்.

உணவுப் பட்டியலில் மிகச்சிறந்த உணவுப் பொருட்கள் உள்ளன, நேர்த்தியான திராட்சைப் பிழிவு இருக்கிறது, அதனை ஞானமே ஆயத்தப் படுத்தி வைத்திருக்கிறது.

அங்கு வருகிறவர்கள் பேதமையை விட்டு விலகவேண்டும் என்றும் அவர்களுடைய சொந்த வாழ்க்கையில் ஒழுக்கத்திற்கேற்ப மாற்றம் அடைந் திருக்க வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படு கிறார்கள்.

9:7-9 இங்கு தொடர்ச்சிவிட்டுப் போனதாகத் தோன்றுகிறது. ஏளனம் செய்கிறவர்கள் ஏன் அழைக்கப்படவில்லை அல்லது ஞானத்தின் விருந்தினர்கள் ஏன் அவர்களைப் புறக்கணிக்க வேண்டும் என்று இந்த வசனங்கள் விளக்கம் தருகின்றன போலும்.

பரியாசக்காரனைக் கண்டிக்கிற நீங்கள், அதற்காக அவமதிக்கப்படுவீர்கள். நீங்கள் **துன்மார்க்கனைக் கண்டித்தால்**, உங்கள் மீது பாய்ந்து அவன் உங்களைத் தாக்குவான்.

ஒரு மனிதன் கடிந்துகொள்ளுதலை எவ்வாறு எதிர்கொள்கிறான் என்பதே அவனுடைய குண நலனுக்கு அளவுகோலாக இருக்கிறது. **பரியாசக் காரன்** உங்களை வெறுக்கிறான், அதே நேரத் தில் ஞானமுள்ளவன் உங்களுக்கு நன்றி கூறு கிறான். பெற்றோர், ஆசிரியர், எஜமானன், நண் பன் உங்களைக் கண்டிக்கும்போது நீங்கள் எவ்வாறு பதிற்செயல் புரிகிறீர்கள்?

குறைகூறுகிறபோது ஞானமுள்ளவன் அதனை வெறுத்துப் புறக்கணிக்காமல், இருதயத்தில் ஏற்றவனாக அதிக ஞானமுடையவனாகிறான். **நீதி மான்** பயனுள்ள **உபதேசங்களால்** தனது அறி வைப் பெருக்கி அதிக பயனடைகிறான்.

9:10 கர்த்தருக்குப் பயப்படுதலே மெய்யான **ஞானத்தின்** தொடக்கம் என்று மீண்டும் நாம் நினைவுபடுத்தப்படுகிறோம். "தேவனை அறிவதே ஞானம் என்பதன் பொருள்" (மொ.ம்.பட்). ஏனெ னில் அவன் **பரிசுத்தரை** அறிந்திருக்கிறான்; ஒரு மெய்யான விசுவாசி, பிறர் கால் நுனியில் நின்று பார்க்கிறதைக் காட்டிலும் முழங்காலில் நின்று அதிகமானவற்றைக் காணமுடியும்.

பரிசுத்தர் (பன்மை), மேதகைமை, கம்பீரம், நற்பண்புகள் எல்லாவற்றையும் உள்ளடக்கிய நிலையில் பன்மைச் சொல் பயன்படுத்தப்பட்டிருக் கிறது என்று தோன்றுகிறது. அல்லது தேவன் என்பதற்கான பன்மைச் சொல்லாகிய எலோஹிம் சற்று மாற்றி எழுதப்பட்டது எனலாம் (புரிந்து கொள்ளப்பட்டுள்ளது).

9;11 ஞானம் நாட்களைப் பெருக்கவும் ஆண்டு களைஅதிகரிக்கவும் வழிநடத்தும். அது நீண்ட வாழ்நாட் காலத்தை மட்டுமின்றி, நல்ல பய னுள்ள வாழ்க்கையைத் தருகிறது, அதற்கும் மேலாக முடிவுறாத வாழ்வைத் தருகிறது.

9:12 ஒரு மனிதனுடைய சொந்த நலனுக்கு **ஞானியாக** இருப்பது நல்லது; அவன் தன் ஞானத்தால் மற்ற எல்லோரைக் காட்டிலும் அதி கப் பயன் அடைகிறான். பரியாசக்காரனாக இருக்க விரும்பினால் அவன் தெரிந்து கொள்வ தன் அடிப்படையில் தண்டனை அடைவான். அது மட்டுமின்றி மற்றவர்களும் அதற்குள்ளாக இழுக் கப்படுவார்கள் என்பது திண்ணம். இறுதியில் ஒவ் வொருவனும் அவனவனுடைய தெரிந்து கொள்வ தன்படி வெற்றியையோ தோல்வியையோ அடைய வேண்டும்.

9:13 ஞானத்தின் விருந்தை வேண்டாமென்று மறுத்தவர்கள், மதியீனத்தின் உபவாசத்தில் முக் கிய பிரமுகர்களாக இருப்பார்கள். ஞானத்தின் நேர்த்தியான வரவேற்பும் (வச. 1-6), மதியீனத் தின் அற்பமான பேச்சும் (வச. 13-18) ஐயமற்ற வகையில் முரண்பட்டவை என்று இங்கு தெளிவு படுத்தப்பட்டிருப்பதைக் கவனியுங்கள்.

மதியற்ற பெண்ணின் வாய் நீளம், தலையோ வெறுமை, அவள் ஆணவம் மிக்கவள்.

9:14-16 அவள் தன்னுடைய முன்புற வாசற் படிக்கு வெளியே அல்லது எல்லோரும் காணக் கூடியபடி பட்டணத்தில் உயரமான இடத்தில் அமர்ந்திருக்கிறாள். நற்பண்புமிக்க பெண்ணாக அல்ல, வெட்கமில்லாத விலைமகள் போல அவள் அமர்ந்திருக்கிறாள்.

எளிதில் வழிநடத்தப்படக்கூடிய அறிவற்ற பேதைகளை மயக்கும்படி அவள் அழைக்கிறாள்.

9:17 அவளுடைய பேச்சு இதுவே: **"திருட்டுத் தண்ணீர் தித்திக்கும், அந்தரங்கரத்தில் புசிக்கும் அப்பம் இன்பமாயிருக்கும்."** அவள் கூறுவதன் அடிப்படைப் பொருள், தகாத பாலுறவு கவர்ச்சிகர மானது, ஏனெனில் அது தடைசெய்யப்பட்டதுமன்றி அதில் மறைமுகமான சதிச்செயலும் உள்ளது.

ஒரு குறிப்பிட்ட செயலைச் செய்வதற்கு மனுக் குலம் தடைசெய்யப்பட்டுள்ளபோது, அந்தத்

தடையே அதைச் செய்வதற்கான விருப்பத்தை இன்னும் அதிகமாகத் தூண்டிவிடுகிறது (ரோமர் 7:7,8 -ஆகிய வசனங்களைக் காண்க). விலை மகள் மனிதனுக்குள்ளாக இருக்கிற இழிந்த உள்ளுணர்வுகளைத் தூண்டிவிடுகிறாள். எளிதில் ஏமாறுகிறவனையும், எளிதில் உடன்படுகிறவனையும் அவள் உள்ளே வரும்படி அழைக்கிறாள்.

9:18 ஆனால் அவள் கதையின் மறுபக்கத்தை அவர்களிடம் சொல்லவில்லை. ஒரு கணப் பொழுது இன்பத்தை நாடிச்செல்பவர்கள், வாழ் நாள் முழுவதும் செய்த தவறுக்காக மனஉலைவு அடைந்து, நித்தியத்தை **மரணபாதாளத்தில்** கழிப்பார்கள்.

சிலவேளைகளில் இந்த உலகமும்கூட இந்த வசனத்தில் கூறப்பட்டுள்ள சத்தியத்தை அறிந்திருக்கிறது. முந்தின நூற்றாண்டில் புகழ்பெற்றிருந்த பிரெஞ்ச் பாடல் "இச்சையைக்" குறித்து உலகம் கருதுகிறதை நன்கு எடுத்துரைக்கிறது:

இச்சை தரும் இன்பம் ஓரிரவு இருக்கும்

இச்சை தரும் துன்பம் என்றென்றும் நிலைக்கும்.[13]

3. நடைமுறை நன்னடத்தை பற்றிய சாலொமோனின் நீதிமொழிகள் (10:1-22:16)

நீதிமொழிகள் நூலில் இதுவரைக்கும் தெளிவான கருத்தோட்டம் தொடர்ச்சியாக இருந்தது, மேலும் வசனங்களுக்கிடையே தொடர்பும் இருந்தது. ஒரு குறிப்பிட்ட கருத்து ஒரு பத்தியில் என்பது போன்று பல கருத்துகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. 10:1 முதல் 22:16 வரையிலான வசனங்களில் ஒன்றன்பின் ஒன்றாக 375 நீதிமொழிகள் உள்ளன. ஒன்று மற்றொன்றிலிருந்து வேறுபட்டு, தனிதன்மை வாய்ந்ததாக இருக்கிறது. பெரும் பாலானவை ஒன்றுக்கொன்று எதிரான அறிக்கைகளாக உள்ளன; அவற்றிற்கிடையே "ஆனால்" என்னும் சொல் இடம்பெற்று அவற்றை வேறுபடுத்திக் காட்டுகிறது. சாலொமோன் என்னும் எபிரெயப் பெயரின் எண்ணிக்கை 375, இந்தப் பகுதியிலுள்ள **சாலொமோனின் நீதிமொழிகளின்** எண்ணிக்கையும் 375, இவையிரண்டும் ஒரே எண்ணிக்கையாக அமைந்திருப்பது தற்செயல் நிகழ்வுப் பொருத்தமன்று.

அ. நீதிமான்கள், துன்மார்க்கர் இவர்களுடைய வாழ்க்கைப்பாணி வேறுபடுத்திக் காட்டப்படுதல் (10:1-15:33)

10:1 ஒரு மகனுடைய நடத்தை நேரடியாக அவனுடைய பெற்றோருடைய உணர்ச்சிபூர்வமான உடல்நலத்தில் தாக்கத்தை உண்டுபண்ணுகிறது. ஒவ்வொரு மகனும் பவுலாகவோ **(ஞான முள்ள மகன்)** யூதாசாகவோ **(மூடனாகிய மகன்)** மாறக்கூடும். அதன்விளைவு மகிழ்ச்சியையோ துக்கத்தையோ உண்டுபண்ணும் என்பதே அதன் பொருள்.

10:2 முறைகேடாகச் சேர்த்த பணம் நீண்ட காலம் இருக்காது; அது விரைவில் மறைந்து போகும். மரணத் தருணத்தை அது ஒரு கணப் பொழுது கூட ஒத்திவைக்காது. இதற்கு மாறாக **நீதி** குறைந்தது இரண்டு வழிகளில் **மரணத் துக்குத் தப்புவிக்கும்**. அது ஒரு மனிதனை அவனுடைய பாவ வாழ்க்கையின் ஆபத்திலிருந்து பாதுகாக்கும். அவன் புதிய பிறப்பு அடைந்திருக்கிறான் என்பதற்கு நீதி வெளியரங்கமான சான்றாக விளங்கி, அவன் நித்திய வாழ்வைப் பெற்றிருக்கிறான் என்பதைக் காட்டுகிறது.

10:3 தேவன் **நீதிமான்களைப் பசியால் வருந்தவிடார்** என்பது பொதுவான கருத்தாக இருக்கிறது. "நான் இளைஞனாயிருந்தேன், முதிர்வயதுள்ளவனுமானேன்; ஆனாலும் நீதிமான் கைவிடப்பட்டதையும், அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்து திரிகிறதையும் நான் காணவில்லை" என்று தாவீது கூறினான் (சங். 37:25). "ஆனால், அவர் துன்மார்க்கனின் அளவுகடந்த பேராசையைத் தடுத்து ஏமாற்றமடையச் செய்வார்" என்பதும் அதற்கு இணையான உண்மையாக இருக்கிறது (R. S. V). விரும்பியதைப் பெற்றுவிடுவோம் என்று அவர்கள் தாவிப்பிடிக்க நினைக்கும்போது அவர்களுக்கு அது அகப்படாமல் தப்பிச்சென்று விடுகிறது.

10:4 கவனமற்று வாழ்கிற சோம்பேறி வறுமையை அறுவடை செய்வான். கடுமையாக உழைக்கிறவன் மற்றும் ஆற்றல் மிக்கவன் வெற்றிபெறுகிறான்.

10:5 கோடைக்காலமும் அறுவடைக்காலமும். ஒருவன் நிலத்தை உழுது, விதைகளை விதைத்து, பயிர்வளர்வதற்கான எல்லா வேலையையும் செய்துவிட்டு விளைந்த பயிரை அறுவடை செய்வதற்கான நேரம் வருகிற போது உறங்குவானானால் அவன் அறிவற்றவன். இயேசுநாதர் தமது எல்லாச் சீடர்களிடமும், "இதோ, வயல்நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள்" என்று கூறுகிறார் (யோவான் 4:35).

10:6 அறுவடைத் தொழிலின் விதி, நாம் எதை விதைக்கிறோமோ அதையே அறுப்போம் என்

பதே. நாம் நேர்மையான வாழ்க்கையை விதைத் தோமென்றால், நமக்கு தேவனுடைய ஆசிர் வாதங்களும், உடன் மனிதர்களுடைய வாழ்த் தும் கிடைக்கும். நாம் இளமைப் பருவத்துக்குரிய இழி நடத்தைகளை விதைத்தால், **கொடுமை யால்** நம்முடைய வாய் அடைக்கப்படும். இதுவே ஆமானுக்கு ஏற்பட்டது. அவனுடைய வாய் மூடப் பட்டு கொடூர மரணத்தை அடையும்படி கொண்டு போகப்பட்டான் (எஸ்தர் 7:8-10).

10:7 தூய வாழ்வு, அவ்வாறு வாழ்ந்த மனிதன் இறந்துபோன பிறகும் நீண்ட காலம் நினைவுகூரப் படுவான். **துன்மார்க்கனுடைய பேரோ** துர்நாற் றத்தை வெளிப்படுத்தும், அது நற்கந்தத்தை உண்டுபண்ணுவதில்லை. மனிதர்கள் இன்னமும் தங்களுடைய பிள்ளைகளை யூதாஸ் என்று அழைக்காமல் பவுல் என்றே அழைப்பார்கள்!

10:8 ஞானமுள்ள இருதயமுடையவன் **கட்ட ளைகளை ஏற்றுக்கொள்கிறான்**, அதாவது ஆரோக்கியமான அறிவுரைகளுக்குச் செவி சாய்க்க அவன் விருப்பம் கொண்டிருக்கிறான். கற்பதற்கும் கீழ்ப்படிகிறதற்கும் விருப்பமற்ற வனாக வாய்கிழியப் பேசும் **மூடன்** அழிவை நோக்கிக் கீழே விழத் தள்ளப்படுவான்.

10:9 நேர்மையான வாழ்க்கையில் பாதுகாப்பு உள்ளது, ஆபத்து ஏற்படுவதில்லை. ஆனால் வஞ்சகத்தின்மேல் கட்டப்படும் வாழ்க்கை வெளி யரங்கமாகி எல்லோராலும் அறியப்படும்.

10:10 இங்கு சொல்லப்பட்டுள்ள வேறுபாடு RSV மொழிபெயர்ப்பைப் பின்பற்றினால் தெளி வாகத் தெரியும். "விஷமத்தனமாய் கண்சிமிட்டு கிறவன் துயரத்தை உண்டாக்குகிறான். ஆனால் துணிவுடன் கண்டிக்கிறவன் சமாதானத்தை உண்டுபண்ணுவான்." கண் சிமிட்டுதல் தட்டிக் கழிப்பதும் தந்திரமானதுமான செயலைக் குறிப் பாய்த் தெரிவிக்கிறது. இத்தகைய சூழ்ச்சி வெளி யரங்கமாகக் கண்டிக்கப்படுகிறபோது துக்கம் நீங்கி சமாதானம் ஏற்படுகிறது.

10:11 நீதிமானுடைய வாய் வாழ்வின் ஊற்று, அங்கிருந்து அறிவுரை, ஆறுதல், ஆலோசனை அடங்கிய சொற்கள் வெளிப்படுகின்றன. துன் மார்க்கனுடைய வாய் கொடுமையாலும் பகைமை யாலும் பேசாதபடி அடைக்கப்படும்.

10:12 மன்னிப்பதற்கும் மறப்பதற்கும் பகை மையுள்ளம் கொண்ட ஆவி இணங்குவதில்லை. பழைய மனக்கசப்புகள் மற்றும் சச்சரவுகள் ஆகிய வற்றை மீண்டும் நினைவுபடுத்தி விவாதிக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்துகிறது. பிறரு டைய தவறுகள் குற்றங்கள் ஆகியவற்றை இரக சியம் என்னும் திரையால் **அன்புள்ள** இருதயம் மூடுகிறது. இந்தத் தவறுகளும் குற்றங்களும் அறிக்கை செய்யப்பட்டு விட்டொழிக்கப்பட்டி ருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. ஆனால் அவற்றைக் குறித்து அன்பு புறம்பேசித் திரிகிற தில்லை, அவற்றைக் குறித்து எண்ணி உள்ளம் கொதிப்பதுமில்லை.

10:13 ஒரு புத்திமானின் உரையாடல் பிற ருக்கு நன்மை பயக்கும். மூடன் வேறு எவருக்கும் உதவிபுரிகிறதில்லை, மாறாக அவன் தன்மீது தண்டனையை வருவித்துக்கொள்வதில் மட் டுமே வெற்றிபெறுகிறான்.

10:14 ஞானமுள்ள மனிதர்கள் **அறிவை** மதித்து, தக்க தருணத்தில் பயன்படுத்துவதற் கென்று **சேர்த்து வைக்கிறார்கள்**. "அவன் சரியான நேரத்தில் சரியான இடத்தில் சரியான நபர்களிடத்தில் பேசுவதற்கென்று தான் பேச வேண்டியதை ஒதுக்கி வைக்கிறான்" என்று எழுதுகிறார் திருவாளர் பார்னஸ் (மத். 7:6 -ஆம் வசனத்துடன் ஒப்பிடுக. ஆனால் உளறுவாய் மூடன் அடுத்து என்ன சொல்லப்போகிறான் என் பதை நீங்கள் ஒருபோதும் அறியமாட்டீர்கள். அவன் எப்பொழுதும் தனக்கும் மற்றவர்களுக்கும் தொல்லையைக் கொண்டு வருகிறான்.

10:15 செல்வந்தன் அதிக செல்வந்தனா கிறான், வறியவன் அதிக வறுமைக்குள்ளா கிறான். பணம் இருக்கிறவர்கள் பணத்தைப் பெருக்க முடியும். வறியவனால் எதையும் தொடங் கக்கூட முடியாது. அவனுடைய வறுமையே அவனுடைய வீழ்ச்சிக்குக் காரணம். செல்வந்தன் நீண்ட காலம் கெடாமல் இருக்கக் கூடிய பொருட் களை வாங்குகிறான். ஏழையோ பழைய பொருட் களை வாங்குகிறான். அவற்றைச் சீர்செய்ய அதிகப் பணத்தைச் செலவுசெய்வதால் அவன் மேலும் வறியவனாகிறான். வாழ்க்கையில் எல் லாம் இவ்வாறுதான் நடக்கின்றன, ஆனால் இவ்வாறு நடக்கக்கூடாது.

10:16 நல்ல தொழில் செய்து சேகரித்த செல் வம் அருமையானது. நேர்மையற்ற முறையில் ஈட்டிய ஆதாயம் **பாவத்தை** நோக்கி வழிநடத் தும். ஒரு கிறிஸ்தவத் தச்சனையும், கிறிஸ்த வனல்லாத மது விற்பனை செய்கிறவனையும் ஒப் பிட்டுப்பாருங்கள். தச்சன் சம்பாதித்த வருமானம் நேர்மையானது, அது பொருள் உற்பத்தி செய்யும் தொழில் ஆகும், பொருட்களும் பயன்படுகின்

றன. மது விற்பனை அழிவையே உண்டாக்கு கிறது. அவன் கூடுதலாக வேலை செய்வானானால், கூடுதலாகப் பாவம் செய்கிறான். அதிகப் பாவம் செய்தால் அதிகமாகப் பணம் சம்பாதிப்பான்.

10:17 தெய்வீகப் புத்திமதிகளைக் கேட்டு நடப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கிறவன் ஜீவ பாதையில் நிலைத்திருக்கிறான். நல்லா லோசனைகளைப் புறக்கணிக்கிறவன் வழிதப் பிப்போவதுமல்லாமல் பிறரையும் வழிதப்பச் செய்கிறான்.

10:18 கபட்டுச் சொற்களால் **பகையை** மறைக் கிறவனுக்கும், அதைப் பழிச்சொற்களால் தனது அயலானிடம் வெளிப்படுத்துகிறவனுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை இந்த நீதிமொழி கூறுகிறது. முதலாவது மனிதன் கபடன், இரண் டாவது மனிதனோ **மதிகேடன்**. அவர்களுக் கிடையே ஒருவரையும் தெரிந்தெடுக்க முடியாது. இதற்கு மூன்றாவது மாற்றாக, விசுவாசியானவன் பகைமையைச் சற்றும் தன் மனதில் சேர்த்து வைக்காமலிருக்கக் கற்க வேண்டும்.

10:19 நாம் அதிகமாகப் பேசும்போது, தவ றாகப் பேசுவதற்கான வாய்ப்பு கூடும். அதிகாரத் தோரணையுடன் பேசுகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டும்! இடைவிடாமல் உரையாட வேண்டுமென்கிற ஆசை மிகைப்படுத் திப் பேசுவதற்கும் நம்பகத் தன்மை இழப்பதற்கும் அதனுடன் சேர்ந்த பாவங்களுக்கும் காரணமாகி விடும். வேறொருவர் கூறிய நகைச்சுவையோடு வேறொன்றைச் சேர்த்துக்கூற வேண்டுமென்று முயற்சி செய்கிற போது, அது சுவையற்ற வெற் றுக் கதையாக மாறி விடும்.

தன்னுடைய பேச்சைக் கட்டுப்படுத்தப் பயிற்சி பெற்ற மனிதன் **புத்திமானாக** இருக்கிறான். இக்கட்டான நிலையையும், மன்னிப்பு வேண்டு கிறதையும், நேரடியாகப் பாவம் செய்கிறதையும் அவன் தவிர்த்துத் தன்னைக் காப்பாற்றிக் கொள் கிறான்.

10:20 ஒரு நல்ல மனிதன் சொல்கிறவை அவன் யார் என்பதைப் பிரதிபலிக்கிறது. அவ னுடைய நடத்தை அப்படிக்கற்றது, அவனுடைய பேச்சும் அது போலவே இருக்கிறது. துன்மார்க் கனுடைய இருதயம் (மனது) பயனற்றது, அவனு டைய நடத்தையிலிருந்து வெளிப்படுகிற உரை யாடலும் பயனற்றதாகவே இருக்கும்.

10:21 "நல்லது தனக்கும் பிறருக்கும் ஊட்டி விடும். தீமை தன்னையே உயிரோடு வைத்திருக் காது" என்று ஒருவர் இந்த நீதிமொழியை மிகப் பொருத்தமாகப் பொழிப்புரையாக்கித் தந்திருக் கிறார்.

இங்கு **மூடர்** என்று குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் பிடிவாதமானவர்களும் அடங்காதவர்களுமே ஆவார்கள்.

10:22 கர்த்தருடைய ஆசிர்வாதம் மட்டுமே ஒரு வாழ்க்கையைச் செல்வச் செழிப்புள்ளதாக மாற்றும்.

ஆனால் **அதனோடே அவர் வேதனை எதையும் கூட்டமாட்டார்** என்பது உண்மையா? மிகச்சிறப்பான முறையில் ஆழ்ந்த துக்கத்திற் குள்ளாகச் செல்லக்கூடிய நிலை ஏற்படுவதை இதனுடன் எவ்வாறு இணைத்துப் பார்க்க முடியும்?

இந்த நீதிமொழியின் இரண்டாவது பகுதிக் குப் பல விளக்கங்கள் கொடுக்கவியலும்:

1. துக்கத்தை தேவன் அனுப்புகிறதில்லை. துக்கம், நோய், பாடு யாவும் சாத்தானிடத்திலி ருந்தே வருகின்றன. பலநேரங்களில் தேவன் அவற்றைத் தம்முடைய பிள்ளைகளின் வாழ்க்கையில் அனுமதிக்கிறார், ஆனால் அவற்றிற்கு அவர் மூலகாரணராகார்.
2. துக்கம் தேவனுடைய ஆசிர்வாதத்தின் ஓர் அம்சம் அல்ல, மாறாக அது தேவனல்லாமல் வேறு இடத்திலிருந்து வந்த செல்வத்தின் அம்சமே ஆகும்.
3. "கடின உழைப்பு அதனோடு எதையும் கூட்டுகிறதில்லை" என்று இவ்வசனத்தின் பிற்பகுதி வேறுவிதமாகவும் மொழிபெயர்க் கப்பட்டுள்ளது. (RV, RSV -அடிக்குறிப்பு). தேவனின்றி செய்யப்படுகிற கடின உழைப்பு எதையும் அந்த ஆசிர்வாதத்தோடு கூட எதையும் தருகிறதில்லை. கடின உழைப்பு நல்லது, ஆனால் அது தேவனால் வழிநடத்தப் படாததாக இருந்தால் அது பயன் இல்லாத தாகவே இருக்கும் (சங். 127:1,2 - காண்க).

10:23 மூடன் பிரச்சினைக்குள் சிக்கிக்கொண்டு தானே அதைக்குறித்து மகிழ்ச்சியடைகிறான்; அது அவனுக்கு மிகவும் பிடித்தமான **விளை யாட்டு. புத்திமான்** ஞானத்தோடு நடந்து அதன் மூலம் மகிழ்ச்சியடைகிறான்.

10:24 தவறு செய்கிறவர்கள் என்ன நிகழுமோ என்று அஞ்சுகிறார்களோ அந்தப் பேரிடர் அவர் களுக்கு நிகழும். **நீதிமான் விரும்புகிற காரியம்** - அவனுடைய தற்போதைய வாழ்க்கையில் தேவனுடைய சித்தம், அடுத்துவருகிற வாழ்க்கை யில் அவருடைய முன்னிலை - **அவனுக்குக்**

கொடுக்கப்படும். இதே மனநிலையில் திரு வாளர் C. S. லூயிஸ் கூறுகிறார்:

> இறுதியில், அந்த முகம், அது மனமகிழ்வு அல் லது பிரபஞ்சத்தின் பேரச்சம், இவற்றுள் ஒன்று நம் ஒவ்வொருவரையும் நோக்கித் திரும்பும். அது விவரித்துக் கூறவியலாத மகிமையாக இருக்கலாம் அல்லது ஒருபோதும் குணப் படுத்தவியலாதபடி அல்லது மறைக்க முடியாத படி சுமத்தப்பட்ட அவமானமாக இருக்கலாம்.[14]

10:25 தேவனுடைய நியாயத்தீர்ப்பு என்னும் சுழற்காற்று கடந்துபோகும்போது துன்மார்க்கர் எங்கும் இல்லாதபடி மறைந்து போவார்கள். ஆனால் நீதிமானோ நித்திய கன்மலையின்மேல் கட்டப்பட்டிருப்பான்; எதுவும் அவனை ஒருபோதும் அசைக்காது.

10:26 காடி பற்களுக்கு கூச்சத்தை உண்டு பண்ணும், **புகை கண்களுக்கு** எரிச்சலைக் கொடுக்கும். அதுபோலவே செய்தியை எடுத்துச் செல்லும் **சோம்பேறி** வழியில் காலத்தை வீணாக்கி, **தன்னை அனுப்பினவர்களுக்கு** எரிச்சல் உண்டாக்கி, நம்பிக்கை இழக்கச் செய்து, அவர்களைச் சினமடையச் செய்கிறான்.

10:27 கடவுட்பற்றுள்ள வாழ்க்கை நீடித்திருக் கும். துன்மார்க்கர் முதிர் வயதடைவதற்கு முன்பே கொல்லப்படுவார்கள், எ.கா., திருட்டுக் கும்பல் கொலைகள், பழிவாங்கும்படி செய்யப் படுகிற கொலைகள், குடி, போதை, ஒழுக்கக்கேடு ஆகியவற்றால் ஏற்படுகிற மரணங்கள்.

10:28 நீதிமான்கள் நம்பிக்கையோடு எதிர் நோக்கியிருப்பவை **மகிழ்ச்சியோடு** நிறைவேறும். துன்மார்க்கருக்கு அவ்வாறு நிகழாது - அவர்களு டைய நம்பிக்கை முழுவதும் நிறைவேறாமல் ஏமாற்றமே அடைவார்கள். திருவாளர் G. S. பௌவஸ் விவரிக்கிறார்:

> பல நாடுகள் மேல் வெற்றி பெற்ற பின்னரும் மகா அலெக்சாண்டர் மனநிறைவு பெற வில்லை. இன்னும் வெற்றி பெறுவதற்கு வேறு நாடுகள் இல்லையே என்று அவன் தேம்பிய முதான், அந்நிலையில் அவன் இளம் வயதி லேயே தீயொழுக்கத்தின் காரணமாக மரண மடைந்தான். மாபெரும் வீரர்கள் பலரைக் கொன்று அவர்களுடைய மோதிரங்களால் மூன்று மரக்கால்களை நிரப்பிய ஹன்னிபால் என்பவன் நஞ்சை விழுங்கி மரணமடைந் தான். அவன் இறந்ததைக் குறித்து ஒருவரும் பொருட்படுத்தவில்லை, ஒருவரும் துக்கம் கொண்டாடவில்லை. "தன்னுடைய எதிரிகள் 10 லட்சம் பேரின் இரத்தத்தில் தனது ஆடை களுக்குச் சாயம்பூசிய" ஜீலியஸ் சீசர் 800 நகரங்களை வென்றான், அவனுடைய மிக நெருங்கிய நண்பர்கள் நால்வர், அவன் பெரும் வெற்றியை அடைந்தபின் கொண்டா டிய விழாவில் அவனைக் கத்தியால் குத்தி வீழ்த்தினார்கள். ஐரோப்பா கண்டத்தையே கொடுமைப்படுத்தியவனும் மிகவும் அஞ்சத் தக்கவனுமாயிருந்த நெப்போலியன் நாடு கடத்தப்பட்டு தனது கடைசி ஆண்டுகளைத் தனிமையில் கழித்தான்.[15]

துன்மார்க்கருடைய எதிர்பார்ப்பு ஒன்றுமில் லாமல் அழிவது நிச்சயம்.

10:29 தமது தந்தருளும் செயலின் மூலமாகக் **கர்த்தர் உத்தமர்களுக்கு** உயர்ந்த துருகமாக விளங்கி வலிமை தருகிறார், ஆனால் தீமை செய்கிறவர்களுக்கு அழிவாக விளங்குகிறார்.

10:30 நீதிமான் குடியிருக்கும்படி தேவன் ஓரிடத்தைத் தருவதாக வாக்களித்திருக்கிறார், ஆனால் துன்மார்க்கர் நாடுவிட்டு நாடுசெல்லும் நாடோடிகளாக இருப்பார்கள்.

இஸ்ரவேல் சிறைப்பிடிக்கப்பட்ட நிகழ்வு இதனை விளக்கிக் கூறுகிறது.

10:31 ஒரு நல்ல மனிதனின் **வாய்** ஞானத்தை மலரச் செய்யும் மரத்தைப் போலிருக்கிறது. கபடும் **மாறுபாடும்** நிறைந்த சொற்களைப் பேசுகிற நாவு **அறுப்புண்டு போகும்**.

10:32 தகுதியானவற்றைப் பேசுவதற்கு நல்ல மனிதன் அறிந்திருக்கிறான் என்று நீங்கள் அவனை நம்பலாம். **கொடுமை** செய்பவனோ உண்மைகளைத் திருத்தி **மாறுபாடான** வார்த் தைகளையே பேச அறிந்திருக்கிறான்.

11:1 நேர்மையற்ற வணிகர்கள் சில வேளை களில் இரண்டு வகையான எடைக்கற்களை வைத்திருப்பார்கள், ஒன்று வாங்குவதற்கு மற் றொன்று விற்பதற்கு. வாங்குவதற்காக அவன் பயன்படுத்தும் எடைக்கற்கள் உண்மையான எடையைக் காட்டிலும் கூடுதலாக இருக்கும், அதன் மூலம் அவன் கொடுக்கும் விலைக்குக் கூடுதலான பொருட்கள் கிடைக்கும். விற்பதற் காக அவன் பயன்படுத்தும் எடைக்கற்கள் உண்மையான எடையைக் காட்டிலும் குறைந்த

எடையுள்ளவையாக இருக்கும், அதன்மூலம் வாடிக்கையாளர் தான் செலுத்திய பணத்திற்குக் குறைவான பொருளையே பெறுவார்.

கள்ளத்தராசு என்று இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் தடை செய்யப்பட்ட நேர்மையற்ற வணிக முறைகள் இன்றைய நாட்களில் தொழிலில் வழங்கி வருகின்றன. மேலும் பள்ளி வாழ்க்கை, சமுதாய வாழ்க்கை, இல்லற வாழ்க்கை, சபை வாழ்க்கை எல்லாவற்றிலும் நேர்மையற்ற வழக்கங்கள் காணப்படுகின்றன.

11:2 முதலாவது அகந்தை; பின்னர் வீழ்ச்சி; அதைத் தொடர்ந்து வீழ்ச்சியோடு தொடர்புடைய அவமானம். ஆனால் தாழ்மையுள்ளவனுக்கோ வீழ்வதற்கான வாய்ப்பு ஏற்படுவதே இல்லை.

11:3 நேர்மையே நடத்தைக்கான மிகச்சிறந்த கொள்கை. **செம்மையானவர்களுடைய உத்தமம்** அவர்களை நேர்மையான வழியில் நடத்தும். யோசேப்பின் அனுபவம் இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு. உண்மையற்றவர்களின் கபடு அவர்களுடைய வீழ்ச்சிக்குக் காரணம்; பிலேயாமின் வாழ்க்கை இதற்குச் சான்றளிக்கிறது.

11:4 இக்காலத்திலும் நித்தியத்திலும் தேவனுடைய கோபாக்கினையை செல்வத்தால் தடைசெய்ய முடியாது. முதிர்வயது ஆவதற்கு முன்பே மரணமடையாதபடி இவ்வுலகில் **நீதி** ஒருவனைக் காப்பாற்றும். தேவனுடைய நீதியை அணிந்தவர்கள் மட்டுமே இரண்டாவது மரணத்திலிருந்து தப்பிக்க முடியும்.

11:5 குற்றமில்லாத மனிதன் மிகச்சிறந்த வழிகாட்டியாகிய **நீதியால்** வழிநடத்தப்படுகிறான். **துன்மார்க்கன்** தன்னுடைய சொந்தத் **துன்மார்க்கத்தின்** காரணமாக வீழ்ச்சியடைவான்.

11:6 நல்ல மனிதர்களை **நீதி** வழிநடத்துவது மல்லாமல், அது அவர்களைக் காணக்கூடிய மற்றும் காணமுடியாத பேராபத்துகளிலிருந்து **தப்புவிக்கும்**. யூதாசைப் போன்று மறுதலித்துப் போனவர்கள் அவர்களுடைய சொந்தத் **தீவினை,** பேராசை என்னும் வலையில் சிக்கிக் கொள்வார்கள்.

11:7 எவனொருவனுடைய திட்டங்கள் யாவும் அவனுடைய கல்லறையில் முடிவடைகின்றனவோ அவனே மூடன் என்று சொல்லப்பட்டுள்ளது. அவனுடைய சவப்பெட்டி மூடப்படுகிறபோது அவனுடைய எல்லா எதிர்பார்ப்புகளும் முடிவுக்கு வருகின்றன. எப்பொருட்களுக்காக அவன் இது வரை வாழ்ந்தானோ அவை இனிமேல் அவனுடைய உடைமைகள் அல்ல, அவன் **எதிர்பார்த்த** செல்வங்கள் யாவும் இல்லாமற் போகும்.

11:8 தேவன் எல்லா **இக்கட்டுகளுக்கும் நீதிமானை** விடுவித்து, அவனுக்குப் பதிலாக அவற்றைத் துன்மார்க்கன் மேல் சுமத்துகிறார். இவ்வாறாகவே மூன்று எபிரெய மனிதர்கள் எரிகிற தீச்சூளையிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள், ஆனால் அவர்களைக் கொலைசெய்ய அதிகாரம் பெற்றவர்கள் அந்தத் தீயில் வெந்தழிந்தார்கள் (தானி. 3:22-26).

11:9 இறைமறுப்புக் கொள்கையுடையவன் அல்லது **மாய்மாலக்காரன்** சந்தேகங்களையும் மறுப்புகளையும் கூறி, தன்னுடைய அயலானின் விசுவாசத்தைக் கெடுக்கப்பார்க்கிறான். சத்தியத்தைக் குறித்த **அறிவு**, போலியானது எது என்பதை அறியவும், தன்னையும் பிறரையும் நிலைகுலைவிலிருந்து காக்கவும் நீதிமானுக்கு ஆற்றலைத் தருகிறது.

11:10 ஒரு நகரம் இரண்டு தருணங்களில் மகிழ்ச்சிப் பெருவெள்ளத்தில் திளைக்கும். ஒன்று **நீதிமான்** வளம் பெறுகிறபோது, மற்றொன்று **துன்மார்க்கன்** அழியும்போது.

11:11 செம்மையானவர்களுடைய ஆசிர்வாதம் என்பது, அவர்கள் நகரத்துக்காக ஏறெடுக்கிற மன்றாட்டைக் குறிக்கக்கூடும் (1 தீமோ. 2:1,2). அல்லது அவர்கள் அந்நகரத்தில் குடியிருப்பதாலும், அவர்களுடைய பயபக்தியின் தூண்டுதலாலும் ஏற்படுகிற நன்மைகளை அது குறிக்கக்கூடும் (இயேசுநாதர் தம்மைப் பின்பற்றுகிறவர்கள் பூமிக்கு உப்பாக விளங்குகிறார்கள் என்று விவரித்திருப்பதை இதனுடன் ஒப்பிட்டுக் காண்க, மத். 5:13).

துன்மார்க்கருடைய ஏமாற்று வேலை, நிறைவேற்றப்படாத வாக்குறுதிகள், மோசடி, தெய்வ நிந்தனைகள் ஒரு நகராட்சி சீரழிவதற்குப் போதுமானவை.

11:12 மதிகெட்டவன் பிறனை அவமதிக்கிறான்; புத்திமானோ தன் வாயை அடக்கிக் கொள்கிறான். வேறொரு மனிதனை இழித்துப் பேசுபவன் தேவனை அவமதிக்கிறான், அந்த மனிதனை இடருக்குள்ளாக்குகிறான், சச்சரவைத் தூண்டிவிடுகிறான், அவனால் ஒருவருக்கும் பயனில்லை. புத்திமான் ஒருவனைப் புகழவோ, ஒருவனுக்குப் புத்திபுகட்டவோ முடியாவிட்டால், ஒன்றும் பேசாதிருப்பதே மேல் என்று அறிந்திருக்கிறான்.

11:13 புறங்கூறித்திரிகிறவன் பிறருடைய அவமானச் செயல்களை அல்லது மற்றவர்களைப் பற்றிய தகவல்களை பரப்புவதிலும், மற்றவருடைய நம்பகத்தன்மையை இழக்கச் செய்வதிலும் கெடுநோக்குடைய மனமகிழ்ச்சியைப் பெறுகிறான். அவன் எதையும் மறைக்காமல் தனக்குத் தெரிந்த எல்லாவற்றையும் கூறுகிறான்.

உண்மையுள்ள நண்பன் ஓர் இரகசியத்தை எவ்வாறு பாதுகாப்பது என்பதை அறிந்திருக்கிறான், அவன் பேசுவதைக் கட்டுப்படுத்துகிறான்.

11:14 ஞானமுள்ள தலைமையும், திறமை வாய்ந்த ஆட்சியாளர்களும் இல்லையேல் மக்கள் தொல்லைகளுக்குள் **விழுவது** நிச்சயம். மாறாக, நல்ல ஆலோசகர்கள் பலர் சேர்ந்து எடுக்கிற தீர்மானங்களாலே பாதுகாப்பு உண்டாகும்.

11:15 ஓர் அந்நியனுக்குப் பிணைபடுகிற செயல் அவனுடைய கடனுக்குப் பொறுப்பாளியாவதாகும் அல்லது அவன் கடன்பத்திரத்தில் உறுதியளிப்பதாக விளங்கும். இவ்வாறு செய்கிற மனிதன் இதற்காகப் **பாடுபடுவான்,** அதாவது, கடுமையான தண்டனையைச் செலுத்தித் தீரவேண்டும். பிணைபடுகிற செயலை வெறுக்கிறவன் பல விதத் தலைவலிகளிலிருந்து தன்னைக் காத்துக் கொள்வான். 6:1-5 வசனங்களுக்கான விளக்கத்தைக் காணவும்.

11:16 நல்லொழுக்கமுள்ள பெண் மரியாதையையும் **நன்மதிப்பையும்** பெறுவாள். இதனை அபிகாயில் வாழ்க்கையில் காண்கிறோம் (1 சாமு. 25). **ஈவிரக்கமற்ற மனிதர்கள்** (இலகு தமிழ்) தங்களுடைய செல்வத்தைக் **காப்பார்கள்**, ஆனால் நற்பெயர் பெறமாட்டார்கள்.

11:17 ஒரு மனிதனுடைய மனநிலை அவனுடைய உடல்நலத்தைப் பாதிக்கிறது. ஒரு தயவுள்ள மனிதன் வயிற்று மந்தம், வலிப்பு நோய், இரப்பை குடல் புண், இருதய நோய் ஆகியவற்றைத் தவிர்க்கிறான். கொடூரன் தனக்கே இவற்றை வருவிக்கிறான். **தயவுள்ளவன் தன்னுடைய ஆத்துமாவுக்கு நன்மை செய்கிறான்.**

மனித உடலின் எந்தவொரு திசுவும் அந்த மனிதனின் மனநிலையிலிருந்து முற்றிலும் தனியாகப் பிரிந்திருப்பதில்லை என்று ஒருமுறை பிரிட்டிஷ் மருத்துவத்துறை வெளியீடு ஒன்று கூறியது. **கொடூர** மனப்பான்மையுள்ளவன் தன் உடலில் கேட்டை வருவிக்கிறான். அப்படிப்பட்ட மனநிலை உள்ளவன் **தன் உடலை அலைக் கழிக்கிறான்.**

11:18 கொடுமையானவன் பெறும் கூலி ஏமாற்றமாய் முடியும். ஆனால் நியாயத்தை விதைப்பவனோ, உண்மையான பலனை அறுவடை செய்வான் (இலகு தமிழ்). ஓரிரவுப் பொழுதில் தீய மனிதர்கள் பெரும் செல்வந்தர்களாக மாறிவிடுகிறார்கள் என்பது அடிக்கடி நிகழக்கூடிய உண்மைதான். ஆனால் அவர்களுடைய செல்வம் மனநிறைவளிக்கிறதில்லை, நிலைத்திருப்பதில்லை, அவர்கள் அதிகத் தேவையுள்ளவர்களாக இருக்கிறபோது அதனால் அவர்களுக்கு எவ்விதப் பயனும் ஏற்படுவதில்லை. நீதியுள்ள வாழ்க்கையால் கிடைக்கிற பலன் உண்மையானது, மற்றும் நிலையானது.

11:19 எல்லா நடத்தையும் இரண்டு திசைகளில் ஒன்றில் வழிநடத்தும். **ஜீவனை** நோக்கி வழிநடத்துகிறது ஒரு வகை, **மரணத்தை** நோக்கி வழிநடத்துவது மற்றது. நற்செயல்களாலே இரட்சிப்பைப் பெறமுடியும் என்று இந்த நீதிமொழி கற்பிக்கிறதில்லை. எந்தவொரு மனிதனும் தேவனோடு முறையான உறவு கொண்டிராவிடில் நீதியில் உறுதியோடு நிலைத்திருக்க முடியாது. முதலாவது அவன் மறுபடியும் பிறக்க வேண்டும். **தீமையைப் பின்தொடருகிறவன்** ஒருபோதும் மனந்திரும்பவில்லை என்பதை அவனுடைய செயலின் மூலம் மெய்ப்பிக்கிறான்.

11:20 கர்த்தரைப் பொறுத்தவரை, கள்ள இருதயம் வெறுக்கத்தக்கது, அருவருக்கத்தக்கது. நேர்மையாக நடக்கிற மனிதனை அவர் உண்மையாகவே நேசிக்கிறார். தேவன் வெறுக்கவும், அன்புகூரவும் கூடிய ஆற்றல் உள்ளவர் என்பதைக் காணமுடியாத பார்வை தேவனைக் குறித்த முழுமையான பார்வையல்ல.

மறுபக்கம் **குற்றமற்ற** இருதயம் அவருடைய **மனமகிழ்ச்சியாக** இருக்கிறது (இலகு தமிழ்).

11:21 கையோடு கைகோத்தாலும் என்னும் சொற்றொடர், நிச்சயமற்ற இவ்வுலகில் நிச்சயமான இரண்டு விசயங்களைக் குறிக்கிறது - துன்மார்க்கன் தண்டனையடைவான்; **நீதிமானின்** சந்ததி மீட்பைப் பெறும்.

11:22 பன்றியின் மூக்கிலுள்ள பொன் மூக்குத்தி பொருத்தமற்றது. **பன்றியின் மூக்கு** கவர்ச்சியற்றது, **மூக்குத்தியோ** அழகானது. **மதிகேடாய் நடக்கிற அழகுள்ள பெண்** எதிரெதிரான இரண்டும் ஒன்று சேர்ந்தாற்போல இருக்

கிறாள் - சரீரக் கவர்ச்சி, நன்னெறி ஒழுங்கில் குறைபாடு.

11:23 நீதிமான்கள் நல்லதை மட்டுமே விரும்புகிறார்கள், அவர்கள் அதை அடைகிறார் கள். **துன்மார்க்கர்** தீமையை நாடி, அதைக் **கோபாக்கினையாக** அல்லது தண்டனையாகப் பெறுகிறார்கள்.

தகுதியான இலக்குகளைக் கொண்டிருப் பதன் முக்கியத்துவத்தை இந்த நீதிமொழி வலி யுறுத்துகிறது. ஏனெனில், முடிவாக நம்முடைய வாழ்க்கையில் எதை நாடிச் செல்கிறோமோ அதையே அடைவோம். எனவேதான், "உங்களு டைய வாகனத்தின் கொக்கியை ஒரு நட்சத்திரத் துடன் இணையுங்கள்" என்று திருவாளர் எமர்சன் கூறினார். "நீங்கள் வேறு என்ன செய்தாலும் செய்யாவிட்டாலும், பெரிய தேசப்படத்தை வாங் குங்கள்" என்று தனது அமைச்சரவையிடம் பிரிட் டிஷ் ஆளுநர் கூறினார்.

11:24 இங்கு சிறப்பான முரணுரை ஒன்று உள்ளது. நாம் தாராள மனப்பான்மை யோடு செயல்படுவதால் செல்வச் செழிப்பைப் பெறு வோம். பூமியிலே செல்வத்தைச் சேர்த்து வைப்ப தாலே நாம் வறுமையடைவோம்.

நாம் எதைச் சேமிக்கிறோமோ அதை இழந்து போவோம், நாம் எதைக் கொடுக்கிறோமோ அதைப் பெற்றிருப்போம்.

"தன்னாலே இழக்கமுடியாததை அடைவதற்கு, தன்னிடத்தில் வைத்திருக்க முடியாததைக் கொடுப்பவன் மதியற்றவன் அல்லன்" என்று திரு வாளர் ஜிம் எலியட் கூறினார். ஒவ்வொருவரும் தசமபாகத்தைக் கொடுக்கிறார்கள், அவர்கள் ஒருவேளை கர்த்தருக்குக் கொடுப்பார்கள், அல்லது மருத்துவருக்கு அல்லது பல் மருத்து வருக்கு அல்லது வாகனத்தைப் பழுதுபார்ப்ப வருக்குக் கொடுப்பார்கள் என்று திருவாளர் பார்ன்ஹவுஸ் கூறினார்.

11:25 கஞ்சன் ஒருக்காலும் அறியாத பலனைத் **தயாளகுணமுள்ளவன்** அறுவடை செய்வான். பிறருக்கு நாம் செய்கிற நன்மை எதுவும் ஆசிர்வாதமாக நம்மிடத்திற்குத் திரும்பிவரும்.

ஒரு ஞாயிறு வேத பாட ஆசிரியை தனது பாடத்தை மிகக் கவனமாக ஆயத்தம் செய்து வகுப்பை நடத்துகிறார் எனில், அதன் மூலம் அதி கப் பயனை அடைவது மாணவர்களா அல்லது அந்த ஆசிரியையா?

11:26 தன்னலம் பேணும் மனிதன் பஞ்ச காலத்தில் தானியத்தைச் சேர்த்து வைக்கிறான், அவன் அதை விற்கும்படி சந்தைக்கு அனுப்பு வதில்லை, அதன் விலை ஏறும்போது விற்பதன் மூலம் அதிக ஆதாயம் கிடைக்கும் என்று அவன் எதிர்பார்க்கிறான். மற்றவர்களை வறுமைக்குட் படுத்தி, பட்டினி கிடக்கச் செய்வதன் மூலம் அவன் தனது ஆதாயத்தைப் பெருக்குகிறான். **அவனை மக்கள் சபிப்பார்கள்** என்பதில் ஆச்சரியப்படுவ தற்கு ஒன்றுமில்லை! இப்பொழுது அவர்களு டைய உடனடித் தேவையைச் சந்திக்கிற யாரே னும் உண்டோ என்றுதான் அவர்கள் எதிர் நோக்குகிறார்கள்.

ஜீவ அப்பம் கிடைக்காமல் உலகம் மடிகிறது. அப்பமோ இலவசமாகக் கிடைக்கிறது, எப்போதும் அவ்வாறே தரப்படுகிறது. நாம் அதைப் பிறருடன் பகிர்ந்துகொள்ள வேண்டும். நாம் எதற்காகக் காத்திருக்கிறோம்? தானியத்தை விற்கிறவன் மேல் ஆசிர்வாதம் தங்கும், அதாவது, நற்செய்தி யைப் பரப்புகிறவன் ஆசிர்வதிக்கப்படுவான்.

11:27 ஒரு மனிதனுடைய நோக்கங்கள் தூய்மையாகவும் தன்னலமின்றியும் இருக்கு மென்றால், அவன் பிறருடைய நன்மதிப்பைப் பெறுவான். ஆனால் பிறருக்குத் **தீமை** உண் டாக்க வேண்டுமென்று செயல்புரிகிறவர்கள் தங்களுக்கே தீமை உண்டாக்கிக்கொள்வார் கள்.

11:28 இதற்கு இணையான புதிய ஏற்பாட்டு வேதபகுதி 1 தீமோத்தேயு 6:17-19. செல்வம் நிலையற்றது, ஆகவே நம்பிக்கைக்குப் பாத்திர மானது அல்ல. நம்முடைய நம்பிக்கை எல்லாவற் றையும் அனுபவிக்கும்படி அளவில்லாமல் நமக் குத் தருகிற ஜீவனுள்ள தேவனிடத்தில் இருக்க வேண்டும்.

"பொன்னின் மேலுள்ள இச்சை, கருணையற் றதும் கல்நெஞ்சுமானதுமாகும், அது மறுபிறப் படையாத மனிதனின் முடிவான களங்கமாகும்" என்று திருவாளர் சாமுவேல் ஜான்சன் கூறினார்.

நீதிமான்கள், அதாவது, கர்த்தரிடத்தில் நம் பிக்கை வைத்தவர்கள் **துளிரைப்** போல உயி ரோடும், உரத்தோடும் **தழைப்பார்கள்**.

11:29 தங்களுடைய சொந்த **வீட்டுக்குத்** தொல்லை தருபவர்கள் பலவகை மக்கள், எடுத் துக்காட்டாக குடிகாரர்கள், சொற்புரட்டர்கள், பிறர்மனை நயப்பவர். ஆனால் இங்கு குறிப்பிடப் பட்டுள்ள மனிதன் ஆதாயம் அடைய வேண்டு

மென்று பேராசை பிடித்தவன் (15:27 -ஆம் வசனத்தைக் காண்க). அவன் செல்வத்தை அடைய வேண்டுமென்னும் வேட்கையில் வாழ்வின் தகுதியான நன்மதிப்பைக் காணத் தவறியவன். அவன் **காற்றைச் சுதந்தரிப்பான்**, அதாவது, அவன் தனது பேராசையை நிறைவுசெய்யுமளவு கணிசமாக எதையும் அடையமாட்டான். இவ்வாறு செயல் புரிந்தமைக்காக அந்த **மூடன்** அதிக ஞானத்தோடு நடந்துகொண்ட ஒரு மனிதனுக்கு அடிமை வேலை செய்வான்.

11:30 பிறருக்கு ஊட்டத்தையும் புத்துணர்ச்சியையும் கொண்டுவரக்கூடிய கனிகளைத் தரும் மரத்தைப் போன்றது **நீதிமானின்** வாழ்க்கை. **ஞானமுள்ளவன்** ஞானமும் நீதியும் நிறைந்த வாழ்க்கைக்குப் பிறரை **ஆயத்தப்படுத்துகிறான்**.

ஆத்தும ஆதாயம் பண்ணுகிறவர்களைக் குறித்த மேன்மையான திருமறை வசனங்களில் இதுவும் ஒன்று. பேதுருவுக்கு இயேசு கிறிஸ்து அளித்த வாக்குறுதியை இது நம்முடைய நினைவுக்குக் கொண்டுவருகிறது, "இதுமுதல் நீ மனிதரைப் பிடிக்கிறவனாய் இருப்பாய்" (லூக்கா 5:10). நித்திய நற்பேற்றை மனிதருடைய வாழ்க்கையில் கொண்டுவரக்கூடிய வேலையைச் செய்வதற்கென தேவன் பயன்படுத்துவதென்பது விவரிக்கவியலாதத் தனிச்சிறப்பு ஆகும்! கர்த்தருக்கென்று வெல்லப்பட்ட ஒவ்வொரு ஆத்துமாவும் தேவனுடைய ஆட்டுக்குட்டியானவரை என்றென்றும் ஆராதித்துத் தொழுதுகொள்ளும்!

11:31 நீதிமான்களும் இவ்வாழ்க்கையில் செய்த தவறுகளுக்காகக் கழுவாய் தேடவேண்டும். மோசே வாக்குத்தத்தம் செய்யப்பட்ட நாட்டுக்குள் அனுமதிக்கப்படவில்லை, தாவீது நாலத்தனையாகத் திரும்பச் செலுத்த வேண்டியதாயிற்று. நீதிமான்களே தாங்கள் விதைத்ததை அறுக்க நேரிட்டால், **துன்மார்க்கர்** எவ்வளவு **அதிகமாகச்** செலுத்த வேண்டியதாகும்! அல்லது, பேதுரு இதனைக் கூறினாற்போல, "நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால் பக்தியில்லாத வனும் பாவியும் எங்கே நிற்பான்?" (1 பேதுரு 4:18).

12:1 ஒழுங்கு முறைக்கும் **புத்திமதிகளுக்கும்** தன்னை ஒப்புவிப்பவன் உண்மையாகவே கற்க விரும்புகிறான். தன்னிடத்தில் உள்ள குறைவுகளைக் கேட்க மனதற்று வெறுத்துப் புறக்கணிக்கிறவன் மூடன்.

12:2 ஒழுக்கமும் நன்னெறியும் உடைய மனிதன் **கர்த்தரிடத்தில் தயை பெறுவது** நிச்சயம், பொல்லாத சிந்தனையுள்ள மனிதன் அவருடைய நியாயத்தீர்ப்பை அடைவதும் அதற்கு இணையாக நிச்சயமானது. "இப்பிரபஞ்சத்திலேயே ஒப்பற்ற ஆற்றல்கொண்டவர் தீய மனிதன் செய்கிற செயலுக்கு எதிராக இருக்கிறார், அவன் தோல்வியடைவான் என்று அவர் முடிவு செய்திருக்கிறார் என்பதை நினைத்துப்பாருங்கள்! அத்தகைய ஒப்பற்ற ஆற்றலுடையவர் ஒரு மனிதனை அவனுடைய முடிவுக்கே விட்டுவிடுகிற செயல் ஏளனச் செயலாகும்" என்று எழுதினார் திருவாளர் .'.போர் மேன்.

12:3 துன்மார்க்கத்தால் ஆட்கொள்ளப்பட்ட மனித வாழ்க்கைகள் நிலைத்திருப்பதில்லை. அவர்கள் கற்பாறையின்மேல் விழுந்த விதைகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள் (மத். 13:5,6). மண் ஆழமில்லாமல் இருந்ததால் வேர் விடாமல் அந்த விதைகள் விரைவாக உலர்ந்து போயின.

நீதிமானுடைய வேர் தேவனுக்குள்ளாக ஆழமாகச் சென்றிருக்கும். வாழ்வின் கடும்புயல் வீசுகிறபோது அவனால் உறுதியாக நிற்க முடிகிறது. இந்த மனிதனே சங்கீதம் 1:3 -இல் விவரிக்கப்பட்டுள்ளான்.

12:4 நல்நடத்தையுள்ள மனைவி தன் கணவனுக்கு மகிழ்ச்சியையும் இன்பத்தையும் கொண்டுவருவாள். தன் கணவனை அவமதிக்கிறவள் அவனுக்குப் பெரும் வீழ்ச்சியை உண்டுபண்ணுகிறாள் - அந்நிலை அவனுடைய எலும்புகள் அழுகிப் போனதுபோல் காணப்படும்.

12:5 துன்மார்க்கருடைய ஆலோசனைகள் எப்படி சூதானவையாக இருக்கின்றனவோ அவற்றிற்கு முற்றிலும் எதிராக நீதிமான்களின் நோக்கங்கள் மேன்மையாக உள்ளன என்பதும் நிச்சயம். இதனை வேறு சொற்களில் கூறவேண்டுமானால், ஒரு மனிதனுடைய இலட்சியங்கள் அவனுடைய நடத்தையின் பிரதிபலிப்பாக உள்ளன.

12:6 பாவிகள் தங்களுடைய பேச்சின் மூலமாகக் கபடற்றவர்களுக்கும், கவனமற்றவர்களுக்கும் பேராபத்திற்கான வலையை விரிக்கிறார்கள். **உத்தம** மனிதர்கள் உண்மை பேசி தங்களையும் பிறரையும் **தப்புவிக்கிறார்கள்.**

12:7 துன்மார்க்கரை நீதி விரட்டிப் பிடிக்கும்போது, அது அவர்களுக்கு முடிவாக அமையும். தெய்வபக்தியுள்ள மனிதர்கள் நல்ல அடித்தளத்தைப் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் இயற்கைச் சீற்றத்தால் வாரிக்கொள்ளப்படுவதில்லை.

12:8 நுண்ணறிவு மிக்கவனும், ஞானமாக நடக்கிறவனுமான ஒருவனைக் குறித்து மக்கள் நன்மையாகப் பேசுவார்கள்; ஆனால், கொள்கை யற்ற மனிதனைப் பற்றி ஏளனமாகப் பேசுவதைத் தவிர அவர்களிடம் வேறு எதுவும் இருக்காது.

12:9 உணவு இல்லாமல் இருந்தும் தன்னைப் பெருங்குடி மகனாகப் பாசாங்கு பண்ணுவதை விட, தன்னுடைய வேலையைத் தானே செய்கிற சாதாரண மனிதன் மேன்மையுள்ளவன் (இலகு தமிழ்). தாழ்நிலை நிறைவான உணவு ஆகிய இரண்டும் சேர்ந்திருக்கும் நிலை, பட்டினி யாய்க் கிடந்து பெருங்குடி மகனாகப் பாசாங்கு பண்ணுவதைவிடச் சிறந்தது.

12:10 நீதிமானுடைய தயவு பேச்சற்ற விலங் குகள் வரை விரிவுபடுகிறது, ஆனால் **துன்மார்க் கன்** தான் தயவுமிக்கவன் என்று எண்ணினாலும் **கொடுமை** நிறைந்தவனாயிருக்கிறான்.

தேவன் எல்லாவற்றிற்கும் மேம்பட்டவரா யிருந்தும், விலங்குகளிடத்தில் அக்கறை செலுத்த முடியாத நிலையில் இல்லை, மாறாக அவர் அவற்றைக் குறித்த சட்டங்களை இயற்றியிருக் கிறார் (யாத். 20:10; 23:4,5). அவர் பறவையின் கூட்டைக் குறித்தும்கூட சட்டம் இயற்றியுள்ளார் (உபா. 22:6).

12:11 உழவுத் தொழிலைப் போல நேர்மை யான உற்பத்தித் திறன் மிக்க தொழிலைச் செய் கிற மனிதனுடைய தேவைகள் சந்திக்கப்படும். மாறாக தகுதியற்ற அலுவல்களில் நேரத்தைச் செலவிடுகிற மனிதனின் சமையலறை வெறுமை யாக இருக்கிறது, மேலும் அவனுடைய தலையும் வெறுமையாயிருக்கிறது.

12:12 துன்மார்க்கரின் வலை ஆகுபெயராக விளங்கி, தீமை என்னும் வலையில் சிக்குண்ட அல்லது தீய வழியில் அவன் ஈட்டிய பிறருடைய உடைமைகளைக் குறிக்கிறது. **துன்மார்க்கர்** பிறருடைய உடைமைப் பொருட்களை இச்சிக் கிறான் என்றும் இதைக் கூறலாம்.

இதற்கு மாறாக, நீதிமான்கள் தங்களுடைய தேவைகளைத் தாங்களே அமைதியாக நிவர்த்தி செய்து, மனநிறைவு அடைகிறார்கள்.

12:13 அக்கிரமக்காரர்கள் அவ்வப்போது தங்களுடைய சொந்தச் சொற்களாலே பிடிபட்டு சிக்கிக்கொள்கிறார்கள். ஒரு நிகழ்வைக் குறித் துப் பேசும்போது மாறி மாறிப்பேசி அவர்கள் இடறல் அடைகிறார்கள். பொய் கூறுகிறவன் நல்ல நினைவு கொண்டிருக்க வேண்டும்; இல்லை யேல் அவன் கூறுகிறவை பொருத்தமற்றுக் காணப் படும். ஒரு பொய்யை மறைக்க, அவன் பல பொய் களைக் கூறவேண்டிய கட்டாயம் ஏற்படும்.

நீதிமானோ நெருக்கத்தினின்று நீங்கு வான். எல்லாவிதமான பிரச்சினைகளிலிருந்தும் தேவன் தம்முடைய மக்களுக்கு விடுதலை தர வில்லை. மாறாக அவர்கள் அந்த நெருக்கங் களைத் தாங்கி வெளி வருவார்கள்.

12:14 நல்ல பேச்சும் நல்ல நடத்தையும் தம்மோடு அதற்குரிய பரிசை ஏந்திவரும். ஞானம், மென்மை, தூய்மை ஆகியவற்றோடு பேசுகிற பேச்சு, அன்பு, தயவு, மரியாதை ஆகிய பரிசுக களைக் கொண்டுவரும். நல்ல செயல்கள் புரிகிற மனிதன் நன்மைகளைத் திரும்பப் பெறுவான்.

12:15 மதியீனனிடத்தில் உங்களால் ஒன்றும் சொல்லமுடியாது. அவன் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறான், அவன் பிறருக்குச் செவி சாய்க்கிறதில்லை. ஆனால் **ஞானமுள்ளவன்** ஆலோசனைகளை வரவேற்கிறான். ஒரு கேள்வி யின் எல்லா அம்சங்களையும் ஒரு மனிதனால் பகுத்துணர முடியாது என்பதை அவன் அறிந் திருக்கிறான்.

12:16 ஒரு மூடனால் தனது **கோபத்தை** அடக்க முடியாது. சிறிய அளவில் சீண்டினாலும் அவன் கடுஞ்சினம் அடைகிறான். **விவேகமுள்ள மனிதன்** அவமதிக்கப்படும்போது அதைப் பொருட் படுத்தாமலிருக்க அறிந்திருக்கிறான், மேலும் அவன் தன்னைக் கட்டுப்படுத்தவும் பயிற்சி பெற்றிருக்கிறான்.

12:17 நீதிமன்றத்தில் உண்மையைக் கூறுகிற சாட்சி நீதியான சான்று அளிக்கிறான். **பொய்ச் சாட்சி** பொய் கூறுகிறான்.

12:18 சிலர் தங்களுடைய நாவைப் **பட்டயத் தைப்** போலப் பயன்படுத்துகிறார்கள். அதைக் கொண்டு கண்டபடி வெட்டி, வேதனையை உண்டுபண்ணுகிறார்கள். **ஞானமுள்ளவன் ஔஷதம்** போன்ற சொற்களைப் பேசி உடல் நலம் பேணுகிறான், அதாவது, அர்த்தமற்றபடி பேசினவர்கள் உண்டாக்கிய காயங்களை இவனு டைய பேச்சு ஆற்றுகிறது.

12:19 சத்தியம் நித்தியமானது. ஏன்? ஏனெ னில் தேவன் ஒரு விசயத்தைக் குறித்துச் சொல் வது சத்தியம், ஆகையால் அது ஒருக்காலும் மாற்றமடைகிறதில்லை.

பொய்நாவு கண் இமைக்கும் நேரம் மட்டுமே நிலைத்திருக்கும்.

12:20 பொல்லாப்பு செய்யத் திட்டமிடுகிறவர் களின் **இருதயம்** துரோகத்தால் நிறைந்திருக் கிறது. சமாதானத்தை விரும்புகிறவர்களின் இரு தயம் மகிழ்ச்சியால் நிறைந்திருக்கிறது.

12:21 நீதிமானுக்கு மிகப்பெரிய **கேடு** எதுவும் நேரிடாது என்பது பொதுவான விதி. ஆனால் இது விலக்கில்லாத விதியல்ல. இங்கு சொல்லப்பட்டிருப்பது யாதெனில், தீயவருடைய நடத்தையின் கேடான விளைவுகளிலிருந்து நீதிமான்கள் பாதுகாக்கப்படுவார்கள் என்பது உண்மையாயிருக்கிறது.

துன்மார்க்கர் இத்தகைய கேடுகளைப் பெருமளவு பெறுவார்கள்.

12:22 தேவன் பொய் கூறுகிறவர்களை வெறுக் கிறார். உண்மையைச் சற்று மாற்றிக்கூறுவதிலி ருந்தும், அரைப் பொய் கூறுவதிலிருந்தும், மிகைப் படுத்திக் கூறுவதிலிருந்தும், அரை உண்மையை மட்டும் கூறுவதிலிருந்தும் நாம் எவ்வளவாக நம்மைக் காத்துக்கொள்ள வேண்டும். முழு மையாக நேர்மையாகவும் நம்பகத்தன்மை யோடும் இருப்பதால் நிச்சயமாக அவருடைய இருதயத்திற்கு மனமகிழ்வைக் கொண்டுவர முடியும்.

12:23 விவேகமுள்ள மனிதன் தனக்கு எவ்வளவு தெரியும் என்பதைத் தெரிவிக்க எங் கும் சுற்றித்திரிய மாட்டான். அவன் தன்னுடைய படிப்பறிவை எவ்விதப் பெருமையும் இல்லாமல் **அடக்கிவைக்கிறான்**. ஆனால் தங்களுடைய **மதியீனத்தை மூடர்கள்** வெளிப்படுத்தும் நேரத் தில் நாம் அவர்களுடைய முன்னிலையில் இருக்க முடியாது.

12:24 சாதாரண வாழ்க்கையின் நடைமுறை யில், ஒப்புவித்த, சுறுசுறுப்பான வாழ்க்கை வாழ் கிற மனிதர்கள், பாலேடு உயர எழுகிறதுபோல தலைமைப் பொறுப்பிற்கு உயர்த்தப்படுவார்கள். சோம்பல் வறுமையை நோக்கி வழிநடத்தும், வறுமை ஒரு மனிதனை அடிமை வேலைக்குக் கொண்டுசெல்லும்.

தூய்மையற்று அழுக்காயிருப்பது பரிசுத்த ஆவியானவருக்கு அவமதிப்பைக் கொண்டு வரும் என்று ஆஸ்வால்ட் கூறினார்; சோம்பேறித் தனத்தைக் குறித்தும் அவர் அவ்வாறுதான் சொல்லியிருப்பார்.

12:25 கவலை மன அழுத்தத்தைக் கொண்டு வரும். நல்வார்த்தை, உற்சாகமூட்டும் அல்லது பரிவுடன்கூடிய வார்த்தை அவ்வாறு இருக்கும் மனிதனுக்குப் புத்துணர்ச்சி ஊட்டி அதிசயச் செயலைச் செய்யும்.

12:26 புறத்தோற்றங்களுக்கு மாறாக, **நீதிமான்** உண்மையில் அவனுடைய நீதியற்ற அயலானைப் பார்க்கிலும் மேலானவன். பொது வாக உலகில் அவ்வாறு காணப்படுவதில்லை. எல்லா நிகழ்வுகளும் பாவிக்குச் சாதகமாக நடப் பதுபோல் தோன்றுகிறது. இதன் காரணமாக, விலக்கப்பட்ட கனி உண்மையில் மிகவும் இனிமை யானது என்று மக்கள் எண்ணி மயங்குகிறார்கள். ஆகவே கிறிஸ்தவன் மிகுந்த கவனத்துடன் தனக்கு நண்பர்களைத் தெரிந்தெடுக்க வேண் டும் (NKJV - மொழிபெயர்ப்புக்கு ஏற்ப).

12:27 சோம்பித் திரிபவன் **வேட்டையாடுவ தில்லை,** அவ்வாறு அவன் வேட்டையாடி எதை யேனும் பிடித்தாலும் அவன் அதைச் **சமைப்ப தில்லை.** முதலாவது, அவன் ஒரு செயலைத் தொடங்குவதற்கு ஊக்கம் குன்றியவனாக இருக் கிறான்; இரண்டாவது, அவன் தொடங்கிய வேலையை முடிப்பதற்கு அவனிடம் உற்சாகம் இல்லை.

இந்த நீதிமொழியின் பிற்பகுதி தெளிவற்று உள்ளது. ஆனால் அதன் பொருள், சுறுசுறுப்பான மனிதன் தான் செய்த வேலையை மதிப்பது மட்டுமின்றி, அதனைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தவும் செய்கிறான் என்பதாகத்தான் இருக்கவேண்டும். ரூத் அத்தகைய பெண்மணி யாக இருந்தாள்; தான் பொறுக்கிய கதிர்களை அவள் அடித்துத் தானியத்தைச் சேகரித்தாள் (ரூத் 2:17). நாம் நமது வேதபாட வகுப்புகளில் படித்ததை மேலும் பெருக்கிக்கொள்ள வேண் டும். தியானம், ஜெபம், நடைமுறையில் கீழ்ப்படி தல் ஆகியவற்றின் மூலமாக நாம் கற்ற பாடத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

தூயநல் வேதம் கருத்துடன் ஓதுவோம்,
நேயரின் சொற்படி நாள்தோறும் நடப்போம்,
அண்ணலை அறியும் அறிவில் பெருகியே,
பண்புடன் வாழ்ந்திட மகிழ்வுடன் பயிலுவோம்!

12:28 நீதியின் குறுகிய **பாதையில்,** வழிநெடு கிலும் வாழ்வு உள்ளது, அந்தப் பயணத்தின் முடி விலும் வாழ்வு உள்ளது. அதில் **மரணம் இல்லை.** அழிவை நோக்கிச் செல்லும் அகன்ற பாதையில் தான் மரணம் உள்ளது. இங்கு **"ஜீவன்"** என்று குறிப்பிடப்பட்டிருப்பது, மரணத்திற்கு அப்பாற்பட்ட வாழ்வை, அதாவது நித்திய வாழ்வை எதிர்நோக் கியது. இந்த வசனத்திற்கான NIV மொழி பெயர்ப்பு:

"நீதியின் பாதையில் வாழ்வு உள்ளது, அந்தப் பாதை நெடுகிலும் இருப்பது நிலை பேறுடைமை."

13:1 உடல் வளர்ச்சியிலும் ஆவிக்குரிய வளர்ச்சியிலும், இயல்பான வளர்ச்சி முறை உள்ளது. ஒரு குழந்தை நடப்பதற்கு அல்லது பேசுவதற்கு முன் தவழ வேண்டும். ஆவிக்குரிய வளர்ச்சியில், மனம் திரும்பியவன் தனது பணியைத் தொடங்குவதற்கு முன்னர் கேள்வி மற்றும் கற்றல் அவசியம். **ஞானமுள்ள மகன்** அறிவுரை என்னும் ஒழுங்கிற்குத் தன்னை ஒப்புவிக்கிறான். **பரியாசக்காரன்** அதைப் பெறுவதில்லை; அவன் தனக்கு அனைத்து விடைகளும் தெரியும் என்று நினைக்கிறான். தன்னைத் திருத்துவதற்கு அவன் அனுமதிப்பதில்லை.

13:2 இங்கே ஒரு மனிதன் தன்பேச்சினால் புத்திபுகட்டுபவனாக, உற்சாகமூட்டுபவனாக, ஆறுதல் அளிப்பவனாக இருக்கிறான். அவ்வாறு பேசப்பட்ட சொற்களால் உண்டான பயனை அவன் காண்கிறபோது அவனுக்கு அது நற்பயனைத் தருகிறது. இதற்கு மாறாக உண்மையற்ற மனிதன் பிறருக்குத் தீங்கு விளைவிக்கத் திட்டமிடுகிறான். அவன் தன்னுடைய வினைக்கேற்ற பலனைப் பெறுகிறான்.

13:3 தன்னுடைய பேச்சைக் **காக்கிறவன்** தன்னுடைய முழு **பிராணனையும்** காக்கிறான் (யாக். 3:2 - ஐக் காண்க). தன்னைக் கட்டுப்படுத்தாதவன் தொல்லைக்குட்படுகிறான். இதில் கற்கிற பாடம்: நீங்கள் என்ன பேசுகிறீர்கள் என்பது குறித்துக் கவனமாயிருங்கள் - அது உங்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படும்.

13:4 "விருப்பங்கள் குதிரைகளாயிருந்தால், பிச்சைக்காரர்கள் சவாரி செய்வார்கள்." **சோம்பேறி** பெரிய **விருப்பங்களைக்** கொண்டிருக்கிறான், ஆனால் அது போதாது. "கடுமுயற்சி இல்லாத விருப்பம் பயனற்றது." கடுமையாக உழைப்பவன் தன்னுடைய வேலையில் தன்னை ஒப்புவிக்கிறான், மேற்கொண்ட செயலில் வெற்றி பெறுகிறான். இவ்விதமாக இவ்வாழ்வுக்குரியவற்றில் உண்மையாக இருப்பது ஆவிக்குரியவற்றிலும் உண்மையாக இருக்கிறது. திருவாளர் போஸ்ச் விளக்குகிறார்:

> திருமறைக்கு விளக்கவுரை எழுதுவதற்கு ஆடம்கிளார்க் 40 ஆண்டுகள் செலவிட்டதாகச் சொல்லப்படுகிறது. தன்னுடைய அகராதியை எழுதிமுடிக்க நோவா வெப்ஸடருக்கு 36 ஆண்டுகள் உழைப்பு தேவையாக இருந்தது. உண்மையில், தேவையான செய்திகளைச் சேகரிக்க அவர் இரண்டுமுறை பெருங்கடலைக் கடந்து சென்றார். ஒவ்வொரு நாள் காலையிலும் 4.00 மணிக்குத் திருவாளர் மில்டன் துயில் எழுந்து, தனது கவிதையை இயற்றுவதற்கும் அதைத்திரும்பவும் எழுதுவதற்கும் நேரத்தை ஒதுக்கினார். அந்நூல் இப்பொழுது மிகச்சிறந்த உலக இலக்கியங்களில் ஒன்றாக இருக்கிறது. ரோமப் பேரரசின் சரிவும் வீழ்ச்சியும் என்னும் நூலை இயற்றுவதற்கு கிப்பன் 26 ஆண்டுகள் எடுத்துக்கொண்டார். அந்நூல் இன்றைக்குக் கவனமான ஆய்வுக்கும், மேற்கொண்ட வேலையைச் செவ்வனே செய்துமுடிக்க ஓய்வில்லா ஒப்புவித்தலுக்கும் மிகவுயர்ந்த நினைவுச் சின்னமாக விளங்குகிறது. பிரயண்ட் தனது கவிதைப் படைப்புகளில் ஒன்றை, நிறைவான அழகும் முழுமையான சொற்செரிவும் பெறுவதற்காக 100 முறை திரும்பத் திரும்ப எழுதிப் பின்னரே வெளியிட்டார். இந்த மனிதர்கள் தாங்கள் செய்த செயல்களில் மனமகிழ்வை அனுபவித்தார்கள். எப்படிப்பட்ட கடினமான உழைப்பாக இருந்தாலும், அதைச் செய்து முடிக்க மேற்கூறப்பட்டுள்ள எல்லாப் படைப்பாளரும் தங்களது முழு ஆற்றலையும் ஒப்புவித்தார்கள்.
>
> மனுக்குலம் மேன்மை அடைய வேண்டும், தேவன் மகிமைப்படவேண்டும் என்பதற்காகத் தங்களுடைய உழைப்பில் சுறுசுறுப்பாக இருந்தவர்களே மகிழ்ச்சி நிறைந்தவர்களும் ஆக்கம் மிக்கவர்களுமான மனிதர்கள்.[16]

13:5 நீதிமான் எல்லாவிதமான நேர்மையற்ற தன்மையையும் **வெறுக்கிறான்**; ஆனால் துன்மார்க்கரோ "வெட்கமற்ற முறையிலும் இழிவான முறையிலும் நடந்து கொள்கிறார்கள்" (R. S. V). திருவாளர் J. ஆலன் பிளேர் அமெரிக்காவின் மேதகு மனிதனின் வாழ்க்கையிலிருந்து இதற்கு விளக்கமளிக்கிறார்:

> ஒரு கட்சிக்காரரிடம் நேர்மை இல்லையெனில், அந்த வழக்கை ஆபிரகாம் லிங்கன் ஏற்றுக் கொள்ளமாட்டார் என்று அவரைப்பற்றிக் கூறப்படும். ஒருமுறை ஒருவர் தனது வழக்கை ஏற்று நடத்தும்படி அவரிடம் கேட்டுக்கொள்ள வந்தார். அந்த வழக்கைக் குறித்த எல்லா உண்மைகளையும் அந்த மனிதர் விளக்கிக் கூறிய

போது கவனித்துக் கேட்ட லிங்கன் கூரையை உற்று நோக்கிக் கொண்டிருந்தார். திடீரென்று, தன்னுடைய நாற்காலியை அவர் சுழற்றிவிட்டுக் கொண்டார்.

''சட்ட நுணுக்கங்களின்படி பார்க்கிறபோது உங்களுடைய வழக்கு மிக நேர்த்தியாக இருக்கிறது, ஆனால் நீதி நேர்மை ஆகியவற்றின்படி அது கெட்ட வழக்கு. நீங்கள் இந்த வழக்கில் வெற்றிபெற வேறொருவரைத் தெரிந்து கொள்ளுங்கள். என்னால் அதைச் செய்ய முடியாது. நீதிமன்றக் குழுவினருக்கு முன்நின்று நான் வழக்கை எடுத்துரைத்து முறையிடுகிறபோது, 'லிங்கன் நீ பொய் கூறுகிறாய்!' என்று நான் எண்ணிக்கொண்டிருப்பேன். நான் என்னையே மறந்து நான் பொய் கூறுவதாகச் சத்தமாகச் சொல்லிவிடுவேன்'' என்று அவர் கூறினார்.

பொய் மற்றும் எல்லாவிதமான குற்றங்களும் தேவனுடைய இருதயத்தை வேதனைப்படுத்தும். கிறிஸ்தவன் எவனும் விளைவு எது வாயினும் பொய் சொல்லவோ, ஏமாற்றவோ கூடாது. அவன் அவ்வாறு தவறு செய்தால் தேவனுக்கென்று அவனால் ஒருபோதும் முன்னேற்றமடைய முடியாது.[17]

13:6 நீதியுள்ள வாழ்க்கை பாதுகாப்பான வாழ்க்கை. குற்றமற்றவர்களைப் பாதுகாக்க தேவன் பொறுப்பெடுத்துக்கொண்டுள்ளார். ஆனால் **பாவியோ** இடைவிடாமல் அழிவை நோக்கியே நடக்கிறான்; ஏனெனில் அப்படிப்பட்டவர்களுடைய **துன்மார்க்கம்** கூடிய விரைவிலோ பின்னரோ அவர்களைக் **கவிழ்த்துப் போடும்**.

13:7 இந்த நீதிமொழிக்கு இரண்டுவிதமாகப் பொருள்கூற முடியும். முதலாவது, பொருட் செல்வம் எதுவுமற்ற ஒரு மனிதன், தான் பெருஞ் செல்வந்தனாகத் தன்னை மற்றவர்கள் கருதும் படியான ஒரு தோற்றத்தை உருவாக்க முயற்சி செய்யலாம், அதே நேரத்தில் வேறொருவன் பெருமளவு பணம் வைத்திருந்தும் தோற்றத்தில் ஓர் ஏழையாகக் காட்டலாம்.

அல்லது இதனுடைய பொருள் கீழ்க்கண்டவாறு இருக்கக்கூடும். தேவனற்ற பெருஞ்செல்வந்தன் ஆவிக்குரிய நிலையில் ஒன்றுமற்ற வறியவனாயிருக்கிறான். அதே நேரத்தில் மிகத் தாழ்மையான விசுவாசி, அவன் பொருளாதாரத்தின் அடிப்படையில், தேவனுடைய சுதந்தரனும் கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரனுமாக இருக்கிறான். திருவாளர் மோர்கன் விளக்குகிறார்:

நமது காலத்தில் தங்களைப் பெருஞ் செல்வந்தர்களாக ஆக்கிக் கொண்டவர்கள் பலர் இருக்கிறார்கள், ஆனாலும் அவர்களிடத்தில் ஒன்றுமில்லை. அவர்கள் பெருஞ்செல்வத்தைச் சேர்த்துவைத்திருக்கிறார்கள். ஆனாலும் வாழ்க்கையின் மெய்யான பொருட்களை வாங்குவதற்கான அதிகாரம் அவற்றிற்கு இல்லை. அது நடல்நலத்திற்கு உறுதியளிக்காது, அது மகிழ்ச்சியைக் கொண்டு வருவதில்லை, அவ்வப்போது அது சமாதானத்தை அழித்துவிடுகிறது. இதற்கு மாறாக, தங்களையே ஏழைகளாக்கிக் கொண்டவர்கள் இருக்கிறார்கள், அதன் வாயிலாக உலகத்தின் மிகவும் மேன்மையான பொருளில் பெருஞ் செல்வந்தராக மாறியிருக்கிறார்கள். இதனை எவ்வாறு விவரிப்பது? முரண்பட்ட அறிக்கைகளில் ஒவ்வொன்றிலும், அந்தச் சொல்லிலேயே முக்கியத்துவத்தைக் காண்பதால் இதற்கான தீர்வைக் காண முடியும். தன்னையே செல்வந்தனாக்கிக்கொள்வது என்பது, வாழ்வின் குணநலனை அழித்துப் போடுவதாக அமையும். ஒருவன் தன்னை வறியவனாக்கி பிறரைச் செல்வந்தராக ஆக்குவது மெய்யாக வாழ்வதாகும். மனுவுருவெடுத்த ஞானமாகிய ஒருவரைக் குறித்துச் சிந்திக்காமல் இந்த எபிரெய ஞானத்தின் மூதுரையை எண்ணிப் பார்ப்பதென்பது இயலாத செயல்.[18]

13:8 செல்வந்தன், அவனுடைய பணத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று எண்ணுகிறவர்களால் அடிக்கடி மிரட்டப்படுகிறான். கொள்ளையடித்தல், அச்சுறுத்திப் பணம் பறித்தல், பணத்திற்காகக் கடத்தப்படுதல் ஆகியவற்றை அவர் எதிர்கொள்ள நேரிடுகிறது. அவன் பாதுகாப்புக்காக ஆட்களை அமர்த்தி தன் உயிரைக் காக்கிறான் அல்லது அதிகப் பணத்தை மீட்புப் பணமாகச் செலுத்தித் தன்னைக் காக்கிறான். இத்தகைய அச்சுறுத்தல்களை ஏழை மனிதன் சந்திக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுவதே இல்லை.

13:9 நீதிமானின் சாட்சி பிரகாசித்து மற்றும் உற்சாகமாக எரிகிற விளக்கு போல இருக்கிறது. **அணைக்கப்படுகிற** தீபம் போலத் **துன்மார்க்கனின்** வாழ்வும் நம்பிக்கையும் உள்ளன.

13:10 முதல் வரியில் இரு கருத்துகள் இருக்கக் கூடும். சச்சரவு ஏற்படுகிற போது, **அகந்தையே** பெரும்பாலும் அதற்கு முக்கிய காரணமாக இருக்கிறது. அல்லது இரண்டாவதாக, "அகந்தையால் வாது மட்டுமே பிறக்கும்" (JND). அதாவது, நன்மை எதுவும் அகந்தையால் உண்டாவதில்லை: கசப்பு நிறைந்த பகைமையே உண்டாகும். திருவாளர் C. S. லூயிஸ் எழுதுகிறார்:

> உலகம் உண்டானது முதற்கொண்டு ஒவ்வொரு குடும்பத்திலும் ஒவ்வொரு வீட்டிலும் துக்கம் ஏற்படுவதற்கான தலையாய காரணம் பெருமையேயாகும். பிற கெட்ட நடத்தைகள் சில வேளைகளில் மனிதர்களை ஒன்றுபடுத்தும். குடிகாரர்கள் அல்லது ஒழுக்கங்கெட்டவர்களுக்கிடையே நல்ல ஐக்கியம், நகைச்சுவை, நட்பு ஆகியவற்றை உங்களால் காணமுடியும். ஆனால் பெருமை என்றால் பகைமை என்பது தான் பொருள், அது பகைமையே. அங்கு மனிதர்களுக்கிடையே மட்டுமல்ல, தேவனுக்கு எதிரான பகைமையும் உள்ளது.[19]

நல்லாலோசனைகளைக் கேட்க மனதுள்ளவர்கள் ஞானமுள்ளவர்கள். அவர்கள் பெருமையையும், அதனோடு உடன்செல்லும் ஆளுமை மோதல்களையும் தவிர்ப்பார்கள்.

13:11 நேர்மையற்ற முறையில் சம்பாதித்த செல்வம் விரைவாக வருகிறது அல்லது கடின உழைப்பின்றி வருகிறது. இது சூதாட்டத்தால், குதிரைப்பந்தயம் அல்லது பங்குச்சந்தை ஊக வாணிபம் எதன் மூலமாகப் பெற்ற பணமாகவும் இருக்கலாம். இவ்வகையில் ஈட்டிய பணம் அந்த மனிதனின் கையிலிருந்து கரைந்து போகக்கூடிய பண்புடையது.

நேர்மையான உழைப்பின் வாயிலாக ஈட்டிய பணம் குறைவதில்லை, மாறாக அது சேருகிறது.

13:12 ஒரு மனிதனின் எதிர்பார்ப்பு மீண்டும் மீண்டும் தள்ளிப்போவது சோர்வூட்டுகிறது. ஆனால் **விரும்பினது** இறுதியில் கிடைக்கும் போது, அது மிகப் பெருமளவு மனநிறைவைத் தருகிறது. இதனை நீங்கள் கர்த்தருடைய வருகைக்குப் பொருத்திப் பாருங்கள்.

13:13 திருவசனம் தேவனுடைய வார்த்தையேயாகும். அதைக் குறித்த நமது மனப்பான்மை வாழ்வா சாவா என்பது பற்றியதாகும். எவனொருவன் அதை அவமதிக்கிறானோ அது அவனுடைய சொந்த அழிவுக்கான பாதையின் திறவுகோலாகும். **கற்பனைகளை** நம்பி, கீழ்ப்படிகிறவன் பெருமளவு **பலனடைவான்**.

13:14 ஞானவானின் ஆலோசனையும் அறிவுரையும் கீழ்ப்படிகிறவர்களுக்கு வாழ்வின் ஊற்றாகவும், புதிய வலிமையாகவும் விளங்கும். வாழ்க்கைப் பாதையில் வைக்கப்பட்டிருக்கும் **மரணக்கண்ணிகளிலிருந்து** அவை ஒரு மனிதனை தப்புவிக்கும்.

13:15 நற்புத்தி தேவனிடத்திலும் மனிதனிடத்திலும் தயையைப் பெற்றுத் தரும். "நல்ல புத்தியுள்ள மனிதன் பாராட்டப்படுவான்" (LB).

இந்த நீதிமொழியின் இரண்டாவது பாகத்தில் **"கரடுமுரடு"** என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொல், நிலையானது, உறுதியானது அல்லது நீடித்திருப்பது என்று பொருள்தரும். ஆனால் இவ்வசனத்திற்கு ஏற்ற பொருள் தரும்படி கரடுமுரடு அல்லது கடுமையானது என்று அது மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அது நிலையானது என்று பொருள்படுமானால் எதிர்மறை வாசகமாக அமைய வேண்டும்: "துரோகிகளுடைய வழியோ நிலையானது அல்ல." பாரம்பரிய மொழிபெயர்ப்பை நாம் பின்பற்றுவது நல்லது என்று தோன்றுகிறது. "துரோகிகளுடைய வழியோ கரடுமுரடானது." இவ்வுண்மைக்கு ஒவ்வொரு நாள் செய்தித் தாளும் பல எடுத்துக்காட்டுகளைத் தருகின்றன!

13:16 ஒரு மனிதனின் நடத்தை அவனுடைய பண்பை வெளிப்படுத்துகிறது. ஒருவன் **விவேகியாக** இருந்தால், அவன் பொறுப்போடு **நடந்து கொள்வதால்** அது வெளிப்படும். **மூடனோ தன் மூடத்தனத்தை** ஒவ்வொருவரும் காணும்படி வெளிப்படுத்துகிறான்.

13:17 நம்பத்தகாத **தூதன்** (செய்தியைக் கொண்டுவருபவன்) தொடர்புடைய ஒவ்வொரு வருக்கும் இடர்ப்பாட்டைக் கொண்டுவருகிறான். உண்மையுள்ள ஸ்தானாபதியை அனுப்புவதே நல்லது, அவன் எல்லோருடைய மனநிறைவுக்கும் ஏற்றபடி வேலையை நிறைவேற்றி வருவான். இப்பொழுது நாம், "கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாக இருக்கிறோம்" (2 கொரி. 5:20).

13:18 கண்டித்துத் திருத்துதலையும் ஒழுங்கு முறையையும் **உதாசீனம்** செய்பவன் தனது பிடிவாதத்தால் **வறுமையையும் வெட்கத்தையும் அடைகிறான்**; **திருத்துதலைக்** கேட்டு நடக்கிறவன் **கனப்படுத்தப்படுவான்** (இலகு தமிழ்).

13:19 நல்ல மனிதர்கள் தங்களுடைய இலக்குகளை அடைகிறபோது மனமகிழ்ச்சி அடைகிறார்கள். ஆனால் **மூடரோ** தங்களுடைய பாவத்தை விட்டொழிப்பதில்லை. நல்ல மனிதர்கள் தகுதியான இலட்சியங்களை நோக்கித் தொடருகிறார்கள், பாவிகள் **தீமையைவிட்டுவிலக** விருப்பமில்லாமல் இருக்கிறார்கள் என்பதே இந்த நீதிமொழியில் சொல்லப்பட்டுள்ள எதிர்மாறான உண்மைகள்.

13:20 ஞானமுள்ள மனிதர்களின் தோழமையை நாம் நாடவேண்டும்; அவர்கள் நம்மைத் தூக்கிவிடுவார்கள். "கெட்டவர்களின் நட்பு நல் நடத்தையைக் கெடுத்துவிடும்" (1 கொரி. 15:33 - இலகு தமிழ்). ஒரு மனிதன் எத்கையவன் என்பது அவனுடைய நண்பர்கள் யாவர் என்பதால் அறியப்படும். மூடரின் தோழமை அழிவைக் கொண்டு வரும்.

13:21 அவப்பேறு, உடல்நலக்கேடு, கனவீனம், வேலை இழப்பு ஆகியவற்றால் பாவிகள் வேட்டையாடப்படுவார்கள். **நீதிமான்** நல்மதிப்பையும், நல்வாழ்வையும், நற்பரிசையும் பெறுவான்.

13:22 நல்லவன் தன் பிள்ளைகளுக்கு மட்டுமல்ல **தன் பேரப்பிள்ளைகளுக்கும் சுதந்தரத்தை வைத்துச் செல்கிறான்**. பழைய ஏற்பாட்டின்படி, இது பொருட்செல்வத்தை அவன் தனது வாரிசுகளுக்கு விட்டுச்செல்கிறான் என்று பொருள்படலாம். ஆனால் இன்றைய நாட்களில் ஒரு கிறிஸ்தவன் தனது வழித்தோன்றல்களுக்கு வளமிக்க ஆவிக்குரிய செல்வத்தை விட்டுச் செல்ல வேண்டுமென்று அறிவுறுத்தப்படுகிறான்.

பாவியின் ஆஸ்தியோ நீதிமானுக்காகச் சேர்த்துவைக்கப்படுகிறது. "நேர்மையற்ற முறையில் ஈட்டிய பணம் ஏதோ ஒரு வழியில் நல்லவர்கள் கைக்குச் செல்லும்."

13:23 ஏழைகள் தங்களுடைய சிறிதளவு வயலில் அதிகக் கடுமையாக உழைத்துப் பயிரிட்டு **மிகுதியான** விளைச்சலைப் பெறுகிறார்கள். அவர்கள் தங்களுக்கு உரியதை மிகச் சிறந்த முறையில் பயன்படுத்துகிறார்கள்.

இந்த வசனத்தின் இரண்டாவது பகுதி இரண்டு வகையாகப் பொருள்படும்: (1) செல்வந்தர் பெரும் பண்ணையில், பெரும்பாலான நேரங்களில் தங்களுடைய நேர்மையற்ற தன்மையால் வீழ்ச்சியையே அடைகிறார்கள். அல்லது (2) ஏழைகளின் உழவுத்தொழில் அநீதியின் காரணமாக அடித்துச் செல்லப்படுகிறது.

13:24 நவீனகால "வல்லுநர்கள்" ஒப்புக்கொண்டாலும் இல்லையென்றாலும், மரண தண்டனையைத் திருமறை கற்பிக்கிறது. ஒரு குழந்தை தண்டனைக்கேற்ற தவறு செய்கிறபோது அதைத் தண்டிக்காமல் விட்டுவிடுவது, அது பாவம் செய்வதற்கு ஊக்கமளிப்பதாக அமைந்துவிடும். மேலும் அக்குழந்தை முடிவில் அழிவை நோக்கிச் செல்வதற்குப் பங்களிப்பாக மாறிவிடும். **பிரம்பை எடுக்காத** தகப்பன் அன்பைக் காட்டுவதாக நினைக்கிறான், ஆனால் அது வெறுப்பு என்று தேவன் கூறுகிறார்.

பிள்ளைகளிடம் பெற்றோர் பரிவுகாட்டி அவர்களுடைய செயல்களுக்கு அனுமதியளிக்க வேண்டுமென்று பல ஆண்டுகளாகப் பரிந்துரை செய்துவந்தார் முனைவர் பெஞ்சமின் ஸ்போக். அடக்கமற்ற, தொல்லைகள் கொடுக்கும் பிள்ளைகள் நிறைந்த தலைமுறையைக் கண்டபின், தான் தவறுசெய்துவிட்டதாக அவர் ஒப்புக்கொண்டார்.

இன்றைய நாட்களில் அமெரிக்காவில், பிள்ளைகளிடம் பெற்றோர்கள் கண்டிப்பாக இல்லாததே பொதுவான பிரச்சினை என்று நான் கருதுகிறேன்" என்று அவர் கூறினார். இந்நிலைக்கு வல்லுநர்களே ஓரளவு பொறுப்பாவார்கள் என்று அவர் வலியுறுத்தினர், "என்னைப் போன்ற குழந்தை மனநோய் மருத்துவர்கள், உளநூல் வல்லுநர்கள், ஆசிரியர்கள், சமுதாய நல ஊழியர்கள் குழந்தை மருத்துவர்கள் ஆகியோரே இந்நிலைக்குக் காரணம்."[20]

பிள்ளையிடம் உண்மையாக அன்புகூருகிற தகப்பன் அவனுடைய கண்டிக்கத்தக்க தவறான செயல்களைப் பொறுத்துக்கொள்வதில்லை, மாறாக அவனை உடனடியாகத் **தண்டித்துத்** திருத்துகிறான்.

13:25 நீதிமானுடைய தேவைகளைச் சந்திக்க தேவன் உறுதியளித்திருக்கிறார், மாறாக, துன்மார்க்கனுடைய வயிறு வெறுமையாயிருக்கும்படி அது போலவே உறுதியளித்திருக்கிறார்.

14:1 நல்லறிவுள்ள குடும்பத் தலைவி தன் வீட்டுக் காரியங்களையும் குடும்பத்தின் காரியங்களையும் கவனிக்கிறாள். புத்தியில்லாத பெண் தன் கணவனையும் பிள்ளைகளையும் கவனிக்காமல் விட்டுவிட்டு, தனது குடும்பம் சீரழிந்து போனதைக் குறித்து ஆச்சரியப்படுகிறாள்.

மிகக் கூடுதலாகச் சமய காரியங்களில் ஈடுபடுவதாலும் ஒரு பெண்ணால் தன்னுடைய குடும்பத்தைச் சீரழிந்த நிலைக்குக் கொண்டுபோக முடியுமா?

14:2 ஒரு மனிதன் **கர்த்தரைக்** குறித்து எத்த கைய மனப்பான்மை கொண்டிருக்கிறானோ, அதனுடைய பிரதிபலிப்பாகவே அவனுடைய நடத்தை இருக்கிறது. தேவனுக்கு எது மன மகிழ்வு உண்டாக்கும் என்பதை நீதிமான் அறிந்திருக்கிறான். தேவன் என்ன நினைக்கிறார் என்பதை நெறி தவறியவன் சிந்திக்கிறதில்லை, ஆகவே அவன் அவரைக் குறித்து இகழ்வாகக் கருதுவதை வெளிப்படுத்துகிறான். திருவாளர் கிட்னர் எழுதுகிறார்:

> தேவனுடைய பாதையிலிருந்து விலகிச்செல்லுகிற ஒவ்வொரு செயலும், ஒருவருடைய சொந்தத் சித்தத்திற்கு எதிரானதாகும், ஒருவர் தன்னுடைய முடிவிலிருந்து பின்வாங்குதல் தேவனுடைய முடிவிலிருந்து பின்வாங்குதலாகும்; ஆனால் அதனால் உண்டாகிற விளைவு ஒப்புக்கொள்ள முடியாதபடி பொருத்தமற்றதாயிருக்கும்.[21]

14:3 மூடனுடைய வாயிலே அவன் அகந்தைக் கேற்றமிலாறுண்டு. அவனுடைய இறுமாப்பு நிறைந்த பேச்சின் காரணமாக அவன் அடிவாங்க நேரிடும். அத்தகைய தண்டனையிலிருந்து ஞான முள்ள மனிதர்களின் பேச்சு **காப்பாற்றும்**.

14:4 எருதுகள் இல்லாத இடத்தில் ஒரு களஞ்சியத்தைச் சுத்தமாக வைத்திருக்க முடியும், ஆனால் அதைச் சுற்றிலும் சற்று குப்பை கூளங்கள் இருப்பது நல்லதல்லவா, ஏனெனில் எருதுகளின் உழைப்பால் பெருமளவு விளைச்சலை அறுவடை செய்யமுடியும் என்பதை அறிவோமே? அதனுடைய ஏற்கமுடியாத அம்சங்களைக் காட்டிலும் உழைப்பின் பலன் அதிகமாக இருக்கும்.

வீடுகளையும், சபைக் கூடங்களையும் பேரிடர் வந்த பகுதிபோல் வைத்திருப்பதை இந்த நீதி மொழி உற்சாகப்படுத்துவதாக எண்ணிவிடக் கூடாது. மாறாக, தூசியில்லாதபடி தூய்மையாகவும் ஒழுங்காகவும் இடங்களை வைத்திருக்க வேண்டும் என்னும் ஆர்வம், முன்னேற்றத்திற்கும் பலன் பெருகுவதற்கும் தடை உண்டு பண்ணுவதை ஊக்கமிழக்கச் செய்வதே இதன் நோக்கம்.

14:5 துர்மனச்சாட்சியோடு பூமியில் தொடர்ந்து இருப்பதைக் காட்டிலும் நல்மனச்சாட்சியோடு விண்ணகம் செல்வது நல்லது என்று திருவாளர் C. H. மெக்கின்டொஷ் ஒருமுறை கூறினார். எல்லா நேரங்களிலும் முழுவதும் உண்மையாக இருப்பதற்கு நாம் எவ்வளவு கவனத்தோடு இருக்க வேண்டும்!

14:6 ஒரு **பரியாசக்காரன்** செவிமடுப்பதைத் தொடர்ந்து புறக்கணித்து வருவதன் மூலமாக அவனுடைய கேட்கும் ஆற்றல் குறைந்து போகும். அவன் கர்த்தரை ஏற்க மறுப்பதுவரை மெய்யான **ஞானத்தை** ஒருபோதும் **கண்டடைய மாட்டான்.**

நல்லறிவு பெற்றவன் நல்ல காரியங்களை விரைவாகப் புரிந்துகொள்கிறான். "உள்ளவன் எவனோ அவனுக்குக் கொடுக்கப்படும், பரிபூரணமும் அடைவான்..." (மத். 13:12).

14:7 மூடனுடைய நட்பை வளர்த்துக் கொள்ளாதீர்கள், "ஏனெனில் அங்கே அறிவுடைய சொற்களை நீங்கள் சந்திக்கமாட்டீர்கள்" (RSV). அல்லது "அர்த்தமுள்ள சொல் ஒன்றையும் அவனிடத்தில் நீங்கள் காணமாட்டீர்கள்" (மொ.ர்.பட்).

14:8 நேர்மையோடும், மனச்சாட்சிக்குக் கட்டுப்பட்டும், கீழ்ப்படிதலோடும் எவ்வாறு நடந்துகொள்வது என்பதை அறிவதே ஞானம் என்று விவேகி பொருள் கூறுகிறான். மூடன் உண்மையில் மூடத்தனத்தையே ஞானம் என்று கருதுகிறான். அதனுடைய சாரம் மற்றவர்களை வஞ்சிக்கும், முடிவில் அது அவனையே வஞ்சித்துவிடும்.

14:9 இங்குள்ள எபிரெயம் தெளிவற்றிருக்கிறது. ஆனால் NKJV நல்ல பொருளுடன் விளங்குகிறது (பழைய தமிழ் மொழிபெயர்ப்பு NKJV மொழி பெயர்ப்புக்கு ஏற்றாற்போல இருக்கிறது).

மறைந்து செய்திடும் பாவம்
விரைந்து தாக்கிடும்
குறைவுடை மூடன் அறிந்திலன்
அதனது கொடுமை
மடியினில் ஒளித்த வாளினை
அறிந்திலன் மடையன்
"கொடியது செய்யுமோ?" அவனது
கேள்வியின் மடமை

நகைத்திடத் தூண்டிடும் பாவம்
கொடியது அறிவீர்
தகைவிலா மாந்தர் நரகிற்குச்
செல்வர் திண்ணம்
துரத்திடும் அதனை விரைந்து,
அருமை நண்பரே,
இரட்சகர் உமக்குத் கதவை
அடைத்திடும் முன்னர்!

– ஜான் பன்யன்

பாவத்தின் குற்றவுணர்விலிருந்தும் தண்டனையிலிருந்தும் **செம்மையானவர்** கர்த்தருடைய **தயையை** அனுபவிப்பார்கள்.

14:10 மனித **இருதயத்தில்** இருக்கிற துக்கங்களை வேறு எந்த மனிதனாலும் பகிர்ந்து கொள்ள முடியாது (ஆனால் கர்த்தரால் பகிர்ந்துகொள்ள முடியும், அவர் பகிர்ந்துகொள்ளவும் செய்கிறார்). எந்த மனிதன் மகிழ்ச்சியோடு நேரடியாகத் தொடர்பு கொண்டிருக்கிறானோ அவனால் மட்டுமே அதை அனுபவிக்க முடியும்.

14:11 வீட்டுக்கும் கூடாரத்துக்கும் இடையேயுள்ள வேறுபாட்டைக் கவனியுங்கள். *வீடு* நிலையானது, *கூடாரம்* தற்காலிகமானது என்று நாம் நினைக்கிறோம். ஆனால் **செம்மையான** யாத்திரிகனுடைய **கூடாரம்** நிலைத்திருக்கும், பூமியில் குடியிருக்கும் **துன்மார்க்கனின் வீடு** நிலைகுலையும்.

14:12 நற்செயல்களாலும் நன்னடத்தையாலும் இரட்சிப்பு உண்டாகும், அதுவே **செம்மையான வழி** என்று மனிதர்களுக்குத் **தோன்றுகிறது**. இப்படிப்பட்ட தவறான சிந்தனையோடு, வேறு எதையும் நினையாமல், உழைக்கிற பலரும் நரகத்திற்குச் செல்கிறார்கள் (16:25 -ஆம் வசனத்தையும் காண்க).

இன்னும் சற்று விரிவான பொருளில் ஒரு **மனிதனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி** அவனுடைய சொந்த வழியேயாகும், அது தெய்வீக வழிநடத்துதலை அல்லது மனிதர்களுடைய ஆலோசனையை ஏளனம் செய்கிற சுயசித்தத்தின் வழியாகும். அது பேரிடரிலும் ஆவிக்குரிய **மரணத்திலும் முடிவடையும்**.

14:13 வாழ்க்கையில் தூய்மையான கலப்பட மற்ற மகிழ்ச்சி என்று ஒன்று இல்லை. **துக்கம்** ஓரளவு அதில் எப்போதும் கலந்திருக்கும். "மகிழ்ச்சி துக்கத்தோடு கலந்திருக்கிறது, நகைப்பு கண்ணீரோடு நடைபோடுகிறது" என்று திருவாளர் நாக்ஸ் கூறுகிறார்.

14:14 *இருதயத்தில் பின்வாங்கும் இயல்புள்ளவன் தன் சொந்த வழிகளால் நிறைவடைவான், ஆனால் நல்ல மனிதனோ உன்னதத்திலிருந்து மனநிறைவு அடைவான்* (NKJV -க்கு ஏற்ப தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது). கர்த்தரைவிட்டு விலகித் திரிகிற மனிதன், தனது ஒழுங்கற்ற நடத்தையின் விளைவுகளை அறுவடை செய்வான். அதன் காரணமாகவே "சர்வ வல்லவர் எனக்கு மிகுந்த கசப்பைக் கட்டளையிட்டார். நான் நிறைவுள்ளவளாய்ப் போனேன்; கர்த்தர் என்னை வெறுமையாய்த் திரும்பி வரப் பண்ணினார்" என்று நகோமி கூறினாள். மேலும் கெட்ட குமாரன், "என் தகப்பனுடைய கூலிக்காரர் எத்தனையோ பேருக்குப் பூர்த்தியான சாப்பாடு இருக்கிறது, நானே பசியினால் சாகிறேன்!" என்று கூறினான் (லூக்கா 15:17).

உத்தமமாக நடக்கிறவன் தன்னுடைய வழிகளில் மனநிறைவு அடைகிறான், ஏனெனில் அவை கர்த்தருடைய வழிகள். "என் பாத்திரம் நிரம்பி வழிகிறது" என்று அவனால் தாவீதோடு சேர்ந்து கூற முடியும் (சங். 23:5). அல்லது, "நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்" என்று பவுலோடு சேர்ந்து கூறலாம் (2 தீமோ. 4:7).

14:15 எளிமையான, எளிதில் ஏமாறுகிற இயல்புள்ள மனிதன் ஒவ்வொரு புதிய கருத்தையும் போலியான விளக்கத்தையும் ஏற்றுக்கொள்கிறான். **விவேகி** இரண்டாம் தடவை அதை நோக்கிப்பார்த்து, தனது **நடையைத்** தவறிலிருந்து காத்துக்கொள்கிறான். விசுவாசம் உறுதியான சாட்சியைக் கோருகிறது, அதனை தேவனுடைய வார்த்தையில் கண்டடைகிறது. போதுமான ஆதாரமில்லாமல் நம்புகிற மனிதன் ஒவ்வொரு அறிவியல் அறிஞரையும், தத்துவ ஞானியையும், உளநூல் வல்லுநரையும் எளிதில் நம்புகிறான்.

14:16 ஞானமுள்ள மனிதன் கவனமாகவும் எச்சரிக்கையாகவும் இருக்கிறான் என்பதே, அவன் பயந்து செயல்படுகிறான் என்று சொல்லப்பட்டுள்ளது. அவன் கர்த்தருக்குப் பயப்படுகிறான் என்பது இந்த வசனத்தின் பொருள் என்றும் நாம் கூறலாம் என்பதில் ஐயமில்லை.

மூடனோ அகந்தையோடு இருக்கிறான்; அவன் கவனமின்றிச் செயல்பட்டு, தடைகளைத் தகர்த்து எறிகிறான், அவன் **துணிகரமாயிருக்கிறான்** அல்லது சுய நம்பிக்கையோடு செயல்படுகிறான் என்பது தெளிவு.

14:17 முற்கோபி மதிகேட்டைச் செய்கிறான். அவன் கோபத்தில் தனது செயல்களின் விளைவுகளைக் குறித்துச் சிந்திக்காமல், அவற்றை நிறுத்தாமல் தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறான். அவன் கதவைத் தடாரென்று மூடுகிறான், கையில் கிடைத்ததைத் தூக்கி எறிகிறான், சாபமிடுகிறான், அவமதிக்கும் வகையில் கத்துகிறான், சாமான்களை உடைக்கிறான், கோபத்தோடு வெளியே செல்கிறான். ஆனால் நாம் ஒருவனைத்

தெரிந்தெடுக்க வேண்டுமென்றால், **துர்ச்சிந்தனைக்காரனைக்** காட்டிலும் இத்தகைய மனிதனை பொறுத்துக்கொள்வது சரியாயிருக்கும். துன்மார்க்கனையோ, அவனுடைய கொடூரமான செயல்களின் காரணமாக மனிதர்கள் வெறுக்கிறார்கள்.

14:18 பேதையர் புத்தியீனத்தைச் சுதந்தரிக்கிறார்கள். ஆரோக்கியமான புத்திமதிகளை அவர்கள் கேட்க மறுத்தால், அதன்மூலம் இன்னும் அதிகமாக மதியீனர்களாகச் செயல்பட ஆயத்தமாகிறார்கள் என்பதே பொருள்.

விவேகிகள் மென்மேலும் அறிவைப் பெருக்கிக்கொள்வதால் அதிகமாக மதிக்கப்பட்டு பலனடைவார்கள்.

14:19 இறுதியில் நன்மை தீமையை வெல்லும் என்பதை இந்த நீதிமொழி சுட்டிக்காட்டுகிறது. நீதிமானின் நோக்கம் சரியானது என்பதை தேவன் மெய்ப்பிப்பார். மொர்தெகாய் **முன்னிலையில்** ஆமான் **குனிய** வேண்டிய நாள் வந்தது. இப்பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொரு முழங்காலும் அரசருக்கெல்லாம் அரசரும் கர்த்தருக்கெல்லாம் கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்துவின் முன்னிலையில் கால்களை முடக்க வேண்டிய நாள்வரும்.

14:20 தரித்திரன் தனக்கடுத்தவனாலும் (அயலகத்தானாலும்) **பகைக்கப்படுகிறான்**. இவ்வாறு நடைபெறக் கூடாது, ஆனால் பெரும்பாலும் இவ்வாறுதான் நடக்கிறது. தன்னலத்தை முன்நிறுத்தியே பலர் நட்பை உருவாக்கிக்கொள்கிறார்கள். அவர்கள் ஏழைகளைத் தவிர்ப்பதும், செல்வந்தர்களோடு பழகுவதும் தன்னலம் கருதிய செயலேயாகும். நாம் அவர்களிடம் என்ன பெறமுடியும் என்பதற்காக அல்ல, நாம் அவர்களுக்கு என்ன செய்ய முடியும் என்னும் எண்ணத்தோடு மற்றவர்களோடு பழகவேண்டும்.

ஒரு பொருளில் செல்வந்தன் பல நண்பர்களைப் பெற்றிருக்கிறான், ஆனால் இன்னொரு பொருளில் உண்மையான நண்பர்கள் எத்தனை பேர் என்பதை அவன் அறிவதில்லை. அதாவது, அவன் எவ்வளவு சொத்து வைத்திருக்கிறான் என்பதற்காக அல்ல அவன் யார் என்பதற்காக அவனிடம் உண்மையாக அன்பு கூருகிறவர்கள் எத்தனைபேர் என்பதை அவன் அறிவதில்லை.

14:21 இந்த வசனம் இதற்கு முந்தின வசனத்தோடு தொடர்புடையது என்பதில் ஐயமில்லை. வறியவர்களை இழிவாகக் கருதுவது பாவம், ஏனெனில் அவர்களை தேவன் தெரிந்துகொண்டிருக்கிறார் (யாக். 2:5). தரித்திரனுக்கு இரங்குகிற வனோ பாக்கியவனாகச் செயல்புரிகிறான்.

கர்த்தராகிய இயேசு இவ்வுலகிற்கு ஏழையாகவே வந்தார் என்பதை நாம் மறக்கக் கூடாது. "ஒரு காசும் இல்லாத எனது நண்பர் நாசரேத் தூரைச் சேர்ந்தவர்" என்று ஒருவர் அவரைக் குறிப்பிட்டார்.

14:22 தீமையைத் திட்டமிட்டு, சதியாலோசனை செய்கிறவர்கள் வழிவிலகிப்போவதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். பிறருக்கு **நல்லது நினைக்கிறவர்கள் கிருபையாலும் சத்தியத்தாலும்** பலனடைவார்கள். தேவன் அவர்களுக்குத் தயவு பாராட்டுவார், அவர் பாதுகாத்துப் பலனளிப்பதாக உறுதிமொழி அளித்திருப்பதை அது மெய்ப்பிக்கிறது என்பதே இதன் பொருள். விசுவாசத்தோடும் உண்மையோடும் இருந்து மக்கள் அவர்களுக்குத் திரும்பச் செலுத்துவார்கள்.

14:23 எல்லாவிதமான மேன்மையான வேலையும் நன்மை பயக்கும். வெறும் பேச்சு வறுமையை நோக்கியே வழிநடத்தும். தங்களுடைய பிரச்சினைகளைக் குறித்து எந்நேரமும் பேசுகிற மக்களை நாம் யாவரும் அறிந்திருக்கிறோம், ஆனாலும் அவர்கள் தங்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண ஒரு சிறு முயற்சியும் செய்கிறதில்லை. அவர்கள் உலகம் முழுவதற்குமான நற்செய்திப் பிரகடனம் என்று புயலெனப் பேசுவார்கள், ஆனால் தங்கள் அயல் வீட்டாருக்கு நற்செய்தி கூறுவதற்கு சாய்வு நாற்காலியிலிருந்து எழமாட்டார்கள். அவர்களுடைய எதிர்காலத்திட்டம் என்னவென்பதை வாய்கிழியப் பேசினாலும் ஒன்றும் செய்யமாட்டார்கள்.

14:24 செல்வந்தரின் மகிமை அவர்களுடைய **செல்வமே** ஆகும். அவர்களுடைய செல்வத்தை நாம் ஆவிக்குரியது என்று கருதினாலும் வெறுமனே உலகப்பொருள் சார்ந்தது என்று கருதினாலும், அவர்கள் தங்களுடைய ஞானத்தைக் காண்பிக்கிற ஏதோ ஒன்று அவர்களிடத்தில் இருக்கிறது. **மூடர்** தங்களுடைய வாழ்க்கையையும் உழைப்பையும் வெளிப்படுத்திக் காண்பிக்க அவர்களுடைய **மதியீனமே**யன்றி வேறொன்றும் இல்லை.

14:25 நீதிமன்றத்தில் **மெய்ச்சாட்சி** கூறுகிறவன் குற்றமறியா மக்கள் குற்றஞ்சாட்டப்படுவதிலிருந்து தப்புவிக்கிறான். **வஞ்சனையாய்ச்** சாட்சி கூறுகிறவன் உண்மைகளைத் திரித்துக் கூறுகிறான். அத்தகைய வஞ்சனைச் செயலாலே

எல்லாவிதமான அழிவுக்கேதுவான விளைவு களும் ஏற்படும்.

நற்செய்தி அறிவிக்கிறவன் நித்திய மரணத் திலிருந்து ஆத்துமாக்களை இரட்சிக்கிற **மெய்ச் சாட்சியாக** இருக்கிறான். "தாராளக் கொள்கை யாளர்களும்" "கள்ளக் குழுவினரும்" பொய் பேசி ஆத்துமாக்களை வழிவிலகச் செய்யும் **வஞ் சனை** செய்யும் சாட்சிகளாவர்.

14:26 கர்த்தருக்குப் பயப்படுகிற மனிதன் திடநம்பிக்கை கொண்டிருப்பதற்கான அனைத் துக் காரணங்களையும் கொண்டிருக்கிறான். தேவன் அவனோடு இருப்பதால் வேறு எவனாலும் வெற்றிபெற முடியாது (ரோமர் 8:31). தீமை தாக்கு கிறபோது அந்த மனிதனின் **பிள்ளைகளுக்கு** தேவனுடைய செட்டைகளின் கீழ் **அடைக்கலம்** கிடைக்கிறது.

14:27 தேவனிடத்தில் கொண்டிருக்கிற நம் பிக்கை ஆவிக்குரிய சக்திக்கும் உயிர்த்தன் மைக்கும் ஆதாரமாகும். அது மரணக் கண்ணி யிலிருந்து மனிதரைத் தப்புவிக்கிறது.

14:28 குடிமக்களின் எண்ணிக்கை, மன நிறைவு, விசுவாசம் ஆகியவை அரசனின் **மகிமை யைத்** தீர்மானிக்கிறது. ஒரு **தலைவன்** ஆளுகை செய்வதற்குச் சிறிதளவு எண்ணிக்கையில் மக் கள் இருந்தாலோ மக்களே இல்லை என்றாலோ அவனுக்கு என்ன மேன்மை உண்டாகும்?

14:29 சினமூட்டப்படுகிற நேரங்களில் பொறுமை யைக் காக்கிற மனிதன் பெரிதான **அறிவுக்கூர் மையை** வெளிப்படுத்துகிறான். **முற்கோபி புத்தி யீனத்தை** வெளிப்படுத்தி, அதனை எல்லோரும் அறியும்படி செய்கிறான்.

14:30 *ஆரோக்கியமான இருதயம்* (NKJV) என்று இங்கு கூறப்பட்டிருப்பது சமாதானமுள்ள மனதைக் குறிக்கும். இதனை, **"மனச்சமாதானம் உடலுக்கு வாழ்வு கொடுக்கிறது"** என்று திரு வாளர் நாக்ஸ் மொழிபெயர்த்திருக்கிறார் - (இலகு தமிழ்)

பொறாமையும் வெறியும் ஒரு மனிதனுடைய உடல்நலத்தைக் கெடுக்கிறது. மருத்துவர் பால் அடோல்ப் இதனை உறுதிப்படுத்துகிறார்:

> நரம்பு மண்டல நோய்கள் என்று அழைக்கப் படுகிற நோய்களுக்கு முக்கியமான காரணங் களில் சில என்று மனநோய் மருத்துவர்கள் கருதுபவை குற்றவுணர்வு, சீற்றம் முன்னிக்க மறுக்கும் ஆவி, அச்சம், கவலை, ஏமாற்றம், முடிவெடுக்க முடியாத நிலை, ஐயம், பொறாமை, சுயநலம், சலிப்பு. மனநிலைத் தொல்லைகளுக்கான காரணங்கள் என்ன வென்பதைக் கண்டறியும் ஆற்றல் கொண்ட பல மனநிலை மருத்துவர்கள், அப்படிப்பட்ட தொல்லைகளைச் சரிசெய்வதற்காக எடுக்கிற நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க அளவிற்குத் தோல்வி காண்பதற்கான காரணம் என்ன வெனில் தேவனிடத்தில் கொண்டிருக்க வேண் டிய நம்பிக்கையை அவர்கள் ஒரு முறையான நடவடிக்கையாகக் கருதுவதில்லை என்பது தான். இது அவப்பேறான தாகும்.[22]

14:31 ஏழைகளைத் தனக்குச் சாதமாகப் பயன்படுத்துகிறவன் படைப்பாளரை அவமதிக் கிறான். திருவாளர் ஜார்ஜ் ஹெர்பர்ட் என்பார் கூறிய தாவது: மனிதன் தேவசாயலாக இருக்கிறான், ஆனால் வறியவன் கிறிஸ்துவின் பிரதிபலிப்பாக இருக்கிறான்.

இவ்வசனத்தின் இரண்டாவது வரி, தேவை யுள்ளவர்களுக்கு இரங்குகிறவர்கள், அச்செய லின் மூலம் தேவனை மகிமைப்படுத்துகிறார்கள் என்று பொருள்படும்.

14:32 "துன்மார்க்கன் தன் தீமையின் பல னைப் பெறுகிறபோது அவனுக்கு முடிவு உண்டா கிறது; நீதிமான் தன் மரணத்தின் வாசலிலும் நம்பிக்கை கொண்டிருக்கிறான்" (நாக்ஸ்). முதல் வரிக்கு யூதாசும், இரண்டாவது வரிக்குப் பவுலும் எடுத்துக்காட்டுகளாவர்.

14:33 "புத்திமானுடைய இருதயத்தில் ஞானம் தங்கும்" என்னும் சொற்றொடர் (1) ஞானம் அவ னிடத்தில் குடியிருக்கும் என்றோ, (2) அவன் தான் அறிந்த யாவற்றையும் தேவையின்றி சொல்லிக் கொண்டு திரிய மாட்டான் என்றோ பொருள்படும்.

இரண்டாவது வரி இன்னும் சற்றுக் கடினம். (1) **மதியீனருடைய இருதயத்தில் உள்ளது** எதுவோ அதை உடனடியாகக் கண்டுபிடிப்பீர்கள் என்றோ, (2) மதியீனருடைய இருதயத்தில் ஞானம் அறியப் படுவதில்லை (RSV) என்றோ, (3) மதியீனர் தங்களை அறியும்பொருட்டு ஞானம் பேரி ரைச்சலோடு கத்திப் பேசவேண்டும் (பார்க்லே அடிக்குறிப்பு) என்றோ பொருள்படும்.

14:34 ஓர் **இனம்** மேன்மையாக இருக்க வேண்டு மென்றால், அதனுடைய தலைவர்கள், உத்தம மானவர்கள், ஒழுக்கநெறியுடையவர்கள் என்று அவர்களுடைய **நீதியால்** அறியப்பட்டிருக்க வேண்டும். கைக்கூலி, மோசடி, லஞ்சம், சூழ்ச்சி, பழிச்செயல் இவை போன்ற எல்லாவகையான

சமுதாயச் சீர்கேடுகளும் ஒரு நாட்டுக்கு அவ மானத்தைக் கொண்டுவரும்.

14:35 ஞானத்தோடு செயல்படுகிற பணி விடைக்காரனை அரசன் தயவுடன் பார்க்கிறான் (யோசேப்பு, மொர்தெகாய், தானியேல் ஒப்பிடுக). அவமானம் ஏற்படுத்தும் வகையில் செயல்படுகிற பணிவிடைக்காரனிடம் அவனுடைய **கோபம்** வெளிப்படும். "திறமையுள்ள ஊழியனிடம் அர சன் தயவுபாராட்டுகிறான்; செயல்திறமையில் லாதவனிடம் அவன் தனது கோபத்தைக் காட்டு கிறான்" (மொ.ஃபட்).

15:1 இந்த அதிகாரத்தின் பெரும்பகுதி பேச் சைக் குறித்த விசயங்களை விவாதிக்கும்படி ஒதுக்கப்பட்டுள்ளது. மென்மையான முறையில் அல்லது சமரசம் செய்துகொள்ளும் முறையில் கூறப்படுகிற பதில் உக்கிரமான கோபம் வெடித் துச் சிதறுவதை அல்லது அதிகரிப்பதைச் தடை செய்கிறது. நீங்கள் ஒரு மனிதனிடம் **கடுஞ் சொற் களால்** பதில் கூறுவீர்கள் எனில், அது அந்த மனித னுடைய மாம்சத்திற்குரிய இயல்பைத் தூண்டி விடும், வெகுவிரைவில் உங்களுக்குள்ளாகக் கடு மையான கைகலப்பு நடக்கும். திருவாளர் ஸ்பர்ஜன் ஓர் அழகான எடுத்துக்காட்டைத் தருகிறார்:

> நான் ஒரு சமயம் வசித்து வந்த வீட்டின் தோட் டமும் என் அடுத்த வீட்டுக்காரருடைய தோட்ட மும் சரியாக வேலி அமைக்கப்படாமல் இருந் தன. அவர் ஒரு நாயை வளர்த்து வந்தார், அந்த நாயோ அதிர்ச்சி தரக்கூடிய ஒரு தோட்டக் காரனைப் போல இருந்தது. எங்கள் தோட்டத் தில் எந்தச் செடியையும் அது வளரவிடுவ தில்லை. ஒருநாள் மாலையில், நான் தனியாக நடந்து சென்றபோது, அந்த நாய் சற்றுத் தொலைவில் தோட்டத்தைக் கெடுத்துக் கொண்டிருந்தது. நான் என் கையிலிருந்த தடியை அதை நோக்கி எறிந்தேன், அதை அத னுடைய வீட்டுக்குத் திருப்பி அனுப்ப வேண்டும் என்பதே என் எண்ணமாக இருந்தது. அந்த நாய் வீட்டுக்குச் செல்லவில்லை, அது அந்தத் தடியை கவ்விக்கொண்டுவந்து என் முன் போட்டு, வாலை ஆட்டி, என்னை நோக்கிப் பாசத்தோடு பார்த்தது. அந்த நாயின் முதுகில் தட்டிக்கொடுத்து, அது ஒரு நல்ல நாய் என்று அழைப்பதைத் தவிர என்னால் வேறு ஒன்றும் செய்யமுடியவில்லை. மேலும் அதனிடம் நான் கடுமையாக நடந்துகொண்டது பற்றி வருத்தம் அடையவும் செய்தேன். [23]

15:2 ஞானமுள்ள மனிதனின் **நாவு** பயனுள்ள செய்திகளைப் பொழிகிறது. அவன் என்ன பேசு வது, எங்கே பேசுவது, எப்பொழுது பேசுவது, எவ் வாறு பேசுவது என்று அறிந்திருக்கிறான். **மூடனு டைய வாயிலிருந்து புத்தியீனம்** பெருவெள்ளம் போலப் பாய்ந்து வருகிறது.

15:3 தேவன் சர்வஞானி, அதாவது அவர் எல் லாம் அறிந்தவர். அவருடைய **கண்கள் எல்லா இடங்களிலும்** இருக்கின்றன. அவருக்கு மறை வானது ஒன்றுமில்லை. அவர் **நல்லோர் தீயோர்** எல்லோருடைய ஒவ்வொரு சொல்லையும், செய லையும், எண்ணத்தையும், நோக்கத்தையும் கவனித்துப் **பார்க்கிறார்**. இவ்வுண்மை, "இந்த அறிவு எனக்கு மிகுந்த ஆச்சரியமும், எனக்கு எட்டாத உயரமுமாயிருக்கிறது" என்று தாவீதை ஆச்சரியப்படச் செய்தது (சங். 139:6).

15:4 ஆரோக்கியமுள்ள பேச்சு புதுவலிமை, ஆறுதல், மறுமலர்ச்சி ஆகியவற்றைத் தருகிறது. நெறிதவறிய, பகைமை எண்ணம் கொண்ட பேச்சு **ஆவியை நொறுக்குகிறது**.

15:5 இந்த **மூடனை** நாம் ஏற்கனவே பார்த் திருக்கிறோம். இவன் தனது தகப்பன் பயனற்றுப் போனவன், பழம்பாணியானவன் என்று எண்ணு கிறான், மேலும் தகப்பனின் அறிவுரைகள் தகுதி யற்றவை என்றும் கருதுகிறான். ஞானமுள்ள மகன் பெற்றோரின் கடிந்துகொள்ளுதலை ஏற்று, அவற்றின் மூலமாகப் பயனடைகிறான். அவன் **விவேகி**, இன்னும் தனது விவேகத்தைப் பெருக் கிக்கொள்கிறான்.

15:6 தெய்வ பக்தி நிறைந்த வீட்டில் வளர்க்கப் பட்டவர்கள் முதல் வரியிலுள்ள உண்மைக்குச் சான்று கூறுகிறார்கள். பெற்றோர் வசதியில்லாத வர்களாக இருந்தபோதிலும், தங்களுடைய பிள் ளைகளை ஆவிக்குரிய பரம்பரையாக உருவாக் கிச் சென்றிருந்தால் அதுவே பெரு மதிப்பிற்குரியது.

நேர்மையற்ற முறையில் சம்பாதித்த பணம் அந்த மனிதனுக்கும், அவனுடைய குடும்பத்துக் கும் துன்பத்தைக் கொண்டுவரும். இதற்கொரு நல்ல எடுத்துக்காட்டு ஆகான் (யோசுவா 7).

15:7 ஞானமுள்ள மனிதனின் உரையாடல் பயனுள்ள **அறிவால்** நிறைந்திருக்கும். புத்தி யீனனின் மனது வெறுமையாக இருப்பதால் அவ னால் வேறு எவருக்கும் புத்திமதி கூறமுடியாது.

15:8 உண்மையில்லாத சடங்கு பயனற்றது என்று முதல்வரி கற்பிக்கிறது. **துன்மார்க்கன்** விலையுயர்ந்த காணிக்கைகளைக் **கர்த்தருக் குக்** கொண்டுவரலாம். ஆனால் தேவன் அவற்றை

வெறுக்கிறார். முதலாவது மனிதன் தூய்மையாக இருக்க வேண்டுமென்றே அவர் விரும்புகிறார். "பலிகளைப் பார்க்கிலும் கீழ்ப்படிதல் உத்தமம்" (1 சாமு. 15:22). செம்மையான மனிதனுடைய எளிமையான மன்றாட்டில் தேவன் மனமகிழ்வு அடைகிறார், "தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்" (சங். 51:17).

15:9 துன்மார்க்கனுடைய வழி கர்த்தருக்குப் பெருமளவு வெறுப்பூட்டுகிறது. அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து வாழ்கிற மனிதனிடத்தில் அவர் அன்புபாராட்டுகிறார்.

15:10 இந்த நீதிமொழியை இரண்டு வழிகளில் புரிந்துகொள்ளலாம். இது வெவ்வேறு மனிதர்கள் இருவரை விவரிக்கிறது எனலாம். ஒருவன் தன் மனம்போன போக்கில் சுற்றித்திரிகிறவன் **(வழியை விட்டுவிலகுகிறவன்)**, மற்றவன் புத்திமதியை ஏற்க மறுப்பவன் **(புத்திமதியால் விசனமடைகிறவன்)**. அவர்கள் பெறுகிற தண்டனைகள் முறையே **கடிந்துகொள்ளப்படுதல்** மற்றும் **சாவு**. அல்லது இரண்டு வரிகளும் ஒரே மனிதனைக் குறிக்கின்றன எனலாம். அவனுடைய மனம்போன போக்கு முதலாவது கடுமையான கடிந்துகொள்ளுதலைக் கொண்டுவருகிறது. ஆனால் அவன் அதிலிருந்து பாடத்தைக் கற்றுக்கொள்ள மறுக்கிறான், ஆகவே மரணத்துக்குள் மூழ்கிவிடுகிறான். எபிரெய மொழியின் கவிதை அமைப்பு (ஒருபோகுநிலை) இரண்டாவது விளக்கத்தை ஆதரிக்கிறது.

15:11 பாதாளமும் (நரகம்) அழிவும் கல்லறைக்குப் பின்னால் உள்ள காணக்கூடாத உலகிற்கு அடையாளங்களாயிருக்கின்றன. மரணத்தில் என்ன நிகழ்கின்றன, அதற்குப் பின் நடக்கப் போகிறவை யாவற்றையும் தேவன் அறிந்திருக்கிறார் எனில், பூமியில் உயிர்வாழ்கிற மனிதர்களுடைய எண்ணங்களையும் இரகசியங்களையும் அவர் எவ்வளவு அதிகமாக அறிந்திருப்பார்? "சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமுமாயிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்" (எபி. 4:13).

15:12 பரியாசம் செய்கிறவன் தான் திருத்தப்படுவதை எதிர்க்கிறான். அவன் ஆலோசனை பெறும்பொருட்டு ஞானமுள்ள மனிதனிடம் செல்வதுமில்லை. மாறாக, தான் கேட்கவேண்டும் என்று விரும்புவதைச் சொல்கிறவனிடமே அவன் செல்கிறான். அத்தகைய வழிமுறை தன்னைத்தான் தோற்கடிப்பதாக அமையும்; அது அவனுடைய வீண் பிடிவாதத்தை உறுதிப்படுத்தி, சோம்பல் என்னும் துயருற்ற நிலையில் அவனை நிலைத்திருக்கச் செய்துவிடும்.

15:13 மகிழ்ச்சி நிறைந்த இருதயம் புன்னகையுடன் கூடிய முகத்தில் பிரதிபலிக்கும் ஆனால் நொறுங்குண்ட இருதயம் ஆழ்ந்த விளைவுகளைக் கொண்டிருக்கும். அது சோர்வையும் மனத்தளர்ச்சியையும் உண்டுபண்ணும்.

15:14 மிகவும் அறிவுள்ள மனிதர்கள் அறிவைத் தேடிச்செல்லுகிற தங்களுடைய செயலை நிறுத்தமாட்டார்கள். **மூடரின் வாய்கள்** மதியீனம் என்னும் வெறுமையை மென்றுகொண்டே இருக்கும். "ஞானமுள்ளவன் அதிக ஞானத்தைப் பெறுகிறான், மூடன் இன்னும் அதிக மந்தபுத்தியுள்ளவனாகிறான்."

15:15 கெடுதலே நடக்கும் என்னும் மனநிலை உள்ளவனுக்கும், நல்லவை வெற்றிபெறும் என்னும் மனநிலை உள்ளவனுக்கும் இடையே உள்ள வேறுபாடு இங்கு உரைக்கப்பட்டுள்ளது. முதலாவது மனிதன் எப்பொழுதும் சோர்வுற்று இருக்கிறான். அவன் மகிழ்ச்சியில்லாமல், அச்சத்தோடு, மறுத்துரைக்கும் இயல்புடன் இருக்கிறான். நல்லவை வெற்றி பெறும் என்னும் மனநிலை உள்ளவன் தொடர்ந்து முன்னிலையில் இருப்பவனாகவே காணப்படுகிறான். அவன் வாழ்க்கையின் நிறைவை மகிழ்ச்சியுடன் அனுபவிக்கிறான்.

15:16 ஏழை விசுவாசி சஞ்சலத்துடன் இருக்கும் செல்வந்தனிலும் மேலானவன். பொருட்செல்வம் தன்னுடன் தொல்லைகளைச் சேர்த்துக் கொண்டிருக்கிறது. விசுவாச வாழ்க்கை கவலையற்ற வாழ்க்கை.

15:17 அன்பு பாராட்டும் சூழலோடு ஒரு தட்டில் காய்கறி உணவு பரிமாறப்படுதல், பகைமையோடு தரப்படும் தொடைக்கறியின் மென்மையான பகுதியில் செய்யப்பட்ட வறுவலைக் காட்டிலும் மேலானதாகும். "பகைமையுடன் பரிமாறப்படும் கொழுத்த இளங்கன்றின் இறைச்சியை விட, அன்பிருக்கும் இடத்தில் கிடைக்கும் மரக்கறி உணவே சிறந்தது" (மொ.ஃபட் - இலகு தமிழ்).

ஒரு கொட்டிலில் நல்ல உணவு ஊட்டி வளர்க்கப்பட்ட கொழுத்த கன்றின் இறைச்சி மிருது வாயும் சுவையாகவும் இருக்கும்.

திருவாளர் ஜோசப் R. சிஜோ கூறுகிறார்:

அமெரிக்காவில் ஒரு நகரத்தின் அருகில் இருந்த மிகுந்த ஆடம்பரமான பண்ணைத்

தோட்டம் ஒன்றிற்கு நான் சென்றிருந்தேன். அங்கிருந்த வீட்டிற்குள்ளேயே இத்தாலி நாட்டு அடுப்படியும், பெல்ஜிய நாட்டு திரைச்சீலை களும், கிழக்கத்திய தரை விரிப்புகளும், விலை யுயர்ந்த சித்திரங்களும் இருந்தன. நான் ஒரு நண்பரிடம், "இங்கு வாழ்ந்த மனிதர்கள் எவ் வளவு மகிழ்ச்சியோடு இருந்திருப்பார்கள்" என்று கூறினேன். "ஆனால் அவர்கள் அப்படியிருக்கவில்லை, அவர்கள் பெருஞ் செல்வந்தர்களாக இருந்தபோதிலும், கண வனும் மனைவியும் ஒருவரோடொருவர் பேசிக் கொள்ளவே இல்லை. இந்த இடம் பகைமை வளர்ப்புக்கு எடுத்துக்காட்டாக விளங்கியது! அவர்கள் தேவனிடத்தில் அன்பு பாராட்ட வில்லை, மேலும் ஒருவரோடொருவர் அன்பு பாராட்டவும் இல்லை" என்று அந்த நண்பர் பதில்கூறினார் (அனுதின மன்னர்).

15:18 மூர்க்க குணமுள்ள மனிதன் எப்பொழு தும் **சண்டை** போடுகிறான். ஞானமுள்ளவன் **சண்டையைத்** தவிர்ப்பது அல்லது அது தொடங்கி விட்டால் அதைத் தடுத்து நிறுத்துவது எப்படி என்று அறிந்திருக்கிறான்.

15:19 சோம்பேறியின் வழி எல்லாவகை யான தொல்லைகளாலும் சூழ்ந்திருக்கிறது. அவன் ஒன்றும் செய்யாமல் இருப்பதற்கு இவற் றைக் காரணம் காட்டுவான். **நீதிமானின் வழி** கரடுமுரடாக இராமல் நன்கு போடப்பட்ட **ராஜ பாதையாக** இருக்கிறது.

15:20 தூய்மையாக வாழ்கிற **மகன்** தன் தகப் பனுக்கு மனநிறைவைக் கொண்டு வருகிறான். ஆனால் ஊர்சுற்றி வழிவிலகிப் போகிறவன் தன் **தாயின்** விருப்பத்துக்குக் கீழ்ப்படிவதில்லை, அவளுடைய கண்ணீரைப் பொருட்படுத்துவ தில்லை, இவ்வாறு அவன் அவளுக்கு அவ மானத்தைக் கொண்டுவருகிறான்.

15:21 மூடன் தன் மதியீனத்தில் மகிழ்ச்சி யடைகிறான். சிறந்தது எதையும் அவன் அறிந் திருப்பதில்லை. அமைதியும் நன்னெறியும் உள்ள வாழ்க்கையில் ஞானமுள்ளவன் மகிழ்ச்சி அடை கிறான்.

பன்றிசேற்றில் புரளுவதில் மகிழ்ச்சி அடை கிறது, ஆனால் ஆடு தூய்மையான புல் வெளியை விரும்புகிறது.

15:22 தனிமையில், பிறர் ஆலோசனையின்றி செயல்படுகிற மனிதர்கள், தங்களுடைய திட் டங்களில் தோல்வியடைகிறார்கள். பலவிதமான செய்திகளைச் சேகரித்து, நல்லாலோசனை களைப் பெறுவது பாதுகாப்பானது. அனுபவ முள்ள மனிதர்கள் தவிர்க்க வேண்டிய ஆபத்து களைக் குறித்து எச்சரிப்பார்கள், நல்ல வழி களை அவர்கள் முன்மொழிந்து ஆலோசனை தரக்கூடும்.

15:23 நேர்மையான, உதவிபுரியக் கூடிய பதில் கொடுக்கக்கூடிய திறமை இருக்குமெனில், அதன் காரணமாக மனநிறைவு உண்டாகும். தக்க தருணத்தில் பேசப்பட்ட, அதாவது ஒரு தேவை செய்து முடிக்கப்படும்படி சொல்லப்பட்ட **வார்த்தை எவ்வளவு நல்லது**! ஏசாயா 50:4 - உடன் ஒப்பிடுக: "இளைப்படைந்தவனுக்கு சமயத் திற்கேற்ற வார்த்தை சொல்ல..." அந்தச் சொல் லைப் பேசுவதற்கு இயேசு நாதர் அறிந்திருக் கிறார்.

15:24 மரணத்தையும் அழிவையும் நோக்கி வழிநடத்தக்கூடிய கீழான பாதையை **ஞானமுள்ள** மனிதன் தவிர்க்கும்படி, அவனுடைய வழி வாழ்வை நோக்கிய **உன்னத வழியாகும்**. மனுக் குலம் செல்லக்கூடிய இரண்டு பாதைகள், இரண்டு சேருமிடங்கள் பற்றி மீண்டும் நாம் நினைவுபடுத்தப்படுகிறோம்.

15:25 அகந்தையும், நினைத்ததைச் செய்து முடிக்க வேண்டும் என்னும் இறுமாப்பும் கொண்ட மனிதர்களின் சொத்தைக் **கர்த்தர்** அழிப்பார். ஆனால் ஒடுக்கப்பட்ட விதவையின் சிறு நிலத் தின் **எல்லைகளைப்** பாதுகாப்பார்.

15:26 நேர்மையற்ற மனிதர்களின் பொல்லாத திட்டங்களைக் கர்த்தர் வெறுத்துத் தள்ளுவார். ஆனால் தூய சிந்தனை உள்ளவர்களின் சொற் களில் மகிழ்வு பெறுகிறார்.

15:27 கைக்கூலி பெற்று தனது வங்கிக் கணக்கை பெருக்கிக்கொள்கிற நீதிபதியையோ அரசு அதிகாரியையோதான் இந்த நீதிமொழி குறிப்பிடுகிறது எனலாம். அவ்வாறு செய்யும் போது நியாயத்தை அந்த மனிதன் தலைகீழாக மாற்றுகிறான், மேலும் அவனுடைய நடத்தை யைக் கெடுக்கிறான். இதற்கும் அதிகமாக அவன் தன்னுடைய சொந்த விட்டுக்கே அளவற்ற பங்கம் விளைவிக்கிறான். **பரிதானத்தை** எல்லா நிலை களிலும் ஏற்க மறுக்கிறவன் தன் வாழ்க்கையை மகிழ்வுடன் அனுபவிக்கிறான்.

15:28 நல்ல மனிதன் பேசுவதற்கு முன் சிந் திக்கிறான். அவன் என்ன பதில் கூற வேண்டும்

என்று ஆழ்ந்து சிந்திக்கிறான். துன்மார்க்கன் தன் வாயைத் திறக்கிறபோது, அங்கிருந்து தரக் குறைவான, இழிவான, மனதைப் புண்படுத்துகிற சொற்கள் வெள்ளம்போல வெளிப்படுகின்றன.

15:29 கர்த்தர் துன்மார்க்கரை விட்டு வெகு தொலைவில் இருக்கிறார் என்பது, அவர் அவர் களோடு தொடர்புகொண்டிருப்பதில் மகிழ்ச்சியை அனுபவிக்கிறதில்லை என்று பொருள்படும். அவர் களும் ஜெபத்தால் அவரோடு தொடர்புகொள்வ தில்லை. விசுவாசிகளோ இந்தப் பிரபஞ்சத்தின் அரசரோடு, அவருடைய விண்ணக அரியணை அறையில் ஜெபத்தின் மூலமாக உடனடியாகத் தொடர்புகொள்கிறார்கள். "பாவிகளுக்கு தேவன் செவிகொடுக்கிறதில்லையென்று அறிந்திருக் கிறோம்; ஒருவன் தேவபக்தியுள்ளவனாயிருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக் குச் செவிகொடுப்பார்" (யோவான் 9:31).

15:30 ஒரு மனிதனுடைய ஒளிவீசும் முகக் களை மற்றவர்களுக்கு அதே உணர்ச்சிகளைத் தரவல்லது. அவன் சந்திக்கிற அனைவரும் இருதயத்தில் மனமகிழ்ச்சியைப் பெறுவார்கள். மேலும் நல்ல செய்தி ஒரு மனிதனின் எல்லாக் கூறுகளையும் மகிழ்வடையச் செய்யும்.

15:31 மெய்யான ஜீவ வழியை நோக்கி வழி நடத்தக்கூடிய ஆலோசனையைக் கேட்டு அதன் படி நடக்கிற மனிதன் பூமியில் ஞானமுள்ளவர் களுக்கு நடுவே இருப்பான். பொதுவாகத் திரு மறை முழுவதும், குறிப்பாக நற்செய்தி நூல்கள் வாழ்வு தரும் ஆலோசனைகளாகும்.

15:32 தேவபக்தியுள்ள **புத்திமதியை** ஒருவன் கேட்க மறுப்பான் என்றால், அவன் தன்னையே இழிவாகக் கருதுகிறான் என்று பொருள்படும், ஏனெனில் அவன் அழிவு என்னும் பேரருவிக்குள் பாய்கிறவனாகக் காணப்படுவான். **கடிந்து கொள்ளுதலைக் கேட்கிறவன்** தன்னைப் பற் றிய அக்கறையை வளர்த்துக்கொள்கிறான்.

15:33 கர்த்தருக்குப் பயப்படுதல் ஞானத் திடம் வழிநடத்தும் ஒழுங்கு. தாழ்மை **மேன் மைக்கான** வழியாகும்.

ஆ. நீதியுள்ள வாழ்க்கைமுறை பாராட்டப்படு தல் (16:1–22:16)

16:1 பதினாறாவது அதிகாரத்தின் முதல் பதினோரு வசனங்களில் ஒன்பதுமுறை யெகோவா (கர்த்தர்) என்னும் பெயர் இடம்பெற்றுள்ளது. மனிதன் தன் திட்டங்களை முன்கூட்டியே திட்ட மிடக்கூடும். ஆனால் சர்வ அதிகாரமும் கொண்ட கர்த்தர் தமது நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு மனிதனுடைய சொற்கள் அனைத்தை யும் ஒதுக்கித் தள்ளுகிறார். மனிதன் திட்டமிடு கிறான், தேவன் தீர்மானிக்கிறார்.

எடுத்துக்காட்டாக பிலேயாம் இஸ்ரவேல் மக்களைச் சபிக்க விரும்பினான், ஆனால் அவனு டைய வாயிலிருந்து ஆசிர்வாதச் சொற்களே வெளிவந்தன (எண். 22:38; 23:7-10).

அல்லது காய்பாவை நினைத்துப்பாருங்கள், அவன் தனது ஞானத்துக்கு அப்பாற்பட்டு பேசி னான் (யோவான் 11:49-52). இயேசுவுக்கு என்ன நிகழவேண்டும் என்று தேவன் ஏற்கனவே தீர் மானித்தவற்றையே ஏரோதும் பிலாத்தும் செய் தார்கள் (அப். 4:27,28).

துன்புறுத்தப்பட்ட இறைமக்கள் விசாரிக்கப் படும்போது என்ன பேச வேண்டும் என்று திட்ட மிடுகிறார்கள், ஆனால் நேரத்திற்குத் தகுந்த சொற்களை தேவன் தருகிறார். இதனை இந்த வசனம் குறிக்கிறது எனலாம் (மத். 10:19).

16:2 ஒரு மனிதனுடைய வழிகள் அவனுடைய வெளிப்புறச் செயல்கள், அவற்றால் அவன் தன்னைச் சீர்தூக்கிப் பார்த்துச் சுத்தமானவன் என்று அறிவிக்கிறான். ஆனால் தேவனோ நோக் கங்களையும் விருப்பங்களையும் பார்க்கிறார். "தன் பிழைகளை உணருகிறவன் யார்? மறை வான குற்றங்களுக்கு என்னை விடுதலையாக் கும்" (சங். 19:12).

16:3 நம்முடைய கனவுகளும் இலக்குகளும் நிறைவேற வேண்டுமானால், அவற்றை நிச்சயப் படுத்துவதற்கான ஒரே வழி நம்முடைய **செய்கை களைக் கர்த்தருக்கு ஒப்புவிக்க** வேண்டும். திரு வாளர் J. ஆலன் பிளேர் அறிவுரை வழங்குகிறார்:

> சிலவேளைகளில் கர்த்தருடைய பணியைச் செய்ய முயற்சி செய்யும்போதுகூட, நாம் அமைதியின்றி மனவழுத்தம் அடைகிறோம். தேவனுடைய விருப்பத்தைக் காட்டிலும் ஒரு செயலில் முன்னேற்றம் அடைவதற்கு வேறு எதுவும் துணைபுரிய முடியுமா? கவலையுள்ள இருதயங்களின் மூலமாக தேவனால் செயல் புரிய முடியாது. ஒரு கிறிஸ்தவன் இந்த நிலையை எட்டுகிறபோது, அவன் செயல்படாமல் நிறுத்தித் தன்னிடத்தில், ''இது யாருடைய வேலை?'' என்னும் கேள்வியைக் கேட்கவேண்டும். அது தேவனுடைய வேலையானால், அதனுடைய சுமை தேவனைச் சார்ந்தது என்பதை ஒருக்

காலும் மறக்கக்கூடாது. நீங்கள் முக்கியமான ஆள் இல்லை. கிறிஸ்துவே முக்கியமானவர்! அவர் தமது செயலை நமது மூலமாகச் செய்கிறார். செயல்களில் நல்ல முன்னேற்றம் காணப்படவில்லையென்றால் நாம் என்ன செய்ய வேண்டும்? அவரிடம் செல்லுங்கள்! இதற்குக் குறைவானது எதுவும் கீழ்ப்படியாமையேயாகும்.[24]

மன்றாட்டு: "எல்லாவற்றிலும் தேவனைக் காணும் கண்களை எனக்குத் தாரும், எல்லாவற்றிலும் அவருக்குச் சேவைபுரியக் கூடிய கைகளை எனக்குத் தாரும், எல்லாவற்றிற்காகவும் அவருக்குப் புகழ்ச்சியைச் செலுத்தும் இருதயத்தை எனக்குத் தாரும்" (அனுதினக் குறிப்புகள்).

16:4 சில மனிதர்களை தேவன் நரகத்திற்கென்று படைத்தார் என்று இந்த வசனம் கூறுகிறதில்லை. தேவன் சிலரை ஏற்க மறுத்துத் தள்ளிவிடுகிறார் என்னும் கொள்கையை வேதம் எங்கும் கற்பிக்கிவில்லை. மனிதர்கள் தங்களுடைய சொந்தத் தெரிந்தெடுப்பின் மூலமாகவே நரகத்திற்குச் செல்கிறார்கள், அது தேவனுடைய ஆணையல்ல.

தேவன் ஒவ்வொரு பொருளையும் குறித்து ஓர் இலக்கு, குறிக்கோள் அல்லது நோக்கம் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு நிகழ்விலும் ஒரு விளைவு உண்டாகிறது, அது பரிசாக இருக்கலாம் அல்லது தண்டனையாக இருக்கலாம். அவரிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு அவர் விண்ணகத்தை ஆயத்தம் செய்து வைத்திருப்பதுபோல, துன்மார்க்கனுக்கும் துன்பமோ கேடோ உண்டாகும் நாள் வரும். "தேவன் உருவாக்கிய ஒவ்வொன்றுக்கும் ஒரு முடிவிடத்தை உண்டாக்கி வைத்திருக்கிறார்; துன்மார்க்கனின் முடிவு அழிவு" (TVE).

16:5 மனிதனுடைய அகந்தை கர்த்தருக்கு அருவருப்பானது. நாம் முன்னர் விளக்கிக் கூறியதுபோல் அவர்கள் படையாக ஒன்று சேர்ந்தாலும் என்னும் சொற்றொடர் **கையோடு கைகோத்தாலும்** என்றே பொருள்படும் (தமிழில் இவ்வாறே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது). இந்த வசனத்தில், மனமேட்டிமையுள்ளவர்கள் தண்டனை பெறுவது நிச்சயம் என்பதைக் கூறும்படியே இச்சொற்றொடர் இடம்பெற்றுள்ளது.

16:6 இந்த வசனத்தில் சொல்லப்பட்டுள்ள கோட்பாடு, இதே பொருள்பற்றிய மற்ற வசனங்களின் வெளிச்சத்தில் காணப்படவேண்டும். கிருபையும் சத்தியமும் உடையவன் இரட்சிப் படைவான் என்பது இதன் பொருளன்று. இரட்சிப்பு கிருபையினாலே கர்த்தர்மேல் வைக்கும் விசுவாசத்தைக் கொண்டு பெறப்படும். இரட்சிப்பிற்கான விசுவாசத்தின் அடையாளங்களாக **கிருபையும் சத்தியமும்** எந்த அளவிற்கு இருக்கின்றன என்று சொல்ல வேண்டுமானால், அவை **பாவத்தை** அகற்றித் தூய்மைப்படுத்துவதற்கு அடையாளங்கள் என்று சொல்லலாம்.

இந்த நீதிமொழியின் இரண்டாம் பகுதியின் பொருள் அதனுடைய வெளித்தோற்றத்திலிருந்தே அறியப்படும். கர்த்தரிடத்தில் நம்பிக்கை கொண்டிருப்பதால் மனிதர்கள் பேரிடர் மற்றும் இயற்கைச் சீற்றம் ஆகியவற்றிலிருந்து தப்பிக்கிறார்கள்.

16:7 பல நீதிமொழிகளைப் போலவே இது ஒரு பொதுவான விதியாக இருக்கிறது, ஆனாலும் இதற்கு விதிவிலக்குகள் உள்ளன. "நீதியுள்ள வாழ்க்கை எதிர்ப்பை நிராயுதபாணியாக ஆக்குகிறது." அல்லது, "நற்குணம் கவரும் ஆற்றல் படைத்தது, பகைவரையும் கூட அது வெல்லுகிறது" என்று திருவாளர் பார்னஸ் கூறினாற் போலவும் இது இருக்கிறது.

ஸ்டேன்டன் என்பார் திருவாளர் லிங்கனை மிகவும் இழிவாகப் பேசி வந்தார். அவர் லிங்கனை, "கீழ்த்தரமான தந்திரம் செய்யும் கோமாளி" என்று கூறியதோடு, "உண்மையான கொரில்லா" என்றும் வருணித்தார். ஒரு கொரில்லாவைப் பிடிக்க ஆப்பிரிக்காவுக்குச் செல்ல வேண்டிய தில்லை, ஏனெனில் இல்லியனாய்சில் ஸ்பிரிங்பீல்ட் என்னுமிடத்தில் ஒன்று இருக்கிறது என்றும் கூறினார். லிங்கன் ஒருதடவைகூட இதை எதிர்த்துப் பதில் தாக்குதல் செய்யவில்லை. ஆனால் அவர் ஸ்டேன்டனுக்கு தனது யுத்த அமைச்சர் பதவியைக் கொடுத்தார். அவரே அந்த வேலைக்கு மிகவும் தகுதிபடைத்தவர் என்று எண்ணினார்.

பல ஆண்டுகளுக்குப் பின்னர் சதிகாரரின் துப்பாக்கிக் குண்டுக்குத் திருவாளர் லிங்கன் பலியானார். அவருடைய கரடுமுரடான முகத்தைக் குனிந்து பார்த்த ஸ்டேன்டன் கண்ணீர் மல்க, "உலகம் இதுவரை கண்ட ஆட்சியாளர்களிலேயே மிகச் சிறந்தவர் இங்கு படுத்திருக்கிறார்" என்று கூறினார்.

16:8 நேர்மையாக ஈட்டிய அளவான வருமானம், **அநியாயமாய்** அல்லது மோசடிசெய்து சம்பாதித்த **அதிக வருமானத்தைக்** காட்டிலும் **உத்தமம்**.

16:9 முதல் வசனத்தில் நாம் நினைவூட்டப் பட்டதுபோல, மனிதன் தனது வாழ்க்கைத் தொழி லைக் குறித்து மிகப்பெரிய நீண்டகாலத் திட்டங் களை வகுக்கிறான், ஆனால் கர்த்தர்தாமே இந்தத் திட்டங்கள் நிறைவேறுமாவென முடிவு செய்கிறவர். தமஸ்குவில் இருந்த கிறிஸ்தவப் பரிசுத்தவான்களைத் துன்புறுத்தத் தர்சு நகரத் தைச் சேர்ந்த பவுல் திட்டமிட்டார். ஆனால் அவர் களில் ஒருவராகப் பவுல் மாறினார்! ஒநேசிமு பிலோமோனைவிட்டு நிரந்தரமாக ஓட நினைத் தான், ஆனால் தேவன் அவனை முன்னிருந்த தைக் காட்டிலும் மேலான நிலைக்கு அதே இடத் திற்குத் திரும்பவும் கொண்டு வந்தார்.

16:10 அரசன் தேவனுடைய பிரதிநிதி (ரோமர் 13:1), ஆகவே அவனுடைய கட்டளைகளும், முடிவுகளும் அதிகாரமுடையவை, முடிவானவை. ஆகவே **அவனுடைய வாய் நீதிக்குத் துரோகம் செய்யக்கூடாது** (இலகு தமிழ்).

16:11 தேவன் அளவுகோலைக் குறித்துச் சட்டத்தை நிறுவியிருக்கிறார். அவர் **நேர்மை யான அளவுகோலையும், தராசையும்** தீர் மானிக்கிறார். அவருடைய தர அளவின்படி மனி தர்கள் நடக்கும்போது, அவர் அவர்களைப் பாராட்டி, ஆசிர்வதிக்கிறார்.

16:12 அநியாயம் செய்வதென்பது எவருக் குமே அருவருப்பானது, முக்கியமாக அரசர் களுக்கு அது அருவருப்பாகும். அந்தப் பதவியில் அவர்கள் தேவனைப் பிரதிபலிக்கிறார்கள், ஆகவே அவர்களுக்குப் பெருமளவில் பொறுப்பு உள்ளது. நீதியைச் செலுத்த வேண்டும் என்னும் அடிப்படையிலேயே **சிங்காசனம் உறுதிப்படுத் தப்பட்டுள்ளது**.

ஓர் அரசின் குடிமக்கள் **அநியாயம்** செய்வது அவ்வரசனுக்கு **அருவருப்பானது** என்றும் இவ்வசனத்தோடு நாம் சேர்த்துக் கூறலாம். நீதி யின் மூலமாகவே ஓர் அரசாங்கம் சட்டத்துக்குக் கட்டுப்பட்டு ஒழுங்காக நடைபெறும். எங்கே நன் னெறி ஒழுங்குகள் கடைப்பிடிக்கப்படவில்லையோ அங்கே அராஜகம் நிலவும்.

16:13 நல்ல அரசர்கள் முகத்துதி செய்பவர் களையும் மாய்மாலமாகப் பேசுபவர்களையும் பாராட்டமாட்டார்கள். நம்பகத்தன்மையோடு பேசுகிறவர்களை, அதாவது வெளிப்படையாக மனப்பூர்வமாகப் பேசுகிறவர்களை அவர்கள் விரும்புகிறார்கள்.

16:14 கடுஞ்சினம் மூண்டவுடனேயே, ஓர் அரசன் குற்றவாளிகளுக்கு உடனடியாக **மரண** தண்டனை விதிக்கக் கூடும். ஞானமுள்ள மனிதன் அரசனுக்குத் தேவையற்ற வகையில் சினத்தைத் தூண்டிவிடாமல், அவனை அமைதிப்படுத்தும் படியே பேசுவான்.

16:15 ஓர் அரசன் மகிழ்ச்சியோடிருக்கும்போது, அவனுடைய இன்பமான **முகக்களை** அந்நாடு முழுவதும் உவகையைப் பரவச் செய்யும். அவனு டைய **தயை பின்மாரியைப்** பொழியச் செய்யும் மேகங்களைக் கொண்டுவரும்.

16:16 ஞானத்தோடும் அறிவோடும் உலகச் செல்வத்தை ஒப்பிட முடியாது. ஓரிரவில் செல்வம் காணாமற்போவதை அவ்வப்போது காண் கிறோம், ஆனால் ஞானம் நிலைபேறுடையது.

16:17 செம்மையானவர்கள் பாவம் என்னும் விலகிச்செல்லும் பாதையில் திரும்பாமல், பரி சுத்தம் என்னும் நேர்பாதையிலேயே செல்கிறார் கள். இந்தப் பெரும்பாதையில் தன் **நடையைக் காக்கிறவன்** தன் உயிரை ஆபத்திலிருந்தும் அவப்பேறிலிருந்தும் **காக்கிறான்**.

16:18 ஓர் உயரமான மரம் மின்னலைத் தன்னி டமாக இழுக்கிறது. அதுபோல தேவன் ஆணவம் மிகுந்தவர்களை கீழே விழத்தள்ளுகிறார். இறு மாப்புக்கொண்ட மனிதர்கள் பெரும்பாலும் அவ மானத்துக்குரிய அனுபவங்களை சந்திக்க நேரிடு கிறது, அவை அவர்களுடைய தற்பெருமையை அகற்றுவதற்கென்று வடிவமைக்கப்பட்டுள்ளன. பெரிய பலூனைத் துளையிட ஒரு சிறிய குண்டூசி போதும்.

லூசிபர் **விழுவதற்குக்** காரணமாயிருந்தது அவனுடைய **மனமேட்டிமையேயாகும்.** மார்லோ இதனை விவரிக்கிறார், "ஆணவமும் இறுமாப்பும் கொண்டவனாக அவன் தன்னை உயர்த்திய போது, அதன் காரணமாக தேவன் அவனை பர லோகத்தின் பார்வையிலிருந்து தூக்கி எறிந்தார்."

16:19 பெருமையுள்ளவர்களோடு நன்மை யானவை என்று தோற்றமளிக்கும் பொருட்களைப் பங்கிடுவதைப் **பார்க்கிலும், ஆவியில் எளிமை யுள்ளவர்களாய் ஒடுக்கப்பட்டவர்களோடு** தோழமை கொண்டிருப்பது **நல்லது** (இலகு தமிழ்).

> முடியினைச் சூடிடத் தலையினைத் தாழ்த்திடு,
> சிகரத்தை அடைந்திடக் கீழிறங்கிச் சென்றிடு,
> கீழிறங்கிச் செல்கையில் உயர்வினை அடைந்திடுவாய்,
> அதனினும் தாழ்விடத்தில்
> உன்னதத்தைக் கண்டிடுவாய்!

16:20 அறிவுறுத்தலை ஏற்றுக்கொள்பவன் செழிப்படைவான், கர்த்தரில் நம்பிக்கையாயிருப்பவன் ஆசிர்வதிக்கப்படுகிறான் (இலகு தமிழ்).

"உனது திருமறையைப் படி, அதற்குச் செவி கொடு, அதனை எழுதியவரிடத்தில் நம்பிக்கையாயிரு" என்று இந்த நீதிமொழி கூறுகிறது.

16:21 மெய்யாக ஞானமுள்ளவன் அவனுடைய பகுத்தறிவுக்காகவும் அறிவுக் கூர்மைக்காகவும் புகழப்படுவான். மேலும், அவன் பிறரிடம் பேசும் முறை அவர்கள் அவனுக்குச் செவிகொடுக்கச் செய்யும், அவன் கற்பிப்பதை விருப்பத்துடன் ஏற்கச் செய்யும். "பேச்சின் இனிமை இணக்கத்தை அதிகரிக்கச் செய்யும்" (NASB).

16:22 விளங்கிக்கொள்வதற்கான ஆற்றல் வாழ்வின் ஊற்றாகச் செயல்படுகிறது. மேலும் அது அதைப் பெற்றிருப்பவருக்குப் புத்துணர்வைத் தருகிறது. ஆனால் **மதியீனம்** மூடர்களுக்குச் சாட்டையடி போன்றது. அவர்கள் தங்கள் சொந்த **மதியீனத்தால்** தண்டிக்கப்படுகிறார்கள். "மதியீனம் மூடர்களின் சிட்சை" (பார்க்லே).

16:23 ஞானமுள்ள மனிதனின் இருதயத்தில் என்ன இருக்கிறது என்பதன் அளவுகோலாக இருப்பது அவனுடைய பேச்சு. அவன் தான் கூறுகிற சொற்களின் மூலமாக தன்னுடைய அறிவை வெளிப்படுத்துகிறான். அவனுடைய கூற்று இணங்கச் செய்யும் தன்மையுள்ளது. அவன் அதிகாரத்துடன் பேசுகிறான்.

16:24 தயவுள்ள, **இனிய சொற்கள் தேன்கூட்டின்** பண்புகளைப் பெற்றுள்ளன - அதன் சுவை இனிமை, **எலும்புகளுக்கு ஔஷதமாகும்.** "நம்மால் முடிந்தபோது ஒருவரிடம் இனிமையாகப் பேசுவோமானால், அவருடைய மனதிலும் பின்னர் உடலிலும் சிறிய பயனைக் கொண்டுவருபவராய் விளங்குவோம்" என்று கிட்னர் சொன்னாற்போல இது இருக்கிறது.

ஒரு பெண்மணியின் கணவன் அவள் செய்த எந்தவொரு செயலுக்காகவும் அவளைப் புகழ்ந்து பாராட்டியதே இல்லை, அவளுடைய கதையைத் திருவாளர் வாச்மேன் நீ இவ்வாறு கூறினார். தான் மனைவி மற்றும் தாய் என்னும் நிலையில் தோல்வியுற்றதாக அவள் தொடர்ந்து கவலைப்பட்டு வந்தாள். பெரும்பாலும் அவள் எலும்புருக்கி நோயால் பாதிக்கப்பட்டதற்கு அதுவே காரணம் என்றும் அவள் நினைத்தாள். அவள் மரண மடையும் தருணத்தில், அவளுடைய கணவன் அவளிடத்தில், "நாங்கள் என்ன செய்வோம் என்று எனக்குத் தெரியவில்லை. நீ எங்களுக்காக என்னவெல்லாம் செய்திருக்கிறாய், எல்லாவற்றையும் நன்றாய்ச் செய்தாய்" என்றான். "இதை ஏன் முன்னமே என்னிடத்தில் சொல்லவில்லை" என்று கேட்ட அந்தப் பெண் தொடர்ந்து, "இது வரைக்கும் என்னை நான் குறைசொல்லி வந்தேன், ஏனெனில், 'நன்றாய்ச் செய்தாய்' என்று ஒரு முறை கூட நீங்கள் சொல்லவில்லை" என்றாள்.[25]

16:25 இந்த வசனம் 14:12 -இல் சொல்லப்பட்டு இங்கு மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது. நல்லவனாக இருப்பதும் நல்லது செய்வதும் பரலோகத்திற்கான வழி என்று கூறுவது வாதத்திற்குச் சரியெனத் தோன்றுகிறது. ஆனால் உண்மை என்னவெனில் கிருபையால் இரட்சிக்கப்பட்ட பாவிகள் மட்டுமே அங்கு செல்லமுடியும்.

16:26 பிரயாசப்படுகிறவன் தனக்காகவே பிரயாசப்படுகிறான்; அவனுடைய (பசியுள்ள) வாய் அதை அவனிடத்தில் வருந்திக் கேட்கும். தான் வேலை செய்யவில்லையென்றால் சம்பளம் கிடைக்காது என்பதை அவன் அறிந்திருந்தான். பணம் இல்லையென்றால் கடைக்குச் சென்று உணவுப் பொருட்களை வாங்க முடியாது என்றும் அவன் அறிந்திருந்தான். ஆகவே தான் வேலை செய்வதை நிறுத்த வேண்டும் என்னும் சோதனை எழுமென்றால், அவனுடைய பசி அவனைத் தொடர்ந்து வேலை செய்யும்படி வற்புறுத்தும்.

ஆவிக்குரிய விசயத்திலும் இது உண்மையாகவே இருக்கிறது. நம்முடைய ஆவிக்குரிய இன்றியமையாத தேவையை நாம் உணருகிறபோது அது நம்மைத் திருமறையினிடத்திற்கும் ஜெபத்தினிடத்திற்கும் வருந்தி அழைத்துச் செல்கிறது.

16:27 இருபத்தேழு முதல் முப்பது வரையிலான வசனங்கள் துன்மார்க்கத்தைக் குறித்த வேறு சித்திரத்தை வரைந்து தருகின்றன. முதலாவது, **இழிவானவன் தீமையைச்** செய்வதற்கான **சூழ்ச்சியைத்** திட்டமிடுகிறவனாகக் காட்டப்படுகிறான். அவனுடைய பேச்சு, **சுட்டுப்பொசுக்கி** ஊறுவிளைவிக்கும் **நெருப்பைப் போன்று** இருக்கிறது (இலகு தமிழ்).

16:28 உண்மையைத் திரித்துக் கூறுபவன் **மாறுபாடுள்ளவன்** ஆவான். பொய்கூறுவதாலும், உண்மையை மறைப்பதாலும், மெய்யான செய்திகளைக் கூறாமல் விட்டுவிடுவதாலும் அவன் **சண்டையைப்** பரவச் செய்கிறான். நெருங்கிய நண்பர்களையும்கூட கோள் சொல்லுகிறவன் **பிரித்து விடுகிறான்**.

16:29 கொடுமையானவன் தன் அயலானுக்கு நயங்காட்டி, தீய வழியில் நடத்தி அவன் குற்றச் செயல்களில் கூட்டாளியாகும்படி தூண்டிவிடு கிறான் (ரோமர் 1:32 - ஐக் காண்க).

16:30 முகத்தில் வெளிப்படுத்தப்படும் பாவனை கள் தீய உள்நோக்கம் கொண்டவை. கண் ணைச் சிமிட்டுதல் நெறியற்ற செயல்களைச் செய் வதற்கான சூழ்ச்சியாகும். உதடுகளை இறுக்க மூடுகிற செயல் தனது திட்டத்தைச் செய்து முடிப்ப தற்கான மனவுறுதியை வெளிப்படுத்துகிறது.

16:31 நரைமுடி நீண்ட வாழ்க்கையைக் குறிக்கிறது. அது **மகிமையின் கிரீடம்**, அல்லது அழகு எனப்படும்; ஏனெனில் நீதியின் வாழ்க் கைக்கு அடையாளமாக இங்கு காணப்படுகிறது. ஆகவே இந்த வசனமானது சங்கீதம் 55:23 -க்கு எதிர்மாறானது, "இரத்தப் பிரியரும் சூதுள்ள மனித ரும் தங்கள் ஆயுளின் நாட்களில் பாதி வரையாகி லும் பிழைத்திருக்க மாட்டார்கள்."

16:32 ஒருவன் தனது கோபத்தை அடக்கிக் கொள்வானெனில் அவன் வெற்றி வாகை சூடிய போர்த் தளபதியைக் காட்டிலும் மேலான வீர னாகக் கருதப்படுவான். ஒரு நகரத்தின்மேல் வெற்றி பெறுவதைக் காட்டிலும் கோபத்தை அடக்குவது கடினம். நீங்கள் இதை நம்பவில்லையெனில், முயற்சி செய்யுங்கள்!

> ரஷ்ய நாட்டுப் பேரரசர்களில் மிகவும் வலிமை மிக்கவர்களில் பீட்டர் என்பவன் ஒருவன், ஆயி னும் இந்த விசயத்தில் அவன் தோற்றுப் போனான். கோபத்தில் தன் நிலை மறந்து அவன் தனது தோட்டக்காரனை அடித்தான், சில நாட்களில் அவன் இறந்து போனான். வருத்தமுற்ற பீட்டர், ''ஐயோ, நான் பல நாடு களை வென்றேன், ஆனால் என்னை நான் வெல்ல முடியவில்லை'' என்றான்.[26]

16:33 பழைய ஏற்பாட்டுக் காலத்தில், பெந்தெ கொஸ்தே நாள் வரையிலும்கூட தேவனுடைய சித்தத்தை அறிவதற்குச் சீட்டு போடப்படுவது முறைப்படியானதாகக் கருதப்பட்டது. அவ்வாறு செய்வது முறையான தெரிந்தெடுப்பாகத் தோன்று கிறதில்லை, ஆனாலும் கர்த்தர் தமது மேலான அதிகாரத்தை அங்கு பயன்படுத்தித் தமது சித்தத்தை வெளிப்படுத்தினார்.

இன்று, தேவனுடைய சித்தத்தை அறிவதற் கான பொதுவான அம்சங்களை முழுமையான தேவ வார்த்தை நமக்குத் தருகிறது. ஒரு குறிப் பிட்ட வழிநடத்துதலுக்கான தேவை ஏற்படுகிற போது, அதற்கான குறிப்பை நம்மால் திருமறை யில் காணமுடியாவிடில், ஜெபத்தில் காத்திருந்து அவருடைய சித்தத்தை நாம் கற்கிறோம். மேலும் ஒவ்வொரு தீர்மானமும் கர்த்தரிடத்திலிருந்தே வருகிறது என்பதை அறிவோம்.

17:1 அமைதியான சூழ்நிலையில் ஒரு காய்ந்த ரொட்டித் துண்டை உண்பது, சண்டையும் சச்சர வும் நிறைந்து மகிழ்ச்சியற்ற சூழ்நிலையில் இருக்கக் கூடிய வீட்டில் சுவைமிக்க நேர்த்தியாக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கும் விருந்தில் பங்கு பெறுவதைக் காட்டிலும் சிறந்தது.

17:2 திறமைமிக்க வேலைக்காரன், இலச்சை உண்டாக்குகிற மகனைக் காட்டிலும் பெரும் பாலான நேரங்களில் உயருவதைக் காணமுடி யும். இவ்வாறாகவே, யெரொபெயாம் என்னும் சாலொமோனின் வேலைக்காரன் இஸ்ரவேலின் பத்துக் கோத்திரங்களைத் தனது கட்டுப்பாட்டுக் குள் கொண்டுவந்தான். சாலொமோனின் மகன் ரெகொபெயாமுக்கு இரண்டு கோத்திரங்களே கிடைத்தன.

பல நேரங்களில் சுதந்தரத்தில் பிள்ளை களோடு வேலைக்காரரும் பங்கு பெறுகிறார்கள். ஒரு காலக்கட்டத்தில் ஆபிரகாமின் வேலைக் காரனே அவனுடைய ஒரே சுதந்தரவாளி என்று கருதப்பட்டான் (ஆதி. 15:2,3).

17:3 ஓர் உலைக்கலம் அல்லது புடமிருகிற மட்கலம் செய்ய முடியாததை தேவனால் செய்ய முடியும். அவை **வெள்ளியையும் பொன்னையும் சோதிக்கும்,** ஆனால் கர்த்தரால் மனித இரு தயத்தைச் சோதிக்க முடியும். அவ்வாறு சோதிக் கையில் அவர் ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் தமது சாயல் பிரதிபலிப்பதைத் தாம் காணும்வரை கசடுகளை அகற்றித் தூய்மைப்படுத்துகிறார்.

நெருப்பினை உமிழ்ந்திடும் சோதனை
வழியினில் கிடந்தாலும்
கிருபையால் நிரப்புவேன் எனும் வாக்கு
தொனித்திடும் சடியிலே,
தீங்குகள் ஏற்படா, புடமிட்டுக்
கசடுகள் அகற்றிடுவனே
பாங்குடன் அணிந்திடும் பொன்னென
மிளிருவாய் அறிவாயே!
– ஜார்ஜ்கெய்த்.

17:4 கொடுமையான மனிதன் தீய உதடு களுள்ள மனிதர்களுக்குச் **செவிகொடுக்கிறான்** (இலகு தமிழ). அவர்கள் பொய்களையும், ஆதா

ரமற்ற வதந்திகளையும், தவறான குற்றச்சாட்டு களையும் வரவேற்கிறார்கள். பொய்யர்களோ அவதூறுகளையும், பழிச்சொற்களையும், பகைமை நோக்கம் கொண்ட நாவுகளையும் கேட்க விருப் பம் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பொருளில், எவ்வகையான உரையாடலைக் கேட்க நாட்டங் கொண்டிருக்கிறார்களோ அதுவே அவர்களு டைய இருதயத்தில் என்ன இருக்கிறது என்பதற் கான அளவுகோலாகும்.

17:5 ஏழையைப் பரியாசம் பண்ணுகிறவன் எவனும் **அவனை உண்டாக்கினவரை** அவமதிக் கிறான் என்று நாம் 14:31 -இல் ஏற்கனவே கண் டோம் (யாக். 5:1-4 வசனங்களைக் காண்க). இயற் கைச் சீற்றத்தைக் கண்டு இதயமற்ற வகையில் களிகூருபவன் கர்த்தரால் **தண்டனை** அடையா மற்போகான் (இயற்கைச் சீற்றம் பாதிப்படைந்த மக்களை ஏழைகள் ஆக்குவது நிச்சயம்). எருச லேம் வீழ்ச்சி அடைந்தபோது மகிழ்ந்துகொண் டாடிய ஏதோம் அழிவுறும் என்று ஒபேதியா அறி வித்தான்.

17:6 பெருமளவு எண்ணிக்கையில் பயபக்தி யுள்ள வழித்தோன்றல்களால் **முதியவர்கள்** மேன்மை அடைவார்கள் (சங். 127:3-5; 128:3 வச னங்களைக் காண்க). அதுபோலப் **பிள்ளை களும்** தங்களுடைய **பிதாக்களுக்காக** நன்றி பாராட்டக்கூடும். தலைமுறைகளுக்கு இடை யிலான இணக்கமின்மைக்கு எவ்விதக் காரண முமில்லை.

17:7 பெருந்தன்மையானதும் **மேன்மை யானதுமான** பேச்சு முரட்டுத்தனமான **மூடனு டைய** வாய்க்குப் பொருந்தாப் பேச்சாகும். இதனி னும் பொருத்தமற்றது **பிரபுவுக்குப் பொய்பேசும் உதடுகள்**. ஒரு பிரபுவினிடம் நீங்கள் மேலான வற்றையே எதிர்பார்க்கிறீர்கள். தேவனுடைய பிள்ளைகளாகிய நம்மிடத்தில் உலகம் மேலான வற்றை எதிர்பார்க்கிறது. அவர்கள் தங்களுக் கென்று நியமித்துக் கொண்ட தரத்தைக் காட் டிலும் மேலான தரத்தை நமக்கு நியமித்திருக் கிறார்கள்.

17:8 இலஞ்சம் நல்வாய்ப்புகளைப் பெறுவதற் கான வசியம் போலச் செயல்படுகிறது, அல்லது அதைக் கொடுக்கிறவன் அவ்வாறு நினைக் கிறான். எங்கெல்லாம் அது பயன்படுத்தப்படு கிறதோ, அங்கெல்லாம் அது அவனுக்கு வியக் கத்தக்க வகையில் செயல்படுகிறது, கதவுகள் திறக்கின்றன, சலுகைகள் தரப்படுகின்றன அல் லது பிரச்சினைகள் தீருகின்றன.

17:9 தனக்கு எதிராகச் செய்யப்பட்ட **குற் றத்தை** மறக்கிறவன் அன்பையும் நட்பையும் **நாடுகிறான்**. முந்தின மனத்தாங்கல்களைத் தோண்டியெடுக்கிறவன் நட்பைவிட்டு விலகு வதில்தான் வெற்றிபெறுகிறான்.

"நாம் அன்புபாராட்டப் பழகுகிறபோது, மற்ற வரிடம் காணப்படும் பல குறைகளை மூடவும், மறக்கவும், பொருட்படுத்தாமலிருக்கவும் கற் கிறோம்" என்று திருவாளர் ஆடம்ஸ் எழுதுகிறார்.

ஒரு பெண் மற்றொரு பெண்ணிடம் கூறு கிறாள், "அவள் உன்னைக் குறித்துச் சொன்ன ஈனமான சொற்களை மறந்துவிட்டாயா?"

மற்றவள் பதிலுரைக்கிறாள், "நான் அதை நினைவுகூராததை மட்டுமல்ல, அதை மறந்து போனதைக் குறித்துத் தெளிவாக நினைவுகூரு கிறேன்!"

ஜார்ஜ் வாஷிங்டன் கார்வர் கருப்பு நிறத்தவர் என்பதால் ஒரு கல்லூரியில் இடம் மறுக்கப்பட் டது. பல ஆண்டுகளுக்குப் பின்னர் அந்தக் கல்லூரியின் பெயர் என்னவென்று அவரிடம் கேட்கப்பட்டபோது, "அது பொருட்டன்று!" என்று பதிலுரைத்தார். அன்பு வென்றது.

17:10 ஒரு மூடனைக் கடுமையாக அடிப்பதால் உண்டாகிற விளைவைக் காட்டிலும், ஒரு சிறிய கண்டிப்பு புத்திமானின் மனதில் ஆழ்ந்த விளைவை உண்டுபண்ணுகிறது. பொதுவாக, உணர்வு பூர்வ மான மனிதர்களுக்கு கடினமான ஒழுங்கு நட வடிக்கைகள் தேவையில்லை. ஆனால் உணர் வற்ற, அலட்சியப் போக்குள்ள மனிதர்களுக்குச் சம்மட்டியடி தேவைப்படுகிறது. அவர்கள் தவறு செய்திருப்பதாக எண்ணுவதும் அவர்களுக்குக் கடினமான விசயம்.

17:11 தீமை செய்பவன் கலகத்தை மட்டுமே நாடுகிறான். சட்டப்படியான அதிகாரத்துக்கு அவன் கீழ்ப்படிய விரும்புகிறதில்லை. அவன் தன்னுடைய சொந்த வழியில் செல்ல வேண்டு மென்று உறுதியோடிருக்கிறான். அந்தக் கலகக் காரனுக்கு எதிராக அனுப்பப்படும் **குரூரதூதன்** அரசனால் அனுப்பப்படுகிற கைது செய்யும் அதிகாரியாக இருக்கக்கூடும் அல்லது தேவனால் அனுப்பப்படுகிற மரணதூதனாக இருக்கக்கூடும்.

17:12 குட்டிகளைப் பறிகொடுத்த கரடி மூர்க் கம் நிறைந்து கட்டுப்படுத்த இயலாததாக இருக் கும். ஆனால் கடுஞ்சினம் கொண்ட மூடனைப் போல அந்தக் கரடி அவ்வளவு ஆபத்தானது அல்ல. அவனுடைய தலைக்குள் மட்டுமீறிய

ஆர்வம் புகுந்துவிட்டால், ஏதொன்றாலும் அவனைத் தடுத்து நிறுத்த முடியாது.

17:13 தான் பெற்ற தயவுக்குப் பதிலாகத் தீமை செய்கிற எவனுடைய வீட்டின் மேலும் சாபம் தங்கும். விசுவாசம் மிக்கவனாக இருந்த படைத் தலைவன் உரியாவுக்கு எதிராகத் துரோகம் இழைத்தான் தாவீது. அதன் விளைவாகத் தனது வீட்டுக்குத் துன்பத்தைக் கொண்டுவந்தான் (2 சாமு. 12:9,10).

17:14 ஒரு சிறிய அணைக்கட்டில் துவாரம் ஒன்று உண்டாகுமானால், அதிலிருந்து நீர் பீறிட்டு வருவதால் அந்தத் துவாரம் பெரிதாகிக் கொண்டே போகும். அதுபோலவே சண்டையும் வலுக்கும். சிறிய வாக்குவாதங்கள் பெருமளவு சண்டையாக மாறிவிடும். ஆகவே வாக்குவாதம் மிகச் சிறியதாக இருக்கும்போதே அதை நிறுத்துவது நல்லது. இல்லையெனில் பெரிய சண்டையில் நீங்கள் மூழ்கிவிடுவீர்கள்.

17:15 நேர்மை தவறுவதை தேவன் வெறுக்கிறார். குற்றவாளியை விடுதலை செய்வதும், குற்றமற்றவனைத் தண்டிப்பதும் அவருக்குச் சமஅளவில் அருவருப்பாகவே இருக்கிறது. நம்முடைய நீதிமன்றங்கள் இன்றைய நாட்களில் இப்படிப்பட்ட நிகழ்வுகளால் நிறைந்திருக்கின்றன. ஆனால் மனிதர்கள் தேவனுடைய முன்னிலையில் நிற்கிறபோது இதற்காகக் கணக்குக் கொடுக்க வேண்டும். "நீதியையே பின்தொடருவாயாக" என்னும் பழமொழி தொடர்ந்து வரலாறு நெடுக தொனித்துக்கொண்டே இருக்கிறது.

17:16 உண்மையாகவே கல்வி கற்க வேண்டுமென்னும் விருப்பமற்ற மனிதன் கற்பதற்காகப் பெருஞ்செல்வத்தைச் செலவழிப்பானானால் அவன் மூடன் ஆவான். நன்கு கற்றிட ஒருவன் மிக அதிக அளவில் உளத்தூண்டுதல் பெற்றிருக்க வேண்டும். அவன் "கற்பதற்கு மனதுள்ளவனாக இருக்க வேண்டும்." (மொ.ஃபட்).

இந்த நீதிமொழிக்குக் கூறப்படுகிற இரண்டாவது விளக்கம், இது பெரும்பாலும் பொருத்த முடையதாகத் தோன்றுகிறது: ஞானத்தைப் பெறுவதற்காக ஒரு மூடன் பணத்தைச் செலவழிக்கக் கூடாது, ஏனெனில் முதலாவதாக, அவற்றைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் அவனுக்கு இல்லை. "ஏன் இவ்வாறு நடக்கிறது - ஒரு மூடனுடைய கையில் ஞானத்தை வாங்குவதற்கான பணம் இருந்து என்ன பயன், அவனிடத்தில் அவற்றை அறிந்துகொள்வதற்கான ஆற்றல் இல்லையே?" (பெர்க்லே). ஏதோ ஒரு ரொட்டித் துண்டை விலைக்கு வாங்குவதுபோல அவன் ஞானத்தை வாங்கலாம் என்று நினைக்கிறான். புரிந்துகொள்ளக்கூடிய இருதயம் இருக்க வேண்டும் என்பதை அவன் உணருவதில்லை.

17:17 மெய்யான நண்பன் பாதகமான சூழ்நிலையிலும், செல்வச் செழிப்பின் சூழ்நிலையிலும் அன்புகூருவான். எந்த நண்பர்கள் உண்மையான விசுவாசம் கொண்டிருக்கிறார்கள் என்பது கடினமான காலத்தில் மட்டுமே வெளிப்படும். திருவாளர் D. L. மூடியின் வேத நூலில் ஒரு விந்தையான குறிப்பு கூறுவதாவது, "உண்மையான நண்பன் படரும் கொடி போன்றவன் - அதிக வீழ்ச்சி ஏற்படுகிறபோது, அவன் நெருக்கமாகப் பற்றிக்கொள்கிறான்."[27]

இடுக்கணில் உதவவே சகோதரன் பிறந்திருக்கிறான். உங்களுக்கு நிர்ப்பந்தமான தேவை ஏற்படுகிறபோது சகோதரன் உங்கள் அருகில் இருக்கிறான், இதுவே சகோதரத்துவத்தின் தனிச் சிறப்பு.

இந்த வசனத்தில் கர்த்தராகிய இயேசுவைக் காண்பது கடினமான விசயமன்று.

அவரில்லா நேரமில்லை,
எனதருகில் அவரில்லா நேரமில்லை,
அவரில்லா நேரமில்லை!
அவர்தருவார் மகிழ்ச்சியினை,
இருள்சூழ்ந்த இரவெனினும் அவர் தருவார்,
அவர்தருவார் மகிழ்ச்சியினை!

17:18 பகுத்தறிவற்ற வகையில் அன்பு செலுத்தப்படலாகாது என்று இந்த வசனம் முந்தின வசனத்தை மாற்றித் தருகிறது. ஒரு நண்பன் தனது கடனைத் திரும்பச் செலுத்த முடியவில்லையெனில் அதைத் தான் செலுத்தித் தீர்ப்பதாக உறுதி தருகிற தவறான முடிவைப் பற்றியே இந்த வசனம் பேசுகிறது, கடன் வாங்குவதற்கு ஒருவனுக்குப் பிணையாள் தேவையெனில், அந்தக் கடன் தகுதியற்றவனுக்கு வழங்கப்படுவதாகவே கருதப்படும். அத்தகைய இடரை வருவிக்கும்படி அவன் ஏன் தனது நண்பனுக்கு உத்திரவாதம் அளிக்க வேண்டும்?

17:19 வரம்புமீறி நடக்க விரும்புகிறவன் சச்சரவை விரும்புகிறான், இதனை முறை மாற்றியும் கூறலாம். **தன்வாசலை உயர்த்திக் கட்டுகிறவன்** 1) பெருமையாகப் பேசுகிறவனாகவோ (மொ.ஃபட்), 2) தனது சொத்தைக் குறித்து உரத்த சத்தத்தில் பேசுகிறவனாகவோ, 3) தனது சக்திக்கு மிஞ்சி ஆடம்பரமாக வாழ்கிறவனாகவோ இருப்பான்.

இவன் அழிவைச் சந்திக்க ஆயத்தமாயிருக் கிறான்.

17:20 வஞ்சக இருதயமுள்ளவன் ஒருக்காலும் வெற்றி பெறுவதில்லை. **சூழ்ச்சியுள்ள நாவுள்ள வன்** ஒருக்காலும் செல்வச்செழிப்பு அடைவ தில்லை (இலகு தமிழ்). அவர்கள் தீமையை வர வேற்கிறார்கள், மகிழ்ச்சியைத் தவிர்க்கிறார்கள்.

17:21 உணர்வில்லாத முட்டாளைப் பெற்ற வன் துக்கத்தோடு வாழ்கிறான். மந்தபுத்தியுள்ள வனுடைய தகப்பனாக இருப்பதில் என்ன **மகிழ்ச்சி** உண்டாகும்?

17:22 ஒரு மனிதனுடைய மனநிலைக்கும் அவன் நோய் அல்லது விபத்திலிருந்து உடல் நலம் பெறுவதற்கும் நெருங்கிய தொடர்பு இருப்ப தாக இங்கு நாம் மறுபடியும் கற்கிறோம். மன ரம்மியமான மனநிலை குணமடைவதற்கான வலிமையான உபகரணமாக விளங்குகிறது. முறிந்த, துயர்மிக்க ஆவி ஒரு மனிதனுடைய உள்ளுரத்தை அரித்து வீழ்த்திவிடுகிறது.

இந்த வசனத்திற்கான அடிக்குறிப்பில் பெர்க்லே மொழிபெயர்ப்பில் இந்த விளக்கம் கொடுக்கப் பட்டுள்ளது: 'மிகச்சிறந்த, காலத்துக்கேற்ற நோய் நீக்கும் சிகிச்சை."

> மனமார்ந்த சிரிப்பு மிகச்சிறந்த பயிற்சி என்று நவீன கால மருத்துவர்கள் நம்மிடம் கூறு கிறார்கள். வெடிச்சிதறல் போன்ற உரத்த நகைப்பை நீங்கள் வெளிப்படுத்தும்போது, உங்களுடைய உதரவிதானம் உடலில் கீழி றங்கி, உங்களுடைய நுரையீரல் விரி வடைந்து, பெருமளவு பிராணவாயு அதற்குள்ளாகச் செல்கிறது. அதே நேரத்தில் அது பக்கவாட்டில் விரிவடைகிறது, உதரவிதானம் மென்மை யான இசைநாளம் போன்ற அசைவால் இருத யத்தைப் பிடித்து விடுகிறது. அந்த மேன்மை யான உடலுறுப்பு இடைவிடாமல் வேகமாகத் துடிக்கிறது. இரத்த ஓட்டம் தீவிரமடைகிறது. கல்லீரல், இரைப்பை, கணையம், மண்ணீரல் பித்தப்பை யாவும் தூண்டிவிடப்படுகின்றன. உங்களுடைய உடல் உறுப்புகள் அனைத்தும் எழுச்சியடைகின்றன. இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முன்னர் வாழ்ந்த கிரேக்க அறிஞர் அரிஸ்டாட்டில் கூறியதை இவை உறுதிசெய் கின்றன. ''நகைப்பு உடல் நலம் பெறுவதற் கான சிறந்த உடற்பயிற்சி."[28]

ஆனால் எல்லாச் சிரிப்புகளும் உடல்நலத் திற்கு உகந்தவை அல்ல. டென்னசிப் பல்கலைக் கழக உளநூல் பேராசிரியர் திருவாளர் ஹாவர்ட் போல்லிஸ் கூறுகிறார், "நகைப்பு மற்றும் சிரிப்பு ஏளனப்படுத்தும் வகையில், இழிவுபடுத்தும் வகை யில் அல்லது இக்கட்டு ஏற்படுத்தும் வகையில் ஆற்றல்மிக்க வகையில் பயன்படுத்தப்படுகிற போது அவை உடல்நலத்துக்கு உகந்தவை யல்ல, அவை நகைப்புக்கு இடமாகிறவரைக் காட் டிலும், நகைக்கிறவருக்கு உண்மையாகவே அதி கப் பாதிப்பை ஏற்படுத்தும்."

முறிந்த ஆவியோ எலும்புகளை உலரப் பண்ணும். திருவாளர் பிளேக் கிளார்க் இதனை ஒப்புக்கொள்கிறார்:

> உணர்ச்சி வயப்பட்ட நிலை உங்களை நோயா ளியாக்கும். அவை கைப்பிடி அளவு முடியை உதிரச்செய்யும், இடிபோன்ற தலைவலியை உண்டாக்கும், மூக்கடைப்பை ஏற்படுத்தும், காசநோய் மற்றும் ஒவ்வாமை ஆகியவற்றோடு கண்களிலிருந்தும் மூக்கிலிருந்தும் நீரை வடி யச் செய்யும். குரல்வளையில் அழற்சி ஏற்பட்டு தொண்டை கட்டும், தோலில் வெடிப்புகள் உண் டாகும், பற்களும்கூட கீழே விழுந்துவிடும். மேலும் உணர்ச்சிவயப்பட்ட நிலை உடலின் உட்புறத்தில் புண்கள், வீக்கங்கள், ஆண்மைக் குறைவு, பெண்களுக்குச் கருச்சிதைவு, ஆகியவற்றை ஏற்படுத்துவது மட்டுமின்றி சில வேளைகளில் மரணத்தையும் ஏற்படுத்தும்.[29]

17:23 கொடுமையானவன் இரகசியமாக இலஞ்சம் வாங்கி, ஒரு நீதிபதியின் தீர்ப்பைத் தனக்குச் சாதகமாக்கத் தூண்டிவிடுகிறான் (இலகு தமிழ்).

17:24 புத்திமான் தனது கண்களுக்கு முன் பாக **ஞானத்தை** இலக்காக வைத்து, அதை நோக்கிச் சரியாகச் செல்கிறான். **மூடனுக்கோ** அப்படிப்பட்ட தெளிவான நோக்கம் இல்லை. ஞானத்தைத் தேடுவதற்கு ஒழுங்குமுறையைக் கைக்கொள்ள வேண்டும், அதைத் தேடுவதற்குப் பதிலாக, அவனுடைய **கண்கள்** கவர்ச்சியின் மேல் நாட்டம் கொண்டு உலகமெங்கும் சுற்றித் திரிகிறது.

17:25 துன்பத்தையும் கசப்பையும் உண்டாக்கு கிற பிள்ளையைப் பெற்றிருப்பது பெற்றோருக்கு மிகுந்த வருத்தத்தை உண்டுபண்ணுகிற விசயங் களில் ஒன்று.

17:26 குற்றமற்றவனைத் தண்டிப்பதும், அதிகாரிகளை அவர்களுடைய உத்தமத்திற்காகச் சவுக்கால் அடிப்பதும் நல்லதல்ல (இலகு தமிழ்). ஆயினும் இப்படிப்பட்ட நெறிதவறிய வகையில் நேர்மை மாற்றப்படுவது அடிக்கடி நடக்கிறது.

17:27 அறிவுள்ளவன் வார்த்தைகளைக் கட்டுப்பாட்டுடன் பாவிக்கிறான். விளங்கும் ஆற்றல் உள்ளவன் சாந்தமுள்ளவனாயிருக்கிறான் (இலகு தமிழ்). துடுக்கான பேச்சும் சடிதியில் சினமடைவதும் கருத்தாழமற்ற பண்பை வெளிப்படுத்தும்.

17:28 ஒரு மூடனுடைய முகத்தோற்றத்தைக் கொண்டு அவனை மூடன் என்று சொல்ல முடியாது. அவன் ஞானியைப் போலத் தோற்றமளிக்கலாம். "அவன் தனது உதடுகளை மூடிக்கொண்டால் அவன் ஞானியென்று எண்ணப்படுவான்" (மொ.ஃபட்).

"சிலவேளைகளில் உங்களுடைய வாயை மூடிக்கொண்டிருப்பது நல்லது, நீங்கள் ஒரு மூடனாக இருப்பீரோ என்று மனிதர்கள் எண்ணிக்கொண்டிருக்கும்போது, அவர்களுடைய சந்தேகங்களை நீக்கும்படி உங்கள் வாயைத் திறவாதீர்கள்" என்று ஜேம்ஸ் G. சின்க்ளேர் எழுதுகிறார்.

18:1 ஒன்றுக்கொன்று வேறுபட்ட விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ள காரணத்தால் இந்த நீதிமொழி கடினமானது என்பது தெளிவாகத் தெரிகிறது.

பிரிந்துபோகிறவன் தன் இச்சையின்படி செய்யப்பார்க்கிறான்; எல்லா ஞானத்திலும் தலையிட்டுக்கொள்ளுகிறான். மற்றவர்களோடு ஒத்துப்போகாதவன் தனது சொந்த வழியிலே செல்கிறான், அது ஒருவேளை அறிவுசார்ந்த வழிகளுக்கும் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைமைகளுக்கும் முரண்பட்டதாயிருந்தாலும் அதன்படியே செய்கிறான். அவன் தன்னம்பிக்கையில் தீவிரம் கொண்டு பிடிவாதத்தோடு ஞானத்தை எதிர்த்து அவமரியாதையாக நடக்கிறான்.

RSV மொழிபெயர்ப்பு இதற்கு முற்றிலும் மாறுபட்டதாயிருக்கிறது: "நட்புமுறிந்த ஒருவன் அதைக் காரணம்காட்டி முற்றிலும் செம்மையான நியாயங்கள் அனைத்திற்கும் எதிராகச் செயல்படத் துணிகிறான்." நட்பை இழந்து தனித்துவிடப்பட்டவன், தனது பொறுப்பற்ற செயல்கள் அனைத்திற்கும் அதையே சாக்காகக் கூறுகிறான் என்றும் இதனை வேறுவிதமாகக் கூறலாம்.

நாக்ஸ் அவர்கள் மொழிபெயர்ப்பு இதற்குச் சற்று இணையாக இருக்கிறது, அதற்கு விளக்கம் கூறத் தேவையில்லை: "நண்பனுடன் தனது நட்பை முறித்துக் கொண்டவன் சாக்குப்போக்குச் சொல்கிறதுபோல வேறு எவரும் அவ்வளவு விரைவாகக் காரணம் கூறுவதில்லை. அவன் தொடர்ந்து தவறு செய்கிறான்."

பாவத்திலிருந்தும் மதியீனத்திலிருந்தும் பிரிந்து வாழ்கிற ஒருவனை இந்த நீதிமொழி பாராட்டுவதாக யூத விரிவுரையாளர்கள் கருதுகிறார்கள். இந்த மனிதன் மேலான விருப்பங்கள் கொண்டவனாகத் தனது சொந்த வழியில் செல்கிறான், மேலும் மெய்யான அனைத்து ஞானத்தோடும் அவன் தன்னை இணைத்துக்கொள்கிறான். இதில் சொல்லப்பட்டுள்ள செய்தி உண்மையாக இருப்பினும், இது பொருந்தா விளக்கமாகும்.

18:2 விளங்கிக்கொள்ளும் ஆற்றல் கொண்ட மனிதர்களுக்கு **மூடன்** செவிகொடுப்பதில்லை, அவன் **தன் மனதில் உள்ளதை** வெளிப்படுத்துவதிலேயே மகிழ்ச்சி அடைகிறான், அல்லது அவன் தான் யார் என்பதை வெளிப்படுத்துகிறான்.

18:3 துன்மார்க்கன் வர அவமானம் வரும், அவமானத்தோடு நிந்தையும் வரும். உள்ளான துன்மார்க்கம் மற்றும் இழிவான சிந்தை ஆகிய வற்றைத் தொடர்ந்து வெளிப்படையான அவமானமும் நிந்தையும் வரும் என்பதையே இது வேறு விதமாகக் கூறுகிறது.

18:4 பொதுவாகக் கூறுவோமானால், ஒரு மனிதனுடைய **வாய்மொழிகளால்** அவனை அறிய முடியாது. அவனுடைய உண்மையான சிந்தனைகளையும் நோக்கங்களையும் மறைக்கக் கூடிய **ஆழ்கடல்** போல அவை இருக்கின்றன.

இதற்கு மாறாக, **ஞானத்தின் ஊற்று** பீறிப் பாயும், அது **பாய்கிற ஆற்றைப்** போல இருக்கும். ஞானத்தின் செய்தி தெளிவாகவும் வெளிப்படையாகவும் உள்ளது என்றும் இதைச் சொல்லலாம்.

ஞானமுள்ள மனிதனுடைய வாய்மொழி ஆழமான குளம், பாய்கிற ஓடை, வாழ்வின் ஊற்று ஆகியவற்றிற்கு ஒப்பாயிருக்கிறது என்றே இந்த வசனத்தைத் திருவாளர் மொ.ஃபட் புரிந்துகொள்கிறார். அவை செறிவுமிக்கவை, கருத்தற்றவையல்ல; தெளிந்த ஓடை போன்றவை, உப்பு கலந்த நீரல்ல; புத்துணர்ச்சி ஊட்டுபவை, கிளர்ச்சியற்றவை அல்ல.

18:5 நியாயமான தீர்ப்புகளை மாற்றிக் கூறுவதை தேவன் இங்கு கடிந்துகொள்கிறார்.

துன்மார்க்கனுக்குப் பாரபட்சம் காட்டுவது, துன்மார்க்கத்தைப் பொறுத்துக்கொள்வதாகவே காணப்படும். நீதிமானுக்கு நேர்மையை மறுத்துக் கூறுவது, சத்தியத்தைத் தூக்குமேடையில் ஏற்றுவதற்கும், குற்றத்தை அரியணையில் அமர்த்துவதற்கும் சமம் என்று திருவாளர் லோவெல் கூறுகிறார்.

18:6 வாய்கிழியப் பேசுகிற மூடன் எப்பொழுதும் சண்டையை அல்லது பிரச்சினையைத் தொடங்க முற்படுகிறான். குடிகாரன் இதில் சிறந்து விளங்குகிறான், அவன் காயங்களையும், சிராய்ப்புகளையும், அடிவாங்கி கண்களைச் சுற்றிலும் கறுத்துப்போன தோல்களையும் அடைவதில் மட்டுமே வெற்றிபெறுவான்.

18:7 மூடனுடைய பேச்சு அவனுக்கு வீழ்ச்சியைக் கொண்டுவரும். அவனுடைய முரட்டுத்தனமான இழிந்த சொற்கள் அவனுக்கு முடிவாக அழிவைக் கொண்டுவரும்.

18:8 கோள்காரனுடைய வார்த்தைகள் சுவைமிக்க தின்பண்டம் போலிருக்கும். அவற்றைக் கேட்பவர்கள் விருப்பத்தோடு கிரகிப்பார்கள். "உம், உம், இதை நான் விரும்புகிறேன், இன்னும் அதிகமாகச் சொல்லுங்கள்" என்பது போலவே காணப்படும்.

18:9 சோம்பேறியான அல்லது அசதியான மனிதன் அழிவு செய்கிறவனுக்குப் பல விசயங்களில் ஒத்திருக்கிறான். இருவருமே பேரழிவை உண்டுபண்ணுவார்கள் அல்லது பாழ்படுத்துவார்கள். திருவாளர் க்ரி.ஃபித்ஸ் எச்சரிக்கிறார்:

> வாகனங்கள், விமானங்கள், கட்டிடங்கள் மற்றும் இவை போன்றவற்றில் மட்டரகமான வேலைப்பாட்டை இன்றைய நாட்களில் நாம் காண்கிறோம். அது பெரிய விபத்துக்குக் காரணமாகிறது. சபையின் பொறுப்புகளிலும் தலைமையிலும் இது உண்மையாக இருக்கிறது. அங்கே பொறுப்பு வகிப்பதில் அக்கறையின்மை ஐக்கியத்தையே குலைத்துவிடுகிறது. மடத்தனமான புறக்கணிப்பாலும் சோம்பேறித்தனத்தாலும், சாத்தானின் தாக்குதலாலும் ஒரு சபையானது சிதறிப் போகிறது.[30]

18:10 கர்த்தரின் நாமம் கர்த்தரையே குறிக்கிறது. அவரிடத்தில் நம்பிக்கையுடைவர்கள் அடைக்கலம் பாதுகாப்பு ஆகியவற்றைப் பெறும் இடமாகக் கர்த்தர் இருக்கிறார். ஆகவே சோதனை தீவிரமாகத் தாக்கும்போது கர்த்தருடைய நாமத்தைக் கூப்பிடுங்கள். நீங்கள் பாவம் செய்யாதபடி அவர் உங்களைக் காப்பார்.

18:11 செல்வந்தன் தனது செல்வம் தன்னைக் காக்கும் என்று அதை நம்புகிறான். எல்லாவிதமான ஆபத்துகளிலிருந்து அது **உயர்ந்த மதிலைப்** போலிருந்து தன்னைப் பாதுகாக்கும் என்று அவன் **எண்ணுகிறான்**. ஆனால் அவன் இக்கட்டான நிலையில் இருக்கும்போது அது அவனைக் காப்பதில்லை.

பத்தாவது வசனம் உண்மையானது: பதினோராவது வசனம் கற்பனை. பத்தாவது வசனத்தின் நீதிமான் உண்மையை நம்புகிறான், பதினோராவது வசனத்தின் செல்வந்தன் கற்பனைப் பொருளில் நம்பிக்கையாயிருக்கிறான்.

18:12 பெருமை ஒரு காலைக் கல்லறையிலும் மற்றொரு காலை வாழைப்பழத் தோலின்மேலும் வைத்திருக்கிறது. தாழ்மை மேன்மையை நோக்கி உறுதியோடு நடக்கிறது. இதற்கு முற்றிலும் ஏற்புடைய கருத்தைத் திருவாளர் வில்லியம்லா எடுத்துரைக்கிறார்: "பெருமை தகுதியற்ற பண்பு என்றும் தாழ்மை ஏற்புடைய பண்பு என்றும் மட்டுமே அவற்றைக் காணாதீர்கள் - ஒன்று முழுவதும் நரகம், மற்றது முழுவதும் பரலோகம்."

18:13 ஒருவன் தனது கருத்தைக் கூறும் முன்னர் அதைக் குறித்த அனைத்து உண்மைகளையும் அறிந்திருக்க வேண்டும். இல்லையெனில் எல்லா விவரங்களும் வெளிப்படும்போது அது அவனுக்கு இக்கட்டைக் கொண்டுவரும். ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்கள் உள்ளன; ஒவ்வொரு விவகாரத்திலும், ஒவ்வொரு சண்டையிலும் இரண்டு பக்கங்கள் உள்ளன. மற்றவனுடைய கூற்றைக் கேட்காமல் ஒருவனுடைய பேச்சை ஆதரிக்காதீர்கள்.

18:14 எல்லா வகையான உடற்கூறுகள் சம்பந்தப்பட்ட பலவீனங்களையும் ஒரு மனிதனுடைய **ஆவி** தாங்கிக்கொள்ளும். ஆனால் முறிந்த ஆவியைத் தாங்குவது மிகவும் கடினமானது. உணர்ச்சிபூர்வமான பிரச்சினைகள் சரீரப் பிரகாரமான பிரச்சினைகளைக் காட்டிலும் கூடுதல் கடுமையானது.

வயது முதிர்ந்த ஒரு பெண்மணியைப் பற்றி மருத்துவர் பால் அடோல்ஃப் கூறியதாவது. அப்பெண்மணியின் இடுப்பு எலும்பு முறிவடைந்து, மருத்துவமனையில் சிகிச்சையின்மூலம் குறிப்பிடத்தக்க வகையில் உடல்நலம் தேறினார். அவர் மருத்துவமனையிலிருந்து முதியோர்

இல்லத்திற்கு அனுப்பப்பட்டார். சில மணி நேரத்தில் அவருடைய உடல்நிலையில் சீர்குலைவு ஏற்பட்டது, ஒருநாள் முடிவடைதற்குள் அவர் இறந்து போனார் - "முறிந்த எலும்பின் காரணமாக அல்ல, முறிந்த இருதயத்தால் அவர் இறந்து போனார்." [31]

சித்ரவதைக் கூடத்தின் கொடுமைகளைத் துணிவுடன் எதிர்கொண்டு விடுதலை பெற்ற ஒருவர் தனது சொந்த மகனே தன்னைக் காட்டிக் கொடுத்தவன் என்று பின்னர் அறிந்தார். "அவர் அறிந்த அவ்வுண்மை அவரை வதைத்தது, அவர் மரணமடைந்தார். எதிரியின் தாக்குதலைத் தாங்கிய அந்த மனிதரால், தான் மிகவும் அன்பு பாராட்டிய ஒருவனுடைய தாக்குதலைத் தாங்க முடியவில்லை."

18:15 ஞானமுள்ள மனிதன் தான் கற்பதைத் தொடர முடியாத இடத்திற்கு ஒருபோதும் வர மாட்டான். அவனுடைய மனது அறிவுரையைக் கேட்க எப்பொழுதும் திறந்திருக்கும், அவனுடைய **செவி அறிவை** ஏற்கும்.

18:16 ஒருவன் தருகின்ற கைக்கூலி அல்லது வெகுமதி, அவன் தனது செல்வாக்கைப் பயன்படுத்துவற்கு விரும்புகிற மனிதர்களிடம் அவனைக் கொண்டுபோகும்.

ஒரு மனிதனுடைய ஆவிக்குரிய வரம், அவற்றைப் பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தித் தரும் என்று கூறுவதற்கும் இந்த நீதிமொழி பயன்படுத்தப்படுகிறது என்பது உண்மையே. எடுத்துக்காட்டாக, அவன் திருமறை வசனங்களை கற்பிக்கவோ பிரசங்கிக்கவோ செய்வானானால் அவனுக்கு அதிகமான அளவு வாசல்கள் திறக்கும். ஆனால் இந்த வசனத்தின் பொருள் அதுவன்று.

18:17 ஒருவன் ஒரு நிகழ்ச்சியைப் பற்றித் தனக்குச் சாதகமானவற்றை மட்டும் கூறும் போது, அவன் கூறுவது சரியானது என்று நீங்கள் நம்புவதற்கு ஏதுவாக விளங்கும். **அவனுடைய அயலான்** அங்கு வந்து சில முக்கியமான கேள்விகளை எழுப்புகிறபோது, அவன் அவ்வளவு சரியானவன் அல்லன் என்பது தெரிய வரும்.

18:18 பழைய ஏற்பாட்டுக்கால விசுவாசிகள் தங்களுக்குள்ளான வழக்கைத் தீர்க்க அவர்களால் முடியாது என்று எண்ணியபோது அவர்கள் உண்மையாகவே கர்த்தரிடம் முறையிடும்படி சீட்டுப்போட்டார்கள். போட்டியிட்டவர்கள் பலவந்தத்தைப் பயன்படுத்தாமல் தங்களுக்கு இடையிலான வழக்கை நேர்மையோடும் அமைதியாகவும் தீர்த்துக்கொள்ளச் சீட்டுப் போடும் முறை பயன்படுத்தப்பட்டது.

பிறருடன் பிரச்சினைகள் ஏற்படுகிறபோது கர்த்தரே முடிவான நீதிபதியாகச் செயல்படட்டும் என்று நாமும் அவரிடம் ஒப்புக்கொடுக்க வேண்டும், சீட்டுப்போட்டு அல்ல, திருமறையைப் படித்து அதற்குக் கீழ்ப்படிந்து, ஒருவருக்கொருவர் நம் முடைய தப்பிதங்களை அறிக்கை செய்து, ஜெபம் செய்து, உள்ளார்ந்த ஆவியின் சாட்சிக்குச் செவிகொடுத்து இதனை நாம் செய்ய வேண்டும்.

18:19 நெருங்கிய உறவினர்களுக்கிடையே ஏற்படுகிற சண்டைகள் தீர்க்கப்படுவது மிகவும் கடினம். அரணான பட்டணத்தைத் தோற்கடிப்பது எளிது, ஆனால் **மனத்துன்பம்** அடைந்த சகோதரர்களை ஒப்புரவாக்குவது கடினம். அவர்களுடைய **பிணக்குகள் தாழ்ப்பாள் இடப்பட்ட கோட்டையைப் போலிருக்கின்றன** - வெறுப்பு மிகுந்ததாகவும், வளைந்து கொடுக்காததாகவும், அசைக்க முடியாததாகவும் உள்ளன. உள்நாட்டுச் சண்டை எப்போதும் மிகுந்த கடுமையானதாயிருக்கும்.

18:20 ஒரு மனிதன் தான் பேசிய சொற்களின் பலனைத் தானே அனுபவிக்க நேரிடும் என்று சில சமயங்களில் கூறுகிறோம். அவை நற்குணம் பொருந்தியவையானால், அவை அவனுக்கு மனநிறைவைக் கொண்டுவரும். அவனுடைய பேச்சின் இயல்புக்கு ஏற்ப அவன் பலனடைவான்.

18:21 நாவு நன்மை அல்லது தீமை எதை வேண்டுமானாலும் உண்டாக்க அதிக ஆற்றல் படைத்தது. அதைப் பயன்படுத்துபவர்கள் அதன் விளைவை ஏற்க ஆயத்தமாயிருக்க வேண்டும்.

18:22 "நன்மை" அல்லது நல்ல என்னும் சொல் **"மனைவி"** என்னும் சொல்லுக்கு முன் வரவேண்டும். நல்ல **மனைவியைக் கண்டடைகிறவன்** பெருஞ்செல்வத்தைக் **கண்டடைகிறான்.** பயபக்தியுள்ள, உதவி மனப்பான்மையுடன் கூடிய மனைவியை அவன் கண்டடைகிற போது, அது அவனுக்கு அளிக்கப்பட்ட கர்த்தருடைய ஈவாக இருக்கிறது.

18:23 ஏழைகள் பெரும்பாலும் மெதுவாக, தாழ்மையாக, மன்றாடும் இயல்போடு பேசுகிறார்கள். இதற்கு மாறாக, செல்வந்தர்கள் கடுமையாக, அதிகாரத் தொனியோடு பேசுகிறார்கள். ஆனால் எல்லாச் செல்வந்தர்களும் அப்படிப் பட்டவர்கள் அல்லர்!

18:24 மீண்டுமாக நாம் இங்கு பல விளக்கங் களைக் கொண்ட நீதிமொழியைப் பெற்றிருக் கிறோம்.

சிநேகிதருள்ளவன் சிநேகம் பாராட்ட வேண்டும். KJV மற்றும் NKJV மொழிபெயர்ப்பு களை நாம் பின்பற்றுவோமானால், நட்பு பாராட் டுதல் நண்பர்களைக் கொண்டுவரும், சில நண்பர்கள் மற்றவர்களைக் காட்டிலும் மிக நெருக்கமானவர்கள் என்பதே இங்கு சொல்லப் பட்ட கருத்து.

NASB, ASV, NKJV அடிக்குறிப்பு, JND ஆகி யவை பல நண்பர்களைக் கொண்ட மனிதன் அழிவை அடைவான் என்று கூறுகின்றன. மேலும் **சகோதரனிலும் அதிகச் சொந்தமாய்ச் சிநே கிப்பவனும் உண்டு** என்றும் அவை கூறுகின்றன. அழிவை நோக்கி நடத்தக்கூடிய பல நண்பர் களைப் பெற்றிருப்பதைக் காட்டிலும் மெய்யான ஒரு நண்பனைப் பெற்றிருப்பது நல்லது என்பதே இங்கு கூறப்பட்டுள்ள கருத்து.

"போலியான பல நண்பர்கள் இருப்பார்கள். ஆனால் ஒரு நண்பன் சகோதரனைக் காட்டிலும் நெருக்கமானவன்" என்று RSV மொழிபெயர்ப்பு கூறுகிறது. இன்பத்தில் நட்பு பாராட்டி துன்பத்தில் விலகிச் செல்கிறவர்கள், பல்வேறு தடங்கல் களுக்கிடையில் உண்மையோடிருப்பவர்கள் ஆகிய இருவேறுபட்ட மனிதர்களுக்கிடையே யுள்ள வேறுபாடு இங்கு சொல்லப்பட்டுள்ளது.

இதிலுள்ள சிறப்பு, பெரும்பாலான மொழி பெயர்ப்புகளில் இவ்வசனத்தின் இரண்டாவது பகுதி வேறுபாடின்றிக் காணப்படுகிறது - **சகோ தரனிலும் அதிகச் சொந்தமாய்ச்** (நெருக்க மாய்) **சிநேகிப்பவனுமுண்டு.** திருவாளர் கேம்ப் பெல் மோர்கன் எழுதுகிறார்:

> இந்த மேன்மையான வசனத்திலிருந்து எழுந்த எல்லாக் கருத்துகளும் இறுதியில் ஒரே இடத் துக்கு வழிநடத்துகின்றன, ஒரே நபரிடமாக வழி நடத்துகின்றன. அவர் பாவிகளின் நண்பர். அங்கு கருத்து வேறுபாடுகள் நின்று போகின் றன. நமது இருதயம் வியந்து போற்றி தொழுது கொள்ளட்டும்.[32]

19:1 இங்கு நேர்மையான ஏழை மனிதன் ஒருவனுக்கும், வஞ்சகம் நிறைந்து (பெரும் பாலும் அவன் செல்வந்தனாக இருக்கக் கூடும்) உண்மைகளைத் திரித்துக் கூறுகிற மூடனுக்கு முள்ள வேறுபாடு கூறப்பட்டுள்ளது. அந்த ஏழை மூடனைக் காட்டிலும் எல்லா நிலைகளிலும் மேலானவனாக இருக்கிறவன் அல்லது நேர்மை யற்றபடி பலவிதமான செயல்களைச் செய்கிற வன், ஒருவேளை இவ்வாழ்க்கையில் பிடிபடா விட்டாலும் கர்த்தரால் தண்டனை அடைவது நிச்சயம்.

19:6 இங்கு **பிரபு** என்று குறிப்பிடப்பட்டுள்ள வன் பெருந்தன்மையுள்ளவன் அல்லது செல் வாக்கு மிக்கவன் என்று பொருள்படும். சலுகை கள் பெறமுடியும் என்னும் நம்பிக்கையில் அவனு டைய நட்பை வளர்த்துக்கொள்ள பலர் முயற்சி செய்கிறார்கள். இன்னாரிடத்தில் உதவி பெற முடியும் என்னும் நம்பிக்கை உண்டாகும்போது, அவரிடத்தில் பலர் நட்புபாராட்ட விரும்புகிறார் கள்.

19:7 ஏழையின் உறவினர்கள் அவனைத் தனியே விட்டுச் செல்கிறார்கள். அவனுடைய நண்பர் களும்கூட இன்னும் அதிகமாய் அவனைப் புறக் கணிப்பார்கள். உதவியையும் பரிவையும் நாடி அவன் அவர்களிடத்தில் பரிதாபமாக வேண்டு கிறான். ஆனாலும் அவர்கள் அவனைவிட்டுத் **தூரமாவார்கள்.**

19:8 ஞானத்தையும் பகுத்தறிவையும் நாடு வது அறிவின் மிகுதியால் செய்யப்படுகிற சுய நன்மைக்கான செய்கையாகும். **புத்தியையும்** நுண்ணறிவையும் காத்துக்கொள்வது வெற்றிக் கான நிச்சயமான வழியாகும்.

19:9 இந்த வசனம் மீண்டும் மீண்டும் அடிக்கடி சொல்லப்பட்டிருப்பதைக் குறித்து நாம் வியப்ப டைய வேண்டியதில்லை. பத்துக்கட்டளைகளில் ஒன்று பொய்ச்சாட்சியைப் பற்றிப் பேசுகிறதே (யாத். 20:16).

19:10 ஆடம்பர வாழ்வு மூடனுக்குத் தகுந் ததல்ல (இலகு தமிழ்). பண்பாடு, நுண்ணயம் ஆகிய பண்புகளோடு நடக்க அவன் அறியா திருக்கிறான். ஓர் அடிமையும் அதிகாரத்தோடு செயல்பட அறிவற்றிருக்கிறான். அவன் தனது முந்தின அதிகாரிகளைக் கடுமையாக நடத்து கிறான்.

19:11 நல்லறிவு பெற்றவன் தனது உணர்ச்சி களைக் கட்டுப்படுத்த அறிந்திருக்கிறான். வேறொரு வன் அவனுக்கு எதிராகத் தவறிழைக்கிறபோது, அவனைக் கிருபையாக மன்னிக்கிறான். இத்த கைய பெருந்தன்மையோடு தாவீது சவுலினிடத் தில் அடிக்கடி நடந்துகொண்ட செயல் இந்த நீதி மொழிக்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

19:12 அரசனின் **கோபம் சிங்கத்தின் கெர்ச்சிப் புக்குச் சமானம்**, குற்றம்புரிபவர்களுக்கு ஆபத் துக் காத்திருக்கிறது என்று அவன் எச்சரிக்கிறான். கீழ்ப்படிகிற குடிமக்களுக்கு அவனுடைய தயை **புல்லின்மேல் பெய்யும் பனிபோல** இன்பமளிப்ப தாகவும் புத்துணர்ச்சி அளிப்பதாகவும் விளங்கும்.

அரசு அதிகாரத்தைக் குறித்தும் எச்சரிப்பு களைக் குறித்தும் ரோமர் 13:1-7 ஆகிய வசனங் கள் எடுத்துரைக்கின்றன. "ஆகையால், நீங்கள் கோபாக்கினையினிமித்தம் மாத்திரமல்ல, மனச் சாட்சியினிமித்தமும் கீழ்ப்படிய வேண்டும்" (வச. 5).

19:13 குடும்ப வாழ்க்கையைத் துயர் மிகுந்த தாக மாற்றுகிற இரண்டு விசயங்கள், ஒன்று தன் மனம்போன போக்கில் அலைந்து திரிகிற மகன், இரண்டாவது ஓயாமல் குறைகாணும் மனைவி. முதலாவது அவனுடைய **தகப்பனுக்குத்** துக்கத் தைக் கொண்டு வருகிறது, இரண்டாவது ஓர் உலோகத்தின்மேல் தண்ணீரானது இடைவிடா மல் ஒழுகிக்கொண்டேயிருப்பதுபோன்ற தொல்லை.

19:14 உங்கள் தகப்பனிடத்திலிருந்து சொத் தையும் பணத்தையும் வாரிசு உரிமையாகப் பெறுவீர்கள். ஆனால் கர்த்தர் மட்டுமே **புத்தி யுள்ள மனைவியை** அருளுகிறவர். அவள் தேவனுடைய சிறப்பான பரிசுப்பொருள் ஆவாள்.

இது நமக்கு ஈசாக்கு ரெபேக்காள் திருமணக் கதையை நினைவுபடுத்துகிறது. "இந்தக் காரி யம் கர்த்தரால் வந்தது" என்று அங்கு சொல்லப் பட்டுள்ளது (ஆதி. 24:50). விண்ணகத்தில் நிச்சயிக்கப்பட்ட திருமணம் அது.

19:15 சோம்பல் போதை மருந்தைப் போன் றது. அது ஒருவனை **தூங்கி விழப்பண்ணும்**. **அசதியானவன்** வறுமையை நாடி **பட்டினியா யிருப்பான்**.

வேதபாட வகுப்பு மற்றும் ஜெபம் ஆகியவற்றி லும் இது உண்மையாயிருக்கிறது.

19:16 கர்த்தருடைய கட்டளைக்குக் கீழ்ப்படி கிறவன் நீண்ட நாட்களுக்குத் தனக்கு எது நன்மையாக இருக்குமோ அதையே செய்கிறான், அது அவனுக்கு உடல் நலத்தையும் ஆவிக் குரிய நலத்தையும் தரும். முரட்டுத்தனமாகவும், அக்கறையின்றியும் வாழ்கிறவன் **சாவான்**.

19:17 ஏழைக்குக் கொடுக்கிறவன் **கர்த்தருக் குக் கடன்கொடுக்கிறான்.** தேவன் அதைத் திரும்பக் கொடுப்பதோடு நல்ல வட்டியைச் சேர்த் துக் கொடுப்பார். அவருடைய பெயரில் ஒரு குவ ளைத் தண்ணீர் கொடுத்தாலும் அதற்கான பலன் தரப்படும் (மத். 10:42). ஹென்றி போஸ்ச் விவரிக் கிறார்.

> தகப்பன் ஒருவர் தன்னுடைய மகனிடம் அரை டாலர் காசைக் கொடுத்து அவனுடைய விருப் பப்படி செய்யலாம் என்று கூறினார். பின்னர் அதைக் குறித்து வினவியபோது, சிறுவன் வேறொருவனுக்குக் கடன் கொடுத்ததாகக் கூறினான். "அதைத் திரும்பப் பெறுவதற்கு நல்ல பிணையப் பொருளைப் பெற்றாயா?" என்று தகப்பன் கேட்டார். "பசியோடு தோற்ற மளித்த ஒரு பிச்சைக்காரனுக்கு அதைக் கொடுத்துவிட்டேன்" என்றான் சிறுவன். "நீ எவ்வளவு பெரிய முட்டாள், உனக்கு அது திரும் பக் கிடைக்கவே கிடைக்காது!" என்றார் அவர். "அப்பா, நான் மிகச் சிறந்த பிணையப் பொரு ளைப் பெற்றிருக்கிறேன். ஏழைக்கு இரங்குகிற வன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான் என்று திருமறை கூறுகிறது!" என்றுரைத்தான் மகன். இதைக் குறித்துச் சிந்தித்த கிறிஸ்தவத் தகப்பன் மனமகிழ்ச்சியோடு மற்றுமோர் அரை டாலர் நாணயத்தை மகனிடம் கொடுத்தார்! "பாருங் கள் அப்பா, அது எனக்கு மீண்டும் கிடைத்து விட்டது, இவ்வளவு விரைவாகக் கிடைக்கு மென்று நான் எதிர்பார்க்கவில்லை!" என்றான் சிறுவன்.[33]

நமக்காகச் செலவுசெய்யும்
பணத்தைநாம் இழந்துபோவோம்
கர்த்தருக்குச் செலவுசெய்யும்
பணம்யாவும் கடன்தானே!
கர்த்தரது சமுகமதில்
பெருஞ்செல்வம் சேர்ந்திடுமே
நம்தேவை யாவுமவர்
குறைவின்றி நிவர்த்திசெய்வார்!

– கிறிஸ்டோபர் வேட்ஸ்வொர்த்

19:18 உங்களுடைய மகன் கற்பிக்கத்தக்கபடி சிறுவனாயிருக்கும்போதே அவனை ஒழுங்குபடுத்த வேண்டும். மிதமான அளவில், மெய்யான அன்பு செலுத்தும் மனப்பான்மையோடு உடலில் கொடுக்கப்படும் தண்டனை ஊறு விளைவிக் காது. மாறாக, பெருமளவு நன்மை பயக்கும்.

அவனைக் கொல்ல உன் ஆத்துமாவை எழவொட்டாதே. இவ்விரண்டாவது வரி, நீங்கள் உங்களுடைய மகனைத் தண்டிக்காமல் அவனு டைய வாழ்வைச் சீரழித்துவிடாதீர்கள் என்று

பொருள்படும். தவறுகளுக்கு இடமளிக்கிற செயல் கொடுஞ்செயலாகும். "உங்களுடைய கடுங்கோபத்தால் அளவுக்கதிகமாக தண்டனை செய்யும் ஆபத்தான நிலையை அடையாதீர்கள்" என்றும் இது பொருள்படும்.

19:19 கடுஞ்சினம் கொள்பவன் அதற்கான தண்டனையைப் பெறுவான். அவனுடைய கீழ்த்தரமான கோபத்தின் விளைவுகளிலிருந்து நீங்கள் அவனைத் தப்புவித்தாலும், அவன் அதை மீண்டும் செய்வான், நீங்கள் மீண்டும் அவனைத் **தப்புவிக்க வேண்டியதாய் வரும்.**

19:20 இளவயதிலேயே நல்லாலோசனைகளுக்குச் செவிகொடுத்து **புத்திமதியை ஏற்றுக் கொள்ள** வேண்டும், உங்களுடைய பிந்தைய கால வாழ்க்கையில் நீங்கள் ஞானமுள்ளவராக இருப்பீர்கள். "ஞானம் நீண்டகால முதலீடு" என்று ஒருவர் கூறினாற் போல இது இருக்கிறது.

19:21 மனிதன் எல்லாவிதமானத் திட்டங்களையும் தீட்டுகிறான், இருந்த போதிலும் கர்த்தருடைய நோக்கங்களே நிறைவேறும். "மனிதன் பொல்லாப்புச் செய்ய எண்ணுகிறான், தேவனோ தம் வழியில் செல்கிறார்." இறுதியில், மனிதனால் சத்தியத்திற்கு எதிராக ஒன்றும் செய்ய முடியாது (2 கொரி. 13:8).

19:22 இந்த வசனத்திற்கான J. N. டார்பி அவர்களின் மொழிபெயர்ப்பு போற்றுதற்குரியது: ஒரு மனிதனின் கவர்ச்சி அவனுடைய அன்பு டைமை; **பொய்யனைப் பார்க்கிலும் தரித்திரன் வாசி.** ஒரு மனிதன்மேல் உங்களுக்கு அதிக விருப்பத்தை ஏற்படுத்துவது அவன் தயை பாராட்டுகிற செயலேயாகும். உதவி செய்வதாகக் கூறிவிட்டு அதைச் செய்யாதிருக்கிற செல்வந்தனைக் காட்டிலும், இரக்கம் பாராட்டுதலைத் தவிர வேறொன்றும் செய்ய முடியாத ஏழை சிறந்தவன்.

19:23 கர்த்தருக்குப் பயப்படுதல் வாழ்க்கைக்கான பாதை ஆகும். **அதைப்** பெற்றிருக்கிற மனிதன் மனநிறைவு பெற்றிருப்பதற்கான அனைத்து காரணங்களையும் கொண்டிருக்கிறான். இயற்கைச் சீற்றம் அவனை அணுகாது.

19:24 சோம்பேறி தன் கையைக் கலத்திலே வைத்து, அதைத் திரும்பத் தன் வாயண்டைக்கு எடுக்காமலிருக்கிறான். உருளைக் கிழங்கு வற்றல் இருக்கும் பாத்திரத்திற்குள் தன் கையை விடும் சோம்பேறிக்கு, அதை எடுத்துத் தன் வாய்க்குள் இடுவதற்குச் சோம்பலாக இருக்கிறது. அந்த வற்றல் அவனுக்குப் பாரமாயிருக்கிறது.

19:25 பரியாசக்காரனை அடித்தாலும் அவன் மாறமாட்டான். ஆனால் அவ்வாறு அடிக்கப்படுவதைப் பார்க்கக்கூடிய அறிவுக் கூர்மையில்லாத சிலர் பாடத்தைக் கற்கலாம். 1 தீமோத்தேயு 5:20 -ஆம் வசனத்தை இது நமக்கு நினைவுபடுத்துகிறது, "மற்றவர்களுக்குப் பயமுண்டாக்கும்படி, பாவஞ்செய்தவர்களை எல்லோருக்கும் முன்பாகக் கடிந்துகொள்."

புத்திமானை அடிக்க வேண்டியதில்லை, கடிந்துரைக்கும் ஒரு சொல் அவன் தனது தப்பிதத்தைத் திருத்திக்கொள்ளச் செய்யும், அவன் கூடுதல் அறிவடைவதற்கு அது உதவும்.

19:26 தன் தகப்பனை இழிவாக நடத்தி அல்லது அவனைப் பழிதூற்றி (பெர்க்லே), வீட்டிலிருந்து தாயை வெளியேற்றுகிற மகன் தனக்குத்தானே அவமானத்தை ஏற்படுத்துகிறவனாகவும், கெட்ட பெயரை வருவிக்கிறவனாகவும் இருப்பான். மேலும் இருதயம் நொறுங்குண்ட பெற்றோருக்கு அவன் **அவமானத்தையும்** நிந்தையையும் கொண்டுவருகிறான். அவனுடைய பெற்றோர் அவனுக்குச் செய்த எல்லா நன்மைகளுக்கும் அவனுடைய பதிற்செயல் இழிந்த செயலாக இருக்கிறது.

19:27 இந்த நீதிமொழி ஒரு வைரத்தைப் போலிருக்கிறது. நீங்கள் இதை எத்திசையில் திருப்பினாலும், ஒரு புதிய ஒளிக்கீற்றை வெளிப்படுத்துகிறது. இதற்குக் கொடுக்கப்படக் கூடிய மூன்று விளக்கங்கள்:

> "பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் இளைஞர்களுக்கு மிகச்சிறந்த அறிவுரைகள் வழங்கப்படுகின்றன. அங்குதான் திருமறை வெகுவாகத் தாக்குதலுக்கு உள்ளாகிறது! சந்தேகங்களும் மறுப்புரைகளும் குண்டுமாரிப் பொழியும்போது அதற்கு இடங்கொடுப்பதைக் காட்டிலும் கல்லூரிப் படிப்பைத் துறப்பது சிறந்தது" என்பதே KJV மொழிபெயர்ப்பில் காணப்படும் பொருள்.

RSV மற்றும் பெர்க்லே மொழிபெயர்ப்புகள் இவ்வாறு கூறுகின்றன: **"என் மகனே, அறிவைத் தரும் வார்த்தைகளை விட்டு விலகச் செய்யும் போதகங்களை நீ கேளாதே."** நல்ல அறிவுரைகளைக் கேட்டும் அவற்றிற்கு நீங்கள் கீழ்ப்படிவதில்லையென்றால், அவற்றைக் கேட்பதில் என்ன பயன் இருக்க முடியும். நீங்கள் உங்கள் நேரத்தையும், ஆசிரியரின் நேரத்தையும் வீணாக்கி, உங்கள் மேல் குற்றத்தைக் குவித்துக்கொள்வீர்

கள். "அறிந்து, அதைச் செய்யாமலிருப்பதைக் காட்டிலும், அறியாமலிருப்பதே மேல்."

மூன்றாவது விளக்கம் ஓர் எச்சரிப்பாகும். "என் மகனே, நீ அறிவுறுத்தல்களைக் கேட்பதை நிறுத்தினால் அறிவுள்ள வார்த்தைகளிலிருந்து விலகிப் போவாய்" (NKJV - இலகு தமிழ்).

19:28 சீர்கெட்ட சாட்சி நீதியைக் கேலிசெய்கிறான் (இலகு தமிழ்) - இதற்கு விதிவிலக்கு அவன் நீதி விசாரணை செய்யப்படும் நேரம்! அவன் பேராசை கொண்டவனாக **விழுங்குகிறான்** அல்லது அக்கிரமத்தைப் பரப்புகிறான். அவன் அக்கிரமத்தைத் தண்ணீரைப் போலக் குடிக்கிற மனிதனைப் போல இருக்கிறான், எலிப்பாஸ் விவரிக்கிற மனிதனை இவன் பிரதிபலிக்கிறான் (யோபு 15:16).

19:29 பரியாசக்காரரும் மூடரும் மனித வரலாற்றின் மறைவிடங்களிலிருந்து ஏளனச் செயல்புரிகிறார்கள், அவர்களுக்கான தண்டனையும் நியாயத்தீர்ப்புகளும் காத்துக்கொண்டிருக்கின்றன. திரை மூடப்பட்ட பிறகு தவிர்க்க முடியாத சந்திப்பு நடைபெறும்.

20:1 திராட்சைரசம் மனிதர்களைப் பரியாசம் செய்வது உண்மையே, ஆனால் அது மனிதர்களைப் பரியாசம் செய்கிறவர்களாகவும் எள்ளி நகையாடுகிறவர்களாகவும் மாற்றுகிறது என்பதே இங்கு கூறப்பட்டுள்ள கருத்து. மதுபானம் அவர்களை **அமளி** பண்ணச் செய்யும்.

திராட்சைப் பழத்திலிருந்து திராட்சை ரசம் செய்யப்படுகிறது. மதுபானம் தானியத்திலிருந்து தயாரிக்கப்படுகிறது. இரண்டுமே மனிதனை வழிவிலகச் செய்கிறது. முதலாவது, ஒருவன் சமுதாயப் பண்புக்காகக் குடிக்கிறான். பின்னர் அவன் அதிகமாகக் குடிக்கிறான், அதற்குப் பிறகு அவன் மதுவுக்கு அடிமையாகிறான். அவன் அந்தப் பழக்கத்தை விட்டுவிட முயற்சி செய்கிறான், ஆனால் அவன் சங்கிலியால் கட்டப்பட்டவன் போலிருக்கிறான். கிறிஸ்து சங்கிலியைத் தகர்த்தெரிய ஆற்றல் தருவார், ஆனால் முதலில் அவன் விடுதலையை நாடவேண்டும்.

20:2 அரசன் சினம் அடைந்திருந்தால், அரண்மனை முழுவதும் அச்சம் பரவும். அது **சிங்கத்தின் கெர்ச்சிப்பால்** உண்டாகிற அச்சத்திற்கு ஒப்பாயிருக்கும், அது பெரும் ஆபத்திற்கான எச்சரிப்பாகும். அரசனைக் **கோபப்படுத்துகிறவன்** தன் உயிருக்கே கெடுதல் செய்கிறான்.

இதில் நாம் கற்கும் பாடம் ரோமர் 13:4 -இல் காணப்படுகிறது: "உனக்கு நன்மை உண்டாகும் பொருட்டு, அவன் (அரசன்) தேவ ஊழியனாயிருக்கிறான். நீ தீமை செய்தால் பயந்திரு; பட்டயத்தை அவன் விருதாவாய்ப் பிடித்திருக்கவில்லை. தீமை செய்கிறவன்மேல் கோபாக்கினை வரப்பண்ணும்படி, அவன் நீதியைச் செலுத்துகிற தேவ ஊழியனாயிருக்கிறான்."

20:3 மேன்மையான மனிதன் சண்டை சச்சரவுகளிலிருந்து விலகித் தனித்திருக்க வேண்டுமென்று முடிவுசெய்திருக்கிறான். **மூடனோ** யாரேனும் ஒருவரிடம் சண்டை போடவில்லையென்றால் மகிழ்ச்சியாயிருப்பதில்லை.

20:4 காற்று வடதிசையிலிருந்து வீசுகிற நவம்பர், டிசம்பர் மாதங்களில்தான் பொதுவாக இஸ்ரவேலில் நிலங்கள் உழப்படும். **சோம்பேறி** தான் வேலை செய்யாமல் இருப்பதற்குக் குளிரைக் காரணம் காட்டுகிறான். உழவில்லையெனில் பயிரிடமுடியாது, பயிரிடவில்லையெனில் அறுவடை செய்ய முடியாது. அறுவடைக் காலத்தில் அவன் தன் வயலில் தானியம் இருக்கிறதா என்று காணச்சென்று, ஏன் அங்கு இல்லையென்று ஆச்சரியப்படுகிறான்.

20:5 ஒரு மனிதனுடைய எண்ணங்களும் நோக்கங்களும் பெரும்பாலும் அவனுடைய மனதின் ஆழத்தில் மறைந்திருக்கும். பொதுவாக அவன் அதை வெளிப்படுத்துவதில்லை. ஆனால் பகுத்தறிவுள்ள மனிதன் புத்தியுள்ள சில கேள்விகளைக் கேட்டு அவற்றை வெளிக்கொணர்வது எவ்வாறு என்று அறிந்திருக்கிறான். ஒரு மனிதனிடத்தில் தோன்றுகிற நேர்மையற்ற எண்ணங்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்து, அவற்றிலிருந்து அவன் விடுதலை பெறுவதற்கான வழியை நல்ல ஆலோசகர் கற்றுத்தருவது இதற்கோர் எடுத்துக்காட்டு.

20:6 உண்மையாக இருப்பதாக வெற்றிக்கை செய்கிற மனிதர்களைக் கண்டறிவது கடினமானது அல்ல. ஆனால் மெய்யாகவே உண்மையோடு இருக்கிற மனிதர்களைக் கண்டறிவது கடினம். மனிதர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதற்கும், அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்று மற்றவர்கள் நினைக்க வேண்டும் என்று விரும்புகிறதற்கும் வேறுபாடு உள்ளது. இது ஒரு "ஆளுக்கும்" அவனுடைய "ஆளுமைக்கும்" உள்ள வேறுபாடு.

20:7 நீதிமான் நேர்மையோடும் **உத்தமத்தோடும் நடக்கிறான்**. அவனுடைய பிள்ளைகள்

உயர்குடியில் பிறந்தவர்களாக, அவனுடைய வாழ்க்கையினாலும் மாதிரியினாலும் பயனடை கிறார்கள்.

20:8 நியாயாசனத்தில் வீற்றிருக்கும் அரசன் தன் கண்களால் சகல பொல்லாப்புகளையும் பிரித்து அகற்றுகிறான். நியாயாசனத்தில் கிறிஸ்து அமர்ந்திருக்கும் வேளையில், தீப்பிழம்பு போன்று எல்லாவற்றையும் காணும் தம் கண்களால் போலியானவற்றைக் கண்டு, எல்லாச் சான்று களையும் புடைத்துக் கண்டறிவார்.

20:9 எவனொருவனும் தனது சொந்த முயற்சியால் தனது பாவத்தைக் களைந்து தன் னைத் தூய்மைப்படுத்த முடியாது. **"என் இரு தயத்தைச் சுத்தமாக்கினேன். என் பாவமறத் துப்புரவானேன்" என்று சொல்லத்தக்கவன் யார்?** ஒருவன் தான் தூய்மையானவன் என்று கருதுவானெனில், அவன் தன்னைத்தானே ஏமாற்றி அதனால் பாதிக்கப்படுகிறான்.

ஆனால் கர்த்தராகிய இயேசுவின் விலை யேறப்பெற்ற இரத்தத்தின் மூலமாகத் தூய்மை யடைய முடியும். மெய்யான விசுவாசிகள், "தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவரு டைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர் கள்" (வெளி. 7:14).

விடுதலையைப் பெற்றிடவே
விலையான செங்குருதி
கொடுஞ்சிவப்புக் கறைநீக்கி
தூயவராய் ஆக்கியதே!
அறிவார்ந்த பெரியோரே
அறைகூவல் விடுக்கின்றோம்
செறிவுமிக்க செங்குருதி
நீக்கிடாத பாவமுண்டோ?

– அகஸ்டஸ் M. டாப்லேடி

20:10 தேவன் கள்ளத்தனமான **நிறைகல்லை** யும் மரக்கால்களையும் வெறுக்கிறார். பிறருக் குப் பாதகம் விளைவித்துத் தனக்கு ஆதாயம் தேடுகிற நேர்மையற்ற எந்தவொரு உபகரண மும் இதில் அடங்கும். கசாப்புக் கடைக்காரன் கறியை நிறுக்கும்போது தன் கைகளைத் தரா சின் பிடியில் தந்திரமாக வைக்கும் முறையையும் இது குறிக்கும். நமக்கு நாமே நிர்ணயிக்கும் தரத்தைக் காட்டிலும் பிறருக்கு நாம் நிர்ணயிக் கும் கண்டிப்பான தரமும் இவ்வகையைச் சேர்ந்ததே ஆகும்.

20:11 ஒருவன் தனது அடிப்படை இயல்பை தனது இளவயதிலேயே வெளிப்படுத்துகிறான். சிறுபிள்ளைகள் சிலர் வெறுக்கத்தக்க சினம் கொண்டிருக்கிறார்கள், சிலர் மென்னயம் உடைய வர்கள். "ஒரு சிறுபிள்ளையே, பின்னர் எப்படிப் பட்ட மனிதனாக ஆகப்போகிறானோ அவனுடைய தகப்பன் ஆவான்." அவன் தன்னுடைய இயல்பை, நன்மைக்கோ தீமைக்கோ இள வயதுவரை தொடருகிறான்.

20:12 கர்த்தர்தாமே **கேட்கிற காதையும் காண்கிற கண்ணையும்** உண்டாக்கினவர். அவை அவருக்குச் சொந்தமானவை, அவற்றை அவருடைய மகிமைக்காகப் பயன்படுத்த வேண் டும் என்பதைத் தவிர இதன் பொருள் வேறு என்ன?

20:13 தூக்கத்தில் அதிகமான நேரத்தைச் செலவிடக்கூடாது. அவ்வாறு அதில் அதிக நாட் டம் கொண்டால் நீங்கள் வறுமை அடைவீர்கள். எழுந்து வேலைக்குச் செல்லுங்கள். உங்கள் வீட்டு வாடகை கொடுக்கவும், மளிகைப் பொருட் கள் வாங்கவும், கர்த்தருடைய பணிக்குக் கொடுக்கவும் வருமானத்தைப் பெறுவீர்கள்.

20:14 இது பழங்காலத்தில் வாங்குபவர்கள் செய்கிற தந்திரம். பழைய வாகனத்தைப் பார்த் தவுடன், அதில் அடிபட்டு வளைந்த பகுதிகள் தேய்ந்து போன டயர்கள் சத்தமிடுகிற இயந்திரம் அதிர்ச்சியளிக்கிற நிறம் ஆகியவற்றைக் குறித்து உரத்தகுரலில் அவன் பேசுகிறான், **"நல்லதல்ல, நல்லதல்ல."** அந்த வாகனம் ஒரு பயனற்ற பொருள் என்று விற்பவன் இதுவரை எண்ணியதில்லை. எவ்விதக் கபடும் இல்லாமல் அவன் விலையைக் குறைக்கிறான்; வாங்குபவன் பணத்தைக் கொடுக்கிறான். பிறகு வாகனத்தை வாங்கியவன் தன்னுடைய நண்பனிடத்திற்குச் சென்று பேரம் பேசுகிற தனது திறமையைக் குறித்து மெச்சிக் கொள்கிறான்.

20:15 ஒருவன் பொன் ஆபரணங்களையும் விலையேறப்பெற்ற முத்துக்களையும் அணிந் திருக்கலாம், ஆனால் சிறந்த அணிகலம் அறி வுள்ள பேச்சு. அதனை அணியுங்கள்.

20:16 *அந்நியருக்காகப் பிணைநிற்ப வனின் உடையை எடுத்துக்கொள். ஒழுக்கங் கெட்டவளுக்காக அவன் அதைச் செய்தால் ஈடாக அதை வாங்கிக்கொள்* (இலகு தமிழ்). தான் அறிந்திராத ஒருவனுக்காகப் பொருளா தாரப் பிணை நிற்பது மடத்தனமான ஆபத்து. அப் படிப்பட்ட மனிதனோடு நீங்கள் கொடுக்கல் வாங் கல் செய்வீர்களானால் நீங்கள் உத்திரவாத மாக மதிப்பு நிறைந்த சொத்தை ஈடாகப் பெற்றுக்

கொள்ளுங்கள். ஏனெனில் அவன் பணத்தைத் திரும்பச் செலுத்த முடியாமல் போகக்கூடிய நிலை ஏற்படலாம். கடன் பெறுகிற அந்நியன் ஒழுக்கமற்றவனாக இருந்தால் இந்த ஆலோசனை முற்றிலும் உண்மையாயிருக்கிறது.

20:17 நேர்மையற்ற முறையில் ஈட்டிய பணம் தற்காலிகமாக மனநிறைவு அளிக்கும், ஆனால் முடிவில் அது மகிழ்ச்சியற்றதும், வாய் நிறைய போடப்பட்ட **பருக்கை கற்கள்** போல எரிச்சலூட்டுவதுமாக இருக்கும். இது வருமான வரி இலாகாவுக்குத் தவறான கணக்கு காட்டுவதாகவும், செலவுக் கணக்கைக் கூட்டி எழுதுவதாகவும், சோதனை செய்ய வருபவர்களுக்குக் கைக்கூலி கொடுப்பதாகவும், விற்பனைப் பொருட்கள் பற்றிய தவறான விவரங்களை அவற்றின்மேல் ஒட்டுவதாகவும், ஒன்றை விளம்பரம் செய்து மற்றொரு பொருளை விநியோகிப்பதாகவும் இருக்கலாம்.

20:18 ஒரு திட்டத்தைத் தீட்டுவதற்கு முன் பல ஆலோசனைகளைத் திரட்டுவது விரும்பத்தக்கது. எந்தப் படைத்தளபதியும் இராணுவ வல்லுநர்களின் ஆலோசனையைப் பெறாமல் போருக்குச் செல்ல மாட்டான்.

20:19 வதந்தி நம்பகத்தன்மையை இழக்கச் செய்துவிடும். ஆகவே கோள் சொல்கிறவனோடு கலவாதிருங்கள். ஏனெனில் பிறரைப் பற்றி அவன் உங்களிடம் பேசினால், உங்களைப் பற்றி அவன் பிறரிடம் பேசுவது நிச்சயம்.

20:20 மோசேயின் பிரமாணத்தின்படி தன் பெற்றோரைச் சபிக்கிறவன் மரண தண்டனை பெறவேண்டும் (யாத். 21;17). இன்றைய நாட்களிலே பெற்றோரிடத்தில் வெறுப்பு பாராட்டும் இளைஞர்களுக்கு இது தயக்கத்தைக் கொண்டு வர வேண்டும். இந்தக் கசப்பு நீங்க வேண்டும். இது தற்காலிகமாக இருளுக்குள்ளும், நித்திய மாகப் பேரழிவுக்குள்ளும் வழிநடத்தும்.

20:21 கெட்டகுமாரன் விரைவாகத் தனது **சுதந்தரத்தின்** பங்கைப் பெற்றான், அதே வேகத்தில் அதை இழந்துபோனான். இந்த நீதிமொழி விரைந்து பணம்சேர்க்கும் எல்லாத் திட்டங்களையும் குறிக்கும். எளிதில் கிடைப்பது, எளிதில் போகும்.

20:22 உங்களுடைய எதிரிகளைப் பழிவாங்க நினைக்க வேண்டாம். பழிவாங்குதல் கர்த்தருடையது. அவர் திரும்பச் செலுத்துவார். **கர்த்தருக்குக் காத்திரு. அவர் உன்னை** விடுவித்து நீ நேர்மையானவன் என்பதை மெய்ப்பிப்பார்.

20:23 பட்டுத் துணிகள் விற்பனை செய்யும் ஒரு கடையில் ஆடம் கிளார்க் வேலை பார்த்தார். அவர் விற்பனை செய்யும் அந்தத் துணியை இழுத்து அளக்க வேண்டும் என்று அவருடைய முதலாளி கூறினார். "உங்களுடைய பட்டுத்துணி விரிந்து நீளமாகும், ஐயா; ஆனால் என்னுடைய மனச்சாட்சி அதற்கு இடம் கொடுக்காது" என்று அவர் விடைபகர்ந்தார். பல ஆண்டுகளுக்குப் பிறகு பலராலும் பயன்படுத்தப்படுகிற வேத விரிவுரை நூலை இயற்றும்படி தேவன் ஆடம் கிளார்க்கை மேன்மைப்படுத்தினார்.

20:24 தேவனுடைய இறையாண்மையும் மனிதனுடைய தன்னிச்சையான செயல்பாடும் உண்மையாக இருந்தபோதிலும், இவ்வசனம் தேவனுடைய இறையாண்மையையே வலியுறுத்துகிறது. மனுக்குலத்தின் செயல்பாடுகளின் மேல் தேவன் அதிகாரம் உடையவர், நமக்கு எது நல்லது என்று அவர் அறிந்திருக்கிறார் என்பதே இங்கு காணப்படும் கருத்து. ஆகவே நாம் அவருடைய வழிநடத்துதலை எதிர்நோக்கியிருக்க வேண்டும், நம்முடைய எதிர்காலத்திற்கு நாமே எஜமானர்கள் என்று எண்ணியவர்களாக நம்முடைய சொந்தவழியில் சென்று எல்லாவற்றையும் நமக்குச் சாதகமாக்கிக்கொள்ளக் கூடாது.

20:25 பரிசுத்தமானது என்று ஒரு பொருளை ஒப்புவித்துப் **பொருத்தனை செய்வதும், செய்த பின்பு அதைக் குறித்து யோசிக்கிறதும், மனிதனுக்குக் கண்ணியாயிருக்கும்.** ஏதேனும் ஒன்றைக் கர்த்தருக்கு ஒப்புவித்துவிட்டு, அதற்குப் பிறகு அதைக் குறித்து மாற்றுக் கருத்துக் கொள்வது ஆபத்தானது. நீங்கள் பொருத்தனை செய்வதற்கு முன், உங்களால் அதைச் செய்து முடிக்க இயலுமா என்றும், அதைச் செலுத்த வேண்டுமென்று முடிவான நோக்கம் உங்களுக்கு இருக்கிறதா என்றும் நீங்கள் நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டும்.

20:26 ஞானமுள்ள அரசன் துன்மார்க்கரைப் பொறுத்துக்கொள்ள மாட்டான். அவன் **அவர்கள் மேல் உருளையை உருட்டுவான்.** அதாவது, நீதிமான்களிடத்திலிருந்து அவர்களைப் பிரித்தெடுத்து, விசாரணை செய்து தண்டனை அளிப்பான்.

20:27 இங்கு **மனிதனுடைய ஆவி** என்று சொல்லப்பட்டிருப்பது, பொதுவாக மனச்சாட்சி என்றே கருதப்படுகிறது. அது கர்த்தரால் நமக்குக் கொடுக்கப்பட்டு, **தீபமாகச்** செயல்படுகிறது. நம்முடைய எண்ணங்கள், நோக்கங்கள், விருப்

பங்கள், செயல்கள் எல்லாவற்றின் மேலும் அது வெளிச்சமிட்டு உதவுகிறது. நமது வாழ்வின் உள்ளார்ந்த நினைவுகள் மற்றும் நோக்கங்கள் எல்லாவற்றையும் ஆராய்ந்து அது அனுமதிய ளிக்கிறது அல்லது கண்டித்து உணர்த்துகிறது (ரோமர் 2:14,15 - ஆகிய வசனங்களைக் காண்க).

20:28 தயையையும் சத்தியத்தையும் குண நலன்களாகப் பெற்ற தலைவன் அவனுடைய குடிமக்களின் நன்மதிப்பையும் ஆதரவையும் பெறுவான். அவன் கொடுங்கோன்மையால் அல்ல, **தயையினாலேயே** தனது அதிகாரத் தைத் தக்கவைத்துக்கொள்கிறான்.

20:29 இளைஞர்களின் சிறப்புமிக்க **அலங் காரம் அவர்களுடைய பராக்கிரமே** ஆகும். முதிர்வயதானவர்களின் நரைமுடி ஞானத்தோ டும் அனுபவத்தோடும் தொடர்புடையது. ஒவ் வொரு சபைக்கும் திருப்பணியாற்ற வலிமை யுள்ள இளைஞர்களும், ஞானமுள்ள ஆலோ சனை கூற வயதுமுதிர்ந்தவர்களும் தேவை.

20:30 "அடிகளும், காயங்களும் தீமையை அகற்றும்; பிரம்படிகள் உள்ளத்தின் ஆழத் தைச் சுத்திகரிக்கும்" (இலகு தமிழ்).

உடல்ரீதியாகக் கொடுக்கப்படுகிற தண்டனை கள் நெறியற்ற தீமைகளை அகற்றுவதில் பயன் தரும் என்பது இங்கு கூறப்படும் கருத்தாகத் தோன்றுகிறது. ஒரு சிறுபிள்ளை தனது தாயின் பணப்பையிலிருந்து திருட நினைக்கும்போது, அவன் முந்தி வாங்கின அடியை நினைவுகூரு வான்.

21:1 ஒரு வாய்க்கால் அல்லது கால்வாய் **நீரின்** போக்கை வழிநடத்துவதுபோல கர்த்தர் அரசனின் எண்ணங்களையும் செயல்களையும் வழிநடத்து கிறார், மாற்றியமைக்கிறார். ஒடுக்குகிற அரசு களுக்குக் கீழ் வாழ்கிற கிறிஸ்தவர்களுக்கும், பகைமை எண்ணங்கொண்ட நாடுகளுக்கு நற்செய்தியை ஏந்திச் செல்கிற திருப்பணி ஊழி யர்களுக்கும் இது உற்சாகம் அளிக்கிறது.

21:2 ஒரு **மனிதன்** தனது சொந்த வாழ்க்கைக் கும் ஊழியத்திற்கும் வழுவற்ற நீதிபதியாக இருக்கமாட்டான்; அவன் வெளித்தோற்றத்தின் படி தீர்ப்பு வழங்குகிறான். **கர்த்தரோ** மனிதனு டைய எண்ணங்களையும் நோக்கங்களையும் **நிறுத்துப்பார்க்கிறார்**.

21:3 கர்த்தர் தமது சத்தத்திற்கு மனிதர்கள் கீழ்ப்படிகிறதைப் போல, சர்வாங்க தகன**பலிகள்** மற்றும் காணிக்கைகள் ஆகியவற்றில் மகிழ் வடைகிறதில்லை (1 சாமு. 15:22). தேவன் சமயச் சடங்குகளின் ஆர்வலர் அல்லர். உள்ளார்ந்த உண்மையிலேயே அவரது விருப்பம் காணப்படு கிறது.

21:4 தேவனுடைய பார்வையில் பாவமான மூன்று விசயங்கள் இந்த நீதிமொழியில் சொல் லப்பட்டுள்ளன: **மேட்டிமையான பார்வை**, அதாவது, இறுமாப்பின் வெளித்தோற்றம்; **அகந் தையான மனம்**, அதாவது மனமே உள்ளான கொள்கலம்; **துன்மார்க்கர் போடும் வெளிச்சம்**, அவர்களுடைய செல்வ வளம், இன்பம், வாழ்க்கை முறை அல்லது நம்பிக்கை இவற்றைக் குறிக்கும்.

21:5 தங்களுடைய வாழ்க்கைத் தேவை களுக்காகக் கடினமாக உழைப்பவர்கள், ஓரிர வில் பெருஞ்செல்வத்தை அடைய விரும்புகிற வர்களிடமிருந்து மாறுபட்டவர்கள். முந்தி சொல் லப்பட்டவர்கள் நிறைவையும், இரண்டாவது சொல்லப்பட்டவர்கள் வறுமையையும் அடைவது உறுதிபண்ணப்பட்டுள்ளது.

21:6 நேர்மையற்ற முறையிலும், பொய் நாவி னாலும் செல்வத்தை நாடுகிறவர்கள் காற்றைத் துரத்திச் செல்கிறவர்கள் போல இருக்கிறார்கள். தங்களை விட்டு மறைந்து போகிற பொருட் களையே அவர்கள் தேடிச் செல்கிறார்கள், அப்படிப்பட்ட முயற்சியிலே அவர்கள் அழிந்து போகிறார்கள். கானல் நீரைப் பாலைவனத்தில் பின்தொடருகிற பயணியைப் போல அவர்களு டைய நிலை இருக்கிறது; அவன் **சாவை** அடை யும்படி கானல் நீர் கண்ணியாக இருக்கிறது.

21:7 துன்மார்க்கர் நியாயஞ்செய்ய மன தில்லாதிருக்கிறபடியால், அவர்கள் பாழ்க் கடிக்கப்பட்டுப் போவார்கள். இவ்வுலகில் நன் னெறிக் கோட்பாடு கடைப்பிடிக்கப்பட்டு வரு கிறது, அதன்படி வன்முறை, தீய செயல்கள், அநீதி ஆகியவை தண்டிக்கப்படாமல் போகாது என்னும் உறுதி தரப்பட்டுள்ளது. ஒருபோதும் தப்பமுடியாது!

21:8 "குற்றவாளிகளின் வழி கோணலானது. ஆனால் குற்றமற்றவர்களின் நடத்தையோ நேர்மையானது" (JND - இலகு தமிழ்). குற்றச் செயல் ஒரு மனிதனைப் பொய் சொல்லவும், மறைத்துவைக்கவும், மாறு வேடமணியவும், அச்சமடையவும், தவறான வழியில் செல்லவும் வைக்கிறது. பாவங்களை அறிக்கை செய்து விட்டுவிட்டவன் மறைப்பதற்கு ஒன்றுமில்லை, அவன் வெளிச்சத்தில் நடக்கிறான்.

21:9 வேதாகம நாடுகளில் வீடுகளின் மேற் கூரை சமதளமாயிருந்ததில்லை. அப்படிப்பட்ட மேற்கூரையில் நெருக்கமான ஒரு **மூலையில்**, வெப்பம், குளிர், மழை, பனி, காற்று, ஆலங்கட்டி மழை ஆகியவற்றிற்கு ஆளாகித் தனித்து வாழ்வது எந்நேரமும் சீண்டிக்கொண்டே இருக் கிற அல்லது சண்டையிட்டுக் கொண்டே இருக் கிற பெண்ணோடு பெரிய வீட்டில் குடியிருப்ப தைக் காட்டிலும் மேல். உள்ளான கொந்தளிப் பைக் காட்டிலும், வெளியிலுள்ள சூறாவளி மழை சகிக்கத்தக்கது.

21:10 துன்மார்க்கனுடைய மனம் ஏதேனும் ஒரு புதிய **பொல்லாப்பைச்** செய்ய எப்போதும் திட்டமிட்டுக்கொண்டே இருக்கும். அதை அவன் செய்யும்போது அதனால் அவனுடைய **அயலான்** பாதிப்படைவதைக் குறித்துச் சிறிதளவும் **இரக்கம்** காட்டமாட்டான். இவ்வாறாக அவனு டைய பாவச்செயல் வேண்டுமென்றே செய்யப் பட்டதும், இரக்கமற்ற முறையில் செய்யப்பட்டது மாக இருக்கும். நவீன காலத்தில் குற்றச்செய் கைகளுக்கான காரணம் சமுதாய வாழ்க்கை முறையே என்னும் சாக்குப்போக்குகள் பகுத் தறிவுக்கு பொருந்தா.

21:11 ஏளனம் செய்பவன் தண்டனை பெற்ற பின்னரும் திருந்துவதில்லை, ஆனால் அறிவற் றவன் அதைக் கண்டு எச்சரிக்கப்படுகிறான். ஞான முள்ளவன் தண்டிக்கப்பட வேண்டியதில்லை. அவன் அறிவுரை கொடுக்கப்படும் போதே கற் கிறான்.

21:12 நீதிபரராகிய தேவன் **துன்மார்க்கரு டைய வீட்டை** உன்னிப்பாகக் **கவனித்துப் பார்க் கிறார்**; **துன்மார்க்கரை** அவர்களுடைய துன் மார்க்கத்தினிமித்தம் **கவிழ்த்துப் போடுகிறார்**. துன்மார்க்கனுடைய செயல்பாடுகளை தேவன் உன்னிப்பாகக் கவனித்துப் பார்க்கிறார்; ஏற்ற நேரத்தில் அவர்கள் மீது அழிவைக் கொண்டு வரத்தக்க திடீர் மாற்றத்தை அவர் கொண்டு வருகிறார்.

21:13 லூக்கா நற்செய்தி நூலில் 16:19-31 வச னங்களில் காணப்படும் செல்வந்தன் தனது வாசற்படியில் கிடந்த பிச்சைக்காரனின் உடன டித் தேவையைக் குறித்து கவலையற்றவனாக இருந்தான். ஆனால் உலக வாழ்வுக்குப் பிறகு அவனே தனக்கு உதவி வேண்டுமென்று கதறி னான், அவனுடைய கதறல் கேட்பாரற்றுப் போயிற்று.

21:14 சில உண்மைகளை ஏற்றுக்கொள்ளா மலேயே திருமறை ஆங்காங்கே பதிவுசெய்து வைத்திருக்கிறது. இவ்வாறாகவே, கோபமுற்ற மனிதனை அமைதிப்படுத்தும்படி குற்றம் புரிந் தவன் **வெகுமதியை** இரகசியமாக அவனுக்குக் கொடுக்கிறான், தனது பையில் செருகப்பட்ட **பரி தானத்தின்** காரணமாகச் சீற்றமடைந்தவன் சமாதானம் பெறுகிறான் என்னும் உண்மைகள் இங்கு பதிவு செய்யப்பட்டுள்ளன.

21:15 நீதிசெய்வது **நீதிமானுக்கு** மகிழ்ச்சி யைக் கொடுக்கிறது. ஆனால் **அக்கிரமம்** புரிந்த வர்களை **அழிவு** வந்து சேரும். இது கிறிஸ்துவின் இரண்டாம் வெளிப்பாட்டின்போது வெளியரங்க மாக நடைபெறும். அப்பொழுது மீட்கப்பட்டவர் களுக்குக் குதூகலமும், பிறருக்குப் பேரச்சமு மாக விளங்கும் (2 தெச. 1:6-9).

21:16 எல்லா வகையான மனிதர்களையும் நீதிமொழிகள் நூலில் காண்கிறீர்கள். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அலைந்து திரிகிற மனிதன் சஹாரா பாலைவனம் போன்ற பாவத்தில் புரளு கிறவன். அவனை நீங்கள் கடைசியாகப் பார்த்த போது செத்தவர்களின் கூட்டத்தில் இளைப் பாறிக் கொண்டிருந்தான்.

21:17 (மதுபானமும் எண்ணெயும்) சிற்றின் பமும், ஆடம்பர வாழ்வும் மனநிறைவையும் மகிழ்ச்சியையும் தருவதற்குப் பதிலாக ஒரு மனிதனுக்கு வறுமையை மட்டுமே கொடுக்கும். அவனுடைய பொருளாதாரத்தை வற்றிப் போகச் செய்வதோடு, ஆவிக்குரிய வறுமையையும் அது கொண்டுவரும்.

21:18 தேவன் தமது மக்களாகிய இஸ்ரவேல ருக்கு எகிப்தை **மீட்கும் பொருளாகக்** கொடுத்த தாக ஏசாயா 43:3 கூறுகிறது. யூதர்களை விடு தலை செய்ததன் காரணமாக, கோரேசு மன்னன் எகிப்தையும் அண்டை நாடுகளையும் வெல்லும் படி கர்த்தர் செய்தார்.

விரிவான பொருளில் இந்த வசனம் கூறுவது யாதெனில், **செம்மையானவர்கள்** விடுதலை பெற்றுச் செல்லும்படி, **துன்மார்க்கர்** தண்டிக் கப்படுவார்கள் என்பதே.

21:19 புனிதமாக்கப்பட்ட நகைச்சுவையின் சுவட்டை இங்கு காண்கிறோம்! வசதியின்மை, தொலைவு, பாலைவனத்தில் தனித்துவிடப்பட்ட நிலை இவை யாவற்றையும், **கோபக்காரியும் சண்டைக்காரியுமான** பெண்ணுடன் கூண்டில டைக்கப்பட்டிருக்கும் நிலையோடு ஒப்பிட்டு எழுத்

தாளன் முந்தினவையே சிறந்தவை என்று ஏற் றுக்கொள்கிறான்.

21:20 ஞானமுள்ளவன் தனது குடிலில் அனைத்து நல்ல பொருட்களையும் பெருமளவு சேர்த்து வைத்திருக்கிறான், **மூடனுடைய** வீட் டில் பாவமும், வீண்செலவும் ஆடம்பரமும் சேர்ந்து பற்றாக்குறையை ஏற்படுத்திவிடுகின்றன என் பதே இங்கு கூறப்படும் வேறுபாடு.

குடிக்கு அடிமையான ஒருவன் தனது வீட்டி லுள்ள மரச்சாமான்களையும், பிற பொருட்களை யும் மதுபானம் வாங்குவதற்காக விற்றதைக் குறித்து நாம் நினைவுபடுத்தப்படுகிறோம். அவன் கிறிஸ்துவுக்கென்று மனந்திரும்பிய பின்னர் ஒருவர் அவனிடம், "இயேசு தண்ணீரைத் திராட்சை ரசமாக மாற்றிய கதையை நீர் நம்பமாட்டீர் என்று நினைக்கிறேன், நம்புகிறீரா?" என்று கேட்டார். அதற்கு அந்த மனிதன், "தண்ணீரைத் திராட்சை ரசமாக மாற்றியது பற்றி எனக்குத் தெரியாது, ஆனால் ஒன்று எனக்குத் தெரியும், என்னுடைய வீட்டில் அவர் மதுபானத்தை மரச்சாமான்களாக மாற்றினார்!" என்று பதிலுரைத்தான்.

21:21 இங்கு சொல்லப்பட்டுள்ள கருத்து என்னவெனில், **நீதியையும் தயையையும்** நாடிச்செல்கிற மனிதன் தான் எதிர்பார்த்ததைக் காட்டிலும் அவற்றைக் கூடுதலாகப் பெறுகிறான்; மேலும் நீதியோடு அவன் **ஜீவனையும் மகிமை யையும்** பெறுகிறான் என்பதாகத் தோன்றுகிறது.

21:22 ஞானமுள்ள கிறிஸ்தவன் பீரங்கிப் படையைக் கொண்டோ, அணுகுண்டுகளைக் கொண்டோ அரணை இடித்துப்போடுவதில்லை, மாறாக விசுவாசம், ஜெபம், தேவ வார்த்தை இவற்றைக் கொண்டே அதைச் செய்கிறான் (2 கொரி. 10:4 -ஆம் வசனத்தைக் காண்க). ஆவிக்குரிய போரில் ஆயுதங்களின் ஆற்றலால் செய்ய முடி யாததை ஞானம் செய்து முடிக்கும்.

21:23 எவனொருவன் **தன் வாயைக்** கட்டுப் படுத்துகிறானோ அவன் பெருந்தொல்லைகள் எல்லாவற்றிலிருந்தும் தன்னைக் காத்துக்கொள் கிறான். "அப்படியே, நாவானதும் சிறிய அவயவமாயிருந்தும் பெருமையானவைகளைப் பேசும். பாருங்கள், சிறிய நெருப்பு எவ்வளவு பெரிய காட்டைக் கொளுத்திவிடுகிறது! நாவும் நெருப்புத்தான், அது அநீதி நிறைந்த உலகம்; நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச் சரீரத்தையும் கொளுத்திவிடுகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக் கிறது! (யாக்கோபு 3:5,6).

21:24 நீங்கள் **அகந்தையும் இறுமாப்பு முள்ள** மனிதனைச் சந்தித்தால் அவனைப் **"பரியாசக்காரன்"** என்று அழையுங்கள்; அதுவே **அவனுடைய பெயர்**! ஒருவனுடைய பெயர் அவன் யார் என்பதை அடையாளப்படுத்துகிறது. "அவன் பெயர் எப்படியோ அப்படியே அவனும் இருக்கிறான்" (1 சாமு. 25:25).

21:25,26 ஒருபுறம் தான் பெருஞ்செல்வந்தன் ஆகவேண்டும் என்னும் வேட்கைக்கும், மறுபுறம் தன்னுடைய உடலைச் சிறிதளவும் வருத்தக் கூடாது என்னும் உறுதிக்கும் இடையே சோம் பேறி துயருற்றிருக்கிறான். அது அவனைக் கொல்லும் இக்கட்டான நிலை. நிறைவேறாத எதிர்பார்ப்புகள் நிறைந்த கனவுலகில் அவன் தனது நேரத்தைச் செலவிட்டுக் கொண்டிருக்கையில், நீதிமான் கடின மாக உழைத்து, பணத்தைச் சம்பாதித்து, நற் கிரியைகளின் தேவைகளுக்காகத் தாராளமாகக் கொடுக்கிறான்.

21:27 மனந்திரும்பாத பாவிகள் தருகிற காணிக் கைகளுக்கு தேவன் தமது "முகத்தைத் திருப் பிக்கொள்கிறார்." அவ்வாறு செலுத்தப்படுகிற காணிக்கை "அவரை வசப்படுத்தும்" நோக்கத் துடனோ, அவருடைய மன்னிப்பைப் பெறும் பொருட்டோ அல்லது அவருடைய சமாதானத் தையும், ஆசிர்வாதத்தையும் பெறும்பொருட்டோ கொடுக்கப்படும் என்றால் அவர் அதை மேலும் அதிகமாக வெறுக்கிறார்.

21:28 "பொய்சாட்சிக்காரன் கெட்டுப்போவான்; செவிகொடுக்கிற மனிதனுடைய சொல் நிலைத் திருக்கும்" (RSV). பொய்ச்சாட்சி கூறுகிறவன் தேவ னுடைய முன்னிலையில் உண்மையைக் கூறுவ தாக ஆணையிடுகிறான், பின்னர் மனமார்ந்து பொய்ச்சாட்சி கூறுகிறான். மிகக் கவனமாகக் கேட்கிறவன் நேர்மையாக விடைபகர்ந்து அசைக்க முடியாத சான்றை வழங்குகிறான்.

21:29 துன்மார்க்கனுடைய கடினமான **முகம்**, அவன் தன்னுடைய அக்கிரமத்தில் உறுதி யாயிருக்கிறான் என்பதை வெளிப்படுத்துகிறது. அவனுடைய நெற்றி பித்தளை போன்றது. **செம்மை யானவன்**, கற்பதற்கு ஏதுவாக இருப்பதால், பாது காப்போடு இருக்கிறான்; மேலும் தன் நடத் தையை **நேர்ப்படுத்துகிறான்**.

21:30 ஞானம், புத்தி மற்றும் செயல்திட்டம் ஆகியவற்றில் மனிதன் தேவனைத் தோற்கடிப் பதற்கு ஆற்றல் இல்லாதவன். அவனுடைய திட் டங்கள் எதுவும் **கர்த்தருக்கு விரோதமாக** நடை

பெறாது. "கர்த்தர் நினைத்தவை நிலைக்கும்" (எரே. 51:29).

21:31 போரில் வெற்றியை உறுதிசெய்ய மனிதன் திட்டங்களை விரிவாகச் செய்யக்கூடும், ஆனால் **யுத்தநாளில்** வெற்றி **கர்த்தரிடத்திலிருந்து** வரும். குதிரைகளை அல்லது அணு ஆயுதங்களை நம்புவதைப் பார்க்கிலும் கர்த்தரிடத்தில் நம்பிக்கையோடிருப்பது சிறந்தது (சங். 20:7 -ஆம் வசனத்தைக் காண்க).

திருவாளர் பிளம்ப்ட்ரே 30,31 -ஆகிய வசனங்களைச் சுருங்கக் கூறுகிறார்:

வசனம் 30: தேவனுக்கு எதிராக எதுவும் நடைபெறாது.

வசனம் 31: தேவனின்றி எதுவும் நடைபெறாது.

22:1 நற்பெயர் என்பதன் பொருள் **நற்கீர்த்தி**. அது நன்னடத்தையின் கனி. அது பெருஞ்செல்வத்தைக் காட்டிலும் சிறந்தது, ஏனெனில் அது மிகுந்த மதிப்புடையது, மிகுந்த ஆற்றலுடையது, கூடுதலாக நிலைத்திருக்கக்கூடியது.

அதே காரணங்களினாலே, வெள்ளியையும் தங்கத்தையும்விட நன்மதிப்பைப் பெறுவதே சிறந்தது.

22:2 சமுதாயத்தில் காணப்படும் ஏற்றத் தாழ்வுகள் போலியானவை, அதன் பொருள் என்னவெனில் நாம் யாவரும் ஒரே மனித இனத்தைச் சேர்ந்தவர்கள், யாவரும் ஒரே படைப்பாளரிடத்திலிருந்து தோன்றியவர்கள். வாழ்வில் காணப்படுகிற ஏற்றத்தாழ்வுகள் மரணத்தில் மறைந்து போகும்.

22:3 விவேகி எதிர்காலத்தை நோக்கிப் பார்த்து, வரப்போகிற நியாயத்தீர்ப்புக்குத் தன்னை **மறைத்துக்கொள்கிறான்**. இஸ்ரவேலர் பஸ்காவின் இரவில் நிலைக்கால்களில் இரத்தத்தைத் தெளித்து, இதைச் செய்தார்கள். நாம் கிறிஸ்து வினிடத்தில் அடைக்கலம் புகுந்து இதைச் செய்தோம்.

அறிவற்றவர்கள் தங்களுடைய மதியீனத்தில் தொடர்ந்து சென்று அதற்கான "விலையைச் செலுத்துகிறார்கள்" (மொ.ஃபட்).

22:4 தாழ்மையும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயமும் மிகவும் மந்தமானதாகவும் பொதுவான கருத்தாகவும் தோன்றக் கூடும். ஆனால் அவற்றைக் கைக்கொள்ள முயற்சி செய்வதற்கு முன் குறைகூற வேண்டாம். ஆவிக்குரிய ஐசுவரியம், தெய்வீக மகிமை, நீடித்த வாழ்வு ஆகியவை அவற்றிற்கு ஈவாகக் கொடுக்கப்படும்.

22:5 மாறுபாடுள்ள மனிதனுடைய **வழியிலே** எல்லாவிதமான தொல்லைகளும் இடுக்கண்களும் காணப்படும். தன்னைத் தூய்மையாக வைத்திருப்பவன் இவற்றைத் தவிர்க்கிறான்.

22:6 சிறுபிள்ளை முறையாக நடத்தப்படுவான் எனில் **(நடக்கவேண்டிய வழியிலே நடத்தப்பட்டால்)** அவன் தனது பிற்கால வாழ்க்கையில் நல்வாழ்வைப் பெறுவான் என்பதே பொதுவாக இதற்குத் தரப்படும் விளக்கம். சில விதிவிலக்குகள் இதற்கு உள்ளன என்பதில் ஐயமில்லை, ஆனால் இது பொதுவான விதியாக நிலைபெற்றுள்ளது. திருவாளர் ஹென்றிவார்ட் பீச்சர் விவரிக்கிறார்:

> ஒரு சிறுபிள்ளையைச் சரியான பயிற்சி கொடுத்து நேர்மையாக வளர்ப்பதோ, ஓர் இளம் கன்றை நீண்டு உயரமான மரமாக வளர்ப்பதோ கடினமல்ல. ஆனால் அவன் தவறான வழியில் செல்வதற்கு அனுமதித்த பிறகு அல்லது அந்த மரம் கோணலாக வளர்வதற்கு அனுமதித்த பிறகு நேராக்குவது கடினம்.[34]

சார்ல்ஸ், ஜான் வெஸ்லி மற்றும் 15 பிள்ளைகளைப் பெற்றெடுத்த சூசன்னா வெஸ்லி கீழ்க்கண்ட பயிற்சிகளைக் கொடுத்துத் தன் பிள்ளைகளை வளர்த்தார். (1) குழந்தையின் சுய சித்தத்தைக் கீழ் அடக்கி, அக்குழந்தையின் ஆத்துமா இரட்சிப்படையும்படி தேவனோடு இணைந்து பணிபுரிதல். (2) அவன் பேசத் தொடங்கியவுடனேயே ஜெபிக்கும்படி பழக்குவித்தல் (3) அவன் அழுது கேட்பது எதையும் கொடுப்பதில்லை, அவனுக்கு எது நல்லதோ அதைப் பணிவுடன் கேட்கும்போது மட்டுமே கொடுப்பது. (4) பொய் கூறுவதைத் தவிர்க்கும்படி, தானாக முன்வந்து தவறை அறிக்கைசெய்கிற எந்தத் தவறுக்கும் தண்டனை அளிப்பதில்லை, ஆனால் எதிர்த்துக் கலகம் செய்தாலோ, பாவச் செயல் புரிந்தாலோ காணாததுபோல விடுவதில்லை. (5) நன்னடத்தையைப் பாராட்டி பரிசு வழங்குதல் (6) குழந்தைக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிச்சயமாக நிறைவேற்றுதல்.

பிள்ளைகளின் இயல்பான ஆற்றல்களுக்குத் தக்கவாறு அவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டுமேயொழிய, அவர்களுக்கு இயல்பாக விருப்பமற்ற துறைகளில் அல்லது பணிசார்ந்த படிப்புகளில் கட்டாயப்படுத்திச் சேர்க்கக் கூடாது; இதனை மனதிற்கொண்டு பிள்ளைகளைப் பயிற்றுவிக்க இந்த நீதிமொழி பெற்றோரை ஊக்குவிக்கிறது என்றும் இதனைப் புரிந்து

கொள்ளலாம். ஆகவே ஒரு பிள்ளையின் தனிப் பண்பையும், அவனுடைய தொழில் துறை விருப் பத்தையும் மதிக்கும்படி இந்த வசனம் கற்பிக் கிறது; ஆனாலும் அது அவனுடைய சுயநலத்திற் காக இருக்கக்கூடாது என்று திருவாளர் கிட்னர் கருதுகிறார்.

ஒரு பிள்ளையை அவனுடைய சொந்த வழி யில் செல்லும்படி நீங்கள் அனுமதித்தால், அவன் தொடர்ந்து கெட்டுப்போவான் என்றும், பிற்கால வாழ்க்கையில் அவன் சுயநலத்தை மட்டுமே கருத்திற்கொண்டவனாகச் செயல்படுவான் என் றும் இவ்வசனம் எச்சரிப்பதாகக் கருதலாம். திரு வாளர் ஜே ஆடம்ஸ் எழுதுகிறார்:

> இந்த வசனம் பெற்றோருக்கு ஒரு வாக்குறுதி யாக அல்ல, ஒரு பிள்ளையை அவனுடைய சொந்த விருப்பத்தின்படி வளர அனுமதித்த பின் அவன் வளர்ந்து வரும்போது அதை மாற் றிக் கொள்வான் என்று அவனுடைய பெற் றோர்கள் எதிர்பார்க்கக் கூடாது என்னும் எச்ச ரிப்பாக இது அமைந்துள்ளது. பிள்ளைகள் அவர்களுடைய பிறப்பின்படி பாவிகள். அவர் கள் தங்களுடைய சொந்த விருப்பத்தின்படி செல்ல அனுமதிக்கப்படுகிறபோது, அவர்கள் இயல்பாகவே பாவப் பழக்கங்களை வளர்த்துக் கொள்வார்கள். இங்கு சொல்லப்பட்டிருக்கிற அடிப்படை உண்மை என்னவெனில், ஒரு பிள்ளையின் தொடக்க நாட்களில் இத்தகைய நடத்தைகளைப் பழக்கவழக்கமாகக் கடைப் பிடிக்க அனுமதிக்கப்பட்டால் அவை பின்னர் அவனுடைய உள்ளத்தின் ஆழத்தில் மாற்றத் திற்கு இடமற்றபடி பதிந்துவிடும்.[35]

22:7 பணம் அதிகாரமாக விளங்குகிறது, அதனை நன்மைக்காகவோ தீமைக்காகவோ பயன்படுத்தலாம். பெரும்பாலான நேரங்களில் செல் வந்தர் அதைத் தீமைக்காகவே பயன்படுத்து கிறார்கள். எனவேதான் அது அநீதியின் செல்வம் என்று அழைக்கப்படுகிறது.

கடன் வாங்கினவன் கடன்கொடுத்தவனுக்கு அடிமை. கடன் பொறுப்பு ஒரு வகை அடிமைத் தனமாக இருக்கிறது. அதிக அளவிலான வட்டி செலுத்தப்படவேண்டும். அது ஒரு மனிதனை இடையறாது வேலை செய்யச் செய்கிறது. அவ னுடைய இடமாற்றத்தைக் கட்டுப்படுத்துகிறது, வாய்ப்புகளைப் பயன்படுத்துவதையும் தடை செய்கிறது.

22:8 அநியாயத்தை விதைக்கிறவன் மதிப் பிடத்தக்க அல்லது பயனுள்ளது எதையும் ஆதா யமாகப் பெறமாட்டான். பிறரை அடித்து, அவர் களைக் கீழ்ப்படியச் செய்வதற்கான முயற்சி **உக் கிரத்தால்** தோற்கடிக்கப்படும்.

22:9 கருணைக்கண்ணன் பிறருக்கு ஈகை செய்வதன் காரணமாக **ஆசிர்வதிக்கப்படுவான்.** ஏழையோடு தன் பொருட்களைப் பகிர்ந்துகொள் வதன் மூலமாக அவன் தற்காலத்தில் மகிழ்ச்சி யையும் எதிர்காலத்தில் பரிசையும் பெறுவான்.

22:10 பரியாசக்காரன் அறிவுரையையும் திருத்துதலையும், கடிந்து உரைத்தலையும் ஏற்க மறுத்தால் அடுத்த நடவடிக்கை வெளியேற்றப் படுவதேயாகும். அவனைத் **துரத்திவிடு**! இஸ்ம வேல் வீட்டைவிட்டு வெளியேற்றப்பட்ட போது, விரோதமும் சண்டையும் அவமதிப்பும் நின்று போயின (ஆதி. 21:9,10).

22:11 சுத்த இருதயத்தை விரும்பி கிருபை யோடு பேசுகிறவன் மிகச்சிறந்த நண்பர்களைப் பெறுவான். இங்கு **ராஜா** என்று குறிப்பிடப்பட்டி ருப்பவர் தேவனே ஆவார்.

> வருத்தம் நீக்கிடும் இனிமைப் பேச்சு,
> ஒருதுளிக் கண்ணீர், சிறியநற் செய்கை,
> உடைந்த உள்ளத்தை உறுதிப்படுத்தும்
> தடையிலா அன்புடன் தந்திடும் நட்பு.

22:12 கர்த்தர்தாமே சத்தியத்தின் அறிவைப் பாதுகாத்து நிலைபேறுடையதாக ஆக்குவார். அதன் காரணமாக இவ்வுலகில் பேய்களுடைய சீற்றமும் மனிதர்களுடைய சினமும் அதற்கு எதி ராகப் பொங்கி எழுந்தாலும் அது ஒருபோதும் அழியாது. அதே கர்த்தர் கள்ள போதகத்தைத் தாறுமாறாக்கி, பொய்யை வெளிச்சத்துக்குக் கொண்டுவருகிறார்.

22:13 சோம்பேறி தான் வேலைக்குச் செல் லாததற்கான காரணத்தை அறியாமல், அவனே அதற்கான காரணத்தைப் புனைந்து சொல்லு வான், அது பெரிதான நகைப்புக்கு இடமளிக்கும். நகரத்தின் **வீதியிலே சிங்கம்** இருக்கிறது என் பான். நகரத்தின் வீதியிலே சிங்கத்துக்கு என்ன வேலை? அது வெறும் பூனையாகத்தான் இருக் கும்.

22:14 தப்புவதற்குக் கடினமான கண்ணியை மறைத்து வைத்துவிட்டு மயக்கும் சொற்களைப் பரத்தையானவள் பேசுகிறாள். கர்த்தரை விட்டு மனவேறுபாடு கொண்டவனாக விலகிச் செல்கிற வன் அந்தக் கண்ணியில் சிக்குவான். தேவனை

அறிகிற அறிவை மனிதர்கள் ஏற்க மறுக்கிற போது, தேவன் அவர்கள் பாவம் செய்கிறபடி கைவிட்டுவிடுகிறார் (ரோமர் 1:24,26,28 ஆகிய வசனங்களைக் காண்க).

22:15 குறும்புத்தனமும் சுயசித்தமும் பிள்ளையின் நெஞ்சில் குடியிருக்கும். ஆனால் நீங்கள் கொடுக்கும் அறிவொழுக்கப் பயிற்சியின்மூலம், அவனுடைய உள்ளத்தின் ஆழத்திலிருந்து அந்தக் கெட்ட பழக்கவழக்கங்கள் அகன்றுபோகும். திருவாளர் மாத்யூ ஹென்றி அறிவுறுத்துகிறார்:

சிறுபிள்ளைகள் அவர்களுடைய பெற்றோரால் சரிப்படுத்தப்படவேண்டும், கட்டுப்பாட்டுக்குள் வைக்கப்பட்டிருக்க வேண்டும். நாம் யாவரும் விண்ணகத் தந்தையின் மூலமாகச் சரிப்படுத்தப்படுவதற்கான தேவையுண்டு (எபி.12:6,7). அவ்வாறு அவரால் சரிப்படுத்தப்படும் வேளையில், நமது மதியீனம் செயல்படாதபடி தணித்து, தண்டனையைப் பணிவுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும்.[36]

22:16 அரை வயிற்று உணவுக்கு ஊதியம் கொடுக்கும் முதலாளி தன்னைச் செல்வந்தனாக்க நினைத்தும் குறைச்சல் உள்ளவனாகவே இருப்பான். செல்வந்தனுடைய நட்பு தனக்குக் கிடைக்க வேண்டுமென்று அவனுக்குக் கொடுப்பவனுக்கும் அவ்வாறே நிகழும். திரும்பச் செலுத்த முடியாதவர்களுக்கு மட்டுமே நாம் கொடுக்க வேண்டும்.

4. ஞானிகளுடைய நீதிமொழிகள் [22:17-24:34]

அ. ஞானியின் சொற்கள் [22:17-24:22]

22:17 பதினேழு முதல் இருபத்தொன்று வரையிலான வசனங்கள் அடங்கிய பகுதி 22:22 முதல் 24:22 வரையிலான பகுதிக்கு முன்னுரையாக விளங்குகிறது. படிப்போர் தங்களுடைய **செவியைச் சாய்த்து ஞானிகளுடைய வார்த்தைகளைக்** கேட்க வேண்டுமென்று இது அழைக்கிறது. பெரும்பாலும் இப்பகுதி மற்றவர்கள் எழுதிய நீதிமொழிகளை சாலொமோன் தொகுத்து அளிப்பதாக இருக்கலாம், ஆனால் இந்த வசனத்தின் இரண்டாவது பகுதியைக் காணுமிடத்து அவற்றில் சில சாலொமோனே எழுதியவை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளதை அறியலாம்.

22:18 இந்த நீதிமொழிகளை ஒருவன் தன் மனதில் காக்க வேண்டும் (நினைவுகூர்ந்து, கீழ்ப்படிய வேண்டும்), அவற்றை அவன் **உள்ளத்தில் நிலைத்திருக்கப் பண்ண** வேண்டும் (அவற்றை மற்றவர்களிடம் பகிர்ந்துகொள்ள வேண்டும்).

22:19 இந்த நீதிமொழிகளைப் படிப்போர் அறியும்படி சாலொமோன் தெரியச் செய்ததற்கான காரணம், அவர்கள் மெய்யாகவே **கர்த்தர் மேல் நம்பிக்கை** வைக்க வேண்டும் என்பதேயாகும்.

22:20,21 "அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் கொடுக்கும் மேன்மையான முப்பது முதுமொழிகளை நான் உனக்கு எழுதவில்லையா?" என்று இந்த வசனத்தை RSV மொழிபெயர்த்திருக்கிறது. (இலகு தமிழ் மொழிபெயர்ப்பும் இவ்வாறே உள்ளது) இந்தப் பகுதியில் உள்ள, அதாவது 24:22 வரையிலான பகுதியில் உள்ள நீதிமொழிகளை கீழ்க்கண்டவாறு 30 சிறு பகுதிகளாகப் பிரிக்கலாம் என்று சில வேத அறிஞர்கள் கூறுகிறார்கள்:

22:22,23	23:22-25
24,25	26-28
26,27	29-35
28	24:1,2
29	3,4
23:1-3	5,6
23:4,5	7
6-8	8,9
9	10
10,11	24:11,12
12	13,14
13,14	15,16
23:15,16	17,18
17,18	19,20
19-21	21,22

பெர்க்லே மொழிபெயர்ப்பு இவ்வசனத்தை இவ்வாறு கூறுகிறது, "அறிவுரைகளும் ஆலோசனைகளும் அடங்கிய நீதிமொழிகளை நான் உனக்கு முன்னமே எழுதவில்லையா?" "முன்னமே" என்னும் சொல் 19 -ஆவது வசனத்தில் உள்ள "இன்றைய தினம்" என்னும் சொல்லுக்கு முரண்பட்டதாயிருக்கிறது.

தன்னிடம் ஆலோசனை பெறும்படி அனுப்பிய வர்களுக்குக் கற்பிக்கும் திறமையோடு தனது மாணாக்கர் இருக்க வேண்டும் அல்லது பயிற்சி பெறும்படி அனுப்பியவர்கள் மனநிறைவு அடைய வேண்டும் என்பதற்காக அவர்களுக்குச் **சத்திய வார்த்தையைப்** புகட்டும் நோக்கத்துடன் எழுத்தாளன் செயல்பட்டான்.

22:22,23 இங்கு தொடங்குகிற பகுதி 24:22 -இல் முடிவுபெறுகிறது. தற்காப்பு இல்லாத ஏழைக்குப் பாதகம் ஏற்படும்படி எவனும் அவர்களுடைய நிலையை தனக்குச் சாதகமாக்கக் கூடாது. மேலும் நீதிமன்றத்தில் வறியவர்களுக்கு அநீதி விளைவிக்கக்கூடாது. ஏனெனில் தேவன் ஏழைகளுக்காக வாதாடுகிறார், அவர்களை ஒடுக்குகிற செல்வந்தரையும் நேர்மையற்ற நீதிபதிகளையும் அவர் தண்டிப்பார்.

22:24,25 கோபக்காரன் அல்லது மூர்க்கத்தனமாகச் செயல்படுகிற மனிதனோடு தோழமை கொள்வது தவறான செயல். ஒருவன் தனது கூட்டாளியைப் போல மாற்றமடைவது நடக்கக் கூடியதேயாகும். ஒரு கணப்பொழுது வெறியார்வத்தில் ஒருவன் தனது வாழ்க்கையையும், சாட்சியையும் கெடுக்க முடியும் என்பதால் இது உண்மையான கண்ணியாக இருக்கிறது.

22:26,27 கையடித்து உடன்படுதல் வேறொருவனுடைய கடனுக்குப் பிணைப்படுதல் என்று இங்கு பொருள்படும். அது மதியீனமான செயல். உங்களால் பணத்தை முழுவதுமாகச் செலுத்த முடியாமற்போனால் உங்களுடைய வீட்டுப் பொருட்கள் எடுத்துச் செல்லப்படும் ஆபத்து ஏற்படுமே. அது உங்களுக்கு மன உலைவையும் அவமானத்தையும் கொண்டுவருமல்லவா?

22:28 பூர்வ எல்லைக்குறிகள் நிலத்தில் ஆங்காங்கே நடப்பட்ட கற்களாகும், அவை ஒருவனுடைய சொத்தின் எல்லையைக் குறிக்கும். நேர்மையற்ற மனிதர்கள் அவற்றை அவ்வப்போது நகர்த்தி அயலானுக்குப் பாதகம் ஏற்படுத்தித் தங்களுடைய சொத்தின் அளவைப் பெருக்கிக்கொள்வார்கள்.

ஆவிக்குரிய நிலையில் பூர்வ எல்லைக் குறிகள், "பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசம்" என்பதையே குறிக்கும் (யூதா. 3). கிறிஸ்தவத்தின் அடிப்படைச் சத்தியங்களை முறைகேடாக மாற்றக் கூடாது.

22:29 தன்னுடைய வேலையில் திறமையுள்ள மனிதன் மதிக்கத்தக்க பதவிக்கு உயர்த்தப்படுவான். **அவன் பிரபலமற்றவர்களிடத்தில்** வேலை செய்யமாட்டான். பாலாடை மேலே உயர எழும் என்பதற்கான மற்றுமோர் எடுத்துக்காட்டு. இதனை நாம் யோசேப்பு, மோசே, தானியேல், நெகேமியா ஆகியோருடைய வாழ்க்கையில் காண்கிறோம்.

உயர்ந்த பதவியைப் பெற்றிட்ட மனிதர்கள்
பறந்து சென்றங்கு அமரவில்லை,
கூட்டாளி அயர்ந்து உறங்கிய இரவினில்
அயராமல் உழைத்துப் பெற்றனரே!
– லாங்ஃபெல்லோ

23:1-3 இங்கு நாம் பெருந்தீனியை உண்பதற்கும் தெவிட்டுமளவு குடிப்பதற்கும் எதிராக எச்சரிக்கப்படுகிறோம். செல்வாக்கு மிக்க ஒரு மனிதனோடு நாம் உணவு உண்ண அமர்ந்தால் நமக்கு **முன் என்ன இருக்கிறது** அல்லது ***யார்*** *இருக்கிறார்* (JND) என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். பிறகு நாம் ஒரு **கத்தியை** நமது **தொண்டையில்** வைக்க வேண்டும், அதாவது, உண்பதிலும் பருகுவதிலும் நாம் நம்மைக் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும்.

ஏதேனும் ஒரு விசயத்தை முன்னிட்டு நம்மை வசப்படுத்த வேண்டுமென்று நமக்குப் பெருவிருந்தும் உயரிய பானங்களும் வழங்கக்கூடிய ஒரு மனிதனையே 3 -ஆவது வசனம் குறிப்பிடுகிறது. தன்னலமற்ற உபசரிப்பல்ல இது, மாறாக ஏதோ தந்திரமான நோக்கத்துடன் நம்மைப் பயன்படுத்துவதற்கான முயற்சியே ஆகும்.

23:4,5 செல்வந்தனாக வேண்டும் என்று முடிவில்லாத கடுமுயற்சி தவிர்க்கப்பட வேண்டிய "ஞானத்தின்" ஒரு வகை ஆகும். இதன் பொருள் என்னவெனில், தவறான குறிக்கோள்களுக்காக நீங்கள் உங்கள் வாழ்நாட்காலம் முழுவதையும் செலவிடுகிறீர்கள், நிலைத்திராததன் மேல் நீங்கள் நம்பிக்கை வைத்திருக்கிறீர்கள் என்பதாகும். செல்வம் செட்டைகள் முளைத்து, **கழுகு** போல **பறந்து போய்விடக்** கூடியது.

23:6-8 தவிர்க்க வேண்டிய மற்றொரு சமுதாயச் சூழ்நிலை. வன்கண்ணனுடைய, அதாவது உணவை நீங்கள் ஒவ்வொரு முறையும் எடுத்து வாயில் இடுகிறபோது உங்களை கரித்துக்கொட்டுகிற கருமியின் விருந்தினராகச் செல்லாதீர்கள். அவன் என்ன பேசுகிறான் என்பதல்ல, என்ன நினைக்கிறான் என்பதே முக்கியமானது. "நன்றாகச் சாப்பிடுங்கள், வேண்டியதை நீங்களே எடுத்துக்கொள்ளுங்கள், சாப்பிடுங்கள், குடியுங்கள்!" என்று அவன் கூறுகிறபோதும் உண்மையில் நீங்கள் எத்தனை கரண்டி எடுத்தீர்கள் என்பதை அவன் கணக்கிடுகிறான்.

LB மொழிபெயர்ப்பு இந்த வசனங்களைக் கீழ்க்காண்கிறபடி பொழிப்புரையாகத் தருகிறது:

தீய மனிதர்களோடு தோழமைகொள்ளாதீர்கள்; அவர்களுடைய சலுகைகளையும் பரிசுப் பொருட்களையும் விரும்பாதீர்கள். அவர்

களுடைய தயை ஒரு தந்திரமே; அவர்கள் உங்களை எடுப்பார் கைப்பிள்ளை போல் பயன்படுத்த நினைக்கிறார்கள். அவர்கள் பரிமாறுகிற சுவையான உணவு உங்களுடைய வயிற்றில் கசப்பாக மாறும், நீங்கள் அதை வாந்தி பண்ணுவீர்கள். அவர்களுடைய ''தயவைக்'' குறித்து நீங்கள் பேசிய சொற்களைத் திரும்பப் பெற வேண்டிய நிலை ஏற்படும்.

23:9 ஒரு மந்தமான முட்டாளுக்குக் கற்பிக்க முயலாதே. அவனிடத்தில் நீங்கள் உங்களுடைய நேரத்தை வீணாக்க நேரிடும். அவன் உங்களுடைய **ஞானமுள்ள வார்த்தைகளை அசட்டை பண்ணுவான்.**

23:10,11 பூர்வகால எல்லைக் கற்களை இரகசியமாக நகர்த்தி வேறொருவருடைய சொத்தை நேர்மையற்ற முறையில் அபகரிக்க வேண்டாம். பாதுகாப்பில்லாதவர்களுடைய நிலத்தைக் கைப்பற்றுவதற்கு அவர்களுடைய நிலையை உங்களுக்குச் சாதகமாக்க வேண்டாம். அவர்களுக்காகப் பழிவாங்குபவர் **வல்லவர்**. அவரோடு நீங்கள் போராட வேண்டும். அவர் உங்களுக்கு **எதிராக** அவர்கள் பொருட்டு **வழக்காடுவார்**.

23:12 புத்தியை அடைவது அவ்வளவு எளிமையான செயல் அல்ல. அதற்கு ஒழுங்கும், நடைமுறைப் பயிற்சியும் தேவை. "மூன்று எளிய முறையில் பெறலாம்" என்னும் விளம்பரங்கள் தருகிற வாக்குறுதிகளைப் புறக்கணியுங்கள்.

23:13,14 ஒழுங்கற்ற முறையில் பிள்ளை வளருவதற்கு அனுமதிப்பது அதனிடம் தயவு பாரட்டுவது ஆகாது. ஒழுங்கற்ற செயல்களைச் செய்வதற்கு அனுமதியளிப்பதைத் திருமறை பொறுத்துக்கொள்வதில்லை. மாறாக **பிரம்பை** எடுத்துப் பிள்ளையைத் திருத்துவதையே அது உற்சாகப்படுத்துகிறது, பிள்ளை **சாகாது** என்று வாக்குறுதியும் தருகிறது. பிரம்பால் அடிப்பதால் பிள்ளை சாகமாட்டான் என்று இது பொருள்படும்; மேலும் முதிர்வயது அடைவதற்குமுன், கவனமில்லாத நடவடிக்கையால் அடைகிற சாவிலிருந்து உண்மையாகவே அது பாதுகாக்கும் என்றும் பொருள்படும். அது அவனுடைய **ஆத்துமாவைப் பாதாளத்திலிருந்து தப்புவிக்கும்**.

தீயவழியில் சென்ற தன் மக்களை ஒழுங்குபடுத்தத் தவறிய ஏலி, "நீங்கள் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்கிறது என்ன?" என்று மென்மையாகவே கடிந்துகொண்டான் (1 சாமு. 2:22-25). அவன் தன்பிள்ளைகள் தீய செயல்களைச் செய்வதற்கு அனுமதித்ததன் காரணமாக அவனுடைய குடும்பத்துக்கும், ஆசாரிய முறைமைக்கும், நாட்டுக்கும் பேரிடரைக் கொண்டு வந்தான்.

தாவீது தன் பிள்ளைகளை ஒழுங்காக வளர்ப்பதில் தவறினான். அதோனியாவுக்கு அவன் தண்டனை வழங்கி அவனுக்கு மனவருத்தம் உண்டாக்கவில்லை (1 இராஜா. 1:6). இரண்டு முறை அவன் அரியணையைப் பிடிக்க அரசனுக்கு எதிரான செயல்களைச் செய்தான், அதன் பிறகு அவன் சாலொமோனால் கொல்லப்பட்டான்.

23:15,16 ஞானமுள்ள இருதயமும் உண்மையைப் **பேசும் உதடுகளும்** உள்ள மகனைப் பெற்றிருப்பதில் தகப்பனின் இருதயம் களிகூருகிறது. அதுபோலவே ஞானத்தைப் பெற்று அதனைப் பிறரிடம் பகிர்ந்துகொள்கிற மாணாக்கரைப் பெற்றிருக்கிற ஆசாரியனும் அதே மகிழ்ச்சியை அனுபவிக்கிறான். அதே மனப்பான்மையோடு "நீங்கள் கர்த்தருக்குள் நிலைத்திருந்தால் நாங்கள் கர்த்தருக்குள் பிழைத்திருப்போம்" என்று பவுலும் (1 தெச. 3:8), "என் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறார்கள் என்று நான் கேள்விப்படுகிற சந்தோஷத்திலும் அதிகமான சந்தோஷம் எனக்கு இல்லை" என்று யோவானும் (3 யோவான் 4) எழுதினார்கள்.

23:17,18 தீயவரின் செல்வத்தைக் கண்டு பொறாமைப்படுவதிலும் சிறந்தது இருக்கிறது; கர்த்தரோடு இடைவிடாமல் தொடர்புகொண்டு வாழ்வதே அது. தீயவர்களோடு தொடர்பு கொண்டிருப்பது நம்பிக்கையின்மையை வருவிக்கும். கர்த்தரோடு தொடர்பு கொண்டிருப்பது மனமகிழ்ச்சியைக் கொடுக்கும். ஆகவே தேவனோடு தோழமைகொள்வதே நமது வாழ்வின் நோக்கமாக இருக்க வேண்டும். இதுவே நாம் கற்க வேண்டிய பாடம். மேலும், தீயவர் எதிர்கொள்ள வேண்டிய நாள் எதிர்காலத்தில் இருக்கிறது, ஒருபோதும் ஏமாற்றத்தை ஏற்படுத்தாத பிரகாசமான வெகுமதியைக் குறித்த நம்பிக்கை நீதிமான்களுக்கு உள்ளது என்பன நாம் நினைவுகூர வேண்டியவை ஆகும். இங்கு **முடிவு** என்று சொல்லப்பட்டிருப்பது மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் தாண்டி மகிமை நிறைந்த விண்ணகத்தில் அடையவிருக்கிற எதிர்கால நிலையைக் குறிக்கிறது.

23:19 பிறர் என்ன செய்தாலும் கீழ்ப்படிதலுள்ள மகன் புத்திமதியைக் கேட்டு, **ஞானமாக** நடந்து தனது **இருதயத்தை நல்வழியில்** நடத்த வேண்டும்; அதாவது இறைவழியில் நடத்த வேண்டும்.

23:20,21 இரண்டு வகையான "குடிகாரர்கள்" இருக்கிறார்கள், ஒன்று அதிகமாகக் குடிப்பவர்கள், இரண்டாவது அதிகமாக உண்பவர்கள். நல்வாழ்வு வாழ வேண்டும் என்று விரும்புகிறவர்களுக்கு இவ்விரு வகுப்பாருமே கேடு விளைவிக்கும் நண்பர்கள்.

வரம்பு மீறுதல் உயிரை எடுத்துவிடும். குடிகாரரும் பெருந்தீனிப் பிரியரும் ஏழ்மையை நோக்கிச் செல்கிறார்கள். வரம்புமீறிக் குடிப்பதால் ஏற்படும் உணர்விழக்கும் மனிதன் கந்தைத் துணிகளையே அணிவான்.

23:22 இளம் வயதினர் தங்களுடைய **தகப்பனின்** ஆலோசனையை வரவேற்க வேண்டும். தங்களுடைய **தாயைக்** கேவலமாக நடத்தக் கூடாது. வயது முதிர்ந்தவர்கள் பல ஆண்டு அனுபவம் பெற்றவர்கள். இளைஞர் இதனை உணர்ந்து அவர்களுடைய அனுபவத்தின் பயனை எவ்வளவு முடியுமோ அவ்வளவு பெற முயற்சி செய்ய வேண்டும்.

23:23 சத்தியத்திற்காகப் பெரிய விலை கொடுக்க நாம் விருப்பம் கொண்டிருக்க வேண்டும், ஆனால் அதை எந்தவொரு பலனை அடைவதற்காகவும் **விற்கக்** கூடாது. **ஞானம், உபதேசம், புத்தி** இவற்றிற்கும் இது பொருந்தும். இவற்றை அடைவதற்காக நாம் எல்லா வேதனைகளையும் பொறுமையோடு ஏற்க வேண்டும், ஆனால் உலகப் பொருள் எதற்காகவும் அவற்றை நாம் இழந்துவிடக்கூடாது.

23:24,25 "தந்தை தினத்தில் தகப்பனுக்கு ஓர் ஆடையும், தாய்கள் தினத்தில் தாய்க்கு இனிப்பு களும் கொடு" என்று தற்கால மரபு கூறுகிறது. ஆனால் ஞானத்தோடும் விவேகத்தோடும் ஒரு மகன் வாழ்வதே அவன் பெற்றோருக்கு வழங்கும் பெரிதான பரிசு. ஆகவே, **"உன் தகப்பனும் உன் தாயும் சந்தோஷப்படவும், உன்னைப் பெற்றவள் மகிழவும் செய்"** என்பதே இங்கு கற்பிக்கப் படுகிற புத்திமதி.

23:26-28 "என் மகனே, உன் இருதயத்தை எனக்குத் தா" என்பது உள்ளார்ந்த வேண்டுதல். இது ஒழுக்கக் கேட்டுக்கும் குடிக்கும் எதிரான கடுமையான எச்சரிப்பை அறிமுகப்படுத்துகிறது. "என்னைக் கவனமாகக் கேட்டு, நான் உனக்குத் தரும் ஆலோசனையின்படி நட" என்று எழுத்தாளன் கூறுகிறான். வேசி மறைத்து வைக்கப் பட்டிருக்கும் ஆழமான **படுகுழியைப்** போன்றவள், கவனமற்றவர்களை விழுங்கும் கண்ணி போன்று அவள் இருக்கிறாள். அவள் **இடுக்கமான கிணறு** - எளிதில் விழ ஏதுவானது, வெளிவரக் கடினமானது. **அவள் கொள்ளைக் காரனைப் போலக்** காத்திருக்கிறாள். அவள் வேசித்தனத்தால் பெற்ற நோய்களின் காரணமாக ஆண்கள் மேல் வெறுப்படைந்து, அவர்களைப் பழிவாங்கும் நோக்கத்துடன் தூண்டிலில் புழுவை மாட்டி மீனைப் பிடிப்பதுபோல, ஆண்களை ஏமாற்றிக் கவர்ந்திழுக்கிறாள். உண்மையற்ற ஆண்களை ஒவ்வொருநாளும் தனது பட்டியலில் சேர்த்து அவர்களுடைய திருமண உறவுகளையும் குடும்பங்களையும் சீரழிக்கிறாள்.

23:29,30 இந்த அதிகாரத்தின் எஞ்சிய பகுதி ஒரு குடிகாரனைக் குறித்த இலக்கிய நயம் வாய்ந்த விவரத்தைத் தருகிறது. அவன் எல்லா விதமான **வேதனைகளையும்** தன்மேல் குவித்துக்கொள்கிறான். **துக்கம்** ஒன்றன்பின் ஒன்றாக அவனை வந்தடைகிறது. அவன் வாழ்வு **சண்டைகளால்** நிறைந்திருக்கிறது, ஏனெனில் அவன் யாருடனாவது சண்டையைத் தொடங்க எப்போதும் முயற்சி செய்கிறான். அவன் எப்போதும் பிறரைக் குறைகூறிக் குற்றஞ்சாட்டுகிறான், ஆனால் எல்லாத் தொல்லைகளுக்கும் தானே காரணம் என்பதை அவன் ஒருபோதும் அறிவதில்லை! அவனுடைய உடம்பில் சிராய்ப்புகள், காயங்கள், கண்களைச் சுற்றிலும் கருமை நிறத்தோல் - எல்லாம் தேவையில்லாமல் போட்ட சண்டையில் வாங்கிய அடிகள். அவனுடைய கண்கள் மங்கிச் சிவந்து போயிருக்கின்றன. அவன் இரவு முழுவதும் மதுக்கடையில் அமர்ந்து **கலப்படம்** நிறைந்த சாராயத்தை இடைவிடாமல் குடித்துக் கொண்டிருக்கிறான்.

23:31,32 தெளிவான **இரத்தவருணமான மதுவால்** அவன் கவர்ந்து இழுக்கப்படுவதைக் குறித்து எச்சரிக்கப்படுகிறான். அது பளபளப்பாக நுரைத்தெழுகிறது, **அது மெதுவாக இறங்கும்.** ஆனால் அவன் எச்சரிப்புக்குச் செவிசாய்ப்பதில்லை, ஆகவே விளைவை அனுபவிக்கிறான், அது **பாம்பின் கடியைப்** போலிருக்கும், **விரியனைப் போலத் தீண்டும்** - நச்சுத்தன்மையும் வேதனையும் அதில் உள்ளன.

23:33,34 அவனுடைய கண்கள் **விசித்திரமான காட்சிகளைக் காணும்** (இலகு தமிழ்). பெரும்பாலும் அவன் நீண்ட காலமாக அதிகமான மது அருந்தியதால் ஏற்பட்ட மூளைக் கோளாறுகளினாலும், மனதில் ஏற்படும் தொல்லைகளாலும் உண்டாகிற சித்த பிரமையை இது குறிக்கக் கூடும். அவன் இறுகிய குரலில், தடுமாற்றத்தோடு

கெட்ட சொற்களைப் பேசுகிறான். அவன் கடல் அலையில் சிக்கி அலைக்கழிக்கப்படுவது போல அங்குமிங்கும் தடுமாறி நடக்கிறான் அல்லது ஒரு பக்கத்திலிருந்து மறு பக்கம் அசைந்து மோதுகிற கட்டப்பட்டிருக்கும் **பாய்மரத் தட்டின்மேல்** படுத் திருக்கிறவனைப் போல நடக்கிறான்.

23:35 யாரோ ஒருவன் அவனைத் திரும்பத் திரும்ப அடித்திருக்கிறான். ஆனால் அவன் நினைவு திரும்பும் வேளையில் தனக்குக் காயம் ஏற்படவில்லை என்று சொல்கிறான். அவர்கள் அவனை அடித்து நொறுக்கியும் அவனுக்குச் **சுரணையில்லை**. அவன் முழுவதும் விழித் தெழுந்த பிறகு, மறுபடியும் குடிக்கக் கடைக்குச் செல்கிறான்.

24:1,2 பொல்லாத மனிதர் வெற்றி பெறு வதைக் கண்டு **பொறாமைகொள்வதோ** அவர் கள் தோழமையை **விரும்புவதோ** ஞானமற்ற செயலாகும். பிறரைத் தங்களுடைய தரம் குறைந்த நிலைக்குத் தாழ்த்துவதற்கு அவர்கள் ஒரு வழியைத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். அந் தத் தரம் எது? அவர்களுடைய மனம் எப்பொழு தும் **கொடுமை** செய்யத் திட்டமிடுகிறது, அவர் களுடைய உரையாடல் தீவினையை மைய மாகக் கொண்டதாகவே இருக்கிறது.

24:3,4 இங்கு வீடு என்று சொல்லப்பட்டிருப்பது ஒரு மனிதனுடைய வாழ்வைக் குறிப்பதாகவே தோன்றுகிறது. மிகச் சிறந்த வாழ்க்கை பொல் லாப்பின் மேல் கட்டப்படுவதில்லை, மாறாகத் தெய்வீக **ஞானத்தின்** மேலேயே அது **கட்டப்படு கிறது**. பொல்லாப்பு ஒரு வாழ்வை நொறுக்குகிறது. ஆனால் **விவேகமோ** அதை உறுதிப்படுத்து கிறது. பொல்லாப்பு அதை வெறுமையாக்கு கிறது, மெய்யான அறிவு **அருமையும் இனிமை யுமான** பொருட்களால் அதை நிரப்புகிறது.

24:5,6 ஞானமுள்ள மனிதன் வலிமை மிக்க வனைக் காட்டிலும் பெரிய அளவில் ஆற்றலைக் கையாளுகிறான், மூளையுள்ளவன் வல்லமை யுள்ளவனைக் காட்டிலும் வீரம் மிக்கவன். நல்ல அறிவுடைய ஆலோசகர்களின் மூலமாக **யுத்தம் பண்ண** முடியும், எவ்வளவு அதிகமாகப் **புத்தி யுள்ள** ஆலோசகர்கள் இருக்கிறார்களோ அவ் வளவு நல்லது.

24:7 எப்போதுமே மூடன் புரிந்துகொள்ளும் திறனுக்கு அப்பால் ஞானம் இருப்பதாகத் தோன்று கிறது. ஒரு பட்டணத்தின் வாசலில் மூப்பர்கள் அதிகாரத்தோடு பேசுகிறது போல அவனால் ஒருக்காலும் பேச முடியாது.

24:8,9 புதிய வகையிலான தீவினைகளைக் கண்டுபிடிப்பதற்கு ஏதுவாக தேவன் தந்திருக்கும் புலன் உணர்வுகளைப் பயன்படுத்தும் ஒருவன் "**சதிகாரத்** தலைவன்" என்று அழைக்கப்படு வான். **மூடத்தனத்தின் திட்டங்கள் பாவமாகும்**, இறுமாப்புக் கொண்டு வீம்பு செய்யும் பரியாசக் காரர் தங்களது தீவினையின் காரணமாகப் பிற ரால் அவமதிக்கப்படுவார்கள்.

24:10 ஒரு மனிதனுடைய தகுதி, அவன் இக் கட்டான சூழ்நிலையில் எவ்வாறு நடந்துகொள் கிறான் என்னும் சோதனையால் அறியப்படும். அவன் தன் வாழ்க்கையின் கடினமான சூழ்நிலையில் நம்பிக்கை இழந்துபோவானென்றால், அதனைச் செய்வதற்கான பலனற்றவன் என்று அறியப்படு வான்.

சோலையின் நிழலில் மகிழ்ந்து வாழ்ந்தேன்
பாலையின் முள்ளில் என்னுடல் வருந்த
பின்னோக்கிச் செல்ல ஆயத்தம் செய்தேன்
முன்சென்ற கிறிஸ்துவின் அழைப்பைக் கேட்டேன்!

என்னுயிர் காக்கத் தம்முயிர் கொடுத்தவர்
செங்குருதி வடிந்த கால்களைக் கண்டேன்
என்கால்கள் என்கைகள் உம்மிடம் காட்டிட
எங்ஙனம் துணிவேன் இயேசுவே இறைவனே!

– ஏமி கார்மிகேல்

24:11,12 குற்றமிழைக்காத மக்கள் நச்சு வாயுக் கூடங்களுக்கும், நெருப்புச் சூளைகளுக்கும், வேறு வகையான கொலைக் கூடங்களுக்கும் அழைத் துச் செல்லப்படும் வேளைகளில் - இன்னும் பிறக் காத பிள்ளைகள் கருச்சிதைவு செய்யப்படும் மருத்துவமனைகளிலும் - அவர்களைக் காப் பாற்ற எவ்வித முயற்சியும் செய்யாமல் நின்று கொண்டிருப்பது மன்னிக்கவியலாத குற்றங் களாகும். நான் குற்றம் செய்யாதவன் என்று முறையிடுவதில் எவ்விதப் பயனுமில்லை. திரு வாளர் டான்டே கூறினாற்போல, "நன்னெறி சார்ந்த விசயங்களில் இக்கட்டுகள் பெருகிய கட்டங் களில் நடுநிலை வகிப்பவர்களுக்கென்று நரகத் தில் மிகச் சூடான இடங்கள் ஒதுக்கிவைக்கப் பட்டிருக்கின்றன"

விசுவாசிகளாகிய நமக்கு இங்கு கூறப்படும் செய்தி என்ன? இரட்சிப்பின் நற்செய்தி நம்மிடம் கொடுக்கப்பட்டிருக்கிறதே? கிறிஸ்துவில்லாமல் ஆண் பெண் இருபாலரும் மடிந்துகொண்டிருக் கிறார்கள். "இதே வயல்நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள்" என்று இயேசு

நாதர் கூறினார் (யோவான் 4;35). நடுநிலை வகிக்க நாம் துணிவுகொள்ளலாமா?

நரகிடைச் செல்வோர் சுற்றிலும் பெருகிட,
பொழுது புலர்ந்திடும் வேளை நெருங்கிட,
பேதைகளை விடுத்து எங்ஙனம் வருவீர்?
மீட்பர் வருகிறார், உள்ளே அழைப்பீர்!

– அன்னா சிப்டன்

24:13,14 இங்கு **தேன்** ஞானத்திற்கு அடையாளமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இரண்டும் பயனுள்ளவை, சுவைக்க **இனிமையானவை**. அப்படியே **ஞானத்தை அறிந்துகொள்வது உன் ஆத்துமாவுக்கு இன்பமாயிருக்கும்; அதைப் பெற்றுக் கொண்டால், அது முடிவில் உதவும், உன் நம்பிக்கை வீண் போகாது**. ஞானத்தைக் கண்டடைந்தவன் பிரகாசமான எதிர்காலத்தையும், எதிர்பார்ப்புகள் அனைத்தையும் பெற்றவனாகவும் விளங்குவான் என்று வேறுசொற்களிலும் இவ்வுண்மையைக் கூறலாம்.

24:15,16 நீதிமானுடைய வீட்டை அபகரிக்க முயற்சிசெய்யும் பழி பாவத்துக்கு அஞ்சாத மனிதன் இங்கு எச்சரிக்கப்படுகிறான். ஒருவேளை அந்த நீதிமான் ஓர் இக்கட்டான சூழ்நிலையை எதிர்கொள்ள நேரிட்டிருக்கும், அப்பொழுது அவனுடைய சொத்துக்களை அபகரிக்கப் பொல்லாத மனிதன் பாய்ந்துவருகிறான் போலும்.

நீதிமான் பிரச்சினைகளுக்குள்ளாக அல்லது இயற்கைச் சீற்றத்தில் **ஏழுதரம் விழக்கூடும்**, ஆனால் ஒவ்வொரு தடவையும் அவன் மீண்டு வருவான். துன்மார்க்கனோ தனக்கு நேரிடக் கூடிய பேரிடலேயே அழிந்து போவான்.

24:17,18 நற்பண்பு மிக்க மனிதன் எதிரி துன்பத்தைச் சந்திக்கும் போது ஒருக்காலும் மகிழ்வடையான், அல்லது அவன் இடறி விழுவதைக் கண்டு **சந்தோஷப்படான்**. காழ்ப்புணர்ச்சியையும், பழிவாங்கும் ஆவியையும் ஊட்டிவளர்க்கும் எவனையும் காண்கிறபோது, எதிரியின் குற்றத்தைப் பார்க்கிலும் அப்படிப்பட்ட மனிதனின் எண்ணத்தையே தேவன் அதிகத் தண்டனைக்குரியது என்று கருதுகிறார்.

24:19,20 பொல்லாதவர்கள் வெற்றியடைந்ததாகத் தோன்றுகிறபோது எரிச்சலடையக் கூடாது, **துன்மார்க்கரைக்** கண்டு பொறாமைபடக் கூடாது என்று நாம் மறுபடியும் எச்சரிக்கப்படுகிறோம். துன்மார்க்கருடைய செல்வம் கேடுற்றது என்று இம்முறை அதற்கான காரணம் கொடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் எதிர் பார்த்திருக்கக் கூடிய நன்மை எதுவும் இல்லை. மாறாக அவர்களுடைய வாழ்க்கையின் வெளிச்சம் அணைந்துபோகும்.

24:21,22 கர்த்தருக்கும், அவருடைய பிரதிநிதியாகிய **அரசனுக்கும்** மதிப்பும் மரியாதையும் செலுத்தும் எண்ணத்தை இந்த நீதிமொழி மனதின் ஆழத்தில் பதியவைக்கிறது. மேலும் தெய்வீக அதிகாரத்தால் நியமிக்கப்பட்ட நிருவாகங்களையும் அரசையும் மாற்றவோ கவிழ்க்கவோ முயற்சி செய்வோருடன் சேரக்கூடாது என்று இது எச்சரிக்கிறது. இவ்விருவகையான கலகச் செயல்களும் உடனடியான, கற்பனையும் செய்துபார்க்க வியலாத **ஆபத்தைக்** குற்றம் இழைத்தவர்கள் மேல் கொண்டுவரும்.

கிறிஸ்தவன் கர்த்தருக்கு உண்மையோடு இருப்பதற்கு எவ்வித இடர்ப்பாடும் ஏற்படாத வரை, இவ்வுலக மக்கள் செலுத்தும் ஆட்சிக்குக் கீழ்ப்பட்டிருக்க வேண்டுமென்று கற்பிக்கப்படுகிறான். கர்த்தருக்குக் கீழ்ப்படியக்கூடாது என்று ஓர் அரசு அவனுக்கு ஆணையிடுமென்றால், அவன் அதை மறுத்துரைத்து, விளைவுகளைத் தாழ்மையோடு ஏற்க வேண்டும். எந்தவொரு சூழ்நிலையிலும் அரசாங்கத்தைக் கவிழ்க்கும் சதித்திட்டத்தில் அவன் சேரக்கூடாது.

அ. ஞானி தொடர்ந்து கூறும் சொற்கள் [24:23-34]

24:23-26 இது முதல் 34 -ஆவது வசனம் வரையிலும் **ஞானமுள்ளவர்களின் புத்திமதிகளின்** புதிய பாகம் இடம்பெற்றுள்ளது.

எது சரி, எது தவறு என்று காரியங்களைத் தீர்மானிக்கும்போது **முகத்தாட்சிணியம்** காட்டுவது வெறுக்கத்தக்கது. குற்றம் செய்தவர்களை விடுதலை செய்து நீதியின் மேன்மைக்குக் களங்கம் எற்படுத்தும் நீதிபதிகளை மக்கள் சபிக்கிறார்கள், நாடு வெறுக்கிறது. மாறாக, பாவத்தைக் **கடிந்துகொள்ளும்** நீதிபதிகள் தேவனுடைய பரிசையும், மனிதர்களின் வாழ்த்தையும் பெறுவார்கள். நேர்மையும் நீதியும் உடைய தீர்ப்புகளை வழங்கும் நீதிபதிகள் மக்களின் மனமகிழ்ச்சி நிறைந்த பாராட்டைப் பெறுவார்கள்.

24:27 ஓரிடத்தில் வீட்டைக் கட்டுமுன் அதிலிருக்கும் மரங்களை அகற்றி நிலத்தைச் செம்மைப்படுத்த வேண்டும், அதுபோலவே அவன் குடும்ப வாழ்க்கைக்குள் நுழைவதற்கு முன் தனது வாழ்க்கையைச் சீராக்கிக் கொள்ள வேண்டும். ஒருவன் ஆவிக்குரிய வகையிலும், உணர்ச்சி

பூர்வமாகவும், பொருளாதார நிலையிலும் ஆயத்தம் அடைவதற்கு முன், கடமைகள் நிறைந்த திருமண வாழ்க்கைக்குள் நுழைவதற்குத் தீவிரம் காட்டுவதற்கு எதிராக, இந்த நீதிமொழி இவ்வாறு எச்சரிக்கிறது.

24:28,29 எந்தவொரு சூழ்நிலையிலும், எவனும் தனது அயலானுக்கு எதிராகத் தவறான குற்றச்சாட்டுகளைக் கூறக்கூடாது, பொய் வதந்திகளைப் பரப்பவும் கூடாது. அயலகத்தான் ஒரு வேளை அத்தகைய கெடுதல்களைச் செய்திருந்தாலும், தீமைக்குத் தீமை செய்வதற்கு மன்னிப்பு இல்லை.

24:30-34 ஒரு சோம்பேறியின் வயல் நிலத்தின் அருகில் நடந்து சென்றபோது, அந்தத் **திராட்சைத் தோட்டத்தில்** பெருமளவு **முட்காடு** வளர்ந்திருந்ததைக் கண்டான். செடிகொடிகள் வளர்ந்து கூரிய காம்புகள் காய்ந்திருந்தன, அதாவது **காஞ்சொறி** அந்த நிலத்தை மூடியிருந்தது, எங்கும் அதே காட்சி. கற்களால் கட்டப்பட்டிருந்த **சுவர்** இடிந்து பாழடைந்திருந்தது. இங்கே காட்சிப்பொருள் கொண்டு ஒரு பாடம் கற்பிக்கப்பட்டுள்ளது. ஒருவன் இன்னும் கொஞ்சநேரம் **உறங்க** வேண்டும், கண்களை மூடிக்கொண்டிருக்க வேண்டும், கொட்டாவி விட வேண்டும் என்பான் எனில், அவன் நெடுஞ்சாலையில் அலைந்து திரிகிற மனிதனைப் போலவும் **ஆயுதம்** ஏந்தித் திரியும் கொள்ளைக்காரனைப் போலவும் வறுமையடைவான் என்று நீங்கள் நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்.

நாம் ஆவிக்குரிய விசயங்களில் சோம்பலுக்குக் கீழ்ப்படிவோமானால், நம்முடைய வாழ்க்கை (திராட்சைத் தோட்டம்) மாம்சத்தின் செயல்களால் (முட்களும், காஞ்சொறிகளும்) அலைக்கழிக்கப்படுவோம். அங்கே தேவனுக்கென்று கனி இருக்காது. நம்முடைய ஆவிக்குரிய பாதுகாப்பு (கற்சுவர்) இடிந்து கிடக்கும், பிசாசு கால் வைத்த இடத்தைக் கைப்பற்றும். நமது உற்சாக மற்ற நிலை, பின்மாற்றம் அடைந்த நிலை ஆத்துமாவின் வெறுமையாகக் காணப்படும்.

5. எசேக்கியாவின் மனிதர்கள் சாலொமோனின் நீதிமொழிகளைத் தொகுத்துத் தருதல் [25:1-29:27]

25:1 இருபத்தைந்து முதல் இருபத்தொன்பது வரையிலுமுள்ள அதிகாரங்களில் இடம்பெற்றுள்ள நீதிமொழிகள் சாலொமோன் இயற்றியவை, பல ஆண்டுகளுக்குப் பின்னர் யூதாவின் அரசனாகிய எசேக்கியாவின் மனிதர்கள் பிரதி எடுத்தவை. இப்பகுதியில் எசேக்கியாவின் எபிரெய மொழிப் பெயரின் எண்ணிக்கைக்கு ஏற்ப 140 நீதிமொழிகள் உள்ளன.

25:2 ஒரு செய்தியை **மறைத்து** வைத்திருப்பது **தேவனுடைய மகிமையாகும்**. இறைவனின் இயற்கைப் படைப்பு, அவருடைய எழுதப்பட்ட வார்த்தை, அவருடைய அருள்பாலிப்பு எல்லாவற்றிலும் மறைந்திருக்கும் இரகசியங்களை எண்ணிப்பாருங்கள்! "தேவனுடைய ஆலோசனைகளும் செயல்களும் மனிதனுடைய புத்திக்கு எல்லைகடந்தவையாக இராவிடில், அவர் தேவன் அல்லவே" என்று திருவாளர் தாமஸ் கார்ட்ரைட் கூறினார்.

ஒரு செயலை ஆராய்ந்து வெளிப்படுத்துவதோ அரசனுக்கு மேன்மை (இலகு தமிழ்) இதனுடைய பின்னணியில் காண்கையில், ஞானமுள்ள அரசன் தனது அரசைப் பாதிக்கக்கூடிய எல்லா முக்கியமான நடவடிக்கைகளையும் தீர விசாரித்து நேர்மையான நீதியை வழங்குவதற்கும், நன்மை பயக்கும் கொள்கைகளை உருவாக்குவதற்கும் தன்னை ஆயத்தப்படுத்துவான் என்பதே இதன் பொருள் என்று தோன்றுகிறது.

திருமறையில் மறைந்திருக்கும் ஆவிக்குரிய அரும்பொருட்களைத் தேடிக் கண்டுபிடிக்க நாம் கவனமுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதே நாம் இங்கு கற்கும் பாடம்.

25:3 வானங்களின் உயரத்தை அளவிட முடியாது என்றே தோன்றுகிறது. பூமியின் ஆழத்தை ஆராய முடியாது என்றும் தோன்றுகிறது. அது போலவே மேதகு அரசர்களுடைய இருதயம் ஆராய்ந்து அறிய முடியாதது. அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை எவனொருவனாலும் துல்லியமாக அறிய முடியாது.

25:4,5 ஒரு மட்கலத்தில் **வெள்ளி** உருக்கப்படும்போது **களிம்பு** நுரைபோல மேலே எழுந்து வரும், அது கழிவுப்பொருளே ஆகும். அந்தக் கழிவு நீக்கப்பட்ட பிறகு ஆபரணங்கள் செய்வதற்குத் தகுந்த உலோகத்தைத் தட்டான் பெற்றிருப்பான். **களிம்பு** என்று இங்கு குறிப்பிடப்பட்டிருப்பது அரசனுடைய நீதிமன்றத்தில் இருக்கும் பொல்லாத ஆலோசகர்களுக்கு அடையாளமாயிருக்கிறது. அவர்கள் நீக்கப்பட்டவுடன் அவ்வரசு நீதியின் அடிப்படையில் **நிலைநிறுத்தப்படும்**.

கிறிஸ்து தமது ஆட்சியை நிறுவும்படி இவ்வுலகிற்கு மீண்டும் வருகிறபோது, முதலாவது அவர் தமது அரசிலிருந்து கலகக்காரரையும், சட்டத்தை மீறுகிறவர்களையும், எதிர்த்துச் செயல்புரிகிற எல்லோரையும் அகற்றுவார்.

25:6,7 அரச நீதிமன்றத்தில் உங்களை நீங்களே முதன்மையான இடத்திற்குத் தள்ளாதீர்கள், அதாவது முக்கிய பிரமுகர்கள் இருக்கும் இடத்தை நாடாதீர்கள். மரியாதைக்குரிய இடத்தை நீங்கள் கைப்பற்ற வேண்டும் என்று எண்ணாமல், அவ்விடத்திற்கு நீங்கள் அழைக்கப்படுவது சிறந்தது. இல்லையேல் அரசனுடைய முன்னிலையில் நீங்கள் தாழ்த்தப்பட நேரிடும்.

இந்த ஆலோசனை எரேமியா 45:5 -ஆம் வசனத்தை நம்முடைய நினைவுக்குக் கொண்டு வருகிறது, "நீ உனக்கு பெரிய காரியங்களைத் தேடுகிறாயோ? தேடாதே." மேலும் கர்த்தராகிய இயேசு கூறிய சொற்களையும் இது நினைவுபடுத்துகிறது (லூக்கா 14:8-10). "உன் கண்கள் கண்ட பிரபுவின் சமுகத்தில் நீ தாழ்த்தப்படுவது நல்லதல்ல; அவன் உன்னைப் பார்த்து: மேலே வா என்று சொல்வதே உனக்கு மேன்மை."

7-ஆவது வசனத்தில் உள்ள "உன் கண்கள் கண்ட மனிதன் அல்லது நிகழ்வு" என்னும் சொற்றொடர் அடுத்த வசனத்தோடு சேருவதே பொருத்தமாக இருக்கும். RSV மொழிபெயர்ப்பு, "**உன் கண்கள் கண்ட** நிகழ்வைக் குறித்து வழக்காடப் பதற்றமாய்ப் போகாதே" என்று கூறுகிறது.

25:8-10 வழக்காடுவதில் விருப்பமுள்ள மனதைத் திருமறை குற்றப்படுத்துகிறது. அதாவது, ஒவ்வொரு பிரச்சினைக்கும் தீர்வுகாண நீதிமன்றத்துக்கு விரைந்து செல்ல விரும்புவதை அது குறை கூறுகிறது. ஒருவன் தான் கண்ட எல்லாவற்றையும் சொல்லலாம், ஆனால் அவனுடைய அயலான் சாட்சி கூறுகிறபோது அவன் வெட்கமடைய நேரிடும்.

பிறருடன் மனத்தாங்கல் ஏற்படுகிறபோது அதற்குத் தனிமையில் அவருடன் பேசி தீர்வு காண்பது நல்லது (மத். 18:15 -ஐக் காணவும்). பிறரிடம் அவரைக் குறித்துப் பிதற்றுவது சரியன்று, பெயர் அறியாத எழுத்தாளர் ஆலோசனை வழங்குகிறார்:

> உங்களுடைய நண்பர்கள் சிலருடன் உங்களுக்கு மனத்தாங்கல் ஏற்படுகிறது, அவரிடம் சென்று தனியே பேசுவதற்கு உங்களுக்குத் துணிவு இல்லை, வேறு ஒருவரிடம் அதைக் குறித்துப் பேசுகிறீர்கள். தேவனுடைய வசனத்தில் கூறப்பட்டுள்ள கோட்பாட்டை மறந்துவிடுகிறோம். இப்படிப்பட்ட விசயத்தைக் குறித்துப் பிறரிடம் பேசுவது நல்லதல்ல, முடிவில் அது பிரச்சினையைப் பெரிதுபடுத்திவிடும். குறிப்பிட்ட வேதபகுதியை நம்முடைய வழிகாட்டியாகக் கொண்டு, அதன்படி நடந்தால், அற்பமான பல "காரணங்களைப்" புறம்பே தள்ளி அந்தச் சிறிய குற்றங்களைப் பொருட்படுத்த மாட்டோம். நமது மனதை அலைக்கழிக்கும் தொல்லைகளிலிருந்தும் நாம் விடுபடுவோம்.

நீங்கள் குற்றம் செய்தவரிடம் நேரடியாகச் செல்லாததற்காக வேறொரு நபர் உங்களைக் கடிந்துகொள்வதைக் குறித்து 10 -ஆவது வசனம் விவரிக்கிறது. நீங்கள் புறம்பேசுகிறவர் என்னும் பெயரை அல்லது அதைவிட மோசமான பெயரைப் பெறுவீர்கள்.

25:11 தகுதியான **வார்த்தை வெள்ளித் தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்குச் சமானம்.** சரியான **வார்த்தை** நன்னெறியுடன் கூடிய அழகில் மிளிர்கிறது, மேலும் அது விலையுயர்ந்ததும் கவர்ச்சிகரமான உலோகங்களின் கலப்பாகத் தகுதி பெற்று விளங்குகிறது.

25:12 தங்கக் காதணியும், தரமான தங்க நகையும் உடலழகைக் கூட்டுகின்றன. அது போல **ஞானமாகக் கடிந்துகொள்பவர்** கற்க விரும்புகிற ஒருவனுடைய நன்னெறி அழகைக் கூட்டுகிறார்.

25:13 சாதாரணமாக, **அறுவடைக் காலத்தில்** பெய்யும் **உறைபனி** பேரிடரையே உண்டுபண்ணும். இங்கு வயல்வெளியில் அறுவடை செய்கிற ஒருவருக்குப் பனிக்கட்டியை நீரில் போட்டுப் பானம்பண்ணும்படி கொடுப்பதையே இச்சொற்றொடர் குறிக்கிறது.

வெப்பம் மிகுந்த நாளில் பனிக்கட்டி போட்ட பானம் எவ்வளவாகப் புத்துணர்ச்சி தருகிறதோ, அதுபோல **உண்மையுள்ள ஸ்தானாபதி** அவனை அனுப்பியவர்களுக்குப் புத்துணர்ச்சி தருவான்.

25:14 ஒரு பொருளை ஈவாகத் தருகிறேன் என்று சொல்லியும் அதைத் தராதவன், மழையைப் பொழியும் என்று மக்கள் எதிர்பார்த்தும் மழைபெய்யாமல் கடந்துபோகிற **மேகங்களுக்கும் காற்றுக்கும்** நிகராயிருக்கிறான்.

இந்த நீதிமொழி ஆவிக்குரிய வரங்களைக் குறிப்பிடவில்லையென்றாலும், இதனை அத னோடு சரியாகப் பொருத்திக் காணலாம். ஒருவன் தன்னை மிகப்பெரிய போதகர் அல்லது பிரசங்கி என்று காட்டிக்கொள்ளலாம், ஆனால் அவன் மக்களுடைய எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப வாழா மல் போவானானால் அது பெரிய ஏமாற்றமாகக் காணப்படும். இந்தியர் இதற்கொரு பழமொழி யைக் கூறுவார்கள் "காற்றைக் குவியுங்கள் - அங்கே மழை இல்லை."

25:15 கவர்ந்திழுக்கப்பட்டு பரபரப்படைந்த மனிதனைக் காட்டிலும் ஒரு பிரபுவைக் கனிவும் பொறுமையும் இணங்கச் செய்யும். அதுபோலவே, **இனிய நாவு எலும்பையும்** உடைத்துவிடும், அதாவது, வலிமைமிக்க தாடைகளும் பற்களும் மென்று பெருத்த ஓசையை எழுப்புவதைக் காட்டிலும் மேலானவற்றைச் செய்து முடிக்கும்.

25:16 சிறிதளவு உண்கிறபோது **தேன்** நல் லது, நல்ல பொருளையும் மிதமிஞ்சி உண்கிற போது அது நோயை வருவிக்கும். நாம் வாழ் வதற்காக உண்ணவேண்டுமெயொழிய உண்ப தற்காக வாழக்கூடாது. லேரி கிறிஸ்டன்சன் எடுத்துக்காட்டுடன் விவரிக்கிறார்:

> எங்களுடன் நட்புபாராட்டும் ஒரு தம்பதி களுக்கு எட்டுப் பிள்ளைகள் இருக்கிறார்கள், அவர்கள் எல்லோருக்கும் ஐஸ்கீரீம் என்றால் மிகவும் பிடிக்கும். கோடைகாலத்தில் ஒரு நாளில் அவர்களில் ஒரு சிறுமி இன்று நாங்கள் ஐஸ்கீரீமைத் தவிர வேறு எதையும் உண்ண மாட்டோம் என்று அறிவித்தாள்! மற்றவர்கள் அதற்கு இசைவு தெரிவிக்கும் வகையில் ஒலி எழுப்பினார்கள். அவர்களுக்கு வியப்பு என்ன வென்றால் அவர்களுடைய தந்தையும் அதற்குச் சரி என்று ஒப்புக்கொண்டது தான். "நாளைக்கு நீங்கள் ஐஸ்கீரீம் மட்டும் உண்ணவேண்டும்,வேறு எதுவும் உண்ணக் கூடாது." பிள்ளைகள் மகிழ்ச்சியால் உரத்தகுர லில் சத்தம் எழுப்பினார்கள், அடுத்த நாள் வரை அவர்களால் பொறுத்திருக்க முடிய வில்லை. காலையில் எல்லோரும் தங்களுக் குப் பிடித்தமான ஐஸ்கீரீம் வகையின் பெய ரைச் சொல்லி. அது வேண்டும் என்று கேட் டார்கள் – சாக்லேட், ஸ்ட்ராபெரி, வென்னிலா – பாத்திரம் நிறைய ஐஸ்கீரீம் வழங்கப்பட்டது! முற்பகலிலும் ஐஸ்கீரீம்தான் – மதிய உணவு – அப்பொழுதும் ஐஸ்கீரீம், ஆனால் அளவு சற்று குறைந்துவிட்டது. அவர்கள் பிற்பகலில் சிற்றுண் டிக்கு வந்தபோது, அவர்களுடைய தாயார் அடுப் பிலிருந்து பனியாரம் போன்ற சுவையான சிற் றுண்டியை எடுத்துக்கொண்டிருந்தார். அதனு டைய மணம் வீடு முழுவதும் வீசியது.
>
> "ஆஹா, என்ன மணம்! பனியாரம் எனக்கு மிகவும் பிடிக்கும்!" என்று சொல்லிக் கொண்டே அதை உண்பதற்குச் சிறுவன் டெட்டி ஆயத்த மானான். ஆனால் அவனுடைய தாயார் தடுத்து விட்டார்.
>
> "உனக்கு நினைவில்லையா? இன்றைக்கு ஐஸ்கீரீம் நாள், ஐஸ்கீரீம் தவிர வேறு எதுவும் உண்ணக்கூடாது."
>
> "ஆம்..." என்றான் சிறுவன்.
>
> "உட்கார், கிண்ணம் நிறைய ஐஸ்கீரீம் எடுத்து வருகிறேன்."
>
> "வேண்டாம், ஒரு குச்சி ஐஸ்கீரீம் போதும்."
>
> இரவு உணவுக்கான நேரம் வந்துவிட்டது, ஐஸ் கீரீம் ஆசை போய்விட்டது. பளபளக்கும் கிண் ணங்களில் பளிச்சிடும் ஐஸ்கீரீம் அவர்களுக் காகக் காத்துக்கொண்டிருந்தது. மேசையில் அமர்ந்திருந்த பிள்ளைகள் அதை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். இந்த ஆலோ சனையை முன்மொழிந்த சிறுமி மேரி "அப்பா, இந்த ஐஸ்கீரீமுக்குப் பதிலாக ஒரு ரொட்டித் துண்டு கிடைக்குமா?' என்று கேட்டாள்.[37]

25:17 அளவோடு இருத்தல் தேனுக்கு மட்டுமே பொருந்தும் என்று எண்ணக்கூடாது, பிறருடைய இல்லத்திற்குச் செல்வதையும் அது குறிக்கும். எப்பொழுது ஒருவரது இல்லத்தை விட்டு வெளியே போக வேண்டும் என்பதை அறிந்திருக்க வேண்டும். நீங்கள் வரவேற்கப்படு வதற்கும் கூடுதலாக அவருடைய வீட்டில் தங்க முடியுமா?

"மனிதனுடைய நட்பைக் காட்டிலும் தேவ னுடைய நட்பு எவ்வளவு சிறந்தது" என்கிறார் திருவாளர் கார்ட்ரைட். "எத்தனை தடவையானா லும், எப்பொழுது வேண்டுமானாலும் தேவனிடம் வரும்படி நாம் வரவேற்கப்படுகிறோம்."

25:18 தன்னுடைய அயலானுக்கு எதிராகப் **பொய்ச்சாட்சி சொல்லுகிற மனிதனுக்குப்** பொருத்தமான மூன்று ஒப்புமைகள் இங்கு சொல் லப்பட்டுள்ளன:

தண்டாயுதம் - அடித்துத் தூள்தூளாக நெறுக்கக் கூடியது.

கட்கம் (வாள்) - இருபுறமும் கூர்மையானது.

கூர்மையான அம்பு - உருவக்குத்திக் காயத்தை ஏற்படுத்தக்கூடியது.

25:19 உடைந்த பல்லைக் கொண்டு நீங்கள் கடிப்பீர்கள் என்றால், அதன் பிறகு அவ்வாறு கடித்திருக்கக் கூடாது என்று எண்ணுவீர்கள். மூட்டு விலகிப்போன காலில் உங்களுடைய பாரம் முழுவதையும் சுமத்தினால் அது உங்களை விழச்செய்யும். நம்பகத்தன்மை இல்லாத ஒரு வனை இக்கட்டான சூழ்நிலையில் சார்ந்துகொள்வதும் அதுபோலவே ஆகும். அது வேதனையும் ஏமாற்றமும் அளிக்கும்.

25:20 மனத்துக்கமுள்ளவனிடத்தில் பாடல்களைப் பாடுவது சீண்டிவிடுவதாகவும், எரிச்சல் உண்டாக்குவதாகவும், விருப்பமற்றதாகவும் காணப்படும். **குளிர்காலத்தில்** ஒருவனுடைய **ஆடையைப் பறித்துக்கொள்வது** போலவும், ஆப்ப **உப்பின்மேல் காடியை ஊற்றுவது போலவும்** காணப்பட்டு கடுமையான எதிர்ப்பை உண்டு பண்ணும்.

மருத்துவமனைக்கு முதன்முறையாகச் சென்ற உடன் நற்செய்திப் பணியாளரைப் பற்றி கெய்த் வெஸ்டன் இவ்வாறு கூறினார்: "ஓர் எளிமையான நோயாளியை அவர் அங்கே பார்த்தார், அந்த மனிதனுடைய இரண்டு கால்களும் கப்பிகளில் தொங்கவிடப்பட்டிருந்தன; இரண்டு கைகளிலும் மாவுக்கட்டு போடப்பட்டிருந்தது. ஒரு கையில் இரத்தநாளத்தில் ஊசியின் மூலமாக மருந்து சென்று கொண்டிருந்தது. அவரிடம் நெருங்கிச் சென்ற ஊழியர் சுவிசேஷப் புன்னகை பூத்தவராக, தன்னுடைய கரத்தில் இருந்த வேத புத்தகத்தைத் திறந்து, 'சகோதரரே, நீங்கள் சந்தோஷமாக இருக்கிறீர்களா?' என்று கேட்டார். அந்த நோயாளி என்ன விடை கூறினார் என்று ஊழியர் என்னிடம் சொல்லவில்லை, அது நிச்சயமாக மரியாதைக் குரிய சொற்களாக இருந்திருக்க வாய்ப்பில்லை."[38]

25:21,22 இந்த வசனங்களைப் பவுல் ரோமர் 12:20 -இல் எடுத்துரைக்கிறார். நமக்கு எதிராகச் செய்யப்படுகிற ஒவ்வொரு தீங்குக்கும் அவமரியாதைக்கும் பதிலாகத் தயவு பாராட்டுவதன் மூலமாகத் தீமையை நன்மையால் வெல்லுகிறவர்களாகக் காணப்படுவோம்.

கடுங்கோபமுற்ற அயல்வீட்டுப் பெண் புதிய விசுவாசி ஒருவரிடம், அவருடைய ஐந்து வயது மகளே பூக்கள் மிதிபட்டு நசுங்கிக் கிடப்பதற்கும், உடைந்த சன்னலுக்கும், இன்னும் சில செயல்களுக்கும் காரணம் என்று வசைமாரிப் பொழிந்தார். அந்த அயல்வீட்டு பெண்மணி வெளியே நின்று பெருத்த குரலில் கத்திக்கொண்டிருந்த போது, கிறிஸ்தவப் பெண் அவரை வீட்டுக்குள்ளே வரும்படி அழைத்தார்.

அயல்வீட்டுப் பெண் வீட்டுக்குள்ளே நுழைந்த போது மேசையில் தேநீரும் சில இனிப்புப் பண்டங்களும் ஆயத்தமாயிருந்தன. "யாரோ விருந்தினர் வருகிறார் போலும், நான் பிறகு வருகிறேன்" என்றார் அந்தப் பெண். "இல்லையில்லை, நாம் என்னுடைய மகளைக் குறித்து தேநீர் அருந்திக் கொண்டே பேசலாம் என்று நினைத்தேன்" என்று பதிலுரைத்தார் கிறிஸ்தவப் பெண். பின்னர் அந்தச் சிற்றுண்டிக்காக தேவனுக்கு நன்றி செலுத்தித் தனது கண்களைக் கிறிஸ்தவப் பெண் திறந்த போது, வருகை புரிந்த பெண் அழுதவராக, "உங்கள் மகளல்ல, என் மகள்தான் எல்லாவற்றிற்கும் காரணம்" என்று கூறினார். பின்னர் யோசனை எதுவுமின்றித் தொடர்ந்து பேசிய அவர், "என்ன செய்வதென்று எனக்குத் தெரியவில்லை, ஏன் உங்களைத் திட்டினேன், என்னுடைய பிள்ளைகள் என்னுடைய கணவர் ஒருவரையும் என்னால் சமாளிக்க முடியவில்லை, என் வீட்டையும் என்னால் நிருவகிக்க முடியவில்லை!" என்றார்.

அயல்வீட்டுப் பெண்மணி இவ்வாறு கூறி தனது தப்பிதத்தை ஒப்புக்கொண்டவுடன், இளம் கிறிஸ்தவப் பெண் கிறிஸ்துவின் நற்செய்தியைப் பகிர்ந்து கொள்ளத் தொடங்கினார். ஆறுவாரத்துக்குள் அயல்வீட்டுப் பெண்ணும், அவருடைய குடும்பத்தார் யாவரும் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு இரட்சிக்கப்பட்டார்கள்.[39]

25:23 வடகாற்று மழையைக் கொண்டு வரும்; அதுபோலவே புறங்கூறுகிற **நாவு கோபமுள்ள** பார்வையை உண்டுபண்ணும். புறங்கூறுதலால் பாதிக்கப்பட்ட மனிதனிடத்திலிருந்து கோபமுள்ள பார்வை வெளிப்படுவது நிச்சயம். மேலும் அதைக் கேட்கிறவர்களிடத்திலிருந்தும் கோபமுள்ள பார்வை வெளிப்படவேண்டும். புறங்கூறுகிற மனிதரைக் கேட்கிறவர் கடிந்துகொள்வாரெனில், அவர் அந்த வேலையை வெகு விரைவில் விட்டுவிடுவார்.

25:24 இந்த வசனம் பெரும்பாலும் 21:9 -ஆம் வசனத்திற்கு ஒத்திருக்கிறது. எப்போதும் சீண்டிக் கொண்டே இருக்கிற பெண்ணோடு வாழ்வதன்

சிரமம் எவ்வளவு கடினமானது என்பதை வலியுறுத்தும் பொருட்டு இது மீண்டும் உரைக்கப்பட்டுள்ளது.

25:25 தேவனுடைய நற்செய்தி தூரதேசத்திலிருந்து வந்திருக்கிறது - விண்ணகத்திலிருந்து வந்திருக்கிறது. தாகமாயிருக்கும் ஆத்துமாவுக்குக் **குளிர்ந்தநீர்** எவ்வாறு புத்துணர்ச்சியைத் தருகிறதோ அதுபோலவே நற்செய்தி புத்துயிரைக் கொடுத்துத் தாகத்தைத் தீர்க்கும்.

25:26 நல்ல மனிதன் ஒருவன் **துன்மார்க்கருக்கு** முன்பாகப் பணிவானாகில், அதாவது நீதிக்காக நிலைநிற்கத் தவறினால், துன்மார்க்கருக்கு இணங்குவானாகில் அல்லது அவர்களுடைய கருத்துக்கு இசைவு தெரிவித்தால் அது சேறு கலந்த **நீரூற்று** போலவும் **கலங்கின கிணறு** போலவும் காணப்படும். நீங்கள் அப்படிப்பட்ட தீயவரிடம் சென்று தூய்மையையும் சுத்தத்தையும் எதிர்பார்த்தால் ஏமாந்துபோவீர்கள்.

25:27 தேனை மிகுதியாய் உட்கொள்வது **நல்லதல்ல**. "தேவன் போதுமென்று சொன்னதற்கு மேலே வெறுப்புணர்ச்சி ஏற்படுமேயொழிய ஆனந்தப் பரவசம் உண்டாகாது" என்கிறார் திருவாளர் கிட்னர்.

அடுத்த வாக்கியம் எபிரெய மொழியில் தெளிவற்று இருக்கிறது. NKJV மொழிபெயர்ப்பில் **தற்புகழை நாடுவதும் புகழ் அல்ல** என்னும் பொருள்பட வாக்கியம் அமைந்திருக்கிறது. "அல்ல" என்னும் சொல் முதல் வாக்கியத்திலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. "கனமான பொருள்களுக்குள் தேடுவதே கனம்தான் (JND), அல்லது "கனமான பொருள்களுக்குள் தேடுவது புகழ்ச்சி ஆகும்" (JND அடிக்குறிப்பு). இவை யாவும் நல்ல கருத்தைத் தருகின்றன.

25:28 தனது வாழ்க்கையைச் சீர்ப்படுத்துவதற்கு ஒருக்காலும் கற்றுக்கொள்ளாத மனிதன் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படாத **பட்டணத்துக்கு** ஒப்பாக இருக்கிறான். எல்லாவிதத் தாக்குதல்களுக்கும், எல்லாவிதச் சோதனைகளுக்கும் அது திறந்திருக்கிறது.

26:1 கோடை காலத்தில் உறைபனி முற்றிலும் பொருத்தமற்றது, மேலும் **அறுவடைக் காலத்தில் மழை** பெரும் சேதத்தை ஏற்படுத்தும். இதற்கு இணையாகப் பொருத்தமற்றதும் சேதத்தை ஏற்படுத்துவதும் யாதெனில் மூடர்களைப் புகழ்வது ஆகும். சரியா தவறா என்னும் அடிப்படையில் காண்கிறபோது இது நிச்சயமாகப் பொருத்தமற்றதாகும், மேலும் அவர்கள் தங்கள் மதியீனத்தில் தொடருவதற்கு அது ஊக்கமளிக்கும்.

26:2 அடைக்கலான் குருவியும் தகைவிலான் குருவியும் மேலும் கீழும் விரைந்து செல்லுமே ஒழிய நம்மேல் அமர்வதில்லை. அது போலவே தகுதியற்ற சாபம் ஒரு மனிதன்மேல் தங்காது; மூடநம்பிக்கை சார்ந்த கருத்துகள் என்ன வேண்டுமானாலும் சொல்லலாம், அதனால் எவ்விதப் பாதிப்பும் ஏற்படாது. பிலேயாம் இஸ்ரவேலைச் சபிக்க முயன்றான், தோற்றான் (எண். 23:8; உபா. 23:5).

26:3 குதிரையை அடிக்கும் **சவுக்கும், கழுதைக்கு** இடப்படும் **கடிவாளமும்** எப்படி முக்கியமோ, அதுபோலவே கடினமான சொற்களையே மூடன்புரிந்துகொள்வான். "வாரினாலும் கடிவாளத்தினாலும் வாய் கட்டப்பட்டாலொழிய, உன் கிட்டச் சேராத புத்தியில்லாத குதிரையைப் போலவும் கோவேறு கழுதையைப் போலவும் இருக்க வேண்டாம்" (சங். 32:9).

26:4,5 இவ்விரு வசனங்களும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவையாகத் தோன்றுகின்றன. முதல்வசனம் **மூடனுக்கு மறுஉத்தரவு** கொடு என்றும், அடுத்த வசனம் அவனுக்கு மறுஉத்தரவு கொடுக்கக் கூடாது என்றும் சொல்கின்றன. இதற்கான விளக்கம் என்ன? இரு வசனங்களின் பிற் பகுதிகளும் அதற்கான விடையைத் தருகின்றன.

மூடனுக்கு நீங்கள் **மறுஉத்தரவு** கொடுக்கும்போது நீங்கள் மூடனாக ஆகும்படி விடை கூறவேண்டாம். உங்கள் நிதானத்தை இழந்து விடாதீர்கள், உங்கள் முகம் சிவக்கக் கூடாது, முன்யோசனையின்றிப் பேசிவிடாதீர்கள்.

ஆனால் நீங்கள் **மூடனுக்கு மறுஉத்தரவு** கொடுங்கள். அவன் தனது மதியீனத்தில் தொடர்ந்து இருப்பதற்கு விட்டுவிடாதீர்கள். அவனுடைய மதியீனத்திற்குத் தகுந்தபடி அவனைக் கடிந்துபேசி, கண்டித்து உணர்த்துங்கள். இல்லையேல் அவன் **தன் பார்வைக்கு ஞானி போலிருப்பான்**.

26:6 மூடன் கையில் செய்தியை நீங்கள் அனுப்பினால் அது உங்களுடைய நன்மைக்கு எதிராகச் செயல்படுவதாக அமைந்துவிடும். அது உங்கள் கால்களைத் தறித்துக்கொள்வதற்கு அல்லது நஞ்சைக் குடிப்பதற்கு ஒப்பாகும். அந்த மூடன் செய்தியைச் சரியானபடி தெரிவிக்கமாட்டான். அவன் உங்களுக்கு வருத்தம் ஏற்பட

காரணமாவான். **கால்களைத் தறிப்பது** என்ப தன் பொருள் உதவியற்ற நிலைக்குத் தள்ளப் படுவதைக் குறிக்கும்.

26:7 நொண்டியின் கால்கள் குந்திக் குந்தி நடக்கும், அதனால் பயனில்லை. அதுபோலவே **மூடரின் வாயில் பழமொழி** செயல்படும். அதை எப்பொழுது, எங்கு, எப்படி பயன்படுத்துவது என்பதை அவர்கள் அறியமாட்டார்கள்.

26:8 கவணில் கல்லைக் கட்டக்கூடாது, அதை எய்வதற்கு ஏற்றாற்போல கட்டப்படாமல் அது இருக்க வேண்டும். அதுபோலவே **மூடனுக்குக் கனத்தைக் கொடுப்பது** மதியீனமானது.

கவணிலிருந்து கல் வேமாகப் புறப்பட்டுச் செல்வதுபோல, மூடன் தனக்குக் கொடுக்கப்பட்ட எந்தக் கனத்துக்கும் தகுதியற்றவன் என்பதை வெகு விரைவாக வெளிப்படுத்துவான் என்றும் இதற்குப் பொருள் கூறலாம்.

26:9 குடிகாரன் முட்களை எடுத்துச் செல் வானாயின், அவனுக்கும் பிறருக்கும் வேதனை யையும் ஆபத்தையும் உண்டாக்குவான். அது போலவே மூடரின் வாயில் பழமொழியானது தவ றாகப் பயன்படுத்தப்பட்டு, செய்தி மாறிவிடும். தனது மதியீனத்தைச் சரியென்று மெய்ப்பிக் கவும், பிறரைக் குறித்துத் தவறாக முடிவு செய் யவும் அவன் அதை பயன்படுத்தக் கூடும்.

26:10 இவ்வசனம் எபிரெய மொழியில் மிக வும் தெளிவற்றதாக இருக்கிறது. பல்வேறு மொழி பெயர்ப்புகளின் வாயிலாக அதை அறியலாம்:

> "முதலாளி ஒவ்வொருவனையும் முரட்டுத்தன மாக வேலைவாங்குகிறான்; அவன் மூடனை யும் வேலைக்கு அமர்த்துகிறான், வழிப்போக் கனையும் வேலைக்கு அமர்த்துகிறான்" (JND).
>
> "மூடனையோ குடிகாரனையோ கூலிக்கு அமர்த்துகிறவன், கண்டபடி அம்பு எய்து எல்லோரையும் காயப்படுத்தும் வில்வீரனைப் போலிருக்கிறான்" (RSV).
>
> "சட்டம் முடிவில் சண்டையைத் தீர்க்கும், ஆனாலும் மூடனை அமைதிப்படுத்தவோ நெடுநாள் பகைமையைத் தீர்க்கவோ ஒரு வனாலும் முடியாது" (நாக்ஸ்).
>
> "முதலாளி எல்லா வேலைகளையும் செய் கிறான், ஆனால் மூடனைக் கூலிக்கு அமர்த்து பவன் வழிப்போக்கனைக் கூலிக்கு அமர்த்து பவன் போலிருக்கிறான்" (பெர்க்லே).
>
> "எல்லோரையும் காயப்படுத்துகிற வில்வீரனைப் போலவே, மூடனைக் கூலிக்கு அமர்த்துகிற வனும் அல்லது வழியில் செல்கிற ஒருவனைக் கூலிக்கு அமர்த்துகிறவனும் இருக்கிறான்" (NASB).
>
> "வேலைசெய்கிறவன் வழியிலே செல்கிற ஒரு மூடனைக் கூலிக்கு அமர்த்துவானெனில், சம் பந்தப்பட்ட எல்லோரையும் அது பாதிக்கும்" (TEV).
>
> "எல்லாவற்றையும் உண்டுபண்ணின மகா தேவன் மூடனுக்கும் அக்கிரமக்காரனுக்கும் அவனவனுடைய கூலியைத் தருகிறார்" (NKJV).

இவற்றில் எது சரியான பொருள் என்று கூறுவ தற்கு இயலாது.

26:11 நாயானது தான் கக்கினதைக் கண்டு வெறுப்படைகிறதில்லை, **மூடனும்** தான் செய்த மதியீனமான செயலைக்குறித்து வெறுப்படை கிறதில்லை. இருவருமே அருவருப்பானதும் வெறுக்கத்தக்கதுமான இடத்துக்கு மீண்டும் செல்கிறார்கள். நன்னெறி சார்ந்த விசயங்களில் சீர்திருத்தம் பெற்றவர்கள், ஆனால் உண்மை யாக மறுபடியும் பிறக்காதவர்கள் பற்றிக் கூறு வதற்கு 2 பேதுரு 2:22 -ஆம் வசனம் இந்த நீதி மொழியைப் பயன்படுத்துகிறது. முடிவில் அவர் கள் தங்களுடைய முந்தின வழியை நோக்கியே செல்வார்கள்.

26:12 ஆணவம் மிக்க மனிதன் திருந்தமாட் டான், அவன் அறிவுரைக்கும், கடிந்துரைக்கும் அப்பாற்பட்டவன். அவனைச் சரிசெய்வதற்கு முயற்சி செய்வது நம்பிக்கையற்ற செயல். அறி வில்லாத மூடன் ஒருவேளை அடிப்பதால் திருந்து வான், ஆனால் ஆணவம் கொண்ட மனிதன் அறி வுரையைக் கேட்காதபடி கல்நெஞ்சம் கொண் டவன்.

26:13-16 மறுபடியும் இங்கு **சோம்பேறியும்** அவன் வேலைக்குச் செல்லாதபடி தடைசெய்யக் கூடிய கற்பனைச் **சிங்கமும்** குறிப்பிடப்பட்டுள் ளன என்று காண்கிறோம். அவன் **கதவு கீல் முளையில் ஆடுகிறதுபோல, படுக்கையில் ஆடிக் கொண்டிருக்கிறான்.** அவன் குப்புறப் படுக்கிறான், மல்லாந்து படுக்கிறான். முன்புறமும் பின்புறமும் மாறி மாறிப் படுக்கிறானே தவிர எழு வதற்கு முயற்சி இல்லை. பின்னர் உணவுக்காக மேசையில் அமர்ந்திருக்கும்போது, அவன் தன் **கையைக் கலத்தில் வைக்கிறான்**, ஆனால்

உணவை எடுத்து **வாய்க்குக்** கொண்டு போகச் சக்தியைத் திரட்ட முடியவில்லை. சில வேளைகளில் மகிழ்ச்சியோடு உணவு உண்பதும் கூட அவனைக் களைப்படையச் செய்துவிடுகிறது. சரியான பதிலைக் கொடுக்கக்கூடிய ஏழுபேரைப் பார்க்கிலும் அவன் **தன் பார்வைக்கு அதிக ஞானமுள்ளவன்**. அதாவது, புத்தியுள்ள எழுவர் ஒரே கருத்து கொண்டவர்களாக அவனுடைய தப்பிதத்தை உணர்த்தினாலும் அவன் தனது மனதைச் சிறிதளவு மாற்றவும் விரும்புகிறதில்லை.

26:17 வழிப்போக்கன் தனக்கு சம்பந்தம் இல்லாத விசயத்தில் தலையிட்டு சினமடைகிறான் அல்லது சண்டைபோட்டுத் தனக்கே தொல்லையை ஏற்படுத்துகிறான். இச்செயல் ஒரு **நாயின் காதுகளைப் பிடித்து இழுப்பதைப்** போல இருக்கிறது. அதைத் தொடர்ந்து பிடித்திருக்கவும் முடியாது, விட்டுவிடவும் முடியாது.

26:18,19 தனது அயலானுக்குத் துரோகம் செய்துவிட்டு "நான் விளையாட்டுக்கு அல்லவா செய்தேன்" என்று சொல்லுகிறவன் **கொள்ளிகளையும்** சாவுக்கேதுவான **அம்புகளையும் எறிகிற பைத்தியக்காரன்** போல இருக்கிறான். கொலையைச் சிறு குறும்பு என்று சொல்லுவதாக இது இருக்கிறது. காதல் புரிந்து, திருமண நிச்சயமும் செய்துவிட்டு அந்தப் பொறுப்பைத் தட்டிக் கழிக்கிற செயலுக்கு இந்த நீதிமொழி பொருத்தமாயிருக்கிறது.

26:20,21 எரிபொருள் தீயைப் பெருகச் செய்வது போல, புறம்பேசுதல் பிரச்சினையை உண்டு பண்ணும். பிரச்சினை செய்கிறவன் அதனை மென்மேலும் அதிகமாக்காமலும், புறம்பேசாமலும் பொய் கூறாமலும் இருப்பான் என்றால் அந்தச் சண்டை வெகுவிரைவில் இல்லாமற் போகும்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் அட்லாண்டா நாளேட்டில் வெளிவந்த செய்தி:

> துப்பாக்கி முனையிலிருந்து வெளிவரும் குண்டுகளைக் காட்டிலும் நான் கொடுமையானவன். மற்றவர்களைக் கொல்லாமலேயே வெற்றி பெறுவேன். நான் குடும்பங்களை இடித்துப் போடுவேன், உள்ளங்களை உடைப்பேன், வாழ்க்கையைச் சின்னா பின்னமாக்குவேன். காற்றை இறக்கையாகக் கட்டிக் கொண்டு பறப்பேன். குற்றமற்றவருங்கூட என்னை அச்சுறுத்த முடியாது, எந்தத் தூய்மையும் என்னை நடுங்கச் செய்யும் அளவிற்குத் தூய்மை படைத்ததல்ல. நான் உண்மையை மதிப்பதில்லை, நியாயத்தைக் கனப்படுத்துவதில்லை, தற்காப்பற்றவர்களுக்கு இரக்கம் பாராட்டுவதில்லை. எனக்குப் பலியானவர்கள் கடற்கரை மணலைப்போல மிகுதியாயிருக்கிறார்கள். ஒன்றுமறியாதவர்கள் எனக்கு இலக்காயிருக்கிறார்கள். நான் மறப்பதுமில்லை, மன்னிப்பதுமில்லை, என்னுடைய பெயர்தான் புறங்கூறுதல்![40]

26:22 இங்கு 18:8 -ஆம் வசனம் மறுபடியும் கூறப்பட்டுள்ளது. வீழ்ந்துபோன மனுக்குலம் புறங்கூறுதலைச் சுவையான உணவு போல மீண்டும் மீண்டும் சுவைக்கிறது.

26:23-26 தீய இருதயத்தை இனிய பேச்சால் மறைப்பது, மண் பாத்திரத்தை வெள்ளியால் **மெருகூட்டியது போலிருக்கிறது** (இலகு தமிழ்). மண்பாண்டத்தின் விலைமதிப்பற்ற தன்மையும் மங்கிப்போன நிறமும் வெள்ளிப்பூச்சால் மறைந்து அது பளபளக்கிறது. இதுபோலவே போலியான அன்பு வார்த்தைகளைப் பேசும் உதடுகள் தீமை நிறைந்த இருதயத்தை மறைத்துவிடுகின்றன. காட்டிக்கொடுத்த யூதாசின் போலியான பாசம் இதற்கோர் எடுத்துக்காட்டு.

நீண்டகாலமாகப் பகைமையுள்ளம் கொண்டவன் தனது பகைமையைக் கிருபை நிறைந்த சொற்களைக் கொண்டு மறைக்கப் பார்க்கிறான், அதே நேரத்தில் அவன் **பகையை வஞ்சகமாய் மறைத்துவைக்கிறான்**. அவன் கிருபையோடு பேசினாலும் அவனை நம்ப முடியாது. அவன் தனது **இருதயத்தில் ஏழு அருவருப்புகளை** மறைத்து வைத்திருக்கிறான். அதாவது, அவன் முழுவதும் தீமையும் பகைமையும் கொண்டவன். அவன் பகையை வஞ்சகமாய் இப்பொழுது மறைத்து வைத்திருந்தாலும், இறுதியில் அது எல்லோருக்கும் முன்பாக வெளிப்படும்.

26:27 ஒரு மனிதனுடைய தீவினை அவனையே சுற்றிச் சுற்றி வரும். இது வலிமை மிக்க லூயிஸ் என்பவனுடைய வேலைப்பாடு போல இருக்கிறது. பிரெஞ்சு நாட்டுத் தொடக்க காலப் போர்களின் போது மிகவும் மூர்க்கமான கைதிகளுக்கு விலங்கிட்டு, கட்டிவைக்க சங்கிலிகளைச் செய்யும் வேலை அவனுக்குக் கொடுக்கப்பட்டது. அவன் மிகச்சிறந்த எ.ஃகு இரும்பை அடித்துச் சங்கிலிகளைச் செய்தான். அவை இணையற்ற வகையில் பலம் பெற்றிருந்தன.

பின்னர் லூயிஸ் அரசுக்குத் துரோகம் செய்தான் என்று குற்றஞ்சாட்டப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டான். "இவை யாவும் நான் செய்த சங்கிலிகள். இவை எனக்கென்று செய்யப்படுகின்றன என்று தெரிந்திருந்தால், நான் வேறு விதமாகச் செய்திருப்பேனே" என்று அவன் வேதனையோடு புலம்பினான்.

26:28 பழிதூற்றுபவனையும் முகத்துதி செய்பவனையும் இந்த நீதிமொழி கடிந்துரைக்கிறது. முதலாவது மனிதன் தன்னால் பாதிக்கப்பட்டவனை வெறுக்கிறான். இரண்டாவது மனிதன் தனக்கு எதிரானவர்களை **அழிக்க** முற்படுகிறான்.

27:1 நாளையை தினத்தைக் குறித்து ஒருவருக்கும் நிச்சயம் இல்லை. ஆகவே, நீங்கள் செய்யப்போகிற செயல்களைக் குறித்துப் **பெருமை** பாராட்டாதீர்கள். அது மதிகேடனாகிய செல்வந்தன் செய்த செயலைப் போலிருக்கும் (லூக்கா 12:16-21). மேலும் காண்க யாக்கோபு 4:13-15.

27:2 உங்களையே நீங்கள் **புகழுவது** நயமற்றது, நாகரிகமும் அற்றது. உண்மையாகவே நாகரிகமான மனிதன் பிறரைப் புகழுகிறபோது தன்னை மறைத்துக்கொள்கிறான். "தன் வரலாறு குறித்து எச்சரிக்கையாயிருங்கள்" (பெர்க்லே அடிக்குறிப்பு).

27:3 சரீரப்பிரகாரமான பெருஞ்சுமையைக் காட்டிலும் ஒரு மூடன் கூறுகிற விடாப்பிடியான சினமூட்டுகிற சொற்கள் கடினமானவை. உள்ளத்தைக் குத்தும்படி இடைவிடாமல் வாய் கிழியப் பேசுகிற மூடனுடைய பேச்சை கேட்பதைப் பார்க்கிலும் ஒருவன் **கல்லையோ மணலையோ** சுமந்து செல்வான்.

27:4 உக்கிரமும் கோபமும் கொடூரமானவை, மூழ்கடிக்கக் கூடியவை. ஆனாலும் அவை சிறிது நேரத்திற்கே இருக்கும். ஆனால் **பொறாமை** தொடர்ந்து ஒரு மனிதனை மனவேதனைக்குட்படுத்தும், எனவே அதுதான் மிகவும் கொடூரமானது. ஒருவனுடைய திருமணம் வேறொருவனால் தடைபடுமானால் இவ்வசனம் அதற்குப் பொருந்தும்.

27:5 ஒளிவுமறைவு இல்லாத வெளிப்படையான **கடிந்துகொள்ளுதல்** அவ்வாறு கடிந்து கொள்ளப்பட்டவனுக்குப் பயன் விளைவிக்கும், ஆனால் இரகசியமான **சிநேகம்** ஒருவருக்கும் பயன்விளைவிப்பதில்லை; அதாவது, ஒருவனுடைய தவறைச் சுட்டிக்காட்டாத அல்லது அவ்வித சிநேகம் உண்டென்பதை ஒருக்காலும் அறிக்கை செய்யாத சிநேகம் பயனற்றது.

27:6 உங்களுடைய தப்பிதங்களைக் குறித்துப் பெரும்பாலான மனிதர்கள் நேர்மையாக நடந்துகொள்ள விருப்பப்படுகிறதில்லை. அவர்களுக்கு எதிராக நீங்கள் மாறிவிடுவீர்கள் என்று அவர்கள் அச்சப்படுகிறார்கள். மெய்யான நண்பனே உங்களுடைய ஆதரவு போனாலும் ஒன்றுமில்லை என்று கருதி, பயன் உண்டாக்கவல்ல முறையில் உங்கள் தப்பிதங்களைக் கண்டித்துக் கூறுவான்.

சத்துரு இடும் முத்தங்கள் வஞ்சனையுள்ளவை, அல்லது தங்குதடையின்றி ஏராளமாய்த் தரப்படும் முத்தங்கள் வஞ்சனையுள்ளவை (RSV).

சீடர்களிடமிருந்து இயேசுவை வேறுபடுத்திக் காட்டும்படி, அவரைப்பிடிக்க வந்த கூட்டத்தாருக்கு யூதாஸ் ஒரு சைகையைக் குறிப்பிட்டிருந்தான். அந்தச் சைகை முத்தமே. இவ்வுலகம் முழுவதும் அன்பை வெளிப்படுத்துவதற்காகப் பயன்படுத்தும் சின்னம் மிகக் கேவலமாக விலைபோயிற்று.

அவன் கர்த்தரை நெருங்கி வந்தபோது, "ரபீ வாழ்க!" என்று சொல்லி தடையின்றி இடைவிடாமல் முத்தம் செய்தான் (மத். 26:48,49). 48 -ஆவது வசனத்தில் இடம்பெற்றுள்ள சொல் முத்தம் என்று கூறுவதற்கான இயல்பான சொல். ஆனால் 49 -ஆவது வசனத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள சொல் சற்று அழுத்தமானது. அது மீண்டும் மீண்டும் அல்லது மிகுந்த பாசத்துடன் கொடுக்கப்படும் முத்தத்தைக் குறிக்கும்.

27:7 அதிகமாக உணவு உண்ட மனிதன் மிகச்சிறந்த சுவையுள்ள உணவைப் புகழ்ந்து பாராட்ட இயலாதவனாகி விடுகிறான். **பசியுள்ளவனுக்கோ** மிகவும் குறைவான மீதியான துணிக்கைகளும் நன்றி பாராட்டத்தக்கவை.

பொருளுடைமைக்கும், ஆவிக்குரிய சிலாக்கியங்களுக்கும் இது உண்மையாகும்.

27:8 தன் வீட்டை விட்டு வெளியேறி **அலைந்து திரிகிற மனிதன்** மனநிறைவும் அமைதியும் இல்லாமல் இருக்கிறான். சுற்றித் திரிவதில் அடக்கவியலா ஆவல் அவனுக்கு இருக்கிறது. அவன் தனது **கூட்டைவிட்டு** வெளியில் சென்று **அலைகிற குருவிக்கு ஒப்பாக இருக்கிறான்**. அவன் தனது பொறுப்புகளையெல்லாம் உதறித் தள்ளிவிட்டு, எதையும் முறையாகவும் குறிப்

பிடத்தக்க அளவும் செய்யாமல் தோல்வியுற்ற வனாகவே இருக்கிறான்.

27:9 ஒரு நண்பனிடத்திலிருந்து வருகிற அன்பான ஆலோசனையின் நறுமணம் **பரிமளத் தைலம்** மற்றும் **சுகந்த தூபம்** ஆகியவற்றின் இனிய வாசனையோடு ஒப்பிடத்தக்கதாக விளங்குகிறது. நண்பனோடு கொண்ட தோழமை உண்மையாகவே இதயத்தை மனமகிழ்ச்சி அடையச் செய்கிறது.

27:10 நட்பு பராமரிக்கப்பட்டு உயிரூட்டம் உடையதாகக் காக்கப்பட வேண்டும். பெரும்பாலான நேரங்களில் நீண்ட நாள் நண்பர்களே மிகச் சிறந்த வர்களாக விளங்குகிறார்கள். ஆகவே நீங்கள் உங்களுடைய நண்பர்களோடு அல்லது பழைய குடும்ப நண்பர்களோடு உள்ள தொடர்பை விட்டு விடாதீர்கள்.

"உன் சகோதரனுடைய வீட்டுக்குப் போகாதே" - உங்களைவிட்டுத் தூரத்தில் இருக்கிற அதாவது புண்பட்ட ஒருவனுடைய வீட்டையே இது குறிக்கிறது என்பதில் ஐயமில்லை. பிரச்சினைகள் ஏற்படுகிறபோது, உங்களோடு பிணக்கம் உண்டாகிப் பிரிந்துபோன நெருங்கிய உறவினன் அல்ல, உண்மையுள்ள அயல்வீட்டுக் காரனே உங்களுக்கு அதிகமான உதவிகளைச் செய்து இரக்கம் காட்டுவான்.

27:11 ஒரு மகனின் நடத்தை அவனுடைய தகப்பனுடைய அறிவுரைகளைப் பிரதிபலிக்கிறது. ஒரு மாணாக்கன் தனது ஆசிரியனுக்கு மகிழ்ச்சியை அல்லது வெட்கத்தை ஏற்படுத்துகிறான் பெர்க்லே மொழிபெயர்ப்பின் அடிக்குறிப்பு இதனை நன்றாய்க் கூறுகிறது:

> "ஆசிரியருக்கான மேன்மை – அவருடைய மாணாக்கர் பெறும் வெற்றி."

27:12 நோவா **விவேகமுள்ள மனிதன்**. அவன் தன் குடும்பத்தோடு பேழையில் மறைந்து கொண்டான். மற்ற மனிதர்கள் யாவரும் கவனமின்றி, தங்கள் மனம்போன போக்கிலே சென்று, அதனால் அழிந்து போனார்கள் (22:3 -இன் விளக்கத்தைக் காண்க).

27:13 தற்காலப் பழமொழி முதல் வாக்கியத்தை இவ்வாறு கூறும், "**அந்நியனுக்காகப் பிணைபடுகிறவன்**, தனது ஆடையை இழந்து போவான்".

இரண்டாவது வரி "ஒழுக்கங் கெட்டவளுக்காக அவன் பிணைபடுவான் என்றால் பிணையப் பொருளை வாங்கக்கடவன் (NKJV). தகுதியற்ற அந்நியர்களுக்கு யாரேனும் பிணைப்படுவானேயாகில் அவனுடைய சொத்தின்மீது சட்டப்படி உரிமைகோருவதற்கு ஏற்ப முன்னேற்பாடு செய்ய வேண்டும் என்பதே இதன் பொருள். ஒரு வேளை கடன் பெற்றவன் பணத்தைத் திரும்பச் செலுத்தவில்லையென்றால் பிணையாளி அதைச் செலுத்த வேண்டும்.

27:14 அதிகாலையில் உறங்குவதற்கு முயற்சி செய்யும் ஒருவனை எழுப்பி முகத்துதி செய்து உரத்த குரலில் வாழ்த்துகிறவனை, அவன் பாராட்டமாட்டான். அப்படிப்பட்டவர்கள் ஆசீர்வாதமாக அல்ல, தொல்லை தருகிறவர்களாகவே இருக்கிறார்கள்.

27:15,16 அடைமழை நாளில் ஓயாமல் சொட்டு சொட்டு சொட்டு என்று நீர் மேற் கூரையிலிருந்து ஒழுகிக்கொண்டிருப்பதும், எந்நேரமும் திட்டிக் கொண்டும் நச்சரித்துக்கொண்டும் இருக்கிற மனைவியின் செயலும் ஒன்றுபோல உள்ளன. இரண்டுமே ஒரு மனிதனை "ஆபத்தான நிலைக்குக் கொண்டுபோகப் போதுமானவை!"

அவளை அடக்கப்பார்க்கிறவன் காற்றை அடக்கித் தன் வலது கையினால் எண்ணெயைப் பிடிக்கப் பார்க்கிறான். நீங்கள் என்ன சொன்னாலும் அவள் மழுப்பி சாக்குப் போக்குச் சொல்லி, மற்றவர்களையே குறைகூறுவாள், மேலும் தொடர்ந்து தொல்லைகொடுத்துக் கொண்டே இருப்பாள்.

27:17 சமையல் மேசையில் அமர்ந்திருக்கும் விருந்து உபசரிப்பவர் இறைச்சியை வெட்டும் கத்தியின் இரு பக்கங்களையும் கடினமான இரும்பின் மேடான பகுதியில் தீட்டுவதை நாம் அவ்வப்போது காணமுடியும். ஓர் **இரும்பு** மற்றோர் **இரும்பைக் கூர்மையாக்குவது** போல, மனிதர்கள் ஒருவருக்கொருவர் கருத்துகளைப் பரிமாறிக்கொள்வதன் மூலம் தங்களுடைய சிந்தனை ஆற்றலை மதிநுட்பம் வாய்ந்ததாக மாற்றுகிறார்கள். ஒருவருக்கொருவர் கருத்துகளைப் பகிர்வது பரந்த பார்வையை உருவாக்கும். கேள்விகள் கேட்பது பகுத்தறிவைக் கூர்மையாக்கும். நட்புடன்கூடிய அளவளாவுதல் ஆளுமையைத் தீட்டும்.

27:18 அத்திமரத்தை நன்கு பராமரிக்கிறவன் நல்ல விளைச்சலைப் பெறுவான். ஒருவன் தன் வேலையில் கவனத்தோடு செயல்படுவானெனில், அவனுடைய அடுக்களையில் அல்லது

அவனுடைய குளிர்சாதனப் பெட்டியில் உணவு குறைவுபடாது.

தன் முதலாளிக்கு உண்மையோடு உழைக்கிறவன் **கனப்படுத்தப்படுவான்**. "எனக்கு ஒருவன் ஊழியம் செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்" என்று இயேசு கூறினார் (யோவான்12:26).

27:19 நீங்கள் தெளிவான தடாகத்தில் பார்த்தால், உங்களுடைய **முகம் தண்ணீரில்** பிரபதிலிக்கும். மேலும் அதுபோல, பிறரைக் குறித்து நீங்கள் ஆராய்ந்து பார்த்தால், உங்களைக் குறித்து அதிகமாக அறிவீர்கள் - அதே உணர்ச்சிகள், சோதனைகள், நோக்கங்கள், எண்ணங்கள், வலிமைகள், பலவீனங்கள்.

ஆகவேதான், ஒருவன் தனக்கே பிரசங்கம் செய்கையில், மற்றவர்கள் எத்தனை பேரைத் தாக்குகிறான் என்பதை அறிந்து வியப்படைகிறான்.

27:20 பாதாளமும் அழிவும் (எபி. Sheol, Abaddon), மரணமும் கல்லறையும் இனிமேல் யாரையும் தாக்கா என்னும் உச்சநிலையை ஒருபோதும் அடையா. அதுபோலவே இவ்வுலகம் தரக்கூடிய எதனாலும் **மனிதனுடைய கண்கள் திருப்தி அடைவதில்லை**. திருவாளர் ஆர்தர் G. கிஸ்ச் எடுத்துக்காட்டுடன் விளக்குகிறார்:

> மேலும் மேலும் நிலம் வேண்டும் என்று ஆசைகொண்ட ஒரு நிலக்கிழாரைக் குறித்து டால்ஸ்டாய் கூறுகிறார். இறுதியில் பஸ்கிர் இனத்தாரிடம் குறைந்த விலையில் நிலம் இருப்பதாக அவர் கேள்விப்பட்டார். அவர் தனக்கு உரிய எல்லாவற்றையும் விற்று அவர்களுடைய பகுதியை நோக்கி நெடும் பயணம் செய்தார். அவர்களோடு பேரம்பேசி, ஆயிரம் ரஷ்ய நாணயங்களைக் கொண்டு தன்னால் ஒரு நாளில் எவ்வளவு நிலத்தைச் சுற்றிவர முடியுமோ அவ்வளவு நிலத்தை வாங்க முடிவு செய்தார். அடுத்த நாள் காலையில் அவர் தனது நடையைத் தொடங்கினார். ஒரு திசையில் வெகு தூரம் சென்றார், பின்னர் இடதுபுறம் திரும்பினார். வளமான நிலத்தைக் கண்ட அவர் அதையெல்லாம் பெற வேண்டும் என்னும் எண்ணத்தில் அதிக தூரம் வளைந்து சென்றார். அவர் கடைசி திருப்பத்தை அடைந்தபோது, வெகுதொலைவு சென்று விட்டதை உணர்ந்தார். சூரியன் மறைவதற்கு முன் தான் நடக்கத் தொடங்கின இடத்தை அடைய வேண்டும் என்று எண்ணியவர் ஓடத் தொடங்கினார். ஓட்டத்தின் வேகம் அதிகரித்துக்கொண்டே இருந்தது, இறுதியில் அவரால் ஓடமுடியவில்லை, தள்ளாடத் தொடங்கினார், சரியாகச் சூரியன் மறையும் நேரத்தில், நடையைத் தொடங்கின இடத்தைத் தொடும்படி தலைகுப்புற விழுந்தார். விழுந்தவர் எழவில்லை, மரணமடைந்தார். அவரை ஒருசிறு குழியில் அடக்கம் செய்தார்கள், அதுவே அவருக்குத் தேவையான நிலம்.[41]

ஒரு மனிதனுடைய பேரவா கிறிஸ்துவில் முழுமையாக மனநிறைவு அடைவது நற்பேறு என்றே கூறவேண்டும்:

> மன்னவர் கிறிஸ்து உயிர்தரும் ஊற்று
> அன்பின் ஆழத்தில் பிறந்தநல் சுவைநீர்
> உலகினில் பாய்ந்த ஓடையில் பருகிநான்
> கலங்கிடா நீரால் தாகத்தைத் தணித்தேன்!
> மாதிரள் நிறைவை அவ்விடம் பெற்றேன்
> தீதிலா கிருபை படர்ந்தது என்மேல்
> புகழ்ச்சியும் மகிமையும் என்றென்றும் தங்கும்
> அகத்தின் நிறைவுடன் அவருடன் இருப்பேன்!
> – ஆனி ரோஸ் கசின்

27:21 உலோகத்தைத் தூய்மைப்படுத்தும் மட்கலம் அல்லது உலைக்களம் **வெள்ளியைச்** சோதிக்கும், சூளை **பொன்னைப்** புடமிடும். அது போல ஒரு மனிதன் "அவனுடைய புகழ்ச்சியால் சோதிக்கப்படுவான்." ஒருவன் புகழப்படும்போது எவ்வாறு பதிற்செயல்புரிகிறான் என்பதன் மூலம் அவன் சோதிக்கப்படுகிறான். இதுவே இதன் பொருள் என்று தோன்றுகிறது. அது அவனுடைய தலைக்கேறி அவனை அழித்துப் போடுகிறதா அல்லது அவன் அதனை அமைதியோடும் தாழ்மையோடும் எதிர்கொள்கிறானா?

அல்லது ஒருவன் எவற்றைப் புகழுகிறான் என்பதே அவனுக்கான சோதனை என்றும் இதற்குப் பொருள் கூறலாம் (ASV அடிக்குறிப்பு). அவனுடைய அளவுகோல்கள் அல்லது மதிப்பிடும் தன்மை, இவை அவனுடைய நடத்தையின் பிரதிபலிப்புகளாகும்.

"ஒருவன் தனக்குச் செலுத்தப்படும் புகழ்ச்சியைக் கேட்கும்போது, முகத்துதி, கயமை ஆகியவை அதில் கலந்திருக்கின்றனவா என்று கண்டறிந்து அவற்றைக் களைந்து தூய்மைப்படுத்துவானாக" என்று திருவாளர் பார்னஸ் குறிப்பிட்டிருப்பது போலவும் பொருள்கொள்ளலாம்.

27:22 உரலையும் உலக்கையையும் நீங்கள் பார்த்திருப்பீர்கள், உரல் கிண்ண வடிவுடையது; **உலக்கை** நீண்ட தடி, அதனுடைய கீழ்ப் பகுதி உருண்டையான வடிவமுடையது. தானியத்தை இடித்துப் பொடியாக்குவதற்கு அது பயன்படுகிறது.

ஒரு **மூடனை** கோதுமையோடு சேர்த்து **உரலில்** இட்டு **உலக்கையால்** இடித்தாலும் அவனிடத்திலிருந்து **மூடத்தனத்தைப்** பிரித்தெடுக்க முடியாது. உங்களால் கோதுமை மணியை உமியிலிருந்து பிரித்தெடுக்க முடியும், ஆனால் மதியீனம் மூடனிடத்திலிருந்து பிரித்தெடுக்க முடியாத அவனுடைய உறுப்பாக உள்ளது.

27:23-27 பயிர்த்தொழிலின் பண்புகளை இந்தப் பத்தி புகழ்ந்து பாராட்டுகிறது. ஆனாலும் உழவனுடைய கடுமையான உழைப்பின் முக்கியத்துவத்தை இது அதிகமாக வலியுறுத்திக் கூறுகிறது.

ஆடுகளையும் மந்தைகளையும் கண்ணும் கருத்துமாகக் களைப்படையாமல் இடைவிடாமல் பராமரிக்க வேண்டும். தொடர்ந்து கண்காணிப்பதன் வாயிலாகவே மேய்க்கும் தொழிலின் வளத்தைச் சீர்பொருந்திய நிலையில் தொடரச் செய்ய முடியும். ஓர் உள்ளூர் சபையில் ஆடுகளைப் பராமரிப்பதிலும் இவ்வகையான அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது.

ஒருவன் தன்னுடைய தொழிலில் இடைவிடாமல் கடும் முயற்சி செய்யாவிடில், ஈட்டிய செல்வமும் தொடர்ச்சியான வருமானமும் நிலைத்திரா, விரைவில் மறைந்து போகும்.

ஓர் உழவன் தான் பயிரிட்டவை முளைத்துப் பயிராகி வளருவதைக் கண்டு பெருமகிழ்ச்சி அடைகிறான். மலைப்பாங்கான இடத்தில் அவன் முற்றிய பயிரை அறுவடை செய்கிறபோது அவன் அடைகிற மனநிறைவு மிகப்பெரியது. **ஆட்டுக்குட்டிகள்** உடைநெய்வதற்கான ரோமத்தைத் தரும், ஆட்டுக்**கடாக்களை** விற்று அவன் மேலும் வயல்களை வாங்குகிறான். அவனுடைய குடும்பத்துக்கும் வேலைக்காரருக்கும் நிறைவான உணவு கிடைக்கிறது.

28:1 குற்றமுள்ள மனது சிறிய ஒலியைக் கேட்கும்போது கூட ஒருவனைக் குதித்தெழச் செய்கிறது. தூய்மையான மனச்சாட்சியுள்ளவன் தன் பின்னே யார் வருகிறார்கள் என்று கண்ணாடியில் பார்த்துக்கொண்டே வண்டியை ஓடமாட்டான். **நீதிமான்கள் சிங்கத்தைப்போல தைரியமாயிருக்கிறார்கள்.**

28:2 ஒரு **தேசத்தில்** எல்லாத் திக்குகளிலும் பாவம் பரவியிருக்குமானால், அதன் அரசாங்கம் அடிக்கடி மாற்றம் பெறும். ஆளுநன் நேர்மையும் தெளிவும் உடையவனாக இருந்தால் அந்த நாடு நிலைபெற்று உறுதியோடு மகிழ்ந்திருக்கும்.

இஸ்ரவேல் என்னும் வடநாடு 200 ஆண்டுகளில் 19 அரசர்களைப் பெற்றிருந்தது. அதாவது ஒவ்வொரு அரசனும் சராசரியாக 10 ஆண்டுகள் ஆட்சிபுரிந்தான்.

28:3 செல்வத்தையும் அதிகாரத்தையும் பெற்று உயர்நிலையை அடைகிற **ஏழை** பெரும்பாலும், மிகுதியான வருமானத்தை உடைய குடும்பத்திலிருந்து பதவியைப் பெறுகிற மனிதனைக் காட்டிலும் அதிகமாக **ஏழைகளை ஒடுக்குகிறான்**. பெரு**வெள்ளம்** ஓடிவந்து தானியம் ஓங்கி வளர்ந்த வயலை மட்டமாக்கி விடுகிறது, அது பயிர் வளர்வதற்குப் பயன்படாமல் அழித்துவிடுகிறது, அதுபோலவே அந்த மனிதனும் இருக்கிறான்.

28:4 தேவனுடைய **பிரமாணமும்**, அரசாங்கத்தின் சட்டமும் போடும் தடைகளைத் தூக்கி எறிகிற மக்கள் **துன்மார்க்கரைப் புகழுகிறார்கள்**. இது பெரும்பாலும் தங்களை நியாயப்படுத்துவதற்கான செயலே ஆகும்.

பிரமாணத்தைக் கைக்கொள்கிறவர்கள் அக்கிரமம் செய்கிறவர்களை எதிர்த்து நீதிக்கு ஆதரவாகக் குரல் எழுப்புகிறார்கள்.

28:5 தீய மனிதர்கள் நீதியை அறிவதில்லை. அதைக் கைக்கொள்ள மறுப்பவர்கள், அதைப் புரிந்துகொள்வதற்கான ஆற்றல் அற்றவர்களாக இருக்கிறார்கள்.

கர்த்தருடைய சித்தத்தைத் **தேடுகிறவர்களுக்குச்** சரியாகப் பகுத்தறிவதற்கான ஆற்றல் கொடுக்கப்படும். ஒழுக்கத்திற்கும் அறிதலுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது (சங். 119:100 -ஐக் காணவும்).

28:6 தூய்மையும் நேர்மையும் உடைய வாழ்க்கை வாழ்கிற ஏழை, தன்னுடைய வழியில் நெறிதவறி வாழ்கிற செல்வந்தனைக் காட்டிலும் சிறந்தவன் ஆவான். அந்தச் செல்வந்தன் நல்ல முறையில் வாழ்வதாகக் காட்டிக்கொண்டாலும், உண்மையில் அவன் வஞ்சத்தையும் துரோகத்தையும் எல்லா நேரங்களிலும் பின்பற்றி வாழ்கிறான்.

28:7 சட்டத்துக்குக் கட்டுப்பட்டு வாழ்கிறவன் **விவேகமுள்ள புத்திரனாக** இருக்கிறான்.

உணவுப் பிரியர்களோடும் குடிகாரர்களோடும் தோழமை கொண்டிருக்கும் **மகன்** தனது **தகப்பனுக்கு** அவமானத்தைக் கொண்டுவருகிறான்.

28:8 மோசேயின் பிரமாணத்தின்படி ஓர் எபிரெயன் மற்றோர் எபிரெயனிடத்தில் வட்டி வாங்கக் கூடாது என்று தடைவிதிக்கப்பட்டுள்ளது. அவன் புறவினத்தானிடம் வட்டி வாங்கலாம், ஆனால் யூதனிடம் வாங்கக் கூடாது (உபா. 23:19, 20). இன்றைக்கு அச்சொல் அநியாய வட்டியைக் குறிக்கிறது.

அநியாய வட்டி வாங்கி அல்லது வேறொரு தவறான முறையில் வருமானத்தைப் பெருக்கிச் செல்வந்தர் ஆகிறவர்கள் விரைவில் தங்கள் சொத்தை இழந்து போவார்கள். அந்தச் செல்வம் அவனிடத்திலிருந்து பிடுங்கப்பட்டு அதைச் சிறந்த முறையில் பயன்படுத்தத் தெரிந்தவர்களுக்கும், ஏழைகளிடம் இரக்கம் பாராட்டுகிறவர்களுக்கும் கொடுக்கப்படும்.

28:9 தேவனுடைய பிரமாணத்தை ஒருவன் கேட்டு, கீழ்ப்படியவில்லை என்றால் அவனுடைய ஜெபத்தை தேவன் கேட்கமாட்டார். உண்மையில் அவனுடைய ஜெபம் அவருக்கு அவருவருப்பானது.

கற்களைச் சாமியென்று எண்ணியவராய்
மண்டியிட்டு மன்றாடும் செயலும்,
வெற்றுச் சொற்களால் இறைவனிடம்
வேண்டிடும் செயலும் ஒன்றே!

– ஜான் பர்டன்

28:10 உத்தமர்களைப் பாவத்தில் விழும்படி சோதனை செய்கிறவன் எவனும் தண்டனை என்னும் **குழிக்குள்ளாக விழுவான்**. "என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ, அவனுடைய கழுத்தில் ஏந்திரக் கல்லைக் கட்டி, சமுத்திரத்தின் ஆழத்திலே அவனை அமிழ்த்துகிறது அவனுக்கு நலமாயிருக்கும்" என்று இயேசு எச்சரித்தார் (மத். 18:6).

ஆனால் **உத்தமர்கள் நன்மையைச் சுதந்தரிப்பார்கள்**. இங்கு **உத்தமர்கள்** என்று குறிப்பிடப்பட்டிருப்பவர்கள் பிறரை பாவவழியில் அல்ல பரிசுத்த பாதையில் வழிநடத்துபவர்கள் ஆவார்கள். அல்லது பாவத்தைச் செய்யும்படி தூண்டி விடப்பட்டும் அதை நிராகரிப்பவர்களை அது குறிக்கக்கூடும்.

28:11 தனது செல்வத்தில் மேன்மை பாராட்டுகிற செல்வந்தன் தன்னையே ஞானவான் என்று நினைக்கிறான். பொருளாதார நிபுணனனாக அரிய முறையில் செயல்படும் அந்த மனிதன் பெருமைப்படுகிறான், அவன் தனது சொந்த ஞானத்தில் இறுமாப்புக் கொண்டிருக்கிறான். அவன் செல்வத்துக்கும் ஞானத்துக்கும் உள்ள வேறுபாட்டை அறிவதில்லை.

புத்தியுள்ள ஏழை அத்தகைய போலிப்பகட்டுகளை ஊடுருவிப் பார்க்கும் திறன் பெற்றிருக்கிறான். சார்ல்ஸ் லேம்ப் என்பார் ஒருமுறை இத்தகைய இறுமாப்பு நிறைந்த மனிதர்களில் ஒருவரைச் சந்தித்துக் கூறியதாவது, "தயவுசெய்து பொறுத்தருளும் ஐயா, நீங்கள் எந்த விதத்தில் முக்கியமானவர்?"

28:12 நீதிமான் அதிகாரத்தைப் பெறும்போது, மிகப்பெரிய கொண்டாட்டம் உண்டாகும். **துன்மார்க்கர்** வெற்றிபெறும்போது **மனிதர்** அச்சத்தால் **தங்களை மறைத்துக்கொள்வார்கள்**.

28:13 இரண்டு வகையான மன்னிப்பு உள்ளன. ஒன்று சட்டப்படியானது, மற்றொன்று பெற்றோர் தரும் மன்னிப்பு. நாம் கிறிஸ்துவைக் கர்த்தரும் இரட்சகருமாக விசுவாசித்தபோது நாம் பாவங்களுக்கான தண்டனையிலிருந்து மன்னிக்கப்பட்டோம். அதுவே சட்டப்படியான மன்னிப்பு. விசுவாசிகள் என்ற நிலையில் நாம், நம்முடைய பாவங்களை அறிக்கை செய்கிறபோது பெற்றோர்களின் அன்பின் காரணமாக அருளப்படும் மன்னிப்பைப் பெறுகிறோம் (1 யோவான் 1:9); இது நமது பிதாவாகிய தேவனோடு ஐக்கியத்தைத் தொடர்ந்து பெற்றிருக்கச் செய்யும்.

தன்னுடைய பாவங்களை மறைக்கிறவனுக்கு ஆசிர்வாதம் கிடைக்காது, அதாவது, அவற்றை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்து தேவனிடம் அறிக்கை செய்ய மறுக்கிறவன், அல்லது எவருக்கு விரோதமாகப் பாவம் செய்தானோ அவரிடம் அறிக்கை செய்ய மறுக்கிறவன் நன்மையைப் பெறமாட்டான். ஆனால் தன் **பாவங்களை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனை** தேவன் மன்னிக்கிறார் என்பதன் உறுதியை மட்டுமின்றி மறக்கவும் செய்கிறார் என்னும் உறுதியையும் பெறுகிறான் (எபி. 10:17).

28:14 கர்த்தருடைய முன்னிலையில் மென்மையான இருதயத்தைப் பெற்றிருப்பது மெய்யான மகிழ்ச்சிக்கான ஒரு காரணமாகும். ஆனால் தன் இருதயத்தைக் கடினப்படுத்தி மனந்திரும்ப மறுக்கிறவன் தொல்லைக்குள் சிக்கிக்கொள்

வான். இறுமாப்பும் ஆணவமும் கொண்ட மனி தனை தேவன் எதிர்க்கிறார். ஆனால் நொறுங் குண்டதும் நருங்குண்டதுமான இருதயமுள்ள வனை அவரால் எதிர்க்க முடியாது.

28:15 ஏழைகளும் பலவீனர்களுமாகிய பாது காப்பும் இல்லாத மக்கள் கூட்டத்தின் மேல் வன் முறையை அவிழ்த்து விடுகிற கொடுங்கோலன் மிருகத்தனமானவன், மனிதத்தன்மையற்றவன். அவன் **கெர்ச்சிக்கிற சிங்கம் போலவும் அலைந்து திரிகிற கரடிபோலவும்** இருக்கிறான்.

28:16 இங்கு விவரிக்கப்பட்டிருக்கிற பிரபு, எவ் விதமேனும் தான் பெருங்செல்வந்தனாக வேண்டுமென்று விரும்புகிறவன் என்னும் பொரு ளில் **புத்தியீனனாக** இருக்கிறவன். மேலும் இவன் செல்வத்தைப் பெருக்கும் பொருட்டு பிறரை மிதித்து **மிகுதியான இடுக்கண்** விளைவிக் கிறான். மாறாக, பொருளாசையை வெறுத்து, தன்னுடைய குடிமக்களுடைய நன்மைக்காகத் தன்னலமில்லாதவனாக வாழ்கிற ஆளுநன் நீண்ட வாழ்வு பெறுவான்.

28:17 இரத்தப்பழியின் காரணமாகப் பாரப் பட்டவன் ஓடிச்சென்று **குழியில் விழுவான்**, அவனை ஒருவனும் **ஆதரிக்க வேண்டாம்.** மனமறிந்து கொலை செய்தவன் நாடோடியாக அலை கிறான், அவன் அழிவை நோக்கி ஓடுகிறான். ஒருவனும் நீதிசெலுத்தப்படுவதைத் தடுக்கவோ குறுக்கிடவோ கூடாது. "மனிதனுடைய இரத் தத்தை எவன் சிந்துகிறானோ, அவனுடைய இரத் தம் மனிதனாலே சிந்தப்படக்கடவது" என்று தேவன் கூறினார் (ஆதி. 9:6).

28:18 இவ்வுலக வாழ்க்கையில் ஏற்படும் சேதத்திலிருந்து பெறும் பாதுகாப்பே இவ்வசனத் தின் முதல்வரியில் சொல்லப்பட்டுள்ளது, அடுத்த வாழ்க்கையில் வரப்போகிற நிரந்தரமான அழி விலிருந்து கிடைக்கும் இரட்சிப்பு சொல்லப்பட வில்லை. நேர்மையாக நடப்பதன் மூலம் பாவத் தின் தண்டனையிலிருந்து நித்திய இரட்சிப்பைப் பெறமுடியாது, மாறாக அதனைக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேல் வைக்கும் நம்பிக்கை யாலேயே பெறமுடியும். **உத்தமமாய் நடக்கிற** எவனும் இவ்வுலக வாழ்க்கையில் ஏற்படும் பல விதமான கண்ணிகளிலிருந்து விடுதலை பெற் றாலும், நித்திய இரட்சிப்பின் கனியே உத்த மனாய் நடக்கும் நடை.

ஒரு விதமான தீய செயலிலிருந்து மற்றொரு தீய செயலை நோக்கிச் செல்லும் மனிதன் ஒரே தாக்குதலில் வீழ்ந்து போவான்.

28:19 நிறைவான உணவு மற்றும் **அதிக வறுமை** ஆகியவற்றிற்கு இடையேயுள்ள வேறு பாடு இங்கு சொல்லப்பட்டுள்ளது. கடினமாக உழைக்கிற உழவன் முந்தினதைப் பெற்றிருக் கிறான். வெறுமையான எவ்வித உற்பத்தியும் இல் லாத வேலையில் ஈடுபடுகிறவன் பிந்தின நிலை யில் இருக்கிறான்.

28:20 நேர்மையானவனும் பெருஞ்செல் வத்தை இச்சிக்காதவனுமானவனே **உண்மை யுள்ள மனிதன்.** அவன் மிகுதியாக ஆசிர்வதிக் கப்படுவான். நேர்மையற்ற முறையில் வெகு விரைவாகச் செல்வந்தனாக வேண்டும் என்று விரும்புகிற மனிதன் தண்டனை அடைவான்.

28:21 ஒரு நீதிபதி பாரபட்சம் காட்டுவது மிக வும் கேவலமான அநீதி ஆகும். ஆனாலும் ஒருவன் **ஒரு துண்டு அப்பத்துக்காக** இவ்வாறு செய் கிறதை அவ்வப்போது காண்கிறோம், அதாவது, மிகவும் அற்பமான ஆதாயத்துக்காக மனிதன் இவ்வாறு செய்கிறான்.

28:22 கஞ்சத்தனமான, கொடுப்பதற்கு விருப்ப மற்ற, பெருந்தன்மையற்ற மனிதன் **செல்வந்த னாகிறதற்கு** விரைந்து செல்கிறான்; ஆனாலும் அவன் விரைவில் **வறுமை தனக்கு வருமென்று** அறிவதில்லை.

28:23 ஒரு நண்பன் உங்களை அன்புடன் **கடிந்துரைக்கும்போது,** அந்த நேரத்தில் அதை ஏற்பது கடினம். அது உங்களுடைய பெருமை யைப் புண்படுத்துகிறது. ஆனால், உங்களுடைய தப்பிதங்களைச் சுட்டிக்காட்டும்படி உங்கள் நண் பன் அக்கறையுள்ளவனாக இருந்தான் என்பதை **முடிவில்** நீங்கள் உணர்ந்து அவனிடம் நன்றி யுள்ளத்தோடு நடப்பீர்கள்.

முகத்துதி கேட்கும்போது இனிமையாகத் தோன்றும், ஆனால் அதில் உண்மை இல்லை என் பதை முடிவில் உணருவீர்கள். அந்த மனிதன் ஆதாயம் பெறும்படியே அப்படிப் பேசினான் என் பது தெரியவரும். பெரும்பாலும் அவன் சந்திக்கிற ஒவ்வொருவனுக்கும் துதிபாராட்டுவான்போலும்.

28:24 தன் பெற்றோரைக் **கொள்ளையிடு கிறவன்,** அந்தப் பொருள் முடிவில் தன்னைத் தான் வந்து சேரும் என்று தன்னையே சமாதானப் படுத்துகிறான். அல்லது அவன் அதனைக் கர்த்த ருக்கென்று ஒப்புவித்துவிடுகிறான் (மாற்கு 7:11). ஆனால் தேவன் ஏமாறுகிறவர் அல்லர்; அவர் அந்த மனிதன் கொள்ளைக்காரன், கொலை காரன் ஆகியோருடைய கூட்டத்தில் ஒருவன் என்றே கணக்கிடுகிறார்.

28:25 பெருமையும் பிறர் பொருள் இச்சிக்கும் தன்மையும் உள்ள மனிதன் **பிரிவினையைத் தூண்டிவிடுகிறான்** (இலகு தமிழ்). செல்வத்தையோ, அதிகாரத்தையோ, முதன்மையான இடத்தையோ நாடிப் பிறர் யாவரையும் புறம்பே தள்ளிவிடுகிற மனிதனாக அவன் இருக்கக் கூடும் (யாக்கோபு 4:1 -ஐக் காண்க). தேவனுக்கு அஞ்சுகிற மனிதனே அமைதியையும் மனநிறைவையும் கண்டடைவதில் வெற்றி பெறுகிறான்.

28:26 தன் வாழ்க்கையை நடத்துவதற்குத் தனது சுய ஞானத்தை **நம்புகிறவன் மூடன்**. அவன் படகின் உட்புறமாக நங்கூரத்தைப் போடுகிறான், ஆகவே அவன் இடையறாமல் விலகிச் செல்வான். வழிகாட்டும்படி கர்த்தரை நோக்கிப் பார்க்கிறவன் **ஞானமாய்ச்** செயல்படுகிறான் (எரே. 9:23,24 -ஆகிய வசனங்களைக் காண்க).

28:27 ஏழைகளிடத்தில் இரக்கம் பாராட்டுகிறவர்களுக்கு தேவன் ஏற்ற நன்மைகளைச் செய்வார். உண்மையான தேவைகளுக்குத் தன் கண்களை வேறு திசையில் திருப்புகிறவன் பல்வேறு இடர்களை அடைவான்.

28:28 துன்மார்க்கன் அதிகாரத்தைப் பெறும்போது பொதுமக்கள் அச்சத்தால் **மறைந்து கொள்வார்கள்**. ஆனால், துன்மார்க்கமான ஆளுநர்கள் தூக்கி எறியப்படும்போது நீதிமான்கள் பெருகுகிறார்கள்.

29:1 மீண்டும் மீண்டும் எச்சரிக்கப்பட்டும் தன்னுடைய பாவத்தில் தொடருகிற மனிதன் மறுபடியும் வாய்ப்பைப் பெறாமல் **சடிதியில் நாசமடைவான்.** பெருவெள்ளத்துக்கு முந்தி வாழ்ந்த மனிதர்கள் நோவாவின் சொற்கேள மறுத்தார்கள். பெருவெள்ளம் வந்து அவர்களை அழித்தது.

நான் அறிந்த ஒரு மனிதன் திரும்பத் திரும்ப நற்செய்தி அழைப்பை மறுத்துரைத்தான். அவனுக்காக ஜெபித்துவந்த கிறிஸ்தவப் பெண்மணியை ஒருநாள் அவன் சந்தித்தான். "நீ கர்த்தரிடமாகத் திரும்புவதற்கு இதுவே சமயம் என்பதை அறியவில்லையா?" என்று அந்த அம்மையார் வினவினார். "அவர் எனக்காக எதையேனும் எப்போதாவது செய்திருக்கிறாரா? என்று அவன் பதிலுரைத்தான். அந்த வாரத்தின் முடிவில் விநோதமான முறையில் அவனுடைய உயிர் அவனை விட்டுப் பறிக்கப்பட்டது. அது நடக்கக் கூடாத விபத்துகளில் ஒன்று - ஆனால் நடந்து விட்டது!

29:2 ஒரு நாட்டின் ஆளுநன் எத்தகைய நடத்தை உடையவனோ அதற்கேற்ப குடிமக்கள் மனவுறுதி பெற்றிருப்பார்கள். **நீதிமான்கள் அதிகாரத்தில் இருக்கும்போது**, அதாவது, எண்ணிக்கையிலும் அதிகாரத்திலும் அவர்கள் பெருகியிருக்கும்போது **மக்கள் மகிழுவார்கள்**. துன்மார்க்கன் ஆளுகிறபோது வருத்தம் பரவியிருக்கும்.

29:3 ஞானத்தில் பிரியம்கொண்டு, கிறிஸ்துவுக்காகத் தன்னை ஒப்புவித்து, பாவத்திலிருந்து பிரிந்து வாழ்கிற மகன் தன் **தகப்பனுக்கு மகிழ்ச்சியைக்** கொண்டுவருகிறான். மாறாக, ஒழுக்கங்கெட்டு வாழ்கிற மகன் தகப்பனின் செல்வத்தை **அழிக்கிறான்**. கெட்டகுமாரன் ஊதாரித்தனமாக வாழ்ந்து தன் தகப்பனின் செல்வத்தை அழித்தான் என்பதை நினைவுகூருங்கள்.

29:4 நியாயமாகத் தீர்ப்பு வழங்கி, ஓர் அரசன் தன் நாட்டை வலிமையான நாடாக உயர்த்துகிறான். நீதியைச் செலுத்தாமல் அதைப் புரட்டுவதற்குக் கைக்கூலி பெறுகிறவன் அரசாங்கத்தின் உறுதியைக் கெடுக்கிறான்.

29:5 முகத்துதி செய்பவன் தன் அயல்வீட்டுக் காரனைக் குறித்த உண்மையான நிலையைக் கூறுவதில்லை, மாறாக உண்மையல்லாதவற்றைச் சொல்லிப் புகழுகிறான்; அதன் காரணமாக அவனுக்குத் தீமை செய்கிறான். மேலும் அவனைப் பெருமை பாராட்டும்படி செய்கிறான், அது அவனை விழத்தள்ளும்.

29:6 தீய மனிதன் தான் செய்த பாவம் என்னும் வலையிலே தானே அவ்வப்போது சிக்கிக்கொள்கிறான். **நீதிமான்** மீறுதல்களின் விளைவுகளைக் குறித்து அச்சமடைய வேண்டியதில்லை, ஆகவே அவன் களிகூருகிறான். **அவன் பாடி மகிழுகிறான்**.

29:7 ஏழைகளின் நியாயத்திற்காக நீதியுள்ள மக்கள் விடாமுயற்சி செய்கிறார்கள். அத்தகைய அக்கறை **துன்மார்க்கருக்கு** இல்லை.

29:8 பரியாசக்காரர் பட்டணத்தில் தீக் கொளுத்திவிடுகிறார்கள். அவர்கள் மக்களுடைய கோபத்தைத் தூண்டிவிட்டு, கிளர்ச்சியை உண்டுபண்ணுகிறார்கள், மேலும் மக்களுக்கிடையே பிரிவினையுண்டாக்கி பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்துகிறார்கள். ஞானமுள்ளவர்கள் கருத்து வேறுபாடுகளை அகற்றி அமைதியை நிலைநாட்டுகிறார்கள்.

29:9 இந்த நீதிமொழி இருபொருள் உடையது எனத் தோன்றுகிறது. அவற்றுள் அதிகமாக ஒப்புக் கொள்ளப்படுகிற பொருள்: **ஞானி ஒரு மூடனுடன்** விவாதிக்கும்போது அந்த மூடன் சினமடை

கிறான், சிரிக்கிறான் (NKJV, RSV, Berkeley). அவனை இணங்கச் செய்வது இயலாதது, அங்கு **அமைதி** ஏற்படுவதில்லை.

மற்றொரு விளக்கம், **ஞானி ஒரு மூடனுடன்** விவாதிக்கும்போது, அந்த ஞானி கடுமையாக அல்லது நகைச்சுவையாக எப்படிப் பேசினாலும் பயனில்லை. அந்த விவாதித்தின் மூலம் எந்தப் பயனும் ஏற்படுவதில்லை.

29:10 இந்த வசனத்திற்கும் இரண்டு விளக் கங்கள் தரப்படுகின்றன. ASV மொழிபெயர்ப்பில் அது முன்மொழியப்படிருக்கிறது: "இரத்த வெறி யர் உத்தமமானவர்களை வெறுக்கிறார்கள்; நேர்மையானவர்களைக் கொல்லும்படி தேடு கிறார்கள்" (இலகு தமிழ்). இரண்டு வரிகளிலும் இரத்த வெறியர் கொடுமையை விளைவிக்கிற தீயவர் ஆவர்.

இரண்டாவது பொருள் NKJV, JND, Berkeley மொழிபெயர்ப்புகளில் காணப்படுகிறது. இரத்தப் பிரியர் உயிரை அழிப்பதாக முதல்வரி சொல் கிறது, இரண்டாவது வரியில் **செம்மையானவர் கள்** உயிரைப் பாதுகாக்க முயற்சி செய்கிறார் கள் என்று கூறப்பட்டுள்ளது.

29:11 மூடன் தன் உள்ளத்தையெல்லாம் வெளிப்படுத்துகிறான்; ஞானியோ அதைப் பின்னுக்கு அடக்கிவைக்கிறான். திருவாளர் ஆடம்ஸ் அறிவுரை வழங்குகிறார்:

> மனதில் என்ன தோன்றுகிறதோ, அதன் விளைவுகளைக் குறித்துச் சிந்திக்காமல், ஒன்று முதல் பத்து எண்ணும்வரை பொறுத் திருக்காமல், அதை உள்ளத்தில் அடக்கி வைக் காமல், அதை அமைதிப்படுத்தாமல், முழுக் கதையையும் கேட்காமல், அப்படியே சொல் வதன் மூலம் அல்லது செய்வதன் மூலம் ஒழுங் கற்ற முறையில் பொங்கியெழும் கோபத்தை வெளிப்படுத்துவது முற்றிலும் தவறானது.[42]

29:12 ஓர் ஆளுநன் தன்னை எல்லோரும் அதிகமாகப் புகழ்ந்து கெஞ்ச வேண்டும், முகத் துதி செய்யவேண்டும், நல்ல செய்திகளைக் கொண்டுவந்து உவகையூட்ட வேண்டும் என்று எண்ணுவானானால், அவனுடைய ஊழியக்காரர் யாவரும் அதே முறையில் அவனை நடத்துவார் கள் அவர்கள் பொய் சொல்லி, முகத்துதி பாடு வார்கள் என்பதே இங்கு கூறப்படும் கருத்து என்று தோன்றுகிறது.

29:13 மனித சமுதாயத்தில் வறியவனுக்கும் ஒடுக்குகிறவனுக்கும் இடையே மிகப்பெரிய இடைவெளி இருக்கக்கூடும். ஆனால் அவர்கள் இருவரும் தேவனுடைய முன்னிலையில் சம நிலையிலேயே வருகிறார்கள். கர்த்தரே அவர் களு டைய கண்களுக்கு ஒளியூட்டுபவர்.

29:14 தேவன் ஆளுநன் ஒருவனை நியாயம் விசாரிக்கும்போது அவன் ஏழைகளிடத்தில் கரி சனையோடு நடந்துகொண்டானா, பாரபட்சம் இல்லாமல் செயல்பட்டானா என்பதை முக்கிய மாகப் பார்க்கிறார். அவ்வாறு செயல்பட்டால் அவனுடைய **சிங்காசனம் என்றும் நிலைபெற்றி ருக்கும்** என்று அவர் உறுதியளிக்கிறார். உண்மை யாக அவ்வாறு செயல்படும் ஒரே அரசரை நாம் அறிவோம், அவர் பெயர் இயேசு.

29:15 இந்த நீதிமொழி நவீன கால நிபுணர் கள் முன்மொழியும் கருத்துக்கு முற்றிலும் எதிர் மாறானதாக இருக்கிறது. பிள்ளைகள் தங்கள் விருப்பம் போல் செயல்பட இசைவுகொடுக்க வேண் டும் என்று அவர்கள் கூறுகிறார்கள். **பிரம்பு** சரீரத்தில் கொடுக்கப்படும் அடியைக் குறிக்கிறது **கடிந்துகொள்ளுதல்** பேச்சின் மூலமாகத் திருத் துதல் ஆகும். இவ்விரண்டு வகையான ஒழுங்கு நடவடிக்கைகளும் பெற்றோரால் எடுக்கப்படுவ தால் பின்னைகள் **ஞானத்தைப்** பெறுகிறார்கள் அவை "நிபுணர்கள்" கூறுவது போல பிள்ளைகளி டம் எதிர்த்தாக்கத்தையோ அவர்களுடைய ஆளுமையில் தவறான விளைவையோ ஏற் படுத்தா.

29:16 துன்மார்க்கர் எண்ணிக்கையிலும் அதிகாரத்திலும் பெருகுகிறபோது குற்றங்களின் விகிதமும் கூடிக்கொண்டேபோகும். ஆனால் **நீதிமான்கள் அவர்களுடைய** வீழ்ச்சிக்குக் கார ணமாக விளங்குவார்கள். இதில் விதிவிலக்கு உண்டென்பதில் ஐயமில்லை. விதிவிலக்குகளே இது பொதுவான உண்மை என்பதை மெய்ப் பிக்கும்.

29:17 ஒழுங்கு நடவடிக்கை முறையாக எடுத்து வளர்க்கப்பட்ட பிள்ளை தனது பெற்றோ ருக்கு **ஆனந்தத்தையும் ஆறுதலையும்** உண் டாக்குவான். அவன் மூலமாக அவர்களுக்குக் கவலையும் தலைவலியும் ஏற்படா.

29:18 இறைவாக்கின் வெளிப்பாடு இல்லாத இடத்தில் மக்கள் கட்டுக்கடங்காதிருப்பார்கள். நீதிச் சட்டத்தைச் கைக்கொள்கிறவர்கள் ஆசிர் வதிக்கப்பட்டவர்கள் (இலகு தமிழ்). இங்கு

வெளிப்பாடு தீர்க்கதரிசன வெளிப்பாட்டை, அதாவது, தேவ வார்த்தையைக் குறிக்கிறது (1 சாமு. 3:1 - ஐக் காண்க). தேவனுடைய வார்த்தை அறியப்படாமலும் மதிக்கப்படாமலும் இருக்கிற போது மக்கள் கட்டுப்பாடற்று திரிவார்கள். சட்டத்துக்குக் கீழ்ப்படிகிறவர்கள், அதாவது, தேவ வார்த்தைக்குக் கீழ்ப்படிகிறவர்கள் மெய்யாக நன்மை அடைவார்கள்.

29:19 இணங்காத, அடக்கவியலாத மனப்பான்மையுள்ள வேலைக்காரரைக் குறித்து இவ்வசனம் பேசுகிறது. வாய்மொழியாகச் சொல்லப்பட்ட கட்டளைகள் போதா. அவர்கள் எஜமானின் கட்டளைகளை அறிந்தாலும், அவற்றைச் செய்கிறதில்லை. அவர்கள் ஒன்றும் செய்யாமல் கடுகடுப்பாகவே இருக்கிறார்கள். "என்னை ஆண்டவரே, ஆண்டவரே! என்று நீங்கள் சொல்லியும், நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற் போகிறதென்ன?" என்று இயேசு கூறினார் (லூக். 6:46).

29:20 நீதிமொழிகளில் விளக்கம் கூறப்பட்டுள்ள எல்லாப் பொருட்களிலும், நமது **வார்த்தைகள்** பெருமளவு கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. சிந்திப்பதற்கு முன் பேசுகிற மனிதன் **மூடனைக்** காட்டிலும் நம்பிக்கைக்கு இடமற்றவனாக இருக்கிறான். தன்னுடைய ஆணவத்தில் ஞானியாக பெருமை பாராட்டுகிறவனும் இந்த மூடனும் ஒரே தரத்தைச் சேர்ந்தவர்கள் (26:12).

29:21 ஓர் அடிமையிடம் அளவுக்கு மீறி இடம் கொடுத்துக் கெடுத்துவிட்டால் அவன் தனது தகுதியை மறந்து போவான், மேலும் அவன் தன்னை மகனைப் போல நடத்த வேண்டும் என்றும் விரைவில் எதிர்பார்ப்பான், தொழிலாளி முதலாளி உறவில் தேவைக்கு அதிகமான உறவு கொண்டாடப்படும்போது அங்கு விரைவில் வெறுப்பு உண்டாகும்.

இரண்டாவது வரியில் "புத்திரன்" என்று பயன்படுத்தப்பட்ட சொல் நிச்சயமற்ற பொருளுடையது.

29:22 ஏதோவொரு சமயத்தில் இவ்விரு மனிதர்களையும் நாம் சந்தித்திருப்போம். **கோபக்காரன்** எல்லாவிதமான பிரச்சினைகளையும் தூண்டிவிடுகிறான். வெறிபிடித்தவன் அல்லது **மூர்க்கன்** பற்பல பாவங்களைச் செய்கிறான்.

29:23 இறுமாப்பு உடைய மனிதன் **தாழ்த்தப்படுவது** நிச்சயம். **மனத்தாழ்மையுள்ள மனிதன்** மரியாதைக்குரிய இடத்துக்கு உயர்த்தப்படுவான்.

முனைவர் ஸ்மித் வெய்ஸ்ஹார்ன் என்னும் சிகரத்தில் ஏறிக்கொண்டிருந்தார். உச்சியை அடையுந் தறுவாயில் வழிகாட்டி சற்று ஓரமாக நின்று மலையேறும் பயணி முதலில் ஏறினார் என்னும் பெருமை பெறவேண்டும் என்று வழி விட்டார். தான் கண்ட காட்சியில் பெருமகிழ் வடைந்த ஸ்மித் சிகரத்தின் உச்சியில் கடுமையாகக் காற்று வீசுவதை மறந்து, தாவிக்குதித்து நேராக நிமிர்ந்து நின்றார். வழிகாட்டி அவரைக் கீழே இழுத்து உரத்த குரலில், "முழங்காலில் நில்லுங்கள், அங்கு நீங்கள் முழங்காலில் நிற்காவிட்டால் பாதுகாப்பு இல்லை" என்று கத்தினார். அறிவு, அன்பு, உலகவெற்றி எது வானாலும் அது குறித்த வாழ்க்கையின் சிகரத்திலும் பேராபத்து நிறைந்திருக்கும் (தெரிந்தெடுத்த சேகரிப்புகள்).

சூழ்ச்சியில் சிக்கிய கால்கள் இடறிட
வீழ்ந்தவென் நெஞ்சம் அச்சத்தால் நொறுங்கிட
மயங்கிய அடியேனைக் கருணைக்கண் கண்டதே
தியங்கியே நின்றவனைக் குருதியால் கழுவினீர்!

பிளவுண்ட மலையே புகலிடம் நீரே,
உளத்தினில் சுமையெலாம் நீங்கிட மகிழ்ந்தேன்
மாற்றமில் புகலிடம் அவரது இருப்பிடம்
தேற்றர வாளர் தருகிறார் உறுதி!

– ஜேம்ஸ் G. டெக்

29:24 திருடனுடைய கூட்டாளி **தன் ஆத்துமாவைப் பகைக்கிறவனைப்** போலச் செயல்படுகிறான். ஏன்? அவன் உண்மையைக் கூறுவதாக ஆணையிட்டாலும், அதாவது அவன் அறிந்த உண்மைகள் அனைத்தையும் ஆணையிட்டுக் கூறும்படி நீதிபதி கேட்டாலும் அவன் ஒன்றையும் **வெளிப்படுத்தமாட்டான்**. இவ்விதமாக அவன் பொய்ச்சாட்சியே கூறுவான். அவனுக்கு எதிரான வாக்குத்தவறிய குற்றமாக அது கருதப்படும். மோசேயின் பிரமாணத்தின்படி, உண்மையைக் கூறும்படி நீதிபதியால் ஆணையிடப்பட்ட ஒருவன் உண்மையைத் தெரிவிக்கவில்லை என்றால், அவன் குற்றவாளியாகக் கருதப்பட்டு தண்டிக்கப்படுவான் (லேவி. 5:1 -ஆம் வசனத்தைக் காண்க). இந்த விசயத்தில் அவன் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள நீதிச்சட்டத்தில் திருத்தம் எதுவுமில்லை.

29:25 மனிதனுக்குப் பயப்படும் பயம் அவர்களுடைய வற்புறுத்தலின் காரணமாகத் தீமையைச் செய்யும்படியான நிலைக்கு, அல்லது

சரியானதைச் செய்யாமல் இருக்கும்படியான நிலைக்கு ஒருவனைக் கொண்டுபோய்விடும். கிறிஸ்துவை நம்பினால் நண்பர்கள் என்ன கூறுவார்களோ என்று பயந்து எத்தனை பேர் நரகத்திற்குச் சென்றிருக்கிறார்கள்?

என்ன நடந்தாலும், கர்த்தரிடத்தில் நம்பிக்கை கொண்டவன் பாதுகாப்புடன் இருக்கிறான். "நாம் தேவனுக்குக் கொஞ்சமாகப் பயப்படுவதால் மனிதருக்கு அதிகமாகப் பயன்படுகிறோம்" என்று எழுதினார் வில்லியம் கர்னல்.

29:26 பெரும்பாலான மனிதர்கள் தங்களுடைய அனைத்துப் பிரச்சினைகளுக்கும் இவ்வுலகத்தின் ஆளுநனே தீர்வு என்று கருதுகிறார்கள். ஆனால் **கர்த்தரிடத்திலிருந்து தான் நியாயம்** வருகிறது.

29:27 நீதிமானுக்கும் அநியாயம் செய்கிறவனுக்கும் இடையில் இணக்கமான உறவு சிறிதளவும் இருக்காது. நீதிமான் தீயவனிடத்தில் வெறுப்பைக் காட்டுகிறான், பொல்லாதவனோ நீதிமானை அருவருக்கிறான். நேரான தடி எவ்விதமாகக் கோணலான தடியை இனம்காட்டுகிறதோ, அதுபோலவே தூய வாழ்க்கைக்கும் தீய வாழ்க்கைக்கும் இடையே உள்ள வேறுபாடு பளிச்சென்று தெரிகிறது.

இந்த வசனத்தோடு சாலொமோனின் நீதிமொழிகள் முடிவடைகின்றன.

6. ஆகூரின் வாக்கியங்கள் [அதி. 30]

30:1 ஆகூரைப் பற்றி நாம் அறிவதெல்லாம் இந்த அதிகாரத்தில் மட்டுமே காணப்படுகின்றன. அவன் தன்னை **யாக்கேயின் மகன்** என்று அறிமுகப்படுத்துகிறான்.

அவன் **உரைத்த உபதேச வாக்கியங்கள்** (NIV - இறைவாக்கு) மாசாவின் வார்த்தைகள் என்றும் மொழிபெயர்க்கப்படக் கூடும் (RSV). ஆகூர் இஸ்மவேலின் வழிவந்தவன் என்பதை இது குறிப்பிடுகிறது (ஆதி. 25:14).

இதன் இரண்டாவது வரியை, "தேவனே, நான் என்னையே களைப்படையச் செய்துவிட்டேன்; தேவனே, நான் என்னையே களைப்படையச் செய்துவிட்டேன்; நான் முழுவதும் வீணாகிப் போனேன்' என்று மனிதன் கூறினான்" என்றும் மொழிபெயர்க்கலாம் (ASV அடிக்குறிப்பு). இது இயல்பாகவே பின்வருபனவற்றை நோக்கி வழி நடத்துகிறது - எல்லை கடந்தவரைப் பற்றி மிகச் சிறியவனால் புரிந்துகொள்ள இயலாது.

30:2 எல்லாவற்றையும் விளங்கிக்கொள்ளக் கூடிய **புத்தியைத்** தன்னால் பெறமுடியவில்லை என்னும் ஒப்புதலோடு **ஆகூர்** தொடங்குகிறான். இது மெய்யான தாழ்மையின் அறிக்கை என்பது தெளிவு- எவனொருவன் தேவனுடைய செயல் பாட்டையும் வழிகளையும் அறிய வேண்டுமென்று விரும்புகிறானோ, அவனுடைய சரியான மனப்பான்மை இவ்வாறுதான் இருக்க வேண்டும்.

30:3 அவன் **ஞானத்தைக் கற்றுவிட்டதாக** வெற்றறிக்கை செய்யவில்லை. அல்லது மனித முயற்சியால் தேவனைத் தேடிக் கண்டுபிடித்து விட்டதாகவும் சொல்லவில்லை. **பரிசுத்தரின் அறிவை** அடைவதற்கான ஆற்றல் தன்னிடத்தில் இல்லை என்பதை அவன் அறிந்திருக்கிறான்.

30:4 அடுத்தடுத்து கேள்விகளைக் கேட்டு, அவன் இயற்கையில் தேவனுடைய மகாமேன்மை வெளிப்படுத்தப்பட்டிருப்பதைத் தெரியப்படுத்துகிறான்.

மனிதன் பின்தொடர்ந்து செல்ல முடியாத, இப்பிரபஞ்சத்தின் உயரங்களிலும் ஆழங்களிலும் அவர் செல்லக்கூடியவர் என்று முதலாவது தேவனைப் பற்றிய விவரம் சொல்லப்பட்டுள்ளது. இரண்டாவது **காற்றின்** அதிவேக ஆற்றலின் மேல் அவர் கொண்டிருக்கும் கட்டுப்பாடு சொல்லப்பட்டுள்ளது. மூன்றாவதாக, **தண்ணீரை** அடக்கியாளும் வலிமையாகும்; அது பூமிக்கு மேலே இருக்கும் மேகக்கூட்டமாக இருக்கலாம், அல்லது பெருங்கடல் ஆழங்களாக இருக்கலாம். அடுத்தது பெருநிலப்பகுதிகளின் எல்லைகளை அவர் நிறுவிய செயலாகும்.

அவரது பெயர் என்ன? அவரது குமாரனின் பெயர் என்ன? "இவ்வளவு பெரிய ஒருவரை யாரால் முழுவதும் அறியமுடியும், புரிந்துகொள்வதற்கு அப்பாற்பட்டவர், அவ்வளவு விநோதமானவர், அவ்வளவு வலிமையுடையவர், அந்த அளவுக்கு எங்கும் இருக்கிறவர்" என்பதே இங்கு கூறப்பட்டிருக்கும் கருத்து. அவருடைய பெயர் கர்த்தர் (யெகோவா), அவருடைய மைந்தரின் பெயர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்பதை நாம் அறிவோம்.

பெரும்பாலான யூத மக்களை இந்தச் சொற்கள் வியப்புக்குள் மூழ்கச் செய்கின்றன. தேவனுக்குக் குமாரன் இருந்ததாக யாருக்குக் கற்றுக் கொடுக்கப்பட்டது. தேவனுக்கு ஒரு குமாரன் இருக்கிறார் என்பதைப் பழைய ஏற்பாட்டு விசுவாசிகள் இந்த வசனத்தின் மூலமாக அறிந்திருக்க முடியும்.

30:5 இயற்கையில் தேவனுடைய வெளிப்பாடு என்னும் பொருளிலிருந்து, வார்த்தையில் தேவனுடைய வெளிப்பாடு என்னும் பொருள் நோக்கி இப்பொழுது ஆகூர் திரும்புகிறான். புனிதத் திருமறையின் தவறற்ற தன்மையை அவன் உறுதி செய்கிறான். **"இறைவனுடைய ஒவ்வொரு வார்த்தையும் குறைபாடற்றது"** (இலகு தமிழ்). தொடர்ந்து, திருமறையின் இறைவனை நம்புகிறவர்கள் யாவரும் பெற்றிருக்கிற பாதுகாப்பைக் குறித்து அவன் பேசுகிறான். "அவரிடத்தில் நம்பிக்கை கொண்ட யாவருக்கும் **அவர் கேடக மானவர்**."

30:6 அடுத்ததாகத் திருமறையின் முற்றிலும் நிறைவான தன்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தேவன் பேசிய சொற்களோடு எவனொருவனும் தனது சிந்தனைகளையோ ஊகங்களையோ சேர்ப்பதற்குத் துணிவு கொள்ளக்கூடாது.

தங்களுடைய சொந்த வார்த்தைகளுக்கும், பாரம்பரியங்களுக்கும் திருமறைக்குக் கொடுக்கக்கூடிய அதே அதிகாரத்தைக் கொடுக்கக்கூடிய கள்ளக் குழுக்களுக்கு இந்த வசனம் பெரும் கண்டனத்தைக் கூறுகிறது.

30:7-9 நீதிமொழிகள் நூலில் இடம்பெற்றுள்ள ஒரே மன்றாட்டை இந்த வசனம் கொண்டிருக்கிறது. இந்த ஜெபம் மிகச்சிறியது, வேண்டுதல் மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இதில் இரண்டு வேண்டுதல்கள் இடம் பெற்றுள்ளன. ஒன்று ஆவிக்குரிய வாழ்க்கையை உள்ளடக்கியது, மற்றொன்று சரீரப்பிரகாரமான வாழ்க்கையை உள்ளடக்கியது.

முதலாவது, தனது வாழ்க்கை பயனுள்ளதும், நேர்மையானதுமாக இருக்க வேண்டுமென்று ஆகூர் விரும்புகிறான். தனது வாழ்க்கை அற்பமான விசயங்களுக்காக வீணாவதை அவன் விரும்பவில்லை. அற்பமானவற்றைப் பெரிதுபடுத்தவும், மற்றவர்களை ஏமாற்றவும், மற்றவர்களால் ஏமாற்றப்படவும் அவன் விரும்பவில்லை.

சரீரத்தோடு தொடர்புடைய வாழ்க்கையில், வறுமையும் செல்வமும் மிதமிஞ்சி தன்னை ஆக்கிரமப்பதிலிருந்து தான் விடுதலை பெற வேண்டுமென்று வேண்டுகிறான். ஒவ்வொரு நாளும் தன்னுடைய தேவை சந்திக்கப்படுமானால் அதுவே போதும் என்னும் மனநிறைவுடன் அவன் இருந்தான். அவன் கூறியதன் பொருள், "எனக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எனக்குத் தாரும்."

மிகுந்த செல்வம் கொடிய வறுமை ஆகிய இரண்டு கடைக்கோடிகளையும் தவிர்க்க அவன் விரும்பியதற்கான காரணங்களை அவன் கூறுகிறான். அவன் பரிபூரணம் பெற்றிருந்தால் கர்த்தரைச் சார்ந்திராமல் அவரைவிட்டு விலகிப் போனவனாகக் காணப்படுவானே. அவரிடத்திலிருந்து எந்தப் பெரிய தேவையும் இல்லை என்னும் எண்ணம் அவனுக்கு உண்டாகும். "கர்த்தர் யார்?" அதாவது, "எனக்கு இது தேவையாக இருக்கிறது அல்லது இதை நான் விரும்புகிறேன், அவரால் மட்டுமே இதை எனக்குத் தரமுடியும் என்று அவரை நோக்கிப்பார்க்க வேண்டிய அவசியம் இல்லை" என்று கூறும்படி துணிவு பெற்றுவிடுவான்.

வறுமையினால் உண்டாகும் ஆபத்து, ஒரு வேளை அவன் திருடவேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகும். அதை மறைப்பதற்கு ஆணையிட்டுத் திருடவில்லை என்று பொய் சொல்லக்கூடிய நிலை ஏற்படும்.

30:10 ஆய்வுப்பொருளில் திடீரென்று ஒரு திருப்பம் உண்டாவதாகத் தோன்றுகிறது. ஒரு **வேலைக்காரனைக்** குறித்து **அவனுடைய எஜமானிடத்தில்** குறைகூறக்கூடாது என்று ஆகூர் எச்சரிக்கிறான். உங்களுக்கு எதிராக அவன் கூறும் உங்களுடைய தண்டனை **சாபமே** ஆகும். ஒடுக்கப்பட்டவர்களின் பாதுகாவலராக தேவன் இருப்பதால் அந்தச் சாபம் உங்கள் மேல் சுமரும் என்பதே இதன் பொருள்.

கர்த்தருடைய ஊழியக்காரரை நியாயந்தீர்ப்பதற்கு எதிராகப் புதிய ஏற்பாடு எச்சரிக்கிறது. அவர்கள் நின்றாலும் விழுந்தாலும் அவர்களுடைய எஜமானருக்கே அவர்கள் பொறுப்பாளிகள் (ரோமர் 14:4).

30:11 இங்கு குறிப்பிடப்பட்டிருக்கிற **சந்ததி** (தலைமுறை) இன்றைய நாட்களில் வாழ்கிற தலைமுறையினரையும், கடைசி நாட்களில் இருக்கும் மனுக்குலத்தையும் பிரதிபலித்துக் காட்டுவதாகவே தோன்றுகிறது (2 தீமோ. 3:1-7). கீழ்க்கண்ட அம்சங்களைக் காண்க:

பெற்றோரை அவமதித்தல். அவர்கள் தங்கள் **தகப்பனைச்** சபிக்கிறார்கள், தங்கள் **தாய்க்கு** நன்றிபாராட்டுவது இல்லை, இவ்விதமாக ஐந்தாவது கற்பனையை மீறுகிறார்கள். இக்காலத்தில் வாழ்கிற இளைஞர்களின் முதன்மையான நடத்தைகளில் ஒன்று பெற்றோரிடம் பகைமை கொண்டிருக்கும் நிலைதான்.

30:12 *சுயநீதி*. இந்த மக்கள் ஒழுக்கக் கேடானவர்களும் தூய்மையற்றவர்களுமாக இருக்கிறார்கள்; ஆனாலும் அவர்களுக்கு வெட்கம் என்னும் உணர்வே இல்லை. வெளியரங்கமாகக் காண்கையில் அவர்கள் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள் போல இருக்கிறார்கள், உள்ளார்ந்த வகையில் அவர்கள் இறந்த மனிதரின் எலும்புகளே ஆவார்கள்.

30:13 *பெருமையும் இறுமாப்பும்*. "இவ்வுலகில் இரண்டு நீதிமான்களே இருக்கிறார்கள் எனில், நானும் என் மகனுமே அவ்விருவர், ஒரே ஒரு நீதிமான் என்றால் அது நான்தான்" என்று சொன்ன ரபீ சிமியோன் பென் ஜோசாய் என்பவரை இவர்கள் ஒத்திருக்கிறார்கள்.

30:14 *கொடூரமாக ஒடுக்குகிறவர்கள்*. செல்வத்தின் மேல் தாங்கள் கொண்டிருக்கும் மன நிறைவு அடையாத பேராசையின் காரணமாக, அவர்கள் ஏழைகளைப் பிளந்து, கிழித்தெறிகிறார்கள்; நீண்ட நேரம் வேலைவாங்கி, குறைந்த சம்பளம் கொடுத்து, எவ்வித வசதியும் இல்லாத இடங்களில் வேலை செய்ய வைத்தும், இன்னும் பல சமுதாயச் சீர்கேடுகளை இழைத்து அவர்களை ஒடுக்குகிறார்கள்.

30:15,16 மேலே உள்ள வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஒடுக்குகிறவர்களின் பேராசை இன்னும் பல விருப்பங்களிடமாக அவர்களை வழிநடத்துகிறது, அவர்கள் ஒருக்காலும் மன நிறைவு பெறுவதில்லை.

1. **அட்டை** அல்லது இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கும் வெளவால் (ASV அடிக்குறிப்பு). அட்டைக்கு இரண்டு பெண்மக்கள் இருக்கிறார்கள், அவர்கள் முடிவே இல்லாமல் இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கிறார்கள், அவை இரண்டின் பெயருமே "**தா**."
2. **பாதாளம்** ஒருபோதும் "இடமில்லை" என்று சொல்வதில்லை. மரணத்துக்கு விடுமுறை இல்லை, கல்லறையும் தன்னால் பலியானவர்களுக்கு இடமில்லை என்று திருப்பி அனுப்புவதில்லை.
3. **மலட்டுக் கர்ப்பம்** ஒருபோதும் கருவுறுதலை ஏற்பதில்லை, ஆனாலும் தொடர்ந்து தாய்மை அடையவேண்டும் என்னும் நம்பிக்கையுடன் இருக்கிறது.
4. எவ்வளவுதான் மழை பெய்தாலும் வறண்ட **நிலம் தண்ணீரால் திருப்தி அடைவதில்லை**. இன்னும் தண்ணீர் வேண்டுமென்று உறிஞ்சிக்கொண்டே இருக்கிறது.
5. **"போதுமென்று" சொல்லாத அக்கினி**. அதற்கு எவ்வளவுதான் ஒருவன் எரிபொருளைக் கொடுத்தாலும் எல்லாவற்றையும் அது பட்சிக்கும்.

"மூன்று உண்டு... நான்குமுண்டு" என்னும் சொற்றொடர் உச்சகட்ட உணர்வை உண்டுபண்ணுவதற்கான இலக்கிய வாய்பாடு. உலகப் பிரகாரமான நிறைவை அல்லது பிரபஞ்சத்தைக் குறிக்கும் எண்ணிக்கை நான்கு என்று திருவாளர் கிராண்ட் சுட்டிக்காட்டியுள்ளார் (பூமியின் நான்கு மூலைகளைப் போல), அல்லது படைப்பாளருக்கும் படைப்புக்கும் உள்ள முரண்பாட்டை இது குறிக்கும்.[43]

30:17 இந்த நீதிமொழி 11 -ஆவது வசனத்திற்கு இணையாக இருந்தாலும் மற்ற நீதிமொழிகளிலிருந்து தனிப்பட்டதாக விளங்குகிறது. **தன் தகப்பனைப் பரியாசம்பண்ணி, தன் தாய்க்குக் கீழ்ப்படியாமல்** வாழ்கிற ஒருவன் வன்முறை மரணத்தை அடைவான் என்றும் அவனுக்கு நல்லடக்கம் மறுக்கப்படும் என்றும் இது கற்பிக்கிறது. யூத மனதிற்கு ஒரு சரீரம் புதைக்கப்படாமல் போவதென்பது மிகப்பெரிய சோகத்துக்கும் அவமானத்துக்கும் உரிய நிகழ்வாகும். தன் மனம்போல் அலைந்து திரிகிற மகனுடைய பிணம் கழுகுகளால் தின்னப்படுவதே முடிவு.

30:18,19 தனக்கு **மிகவும் ஆச்சரியமாகத்** தோன்றின **நான்கு** விசயங்களை ஆகூர் பட்டியலிட்டுக் காட்டுகிறான். அவற்றை நாம் படிக்கிற போது, அவற்றுக்குள்ளாக ஆவிக்குரிய பொருள் மறைந்திருக்கிறது என்னும் ஐயம் எழுகிறது, ஆனால் அந்த மறைபொருள் என்ன, அவற்றை இணைக்கும் பொதுவான அம்சம் என்ன? பெரும்பாலான விரிவுரையாளர்கள் இவற்றில் எவ்வித மறைபொருளும் இல்லை என்று கருதுகிறார்கள். விபசார பெண் தன்னுடைய குற்றத்தை மறைக்க முடியும் என்று 20 -ஆவது வசனம் கூறுவது இக்கருத்தை உறுதிப்படுத்துவதாகத் தோன்றுகிறது. இந்நான்கு விசயங்களில் உள்ள பொதுவான அம்சம், "கையாளுவதற்கு மிகவும் கடினமான பொருட்களாகிய காற்று, கன்மலை, கடல் மற்றும் கன்னிப்பெண் ஆகிய ஊடகங்கள் மூலமாக எளிதாகப் பெறுகிற வெற்றி" என்கிறார் திருவாளர் கிட்னர்.[44]

1. **ஆகாயத்தில் (காற்றில்) கழுகின் வழி**. இங்கு நாம் வானில் பறக்கும் அதிசயத்தைக் காண்கிறோம். கழுகின் நேர்த்தியும் வேகமும் பிரபலமானவை.

2. **கன்மலையின்மேல் பாம்பின் வழி**. ஊரும் பிராணி கால்கள், கைகள், இறக்கைகள் எதுவு மின்றிச் செல்லும் அதிசயம் கூறப்பட்டுள்ளது.
3. **நடுக்கடலில் கப்பலினுடைய வழி**. இங்கு மீனைக் குறிக்கும்படி கவிதை நடையில் "கப்பல்" என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள் ளது எனலாம் (சங். 104:26 -ஐக் காண்க). கடல் வாழ் இனங்கள் அதன் வழியாகச் செல் லும் திறமையைக் காணும் ஆகூர் வியந்து பேசுகிறான்.
4. **ஒரு கன்னிகையை நாடின மனிதனுடைய வழி**. காதல் புரிவதன் இயல்பூக்கம் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது என்று இதற்கு எளிமை யான விளக்கம் அளிக்கலாம். சிலர் இதற்குச் சற்றுத் தாழ்வான கருத்தைக் கூறுகிறார்கள், ஒரு கன்னிப்பெண் ஒருவனை மயக்கும் திற மைக்கு இக்கூற்று பொருந்தும் என்பதே அவர் கள் கணிப்பு.

30:20 ஐந்தாவது அதிசயம் சற்று தெளிவான அளவு கூறப்பட்டுள்ளதாகவே தோன்றுகிறது. ஒரு **விபசார பெண்** தன் இச்சையை நிறைவேற் றிய பிறகு, தன் **வாயைத் துடைத்து** தான் ஒரு பாவ மும் அறியாதவள் என்று மறுத்துரைக்கும் வழி.

30:21-23 அடுத்த பட்டியல் பொறுக்கவியலாத நான்கு விசயங்கள். அவை உலகைப் பெரும் கொந்தளிப்புக்குள் கொண்டுபோகக் கூடியவை.

1. **அடிமை அரசாளுகிறபோது**. அவன் அகந்தைகொண்டு மக்களை ஒடுக்குகிறான், தன்னுடைய புதிய பதவியில் வெறிமயக்கம் கொண்டிருக்கிறான்.
2. **போஜனத்தால் திருப்தியான மூடன்**. அவ னுடைய செல்வம் அவனை மேலும் அகந்தை கொண்டவனாக மாற்றுகிறது.
3. **பகைக்கப்படத்தக்க பெண்** முடிவில் திரு மணம் அடைவதில் வெற்றி பெறுகிறாள். அவளுடைய இழிந்த வெறுக்கத்தக்க மனோ பாவம் அவளைத் தனிமையில் வைத்திருந் தது, ஆனால் எதிர்பாராத வகையில், அவள் வாழ்க்கைப்படுகிறாள். பின்னர் அவள் ஆண வமும் இறுமாப்பும் அடைந்து திருமணம் ஆகாதவர்களை ஏளனம் செய்கிறாள்.
4. **நாச்சியாருக்குப் பதிலாக இல்லாளாகும் அடிமைப்பெண்**. அவளுக்கு நாகரிகமாகவும் நற்பண்போடும் நடக்கத் தெரியவில்லை. மாறாக அவள் முரட்டுத்தனமாகவும், கொடூர மாகவும், இழிவாகவும் நடக்கிறாள்.

30:24 அடுத்தபடியாக, தங்களுடைய உருவ அளவுக்கு பொருத்தமற்றபடி மிகவும் அதிக **ஞான முள்ள நான்கு** உயிரினங்களிடமாக ஆகூர் திரும்புகிறான்.

30:25 (1) எறும்பு மிகவும் சிறிய உயிரினம், ஒன்றுக்கும் பயனற்றதாகத் தோன்றுகிறது, ஆனா லும் எறும்புகள் கோடைகாலத்தில் உணவைச் சேகரிக்க மிகவும் சுறுசுறுப்பாக வேலை செய் கின்றன. பெரும்பாலான எறும்பு வகைகள் மழைக் காலத்திற்கென்று உணவைச் சேகரிக்கிற தில்லை. ஏனெனில் "அவை ஒரு கூட்டமாக தங்க ளுடைய வலைகளுக்குள்ளாக உறங்கி மழைக் காலத்தைக் கழிக்கும்" என்று உலக நூல் (World Book) கூறுகிறது. ஆனால் அறுவடை எறும்பு இதற்கு விதிவிலக்காக இருக்கிறது. இவ்வகை எறும்புகள் வெப்ப நாட்களில், பின்வரும் குளிர் காலத்திற்காக உணவைச் சேகரிக்கின்றன. இந்தப் பகுதியில் வலியுறுத்தப்பட்டுள்ள உண்மை, தங்களுக்கு உணவைச் சேகரிக்கிற எறும்பின் சுறுசுறுப்பே ஆகும்.

30:26(2). கற்பாறை **முயல்கள்** இயல்பாகவே **சத்துவமற்றவை**, பாதுகாப்பற்றவை, ஆனாலும் அவை கன்மலையில் பாதுகாப்பைப் பெறும்படி யான ஞானம் உடையவை. (குழி முயல்களும் வளைக் கரடியும் வேறு. வளைக் கரடி சண்டை யிடக்கூடியவை). பிளவுண்ட கற்பாறைகள் சிறந்த பாதுகாப்பு ஆகும். "பிளவுண்ட மலையே புகலிடம் தாருமே" என்னும் பாடலில் இதனுடைய ஆவிக்குரிய பொருள் அடங்கியுள்ளது.

30:27 (3) கண்களுக்குப் புலப்படும்படி **வெட் டுக்கிளிகளுக்கு** ஒர் அரசன் இருப்பதாகத் தெரிய வில்லை, ஆனாலும் அவை முன்னேறிச் செல்கிற விதம் குறிப்பிடத்தக்கது.

30:28 (4) **சிலந்தி** அல்லது பல்லி (NASB) மிகவும் சிறியது, ஆனாலும் அவை அரசனுடைய மாளிகைக்குள்ளே செல்வதில் வெற்றியடைகின் றன. செல்லமுடியாத இடங்களுக்கும் முக்கிய மான இடங்களுக்கும் கிறிஸ்தவர்கள் அணுகு வது இரட்டிப்பான அளவு பெருகியுள்ளது. அரசர் களுடைய நீதிமன்றங்களிலும் தேவனுடைய சாட்சி இல்லாமற் போகும்படி அவர் விட்டுவைத்த தில்லை.

30:29-31 கடைசிப் பட்டியல் நடைகளைப் பற்றியது. கம்பீரமான, வீறார்ந்த, நேர்த்தியான நடைக்கு நான்கு மாதிரிகள் கொடுக்கப்பட்டுள் ளன.

1. **சிங்கம்,** விலங்குகளின் அரசன், அதனுடைய நடை கம்பீரமானது, கலக்கமில்லாதது.
2. இரண்டாவது மாதிரி என்ன என்பது பற்றி குறிப்பிடத்தக்க அளவு நிச்சயமற்ற தன்மை நிலவுகிறது. அது பகட்டாக நடக்கும் சேவல் (NIV) அல்லது **போர்க்குதிரை** (JND - அடிக்குறிப்பு) அல்லது வேட்டைநாய் (NKJV) எதுவாகவும் இருக்கலாம். கொடுக்கப்பட்டிருக்கிற விளக்கங்களை இந்த விலங்குகள் யாவும் மேலான நிலையில் பெற்றுள்ளன, எனினும் இவற்றுள் மிகச்சிறந்த மாதிரி நேர்த்தியான வேட்டைநாய் என்றே தோன்றுகிறது.
3. செம்மறி அல்லது வெள்ளாட்டுக்**கடா**, இது மேலான மாதிரியாகச் சித்திரப்படுத்தப்பட்டுள்ளதற்குக் காரணம் மந்தையை நடத்திச் செல்லும்படி முன்னே அடியெடுத்து வைக்கிறது.
4. நான்காவது மாதிரியைக் குறித்தும் சிறிது ஐயம் எழுந்துள்ளது. "**ஒருவரும் எதிர்க்கக் கூடாத ராஜா**" (KJV), "தம்மக்களுக்கு முன் அடியெடுத்து வைத்து நடக்கிற ராஜா" (RSV), அல்லது "தனது போர்வீரர்கள் கூட இருக்கும் ராஜா" (NKJV). இவற்றுள் எதுவாயினும், அரசன் ராஜரிக மேன்மையோடு நடந்து செல்கிறான் என்பது தெளிவாகத் தெரிகிறது.

30:32,33 இதற்கு முன் சொல்லப்பட்டுள்ள விசயங்களுக்கு எவ்விதத்திலும் சம்பந்தமில்லாத இரண்டு வசனங்களோடு இந்த அதிகாரம் முடிவடைகிறது. திருவாளர் வில்லியம்ஸ் இந்த வசனங்களைப் பொழிப்புரையாகத் தருகிறார்:

> அற்பமான மனிதன் தன்னுடைய மதியீனத்தில் தேவனுக்கு எதிராக எழுவானாயின், அல்லது அவருக்கு எதிராகக் கடினமான சிந்தனை செய்வானாயின், அவன் ஞானத்தின் சத்தத்துக்குச் செவிகொடுத்து, தன் வாயை மூடக் கடவன். இல்லையேல் பாலைக் கடையும் போது மூக்கைச் பிசையும்போது அல்லது கோபத்தைக் கிண்டி விடும்போது என்ன நிகழுமோ அது நடக்கும்.[45]

7. லேமுவேல் என்னும் அரசனின் தாய் அவனுக்குக் கற்பித்த பாடம் [31:1-9]

31:1 லேமுவேல் என்னும் அரசன் யார் என்று நாம் அறிவதற்கு வாய்ப்பு எதுவுமில்லை. அவனுடைய பெயரின் பொருள் "தேவனுக்கு ஒப்புவிக்கப்பட்டவன்" அல்லது "தேவனுக்குச் சொந்தமானவன்" என்பதாகும். அவனுடைய தாயார் அவனுக்குக் கற்பித்த பாடங்களை அவன் நமக்காகப் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறான் என்பதே முக்கியமானது.

31:2 இப்பகுதியில் நாம் கீழ்க்காணும் சிந்தனைகளை விடுபட்ட இடங்களில் பூர்த்தி செய்ய வேண்டும்: "உன்னிடம் நான் என்ன சொல்ல வேண்டும், ஞானத்தில் சிறந்தது எதை நான் உனக்குப் பகிர்ந்து தர வேண்டும், கர்த்தருக்கு நன் ஒப்புவித்த என் மகனே உன்னிடம் நான் கூற விரும்புவது என்ன?"

31:3 முதலாவது எச்சரிப்பு ஒழுக்கக் கேட்டுக்கும் பாலியல் இச்சைக்கும் எதிரானது. "இப்பொழுது இருப்பது போல, அந்தப்புர மகளிரால் உண்டாகும் சோதனை அந்த நாட்களில் கிழக்கத்திய அரசுகளின் சாபம்" என்று பிரசங்கியின் விளக்கவுரை சுட்டிக்காட்டுகிறது (Speaker's Commentary).

31:4-8 இரண்டாவது அளவுக்கு மீறி **திராட்சைப்** பிழிவையும், வீரியம் அதிகம் கொண்ட **மது பானத்தையும்** குடிப்பதற்கு எதிரான வேண்டுதலாகும். அரசர்கள் குடிப்பதன் காரணமாக நியாயந்தீர்ப்பதற்கான மற்றும் சரியான முடிவுகளை எடுப்பதற்கான ஆற்றல் குன்றி ஆபத்து ஏற்படக்கூடிய நிலை உண்டாகும். சட்டம் எதிர்பார்க்கும் **நியாயத்தின்** தரத்தை அவர்கள் மறந்து போவார்கள். மேலும் சிறுமைப்பட்டவர்களுடைய உரிமையை நிலைநிறுத்த அவர்கள் தவறுவார்கள். மனத்தளர்ச்சி அடைந்த மனிதர்கள் மற்றும் இறக்கும் தறுவாயில் உள்ளவர்கள் தங்களுடைய வேதனையையும் மனக்கலக்கத்தையும் மறக்கும்படி மது மருந்தாகப் பயன்படுத்துவதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய மனிதர்கள் தங்களுடைய தேவையையும் **வருத்தத்தையும் மறப்பதற்காகக் குடிப்பது** சரி.

31:9 தங்களுக்காக வாதாட முடியாத மனிதர்கள் யாவருக்காகவும் அரசனே பிரதிநிதியாகச் செயல்படவேண்டும். மேலும் மரணம் அடையும்படி கைவிடப்பட்ட மக்களுக்காக அரசன் வாதாட வேண்டும். **சிறுமையும் எளிமையுமான** மனிதர்களுக்காக அவன் பேச வேண்டும்.

8. மிகச்சிறந்த முன்மாதிரியான மனைவி மற்றும் தாய் [31:10-31]

இந்நூலின் கடைசிப் பகுதி கருத்தளவிலான மனைவியைக் குறித்து விவரிக்கிறது. இப்பகுதி எபிரெய மொழி எழுத்துகளை வரிசையாக முதல்

எழுத்துகளாகக் கொண்ட வசனங்களைக் கொண்டுள்ளது. திருவாளர் நாக்ஸ் தனது மொழிபெயர்ப்பில் ஆங்கில எழுத்துகள் இருபத்து ஆறில் இருபத்திரண்டைப் பயன்படுத்தி வசனங்களை எழுதியிருக்கிறார்.

31:10-12 குணசாலியான அல்லது சிறந்த **மனைவி** திறமைசாலி, கடினமாக உழைப்பவள், தகுதிவாய்ந்தவள், நல்லவள். அவளுடைய தகுதியை அவள் வைத்திருக்கும் விலையுயர்ந்த பொன் ஆபரணங்களால் மதிப்பிட முடியாது. அவளுடைய கணவன் அவள்மேல் முழு நம்பிக்கை வைத்திருக்கிறான். நேர்மையான வருமானம் குறைந்துபோகுமே என்று அவன் ஐயுறவு அடையத் தேவையில்லை. அவளுடைய சிறந்த திறமைகள் யாவும் அவனுக்கு உதவி செய்யும்படி ஆக்கமிக்க முறையில் பயன்படுத்தப்படுகின்றன. அவள் ஒருக்காலும் ஒத்துழைக்கத் தவறுவது இல்லை.

31:13-15 அவள் எப்போதும் ஆட்டு ரோமத்தையும் சணலையும் தேடிக் கண்டுபிடித்து, அவற்றை ஆடைகளாக நெய்கிறாள். அவள் கடைகளுக்குச் செல்லும்போது, அவள் பொருட்களால் நிறையப்பெற்ற **வியாபாரக் கப்பல்களைப் போல** நிறைய பொருட்களைச் சுமந்து வருகிறாள். பெரிய வர்த்தக நிறுவனங்களுக்குச் சென்று குறைந்த விலையில் பொருட்களை வாங்குகிறாள். பொழுது புலர்வதற்கு முன் எழுந்து அவள் தன் வீட்டாருக்காக ஆகாரம் செய்கிறாள். அவள் காலை உணவை **வேலைக்காரிகளுக்குக்** கொடுப்பது மட்டுமின்றி, அன்றைய நாளில் அவர்கள் செய்ய வேண்டிய வேலைகளை ஒப்புவிக்கிறாள்.

31:16-18 அருகில் இருக்கும் **வயல்** விலைக்கு வருகிறது என்பதை அறியும் அவள் அதைச் சென்று பார்வையிடுகிறாள். அது அவளுடைய தேவைக்கு ஏற்றபடி இருக்கிறது என்று அறிந்து அதை விலைக்கு **வாங்குகிறாள்**, பிறகு தான் ஈட்டிய வருமானத்தைப் பயன்படுத்தி அவ்வயலில் கடினமாக உழைத்து **திராட்சைத் தோட்டத்தை** உருவாக்குகிறாள். அவள் தன் கடமைகளை மிகுந்த உற்சாகத்தோடு தீவிரமாகச் செய்ய ஆயத்தம் செய்கிறாள். கடுமையான வேலை என்று அவள் அச்சமடைவதில்லை. அவள் தனது உழைப்பின் பலனைக் காண்கிறபோது அமைதியோடும் தாழ்மையோடும் மனநிறைவு அடைகிறாள். மற்றவர்கள் படுக்கைக்குச் சென்றபின் அவள் இரவில் வெகுநேரம் வேலை செய்கிறாள்.

31:19-22 அவள் இராட்டினத்தில் தன் கைகளை வைக்கிறாள். அவள் விரல்கள் கதிரைப் பிடிக்கும். அதாவது அவள் ஆட்டு ரோமத்தையும், சணலையும் இழையாகவும் நூலாகவும் திரிக்கிறாள். இவையெல்லாவற்றுக்கும் மேலாக, தேவைப்பட்ட மக்களுக்கு உதவிசெய்ய அவளுக்கு நேரம் இருக்கிறது. வசதியற்ற மக்களுக்கு அவள் மனமுவந்து சுயநலம் பாராட்டாமல் பகிர்ந்து கொடுக்கிறாள். குளிர்காலம் நெருங்குகிறதென்று அச்சப்படுவதில்லை, ஏனெனில் அவளுடைய வீட்டில் எல்லோருக்கும் தேவையான கம்பளி ஆடைகள் இருக்கின்றன. **இரத்தினக் கம்பளங்களை** அவள் **தனக்கு உண்டுபண்ணுகிறாள்**; **மெல்லிய புடவையும் இரத்தாம்பரமும் அவளுடைய** சொந்த **உடுப்பு.**

31:23 அவளுடைய கணவன் சமுதாயத்தில் முக்கியமான இடத்தில் இருக்கிறான். அவன் பட்டணத்தின் **வாசலில் மூப்பர்கள்** உட்காரும் இடத்தில் அமர்கிறான். அவன் வீட்டு நிலையைக் குறித்துக் கவலைப்பட வேண்டியதில்லை, ஆகவே பொதுமக்கள் நலன்குறித்த விசயங்களில் ஈடுபட அவனால் முடிகிறது.

31:24-27 அவனுடைய மனைவி **மெல்லிய புடவைகளை உண்டுபண்ணி** அதைச் சந்தையில் **விற்கிறாள்.** மேலும் அவள் **வர்த்தகர்களுக்குச் கச்சைகளை** விற்கிறாள். கடின உழைப்பையும் நன்மதிப்பையும் ஆடையாக அணிந்தவள் எதிர்காலத்தை நம்பிக்கையோடு எதிர்கொள்கிறாள். அவள் தன் வீட்டாருக்குக் கொடுக்கும் அறிவுரைகள் **ஞானமும் தயையும்** ஒருங்கிணைந்தவை. அவள் தன் வீட்டு விசயங்கள் எல்லாவற்றிலும் மிக நெருக்கமான தொடர்பு கொண்டிருக்கிறாள், நேரத்தை வீணடிப்பதில்லை அல்லது கருத்தற்றதும் பயனற்றதுமான செயல்களில் அவள் ஈடுபடுகிறதில்லை.

31:28,29 அவள் சிறந்த தாய் என்பதை **அவளுடைய பிள்ளைகள்** அறிந்திருப்பதோடு, அதைக் குறித்து அவளிடம் கூறவும் செய்கிறார்கள். மேலும் அவளுடைய கணவன் தேவன் கொடுத்த மனைவி என்று அவளைப் **புகழுகிறான்**. "இவ்வுலகில் பல நல்ல மனைவிகள் இருக்கிறார்கள், **நீயோ அவர்கள் எல்லோருக்கும் மேற்பட்டவள்**" என்று அவன் கூறுகிறான்.

31:30,31 இப்பொழுது எழுத்தாளன் அவளுடைய கணவனுடைய கூற்றுக்கு ஆமென் என்கிறான். அது உண்மையே. ஒரு பெண் **சௌந்**

தரியம் பெற்றிருக்கலாம், ஆனால் பகுத்தறிவு அற்றவளாயிருப்பாள். அவள் அழகுள்ளவளா யிருந்தும் பயனற்றவளாயிருப்பாள். ஆனால் மேலே விவரிக்கப்பட்டுள்ள **கர்த்தருக்குப் பயப்படுகிற பெண்** மிகவும் சிறந்தவள். அவளுடைய கடின உழைப்புக்காகவும், மேலான நடத்தைக்காகவும் அவள் புகழப்படத்தக்கவள். நகரப் பெருமக்கள் நகர மன்றத்தில் கூடும்போது, அவள் நிறை வேற்றிய மிகச்சிறந்த செயல்களுக்காக அவ ளைப் புகழக்கடவர்கள்.

பெண்களைப் பற்றிய நல்ல கருத்தோடு நீதிமொழிகள் நிறைவுபெறுவது கவனிக்கத்தக் கதும் பொருத்தமானதும் ஆகும். இந்நூலில் மூன்று பெண்கள் கவனத்தை ஈர்க்கிறார்கள்: ஞானத்தின் மனுவுருவானவள், தனது விருந்து சாலைக்குக் கற்பவர்களை அவள் வரவேற் கிறாள். அடுத்தவள் ஒழுக்கங்கெட்டவள் அல் லது விபசார பெண். இறுதியாக, "அஞ்சா நெஞ்ச முடைய பெண்" (அல்லது மனைவி), NKJV அடிக்குறிப்பில் 31:10 -ஆம் வசனம் இவ்வாறுதான் மொழிபெயர்த்துள்ளது.

அடிக்குறிப்பு

1 (Intro) Quoted by D.L.Moody in *Notes from My Bible*, p. 81.

2 (முன்னுரை) திருவாளர் அர்னாட் இச்சொற் றொடரையே நீதிமொழிக்கான தனது விளக்கவுரைக் குத் தலைப்பாகக் கொண்டிருக்கிறார்.

3 (1:8) Henry Bosch, ed., *Our Daily Bread*.

4 ஞானம் என்பதற்கான எபிரெயச் சொல் *(hokmah)* பெண்பால் பெயர்ச்சொல். ஆகவே இப்பண்பை பெண்ணாக உருவகப்படுத்திக் கூறப்பட்டிருப்பது இயற்கையே.

5 (1:25) Donald Grey Barnhouse, *Words Fitly Spoken,* p. 239.

6 (3:2) Jay Adams, *Competent to Counsel*, p. 125.

7 (5:18) Michael Griffiths, *Take my Life*, p. 125.

8 (5:22) Adams, *Counsel,* p. 145.

9 (6:16) Derek Kidner, T*he Proverbs: An Introduction and Commentary*, p. 73. See similar forms in 30:15, 18.

10 (6:17) J. Oswald Sanders, *On To Maturity*, p. 63.

11 (6:28) Griffiths, *Life*, p. 116.

12 (7:2) *International Standard Bible Encyclopedia*, I:209.

13 (9:18) The French text is as follows: *Plaisir d'amour ne dure qu'une nuit; Chagrin d'amour dure toute la vie*.

14 (10:24) C. S. Lewis, *Weight of Glory*, ed. by Walter Hooper, p. 13.

15 (10:28) G. S. Bowes, quoted in *Our Daily Bread.*

16 (13:4) Bosch, ed., *Daily Bread.*

17 (13:5) J. Allen Blair, further documentation unavailable.

18 (13:7) G. Campbell Morgan, *Search lights from the Word*, p. 203.

19 (13:10) C. S. Lewis, *Christianity*, pp. 110,111.

20 (13:24) Benjamin Spock, taken from the Tampa Tribune, Tamba, Fl., January 22, 1974.

21 (14:2) Kidner, *Proverbs*, p. 106.

22 (14:30) Paul Adolph, "God in Medical Practice," in *The Evidence of God in an Expanding Universe* by John Clover Monsma, Pagination unavailable.

23 (15:1) Charles Haddon Spurgeon, quoted by A. Naismith in *1200 More Notes, Quotes and Anecdotes,* p. 239.

24 (16:3) J. Allen Blair, further documention unavailable.

25 (16:24) Watchman Nee, *Do All to the Glory of God*, p. 55.

26 (16:32) Henry Durbanville, *Winsome Christianity*, p. 41.

27 (17:17) Moody, *Notes,* p. 83.

28 (17:22) Paul Brock, *Reader's Digest,* September, 1974.

29 (17:22) Blake Clark, *Reader's Digest*, September, 1974.

30 (18:9) Griffiths, *Life,* p. 53.

31 (18:14) Adolph, *"God in Medical Practice,"* Pagination unavailable.

32 (18:24) Morgan, *Searchlights*, p. 204.

33 (19:17) Henry Bosch, ed., *Our Daily Bread*.

34 (22:6) Quoted in *A Treasury of Illustration,* NY: Fleming Revell Co., 1904, pp. 11-12

35 (22:6) Adams, *Counsel,* p. 158.

36 (22:15) Matthew Henry, *Matthew Henry's Commentary on the Whole Bible*, III:919.

37 (25:16) Larry Christenson, *The Christian Family,* p. 58.

38 (25:20) Keith Weston, *Living in the Light*, p. 122.

39 (25:21,22) Sarah Anne Jepson, "Preparing Tables of Forgiveness," *Good News Broadcaster*, June 1975, p. 13.

40 (26:20,21) Atlanta Journal, further documentation unavailable.

41 (27:20) Arthur G. Gish, *Beyond the Rat Race*, p. 91.

42 (29:11) Adams, *Counsel*, p. 221.

43 (30:15,16) F. W. Grant, *The Numerical Bible*, I:15.

44 (30:18,19) Kidner *Proverbs,* p. 180.

45 (30:32,33) George Williams, *The Student's Commentary on the Holy Scriptures*, p. 437.

நூல் விவரத்தொகுப்பு

Arnot, William. *Laws for Heaven for Life on Earth,* London: James Nisbet & Co., n.d.

Bridges, Charles. *A Commentary on Proverbs*. Reprint. Edinburgh: The Banner of Truth Trust, 1983.

Delitzsch, Franz. "Proverbs." In *Biblical Commentary on the Old Testament.* Vols. 16,17. Grand Rapids: Wm. B. Eerdmans Publishing Co., 1971.

Harris, R. Laird. "Proverbs." In *The Wycliffe Bible Commentary*. Chicago: Moody Press, 1962.

Henry, Matthew. "Proverbs." In *Matthew Henry's Commentary on the whole Bible*. Vol. 3. McLean, VA: Macdonald Publishing Company, n.d.

Ironside, H. A. *Notes on the Book of Proverbs*. Neptune, N. J.:Loizeaux Brothers, 1964.

Jensen, Irving L. Proverbs. *Everyman's Bible Commentary*. Chicago: Moody Press, 1982.

Kidner, Derek. *The Proverbs: An Introduction and Commentary*. Downers Grove, IL: InterVarsity Press, 1964.

Macdonald, William. *Listen, My Son.* Kansas City, KS: Walterick Publishers, 1965.

Plumptre, E. H. "Proverbs." In *Commentary on the Holy Bible* (Speaker's Commenatry). London: John Murray, 1873.

Spence, H.D.M., and Joseph S. Exell,eds. "Proverbs." In *The Pulpit Commenatry*, Vol.9. Grand Rapids: Wm. B. Eerdmans Publishing Company, 1909.

Weston, Keith. *Living in the Light.* Bromley, Kent, England: STL Books, 1983.

பிரசங்கி

முன்னுரை

மனிதனுடைய வேதனை இன்பம் ஆகியவை குறித்த ஆர்வமிக்க ஆய்வு, அவனுடைய தோல்வி வெற்றி ஆகியவை குறித்த மதிப்பீடு இவற்றில் இதனினும் விழுமிய நூல் வேறு இல்லை, மெச்சத்தக்க வகையில் சோகம் இதனினும் சிறப்பாக வருணிக்கப்படவுமில்லை; ஆவிக்குரிய வெளிச்சத்தைத் தருவதில் இதுபோன்று சளைக்காமல் பணியாற்றும் கவிதையும் வேறு இல்லை.

- E. C. ஸ்டெட்மேன்

1. வேத நூல் வரிசையில் தனிச்சிறப்பு மிக்க இடம்

பிரசங்கி நூலின் ஆசிரியர் யார், எழுதப்பட்ட காலம் எது, அதனுடைய கருப்பொருள் யாது, அது கூறும் இறையியல் என்ன என்னும் பல கேள்வி கள் கேட்கப்பட்ட போதிலும், அதனுடைய தனித் தன்மையைக் குறித்து கேள்வி எதுவும் எழுப்பப் படவில்லை; அந்நிலையில் இந்நூல் தன்னிகர் அற்றது.

திருமறை எழுத்துகள் அனைத்தோடும் இது கருத்து மோதல் கொண்டிருப்பதற்கான காரணம் என்னவெனில், "*சூரியனுக்குக் கீழ்*" என்னும் சொற்றொடரின்படி இதில் வெறுமனே மனிதனு டைய விவாதம் மட்டுமே கொடுக்கப்பட்டிருக் கிறது என்பதே ஆகும். "சூரியனுக்குக் கீழ்" என்னும் சொற்றொடர் மிகவும் முக்கியமான குறிப் பாக விளங்கி, பிரசங்கி நூலைப் புரிந்துகொள் ளும்படி செய்கிறது. இச்சொற்றொடர் இருபத் தொன்பது முறை இந்நூலில் இடம்பெற்றுள்ளது என்னும் உண்மை ஆசிரியரின் பொதுவான உள்காட்சியைக் சுட்டிக்காட்டுகிறது. அவனுடைய ஆய்வு பூமியை மட்டுமே ஆதாரமாகக் கொண் டது. வாழ்வின் புதிரைக் கண்டுபிடிக்க அவன் உலகம் முழுவதையும் துருவித் தேடுகிறான். அவனுடைய தேடுதல் அவனது சொந்த உள்ளத் தால் மட்டுமே செய்யப்பட்டது, தேவனுடைய உதவியின்றி செய்யப்பட்டது.

சூரியனுக்குக் கீழ் என்னும் விளக்கக் குறிப்பை, தொடர்ந்து மனதில் வைத்திராவிடில், இந்நூல் மிகப்பெரிய அளவிலான சிக்கல்களை உண்டாக் கும். திருமறையின் மற்ற பகுதிகளோடு முரண்படு வதாகத் தோன்றும் இந்நூல் விநோதமான கோட் பாடுகளை முன்மொழிவதாகவும், கேள்விக்குரிய ஒழுக்க விதிகளை ஆதரிப்பதாகவும் தோன்று கிறது. இன்னும் பல முரண்பாடுகள் இருப்பதாகத் தோன்றுகின்றன.

ஆனால், பிரசங்கி நூல் மனிதனுடைய அனைத் துக் கூறுகளும் அடங்கிய சாரம் என்பதையும், மேலும் இது தெய்வீக சிந்தனையோ ஞானமோ அல்லவென்பதையும் நாம் நினைவுகூருவோ மெனில், இதில் கூறப்பட்டுள்ள முடிவுகள் சில உண்மையென்பதையும், சில அரை உண்மை என்பதையும், சில முற்றிலும் உண்மையற்றவை என்பதையும் புரிந்துகொள்வோம்.

சில எடுத்துக்காட்டுகளை நாம் காணலாம். எல்லாக் காலத்து இளைஞர்களுக்கும் மெய் யானதும் பொருத்தமானதுமான ஆலோசனை பிரசங்கி 12:1 -இல் கொடுக்கப்பட்டுள்ளது; அவர் கள் தங்களுடைய இளவயதில் தங்களுடைய படைப்பாளரை நினைவுகூர வேண்டும். முதல் அதிகாரத்தில் 4 -ஆவது வசனம் அரை உண் மையேயாகும். ஒரு தலைமுறை போகிறது, மற் றொரு தலைமுறை வருகிறது என்பது உண்மை; ஆனால் பூமியோ என்றைக்கும் நிலைத்திருக்கும் என்பது உண்மையல்ல (சங். 102:25,26; 2 பேதுரு 3:7,10 - ஆகிய வசனங்களைக் காண்க). கீழ்க் கண்ட வசனங்களில் கூறப்பட்டுள்ள அறிக்கை களைத் தோற்றத்தின்படி பொருள் காண்போ மெனில் அவை உண்மையல்ல: "மனிதன் புசித் துக் குடித்து, தன் பிரயாசத்தின் பலனை அநுப விப்பதைப் பார்க்கிலும் அவனுக்கு ஒரு நன்மை யும் இல்லை" (2:24); "மிருகத்தைப் பார்க்கிலும் மனிதன் மேன்மையுள்ளவன் அல்ல" (3:19); "மரித்தவர்கள் ஒன்றும் அறியாதவர்கள்" (9:5).

ஆயினும், தேவனிடத்திலிருந்து நாம் எந்த வெளிப்பாட்டையும் பெற்றிராவிடில், நாமும்கூட இதே முடிவுகளைத்தான் பெற்றிருப்போம்.

பிரசங்கியும் தேவ ஆவியின் உயிரூட்டமும்

இந்நூலில் "சூரியனுக்குக் கீழ்" என்னும் சொற்றொடரின் அடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவுகள் சில அரை உண்மை என்றும் சில உண்மையற்றவை என்றும் நாம் கூறுகிறபோது, பிரசங்கி நூல் தேவ ஆவியின் உயிரூட்டம் பெற்றது என்னும் உண்மையோடு இதனை எவ்வாறு தொடர்புபடுத்துவது என்னும் கேள்வி எழுகிறது. இதற்கான விடை, இந்நூல் உயிரூட்டம் பெற்றது என்னும் உண்மை மேலே சொல்லப்பட்டுள்ள செய்தியின் காரணமாகச் சற்றேனும் பாதிக்கப்படுவதில்லை என்பதே ஆகும்.

இந்நூல் உயிரூட்டம் பெற்ற தேவ வார்த்தையின் ஒரு பகுதியேயாகும். இது தேவ ஆவியின் ஏவுதலைப் பெற்றது என்று கூறுகிறபோது, தேவ நூலில் ஒரு பகுதியாக இது சேர்க்கப்படவேண்டும் என்று கர்த்தர் கட்டளையிட்டார் என்பதே அதன் பொருளாகும். திருமறை நூல்கள் யாவும் முழுமையும் ஒவ்வொரு வார்த்தையும் தேவ ஆவியின் உயிரூட்டம் பெற்றவை என்று நாம் ஒப்புக்கொள்கிற வண்ணமே இந்நூலும் அதே அதிகாரம் பெற்றது என்று ஒப்புக்கொள்கிறோம் (பழைய ஏற்பாட்டுக்கான முன்னுரையைக் காண்க).

ஆனால், உயிரூட்டம் பெற்ற திருமறை சில இடங்களில் உண்மையில்லாத சாத்தானின் கூற்றுகளையும், மனிதருடைய கூற்றுகளையும் கொண்டிருக்கிறது. எடுத்துக்காட்டாக, ஆதியாகமம் 3:4 -இல் தோட்டத்தின் நடுவிலிருந்து மரத்தின் கனியை உண்டால் ஏவாள் சாகமாட்டாள் என்று சாத்தான் அவளிடம் கூறினான். ஆனால் அது பொய். அவன் தொடக்கமுதல் பொய்யாக இருக்கிறான் என்பதைக் கற்பிக்கும் பொருட்டே அது திருமறையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. திருவாளர் சார்.பர் குறிப்பிடுகிறார்:

> தேவ ஆவியானவரின் உயிரூட்டம் பெற்ற திருமறை சாத்தான் (அல்லது மனிதன்) கூறிய பொய்யைப் பதிவுசெய்து வைத்துள்ளது. ஆனால் அக்கூற்று சரியென்று அது கூறுவதில்லை, அல்லது அக்கூற்றை அது புனிதப்படுத்துவதுமில்லை. அக்கூற்று நல்லதோ கெட்டதோ எதுவானாலும் அந்தச் சொற்களை மாற்றமின்றி அது பாதுகாத்து வைத்திருக்கிறது.[1]

பிரசங்கி நூல் தவறாகப் பயன்படுத்தப்படுதல்

"சூரியனுக்குக் கீழ்" மனிதனுடைய விவாதம் மட்டுமே கொடுக்கப்பட்டிருக்கிறது என்னும் ஒரே காரணத்தால் பிரசங்கி நூல் நாத்திகர்களுக்கும், கள்ளக் குழுவினர்களுக்கும் மிகவும் பிடித்தமான நூல்களில் ஒன்றாக விளங்குகிறது. அவர்கள் நம்பிக்கைக்கு இடமளிக்காத தங்களுடைய கோட்பாடுகளை மெய்ப்பிக்க இந்நூலின் வசனங்களை மிகுந்த உற்சாகத்துடன் எடுத்தாளுகிறார்கள். குறிப்பாக, மரணத்தையும் அதற்கு அப்பாற்பட்ட விசயங்களையும் குறித்த தங்களுடைய கோட்பாடுகளை மெய்ப்பிக்க இந்நூலை அவர்கள் அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள். எடுத்துக்காட்டாக, மரணத்துக்குப் பிறகு ஆத்துமாவின் உறக்கம், பாவிகள் ஒன்றுமில்லாதபடி முழுவதுமாக அழிக்கப்படுதல் ஆகிய போதனைகளைக் கற்பிக்க இந்நூலிலிருந்து சில வசனங்களை எடுத்தாளுகிறார்கள். அவர்கள் வசனங்களை அவற்றின் பின்னணியிலிருந்து பலவந்தமாக வெளியே இழுத்து, ஆத்துமா என்றென்றும் அழியாதது என்பதையும், நித்திய தண்டனை என்னும் கோட்பாட்டையும் மறுத்துரைக்கிறார்கள்.

ஆனால் அவர்கள் கதவின் துவாரத்தில் திறவுகோலைப் போடுவதே இல்லை, அதாவது திருமறையைப் புரிந்துகொள்வதற்கான முக்கியமான விளக்கக் குறிப்புகளை நழுவவிட்டுவிடுகிறார்கள். பிரசங்கி நூல் வெறுமனே சூரியனுக்குக் கீழ் இருக்கும் மனிதனுடைய ஞானம் என்பதை அவர்கள் தங்களுடைய கோட்பாடுகளுக்குப் பலியானவர்களிடம் கூறுவதே இல்லை. ஆகவே கிறிஸ்தவ விசுவாசத்தின் கோட்பாடுகளுக்கு இந்த வசனங்களை ஆதாரமாக எடுத்துக்கொள்ளக்கூடாது என்பதையும் அவர்கள் கூறுவது இல்லை.

2. நூலாசிரியர்

பதினேழாம் நூற்றாண்டுவரை யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர் ஆகியோரிடையே பெரும்பாலோர் இந்நூலை சாலொமோன் எழுதினான் என்றே நம்பினார்கள். அதற்கு ஒரு நூற்றாண்டுக்கு முன் வாழ்ந்தவரும், பொதுவான முறையில் பழமையில் நம்பிக்கை கொண்டவருமாகிய மார்டின் லுத்தர் இந்நூலை சாலொமோன் எழுதியிருக்க முடியாது என்று நிராகரித்தார். ஆனால் அவரை விதிவிலக்கு என்றே சொல்ல வேண்டும்.

இன்றைய நாளில் பழமைவாதிகள் உட்பட பெரும்பாலான வேத அறிஞர்கள், இந்நூல் சாலொமோனால் எழுதப்படவில்லை என்று நம்புகிறார்கள். மேலும் இந்நூல் சாலொமோனின் கட்டமைப்பில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது, ஏமாற்றும் நோக்கத்துடன் அல்ல, இலக்கியக்

கண்டுபிடிப்பு என்னும் அடிப்படையில் அவ்வாறு வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர்கள் நம்புகிறார்கள். இது பலருக்கும் பெரும் ஆச்சரியத்தை உண்டுபண்ணுகிறது.

சாலொமோன் இந்நூலை எழுதினான் என்னும் கருத்துக்கு எதிரான சிக்கல்கள்

சாலொமோன் அரசனே இந்நூலை எழுதினான் என்னும் பாரம்பரியக் கருத்துக்கு எதிரான முக்கியமான வாதம் இந்நூலின் மொழிநடையே ஆகும். அதாவது, பாபிலோன் சிறையிருப்புக் காலம் அல்லது அதற்குச் சற்று பிந்தைய காலம் வரை வழக்கில் இல்லாத சொற்களும், வாக்கிய அமைப்புகளுக்கான இலக்கண முறையும் இந்நூலில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

நற்செய்தியை அடிப்படையாகக் கொண்ட கிறிஸ்தவர்களில் பெரும்பாலோர், சாலொமோனே இந்த நூல் முழுவதையும் எழுதினான் என்று கூறுவதை, தவறாக உய்த்துணரப்பட்ட இலக்கியக் கண்டுபிடிப்பு என்றகிறார்கள், மேற்கத்திய நாடுகளிலுள்ள விசுவாசிகளில் பலருக்கு இது சாலொமோனின் நூல் என்பது ஏமாற்று வேலை என்னும் கருத்து தோன்றியிருக்கிறது.

இதற்கான ஆதரவு எதிர்ப்பு நீண்ட பட்டியல் ஆகும், அவை எல்லாவற்றையும் நம்மால் காண வியலாது. சாலொமோனின் நூல் என்பதற்கு எதிராகக் கூறப்பட்ட வாதங்கள் யாவும் வெல்ல இயலாதவை அல்ல என்பதை நாம் அறிந்தால் போதும். நம்பிக்கைக்குப் பாத்திரமான வேத அறிஞர்கள், திருவாளர் கிளீசன் ஆர்சர் போன்றோர் சாலொமோனே இந்நூலை இயற்றியவன் என்று நம்புவது இன்னும் நீடித்திருக்கிற கருத்து என்று தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.[2]

சாலொமோனே இந்நூலை எழுதினான் என்னும் கருத்துக்கு ஆதரவான வாதங்கள்

பாரம்பரியக் கருத்து தவறானது என்று ஒருக்காலும் உண்மையாக மெய்ப்பிக்கப்படவில்லை - தற்போது பெரும்பாலோரால் ஏற்கப்படவில்லை என்றாலும் அது பொருட்டன்று - சாலொமோனே இதை எழுதினான் என்று கூறுவது பாதுகாப்பானது என்று நாம் கருதுகிறோம்.

சாலொமோனே இந்நூலை இயற்றினான் என்பதற்கான மறைமுகக் குறிப்புகளில் ஒன்று 1:1,12 ஆகிய வசனங்களின் கூற்று ஆகும்: "தாவீதின் குமாரனும் எருசலேமின் அரசனுமாகிய பிரசங்கி." குமாரன் என்னும் சொல் பிற்கால வழித்தோன்றலையும் குறிக்கக் கூடுமாயினும், இந்தச் சொற்களை நேரடியான குறிப்புகளோடு சேர்த்துக் காண்கையில், அதாவது சாலொமோனின் அறியப்பட்ட குறிப்புகளோடு இணைத்துப் பார்த்தால் இக்கருத்து உண்மையாகவே வலுப்பெறுகிறது.

தான் அரசனாக இருந்ததாக (கடந்த காலம்) எழுத்தாளன் கூறுவதால், இந்நூலை எழுதிய போது அவன் அரச பதவியில் இல்லை என்பதற்கு இதனை ஆதாரமாகப் பலர் கருதுகிறார்கள். ஆகவே இதனை சாலொமோன் எழுதியிருக்க முடியாது, ஏனெனில் அவன் இறந்தபோது அரச பதவி வகித்தான் என்றும் அவர்கள் கூறுகிறார்கள். இவ்வாறு பொருள்கொள்ளத் தேவையில்லை. அவன் வயது முதிர்ந்தவனாக இருந்த போது எழுதியதால், அதனை முடிந்துபோன ஒன்று என்று குறிப்பிடுவதாகப் புரிந்துகொள்ளலாம்.

நேரடியான வரலாற்றுத் தொடர்புடைய குறிப்புகள், பிரசங்கி சாலொமோனே என்று சரியாகப் பொருத்திக் காட்டுகிறது. மேலும் வேறு எந்த மனிதனுக்கும் இது பொருந்துவதில்லை.

சாலொமோன் எருசலேமில் அரசனாக இருந்தான்: (1) பெரிதான ஞானமுடையவன் (1:16); (2) பெருஞ் *செல்வந்தன்* (2:8); (3) எந்தவொரு *இன்பத்தையும் தவிர்க்கவில்லை* (2:3); (4) பெரு மளவில் *வேலைக்காரர்களை* வைத்திருந்தவன் (2:7); (5) மிகப்பெரிய *கட்டுமானப் பணிகளையும்*, *அலங்கரிக்கும் திட்டங்களையும்* நிறைவேற்றியவன் (2:4-6).

யூதப் பாரம்பரியம்[3] சாலொமோனே இந்நூலை இயற்றியவன் என்று கூறுகிறது. பல நூற்றாண்டுக் காலமாகக் கிறிஸ்தவ அறிஞர்கள் அதே கருத்தைப் பின்பற்றினார்கள், சிறிது காலத்திற்கு முன்பு வரை அக்கருத்து பெரும்பாலும் ஒப்புக்கொள்ளப்பட்டு வந்திருக்கிறது.

மொழிநடையின் அடிப்படையில் மாறுபட்ட கருத்துடையோர் எழுப்பிய வாதத்தை எபிரெய மொழி வல்லுநர்கள் கடுமையாக எதிர்த்துக் கூறுவதாலும், மேலே சொல்லப்பட்டுள்ள சான்றுகளாலும், பாரம்பரியமாக யூத - கிறிஸ்தவக் கருத்தாகிய சாலொமோனே இதன் ஆசிரியன் என்னும் கருத்தை நாம் ஏற்கும்படியான முடிவுக்கு வந்திருக்கிறோம்.

3. எழுதப்பட்ட காலம்

அரசனாகிய சாலொமோனே இந்நூலின் ஆசிரியன் (மனித எழுத்தாளன்) என்பதை நாம் ஒப்புக்கொள்வோமெனில், இது எழுதப்பட்ட

காலம் கி.மு.930 - ஆக இருக்கும் எனலாம்; அதாவது அவன் தன்னலம் நாடி வாழ்ந்த வாழ்க்கையின் மருட்சியிலிருந்து தெளிவு பெற்ற முதிர் வயதில் எழுதினான் எனக் கருதலாம்.

"பிரசங்கி" (Koheleth) என்பவன் சாலொமோன் அல்ல என்போமானால், இந்நூல் ஓராயிரமாண்டுக் கால இடைவெளியில் எப்பொழுது வேண்டுமானாலும் எழுதப்பட்டிருக்கலாம் என்று முடிவு செய்ய வேண்டும்.[4]

பிற்கால எபிரெய மொழிநடை என்று பல அறிஞர்கள் கருதும் (ஆர்சர் இதனைத் தனித்தன்மை மொழிநடை என்று வகைப்படுத்துகிறார்) பிரசங்கி பொதுவாக, சிறையிருப்புக்குப்பின் எழுதப்பட்டது என்று கருதப்படுகிறது (கி. மு. 350 - கி. மு. 250). நற்செய்தியை அடிப்படையாகக் கொண்ட கிறிஸ்தவர்கள் சிலர் பெர்சியா அரசின் பிற்பகுதியில் எழுதப்பட்டது என்று கருதுகிறார்கள் (கி. மு. 450 - கி. மு. 350).

மிகவும் பிற்காலத்திற்கு உரியது என்று கருதினாலும் இது கி. மு. 250 க்கும் கி. மு. 200 -க்கும் இடையில் இது எழுதப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் தள்ளுபடி ஆகமங்களில் இடம்பெற்றுள்ள ஞான ஆகமம் (கி. மு. 190) நிச்சயமாக பிரசங்கி நூலைப் பயன்படுத்தியிருக்க வேண்டும். மேலும் சாவுக்கடல் பிரதிகளில் (கி. மு. இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதி) பிரசங்கி நூலின் சில பகுதிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

4. நூலின் பின்னணியும் கருப்பொருளும்

சாலொமோனே இந்நூலின் ஆசிரியன் என்னும் அடித்தளத்தின்மேல் நாம் கட்டுவோமெனில், இதனுடைய வரலாற்றுப் பின்னணியையும், நூலின் கருப்பொருளையும் சற்று நம்பிக்கையோடு கண்டறிவது எளிய செயலாக விளங்கும்.

சாலொமோனின் தேடுதல்

தனது வாழ்க்கையின் ஒரு கட்டத்தில், மனித வாழ்வின் மெய்யான பொருள் என்னவென்று அறிவதற்கான முயற்சியை சாலொமோன் தொடங்கினான். நல்வாழ்வு என்னவென்பதை அவன் கண்டுபிடிக்க முடிவு செய்தான். பெருமளவு ஞானம் அவனுக்கு அருளப்பட்டிருந்தது, மேலும் அவன் செல்வத்தின் அனைத்து வசதிகளையும் பெற்றிருந்தான் (1 இராஜா. 10:14-25; 2 நாளா. 9:22-24). நிலைத்திருக்கும் மன நிறைவை ஒருவனால் அடையமுடியுமென்றால், தானாகவே இருக்க முடியும் என்று சாலொமோன் அரசன் எண்ணினான்.

ஆனால் தன்னுடைய தேடுதலுக்கு சாலொமோன் ஒரு நிபந்தனையை இட்டுக்கொண்டான். இதனை அவன் தனியே செய்யப்போகிறான். தன்னுடைய நுண்ணறிவின் மூலமாக வாழ்வின் நிறைவைத் தன்னால் கண்டுபிடித்துவிட முடியும் என்று அவன் நம்பினான், தெய்வீக வெளிப்பாடின்றி அவன் இதனைச் செய்ய நினைத்தான். தேவனுடைய உதவியின்றி ஒருவன் தனது ஆராய்ச்சியை மேற்கொள்ள முற்பட்டதாக இது காணப்படுகிறது. வாழ்க்கையில் மிகச் சிறந்த நிலையை அடைவதை அவன் "சூரியனுக்குக் கீழ்" இருந்து கண்டுபிடிக்கப் போகிறான்.

சாலொமோனின் கண்டுபிடிப்புகள்

வாழ்வின் பொருள் என்னவென்பதைக் கண்டுபிடிப்பதற்காக சாலொமோன் மேற்கொண்ட ஆராய்ச்சி ஓர் இருளார்ந்த முடிவுக்குக் கொண்டு போய்விட்டது, "அவை அனைத்தும் அர்த்தமற்றவை; எல்லாம் காற்றைத் துரத்திப் பிடிக்கும் முயற்சியே" (1:14 - இலகு தமிழ்). அவன் தனது திறமையைக் கொண்டு முடிவு செய்தான்; அவனைப் பொறுத்தவரை, சூரியனுக்குக் கீழான வாழ்க்கை முயற்சிக்கேற்ற பலன் அற்றது. அவனால் நிறைவான நிலையை அல்லது நீடித்த மனநிறைவை கண்டுபிடிக்க முடியவில்லை. அவனுக்கு எல்லாச் செல்வமும் ஞானமும் இருந்தும், அவனால் நல்வாழ்வு என்னவென்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

அவனுடைய முடிவு சரியானது என்பதில் ஐயமில்லை. ஒருவன் சூரியனுக்கு மேலே செல்லவில்லை என்றால், வாழ்க்கையானது அர்த்தமற்றதாகக் காணப்படும். அது வீணாகப் போய்விடும். உலகம் கொடுக்கக்கூடியவை எல்லாவற்றையும் ஒன்றுகூட்டினாலும், மனிதனுடைய இருதயத்திற்கு அது மனநிறைவு அளிக்காது. திருவாளர் பாஸ்கல் இவ்வாறு கூறினார், "தேவனுடைய வடிவில் ஒரு வெற்றிடம் இருதயத்தில் இருக்கிறது." மேலும், "நீரே எங்களை உண்டாக்கினவர், கர்த்தாவே, உமக்காக எங்களைப் படைத்தீர். எங்களுடைய இருதயம் உம்மிடத்தில் இளைப்பாறுதல் காணும்வரை, இளைப்பாறுதலைக் கண்டடையாது" என்று திருவாளர் அகஸ்டின் குறிப்பிட்டார்.

சாலொமோனின் அனுபவம் கர்த்தராகிய இயேசுவின் சொற்களின் உண்மையை எதிர்நோக்கியதாக இருந்தது, "இந்தத் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு மறுபடியும் தாகமுண்டாகும்" (யோவான் 4:13). இவ்வுலகத்தின் நீர் நீடித்த மனநிறைவை மனிதனுக்குத் தருவதில்லை.

உண்மையை நாடி சாலொமோன் மேற் கொண்ட தேடுதல் முயற்சி தற்காலிகமானது, அது அவனுடைய வாழ்க்கை வரலாற்றின் ஓர் அதிகாரம் ஆகும். மெய்ம்மை என்னவென்று அறிய தத்துவஞான தேடுதலைத் தொடங்கிய போது அவனுடைய வயது என்ன என்று நமக்குத் தெரியவில்லை. ஆனால் அவன் இந்த நாளேட்டை எழுதியபோது வயது முதிர்ந்தவனாக இருந்தான் என்று வெளிப்படையாகத் தெரிகிறது (1:12; 11:9). இறுதியில் அவனுடைய பார்வை சூரியனுக்கு மேலே சென்றது; திருமறையில் மூன்று நூல்களின் பெரும் பகுதிகள் அவனால் இயற்றப்பட்டன என்ப தற்கு இது சான்றாக விளங்குகிறது. ஆனாலும், அவனுடைய வாழ்வின் முடிவுகாலத்தில் அவனு டைய பாவமும் தோல்வியும் எவ்வளவாக அவனைச் சூழ்ந்திருந்தன என்னும் உண்மை, எவ்வளவாக ஒரு விசுவாசியால் பின்னடைவு அடைய முடியும் என்பதை ஆழமாகச் சிந்திப்பதற்கு நம்மைத் தூண்டிவிடுகிறது. மேலும் கர்த்தராகிய இயேசு வுக்கு மாதிரியாக[5] பளிச்சிட்டு விளங்கும் மனிதர் களும்கூட எவ்வளவாகக் குறைவுபட்டவர்கள் என்பதையும் நாம் சிந்திக்கும்படி இது தூண்டு கிறது.

சாலொமோனும் தேவனும்

வாழ்க்கையின் நிறைவைக் கண்டடையும்படி சாலொமோன் தேடுதலைத் தொடங்கியபோதே, அவன் தேவனை விசுவாசித்தான் என்பதில் ஐய மில்லை. நாற்பதுக்கும் மேற்பட்ட இடங்களில் அவரைப் பற்றிய குறிப்புகளைப் பிரசங்கி நூலில் காணலாம். ஆனால் அவன் அந்தச் சமயத்தில் தீவிரமான விசுவாசியாக இருந்தான் என்பது இதன் பொருள் அன்று. அவன் தேவன் என்று குறிப்பிட "எலோஹிம்" என்னும் சொல்லையே பயன்படுத்துகிறான். அவர் வல்லமையுள்ள படைப்பாளர் என்னும் உண்மையை அச்சொல் வெளிப்படுத்துகிறது. அவன் தேவனை யெகோவா என்ற பெயரில் (LORD, Yahweh) ஒரு முறைகூட குறிப்பிடவில்லை. இப்பெயரிலேயே தேவன் மனிதனோடு உடன்படிக்கையின் அடிப் படையில் உறவு ஏற்படுத்தியுள்ளார்.

இது மிகவும் முக்கியமான குறிப்பு. சூரியனுக் குக் கீழே இருக்கும் மனிதன் தேவன் ஒருவர் இருக்கிறார் என்பதை அறிவான். பவுல் நமக்கு ரோமர் 1:20 -இல் நினைவுபடுத்துவது போல இது இருக்கிறது:

> எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவை, உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளி னாலே, உலகமுண்டானது முதற்கொண்டு தெளிவாய்க் காணப்படும்; ஆதலால் அவர் கள் போக்குச் சொல்ல இடமில்லை.

படைப்பின் மூலமாக தேவன் இருக்கிறார் என்பது தெளிவாகத் தெரிகிறது. நாத்திகம் ஞானத் தின் அடையாளம் அல்ல, மாறாக அது வேண்டு மென்றே வருவித்துக் கொண்ட குருட்டுத்தனம். சாலொமோன், இவ்வுலகில் வாழ்ந்த மனிதர்களி லேயே மிகவும் அறிவுள்ளவனாக இருந்தவன், தனது சொந்த மனதில் வேட்கையினால் உண் மையைத் தேடலானான், எனினும் அவன் தேவனே ஒப்புயர்வற்றவர் என்னும் உண்மையை அங்கி கரித்தவனாகவே அவ்வாறு செய்தான்.

எல்லாவற்றையும் படைத்த தேவன் (எலோஹிம்) ஒருவர் இருக்கிறார் என்பதை யாராலும் அறிய முடியும், ஆனால் தேவனை யெகோவாவாக அறிவதற்குச் சிறப்பான வெளிப்பாடு தேவை. ஆகவே இந்நூலில் மீண்டும் மீண்டும் தேவன் (எலோஹிம்) என்னும் சொல் குறிப்பிடப்பட்டிருந் தாலும், அதனை இரட்சிப்பிற்கான விசுவாசத் தோடு சமநிலைப்படுத்தவியலாது. தேவன் இருக் கிறார் என்பதற்குப் படைப்பு சான்று கூறுகிறது என்பதையே இவை யாவும் மெய்ப்பிக்கின்றன, இதனை மறுத்துரைப்போர் மதியீனர் (சங். 14:1; 53:1).

பிரசங்கி நூலுக்கான தேவை

தவிர்க்கவியலா கேள்வி எழுகிறது, "சூரியனுக்கு மேலே ஒருபோதும் எழுந்து செல்லாத நூலைத் திருமறையில் சேர்க்க தேவன் ஏன் அனுமதி வழங்கியிருக்கிறார்?"

முதலாவதாக, சாலொமோனின் இருளார்ந்த அனுபவத்தின்படி ஒருவரும் தங்களுடைய வாழ்க்கையைத் தொடரக்கூடாது என்னும் அடிப் படையில் இந்நூல் திருமறையில் இடம்பெற்றுள் ளது.

உடைமைகள், இன்பம் அல்லது பயணம் இவை ஒருபுறமிருக்க, போதைப் பொருட்கள், மது பானம் அல்லது பாலியல் ஒழுக்கக்கேடுகள் இவை மறுபுறம் செயல்பட மனிதன் தனது இயல்பான மன நிலையில், தன்னைத் தானே மன மகிழ்ச்சி அடை யச் செய்ய முடியும் என்று உள்ளுணர்வு கொள்கி றான். ஆனால், நம்மில் ஒவ்வொருவரையும் விட மிகுந்த ஞானத்தோடும் மிகுந்த செல்வத்தோடும் வாழ்ந்த மனிதன் தனது வாழ்வில் இதனை அடைய முயன்று தோற்றுப்போனான் என்பதை

இந்நூலின் செய்தி கூறுகிறது. ஆகவே நாம் சூரியனுக்கு மேலே இருக்கிற ஒருவரை, வாழ்வில் மனநிறைவு அளிக்கக்கூடிய ஒரே ஒருவரை, அதாவது கர்த்தராகிய இயேசு கிறிஸ் துவை நோக்கிப் பார்த்து, நாம் செய்யக்கூடிய எல்லாச் செலவுகளிலிருந்தும், தலைவலியி லிருந்தும், நம்பிக்கை இழக்கக் கூடிய நிலை யிலிருந்தும், தோல்வி மனப்பான்மையிலிருந்தும் விடுபடலாம்.

இதுகாறும் நற்செய்தியை ஏற்க மனதற்ற வர்களுக்கு, தனித்தன்மை வாய்ந்த இந்நூல் பயனுள்ளதாக விளங்குகிறது. முனைவர் W. T. டேவிசன் கூறுகிறார்:

> பிரசங்கிக்கும் கிறிஸ்துவின் நற்செய்திக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை விளக்கிக் கூற வேண்டிய அவசியமில்லை. முந்தைய காலத் தில் தோன்றிய ஞான இலக்கியம் வெறுமை யாகப் போகும்படியோ பயனற்றுப் போகும் படியோ புதிய நற்செய்தியின் தொடக்கம் செய்து விடவில்லை என்பதை நாம் சற்று வலியுறுத்திக் கூறவேண்டிய தேவை உள்ளது. அது தன்னு டைய வேலையைத் தனது காலத்தில் செய்தது, அது இன்னும் செய்ய வேண்டிய வேலை உள்ளது. மனிதனுடைய வரலாற்றில் அவன் இயேசு நாதரின் காலடியில் அமருவதற்கு ஆயத்தமாகாத நேரங்கள் இருக்கின்றன, அத்தகைய நேரங்களில் அவன் பிரசங்கியின் பள்ளிக்குச் செல்ல வேண்டும். இதயமானது மெய்யாக நிரப்பப்படுவதற்கு முன் வெறுமை யாக்கப்பட வேண்டும். தற்காலப் பிரசங்கி அவ் வப்போது பாடத்தை வலியுறுத்திப் புகட்ட வேண்டும், அது இன்னும் வழக்கற்றுப் போக வில்லை, அது வழக்கற்றுப் போகாது, ''தேவ னுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக் கொள்; எல்லா மனிதர் மேலும் விழுந்த கடமை இதுவே.'' இதனைத் திறம்படச் செய்வதற்கு அவன் கிறிஸ்துவிடம் வந்தே கற்க வேண்டும். மேலும் உயர்ந்த பாடங்களைக் கற்பதற்கு அவன் கிறிஸ்துவிடம் வரவேண்டும், அதற் கான வழியை ஆயத்தப்படுத்துவதே இந்நூலின் வேலை.[6]

பொருட்சுருக்கம்

1. முகவுரை: சூரியனுக்குக் கீழே எல்லாம் மாயை (1:1-11)

2. எல்லாம் மாயை (1:12-6:12)

அ. அறிவாற்றல் சார்ந்த நாட்களின் மாயை (1:12-18)

ஆ. இன்பம், புகழ், செல்வச்செழிப்பு ஆகிய மாயை

இ. வாழ்வு, மரணம் என்னும் சுழற்சியாகிய மாயை (அதி. 3)

ஈ. வாழ்வின் ஏற்றத்தாழ்வுகளாகிய மாயை (அதி. 4)

உ. புகழ்பெற்ற சமயமும் அரசியலுமாகிய மாயை (5:1-9)

ஊ. விரைவில் மறைந்து போகும் செல்வமாகிய மாயை (5:10-6:12)

3.சூரியனுக்குக் கீழ் வாழும் வாழ்க்கைக்கான அறிவுரை (7:1-12:8)

அ. சூரியனுக்குக் கீழே நல்லதும் சிறந்ததும் (அதி. 7)

ஆ. சூரியனுக்குக் கீழான ஞானம் (அதி. 8)

இ. சூரியனுக்குக் கீழே வாழ்க்கையை மகிழ்ச்சியோடு அனுபவித்தல் (அதி. 9)

ஈ. சூரியனுக்குக் கீழே ஞானியும் மூடனும் (அதி. 10)

உ. சூரியனுக்குக் கீழே நன்மையைப் பரவச் செய்தல் (அதி. 11:1-12:8)

4. முடிவுரை: சூரியனுக்குக் கீழே மிகச்சிறந்தது (12:9-14)

பொருட்சுருக்க அட்டவணை

தலைப்பு	வாதப்பொருள்		சான்று		ஆலோசனை		
கருத்து	பொருள்		விளக்கம்		முடிவு		
	சூரியனுக்கு கீழே எல்லாம் மாயை		வாழ்வே மாயை		சூரியனுக்குக்கீழ்		சூரியனுக்குக்கீழ் சிறந்தது
பகுப்பு	அறிமுகம்	விளக்கம்	அறிவுசார்ந்த ஆதாரம்	வாழ்வுச் சுழற்சி	நல்லதும் சிறந்ததும்	ஞானியும் முடனும்	கர்த்தருக்குப் பயப்படுதல்
வசனம்	1:1-3	1:4-11	1:12-2:26	3:1-6:12	7:1-9:18	10:1-11:10	12:1-14
இடம்	சூரியனுக்குக் கீழே						
காலம்	கி. மு. 930						

விளக்கவுரை

1. முகவுரை: சூரியனுக்குக் கீழே எல்லாம் மாயை (1:1-11)

1:1 எழுத்தாளன் தன்னைத் **தாவீதின் குமாரனும் எருசலேமின் ராஜாவுமாகிய பிரசங்கி** என்று அறிமுகப்படுத்துகிறான். பிரசங்கி என்னும் சொல் கவனத்தை ஈர்க்கக்கூடியது. இதற்கு இணையான எபிரெயச் சொல் கோஹலேத் (Koheleth) ஆகும். இதன் பொருள் "அழைப்பவர்" அல்லது "ஒன்று கூட்டுபவர்" என்பதாகும். இதற்கான கிரேக்கச் சொல்லான எக்லிசியாஸ்டஸ் (ekklesiates) என்பதன் பொருள் "ஒரு சபையைக் கூட்டுபவர்" என்பதாகும். அதிலிருந்து இது பல்வேறு பொருள்களைக் கொண்டதாக விவரிக்கப்படுகிறது: "அவை கூட்டுபவர், திரட்டுபவர், பேச்சாளர், தருக்கம் செய்பவர், பிரதிநிதி, பிரசங்கி."

பிரசங்கி தாவீதின் மகன். **குமாரன்** என்று இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள சொல் பேரனையோ, பின்னர் பிறந்த ஒரு வழித்தோன்றலையோ குறிக்கக் கூடும் என்பது ஒப்புக்கொள்ளப்படத்தக்கது. முதலாவது கொடுக்கப்பட்டுள்ள பொருள் எல்லாவற்றிலும் சிறந்தது. தாவீதின் வழிவந்தவர்களில் இஸ்ரவேலின் அரசனாக எருசலேமிலிருந்து ஆட்சிபுரிந்தவன் சாலொமோன் ஒருவனே (வச. 12). மற்ற அரசர்கள் யாவரும் யூதாவுக்கு மட்டுமே அரசர்களாயிருந்தார்கள். மற்ற மன்னர் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் யாவரும் சீகேமை (1 இராஜா. 12:25) அல்லது சமாரியாவை (1 இராஜா. 16:24) தங்கள் தலைநகராகக் கொண்டிருந்தார்கள். அவர்கள் எருசலேமிலிருந்து ஆட்சிபுரியவில்லை.

1:2 சாலொமோன் உடனடியாக நூலின் பொருள் நோக்கிச் செல்கிறான்; நாம் கடைசி அதிகாரம் வரை காத்திருக்க வேண்டியதில்லை. சூரியனுக்குக் கீழே செய்யப்பட்ட சாலொமோனின் சோதனை ஆராய்ச்சி யாவும் **எல்லாம் மாயை** என்னும் விடையையே தந்திருக்கின்றன. வாழ்வு நிலையற்றது, விரைந்து செல்வது, பயனற்றது, வெறுமையானது, அற்பமானது. அது அர்த்தமற்றது. இவ்வுலகில் உள்ள எதுவும் உயிர்வாழ்வதற்குச் சரியான நோக்கத்தைத் தருகிறதில்லை.

இது உண்மையா? ஆம், இது முற்றிலும் உண்மை! இந்த வாழ்வே முடிவானது என்றால், மனித வாழ்வுக்குக் கடைசித் திரையாக மரணம் விளங்குகிறது என்றால் வாழ்க்கை வெறுமனே நீராவியே ஆகும் - உறுதிப்பாடற்றது, விரைந்து மறைகிற ஒன்று.

பாவம் உட்புகுந்ததன் காரணமாக படைப்பு முழுவதுமே மாயைக்கு அல்லது அழிவுக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது என்று அப்போஸ்தலனாகிய பவுல் நமக்கு நினைவுபடுத்துகிறார் (ரோமர் 8:20). முதலாவது பெற்றோர் தங்களுடைய இரண்டாவது மகனுக்கு "மாயை" அல்லது "ஆவி" என்னும் பொருள்கொண்ட ஆபேல் என்னும் பெயரைச் சூட்டியது பொருளற்ற செயல் அல்ல. சாலொமோன் கூறியது சரியே. சூரியனுக்குக் கீழே **எல்லாம் மாயை.**

1:3 நலிவுற்ற மனிதனின் வாழ்வு உழைப்பாலும், செயல் நடவடிக்கைகளாலும் நிறைந்திருக்கிறது. ஆனால் எல்லாம் முடிவடைந்து போகையில் அவன் என்ன பயன் அடைகிறான்? அவன் சலிப்பூட்டும் வகையில் ஒரே வேலையைச் செய்கிறான், களைப்பு மேலிடுகிறது, ஒரு முன்னேற்றமும் இல்லை. அவனிடத்தில் வேலைக்குப் போவதற்கான காரணத்தைக் கேளுங்கள், "பணம் வேண்டுமே" என்று பதிலுரைக்கிறான். ஆனால் அவனுக்குப் பணம் ஏன் தேவைப்படுகிறது? உணவு வாங்குவதற்காக. அவனுக்கு ஏன் உணவு வேண்டும்? அவனுடைய உடல்வலிமையைப் பராமரிக்க வேண்டும். ஆம், ஆனால் அவன் ஏன் தன் உடல் வலிமையைப் பராமரிக்க வேண்டும்? வலிமை இருந்தால்தான் அவன் வேலைக்குச் செல்ல முடியும். இவ்வாறாக அவன் எங்கே இருந்தானோ அதே இடத்துக்குத் திரும்பவும் வருகிறான். உழைப்புக்கு வலிமை வேண்டும், வலிமைக்கு உணவு வேண்டும், உணவுக்குப் பணம் வேண்டும், பணத்துக்கு உழைப்பு வேண்டும், உழைப்புக்கு வலிமை வேண்டும், வலிமைக்கு உணவு வேண்டும், உணவுக்குப் பணம் வேண்டும், பணத்துக்கு உழைப்பு வேண்டும்; இது தொடர்கிறது, இதற்கு முடிவே இல்லை. ஹென்றி தொரேயு என்பார் தான் நம்பிக்கை இல்லாத அமைதியான வாழ்க்கை வாழ்வதாகக் கூறினார்.

பேருந்து நிறுத்தத்தில் ஒரு பெண் அழுது கொண்டிருந்ததைக் கண்ட கிறிஸ்தவர் ஒருவர் அப்பெண்ணிடம் ஏதாவது உதவி தேவையா என்று கேட்டார். "இல்லை, இல்லை, நான் களைத்துச் சலிப்படைந்து போனேன். எனது கணவர் கடினமாக உழைக்கிறார், தேவையான அளவு வருமானம் இல்லை. ஆகவே நானும் வேலை செய்கிறேன். ஒவ்வொரு நாளும் அதிகாலையில் எழுகிறேன், எங்களுடைய நாலு பிள்ளைகளுக்கும் காலை உணவு ஆயத்தம் செய்கிறேன்,

மதிய உணவு கட்டிக்கொள்கிறேன். பின்னர் என் னுடைய வேலைக்குப் பேருந்தில் செல்கிறேன். பிறகு மாலையில் வீட்டுக்குச் செல்கிறேன், மேலும் கடினமான வேலை, சில மணிநேரத் தூக்கம், இதேபோல் அடுத்தநாள், இதற்கு முடிவே இல்லாதது போலத் தோன்றுகிறது, இதில் நான் களைப்படைந்து மகிழ்ச்சியை இழந்து போனேன்" என்றார் அந்தப் பெண்மணி.

H. L. மென்கென் என்பார் இவ்வாறு கூறினார்:

> மனித அனுபவத்தைக் குறித்த அடிப்படை உண்மை சோகம் அல்ல, சலிப்பே ஆகும். அது பெரும்பாலும் வேதனை அளிக்கக் கூடியது என்பது சரியல்ல, அதில் ஒருவித அர்த்தமும் இல்லை.[7]

1:4 இயற்கைச் சுற்றுப்புறச் சூழ்நிலையோடு மனிதனுடைய நிலையற்ற வாழ்வை ஒப்பிட்டுக் காணும்போது அவை முற்றிலும் வேறுபட்டிருக் கின்றன. ஒரு தலைமுறைக்குப் பின்னர் அடுத்த தலைமுறை எவ்விதத் தடையும் இல்லாமல் விரைந்து வருகிறது. இதுவே சூரியனுக்குக் கீழான வாழ்க்கை.

> என்றும் வாழ்வேன் என்கிறான் மனிதன்
> அவனது கனவு உண்மை அல்லவே!
> அவனது மறைவு சடிதியில் வந்திடும்
> முகத்தின் சாயலும் விரைவில் மறைந்திடும்![8]
>
> – வில் H. ஹௌடன்

தெய்வீக வெளிப்பாடு இல்லாமற் போயிருந் தால், தற்போதைய பூமி என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் என்றே எண்ணியிருப்போம். அவ்வாறுதான் சாலொமோன் முடிவு செய்கிறான். ஆனால் வரப்போகிற கர்த்தருடைய நாளில் பூமி யும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்து போகும் என்று பேதுரு கூறுகிறார் (2 பேதுரு 3:10).

1:5 இயற்கையானது மாற்றமில்லாத சுழற்சி யில் இடைவிடாமல் சென்று கொண்டிருக்கிறது. எடுத்துக்காட்டாக, கிழக்கில் **சூரியன் உதிக் கிறது**, வானங்களின் ஊடாக அது சுறுசுறுப்பாக ஓடி மாலையில் மறையும்படி மேற்கே செல்கிறது. பின்னர் உலகத்தின் மறுபக்கம் விரைந்தோடி கிழக்கில் உதிக்க ஆயத்தமாகிறது. முடிவற்ற அமைப்பாக இது தோன்றுகிறது, காலம் காலமாக இது நடந்து கொண்டிருக்கிறது. மனிதன் வெறு மையானவன், விரைந்து ஓடுகிற நிழல் போன்ற வன் என்பதை இது உணரச் செய்கிறது.

உண்மையில் பூமியே சூரியனுடைய முன்னி லையில் சுழல்கிறது, மேலும் அது சூரியனைச் சுற்றியும் வருகிறது, இவ்வாறிருக்க சூரியன் தீவிரித்துச் செல்வதாக சாலொமோன் கூறியிருக் கிறானே, இவன் அறிவியல் பூர்வமாகப் பெருந் தவறு செய்துவிட்டான் என்று யாரேனும் குற்றஞ் சாட்ட முற்பட்டால் உங்களுடைய கோபத்தைச் சற்று அடக்கி வையுங்கள். மனிதனுக்கு அது எவ்வாறு தோற்றமளிக்கிறதோ அதைத்தான் அவன் கூறியிருக்கிறான். சூரியன் உதிப்பதாக வும் மறைவதாகவும் தோன்றுகிறது. அறிவியல் அறிஞர்களுங்கூட எல்லா நேரங்களிலும் இத்த கைய சொற்களையே பயன்படுத்துகிறார்கள். அது உள்ளவாறே அறிந்துகொள்ளப்படுகிறது, வேறொரு விளக்கம் இதற்குக் கூறப்பட வேண்டிய அவசியம் இல்லை.

1:6 ஆறாவது வசனத்திலும் சாலொமோன் தனது சிந்தனையைத் தொடர்கிறான். **காற்று** அடிப்பதும்கூட ஒவ்வொரு ஆண்டிலும் அதனதன் காலத்துக்கு ஏற்ப வீசுகிறது. மழைக்காலத்தில் வடகாற்று இஸ்ரவேலின் மேல் வீசி, தெற்கி லுள்ள பாலைவனத்தை நோக்கிச் செல்கிறது. கோடைகாலத்தில் தெற்கிலிருந்து வறண்ட காற்று வடக்கு நோக்கி வீசுகிறது. மாற்றமற்ற மந்தத் தன்மை அவை சுழன்று அடிப்பதிலும் காணப்படு கிறது. அதன் பிறகு உலக மனிதர்களைக் குறித்த எவ்வித உணர்வும் அற்றவகையில் அவர்களைப் புறக்கணித்தபடி, காட்சியிலிருந்து அக்காற்று கடந்து செல்கிறது.

1:7 பூமியும், சூரியனும், காற்றும் மட்டுமின்றி நீரும் கூட சலிப்பூட்டும் வகையில் பல நூற்றாண் டுக் காலமாகத் தான் செய்ததையே செய்து கொண்டிருக்கிறது. **எல்லா ஆறுகளும் கடலில் ஓடி வீழ்கின்றன,** ஆனாலும் கடல் நிரம்பி வழி யக்கூடிய அளவு தண்ணீர் அங்கு சேருவ தில்லை; ஏனெனில் சூரியன் பெருமளவு நீரை ஆவியாக்குகிறது. காற்று குளிர்ச்சி அடைகிற போது ஆவியானது அடர்த்தி பெற்று மேகங்கள் உருவாகின்றன. பின்னர் அந்த மேகங்கள் வானத்தில் காற்றால் அடித்துச் செல்லப்பட்டு, நிலப்பகுதியில் மழையாகப் பொழிகிறது, பனியும் பனிக்கட்டிகளும் விழுகின்றன. பெய்த மழைநீர் ஆற்றில் சேர்ந்து, உபரி நீர் மீண்டும் கடலை நோக்கிச் செல்கிறது. இயற்கையின் மாற்றமற்ற செயல்பாடுகள், மனிதனின் முடிவில்லா உழைப்பை அவனுக்கு நினைவுபடுத்துகிறது. "நான் ஓர் ஆற்றைப் போன்றவன், எப்போதும் ஓடிக்

கொண்டே இருக்கிறேன், ஒருபோதும் கடலுக்குள் செல்வதில்லை" என்று கிறிஸ்டா.ச்.பர்சன் எழுதியபோது, இந்த வசனத்தைத் தனது நினைவில் கொண்டிருந்தார் எனத் தோன்றுகிறது.

1:8 இவ்வாறாக, இவ்வுலகிற்கே உரிய வாழ்வு சோர்வினால் நிறைந்திருக்கிறது. அதைக் குறித்த மந்தநிலை, சலிப்புத்தன்மை, பயனற்ற நிலை ஆகியவற்றை விவரித்துக்கூற மனிதனுடைய மொழி போதாது. மனிதன் ஒருக்காலும் மன நிறைவு அடைவதில்லை. எவ்வளவு அதிகமாகப் பார்த்தாலும், இன்னும் அதிகமாகக் காண விரும்புகிறான். அவனுடைய செவிகளும் ஏதாவது புதிய செய்தியைக் கூறும்போது கேட்க விருப்பமற்றுப் போகிறதில்லை. அவன் இடைவிடாமல் பயணம் செய்கிறான், புதிய பரபரப்பூட்டும் உணர்வுகளைப் பெற வெறியார்வம் கொண்டு அலைகிறான், புதிய காட்சிகளை, புதிய ஓசைகளை அனுபவிக்கத் துடிக்கிறான். அமெரிக்க நாட்டில் சமுதாய வாழ்க்கை வல்லுநர் ஒருவர் கூறியது போல புதிய அனுபவத்திற்கான அடிப்படை விருப்பத்தை அவன் பின்தொடர்ந்து செல்கிறான். ஆனால் அவன் மனநிறைவு அற்றவனாகக் களைத்துப் போய், திரும்பி வருகிறான். உலகத்திலுள்ள யாவும் மனிதனுடைய இருதயத்துக்கு நிலையான மகிழ்ச்சியைக் கொண்டுவர முடியாத நிலையில், அவன் உருவாக்கப்பட்டிருக்கிறான். ஆனால் அவனுடைய நிலை நம்பிக்கையற்றது என்பது இதன் பொருளன்று. அவன் செய்ய வேண்டியதெல்லாம் ஒன்றே ஒன்றுதான். சூரியனுக்கு மேலே இருக்கிறவரும், "தவனமுள்ள ஆத்துமாவைத் திருப்தியாக்கி, பசியுள்ள ஆத்துமாவை நன்மையினால் நிரப்புகிறவருமாகிய" கர்த்தரிடம் செல்ல வேண்டும் (சங். 107:9).

> புவிதரும் இன்பம் விரைவினில் மறையும்
> குவித்திடும் செல்வம் அழிந்திடும் மாயை
> பகலவன் சுடரொளி பளிச்சிடும் மாயை
> புகழ்ச்சியும் பகட்டும் மயக்கிடும் மாயை!
>
> புவியினில் நாங்கள் வாழ்ந்திடும் நாட்களில்
> தவித்திடும் உளத்தில் அமைதியைத் தருவீர்
> உமைப்போல் ஒருவர் உலகினில் இல்லை
> சுமையெலாம் நீக்கித் தாகம் தீர்ப்பீர்![9]

1:9 சூரியனுக்குக் கீழே நூதனமானது ஒன்றுமில்லை என்பது சாலொமோனின் மயக்க நிலையின் மற்றோர் அம்சத்தின் கண்டுபிடிப்பு ஆகும். வரலாறு இடைவிடாமல் முந்தி நிகழ்ந்ததையே மறுபடியும் நிகழச்செய்யும். அவன் கிளர்ச்சியூட்டும் நூதனமானவற்றைத் தேடிக் கண்டுபிடிக்க வாஞ்சித்தான், நீண்டகாலம் செல்வதற்குள் எல்லாம் அதனுடைய வழியில் முன்னரே இருந்தன என்பதைக் கண்டறிந்தான்.

1:10 உண்மையாகவே நூதனமானது எதுவும் இல்லையா? ஆம், ஒரு பொருளில் அது உண்மைதான். நவீன காலத்தின் அரிய கண்டுபிடிப்புகள் யாவும்,தொடக்கத்தில் படைப்புக்குள்ளாகப் பாதுகாப்பாகப் பூட்டிவைக்கப்பட்டிருந்த அடிப்படை உண்மைகளின் வளர்ச்சியேயாகும். மனிதனுடைய பெருமைக்குரிய வெற்றிகள் பெரும்பாலானவற்றிற்கு இயற்கையில் சமநேர்படிவங்களைக் காணமுடியும். எடுத்துக்காட்டாக, மனிதன் பறக்கும் விமானங்களைக் கண்டு பிடிப்பதற்கு வெகு காலத்திற்கு முன்னிருந்தே பறவைகள் பறந்துகொண்டிருக்கின்றன. ஏனோக்கும் எலியாவும் விண்வெளியில் கொண்டு செல்லப்பட்டார்கள். அவ்வாறு செல்கையில் அவர்கள் பிராணவாயுவை எடுத்துச் செல்லவில்லை! ஆகவே புதிய கண்டுபிடிப்புகளைச் செய்ய வேண்டும் என்று எண்ணி தங்களுடைய வாழ்க்கையையே அதற்காகச் செலவிட்டவர்கள் ஏமாற்றமடைய வேண்டிய நிலையில்தான் இருக்கிறார்கள். நாம் பிறப்பதற்கு வெகுகாலத்திற்கு முன்னரே **பூர்வகாலங்களில்** அது ஏற்கனவே நடந்துவிட்டது.

1:11 மனிதன் விரைவாக மறக்கிறான், மறக்கப்படுகிறான்; இது ஏற்கவேண்டிய மற்றுமொரு கசப்பான உண்மையாக விளங்குகிறது. நிலையான புகழ் கானல்நீர் போன்றது. நம்முடைய தாத்தா பாட்டி ஆகியோரது பெற்றோரின் பெயர்கள் நம்மில் பலருக்கும் தெரியாது. நமது நாட்டின் கடைசிப் பிரதம மந்திரிகளின் பெயர்களை வரிசையாகச் சொல்ல வேண்டுமென்றால் பலருக்குத் தெரிவதில்லை. நமக்கு நாமே முக்கியத்துவம் அளிக்கிறோம், நாம் இல்லையெனில் இந்த உலகம் செயல்படாது என்று எண்ணுகிறோம்; ஆனால் இறந்து சிறிது காலத்துக்குள்ளாக நாம் மறக்கப்படுகிறோம், இவ்வுலகின் செயல்பாடுகள் வழக்கம்போல் நடந்துகொண்டுதான் இருக்கின்றன.

2. எல்லாம் மாயை (1:12-6:12)

அ. அறிவாற்றல் சார்ந்த நாட்களின் மாயை (1:12-18)

1:12 சாலொமோனின் கண்டுபிடிப்புகளின் விவரம் அவ்வளவுதான். இப்பொழுது அவன் வாழ்க்கையில் மிகவும் நன்மையானது எது என்று

அறியும்பொருட்டு, அவன் மேற்கொண்ட பயணத்தின் விவரங்களை நமக்காகத் திரும்பக் கூறப் போகிறான். அவன் செல்வத்திலும், செல்வாக்கிலும், திறமையிலும் உயர்நிலையில் இருந்ததைச் சுட்டிக்காட்டும்படி, தான் **எருசலேமில் இஸ்ரவேலருக்கு அரசனாக** இருந்ததாக நினைவூட்டுகிறான்.

நான் ராஜாவாயிருந்தேன் என்று அவன் கூறியதன் பொருள், அப்பொழுது அவனுடைய ஆளுகை முடிந்துவிட்டது என்பதன்று. அவன் அரசனாயிருந்தான், இன்னமும் அரசனாயிருக்கிறான் (வச. 1)

1:13 மகிழ்ச்சியடையும்படி சாலொமோன் **சூரியனுக்குக் கீழே** தனது தேடுதல் வேட்டையை இங்கு தொடங்குகிறான். முதலில் அவன் அறிவு சார்ந்த வழியில் தனது பயணத்தை மேற்கொள்ள முடிவு செய்கிறான். போதுமான அளவு அறிவைப் பெற்றால்தான் மகிழ்ச்சியை அடையமுடியும் என்று அவன் கருதுகிறான். ஆகவே அவன் எல்லாப் பாடத்திட்டங்களும் ஒருங்கிணைந்த கல்வியைப் பெறுவதற்குத் தன்னை ஒப்புவிக்கிறான். ஆராய்ச்சி, மற்றும் ஆய்வுப்பயணம், பல பொருட்சேர்க்கை, ஒரு பொருள் கூறுபிரித்தல், தனிப்பண்புகளை ஒன்றுகூட்டிப் பொதுப் பண்பை அறிதல், பொதுப்பண்பிலிருந்து ஒரு பொருளின் தனிப்பண்பை அறிதல் இவையெல்லாவற்றிலும் ஈடுபட சாலொமோன் தன்னை ஒப்புவித்தான். ஆனால், கற்றல் தன்னில்தானே முடிவுடைய செயல் என்று வெகுவிரைவில் அறிந்து மருள்நீக்கம் பெற்றான். இவ்வகையான மகிழ்ச்சியற்ற மந்தமான தொழிலில் அதாவது, வாழ்வின் பொருள் என்னவென்பதைக் கண்டுபிடிக்க வேண்டுமென்னும் வேலையில் ஈடுபடும்படி தேவன் மனிதர்களை அனுமதிக்கிறார்.

இருபதாம் நூற்றாண்டு அறிஞர் மால்கட் முகரிட்ஜ் அதே முடிவுக்கு வந்தார்:

> கல்வி மனிதனை ஆயத்தப்படுத்துகிறது என்றும், சிறு பிள்ளைகள் செய்யும் தீய செயல்கள் முதல் முதிர்வயது அடைவதற்கு முன்பே முதிர்ச்சியடைதல் வரை எல்லாவற்றிற்கும் அது தீர்வு என்றும் காலங்காலமாகச் சொல்லப்பட்டு வருகிறது. இது அர்த்தமற்ற செயலும் ஏமாற்று வேலையுமாகும். பெரும்பாலும் அது மதியீனத்தை வளர்க்கிறது, இறுமாப்பைப் பெருக்குகிறது, ஆதாரமற்றதை நம்பச் செய்கிறது. மேலும் கருத்து மாற்றம் செய்வோர் மற்றும் பதிப்பகங்கள் வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றின் உதவியுடன் கல்வி என்னும் பெயரில் எல்லோரையும் கீழ்ப்படுத்துகிறார்கள்.[10]

சமீப காலத்தில் ஒருவர் பல்கலைக் கழகத்தின் நூலகத்தின் மதிற்சுவரில் கவர்ச்சிமிக்க அறிவிப்பை மிகப்பெரிய எழுத்துக்களாக எழுதினார்: **அக்கறையின்மை ஆட்சிபுரிகிறது.** யாரோ ஒருவர் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் சாலொமோன் கற்றுக்கொண்ட பாடத்தை கண்டுபிடித்திருக்கிறார் - முழு நிறைவை அடைவதற்குக் கல்வி நிச்சயமான வழி அல்ல; ஆனால் அது தன்னில்தானே சலிப்பூட்டுவதாக இருக்கிறது.

அறிவு சார்ந்த தேடுதல், வாழ்வில் முக்கிய பங்கு வகிப்பதில்லை என்பது இதன் பொருளன்று. அதற்கோர் இடமுண்டு, அந்த இடம் கிறிஸ்துவின் பாதமேயாகும். அது தன்னில் முடிவடைகிறதாக இருக்கக்கூடாது, மாறாக அது கிறிஸ்துவுக்கு மகிமை உண்டாக்கும் வழிதுறையாக விளங்க வேண்டும்.

இந்த வசனத்தில் இடம்பெற்றுள்ள தேவன் என்னும் குறிப்பு, ஆழ்ந்த தனிப்பட்ட விசுவாசத்தின் அடையாளம் என்று எண்ணிவிடக்கூடாது. இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள தேவன் என்னும் சொல் அவருடைய பெயராகிய எலோஹிமைக் குறிக்கும் சொல் என்று திருவாளர் W. J. எர்ட்மேன் கூறுகிறார்.[11] முன்னுரையில் நாம் குறிப்பிட்டது போல இந்தப் பெயர் இப்பிரபஞ்சத்தை உண்டாக்கிய சர்வ வல்லவர் என்று அவரை அறிமுகப்படுத்துகிறது. ஆனாலும் இந்நூலில் எந்தவொரு இடத்திலும் சாலொமோன் அவரை உடன்படிக்கையைக் கைக்கொள்ளும் யெகோவா என்றும், அவரே தம்மிடத்தில் விசுவாசம் வைக்கிறவர்களுக்கு மீட்பின் கிருபையை வெளிப்படுத்துபவர் என்றும் குறிப்பிடவில்லை.

1:14 அந்த நாட்களில் இஸ்ரவேலில் கிடைக்கப்பெற்ற மிகச் சிறந்த கல்வியை சாலொமோன் பெற்றிருப்பான் என்பதில் சிறிதும் ஐயமில்லை. **சூரியனுக்குக் கீழே** நடந்த எல்லாவற்றையும் அவன் பார்த்தான் என்று இங்கு மிகத் துணிச்சலாகக் குறிப்பிடப்பட்டிருப்பதிலிருந்து இது தெளிவாகத் தெரிகிறது. அறிவியல், தத்துவ ஞானம், வரலாறு, நுண்கலைகள், சமூக அறிவியல், இலக்கியம், சமயம், மனவியல், ஒழுக்கவியல், மொழிகள், இன்ன பிற கல்விப் பிரிவுகள் எல்லாவற்றிலும் மிகப் பெருமளவு அவன் அறிவு பெற்றிருந்தான் என்பதே இதன் பொருள்.

ஆனால் அவன் தேடியதை அவனுடைய பெயருக்குப் பின் எழுதப்பட்ட பட்டங்களும், அவனுடைய அறையில் அடுக்கி வைக்கப்பட்ட சான்றிதழ்களும் தரவில்லை. அதற்கு மாறாக அவை யாவும் காற்றைப் போலப் பிடிக்க முடியாதவையும் அர்த்தமற்றவையுமாக இருந்தன என்னும் முடிவுக்கு அவன் வந்துவிட்டான்.

1:15 வாழ்க்கையில் ஏற்படுகிற எல்லாப் புதிர்களுக்கும் நூல்களைப் படிப்பதாலே தீர்வு காண முடியாது என்பதை அவன் கண்டபோது ஆர்வம் குன்றியவனானான். **நேராக்க முடியாத கோணலானவை, எண்ணிமுடியாதபடி** விடுபட்டவை அங்கு இருக்கின்றன. திருவாளர் ராபர்ட் லாரின் விவரிக்கிறார்:

> தீர்வுகாண இயலாத முரண்பாடுகளாலும் ஒழுங்கின்மைகளாலும் உலக வாழ்க்கை நிறைந்திருக்கிறது; அதற்கு எதிர்மாறானபடி வாழ்வு பொருட்செறிவுமிக்கது, மதிப்பு வாய்ந்தது என்னும் பெயர்பெறத்தக்க ஏதொன்றும் இல்லாமல் அது வெறுமையாயிருக்கிறது.[12]

மனிதனால் நிலவுக்குப் பறந்து செல்ல முடியும், ஆனால் காற்றின் அசைவைக் குறித்த மனிதனுடைய அறிவுக்கு எட்டிய அறிவியல் விதிகள் அனைத்தையும் மீறி தேனீ பறந்து செல்கிறது. அணுவின் மர்மங்கள் அனைத்தையும் அறிவியல் அறிஞர்கள் ஆராய்ந்து அறிந்திருக்கிறார்கள், ஆனால் அவர்களால் மின்னலை அடக்கி ஆளவோ, அதனுடைய சக்தியைச் சேர்த்துவைத்துப் பயன்படுத்தவோ தெரியாது. இளம் பிள்ளை வாதம், காசநோய் ஆகியவற்றை அவர்களால் கட்டுப்படுத்த முடியும், ஆனால் சாதாரண சளி, தடுமன் போன்றவற்றைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

1:16 கல்வியில் தனது வெற்றிகளை அடைந்த பிறகு, சாலொமோன் தன்னைப் பற்றிய விவரங்களைப் பட்டியலிடத் தொடங்கினான். தனக்கு முன் எருசலேமில் அரசாட்சி புரிந்த அனைவரையும் விட அவன் அதிக ஞானமுடையவனாக இருந்ததாக அவனால் பெருமை பாராட்ட முடிந்தது (1 இராஜா. 4:29-31; 2 நாளா. 1:12). அவனுடைய மனம் பெருமளவில் அறிவைக் கிரகித்திருந்தது. தனது வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும், அது சரியான முடிவு எடுப்பதாக இருக்கலாம் அல்லது பிறருடன் விவேகத்துடன் நடந்துகொள்வதாக இருக்கலாம். எதுவாயினும் ஒவ்வொரு நாளும் அவன் தனது அறிவை எவ்விதமாக நடைமுறைப்படுத்துவது என்பதை அறிந்திருந்தான்.

1:17 சாலொமோன் ஞானத்தைப் பெறுவதற்காகத் தன்னை எவ்விதமாக ஒழுங்குபடுத்திக் கொண்டான் என்பதையும், பைத்தியத்தையும் மதியீனத்தையும் குறித்துக் கற்றது எவ்வாறு என்பதையும் நினைவுபடுத்துகிறான். மனிதனுடைய நடத்தையின் இருவேறு கோடிகளையும் அவன் ஆராய்ந்தான்; வாழ்க்கையின் மெய்யான பொருள் இவையிரண்டில் எதில் இருக்கிறது, அல்லது இரண்டிலும் இருக்கிறதா என்பதைக் கண்டறியும்படி அவற்றை ஆராய்ந்தான். வாழ்க்கை அனுபவங்களின் எல்லைவரை அவன் சென்றான், ஆனால் அவனுடைய துயர்மிக்க முடிவு யாவும் காற்றைத் துரத்திப் பிடிக்கும் முயற்சியாகவே இருந்தது.

பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர், ஹென்றி மார்டின் என்னும் இளைஞன் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் மிகப்பெரிய பட்டங்களைப் பெற்றான். ஆனாலும் அவன் கல்வியில் மிகப் பெரிய வெற்றியை பெற்றபோது, "நான் நிழலைப் பற்றிக் கொண்டிருந்ததாகவே தோன்றியது" என்றான். பல்கலைக் கழகப் பரிசுகளை வென்ற அந்நிலையிலிருந்து அவனுடைய கண்கள் இப்பொழுது, நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய உன்னத அழைப்பாகிய எல்லாவிதமான மனநிறைவையும் அளிக்கும் அழைப்பைக் கண்டன" என்று திரு J. W. ஜோவெட் சொன்னபடி அது ஆசிர்வாதத்திற்குரிய மருள்நீக்கமாகும்.

1:18 வாழ்வின் முக்கியமான பொருள் அறிவை ஆட்படுத்துதலே ஆகும் என்பது உண்மையானால், நம்முடைய கல்லூரி வளாகங்கள் அமைதிப் பூங்காக்களாக, மனநிறைவு பெற்ற மனிதர்களால் நிறைந்திருக்க வேண்டும். ஆனால் அவை அவ்வாறு இல்லை. மாறாக அவை நுரைபொங்கி வருகிற கொப்பரைகளாகவும் சச்சரவு நிறைந்த இடங்களாகவும் உள்ளன. ஒரு கல்லூரி மாணவனைப் பற்றிய கவர்ச்சியிழந்த கேலிச்சித்திரம் இவ்வாறு விவரிக்கிறது. பெரிய துவாலை ஒன்றைத் தலையில் கட்டிக்கொண்டு பெரிய குவளை நிறைய தேநீரை எடுத்து அதில் தலைவலி மாத்திரையைக் கழுவுகிறவனாக அவன் காட்சி தருகிறான். சாலொமோனின் முடிவை இது சிறப்பாக வருணிக்கிறது.

அதிக ஞானத்திலே அதிக சலிப்புண்டு; அறிவு பெருத்தவன் நோவு பெருத்தவன்.

"நீங்கள் அதிகமாக ஞானத்தைப் பெறப் பெற அதிகக் கவலைகளைப் பெறுவீர்கள். நீங்கள்

அதிகமாக அறியும்போது அது உங்களை அதிக மாக வருத்துகிறது" என்றும் இதைச் சொல்ல லாம். இதன்படி "அறியாமை பேரின்பம்," "உங் களுக்குத் தெரியாதது உங்களைப் புண்படுத்து வதில்லை" என்னும் பழமொழிகளில் ஓரளவு உண்மை இருக்கிறது.

ஆ. இன்பம், புகழ், செல்வச்செழிப்பு ஆகிய மாயை

2:1 அறிவைத் தேடிச் சென்ற சாலொமோன் அங்கு வாழ்வின் நிறைவைக் காண இயலாமல், அடுத்ததாக **இன்பத்தில்** அதைக் கண்டடைய லாம் என்று அதை நாடிச் செல்கிறான். *இன் பத்தைப் போதுமான அளவு அனுபவிப்ப தன் மூலம் ஒருவனால் மகிழ்ச்சியாக இருக்க முடியும் என்பது நியாயமானதாகத் தோன்று கிறது.* இதுவே அவனுடைய எண்ணமாயிருந்தது. ஒரு மனிதனுடைய தனிப்பட்டவிருப்பங்களின் மனநிறைவிலிருந்து உண்டாகிற மகிழ்ச்சியோடு அனுபவிக்கக் கூடிய புலனுணர்வுகளே இன்பம் என்பதற்கான வரையறுக்கப்பட்ட பொருள். ஆகவே அதற்கேற்றபடி வாழ்வதற்குத் தீர் மானித்தான், அதாவது மனிதன் அறிந்த எல்லா வகையான புலனுணர்வுகளையும் தூண்டிவிடக் கூடிய செயல்களை செய்யத் தீர்மானித்தான். அவனுடைய இருதயம் போதும் என்று சொல்லும் வரை அவன் விளையாட்டுத்தனமான செயல் களைச் செய்யத் தொடங்கினான்.

ஆனால் அவனுடைய தேடுதல் தோல்வியில் முடிந்தது. சூரியனுக்குக் கீழே எல்லா இன்பங் களும் **மாயையே** என்னும் முடிவுக்கு வந்தான். அவனுடைய ஏமாற்றம் கீழ்க்காணும் வரியில் எதிரொலிக்கிறது:

தாகத்தால் நாவறண்டு நீர்வேண்டி
அலைந்திட்டேன்
தொட்டியினைக் கண்டவுடன் ஆவலுடன்
ஓடிச்சென்றேன்
அள்ளிநீர் பருகிடவே குனிந்தநான்
அதிர்ந்திட்டேன்
உடைந்திட்ட தொட்டியினில் நீரொழுகிப்
போயிற்றே![13]

தமது மக்கள் இன்பத்தை அனுபவிக்கக் கூடாது என்று தேவன் அதை எதிர்க்கிறாரா? இல்லவே இல்லை! உண்மையில் அதற்கு எதிரா னதே மெய். தமது மக்கள் நல்வாழ்வு பெற்றிருக்க வேண்டும் என்றே தேவன் விரும்புகிறார். மெய் யான இன்பத்தை இவ்வுலகம் கொடுக்காது என் பதை நாம் உணரவேண்டும் என்பதே அவர் விருப் பம். அதனைச் சூரியனுக்கு மேலேதான் கண்ட டைய முடியும். அவருடைய "சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும்," அவருடைய "வலதுபாரிசத்தில் நித்திய பேரின்பமும் உள்ளன" (சங். 16:11). இந் தப் பொருளில் தேவனே எல்லோரிலும் மிகப் பெரிய அளவு இன்பத்தின்மேல் பற்றுடையவர் ஆவார்.

தேவன் இல்லாமலேயே மனிதனால் தனது சொந்த விண்ணகத்தை இவ்வுலகில் உருவாக்க முடியும் என்னும் பெரும் பொய்யை திரைக்கதை கள், தொலைக்காட்சிகள், விளம்பர ஊடகங்கள் யாவும் பிரகடனப்படுத்துகின்றன. ஆனால் இந்த உலகத்தால் குப்பைக் குழிகளையும் கழிவுநீர்த் தொட்டிகளையும் மட்டுமே உருவாக்க முடியும்; தேவன் ஒருவர் மட்டுமே வாழ்வின் ஊற்றைத் தரக்கூடியவர்.

2:2 அவன் தன்னுடைய **நகைப்பை** எல்லாம் திரும்பிப் பார்க்கையில், அது வெறும் பைத்தியத் தனமானது, அவனுடைய நல்ல நேரங்கள் யாவும் உண்மையில் எதையும் சாதிக்கவில்லை என்று காண்கிறான். அது அவ்வாறுதான் இருக்கிறது. ஒவ்வொரு நகைப்பின் பின்னணியிலும் வருத்தம் இருக்கிறது. மற்றவர்களை மகிழ்ச்சிக்குட்படுத் தும் முயற்சியில் ஈடுபடுகிறவர்கள் யாவரும் பெரு மளவில் தனிப்பட்ட தேவை உள்ளவர்களே ஆவார்கள்.

மனக்குழப்பம் அடைந்த ஒரு நோயாளி மனநோய் மருத்துவர் ஒருவருவடைய உதவியை நாடிச்சென்ற கதையை *மகிழ்ச்சியின் இரக சியத்தில்* திருவாளர் பில்லிகிரகாம் கூறுகிறார். அந்த நோயாளி பெருமளவு மனவழுத்தத்தால் வேதனையுற்றிருந்தார். அவர் என்ன செய்தாலும் அவரால் தீர்வுகாண முடியவில்லை. அவர் எழுந்தபோது அதிக மனச்சோர்வும் துயரமும் கொண்டிருந்தார், அன்று நேரம் செல்லச்செல்ல அவருடைய நிலை அதிக மோசமாகிக்கொண்டி ருந்தது. அவரால் மேலும் தாங்கமுடியாத நிலை ஏற்பட்டது, இப்படியே செல்லக்கூடாது என்று முடிவு செய்தார். அவரைக் கண்ட மருத்துவர் ஓர் ஆலோசனை கூறினார். உள்ளூர் அரங்கில் நிகழ்ச்சி ஒன்று நடந்து கொண்டிருந்தது, ஒவ் வொரு நாள் இரவிலும் அந்நிகழ்ச்சியில் ஓர் இத் தாலிய கோமாளி அங்கு வருகின்ற பார்வை யாளர்களை நகைப்பால் உடலையே சிலிர்க்க வைக்கிறார். அங்கு நீங்கள் செல்லுங்கள்,

இரண்டு மணி நேரம் மனம்விட்டுச் சிரிப்பீர்கள், அது உங்களுடைய கவலைகளையெல்லாம் மறப்பதற்கு அருமருந்தாக விளங்கும் என்று அந்த மருத்துவர் நோயாளிக்குப் பரிந்துரைத் தார்! பரிதாப நிலையில் இருந்த நோயாளி, "நான் தான் அந்தக் கோமாளி" என்று முணுமுணுத்தார். அவரும்கூட **"நகைப்பைக் குறித்து அது பைத் தியம் என்றும், சந்தோஷத்தைக்குறித்து அது என்ன செய்யும்?"** என்றும் கூறுவார்.

நம் வாழ்வில் பலமுறை நாம் பிறரைப் பார்த்து, அவர்களுக்குப் பிரச்சினையே இல்லை, அவர் களால் செய்ய முடியாதது இல்லை, தேவை எது வும் இல்லை என்று கூறுகிறோம். ஆனால் தவறான நம்பிக்கையை "ரிச்சார்ட் கோரி" என் னும் புனை கவிதையின் மூலம் திருவாளர் E. A. ராபின்சன் தகர்த்தெறிகிறார்:

கோரியென்னும் தவப்புதல்வன்
அழகுமிகு நாயகனாய்
மாநகரின் வீதிகளில்
பவனிவரும் நேரங்களில்
நடைபாதை வாழுகின்றோர்
அவன் முகத்தை நோக்கிடுவர்
அடிதொடங்கி முடிவரையில்
மாட்சிமிகு உயர்தோற்றம்.

எந்நாளும் அமைதியினை
அணிந்தவனாய் நடந்திடுவான்
மனிதநேய உளத்துடனே
இனிமையாகப் பேசிடுவான்
ஒளிவீசும் முகத்துடனே
வணக்கத்தைச் செலுத்திடுவான்
ஆனாலும் அவன்சொற்கள்
பதற்றத்துடன் தொனித்திடுமே.

மாபெரிய செல்வந்தன்
அரசனிலும் செல்வந்தன்
ஒப்பற்ற உயர்கல்விப்
பட்டங்கள் பலபெற்றோன்
இணையற்ற மாமனிதன்
எனப்போற்றி உயர்த்திட்டோம்
அவனுடைய தகுதியினைப்
பெற்றிடுதல் எம்வாஞ்சை.

அவன்தகுதி அடையும்படி
இரவுபகல் உழைத்திட்டோம்
உணவுகளைப் புறக்கணித்தோம்
இன்பங்களை விட்டொழித்தோம்
அமைதியான ஓரிரவில்
கோரியென்னும் புகழ்பெற்றோன்
தன்தலையில் குண்டுபாய்ச்சித்
தன்னுயிரை மாய்த்தனனே![14]

2:3 பழைய ஏற்பாட்டு ஊதாரி சாலொமோன் அடுத்ததாக மதுபானத்திடம் திரும்பினான். மது வகைகளில் மிகச்சிறந்தது எது என்று கண்டுபிடிக் கக்கூடிய நிபுணனாக மாறினான். கிளர்ச்சியூட் டும் நேர்த்தியான சுவையை அவன் அனுபவிக் கும் வாய்ப்பு கிடைக்குமானால் அவன் முழுமை யும் மனநிறைவில் இளைப்பாறுதலைப் பெறக் கூடும்.

அவன் தனது உண்ணுதலிலும் குடிப்பதிலும் கூட ஞானத்தைப் பெற்றிருந்தான். **என் இருத யத்தை ஞானத்தால் தேற்றிக்கொண்டிருக் கும்போதே** என்னும் சொற்களால் இது வெளிப் படுத்தப்பட்டுள்ளது. அவன் தன்னை ஒரு குடி காரன் அல்லது மட்டுமீறிய அளவு குடிக்கும் பழக் கம் உள்ளவன் என்னும் நிலையில் விட்டுவிட வில்லை என்றும் இதனைக் கூறலாம். குடிக்கு அடிமையாகிவிடுவான் என்னும் ஒரு நிலை அவ னுடைய வாழ்க்கையில் ஏற்படவில்லை. உண் மையை அறியவேண்டும் என்னும் தேடுதலில் அவன் போதைப்பொருட்களுக்கு அடிமைப்படக் கூடிய நிலை ஏற்படவில்லை. அதில் அவன் "ஞானம் மிகுந்தவனாக" இருந்தான்!

அவன் முயற்சி செய்த வேறொரு செயல் **மதி யீனம்**, அதாவது, ஊறுவிளைவிக்காத ஆனால் மகிழ்ச்சியைத் தரக்கூடிய மதியற்ற செயல்களில் ஈடுபடுதல். ஞானம் அதைத் தராவிடில் அதற்கு எதிர்மாறான செயலை நாடி அதில் ஈடுபட முடிவு செய்தான். சிலவேளைகளில் மிகவும் புத்தி சாலித்தனமாக இருப்பவர்களைக் காட்டிலும் முட்டாள்கள் மகிழ்ச்சியோடு இருப்பதாகக் காணப் படுவார்கள். ஆகவே அவன் அந்த அனுபவத்தை யும் பெற்றுவிட வேண்டும் என்று முயன்றான். அவன் தனது கவனத்தை அற்பமானவை, இன்பத் தோய்வுகள், களியாட்டுகள் ஆகியவற்றை நோக் கித் திருப்பினான். சூரியனுக்குக் கீழே விரைந்து செல்லும் குறுகிய காலத்தைச் சிறந்த முறையில் செலவிடவேண்டும் என்பதை அறிவதற்காக இவ்வாறு செய்யும் முயற்சிகள் யாவும் வீண். எனி னும் அவன் அங்கே அதற்கான விடையைக் கண்டுபிடிக்கவில்லை.

2:4,5 ஆகவே சாலொமோன் மிகப்பெரிய கட்டுமான வேலையைச் செய்ய முடிவு செய்தான். கல்வி, இன்பம், மதுபானம், மதியீனம் இவற்றில் ஒன்றும் விடையைப் பெற்றுத் தரவில்லை என் றால், நிச்சயமான பொருட்செல்வம் அதனை அறியச் செய்யும். அவன் மிகவும் ஆடம்பரமான **வீடுகளைத்** தனக்காகக் கட்டினான். மேலும் அவன் **திராட்சைத் தோட்டங்களை** உருவாக்கி னான். சாலொமோன் செய்த கட்டுமான வேலை களை நாம் அறிவோமானால், அவன் அதில் எந்தவொரு முயற்சியையும் விட்டுவைக்க வில்லை என்பதை நிச்சயமாக அறியமுடியும்.

அவன் மிகப் பிரமாண்டமான **தோட்டங்களை யும்** பூங்காக்களையும் உண்டுபண்ணினான் - அவை உண்மையாகவே சுவர்க்கம் போலிருந் தன. எல்லா வகையான கனி மரங்களும் நடப் பட்ட பழத்தோட்டங்களை உருவாக்கினான். அவன் தனது நண்பர்களை முன்னேற்பாட்டுடன் உல்லா சப் பயணங்களுக்கு அழைத்துச் சென்று, அவர் களுடைய வியப்பையும் பாராட்டையும் கேட்டு, தன்னைப் பெருமைபாராட்டியிருப்பான் என்று கற்பனை செய்து பார்ப்பது எளிது.

இதுபோன்றதொரு தற்புகழ்ச்சிப் பயணத் தைத் தனது விருந்தினர்களுக்காகப் பெருஞ் செல்வந்தர் ஒருவர் ஏற்பாடு செய்தார். அவரிடம் திருவாளர் சாமுவேல் ஜான்சன் கூறியதைப் போல வேறு எந்த நண்பராலும் கூறமுடிய வில்லை, அத்தகைய துணிவு அவர்களுக்கு இல்லை. அனைத்து ஆடம்பரத்தையும் கவர்ச்சி மிக்கவற்றையும் கண்ட பிறகு திருவாளர் ஜான் சன் குறிப்பிட்டார், "இவையாவும் ஒரு மனிதன் மரணமடைவதற்குக் கடினமாக்குபவை."

இவ்விதமான மயக்கத்தில் இருக்கிற பெருஞ் செல்வந்தர்களால் இவ்வுலகம் ஒரு பங்கு நிறைந் திருக்கிறது. "மாமன்னரின் ஆடைகள்" என்னும் ஆண்டர்சன் கற்பனைக் கதையில் வருகிற அரசனைப் போல அவர்கள் இருக்கிறார்கள். அந்த அரசன் திகைப்பூட்டும் அழகிய ஆடைகள் என்று மக்கள் நம்பவேண்டும் என்று வலம் வந்தான். ஆனால் அவன் முழுவதும் ஆடை யின்றி வந்ததை ஒரு சிறுவனால் அறிய முடிந்தது.

2:6 இவ்வளவு பெரிய தோட்டங்களும் வயல் களும் வெப்பம் மிகுந்த வறண்ட கோடைகாலத் தில் நீர்பாய்ச்சிப் பராமரிக்கப்படவேண்டும் என்று உணர்ந்த சாலொமோன் போதுமான அளவு ஏரி களையும் குளங்களையும் கட்டியதுமல்லாமல், நீரைக் கொண்டு போவதற்குத் தேவையான கால்வாய்களையும் குட்டைகளையும் கட்டினான்.

இவ்விதமாகச் சொத்துக்களைக் குவிப்பதால் மனஅமைதியையும் மகிழ்ச்சியையும் பெறமுடியும் என்று உறுதி அளிக்கப்படுமாயின், அவன் அதை அடைந்தாயிற்று என்று கூறலாம். ஆனால் நம் எல்லோரையும் போலவே அவனும் சொத்து களைச் சேர்ப்பதால் அல்ல, மாறாக மிகச்சிறந்த தன்னல மறுப்புக் கொள்கையின் மூலமாகவே மெய்யான மகிழ்ச்சியைப் பெற முடியும் என்ப தைக் கற்க வேண்டியதாயிற்று. அவன் உணவுக்கு உதவாதவற்றுக்காகப் பணத்தைச் செலவழித் தான், மனநிறைவு அளிக்காதவற்றுக்காகக் கடும் உழைப்பை மேற்கொண்டான் (ஏசாயா 55:2).

2:7 அரசனுடைய கவர்ச்சிமிக்க தோட்டங் களையும் சொத்துகளையும் பராமரிக்க அவனுக்கு ஒரு பெரும் **வேலைக்காரப்** பட்டாளமே தேவைப் பட்டது. அதற்காக அவன் வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் அடிமைகளாக விலைக்கு வாங்கினான். அது மட்டுமல்ல, அவனுடைய வீட் டில் வேலைக்காரர்கள் பிறந்தார்கள் - அந்த நாட்களில் நடைமுறையில் இருந்த நாகரிகத்தில் மிகவுயர்ந்த மனிதர் என்பதற்கான குறிப்பிடத் தக்க அடையாளமாக இது விளங்கியது.

பெரும்பாலான மனிதர்களைப் போலவே சாலொமோனும் தனக்கு உணவு பரிமாறப்படு வதில் அதிக மேன்மை பாராட்டினான். அவன் அமரும் உணவு மேசை பரிமாறுவதற்கு முடி யாதபடி பெரிதாயிருந்தது. சாலொமோனை விடப் பெரியவர் அடிமைகளுக்கெல்லாம் அடிமையாக இவ்வுலகிற்கு வந்தார்; மேலும் அவருடைய அரசின் மேன்மை மெய்யான அடிமையாக இருப்ப தில்தான் காணப்படும் என்று வெளிப்படுத்தினார் (மாற்கு 10:43-45; லூக்கா 9:24-27).

சாலொமோனுடைய எருசலேம் கால்நடைப் பண்ணையில் புல்மேய்ந்த ஆடுமாடுகளின் மந் தையின் அளவுக்கு அதிகமாக வேறு எவரும் பெரிய மந்தையைச் சொந்தமாகக் கொண்டி ருந்ததில்லை. கௌரவமே ஒரு மனிதனுடைய மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கைக்குத் திறவுகோல் என்றால் சாலொமோனிடம் அந்தத் திறவுகோல் இருந்தது எனலாம். ஆனால் அது உண்மையல்ல, அவனிடம் அதற்கான திறவுகோல் இல்லை. "என் னுடைய வாழ்க்கையை மகிழ்ச்சியோடு அனுப விக்க எல்லாவற்றையும் கேட்டேன்; நான் எல்லா வற்றையும் அனுபவிக்கும்படி எனக்கு வாழ்க்கை கொடுக்கப்பட்டது" என்று ஒருவர் கூறினார்.

2:8 அவனுடைய பொருளாதாரத்தைக் குறித்து நாம் என்னவென்று சொல்வது! பெருமளவில் வெள்ளியும் பொன்னும் அவனிடத்தில் இருந்தன. மேலும் அவனிடம் **ராஜ சம்பத்தும் மகாணங்களில்** சேர்த்து வைக்கப்பட்டிருந்த சொத்துக்களும் இருந்தன. இவையாவும் மக்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட வரியோ, மற்ற நாடுகளை வென்று அங்கிருந்து கொண்டுவரப்பட்ட செல்வமோ, சேபாவின் அரசியைப் போல சந்திக்கும் படி வந்த பன்னாட்டுத் தலைவர்கள் கொடுத்த அன்பளிப்புகளோ எதுவாகவும் இருக்கலாம்.

அவன் இசையின் மூலமாக மெய்யான மகிழ்ச்சியைப் பெற முயன்றான். இன்பமளிக்கும் திறன் இசைக்கு உண்டென்று அவர்கள் கூறினார்கள். ஆகவே அவன் மிகச்சிறந்த ஆண், பெண் பாடகர்களை ஒன்றுதிரட்டினான். பொதுமேடைகளில் நடைபெற்ற இசை நிகழ்ச்சிகள் பெரிதும் பாராட்டப்பட்டன. எருசலேம் செய்தித்தாளில் அது வெளியிடப்பட்டிருக்கும் என்று தோன்றுகிறது. ஆனால் அரசன் தனிமையில் இசை நிகழ்ச்சிகளைக் கேட்டிருப்பான் என்பது நிச்சயம். இரவு உணவு விருந்தின்போது நடைபெற்ற நிகழ்ச்சிகள், நீதிமண்டபத்தில் எல்லோரும் கலந்துகொள்ளக் கூடிய இசை நிகழ்ச்சிகள் - இவ்வாறு நீங்கள் பல பெயர்களைச் சூட்டலாம். ஆயினும் அவனுடைய ஏமாற்றத்தைத் திருவாளர் சாமுவேல் ஜான்சன் அபிசினியாவின் இளவரசன் ராசெலாசின் வரலாறு என்னும் நூலில் திறம்பட விவரிக்கிறார்:

> மேலும் நான் யாழ் வாசிப்பவரையும் பாடகரையும் அழைத்தேன், ஆனால் நேற்று என்னை மகிழ்வித்த இசை இன்று எனக்குச் சலிப்பாயிருந்தது, நாளைக்கு அது மேலும் அதிகச் சலிப்பை ஏற்படுத்தும். எனக்குள்ளான புலன்கள் யாவும் அளவுகடந்த வகையில் முறையாக இன்பம் ஊட்டப்பட்டுள்ளன. அவ்வாறு இன்பம் ஊட்டப்படாத நிலையில் எனக்குள்ளாக எந்தவொரு உணர்ச்சியும் இல்லை என்பதை நான் அறிய முடிந்தது, ஆனாலும் எனக்கு மனமகிழ்வு உண்டாகவில்லை. மனிதனுக்குள்ளாக சில உணர்ச்சிகள் மறைந்திருக்கின்றன, அவற்றிற்கு மனநிறைவு உண்டாகும்படி உகந்ததைச் செய்வதற்கான இடம் இவ்வுலகம் இல்லை. அதாவது அவனுடைய புலனுணர்வுக்கு முற்றிலும் அப்பாற்பட்ட சில விருப்பங்கள் அவனுக்கு இருக்கின்றன, அவன் மனமகிழ்ச்சி அடைவதற்கு முதலாவது அவை நிறைவு செய்யப்பட வேண்டும்.[15]

மேலும் அவன் சிற்றின்பத்தில் மகிழ்ச்சியைப் பெற முயன்றான். மது (வச. 3), இசை (வச. 8) மட்டுமின்றி பெண்களையும் அனுபவிக்கத் தொடங்கினான். மது, பெண்கள், இசை! **பலவித வாத்தியங்கள்** என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொல் உண்மையில் என்னவென்று தெரியவில்லை. இப்பகுதியின் பின்னணியைக் கொண்டே இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனை NKJV மொழிபெயர்ப்பு “மனித இருதயத்திற்கு மகிழ்ச்சியைக் கொடுப்பவர்களான பல பெண்களையும் வைத்திருந்தேன்” என்று கூறுகிறது (இலகு தமிழ்). சாலொமோன் 700 மனைவிகளையும் 300 மறுமனையாட்டிகளையும் கொண்டிருந்தான் என்னும் உண்மையைத் திருமறை கூறுகிறது (திருமறை இச்செயலைச் சரியென்று ஏற்றுக்கொள்ளவில்லை), (1 இராஜா. 11:3). இதுவே மனமகிழ்ச்சிக்கான வழி என்று அவன் நினைத்தானா? அத்தனை பெண்கள் நிறைந்த அந்தப் புரத்திலே என்னென்ன பொறாமைகள், புறம்பேசுதல், கோள் சொல்லுதல் யாவும் இருந்திருக்கும் என்பதை எண்ணிப்பாருங்கள்!

இருந்தபோதிலும் சிற்றின்பம் மகிழ்ச்சியையும் நிறைவையும் அடைவதற்கான பெருவழிச்சாலை என்னும் தவறான கருத்தை நோயுற்றிருக்கும் இன்றைய சமுதாயம் நம்பிக்கொண்டிருக்கிறது. ஒருவனுக்கு ஒருத்தி என்னும் தேவதிட்டத்தின்படியான திருமண உறவின் எல்லைக்குள் இது உண்மையாக இருக்கிறது. ஆனால் சிற்றின்பத்தைத் தவறான முறையில் பயன்படுத்துவதால் அது கடுந்துன்பத்துக்குள்ளும் சுய அழிவுக்குள்ளும் வழிநடத்தும்.

இன்றைய நாளின் சிற்றின்ப வெறிக்கு ஆளான பெண்மணி பின்னர் அது தன்னை எவ்விதமாக வஞ்சித்தது என்று கூறுகிறாள். அவள் எழுதிய தாவது:

> இவ்வுலகமே வியந்து போற்றும் ஒரு கவர்ச்சிப் பரிசுபோலச் சிற்றின்பம் விளங்கும் என்று நான் எண்ணியிருந்தேன், அவ்வாறு விருப்பம் கொண்டிருந்த எனக்கு, எல்லாம் முடிவுற்ற போது நான் பெரிய ஏமாற்றத்துக்குள்ளானேன். இது இவ்வளவுதானா? இது உண்மையாகவே இவ்வளவு தானா? என்று நான் சிந்தித்ததை நினைவுகூருகிறேன்.[16]

2:9 சாலொமோன் இவ்வாறாக மிகப் **பெரியவனானான்.** மனநிறைவின் மதிப்பு எதுவாயினும் அதனுடைய புகழ் என்னும் ஏணியின் உச்ச

நிலையை அடைந்து மற்ற எல்லோரையும் விஞ்சினவனாகக் காணப்பட்டான். அவனுடைய எல்லா அனுபவங்களுக்கும் இன்பப் பயணங்களுக்கும் பிறகும்கூட, அவனுடைய இயல்பான **ஞானம்** அவனோடு இன்னமும் **இருந்தது**. அவன் தன் அறிவாற்றலை இழந்துவிடவில்லை.

2:10 அவனுடைய மனநிறைவுக்கான தேடுதலில், இவ்வளவுதான் செலவு செய்ய வேண்டுமென்று ஓர் அளவை அவன் குறிப்பிடவில்லை. அவன் விரும்பியதைக் கண்டவுடன், அதை விலைக்கு வாங்கினான். ஏதேனும் இன்பத்தை அனுபவிக்க வேண்டும் என்னும் எண்ணம் அவனுக்கு உண்டானவுடன், அதில் அவன் ஈடுபடலானான். இவ்விதமாக முடிவில்லா முயற்சிகளினால் பெற்ற பொருட்களினாலும், செய்த செயல்களினாலும் அவன் ஏதோ குறிப்பிட்ட உணர்வுபூர்வமான மனமகிழ்ச்சியைப் பெற்றான். இன்பத்தோய்வு, பொருள் உடைமை ஆகிய வற்றைப் பெறும்படி அவன் செய்த கடுமுயற்சியின் **பலனாக** கணப்பொழுது இருந்து மறைகிற மகிழ்ச்சியைப் பெற்றான்.

2:11 பின்னர் அவன் செய்த எல்லாச் செயல்களையும், அதற்காக அவன் செலவிட்ட பிரயாசத்தையும், அவற்றின் விளைவுகளையும் பட்டியலிட்டுப் பார்த்தான். எல்லாம் **மாயை**, வீணான செயல்கள், **காற்றைத் துரத்திப் பிடிக்கும்** முயற்சியாகவே இருந்தது. சூரியனுக்குக் கீழே நிலையான மகிழ்ச்சியை மற்றும் மனநிறைவை அவன் அடையவே இல்லை. "இந்த உலகம் முழுவதும் இடம்பெற்றுள்ள பேரரசு, நாய்க்கு எறியப்படுகிற ரொட்டியின் மேற்புறத்திலுள்ள காய்ந்த பகுதியேயல்லாமல் வேறல்ல" என்று திருவாளர் லுத்தர் சொன்னாற்போல இது இருக்கிறது. இவை எல்லாவற்றின் காரணமாக அவன் சலிப்பையே அடைந்தான்.

கேலிச்சித்திரம் வரைவதில் மிகப்பெரும் புகழ் பெற்றிருந்த ரால்ப் பர்டன் என்பாருக்குச் சலிப்புத் தட்டியது. அவர் இவ்வாறு எழுதினார்:

> எனக்குப் பிரச்சினைகளே இல்லை, பல நண்பர்கள், பெரும் வெற்றிகளைப் பெற்றேன். நான் ஒரு மனைவியை விட்டு அடுத்த மனைவியிடம் சென்றேன், ஒரு வீட்டிலிருந்து வேறொரு வீட்டுக்குச் சென்றேன். இந்த உலகத்தின் பெரிய நாடுகளுக்கெல்லாம் சென்று வந்தேன். ஆனால் ஒருநாளின் இருபத்து நான்கு மணி நேரத்தையும் நிரப்புவதற்காகத் திட்டமிடுவதில் நான் சலிப்படைகிறேன்.[17]

இன்பமும் பொருளுடைமையும் இருதயத்தை நிரப்புவதில் தோற்றுப் போய்விட்டன என்பதை, எதை விரும்பினாலும் அதை உடனடியாகப் பெறும் ஒரு கதாபாத்திரம் நமக்கு விவரிக்கிறது:

> அவன் ஒரு வீட்டை விரும்பினான், உடனடியாக ஒரு வீடு பல வேலைக்காரர்களோடு வந்தது. கடிலாக் வாகனம் வேண்டுமென்று விரும்பினான், உடனடியாக அந்த வாகனமும் வேலைக்காரர்களோடு வந்தது. முதலில் இது அவனுக்குப் பெருமகிழ்ச்சியைக் கொண்டு வந்தது. ஆனால் கூடிய விரைவில் அது அவனுக்குச் சலிப்பூட்டியது. அவன் தன் வேலைக்காரனிடம், "நான் இதிலிருந்து வெளியேற வேண்டும், நான் ஏதாவது ஒன்றை உருவாக்க வேண்டும், இங்கு இருப்பதைவிட நான் நரகத்துக்குப் போவது நல்லது" என்று கூறினான். அப்பொழுது அந்த வேலைக்காரன் அவனைப் பார்த்து, "நீங்கள் எங்கே இருப்பதாக நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள்?" என்று வினவினான்.[18]

நாம் வாழும் இந்நாட்களில் இருக்கிற சமுதாயத்தின் நிலை அதுதான் - பொருட்செல்வம் என்னும் நரகத்தில் அவர்கள் வாழ்கிறார்கள். நிலையான மகிழ்ச்சியைக் கொண்டுவர முடியாத பொருட்களால் அவர்கள் மனித இருதயத்தை மனநிறைவு பெறச் செய்வதற்கு அவர்கள் முயற்சி செய்கிறார்கள்.

2:12 அவனுடைய ஆராய்ச்சி மனச்சோர்வளிக்கும் விளைவை ஏற்படுத்தியதன் காரணமாக, தான் ஞானமுள்ளவனாக இருக்க வேண்டுமா அல்லது மதியீனனாக இருக்க வேண்டுமா எது சிறந்தது என்று சிந்திக்கத் தொடங்கினான். இந்த விசயத்தை அறிய அவன் திட்டமிட்டான். வாழ்க்கை குமிழ்களைப் பின்தொடருகிற ஒன்றாக இருப்பதன் காரணமாக, ஒருவன் விவேகத்தோடு வாழ்வதாலா அல்லது **பைத்தியமாகவும் மதியீனனாகவும்** வாழ்வதாலா எதில் அதிக பயன் ஏற்படும்?

அவன் முழுச்சுதந்தரம் வாய்ந்த பேரரசனாக இருந்தான். மேலும் ஞானமும் செல்வமும் நிறைந்தவனாயிருந்தான். ஆகவே இதற்கான விடையைக் கண்டுபிடிக்கத்தக்க நல்ல நிலையில் அவன் இருந்தான். அவனுக்குப் பின்வருகிற எவனொருவருக்கும் இதைவிட நல்ல வாய்ப்பு கிடைக்காது. இந்தப் பொருள்பற்றிய புதிய வெளிச்சத்தை அவனுக்குப் பின்வருகிற எவனாலும் கண்டுபிடிக்க முடியாது.

2:13 இருளைப் பார்க்கிலும் வெளிச்சம் எவ் வளவு **உத்தமமாக** இருக்கிறதோ அதே அளவு **மதியீனத்தைப்** பார்க்கிலும் **ஞானம்** உத்தம மாக இருக்கிறது என்பதே அவனுடைய பொது வான முடிவு. ஞானவான் வெளிச்சத்தில் நடக் கிறான், ஆதலால் வழியில் எதிர்ப்படுகிற ஆபத்தை அவனால் காணமுடிகிறது. இதற்கு மாறாக, முட் டாள் இருளில் கண்களை மூடிக்கொண்டு செல் கிறான், ஒவ்வொரு குழியிலும் இடறிவிழுகிறான், கண்ணியில் சிக்கிக்கொள்கிறான்.

2:14 ஞானியின் கண்கள் தான் செல்கிற இடத் தைக் காண்கின்றன - இந்த அனுகூலம் அவனுக் குக் கிடைத்திருந்தாலும் முடிவில் என்ன வேறுபாடு அதனால் ஏற்படும், முடிவில் அவர்கள் இரு வருமே மரணம் அடைவார்கள். எந்த அளவு ஞானம் இருந்தாலும் அவ்வாறு நியமிக்கப்பட்ட தருணத் தைத் தள்ளிப்போடவோ நீக்கவோ முடியாது. **அவர்கள் எல்லோருக்கும்** அதே முடிவுதான்.

2:15 ஒரு மூடனுக்கு என்ன முடிவு உண்டாகப் போகிறதோ அதே முடிவுதான் தனக்கும் காத் திருக்கிறது என்று சாலொமோன் உணர்ந்த போது, தன்னுடைய வாழ்நாட்கள் எல்லாம் அறி வோடு விளங்குவதற்கு ஏன் அதிக முக்கியத் துவம் கொடுத்தான் என்பதை எண்ணி வியந் தான். ஞானத்தால் கிடைக்கப்பெறுகிற ஒரே பயன், வழியில் அது வெளிச்சத்தைப் பொழிகிறது. அதைத் தவிர வேறு சிறப்பு எதுவும் இல்லை. ஆகவே ஞானத்தைத் தேடி அலைவதும் மிகப் பெரிய வீணான முயற்சியே ஆகும்.

2:16,17 இதே கருத்தை அவன் 16,17 -ஆகிய வசனங்களிலும் தொடருகிறான். அடக்க நிகழ்ச்சி முடிவடைந்தவுடன் ஞானியாயினும் மூடனா யினும் வெகு விரைவில் மறக்கப்படுகிறான். ஒன்று அல்லது இரண்டு தலைமுறைகளில், அவர்கள் ஒருக்காலும் வாழாததுபோல நினைவிலிருந்து மறக்கப்படுகிறார்கள். மிகவும் முக்கியமானவர் கள் என்று கருதப்பட்டவர்களின் பெயர்களும் முகங்களும் மறக்கப்பட்டுப் போகின்றன. நிலை யான புகழ் என்பதைப் பொறுத்தவரை ஞானி எந்த விதத்திலும் மூடனைக் காட்டிலும் மேலான நிலையில் இல்லை.

மனிதனுடைய புகழ் நிலையற்றது, அவன் மிக விரைவாக மறக்கப்படுகிறான் என்னும் அதிர்ச்சி யூட்டும் அறிவு சாலொமோனுக்கு அவனுடைய வாழ்க்கையையே வெறுக்கும்படி செய்தது. சூரிய னுக்குக் கீழே மனிதன் செய்கிற செயல்களில் மனநிறைவையும், திருப்தியையும் அடைவதற் குப் பதிலாக அவன் மனவருத்தத்தையே பெற் றான். எல்லாம் மாயை, காற்றைத் துரத்திப் பிடிக் கிறதுக்கு ஒப்பாயிருக்கிறது என்பதைப் பற்றிய அறிவு அவனை வருத்தியது.

புகழ்பெற்ற முன்னாள் விளையாட்டுவீரன் கூறியது:

> முதன்முதலாக மிகப்பெரிய போட்டியில் வெற்றி யைத் தேடித்தந்த கோலைப் போட்டபோது, பார்வையாளர்கள் கூட்டத்திலிருந்து மிகப் பெரிய கரவொலியும் ஆரவாரமும் கேட்டது, அது என் வாழ்வில் மெய் சிலிர்க்க வைத்த மிகப்பெரிய நிகழ்ச்சி. ஆனால் அதே இரவு, என் அறையில் அமைதியான நேரத்தில் ஒரு வெறுமை என் மனதை ஆட்கொண்டது. அத னால் என்ன பயன், அதற்கு என்ன மதிப்பு? கோல்கள் அடிப்பதைக்காட்டிலும் வாழ்க்கை யில் மேலானது எதுவும் இல்லையா? அந்த எண்ணங்களே மனநிறைவுக்கான எனது தேடு தலின் தொடக்கம். தேவன் ஒருவராலேயன்றி என்னுடைய தேவையை நிறைவுசெய்யக் கூடியவர் வேறு எவரும் இல்லை என்பதை என் இருதயம் அறிந்திருந்தது. சிறிது காலத்தில் இவ்வுலகத்தில் என்னால் ஒருக்காலும் கண்டு பிடிக்கக் கூடாததை நான் கிறிஸ்துவினிடத்தில் கண்டடைந்தேன்.[19]

2:18 தான் சேர்த்துவைத்த செல்வத்தைத் தன்னால் முழுவதுமாக அனுபவிக்க முடியாது என் னும் உண்மை சாலொமோனை மனக்கவலை அடையச் செய்த மிகப்பெரிய அநீதிகளில் ஒன்றா கத் தோன்றியது. திருவாளர் C. E. ஸ்டுவார்ட் எழுதியதாவது:

> இன்பம் என்னும் மரத்தின் வேரில் உள்ள புழுவே மரணமாகும். அது இன்பத்தைப் பாழாக்குகிறது, மேலும் அது மகிழ்ச்சியான அனுபவத்தை நடுங்கச் செய்கிறது, ஏனெனில் ஒருவன் பல ஆண்டுகள் கடினமாக உழைத்து அதன் பலனை அனுபவிக்க அமருகிறபோது அவன் வெட்டுண்டு போகிறான்.[20]
>
> அவன் தன்னுடைய சொத்து முழுவதையும் தன் வழித்தோன்றல்களுக்கு விட்டுச் செல்கி றான்.

2:19 இதில் கசப்பான உண்மை என்னவெனில், அந்த வாரிசு புத்தியற்றவனாக இருப்பான். அவன் ஊதாரியாகவோ, முட்டாளாகவோ, விளையாட்டுத்

தனமானவனாகவோ, சோம்பேறியாகவோ இருக்கக் கூடும்; ஆனால் சொத்து முழுவதையும் அவன் மரபுரிமையாகப் பெறுவான். உழைக்காமலும் திட்டமிடாமலும் தான் பெற்ற சொத்தைச் சிதறடிக்கும் செயலில் அவன் தலைமை வகிப்பான்.

இதுவே சாலொமோனை உண்மையாக எரிச்சல் அடையச் செய்தது. அது அவனுடைய குடும்பத்திலேயே நிகழும் என்று அவன் தீக்குறியை முன்னறிந்தான் போலும். ஒருவேளை, தான் கடினமாக உழைத்துச் சேர்த்த சொத்துகளைத் தனது மகனாகிய ரெகொபெயாம் வீணாக்கிவிடுவான் என்று அவன் முன்னறிந்தான் போலும். ரெகொபெயாம் அவ்வாறே செய்தான் என்று வரலாறு கூறுகிறது. வயது முதிர்ந்த ஆலோசகர்கள் கூறிய அறிவுரைக்குச் செவிசாய்க்க மறுத்து, அரசு பிரிந்துபோவதற்கான செயல்களை விரைந்து செயல்படுத்தினான். எகிப்தியர் யூதாவைத் தாக்கியபோது, அவர்களோடு சமாதான ஒப்பந்தம் செய்வதற்கு அவன் ஆலயத்தின் பொக்கிஷங்களையெல்லாம் கொடுத்தான். பொன்னால் செய்யப்பட்டிருந்த பரிசைகள் எகிப்தின் கருவூலங்களை அழகுபடுத்திக் கொண்டிருந்தன. அவற்றுக்குப் பதிலாக ரெகொபெயாம் வெண்கலப் பரிசைகளை ஆலயத்தில் வைத்தான் (2 நாளா. 12:9,10).

2:20 தான் வாழ்நாள் முழுவதும் உழைத்துச் சம்பாதித்த செல்வத்தைத் தகுதியில்லாத வாரிசிடம் விட்டுச் செல்லப் போகிறோம் என்னும் எண்ணம் பிரசங்கியைத் துக்கத்துக்குள்ளும் மன வழுத்தத்துக்குள்ளும் அழுத்தியது. அது முட்டாள்தனமானது முன்னுக்குப் பின் முரணானது என்று தோன்றியது. ஒன்றுக்கும் உதவாததற்காகத் தனது அனைத்து முயற்சிகளும் செலவழிந்தன என்னும் எண்ணம் அவனுக்கு உண்டாயிற்று.

2:21 இந்தக் கருத்து அவனை மிகவும் வருத்தியது; ஒருவன் புத்தியோடு தனது பணத்தையெல்லாம் முதலீடு செய்கிறான், தொழிலில் நுண்ணறிவுள்ள முடிவுகளை எடுக்கிறான், திறமை வாய்ந்த வகையில் ஏற்ற நேரங்களில் செயல் புரிகிறான், ஆனால் அந்தப் பெரும் செல்வத்தைச் சேர்ப்பதற்காக ஒரு சிறு கல்லையும் தூக்காத, அதற்காகச் சிறிதும் கவலைப்படாத வேறொருவனிடம் எல்லாவற்றையும் விட்டுச் செல்லும்படி மரணம் கட்டாயப்படுத்துகிறது. இது முட்டாள்தனமானது, மிகப்பெரிய அவப்பேறு.

இவ்வுண்மையை சாலொமோன் கண்டுபிடித்திருந்தும்கூட, உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும் பெற்றோர்கள் தங்களுடைய வாழ்நாட்களின் சிறந்த பகுதியைச் செல்வத்தைச் சேகரிப்பதற்காகச் செலவிட்டுப் பின்னர், அதைத் தங்களுடைய பிள்ளைகளுக்கு விட்டுச் செல்கிறார்கள். அவர்கள் அதனை தன்னலமின்றி உழைக்கும் செயல், நன்னெறிக் கடமை என்று விவரிக்கிறார்கள். “தங்களுடைய பிள்ளைகளுக்காகச் செல்வத்தைப் பெற்றோர்கள் சேர்த்துவைக்கும் செயலில் வேராக இருப்பது தன்னலம்” என்று ஜெமிசன், .ஃபாசட், பிரௌன் ஆகியோர் கூறுகிறார்கள்.[21] அவர்களுடைய முதலாவது எண்ணம் தங்களுடைய வயதுமுதிர்ந்த காலத்தில் ஆடம்பரமான வாழ்க்கைக்குச் சேர்த்துவைக்க வேண்டும் என்பதாகும். அவர்கள் முதன்மையாகத் தங்களைக் குறித்தே சிந்திக்கிறார்கள். அவர்களுடைய பிள்ளைகள், பெற்றோர்களின் மரணத்தின் காரணமாக, வாரிசுரிமைச் சட்டத்தின்படி எஞ்சியதைப் பெறுகிறார்கள்.

கிறிஸ்தவ நோக்கத்தின்படி காண்கையில், பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளுக்குச் செல்வத்தை விட்டுச் செல்ல வேண்டும் என்பதற்காக வேலை செய்வதற்கும், சிக்கனமாயிருப்பதற்கும், சேமிப்பதற்கும், தியாக மனப்பான்மையோடு வாழ்வதற்கும் அவசியமில்லை. பிள்ளைகளுக்கு விட்டுச் செல்லக்கூடிய மிகச் சிறந்த சொத்து ஆவிக்குரிய செல்வமேயொழிய பொருட் செல்வம் அல்ல. மகிழ்ச்சியோடும் ஒற்றுமையாகவும் வாழக்கூடிய குடும்பங்களுக்கிடையே பொறாமையும் பிரிவினையும் உண்டாவதற்கு மரண சாசனத்தில் எழுதிவைக்கப்படும் சொத்துகளே காரணம். பெருமளவிலான சொத்துகளைத் திடீரென்று பெற்று செல்வந்தர்களாகும் பிள்ளைகள் ஆவிக்குரிய வகையிலும் ஒழுக்க நெறியிலும் கேடடைகிறார்கள். மற்ற தீமைகள் தவிர்க்க முடியாதபடி தொடர்கின்றன.

ஒருவேளை தகுதியற்ற, நன்னெறியில்லாத, இரட்சிக்கப்படாத பிள்ளைகளுக்கென்று விட்டுச் செல்லாமல், இப்போதே நம்முடைய பணத்தை தேவனுடைய ஊழியத்துக்காகச் செலவு செய்வது ஆவிக்குரிய அணுகுமுறையாகும். மார்டின் லுத்தர் தான் எவ்விதமாகத் தன்னை தேவனிடம் ஒப்புவித்தாரோ, அதுபோலவே தன்னுடைய குடும்பத்தையும் தேவனிடம் ஒப்புவிக்க வேண்டும் என்று எண்ணினார். அவருடைய கடைசிச் சாசனத்தில் அவர் எழுதியதாவது:

> தேவனாகிய கர்த்தாவே, நான் உமக்கு நன்றி செலுத்துகிறேன், ஏனெனில் என்னை நீர்

> ஏழையாக, வறுமையில் வாடுபவனாக இவ்வுல கில் வைத்திருக்கிறீர். நான் விட்டுச் செல்வதற்கு என்னிடத்தில் வீடு இல்லை, நிலமும் இல்லை, பணமும் இல்லை. நீர் எனக்கு மனைவியை யும் குழந்தைகளையும் கொடுத்தீர், அவர்களை நான் இப்பொழுது உம்மிடத்தில் ஒப்படைக் கிறேன். கர்த்தாவே என்னை நீர் கவனித்துக் கொண்டதுபோல அவர்களுக்கும் உணவூட் டும், கற்பியும், பாதுகாத்துக்கொள்ளும்.

2:22 சூரியனுக்குக் கீழே மனிதன் செய்கிற எல்லா உழைப்பும், அவன் அடைகிற எல்லாக் கவலையும் நிலையான பயனைக் கொண்டுவரு கிறதில்லை என்று சாலொமோன் முடிவு செய் கிறான். அவன் கடுமுயற்சி செய்கிறான், கடுமை யாக உழைக்கிறான், கவலைப்படுகிறான், எரிச் சலடைகிறான். ஆனால், இவையாவும் எதற்காக? அவன் மரணமடைந்து ஐந்து மணித்துளிகளுக் குப்பின் அதன் காரணமாக என்ன மாற்றம் உண்டாகப் போகிறது?

இறை வெளிப்பாடு இல்லையேல், நாமும் இவ் விதமான முடிவுக்கே வருவோம். ஆனால் தேவ னுடைய திருமறை வசனங்களிலிருந்து நம்மால் தேவனுக்காகவும் நித்தியத்துக்காகவும் வாழமுடி யும் என்று நாம் அறிந்திருக்கிறோம். அவருக் காகச் செய்த எல்லாவற்றுக்காகவும் நமக்குப் பரிசுப்பொருள் வழங்கப்படும் என்றும் அறிந்திருக் கிறோம். கர்த்தருக்குள் நாம் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிவோம் (1 கொரி. 15:58).

2:23 மரணத்துக்குப் பின் உள்ள வாழ்வைப் பற்றிய எந்த நம்பிக்கையும் இல்லாத மனிதனைப் பொறுத்த வரையில், அவனுடைய நாட்களெல் லாம் வேலையின் காரணமாக வலி மிகுந்ததாக வும் மனவேதனை உடையதாகவும் இருக்கின் றன. இரவு நேரங்கள் அப்படிப்பட்டவனுக்கு அலைக் கழிப்பும் புரளுதலுமாக உள்ளன. வாழ்க்கை பெருமளவு ஏமாற்றமும், கவலை மற்றும் தலை வலியால் நிறைந்ததுமாக இருக்கிறது.

2:24 உண்மை இவ்வாறிருக்க, சூரியனுக்குக் கீழாக மனிதன் உண்ணுவதிலும், குடிப்பதிலும், தன்னுடைய வேலையிலும் மகிழ்ச்சியோடு இருப்பதே மனிதன் வாழ்வதற்கான நோக்கம் என்று தத்துவ ரீதியாக வாதாடப்படுகிறது. மித மிஞ்சி உண்ணுவதையும், மிதமிஞ்சி குடிப்பதை யும் சரியென்று பிரசங்கி முன்மொழியவில்லை. மாறாக, வாழ்க்கையின் பொதுவான விசயங் களில் முடிந்தமட்டும் இன்பத்தைப் பெற வேண் டும் என்றே அவன் கூறுகிறான். இதுவும் கூட **தேவ னுடைய கரத்திலிருந்தே வருகிறது**. தேவனால் கருணையாக அருளப்பட்ட இயற்கையான இன் பங்களை மனிதன் கட்டாயமாக அனுபவிக்க வேண்டும், சுவையான நல்ல உணவு, தேநீர் போன்ற பானங்கள், நேர்மையான அலுவலின் மூலம் கிடைக்கப்பெறும் மனநிறைவு தேவனால் கொடுக்கப்பட்டால் ஒழிய, மனிதனுக்கு அவற்றை மகிழ்வுடன் அனுபவிக்கும் ஆற்றல் கிடையாது.

சாலொமோனுடைய அதே கருத்தை, பிற் காலத்தில் தோன்றிய மற்றொரு பிரசங்கியாகிய அப்போஸ்தலனாகிய பவுலும் உறுதிப்படுத்தி னார். மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால் மிகவும் சிறந்த கொள்கை, "புசிப்போம் குடிப்போம் நாளைக்குச் சாவோம்" என்பதாகத்தானே இருக் கும் என்று அவர் கூறினார் (1 கொரி. 15:32).

உண்பதற்கும் குடிப்பதற்கும் இன்னும் பிற செயல்களில் மகிழ்ச்சி அடைவதற்கும் தேவை யான ஆற்றல் **தேவனிடத்தில்** இருந்து வருவதாக சாலொமோன் சேர்த்துக் கூறுகிறான். பெரும் பாலான சாதாரண இன்பங்களை அவரின்றி நம்மால் அனுபவிக்க முடியாது. உணவு, பசி, சௌி மானம், பார்வை, கேட்குந்திறன், முகர்வுத்திறன், நினைவுத்திறன், உடல்நலம், மனநலம் மற்றும் இயல்பான இன்ப அனுபவங்கள் எல்லாவற்றிற் காகவும் நாம் அவரையே சார்ந்திருக்கிறோம்.

2:25 மேலே சொல்லப்பட்ட எல்லாவற்றையும், மற்ற எல்லா மனிதர்களைப் பார்க்கிலும் அதிக மாக அனுபவித்ததாக அவன் இந்த வசனத்தில் கூறுகிறான்.

ஜான் D. ராக்.ஃபெல்லர் என்பாருக்கு ஒரு வார வருமானம் பத்து இலட்சம் டாலருக்கு மேல் இருந்தது. ஆனாலும் அவருடைய மருத்துவர்கள் ஒரு சில சில்லறைக் காசு பெறுமான உணவை மட்டுமே உண்ண அனுமதித்தார்கள். பிழைப் புக்கே வழியற்ற ஒருவனும்கூட அவர் உண்ட உணவை இழிவாகக் கருதுவான் என்று அவரு டைய வாழ்க்கை வரலாற்றை எழுதியவர்களில் ஒருவர் குறிப்பிட்டார்:

> 42 கிலோ எடையுடன் இருந்த ராக்ஃபெல்லர் காலை உணவாக ஒவ்வொரு உணவு வகை யிலும் மாதிரிக்குக் கொஞ்சம் எடுத்துக்கொண் டார்: ஒரு சொட்டு காஃபி, ஒரு தேக்கரண்டி தானிய உணவு, ஒரு முள் கரண்டி முட்டை, ஒருவேர்க் கடலை அளவு இறைச்சித் துண்டு.[22]

உலகிலேயே செல்வம் மிகுந்தவராக இருந்தவர், ஆனாலும் அவர் உணவை அனுபவித்து உண்பதற்கு இயலாதவராக இருந்தார்.

2:26 நீதிக்கு நன்மையையும், பாவத்துக்குத் தண்டனையையும் தேவன் வழங்குகிறார் என்னும் வாழ்க்கையின் பொதுவான விதியைத் தான் கண்டதாக இறுதியில் பிரசங்கி கூறுகிறான். தேவனுக்கு மனமகிழ்ச்சி உண்டாகும்படி செய்கிறவனுக்கு அவர் ஞானத்தையும் அறிவையும் இன்பத்தையும் அளிக்கிறார். ஆனால் பாவம் செய்வதைத் தனது வழக்கமாகக் கொண்டிருப்பவனுக்கு அவர் கடினமான வேலையைச் சுமத்துகிறார், மேலும் அவன் சேர்த்துக் குவித்து வைக்கும் செல்வத்தை விட்டுச் செல்கிறான், அதனை தேவன் தமக்கு விருப்பமான மனிதன் பெறும்படி செய்கிறார். இதனைக் காட்டிலும் பயனற்றதும் தோல்வியைத் தருகிறதுமான நிலை வேறு எது?

இ. வாழ்வு மரணம் என்னும் சுழற்சியாகிய மாயை [அதி. 3]

3:1 மனிதனுடைய வாழ்க்கை அவனுடைய நடத்தை ஆகியவை பற்றி ஆராய்ச்சி செய்கிற மாணவனாக இருந்த சாலொமோன் ஒவ்வொன்றிற்கும் முன்குறிக்கப்பட்ட ஒவ்வொரு காலம் உண்டென்றும், ஒவ்வொரு நிகழ்வுக்கும் குறிப்பிட்ட ஒவ்வொரு சமயம் உண்டென்றும் கண்டறிந்தான். தேவன்தாமே ஒவ்வொரு செயலையும் மிகப்பிரமாண்டமான கணினியில் திட்டமிட்டு வைத்திருக்கிறார் என்பதே இதன் பொருள். இது "என்ன நடக்கப் போகிறது? என்ன நடக்கப் போகிறது!" என்று ஹிப்பானிஸ் கூறியது போல இருக்கிறது. ஒரு சுழற்சியில் நிகழ்வுகள் மாறி மாறி வருவது போலவே, வரலாறும் முறைப்படுத்தப்பட்ட நிகழ்வுகளால் நிறைந்திருக்கிறது. இவையாவும் மாற்றத்திற்கு இடமற்றபடி ஒழுங்குபடுத்தப்பட்ட முறைமையில் நடைபெற்று வருகின்றன. அதுபோலவே மனிதனுடைய நடத்தையும் வரையறுக்கப்பட்ட விதிகள் அல்லது கொள்கைகள் ஆகியவற்றிற்கு உட்பட்டு முறையாக நடைபெறும்படி அவன் வடிவமைக்கப்பட்டிருக்கிறான். அவன் ஊழ்வினை, கடிகாரம், நாட்கள், மாதங்கள் ஆகியவற்றிற்கு அடிமையாகவே இருக்கிறான்.

முதல் எட்டு வசனங்களில் இருபத்தெட்டு செயல்கள் பிரசங்கியால் பட்டியலிடப்பட்டுள்ளன, வாழ்க்கைச் சுழற்சிக்கு அடையாளமாக இவை கூறப்பட்டுள்ளன என்று தோன்றுகிறது. இருபத்தெட்டு என்னும் எண்ணின் மூலமாக இது அறியப்படுகிறது, உலகத்தைக் குறிக்கும் எண் நான்கு, இது நிறைவைக் குறிக்கும் எண் ஏழால் பெருக்கப்பட்டுள்ளது.

இந்தப் பட்டியல் எதிர்மறைச் சொற்களைக் கொண்டுள்ளது. பதினான்கு உடன்பாட்டுச் சொற்கள், பதினான்கு எதிர்மறைச் சொற்கள். சில வழிகளில் அவை ஒன்றையொன்று ரத்து செய்து விடும். அதனால் ஏற்படும் விளைவு பூஜ்யம்.

3:2 பிறக்க ஒரு காலமுண்டு. அந்த மனிதனுக்கு அதன்மேல் அதிகாரம் இல்லை, பெற்றோர்களும்கூட பிறப்பின் சாதாரண கால அளவு ஒன்பது மாதங்கள் காத்திருக்க வேண்டும்.

இறப்பதற்கும் ஒரு காலமுண்டு. சங்கீதம் 90:10 -இன்படி மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட கால அளவு எழுபது ஆண்டு, இது இவ்வாறு இருப்பினும், மரணம் முன்குறிக்கப்பட்ட நியமனம் ஆகும், அதன்படி அது நிகழ்ந்தே ஆகவேண்டும்.

இந்தப் பூமியில் நமது வாழ்நாட்காலம் முடிவடையும் என்பதை தேவன் முன்னறிந்திருக்கிறார் என்பது உண்மையே, ஆனால் கிறிஸ்தவர்கள் நோய்வாய்ப்படுவதாலும் அவர்களுக்கு விபத்து ஏற்படுவதாலும் மரணம் உண்டாவதில்லை. நம்முடைய வேலை முடிவடைகிற வரை நாம் சாகா நிலை பெற்றிருக்கிறோம். மரணம் நிகழக்கூடியது தான், ஆனாலும் அது நிச்சயமாக நடைபெறும் என்று சொல்ல முடியாது. கிறிஸ்து திரும்பி வருவார் என்னும் உன்னதமான நம்பிக்கை ஒவ்வொரு விசுவாசியையும் இரட்சகரை எதிர்நோக்கியிருக்கும்படி செய்கிறதேயொழிய, சவத்தைச் சுமப்பவர்களையல்ல. பீட்டர் பெல் என்னும் பிரசங்கி, "என்னைப் புதை குழிக்கு எடுத்துச் செல்பவர்களையல்ல; தேவ எக்காளத்தோடு வானத்திலிருந்து இறங்கி வருபவரை எதிர்நோக்கிக் காத்துக் கொண்டிருக்கிறேன்" என்று அழகுற இயம்பினார்.

நட ஒரு காலமுண்டு, நட்டதைப் பிடுங்க ஒரு காலமுண்டு. இந்தச் சொற்களின் மூலமாக பயிர்த் தொழில் முழுவதையும் ஓர் ஆண்டின் வெவ்வேறு காலங்களோடு நெருக்கமாகத் தொடர்புபடுத்திப் பேசுகிறான் சாலொமோன் (ஆதி. 8:22). அந்தந்தக் காலத்தில் நடவும் அறுவடை செய்யவும் தவறினால் பேரிழப்பே உண்டாகும்.

3:3 கொல்ல ஒரு காலமுண்டு, குணமாக்க ஒரு காலமுண்டு. திருமறை விரிவுரையாளர்கள் இதை விளக்கிக் கூற அதிக நேரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள், இது கொலையைக் குறிப்பதில்லை, மாறாக போர் நடவடிக்கைகள், மரண தண்டனை அல்லது தற்காப்பு ஆகியவற்றையே

குறிக்கும் என்று அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் சாலொமோனுடைய ஆராய்ச்சி சூரியனுக்குக் கீழே அவன் கொண்டிருந்த அறிவை அடிப்படையாகக் கொண்டது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. தெய்வீக வெளிப்பாடு இன்றி, வாழ்க்கை என்பது கொலைக்கூடம் அல்லது மருத்துவமனை, போர்க்களம் அல்லது முதலுதவிக் கூடம் என்றுதான் அவனுக்குக் காட்சி தருகிறது.

இடிக்க ஒரு காலமுண்டு, கட்ட ஒரு காலமுண்டு. குடியிருப்பதற்கு தகுதியற்ற வீடுகளையும், பழுதுபார்க்க இயலாத கட்டடங்களையும் இடித்துத் தரைமட்டமாக்குவதற்கு முதலில் இடிப்பவர்கள் வருகிறார்கள். பின்னர் நவீன அடுக்குமாடிக் கட்டடங்களைக் கட்டும் தொழிலாளிகள் வருகிறார்கள். அவர்கள் அழிவுற்ற இடங்களைப் புதுப்பிக்கிறார்கள்.

3:4 அழ ஒரு காலமுண்டு, நகைக்க ஒரு காலமுண்டு. சோகமும் நகைச்சுவையும் மாறி மாறி வருவதாகவே வாழ்க்கை தோன்றுகிறது. இப்பொழுது கறுப்பு முகமூடி அணிந்த துன்பியல் நாடக நடிகர் போன்று வாழ்க்கை காணப்படுகிறது, பின்னர் அது கோமாளி போன்று பல வருணச் சாயம் பூசிய முகத்தோடு வரும்.

புலம்ப ஒரு காலமுண்டு, நடனம் பண்ண ஒரு காலமுண்டு. சவ ஊர்வலம் துக்கத்தோடு புலம்பி அழுகிற மனிதர்கள் பின்தொடரச் செல்கிறது. ஆனால் இதே மனிதர்கள் சிறிது காலத்துக்குப் பின் திருமண வரவேற்பில் நடனமாடுவார்கள், அப்பொழுது இவர்களுடைய துக்கமெல்லாம் பறந்து போயிருக்கும்.

3:5 கற்களை எறிந்துவிட ஒரு காலமுண்டு, கற்களைச் சேர்க்க ஒரு காலமுண்டு. எழுத்தின்படி காண்கிறபோது, நிலத்தைப் பயிரிடுவதற்காக அதிலுள்ள கற்களை அகற்ற வேண்டும் என்பதே இதன் பொருளாகத் தோன்றுகிறது (ஏசாயா 5:2). பின்னர் கட்டடங்களையும், வீடுகளையும், மதிற் சுவர்களையும் கட்டுவதற்குக் கற்கள் சேகரிக்கப்பட வேண்டும். உருவகமாக இந்தச் சொற்களைக் காண்போமானால், இது திருமண செயல்பாட்டைக் குறிப்பதாகக் கூறலாம், நவீன கால விளக்க வுரையாளர்கள் பெரும்பாலோர் அவ்வாறுதான் பொருள் கூறுகிறார்கள். TEV மொழிபெயர்ப்பு இதனைப் பொழிப்புரையாகத் தருகிறது: "பாலுறவுக்கு ஒரு காலமுண்டு, அது இல்லாமல் இருக்க ஒரு காலமுண்டு."

தழுவ ஒரு காலமுண்டு, தழுவாமலிருக்க ஒரு காலமுண்டு. காதல் உணர்வுகளைப் பொறுத்தவரை, ஈடுபாடுகொள்ள ஒரு காலமுண்டு, அதிலிருந்து விலகிச் செல்ல ஒரு காலமுண்டு. காதல் தூய்மையாக இருக்கக்கூடிய ஒரு காலமுண்டு, அது முறைகேடானதாக இருக்கக் கூடிய காலமும் உண்டு.

3:6 தேட ஒரு காலமுண்டு, இழக்க ஒரு காலமுண்டு. தொழில்துறையில் ஏற்படுகிற சுழற்சியைக் குறித்து இது நம்மைச் சிந்திக்க வைக்கிறது. அதில் ஆதாயமும் இழப்பும் ஏற்றத் தாழ்வு அடைகின்றன. முதலில் பெருமளவு ஆதாயம் கிடைக்கும் வகையில் சந்தை முன்னேற்றம் அடைகிறது, பின்னர் சந்தை மந்தமடைந்து தொழில் நிறுவனங்கள் இழப்படைகின்றன.

காப்பாற்ற ஒரு காலமுண்டு, எறிந்துவிட ஒரு காலமுண்டு. பெரும்பாலான குடும்பத் தலைவிகள் நூதனமான பொருட்கள்மேல் அதிக ஆர்வம் காட்டுவார்கள். பல மாதங்கள் அல்லது பல ஆண்டுகள் அவற்றை மேன்மாடங்களிலும், அலமாரிகளிலும், கீழறைகளிலும் மறைத்து வைப்பார்கள். பின்னர் வீட்டைச் சுத்தம் செய்ய வேண்டும் என்னும் உந்துதலில் அவற்றைக் குறைந்த விலைக்கோ இலவசமாகவோ கொடுத்து அனுப்பிவிடுவார்கள்.

3:7 கிழிக்க ஒரு காலமுண்டு, தைக்க ஒரு காலமுண்டு. ஆடை அணிவதில் அவ்வப்போது ஏற்படுகிற மாற்றங்களைக் குறித்து சாலொமோன் சிந்திப்பதாகத் தோன்றுகிறது. பிரபலமான ஆடை வடிவமைப்பாளர்கள் சிலர் ஆடைகளின் பாணியில் ஏற்படுகிற மாற்றங்களுக்குக் காரணமாக விளங்குகிறார்கள், இதுதான் நவீன பாணி என்று அவர்கள் கூற உலகமே அதைப் பின்பற்றுகிறது. ஆடையின் தொங்கல் அடிவரை நீளமாகிறது அல்லது குட்டையாகிறது. இன்றைக்கு உடையணியும் பாணி துடுக்காகவும் கவர்ச்சிமிக்கதாகவும் விளங்குகிறது, நாளைக்கு அது பழம்பாணியாகவும் பாட்டி அணிவது போலவும் இருக்கும்.

மவுனமாயிருக்க ஒரு காலமுண்டு, பேச ஒரு காலமுண்டு. நியாயமற்ற முறையில் நாம் குறைகூறப்படுகிற நேரத்தில் நாம் மவுனமாயிருக்க வேண்டும், அல்லது மற்றவர்களைக் குறைகூறும்படி அல்லது உண்மையற்ற செய்திகளைக் கூறும்படி, கனிவற்ற வகையில் பேசும்படி, புத்தியற்ற வகையில் பேசும்படி நம் தூண்டிவிடப்படுகையில் நாம் மவுனமாயிருக்க வேண்டும். முன்பின் யோசனையில்லாமல் மோசே பேசியதால் அவன் வாக்குறுதி செய்யப்பட்ட

நாட்டிற்குள் நுழைவதற்கு அனுமதிக்கப்பட வில்லை (எண். 20:10; சங். 106:33).

மிகப்பெரிய கொள்கை அல்லது நோக்கம் ஆபத்துக்குட்படும்போது அதைக்குறித்துப் **பேசுவதற்கான காலம்** அதுவேயாகும். **பேசுவதற்கான காலம்** வந்துவிட்டது என்று மொர்தெகாய் எஸ்தருக்கு அறிவுறுத்தினான் (எஸ். 4:13-14). "நன்னெறி சார்ந்த விசயங்களில் பெருமளவு இக்கட்டான சூழ்நிலை ஏற்படுகிறபோது மவுனமாயிருக்கிறவர்களுக்கென்று நரகத்தில் மிகவும் சூடான இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது" என்று திருவாளர் டான்டே கூறியதையும் சேர்த்து அவன் கூறியிருக்க வேண்டும்.

3:8 சிநேகிக்க ஒரு காலமுண்டு, பகைக்க ஒரு காலமுண்டு. கிறிஸ்தவப் பின்னணியோடு இதை இணைத்துப் பேச நாம் முற்படக்கூடாது. சாலொமோன் உலகத்து மனிதனாகப் பேசுகிறானேயொழிய, கிறிஸ்தவனாகப் பேசவில்லை. மனித நடத்தையானது சிநேகிக்கும் காலத்துக்கும் பகைக்கும் காலத்துக்கும் இடையே மாறி மாறி ஊசலாடுகிறது என்று அவனுக்குத் தோன்றியது.

யுத்தம்பண்ண ஒரு காலமுண்டு, சமாதானம் பண்ண ஒரு காலமுண்டு. கொடூரமும் மதியீனமுமான போர்கள், இடையிடையே சிறிது காலச் சமாதானம் ஆகியவை பற்றிய பதிவுகள் இல்லையெனில், வரலாறு என்பது என்ன?

3:9 "கடினமாக உழைக்கிற மனிதன் பெறுகிற நிலையான பயன் என்ன?" என்னும் கேள்வி சாலொமோனுடைய மனதில் ஒலித்துக்கொண்டே இருந்தது. ஆக்கபூர்வமான ஒவ்வொரு செயலுக்கும் ஓர் அழிவுச்செயல் நடைபெறுகிறது. ஒவ்வொரு கூட்டலுக்கும் ஒவ்வொரு கழித்தல். ஆக்கபூர்வமான பதினான்கு செயல்களைப் பயனற்றுப் போகச் செய்யும் பதினான்கு எதிர்மறைச் செயல்கள். பதினான்கிலிருந்து பதினான்கைக் கழித்தால் கிடைக்கும் விடை பூஜ்யம் என்பதே வாழ்க்கையின் கணக்கு. மனிதனுடைய வாழ்வின் முடிவில் அவனிடம் இருப்பது வெறும் பூஜ்யம்தான்.

3:10 மனிதன் தனது காலத்தில் செய்வதற்கென்று தேர்ந்தெடுத்த செயல்கள், தொழில்கள் மற்றும் நாட்டங்கள் எல்லாவற்றையும் குறித்து சாலொமோன் தீர ஆராய்ந்து முடித்திருக்கிறான். அதைப் பற்றிய பட்டியலையே 2 முதல் 8 வரையிலான வசனங்களில் அவன் இப்பொழுது தந்திருக்கிறான்.

3:11 தேவன் எல்லாவற்றையும் **அதனதன் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார்,** அதாவது ஒவ்வொரு செயலுக்கும் ஒரு பொருத்தமான காலம் உள்ளது என்பதே சாலொமோன் செய்த முடிவு. ஒவ்வொரு செயலுக்கும் ஒரு குறிப்பிட்ட காலம் உண்டு, தேவனுடைய படைப்பில் அதனதனுடைய காலத்திலே அது மிகச் சிறப்பாகப் பொருந்துகிறது என்னும் உண்மையின் அடிப்படையில் அவன் அதன் அழகை இங்கு அதிகமாகச் சிந்தித்துப் பார்க்கவில்லை.

மனிதருடைய இருதயங்களில் அவர் நித்திய காலத்தின் உணர்வையும் வைத்திருக்கிறார் (இலகு தமிழ்). நேரத்தைக் கணக்கிடும் உலகில் மனிதன் வாழ்ந்தாலும் நித்தியத்தைப் பற்றி அவனுக்கு உணர்த்தப்பட்டிருக்கிறது. "நித்தியம்" என்பது பற்றி அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை என்றாலும், அவனுடைய உள்மனது அதைக் குறித்துச் சிந்தித்துக்கொண்டே இருக்கிறது. இவ்வுலக வாழ்வுக்குப் பிறகு கரையில்லாத காலம் என்னும் கடல் என்று ஒன்று இருக்கக்கூடும் என்று அவன் கருதுகிறான்.

ஆனாலும் தேவனுடைய செயல்களும் வழிகளும் மனிதனால் ஆராய்ந்து அறிய முடியாதவை. படைப்பு, கருணையாகப் பராமரித்தல், பிரபஞ்சத்தின் முடிவு இவை பற்றிய வெளிப்பாடு இல்லையேல் இவற்றிற்கான தீர்வு காண்பதென்பது இயலாத செயல். மனிதனுடைய அறிவு பெருமளவு முன்னேறிக் கொண்டே செல்கிறது, எனினும் நாம் மங்கலான கண்ணாடி வழியாகவே காண்கிறோம். "அவரைக் குறித்து நாம் எவ்வளவு குறைவாக அறிந்திருக்கிறோம்" என்று நாம் அவ்வப்போது பெருமூச்சுடன் அறிக்கையிட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

3:12 மாற்றத்துக்கு இடமற்ற சில விதிகளால் மனிதனுடைய வாழ்க்கை ஆளுகைக்குட்பட்டிருப்பதால், அவனுடைய செயல்கள் யாவும் அவன் எங்கே தொடங்கினானோ அங்கேயே அவனை விட்டுவிடுகின்றன. இதன் காரணமாக எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு வாழ்க்கையில் மகிழ்ச்சியோடு இருந்து, அதை அனுபவிக்க வேண்டுமென்பதே மிகச் சிறந்த கோட்பாடு என்று சாலொமோன் முடிவு செய்கிறான்.

3:13 வாழ்க்கை என்பது குடிவெறியால் கூத்தடிப்பது என்றோ, ஊதாரித்தனமாகச் சிதறடிப்பது என்றோ, ஒழுக்கங்கெட்டு அலைவது என்றோ பொருள்படும்படி அவன் கூறவில்லை; மாறாக மனிதன் உண்டு, பருகி, தனது அனுதின வேலையில் இன்பத்தைக் கண்டடைந்து மகிழ்ச்சியோடு வாழும்படி அது **தேவனுடைய அநுக்கிரகமாக**

வழங்கப்பட்டுள்ளது. இது வாழ்க்கையைக் குறித்த தாழ்வான கருத்தாகும், கிறிஸ்தவக் கருத்துக்கு முற்றிலும் குறைவுடையது; ஆனால் இங்கு சாலொமோனுடைய கருத்து முழுவதும் பூமியோடு தொடர்புடைய வகையில் சொல்லப்பட்டது என்பதை நாம் தொடர்ந்து நினைவுகூர வேண்டும்.

3:14 தேவனுடைய ஆணைகள் மாற்றத்திற்கிடமற்றவை என்பதை அவன் மிகச் சரியாகப் புரிந்துகொண்டிருந்தான். தேவன் முடிவு செய்தது எதுவோ அது நிலைத்திருக்கும், மனிதனால் அதை மாற்ற முடியாது, அதில் ஒன்றையும் அவன் கூட்டவோ குறைக்கவோ கூடாது. படைப்பாளர் ஒழுங்குபடுத்தியவற்றை எதிர்த்துப் படைப்புகள் போராடுவது மதியீனம். அவருக்கு மதிப்பளித்து, அவருடைய கட்டுப்பாட்டுக்குள் அடங்கியிருப்பது மிகவும் சிறந்தது.

3:15 தற்போது நடைபெறுபவை யாவும், முன் நடந்த நிகழ்ச்சிகளின் மறு நிகழ்வுகளேயாகும். எதிர்காலத்தில் நடைபெறப்போகிற நிகழ்வுகளும் **முன் நடந்ததே** அல்லாமல் வேறல்ல. மீண்டும் மீண்டும் நடைபெறுகிற வகையிலேயே எல்லாச் செயல்களையும் தேவன் ஒழுங்குபடுத்தியிருக்கிறார். அதன் காரணமாக நடந்த நிகழ்ச்சிகளே மறுபடியும் நடக்கின்றன. முன் நடந்தவற்றை அவர் மீண்டும் நிகழச் செய்கிறார், அதன் காரணமாக வரலாறு திரும்புகிறது. **"நடந்ததையோ தேவன் விசாரிப்பார்"** என்னும் சொற்றொடர் அவிசுவாசிகளின் முந்தைய பாவங்களுக்குக் கணக்குக் கேட்கப்படும் என்னும் உண்மையை வலியுறுத்துவதற்காகப் பயன்படுத்தப்படுகிறது. அது உண்மையேயெனினும், இந்தப் பகுதியின் அழுத்தம் அதுவாக இருக்க வாய்ப்பில்லை. தேவன் முந்தைய நிகழ்வுகளை மீண்டும் நடைபெறச் செய்து இன்னுமொரு வரலாற்றுச் சுழற்சியை நிறைவேற்றுகிறார். திருவாளர் R. C. ஸ்பிரௌல் இதனை "மீண்டும் நிகழ்வதன் நித்தியம் என்னும் கருத்து" என்று பெயரிட்டு அழைக்கிறார், "இந்தக் கருத்து நித்திய காலமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. காலச் சுழற்சிகளில் ஏற்கனவே நடந்த நிகழ்வுகள் யாவும் மீண்டும் நடைபெறுகின்றன. மனித வாழ்க்கை என்னும் நாடகத்தில் ஒருமுறை நடந்த நிகழ்ச்சி மீண்டும் நடைபெறுகிறது."[23]

3:16 பிரசங்கியின் உள்ளத்தை வேதனைக் குட்படுத்திய நிகழ்வுகளில் நேர்மையின்மையும் **அநீதியும்** அடங்கும். நீதி செலுத்தப்பட வேண்டிய நீதிமன்றங்களில் நேர்மையற்ற தீர்ப்புகள் வழங்கப்படுகின்றன. நியாயமான முறையில் செயல்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய அரசு அலுவல்களில் நியாயமற்ற முறையில் செயல்கள் நடைபெறுகின்றன.

3:17 வாழ்க்கையில் காணப்படும் இந்த ஏற்றத் தாழ்வுகள் மனிதர்களை தேவன் நியாயந்தீர்க்கப் போகிற காலம் பின்னர் வரும் என்று அவனை நம்பச் செய்தன, அந்தத் தருணத்தில் இப்பூமியில் தவறுகள் யாவும் சரிசெய்யப்படும் என்றும் அவன் நம்பினான். இவ்வுலக வாழ்க்கைக்குப் பின்வரும் வாழ்க்கையில் அது நடைபெறும் என்று சாலொமோன் வெளிப்படையாகச் சொல்லவில்லையெனினும், அது முன்னரே உறுதிசெய்யப்பட்ட முடிவாகும், ஏனெனில் இவ்வுலகில் சரிசெய்யப்படாத பல அக்கிரமங்கள் தொடருகின்றன. நீதியுள்ள மனிதர்களின் உள்ளங்களில் எழுகிற பொதுவான உணர்ச்சியையே அவனுடைய முடிவு பிரதிபலிக்கிறது. கணக்குகள் சரிசெய்யப்பட்டு, நீதியே சரியானது என்று வெற்றி பெறுகிற காலத்தை நற்பண்பும் நேர்மையும் எதிர்நோக்கியிருக்கின்றன.

3:18 மூன்றாவது அதிகாரத்தின் இறுதி வசனங்களில் பிரசங்கி மரணத்தைப் பற்றிய செய்தியை ஆராயத் திரும்புகிறான். எல்லா மனிதர்களுடைய சிறப்பான குறிக்கோள்களையும், பெருமுயற்சிகளையும், இன்பங்களையும் முடிவுக்குக் கொண்டுவருகிற இரக்கமற்ற கெடுநோக்குடைய நிகழ்வு மரணமேயாகும். வெளிச்சத்தைப் பெறுவதற்கான திருமுறை நம்மிடம் இல்லையென்றால், நம்முடைய கருத்தும் அவனுடையது போலவே இருக்கும்.

அவன் தனது கருத்தை **"என் உள்ளத்தில் எண்ணினேன்"** என்னும் சொற்களோடு தொடங்குகிறதைக் கவனியுங்கள். தேவன் அவனுக்கு என்ன வெளிப்படுத்தினார் என்பதல்ல, அவன் தன்னுடைய உள்ளத்தில் என்ன முடிவு செய்தான் என்பதே கூறப்பட்டுள்ளது. சூரியனுக்குக் கீழே அவன் ஆராய்ந்து எடுத்த முடிவே அது. ஆகவே, மரணத்தைக் குறித்தும் மரணத்திற்குப் பிறகு என்ன நிகழப்போகிறது என்பது பற்றியும் ஒரு கோட்பாட்டை நிறைவாக உருவாக்க இந்தப் பகுதியை நாம் ஆதாரமாக எடுத்துக்கொள்ளக் கூடாது. ஆனாலும் பெரும்பாலான கள்ளக் குழுவினர் இதைத்தான் செய்திருக்கிறார்கள். ஆத்துமாக்களின் உறக்கம், இறந்துபோன துன்மார்க்கர் முழுவதுமாக அழிந்து போகுதல் ஆகிய தவறான கோட்பாடுகளை ஆதரித்துப் பேசுவதற்கு அவர்

கள் இந்த வசனங்களையே பயன்படுத்துகிறார் கள். ஆனால் இந்தப் பகுதியைக் கவனமாகப் படிப்போமானால் சாலொமோன் இவ்விரு கருத்து களையும் ஆதரித்துப் பேசவில்லை என்பதை நாம் புரிந்துகொள்வோம்.

இவ்வுலகில் மனிதனுடைய வாழ்க்கை அற்ப மானது, விரைவில் மறைந்து போகக் கூடியது என்பதை அவன் புரிந்துகொள்ளும்படி தேவன் அவனை இந்தக் குறுகிய வாழ்க்கையில் சோதிக் கிறார் என்பதே அவன் கூறவரும் கருத்து - இவ் வுலக மனிதவாழ்க்கை மிருகங்களின் வாழ்க்கை யைப் போன்றதே ஆகும். மிருகங்களைக் காட்டி லும் மனிதன் சிறப்பானவன் அல்லன் என்று அவன் கூறுகிறானா?

3:19 இல்லை, மனிதன் ஒரு மிருகம் என்று இங்கு சொல்லப்படவில்லை, ஒரு பொருளில் அவன் மிருகத்தைக் காட்டிலும் கூடுதல் அனுகூலமான நிலையில் இல்லை. மிருகங்கள் சாகிறதுபோலவே மனிதனும் சாகிறான். எல்லாவற்றிற்கும் **சுவாசம்** ஒன்றுதான், அவை சாகிற தருணத்தில் அந்தச் சுவாசம் துண்டிக்கப்படுகிறது. ஆகவே மனிதனுக் கும் அவனைவிடத் தாழ்வாகப் படைக்கப்பட்ட உயிரினங்களுக்கும் வாழ்வு ஒன்றுதான்.

3:20 எல்லாவற்றிற்கும் பொதுவான இடம் கல்லறைதான். எல்லாம் புதைகுழியை நோக் கியே செல்கின்றன - மண்ணுக்கே செல்கின்றன. மனிதனும் விலங்கும் மண்ணிலிருந்து தோன்றி, மண்ணுக்குத் திரும்பிச் செல்வதையே நாம் காண்கிறோம். சரீரம் மட்டுமே மனித உயிர் என் னும் அடிப்படையில் இவ்வாறு சொல்லப்பட்டுள் ளது என்பதில் ஐயமில்லை. ஆனால் அது உண் மையன்று என்பதை நாம் அறிவோம். மனிதன் உயிர்வாழ்கிற கூடாரமே அவனுடைய உடல். ஆனால் மனிதன் இறந்தபிறகு என்ன நிலையை அடைவான் என்னும் முழு உண்மையையும் சாலொமோன் அறிந்திருப்பான் என்று நம்மால் எதிர்பார்க்க முடியாது.

3:21 மரணத்தின்போது என்ன நிகழும் என்பதைக் குறித்த அறிவு இல்லாதவனாகவே சாலொமோன் இருந்தான் என்பதை அவனுடைய கேள்வி உறுதிசெய்கிறது. **"உயர ஏறும் மனித னுடைய ஆவியையும், தாழ பூமியிலிறங்கும் மிருகங்களுடைய ஆவியையும் அறிகிறவன் யார்?"** இதனை கோட்பாட்டு உண்மை என்று நாம் எடுத்துக்கொள்ளக்கூடாது. இது மனிதனுடைய கேள்வியேயொழிய, தெய்வீக நிச்சயம் அல்ல.

ஒரு விசுவாசி இறக்கும்போது அவனுடைய ஆவியும் ஆத்துமாவும் கிறிஸ்துவினிடம் செல் லும் என்பதைப் புதிய ஏற்பாட்டிலிருந்து நாம் அறி வோம் (2 கொரி. 5:8; பிலி. 1:23). மேலும் அவனு டைய உடல் கல்லறைக்குச் செல்கிறது (அப். 8:2). அவிசுவாசியின் ஆவியும் ஆத்துமாவும் பாதாளத்துக்குச் செல்கின்றன, அவனுடைய உடலோ கல்லறைக்குச் செல்கிறது (லூக்கா 16:22,23). கிறிஸ்து வானத்துக்கு வருகிறபோது, விசுவாசத்தோடு இறந்தவர்களின் உடல்கள் உயிரோடு மகிமையின் உருவில் எழுந்து ஆவி யோடும் ஆத்துமாவோடும் ஒன்றிணையும் (பிலி. 3:20,21; 1 தெச. 4:16,17). விசுவாசம் இல்லாதவர் களாக இறந்தவர்களின் உடல்கள் பெரிய வெள் ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பின்போது எழுந்து, ஆவியோடும் ஆத்துமாவோடும் இணைக்கப் பட்டு, பின்னர் அக்கினிக் கடலிலே தள்ளப்படும் (வெளி. 20:12-14).

திட்டவட்டமாகக் கூறுவோமானால், விலங்கு களுக்கு உடலும் ஆத்துமாவும் உள்ளன; அவற் றிற்கு ஆவி இல்லை.[24] விலங்குகளின் உயிர் பிரிந்து மரணமடைந்த பிறகு அவற்றிற்கு என்ன நிகழும் என்பது பற்றித் திருமறையில் ஒன்றும் சொல்லப்படவில்லை.

3:22 மனிதன் ஒவ்வொரு நாளும் செய்கிற நடவடிக்கைகளில் மகிழ்ச்சி அடைவதற்குச் சிறப்பாகச் செய்யக் கூடியது என்ன என்று சாலொ மோன் இங்கு கூறுகிறான். அது அவனுடைய பங்கு, ஆகவே தவிர்க்க முடியாதவற்றோடு அவன் ஒத்துழைக்க வேண்டும். தன்னால் மாற்ற இய லாதவற்றை அவன் ஏற்றுக்கொண்டு அவற்றில் மனநிறைவு அடைய வேண்டும். ஆனால் எல்லா வற்றிற்கும் மேலாக அவன் தனக்குக் கிடைத்த வாழ்வை மகிழ்வுடன் அனுபவிக்க வேண்டும், ஏனெனில் அவன் இந்த உலகத்தை விட்டுச் சென்ற பிறகு என்ன நடக்கும் என்று ஒருவராலும் அவனிடம் கூற முடியாது.

ஈ. வாழ்வின் ஏற்றத்தாழ்வுகளாகிய மாயை [அதி. 4]

"மனிதனுக்கு எதிராக மனிதன் செய்கிற மனி தத் தன்மையற்ற கொடூரச் செயல்கள் எண்ணிக் கையிலடங்கா ஆயிரமாயிரம் மனிதர்களைத் துக்கத்துக்குள் ஆழ்த்துகிறது!" என்று திருவாளர் ராபர்ட் பர்ன்ஸ் கூறினார். மனிதர்கள் உடன் மனி தர்களை ஒடுக்குகிற செயல்கள் ஒவ்வொரு காலக் கட்டத்திலும் உணர்ச்சிபூர்வமான மக்களை வருத்தமடையச் செய்கின்றன. அது சாலொமோ

னையும் தொல்லைக்குட்படுத்தியது. **ஒடுக்கப்பட்ட வர்களின் கண்ணீர், ஒடுக்குகிறவர்களின் பெலம்**, ஒடுக்கப்பட்டவர்களை ஆதரிப்பவர்கள் இல்லாத நிலை ஆகியவற்றைக் கண்ட சாலொமோன் துக்கமடைந்தான். ஒடுக்குகிறவர்களின் பக்கம் பெலம் இருந்தது, ஒருவராலும் அதை எதிர்த்து நிற்க முடியவில்லை, ஒருவருக்கும் துணி வில்லை. இவ்வித அனுகூலமான நிலையில், "உண்மை எப்போதும் தூக்கு மேடைக்கு ஏற்றப் பட்டதாகவும், தவறு எப்போதும் அரியணையில் அமர்ந்திருப்பதாகவும்" தோன்றுகிறது. "ஒரு வரும் காணமுடியாத மங்கலான நிழற்பகுதியி லேயே தேவன் நின்று தமது சொந்த மக்களைக் கவனித்து வருகிறார்" என்பதை அவன் அறிய வில்லை.[25]

4:2 ஆகவே, சோர்வடைந்த சாலொமோன் **மரித்தவர்கள் உயிரோடிருக்கிறவர்களைப்** பார்க்கிலும் நல்ல நிலையில் இருக்கிறார்கள் என் னும் முடிவுக்கு வருகிறான். இவ்வுலக வாழ்வில், ஏற்படக்கூடிய உபத்திரவங்கள் கொடுமைகள் ஆகியவற்றிலிருந்து தப்புவதற்கான வரவேற்கத் தக்க வழியை மரணம் தருவதாக அவன் எண்ணு கிறான். மரணத்தால் ஏற்படக்கூடிய ஆழ்ந்த சிக் கல்களை அப்பொழுது அவன் கருத்தில்கொள்ள வில்லை - அவிசுவாசத்தோடு மரணமடையும் மனிதன் இவ்வுலகில் படுகிற பாடுகளைக் காட்டி லும் கூடுதலாகப் பாடுகள்பட வேண்டிய நிலைக் குட்படுவான். அவனுடைய கேள்வி, "மரணத்துக் குப் பின் வாழ்வு உண்டா?" என்பதன்று, மாறாக, "பிறப்புக்குப் பின் வாழ்வு உண்டா?" என்பதே.

4:3 உயிரோடிருப்பவர்களைக் காட்டிலும் இறந்து போனவர்கள் மேலான நிலையில் இருக் கிறார்கள் என்றாலும், இன்னும் பிறவாதவர்கள் பொறாமைப்படக்கூடிய அளவுக்கு அதனினும் மேலான நிலையில் இருக்கிறார்கள். அவனு டைய வெறுப்பு மனப்பான்மை மிகத் தாழ்வான நிலைக்குச் சென்றுவிட்டது. சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிற அநீதியான செயல்களாலே மன நிலை பாதிக்கப்பட்ட நிலைக்கு அவர்கள் கொண்டு போகப்படவில்லையே. "கோரமான கேலிக் கூத்தை மகிழ்ச்சி என்று அழைக்கும் வாழ்க் கையை" அவர்கள் இன்னும் சகிக்கவில்லையே.

4:4 மனிதன் தனது அயலானைக் கவிழ்த்துப் போட வேண்டுமென்னும் நோக்கத்துடனேயே தனது செயல்களையும் திறமைகளையும் பயன் படுத்துகிறான் என்னும் உண்மை அவனைச் சஞ்சலம் மிகுந்த நிலைக்குக் கொண்டு சென்றது. போட்டி மனப்பான்மையே மனித வாழ்க்கையை முன்னோக்கி நடத்தியது என்பதை அவன் கண் டான். மிகச் சிறந்த ஆடைகளை அணிய வேண் டும், மிகவும் ஆடம்பரமான வீட்டில் குடியிருக்க வேண்டும் - இத்தகைய விருப்பங்கள் யாவும் தேவ சாயலிலும் அவருடைய ரூபத்திலும் படைக் கப்பட்ட மனிதனின் வெறுமையையும் தகுதி யின்மையையுமே வெளிப்படுத்துகின்றன.

போப்பின் அரண்மனையை அலங்கரிக்கும் வேலை இருபெரும் கலைஞர்கள் மைக்கேல் ஏஞ்சலோ, ர.்பேல் ஆகியோரிடம் ஒப்படைக்கப் பட்டவுடனே அவர்களுக்குள் பகைமை உணர்வு எழத்தொடங்கியது. "அவர்கள் இருவருக்கும் வெவ்வேறு வேலைகள் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களுக்குள்ளாக எழுந்த பொறாமை உணர்வு முடிவில் ஒருவரோடொருவர் நேரடி யாகப் பேசமுடியாத நிலையை ஏற்படுத்தியது."[26] சிலர் இந்த மேதைகளைப் போல இருப்பதில்லை, அவர்கள் தங்களுடைய பொறாமையை மறைக் கக்கூடிய திறமைசாலிகளாக இருக்கிறார்கள். ஆனாலும் ஒரே காலத்தில் வாழுகிற மனிதர்களு டைய செயல்பாடுகளின் ஆழத்தில் பகைமை உணர்வு இருக்கவே செய்கிறது.

"இவ்வாழ்வு தருகிற யாவற்றையும் நான் அனுப வித்துப் பார்த்தேன், ஆனால் மகிழ்ச்சி அடைவதற் காகச் செய்யப்படும் வீணான செயல்களில் ஒரு வன் மற்றவனைக் கவிழ்க்க முயற்சி செய்கிற தையே காண்கிறேன்" என்று மனுக்குலத்தைக் குறைகூறும் தற்கால மேதை ஒருவர் எழுதியிருக் கிறார்.[27]

4:5 ஒரு மனிதனுடைய நோக்கமும் பயனும் பொறாமையாக இருக்கிறது, இதற்கு எதிர்மாறா னவன் **மூடன்** - அவன் மந்த புத்தியும் மதியீனனும் சோம்பேறியுமாயிருக்கிறான். அவன் தன் கை களைக் கட்டிக்கொண்டு, எவ்வித உழைப்புமின்றி என்ன கிடைக்கிறதோ அதை உண்கிறான். இவனோ, பொறாமையாலும் பேராசையாலும் ஏவப்பட்டு எந்நேரமும் சஞ்சலப்படுகிற அயலகத் தாரைக் காட்டிலும் ஞானமுள்ளவன் எனக் கரு தப்படக் கூடும்.

4:6 அவனைச் சுற்றிலும் இருக்கின்ற மக்கள் மூர்க்கத்தனமான போட்டி மனப்பான்மையோடு செயல்படுகிறபோது, மூடனுடைய கருத்து இவ் விதமாக இருக்கிறது: **வருத்தத்தோடும் மனச் சஞ்சலத்தோடும் இரண்டு கைப்பிடியும் நிறை யக் கொண்டிருப்பதைப் பார்க்கிலும், அமைச்ச லோடு (மன அமைதியோடு) ஒரு கைப்பிடி நிறையக் கொண்டிருப்பதே நலம்**. இதனைத்

திருவாளர் H. C. லெயிபோல்டு பொழிப்புரையாக்கித் தருகிறார்: "நான் அதிகமாகச் சேர்த்து அதனோடு வருகிற மனச்சஞ்சலத்தை எதிர்கொள்வதைக் காட்டிலும் கொஞ்சமாகக் கொண்டு மனச்சுமையில்லாமல் இருப்பதே சிறந்தது."

4:7,8 பிரசங்கியின் மனதை அதிர்ச்சிக்குள்ளாக்கிய மற்றொரு செயலையும் அவன் கண்டான். இங்கே தனிமையில் இருக்கிற மனிதன் வெறித்தனமாக வேலைசெய்து செல்வத்தைச் சேர்க்கிறான். **அவனுக்குப் பிள்ளையும் இல்லை, சகோதரனும் இல்லை,** நெருங்கிய உறவினர்களும் இல்லை. ஏற்கனவே அவனிடம் தேவைக்கு அதிகமாகப் பணம் இருக்கிறது. ஆனாலும் உழைப்பின் மிகுதியால் ஒவ்வொரு நாளும் ஓடாய்த் தேய்கிறான், வாழ்க்கையின் சிறு தேவைகளையும் நிவர்த்தி செய்வதில்லை."நான் ஒரு நன்மையையும் அநுபவியாமல் யாருக்காகப் பிரயாசப்படுகிறேன்?" என்று கேள்வி எழுப்புவதற்கான எண்ணம் அவனுக்கு எழவேயில்லை. திருவாளர் சார்ல்ஸ் பிரிட்ஜஸ் தனது விரிவுரையில் கருத்துரை கூறுகிறார்: "கஞ்சன் - அவனுக்கு இந்தப் பெயர் எவ்வளவு பொருந்துகிறது - உலகச் செல்வத்துக்கு வெறுக்கத்தக்கபடி அடிமைப்பட்டவன், உழைத்து உழைத்துத் தேய்ந்துபோனவன், கவனத்தை ஈர்க்கக்கூடிய அளவு அடிமைபோல வேலை செய்பவன்." அவனுடைய பெயர் கஞ்சன், அவனுடைய பெயருக்குத் தக்கபடி அவனும் இருக்கிறான் - பரிதாபமான நிலையில் இருக்கிறான். வெறுமையும் இழிவும் நிறைந்தவனாக அவன் வாழ்கிறான் என்று சாலொமோன் கருதுகிறான்!

"இரக்கமற்ற கொடூரமான முறையில் பொன்னின் மேல் இச்சைகொள்வது சீர்கெட்ட மனிதனின் முடிவான கேடுற்ற நிலையாகும்" என்று திருவாளர் சாமுவேல் ஜான்சன் கூறியிருப்பது மிகச்சரியானது.

4:9 கஞ்சனின் தனிமை, ஐக்கியத்தினாலும் கூட்டுறவினாலும் உண்டாகிற நன்மைகளைச் சுட்டிக்காட்டும்படி சாலொமோனை வழிநடத்தியது. இந்தக் கருத்துகளை வலியுறுத்தும்படி அவன் நான்கு எடுத்துக்காட்டுகளைப் பயன்படுத்துகிறான். முதலாவதாக, ஒருவன் தனியாக வேலை செய்வதைக் காட்டிலும் இருவர் சேர்ந்து உழைப்பது நல்லது, ஏனெனில் இருவருக்கிடையில் காணப்படும் ஒத்துழைப்பின் காரணமாக அவர்கள் இருவரும் சேர்ந்து திறமையுடன் உற்பத்தியைப் பெருக்கவியலும்.

4:10 மேலும் அவர்கள் வேலைசெய்கிறபோது விபத்து நேரிட்டால், அடிபட்டவனை மற்றவன் உதவி செய்து காப்பாற்ற முடியும். ஆனால் ஒருவன் தனியாக வேலை செய்கிறபோது ஏணியிலிருந்து கீழே விழுந்தால், அது பரிதபிக்கத்தக்க நிலைக்குக் கொண்டுபோய்விடும். உதவிக்கு அழைக்க அங்கு வேறு எவரும் இருக்கமாட்டாரே.

4:11 குளிர்ச்சியான இரவில் ஒருவன் தனியாகப் படுத்திருப்பதைவிட இருவராகப் படுத்திருப்பதால் சூட்டைப் பெறுவதற்கு ஒருவருக்கொருவர் உதவிசெய்ய ஏதுவாகும். குளிர்ந்த பாதங்களாலும், போர்வையின் பெரும்பகுதியை எடுத்துக் கொள்வதாலும் கூட்டாளி தொல்லையளிக்கக் கூடும்; அல்லது மின்சாரக் கம்பளி தேவையான அளவு சூட்டைக் கட்டுப்படுத்தித் தரும் என்றெல்லாம் கூறி சாலொமோன் கூறுகிற ஆலோசனையில் நாம் குறைகளைக் கண்டுபிடிக்கலாம். ஆனால் தோழமையின் காரணமாகவும் கூட்டுறவினாலும், தனிமையில் வாழ்கிற மனிதன் அறிந்திராத பல நன்மைகளையும் இன்பங்களையும் பெற முடியும் என்பதே இங்கு கூறப்படும் கருத்தாகும்.

4:12 மூன்றாவது எடுத்துக்காட்டு தாக்குதலிலிருந்து தப்பிப் பாதுகாப்பைப் பெறுவதோடு தொடர்புடையது. ஒருவன் தனித்திருக்கும்போது, ஒரு திருடன் அவனை அடக்கி ஆட்கொள்ள முடியும்; ஆனால் அவ்வாறு வருகிறவனை இருவர் எதிர்த்து எளிதில் வெற்றிகொள்ளலாம்.

இறுதியாக, ஓர் இழையை அல்லது இரண்டு இழைகளைக் கொண்ட கயிற்றைக் காட்டிலும் மூன்று இழைகளைக் கொண்ட கயிறு வலிமை பெற்றதாயிருக்கும். மூன்று தனித்தனி இழைகள் எவ்வளவு வலிமை பெற்று இருக்குமோ அதைக் காட்டிலும் அந்த மூன்றும் ஒன்றாக முறுக்கப்பட்டிருந்தால் மும்மடங்கு அதிக வலிமை பெற்றிருக்கும்.

4:13-16 மதியற்ற நடவடிக்கைகளும் மாயைகளும் குற்றவேல் புரிவோருக்கு மட்டுமே உரித்தானவை அல்ல. அவற்றை அரசர்களுடைய அரண்மனைகளிலும் காணமுடியும். வறுமையையும் சிறைச்சாலை அனுபவத்தையும் முறியடித்து அரியணையைப் பிடித்த ஓர் அரசனின் கதையை சாலொமோன் விவரிக்கிறான். ஆனால் அவன் இப்பொழுது முதிர் வயதினனாயிருக்கிறான், பிடிவாத குணத்தோடு இருக்கிறான். இளவயதுள்ள ஒருவன், ஏழையாக இருந்தாலும் அந்த முதியவனுக்குப் பதிலாக அரசாட்சி புரிவது நன்றாயிருக்கும். அவ்வரசனின் குடிமக்கள் யாவரையும் குறித்து சாலொமோன் நினைத்துப் பார்க்கிறான்,

அதிகாரத்தில் இரண்டாவது நபராகிய அந்த இளைஞனையும் அவன் நினைத்துப் பார்க்கிறான் - அவ்விளைஞனே அரசாளுவதற்கு வாரிசு உரிமை பெற்றவன். அவனுடைய கொடியின்கீழ் திரளான மக்கள் கூட்டம் கூடுகிறது. அவர்கள் யாவரும் வயது முதிர்ந்த அரசனின் ஆட்சியில் களைத்துப் போயிருக்கிறார்கள், மாற்றம் வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள், அது நல்ல நிருவாகத்தைத் தரும் என்று எதிர்பார்க்கிறார்கள். ஆனாலும் இனிவருபவர்கள் இவனைக் குறித்தும் மகிழ்ச்சியற்றுப் போவார்கள்.

மாறுகின்ற இயல்பையும் புதுமையை நாடும் இயல்பையும் எண்ணிப் பார்த்த சாலொமோன், உலகின் மிகச்சிறந்த உயர்பதவியும் கூட மாயை என்பதை உணர்ந்தான். அவையும் கூட காற்றை விரட்டிப் பிடிப்பதற்கு ஒப்பானவையே.

உ. புகழ்பெற்ற சமயமும் அரசியலுமாகிய மாயை (5:1-9)

மனிதன் தன் உள்ளுணர்வின்படி சமயச் சார்புடையவன், ஆனால் அது நல்லதாக இருக்க வேண்டுமென்னும் கட்டாயமில்லை. உண்மையில், அது தீமைக்கே வழிவகுக்கக் கூடியதாக இருக்கும். அவன் சமயச் சார்பே, தேவன் கிருபையாக வழங்கும் இலவச இரட்சிப்பின் தேவையை உணராதபடி மறைத்துவிடும். மேலும் மனிதனுடைய சொந்தச் சமயமானது உள்ளார்ந்த உண்மை இல்லாமல் வெளியரங்கப் பகட்டாக விளங்கும் சொல் விளையாட்டுப் போன்றதே யல்லாமல் வேறல்ல. சமய வாழ்க்கையில் மாயை உட்புகுந்துவிட வாய்ப்புள்ளது; மற்ற துறைகளில் அது எவ்வளவாக ஊடுருவுகிறதோ அதைக் காட்டிலும் கூடுதலாகச் சமய வாழ்க்கையில் ஊடுருவி விடும். ஆகவே படைப்பாளரோடு ஈடுபடுகிறபோது, அச்செயல்கள் பழக்கவழக்கங்களுக்கு உட்பட்ட சடங்கு முறையாகவோ, வெறுமனே வெளிப்படையான செயல்களாகவோ அல்லாமல் உளப்பூர்வமானவையாக இருக்க வேண்டுமென்று சாலொமோன் சில ஆலோசனைகளை வகுத்துத் தருகிறான்.

5:1 முதலாவது, மக்கள் **தேவனுடைய ஆலயத்துக்குச்** செல்கிறபோது தங்களுடைய நடையைக் காத்துக்கொள்ள வேண்டுமென்று ஆலோசனை வழங்குகிறான். பொதுவாக இது மரியாதையைக் குறிப்பதாக இருந்தாலும் இங்கு இது எண்ணாமல் துணிந்து தேவையற்றபடி நிறையப் பேசாமல், கற்பதற்கு அதிக ஆயத்தமாயிருப்பதைக் குறித்து விளக்கிக் கூறுகிறது. எண்ணாமல் துணிந்து வாக்குறுதிகள் தருவது மூடர்கள் செய்யும் தியாகமாகும். சிந்தனையற்ற மனிதர்கள் இவை தீமை பயப்பவை என்பதை அறியாமல் செய்கிறார்கள்.

5:2 மன்றாட்டுகளிலும், வாக்குறுதிகளிலும், தேவனுக்கு ஒப்புவித்து பயபக்தியோடு இருப்பதை அறிவிப்பதிலும் ஆராதனை செய்பவர்கள் துணிந்து பேசுவதைத் தவிர்க்க வேண்டும். பதற்றத்தோடும், கட்டாயப்படுத்தும் நோக்கத்துடனும் பேசுவதற்கு சர்வ வல்லமையுள்ள தேவனுடைய முன்னிலையில் இடமில்லை. உண்மை யாதெனில் **தேவன்** மனிதனைக் காட்டிலும் எல்லைக் கடங்கா வகையில் பெரியவர், **வானம் பூமியைக்** காட்டிலும் மேலானது; இவ்வுண்மை அவர் அருகில் அவன் செல்லும்போது தனது பேச்சைக் குறுக்கிக்கொள்ள வேண்டும் என்பதை அவனுக்குக் கற்பிக்க வேண்டும்.

5:3 தீவிரமாகச் சிந்திக்கிற மனது அவ்வப்போது கொடூரமான கனவுகளை உண்டுபண்ணுகிறது. அதுபோலவே தீவிரமாகப் பேசுகிற வாய் மன்றாடுகிற வேளைகளிலும்கூட மதியற்ற சொற்களைப் பொழிகிறது. "சொற்கள் இலைகளைப் போன்றவை, அவை அதிகமாகப் பெருகியிருக்கும் இடங்களில், அவற்றிற்குக் கீழே கனிகள் நிறைந்த உணர்வுகள் காணப்படுவது அரிது" என்று திருவாளர் அலெக்சாண்டர் போப் கூறினார்.

கனவுகள் எவ்வாறு பிறக்கின்றன என்பதற்கான முழு அறிவியல் விளக்கமாக சாலொமோன் மூன்றாவது வசனத்தை எழுதவில்லை; பகற்பொழுதில் அவனுடைய மனது வீர் என்னும் ஒலியுடன் சுழலுகிற சக்கரத்தைப் போலச் செயல்படுகிறது, இரவில் அதே மனது அமைதியின்றி அலைக்கழிக்கப்பட்டு கனவுகள் பிறக்கின்றன; இவ்வாறு இவை இரண்டிற்கும் இடையே தொடர்பு இருப்பதாக அவனுக்குத் தோன்றியதை இங்கு எழுதி வைத்திருக்கிறான்.

5:4 தேவனுக்குப் பொருத்தனை செய்கிற விசயங்களில், அவை காலதாமதமின்றி நிறைவேற்றப்பட வேண்டும் என்று நேர்மை எதிர்பார்க்கிறது. வெறிகொண்டு பேசி, பின்னர் அதை நிறைவேற்றத் தவறிய முட்டாள் தேவனுக்குப் பயனற்றவன். ஆகவே, **"நீ நேர்ந்துகொண்டதைச் செய்"** என்று வசனம் கூறுகிறது.

5:5 நீங்கள் கொடுக்க மனதற்றவராயிருந்தால் **நேர்ந்துகொள்ளாமல்** இருப்பதே நலம்.

இறுக்கமான, நம்பிக்கையற்ற சூழ்நிலையில் பிடிபட்டிருக்கும் நிலையில் மனிதனுடைய இயல்

பான மனப்பாங்கு தேவனோடு பேரம் பேசச்செய் கிறது என்பதைப் பிரசங்கி நன்கு அறிந்திருக் கிறான், "கர்த்தாவே, இந்தச் சூழ்நிலையிலிருந்து நீர் என்னைக் காப்பாற்றுவீரானால், நான் என்றும் உமக்கு ஊழியம் செய்வேன்." ஆனால், இக்கட்டு நீங்கியவுடன் தான் செய்த பொருத்தனையை வெகு விரைவாக மறந்துபோகும் மனப்பான்மையே மனிதனுக்கு இருக்கிறது.

ஆவிக்குரிய எழுச்சி உண்டாகிற போதும் கூட, ஒப்புவித்து வாழப்போவதாகவும், மணமாகாத நிலையில் இருக்கப் போவதாகவும், வறுமை நிலையில் வாழப் போவதாகவும் உறுதிமொழி எடுப்பது எளிது. தேவன் தம்முடைய பிள்ளைகளி டத்திலிருந்து அத்தகைய உறுதிமொழிகளை ஒருக்காலும் கேட்டதில்லை. திருமணமாகாத நிலையில் வாழப்போவதாகப் பொருத்தனை செய்வது அல்லது அதுபோன்ற பொருத்தனை களைச் செய்வது தேவையற்ற செயலாகும். அவ்வாறு செய்யாமலிருப்பது சிறந்தது; ஆனால் அவ்வாறு செய்துவிட்டால் நிச்சயமாக அதைக் கடைப்பிடிக்க வேண்டும். திருமண உறுதிமொழி விண்ணகத்தில் உறுதிசெய்யப்பட்டுள்ளது என்பது நிச்சயமான உண்மை. வாழ்க்கையில் பெரும் இழப்புகள் ஏற்படாமல் அதை முறிப்ப தென்பது இயலாத செயல். மனந்திரும்புவதற்கு முன் செய்த பொருத்தனைகளைச் செய்ய வேண் டும். அவை தேவ வசனத்துக்கு முரண்பட்டவை யெனில் அவற்றைச் செய்யக்கூடாது.

5:6 உடைத்தெறியப்பட்ட பொருத்தனை களின் மூலமாக நீங்கள் பாவத்துக்குட்படும்படி உங்கள் வாய் பேசுவதற்கு இடம்கொடாதீர்கள் என்பது பொதுவான விதியாகும். அது ஏதோ தவறு, உண்மையாகவே நான் அவ்வாறு பொருள்படும் படி முடிவு செய்யவில்லை என்று தேவனுடைய தூதனுடைய முன்னிலையில் சாக்குப்போக்குச் சொல்ல வேண்டாம். பொருத்தனையை நிறை வேற்றத் தவறிவிட்டு, அவருக்கு முன்பாக, தீர ஆலோசிக்காமல் ஒரு பலியைச் செலுத்தி அதற் கான மன்னிப்பைப் பெற்றுவிடலாம் என்று நீங்கள் நினைக்காதீர்கள்.

தேவனுடைய தூதன் என்று இங்கு குறிப்பிடப் பட்டுள்ளவன் ஆசாரியனாக இருக்கக்கூடும், ஏனெனில் நிறைவேற்றப்படாத பொருத்தனை களை அவனிடம் அறிக்கை செய்ய வேண்டு மென்று கூறப்பட்டுள்ளது (லேவி. 5:4-6). இவ் விளக்கம் மோசேயின் பிரமாணத்தை சாலொ மோன் அறிந்து கூறியதாக ஊகிக்கிறது, ஆனால் அவன் வெளிப்படுத்தப்பட்ட மதத்தின் கொள்கை களுக்கு அப்பால் இருந்து இதைக் கூறுகிறான். ஆகவே அவன் தேவனுடைய பிரதிநிதியாக சேவைபுரிந்த ஒருவரை இச்சொல் குறிப்பதாக நாம் புரிந்துகொள்வது சரியெனத் தோன்றுகிறது.

கபடப் பேச்சில் தேவன் மிகவும் வெறுப்படை கிறார் என்பதே இங்கு சொல்லப்பட்டிருக்கிற அடிப் படைக் கருத்து. அவ்வாறு இருக்க அவருக்குக் கோபம் உண்டாக்கும்படி ஏன் பேசவேண்டும்? இவ்வாறு பேசுவதன் காரணமாக நீங்கள் முயற்சி செய்கிற அனைத்தையும் அவர் தடைசெய்யவும், பயனற்றதாக்கவும், அழிக்கவும் செய்துவிடும் என்பது நிச்சயம்.

5:7 பெரும்பாலான கனவுகள் பெருமளவில் உண்மையற்று இருப்பது போலவே முன் யோசனையின்றிப் பேசப்படுகின்ற சொற்களும் **மாயையும்** அழிவுமாக இருக்கின்றன. தேவனுக் குப் பயப்படுவதே செய்ய வேண்டிய செயல் என்று சாலொமோன் கூறுகிறான். இங்கு அவன் யெகோ வாவினிடத்தில் கொண்டிருக்கும் அன்புடன்கூடிய நம்பிக்கையைக் குறிப்பிடவில்லை, மாறாக அவருக்கு வெறுப்புண்டாக்கும்படி நடந்துகொள் வதால் ஏற்படும் பயத்தையே குறிப்பிட்டுள்ளான். இவ்வித பயத்தைக் குறித்துத் திருவாளர் G. கேம்ப்பெல் மோர்கன், இது ஒரு மகனின் பய மன்று, ஓர் அடிமையின் பயம் என்று வருணிக் கிறார். இதனை நாம் சரியாகக் கண்டு உணரா விடில், இதனை சாலொமோனின் ஆவிக்குரிய நுண்ணறிவை வெளிப்படுத்துகிறது என்று கருதி விடுவோம், அவ்வாறு இப்பகுதியில் வெளிப்பாடு இல்லை.

5:8 அடுத்ததாக, ஏழைகள் ஒடுக்கப்படுகிற செயல், நீதி புரட்டப்படுகிற செயல் ஆகியவற் றைக் குறித்து சாலொமோன் மீண்டும் பேசத் தொடங்குகிறான். ஒரு தேசத்தில் இவ்வாறான தீய செயல்களைக் காண்போமானால், ஏற்படக் கூடிய மனக்கசப்புக்கு எதிராக அவன் அறிவுரை கூறுகிறான். அரசு அதிகாரத்தில் பல அடுக்குகள் இருக்கின்றன, மிக உயர்ந்த பதவியில் உள்ள வர்கள், தங்களுக்குக் கீழ் பணிபுரியும் அலுவலர் களைக் கழுகுக் கண்கொண்டு கவனித்து வரு கிறார்கள்.

ஆனால் உண்மையாகவே அவர்கள் அவ் வாறு கவனிக்கிறார்களா? பெரும்பாலான நேரங் களில் மேற்பார்வையிடும் அமைப்பு தோல்வி யடைகிறது, முடங்கிக் கிடக்கிறது; ஒவ்வொரு படிநிலையிலும் உள்ள அலுவலர்கள் தகாத

முறையில் பெறும் பணத்தில் பங்கு பெறுகிறார் கள்.

மிகவுயர்ந்த பதவி வகிப்பவரைக் காட்டிலும் உயர்ந்தவராக தேவன் இருக்கிறார் என்னும் அறிவு நீதியுள்ள மக்களுக்கு மனநிறைவு அளிக் கும் ஒரே உண்மையாகும். ஒரு நாளில் எல்லாக் கணக்குகளும் அவருடைய முன்னிலையில் செலுத் தப்பட்டு அதற்கான தீர்ப்பு வழங்கப்படும். ஆனால் சாலொமோன் இவ்வுண்மையைக் குறிப்பிடு கிறானா என்பது ஐயத்திற்குரியதே.

5:9 இந்த வசனம் பிரசங்கி நூலிலேயே மிக வும் தெளிவற்று இருக்கிற வசனமாகும். மூல மொழியாகிய எபிரெயத்தில் இது நிச்சயமற்று இருப்பதே இதற்கான காரணமாகும். இவ்வசனம் பலவகையாக மொழிபெயர்க்கப்பட்டிருப்பதாலே இதை அறியலாம்:

JND: மேலும் பூமியானது எல்லாவகையிலும் பலன் தரக்கூடியது: அரசனும் வயலையே சார்ந்திருக்கிறான்.

NASB: வயலில் ஓர் அரசன் பயிரிடுவானா னால் அது அந்த தேசத்திற்கு நன்மை பயக்கும்.

TEV: அரசனும்கூட அறுவடையையே நம்பி யிருக்கிறான்.

NKJV: **பூமியில் விளையும் பலன் யாவருக்கு முரியது; ராஜாவும் வயலின் பலனால் ஆதரிக்கப்படுகிறான்.**

மிகவுயர்ந்த பதவி வகிக்கிற மனிதனும்கூட வயலில் விளைகிற விளைச்சலையே நம்பியிருக் கிறான், இவ்வாறாக தேவனுடைய அருள்பாலிப் பையே யாவரும் சார்ந்திருக்கிறார்கள்; இதுவே இங்கு கூறப்படுகிற பொதுவான கருத்தாகத் தோன்றுகிறது. எல்லோரும் தேவனுக்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்.

ஊ. விரைவில் மறைந்து போகும் செல்வ மாயை (5:10-6:12)

5:10 பணத்தின்மேல் பேராசை கொண்டிருப் பவன் மனநிறைவடைகிறதில்லை; இன்னும் அதிகமாக வேண்டும் என்றே அவர்கள் விரும்பு கிறார்கள். செல்வம் போதுமென்னும் மன நிறைவை ஏற்படுத்துவதில்லை. இலாபம், பங்கு வீதம், வட்டி, முதலீட்டின் மதிப்புப் பெருக்கம் மனித னுடைய இன்னும் வேண்டும் என்னும் வேட்கை யைத் தூண்டிவிடுகிறது.

5:11 ஒரு மனிதனுடைய செல்வம் பெருகுகிற போது, அதற்கு ஏற்றாற்போல அவனுடைய செல் வத்தைச் செலவிட்டு அழிக்கக்கூடிய புல்லுருவி களும் எண்ணிக்கையில் பெருகுவார்கள். அவர் கள் ஒருவேளை நிருவாக ஆலோசகராக, வரித் துறை ஆலோசகராக, வழக்குரைஞர்களாக, வீட் டுப் பராமரிப்பு அலுவலர்களாக அல்லது ஒட்டி உறிஞ்சுகிற உறவினர்களாக இருக்கக்கூடும்.

ஒரு மனிதனால் ஒரு நேரத்தில் ஓர் ஆடைத் தொகுதியை மட்டுமே அணிய முடியும். ஒரு நாளில் குறிப்பிட்ட அளவு உணவு மட்டுமே உண்ண முடியும். ஆகவே அந்த மனிதனுடைய செல்வத்தின் பயன் யாதெனில், அவனால் வங் கிக் கணக்குப்புத்தகங்களையும், பங்கு முதலீட்டு விவரங்களையும், வைப்புப் பத்திரங்களையும் கண்ணால் பார்க்க முடியும், பின்னர் மற்ற செல் வந்த முட்டாள்களிடம், "ஆத்துமாவே, உனக் காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருள் கள் சேர்த்துவைக்கப்பட்டிருக்கின்றன; நீ இளைப் பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு" என்று கூற லாம் (லூக்கா 12:19).

5:12 வேலை செய்கிறவன் ஆழ்ந்த உறக்கத் தைப் பெறுவதற்கான நல்வாய்ப்பைப் பெற்றிருக் கிறான். அவன் பெரிய விருந்தையோ சிற்றுண்டி யையோ உண்டிருக்கலாம், அவனால் எவ்விதக் கவலையும் இல்லாமல் உறங்கமுடியும். ஆனால் இதற்கு மாறாக, செல்வந்தன் பங்குச் சந்தையைக் குறித்தும், ஏதேனும் திருட்டு நடந்துவிடுமோ என்றும், யாரேனும் பணத்தைக் கையாடல் செய்துவிடு வாரோ என்றும் கவலைப்பட்டு இரவில் அலைக் கழிக்கப்படுகிறான். அவனுடைய இரைப்பையில் அமிலம் சுரந்து நெஞ்சில் எரிச்சல் ஏற்படுகிறது, வயிற்றில் உணவு செரிக்காமல் அதைச் செரிக்க வைக்க மாத்திரைகளை அவன் விழுங்குகிறான்.

5:13 செல்வத்தைக் குவிப்பது பேரிடர் விளைவு களை உண்டுபண்ணும் என்பதை சாலொமோன் கண்டான். இங்கே ஒரு மனிதன் தேவைக்கு அதிக மாகச் சொத்துகளைச் சேகரித்து வைத்திருக் கிறான். ஆனால் அவற்றை அவன் ஆக்கபூர்வ மான நோக்கங்களுக்காக அதைப் பயன்படுத்தா மல், தெரியாத இடத்தில் மறைத்து வைக்கிறான்.

5:14 திடீரென்று பங்குச் சந்தை வீழ்ச்சி போன்ற ஒரு நிகழ்வு நேரிடுகிறது, இருந்த பணமெல்லாம் போய்விட்டது. அந்த மனிதனுக்கு ஒரு மகன் இருந்தபோதிலும் அவனுக்கென்று விட்டுச் செல் வதற்கு அவனிடம் ஒன்றும் இல்லை. அவனிடம் ஒரு சல்லிக்காசு கூட இல்லை.

5:15 அவனுடைய **தாயின் கர்ப்பத்திலிருந்து** வெறுங்கையோடு வந்தான், இப்பொழுது இவ் வுலகைவிட்டு வெறுங்கையோடு செல்கிறான். அவன் தன் வாழ்நாளில் பெருமளவு செல்வத் தைச் சேர்க்க முடிந்தது, ஆனாலும் ஏழையாக மரணம் அடைகிறான்.

செசில் ரோட்ஸ் என்பார் தெற்கு ஆப்பிரிக்கா வில் இயற்கை ஆதாரங்களைப் பல ஆண்டுகள் தனது சொந்த ஆதாயத்துக்கென்றுப் பயன் படுத்திவந்தார். அவருடைய மரணத் தறுவாயில் மன உலைவுடன் கதறிக் கூறியதாவது:

> நான் ஆப்பிரிக்காவில் பெருமளவு செல்வத் தைக் கண்டுபிடித்தேன். வைரக்கற்கள், பொன் மற்றும் நிலம் எல்லாம் என்னுடையவை. ஆனால் இப்பொழுது எல்லாவற்றையும் நான் விட்டுச் செல்கிறேன். நான் ஈட்டிய செல்வத்தில் எதையும் என்னோடுகூட எடுத்துச் செல்ல முடி யாது. நான் நித்தியத்தின் நிலையான சொத் தைத் தேடவில்லை. ஆகவே உண்மை யாகவே என்னிடத்தில் ஒன்றுமில்லை.[28]

5:16 இது கொடுமையான தீங்கு என்று சாலொமோன் கூறுகிறான், வேதனை தரும் பேரிடர், அவன் நிலையான பயன்பாட்டிற்கென தனது செல்வத்தைச் செலவிட்டிருக்கலாம். அதற் குப் பதிலாக அவன் வந்த வண்ணமாகவே வெறு மையாகச் செல்கிறான். அவன் செய்தவேலை அனைத்திற்குமான சான்று அவனிடம் இல்லை. **அவன் காற்றுக்காகப் பிரயாசப்பட்டான்**.

5:17 மனிதனுடைய கடைசி நாட்களில் மனச் சோர்வு, வருத்தம், கவலை, நோய், சினம் ஆகி யவை நிறைந்திருக்கும் என்னும் உண்மையால் சோகம் பெருகுகிறது. சிண்டர்லா கதை தலை கீழாக அவனுடைய வாழ்க்கையில் நடைபெறு கிறது - அது செல்வத்திலிருந்து கந்தையை நோக்கிச் செல்கிறது.

ஒரு பொருளில் இவ்வுலகைவிட்டுச் செல்கிற எல்லா மனிதர்களுமே தங்களுக்குச் சொந்த மான பொருட்களை விட்டுவிட்டே செல்கிறார்கள். ஆனால் நல்ல நோக்கங்களுக்காகப் பயன்படக் கூடிய பணத்தைச் தேவையற்ற வகையில் சேர்த்து வைப்பது என்னும் தவறையே பிரசங்கி இங்கு சுட்டிக்காட்டுகிறான்; அந்த மனிதன் பின்னர் எல்லாவற்றையும் இழந்து போகிறான், பிறகு அவன் தனது வாழ்நாள் முழுவதும் செய்த வேலையைக் குறித்துக் காட்டுவதற்குச் சான்று எதுவும் இல்லை.

5:18 ஆகவே உணவு உண்ணுதல், பானங் கள் பருகுதல், வேலை செய்தல் போன்ற வாழ்க்கை யின் பொதுவான செயல்களில் நாம் மகிழ்ச்சி யோடு ஈடுபடவேண்டும். பின்னர் எது நடந்தாலும் கவலையில்லை, அந்த மனிதன் ஏற்கனவே அனுபவித்த இன்பங்களை எதனாலும் கொள் ளையிட முடியாது. மனித **வாழ்க்கை** மிகக் குறுகியது, எனவே உங்களால் முடிந்த மட்டும் அவற்றை ஏன் **அனுபவிக்கக்** கூடாது?

5:19 ஒரு மனிதனுக்கு தேவன் செல்வத்தை யும் வளத்தையும் அருளுகிற போது,அவற்றை அனுபவிக்கத் தக்க திறத்தையும் தருகிறார்; அவன் தனது வாழ்க்கையை அனுபவித்து மனநிறைவு பெறுகிறான், தனது வேலையிலும் மனநிறைவு பெறுகிறான். இதுவே மிகச்சிறந்த நிலை என்று சாலொமோன் எண்ணினான். இவ்விதமாகச் சூழ்நிலைகள் யாவும் ஒன்று சேர்வது **தேவனு டைய அநுக்கிரகம்**, அல்லது "இதுவே உண்மை யான நிலை" என்று நாம் சொல்லுகிறோம்.

5:20 அத்தகைய மனிதன் தனது வாழ்க்கை குறுகியது என்று சிந்தித்து ஏக்கம் கொள்வதில்லை. அவன் தனது வாழ்க்கையில் ஏற்படுகிற சோக நிகழ்வுகள், அநீதிகள் ஆகியவற்றைக் குறித்துக் கவலைப்படுவதில்லை, ஏனென்றால் தேவன் தந் திருக்கும் தற்போதைய மகிழ்வுடன் கூடிய சூழ் நிலைகளைக் குறித்த சிந்தனையால் அவனு டைய இருதயம் நிறைந்திருக்கிறது.

6:1,2 ஒரு கொடூரமான பழிச்சொல் மனிதனுடைய வாழ்க்கையில் பெருஞ்சுமையாக இருக்கிறது. ஒரு மனிதனுடைய இருதயம் விரும்புகிற செல் வத்தையும் சம்பத்தையும் கனத்தையும் தேவன் தருகிறார், ஆனால் இதில் அவப்பேறு என்னவென் றால் அவற்றை அனுபவிக்கக்கூடிய சக்தியை அவர் அவனுக்குத் தருகிறதில்லை, இது அவனு டைய அவப்பேறாக இருக்கிறது. தேவன் அந்த மனிதனுடைய செல்வத்தை அனுபவிப்பதற்கான சக்தியை அவனுக்குத் தராமல் விட்டதைக் குறித்து சாலொமோன் தேவனுக்கு எதிராகக் குற்றஞ் சுமத்துகிறான்.

அடுத்ததாக, ஒரு மனிதன் தனது செல்வத்தை அனுபவிக்க முடியாதபடி அவனுடைய இளமைப் பருவத்திலே இறந்து போகிறான். அவன் அவற்றை ஒரு மகனுக்கோ நெருங்கிய உறவினனுக்கோ கொடுக்க இயலாமல், அந்நியன் அனுபவிக்கும் படி விட்டுச் செல்கிறான். இது நிச்சயமாக, வாழ்க்கை வெறுமனே ஒரு குமிழைப் போன்றது அல்லது புற்று நோயைப் போன்றது என்று எண்ணும்படி செய்கிறது.

6:3 ஒரு மனிதனுக்குப் பெரிய குடும்பம் இருக் கிறது, முதிர்வயது வரை வாழ்கிறான், ஆனாலும் அவன் தனது வாழ்க்கையை மகிழ்ச்சியுடன் அனுபவிக்காமல், அல்லது அவனுடைய உயிர் பிரிந்த உடல் நல்லடக்கம் செய்யப்படாமல் போகு மென்றால் மேலே குறிப்பிடப்பட்ட சிறப்புவாய்ந்த இரக்கங்களால் ஒரு நன்மையும் இல்லை. உண் மையில் இன்னும் பிறவாத பிள்ளை அவனைக் காட்டிலும் பொறாமைப்படக்கூடிய மேலான நிலையில் இருக்கிறான்.

6:4 குறிப்பிட்ட காலத்திற்கு முன் பிறக்கும் பிள்ளை அல்லது கருச்சிதைவு மாயையாய்த் தோன்றி, பெயர் தெரியாமல் மறைந்து போகிறது. அவனுடைய பெயர் ஒருபோதும் பிறக்காமலும் மரணமடையாமலும் இருக்கிற ஒருவனுடைய பெயருக்கேற்ப இருளடைந்து இருக்கிறது.

6:5 கருச்சிதைவு ஏற்பட்ட பிள்ளை சூரிய னைக் கண்டதில்லை, எதையும் அறிவதில்லை. ஆனாலும் அது ஒரு கருமியைக் காட்டிலும் மேலான அனுபவத்தைப் பெற்றிருந்தது எனலாம். வாழ் வைப் பைத்தியமாக்கக்கூடிய நெறிதவறிய செயல் களை அந்தச் சிசு அனுபவித்ததில்லையே.

6:6 ஒரு கஞ்சன் இரண்டாயிரம் ஆண்டுகளுக் கும் மேலாக உயிர் வாழ்ந்தாலும் வாழ்வின் சிறந்த அனுபவங்களை அனுபவிக்காமல் போனால் அதில் என்ன நன்மை ஏற்படும்? கருவழிந்த பிண் டமும் அந்தக் கஞ்சனும் ஒரேவிதமான முடிவைப் பெற்றுக் கல்லறையைத்தானே பங்கிட்டுக் கொள்கிறார்கள்.

6:7 ஒரு மனிதன் முக்கியமாகத் தனக்கும் தன்னுடையகுடும்பத்துக்கும்தேவையானஉணவை விலைகொடுத்து வாங்கவே வேலைக்குச் செல் கிறான். ஆனால் அதில் குறிப்பிடத்தக்க விசயம் என்னவெனில் அவன் மனநிறைவு அடைவ தில்லை. அவனுடைய ஊதியம் உயரும்போது அதிகமாக வாங்க விரும்புகிறான். மனநிறைவு என்பது குச்சியில் மாட்டப்பட்ட காரட்டைப் போன் றது. அது ஒருபோதும் கிடைக்காமல் ஏமாற்றிக் கொண்டே செல்கிறது.

6:8 இந்தப் பயனற்ற தேடுதலில் மூடனைப் பார்க்கிலும் ஞானி அனுகூலமான நிலையில் இல்லை. ஓர் ஏழை மற்ற எல்லோரைப் பார்க் கிலும் வாழ்க்கையைச் சிறந்த முறையில் எதிர் கொள்ள அறிந்திருந்த போதிலும், இந்த விசயத் தில் மேலான நிலையில் இல்லை.

6:9 எப்பொழுதும் கூடுதலாக வேண்டும் என்று வரம்பு கடந்த விருப்பம் இல்லாமல், தனக்கு முன் வைக்கப்பட்டிருக்கிற உணவில் மனநிறைவு அடைவது **நலம்**. இவ்விதமாக அதிகம் வேண்டும் என்று பேரவா கொண்டு திரிதல் காற்றை விரட்டிப் பிடிப்பதற்கு ஒப்பாகும். "இது மெய்யான மன நிறைவை நாடி ஒன்றிலிருந்து மற்றொன்றை நோக்கி இச்சித்துத் திரிவதற்கு" ஒப்பாகும் என்று திருவாளர் லெயிபோல்டு கூறினார்.[29]

6:10,11 ஒருவன் செல்வந்தனோ ஏழையோ, ஞானியோ மூடனோ, முதியவனோ இளைஞனோ யாராயினும் ஏற்கனவே **மனிதன்** என்னும் பெயர் பெற்றிருக்கிறான். இங்கு மனிதன் என்பதற்கான எபிரெயச் சொல் ஆதாமைக் குறிக்கிறது. அதன் பொருள் "செங்களிமண்." எவ்விதமாகச் செங் களிமண் படைப்பாளருடன் வாதிடும்?

6:12 நிழலைப் போன்ற மாயையான இவ்வுலக வாழ்வில் எது தனக்கு மிகவும் சிறந்தது என்று ஒருவனும் அறியான் என்பது ஓர் எளிய உண்மை என்று பிரசங்கி கருதுகிறான். இவ்வுலகைவிட்டுச் சென்ற பிறகு பூமியில் என்ன நடக்கும் என்பது ஒருவருக்கும் தெரியாது.

3.சூரியனுக்குக் கீழ் வாழும் வாழ்க்கைக்கான அறிவுரை (7:1-12:8)

அ. சூரியனுக்குக் கீழே நல்லதும் சிறந்ததும் (அதி. 7)

7:1 சூரியனுக்குக் கீழே தனக்கு எது மிகவும் சிறந்தது என்பதை ஒரு மனிதனாலும் தீர்மானிக்க முடியாது என்னும் சலிப்பூட்டும் குறிப்போடு 6-ஆவது அதிகாரம் முடிவடைந்தது. ஆனால் நல்லவை எவை அவற்றினும் சிறந்தவை எவை என்பதைக் குறித்த அறிவை சாலொமோன் பெற்றிருக் கிறான். அதுவே 7-ஆவது அதிகாரத்தின் ஆய்வுப் பொருள் ஆகும். நல்லது அதனினும் சிறந்தது என்னும் பொருள் தரக்கூடிய சொற்றொடர் (பார்க் கிலும்... நலம்) இந்த அதிகாரத்தில்தான் பழைய ஏற்பாட்டில் மிக அதிகமாகப் பயன்படுத்தப்பட் டுள்ளது.

முதலாவது, **பரிமளத் தைலத்தைப் பார்க் கிலும் நற்கீர்த்தி** நல்லது. நற்கீர்த்தி நற்பண் பைக் குறிக்கிறது என்பதில் ஐயமில்லை. பரிமளத் தைலம் விலையுயர்ந்தது நறுமணம் வீசக்கூடி யது. விலையுயர்ந்த நறுமணம் வீசக்கூடிய தைலம் மரியாதைக்குரிய வாழ்க்கையின் இடத்தை ஒருக்காலும் பிடிக்க முடியாது.

ஒருவனுடைய பிறந்த நாளைப் பார்க்கிலும் மரண நாள் நல்லது என்று பிரசங்கி கூறுகிறான். நம்மைக் கற்பனை செய்து பார்க்கச் செய்யும்படி

அவன் எழுதிய வாக்கியங்களில் இதுவும் ஒன்று. அவன் இதனைப் பொதுவான உண்மையாகக் கூறுகிறானா, அல்லது **நற்கீர்த்தி** பெற்ற மனிதர்களை மட்டும் குறிப்பிடுகிறானா? மெய்யான விசுவாசிகளுக்கு இதைப் பொருத்திப் பார்க்கும் போது, இக்கூற்று முழுவதும் உண்மையாக இருக்கிறது. பாவங்கள் அறிக்கையிடப்படாமலும் மன்னிக்கப்படாமலும் இறந்துபோகிற மனிதர்களைப் பொறுத்தவரை இது நிச்சயம் உண்மையல்ல.

7:2 ஒருவன் விருந்து சாலைக்குச் சென்று, தின்று தெவிட்டிப் போவதைப் பார்க்கிலும், மரண நிகழ்ச்சிக்குச் செல்வது நலம் என்று சாலொமோன் முடிவு செய்கிறான். மரணம் **எல்லா மனிதர்களுடைய முடிவுமாக** இருக்கிறது. நாம் அதை நேரடியாகச் சந்திக்கிற வேளைகளில், நமது சொந்த மரணத்தைக் குறித்துச் சிந்திக்கும்படி கட்டாயப்படுத்தப்படுகிறோம்.

ஒவ்வொரு மனிதனும் மரணம் என்னும் உண்மையைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். மேலும் அவன் தவிர்க்க முடியாத அந்தத் தருணத்தைத் துணிவோடு சந்திப்பதற்கு ஊக்கமளிக்கக் கூடிய வாழ்க்கைக் கோட்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும். மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனை தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், வாழ்நாள் முழுவதும் மரண பயத்தினாலே அடிமைத்தனத்திற்கு உட்பட்டவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும்படிக்கும் நமது இரட்சகர் சிலுவையில் மரணமடைந்தார் என்று நற்செய்தி கூறுகிறது (எபி. 2:14,15).

7:3 மற்றுமொரு சிறப்பு கூறப்பட்டுள்ளது: **நகைப்பைப் பார்க்கிலும் துக்கிப்பு நலம்**. கருத்தற்றபடி இருப்பதைப்பார்க்கிலும் கருத்தூன்றிய வகையில் செயல்படுவது பயனுண்டாக்கும் என்று பிரசங்கி உறுதியாக நம்புகிறான். வாழ்க்கையில் ஏற்படக்கூடிய கடும் சிக்கல்களை எதிர்கொண்டு போராடுவதன் மூலமாக மனது கூர்மையடைகிறது. மாறாக, பயனற்ற நடத்தை காலத்தை வீணாக்குகிறது, முக்கியமானவற்றை மனிதர்கள் இறுகப் பற்றிக்கொள்வதைத் தடைசெய்கிறது.

ஒருகல் தொலைவு மகிழ்ச்சி என்பவள்
என்னுடன் நடந்தாள்
தருக்குடன் பேசிய பேச்சுகள் பலப்பல,
ஞானம் பெற்றிலேன்.
ஒருகல் தொலைவு வருத்தம் என்பவள்
என்னுடன் நடந்தாள்
ஒருசொல் பேச்சும் இல்லை, பெற்றதோ
அரியநல் பயன்கள்!

– இராபர்ட் பிரௌனிங் ஹாமில்டன்

முகத்துக்கத்தினாலே இருதயம் சீர்ப்படும். வாழ்க்கையில் ஏற்படக்கூடிய எதிர்மாறான நிகழ்வுகளில் ஒன்று மகிழ்ச்சியும் துக்கமும் ஒரு சேர இருப்பதே ஆகும். பாடுகள் வருத்தம் ஆகியவற்றிற்கு நோய் நீக்கும் குணம் இருக்கிறது என்று புறச்சமய தத்துவ ஞானிகளும் கூறியிருக்கிறார்கள். ஆனால் அவிசுவாசிகளுக்கு ஓரளவே உண்மையாக இருக்கக்கூடிய விசயம் விசுவாசிகளுக்கு மகிமை நிறைந்த அளவில் உண்மையாக விளங்கும். பாடுகளும் வருத்தங்களும் தேவனுடைய பிள்ளையாக இருக்கிறவனுடைய வாழ்க்கையில் நற்குண வளர்ச்சிக்கு வழியாக விளங்குகின்றன. அவை கிறிஸ்துவின் பாடுகளைப் புதிய வகையில் போற்றிப் பாராட்டுவதற்கான மனநிலையைத் தருகின்றன. மேலும் அவை அதேவிதமான சோதனைகளை அனுபவிக்கிற பிறருக்கு ஆறுதல் அளிக்கத்தக்க திறமைகளைப் பெறச் செய்யும். எதிர்கால மகிமையை அடைவதற்கான அச்சாரமாக அவை விளங்குகின்றன (ரோமர் 8:17).

7:4 ஞானமுள்ள மனிதனுடைய மனது மரணத்தின் தறுவாயில் அமைதியையும் தெளிவையும் பெற்று விளங்கும். அவனுடைய வேர்கள் மிக ஆழமாகச் சென்றிருப்பதால் அவனால் வருத்தத்தையும் மன அழுத்தத்தையும் எதிர்த்துச் சமாளிக்க முடியும். கடும் இக்கட்டான சூழ்நிலைகளை மதிகேடர்கள் எதிர்த்து நிற்க முடியாது. வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகளை அடக்கி ஆளுவதற்கு அவர்கள் நகைப்பையும் இன்ப விளையாட்டுகளையும் பின்தொடருகிறார்கள். அவர்கள் மருத்துவமனைகளுக்கோ பிணவறைகளுக்கோ செல்வதில்லை, ஏனென்றால் கருத்தாழமற்ற ஆதாரங்கள் வாழ்க்கையில் ஏற்படுகிற மனவழுத்தங்களை எதிர்த்து நிற்கத்தக்க திறமைகளைத் தருவதில்லை.

7:5 இன்னுமொரு சிறந்த விசயம் உள்ளது. **ஒருவன் மூடரின் பாட்டைக் கேட்பதைப் பார்க்கிலும் ஞானியின் கடிந்துகொள்ளுதலைக் கேட்பது நலம்.** ஆக்கபூர்வமான குறைகூறுதல் அறிவுறுத்துகிறது, திருத்துகிறது, எச்சரிக்கிறது. மூடர்களின் வெற்றுக் களியாட்டங்கள் நிலையான பயன்களைத் தருவதில்லை.

7:6 மூடர்களின் நகைப்பு பானைகளின் கீழ் எரிகிற படபடப்பைப் போலிருக்கும். அவை பகட்டும் ஆரவாரமும் நிறைந்தவை, அவற்றால் ஆக்க பூர்வமான எதுவும் நிகழ்வதில்லை. எரிகிற முட்செடிகள் படபடவென்னும் சத்தத்துடன் வெடித்துச் சிதறுகின்றன. ஆனால் அவை நல்ல எரிபொருளாகச் செயல்படுவதில்லை. அங்கு கொஞ்சமாகவே சூடு உண்டாகிறது, தீயும் விரைவில் போய்விடுகிறது. சத்தமிட்டாலும் அதனுடைய விளைபயன் ஒன்றுமில்லை, பொருளற்ற நுரையுடன் வெளிவருகிற மூடனுடைய பேச்சை இது குறிக்கிறது.

7:7 ஏமாற்றி ஒடுக்குகிற மனிதனாக மாறுகிற ஞானமுள்ள மனிதனும் கூட மடத்தனமாகச் செயல்படுகிறான். அவன் ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்னும் எண்ணத்தில் உணர்ச்சியைக் கட்டுப்படுத்த அறியாமல் நிலை தடுமாறுகிறான். இலஞ்சம் வாங்குதல், முறையற்ற வகையில் ஆதாயம் பெறுதல் ஆகியவற்றில் ஈடுபடுகிறவர்கள் தங்களுடைய சொந்த மனதையே கெடுத்துக்கொள்கிறார்கள். அவர்கள் லஞ்சம் பெறும் அளவுக்குத் தாழ்ந்து போவார்கள் என்றால், தவறற்ற தீர்ப்பு வழங்கக்கூடிய ஆற்றலை இழந்துவிடுவார்கள்.

7:8 ஒரு காரியத்தின் தொடக்கத்தைப் பார்க்கிலும் முடிவு நல்லது என்று சாலொமோனுக்குத் தோன்றுகிறது. ஒரு திட்டத்தைத் தொடங்கும் போது எல்லாம் பெருமளவு செயலற்றுக் கிடக்கும், அதனை வென்று முன்னேற வேண்டும்; மேலும் தொடக்க நிலைகளில் கடுமையாக உழைக்க வேண்டும், ஒழுங்காக முறைப்படி செய்ய வேண்டும் - இந்த நினைவுகளை அவன் கொண்டிருந்ததாகவே தோன்றுகிறது. பின்னர் அந்தத் திட்டம் நிறைவேறியபோது நிறைவேற்றி விட்டோம் என்ற எண்ணமும் மனநிறைவும் மேலோங்கி, தொடக்கத்திலிருந்த நினைவுகளுக்கு மாறுபட்டுக் காணப்படும்.

இந்த விதி எல்லா நேரங்களிலும் உண்மையாக இருக்கும் என்பதை அறிவதற்கு அதிக நுண்ணறிவு தேவையில்லை. நேர்மையான செயல்களின் முடிவு தொடக்கத்தைப் பார்க்கிலும் நல்லது, ஆனால் பாவத்தோடு முடிகிற செயல் மிகவும் மோசமானது. யோபுவின் பிந்தின நாட்கள் முந்தின நாட்களைக் காட்டிலும் நல்ல நிலையை அடைந்தன (யோபு 42:12). ஆனால் பொல்லாதவர்களின் முடிவு விளக்கிக் கூற இயலாதபடி பயங்கரமாயிருக்கும் (எபி. 10:31).

பெருமையுள்ளவனைப் பார்க்கிலும் பொறுமையுள்ளவன் மேலானவன் என்று கூறுகிற போது பிரசங்கி உறுதியான அடித்தளத்தின் மேல் நிற்கிறான். பொறுமை கவர்ச்சிகரமான குணம், ஆனால் பெருமையோ பாவத்தின் தொடக்கமாகும். பொறுமை தேவனுடைய அங்கிகாரத்துக்குப் பொருத்தமான நிலையை ஒரு மனிதனுக்குப் பெற்றுத் தருகிறது (ரோமர் 5:4), ஆனால் பெருமையோ அவனை அழிவுக்குக் கொண்டுபோய் விடுகிறது (நீதி. 16:18).

7:9 கடுஞ்சினம் அடைகிற மனப்பான்மைக்கு எதிரான எச்சரிக்கை அடுத்து சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட சுயக்கட்டுப்பாடற்ற நிலை குணநலத்தின் தீர்மானமான பலவீனத்தை வெளிப்படுத்துகிறது. ஒருவன் எந்நிலையில் தனது கோபத்தை அடக்க முடியாமல் வெளிப்படுத்துகிறானோ அந்த அளவைக் கொண்டு அவனுடைய அளவைத் தீர்மானிக்க முடியும் என்று ஒருவர் கூறினார். வெறுப்பையும், மனக்கசப்பையும் நாம் ஊட்டி வளர்த்தால், நாம் மூடர்கள் என்பதை வெளிப்படுத்திக் காண்பிப்போம். அறிவுள்ள மக்கள் இத்தகைய புத்தியில்லாத நடத்தையின்மூலம் தங்களுடைய வாழ்க்கையைக் கெடுக்க மாட்டார்கள்.

7:10 மற்றுமொரு மதியற்ற செயல் முந்தின காலத்தில் வாழ்கிற செயலாகும். நாம் இடைவிடாமல் "முந்தின நல்ல நாட்களை" நினைத்து அவற்றைக் குறித்தே பேசிக்கொண்டிருப்பது மட்டுமின்றி, அவை அவ்வளவு சிறப்பாக இருந்தன, அவை மீண்டும் வரவேண்டும் என்று விரும்புவோமானால், உண்மையற்ற உலகில் வாழ்கிறவர்களாகக் காணப்படுவோம். சூழ்நிலைகள் எவ்வாறு இருந்தாலும் அவற்றை எதிர்கொண்டு வெற்றியோடு வாழ்வதே சிறந்தது. இருளைச் சபிப்பதைப் பார்க்கிலும் மெழுகு திரியை ஏற்றுவது நல்லது.

7:11 ஞானத்தைக் குறித்தும் வாரிசு உரிமையைக் குறித்தும் சாலொமோன் கூறுகிற கருத்து பலவகைகளில் புரிந்துகொள்ளப்படும். முதலாவது, **சுதந்தரத்தோடே ஞானம் நல்லது** (NKJV; NASB). தான் பெற்ற வாரிசு உரிமையை அவன் நன்கு நிருவகிக்க அது தேவையான திறமையைத் தரும். இரண்டாவது, ஞானம் நல்லதொரு சுதந்தரம் ஆகும் (JND); ஒருவர் ஒரே ஒரு சுதந்தரத்தை மட்டுமே தெரிந்துகொள்ள வேண்டும் என்று வாய்ப்பு தரப்படுமென்றால், ஞானமே சிறந்த தெரிந்தெடுப்பு ஆகும். மூன்றாவது,

ஞானம் சுதந்தரத்தைப் போன்று சிறந்தது, அது செல்வத்தைப் பெறுவதற்கான ஆதாரமாகும். மேலும் **சூரியனைக் காண்கிறவர்களுக்கு** இது நன்மை பயக்கும். அதாவது, பூமியில் உயிர்வாழ் கிறவர்களுக்கு ஞானம் நன்மை பயக்கும். இது 12 - ஆவது வசனத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

7:12 ஞானம் பணத்தைப் போன்றது. இரண் டுமே காப்பாற்றுதல், பாதுகாப்பளித்தல் போன்ற வற்றைச் செய்கின்றன. பௌதீக மற்றும் பொரு ளாதார இழப்புகளிலிருந்து பணம் பாதுகாப்பளிக் கிறது, ஞானமோ நன்னெறி மற்றும் ஆவிக்குரிய பாதிப்புநேரிடாதபடி பாதுகாப்பு அளிக்கிறது. ஆகவே தான் ஞானம் மேலானது; அதனைப் பெற்றிருப் போரின் பொருட்செல்வத்தை மட்டுமின்றி, அவர் களுடைய வாழ்வையே அது பாதுகாக்கிறது.

கிறிஸ்துவே தேவனுடைய ஞானம். அவரைக் கண்டடைந்தவர்கள் வாழ்வைப் பெற்றார்கள் என் பதை நாம் நினைவுகூருகிறபோது, ஞானத்தின் எல்லைக்குட்படா மேன்மை தெளிவாகிறது. அவ ருக்குள் ஞானம் அறிவு என்னும் செல்வங்கள் யாவும் அடங்கியிருக்கின்றன (கொலோ. 2:3).

7:13 எல்லாச் செயல்களையும் கட்டுப்படுத் தும் இறையாண்மை உள்ளவர் தேவன் என்பதை ஞானமுள்ள மனிதன் **கவனித்துப்** பார்க்கிறான். அவர் எதையேனும் **கோணலாக்கினால் அதை நேராக்கத்தக்கவன் யார்?** அவருடைய சித் தத்தை யாரால் மறுஉத்தரவு கொடுத்து நீக்க முடியும் என்று இதனை வேறு சொற்களில் கேட்கலாம். அவருடைய கட்டளைகள் மாற்ற முடியாதவை, மனிதர்களுடைய மோசடியால் அவற்றை மாற்ற முடியாது.

7:14 நம்முடைய வாழ்வுக் காலத்தை தேவன் கட்டளையிட்டபோது, வளமான நாட்களையும் பாதகமான நாட்களையும் அனுமதிப்பது அவருக் குச் சரியாகத் தோன்றியது. நன்மை பெருகுகிற போது நாம் மகிழ்ந்து அதை அனுபவிக்க வேண் டும். மனிதன் தனக்கு அடுத்ததாக என்ன நடக்கப் போகிறது என்பதை அறியாத வண்ணம் தேவன் தாமே நல்லதையும் கெட்டதையும், மகிழ்ச்சியை யும் தொல்லையையும் அனுப்புகிறார் என்று அவன் **தாழ்வுக் காலத்தில்** நினைக்க வேண்டும். இரக்கம் மற்றும் ஏமாற்றம் இரண்டுமாக அது இருக்கக்கூடும்.

நன்மை தீமை இரண்டையும் தேவன் கலந்து கொடுப்பதன் காரணமாக அவரிடத்தில் ஒருவரா லும் குற்றம் காணமுடியாது என்ற சிந்தனையும் இதில் அடங்கியுள்ளது.

இவ்விரண்டு கருத்துகளிலும் முடிவுகள் சூரிய னுக்குக் கீழானவையே. அவை மாம்சத்தையும் இரத்தத்தையும் கடந்து மேலே செல்வதில்லை.

7:15 எதிர்பார்க்காத புதிரான நிகழ்ச்சியையும், முழுவதும் வியக்கத்தக்கதையும் நாம் காண்கிற வேளையில் "**எல்லாவற்றையும்** நான் **கண் டேன்**" என்னும் சொற்றொடரைப் பெற்றிருக் கிறோம். அதுவே சாலொமோன் கூறும் பொருள் என்று தோன்றுகிறது. அவனுடைய வெறுமை யான வாழ்க்கையில் எல்லாவகையான முரண் பாடுகளையும் அவன் கண்டான். இளமையில் சாகிற **நீதிமானையும்**, முதிர்வயதுவரை உயி ரோடிருக்கிற **பாவியையும்** அவன் கண்டான்.

7:16 நீதிக்கும் ஆசிர்வாதத்திற்கும் அல்லது அதற்கு மாறாக பாவத்துக்கும் தண்டனைக்கும் நேரடியான நிலையான தொடர்பு இருப்பதாகப் பிரசங்கியால் கண்டுபிடிக்க முடியாததால், இரண்டு கடைக்கோடிகளையும் தவிர்ப்பது நல்லது என் னும் முடிவுக்கு அவன் வருகிறான். திருமறைக்கு ஒவ்வாத அறிவாழமற்ற முடிவு "பொன் விகிதச் சட்டம்" என்ற அழைக்கப்படுகிறது.

மிகக் கூடுதலான நீதியையும், மிகக் கூடுத லான ஞானத்தையும் தவிர்ப்பதால் ஒருவரால் உரிய காலத்துக்கு முற்பட்ட அழிவிலிருந்து தப் பிக்க முடியும். இது உண்மையல்ல என்பது நிச்சயம். இறை மக்கள் பாவம் செய்யக்கூடாது என்பதே தேவன் அவர்களுக்கு நியமித்த அளவு கோல் (1 யோவான் 2:1). அவர்களுக்குக் கொடுக் கப்பட்ட வேலை முடியும்வரை அவர்கள் அழிந்து போவதில்லை என்று அவர் உறுதியளித்திருக் கிறார்.

7:17 சாலொமோனின் முடிவின்படி மற்றோர் ஆபத்து யாதெனில் ஒருவர் வாழ்க்கையில் காணப்படுகிற மிகக் கூடுதலான தீய செயல்கள். அசட்டுத் துணிவுள்ள மனிதனும்கூட **தன் காலத்துக்கு முன்** சாக நேரிடும். ஆகவே நாம் சாலையின் நடுவில் செல்கிற கோட்பாட்டைப் பின்பற்றி கடுமுயற்சி செய்ய வேண்டும், அதுவே மிகச் சிறந்த வழி என்று பிரசங்கி கூறுகிறான்.

இவையாவும் மனிதனுடைய பகுத்தறிவின் முடிவுகளாகும் என்பது தெளிவு. இவை தேவனு டைய வெளிப்பாடு அல்ல. தேவன் பாவத்தைப் பொறுத்தருள்வது இல்லை, அவருடைய அளவு கோல் எப்போதும் முழுநிறைவானதே ஆகும்.

7:18 அதிக அளவிலான நீதி உரிய காலத் துக்கு முந்தி அழிவைக் கொண்டு வரும்; மேலும்

இதற்கு எதிர்மாறான நிலைக்கும் சென்றுவிடக் கூடாது, ஒழுக்கக்கேடான மனிதன் தனக்கே அழிவை ஏற்படுத்துகிறான். இந்த உண்மையைப் பற்றிக்கொள்வது மிகச் சிறந்த கொள்கை என் பதே பிரசங்கியின் கருத்து. ஒருவன் **தேவனுக்குப் பயப்படுகிற பயத்தால்** (சாலையின் நடுவில் செல்வதன் மூலமாக) இவ்விரண்டு ஆபத்துகளி லிருந்தும் **காக்கப்படுவான்**.

பாவத்திலும் நீதியிலும் மிதமான அளவுடன் வாழவேண்டும் என்று இந்த ஆலோசனை தேவ னைத் தவறான நிலையில் எடுத்துக்காட்டுகிறது. ஆனால் இது சூரியனுக்குக் கீழே சாலொமோன் எடுத்த தீர்மானத்தின் கருத்தறிவிப்பு ஆகும். ஆனால் இதனை நாம் நினைவுகூராவிட்டால் இத் தகைய உலகீய தத்துவத்தால் பெரும் குழப்ப மடைவோம்.

7:19 பத்து அதிபர்கள் ஒரு நகரத்துக்குத் தரக்கூடிய வலிமையையும் பாதுகாப்பையும்விட ஞானம் ஒரு மனிதனுக்குக் கூடுதலாகத் தரும் என்று சாலொமோன் நம்புகிறான். போர்ப்படை யின் வலிமையைக் காட்டிலும் ஞானம் பெரியது, மிகப்பெரிய இராணுவத்தின் பக்கமாக தேவன் இருக்க வேண்டும் என்பது கட்டாயமல்ல என்பதே சாலொமோனுடைய நம்பிக்கையின் பொருள்.

7:20 'ஆகையால்' என்ற சொல்லுடன் இவ் வசனம் தொடங்குகிற காரணத்தால் இது முந்தின பகுதிகளோடு தொடர்புடையது என்பது நிச்சயம் (தமிழில் அச்சொல் இடம்பெறவில்லை). என்ன தொடர்பு? பிரசங்கி விளக்கிக் கூறி வருகிற ஞானத்தின் பயன் நம் எல்லோருக்கும் தேவை என்பதே யாகும், ஏனெனில் நாம் எல்லோரும் நிறைவானவர்கள் அல்லர். ஒருக்காலும் பாவம் செய்யாமல் எல்லா நேரங்களிலும் நன்மை செய்கிற நீதிமான் ஒருவனும் இல்லை.

உலகத்தின் மனிதர்கள் எல்லோரிடத்திலும் பாவம் இருக்கிறது என்பதைக் கற்பிக்கும் பொருட்டு இந்த வசனம் பயன்படுகிறது. ஆனால் இந்த வசனத்தின் பின்னணியில், இதுவரை விளக்கிக் கூறப்பட்ட வண்ணமாக நாம் ஏன் ஞானத்தோடு நெருங்கிய தொடர்புடையவர்களாக இருக்க வேண்டும் என்பதையே இது கூறுகிறது என்று திருவாளர் லெயுபோல்டு கூறுகிறார்.[30]

7:21 நம்முடைய குறைவைக் குறித்த நல் லறிவு, நமக்கு எதிராகச் சொல்லப்படும் குற்றச் சாட்டுகளை ஆக்கபூர்வமாக எடுத்துக்கொள்ள உதவிசெய்யும். ஒரு வேலைக்காரன் நம்மைச் சபிப்பதைக் கேட்டால், அவன் சமுதாய நிலைப் படியில் மிகவும் தாழ்நிலையில் இருப்பினும், இன்னும் கூடுதலாகச் சபிக்க நம்மைக் குறித்து அவன் அதிகமாக அறியவில்லை என்பதை எண் ணியவர்களாக நாம் எப்போதும் மகிழ்ச்சியடைய வேண்டும்.

சீமேயி தாவீதைச் சபித்தபோது, அபிசாய் அவனைக் கொல்ல நினைத்தான்; சீமேயியின் சாபம் காரணமில்லாமல் சொல்லப்பட்டது அன்று என்று தாவீது எண்ணினான் என்பதை அவனு டைய பதில் குறிப்பாய் உணர்த்துகிறது (2 சாமு. 16:5-14).

7:22 நாமும் அதே குற்றம் உடையவர்கள் என்பதை எப்பொழுதும் நாம் நினைவுகூர வேண் டும். நாம் நம்முடைய **இருதயத்தில் பிறரைப்** பலமுறைகள் **நிந்தித்திருக்கிறோம்**. நாமே நிறைவான நிலைக்கு வெகுதொலைவு இருக்கிற போது, பிறர் நிறைவாக இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்க முடியாது.

எங்கும் நிறைவு இருக்கவேண்டும் என்று நாடுகிற மனிதனுடைய தோல்விகளில் இதுவும் ஒன்று. மற்ற எல்லோரும் எல்லாவற்றிலும் நிறைவான நிலையில் இருக்க வேண்டும் என்று அவன் எதிர்பார்க்கிறான். ஆனால் நிறைவில் லாத உலகில் வாழ்கிற அந்த மனிதனே மற்றவர் களுக்கு நியமித்த இலக்கை அடைய முடியாமல் இருக்கிறான்.

7:23 பிரசங்கி தனது வியக்கத்தக்க ஞானத் தைப் பயன்படுத்தி வாழ்க்கையின் எல்லாக் கூறு களையும் நுணுக்கமாக ஆராய்ந்து பார்க்கிறான். எல்லாப் புதிர்களையும் விடுவிக்கத்தக்க மற்றும் கடுமையான சிக்கல்கள் எல்லாவற்றிற்கும் தீர்வு காணத்தக்கப் போதுமான ஞானமுள்ள மனித னாகத் தான் விளங்க வேண்டுமென்று அவன் விரும்பினான். அவன் தேவனுக்கு அப்பால் இருந்து தன்னுடைய ஆராய்ச்சிகள் யாவற்றையும் செய்த காரணத்தால் முடிவான விடைகளை அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை. வெளிப்பாடு இன்றி வாழ்க்கை விடுவிக்கக் கூடாத புதிராகவே இருக்கிறது.

7:24 எளிதில் சென்றடைவதற்கு இயலாத, நெடுந்தொலைவிலுள்ள, **மகா ஆழமான** பொருட் களை விளக்கிக் கூறுவது முடியாது. இவ்வுலகம் புதிர்களால் நிறைந்திருக்கிறது. அறியப்படாத உலகம் ஆராயப்படாமலேயே உள்ளது. நாம் புதிர்களாலும் விடைதெரியாத கேள்விகளாலும் தொல்லைக்காளாகிறோம்.

7:25 விடைகளைக் கண்டறிய முடியாத போதிலும், பெரிதான ஞானத்தையும் மனித வாழ்க்கையின் சமநிலைத் தத்துவத்தையும் கண்டறிய வேண்டும் என்று தனது ஆராய்ச்சியை சாலொமோன் விடாப்பிடியாகச் செய்துவந்தான்.

மதியீனத்தின் கொடுமையையும் புத்திமயக்கத்தின் பைத்தியத்தையும் அவன் புரிந்துகொள்ள விரும்பினான். அதாவது ஒழுக்கக் கேட்டிலும் அவமானத்திலும் மனிதர்கள் ஏன் கெட்டழிந்து போகிறார்கள் என்பதை அவன் அறிய விரும்பினான்.

7:26 அதனுடைய தொடர்பில் காணப்படுவது யாதெனில் ஒரு விலைமகளுடைய பாதகம் **சாவிலும் அதிகக் கசப்பானது**. அவளுடைய மனது ஆண்களை வலையில் சிக்க வைக்கக் கூடிய தந்திரங்களால் நிறைந்திருக்கிறது. அவளுடைய பிடியில் இருப்பவர்கள் சங்கிலிகளால் கட்டப்பட்டவர்கள் போன்று இருக்கிறார்கள். தேவனை மனமகிழச் செய்ய வேண்டுமென்று விரும்புகிற எவனும் அவளுடைய கண்ணிகளுக்குத் தப்புவான், ஆனால் பாவத்தைச் சுற்றி வருகிறவன் அவளுடைய பாதையில் நிச்சயமாக அகப்பட்டுக் கொள்வான்.

இங்கு குறிப்பிடப்பட்டிருக்கிற பெண் உலகத்துக்கு மாதிரியாக அல்லது உலக ஞானத்துக்கு மாதிரியாக இருக்கிறாள் (கொலோ. 2:8; யாக். 3:15).

7:27,28 உடன் மனிதர்களில் தான் அடைந்த பொதுவான ஏமாற்றத்தை 27 முதல் 29 வரையிலான வசனங்களில் சாலொமோன் விவரிப்பதாகவே தோன்றுகிறது. ஒருவனை முதன் முறையாகக் காண்கிறபோது அவனிடத்தில் சாலொமோன் மிகப்பெரிய அளவில் எதிர்பார்ப்பு கொண்டிருந்தான், ஆனால் அந்த மனிதனைக் குறித்துக் கூடுதலாக அறிந்தபோது அவனுடைய நம்பிக்கைகள் யாவும் சிதறடிக்கப்பட்டு போயின. குறைபாடற்ற எந்த மனிதனையும் அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஒருவேளை அவன் கவர்ச்சிமிக்க மனிதனைக் காணக்கூடும். *அந்த மனிதனைக் குறித்து நான் இன்னும் அதிகமாக அறிய வேண்டும். அவனோடு தனிப்பட்ட வகையில் நெருங்கிய தோழமையை வளர்த்துக்கொள்ள வேண்டும்* என்று அவன் நினைத்திருக்கக் கூடும். ஆனாலும் அந்தப் புதிய நண்பனைக் குறித்துக் கூடுதலாக அவன் அறிந்த போது, சாலொமோன் அவனைக் குறித்த மயக்கத்திலிருந்து தெளிவு பெற்றான். முழு நிறைவான அந்நியன் போன்று ஒருவனையும் அவன் கண்டுபிடிக்க முடியவில்லை; நெருங்கிய நட்பு அவமதிப்பையே பெருகச் செய்யும்.

மெய்யான மனநிறைவைப் பெருமளவு தந்தும், நம்பிக்கைகளை நிறைவேற்றியதுமான நட்புகளின் மொத்த எண்ணிக்கையைக் கணக்கிட சாலொமோன் தீர்மானித்தான். அவன் அறிந்த எல்லா மனிதர்களிலும் எத்தனை பேரை மெய்யான "ஆத்தும நண்பர்கள்" என்று கருதினான்?

முழு நிறைவான மனிதனை அவன் தொடர்ந்து தேடிக்கொண்டே இருந்தான், ஆனால் அப்படிப்பட்ட ஒருவனை அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை. அவன் சந்தித்த ஒவ்வொரு மனிதனிடத்திலும் ஏதோ சில தவறுகள் அல்லது நடத்தையில் பலவீனங்கள் இருந்தன.

அவன் கண்டுபிடித்ததெல்லாம் என்னவெனில் நல்ல ஆண்களைக் கண்டுபிடிப்பது மிகவும் அரிது, நல்ல பெண்களைக் காண்பது அதனினும் அரிது. குறைபாடற்ற மனிதனுடைய தரம் என்னவென்று அவன் தரம் நிர்ணயித்துக் கண்டபோது ஆயிரத்தில் ஒருவன் அதற்கு நெருக்கமான தரத்தில் இருந்தான், அதாவது அந்த மனிதன் விசுவாசத்தோடு, நம்பகத்தன்மையோடு, தன்னலமற்ற நண்பனாக விளங்கினான்.

ஆனால் சிறந்த பெண்மணி என்று அவன் ஏற்றுக்கொள்வதற்குத் தக்கபடி ஆயிரத்தில் ஒருத்தி கூட அவனுக்குத் தென்படவில்லை. அவர்கள் எல்லோரிலும் நல்லவள் என்று சொல்லத் தக்க தரத்துக்கு நெருங்கிய ஒருத்தியைக் கூட அவனால் காணமுடியவில்லை. ஆண்வர்க்கத்தின்மேல் வெறியார்வம் கொண்ட அறிக்கையை நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை, அது அருவருக்கத்தக்க அவமதிப்பாகவும் இருக்கிறது. ஆனால் நாம் கிறிஸ்தவக் கோட்பாடுகளின்படியும் மதிப்பீட்டின்படியும் இந்தக் கருத்தைக் கூறுகிறோம். மாறாக, ஒவ்வொரு நாளும் தான் பெண்ணாகப் பிறக்கவில்லை என்று தேவனுக்கு நன்றி கூறுகிற புராதன நம்பிக்கை கொண்ட யூதனுக்கு இது அதிர்ச்சியளிப்பதில்லை. பெண்களை அடிமைகளாக அல்லது வெறுமனே சொத்தாகக் கருதுகிற சில சமுதாயங்களில் வாழ்கிற ஆண்களுக்கும் இது அதிர்ச்சியளிப்பதில்லை.

சாலொமோனின் கடினமான சொற்களின் ஆற்றலை மென்மையாக்கும் பொருட்டு விரிவுரையாளர்கள் விளக்கமளிப்பதில் தலைகீழ் உடற்பயிற்சி செய்ய முனைகிறார்கள், ஆனால் அவர்களுடைய நல்நோக்கம் கொண்ட முயற்சி

கள் தவறான வழியில் முடிகின்றன. பிரசங்கி என்ன கூறவேண்டும் என்று நினைத்தானோ அதையே கூறியிருக்கிறான். மேலும் அவனுடைய முடிவை உலகு சார்ந்த மனோபாவமும் சிற்றின்ப வேட்கையும் கொண்ட ஆண்கள் உலகமெங்கிலும் பகிர்ந்துகொள்கிறார்கள்.

பெண்களைப் பற்றிய சாலொமோனின் கருத்து பெருமளவு ஒருதலைச் சார்புடையது. திருவாளர் G. கேம்ப்பெல் மோர்கன் சமநிலைக் கருத்தை வழங்கியிருக்கிறார்:

> பெண்களின் செல்வாக்கு நன்மைக்கோ தீமைக்கோ மிகவும் சக்திவாய்ந்த முறையில் செயல்படுகிறது. மனுக்குலத்தின் முன்னேற்றத்துக்காகத் தொடங்கப்பட்ட பெரிய இயக்கம் எதுவும், அதில் பெண்களுடைய உற்சாகமூட்டும செல்வாக்கு இல்லாமல் செயல்பட்டது இல்லை என்று மிக நுணுக்கமாக ஆய்ந்து நோக்கியவர்களில் ஒருவர் கூறியதை நான் ஒருமுறை கேட்டிருக்கிறேன். மிகவும் மேம்பட்ட அறிக்கை எதுவும் இதைக் காட்டிலும் கூடுதலாக உறுதிப்படுத்தும் ஆற்றல் கொண்டிருக்குமா என்பதை நான் அறியேன்; ஆனால் இந்த அறிக்கையில் மிகப்பெரிய உண்மை அடங்கியிருக்கிறது என்று நான் நம்புகிறேன். இதற்கு இணையான உண்மை என்னவெனில், மனித இனத்தைச் சீர்கெடச் செய்வதில் பெண்கள் வகித்த பங்கு மிகவும் பயங்கரமானது. ஓர் இனத்தின் பெண்கள் கூட்டம் மிகச் சிறந்தவர்களாக இருந்தால் அவ்வினத்தின் வாழ்வு மிகவும் வலிமைபெற்று விளங்கும். அது சீர்கெட்டுப் போயிருந்தால் அந்த இனமே அழிவை நோக்கிச் சென்று விடும். நன்மைக்கும் அல்லது தீமைக்கும் இறுதியான அரணாக விளங்குபவள் பெண்ணே. அவளிடத்தில் மிகுந்த இரக்கம் அல்ல மிகுந்த கொடுமை குடிகொண்டிருக்கும்.[31]

சாலொமோன் பின்னர் பெண்ணினத்தைக் குறித்து மிகச்சிறந்த இலக்கியப் படைப்பை உருவாக்கிப் போற்றித் தனக்குக் கழுவாய் தேடிக் கொண்டான் (நீதிமொழிகள் 31). பிரசங்கி நூலில் அவன் மனிதன் என்னும் பூமிக்குரிய நிலையில் இருந்து தவறான அபிப்பிராயத்தை எழுதுகிறான். ஆனால் அவன் தெய்வீக வெளிப்பாடு என்னும் மிகவுயர்ந்த சிகரத்திலிருந்து நீதிமொழிகள் 31 - ஐ எழுதுகிறான்.

கிறிஸ்தவ விசுவாசம் உலகில் பிரவேசித்த பிறகு, பெண் நன்மதிப்பு, மரியாதை ஆகியவற்றில் மலை உச்சியை அடைந்து விட்டாள். கர்த்தராகிய இயேசுவே அவளுடைய மெய்யான நண்பரும், அடிமைத்தனத்தை நீக்கி அவளுக்கு விடுதலை வாங்கிக் கொடுத்தவரும் ஆவார்.

7:29 தான் சந்தித்த மனிதர்களில் பிரசங்கி முடிவற்ற ஏமாற்றங்களைக் குறித்து ஆராய்ந்து பார்த்தவனாக, மனிதன் தனது தொடக்க நிலையிலிருந்து விழுந்து போனான் என்று மிகச்சரியாக முடிவு செய்தான். இது எத்தனை உண்மையாக இருக்கிறது! **தேவன்** மனிதனைத் தமது **சாயலில்**, தமது ரூபத்தில் படைத்தார். ஆனால் மனிதன் தனக்கென்று **தேடிக்கொண்ட** பற்பல பாவ **உபாயங்களால்** தெய்வீக சாயலைக் கெடுத்து உருக்குலைந்து போனான்.

அவன் தனது வீழ்ச்சியடைந்த நிலையிலும் முழுநிறைவு பெறவேண்டும் என்னும் உள்ளுணர்வுப் பசியோடு இருக்கிறான். அவன் தனக்கு முழு நிறைவான வாழ்க்கைத் துணை வேண்டும், முழுநிறைவான வேலை வேண்டும் எல்லாவற்றிலும் முழுநிறைவு வேண்டும் என்று தேடி அலைகிறான். ஆனால் அவனால் பிறரிடத்திலும் தன்னிடத்திலும் முழுநிறைவைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இதற்கான காரணம் அவன் சூரியனுக்குக் கீழே அதைத் தேடுகிறான் என்பதே. இவ்வுலகில் வாழ்ந்த வாழ்க்கைகளில் நிறைவான வாழ்க்கை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையே ஆகும். ஆனால் அவர் இப்பொழுது சூரியனுக்கு மேலே இருக்கிறார். தேவனுடைய வலது பக்கத்திற்கு உயர்த்தப்பட்டவராக விளங்குகிறார். நிறைவைப் பெற வேண்டும் என்னும் மனிதனுடைய வேட்கையை தேவன் கிறிஸ்துவின் மூலமாக நிறைவேற்றுகிறார் - வேறு ஒருவரும் இல்லை, வேறு எதுவும் இல்லை.

ஆ. சூரியனுக்குக் கீழான ஞானம் [அதி. 8]

8:1 தனது எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதில் மனித ஞானம் தோல்வியடைந்த போதிலும், மற்ற எல்லோரைக் காட்டிலும் ஞான முள்ளவன் எவ்வளவு மேலானவன் என்று சாலொமோன் வியந்து போற்றுகிறான். காரியங்களின் மறைந்திருக்கும் பொருளை ஆராய்ந்து அறிவதற்கு அவனைவிடத் தகுதியானவன் வேறு எவனும் இல்லை. பிரசங்கியான அரசனைப் பொறுத்தவரை ஒரு மனிதனுடைய உடல் தோற்றத்தில் அவனுடைய ஞானம் பிரதிபலிக்கிறது. அவனுடைய முகம் பிரகாசிக்கிறது, கரடுமுரடான முகம் மென்மையாக மாறியிருக்கிறது.

8:2 அரசன் என்னும் சொல் இங்கு தேவனைக் குறிப்பதாக இருக்கலாம் அல்லது பூமியிலுள்ள மன்னனாக இருக்கலாம்; ஞானம் அவருடைய முன்னிலையில் எவ்வாறு நடந்துகொள்வது என் பதைக் கற்பிக்கிறது. முதலாவதாகக் கீழ்ப்படிதல் என்பது என்னவென்று மனதில் ஆழப்பதிய வைக் கிறது. இவ்வசனத்தின் பிற்பகுதி எபிரெய மொழி யில் தெளிவற்று இருக்கிறது. அதனைக் கீழ்க் கண்ட மொழிபெயர்ப்புகளின் வாயிலாக அறியலாம்:

தேவனுடைய ஆணைக்கு ஏற்ப (KJV)

தேவனுடைய முன்னிலையின் ஆணையின் காரணமாக (NASB).

நீ தேவனுக்கு இட்ட ஆணையின்படியே (NKJV)

இங்கு ஆணை என்று குறிப்பிடப்பட்டிருப்பது ஒருவன் அரசின்மேல் செய்திருக்கும் விசுவாசப் பிரமாணத்தையோ, அரசர்களுக்கு ஆளுவதற் கான அதிகாரம் அளித்த தேவனுடைய ஆணை யையோ குறிக்கும் (எ. கா., சங். 89:35 -ஆம் வச னத்தைக் காண்க).

8:3 தெளிவற்ற தன்மை மூன்றாவது வசனத் திலும் தொடருகிறது. அரசனுடைய முன்னிலை யில் பிணக்கு ஏற்படுகிறபோது எவ்விதத் தாமத முமின்றி அங்கிருந்து வெளியேற வேண்டும் என்னும் அறிவுரை வழங்கப்பட்டிருப்பதாக நாம் இந்த வசனத்தைப் புரிந்துகொள்ளலாம். அல்லது கோபத்தோடோ, கீழ்ப்படியாமலோ, ஆணவத் தோடோ, தனக்குக் கொடுக்கப்பட்ட வேலையை உதறித் தள்ளிவிட்டோ அவசரம் அவசரமாக வெளி யேறுவதற்கு எதிராகக் கூறப்பட்டுள்ள எச்சரிப் பாகவும் இது இருக்கலாம் (KJV, NASB, NKJV).

அது எதுவாயினும் அரசன் தனது மனதின் விருப்பதின்படி செய்வதற்குரிய பெருமளவு அதி காரம் உடையவனானதால், அவனுக்கு இடை யூறாகச் செயல்படுவது ஞானமற்ற செயல் என்று இந்தப் பகுதி வலியுறுத்துகிறது.

8:4 அரசன் பேசுகிறபோது, அவனுடைய சொற்களை **அதிகாரம்** வலிமையாக்குகிறது. அது முதன்மையானது. அவனுடைய குடிமக் களில் எவனும் அதை எதிர்த்து வாதாடமுடியாது.

8:5 அரசனின் கட்டளைக்குக் கீழ்ப்படிகிற எவனும் அரசகோபத்துக்கு அஞ்ச வேண்டிய தில்லை. அரசனுடைய ஆணைகளின் **காலத் தைப்** பொருத்தும் அதன் செயல்முறையைப் பொருத்தும் எது சரியானது என்று ஞானம் கற்பிக் கிறது.

8:6 செயல்களைச் சரியான முறையிலும் தவ றான முறையிலும் செய்யலாம், மேலும் அவற் றைச் சரியான காலத்திலும் தவறான காலத்திலும் செய்யலாம். ஆனால் முன்பே வகுத்தமைக்கப் பட்ட நிகழ்வுகளின் நேரத்தை அறியாததே அவன் மேல் சுமருகிற பெரிதான பிரச்சினையாகும்.

8:7 அவன் அறியாதது அல்லது செய்யாதது நிறைய இருக்கின்றன. அவனால் எதிர்காலத்தை யும் அறிய முடியாது - **என்ன சம்பவிக்கப் போகி றது** எப்பொழுது நிகழும் என்பதையும் **அவன் அறியான்**.

8:8 அவனுடைய ஆவி பிரிவதை அவனால் தடைசெய்ய முடியாது, அவனுடைய **மரணம்** எத்தருணத்தில் நிகழும் என்பதும் அவனுக்குத் தெரியாது. கருணையற்ற முறையில் அவனோடு எப்போதும் போர்புரிகிற **மரணத்திலிருந்து** அவன் விடுதலை பெறமுடியாது. அவன் தனக்கு ஏற்படப் போகும் எத்தகைய பொல்லாப்பையும், அது நிகழ வேண்டிய தருணத்திலிருந்து தள்ளி வைக்க முடியாது.

8:9 சூரியனுக்குக் கீழே மனித வாழ்வை ஆராய்ச்சி செய்த பிரசங்கியின் கருத்துகளில் சில இவையே. இவ்வுலகில் ஒரு மனிதன் மற்ற வனைத் தனது காலின் கீழே மிதித்து நசுக்கு கிறான், ஒருவன் தனக்கே கேடுண்டாக வேறொரு மனிதன்மேல் அதிகாரம் செலுத்துகிறான்.

8:10 மனித வாழ்வு இந்த அளவுக்கு ஆழமற்ற தாக இருக்கிறது. **துன்மார்க்கன் மரணமடைந்து அடக்கம்பண்ணப்படுகிறான்**. அவன் முன்னர் ஆராதனை செய்யுமிடத்துக்குப் போய்வந்து கொண் டிருந்தான். இப்பொழுது அவன் போய்விட்டான். அவன் நேர்மையற்ற செயல்களைச் செய்து வந்த நகரத்திலேயே, அவனுடைய பக்தியைப் போற்றி மக்கள் அவனைப் புகழ்ந்தார்கள். நேர்மையற்ற தன்மையை மறைக்கும் முகப்பாக சமயம் செயல் படக்கூடும். அது அந்த அளவுக்கு வெறுமையும் பொருளற்றதுமாயிருக்கிறது.

8:11 குற்றங்கள் விசாரிக்கப்படுவதற்கும் நீதி வழங்கப்படுவதற்கும் முடிவுறாது என்று சொல்லப் படும் அளவுக்குக் காலதாமதம் ஆகிறது. இது சட்டம் மீறப்படுவதையும், சட்டநடவடிக்கைகள் அவமதிக்கப்படுவதையும் உற்சாகப்படுத்து கிறது. குற்றஞ்சாட்டப்பட்டவனுக்கு எதிராக விசா ரணை நேர்மையாக நடத்தப்பட வேண்டுமென் னும் உறுதி முக்கியமானதுதான், அதன் காரண மாகக் குற்றவாளி அதிகமாகப் பாதுகாக்கப்படு கிறான், அது பாதிக்கப்பட்ட மனிதனுக்கு அளிக்கப்

பட வேண்டிய நீதியைப் புறக்கணிக்கிறது. நேர்மையான ஒருதலைச் சார்பற்ற வகையில் குறித்த காலத்தில் செலுத்தப்படும் நீதி, குற்றங்கள் நடைபெறுவதைத் தடைசெய்யும். இதற்கு மாறாக, முடிவில்லாமல் விசாரணை நீண்டு கொண்டே போகும்போது, குற்றம்புரிபவர்கள் சட்டத்தை மீறுவதில் மிகவும் உறுதியாக இருக்கிறார்கள். தண்டனையிலிருந்து தப்பலாம் என்றோ, எளிதான தண்டனைதான் வழங்கப்படும் என்றோ அவர்கள் எண்ணுகிறார்கள்.

8:12 சில நிகழ்வுகள் விதிவிலக்காக நடந்திருப்பதாக சாலொமோன் கண்டிருந்தாலும், **தேவனுக்குப் பயப்படுகிறவர்கள்** முடிவில் **நன்றாயிருப்பார்கள்** என்று அவன் நம்பினான். தொடர்ந்து பாவச் செயல்களில் ஈடுபடுகிற குற்றவாளி முதிர் வயதுவரை வாழ்ந்தாலும் அந்த அபூர்வமான நிகழ்வு, முடிவில் நீதிமான் நற்பயன் பெறுவான் என்பதையும் சட்டவிரோதச் செயல் புரிபவர்களுடைய வழி கடினமாயிருக்கும் என்பதையும் செல்லுபடியாகாததாக ஆக்குவதில்லை.

8:13 இறுதியில் **துன்மார்க்கன்** இழப்பை அடைவான் என்பதில் பிரசங்கி உறுதியாயிருந்தான். **தேவனுடைய முன்னிலையில்** அவன் **பயப்படத்** தவறியதால் அவன் குறுகிய காலம் வாழ்ந்து மாய்வான். அவனுடைய வாழ்க்கை **நிழலைப் போலக்** கணநேரத்தில் மறைந்துபோகும்.

8:14 பொதுவான விதிகளையும் பளிச்சிட்டுத் தோன்றும் அபூர்வமான நிகழ்வுகளையும் குறித்து மாறிமாறி சாலொமோன் கூறுவதாகத் தோன்றுகிறது. சிலவேளைகளில் **நீதிமான்களும்** துன்மார்க்கரைப் போலத் தண்டிக்கப்படுகிறார்கள். சிலவேளைகளில் **துன்மார்க்கரும்** பண்புடைய நீதியுடைய குடிமக்களைப் போல நன்மையைப் பெறுகிறார்கள். இவ்விதமான முரண்பாடான நிகழ்வுகள் பிரசங்கியாகிய அரசன் வாழ்வின் **மாயையைக்** குறித்து வெறுப்படைவதற்குக் காரணமாக விளங்கின போலும்.

8:15 அவனைப் பொறுத்தவரை, நீங்கள் உயிரோடிருக்கும்வரை முடிந்தமட்டும் உங்கள் வாழ்க்கையை மகிழ்ச்சியோடு அனுபவிக்க வேண்டும் என்பதே தருக்கரீதியான கொள்கை. **உண்டு, குடித்து, மகிழ்ச்சியுடன்** நேரத்தைச் செலவிடுவதேயல்லாமல் **சூரியனுக்குக் கீழே** வேறு எதுவும் சிறந்தது இல்லை. இவ்வுலகில் ஒருவனுக்கு தேவன் தந்த வாழ்க்கை முழுவதிலும் கடினமாக உழைக்கிற மனிதனுக்கு இதுவே பலன். விண்ணகத்தில் ஒரு பணமும் இல்லை என்பதே சாலொமோனுடைய தத்துவம். இங்கேயே இப்பொழுதே எல்லாவற்றையும் அனுபவிக்க வேண்டும்.

8:16 எல்லா விடைகளையும் கண்டுபிடிக்க வேண்டுமென்று இவ்விதமாகப் பிரசங்கி தன்னையே ஒப்புவித்தான். தத்துவ ஞானத்தைக் கற்றறிய தனது மனதை அவன் பயிற்றுவித்துக் கொண்டான், வாழ்க்கையின் நடவடிக்கைகள் அனைத்தையும் தீர ஆராய்ந்து பார்க்க முடிவு செய்தான் - இரவும் பகலும் கண்ணுறக்கமில்லாமல் ஒருவன் மேற்கொண்ட வேலையே இது.

8:17 புதிரின் எல்லாப் பாகங்களையும் மனிதனால் ஒன்றுகூட்ட முடியாதபடி தேவன் எல்லாவற்றையும் தனிமைப்படுத்தியிருக்கிறார் என்பதை அதற்குப் பிறகே அவன் கண்டுபிடித்தான். அவன் எவ்வளவுதான் கடினமாக முயன்றாலும், அவன் தோல்வியடைவது உறுதி. அவன் எவ்வளவுதான் கூர்மதி பெற்றிருந்தாலும் எல்லாக் கேள்விகளுக்குமான விடைகளை அவனால் கண்டுபிடிக்க முடியாது.

இ. சூரியனுக்குக் கீழே வாழ்க்கையை மகிழ்ச்சியோடு அனுபவித்தல் (அதி. 9)

9:1 இவை எல்லாவற்றையும் எவ்வளவு விரிவாகவும் முழுமையாகவும் மனதிலே வகையறுத்துச் சிந்திக்க முடியுமோ அந்த அளவிற்குப் பிரசங்கி 9 -ஆவது அதிகாரத்தில் சிந்தித்து எழுதினான். நல்ல மனிதர்களும், ஞானமுள்ள மனிதர்களும் தேவனுடைய கைகளில் இருக்கிறார்கள், அவர்கள் செய்கிற எல்லாச் செயல்களும் அவருடைய கைகளில் இருக்கின்றன என்பதை அவன் கண்டான். ஆனால் அவர்களுடைய வாழ்க்கையில் என்ன நிகழப்போகிறது, அது தேவனுடைய விருப்பத்தின் அடையாளமா அல்லது வெறுப்பின் அடையாளமா என்பதை ஒருவனும் அறியான். எதிர்காலம் முழுவதும் அறியப்படாதது, அறிய முடியாதது, எது வேண்டுமானாலும் நிகழலாம்.

9:2 நீதிமானும் துன்மார்க்கனும், நல்லவனும் தீயவனும், தூய்மையானவனும் தூய்மையற்றவனும், ஆராதிக்கிறவனும் ஆராதிக்காதவனும் எல்லோரும் முடிவில் ஒரே இடத்துக்கு - கல்லறைக்குச் செல்கிறார்கள் என்னும் உண்மை ஒன்றையும் புரிந்துகொள்ள இயலாதபடி செய்துவிடுகிறது. மரணத்திலிருந்து தப்புவதற்குத் துன்மார்க்கனைவிட நீதிமானுக்கு எவ்வித அனுகூலமான நிலையும் இல்லை. தங்களுக்குத் தாங்களே ஆணையிட்டுக் கீழ்ப்படுத்திக் கொண்டவர்கள், ஆணையிடாமல் அதைத் தவிர்த்தவர்கள்

யாவரும் ஒரேவிதமான இக்கட்டான சூழ்நிலை யில்தான் இருக்கிறார்கள்.

9:3 முடிவில் எல்லாத் தரத்து மனிதர்களையும் மரணம் தாக்குகிறது. இது வாழ்க்கையின் இயற் கைச் சீற்றம். மனிதர்கள் வன்முறையாளர்களா கவோ முட்டாள்களாகவோ வாழலாம்; அதன் பிறகு முடிவு மரணம்தான். வாழ்வின் முடிவு மர ணம் என்பது எவ்வளவு பெரிய அநீதியாக இருக் கிறது?

9:4 மனிதன் உயிரோடிருக்கும் அளவும் **நம் பிக்கை** இருக்கிறது; அதாவது, அவன் ஏதோ ஒன்றை எதிர்பார்த்திருக்க முடியும். அந்தப் பொருளில், **செத்த சிங்கத்தைப் பார்க்கிலும் உயிருள்ள நாய் சிறந்தது.** இங்கு நாய் மனிதனு டைய மிகச்சிறந்த நண்பன் என்னும் பொருளில் பேசப்படவில்லை, மாறாக விலங்குகளுக்குள் மிகவும் தாழ்ந்த, ஈனமான விலங்கு என்னும் பொருளிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது.[32] விலங்கு களின் அரசன் சிங்கம், வலிமை படைத்தது, கம்பீரம் வாய்ந்தது.

9:5 உயிரோடிருப்பவர்கள் குறைந்தது தாங் கள் சாகப் போகிறவர்கள் என்பதை **அறிவார் கள்,** ஆனால் உலகில் என்ன நிகழ்ந்து கொண்டி ருக்கிறது என்பதை இறந்தவர்கள் அறிவதில்லை.

மரணத்தில் ஆத்துமா உறங்கச் செல்கிற கடைசி மூச்சில் நினைவு போய்விடுகிறது என் பதை மெய்ப்பிக்கும்படி கள்ளப் போதகர்கள் இந்த வசனத்தைத் தொடர்ந்து பயன்படுத்தி வருகிறார்கள். ஆனால் இந்த நூலில் உள்ள இந்த வசனத்தைக் கொண்டு மனிதனுடைய எதிர் காலம் என்னவென்று கோட்பாட்டை உருவாக்கு வது மதியீனமான செயல். நாம் அவ்வப்போது குறிப்பிட்டு வந்துள்ளதுபோல, "சூரியனுக்குக் கீழே" மனிதன் விடைகளைக் கண்டறியும்படி செய்த ஆராய்ச்சியின் முடிவுகளையே பிரசங்கி என்னும் இந்நூல் பிரதிபலிக்கிறது. கண்களால் கண்டு ஆராய்ந்து அறிந்தவை, தருக்கம் ஆகிய வற்றின் அடிப்படையில் அனுமானித்த முடிவே இது, தெய்வீக வெளிப்பாட்டால் பெற்றதன்று. ஒரு ஞானியினிடத்தில் திருமறை இல்லையென்றால் அவன் எடுக்கும் முடிவு இதுதான்.

ஒரு மனிதனுடைய உடல் முடிவில் மண்ணுக் குத்தான் செல்லும் என்பதை அறிந்திருக்கும் நீங்கள், அவன் மரணமடைவதையும் அவனுடைய உடல் கல்லறையில் புதைக்கப்படுவதையும் காண் கிறபோது என்ன நினைப்பீர்கள்? "இத்துடன் முடிவடைந்தது, இப்பொழுது எனது நண்பனுக்கு ஒன்றும் தெரியாது; இங்கு நடைபெறுகிற நிகழ் வுகளை அவனால் அனுபவித்து மகிழ முடியாது. அவன் எல்லாவற்றையும் மறந்துபோனான், அவனும் கூடியவிரைவில் மறக்கப்படுவான்" என்று நீங்கள் நினைக்கக்கூடும்.

9:6 அப்படித்தான் நடக்கும் என்று சாலொமோன் நினைத்தான். ஒருவன் இறந்த பிறகு, இனிமேல் அன்பு, **பகை, பொறாமை** அல்லது எவ்வித உணர் வும் இருக்காது. இவ்வுலகின் நடவடிக்கைகள், அனுபவங்கள் எவற்றிலும் அவனுக்கு இனிமேல் பங்கு இருக்காது.

9:7 இவ்வாறாகப் பிரசங்கி தனது முந்தின முடிவுக்கே மீண்டும் வருகிறான் - உங்களுடைய வாழ்க்கையை நன்கு அனுபவியுங்கள், உணவைச் சுவைத்து உண்ணுங்கள், **திராட்சை ரசத்தைப்** பருகி உங்கள் இருதயத்தை மனமகிழ்ச்சி அடை யச் செய்யுங்கள். நீங்கள் செய்கிற செயல்களை தேவன் அங்கிகரித்திருக்கிறார். அவரைப் பொறுத் தவரை இது சரிதான்.

9:8 பளிச்சென்று ஆடை அணியுங்கள், துக்க உடையை அணிய வேண்டாம். உங்கள் **தலைக் குச்** சாம்பலை அல்ல, வாசனைத் தைலத்தைப் பூசிக்கொள்ளுங்கள். இவ்வுலகமானது கேளிக்கை களுக்கும் களியாட்டங்களுக்குமே உருவாக்கப் பட்டது என்று சிலர் நினைக்கிறார்கள், அவ்வாறு தான் சாலொமோனும் நினைத்தான்.

9:9 திருமண உறவின் இன்பத்தை எந்த அளவுவரை அனுபவிக்க முடியுமோ அந்த அளவு முழுமையாக அனுபவிங்கள். வாழ்க்கை என்பது மாயை, அது வெறுமையானது, ஆகவே அது இருக்கும்வரை எல்லாவற்றையும் முழுவதுமாக அனுபவியுங்கள். உங்களுடைய கடின உழைப் பாலும், தொல்லையாலும் கிடைப்பதன் பலனை வாழும்போதே அனுபவிப்பதைத் தவிர வேறு என்ன.

ஏழு முதல் ஒன்பது வரையிலான வசனங்களும், கில்காமேஸ் என்னும் காப்பியத்தின் கீழ்க்கண்ட வரிகளும் கவனத்தை ஈர்க்கத்தக்க வகையில் ஒத்திருக்கின்றன. அழியாமை மற்றும் பெருவெள் ளம் பற்றிய பாபிலோனியப் புராண காப்பியமே இந்தக் கில்காமேஸ் காப்பியம்:

> மனிதனைத் தெய்வங்கள் படைத்தது முதலாய்
> உயிர்போகும் நாளினைக் குறித்தே வைத்தன
> ஆகலின் கில்காமேஸ் செவிமடுத்துக் கேட்டிடு
> பகலிலும் இரவிலும் களிப்புடன் வாழ்ந்திடு
> கவலையை விடுத்து வயிற்றினை நிரப்பிடு

ஒவ்வொரு நாளையும் மகிழ்வுடன் கழித்திடு
பகலிலும் இரவிலும் ஆர்ப்பரித்துக் களித்திடு
பளிச்சிடும் ஆடையை அழகாய் உடுத்திடு
நறுமணம் கமழ்ந்திடத் தலையினைக் கழுவிடு
பிள்ளைகள் சூழ்ந்திட ஆடியே மகிழ்ந்திட
மனைவியின் அழகினில் மயங்கியே வாழ்ந்திடு.[33]

குறிப்பிடத்தக்க வகையில் இரண்டும் ஒரே கருத்தை வெளிப்படுத்துகின்றன, எனவே ஒரு நூல் மற்றொன்றைப் பார்த்து எழுதப்பட்டது என்று நினைத்துவிடக் கூடாது, மாறாக **சூரியனுக்குக் கீழே** மனித ஞானம் ஒரே முடிவை நோக்கி வழிநடத்துகிறது என்பதே உண்மை. இன்றைய நாட்களில் மனித நலக் கோட்பாடு என்ன கூறுகிறது என்பதன் கருத்தைத் திருவாளர் டெனிஸ் அலெக்ஸாண்டர் தொகுத்துத் தந்திருப்பதைப் படித்தபோது நான் இவ்வுண்மையால் மிகவும் கவரப்பட்டேன்:

> மனித நலக் கோட்பாளரின் முன்மாதிரியானது மிகப்பெரிய மாத்திரையை விழுங்குவதற்கு ஒப்பாகத் தோன்றுகிறது. இருபதாவது நூற்றாண்டின் பிந்தைய காலத்தில் வாழ்ந்த முப்பது வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களின் பிரதிநிதியாக நான், முதலாவது எவ்வித நோக்கமுமற்ற முழுமையும் தன்னிச்சையாகத் தோன்றிய பரிணாம வளர்ச்சியே நான் என்று நம்பும்படி கேட்டுக்கொள்ளப்பட்டேன். இந்தப் புறவளர்ச்சிக்கான அடிப்படைத் தேவைகள் பருப்பொருள், காலம் மற்றும் வாய்ப்பு ஆகியவை மட்டுமே ஆகும். ஏதோ விநோதமான தன்னிச்சையான விதியின் காரணமாக நானும் பிறமனிதர்களும் வெறும் பௌதிக உருவ அமைப்புகளாகத் தோன்றினோம், இவ்வுருவ அமைப்புகளுக்குத் தங்களுடைய சொந்த உளதாம் உணர்வைப் பெற்ற மனநிலை எவ்விதமாகவோ கொடுக்கப்பட்டது. மேலும் நானும் பிறமனிதர்களும் முயல்கள், மரங்கள், கற்கள் ஆகியவற்றின் பௌதிக உருவ அமைப்பினின்று ஏதோ ஒரு வகையில் மேலான நிலையைப் பெற்றவர்கள் என்று நான் சிந்திக்க வேண்டும். ஒரு நூற்றாண்டுக் காலத்தில் அழிந்து போகும் என்னுடைய உடலின் அணுக்கள் மற்ற பொருட்களின் அணுக்களிலிருந்து வேறுபட்டவை என்னும் அறிவு இருந்தபோதிலும் இவ்வாறெல்லாம் சிந்திக்கும்படி வற்புறுத்தப்பட்டேன்.

அதே நேரத்தில், வாழ்க்கையின் முடிவு மரணம் என்றும் என்னிடம் கூறப்பட்டது. பரிணாம வளர்ச்சியின் கால அளவில் என்னுடைய வாழ்க்கை ஒரு புகையைப் போன்று விரைவில் மறைந்து போகக்கூடியது. இவ்வுலக வாழ்க்கையில் எனது நினைவுகள், அவை நேர்மையானவை அல்லது நேர்மையற்றவை எதுவானாலும், என்னுடைய எல்லாவிதமான கடுமுயற்சிகள், என்னுடைய மிகப்பெரிய தீர்மானங்கள், இவையாவும் முடிவில் காலத்தின் நடவடிக்கைகள் என்னும் அணி வகுப்பில் ஒன்றும் காணப்படாமல் விழுங்கப்படும். ஒரு துளியைச் சில கோடிக்கணக்கான ஆண்டுக் கால இவ்வுலக வரலாற்றோடு ஒப்பிடுவது போல, மிகச் சிறந்த இலக்கியமும், மிகச் சிறந்த கலையும், மிகச்சிறந்த மனித வாழ்க்கைகளும் இரக்கமற்ற முறையில் அழிவுக்குள்ளாக வெப்பவியக்க இயலின் இரண்டாவது விதி கூறுகிறபடி புதைக்கப்படும். ஹிட்லர், மார்டின் லுத்தர் கிங், ஜேம்ஸ் சிவெல், அசிசி பிரான்சிஸ், சேர்மன் மாவோ, இராபர்ட் கென்னடி, இவர்கள் யாவரும் நினைவற்ற வெறுமைக்குள்ளாகத் துடைத்து அழிக்கப்பட்டுப் போவார்கள்.

ஆகவே கேடுற்ற வேலையில் நான் சிறந்ததை உண்டுபண்ணவேண்டும் என்று என்னிடம் சொல்லப்பட்டது. என்னுடைய பௌதிக நிலைக்கு நான் மேற்பட்டவன் என்னும் வலிமையான நினைவுகள், பரிணாம வளர்ச்சி என்னும் நேர்மையற்ற கண்மூடித்தனமான எண்ணத்தைக் காட்டிலும் மேலானவன் என்னும் ஆழ்ந்த உணர்வுகள் இத்தகைய தொல்லையளிக்கும் கேள்விகளை நான் மறக்க வேண்டும்; என்னை எதிர்த்து வருகிற மெய்யான பிரச்சினைகளை எதிர்கொண்டு சமுதாயத்தின் நலனுக்காகப் பொறுப்புள்ள மனிதனாக வாழ வேண்டும். இயற்கையில் உள்ள பல இயந்திரங்களைப் போலவே மனிதனுடைய மூளையும் ஓர் இயந்திரம் என்று நினைத்து ஆராய்ச்சி செய்வதே என்னுடைய வேலை என்றாலும், மிருகங்களின் உள்ளார்ந்த நிலையின் மதிப்பைக் காட்டிலும் மனிதனுடைய உள்ளார்ந்த நிலையின் மதிப்பு மேலானது என்று நாம் நம்பவேண்டும். என்னுடைய உள்ளக் கிளர்ச்சி இது உண்மை

> என்று கூறினாலும் அதை நம்புவதற்கு ஒரு சார்பற்ற மெய்யான எந்தக் காரணமும் மனித நலக் கோட்பாளர்களால் எனக்குக் கொடுக்கப் படவில்லை.[34]

9:10 பத்தாவது வசனத்தில் உள்ள பழமொழி, பெரும்பாலோர் அறிந்த பழமொழி ஆகும். கிறிஸ்தவ ஊழியத்தை மனப்பூர்வமான உற்சாகத் தோடும் விடாமுயற்சியோடும் செய்ய வேண்டும் என்று வலியுறுத்துவதற்கும் இதனை விசுவாசிகள் பயன்படுத்துகிறார்கள், மேலும் இந்த ஆலோசனை தட்டி எழுப்புகிறதாயிருக்கிறது. ஆனால் நீங்கள் மீண்டும் வரமுடியாதபடி கல்லறையை நோக்கிச் செல்கிறீர்கள், அங்கே உங்களால் வேலைசெய்யவோ, கண்டுபிடிக்கவோ, சிந்திக்கவோ, அறியவோ முடியாது; ஆகவே உங்களால் முடிந்தவரை ஒவ்வொரு இன்பத்தையும் களியாட்டத்தையும் அனுபவியுங்கள் என்றே இப் பகுதி கூறுகிறது. அதுவே இதன் பின்னணிக் கேற்ற பொருள்.

இங்கே கொடுக்கப்பட்டுள்ள ஆலோசனை மிகச்சிறந்தது, ஆனால் அதற்கான காரணம் மிகவும் மோசமானது ஆகும்! மேலும் சட்டபூர்வமான, பயன்தரக்கூடிய, புத்திபுகட்டக்கூடிய தன்மைகள் கொண்ட செயல்கள் மட்டுமே ஆலோசனைகளாக இருக்கவேண்டும்.

9:11 அதிர்ஷ்டமும் வாய்ப்பும் ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் மிகப்பெரிய பங்களிப்பைச் செய்கின்றன என்று மற்றொரு விசயத்தைப் பிரசங்கி கவனித்துப் பார்த்தான். மிகவும் வேகமாக ஓடுகிற மனிதன் எப்பொழுதும் ஓட்டத்தில் வெற்றி பெறுவது இல்லை. மிகவும் உரமிக்க போர்வீரர்கள் எப்பொழுதும் போரில் வெற்றிபெறுவது இல்லை. மிகுந்த ஞானமுள்ளவன் எப்பொழுதும் சிறந்த உணவை அனுபவித்து மகிழ்வது இல்லை. மிகவும் புத்திசாலியான மனிதர்கள் யாவரும் செல்வந்தராக இருப்பதில்லை. ஆற்றல் மிக்கவன் எப்பொழுதும தலைமைப் பொறுப்பைப் பெற்றிருப்பது இல்லை. ஒவ்வொருவரையும் துரதிர்ஷ்டம் துரத்துகிறது. வெற்றி தோல்வி ஆகியவற்றில் சமயமும் தேவச்செயலும் முக்கிய பங்கு வகிக்கின்றன. பெருஞ்செல்வந்தர் J. பால் கெட்டி என்பாரிடம் அவருடைய வெற்றிக்கான விளக்கத்தைக் கேட்டபோது, "சிலர் செல்வத்தைக் கண்டடைகிறார்கள், சிலருக்குக் கிடைப்பதில்லை" என்று பதிலுரைத்தார்.

9:12 எப்பொழுது அவப்பேறு தாக்கும் என்பது ஒருவருக்கும் தெரியாது. மீன்கள் வலையில் அகப்படுவது போல அல்லது பறவைகள் கண்ணியில் பிடிபடுவதுபோல மனிதன் அவப்பேறின் காரணமாகப் பாதிப்பு அடைகிறான், ஒருவேளை மரணமும் அடைகிறான். எந்தக் குண்டில் அவனுடைய பெயர் பொறிக்கப்பட்டுள்ளது என்பது அவனுக்குத் தெரியாது.

9:13-15 எப்போதும் **ஞானம்** போற்றப்படுவது இல்லை என்பது இதயத்துக்கு வேதனை அளிக்கக்கூடிய வேறொரு உண்மையாகும். அதற்குரிய எடுத்துக்காட்டு: **கொஞ்சம் குடிமக்கள் மட்டுமே இருந்த சிறிய பட்டணம்**, அதன் காரணமாக அது சரியாகப் பாதுகாப்படவில்லை. ஒரு வலிமைவாய்ந்த அரசன் பெருமளவுப் போர்வீரர்களோடு அதைச் சூழ்ந்து, அதனுடைய மதில்களை உடைக்க ஆயத்தமாயிருந்தான்.

நம்பிக்கையற்ற சூழ்நிலையை அடைந்த போது, மிகவும் **ஏழையாக** இருந்த **மனிதன்** ஒருவனது திட்டத்தின் காரணமாக அந்தப் **பட்டணம்** பாதுகாப்பட்டது. அந்தத் தருணத்தில் அவன் மாவீரனாகக் கருதப்பட்டான். ஆனால் மிக விரைவாக அவன் மறக்கப்பட்டான்.

9:16 ஆற்றலைப் **பார்க்கிலும் ஞானமே சிறந்தது** என்றாலும், அந்த ஏழையின் ஆலோசனை பின்னர் பயனற்றதாகக் கருதப்பட்டது. இக்கட்டான சூழ்நிலை நீங்கியவுடன், அவன் என்ன சொல்லவிருந்தான் என்பது குறித்து ஒருவரும் அக்கறைகொள்ளவில்லை.

இந்த உவமை தெளிவான வகையில் நற்செய்திப் பிரகடனத் தொனியைக் கொண்டிருக்கிறது. அந்தப் பட்டணம் மனிதனுடைய ஆத்துமாவைப் போன்றது - சிறியது, பாதுகாப்பற்றது. பெரிய அரசன் சாத்தானே ஆவான், பட்டணத்தைத் தாக்கவும் அழிக்கவும் தொடர்ந்து முயற்சி செய்கிறான் (2 கொரி. 4:4; எபே. 2:2). அதை விடுவிப்பவர் இரட்சகர் - ஏழை (2 கொரி. 8:9), ஞானமுள்ளவர் (1 கொரி. 1:24; கொலோ. 2:3). அவர் அதை விடுவித்த போதிலும் அவரை ஒருவரும் கனப்படுத்தவில்லை, போற்றிப் பாராட்டவில்லை! பெரும்பாலான உலக மக்கள் அவர் மரணம் அடையவே இல்லை என்பதுபோல வாழ்கிறார்கள். கிறிஸ்தவர்களும்கூட அவர் நியமித்தபடி அவரை நினைவுகூருவதில்லை, அதாவது கர்த்தருடைய நாளில் அவரை நினைவுகூருவதில் போதுமான அக்கறை செலுத்துவதில்லை.

9:17 மனிதன் நன்றியறிதல் இல்லாமலும் அக்கறை செலுத்தாமலும் இருந்தபோதிலும், **மூடரை ஆளும் அதிபதியின்** வசைபாடும் கூக் குரலைப் பார்க்கிலும் **ஞானிகளுடைய அமரிக் கையான சொற்கள்** அதிக மதிப்புடையவை.

9:18 ஞானம் சிறந்த ஆயுதங்களாகவும், போர்த்தளவாடங்களாகவும் விளங்குகிறது. ஆபேல் பெத்மாக்கா என்னும் பட்டணத்தை யோவாப் முற்றுகை போட்டபோது அங்கிருந்த ஞானமுள்ள பெண்ணொருத்தி அதை விடுவித்த தைக் குறித்து 2 சாமுவேல் 20:14-22 வசனங் களில் நாம் படிக்கிறோம்.

ஆனால் ஞானமுள்ள மனிதன் நிறைவேற்றிய எல்லா நன்மையான செயல்களையும் பாவியான முட்டாள் ஒருவன் பயனற்றதாக்கிவிடுவான். சிறுநரிகள் திராட்சைத் தோட்டத்தைக் கெடுத்து விடுவதைப் போல இது இருக்கிறது.

ஈ. கூரியனுக்குக் கீழே ஞானியும் மூடனும் (அதி. 10)

10:1 தைலக்காரனுடைய பரிமள தைலத் தில் ஈக்கள் அகப்பட்டுச் சாகுமானால், அந்தத் தைலமே **நாறிக்கெட்டுப் போகும்**. ஒரு மனிதனு டைய நடத்தை பற்றிய ஒப்புமையை இதில் காணமுடியும். ஒருவன் தனது ஞானத்தாலும் கனத்தாலும் நற்பெயர் பெற்றிருப்பான், ஆனா லும் அவன் ஒரேயொரு தவறான செயலால் அதனை அழித்துப் போடக்கூடும். ஒருவன் பல ஆண்டுகள் செய்த நற்செயல்களை மக்கள் மறப்பதற்கு அவன் செய்யும் முன்யோசனையற்ற செயல் ஒன்று போதும். பொதுவிடத்தில் ஒருவன் பேசும் மூன்று கெட்ட சொற்கள் அவனுடைய நற்பெயரை அழிக்கப் போதுமானது.

10:2 வலது கை திறம்பெற்றது என்னும் கருத்து காலம்காலமாக வழங்கி வருகிறது. **இடது கையோ** அருவருப்பானதாகக் கருதப்படு கிறது. ஒரு செயலைச் சரியாகச் செய்ய **ஞான முள்ளவன்** அறிந்திருக்கிறான், **மூடன்** அரு வருப்பான குழப்பவாதி.

10:3 வழியில் நடக்கிற சாதாரணச் செயலைச் செய்கிறபோதும்கூட **மூடன்** பகுத்தறிவு அற்றவ னாகச் செயல்படுகிறான். **தான் மூடன் என்பதை எல்லோரும் அறியும்படி** செயல்படுகிறான், பிறர் அனைவரையும் அவன் முட்டாள் என்று அழைக் கிறான் என்பதோ, தான் செய்கிற எல்லாச் செயல் களிலும் தனது அறியாமையை வெளிப்படுத்து கிறான் என்பதோ இதன் பொருளாக இருக்கக் கூடும். கடைசியில் சொல்லப்பட்டுள்ள விளக் கமே சரியென்று தோன்றுகிறது.

10:4 ஓர் **அதிபதி** உங்களிடம் கோபத்தால் சீறி எழுவானாயின், அங்கிருந்து சினங்கொண்டு வெளியேறாமல் இருப்பது நல்லது. தாழ்மை யுடன் ஒப்புவிப்பது சிறந்தது. அவனைச் சாந்தப் படுத்துவதற்கு அதுவே சிறந்த வழி, மேலும் கடுமையான **குற்றங்களைப்** பொறுத்தருளச் செய்வதற்கும் அது வழிவகுக்கும்.

10:5,6 இந்தக் குழப்பமான உலகில் ஓர் அதி பதி எடுக்கிற ஞானமற்ற முடிவுகளாலும் அநீதி களாலும் எழுகிற முரண்பாடு சாலொமோனை வருத்தமுறச் செய்தது. தேவையான தகுதிகள் இல்லாத மனிதர்கள் உயர்ந்த பதவிகளில் அவ் வப்போது நியமிக்கப்படுகிறார்கள், அதேநேரத் தில் திறமைபெற்றவர்கள் தாழ்நிலைகளில் நியமிக்கப்பட்டு அவர்களுடைய செயல்திறன் வீணடிக்கப்படுகிறது.

10:7 வேலைக்காரர் அவ்வப்போது **குதிரை களில்** ஏறிச்செல்கிறார்கள், ஆனால் **பிரபுக் களோ** கால்நடையாகப் பயணம் செய்கிறார்கள். அரசியல், தொழில்துறை, இராணுவம், சமய வாழ்க்கை எல்லாவற்றிலும் இத்தகைய முரண் பாடுகள் நிலவுகின்றன.

10:8 பிறருக்கு இடர் விளைவிக்க வேண்டும் என்னும் எண்ணத்தில் குழிதோண்டுகிற மனிதன், தனது தீய எண்ணத்திற்குத் தானே இலக்கா வான். கோழிக்குஞ்சுகள் கூண்டுக்கு வரும் வழியை அறியும்.

வரம்பு மீறி நுழைவதற்காக அல்லது தீய நோக்குடன் அல்லது தனது சொத்தின் எல்லையை மாற்றி அமைக்கும்படி கற்சுவரைத் **தகர்க்கிற வன்** எவனும் பாம்பால் கடிபடுவான். அல்லது வேறு ஏதேனும் வெறுக்கத்தக்க வகையில் அதற்கான பாதிப்பைச் சந்திக்க நேரிடும்.

10:9,10 நேர்மையான செயல்களிலும் இழப்பு நேரிடக்கூடியநிலை உள்ளது. கற்களை வெட்டி யெடுக்கிற மனிதன் அந்தக் கற்களாலே காயப் படுவதற்கான ஆபத்து உள்ளது. மரத்தைப் பிளக் கிறவன் கோடரியால் ஆபத்துக்குள்ளாகக் கூடிய வாய்ப்பு உள்ளது.

கூர்மையான கருவிகளைக் கொண்டு வேலை செய்வது நல்லது. இல்லையெனில் வேலையைச் செய்து முடிப்பதற்கு அதிக உழைப்பு தேவைப் படும். கோடரியைத் தீட்டுவதற்கான நேரத்தை, குறைவான நேரமும் குறைவான உழைப்பும் செலவிட்டு வேலையை முடிப்பதன் வாயிலாக ஈடுகட்ட முடியும். ஞானம் இவ்விதக் குறுக்கு வழி

யையும், உழைப்பைக் குறைப்பதற்கான வழியை யும் கற்றுத் தருகிறது. "ஞானம் வெற்றிக்கான வழியை ஆயத்தப்படுத்துகிறது" என்று திரு வாளர் லெயுபோல்ட் என்பார் இதனை எழுதிக் கொடுத்திருக்கிறார்.[35]

10:11 பாம்பாட்டி பாம்பை மயக்கச் செய்வதற்கு முன் அவனைக் கடிக்குமாயின் அவனால் என்ன நன்மை உண்டாகும்? குதிரை களவு போன பிறகு லாயத்தைப் பூட்டு போட்டுப் பாதுகாப்பதால் என்ன பயன்? குறித்த காலத்தில் தேவையான வற்றைச் செய்து மதிப்பும் பயனும் பெற வேண்டும்.

10:12,13 ஞானிகளுடைய வாய்மொழிகள் தயை உள்ளவை என்பதால் அவை அவனுக் குச் சாதகமான சூழ்நிலையைக் கொண்டுவரும். ஒரு **மூடனின்** சொற்கள் அவனுடைய வீழ்ச்சிக் குக் காரணமாக அமைந்துவிடும்.

அவன் தொடங்கும்போது பாதிப்பை ஏற்படுத் தாத வீண்சொற்களைப் பேசுவான், ஆனால் அவ்வாறு பேசிக்கொண்டிருக்கும்போதே, மதி யீனமான பிதற்றல் தொடங்கிவிடும்.

10:14 மூடன் எப்பொழுது பேச்சை நிறுத்த வேண்டுமென்பதை அறியான். **பேச்சு**, பேச்சு, பேச்சு. எல்லாம் தனக்குத் தெரியும் என்பதுபோல அவன் தொடர்ந்து பேசிக்கொண்டே இருக்கிறான், ஆனால் அவனுக்கு ஒன்றும் தெரியாது. எதிர் காலத்தில் அவன் என்ன செய்யப்போகிறான் என்பது உட்பட அவனுடைய பேச்சு தற்பெருமை கலந்ததாகத் தொடர்ந்துகொண்டே இருக்கும். "நான் ஒன்று செய்வேன், என் களஞ்சியங்களை இடித்து, பெரிதாகக் கட்டி எனக்கு விளைந்த தானியத்தையும் என் பொருட்களையும் அங்கே சேர்த்து வைத்துப் பின்பு: ஆத்துமாவே, உனக் காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருட் கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது; நீ இளைப் பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன்" என்று சொன்ன செல்வந்தனான மூடனைப் போல அவன் இருக்கி றான் (லூக்கா 12:18,19). ஆனால் அடுத்து என்ன நடக்கப் போகிறது என்பதை அவன் அறியான். ஆகவே, "ஆண்டவருக்குச் சித்தமானால், நாங்க ளும் உயிரோடிருந்தால், இன்னின்னதைச் செய் வோம்" என்று கூறும்படி அவனுக்கு ஆலோ சனை வழங்கப்பட வேண்டும் (யாக். 4:15).

10:15 தனது திறமையற்ற, பயனற்ற வேலை யின் காரணமாக அவன்சோர்வடைந்து போனான். எளிதில் புரிந்துகொள்ளக் கூடியதையும் அவனால் கண்டறிய முடியவில்லை. ஒரு பட்டணம் எவ் வளவு தெளிவாகத் தெரியுமோ அத்தகைய தெளிவான பொருட்களையும் அவனால் காண முடியவில்லை. மழைபெய்து கொண்டிருக்கும் போது எவ்வாறு அங்கிருந்து மறைவிடத்தை நோக்கிச் செல்வது என்பதை அறியாதவனைப் போல அவன் இருக்கிறான். இத்தகைய எளிய விசயங்களையும் அவன் அறிவதற்குப் புத்தியற்ற வனாக இருப்பதால், அவனுடைய எதிர்காலத் திட்டங்கள் அதிக முட்டாள்தனமாயிருக்கின்றன.

10:16,17 ஒரு நாட்டின் அரசன் முதிர்ச்சியற்ற, எல்லாவற்றையும் ஏற்கும் தன்மையோடு சிறு பிள்ளையைப் போலவும், அந்நாட்டின் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய வேலையில் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக அதிகாலமே குடித்துக் கும்மாளமிடுகிறவர்களாகவும் இருந் தால் அந்நாடு பரிதவிக்கத்தக்கது.

நற்பண்பும் உயர்குணமும் கொண்ட அரச னையும், ஏற்புடைய நடத்தையும் தற்கட்டுப்பாடும் கொண்ட தலைவர்களையும் பெற்ற நாடு, அதா வது **வெறிப்பதற்காக அல்ல** வலிமை பெறுவதற் காக **உண்ணுகிற** தலைவர்களைப் பெற்ற நாடு நற்பேறு பெற்றதாகும்.

10:18 ஒரு வீடு, அது அரசாங்கமாக இருக்க லாம் அல்லது தனிமனிதனுடைய வாழ்க்கையாக இருக்கலாம், எதுவானாலும் தொடரும் சோம்ப லால் மற்றும் புறக்கணிப்பால் வீழ்ச்சியடையும். அவ்வப்போது பழுதுபார்க்காவிட்டால் வீட்டின் மச்சு ஒழுகும்.

10:19 உணவு உண்ணும் நேரம் மகிழ்ச்சி யான நேரம். **திராட்சை ரசம்** வாழ்க்கைக்கு ஒளி யைக் கொண்டுவரும். **பணமோ எல்லாவற்றிற் கும் உதவும்.**

எல்லா இன்பங்களுக்கும் தேவையானது பணம் என்று சாலொமோன் உண்மையாக நம்பி னானா? உணவு, பானம் போன்ற மனிதனுடைய தேவைகளை வாங்குவதற்குப் பணம் தேவை என்று அவன் நினைத்தான் போலும். அல்லது 16 - ஆவது வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குடிகார ஆளுநர்கள் வரம்பு மீறிச் செல்கிறபோது எங்கே அது வழிநடத்தும் (வச.18) என்பதை மேற்கோள் காட்டுகிறான் போலும். பணத்தால் மகிழ்ச்சியைத் தவிர எதையும் வாங்கலாம், அதைக்கொண்டு பரலோகத்தைத் தவிர வேறு எந்த இடத்திற்கும் பயணச் சீட்டு வாங்கலாம் என்பது உண்மை என்று ஒருவர் கூறினார். ஒரு மனிதனுடைய

வாழ்க்கை அவன் பெற்றிருக்கும் பெருமள விலான பொருளுடைமையில் இல்லை.

10:20 அரசனுக்கு எதிராகவோ, செல்வச் செழிப்பு மிக்க அவனுடைய துணை ஆளுநர்களைக் குறித்தோ தவறாகப் பேசாதபடி எச்சரிக்கையா யிருங்கள். ஒருவரும் கேட்கவில்லை என்று நீங் கள் நினைக்கலாம். ஆனால் சுவர்களுக்கும் செவிகள் உள்ளன. எதிர்பாராத பறவை அரசனு டைய மாளிகைக்குச் செய்தியை எடுத்துச் செல்லும். "முன்யோசனையற்ற பேச்சு இறக்கை முளைத்து வெளியே செல்லும்."

உ. சூரியனுக்குக் கீழே நன்மையைப் பரவச் செய்தல் [அதி. 11:1-12:8]

11:1 இங்கு **ஆகாரம்** என்னும் சொல் தானி யத்தைக் குறிக்கும் அடையாளமாகும், ஏனெ னில் தானியத்திலிருந்தே ஆகாரம் செய்யப்படு கிறது. நீர் நிறைந்த பகுதிகளில் விதை பயிரிடப் படும் வழக்கத்தைக் குறிக்கும்படியே **உன் ஆகா ரத்தைத் தண்ணீர்கள் மேல் போடு** என்று எழு தப்பட்டுள்ளது. அல்லது தானிய வர்த்தகம் கட லின் மூலம் செய்யப்படுவதை இது குறிக்கலாம். அது எதுவானாலும், நல்லதை எல்லா இடங்களுக் கும் மிகுதியாகப் பகிர்ந்தளித்தால் அறுவடைக் காலத்தில் பெருமளவு விளைச்சலைப் பெற்றுத் தரும்.

இந்த வசனம் நற்செய்தியைப் பொறுத்தவரை யில் உண்மையாயிருக்கிறது. நாம் ஜீவ அப்பத் தைப் பகிர்ந்தளிக்கும்போது உடனடியாகப் பய னைக் காண முடியாது, ஆனால் முடிவில் அறு வடை நிச்சயம்.

11:2 ஏழு பேருக்கும் எட்டு பேருக்கும் பங் கிட்டுக் கொடுப்பது இரண்டு விசயங்களைக் குறித்ததாக இருக்கலாம் - கட்டுப்பாடற்ற தாராள மனப்பான்மை, அல்லது தொழிலைப் பல்வகை யில் விரிவாக்கம் செய்தல். முதலாவது கூறப்பட் டுள்ளதே பொருள் எனில், நம்மால் முடிந்த அளவு கணக்கிடப்படாமல் தயவு பாராட்டுவதே இங்கு கூறப்பட்டுள்ள கருத்து, ஏனெனில் பேரிடர் அல் லது அவப்பேறு வருகின்ற காலத்தில் இதைச் செய்யமுடியாது. பலர் தங்களுடைய இக்கட்டுக் காலத்திற்கென்று சேர்த்துவைக்கிறார்கள்; ஆனால் இந்த வசனமோ, வாழ்க்கை நிலையற் றது என்னும் அடிப்படையில் நாம் தடையின்றித் தாராளமாகப் பொருளுதவி செய்ய வேண்டிய தன் மனப்பான்மையை வலியுறுத்துகிறது.

அல்லது இங்கு கூறப்பட்டுள்ள கருத்து இவ் விதமாக இருக்கலாம்: உங்களுடைய எல்லா முட்டைகளையும் ஒரே கூடையில் வைக்க வேண் டாம். உங்களுடைய பணத்தை வெவ்வேறு தொழில்களில் முதலீடு செய்யுங்கள். ஒன்று தோல்வியடைந்தால், மற்ற முதலீடுகளைக் கொண்டு நீங்கள் தொடர்ந்து முன்னின்று செயல் படலாம். இதுவே பல்வகைப்படுத்துதல் ஆகும்.

11:3 முந்தின வசனத்தின் கருத்தையே இந்த வசனமும் தொடர்ந்து கூறுகிறது, அதிலும் குறிப் பாக உலகத்தில் ஏற்படக்கூடிய அறியப்படாத தீங்கை அது விவரிக்கிறது. வாழ்க்கையில் ஏற்படக்கூடிய பேரிடர் குறிப்பிட்ட வகையில் தவிர்க்க முடியாத வகையிலும், ஐயத்திற்கு இட மற்றபடியும் நிகழக்கூடும். நீர் நிறைந்த **மேகங் கள் மழையைப் பூமியின் மேல் பொழியும்** என் பது எவ்வளவு நிச்சயமோ, அதுபோலவே பிரச் சினைகளும் சோதனைகளும் மனிதர்களுக்கு நிச்சயமாக நேரிடும். ஒரு மரம் வெட்டப்பட்டால், அது வீழ்ச்சியுற்ற மன்னனைப் போல விழுந்த இடத்திலேயே கிடக்கும். அதனுடைய முடிவு முத்திரையிடப்பட்டுவிட்டது.

இவ்வசனத்தின் விரிவான பொருள் பொருத் தம் கீழ்க்கண்ட பாடலில் விவரிக்கப்பட்டுள்ளது:

> வெட்டுண்ட மரம்விழுந்த இடத்திலேயே கிடக்கும்
> உயிர்வாழும் மானிடனும் மாய்ந்திடுவான் உறுதி
> உயிர்போன மனிதனது நிலைமாறா திருக்கும்
> மறுமையின் காலமெல்லாம் அதுபோன்றே
> இருப்பான். – ஜான் ரே

11:4 மிகுந்த எச்சரிப்புடன் இருப்பதென்பது சாத்தியமே. சூழ்நிலையானது முழுநிறைவடை யும்வரை நீங்கள் காத்திருந்தால், உங்களால் எதையும் சாதிக்க முடியாது. பொதுவாக சில **மேகங்களும் காற்றும்** இருக்கத்தான் செய்யும். காற்றே அடிக்காத நிலை வரட்டும் என்று நீங்கள் காத்திருந்தால், விதையை உங்களால் வயலுக்கு எடுத்துச் செல்ல முடியாது. மழை பெய்யக்கூடிய ஆபத்து இல்லாமற்போகுமட்டும் நீங்கள் காத் திருந்தால், அறுவடை செய்வதற்குப் பயிரே இருக்காது. நிச்சயமான சூழ்நிலை வரவேண்டு மென்று காத்திருப்பவன் என்றென்றும் காத்திருப் பான்.

11:5 எல்லாவற்றையும் நாம் அறியாததால், நமக்கு இருக்கிற அறிவை மட்டும் பெற்ற நிலை யில் தடுமாறுகிறோம். **காற்றின் அசைவுகள்** எவ்வாறு நிகழ்கின்றன என்பதை நம்மால்

புரிந்துகொள்ள முடியவில்லை. பிள்ளைப் பேற்றை எதிர்நோக்கியிருக்கும் தாயின் கர்ப்பத்தில் எலும்புகள் **எவ்வாறு உருவாகின்றன** என்பதும் நமக்குத் தெரியாது. தேவன் செய்கிற எல்லா வற்றையும் நம்மால் புரிந்துகொள்ள முடியாது, அவர் ஏன் அவற்றைச் செய்கிறார் என்பதும் எங்க ளுக்குத் தெரியாது.

11:6 இது நமக்குத் தெரியாது என்பதால், ஒவ்வொரு நாளையும் உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுக் கழிப்பதே சிறந்த கொள்கை. எந்தச் செயல் மிகுந்த பயன்தரும் என்பதை நம்மால் அறிவதற்கு வழியே இல்லை. எல்லாம் ஒரு வேளை நன்மை உண்டாக்கக் கூடும்.

தேவனுடைய வார்த்தையைப் பரப்புதல் வெற்றியைப் பெற்றுத் தருவது நிச்சயம். சில வழிமுறைகள் மற்ற வழிமுறைகளைக் காட்டி லும் மிகுந்த பயனளிக்கும் என்பது இன்னும் உண்மையாகவே இருக்கிறது. ஆகவே நாம் சோர்வடையாமல், பல்வகை அறிவுடன், ஒளிவு மறைவு அற்ற வகையில் கிறிஸ்தவ ஊழியத்தில் உண்மையோடு பங்கு வகிப்போம்.

என்றாலும், நாம் நமது வாழ்க்கையின் **காலைப்** பொழுதில் விதைக்க வேண்டும், **மாலைப்** பொழுதில் சோர்வடையக் கூடாது. ஓய்வில்லாத திருப்பணிக்கென்று நாம் அழைக் கப்பட்டிருக்கிறோம்.

11:7,8 இங்கு **வெளிச்சம்** என்னும் சொல் ஒளி பொருந்திய இளமைப் பருவத்தைக் குறிக்கும் என்றே தோன்றுகிறது. இளமையோடு இருப்பது மேன்மையானது, அதாவது உடல் நலத்துடன், வலிமையுடன், சுறுசுறுப்புடன் இருப்பது மேன்மை யானது. எத்தனை ஆண்டுக்காலம் உடல் உறுதியுடனும் வளம்பெற்றும் ஒருவன் வாழ்ந் தாலும் அது முக்கியமல்ல, **இருண்ட நாட்கள்** நிச்சயமாய் வரும் என்பதை அவன் அறிந்திருக்க வேண்டும். முதிர்வயதின் வலிகளும் வேதனை களும் தவிர்க்க முடியாதவை. அது துயரார்ந்த, வெறுமையான வாழ்நாட் காலமாகும்.

11:9 ஒன்பதாவது வசனம் மருள் நீங்கிய முதிர் வயதினனின் வெறுப்பு மனப்பான்மையுடன் கூடிய சொற்களா அல்லது மனமார்ந்த ஆலோ சனையா என்பதை அறிவது கடினம். உங்களு டைய இருதயம் விரும்புகிறவற்றைச் செய்யுங் கள், முடிந்தவரை உங்கள் கண்கள் காணட்டும். ஆனால் முடிவில் **தேவன்** எல்லாவற்றையும் **நியா யத்திலே கொண்டுவந்து நிறுத்துவார்**, அதா வது இளவயது வாழ்க்கையில் செய்த எல்லாப் பாவங்களுக்கும் தெய்வீகத் தண்டனையாகவே முதிர்வயது தண்டனைகள் வருகின்றன.

11:10 உங்களுடைய இளவயதில் இன்பத்தை அதிகமாக அனுபவியுங்கள், **சஞ்சலத்தையும் தொல்லையையும்** குறைத்துக்கொள்ளுங்கள். (இங்கு தீங்கு என்று சொல்லப்பட்டிருப்பது பாவத்தையல்ல, தொல்லையையே குறிக் கிறது.) **இளவயதும் வாலிபமும் மாயையே**, ஏனெனில் அவை குறைந்த நாட்களில் மறைந்து போகும்.

பன்னிரண்டாவது அதிகாரத்தில் முதல் பாதிப் பகுதியில் காணப்படும் முதிர்வயது பற்றிய இவ் வளவு உயர்வான விவரம் வேறு எந்த இலக் கியத்திலும் காண்பதற்கு இயலாது. இப்பொருள் மேலோட்டமாகப் படிக்கிறபோது தெரிவதில்லை. ஏனெனில் இப்பகுதி ஓர் உருவகமாக அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. ஆனால் உடனடியாக அந்தச் சித்திரம் வயதின் முதிர்ச்சியால் நடுக்கம் கொண்ட மனிதனை கண்முன் கொண்டுவரு கிறது, முதிர்வயது நோய்கள் பற்றிய மருத்துவ ஆராய்ச்சித்துறை கண்காட்சியாக நம்முன் கொண்டு வரப்படுகிறது. அந்த மனிதன் எவ்விதத் தடையுமின்றிக் கல்லறையை நோக்கிப் பாதங் களைத் தேய்த்தபடி நடந்துசெல்கிறான்.

12:1 வயது முதிர்ச்சியும் தளர்ச்சியும் அடைந்த துயர் மிகுந்த சித்திரம் இளைஞர்கள் தங்களு டைய இளவயதில் படைப்பாளரை நினைவுகூர வேண்டுமென்பதற்கான எச்சரிப்பாக விளங்கு கிறது. அவர்களுடைய கர்த்தர் என்றோ, இரட்சகர் என்றோ, மீட்பர் என்றோ கூறாமல் **சிருஷ்டிகர்** என்று சாலொமோன் கூறியிருப்பதைக் கவனியுங் கள். சூரியனுக்குக் கீழே அனுகூலமான இடத்தில் நின்று பார்த்த சாலொமோனால் தேவனை இவ் விதமாகத்தான் அறிய முடியும். ஆனாலும் அந்த இடத்தில் இருந்து நல்லாலோசனையை அவன் வழங்கியிருக்கிறான். வாழ்க்கையின் சூரியனின் மறைவுக் காலத்திற்கு முன் இளைஞர்கள் தங்க ளுடைய படைப்பாளரை நினைவுகூர வேண்டும். அவ்வித முதிர்வயதில் நாட்கள் கடினமாகவும் கொடூரமாகவும் விளங்கும், ஆண்டுகள் மகிழ்ச்சி யற்றதாகவும், எதையும் அனுபவிக்க முடியாத தாகவும் இருக்கும். ஒவ்வொரு இளைஞனுடைய விருப்பமும் எவ்வாறு இருக்க வேண்டும் என் பதைக் கீழ்க்காணும் வரிகள் விவரிக்கின்றன:

> வலிமை நிறைந்த காலத்தை
> அருமை அண்ணலுக் களித்திடுவேன்;

இனிமை பொங்கிய உள்ளத்தில்
எழுந்த நற்கீதம் பாடிடுவேன்.
இச்சை அகன்ற இயத்தோ(டு)
இனியவர் அன்பைச் சாற்றிடுவேன்;
உள்ளம் நிறைந்த பலத்தோடு
தினமும் ஊழியம் செய்திடுவேன்.
மகிமை பொருந்திய அருட்செய்தி
உலகினில் எங்கும் மொழிந்திடுவேன்;
களைத்த கால்கள் சோர்ந்திடினும்
பரலோகப் பர்வதம் ஏகிடுவேன்.
தளர்ச்சி அடைந்த விருப்பமும்
அயற்சி மிக்க எண்ணமும்
மகிழ்ச்சி குன்றிய செயல்பாடும்
உமக்கு அளிப்பதில் என்னபயன்?
வலிமை பொருந்திய நாட்களையும்
களிப்பு நிறைந்த காலத்தையும்
மகிமை நிறைந்த இளமையையும்
இதயம் மலர்ந்து அளித்திடுவேன்.[36]

– தாமஸ் H. கில்

12:2,3 உடல் சார்ந்தும் உள்ளம் சார்ந்தும் முதிர்வயதுக் காலத்தில் வெளிச்சம் குன்றிப் போய்விடும். பகற்பொழுது துயர்மிகுந்து காணப்படும், இரவு நீண்டதாயிருக்கும். துக்கமும் மனவழுத்தமும் நிலைகொண்டிருக்கும்.

வாழ்க்கையில் முதிர்வயதை அடைவதற்கு முன்னும்கூட மழைக்காலம், அதாவது, தொல்லைகளும் நம்பிக்கை இழந்த நிலையும் ஒரு மனிதனுக்கு ஏற்படக்கூடும். ஆனால் சூரியன் உயர எழுந்து, ஆவியில் உற்சாகம் மீண்டும் வரும். இப்பொழுதோ உற்சாகமிக்க நாட்கள் ஓய்ந்து விட்டன. ஒவ்வொரு முறை **மழை** பெய்த பின்னரும், இன்னும் மழைவரும் என்பதை உறுதி செய்யும் வகையில் **மேகங்கள்** தோன்றும்.

இளமைப் பருவமே படைப்பாளரை நினைக்க வேண்டிய காலம், ஏனெனில் அப்பொழுதுதான் **சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள்** இருளடையாமலிருக்கும், **மழைக்குப் பின் மேகங்கள் திரும்பத் திரும்ப வராமலிருக்கும்.**

இப்பொழுது முதிர்வயது மனிதனின் உடல் ஒரு **வீட்டுக்கு** ஒப்பாக உருவகப்படுத்தப்பட்டிருக்கிறது. **வீட்டுக் காவலாளிகள்**, ஒரு காலத்தில் வலிமையோடும் சுறுசுறுப்பாகவும் இருந்த புயங்களும் கைகளுமே ஆகும். இப்பொழுது அவை தோல் சுருங்கி, கரணைகள் தோன்றி, நடுக்க நோயின் காரணமாக நடுங்கிக் கொண்டிருக்கின்றன.

பெலசாலிகள் என்பவை மனிதனுடைய கால்களையும் தொடைகளையும் குறிக்கின்றன; அவை இன்னும் நிமிர்ந்து விளையாட்டு வீரனுக்குரிய வலிமையோடு இருப்பதில்லை. மாறாக, அவை இடைப்பிறவரலைச் சுட்டிக்காட்டும் குறியீட்டைப் போல கூனிப்போய், உடலின் எடையைத் தாங்கமுடியாமல் வளைந்து போயிருக்கும்.

இயந்திரம் அரைக்கிறவர்கள் கொஞ்சமானதால் ஓய்ந்து, அதாவது, மேலேயும் கீழேயும் ஒன்றுக்கொன்று நேராக இருக்கும் பற்கள் குறைந்து போனதால் அவர்களால் இப்பொழுது மென்று தின்ன முடியவில்லை. பல் மருத்துவர் இதனை போதுமான அளவு திறப்பு அடைக்கப்பட வில்லை என்று கூறுவார்.

பலகணி வழியாய்ப் பார்க்கிறவர்கள் இருண்டு போனார்கள். கண்கள் கொஞ்சம் கொஞ்சமாக மங்கிப் போய்விடுகின்றன. முதலில், அவற்றிக்கு இருபகுதிகள் கொண்ட கண்ணாடி தேவைப்படுகிறது, பின்னர் மூன்று பகுதிகள் கொண்ட கண்ணாடி, பின்னர் கண்திரை அகற்றுவதற்கான அறுவைச் சிகிச்சை. இப்பொழுது அவர்களால் பூதக் கண்ணாடி கொண்டு மிகப்பெரிய எழுத்துகளைக் கொண்ட நூலையே படிக்க முடிகிறது.

12:4 தெருவாசல் கதவுகள் அடைக்கப்பட்டன. இது காதுகளைக் குறிக்கிறது என்பதில் ஐயமில்லை. அவர்களிடம் மீண்டும் மீண்டும் சொல்ல வேண்டிய தேவை எழுகிறது. மாவரைக்கிற இயந்திரத்தின் பெருத்த ஓசையும்கூட தாழ்வுற்று அவர்களுக்குக் கேட்கிறதில்லை.

முதிர் வயதினன் உறக்கமின்மை என்னும் நோயால் பாதிப்படைகிறான். பறவையின் கீச் சொலி முதலாவது கேட்கும். அதிகாலையிலே, அல்லது சேவல் கூவும் காலைப் பொழுதில் அவன் எழுந்திருக்கிறான்.

கீத வாத்தியக் கன்னிகைகளெல்லாம் அடங்கிப் போயின. குரல் வளை அதிர்வு நாளங்கள் முழுவதும் பழுதடைந்து போயின. சத்தம் விட்டுவிட்டுக் கேட்கின்றன, சீராக இல்லை, பாடல் பாடுவது என்னும் கேள்விக்கே இடமில்லை.

12:5 அவர்களுக்கு உயரமான **மேடுகளைக்** குறித்த **அச்சம்** மேலிடுகிறது. ஏணியின்மேல் நின்று அல்லது உயரமான கட்டடத்திலிருந்து

கீழே பார்க்கிறபோதும், விமானத்தில் பறக்கிற போதும் அவர்களுக்கு அச்சம் உண்டாகிறது.

வழியில் பயம் உண்டாகிறது. அவர்களுக் குத் தன்னம்பிக்கை இல்லை, அதை இழந்துவிட் டார்கள், தனியே செல்வதற்குப் பயம் மேலும் இரவில் வெளியே செல்லவும் பயம்.

வாதுமை மரம் பூப்பூத்திருக்கிறது, இது பொது வாக நரைமுடியைக் குறிக்கும் சித்திரமாக எடுத் துக்கொள்ளப்படுகிறது. முதலில் மட்டுமீறியபடி நரைமுடி வளருகிறது, பின்னர் தரையில் விழுந்து விடுகிறது.

வெட்டுக்கிளி இரண்டு வகையில் விளக்கப் படக்கூடும். முதலாவது, **வெட்டுக்கிளி பாரமாக** இருக்கிறது, அதாவது, சிறிய சுமையும் கூட எடுத் துச் செல்ல முடியாதபடி முதிர்வயதில் பாரமா யிருக்கிறது. அல்லது வெட்டுக்கிளி தன்னை இழுக்க முடியாமல் இழுத்துச் செல்கிறது (NASB). முதிர்வயது மனிதன் குனிந்து, வளைந்து, தள்ளாடித் தடுமாறி நடந்து செல்வதைக் கேலிச் சித்திரமாக இது வரைந்து தருகிறது.

விருப்பங்கள் ஓய்ந்துபோகும். இயல்பான வேட்கைகள் ஓய்ந்து போகும் அல்லது இல்லா மலே போய்விடும் என்னும் பொருளிலே இவ்வாறு சொல்லப்பட்டுள்ளது. உணவு மணப்பதுமில்லை சுவைப்பதுமில்லை. மற்ற அடிப்படை நாட்டங்களும் ஓய்ந்துவிடும். பாலுறவுவீரியமும் குறைந்துவிடும்.

இவ்வாறு உடலில் சீர்கேடுகள் உண்டாவதற் குக் காரணம், **மனிதன்** முடிவில்லாத **வீடாகிய** மரணத்தையும் கல்லறையையும் நோக்கிப் போகி றான். அவனுடைய அடக்கத்திற்கான ஊர்வலம் கூடியவிரைவில் தெருவில் செல்லப் போகிறது.

12:6 ஆகவே **வெள்ளிக்கயிறு கட்டுவிட்டு** அறுந்து போவதற்கு முன், அல்லது **பொற் கிண்ணி நசுங்குவதற்கு** முன், அல்லது ஊற்றின் அருகே **சால் உடைவதற்கு முன்**, அல்லது **துர வண்டையில்** நீர்த்தொட்டி **நொறுங்குவதற்கு** முன் மனிதன் தனது படைப்பாளரை நினைவுகூர வேண்டுமென்பது ஞானியின் அறிவுரையாக விளங்குகிறது. இந்த உருவகங்கள் அனைத்துக் கும் துல்லியமாகப் பொருள் கூறுவது கடினம்.

வெள்ளிக் கயிறு அறுபடுதல், உடலைவிட்டு ஆவி பிரிகிறதைக் குறிக்கும்படி கூறப்பட்டுள்ள உருவகமாகத் தோன்றுகிறது. அத்தருணத்தில் மெல்லிய இழைபோன்ற வாழ்வு அறுந்து போகிறது. கண்பார்வையற்ற கவிஞர் இப்பாடலை எழுதிய போது தெளிவாக அறிந்திருந்தார் போலும்.

ஒருநாள் வெள்ளியிழை அறுவது உறுதி
அதுமுதல் இன்றுபோல் பாடிட மாட்டேன்,
ஆயினும் அன்றுநான் மன்னனின் இருப்பிடம்
இணையிலா மகிழ்வுடன் விழிப்பேன் திண்ணம்.[37]

ஃபேனி J. கிராஸ்பி

பொற்கிண்ணி மண்டையோட்டைக் குறிப்ப தாகப் புரிந்துகொள்ளப்படுகிறது. மரணத்தின் போது மனதின் செயல் நின்றுபோவதை, கவிதை நடையில் இவ்வசனம் எடுத்துரைக்கிறது.

நீர்த்தொட்டி **உருளை** ஆகியவை இரத்த ஓட்டத்தைக் குறிப்பதாகும். அது நொறுங்கிப் போவது இரத்த அழுத்தத்தின் ஏற்றத் தாழ்வைக் குறிக்கிறது. இது இருதயம் சுருங்கி விரிவதால் ஏற்படும், மரணத்தின்போது அந்த இயக்கம் நின்று போகிறது.

12:7 உடல் அசைவற்றுப் போகிறது. பின்னர் அது மண்ணை நோக்கிச் செல்லத் தொடங்கு கிறது. **ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்குத்** திரும்புகிறது. அவ்வாறுதான் சாலொமோனுக் குத் தோன்றியது போலும். விசுவாசியைப் பொறுத்தவரை அது உண்மையே. ஆனால் அவிசுவாசியின் ஆவி அவனுடைய மரணத்தின் போது பாதாளத்திற்குச் செல்கிறது. அங்கே அது பெரிய வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப் புக்கென்று காத்திருக்கிறது. பின்னர் ஆவியானது அவனுடைய உடலோடு இணைந்து, அந்த முழு மனிதனும் அக்கினிக் கடலிலே எறியப்படுவான் (வெளி. 20;12-14).

12:8 இவ்வாறாகப் பிரசங்கி எங்கே தொடங்கி னானோ அதே இடத்துக்கு மீண்டும் வந்துவிட் டான், முழு வட்டம் நிறைவடைகிறது - சூரியனுக் குக் கீழான வாழ்க்கை மாயையே, அது அர்த்த மற்றது, வீணானது, வெறுமையானது என்னும் அடிப்படைக் கோட்பாட்டின்படி அது கூறப்பட்டுள் ளது. அவனுடைய பரிதாபமான பல்லவி, ஒரு கண்காட்சிக்குச் சென்று வெகுநேரம் அங்கு தங்கி விட்ட ஒரு சிறுபெண்ணை நம்முடைய நினைவுக் குக் கொண்டுவருகிறது:

வெகுநேரம் இசையொலிக்க வேண்டுமென
நான்விருப்பம் கொண்டேன்
நெடுநேரம் பொருட்காட்சி அரங்கில்நான்
பின்தங்கிப் போனேன்.
வெகுநேரம் நகைச்சுவையை கேட்டுமகிழ
கவர்ந்திழுக் கப்பட்டேன்.

நெடுநேரம் பொருட்காட்சி அரங்கில்நான்
பின்தங்கிப் போனேன்.
தலைமுடியில் சடைபின்ன நீலநாடா
நான்எடுத்து வந்தேன்
உதவிடுவார் ஒருவரையும் நானிங்கு
ஏன்காண வில்லை?
குடைபோன்ற இராட்டிணமும் சுழலாமல்
நின்றதுஏன் அறியேன்
நெடுநேரம் பொருட்காட்சி அரங்கில்நான்
பின்தங்கிப் போனேன்.
திருவிழாக்கள் கொண்டாடும் ஊரில்நான்
வாழ்ந்திட வேண்டும்
நகைச்சுவையும் களியாட்டும் இடைவிடாமல்
தொடர்ந்திட வேண்டும்.
புத்தம்புது நீலநாடா பளிச்சென்று என்கையில்
இருந்தநிலை
இப்பொழுது நிறம்மாறி அழுக்கடைந்து
போனதுஏன் அறியேன்.
வெற்றிபெற போட்டியில்லை என்மீது
ஒருவருக்கும் விருப்பமில்லை
நெடுநேரம் பொருட்காட்சி அரங்கில்நான்
பின்தங்கிப் போனேன்.[38]
– பில்லி பார்னஸ்

சூரியனுக்குக் கீழே வாழ்க்கை வெறுமையானது என்னும் சாலொமோனின் கடைசிக் குறிப்பின் இடமாய் நாம் வருகிறபோது திருவாளர் E. ஸ்டேன்லி ஜோன்ஸ் சொன்ன கதை ஒன்று என் நினைவுக்கு வருகிறது. ஒரு கப்பலில் பயணம் செய்தபோது மிகவும் பருமனான தம்பதியரை அவர் கண்டார், அவர்களுடைய முகங்கள் எழுச்சியற்று மந்தமாயிருந்தன. அவர்கள் உணவு உண்பதற்காக மட்டுமே வெளியே வந்தார்கள். பின்னர் அவர்களைக் காண்பது அரிதாயிருந்தது; எந்த நிகழ்ச்சியிலும் அவர்கள் கலந்துகொள்ள வில்லை.

> உணவு கொண்டு வருபவர்களிடம் அவர்கள் கடுமையாக நடந்துகொண்டார்கள், தங்களை நன்கு கவனிக்கவில்லையென்று குறைபட்டுக் கொண்டார்கள். அவர்களைப் பட்டினி போட்டு விடுவார்கள் என்று எண்ணி அவர்கள் பயந்தது போலத் தோன்றியது. அவர்களுடைய பசியை ஆற்றிக்கொள்வது ஒன்று மட்டுமே அவர்களுக்குப் பொருட்டாகக் காணப்பட்டது. அவர்கள் ஒரு நூலையோ செய்தித்தாளையோ படித்ததை நான் காணவில்லை. உணவு நேரங்களுக்கிடையே அவர்கள் அமர்ந்து வெளியே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்களே தவிர வேறு ஒன்றும் செய்யவில்லை. அடுத்த உணவு எப்பொழுது வரும் என்று காத்திருந்தார்கள் போலும். ஓரிரவு இவ்வாறு அவர்கள் அமர்ந்து விழித்துப் பார்த்துக் கொண்டிருந்ததை நான் பார்த்தேன். அந்த மனிதனுடைய மந்தமான மூளையில் சட்டென்று ஓர் எண்ணம் உதித்தது போலும். அவன் எழுந்து தட்டுகள் வைக்கப்பட்டிருந்த நிலையடுக்கின் அருகில் சென்று அங்கிருந்த குவளைகளை எடுத்துப்பார்த்தான். பின்னர் மனைவியிடம் வந்து "அவற்றில் ஒன்று மில்லை" என்றான். எனக்கு வாய்விட்டுச் சிரிக்க வேண்டும் என்று தோன்றியது. அவன் கூறியது சரிதான். "அவை காலியாக உள்ளன!" குவளைகள் மட்டுமல்ல, அவர்கள் இருவருடைய ஆத்துமாக்களும், மூளையும் வெறுமையாகத்தான் உள்ளன. அவர்களுடைய பணப்பை நிறைந்திருந்தது. ஆனால் அவர்களுடைய ஆளுமையில் ஒன்றுமில்லை; அதுதான் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட தண்டனை. அவர்களுடைய சோர்வுணர்ச்சியில் அவர்களுக்குப் பாதுகாப்பு இருந்தது. அங்கு எவ்விதத் துணிகரச் செயலும் இல்லை. அவர்களுடைய சுற்றளவு பெருத்துக் கொண்டே போயிற்று, அறிவு எல்லை குறுகிக் கொண்டே இருந்தது.[39]

4. முடிவுரை: சூரியனுக்குக் கீழே மிகச்சிறந்தது [12:9-14]

12:9 பிரசங்கி தான் ஞானமுள்ளவனாக இருந்தது மட்டுமின்றி, அவன் தனது அறிவைப் பிறருடன் பகிர்ந்துகொள்ளவும் செய்தான். அவன் தனது ஞானத்தைக் கவனமாக ஆராய்ந்து அதன் பிழையின்மையைச் சோதித்து நீதிமொழிகளாக எழுதித் தந்தான்.

12:10 அவன் தனது **வார்த்தைகளை** மிகுந்த கவனத்துடன் தெரிந்தெடுத்தான். எது ஆறுதல் தருவது, இனியமையானது, உண்மையானது என்பதை அறிந்து அத்தகைய சொற்களையெல்லாம் ஒன்றுசேர்க்க முயற்சி செய்தான். அது செறிவு மிக்க உணவை ஆயத்தம் செய்வதற்கு

ஒப்பானது, மேலும் அதனைச் சிறு இலைகளை விரித்துத் தாளித்துப் பரிமாறுவதைப் போன்றது.

12:11 கூர்மையான கருவியைப் போன்றது **ஞானியின்** போதகம். அது தெளிவானதும், நம் பத்தக்கதும், ஒளிவுமறைவு அற்றதும் ஆகும். ஒரு கூடாரத்துக்கு உறுதி தரும்படி ஆழமாக ஊன் றப்பட்ட முளைகளைப் போன்றது. அவற்றை **ஒரே மேய்ப்பன்** தந்திருக்கிறார். அவை தொகுத்துத் தரப்பட்டுள்ளன. அவை வலிமையைத் தரக் கூடியவை. நமது சிந்தனைகள் அந்த முளை களைச் சார்ந்து உறுதி பெற்றிருக்க வேண்டும்.

மேய்ப்பன் என்ற சொல் திருமறையில் பல பிரதிகளில் தேவனைக் குறிக்கும் பொருளோடு கொட்டை எழுத்துடன் தொடங்குகிறது. ஆயி னும் கிழக்கத்திய நாடுகளில் அரசன் மேய்ப்ப னாகப் பார்க்கப்படுகிறான். "எல்லா அரசர்களும் மக்களின் மேய்ப்பர்களே" என்று ஹோமர் கூறினார். ஆகவே, அரசனாகிய சாலொமோன் தன்னை **ஒரே மேய்ப்பன்** என்று குறிப்பிட்டான் போலும். இந்த விளக்கம் இப்பகுதியின் பின் னணிக்குச் சரியாகப் பொருந்துவதாகக் காணப் படுகிறது.

12:12 சாலொமோன் எடுத்துக்கொண்ட ஆய்வுப் பொருள்பற்றி முழுமையாக எழுதி முடித்ததாகக் கூறமுடியாது. அவன் இன்னும் கூடுதலாக எழுதியிருக்கலாம், ஆனாலும், முடிவு அதுவே என்று கூறி அவன் வாசகர்களை எச்சரிக்கிறான். எழுதுவதற்கும், நூல்களை வெளியிடுவதற்கும் **முடிவில்லை**. ஆனால் அவற்றைப் படிப்பது பெரிய அளவில் களைப்பை ஏற்படுத்தும். ஏன் தொல்லை ஏற்படுத்த வேண்டும்? அவை கூறுவ தெல்லாம் வாழ்க்கை மாயை என்பதாகவே காணப்படும்.

12:13 அவனுடைய இறுதி முடிவு, அவன் சூரியனுக்குமேலே எழுந்துவிட்டான் என்னும் எண்ணத்தைத் தருகிறது, **"தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்**. ஏனெ னில் மனிதனுடைய, **எல்லா மனிதர் மேலும் விழுந்த** முழுக் **கடமையும் இதுவே**," என்று அவன் கூறுகிறான். ஆனால் தேவனுக்குப் பயப்படுதல் என்று இங்கு குறிப்பிடப்பட்டிருப்பதும் இரட்சிப்புக்கேதுவான விசுவாசமும் ஒன்றல்ல. படைப்பாளருக்கு முன் அடிமை உணர்வோடு படைப்பு பயப்படுவதே இங்கு கூறப்பட்டுள்ளது. **கற்பனைகள்** பழைய ஏற்பாட்டில் கொடுக்கப் பட்டுள்ள தேவனுடைய நியாயப்பிரமாணமே என்று இங்கு திட்டவட்டமாகச் சொல்ல முடியாது. அவை மனிதனுடைய இருதயத்தில் உள்ளுணர் வாக தேவனால் எழுதப்பட்ட எந்தக் கற்பனை யையும் குறிக்கும்.

சாலொமோனுடைய சொற்களுக்கு மிகவுயர்ந்த ஆவிக்குரிய உட்பொருளை நாம் கொடுக்க வேண்டியதில்லை என்றும் இதனை வேறு சொற் களில் கூறலாம். மனிதனுடைய இயல்பான புலன் அறிவைக் கொண்டு அனுபவங்களின் மூலமாக ஒரு ஞானி எடுக்கிற தீர்மானத்திற்கும் அதிகமாக இங்கு எதுவும் சொல்லப்படவில்லை.

மனிதனுடைய எல்லாம் இதுவே (தமிழில் எல்லா மனிதர் மேலும் இதுவே என்று குறிப்பிடப் பட்டுள்ளது) - எல்லாக் கடமையும் இதுவே என்ப தல்ல, மாறாக முழுமையும் நிறைவும் கொண்ட வாழ்க்கையை ஏற்படுத்தத் தேவையான அடிப் படை மூலக்கூறுகள் இவையே.

12:14 எதிர்காலத்தில் நிச்சயமாக நடக்கப் போகிற நியாயத்தீர்ப்பே, தேவனுக்குப் பயப்படு வதற்கும் கீழ்ப்படிவதற்குமான காரணம் ஆகும். இத்தகைய பயத்திலிருந்து இரட்சகர் நம்மை விடுவித்திருப்பதால், விசுவாசிகளாகிய நாம் நித் திய காலமெல்லாம் நன்றிக்கடனுடன் இருக்க வேண்டும்.

"அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத் தைப் புறம்பே தள்ளும்; பயமானது வேதனை யுள்ளது, பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட் டவன் அல்ல" (1 யோவான் 4:18).

நாம் தேவனை விசுவாசித்து அவருக்குக் கீழ்ப்படிவது பயத்தினால் அல்ல, மாறாக அன்பே அதற்கான காரணம். கல்வாரியில் நமது இரட்சகர் நிறைவேற்றி முடித்த மீட்பின் செயலின் மூலமாக, நாம் ஆக்கினைத் தீர்ப்புக்கு உட்படாமல், மர ணத்தை விட்டு நீங்கி நித்திய வாழ்வுக்கு உட் பட்டிருக்கிறோம் என்னும் உறுதியைப் பெற்றிருக் கிறோம். இப்பொழுது நம்மால் இவ்வாறு கூற முடியும்:

ஆக்கினைத் தீர்ப்பு இனியெனக்கு இல்லை
போக்கிடம் நரகம் அல்லவென்று அறிவேன்
வேதனைத் தீயும் அணுகுவது இல்லை
பாதகன் நானும் காண்கிலேன் அவற்றை!

கடுஞ்சொல் உரைப்பார் ஒருவரும் இல்லை
கடும்வலி தந்திடும் கொடுக்கு முறிந்தது
கருத்தரே என்னிடம் அன்பினைச் செலுத்தி
கருத்தாய்ப் புகலிடம் கொடுத்தார் செட்டையில்!

– பால் கெர்ஹர்ட்

அடிக்குறிப்புகள்

1 (Intro) L. S.Chafer, *Systematic Theology*, I:83.

2(Intro) See Gleason Archer, *A Survey of Old Testament Introduction*, pp. 478-88.

3 (Intro) Megillah 7a; *Sabbath* 30

4 (Intro) W. Graham Scroggie, *Know Your Bible,* I:143.

5 (முன்னுரை) ஆயிரமாண்டு ஆட்சிக் காலத்தில் கிறிஸ்து சமாதானத்தோடு ஆட்சி புரிவார் என்பதற்கு சாலொமோன் ''நிழலாக'' (சித்திரமாக) இருந்தான் என்று பரவலாகக் கூறப்படுகிறது.

6 (Intro) Quoted by Scroggie, *Know Your Bible,* I:144.

7 (1:3) H. L. Mencken, quoted by Bill Bright, *Revolution Now,* 1969, p.15.

8 (1:4) Will Houghton, *"By Life or by Death."*

9 (1:8) Author unknown. "Thou Alone, Lord Jesus," *in Hymns of Grace and Truth*, no.220.

10 (1:13) Malcolm Muggeridge, *Jesus Rediscovered*, p. 11

11 (1:13) எடுத்துக்காட்டாக, இந்தச் சொல் பிற அரபு எபிரெய இனத்தாரால் பயன்படுத்தப்பட்டது. மேலும் பழைய ஏற்பாட்டில் 'எலோஹிம்' என்னும் பெயர் கள்ள தேவர்களைக் குறிக்கவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆதியாகமம் 3:5 –இல் ''நீங்கள் தேவனைப் போல் இருப்பீர்கள்'' என்னும் சாத்தானின் சொற்கள் (KJV, NKJV), வேறு சில மொழி பெயர்ப்புகளில், ''நீங்கள் தேவர்களைப் போல் இருப்பீர்கள்'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. (NEB, Knox). இந்த வாதத்திற்கு ஏற்றாற்போல தமிழிலும் ''தேவர்கள்'' என்னும் சொல்லே இடம்பெற்றுள்ளது.

12 (1:15) Robert Laurin, "Ecclesiastes," in *The Wycliffe Bible Commentary,* p.587.

13 (2:1) B. E. "None but Christ Can Satisfy!" in Hymns of Truth and Praise, no.306.

14 (2:2) From *Selected Poems of Edwin Arlington Robinson*. London: The Macmillan Company, 1965, pp. 9,10.

15 (2:8) Samuel Johnson, *The History of Rasselas, The Prince of Abyssinia,* ed. J. P. Hardy.

16 (2:8) Quoted by David R. Reuben, "Why Wives Cheat on Their Husbands," in *Reader's Digest,* Aug. 1973, p. 123.

17 (2:11) Ralph Batron, quoted by Denis Alexander, *Beyond Science*, p. 123. Used by permission of Lion Publishing.

18 (2:11) E. Stanley Jones, *Growing Spiritually,* p. 4.

19 (2:16,17) *Choice Gleanings Calender.* Grand Rapids: Gospel Folio Press.

20 (2:18) C. E. Stuart, *Thoughts on Ecclesiastes,* in Assembly Writers Library, Vol. 5, p.186.

21 (2:21) Robert Jamieson, A. R. Fausset, and David Brown, *Critical and Experimental Commentary on the Old and New Testament,* III:518.

22 (2:25) Jules Abels, *The Rockefeller Billions,* p. 299.

23 (3:15) *Table Talk*, Vol. 11, No. 4, August 1987, p. 3

24 (3:21) The Same Hebrew word translated *spirit* can also mean *breath*.

25 (4:1) James Russell Lowell, "The Present Crisis," *in Complete Poetical Works*, p. 67.

26 (4:4) Cited by Henry G. Bosch, *Our Daily Bread*, 24 May 1973.

27 (4:4) Quoted by Bill Bright, *Revolution Now*, p. 37.

28 (5:15) *Choice Gleanings Calender.*

29 (6:9) H. C. Leupold, *Exposition of Ecclesiastes,* p. 141.

30 (7:20) *Ibid.*, p. 167.

31 (7:27,28) G.Campbell Morgan, *Searchlights from the Word,* p. 217.

32 (9:4) மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள நாய்கள் பெரும்பாலும் குப்பை போடும் இடங்களில் தின்று, கோபத்துடன் உறுமி, தெருக்களில் கட்டுக்கடங்காமல் ஓடித்திரியும் கீழின நாய்கள்,

மேலைநாடுகளில் அன்புடன் வளர்க்கப்படும் நாய்களைப் போன்றவை அல்ல அவை.

33 (9:9) The Gilgamesh Epic, quoted by Leupold, *Ecclesiastes,* p. 216.

34 (9:9) Denis Alexander, *Beyond Science*, pp. 132-33. Used by permission of Lion Publishing.

35 (10:9,10) Leupold, Ecclesiastes, p. 242.

36 (12:1) Thomas H. Gill, "Lord in the Fullness of My Might," in *Hymns,* no. 26.

37 (12:6) Fanny J. Crosby, "Saved by Grace," in *Hymns of Truth and Praise,* no. 621.

38 (12:8) Billy Barnes, "I Stayed Too Long at the Fair." Used by Permission.

39 (12:8) E. Stanley Jones, *Is the Kingdom of God Realism?,* Pagination unknown.

நூல்விவரத் தொகுப்பு

Delitzsch, Franz. "Ecclesiastes." In *Biblical Commentary on the Old Testament*. Vol. 18. Grand Rapids: Wm. B. Eerdmans Publishing Co., 1971.

Eaton, Michael A. *Ecclesiastes.* the Tyndale Old Testament Commentaries. Downers Grove, IL: Intervarsity Press, 1983.

Erdman, w. J. *Ecclesiastes.* Chicago: B. I. C. A. 1969.

Hengstenburg, Ernest W. *A Commenatry on Ecclesiastes.* Reprint. Minneapolis: James and Klock Christian Publishing Co., 1977.

Lange, John Peter, ed. "Ecclesiastes." In *Commentary on the Holy Scriptures*. Vol. 7. Reprint 925 Vols. in 12). Grand Rapids: Zondervan Publishing House, 1960.

Laurin, Robert. "Ecclesiastes." *In The Wycliffe Bible Commentary*. Chicago: Moody Press, 1962.

Leupold, H. C. *Exposition of Ecclesiastes*. Grand Rapids: Baker Book House, 1952.

MacDonald, William. *Chasing the Wind.* Chicago: Moody Press, 1975.

சாலொமோனின் உன்னதப்பாட்டு

முன்னுரை

எழில் மிக்க வகையில் சீயோன் மலைமேல் நிறுவப்பட்டதும், கேதுருவைக் காட்டிலும் மதிப்புமிக்க மதிற் சுவர்களையும் மேற்கூரையையும் கொண்டதும், பளிச்சிடும் தந்தத்தைக் காட்டிலும் சிறப்புமிக்க நீல நிற மணிக் கற்களால் போர்த்தப் பெற்றதும், தூய ஆவியானவரால் விண்ணகத்திலிருந்து பெறப்பட்ட சத்தியங்களால் நிறைந்த உருமாதிரியில் அமைக்கப்பட்டதும், அவ்வீட்டை உறைவிடமாகக் கொண்ட தேவன்மேல் பற்றுடையோருக்கு ஆறுதலையும் மனமகிழ்வையும் தரக்கூடியதும், பருப்பொருள் சார்ந்த உலகீய பொருட்களால் ஆனதுமான சுடரொளி பொருந்திய ஆலயத்தில் நன்கு அலங்கரிக்கப்பட்ட சிறிய தனி அறையைப் போன்று, ஆயினும் அதனினும் அதிக ஒளியூட்டும் வெளிப்பாடு என்னும் மகிமை சிறந்த ஆலயத்தில் கர்த்தராகிய நமது இறைவன் தமது திருப்பெயர் தங்குவதற்கெனத் தெரிந்தெடுத்த இடம் இந்நூலே ஆகும்.

- ஜார்ஜ் பர்ரோஸ்

1. வேத நூல் வரிசையில் தனிச்சிறப்பு மிக்க இடம்

இந்நூலின் எபிரெய மொழித் தலைப்பு "எழில் மிக்க பாடல்" என்னும் பொருள்கொண்ட மரபுச் சொல் ஆகும். அதற்கேற்ப தமிழில் "உன்னதப்பாட்டு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பண்டைய யூத விளக்கவுரை இந்நூலை, "பாடல்களில் மிகவும் புகழ்ச்சிக்குரியது, மிகவும் உன்னதமானது, மிகவும் அதிகமாக மதிக்கப்படத்தக்கது" என்று வருணிக்கிறது. குறும்பாடல் அல்லது பாசுரம் என்றும் அழைக்கப்படும் இப்பாடல், பொதுவாகத் திருமறையிலேயே புரிந்துகொள்வதற்கு மிகவும் கடினமானது என்று கருதப்படுகிறது. "பழைய ஏற்பாட்டு நூல்களிலேயே மிகவும் தெளிவற்றது இப்பாடலே ஆகும்" என்று திருவாளர் பிரான் டெலிட்ச் கூறினார்.[1] கவிதை, காதல், இயற்கை ஆகியவற்றைப் போற்றிப் பாராட்டுகிறவராக நீங்கள் இருப்பீர்கள் எனில் இதனை உங்களால் மகிழ்வுடன் அனுபவிக்க முடியும். ஆனால் இது என்ன? இதன் பொருள் என்ன?

ஒன்றோடொன்று தொடற்பற்ற காதற் கவிதைகள், ஒரு சிறிய நாடகம் அல்லது "காதல் உரையாடல்களின் ஒருங்கிணைந்த பரபரப்பான கவிதைகள்"[2] என்றெல்லாம் வேத அறிஞர் பெருமக்கள் பலவிதமாக இந்நூலை வகைப்படுத்துகிறார்கள். இடையிடையே காணப்படும் பல்லவிகள், கதையின் ஓட்டம் மற்றும் உண்மையான "நாடகம்" என்று கூறுமளவுக்கு மிகச் சுருக்கமாகத் தொகுத்துத் தரப்பட்டுள்ள உண்மை இவையாவற்றையும் ஒன்று கூட்டிப் பார்க்கும்போது, கடைசியாகக் குறிப்பிடப்பட்டுள்ள கருத்தே மிகவும் சிறந்ததாகத் தோன்றுகிறது.

எனினும் இந்நூலுக்கு எவ்வாறு பொருள்கூறி விளக்குவது? படிப்போரின் கற்பனையே காலங்காலமாக வெற்றி பெற்று வந்திருக்கிறது. யூதர்களிலும் கிறிஸ்தவர்களிலும் சிலர் பெருமளவு நாணத்துடன் இந்நூலைச் "சிற்றின்பத்திற்குரியது" என்று கூறித் தவிர்த்தனர். ஆயினும் பல்வேறு காலங்களில் வாழ்ந்த பக்தி நிறைந்த பரிசுத்தவான்கள் இந்நூலைப் படித்து மகிழ்ந்து கொண்டாடி வந்திருக்கிறார்கள்.

2. நூலாசிரியர்

சாலொமோன் இந்நூலைத் தன் இளமையிலும், நீதிமொழிகளைத் தனது மிகச் சிறந்த வாழ்நாட் காலத்திலும், பிரசங்கி நூலை இவ்வுலக வாழ்க்கையில் களைப்புற்று முதிர்வயது அடைந்த காலத்திலும் இயற்றினான் என்று யூத மரபு கூறுகிறது. இந்தக் கருத்து மிகவும் ஏற்புடையதாக விளங்குகிறது. எழுத்தாளன் திருமண உறவின் மெய்யான விசுவாசத்தைப் போற்றுகிறான், ஆகவே சாலொமோன் பல மனைவிகள் மற்றும் மறுமனையாட்டிகள் என்னும் உறவுக்குள் சிக்கிக் கொள்வதற்கு முன், தனது முதல் மனைவிக்கு இந்நூலை அர்ப்பணித்தான் என்று கருதப்பட்டு

வருகிறது. ஆயினும் இந்த விளக்கவுரை முற்றி லும் மாறுபட்ட கருத்தைக் கொண்டிருக்கிறது.



உன்னதப்பாட்டு புத்தகத்தில் இடம்பெற்றுள்ள இடங்களின் பெயர்கள்

இப்பாடலில் ஏழு வசனங்கள் சாலொமோனைப் பெயர்சொல்லி அழைக்கின்றன (1:1,5; 37,9,11; 8:11,12). இப்பாடலின் ஆசிரியர் சாலொமோன் என்பதையே முதலாவது குறிப்பு கூறுகிறது எனக் கருத இடமுண்டு ("சாலொமோனின் உன்னதப் பாட்டு" என்னும் தலைப்பு "சாலொமோனைக் குறித்த உன்னதப்பாட்டு" என்றும் மொழிபெயர்க் கப்படலாம்). சாலொமோன் இயற்கை மீது ஆர் வம் கொண்டிருந்ததை இப்பாடலில் இடம்பெற் றுள்ள மறைகுறிப்புகள் பல சுட்டிக்காட்டுகின்றன (1 இராஜா. 4:33). மேலும் அரசனின் குதிரைகள், இரதங்கள், மூடு பல்லக்கு ஆகியவை பற்றிய குறிப்புகளும் சாலொமோனே இப்பாடலின் ஆசிரி யன் என்பதை ஆதரிக்கின்றன. இந்நூலில் குறிப் பிடப்பட்டுள்ள இடங்கள் யாவும் நில அமைப் பின்படி ஒருங்கிணைந்த இஸ்ரவேல் நாட்டில் இடம்பெற்றிருந்தவை, சாலொமோனுடைய ஆட்சியின் கீழ் இது முதன்மையான உண்மை யாயிருந்தது.

இவ்வாறாக, ஆசிரியர் யார் என்பது பற்றிய பாரம்பரியக் கருத்து ஒப்புக்கொள்ளப்படுவதற்கு எல்லாக் காரணங்களும் சாதகமாக இருந்தன. எதிரான வாதங்கள் அனைத்தும் ஏற்றுக்கொள் ளத்தக்கவை அல்ல.

3. எழுதப்பட்ட காலம்

சாலொமோன் அரசன் தனது 1005 பாடல்களில் (1 இராஜா. 4:32) மிகவும் இனிய இப்பாடலை தனது நாற்பது ஆண்டுக் கால ஆட்சிக்காலத்தில் ஏதோவொரு சமயத்தில் எழுதியிருக்க வேண்டும் (கி. மு. 971-931). இதனை எழுதியபோது அவன் இளைஞனாயிருந்தான், பல பெண்களைத் திருமணம் செய்து இழிநிலையை அடைய வில்லை என்னும் கருத்து தருக்கரீதியானது, கவர்ச்சி வாய்ந்ததாகவும் இருக்கிறது.

4. நூலின் பின்னணியும் கருப்பொருளும்

கிறிஸ்து தமது சபையின்மேல் பாராட்டுகிற அன்பையே இது கூறுகிறது என்று பொதுவாகக் கிறிஸ்தவ விளக்கம் இந்நூலுக்குக் கொடுக்கப் படுகிறது. திருமறை வெளியீடுகள் பல இந்த விளக்கத்திற்கு ஏற்ப ஒவ்வொரு அதிகாரத்துக் கும் தலைப்பு கொடுத்திருக்கிறது. இந்த விளக் கத்தின்படி சாலொமோன் கிறிஸ்துவுக்கு அடை யாளமாகவும் சூலமித்தியாள் சபைக்கு அடை யாளமாகவும் இருப்பதாகக் கருதப்படுகிறது. ஆயினும் இந்த விளக்கம் முதன்மையானது அல்லவென்பதைத் திருமறையில் கவனமுள்ள மாணவன் நன்கு அறிவான், ஏனெனில் உலகம் உண்டானது முதற்கொண்டு புதிய ஏற்பாட்டு அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் ஆகியோருக்கு வெளிப்படுத்தப்பட்டது வரையிலும் சபையானது தேவனுக்குள் இரகசியமாக மறைத்து வைக்கப் பட்டிருந்தது (ரோமர் 16:25,26; எபே. 3:9). கிறிஸ்து தமது சபையின்மேல் வைத்திருக்கும் அன்பை இந்தப் பாடல் வெகு அழகிய சித்திரமாக வரைந்து தந்திருக்கிறது என்பதைக் கிறிஸ்தவர்கள் எவரும் மறுத்துரைக்க மாட்டார்கள். ஆனாலும் அது பொருள் விளக்கமில்லை, அவ்வாறு பொருத்திக் காட்டப்படக் கூடும். இந்நூலின் முதன் மையான பொருள்விளக்கம் யெகோவாவையும் இஸ்ரவேல் இனத்தையும் குறித்ததாகவே இருக்க வேண்டும்.

இரண்டாவது பொருள்விளக்கத்தின்படி இந் நூல் திருமண உறவில் விசுவாசமில்லாமல் இருப் பதை எதிர்க்கிறது. பல பெண்களைத் திருமணம் செய்திருந்த சாலொமோன் ஓர் இளம் பெண்ணா கிய சூலமித்தியாளைக் காதல் புரிந்து தன்வயப் படுத்த முயல்கிறான். ஆனால் அவளோ ஒரு மேய்ப்பனாகிய இளைஞனைத் தனது காதலனா கக் கொண்டிருக்கிறாள். அவனிடத்தில் அவள் விசுவாசத்தோடும் உண்மையோடும் இருக் கிறாள். சாலொமோனுடைய பசப்பு வார்த்தை களுக்கு அவள் இணங்கவில்லை. அவன் முகத் துதி பாடிய ஒவ்வொரு முறையும், அவள் தனது காதலனைக் குறித்தே பேசத் தொடங்குகிறாள்.

நூலின் முடிவில் அவள் தனது மேய்ப்பனாகிய காதலனுடன் ஒன்று சேர்க்கப்பட்டு, அவனுடைய அன்பில் இளைப்பாறுதலைக் கண்டடைகிறாள். சாலொமோனைப் பற்றிய பெரும்பாலான குறிப்புகளின் பின்னணி நகரத்தையும் அரண்மனையையும் பற்றியதாயிருக்கிறது, ஆனால் மேய்ப்பன் சிற்றூரைச் சேர்ந்தவன் என்பது மிகத் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது என்று இவ்விளக்கத்தை ஏற்றுக்கொள்வோர் சுட்டிக்காட்டுகிறார்கள். ஒன்றுக்கொன்று முற்றிலும் மாறுபட்ட நகர மற்றும் சிற்றூர் சூழ்நிலை, இந்தக் கதையில் இரண்டு ஆண்கள் இடம் பெற்றிருக்கிறார்கள் என்னும் கருத்தை வலுப்படுத்துகிறது. சாலொமோனைச் சாதகமற்ற நிலையில் இந்த விளக்கம் காட்டுவதால், இது பிரபலமாகவில்லை.[3] ஆயினும், அவன் பல பெண்களைத் திருமணம் செய்தவன் என்பது உண்மையே; ஆனால் தேவன் தமது மக்களுக்கு நியமித்த கோட்பாடு ஒருவனுக்கு ஒருத்தி என்பதே. இஸ்ரவேல் இனமோ யெகோவாவுக்கு உண்மையாக இருக்கவில்லை, அது மற்ற நேசர்களை நோக்கி ஓடியது என்பதில் ஐயமில்லை. இந்தப் பாடலில் உண்மையான அன்பின் அழகை அவர்கள் படிக்கிறார்கள்.

எதிர்காலத்தில் இஸ்ரவேல் இனத்தில் ஒரு கூட்ட மக்கள் விசுவாசிகளாக விளங்குவார்கள். அந்த மீதியானவர்களுக்கு மாதிரியாகச் சூலமித்தியாள் என்னும் இளம்பெண் விளங்குவதாக மூன்றாவது பொருள்விளக்கம் காண்கிறது. சாலொமோன் கர்த்தராகிய இயேசுவுக்கு அடையாளமாக இருக்கிறான். அவர்கள் தாங்கள் குத்தின வரை நோக்கிப் பார்க்கும்போது, ஒரேபேறான மகனுக்காகத் துக்கிப்பது போலத் துக்கிப்பார்கள். அப்பொழுது அவரோடு நெருக்கமான அன்பு கூர்ந்து அந்த ஐக்கியத்தில் பெருமகிழ்வு அடைவதையே இந்தப் பாடல் படவுருவில் வரைந்து தருகிறது. சாலொமோன் பல மனைவிகளுக்கு கணவனாயிருந்தான் என்னும் உண்மை, அவன் கர்த்தருக்கு அடையாளமாக விளங்குவதைத் தடை செய்யவில்லை என்று அவர்கள் கருதுகிறார்கள். நிழலாக விளங்குபவன் குறைவுடையவன், மெய்யானவரோ நிறைவானவர்.

நான்காவது கருத்து, இன்றைய நாட்களில் பெருமளவு வரவேற்கப்படுகிறது, மெய்யான அன்புக்கும், திருமண உறவில் காணப்பட வேண்டிய தூய்மைக்கும் உற்சாகமளிக்கும் நூலாக இது காணப்படுகிறது. திருமணமாகாமலே பாலுறவு கொண்டு, இவ்வுலகம் சிற்றின்பத்தின் பெயரைச் சீர்கெடச் செய்திருக்கும் இக்காலத்தில், இக்கருத்து ஒப்புக்கொள்ளப்படத்தக்கதும், ஆதியாகமம் 1:27; 2:20-24 ஆகிய திருமறைப் பகுதிகளுக்கு மிகவும் பொருத்தமானதாகவும் விளங்குகிறது.

ஒருவர் எந்தக் கருத்தைக் கொண்டிருந்தாலும், பெரும்பாலான விசுவாசத் தம்பதிகள் தங்களுடைய திருமண நாள் இரவிலே அவ்வுறவை மேன்மைப்படுத்தும் பொருட்டு உன்னதப் பாட்டைப் பயன்படுத்துகிறார்கள், அது சரியானது என்று நாம் நம்புகிறோம்.

பொருட்சுருக்கம்

1. தலைப்பு (1:1)
2. சாலொமோனின் அரண்மனையில் சூலமித்தியாள் தனது காதலனாகிய மேய்ப்பனைக் காணாமல், அவனுடைய நினைவில் மூழ்கியவளாக, அவனையும் தன்னையும் குறித்துப் பேசுகிறாள் (1:2-8)
3. கன்னிப்பெண் சூலமித்தியாளைக் கவருவதற்கு சாலொமோன் முயற்சி செய்கிறான். அவனுடைய புகழ்ச்சிப் பேச்சிற்கு அவள் செவிசாய்க்கவில்லை (1:9-2:6)
4. எருசலேம் குமாரத்திகளிடத்தில் கன்னிப்பெண்ணின் குற்றச்சாட்டு (2:7)
5. மேய்ப்பனாகிய காதலன் தன்னைச் சந்திக்க வந்ததையும், தனது சகோதரர் தடைசெய்து வேலைசெய்ய வற்புறுத்தியதையும் சூலமித்தியாள் நினைவுகூருதல் (2:8-17)
6. தனக்கு அன்பானவனை அவ்விளம்பெண் சந்திப்பதாகக் கனவு காண்கிறாள் (3:1-4)

முன்னுரை

7. எருசலேம் குமாரத்திகளுக்கு மீண்டும் கட்டளையிடுதல் (3:5)

8. சாலொமோனின் ஊர்வலம் எருசலேமைச் சென்று சேருதல் (3:6-11)

9. மீண்டுமாக அவ்விளம் பெண்ணைக் கவர்ந்திழுக்கும்படி சாலொமோன் முயற்சி செய்கிறான், ஆனால் அவனுடைய கவர்ச்சிக்கு அவள் இடம்கொடுக்கவில்லை (4:1-6)

10. எருசலேமை விடுத்து, அவர்கள் திட்டமிட்டபடி நாட்டுப்புறத்தில் இருந்த வீட்டுக்கு வரும் அவ்விளம் பெண்ணை இளம் மேய்ப்பன் அழைக்கிறான். தனது சம்மதத்தை அவள் தெரிவிக்கிறாள் (4:7-5:1)

11. தனது சோம்பலின் காரணமாக அவனைக் காணத் தவறியதாகச் சூலமித்தியாள் கனவு ஒன்றைக் கண்டாள், அதனை அவள் நினைவுகூருகிறாள் (5:2-8)

12. அரண்மனைப் பெண்டிர் வினவியபோது, தனது நேசரின் அழகை அவள் புகழ் கிறாள், அவர்களும் அவனைக் காணவேண்டு மென்று கூறுகிறாள் (5:9-6:3)

13. சாலொமோன் தனது காதல் வேண்டுதலைப் புதுப்பிக்கிறான் (6:4-10)

14. எதிர்பாராதவிதமாகத் தான் அரண்மனைக்குக் கொண்டுவரப்பட்டதை அவள் அரண்மனைப் பெண்டிருக்கு விவரிக்கிறாள் (6:11-13)

15. சாலொமோனின் கடைசி முயற்சியும் வீணாகுதல் (7:1-10)

16. அவள் தனது காதலனாகிய மேய்ப்பனோடு உரையாடுகிறாள் - அவளை அழைத்துச் செல்லும்படி அவளுடைய காதலன் வந்திருக்கிறான் (7:11-8:2)

17. எருசலேம் குமாரத்திகளுக்கு இடப்பட்ட இறுதிக் கட்டளை (8:3,4)

18. தம்பதிகள் நாட்டுப்புறத்திலிருந்து கிராமத்துக்கு வருகிறார்கள், ஒருவருக் கொருவர் வாக்குக் கொடுக்கிறார்கள், என்றும் மகிழ்வுடன் வாழ்கிறார்கள் (8:5-14)

பொருட்சுருக்க அட்டவணை

தலைப்பு	மெய்யான காதல்				
கருத்து	திருமண உறவின் தூய்மை				
பகுப்பு	காதலின் மேன்மை	காதலின் இடையூறுகள்	காதலின் மேன்மை	காதலின் இடையூறுகள்	காதலின் நிறைவு
வசனம்	1:1-2:17	3:1-4:6	4:7-6:3	6:4-7:10	7:11-8:14
இடம்	இஸ்ரவேல்				
காலம்	ஓராண்டுக் காலம்				

விளக்கவுரை

1. தலைப்பு [1:1]

"சாலொமோனின் உன்னதப்பாட்டு," சாலொமோனுடைய பாட்டு என்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது; அது சாலொமோனைப் பற்றியது என்றும் பொருள்படும்.

2. சாலொமோனின் அரண்மனையில் சூலமித்தியாள் தனது காதலனாகிய மேய்ப்பனைக் காணாமல், அவனுடைய நினைவில் மூழ்கியவளாக, அவனையும் தன்னையும் குறித்துப் பேசுகிறாள் [1:2-8]

1:2-4 தனது காதலனாகிய மேய்ப்பனின் **முத்தங்களுக்காக** ஏங்கிய சூலமித்தியாள், அவன் அங்கு இருப்பதாகக் கற்பனை செய்கிறாள்; அவனுடைய **நேசம் திராட்சைப் பிழிவைப் பார்க்கிலும் இன்பமானது** என்று அவள் அவனிடம் கூறுகிறாள். அவனுடைய நற்குணங்களைப் **பரிமளத்** தைலத்திற்கு ஒப்பிட்டவள், மற்ற கன்னியர் அவனை நேசிப்பதற்கு அதுவே காரணம் என்று கருதுகிறாள். அவன் அங்கு வரவேண்டும், அவளைத் தன்னுடையவளாக்கிக்கொள்ள வேண்டும் என்று அவள் ஏங்குகிறாள். எருசலேம் குமாரத்திகள் பின்தொடர முயற்சி செய்தாலும் அதில் பயனில்லை. ஆனால் அரசன் சாலொமோன் சூலமித்தியாளைத் தனது **அறைகளுக்கு அழைத்து வந்தான்**. தனது அந்தப்புரத்தில் அவளைச் சேர்க்க வேண்டும் என்பதே அவனுடைய எண்ணமாயிருந்தது என்று தோன்றுகிறது, ஆனால் அது அவளுடைய விருப்பத்திற்கு முற்றிலும் முரண்பட்டதாயிருந்தது. அவள் தனது காதலனைக் குறித்துக் கொண்டிருந்த உணர்வுகளை எருசலேம் குமாரத்திகள் தங்களுடைய உணர்வுகள் போல ஏற்றுக்கொண்டபோது, அவனைக் குறித்து அவர்கள் கூறிய பாராட்டுகள் சரியானவை என்று அவள் ஒப்புக்கொண்டாள்.

1:5,6 அரண்மனைப் பெண்கள் சிவந்த மேனியோடிருந்தார்கள். ஆனால் நாட்டுப்புறப் பெண் சூலமித்தியாள் நீண்ட காலமாகத் **திராட்சைத் தோட்டத்தை காவல் காத்து** வந்ததால் **வெயிலின்** காரணமாகக் கறுப்பாயிருந்தாள். ஆனாலும்[4] அவள் **அழகாயிருந்தாள்.**

1:7,8 அவளுடைய நினைவுகள் காதலனைப் பற்றியே இருந்தன. அவன் மந்தையை எங்கே மேய்ப்பான், பகல் பொழுதில் எங்கே இளைப்பாறுவான் என்று அவள் சிந்தித்துக்கொண்டிருந்தாள். பிறருடைய முன்னிலையில் அவள் ஏன் தன்னை மறைத்துக்கொள்ள வேண்டும், ஏன் அவனோடு சேர்ந்து இருக்கக்கூடாது என்றெல்லாம் அவள் எண்ணினாள். அவர்கள் யாவரும் அவளைப் பொறுத்தவரை மதிக்கத் தக்கவர்கள் இல்லை.

மந்தையின் காலடியைப் பின்தொடர்ந்து சென்று அவனை அவள் கண்டுபிடிக்கலாமே என்று எருசலேம் குமாரத்திகள்[5] ஏளனமாக ஆலோசனை கூறினார்கள்.

3.கன்னிப்பெண் சூலமித்தியாளைக் கவருவதற்கு சாலொமோன் முயற்சி செய்கிறான். அவனுடைய புகழ்ச்சிப் பேச்சிற்கு அவள் செவிசாய்க்கவில்லை [1:9-2:6]

1:9,10 சாலொமோன் இப்பொழுது சூலமித்தியாளோடு இனிய சொற்களால் பேசுகிறான். அவளுடைய தோற்றம் **பார்வோனின் ரதங்களில் பூட்டப்பட்டிருக்கும்** துடுக்கான பெண் குதிரையின் அணிகலன்களை அவனுக்கு நினைவுபடுத்துகிறது. அவளுடைய கன்னங்களில் விலையுயர்ந்த **ஆபரணங்களும்**, அவளுடைய **கழுத்தில்** பொன் **ஆரமும்** அணிந்தவளாக அவள் அவனுக்குக் காட்சி தருகிறாள்.

1:11 "பண்ணுவோம்"[6] என்னும் பன்மைச் சொல் சாலொமோனைக் குறிப்பதாகக் கருதப்பட்டு இங்கு விளக்கம் தரப்பட்டுள்ளது. **வெள்ளிப் பொட்டுகள்** பதிக்கப்பட்ட **பொன் ஆபரணங்களால்** அவளுக்கு அழகுகூட்டுவதாக அவன் வாக்குரைக்கிறான்.

1:12-14 அரசனின் புகழ்ச்சிச் சொற்களையும், வசப்படுத்தும் வாக்குறுதிகளையும் அவள் பொருட்படுத்தவில்லை. அவள் தனது காதலனையே நினைத்துக்கொண்டிருந்தாள். **அரசன் தனது பந்தியில் அமர்ந்திருக்கிறான்**. அவளோ தான் செய்த நளதைலத்தை ஒரு சிறு துருத்தியில் வைத்திருந்தாள். அது **வெள்ளைப் போளத்தால்** செய்யப்பட்டிருந்தது. அதனை அவள் தனது மேய்ப்பனின் நினைவாகத் தனது உடலோடு சேர்த்து வைத்திருக்கிறாள். **எங்கேதி ஊர் திராட்சைத் தோட்டங்களில் முளைக்கும் மருதோன்றிப் பூங்கொத்து** வாசனைக்கு ஒப்பாக அவன் இருக்கிறான்.

1:15 சாலொமோன் மீண்டும் அவளைக் கவருவதற்கு முற்படுகிறான், இந்த முறை அவன் அவளுடைய அழகைப் புகழுகிறான், அவளுடைய **கண்கள்** புறாவின் கண்களுக்கு ஒப்பாக இருக்கின்றன என்று கூறுகிறான்.

1:16,17 ஆனால் சூலமித்தியாள் தனது உரையாடலைத் தனது மனத்திற்குள்ளாகத் தொடங்குகிறாள், தன் காதலன் ஓர் ஆணழகன் என்று அவள் வருணிக்கிறாள். அவர்களுடைய வீடு மிகப்பெரிதான வெளியிடம் என்றும், அவர்களுடைய படுக்கை புல்வெளி என்றும், அவர்களுடைய வீட்டின் கூரை படர்ந்தகன்ற கேதுரு, தேவதாரு மரங்களின் கிளைகள் என்றும் அவள் படவுருவாக வரைந்து காட்டுகிறாள். அவர்களுடைய காதற்கூடம் அரண்மனை அல்ல, மாறாக விரிந்து கிடக்கும் மேய்ச்சல் நிலமே ஆகும்.

2:1 அவ்விளம் பெண் தனது ஒளிவுமறைவு அற்ற தன்மையையும், தகுதியற்ற நிலையையும் மறுப்புரையாகத் தெரியப்படுத்துகிறாள். அவன் தன்னை **சாரோனின் ரோஜாவுக்கும், பள்ளத்தாக்குகளின் லீலி** மலருக்கும் ஒப்பிடுகையில்[7] பயிரிடப்பட்டு வளர்க்கப்படுகிற மலர்களை, அதாவது நாம் காண்கிற ரோஜாவையும் லீலிமலர்களையும் அவள் நினைத்துப் பார்க்கவில்லை. மாறாக, சாதாரணமான விண்மீன் வடிவில் அமைந்திருக்கும் சிறிய சிவப்புநிறக் காட்டு மலரையும், மஞ்சள்[8] நிற மலரையுமே நினைத்தாள் என்றே தோன்றுகிறது.

2:2 அவளுடைய மறுப்புரையை, அதாவது தான் ஓர் எளிமையான பெண் என்று கூறியதை சாலொமோன் கேட்டிருக்க வேண்டும், அதன் காரணமாகவே அவள் தனக்கு மிகவும் சிறப்பானவள் என்று அவன் அவளிடம் கூறுகிறான். மற்ற கன்னியரோடு ஒப்பிடுகையில் **முள்ளுகளுக்குள்ளே லீலி** மலர்போல அவள் இருக்கிறாள்.

2:3 மறுபடியும் தனது எண்ண ஓட்டத்தை நாட்டுப்புறக் காட்சியினிடமாகத் திருப்பியவள், **காட்டு மரங்களுக்குள்ளே**, பயிரிடப்பட்டு வளர்க்கப்பட்ட **கிச்சிலி மரத்துக்கு** ஒப்பாகத் தனக்கு அன்பானவனைக் காண்கிறாள். அவனுடன் இருக்கிற தருணங்கள் எப்போதும் மனமகிழ்ச்சி தருபவை, அவனுடன் கொண்டிருக்கும் தோழமை மிகவும் இனிமையானது.

2:4-6 அவனுடன் இருக்கும் நேரம் **விருந்து சாலையில்** செலவிடுகிற நேரத்துக்கு ஒப்பானது; அவனுடைய **நேசக்கொடி** எப்போதும் அவள் மேல் போர்த்தப்பட்டிருக்கிறது. அவனைக் குறித்த நினைவுகளால் தன்னையிழந்த சூலமித்தியாள், உலர்ந்த **திராட்சைப் பழங்களாலும், கிச்சிலிப் பழங்களாலும்** தான் தேற்றப்பட வேண்டுமென்று வேண்டுகிறாள். உண்மையில் அவன் அவளோடு இருப்பது போலவும், அவளை அணைத்துக் கொண்டிருப்பது போலவும் அவளுடைய நினைவு இருக்கிறது.

4. எருசலேம் குமாரத்திகளிடத்தில் கன்னிப்பெண்ணின் குற்றச்சாட்டு (2:7)

எருசலேம் குமாரத்திகளிடமாகத்[9] திரும்பிய சூலமித்தியாள் இந்நூலின் முக்கியமான செய்தியைத் தெரிவிக்கிறாள். நேசத்தை வெளிப்படுத்துவதற்கான ஒரு நேரமுண்டு. சிற்றின்பத்தை உலகீய முறைகளில் எழுப்பிவிட முடியாது (அரசன் அவ்விதமாகச் செய்ய முயற்சி செய்தான்). நேசத்திற்கான மனவிருப்பம் உண்டாகுமட்டும் அதனை எழுப்பவோ, விழிக்கப்பண்ணவோ முடியாது என்று அவள் அழகிய வெளிமான்கள் மேல் ஆணையிட்டுக் கூறுகிறாள். "நேசத்தை விலைக்கு வாங்க முடியாது. அது தானாகத் தடையின்றியும், மனமார்ந்த வகையிலும் உண்டாக வேண்டும்" என்றும் இதனைக் கூறலாம்.[10] இஸ்ரவேல் இந்த எளிமையான விதியைப் பின்பற்றியிருந்தால், யெகோவாவுக்கு அவ்வினம் உண்மையற்ற முறையில் நடந்திருக்காது.

5. மேய்ப்பனாகிய காதலன் தன்னைச் சந்திக்க வந்ததையும், தனது சகோதரர் தடைசெய்து வேலைசெய்ய வற்புறுத்தியதையும் சூலமித்தியாள் நினைவுகூருதல் (2:8-17)

2:8-14 அவ்விளம்பெண் தன்னைக் காணும்படி ஒருமுறை தனக்கு அன்பானவன் வந்த நிகழ்வொன்றை இப்பொழுது நினைவுகூருகிறாள். அவன் அவளிடம் விரைவாக வந்து சேரவேண்டும் என்பதற்காக **மலைகள் மேல் குதித்தும் குன்றுகள்மேல் துள்ளியும் வந்தான்**. அவன் **வெளிமான்** அல்லது **மரைக்குட்டிக்கு** உரிய எல்லாப் பண்புகளையும் கொண்டிருந்தான். சடிதியில் அவன் **மதிலுக்குப் புறம்பே** நின்றுகொண்டு **பல கணி வழியாகப் பார்த்து, கிராதியின் வழியாக நோக்கினான்**. அவள் அவனுடைய தொனியைக் கேட்டாள், அவன் அவளைத் தன்னுடன் வரும்படி அழைத்தான்; மாரிக் காலத்தின் இரவு நேர இருள் சென்று விட்டது, மழையும் ஓய்ந்துவிட்டது. வசந்த காலத்தின் அடையாளங்கள் யாவும் காட்சியளிக்கத் தொடங்கிவிட்டன - **மலர்கள், குருவிகள், காட்டுப்புறாக்கள்,** பச்சை நிறக் **காய்களுடன் அத்திமரம்**, பிஞ்சுகள் தோன்றிய **திராட்சைக் கொடிகள். "எழுந்து வா"** என்று அவன் தீவிரப்படுத்தினான். அப்பொழுது அவள் சற்றுத் தாமதித்

தாள் போலும், ஏனெனில் பின்னர் அவன் அவளைப் பலகணி அருகே அழைக்கிறான். அவன் அவளுடைய முகத்தைக் காணவேண்டும், அவளுடைய **சத்தத்தைக்** கேட்க வேண்டும். அது வரைக்கும் அவள் கன்மலையின் வெடிப்புகளில், அல்லது பாறையின் பின்னே மறைந்திருந்த ஒரு புறாவைப் போலத் தன்னை மறைத்துக் கொண்டிருந்தாள்.

2:15 அங்கிருந்து அவள் செல்லுவதென்பது இனி இயலாத செயல், ஏனெனில் அவளுடைய சகோதரர்கள் அங்கு வந்து அவளையும் உடன் வேலை செய்பவர்களையும்,[11] திராட்சைத் தோட்டங்களுக்குச் செல்லும்படி கடிந்து கொண்டார்கள். **பூவும் பிஞ்சுமாகத்**[12] திராட்சைக் கொடிகள் இருக்கும் முக்கியமான தருணமாக அது இருந்ததால் அவற்றைக் **குழிநரிகளும் சிறுநரிகளும்** கெடுத்துவிடாத வண்ணம் அவற்றைப் பிடிக்கும்படியும் அவர்கள் கட்டளையிட்டார்கள்.

2:16,17 இது அவளுக்கு ஏற்பட்ட பெருத்த ஏமாற்றம். ஆனாலும் அவளும் அவளுடைய காதலனும் ஒருவருக்கொருவர் சொந்தமானவர்கள் என்னும் உண்மையால் ஆறுதல் பெற்றாள். ஆகவே அவள் இவ்விதமான பொருள்படும்படி அவனிடம் கூறினாள், "மாலைப் பொழுதின் குளிர்ச்சியான நேரத்தில் திரும்பி வாருங்கள், அப்பொழுது நிழல் சாய்ந்து போயிருக்கும். குன்றும் **பிளப்புமான கன்மலையின்**மேல் **குதித்து வரும்** இளம் **மரைக்கு** ஒப்பான வேகத்தில் திரும்பி வாருங்கள்" (பிளப்பு, நம்மைப் பிரித்திருக்கும் மலை என்றும் பொருள்படும்).

6.தனக்கு அன்பானவனை அவ்விளம்பெண் சந்திப்பதாகக் கனவு காண்கிறாள் [3:1-4]

இப்பொழுதோ, அவள் தனக்கு அன்பான வனைச் சந்தித்ததாகக் கண்ட கனவைக் குறித்து நினைவுகூர்ந்தவளாக விவரிக்கிறாள். ஓர் **இரவில்** அவள் அவனைத் தேடியும், அவளால் **கண்டுபிடிக்க** முடியவில்லை. உடனே அவள் நகரத்திற்குச் சென்று அங்கு **வீதிகளிலும், தெருக்களின்** சந்திப்புகளிலும் தேடினாள்; அவனைக் குறித்துக் **காவலாளர்களிடம்** வினவினாள். சிறிது நேரத்திற்குள்ளாக அவள் அவனைக் கண்டுபிடித்துவிட்டாள், அவனைப் **பற்றிக் கொண்டவளாகத்** தனது குடும்பத்தாரின் வீட்டுக்கு அழைத்துச் சென்றாள்.

7. எருசலேம் குமாரத்திகளுக்கு மீண்டும் கட்டளையிடுதல் [3:5]

இன்பத்திற்கான **மனவிருப்பம்** உண்டாகும் மட்டும் அதை எழுப்பிவிடக்கூடாது என்று அவள் மறுபடியும் எருசலேம் குமாரத்திகளுக்கு **ஆணையிடும்படி** அவள் நீண்ட நேரமாக இடைமறித்துப் பேசுகிறாள்.

8.சாலொமோனின் ஊர்வலம் எருசலேமைச் சென்று சேருதல் [3:6-11]

காட்சி மாறுகிறது. சாலொமோனின் வண்ணமிகு ஆரவாரமான ஊர்வலம் இப்பொழுது எருசலேமை வந்தடைகிறதை நாம் கவனிக்கிறோம். "இத்தகைய மாட்சிமிகு அரசனின் காதற்பேச்சை யாரால் தட்டிக் கழிக்க முடியும்?" என்பதே இங்கு குறிப்பாய் எழும் கேள்வி. அதற்குக் குறிப்பாய்க் கொடுக்கப்பட்டிருக்கும் விடை, "சூலமித்தியாளால் முடியும்" என்பதே ஆகும். அவள் தன்னுடைய மெய்யான காதலனுக்கு உண்மையோடு இருக்கிறாள், மற்ற பேச்சுகளுக்கு அவள் செவிமடுக்கிறதில்லை.

அரசனின் வருகையைக் காணும்படி ஊர் வலத்தின் வழிநெடுகிலும் பார்வையாளர்கள் பயபக்தி மேலிட நிற்கிறார்கள். **வெள்ளைப் போளம், சாம்பிராணி** ஆகியவற்றின் வாசனை தூபஸ்தம்பமாக எழுகிறது. ஆயுதங்கள் ஏந்தி அறுபது போர்வீரர்களின் பாதுகாப்போடு சாலொமோனின் மஞ்சம் அல்லது பல்லக்கு இருப்பதை அவர்கள் காண்கிறார்கள். உட்புறத்தில் கம்பீரமான வெள்ளித்தூண்கள் பொன்னால் தாங்கப்பட்ட வண்ணம் இருக்கின்றன. அதன் ஆசனம் இரத்தாம்பரம் போர்த்தப்பட்ட மெத்தையாயிருக்கிறது, எருசலேம் குமாரத்திகள் நேசத்தோடு சமுக்காளத்தைப் பின்னி விரித்திருக்கிறார்கள். சீயோன் குடிமக்கள் அரசனாகிய சாலொமோனை வாழ்த்தும்படி அழைக்கப்படுகிறார்கள்; அவனுடைய திருமண நாளுக்கென்று அவனுடைய தாயார் அளித்த முடியை அவன் அணிந்திருக்கிறான்.

9. மீண்டுமாக அவ்விளம் பெண்ணைக் கவர்ந்திழுக்கும்படி சாலொமோன் முயற்சி செய்கிறான், ஆனால் அவனுடைய கவர்ச்சிக்கு அவள் இடம்கொடுக்கவில்லை [4:1-6]

4:1-5 உன்னதப்பாட்டைக் குறித்து வெவ்வேறு மூன்று கருத்துகளைக் கொண்ட மக்களிடையே, இந்தத் திருமறைப் பகுதி சாலொமோனால் பேசப்பட்டதா அல்லது மேய்ப்பனால் பேசப்பட்டதா என்பது குறித்துக் கருத்து வேறுபாடு நிலவுகிறது. பல திருமணங்களைச் செய்த சாலொமோன் எருசலே

முக்குத் திரும்பி வந்தவுடன் மீண்டும் ஒருமுறை சூலமித்தியாளை உளங்கவர முயற்சி செய்கிறான் என்று இப்பகுதி கூறுவதாகவே நாம் கருதுகிறோம்.

அவளுடைய அழகைக் குறித்து அவன் விரிவாகக் கூறத் தொடங்குகிறான். அவளுடைய கண்கள் முக்காட்டின் வழியாகக் காண்கின்றன; அவை புறாக்களின் கண்களை அவனுக்கு நினைவூட்டுகின்றன. சிறு அலைகள் போன்று பிரகாசமான அவளுடைய **கூந்தல்**, சூரியஒளியில் **கீலேயாத் மலையின்** ஒரு பக்கத்தில் கூட்டமாக நடந்து செல்லும் **வெள்ளாட்டு மந்தையை** நினைவுபடுத்துகிறது. அவளுடைய பளிச்சிடும் வெண்பற்கள் புதிதாக ரோமம் கத்தரிக்கப்பட்டு, குளிப்பாட்டப்பட்டு புத்துணர்வு பெற்ற ஆட்டுக்குட்டிகளை அவனுக்கு நினைவுபடுத்துகின்றன. அந்தப் பற்கள் இரட்டைக் குட்டிகள் போல இருக்கின்றன, அதாவது ஒவ்வொரு மேற்பல்லுக்கும் இணையாக ஒவ்வொரு கீழ்ப்பல்லும் இருக்கிறது. ஒன்றும் காணாமல் போகவில்லை. அவளுடைய **உதடுகள் சிவப்பு நூலுக்குச் சமானமாயிருக்கின்றன**. அவளுடைய **வாய்** நேர்கோட்டில் சீராக அமைந்திருக்கிறது. முக்காட்டின் மறைவில் இருந்த அவளுடைய **கன்னங்கள் வெடித்த மாதளம்பழம்** போல் அமைந்திருக்கின்றன. அவளுடைய **கழுத்து தாவீதின் கோபுரம் போன்று** வலிமையையும் புகழையும் குறித்துப் பேசுகிறது. அவளுடைய இரண்டு மார்பகங்களும் **வெளிமானின் இரட்டைக் குட்டிகளைப்** போல நேர்த்தியாகவும் மென்மையாகவும் இருக்கின்றன.

4:6 சாலொமோனுடைய பேச்சைச் சூலமித்தியாள் இடைமறித்து[13] அவனுடைய முகத்துதியால் தான் உள்ளங் கவரப்படவில்லை என்பதை அவன் அறியும்படி செய்கிறாள். அவள் தன்னுடைய காதலனுடன் ஒன்று சேர விரும்புவதை எதிர்நோக்குகிறாள். **பகல் குளிர்ச்சியாக, நிழல்கள்** மறையும்போது அவள் **வெள்ளைப்போள மலைக்கும் சாம்பிராணி மலைக்கும்** செல்வாள், அதாவது அவளுடைய மேய்ப்பனாகிய காதலனிடம் போவாள்.

10. எருசலேமை விடுத்து, அவர்கள் திட்டமிட்டபடி நாட்டுப்புறத்தில் இருந்த வீட்டுக்கு வரும் அவ்விளம் பெண்ணை இளம் மேய்ப்பன் அழைக்கிறான். தனது சம்மதத்தை அவள் தெரிவிக்கிறாள் [4:7-5:1]

4:7-15 இப்பொழுது மேய்ப்பன் காட்சி தருகிறான்.[14] **லீபனோனிலிருந்து** தன்னோடு வரும்படி தன் மணவாட்டியை அவன் அழைக்கிறான். அதே நேரத்தில் அவன் அவளுடைய அழகைப் புகழுகிறான். அவனுடைய சொற்கள் அவளுடைய **நேசத்தையும், உதடுகளையும்,** அவளுடைய ஆடைகளின் நறுமணத்தையும் பற்றிய தாயிருக்கின்றன. அவளுடைய நடத்தையையும் கற்பையும் குறிப்பிட்டுப் பேசப்பட்ட சொற்களே அவை. நன்கு நீர்பாய்ச்சப்பட்டு சிறப்பான கனிகளைத் தரக்கூடியதும், **தூபவர்க்கத்தையும், கந்தவர்க்கத்தையும்** வீசக்கூடியதுமான **தோட்டத்துக்கு** அவள் ஒப்பாயிருக்கிறாள்.

4:16 அவனைத் தோட்டத்துக்கு வரும்படியும், தன்னுடையது என்று அதை உரிமை கோரும்படியும் அவள் அவனிடம் கவிதை நடையில் கூறுகிறாள்.

5:1 முந்தின அதிகாரத்தின் 16 -ஆவது வசனத்தில் சூலமித்தியாள் விடுத்த அழைப்புக்கு இப்பொழுது மேய்ப்பன் பதிலுரைக்கிறான். தன்னுடைய வாசனைப் பொருட்களைத் தோட்டத்துக்கு வந்து சேர்க்கப் போவதாகவும், தேன்கூட்டை உண்ணப் போவதாகவும், திராட்சை ரசத்தையும் பாலையும் குடிக்கப் போவதாகவும் அவன் கூறுகிறான்.

இந்த வசனத்தின் பிற்பகுதி, ஆர்வம் கொண்ட பார்வையாளர்கள் காதலர் இருவரையும் உற்சாகப்படுத்தும்படி பேசிய சொற்களைக் கொண்டதாகத் தோன்றுகிறது.[15]

11. தனது சோம்பலின் காரணமாக அவனைக் காணத் தவறியதாகச் சூலமித்தியாள் கனவு ஒன்றைக் கண்டாள், அதனை அவள் நினைவுகூருகிறாள் [5:2-8]

5:2-7 இளம் பெண் தான் கண்ட கனவை விவரிக்கிறாள். அந்தக் கனவில் அவன் கதவைத் தட்டும் சத்தத்தையும், கதவைத் திறக்கும்படி அவன் அவளை அழைத்த சத்தத்தையும் கேட்டாள். மாலையில் பெய்த பனியில் அவன் நனைந்து போயிருந்தான். அவள் ஏற்கனவே குளித்து, படுக்கைக்குச் சென்றுவிட்டதால் அவனுக்குக் கதவைத் திறக்கத் தயங்கினாள், அதை அறிந்தவன் தனது கையைக் கதவிலிருந்து எடுத்து, அங்கிருந்து போய்விட்டான். கடைசியில், அவள் எழுந்து கதவருகே சென்றாள். **பூட்டின கதவின் கைப்பிடியில்** அவன் விட்டுச்சென்ற **வெள்ளைப்போள** நறுமணம் அவளுடைய

கைகளில் ஒட்டிக்கொண்டு மணம் வீசியது. ஆனால் அவனோ போய்விட்டான். அவள் அவனைத் தேடினாள், உரக்கக் கூப்பிட்டாள், ஆனாலும் அவனைக் காணமுடியவில்லை. நகரத்தின் காவலாளிகள் அவளுடைய நடத்தையைச் சந்தேகித்தார்கள், அவளை **அடித்து அவளது போர்வையை எடுத்துக்கொண்டார்கள்.**

5:8 எருசலேம் குமாரத்திகள் அவனை எவ்வாறேனும் காண்பார்கள் என்றால், அவள் அவனிடத்தில் எப்பொழுதும் போல இன்னும் அன்புகூருவதாகக் கூறும்படி அவள் வருத்தத் தோடு கட்டளையிடுகிறாள்.

12. அரண்மனைப் பெண்டிர் வினவியபோது, தனது நேசரின் அழகை அவள் புகழ்கிறாள், அவர்களும் அவனைக் காணவேண்டுமென்று கூறுகிறாள் (5:9-6:3)

5:9 ஒரு மேய்ப்பனைக் குறித்து அவள் தொடர்ந்து ஆர்வம் மேலிடப் பேசியதைக் கேட்ட எருசலேம் குமாரத்திகளுக்கு அவனைக் குறித்த ஆவல் உண்டாகிறது. ஏதோ ஒரு நாட்டுப்புற இளைஞனுக்காக, சாலொமோனுடைய காதலை ஏற்காமல் ஒரு பெண் இருப்பாளா என்பதை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆகவே அவனிடத்தில் என்ன சிறப்பு இருக்கிறது என்று அவர்கள் வினவுகிறார்கள்.

5:10-16 அவர்களுடைய கேள்வி, "பதினாயிரம் பேர்களில் சிறந்தவர்" என்று அவள் அவனை வருணித்து, அவனுடைய உடலின் கவர்ச்சியைப் புகழ்ந்து பேசுவதற்கான வாய்ப்பைத் தருகிறது. செறிவுமிக்க செய்யுள் உருவங்களாலும் உவமைகளாலும், அவனுடைய மேனியின் வண்ணம், **தலை, முடி, கண்கள், கன்னங்கள், உதடுகள், கரங்கள், அங்கம், கால்கள், ரூபம், வாய்** ஆகியவற்றைக் குறித்துப் புகழாரம் சூட்டுகிறாள். அவளுடைய நேசர் முற்றிலும் அழகானவன்.[16]

6:1 இவ்வளவையும் கேட்பதற்குள், மிகச் சிறந்த ஆணழகனைக் காண்பதற்கு **எருசலேம் குமாரத்திகளுக்கு** உண்மையாகவே விருப்பம் உண்டாகிறது. அவளோடு சேர்ந்து தேடவேண்டும் என்னும் விருப்பத்தோடு, "எங்கே தேடுவது?" என்று அவர்கள் வினவுகிறார்கள்.[17]

6:2,3 வேண்டுமென்றே அவ்விளம் பெண் தெளிவற்றபடியும் தட்டிக்கழிக்கும் வகையிலும் "எனது நேசர் தனது தோட்டத்துக்குப் போனார்" என்று பதிலுரைக்கிறாள். அவள் ஏன் அவர்களிடம் கூறவேண்டும்? அவள் அவனுக்குரியவள், அவன் அவளுடையவன்; எவ்வித மாற்றமுமின்றி அவள் அந்நிலையில் தொடர்ந்து இருக்க வேண்டுமென்று எண்ணுகிறாள்!

13. சாலொமோன் தனது காதல் வேண்டுதலைப் புதுப்பிக்கிறான் (6:4-10)

மீண்டுமாக சாலொமோன் தோன்றி அவளைக் கவர்ந்திழுக்க முயற்சி செய்கிறான். மத்திய கிழக்கு நாடுகளில் வழங்கி வந்த உவமையைக் கொண்டு அவளுடைய முக அழகை வருணிக்கிறான். 4:1-3-இல் சொன்ன சொற்களையே அவன் மீண்டும் இங்கு சொல்கிறான். அவனுடைய உள்ளத்தில் அறுபது அரசிகளையும் மறுமனையாட்டிகளையும் எண்ணிலடங்கா கன்னிப்பெண்களையும்விட அவள் மேலானவளாகக் கருதப்படுகிறாள். அவள் அவளுடைய தாயின் தனிச்சலுகை பெற்றவள் மட்டுமின்றி, அரசிகள், மறுமனையாட்டிகள், கன்னிப் பெண்கள் எல்லோராலும் புகழப்படுகிறாள். **"சந்திரனைப்போல் அழகும், சூரியனைப்போல் பிரகாசமும், கொடிகள் பறக்கும் படையைப் போல் கெடியுமுள்ளவளாய், அருணோதயம் போல் உதிக்கிற இவள் யார்?"** என்று அவர்கள் வாழ்த்துகிறார்கள்.

14. எதிர்பாராத விதமாகத் தான் அரண்மனைக்குக் கொண்டுவரப்பட்டதை அவள்அரண்மனைப் பெண்டிருக்கு விவரிக்கிறாள் (6:11-13)

6:11,12 சாலொமோன் தன் காதலைச் சூலமித்தியாளிடம் கூறி அவளைத் திருமணம் செய்வதற்கான விருப்பத்தைத் தெரிவித்தபோது, அவள் தெளிவற்ற விளக்கத்தைக் கூறி, பேச்சைத் திசை திருப்புகிறாள். அவள் தனது தோட்டத்தில் கனிகளையும் வாதுமைக் கொட்டைகளையும் சரி பார்த்துக் கொண்டிருந்தபோது அரசனின் ரதம் அங்கு வந்தது. அரசன் அவளை எருசலேமில் இருந்த தனது மாளிகைக்கு அழைத்துச் சென்றது குறித்து அவள் திட்டமிடவுமில்லை, அது அவளுடைய விருப்பத்தின்படி நடந்த நிகழ்வுமல்ல.

6:13 அவள் அங்கிருந்து புறப்பட ஆயத்தமான போது எருசலேம் குமாரத்திகள் அல்லது அவனுடைய நண்பர்கள் அவளுடைய அழகை மீண்டும் பார்ப்பதற்காகத் திரும்பிவரும்படி அழைக்கிறார்கள். அவளைப் போன்ற சாதாரணப் பெண்ணை அவர்கள் ஏன் காண விரும்புகிறார்கள் என்று அவள் வினவுகிறாள். இந்த வசனத்தின் கடைசி வரியின் பொருளை அறிவது கடினம். **இரண்டு சேனைகள்** (எபிரெயம் - மக்னாயீம்) என்று

சூலமித்தியாள் குறிப்பிடுவது இரண்டு நடனக் குழுக்களைக் குறிப்பதாகத் தோன்றுகிறது. அவர்கள் ஒருவரோடொருவர் முன்னும் பின்னும் சென்று ஆடுகிறார்கள்.

15. சாலொமோனின் கடைசி முயற்சியும் வீணாகுதல் [7:1-10]

7:1-9 சூலமித்தியாளின் உடல் அழகை, சாலொமோன் தனது அரசின் விரிந்த நிலப்பகுதியில் இருந்த புகழ்பெற்ற இடங்களோடு ஒப்பிட்டு முழு உருவத்தையும் வருணித்துப் போற்றுகிறான்- **எஸ்போன், பத்ரபீம், தமஸ்கு, கர்மேல் மலை.** பின்னர் அவன் அவளைக் கவர்ச்சிமிக்க **பனை** மரமாகக் காண்கிறான், அவன் அவளைத் தழுவ நினைக்கிறான். அவ்வாறு அவன் செய்கிறபோது அவளுடைய மார்பகங்கள் பழக் **குலைகள்** போலவும், அவளுடைய மூச்சு **கிச்சிலிப் பழ** வாசனையோடும், அவளுடைய முத்தங்கள் **நல்ல திராட்சை ரசத்தைப்** போலவும் இருக்கும்-

7:9,10 அவனுடைய சொற்களை முடிப்பதற்கு அவள் அனுமதிக்காமல், அந்தத் திராட்சைரசம் தன்னுடைய நேசருக்கு என்றும் அவனுக்கு அல்ல என்றும் கூறுகிறாள். அவள் தனது காதலனுக்குச் சொந்தமானவள், அரசனுக்கு அல்ல. அவ்வாறு அவள் கூறுகையில், மேய்ப்பன் தன்னைக் காண வாஞ்சையுடன் தேடிக்கொண்டிருப்பான் என்பதை அறிந்திருக்கிறாள்.

16. அவள் தனது காதலனாகிய மேய்ப்பனோடு உரையாடுகிறாள் - அவளை அழைத்துச் செல்லும்படி அவளுடைய காதலன் வந்திருக்கிறான் [7:11-8:2]

7:11-13 இப்பொழுது மேய்ப்பன் எருசலேமுக்கு வந்துவிட்டான். அவனோடு **வயல்வெளிக்கும் கிராமங்களுக்கும்** செல்வதற்கான விடுதலையைப் பெற்றிருக்கிறாள். அவள் அவனோடு வயல்வெளியில் நடந்து சென்று, பகற்பொழுதில் திராட்சைத் தோட்டத்தை அடைந்து திராட்சைச் செடிகளையும் மாதுளைச் செடிகளையும் பார்க்கப்போகும் நேரத்தை ஆவலுடன் எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறாள். அக்கிராமிய சூழ்நிலையில் தூதாயீம் பழங்கள் வாசனை வீசிக்கொண்டிருக்க, அவள் அவனிடம் தனது நேசத்தை வெளிப்படுத்துவாள், மேலும் அவனுக்காக அவள் சேர்த்து வைத்திருக்கிற எல்லாவிதமான **அருமையான கனிகளையும்** தருவாள்.

8:1,2 சூலமித்தியாள் இன்னும் பேசிக் கொண்டிருக்கிறாள். அந்த மேய்ப்பன் அவளுடைய சகோதரனாக இருந்தால் அவள் அவனுக்கு முத்தமிட்டிருப்பாள், ஒருவரும் நிந்திக்க முடியாது. அவள் அவனைத் தனது தாயின் வீட்டுக்கு அழைத்துச் சென்று வாசனை வீசும் மாதுளைப் பழத்தின் பிழிவைக் கொடுத்திருப்பாள்.

17. எருசலேம் குமாரத்திகளுக்கு இடப்பட்ட இறுதிக் கட்டளை [8:3,4]

எருசலேம் குமாரத்திகள் ஒரு பக்கமாக இருக்க, சூலமித்தியாள் அவனுடைய தோளில் சாய்ந்து கொண்டிருக்கிறாள். அவனுக்குப் **பிரியமானவள் மனதாகுமட்டும் விழிக்கப் பண்ண வேண்டாமென்று** இறுதிக் கட்டளை பிறப்பிக்கப் படுகிறது.

18. தம்பதிகள் நாட்டுப்புறத்திலிருந்து கிராமத்துக்கு வருகிறார்கள், ஒருவருக்கொருவர் வாக்குக் கொடுக்கிறார்கள், என்றும் மகிழ்வுடன் வாழ்கிறார்கள் [8:5-14]

8:5 அவளுக்குச் சொந்தமான சிற்றூரில் எருசலேமிலிருந்து அவள் திரும்பி வருகிறதைக் காண்கிறார்கள்; **"தன் நேசர்மேல் சாய்ந்துகொண்டு வனாந்தரத்திலிருந்து வருகிற இவள் யார்?"** என்று அவர்கள் வினவுகிறார்கள்.

காதலர் இருவரும் ஊரை நெருங்கியபோது, அவர்களுடைய காதல் தொடங்கிய **கிச்சிலி மரத்தின்** நிழலையும், அவள் பிறந்த இடத்தையும் அவளிடம் மேய்ப்பன் சுட்டிக்காட்டுகிறான்.

8:6,7 பின்னர் சூலமித்தியாள் அவர்கள் ஒருவருக்கொருவர் கொடுத்த வாக்குறுதியைப் புதுப்பித்துக் கூறுகிறாள். மிகவும் மேன்மையான மற்றும் பரவலாக மேற்கோள் காட்டப்படுகிற சொற்களின் மூலமாக அவளுடைய **நேசத்துக்குப்** போட்டியே இல்லை என்று உறுதி கூறுகிறாள். அது **மரணத்தைப் போல** வலிது, அதனை அணைத்து விட முடியாது, விலைமதிப்பில் எல்லையற்றது.

8:8,9 பல ஆண்டுகளுக்கு முன்னர், சூலமித்தியாளின் எதிர்காலத்தைக் குறித்து அவளுடைய சகோதரர்கள் திட்டமிட்டபோது ஒரு முடிவெடுத்தார்கள். அவள் கற்பும், தூய்மையும், விசுவாசமும் உடையவள் என்று வாழ்ந்து காட்டினால், அவர்கள் அவளுக்கு **வெள்ளியால்** சீதனம் கொடுப்பார்கள். ஆனால் அவள் ஒழுங்கின்றித் திரிந்தால் ஒரு **கதவைப்** போல அணுகக் கூடிய வளாக இருந்தால், அவளைத் தனியே மறைத்து வைக்க வேண்டும் என்று அவர்கள் முடிவு செய்தார்கள்.

8:10,11 இப்பொழுதோ அவள் திருமண வயது ஆனவள், ஒரு மதிலைப் போல நிலைத்து இருப்பதாகத் தனது சகோதரர்களுக்கு உறுதி தருகிறாள். அதனை அவளுடைய காதலனும் அறிவான். சாலொமோனுக்கு பாகால் ஆமோனில் திராட்சைத் தோட்டமும் பல குத்தகைக்காரர்களும் இருப்பதாக அவள் தன் சகோதரர்களிடம் கூறுகிறாள்.

8:12 ஆனால் அவளுக்கு அவற்றில் விருப்பமில்லை, அவளுக்குச் சொந்தமான திராட்சைத் தோட்டம் ஒன்று உள்ளது - அது அவளுடைய காதலனான மேய்ப்பனே ஆவான். அவளைப் பொறுத்த வரையில், சாலொமோனுடைய திராட்சைத் தோட்டத்தை அவனே வைத்துக் கொள்ளட்டும்.

8:13 பல சாட்சிகளுடைய முன்னிலையில், அவளைத் தன்னுடைய மனைவியாக்கிக்கொள்ளும் பொருட்டு அவள் வாக்குறுதி ஒன்றைக் கொடுக்க வேண்டும் என்று மேய்ப்பன் வேண்டுகிறான். அதன்படி, "நான் அவ்வாறே கூறுகிறேன்" என்று அவள் கூறவேண்டும்.

8:14 அவளோ தன்னை மனைவியாக உரிமை கொள்ளத் **தீவிரித்து** வரும்படி தனது **நேசரிடம்** உருவக மொழியில் பேசுகிறாள். இவ்வாறாக இந்நூல் முடிவடைகிறது. இந்நூல் இவ்வாறு விவரிக்கப்படுகிறது:

> பல பெண்களைத் திருமணம் செய்துகொள்ளும் முறைக்குப் பளிச்சிடும் எடுத்துக்காட்டு விளங்குகின்ற சூழ்நிலையில், பழைய ஏற்பாடு ஒருவனுக்கு ஒருத்தி என்னும் கொள்கையை உறுதிப்படுத்துகிறது. காதலையும் திருமணத்தையும் குறித்து தேவன் கொடுத்திருக்கும் மிகச்சிறந்த கொள்கையைப் பின்பற்றும்படி சாலொமோன் நாட்களில் இஸ்ரவேலுக்கு விடுக்கப்பட்ட வலிமை மிக்க அழைப்பாக இந்நூல் விளங்குகிறது.[18]

அடிக்குறிப்புகள்

1 (Intro) Franz Delitzsch, "The Song of Songs," *in Biblical Commentary on the Old Testament,* XVI:1.

2 (Intro) Arthur Farstad, "Literary Genre of the Song of Songs," p.63.

3 (முன்னுரை) கிளார்க் விளக்கவுரையும் வேதாகம விசுவாசிகளின் விளக்கவுரை கூறும் அதே கருத்தைக் கொண்டிருக்கிறது.

4 (1:5,6) "ஆலும்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொல் "மேலும்" என்றும் மொழிபெயர்க்கப்படலாம். எழுத்தின்படியான மொழிபெயர்ப்பு "நான் கறுப்பாயிருக்கிறேன், மேலும் அழகாயிருக்கிறேன்" என்பதாகும்.

5 (1:7,8) எட்டாவது வசனம் நேசரின் சொற்கள் என்னும் வகையில் NKJV மொழிபெயர்ப்பு அமைந்துள்ளது, ஆகவே அவற்றில் ஏளனக் குறிப்பு இல்லை. நேசரும் சாலொமோனும் ஒரே ஆள் என்னும் பொருளில் அது மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அவர்கள் இருவர், சூலமித்தியாளை விரும்புவதில் போட்டியாளர்கள் என்று அது எடுத்துக்கொள்ளவில்லை. NKJV, ஸ்கோஃபீல்டு வேதம், இன்னும் பல வேத மொழிபெயர்ப்புகள் எல்லாவற்றிலும் கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகள் பதிப்பித்தவர்கள் கொடுத்தவையேயொழிய, மூலப்பிரதிகளில் உள்ளவை அல்ல என்பதை நாம் வலியுறுத்துகிறோம். ஆயினும் ஆண்பால் பெண்பால், ஆட்களின் எண்ணிக்கை ஆகியவற்றில் ஆங்கிலத்தைக் காட்டிலும் எபிரெய மொழி தெளிவாக உள்ளது. இது NKJV மொழிபெயர்ப்பில் 1:1–க்கான அடிக்குறிப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

6 (1:11) "பண்ணுவோம்" என்னும் பன்மை எருசலேம் குமாரத்திகளைக் குறிப்பதாக NKJV மொழிபெயர்ப்பு கருதுகிறது.

7 (2:1) உரைநடை, செய்யுள், கீதங்கள் ஆகியவற்றில் நமது கர்த்தர் பள்ளத்தாக்கின் லீலி என்றும், சாரோனின் ரோஜா என்றும் வருணிக்கப்படுகிறார். இந்த ஒப்புமை சரியே. ஆயினும் இந்தப் பகுதியின் பொருள் விளக்கம் அதுவன்று.

8 (2:1) Farstad, "Literary Genre," p. 79, f. n. 6.

9 (2:7) எருசலேம் பெண்டிரிடம் 4 –ஆவது வசனத்திலேயே அவள் பேசத்தொடங்கிவிட்ட தாக NKJV மொழிபெயர்ப்பு கருதுகிறது.

10 (2:7) W. Twyman Williams, "The Song of Solomon," *Moody Monthly,* February 1947, p. 398.

11 (2:15) ''பிடியுங்கள்'' என்னும் பன்மைச் சொல், ''திராட்சைத் தோட்டக்காரர் பாடும் பாட லின்'' எதுகை மோனைக்கு ஏற்ப அமைக்கப்பட் டது என்று விளக்கப்படலாம் (மூல மொழியில் அவ்விதமாகவே இந்நூல் அமைந்துள்ளது). [டெலிட்ஜ்''உன்னதப்பாட்டு'' பக்கம் 53]. ''இந்த வசனம் திராட்சைப் பழங்களை அறுவடை செய் கிறவர்களின் பாடல், அல்லது ஒரு பாடலின் சிறு பகுதி'' என்று திருவாளர் ஓட்டோ ஜோக்லர் எழுதுகிறார். மேலும் தங்கள் காலத்தில் இந்நூல் கிறிஸ்துவைப் பற்றி உருவகமாக எழுதப்பட வில்லை என்று கருதியவர்கள் யாவரும் இதனை ஒப்புக்கொண்டார்கள் என்று எழுதுகிறார் ("Song of Songs" *in Lange's Commentary on the Holy Scriptures,* V:71).

12 (2:15) சிறுநரிகள் (குழிநரிகள் உட்பட) வசந்தகாலத்தில் தோட்டத்தில் பள்ளங்களையும் வேரின் அருகே துளைகளையும் போட்டு திராட் சைச் செடிகளை நாசமாக்கிவிடும், வேர் முதலான வற்றின் ஆதரவைக் கெடுத்துவிடும் (டெலிட்ஜ் ''உன்னதப்பாட்டு பக்கம் 54).

13 (4:6) NKJV பதிப்பகத்தார் இந்தப்பகுதி நேசரின் பேச்சின் ஒரு பகுதி என்று கருதுகிறார் கள்.

14 (4:7-15) இப்பகுதி புதிய பேச்சாளரின் உரை என்று எடுத்துக்கொள்ளாமல் நேசரின் சொற்களின் தொடர்ச்சி என்றே NKJV பதிப்பகத் தார் கருதுகிறார்கள்.

15 (5:1) இவர்கள் ''காதலனின் நண்பர் கள்'' என்று NKJV பதிப்பகத்தார் ஒப்புக்கொள் கிறார்கள்.

16 (5:10–16) இந்நூல் கிறிஸ்துவை உருவகப் படுத்திப் பேசுகிறது என்னும் கருத்துடையோர், ''பதினாயிரம் பேர்களில் சிறந்தவர்,'' ''முற்றிலும் அழகானவர்'' என்னும் சொற்றொடர்களைச் சொற்பொழிவுகளிலும் பாடல்களிலும் நம்முடைய கர்த்தரைக் குறித்துப் பயன்படுத்துகிறார்கள். ஆவிக்குரிய பொருளில் இவ்வாறு கர்த்தருக்கு இப்பெயர்களைப் பொருத்திக் காட்டுவது, பின்ன ணிக்குப் பொருந்தாது என்றாலும், நியாய மென்று வரவேற்கப்படத்தக்கதே.

17 (6:1) இந்நூல் கிறிஸ்துவை உருவகப் படுத்திப் பேசுகிறது என்னும் கருத்துடையோர், மணவாளி (= சபை) தனது நேசரின் (நேசர் = கிறிஸ்து) அழகை ''சாட்சியாக'' வருணிப்பது மற்றவர்கள் அவரை நாடி வருவதற்கு வழிவகுக் கும் என்கிறார்கள்.

18 (8:14) Williams, "Song," p. 422.

நூல் விவரத்தொகுப்பு

Bellett, J. G. *Meditations upon the Canticles*. London: G. Morrish, n.d.

Burrowes, George. *A Commentary on the Song of Solomon*. Philadelphia: William S. & Alfred Martien, 1860.

Clarke, Arthur G. *The Song of Songs*. Kansas City, KS: Walterick Publishers, n.d.

Delitzsch, Franz. "The Song of Songs." *In Biblical Commentary on the Old Testament*, Vol. 16. Grand Rapids: Wm. B. Eerdmans Publishing Company, 1971.

Zockler, Otto. "The Song of Solomon." *Lange's Commentary on the Holy Scriptures*. Vol. 5. Grand Rapids: Zondervan Publishing House, 1960.

Periodicals

Williams, W. Twyman. "The Song of Solomon," *Moody Monthly,* February 1947.

Unpublished Materials

Farstad, Arthur L. "Literary Genre of the Song of Songs." Th. M. Thesis, Dallas Theological Seminary, 1967.